சத்திய சோதனை

முதல் புத்தகம்

சத்திய சோதனை

மகாத்மா காந்தியின் சுய சரிதம்

முதல் புத்தகம்

ரா. கிருஷ்ணமூர்த்தி
மொழி பெயர்த்தது

T. விஸ்வநாதன்
வெளியிட்டது

காபிரைட்] [விலை ரூபா 3.

வாகீஸ்வரி அச்சு நிலையம்,
சென்னை :—1948.

பொருளடக்கம்

மூன்றாம் பாகம்

நான்முகம்

நாலைந்து வருஷங்களுக்கு முன்னர் எனது ஆப்த சகாக்களில் சிலர் நான் என் சுய சரிதையை எழுத வேண்டுமென்று யோசனை சொன்னார்கள். அதற்கு நான் இணங்கி எழுதவும் தொடங்கினேன். ஆனால் முதற் பக்கத்தை எழுதிமுடிப்பதற்கு முன்னால் பம்பாயில் கலவரங்கள் ஆரம்பமாகி விட்டன. எனவே சரிதம் முதல் ஏட்டினளவிலேயே நின்றுவிட்டது. அதன் பின்னர் ஒன்றன்பின் ஒன்றாகப் பல சம்பவங்கள் நிகழ்ந்து முடிவில் நான் எரவாடா சிறைக் கூடம் புக நேர்ந்தது. என்னுடன் அச்சிறையில் இருந்த ஸ்ரீ ஜெயராம்தாஸ், மற்ற வேலைகளை யெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டுச் சுய சரிதத்தை எழுதி முடிக்கும்படி சொன்னார். சிறை வாசத்தின்போது நான் இன்னின்ன நூல்கள் படிக்க வேண்டுமென்று ஏற்கனவே திட்டம் போட்டிருந்தபடியால் அவற்றைப் படித்து முடிக்கும் வரை வேறெந்த வேலையும் தொடங்க முடியாதென்று அவருக்குப் பதில் அனுப்பினேன். எனக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலம் முழுவதையும் எரவாடா சிறையில் கழித்திருந்தேனாயின் அங்கேயே சுய சரிதத்தையும் எழுதி முடித்திருப்பேன். ஆனால் அவ்வேலை தொடங்குவதற்கு இன்னும் ஓராண்டு இருந்தபோதே விடுதலை யடைந்தேன். இப்போது மறுபடியும் ஸ்வாமி ஆனந்தர் சுய சரிதம் எழுதும்படி என்னைக் கேட்டிருக்கிறார். தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹ வரலாற்றை நான் முடித்து விட்ட,

படியால், 'நவஜீவன்' பத்திரிகைக்குச் சுய சரிதம் எழுதத் தொடங்கலாமென உத்தேசிக்கிறேன். ஒரு தனிப் புத்தக மாகப் பிரசுரிப்பதற்கு அதை எழுத வேண்டு மென ஸ்வாமி ஆனந்தர் விரும்பினர். ஆனால் எனக்கு ஒழிவு நேரம் கிடையாது. வாரந்தோறும் ஒவ்வோர் அத்தியா யமே எழுத முடியும். 'நவஜீவ' னுக்கு ஒவ்வொரு வார மும் ஏதேனும் எழுதியாக வேண்டும். அது ஏன் சுய சரிதமாயிருத்தல் கூடாது? ஸ்வாமி இந்த யோசனைக்குச் சம்மதிக்கவே நான் இதோ அவ்வேலையில் தலைப்பட்டிருக் கிறேன்.

ஆனால் தெய்வபக்தியுள்ள நண்பர் ஒருவருக்கு இது சம்பந்தமாகச் சில ஐயங்கள் உண்டாயின. என்னுடைய மௌன தினத்தன்று அவர் அவ்வையங்களை என்னிடம் தெரிவித்தார். அவர் கூறியதாவது:—"நீங்கள் இப் புது வழியில் புறப்பட்ட காரணம் என்ன? சுய சரிதம் எழுது தல் மேனாட்டுக்கே உரிய வழக்கம். கீழ்நாட்டில், மேனாட்டு நாகரிக வயப்பட்டவரை யல்லாமல் வேறெவரும் சுய சரிதை எழுதி யிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மேலும் நீங்கள் என்ன எழுதுவீர்கள்? இன்றையதினம் நீங்கள் சிறந்த கொள்கைகள் எனக் கொண்டிருப்பனவற்றை நாளையதினம் தள்ளி விடுகிறீர்களென்றோ, இன்று கடைப் பிடித்திருக்கும் உபாயங்களை வருங்காலத்தில் மாற்றிவிடு கிறீர்களென்றோ வைத்துக்கொள்வோம். நீங்கள் பேசு வனவற்றையும், எழுதுவன வற்றையும் ஆதாரமாகக் கொண்டு தங்கள் ஒழுக்க நெறியை அமைத்துக்கொள்ளும் மனிதர்கள் இவற்றினால் குழப்பமடையார்களா? சுய சரிதை எதுவும் இப்போதைக்கு அல்லது எப்போதுமே எழுதாமல் விடுதல் நலமாயிராதா?"

இந்த வாதத்தில் ஓரளவு உண்மை யுண்டெனக் கண்டேன். ஆனால் என்னுடைய நோக்கம் சுயசரிதை எழுதுவதே யன்று. சத்திய மார்க்கத்தில் நான் நடத்தி வந்திருக்கும் பற்பல சோதனைகளின் வரலாற்றைக் கூறவே நான் விரும்புகிறேன். என் வாழ்க்கை அத்தகைய சோதனைகளால் ஆனதொன்றே யாதலின், அவற்றின் வரலாறு எனது சுய சரிதமாகவே அமையும் என்பது உண்மையே. ஆனால் அதில் ஒவ்வொரு பக்கமும் என்னுடைய சோதனைகளைப் பற்றியே கூறுமாயின் அதைப்பற்றி நான் கவலையுறேன். இச்சோதனைகள் எல்லாவற்றையும் பற்றிய தொடர்ச்சியான விவரம் வாசகர்களுக்குப் பயனளியாமற் போகாதென்பது என் நம்பிக்கை. அரசியல் துறையில் எனது சோதனைகள் இந்தியாவுக்கும், ஓரளவு நாகரிக உலகத்துக்கும் தற்போது தெரிந்திருக்கின்றன. என் வரையில் நான் அவற்றை முக்கியமாகக் கருதவில்லை. எனவே, அவை எனக்குத் தேடிதந்திருக்கும் 'மகாத்மா' பட்டத்தையும் நான் மதிக்கவில்லை. பல முறைகளில் எனக்கு அப்பட்டம் பெரிதும் மனத்துன்பத்தை அளித்திருக்கிறது. எக்காலத்திலும் ஒருகண நேரமாவது அப்பட்டத்தின் பொருட்டுப் பெருமை கொண்டதாக எனக்கு ஞாபகமில்லை. ஆனால் பாரமார்த்திகத் துறையில் நான் நடத்தி வந்திருக்கும் சோதனைகளை விவரிக்க எனக்குப் பிரியமாகவே யிருக்கும். அவை எனக்கு மட்டுமே தெரிந்தவை. அரசியல் துறையில் வேலை செய்ய எனக்குத் தற்போதுள்ள சக்தியையும் அவற்றினின்றே பெற்றேன். அவை உண்மையிலேயே பாரமார்த்திகச் சோதனைகளானால், அவற்றை விவரிப்பதில் தற்புகழ்ச்சிக்கு இடமிருக்க முடியாது. அவை என் தாழ்மைக் குணத்துக்குத் துணை செய்யுமே யன்றி வேறில்லை. கடந்துபோன என் வாழ்நாளைப்பற்றிச் சிந்திக்கச்

சிந்திக்க என்னிடமுள்ள குறைகள் தெளிவாகத் தெரிய வருகின்றன.

சென்ற முப்பது வருஷ காலமாக, நான் வருந்தி முயன்று வருவதெல்லாம் ஆன்மானுபூதி யடைவதற்கே யாம். அதுவே மோட்சம்; அதாவது இறைவனை நேருக்கு நேரே காணுதல். இந்த இலட்சியத்தின் பொருட்டே நான் உயிர் வாழ்கிறேன். அதிலேயே அமிழ்ந்திருக்கிறேன். நான் எழுது வனவும், பேசுவனவும், அரசியல் துறையில் செய்யும் முயற்சிகளும், எல்லாம் இந்த இலட்சிய சித்தியின் பொருட்டே. ஒருவருக்குச் சாத்தியமானது எல்லோருக்கும் சாத்தியம் என்பது ஆதியிலிருந்தே என் கொள்கையாதலின், என்னுடைய சோதனைகளைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு நடத்தாமல் பகிரங்கமாகவே நடத்திவந்திருக்கிறேன். இதனால் அவற்றின் பாரமார்த்திகத் தன்மை குறைவுபட்டு விடவில்லையென்பது என் கருத்து. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமே தெரியக்கூடியவையான சில விஷயங்கள் உண்டு. அவை விவரிக்க வொண்ணாதவை. நான் கூறப்போகும் சோதனைகள் அத்தகையனவல்ல. ஆனாலும் அவை பாரமார்த்திகச் சோதனைகளே. சன்மார்க்கத்துக் குரியனவாகவும் அவற்றைக் கொள்ளலாம். ஏனெனில் சமயத்தின் சாரம் சன்மார்க்கமே யன்றோ?

குழந்தைகளும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சமயப் பிரச்னைகளைப் பற்றியே இந்தச் சரிதத்தில் கூறப் போகிறேன். தாழ்மைக் குணத்துடனும் சொந்த விருப்பு வெறுப்புகளைப் புகுத்தாமலும் அவற்றை நான் விவரிக்கக் கூடுமாயின், என்னைப்போல் சத்திய சோதனையில் ஈடுபட்ட இன்னும் பலர் முன்னேறுவதற்கு அவை துணை செய்யும். இச்சோதனைகள் பரிபூரணமானவை யென நான் உரிமை

பாராட்டுவதாய் எவரும் ஒரு கணமேனும் எண்ண வேண்டாம். விஞ்ஞான சாஸ்திரி ஒருவன் தன் சோதனைகளை எவ்வளவு முன்யோசனையுடன், அணுவளவும் பிசகாமல், நுட்பமாக நடத்தினுனாயினும், அவற்றில் தான் கண்ட உண்மைகளே முடிவானவையென்று கூறுவதில்லை. இன்னும் தான் காணாத உண்மைகளும் இருக்கக் கூடுமென எண்ணி, அவற்றை ஆராய்ந்து ஏற்கச் சித்தமாகவே யிருக்கிறான். என்னுடைய நிலையும் இதுதான். என்னை நானே ஆழ்ந்து பரிசோதனை செய்திருக்கிறேன். என் உள்ளத்திலே நான் தேடாத இடம் பாக்கியில்லை. என் மனோநிலை ஒவ்வொன்றையும் அலசி ஆராய்ந்திருக்கிறேன். ஆயினும் என் சோதனை முடிவுகளே முடிவான தத்துவங்கள் என்றாவது அவற்றில் குறை எதுவுமே இல்லையென்றாவது நான் உரிமை பாராட்டவில்லை. நான் உரிமை பாராட்டுவதெல்லாம் இதுதான். என் வரையில், அவை முற்றிலும் சரியானவையாகக் காணப்படுகின்றன. தற்போதைக்கு முடிவானவையாகவும் தோன்றுகின்றன. இல்லாவிடில் அவற்றை ஆதாரமாகக் கொண்டு எச்செயலும் புரியமாட்டேன் அன்றோ? ஒவ்வொரு படியிலும், கொள்ளத்தக்கது எது, தள்ளத்தக்கது எது என்று ஆராய்ச்சி செய்து அவ் வண்ணமே நடந்து வந்திருக்கிறேன். என்னுடைய செயல்கள் என் புத்திக்கும், ஹிருதயத்துக்கும் இசைந்தனவாயுள்ள வரையில், நான் என் ஆதி முடிவுகளையே கடைப்பிடித்தல் வேண்டும்.

கொள்கைகளைப்பற்றி விவாதித்துச் சித்தாந்தம் செய்வதே என் நோக்கமானால் சுயசரிதை எழுதுவது அநாவசியமென்று சொல்ல வேண்டுவதில்லை. ஆனால் வாழ்க்கையில் அக்கொள்கைகளுக் கிணங்க நடந்துகொள்வது எப்படி என்பதற்கு உதாரணங்கள் தருவதே என் நோக்கமாதலின்

'சத்திய சோதனை' என்று இச் சரிதத்திற்குப் பெயர் கொடுத்திருக்கிறேன். அஹிம்ஸை, பிரும்மசரியம், மற்றும் ஒழுக்கத்தைப்பற்றிய கொள்கைகளின் சம்பந்தமான சோதனைகளும் இவற்றில் அடங்கும். இக் கொள்கைகளெல்லாம் சத்தியத்தினின்றும் வேறானவை என்று சாதாரணமாய்க் கருதப்படுகிறது. ஆனால் சத்தியத்தினுள் இவை எல்லாம் அடங்கும் என்பது என் மதம். சத்தியம் என்பது வாய்மை மட்டுமன்று. உள்ளத்தின் உண்மையையும் அது குறிப்பிடும். சத்திய வஸ்துவும், நித்திய தத்துவமுமான இறைவனையும் குறிக்கும். ஆண்டவனின் நாம ரூபங்கள் எண்ணிலடங்காதவை. அவற்றைப்பற்றி எண்ணும்போது நான் அளவில்லா ஆச்சரியமும் அச்சமும் அடைந்து ஒரு கண நேரம் ஸ்தம்பித்து விடுகிறேன். ஆனால் அவனை நான் வழிபடுவது சத்திய வடிவிலேயே யாம். அவனுடைய தரிசனம் எனக்கு இன்னும் கிட்டவில்லை யாயினும் அவனைத் தேடிக்கொண்டே யிருக்கிறேன். இம் முயற்சியில் என் உயிரையே தியாகம் செய்யவேண்டி வந்தாலும் அதற்குச் சித்தமா யிருப்பேனென்பது என் நம்பிக்கை. ஆனால் சத்தியப்பொருளான பகவானின் தரிசனம் கிட்டும்வரையில் எனக்குத் தெரிந்த சாதாரண சத்தியத்தையே நான் பற்றுக் கோடாகக் கொள்ளவேண்டும். அதுவரை அச் சாதாரண சத்தியமே எனக்கு வழிகாட்டும் ஒளியாகவும், என்னைப் பாதுகாக்கும் கேடயமாகவும் இருத்தல்வேண்டும். இச் சத்திய மார்க்கம் கத்தியின் விளிம்பைப்போல் நேரியதாயும், குறுகலானதாயும், கூர்மையுடையதாயு மிருப்பினும், அதுவே எனக்கு விரைவில் செல்லக்கூடிய எளிதான வழியா யிருந்து வந்திருக்கிறது. நான் இவ்வழியினின்று அணுவளவும் வழுவாது நடந்து வந்திருப்பதால்தான், நான் செய்திருக்கும் ஹிமாலயத்தைப்போன்ற பெருந் தவறுக

ளும் அற்பமானவையாகத் தோன்றி வந்திருக்கின்றன. ஏனெனில் அத்தவறுகளால் நான் அழிந்து விடாவண்ணம் அவ்வழி என்னைக் காப்பாற்றி வந்திருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒளியின் அளவாக நானும் முன்னேறி வந்திருக்கிறேன். இம்மார்க்கத்தில் நான் முன்னேறுகையில் சத்தியப் பொருளான இறைவன் பல முறைகளில் மங்கிய மின்னலைப்போல் என் முன் தோன்றி மறைந்திருக்கிறான். அவன் ஒருவனே மெய்ப்பொருள், மற்றவை யெல்லாம் பொய் என்னும் என் உறுதி நாள்தோறும் வலுவடைந்து வருகிறது. எனக்கு இந்த உறுதி ஏற்பட்டு வலுவடைந்ததெப்படி என்று விருப்ப முள்ளவர்கள் தெரிந்துகொள்வார்களாக. என் சோதனைகளைப் படித்தறிந்து—, கூடுமானால் நான் கொண்டிருக்கும் உறுதியை அவர்களும் அடைவார்களாக. எனக்குச் சாத்தியமானது ஒரு குழந்தைக்கும் சாத்தியமாகும் என்னும் நம்பிக்கையும் நாளுக்கு நாள் திடமாகி வருகிறது. இப்படி நான் கூறுவதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. சத்திய தரிசனத்துக்குரிய சாதனங்கள் ஒருவகையில் மிக எளியவை; மற்றொரு வகையில் அவை கடினமானவையேயாம். இறுமாப்புக் கொண்ட ஒருவனுக்கு அவை அசாத்தியமானவையாகப் படலாம். ஆனால் கபட மற்ற குழந்தை ஒன்றுக்கு அவை முற்றும் சாத்தியமானவை. சத்திய ஆராய்ச்சியில் இறங்குவோன் தூசியை விடத் தாழ்மை கொள்ளவேண்டும். உலகம் தூசியைத் தன் காலில் வைத்து நசுக்குகிறது. ஆனால் சத்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டவன் அத்தூசியும் தன்னை நசுக்கக்கூடியவாறு தன்னைத் தாழ்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவனுக்குச் சத்திய தரிசனம் ஒரு கண நேரமேனும் சித்தியாகும். அதுவரை சித்தியாது என்பது நிச்சயம். வசிஷ்டருக்கும் விசுவாமித்

திருக்கும் நடந்த வாக்குவாதம் இதை நன்கு தெளிவாக்கு கிறது. கிறிஸ்துவ மதமும், இஸ்லாமும் இதை ஆதரிக் கின்றன.

நான் இச் சரிதத்தில் எழுதப்போவதில் எதுவேனும் தற்பெருமையினால் கூறப்பட்டதென வாசகர்களுக்குத் தோன்றினால், என்னுடைய ஆராய்ச்சியில் ஏதோ தவறிருக் கிறதென்றும், நான் சத்தியம் என்றெண்ணி எதை நோக்கிச் செல்கிறேனோ அது உண்மையில் மாயப் பொய்த் தோற்றமே என்றும் அவர்கள் கொள்ளவேண்டும். என் னைப்போல் நூற்றுக்கணக்கானவர் மடிந்தால் பாதகமில்லை. சத்தியம் வெற்றியடைய வேண்டுவதே முக்கியமானது. என்னைப் போன்ற தவறிழைக்கக்கூடிய மானிடர்களின் பொருட்டுச் சத்தியத்தின் பெருமையை நாம் ஒரு மயிரிழை யளவாகவேனும் குறைத்தல் கூடாது.

வரப்போகும் அத்தியாயங்களில் இடையிடையே காணப்படும் புத்திமதிகளை யாரும் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று பிரார்த்திக்கிறேன். என்னுடைய சோதனைகளை உதாரணங்களாக மட்டுமே கொண்டு, அவ ரவர் தத்தம் விருப்பத்துக்கும் ஆற்றலுக்கும் தகுந்தபடி சோதனை நடத்திக் கொள்ளவேண்டும். இந்த அளவுக்கு அவ்வுதாரணங்கள் உண்மையிலேயே உதவியாயிருக்கு மென நம்புகிறேன். ஏனெனில் சொல்லப்படவேண்டிய விகாரமான விஷயம் எதையும் நான் குறைக்கவோ, மறைக் கவோ போவதில்லை. என்னுடைய குற்றங் குறைகளை ஒன்றுவிடாமல் வாசகர்களுக்கு அறிவிப்பேன். சத்தியாக் கிரஹ சாஸ்திரத்தில் சில சோதனைகளை விவரிப்பதே என் நோக்கம்; நான் எவ்வளவு நல்லவன் என்று வர்ணிப்பு

தன்று. என்னுடைய குணங் குறைகளை மதிப்பிடுகையில், சத்தியம் எவ்வளவு கண்டிப்பானதோ அவ்வளவு கண்டிப் புள்ளவனாய் நானும் இருப்பேன். மற்றவர்களும் அவ் வாறே இருக்கவேண்டுமென விரும்புகிறேன். இந்நிலையில் நின்று என்னை நானே ஆராயும்போது, சூர்தாஸ் என்னும் பக்தர் பாடியதுபோல் "என்னைப்போல் கொடிய பாவி உலகில் வேறு யார் உளர்? என்னைப் படைத்த இறைவனை மறந்தேன். அந்தோ! அத்தகை நன்றிகெட்டவன் நான்" என்று கதறவேண்டியவனாயுள்ளேன். எனக்குப் பிறப் பளித்த பெருமான் எவனோ, என்னுடைய ஒவ்வொரு மூச்சும் எவனுடைய ஆக்ஞைக்கு அடங்கியதோ, அத் தகைய ஆண்டவனிடமிருந்து நான் இன்னும் வெகு தூரத்தி லிருக்கிறேனென்னும் எண்ணம் இடைவிடாது என்னை வருத்திவருகிறது. என் உள்ளத்தில் குடிகொண்டுள்ள தீக்குணங்களே அவனிடமிருந்து என்னைப் பிரித்து தூரத்தில் வைத்திருக்கின்றனவென்பதை நன்கறிவேன். எனினும் அவற்றினின்று விடுதலை பெற முடியாதவனாயிருக்கிறேன்.

முன்னுரையை இங்கு நான் முடித்துவிட வேண்டும். கதையை அடுத்த அத்தியாயத்தில் தொடங்குவேன்.

சத்தியாக்கிரஹ ஆசிரமம்,
சபர்மதி, 26 நவம்பர் 1925.

மோ. க. காந்தி

சத்திய சோதனை

முதல் பாகம்

முதல் அத்தியாயம்

பிறப்பும் பெற்றோரும்

காந்தி வம்சத்தார் பனியா (வைசிய) சாதியைச் சேர்ந்தவர். ஆதிகாலத்தில் அவர்கள் மளிகைக் கடை வியாபாரம் செய்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால் என் பாட்டனாரிலிருந்து மூன்று தலைமுறையாக அவர்கள் கத்தியவாரிலுள்ள சுதேச சமஸ்தானங்களில் முதன் மந்திரிகளா யிருந்து வந்திருக்கிறார்கள். என்னுடைய பாட்டனாரான உத்தம சந்திர காந்தி என்பவர் மனச் சான்று வழி நின்றவரா யிருந்திருக்க வேண்டும். அவர் திவான் உத்தியோகம் பார்த்த போர்பந்தர் சமஸ்தானத் தில் அவருக்கு விரோதமாகச் செய்யப்பட்ட சூழ்ச்சிகளின் பயனாக, அவர் ஜூனாகாத் என்னும் சமஸ்தானத்தில் அடைக்கலம் புக நேர்ந்தது. அச்சமஸ்தான நவாபுக்கு அவர் இடது கையினால் சலாம் செய்தார். மரியாதைக் குறைவான இச்செயலைக் கவனித்த ஒருவரால் காரணம் கேட்கப்பட்டபோது அவர் "வலது கை போர்பந்தரின் ஊழியத்துக்கு முன்னமே அர்ப்பணம் செய்யப்பட்டிருக் கிறது" என்று பதிலளித்தார்.

உத்தம சந்திர காந்தியின் முதல் மனைவி இறந்துபோன பின்னர் அவர் இரண்டாம் முறை மணம் செய்து கொண்டார். அவருடைய முதல் மனைவிக்கு நான்கு குழந்தைகள். இரண்டாவது மனைவிக்கு இரண்டு குழந்தைகள். இவர்கள் அறுவரும் மாற்றாந்தாய்ச் சகோதரர்கள் என்பது என் இளம் பிராயத்தில் எனக்குத் தெரியவே தெரியாது. அவ்வளவு வேற்றுமையின்றி அவர்கள் நடந்துகொண்டார்கள். இவர்களில் ஐந்தாம் சகோதரர் கரம்சந்திர காந்தி. அவரைக் காபா காந்தி என்று அழைப்பது வழக்கம். ஆறாவது சகோதரர் துளசிதாஸ் காந்தி. இவர்கள் இருவரும் போர்பந்தர் மன்னரிடம் ஒருவர் பின் ஒருவராய் திவான் வேலை பார்த்தவர்கள். காபா காந்திதான் என்னுடைய தந்தை. 'இராஜஸ்தான நீதி மன்ற'த்தில் இவர் ஓர் அங்கத்தினர். இப்போது அத்தகைய ஸ்தாபனம் ஒன்று கிடையாது. ஆனால் அக்காலத்தில் அது மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. சமஸ்தானாதிபதிகளுக்கும் அவர்களுடைய இனத்தாருக்கும் ஏற்படும் விவாதங்களை இந்த நீதி மன்றத்தார் தீர்த்துவைப்பர். காபா காந்தி சிறிது காலத்திற்கு இராஜகோட்டையிலும், பின்னர் வங்கனேரிலும் திவானாயிருந்தார். அவர் காலஞ் சென்றபோது இராஜகோட்டையிலிருந்து உபகாரச் சம்பளம் பெற்று வந்தார்.

காபா காந்தி மூன்று தடவை மணஞ் செய்து கொண்டு மூன்று மனைவிகளையும் இழந்தபடியால் நான்காம் முறையும் மணம் புரிந்துகொண்டார். முதல் இரண்டு மனைவியராலும் அவருக்கு இரண்டு புதல்விகள் இருந்தனர். கடைசி மனைவியான புத்லி பாய் ஒரு பெண்ணையும், மூன்று புதல்வர்களையும் ஈன்றெடுத்தாள். அவர்களுள் கடைக் குட்டி நான்.

என் தந்தை தம்முடைய இனத்தாரிடம் அபிமானம் உள்ளவர்; உண்மையாளர்; தைரியமும், தயாள குணமும் கொண்டவர். ஆனால் முன் கோபி. ஓரளவு சிற்றின்பப் பிரியராகவும் இருந்திருக்கலாம். ஏனெனில் 40 வயதுக்குப் பிறகு அவர் நான்காம் முறை விவாகம் செய்துகொண்டார். ஆனால் அவர் பணத்துக்காக உண்மையை எப்போதும் கைவிட்டதில்லை. நடுநிலைமை பிறழாதவர் என்ற பெயர் அவருக்கு என் குடும்பத்திலும் வெளியிலும் உண்டு. சமஸ்தானத்திடம் அவர் கொண்டிருந்த விசுவாசம் பிரசித்தி பெற்றது. ஒரு சமயம், உதவி பொலிடிகல் ஏஜண்டு உத்தியோகஸ்தர் ஒருவர் இராஜகோட்டை மன்னரைப்பற்றி அவமரியாதையாகப் பேசினார். உடனே காபா காந்தி எழுந்து ஆட்சேபித்தார். ஏஜண்டு கோபங்கொண்டு அவரை மன்னிப்புக் கேட்கச் சொன்னார். அவர் மன்னிப்புக் கேட்க மறுத்ததின்மேல் சில மணி நேரம் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இறுதியாக, அவருடைய உறுதியைக் கண்டு ஏஜண்டு அவரை விடுதலை செய்துவிட்டார்.

என்னுடைய தந்தைக்குப் பணஞ் சேர்க்கும் ஆசை எப்போதுமிருந்ததில்லை. எங்களுக்கு அவர் வைத்துப் போன சொத்து மிகவும் கொஞ்சம்.

அநுபவத்தைத் தவிர வேறு கல்விப் பயிற்சி அவருக்கு அதிகம் கிடையாது. அவர் படித்ததெல்லாம் ஐந்தாவது வகுப்பு வரையில்தான். தேச சரித்திரம், பூகோள சாஸ்திரம் இவைகளைப்பற்றி அவருக்கு எதுவுமே தெரியாது. ஆனால் உலக விஷயங்களில் அவருக்குச் சிறந்த அநுபவம் இருந்தபடியால், மிகச் சிக்கலான பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவும், நூற்றுக்கணக்கான மனிதர்களை வைத்து நடத்தவும் அவர் சக்தி பெற்றிருந்தார். சமயத்துறையிலும் அவ

ருக்குப் பயிற்சி மிகச் சொற்பம். ஆனால் கோயில்களுக்கு அடிக்கடி போவதாலும், மத உபந்நியாசங்களைக் கேட்பதாலும் சாதாரணமாய் எல்லா ஹிந்துக்களும் பெறக்கூடிய சமயஞானம் அவருக்கு மிருந்தது. அந்திய நாட்களில் குடும்பத்தின் பிராமண நண்பர் ஒருவரின் தூண்டுதலின் மீது அவர் கீதை படிக்க ஆரம்பித்தார். அதன் பின்னர் தினந்தோறும் பூஜா காலத்தில் அவர் சில சுலோகங்களைப் பாராயணம் செய்வதுண்டு.

என் தாயாரைப்பற்றி எண்ணும்போது அவருடைய தவ வொழுக்கமே முதன்மையாய் நினைவுக்கு வருகிறது. அவர் பெரிதும் சமயப் பற்றுக்கொண்டவர். தினசரி தெய்வப் பிரார்த்தனை செய்யாமல் அவர் உணவு கொள்ள மாட்டார். தினந்தோறும் விஷ்ணு கோயிலுக்குச் சென்று வருவார். எனக்கு நினைவு தெரிந்த பின்னர் அவர் ஒரு வருஷமாவது சாதுர்மாஷ்ய விரதம் அனுஷ்டிக்கத் தவறியதில்லை. மிகக் கடுமையான நோன்புகளை அவர் மேற்கொண்டு நிறைவேற்றி வந்தார். உடல் நோய் காரணமாகவும் அவர் விரதத்தைக் கைவிடுவதில்லை. ஒரு முறை சாந்திராயண விரதத்தின்போது கடுமையான நோய் வந்ததும், அவர் விரதத்தை விடாது நடத்தியது எனக்கு நினைவிருக்கிறது. இரண்டு மூன்று வேளை சேர்ந்தாற் போல் உபவாசமிருத்தல் அவருக்குச் சர்வ சாதாரணம். சாதுர்மாஸத்தில் அவர் தினம் ஒரு முறைதான் உணவு கொள்வார். இது போதாதென்று, ஒரு சாதுர் மாஸத்தில், ஒரு நாள் விட்டு ஒரு நாள் பூரண உபவாச மிருந்து வந்தார். மற்றொரு சாதுர் மாஸத்தின்போது தினம் சூரிய தரிசனம் செய்யாமல் சாப்பிடுவதில்லை யென்று விரதம் எடுத்துக்கொண்டார். நானும் மற்றக் குழந்தைகளும்

தெருவில் நின்றுகொண்டு சூரியன் எப்போது மேகக் கூட்டங்களினின்றும் வெளிவரப் போகிறதென்று காத்துக் கொண்டிருப்போம். மழை காலத்தில் சில தினங்களில் தினகரன் தரிசனம் அளிக்கக் கருணை செய்வதில்லை யென்பது எல்லோர்க்கும் தெரியும். அத்தகைய நாட்களில் சூரியன் அருமையாக வெளிவரும்போது ஓட்டமாக உள்ளே ஓடி அன்னையிடம் தெரிவிப்போம். ஆனால் அவர் ஓடி வந்து பார்ப்பதற்குள் சூரியன் மறைந்து விடும். "அதனாலென்ன மோசம்! இன்று நான் சாப்பிடுவது பகவானுக்கு விருப்பமில்லை" என்று கூறிக்கொண்டு அவர் மலர்ந்த முகத்துடன் மீண்டும் வீட்டு வேலையைக் கவனிக்கத் தொடங்குவார்.

அவருக்கு அநுபவஞானம் நிரம்ப உண்டு. சமஸ்தானத்தைப் பற்றிய எல்லா விஷயங்களும் அவருக்குத் தெரியும். இராஜ குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகளுக்கு அவரிடம் அதிக மதிப்பு உண்டு. நான் குழந்தையாயிருந்தபோது அவருடன் அடிக்கடி அரண்மனைக்குச் சென்றிருக்கிறேன். இராஜ மாதாவுடன் அவர் உற்சாகமாக நிகழ்த்திய விவாதங்கள் பல இன்னும் எனக்கு நினைவிருக்கின்றன.

இத்தகைய பெற்றோர்களின் புதல்வனாய், 1869ஆம் அக்டோபர்மீ 2உ போர்பந்தர் என வழங்கும் சுதாமாபுரியில் நான் பிறந்தேன். என் குழந்தைப் பருவத்தைப் போர்பந்தரிலேயே கழித்தேன். அங்கு என்னைப் பள்ளிக்கூடத்தில் வைத்த ஞாபகமும் இருக்கிறது. சிறிது கஷ்டப்பட்டுப் பெருக்கல் வாய்ப்பாடுகளை நெட்டுருச் செய்தேன். மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்துகொண்டு உபாத்தியாயரைத்திட்டக் கற்றுக் கொண்டதைத் தவிர அக்காலத்

தைப்பற்றி எனக்கு வேறெதுவும் நினைவில்லை. இதினின்று அக்காலத்தில் நான் பெரிதும் மந்த அறிவு படைத்தவனு யிருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்க இடமிருக்கிறது.

இரண்டாம் அத்தியாயம்

குழந்தைப் பருவம்

என்னுடைய தந்தை இராஜஸ்தான நீதிமன்ற அங்கத்தினர் பதவி பெற்றுப் போர்பந்தரிலிருந்து இராஜ கோட்டைக்குச் சென்றபோது நான் ஏழு வயதுச் சிறுவனாய் இருந்திருக்க வேண்டும். இராஜகோட்டையில் என்னை ஆரம்பப் பள்ளிக்கூட மொன்றுக்கு அனுப்பினார்கள். அந்த நாட்களைப் பற்றியும், எனக்குக் கல்வி கற்பித்த உபாத்தியாயர்களைப் பற்றியும், அவர்களின் பெயர்கள் உள்பட, எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. போர்பந்தரில் போலவே இங்கும் என் படிப்பைப் பற்றிக் குறிப்பிடத்தக்க விசேஷம் எதுவுமில்லை. மத்திய தரமான மாணுக்கனுகவே நான் இருந்திருக்க வேண்டும். எனக்குப் பன்னிரண்டு வயதானபோது உயர்தரப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டேன். இக்காலத்தில் என்னுடைய உபாத்தியாயர்களிடமாவது, பள்ளிக்கூடச் சிறுவர்களிடமாவது எப்போதேனும் பொய் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை. அப்போது எனக்குக் கூச்சம் அதிகமாயிருந்தது. யாரோடும் கலந்து பழக மாட்டேன். புத்தகங்களும் பாடங்களுமே உற்ற தோழர்களா யிருந்தன. சரியாக மணி அடிக்கும் சமயத்துக்குப் பள்ளிக்கூடம் போவதும், பள்ளிக்கூடம் விட்டவுடன் வீட்டுக்கு ஓடுவதுமே வழக்கமா யிருந்தது. யாருடனும் பேச நேரா

திருக்கும் பொருட்டு வீடு திரும்புகையில் உண்மையாகவே ஓடுவேன். யாரேனும் என்னைக் கேலி செய்வார்களோ என்ற பயமும் அதிகமா யிருந்தது.

உயர்தரப் பள்ளிக்கூடத்தில் நான் சேர்ந்த வருஷத்தில் நடந்த ஒரு சம்பவம் குறிப்பிடத்தக்கதாகும். கல்வி இலாகா இன்ஸ்பெக்டர் மிஸ்டர் கைல்ஸ் என்பவர் எங்கள் பள்ளிக்கூடத்தைப் பரிசோதிப்பதற்காக வந்திருந்தார். அவர் என்னுடைய வகுப்புக்கு வந்தபோது ஐந்து பதங்களைச் சொல்லி எழுதச் சொன்னார். அவைகளில் ஒன்று 'கெட்டில்' (Kettle). நான் இவ் வார்த்தையைத் தவருக எழுதினேன். உபாத்தியாயர் தமது பாதரட்சை நுனியால் என்னுடைய காலை மிதித்துத் தூண்டினார். அடுத்த பையனுடைய பலகையைப் பார்த்துக் 'காபி' அடிக்கச் சொல்கிறார் என்னும் விஷயம் என் புத்திக்கு எட்டவில்லை. நாங்கள் 'காபி' அடிக்காமல் பார்த்துக்கொள்ளவே உபாத்தியாயர் அங்கிருக்கிறார் என்று எண்ணி யிருந்தேன். முடிவு என்னவென்றால், என்னைத் தவிர எல்லாப் பையன்களும் எல்லா வார்த்தைகளையும் சரியாக எழுதி யிருந்தார்கள். நான் ஒருவனே அசடனாய்ப் போனேன். பின்னால் உபாத்தியாயர் என்னுடைய அசட்டுத்தனத்தை எடுத்துக் காட்ட எவ்வளவோ முயற்சி செய்தும் பயனில்லை. 'காபி' அடிக்கும் வித்தை எனக்கு வரவேயில்லை.

இந்நிகழ்ச்சியினால் உபாத்தியாயரிடம் எனக்கிருந்த மதிப்பு எள்ளளவும் குறையவில்லை. பெரியவர்களுடைய குறைகளைப் பொறுத்த வரையில் குருடனாயிருப்பது என் இயற்கையா யிருந்தது. பின்னால், இந்த உபாத்தியாயருடைய வேறு பல குறைகளும் எனக்குத் தெரியவந்தன. ஆயினும் அவரிடம் நான் வைத்திருந்த மரியாதை மட்டும்

குறையவில்லை. மூத்தோரின் கட்டளைகளை நிறைவேற்றி விட்டு அவர்களுடைய செயல்களைப் பற்றிக் கவனியாம லிருப்பதற்கு நான் கற்றுக்கொண்டிருந்தேன்.

இக்காலத்திய நிகழ்ச்சிகள் இன்னும் இரண்டு என் மனதை விட்டகலாமல் இருந்து வருகின்றன. பாட புத்தகங்களைத் தவிர வேறு புத்தகம் எதுவும் நான் படிக்கும் வழக்கமில்லை. படிப்பே எனக்குப் பிடிப்பதில்லை. ஆனால் உபாத்தியாயரால் கண்டிக்கப்படவோ அல்லது அவரை ஏமாற்றவோ நான் விரும்பாதபடியால், பாடங்களை வேண்டா வெறுப்பாய்ப் படித்துத் தொலைப்பேன். பாடம் படிப்பதே இப்படி யானால் வேறு புத்தகம் படிப் பதைப்பற்றிக் கேட்பானேன்? ஆனால் ஒரு முறைமட்டும் எப்படியோ என்னுடைய தந்தை யிடமிருந்த 'சிரவண பித்ரு பக்தி நாடகம்' என்னும் புத்தகம் என் மனதைக் கவர்ந்தது. அதை மிகச் சுவையுடன் படித்தேன். அதே சமயத்தில் படக்காட்சிக்காரர் சிலர் எங்கள் ஊருக்கு வந்தனர். நான் பார்த்த படங்களில், சிரவணன் கண் ணிழந்த முதியோர்களான தனது தாய்தந்தையரைக் காவடியில் வைத்துத் தூக்கிக்கொண்டு போகும் படமும் ஒன்று. மேற்சொன்ன புத்தகமும், படமும் என் மனதில் என்றும் அழியாவண்ணம் பதிந்து விட்டன. "நீ பார்த்து நடப்பதற்கு இங்கே ஓர் உதாரணம் இருக்கிறது" என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். சிரவணன் மரண முற்றதும் அவன் பெற்றோர்கள் துன்பக்கடலில் மூழ்கிப் புலம்பிய புலம்பல் இன்னும் எனக்கு ஞாபக மிருக்கிறது. சோகரசமான அந்தப் பாட்டின் மெட்டு என்னை உருக்கிவிட்டது. என் தந்தை வாங்கிக்கொடுத்த வாத்தியத்தில் நான் அடிக்கடி அதை வாசிப்பதுண்டு.

இம்மாதிரியான இன்னொரு சம்பவம் இதே காலத்தில் நேரிட்டது. ஒரு நாடகக் கூட்டத்தார் நடத்திய அரிச்சந்திர நாடகத்தைப் பார்க்கச் செல்ல என் தந்தையின் அநுமதி பெற்றிருந்தேன். அந்நாடகம் என் ஹிருதயத்தைக் கவர்ந்து விட்டது. அதை எத்தனை முறை பார்த்தாலும் எனக்குச் சலிப்புத் தோன்றவில்லை. ஆனால் எவ்வளவு முறைதான் அதே நாடகத்துக்குப் போக அநுமதி கொடுப்பார்கள்? சில காலம் அதுவே நினைவாயிருந்தேன். எனக்கு நானே கணக்கற்ற முறை அரிச்சந்திரனாக நடித்து மகிழ்ந்திருக்கவேண்டும். "அரிச்சந்திரனைப்போல ஏன் எல்லோரும் சத்தியசந்தர்களாயிருக்கக்கூடாது?" என்று இரவும் பகலும் நானே கேட்டுக்கொள்வேன். சத்தியத்தைக் கடைப்பிடித்து நின்று, அரிச்சந்திரன் பட்ட துன்பங்களையெல்லாம் அநுபவிக்கவேண்டுமென்ற இலட்சியம் என் உள்ளத்தில் குடிகொண்டது. அரிச்சந்திரனுடைய கதையை அப்படியே உண்மை என நம்பினேன். அதைப் பற்றிச் சிந்திக்குங் காலையில் பல முறைகளில் என்னையறியாமல் அழுகை வந்துவிடும். அரிச்சந்திரன் சரித்திர பூர்வகமான ஒரு மனிதனாயிருக்க முடியாதென்று இப்போது என் அறிவுக்குப் புலனாகிறது. ஆனால் என்னைப் பொறுத்த மட்டில், அரிச்சந்திரனும், சிரவணனும் இறவா வரம் பெற்ற புருஷர்களே ஆவர். அவர்களுடைய நாடகங்களை இன்று படித்தாலும் முன்னைப்போலவே நான் மனமுருகி விடுவேன் என்பதில் ஐயமில்லை.

மூன்றும் அத்தியாயம்

குழந்தை மணம்

இந்த அத்தியாயத்தை எழுதாதிருக்கக் கூடுமானல் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும். ஆனல் இச்சரிதையை முடிப்பதற்கு முன் இத்தகைய கசப்பு மருந்து பலமுறை விழுங்கியே யாகவேண்டும். நான் சத்தியத்தை உபாசிப்பவன் என்பது உண்மையாயின் இவைகளை மறைத்தல் கூடாது. பதின்மூன்ரும் வயதில் எனக்கு மணம் நடந்தது என்ற விஷயத்தை மிக வருத்தத் துடன் இங்கே தெரிவிக்கிறேன். அதே வயதுள்ள சிறுவர் கள் பலர் இப்போது என்னிடம் வளர்ந்து வருகின்றனர். அவர்களைப் பார்க்கும்போதெல்லாம், என்னுடைய கதியை நினைத்து இரக்கமும், அவர்களுக்கு என் கதி நேராதிருப்பது குறித்து மகிழ்ச்சியும் கொள்கிறேன். இவ்வளவு இளம் வயதில் மணம் முடித்தல் நியாயமென்று ஆதரிக்க, அற வழிப்பட்ட வாதம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை.

வாசகர்கள் தவருகக் கொள்ளவேண்டாம். எனக்கு நடந்தது நிச்சயதார்த்தமன்று; அசல் கலியாணமே. கத்தியவாரில் நிச்சயதார்த்தமென்றும் கலியாணமென்றும் இரண்டு தனித் தனிச் சடங்குகள் உண்டு. பெண்ணின் பெற்ருேரும் பையனின் பெற்ருேரும் அவர்களுக்குக் கலியாணம் செய்து வைப்பதாக உறுதி கொடுத்துக் கொள் வதற்கு நிச்சயதார்த்தம் என்று பெயர். இது பின்னல் மாற்றக்கூடாத தன்று. நிச்சயதார்த்தம் செய்தபிறகு பையன் இறந்துவிட்டால் பெண் விதந்துவாக மாட்டாள். நிச்சயதார்த்தம் என்பது பெற்ருேர்களுக்குள் நடக்கும்

ஒப்பந்தம். குழந்தைகளுக்கு அது தெரிந்திருப்பதுகூட அவசியமில்லை. எனக்கே மூன்றுமுறை நிச்சயதார்த்தம் நடந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அவை எப்போதென்பது எனக்குத் தெரியாது. எனக்கு நிச்சய தார்த்தம் செய்யப்பட்ட பெண்கள் இருவர் இறந்து போனதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து மூன்று முறை நிச்சயதார்த்தம் நடந்திருக்க வேண்டுமென்று ஊகிக் கிறேன். மூன்றாவது நிச்சயதார்த்தம் என்னுடைய ஏழாவது வயதில் நடந்ததாகச் சிறிதளவு ஞாபகம் இருக்கி றது. ஆனால் இவ்விவரம் எனக்கு அறிவிக்கப்பட்டதாக நினைவில்லை. கலியாணத்தைப் பற்றியோ நன்றாக நினை விருக்கிறது. அதைப்பற்றியே இவ்வத்தியாயத்தில் எழுதப் போகிறேன்.

நாங்கள் மூன்று சகோதரர்கள் என்று முன்னமே தெரிவித்திருக்கிறேன். எங்களில் மூத்தவருக்கு விவாகம் ஆகிவிட்டது. அடுத்தவர் எனக்கு இரண்டு அல்லது மூன்று வயது பெரியவர். என்னைவிட ஓராண்டு மூத்தவ ரான எங்கள் சிறு தந்தையின் புதல்வர் ஒருவரும் இருந்தார். எங்கள் மூன்று பேருக்கும் சேர்ந்தாற்போல் கலியாணம் செய்துவிட வேண்டுமென்று பெரியவர்கள் தீர்மானித் தார்கள். இவ்வாறு முடிவு செய்கையில், எங்களுடைய நலத்தையாவது, எங்களுடைய விருப்பத்தையாவது சிறிதும் கவனித்தார்களில்லை. அவர்களுடைய சௌகர்யம், பொருள் செலவு இவை மட்டுமே கவனிக்கப்பட்டன.

ஹிந்துக்களுக்குள் விவாகம் என்பது சாதாரண விஷய மன்று. கலியாணத்தினால் குடும்பமே அழியப் பெறுவோர் பலர். மணமகன், மணமகள் இருவரின் பெற்றோர்களும் இதில் தங்கள் பொருளையும் காலத்தையும் வீணுக்கு

கிறார்கள். ஒரு மணம் என்றால் அதற்குப் பல மாதங்களுக்கு முன்னிருந்தே சாமான்கள் சேகரிக்கவும், துணி மணிகள் நகைகள் தயாரிக்கவும், விருந்துக்குத் திட்டம் போடவும் ஆரம்பித்து விடுகிறார்கள். யாருடைய விருந்தில் பதார்த்தங்கள் அதிகம் என்பதில்தான் பலத்த போட்டி. பெண்மணிகள், குரல் நன்றாயிருந்தாலும் இல்லாவிடினும் பாடித் தீர்த்துத் தொண்டையைப் புண்ணாக்கிக்கொண்டு சில சமயங்களில் நோய்வாய்ப் படுகிறார்கள். அண்டை அயலார்களுக்குப் பெருந் தொந்தரவு. ஆனாலும் அவர்கள் வாய்திறப்பதில்லை. கூச்சல், குழப்பம், குப்பை, அழுக்கு எல்லாவற்றையும் அண்டை அயலார் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருப்பர். ஏனெனில், அவர்களும் இவ்வாறு கூத்தடிக்குங் காலம் ஒன்று வருமன்றோ?

இவ்வளவு தொல்லைகளையும், மூன்று முறை வைத்துக் கொள்ளாமல் ஒரே முறையில் முடித்துவிடுவது நலமென்று எங்கள் வீட்டுப் பெரியோர் நினைத்தனர். செலவு குறைவு; ஆடம்பரம் அதிகம். மூன்று முறைக்குப் பதிலாக ஒரே முறைதான் செலவு செய்ய வேண்டுமாதலால் தாராளமாகப் பணம் செலவிடலாம். என்னுடைய தந்தை, சிறு தந்தை, இருவரும் முதுமை பருவத்தினர். அவர்கள் கலியாணம் செய்துவைக்க வேண்டிய கடைசி குழந்தைகள் நாங்கள்தான். தாங்கள் காலமாவதற்குள் எங்களை மணக் கோலத்தில் பார்த்து மகிழ அவர்கள் விரும்பியிருக்கலாம். எனவே, இவ்வாறு மூன்று மணங்களை ஒரே சமயத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டது. பல மாதங்களுக்கு முன்பே கலியாண வேலைகளும் தொடங்கப்பட்டன.

கலியாணத்துக்கு ஆயத்தம் செய்யப்படுவதினின்று தான் எங்களுக்குக் கலியாணச் செய்தி தெரிய வந்தது.

கலியாணமென்றால், நல்ல பட்டாடைகள், மேள முழக்கம், ஊர்வலம், விருந்து, விளையாடுவதற்கு ஒரு புதுப் பெண் என்னும் இவற்றையன்றி அதற்கு வேறு பொருள் ஏதேனும் அப்போது நான் அறிந்திருந்ததாய் நினைவில்லை. சிற்றின்ப ஆசை பின்னால் வந்தது. என் வெட்கத்துக்குரிய இவ் விஷயத்தைப் பற்றி இச்சரிதையில் குறிப்பிடுவதற்குத் தகுதி யான சில விவரங்களைப் பின்னால் குறிப்பிடுவேன். மற்றப் படி அதைக் குறித்து விவரியாமல் விட்டு விடப் போகிறேன். இச்சில விவரங்களுங்கூட, இக்கதையில் ஊடுருவி நிற்கும் மத்திய நோக்கம் எதுவோ அதனுடன் அதிக சம்பந்த முடையவை யல்ல.

எனவே என்னையும் என் சகோதரரையும் இராஜ கோட்டையிலிருந்து போர்ப்ந்தருக்கு அழைத்துச் சென் றார்கள். பிரதான நாடகம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் வேடிக்கைக்காட்சிகள் சில நடைபெற்றன. அவற்றுள் ஒன்று எங்கள் உடல் முழுவதிலும் மஞ்சள் அரைத்துப் பூசியது. ஆனால் இத்தகைய சில்லரை விவரங்களை விடுத்து நான் மேலே செல்லவேண்டும்.

என்னுடைய தந்தை திவானா யிருந்தபோதிலும் ஊழி யரே யல்லவா? அதிலும் இராஜகோட்டை மன்னர் அவ ரிடம் அதிக அபிமானம் வைத்திருந்தார். எனவே கடைசி நிமிஷம்வரை என் தந்தையை அவர் விடவில்லை. இராஜ கோட்டையிலிருந்து போர்பந்தர் 120 மைல் தூரத்தில் இருக்கிறது. கட்டை வண்டியில் 5 நாள் பிரயாணம் செய்ய வேண்டும். ஆனால் கலியாணத் தேதிக்கு மூன்று நாளுக்கு முன் வரை, மன்னர் என் தந்தைக்கு விடை கொடுக்க வில்லை. எனவே, மூன்று நாளில் போய்ச் சேர்வதற்குத் தனிக்குதிரை வண்டிகள் அமர்த்திக் கொடுத்தார். ஆனால்

இறைவன் திருவுளம் வேறுவிதமா யிருந்தது. மூன்றும் நாள் பிரயாணத்தில் குதிரை வண்டி கவிழ்ந்து என் தந்தைக்கு உடலெல்லாம் காயங்கள் ஏற்பட்டன. தேக மெல்லாம் கட்டுக்களுடன் அவர் வீடு வந்து சேர்ந்தார். இதனால் அவருக்கும் எங்களுக்கும் கலியாணத்தில் அரை வாசி உற்சாகம் போய்விட்டது. ஆயினும் காரியம் நடந்தாக வேண்டும். முகூர்த்தத் தேதிகளை மாற்ற முடியாதன்றோ? என் தந்தைக்கு நேர்ந்த விபத்தைப்பற்றி எனக்குண்டான வருத்தத்தைக் கலியாண வேடிக்கைகளில் முற்றும் மறந்தேன்.

என் பெற்றோர்களிடத்தில் எனக்கு அளவற்ற பக்தி யுண்டு. ஆனால் இந்திரிய சுகாநுபவங்களிலும் அவ்வளவு பற்று இருந்தது. பெற்றோர்களின் தொண்டில் மற்ற எல்லாச் சுகங்களையும் தியாகம் செய்துவிட வேண்டுமென்னும் உண்மையை அப்போது அறிந்தவனல்லன். இவ்வாறு நான் புலனின்பத்தை நாடியதற்குத் தண்டனையே போல ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. என் உள்ளத்தில் சதா உறுத்திக் கொண்டிருக்கும் இந்நிகழ்ச்சியைப்பற்றிப் பின்னால் கூறுவேன். "உள்ளத்தின் ஆசைகளைத் துறவாமல் உலகப் பொருள்களை மட்டும் துறத்தல் என்னதான் முயன்றாலும் நீண்ட காலம் நீடித்திராது" என்று நிஷ்குலானந்தர் பாடியிருக்கிறார். இந்தப் பாட்டைப் பாடும்போதும், கேட்கும் போதும் மேற் குறிப்பிட்ட அசந்தர்ப்ப நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்து என்னை வெட்கித் தலை குனியச் செய்கிறது.

என் தந்தை தமது காயங்களையும் கவனியாது மணவினை ஒவ்வொன்றையும் நடத்தி வைத்தார். இன்று நினைத்தாலும் அன்று அவர் பற்பல சடங்குகளையும் செய்த போது உட்கார்ந்த இடங்களெல்லாம் என் மனக்கண்

முன் நிற்கின்றன. எனக்குக் குழந்தைப் பருவத்திலேயே மணஞ் செய்து வைத்தது குறித்துப் பிற்காலத்தில் என் தந்தையைப் பெரிதும் கடிந்து கொள்வேனென்று அப்போது கனவிலும் நினைக்கவில்லை. அன்று நடந்தது ஒவ்வொன்றும் எனக்குச் சரியாகவேபட்டது. அவை எனக்குச் சந்தோஷமும் அளித்தன. மேலும், கலியாணம் செய்துகொள்ள எனக்கு ஆசையும் இருந்தது. அன்று நாங்கள் திருமண மேடையில் உட்கார்ந்திருந்தது, ஸப்தபதி நடந்தது, மணமகனும் மணமகளும் ஒருவருடைய வாயில் ஒருவர் இனிய தின்பண்டம் ஊட்டியது முதலியன எல்லாம் இப்போது எனக்கு நன்ருக நினைவிலிருக்கின்றன. ஓ! அந்த முதல் நாள் இரவு! அறியாக் குழந்தைகள் இருவர் சம்சார சாகரத்தில் அதன் பலாபலன்களைப்பற்றிச் சிறிதும் அறியாமலே தொப்பென்று வீழ்ந்தனர்! அம் முதல் நாளிரவு எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றி எனது அண்ணியார் எனக்குப் புத்திமதி சொல்லியிருந்தார். என் மனைவியை இவ்வாறு யார் தயார் செய்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. இன்றுவரை அதைப்பற்றி அவளிடம் நான் கேட்டதில்லை. இப்போது கேட்கவும் விரும்புகிறேனில்லை. முதன்முதல் நாங்கள் சந்தித்தபோது பெரிதுங் கூச்சப்பட்டோமென்று வாசகர்கள் சொல்லாமலே தெரிந்துகொள்வார்கள். அவளிடம் எவ்வாறு பேசத் தொடங்குவது, என்ன பேசுவது, என்று புரியவில்லை. அண்ணியாரின் புத்திமதிகள் அதிகமாகப் பயன்படவில்லை. உண்மையில், இத்தகைய விஷயங்களில் பிறரின் புத்திமதிகளே அநாவசியம். முற்பிறப்பின் வாசனைகள் பிறருடைய உதவி தேவையில்லாமல் செய்துவிடுகின்றன. வரவர ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்ளலானோம். தாராளமாகப் பேசவுந் தொடங்கி

னேம். இருவரும் ஒத்த வயதினராயிருந்தோம். ஆனாலும் கணவனுடைய அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்குவதில் நான் காலந் தாழ்க்கவில்லை.

நான்காம் அத்தியாயம்

கணவனின் அதிகாரம்

எனக்கு மணம் நடந்த காலத்தில் ஒரு தம்படி அல்லது காலணா விலையுள்ள துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படுவதுண்டு. இவற்றில் இல்வாழ்க்கை, சிக்கனம், குழந்தை மணம் முதலிய பல விஷயங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும். இத்தகைய துண்டுப் பிரசுரம் ஒன்றைக் கண்டதும் முதலிலிருந்து இறுதிவரை படித்து முடிப்பது என் வழக்கம். நான் படித்தவற்றில் எனக்குப் பிடியாதவற்றை உடனே மறந்துவிடுவேன். எனக்கு விருப்பமானவற்றை என் வாழ்க்கையில் நடை முறைக்குக் கொண்டுவர முயலுவேன். மனைவிக்கு எக்காலத்தும் உண்மையாக நடந்து கொள்ளுதல் கணவனின் கடமை என்று அப்பிரசுரங்களிலே வலியுறுத்திக் கூறப்பட்டிருந்தது என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. மேலும் இயற்கையிலேயே சத்தியத்தில் அளவற்ற பற்றுடையேனாதலால் அவளுக்குத் துரோகம் செய்வது முடியாத காரியம். அன்றியும், அவ் விளம்பிராயத்தில் மனைவிக்குத் துரோகம் செய்வதுதான் எப்படி இயலும்?

ஆனால் மனைவிக்கு உண்மையாக நடந்துகொள்ள வேண்டுமென்ற படிப்பினை ஒரு தீய பயனையும் அளித்தது. "நான் மனைவிக்கு உண்மையாக நடந்துகொள்வதானால்,

அவளும் எனக்கு உண்மையாக நடந்துகொள்ள வேண்டாமா? என்று எண்ணினேன். இவ்வெண்ணம் என்னிடம் பொறாமைத் தீயை மூட்டிற்று. அவளுடைய கடமையை என்னுடைய உரிமையாக நினைத்துக்கொண்டேன். எனவே விழிப்புடனிருந்து அவ்வுரிமையை வலியுறுத்த வேண்டுமென்று தீர்மானித்தேன். என் மனைவி என்னிடம் வைத்திருந்த பக்தியில் ஐயங்கொள்ளத் தினைத்துணையும் காரணம் இருந்ததில்லை. ஆனால் பொறாமை, காரண காரியங்களை ஆராய்வதுண்டா? எனவே, எனக்குத் தெரியாமல் ஒன்றும் செய்யக்கூடாது, என்னுடைய அநுமதியின்றி எங்கும் போகக்கூடாது என்று சட்டம் விதித்தேன். இச்சட்டந்தான் எங்களிடையே சண்டை விதையை விதைத்தது. என்னுடைய கட்டுப்பாடு ஏறக்குறைய என் மனைவியைச் சிறையிலிடுவதாகவே இருந்தது. ஆனால் அதற்குட்படும் பெண் கஸ்தூரிபாய் அல்லள். தான் நினைத்தபோது நினைத்த விடத்துக்கு அவள் பிடிவாதமாகச் சென்றே வந்தாள். நான் கட்டுப்பாட்டை வலுப்படுத்த வலுப்படுத்த அவள் யதேச்சையாக நடப்பதும் அதிகமாகி வந்தது. இதன் பயனாய் எனக்கு எரிச்சல் அதிகமாயிற்றே யொழிய வேறில்லை. இத்தகையச் சரவுகளினால் குழந்தைத் தம்பதிகளான எங்களுக்குள் ஒருவர்க்கொருவர் பேசாமலிருப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. கஸ்தூரிபாய் இவ்வாறு எனது கட்டுப்பாடுகளை மீறி நடந்ததில் குற்றம் எதுவுமில்லை என்று இப்போது எண்ணுகிறேன். கபடமற்ற ஒரு பெண்ணைக் கோயிலுக்குப்போவதிலும் தோழிகளைப் பார்க்கச் செல்வதிலும் கட்டுப்பாடு செய்தால் அவள் எவ்வாறு பொறுத்திருப்பாள்? அவளைக் கட்டுப்பாடு செய்ய எனக்கு உரிமை யுண்டானால் என்னைக் கட்டுப்பாடு செய்ய அவளுக்கும் உரிமை உண்டல்லவா? இவையெல்

லாம் இன்று எனக்குத் தெளிவாக விளங்குகின்றன. ஆனால் அப்போது கணவனுடைய அதிகாரத்தைச் செலுத்த வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி யிருந்தது.

மேலே சொன்னவற்றிலிருந்து எங்களுடைய மண வாழ்க்கை முழுதும் துன்பமயமானது என்று வாசகர்கள் முடிவு செய்துவிட வேண்டாம். என்னுடைய சட்ட திட்டங்களெல்லாம் அன்பிலிருந்தே எழுந்தனவாகும். என் மனைவியை மனைவிகளுக்கோர் இலக்கியமாகச் செய்ய வேண்டுமென்பது என் விருப்பம், அவளைத் தூய வாழ்க்கை நடத்தச் செய்யவேண்டு மென்றும், நான் கற்பனவெல்லாம் அவளும் கற்று எங்கள் இருவரின் வாழ்க்கையும் எண்ணமும் ஒன்றாகி விடவேண்டுமென்றும் ஆவல் கொண்டேன்.

கஸ்தூரிபாய்க்கு இத்தகைய ஆவல் ஏதேனும் இருந்ததா என்று எனக்குத் தெரியாது. அவள் எழுத்து வாசனை அறியாதவள். கபடமற்ற தன்மையும், சுயேச்சை விருப்பமும், விடாமுயற்சியும் என் விஷத்தில் மட்டுமேனும் சங்கோசமும் அவளுடைய இயற்கைக் குணங்கள். தான் கல்வியறிவு இல்லாதவளா யிருந்தது குறித்து அவளுக்குக் கவலையே யில்லை. என்னுடைய படிப்புங்கூட அவளுக்கு இவ்விஷயத்தில் ஊக்க மூட்டவில்லை. எனவே, அவளுடைய அபிவிருத்தியில் நான் கொண்டிருந்த ஆசை என் வரை யிலேயே நின்றதாகத் தோன்றுகிறது. நான் முழுமன துடனும் அவள் ஒருத்தியையே காதலித்ததுபோல் அவளும் என்னைக் காதலிக்க வேண்டுமென விரும்பினேன். ஆனால் ஒரு பக்கமேனும் உண்மை அன்பு இருந்தபடியால்—பதிலுக்கு அன்பு கிடைத்திராவிட்டாலும்—வாழ்க்கை முழுதும் துன்பமயமா யிருந்திருக்க முடியாது.

அவளிடம் அடங்காப் பிரேமை கொண்டிருந்தேன் என்று சொல்லவேண்டும். பள்ளிக்கூடத்தில்கூட அவளைப் பற்றி நினைப்பேன். இரவானதும் அவளைச் சந்திக்கலாம் என்னும் எண்ணம் மனதில் தோன்றிக்கொண்டே யிருக்கும். பிரிவினால் ஏற்படும் துன்பம் சகிக்க வொண்ணாததா யிருந்தது. இரவில் நெடுநேரம் வரையில் அவளைத் தூங்கவிடாமல் வெறும் பேச்சுப் பேசிக் காலங்கழிப்பேன். இந்த அடங்காக் காதலுடன், கடமையில் தீவிரமான பற்றும் என்னிடம் இருந்திராவிட்டால் அப்போதே நோய் வாய்ப்பட்டு அகால மரணமடைந்திருப்பேன். அல்லது பிறருக்குப் பாரமான வாழ்க்கை நடத்தவேண்டி வந்திருக்கும். ஆனால் ஒவ்வொரு நாள் காலையிலும் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடித்தே தீரவேண்டி யிருந்தது. பொய் சொல்வதென்பது என்னால் இயலாத காரியம். இந்த ஒரு குணத்தினால்தான் நான் பல முறையும் படுகுழியில் வீழாமல் காப்பாற்றப்பட்டேன்.

கஸ்தூரி பாய்க்கு எழுதப் படிக்கத் தெரியாதென்று முன்னமே சொல்லி யிருக்கிறேன். அவளுக்குப் படிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று, பெரிதும் கவலை கொண்டிருந்தேன். ஆனால் அப்போது என் அன்பில் காமத்தின் கூறே மேலோங்கி நின்றமையால் அதற்கு நேரமே யிருப்பதில்லை. ஏதேனும் கற்றுக்கொடுப்பதென்றால் அவளுடைய விருப்பத்துக்கு விரோதமாய், அதுவும் இரவில்தான் கற்றுக் கொடுக்க வேண்டும். பெரியவர்கள் இருக்கும்போது அவளைப் பார்ப்பதற்கே எனக்குத் துணிவு இருப்பதில்லை யென்றால், அவளுடன் பேசுவதைப் பற்றிச் சொல்வானேன்? அப்போது கத்தியவாரின் உபயோகமற்ற, அநாகரிகமான 'படுதா' வழக்கம் இருந்துகொண்டிருந்தது.

இப்போதும் அது முற்றிலும் ஒழிந்துவிடவில்லை. இவ்வாறு, சந்தர்ப்பங்கள் எல்லாம் எனக்கு விரோதமாயிருந்தன. ஆகையால் கஸ்தூரி பாய்க்குக் கல்வி புகட்ட நான் செய்த முயற்சிகள் எல்லாம் வீண் ஆயின. கடைசியில் காமம் என்னும் உறக்கத்திலிருந்து நான் விழித்தெழுந்த போது, பொது வாழ்வில் ஈடுபட்டவனாகிவிட்டேன். அப்போது ஒழிவு நேரம் கிடைப்பது அரிதாயிற்று. வேறு உபாத்தியாயர்களைக்கொண்டு கல்வி புகட்டவும் ஏற்பாடு செய்யவில்லை. இதன் பயன் யாதெனில், இன்று கஸ்தூரி பாய் சாதாரண கடிதங்கள் எழுதுவதற்கும், எளிய நடையில் உள்ள குஜராத்தி மொழி நூல்களைப் படிப்பதற்குமே மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. நான் அவளிடம் கொண்டிருந்த அன்பு, காமக் கலப்பற்றதாயிருந்திருக்குமானால், அவள் இன்று கல்வியறிவிற் சிறந்த பெண் மணியாயிருப்பாள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. படிப்பில் அவளுக்கிருந்த வெறுப்பை நான் மாற்றியிருக்கக் கூடும். தூய அன்பினால் ஆகாத காரியம் எதுவுமில்லையன்றோ?

காமத்தின் அபாயங்களிலிருந்து நான் தப்பியதற்கு ஒரு காரணத்தை மேலே குறிப்பிட்டிருக்கிறேன். மற்றொன்றையும் இங்கே குறிப்பிடுதல் பொருந்தும். ஒருவனுடைய நோக்கம் மட்டும் தூயதாயிருந்தால் அவனை இறைவன் முடிவில் காத்தருள்வான் என்று நான் பல உதாரணங்களினின்றும் அறிந்து கொண்டிருக்கிறேன். 'இளமைமணம்' என்னும் கொடிய வழக்கம் ஹிந்து சமூகத்தில் இருக்கிறதாயினும், மற்றொரு நல்ல வழக்கம் இதன் கொடுமைகளை ஓரளவு தணித்து வருகிறது. இளம்பிராயத்தினரான தம்பதிகளைப் பெற்றோர் அதிக நாள் சேர்ந்

திருக்க விடுவதில்லை. குழந்தைப் பிராயத்து மனைவி, வருஷத்தில் பாதி நாள் தன் பெற்றோர் வீட்டில் இருக்கிறாள். எங்கள் விஷயத்திலும் இப்படியே. எனக்குக் கலியாணமான முதல் ஐந்து வருஷத்தில் (என்னுடைய பதின்மூன்றாம் வயதிலிருந்து 18 வயதுவரை) நாங்களிருவரும் சேர்ந்திருந்தது மூன்று வருஷங்களுக்குமேல் இராது. நாங்கள் ஆறுமாதம் சேர்ந்திருப்பதற்குள்ளாக என் மனைவியின் பெற்றோர்கள் அவளைக் கூப்பிட்டனுப்புவார்கள். இத்தகைய பிரிவுகள் அப்போது வருத்தத்தை அளித்தனவாயினும் அவைதான் எங்கள் இருவரையும் காப்பாற்றினவென்று சொல்லலாம். பதினெட்டாம் வயதில் நான் இங்கிலாந்து சென்றதின் பயனாக நீண்ட நாள் பிரிவு ஏற்பட்டது. இதுவும் எங்களுக்கு நலமே செய்தது. இங்கிலாந்திலிருந்து திரும்பிய பிறகும் ஆறு மாதங்களுக்கு மேல் நாங்கள் சேர்ந்து வாழ்ந்ததில்லை. இராஜகோட்டைக்கும் பம்பாய்க்கும் நான் அடிக்கடி போய் வரவேண்டியிருந்தது. பின்னர், தென்னாப்பிரிக்கா செல்வதென்னும் யோசனை ஏற்பட்டபோது, சிற்றின்ப ஆசையிலிருந்து அநேகமாய் விடுதலை யடைந்துவிட்டேனென்று சொல்லலாம்.

ஐந்தாம் அத்தியாயம்

பள்ளிக்கூட ஞாபகங்கள்

எனக்கு மணம் நடந்தபோது உயர்தரப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்ததாக முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். நாங்கள் சகோதரர் மூவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தோம். மூத்தவர் என்னைவிட ரொம்பப் பெரிய வகுப்பில் படித்துக்கொண்

டிருந்தார். என்னுடன் மணம் நடந்த சகோதரர் எனக்கடுத்த மேல் வகுப்பில் படித்தார். கலியாணத்தின் பயனுக எங்கள் இருவருக்கும் ஒரு வருஷம் வீணுயிற்று. இது என்னைவிட என் தமையனுருக்கு அதிக தீமையாய் முடிந்தது. அவர் படிப்பையே நிறுத்திவிட்டார். எவ்வளவு இளைஞர்கள் அவருடைய கதியையே அடைகின்றனரோ, இறைவனுக்கே தெரியும். தற்போதைய ஹிந்து சமூகம் ஒன்றிலே தான் கலியாணமும் கல்விப் பயிற்சியும் ஒரே சமயத்தில் நடைபெறுகின்றன.

நான் மட்டும் விடாமல் படிக்கலானேன். உயர்தரப் பள்ளிக்கூடத்தில் நான் மந்த புத்தியுடையவனுகக் கருதப் படவில்லை. உபாத்தியாயர்கள் என்னிடம் எப்போதும் அன்பு காட்டினுர்கள். வருஷந்தோறும் பையன்களுடைய நடக்கை, கல்வி அபிவிருத்தி இவைகளைப்பற்றிப் பெற்ருேருக்கு அனுப்பப்படும் நற்சாட்சிப் பத்திரத்தில் ஒரு முறையாவது என்னைப்பற்றிக் கெடுதலாக எழுதப்படவில்லை. இரண்டாவது வகுப்புக்குப் பிறகு எனக்குப் பரிசுகள் கிடைக்கவும் ஆரம்பித்தன. ஐந்தாவது ஆருவது வகுப்புகளில் முறையே நான்கு ரூபாயும், பத்து ரூபாயும் உபகாரச் சம்பளம் பெற்றேன். இதன் பொருட்டு என் தகுதியைக் காட்டிலும் என் அதிர்ஷ்டத்துக்கே அதிக நன்றி செலுத்த வேண்டும். கத்தியவாரில் சோராத் பகுதியிலிருந்து வந்த மாணுக்கர்களில் கெட்டிக்காரர்களுக்கென்று இந்த உபகாரச் சம்பளங்கள் ஏற்பட்டன. அக்காலத்தில், நாற்பது ஐம்பது பேர் உள்ள வகுப்பில், சோராத்திலிருந்து வந்தவர் பலர் இருக்க முடியாதன்ருே?

என்னுடைய திறமையைப்பற்றி அப்போது எனக்கே நம்பிக்கை கிடையாதென்று ஞாபகம், எனக்குப் பரிசுகளும்

உபகாரச் சம்பளமும் கிடைத்தபோதெல்லாம் நான் ஆச்சரியப்படுவது வழக்கம். ஆனால் என்னுடைய நடக்கையைப்பற்றி மட்டும் அதிக கவலை கொண்டிருந்தேன். நடக்கையில் ஒரு சிறு குறை ஏற்பட்டுவிட்டாலும் கண்ணீர் விட்டழுவேன். உபாத்தியாயரால் கண்டிக்கப் படத்தக்க செயல் ஏதேனும் செய்துவிட்டாலோ, அல்லது அவ்வாறு உபாத்தியாயர் கருதிவிட்டாலோ என் மனம் பொறாது. முதல் வகுப்பிலோ இரண்டாம் வகுப்பிலோ படித்தபோது ஒரு முறை நான் அடிக்கப்பட்டது நினைவிருக்கிறது. அடிபட்டதை விட, அடிக்குத் தகுந்தவனாக நான் கருதப்பட்டது எனக்கு அதிக வருத்தத்தை அளித்தது. விம்மி விம்மி அழுதேன். ஏழாவது வகுப்பில் நான் படித்தபோது மற்றொரு சம்பவம் நடந்தது. தோராப்ஜி என்பவர் அப்போது தலைமை ஆசிரியரா யிருந்தார். அவர் கட்டுப்பாட்டை வலியுறுத்துபவர்; ஒழுங்கு முறைப்படி காரியம் செய்பவர்; போதன சக்தி வாய்ந்தவர். பிள்ளைகள் அவரைப் பெரிதும் விரும்பினார்கள். தேகாப்பியாசம், கிரிக்கெட் ஆட்டம் இரண்டையும் மேல் வகுப்புப் பிள்ளைகளுக்கு அவர் கட்டாயமாகச் செய்தார். இவையிரண்டையும் நான் வெறுத்தேன். கட்டாய மாக்கப்படுவதற்கு முன்பு நான் தேகாப்பியாசத்துக்கும் விளையாட்டுகளுக்கும் செல்வதே யில்லை. எனக்கு இயற்கையான கூச்சம் இதற்கு ஒரு காரணமாகும். அது தவறென இப்போது உணர்கிறேன். தேகப்பயிற்சிக்கும் கல்விக்கும் சம்பந்த மில்லையென்று அக்காலத்தில் நினைத்தேன். ஆனால் இன்று மனப்பயிற்சியைப் போலவே உடற் பயிற்சியும் பள்ளிக்கூடத்தில் இடம் பெறவேண்டு மென அறிந்துள்ளேன்.

எனினும், தேகாப்பியாசம் இல்லாததால் எனக்கு அதிக தீமை ஏற்படவில்லை என்பதை இங்கே கூற வேண்டும். இதற்குக் காரணம், திறந்த வெளியில் உலாவுவதின் நன்மையைப் பற்றிப் புத்தகங்களில் நான் படித்திருந்தபடியால் தினந்தோறும் நீண்ட நேரம் நடக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டிருந்ததே யாகும். இவ் வழக்கத்தின் பயனாக என் உடம்பு நல்ல உரம் பெற்றது.

தேகாப்பியாச வகுப்புக்குச் செல்ல நான் விரும்பாததற்கு முக்கிய காரணம் என் தந்தைக்குப் பணிவிடை செய்வதில் இருந்த விருப்பமாகும். பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு விரைந்து சென்று தந்தைக்கு ஊழியம் செய்யத் தொடங்குவேன். கட்டாய தேகாப்பியாசம் இவ்வூழியத்துக்குத் தடையா யிருந்தது. இக்காரணத்தைத் தெரிவித்துத் தேகாப்பியாசத்துக்கு வரவேண்டிய கட்டாயத்தினின்றும் என்னை விடுவிக்கும்படி தலைமை ஆசிரியரைக் கேட்டுக்கொண்டேன். ஆனால் அவர் என் வேண்டுகோளை மறுத்துவிட்டார். சனிக்கிழமைகளின் காலை நேரத்தில் மட்டும் பள்ளிக்கூடம். மாலை 4 மணிக்குத் தேகாப்பியாசத்துக்காகப் பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டும். ஒரு சனிக்கிழமை யன்று நான் காலந் தவறிப் போனேன். என்னிடம் கடிகாரம் இல்லை. சூரியனை மேகங்கள் மறைத்திருந்தபடியால் ஏமாந்துவிட்டேன். எனவே நான் செல்வதற்குள் பையன்கள் எல்லாரும் திரும்பிவிட்டார்கள். மறுநாள் தலைமையாசிரியர் நான் வராததின் காரணங் கேட்டபோது நிகழ்ந்ததைச் சொன்னேன். அவர் நான் கூறியதை நம்பாமல் ஓர் அணாவோ இரண்டணாவோ (இப்போது நன்றாக நினைவில்லை) அபராதம் விதித்தார்.

பொய் கூறினேனென்பதாகத் தண்டிக்கப்பட்டேன்! இது எனக்கு மிகுந்த துயரத்தை அளித்தது. நான் சொன்னது உண்மையென்று நிரூபிக்கவோ வழியில்லை. வேதனை தாங்காது கதறி அழுதேன். உண்மையாளனான ஒருவன் எச்சரிக்கை யுடையவனாயு மிருத்தல் வேண்டுமென்று அப்போது உணர்ந்தேன். நான் பள்ளிக்கூடத்தில் கவலையீனமாக நடந்துகொண்டது இந்த ஒரே முறைதான். முடிவில், அபராதம் தள்ளுபடி செய்யப்பட்டதாகச் சிறிதளவு ஞாபக மிருக்கிறது.

என்னுடைய தந்தை தாமே தலைமை ஆசிரியருக்கு எழுதியபடியால் தேகாப்பியாசத்துக்குப் போகாமலிருக்க எனக்கு முடிவில் அநுமதி கிடைக்கவே செய்தது. தேகாப்பியாசத்தை அலட்சியம் செய்ததால் எனக்கு அதிக தீமை விளையாவிடினும், மற்றொன்றை அலட்சியம் செய்ததின் பயனை இப்போதும் அநுபவித்து வருகிறேன். நல்ல கையெழுத்துக்கும் படிப்புக்கும் சம்பந்தமில்லையென்று அப்போது எவ்வாறோ எனக்கு ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. இங்கிலாந்துக்குப் போகும் வரையில் அவ்வபிப்பிராயமே கொண்டிருந்தேன், பிற்காலத்தில், முக்கியமாகத் தென்னாப்பிரிக்காவில், வக்கீல்கள், (தென்னாப்பிரிக்காவில் பிறந்து கல்விப் பயிற்சி பெற்ற) இளைஞர்கள் முதலியோரின் அழகான கையெழுத்தைப் பார்த்தபோது நான் வெட்கமும் பச்சாதாபமும் அடைந்தேன். அவலட்சணமான கை யெழுத்தை, கல்விப் பயிற்சியில் குறைபாட்டுக்கு ஓர் அறிகுறியாகக் கொள்ள வேண்டுமென உணர்ந்தேன். பின்னால் கையெழுத்தை விருத்தி செய்ய எவ்வளவு முயன்றும் பயன்படவில்லை. இளமையில் அசட்டை செய்ததின் தீய பயனை இன்றள

வும் நிவர்த்தி செய்ய முடியவில்லை. சிறுவர்களும் சிறுமிகளும் என்னுடைய உதாரணத்தை ஓர் எச்சரிக்கையாகக் கொண்டு, நல்ல கையெழுத்து, கல்வியின் ஓர் அவசியமான பகுதி என்பதை உணர்வார்களாக. குழந்தைகளுக்கு எழுதக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னால் சித்திரம் வரையக் கற்பிக்கவேண்டு மென்று நான் தற்போது அபிப்பிராயப்படுகிறேன். பறவைகள், பூக்கள் முதலியவைகளைப் பார்த்துத் தெரிந்துகொள்வதுபோல் குழந்தைகள் முதலில் எழுத்தைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும். பொருள்களைப்போல் சித்திரம் வரையக் கற்றுக்கொண்ட பிறகுதான் எழுத்து எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் அழகிய கையெழுத்துப் படியும்.

என் பள்ளிக்கூட வாழ்க்கையைப்பற்றி இன்னும் இரண்டு நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கன. கலியாணத்தின் பயனாக எனக்கு ஓராண்டுப் படிப்பு வீணாகப் போனபடியால் இந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்காக நான் ஒரு வருஷத்தில் இரண்டு வகுப்புகள் தாண்டிவிட வேண்டுமென்று உபாத்தியாயர் விரும்பினார். சாதாரணமாய் உழைப்பாளிகளான பிள்ளைகளுக்கு இந்த உரிமை அளிக்கப்பட்டு வந்தது. எனவே மூன்றாவது வகுப்பில் ஆறு மாதம் படித்து அரை வருஷப் பரீட்சையும், கோடை கால விடுமுறையும் ஆனதும், மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டேன். நான்காவது வகுப்பிலிருந்து பல பாடங்கள் ஆங்கிலத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. எனக்குத் திக்குத் திசை தெரியவில்லை. க்ஷேத்திர கணிதம் (Geometry) நாலாவது வகுப்பில் ஒரு புதுப் பாடம். ஏற்கனவே அது எனக்குச் சிரமமா யிருந்தது. அதை ஆங்கிலத்தில் கற்கவேண்டி யிருந்ததால் கஷ்டம் அதிகமாயிற்று. உபாத்தி

யாயர் மிக நன்றாகவே சொல்லிக் கொடுத்தார். ஆனால் அறிந்து கொள்ளத்தான் எனக்குச் சக்தி போதவில்லை. பலமுறை மனம் சோர்ந்து மீண்டும் மூன்றாவது வகுப்புக்கே போய்விடலாமா வென்று எண்ணுவேன். இரண்டு வருஷப் படிப்பை ஒரே வருஷத்தில் முடித்தல் அதிக ஆசை என்று தோன்றும். ஆனால் அப்படிச் செய்தல் எனக்கு மட்டு மன்றி என் உபாத்தியாயருக்கும் அவமானத்தை உண்டு பண்ணும். என்னுடைய முயற்சியில் நம்பிக்கை வைத் தன்றோ அவர் மேல் வகுப்புக்கு ஆறு மாதத்திலேயே மாற்றலாமென்று சிபார்சு செய்தார்! இவ்விருவகை அவ மானங்களுக்குப் பயந்து நான் பிடிவாதமாய்ப் படித்து வந்தேன். பெரு முயற்சியின் மீது யூக்ளிட் (Euclid) டில் 13-வது பாடத்துக்கு வந்ததும், இக்கணிதம் எவ்வளவு சுலபமானதென்று எனக்குத் திடீரென்று புலப்பட்டது. ஒருவனுடைய அறிவைப் பயன்படுத்துவதின் மூலமாகவே கற்றுக்கொள்ள வேண்டிய எதுவும் கஷ்டமா யிருக்க முடியாது. அதிலிருந்து க்ஷேத்திர கணிதம் எனக்குச் சுலப மாயும், சுவை யுள்ளதாயும் ஆகிவிட்டது.

ஆனால் உண்மையில் அதிக கஷ்டம் கொடுத்தது சம்ஸ் கிருத பாடமே யாகும். க்ஷேத்திர கணிதத்தில் நெட்டுருச் செய்யவேண்டியது எதுவுமில்லை. சம்ஸ்கிருதத்திலோ எல்லா வற்றையும் மனப்பாடம் செய்தாக வேண்டுமென்று கருதினேன். இந்தப் பாடமும் நாலாவது வகுப்பில்தான் ஆரம்பமாயிற்று. ஆறாவது வகுப்புவரை சிரமத்துடன் படித்து வந்தேன். அந்த வகுப்புக்கு வந்ததும் சோர் வடைந்து விட்டேன். சம்ஸ்கிருத உபாத்தியாயர் ரொம்ப கண்டிப்புக்காரர். அவர் பிள்ளைகளைப் பலவந்தப்படுத்தி எல்லாவற்றையும் ஒரேயடியாகப் புகட்டிவிட விரும்புகிறார்

என எண்ணினேன். பாரஸீக பாஷை உபாத்தியாய ருக்கும், சம்ஸ்கிருத பண்டிதருக்கும் ஒருவகைப் போட்டி நடந்து வந்தது. பாரஸீக மொழி கற்பது சுலபமென்றும், பாரஸீக உபாத்தியாயர் நல்லவரென்றும், பிள்ளைகளை வருத்துவதில்லை யென்றும் பிள்ளைகள் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பார்கள். இந்த 'சுலப'ப் பேச்சில் மயங்கி ஒரு தினம் நான் பாரஸீக வகுப்புக்குச் சென்றேன். சம்ஸ்கிருத பண்டிதருக்கு இது மிக மனவருத்தத்தை அளித்தது. அவர் என்னை அழைத்துப் பின்வருமாறு சொன்னார்:—"நீ ஒரு வைஷ்ணவரின் புதல்வன் என்பது மறந்து விட்டாயா? உன்னுடைய மதத்துக்குரிய மொழியைக் கற்க வேண்டாமா? உனக்கு ஏதேனும் கஷ்டம் தோன்றினால் என்னிடம் வருவதற்கென்ன? என்னு வியன்றவரை உழைத்து உங்களுக்கு சம்ஸ்கிருதம் சொல் லிக் கொடுக்க வேண்டுமென்பதே என் விருப்பம். போகப் போக, அம்மொழியில் மனதைக் கவரும் விஷயங் களைக் காண்பாய். நீ ஊக்கந் தளர்ந்து விடக்கூடாது. சம்ஸ்கிருத வகுப்புக்கு மறுபடியும் வந்து சேர்."

இதைக் கேட்டு நான் வெட்கிப் போனேன். அவருடைய அன்பை நான் அலட்சியம் செய்ய முடியவில்லை. இன்று கிருஷ்ண சங்கர பாண்டியரைப்பற்றி நன்றியோடன்றி நான் எண்ணுவதற்கில்லை. அப்போது கற்றுக் கொண்ட சிறிதளவு சம்ஸ்கிருதமும் இல்லாவிடின், நமது சமய நூல்களில் எனக்குச் சிரத்தை தோன்றியிருத்தல் அருமை. அம்மொழியை இன்னும் நன்றாகக் கற்றுக் கொள்ளவில்லையே யென இன்று வருந்துகின்றேன். ஹிந்து சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும் சம்ஸ்கிருதத்தில் நல்ல பயிற்சி அவசியம் என்று இப்போது உணர்ந்திருக்கிறேன்.

இந்தியாவில் உயர்தரக் கல்விமுறையில் தாய் மொழியோடுகூட ஹிந்தி, சம்ஸ்கிருதம், பாரஸீகம், அரபு, ஆங்கிலம் இவ்வளவு மொழிகளுக்கும் இடமிருக்க வேண்டும் என்பது தற்போது என் அபிப்பிராயம். இந்தப் பெரிய ஜாபிதாவைப் பார்த்து மலைக்கவேண்டாம். நமது கல்விமுறை ஒழுங்காக அமைக்கப் பெற்றால், நமது பிள்ளைகள் எல்லாப் பாடங்களையும் அன்னிய மொழியில் கற்கவேண்டி யிருக்கும் பெருஞ் சுமை நீங்கினால், இவ்வளவு மொழிகளையும் கற்பது ஒரு கஷ்டமன்று. அதற்கு மாறாக, அது பெரிதும் சந்தோஷ மளிப்பதாயிருக்கும். ஒரு மொழியை முறைப்படி கற்றுணர்ந்தவர்களுக்கும் மற்ற மொழிகளைக் கற்பது மிக எளிதாகும்.

ஹிந்தி, குஜராத்தி, சமஸ்கிருதம், இம் மூன்றையும் உண்மையில் ஒரு மொழி யென்றே சொல்லலாம். பாரஸீக மொழியும் அரபும் இப்படித்தான். பாரஸீகம் ஆரிய மொழிக் கூட்டத்தையும், அரபு ஸெமிடிக் மொழிக் கூட்டத்தையும் சேர்ந்தனவாயினும் அவற்றிற்குள் நெருங்கிய உறவு உண்டு. ஏனெனில், இரண்டும் இஸ்லாமின் மூலமாகவே பூரண வளர்ச்சி பெற்றதாக உரிமை பாராட்டுகின்றன. உருதுவைத் தனி மொழி யென்றே நான் கருதவில்லை. அதனுடைய இலக்கணம் ஹிந்தியிலிருந்து வந்தது. பதங்கள் பெரும்பாலும் பாரஸீக, அரபு மொழிகளுக் குரியவை. நல்ல குஜராத்தியும், நல்ல ஹிந்தியும், நல்ல வங்காளி, மராத்தி பாஷைகளும் கற்க விரும்புவோர் சம்ஸ்கிருதம் கற்றல் எப்படி அவசியமோ, அவ்வாறே நல்ல உருது கற்க விரும்புவோர் பாரஸீகமும், அரபும் பயிலுதல் அவசியமாகும்.

ஆறும் அத்தியாயம்

ஒரு துக்க சம்பவம்

உயர்தரப் பள்ளிக்கூடத்தில் எனக்கிருந்த நண்பர் வெகு சிலரில், ஆப்த நண்பர் என்றுசொல்லக்கூடிய இருவர் வெவ்வேறு காலத்தில் இருந்தனர். இவர்களில் ஒருவர் நட்பு நீடித்திருக்கவில்லை. நானாக அவரைக் கைவிடவில்லை. ஆனால் மற்றொருவருடன் நான் நட்புரிமை கொண்டதன் பொருட்டு அவர்தான் என்னைத் துறந்து சென்றார். பின்னவருடன் நான் கொண்ட நட்பை என் வாழ்க்கையிலேயே ஒரு துக்க சம்பவமாகக் கருதுகிறேன். இந்நட்பு நீண்ட காலம் நீடித்திருந்தது. சீர்திருத்த ஆவேசத்தை அடிப்படையாகக் கொண்டு இந்நட்பு எழுந்தது.

இந்நண்பர் முதலில் என் தமையனாரின் நேசராயிருந்தார். அவர்களிருவரும் ஒரு வகுப்பில் படித்தவர்கள். அவருடைய குறைகளை நான் அறிவேனாயினும், அவரை உண்மையுள்ள நண்பராகக் கருதினேன். என் தாயாரும், மூத்த சகோதரரும், மனைவியும் நான் துர்ச்சகவாசம் பூண்டிருப்பதாக எச்சரிக்கை செய்தனர். கேவலம், மனைவியின் எச்சரிக்கைக்கு நான் செவி கொடுப்பேனா? கணவனின் கௌரவத்துக்கு அது குறைவு என்று எண்ணினேன்! ஆனால் தாயார், மூத்த தமையனார் இவர்களின் அபிப்பிராயத்தை புறக்கணிக்க நான் துணியவில்லை. எனினும் அவர்களிடம் பின்வருமாறு மன்றாடினேன்:—

"நீங்கள் சொல்லும் குறைகள் அவரிடம் இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் அவருடைய நற்குணங்கள் உங்களுக்குத் தெரியா. அவரைச் சீர்திருத்தும் எண்ணத்

துடனேயே நான் அவருடன் சகவாசம் பூண்டிருக்கிற படியால் அவர் என்னைக் கெட்ட வழிக்கு இழுத்தல் முடியாது. அவர் தமது குறைகளைத் திருத்திக்கொண்டால் மிகச் சிறந்த மனிதராவா ரென்பது எனக்கு நிச்சயம். என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமென்று உங்களை இறைஞ்சுகிறேன்."

இதனால் அவர்கள் திருப்தி யடைந்ததாக நான் நினைக்க வில்லை. ஆயினும் என்னுடைய சமாதானத்தை ஏற்று என் வழியே விட்டுவிட்டார்கள்.

என்னுடைய தவறுதலைப் பின்னால் உணர்ந்தேன். சீர் திருத்தக்காரன் ஒருவன், தான் சீர்திருத்த எண்ணும் ஒருவ னிடம் நெருங்கிய சகவாசம் வைத்துக் கொள்ளலாகாது. உண்மை நட்பு என்பது ஆன்ம ஒருமைப் பாடாகும். இத் தகைய நட்பை இவ்வுலகில் காண்பது மிக அருமை. சமமான குணம் படைத்தவர்களிடையேதான் உண்மை நட்பு ஏற்பட்டு நீடித்து நிற்கும். இருவர் நட்புரிமை கொண்டால் பரஸ்பரம் ஒருவனுடைய குணம் மற்றொரு வருக்குப் படியவே செய்கிறது. எனவே நட்பில், சீர் திருத்தத்திற்கு அதிக இடமில்லை. மனிதனுக்குக் கெட்ட குணங்கள் எளிதில் படுவதுபோல் நற்குணங்கள் படியா. ஆதலின் மனிதர்களுள் நெருக்கமான தனிப்பட்ட தொடர்பு எதுவும் இருத்தலாகாது என்று நான் அபிப் பிராயப் படுகிறேன். இறைவனது நண்பனாயிருக்க விரும்பு வோன் இவ்வுலகில் தன்னந்தனியனாக இருக்கவேண்டும். இன்றேல் உலகம் முழுவதுடனும் நட்புரிமை கொள்ளல் வேண்டும். நான் கூறுவது தவறாயிருக்கலாம். ஆயினும் என் வாழ்க்கையில் நெருங்கிய நட்பை வளர்க்க நான் செய்த முயற்சி பயன்படாதொழிந்தது.

மேற் கூறியவருடன் எனது நட்பு ஆரம்பமான காலத்தில், இராஜகோட்டையின் மீது 'சீர்திருத்த' அலையொன்று மோதிக் கொண்டிருந்தது. எங்கள் உபாத்தியாயர்களில் பலர் இரகசியமாக மது, மாமிசம் உட்கொள்ளுகிறார்கள் என்று இந் நண்பர் எனக்குத் தெரிவித்தார். இராஜகோட்டையில் மற்றும் பிரமுகர்கள் பலரும் இவ்வாறு செய்கிறார்களென்றும், இத்தகையவர்கள் உயர்தரப் பள்ளிக்கூட மாணாக்கர்களிலும் சிலர் உண்டென்றும் அவர் கூறினார்.

நான் வியப்பும் வருத்தமும் அடைந்தேன். காரணம் கேட்டபோது என் நண்பர் கூறியதாவது:—" புலால் உண்ணாததால் நாம் பலவீனர்களா யிருக்கிறோம். ஆங்கிலேயர்கள் புலால் உண்பவர்களாதலின் நம்மை ஆளும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். என் தேகக்கட்டை நீ பார்க்கிறாய். ஓட்டத்தில் என் திறமையும் உனக்குத் தெரியும். புலால் உண்ணுவதின் பயன்கள் இவை. மாமிச பட்சணிகளுக்குச் சிரங்குகளும், கொப்புளங்களும் புறப்படா. அருமையாக எப்போதேனும் உண்டானாலும் விரைவில் குணமாகிவிடும். புலால் உண்ணும் நமது உபாத்தியாயர்களும் மற்றும் பிரபல மனிதர்களும் மூடர்களா? அதன் குணங்களை அவர்கள் அறிவார்கள். நீயும் அவர்களைப் பின்பற்றத்தான் வேண்டும். மேலும் எதையும் சோதனை செய்து பார்த்தலைப் போல் நல்லது வேறில்லை. எனவே, புலால் உண்டு அதனால் எவ்வளவு பலம் பெறுகிறாயென்று நீயே கண்டுகொள்."

இவ்வளவும் ஒரு முறையில் கூறப்பட்டவை யல்ல. பல தினங்களில் பல முறைகளில் அந் நண்பர் என்னிடையில் ஏற்ற முயன்ற வாதங்களின் சாரமாகும்

இவை. எனது சிறிய தமையனார் இவ்வாதக் குழியில் முன்னமே வீழ்ந்து விட்டார். எனவே அவரும் என் நண்பரை ஆதரித்தார். அவர்கள் இருவருடனும் ஒப்பிடுங் கால் நான் பலவீனனாகவே காணப்பட்டேன். என்னை விட அவர்கள் உடல் திண்மையும் வலிமையும் பெற்ற வர்கள்; துணிவு உள்ளவர்கள். எனது நண்பரின் பராக் கிரமச் செயல்களைக் கண்டு நான் மயங்கிப்போனேன். அவர் நீண்டநேரம் சோர்வுறாமல் மிக விரைவாய் ஓடுவார். குதிப்பதிலும் தாண்டுவதிலும் அவர் சமர்த்தர். அடித்தல் முதலிய உடலை வருத்தும் தண்டனைகள் எவ்வளவையும் அவர் முகஞ் சிணுங்காமல் தாங்குவார். அடிக்கடி இத் தகைய பராக்கிரமச் செயல்கள் புரிந்து எனக்குக் காட்டு வார். தன்னிடமில்லாத குணாதிசயங்களைப் பிறரிடங் காணும்போது பிரமித்தல் இயல்பாதலின், அவருடைய பராக்கிரமச் செயல்களைப் பார்த்து நானும் பிரமித்துவிட் டேன். பின்னர் அவரைப்போல் ஆகவேண்டு மென்ற ஆவல் பலமாக உண்டாயிற்று. ஓடவும், தாண்டவும் சற்றும் இயலாதவன் நான். என் அந்நண்பரைப்போல் நானும் உடல் வலிமை பெறலாகாது?

மேலும் அப்போது நான் கோழையா யிருந்தேன். திருடர் பயமும், பாம்பு, பிசாசு பயமும் என்னைப் பிடுங்கித் தின்றன. இரவில் வெளியே புறப்பட மாட்டேன். இருளைக் கண்டு பெரிதும் மருண்டேன். இருட்டில் என்னால் தூங்கவே முடியாது. ஒரு பக்கத்திலிருந்து பிசாசுகளும், மற்றொரு திசையிலிருந்து திருடர்களும், மூன்றாவது திக்கி லிருந்து பாம்புகளும் வருவதாக எண்ணிக் கொள்வேன். எனவே, விளக்கில்லாத அறையில் நான் உறங்க முடிவ தில்லை. அருகில், அப்போதுதான் யௌவன தசையை

யடைந்திருந்த என்மனைவி படுத்துத் தூங்குவாள். அவளிடம் என் பயங்களை எவ்வாறு வெளியிடுவேன்? என்னைவிட அவள் தைரியசாலி என்று அறிந்து வெட்கினேன். அவளுக்குப் பிசாசு பயம், பாம்பு பயம் இல்லை. இருளில் எங்கு வேண்டுமானாலும் போவாள். என்னுடைய இந்நிலைமை என் நண்பருக்கு நன்ருகத் தெரியும். பாம்புகளை உயிருடன் கையில் பிடித்துக் கொள்ளத் தம்மால் முடியுமென்றும், திருடர்களிடத்தில் தமக்குப் பயமில்லையென்றும், பிசாசு என்பது ஒன்று உண்டென்றே தாம் நம்புவதில்லை யென்றும் அவர் கூறுவார். இவ்வளவும் புலால் உணவின் பயன்களே என்றும் வற்புறுத்துவார்.

நார்மாத் என்பவர் பாடிய ஒரு சிந்து அக்காலத்தில் பள்ளிப் பிள்ளைகளிடத்தே அதிகமாக வழங்கி வந்தது. அதன் பொருள் வருமாறு:—"வலிமை படைத்த ஆங்கிலேயனைப்பார். சோகை இந்தியன்மீது அவன் ஆட்சி செலுத்துகிருன். காரணம், புலால் உணவு தின்று அவன் ஐந்து முழ உயரம் வளர்ந்திருப்பதே." இவைகளெல்லாம் உரிய பயனை யளித்தன. நாளடைவில் மாமிசம் புசித்தல் நல்லதென்றும், அதனுல் உடல் வலுமையும் நெஞ்சுத் துணிவும் பெறுவேனென்றும், நாடு முழுதும் புலால் உண்ணத் தொடங்கி விட்டால் ஆங்கிலேயரை வென்றுவிடலாமென்றும் நம்பலானேன்.

சோதனை தொடங்குவதற்கு ஒரு தினம் குறிக்கப்பட்டது. அது இரகசியமாக நடைபெறவேண்டியிருந்தது. காந்தி வம்சத்தார் வைஷ்ணவ மதத்தினர். அதிலும், என் பெற்ருேர் தீவிர வைஷ்ணவர்கள். விஷ்ணு கோயிலுக்கு அவர்கள் நாள் தவருது சென்று வருவார்கள். எங்கள் குடும்பத்துக்குச் சொந்தமான கோயில்களும் உண்டு.

மற்றும் குஜராத்தில் ஜைன மதம் பலமாக நிலைபெற்றிருந்தது. அம்மதத்தின் செல்வாக்கை எங்கும் எச்சந்தர்ப்பத்திலும் காணக் கூடியதா யிருந்தது. குஜராத்திலுள்ள ஜைனர்களும் வைஷ்ணவர்களும் மாமிச உணவை வெறுக்கும் அளவுக்கு இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் வேறெவரும் வெறுப்பதில்லை யெனக் கூறலாம். இத்தகைய இடத்தில் நான் பிறந்து வளர்ந்து வந்தவன். மேலும் எனது பெற்றோர்களிடம் அளவற்ற பக்தி கொண்டவன். நான் புலால் உண்ட செய்தி அவர்களுக்குத் தெரிந்தால் அந்த நிமிடமே அவர்கள் உயிர் போகும்வண்ணம் திடுக்கிட்டுப் போவர்கள் என்பதை அறிந்திருந்தேன். மற்றும், சத்தியத்தினிடம் எனக்கிருந்த பற்று என்னை அதிக எச்சரிக்கையுடையவனாகச் செய்தது. புலால் உண்ணத் தொடங்கினால் பெற்றோர்களை ஏமாற்றவேண்டி வரும் என்பது அப்போது எனக்குத் தெரியாதென்று சொல்வதற்கில்லை. ஆனால் என் மனம் சீர்திருத்தத்தில் மூழ்கியிருந்தது. நாவின் சுவையைப் பற்றிய எண்ணமே கிடையாது. புலாலுக்கு ஒரு தனிப்பட்ட நல்ல சுவை உண்டென்பதாகவே நான் அறியேன். துணிவும், உடல் வலிமையும் பெற விரும்பினேன். என் தாய் நாட்டு மக்களனைவரும் அவ்வாறே யாகவேண்டுமென்றும் பின்னர் ஆங்கிலேயரை வென்று இந்தியாவைச் சுதந்திர நாடாக்கலாமென்றும் எண்ணினேன். 'ஸ்வராஜ்யம்' என்னும் பதத்தை இன்னும் கேள்விப்படவில்லை. ஆனால் விடுதலை என்பதின் பொருளை அறிந்திருந்தேன். 'சீர்திருத்த' வெறியினால் குருடனானேன். காரியம் இரகசியமாயிருக்குமென்று நிச்சயமானதும், அதைப் பெற்றோர்களறியாமல் மறைத்தல் மட்டுமே சத்திய பங்கமாகி விடாதென்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

ஏழாம் அத்தியாயம்

ஒரு துக்க சம்பவம்

(தொடர்ச்சி)

குறிப்பிட்ட நாள் வந்தது. அப்போது எனது நிலையை உள்ளபடி விவரித்தல் சிரமமான காரியம். 'சீர் திருத்த'த்தில் உற்சாகமும், வாழ்க்கையில் ஒரு புதுமை யான மாறுதலைக் காணப் போகிறோமென்ற ஆவலும் ஒரு பக்கம் இருந்தன. மற்றொரு புறத்தில் திருடனைப் போல் ஒளிந்து அக் காரியம் செய்யவேண்டி யிருக்கிறதே என்ற வெட்கம். இவ் விருவகை உணர்ச்சிகளில் எது மேலெழுந்து நின்றது என்று சொல்வதற்கில்லை. ஆற்றங் கரையில் தனிமையான இடமொன்றை நாடிச் சென்றோம். அங்கு என் வாழ்நாளில் முதன் முதலாக இறைச்சியைக் கண்டேன். அத்துடன் கடை ரொட்டி கொஞ்சமும் இருந்தது. இரண்டும் எனக்குப் பிடிக்கவில்லை. வெள் ளாட்டு மாமிசம் தோலைப்போல் கடினமாயிருந்தது. என்னால் அதைத் தின்னவே முடியவில்லை. அருவருப்பு அதிகமாகவே, முடியாதென்று விட்டுவிட்டேன்.

அன்றிரவெல்லாம் நான் உறக்கங் கொள்ளவில்லை. ஒரு வகைப் பயங்கரத் தோற்றம் உண்டாகிக்கொண்டே யிருந்தது. கொஞ்சம் கண்ணயர்ந்ததும் உயிருள்ள ஆடு ஒன்று என் வயிற்றுக்குள் இருந்து பரிதாபமான குரலில் கத்துவதாகத் தோன்றும். தூக்கி வாரிப்போட்டு எழுந் திருப்பேன். நான் செய்ததை எண்ணிக் கழிவிரக்கங் கொள்வேன். ஆனால் அடுத்தாற்போல் மாமிசம் புசித்தல் ஒரு கடமை யென்பதை நினைவு கூர்ந்து மீண்டும் உற்சாகங் கொள்வேன்.

என் நண்பர் எடுத்த காரியத்தை இலகுவில் விட்டுவிடுபவர் அல்லர். இறைச்சியைப் பலவகை உயர்ந்த பணியார வகைகளாகப் பாகம் செய்து பார்வைக்கு அழகாயிருக்கும்படியும் செய்து வைக்கலானார். சாப்பிடுவதற்கு ஆற்றங்கரைக்குப் பதிலாக இராஜாங்க மாளிகை யொன்றையும் பிடித்தார். அங்கிருந்த போஜன மண்டபத்தில் நாற்காலி, மேஜை முதலியவை இடப்பட்டிருந்தன. அவ்விடத்துத் தலைமைச் சமையற்காரருடன் பேசி என் நண்பர் வேண்டிய ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தத் தூண்டிலில் நான் விழுந்தேன். ரொட்டியில் வெறுப்பையும் ஆடுகளிடம் இரக்கத்தையும் எப்படியோ போக்கடித்துக் கொண்டேன். இன்னும் இறைச்சி சுவைக்க வில்லையாயினும் இறைச்சிப் பணியாரங்களைச் சுவையுடன் உண்ணத் தொடங்கினேன். இவ்வாறு ஓராண்டு நிகழ்ந்து வந்தது. ஆனால் இந்த ஓர் ஆண்டில் ஆறு முறைக்குமேல் இத்தகைய மாமிச விருந்துகள் நடைபெறவில்லை. இதற்குக் காரணம் இரண்டாகும். முதலாவது, இராஜாங்க மாளிகை தினந்தோறும் கிடைப்பதில்லை. இரண்டாவதாக, உயர்ந்த வகை மாமிச உண்டிகளைத் தயாரிப்பதற்குப் பணம் நிரம்ப வேண்டியிருந்தது. இச் சீர்திருத்தத்துக்குக் கொடுப்பதற்கு என்னிடம் பணமில்லை. எனவே, பணச் செலவு முழுவதும் நண்பரைப் பொறுத்ததாயிற்று. அவருக்கு எங்கிருந்து பணங் கிடைத்ததோ எனக்குத் தெரியாது. எப்படியோ பணம் மட்டும் கொண்டு வரவே செய்தார். என்னை மாமிச பட்சணி யாக்குவதில் அவருக்கு அவ்வளவு உறுதி இருந்தது. ஆயினும், அவருடைய வருவாயும் கணக்கானதாகவே இருந்திருக்க வேண்டும். இதனால் இவ்விருந்துகள்

நீண்ட நாளைக் கொரு முறையாகச் சிலவே நடை பெற்றன.

இத்தகைய இரகசிய விருந்துகளில் உணவருந்திய தினங்களில் வீட்டில் சாப்பிடுவது இயலாத காரியம். தாயார் சாப்பிடக் கூப்பிட்டு நான் வேண்டாமென்னும் போது காரணங் கேட்டல் இயல்பே யல்லவா? "இன்று எனக்குப் பசிக்கவில்லை. வயிற்றில் ஏதோ கோளாறு இருக்கிறது" என்று சமாதானம் சொல்வேன். இவ்வாறு சாக்குப் போக்கு சிருஷ்டிக்கையில் மனம் வருந்தாதிராது. நான் பொய் சொல்கிறேனென்பதும், அதிலும் அன்னையிடம் பொய் சொல்கிறேனென்பதும் எனக்குத் தெரிந்தே இருந்தன. நான் மாமிசம் உட்கொள்ளும் செய்தி என் பெற்றோர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் பெரிதும் திடுக்கிட்டுப் போவார்களென்பதையும் அறிந்திருந்தேன். இவ்வறிவு என் ஹிருதயத்தை அரித்துக் கொண்டிருந்தது.

ஆதலின், நான் யோசித்ததாவது:—"புலால் உண்பதும், தேசத்தில் உணவுச் சீர்திருத்தம் செய்வதும் அவசியந்தான். ஆனால் புலால் உண்ணும் விருப்பதைவிடப் பெற்றோரிடம் பொய் சொல்லி ஏமாற்றுதல் கொடியது. ஆதலின், அவர்கள் உயிருடன் உள்ள வரையில் அது செய்யக்கூடாது. அவர்களுக்குப் பிற்காலம் நான் சுதந்திர மடையும்போது பகிரங்கமாகப் புலால் உண்ணுவேன், அது வரையில் அதைச் செய்யலாகாது."

இவ்வாறு நான் செய்த முடிவை என் நண்பருக்குத் தெரிவித்தேன். பின்னர் ஒருபோதும் நான் புலால் தின்றதில்லை. நானும், என் சகோதரரும் மாமிசம் புசிப்பவர்க

ளான விவரம் என் பெற்றோர்களுக்குத் தெரியவே தெரியாது.

பெற்றோர்களிடம் பொய் சொல்லக்கூடாதென்னும் பரிசுத்த ஆசை காரணமாக நான் புலால் உண்ணுதலை விட்டேன். ஆனால் என் நண்பரின் சகவாசத்தை மட்டும் விடவில்லை. அவரைச் சீர்திருத்துவதில் எனக்கு இருந்த உற்சாகமே என்னைப் படுகுழியில் வீழ்த்துவதற்குக் காரணமாயிருந்தது. ஆனால் அவ்வுண்மை அப்போது எனக்குப் புலனாகவே யில்லை.

இந்நட்பின் காரணமாக என் மனைவிக்கும் நான் துரோகம் செய்ய விருந்தேன். ஒரு மயிரிழை அளவினால் இதினின்றும் தப்பினேன். இந்நண்பர் ஒருமுறை என்னை விபசார வீடொன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு நடந்து கொள்வதற்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறி என்னை உள்ளே அனுப்பினார். எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. பணமும் கொடுத்தாகிவிட்டது. பாவக் குழியில் தலைகீழாக விழ விருந்தேன். இறைவன் தனது எல்லையற்ற கருணையின் வலிமையால் என்னைத் தடுத்தாட் கொண்டான். அந்த பாவக் குகையில் நுழைந்ததும் என் பார்வை மங்கி போயிற்று. பேசுவதற்கு நாவெழவில்லை. படுக்கையில் அவள் அருகில் உட்கார்ந்தேன். ஆனால் ஒரு வார்த்தையும் என்னால் பேசக் கூடவில்லை. இதனால் அவள் பொறுமை யிழந்து என்னைத் திட்டி வெளியே போகச்சொன்னாள். என் ஆண்மைக்கு இதனால் குறைவு வந்துவிட்டதாக எண்ணினேன். தாங்கமுடியாத அவமானத்தினால், பூமியே வெடித்து நம்மை விழுங்கி விடாதா என நினைத்தேன். ஆனால், பின்னர் எப்போதும் என்னைக் காத்தருள் புரிந்ததற்காக இறைவனை மனதார

வாழ்த்தி வருகிறேன். என் வாழ்க்கையில் இம்மாதிரி நிகழ்ச்சிகள் இன்னும் நான்கு எனக்கு நினைவிருக்கின்றன. அநேகமாக ஒவ்வொரு முறையிலும் என்னுடைய முயற்சியைவிட எனது நல்லதிர்ஷ்டமே என்னைக் காப்பாற்றியது. உயரிய அறநெறியின்படி இவைகளை யெல்லாம் ஒழுக்கத் தவறுகள் என்றே கூறவேண்டும். உள்ளத்தில் சிற்றின்ப ஆசை இருந்தது; அது செயலுக்குச் சமானமேயாகும். ஆனால் சாதாரண உலக நிலையினின்று நோக்கும்போது தேகத்தினால் பாவச் செயல் புரியாதவன் காப்பாற்றப் பட்டவனாகக் கருதப்படுகிறேன். இந்தக் கருத்திலேயே நான் காப்பாற்றப்பட்டேன் என்று சொல்லலாம். சில தீச் செயல்களினின்றும் மனிதன் தப்புவது அவனுக்கும் அவனைச்சுற்றி யுள்ளோர்க்கும் தேவானுக்ரஹமாயிருக்கும். அவன் திரும்ப உண்மை உணர்ச்சி பெறும்போது தன்னைக் காப்பாற்றியதற்காக இறைவன் அருளைப் போற்றுகிறான். மனிதன் சில சமயங்களில் தான் எவ்வளவு முயன்றாலும் பயன்படாமல் ஆசைவலையில் வீழ்ந்து விடுகிறானென்பதை நாம் அறிவோம். மற்றும் சில சமயங்களில் அவன் மன மறிந்து அவ்வாசை வலையில் விழப்போகும் போது தெய்வம் குறுக்கிட்டு அவனை தடுதாட் கொள்கிறது. இவை யெல்லாம் எப்படி நேரிடுகின்றன, மனிதன் தனது செயல்களுக்கு எவ்வளவு தூரம் எஜமானன், எவ்வளவு தூரம் சந்தர்ப்பங்களுக்கு அடிமை, சொந்த முயற்சி எந்த அளவுக்கு பயன்படும், விதி எவ்விடத்தில் குறுக்கிடுகிறது,—முதலிய விஷயங்கள் நம்மால் அறியக்கூடாத இரகசியங்களா யிருக்கின்றன. என்றும் அவை மர்மமாகவே இருக்கும்.

இனி, கதையை விட்ட இடத்துக்கு வருகிறேன். எனது நண்பரின் சகவாசம் தீமை பயப்பதென்று

இதனையும் நான் உணரவில்லை. இன்னும் பலமுறை இத்தகைய கசப்பு மருந்து விழுங்கி யாகவேண்டி யிருந்து, கடைசியாக, நான் சற்றும் எதிர் பாராத குறைகள் அவரிடம் இருப்பதை நேரில் பார்த்தபோதே என் கண்கள் திறந்தன. இவைகளைக் குறித்துப் பின்னால் உரிய இடத்தில் கூறுவேன்.

ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றி, அது அக்காலத்துக்குரிய தாதலின், இங்கே குறிப்பிட வேண்டும். எனது மனைவிக்கும் எனக்கும் நேரிட்ட வேற்றுமைகளுக்கு இந் நண்பரின் சகவாசமும் ஒரு காரணம் என்பதில் சந்தேக மில்லை. நான் மனைவியிடம் அளவற்ற அன்புள்ள கணவனு யிருந்ததுபோலவே, சந்தேக புருஷனுமிருந்து வந்தேன். இந்நண்பர் என் ஐயங்களை வளர்த்து வந்தார். இவருடைய வார்த்தையை நான் முழுதும் நம்பினேன். இவருடைய செய்திகளை ஆதாரமாகக் கொண்டு என் மனைவியை நான் அடிக்கடி மனம்நோகச் செய்தேன். இந்த எனது ஹிம்சைச் செயலுக்காகப் பின்னால் நான் எப்போதும் வருந்தி வருகிறேன். ஹிந்து மனைவிமார்களே இத்தகைய கஷ்டங்களைப் பொறுமையுடன் சகிக்கிறார்கள். இதனால் தான் பெண் மக்களை நான் பொறுமை அவதாரங்களாகப் போற்றுகிறேன். தவறாகச் சந்தேகிக்கப்பட்ட வேலைக்காரன் தன் வேலையை உதறிவிடலாம்; தந்தையின் வீட்டை விட்டு மகன் வெளிக் கிளம்புதல் கூடும்; நண்பன் நட்பைத் துறந்துவிட இயலும்; மனைவி தன் கணவனிடம் ஐயங்கொண்டால் வாய் திறக்க மாட்டாள். ஆனால் கணவன் அவளிடம் சந்தேகங் கொண்டாலோ, அவளுடைய வாழ்க்கை பாழாயிற்று. அவளுக்கு போக்கிடம் எங்கே? ஹிந்து மனைவி ஒருத்தி விவாகப் பிரிவினைக்கு வழக்குத் தொடர முடியாது. சட்டத்தில் அவளுக்கு

எத்தகைய ஆதாரவும் இல்லை. என் மனைவியை இந்த நிர்க்கதியான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்ட என் கொடுமையை நான் மறத்தலோ, மன்னித்தலோ ஒரு நாளும் இயலாத காரியம்.

அஹிம்ஸா தர்மத்தை அதன் எல்லா அம்சங்களிலும் நான் நன்கு உணர்ந்தபோதே, இச்சந்தேகப் புரை என்னை விட்டுத் தொலைந்தது. அப்போது பிரும்மசரியத்தின் மகிமையையும் உணர்ந்தேன். மனைவியென்பாள் கணவனுக்குத் தொண்டு பூண்ட அடிமை யல்ல ளென்றும், அவனுடைய உண்மை வாழ்க்கைத் துணைவியும், தோழியுமாவாள் என்றும், கணவனுடைய இன்ப துன்பங்களில் மனைவிக்குச் சமமான பாகமுண்டென்றும், தன் வழியைத் தெரிந்தெடுத்துக் கொள்ளக் கணவனுக்குள்ள சுதந்திரம் அவளுக்கும் உண்டென்றும் அறியலானேன். சந்தேகங்களினால் இருண்டிருந்த அந்நாட்களை எண்ணும்போதெல்லாம், என்னுடைய தவறுகளும் காமாதுரக் குரூரச் செயல்களும் நினைவுக்கு வர, அவற்றின்மீது அளவிலா அருவருப்பு உண்டாகிறது. எனது நண்பரிடத்தில் நான் கொண்டிருந்த குருட்டு நேசத்தை எண்ணி எண்ணி வருந்துகிறேன்.

எட்டாம் அத்தியாயம்

திருட்டும் பிராயச்சித்தமும்

புலாலுண்ட காலத்தும் அதற்கு முன்பும் நிகழ்ந்த என் குறைபாடுகளில் இன்னும் சில சொல்வதற்குப் பாக்கி யிருக்கின்றன. என் கலியாணத்துக்கு முன்போ, அது ஆன உடனேயோ இவை நிகழத் தொடங்கின.

என்னுடைய உறவினர் ஒருவரும் நானும் சுருட்டுக் குடிப்பதில் பிரியங்கொண்டோம். சுருட்டுக் குடிப்பதில் நன்மை யேதேனும் உண்டென்று கருதி அதில் பிரியங் கொள்ளவில்லை; சுருட்டுப்புகை நாற்றத்தில் நாங்கள் இன்புறவுமில்லை. வாயிலிருந்து சுருள் சுருளாகப் புகை விடுவதில் ஏதோ ஒருவகை மகிழ்ச்சி இருப்பதாக எண்ணிக் கொண்டோம். என் சிறிய தந்தை சுருட்டுக் குடிப்ப துண்டு. அவர் குடிப்பதைப் பார்த்து நாமும் குடிக்க வேண்டுமென்று நினைத்தோம். ஆனால் எங்களிடம் பணம் இல்லை. எனவே, சிறிய தந்தை எறிந்துவிடும் சுருட்டுத் துண்டுகளைத் திருடி உபயோகிக்க ஆரம்பித்தோம்.

இச் சுருட்டுத் துண்டுகள் எப்போதும் கிடைப்ப தில்லை. இவற்றில் புகையும் அதிகமாக வருவதில்லை. எனவே, எங்கள் வீட்டு வேலைக்காரனுக்குக் கொடுக்கப் படும் இனம் காசிலிருந்து திருட ஆரம்பித்தோம். இந்தக் காசைக் கொண்டு நாட்டுச் சுருட்டுகள் வாங்கினோம். ஆனால் இவற்றை எங்கே வைப்பதென்பது பெரிய பிரச்னை யாகிவிட்டது. பெரியவர்களின் முன்னிலையில் சுருட்டுக் குடிக்க முடியாதென்று சொல்ல வேண்டுவதில்லை. இவ்வாறு திருட்டுக் காசைக்கொண்டு சில தினங்கள் கழித்தோம். இதற்கிடையில்; துவாரங்களுள்ள ஒரு வகைச் செடியின் தண்டுகளைச் சுருட்டைப்போல் உப யோகிக்கலா மென்று கேள்விப்பட்டோம். உடனே இச் செடியைத் தேடி அதன் தண்டைப் புகை பிடித்தோம்.

ஆனால் இவையெல்லாம் சிறிதும் திருப்தி அளிக்க வில்லை. சுதந்திரமாக காரியம் செய்ய முடியாதிருந்ததை எண்ணி எங்கள் மனம் துடி துடித்தது பெரியவர்களின் உத்திரவின்றி ஒன்றுமே செய்யமுடியாதிருந்த நிலைமை

எங்களுக்குச் சகிக்கவில்லை. கடைசியாக வாழ்விலேயே வெறுப்படைந்து தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தோம்!

ஆனால் தற்கொலை செய்துகொள்வதெப்படி? விஷம் எங்கிருந்து பெறுவது? ஊமத்தஞ் செடியின் விதையில் விஷம் உண்டென்று கேள்விப்பட்டிருந்தோம். எனவே காட்டுக்குச் சென்று இவ்விதைகள் தேடிக்கொண்டு வந்தோம். மாலை நேரம் இதற்கு நல்லவேளை யென்று தீர்மானிக்கப்பட்டது. கேதார்ஜி கோயிலுக்குச் சென்று, விளக்கில் நெய் ஊற்றி, தரிசனம் செய்து கொண்டோம். பின்னர் ஒரு தனி மூலையை நாடிச் சென்றோம். ஆனால் சமயத்தில் எங்கள் தைரியம் போய்விட்டது. உடனே மரணம் நேராவிடின் என் செய்வது? தற்கொலை செய்து கொண்டு சாவதில் பயன் தான் என்ன? அதைவிடச் சுதந்திரமில்லாமலே உயிர் வாழ்தல் ஏன் கூடாது? இத்தகைய எண்ணங்கள் எழலாயின. ஆயினும் இரண்டு மூன்று விதைகளை விழுங்கிவிட்டோம். அதற்குமேல் தின்ன மனந் துணியவில்லை. இருவருக்கும் மரணத்தில் பயம் உண்டாகிவிட்டது. தற்கொலை எண்ணத்தை மறந்து மன அமைதி பெறுவதற்காக ராம்ஜீ கோயிலுக்குச் செல்லத் தீர்மானித்தோம்.

தற்கொலை செய்துகொள்ள எண்ணுவதைப்போல் தற்கொலை செய்து கொள்வது அவ்வளவு எளிதான காரியமன்றென அப்போது நான் உணர்ந்தேன். அதன் பின்னர் யாரேனும் தற்கொலை செய்து கொள்வதாக அச்சுறுத்தினால் நான் பயந்து விடுவதில்லை.

இந்தத் தற்கொலை முயற்சியின் பயன் கடைசியில் என்ன வாயிற்றென்றால், சுருட்டுத் துண்டுகளைப் புகை

பிடிக்கும் வழக்கத்தையும், சுருட்டுக்காக வேலைக்காரனின் காசைத் திருடுவதையும் இருவரும் அடியோடு விட்டு விட்டோம்.

எனக்கு வயது வந்த பின்னர் நான் சுருட்டுக் குடிக்க விரும்பியதே யில்லை. சுருட்டுக் குடிக்கும் வழக்கத்தை அநாகரிகமானதென்றும், அசங்கியமானதென்றும், தீமை பயப்பதென்றுமே எப்போதும் கருதி வந்திருக்கிறேன். உலக முழுவதிலும் சுருட்டுப் பைத்தியம் ஏன் இவ்வளவு பரவியிருக்கிறதென்பது எனக்குப் புலப்பட்டதே யில்லை. ரயிலில், சுருட்டுக் குடித்துக்கொண்டிருக்கும் ஜனங்கள் அதிகமாக உள்ள வண்டியில் என்னால் பிரயாணம் செய்ய முடிவதில்லை. அத்தகைய இடங்களில் எனக்கு மூச்சுத் திணறிப்போகும்.

மேற்சொன்ன திருட்டுக் குற்றம் என்னுடைய பன்னிரண்டாவது அல்லது பதின்மூன்றாவது வயதிலோ அல்லது இன்னும் சிறு பிராயத்திலோ நிகழ்ந்தது. சுமார் பதினைந்து வயதானபோது அதைவிடப் பெரிய திருட்டுக் குற்றம் ஒன்றைச் செய்தேன். இம்முறை, புலால் உண்ட என் சகோதரர்கைக் காப்பிலிருந்து ஒரு துண்டு தங்கம் திருடினேன். இச்சகோதரர் சுமார் 25 ரூபாய்வரை கடன்பட்டிருந்தார். அவர் தமது கையில் கெட்டித் தங்கத்தாலான காப்பு அணிந்திருந்தார். இதிலிருந்து ஒரு துண்டு வெட்டி எடுப்பது கடினமான காரியமாயில்லை.

அவ்வாறு செய்து கடனையும் அடைத்தேன். ஆனால் இக்குற்றம் என்னால் பொறுக்க முடியாததாயிற்று. இனிமேல் எக்காலத்திலும் திருடுவதில்லையென்று உறுதிகொண்டேன். என் தந்தையாரிடத்தில் குற்றத்தை ஒப்புக்கொள்ளவும் தீர்மானித்தேன். ஆனால் அதற்கு மனத்துணிவு

போதவில்லை. தந்தை அடிப்பாரே என்ற பயம் கிடையவே கிடையாது. அவர் ஒருமுறையாவது எங்களில் எவரையும் அடித்திருப்பதாக எனக்கு நினைவில்லை. அவருக்கு இதனால் ஏற்படக்கூடிய மனத்துன்பத்தை எண்ணியே நான் தயங்கினேன். ஆனால் அகற்றுத் துணிந்தே தீர வேண்டுமென்று தோன்றிற்று. அவரிடம் எல்லாவற்றையும் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டாலன்றிப் பாவம் தீராதென்று கருதினேன்.

கடைசியாக, ஒரு கடிதத்தில் எல்லாவற்றையும் எழுதித் தந்தையிடம் கொடுத்து மன்னிப்புக் கேட்பதாகத் தீர்மானித்தேன். அவ்வாறே எழுதிக் கடிதத்தை நேரிலேயே அவரிடம் கொடுத்தேன். என்னுடைய குற்றத்தை ஒப்புக் கொண்டதோடன்றி, எனக்குத் தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்றும், என்னுடைய குற்றத்துக்காக அவர் தம்மைத் தண்டித்துக் கொள்ளக்கூடா தென்றும் கேட்டுக் கொண்டிருந்தேன். இனிமேல் திருடுவதில்லை யென்று உறுதி மொழியும் கூறியிருந்தேன்.

தந்தையிடம் கடிதத்தைக் கொடுத்தபோது என் உடல் நடுங்கிற்று. அவர் அப்போது பௌத்திர நோயினால் பீடிக்கப்பட்டு, படுத்த படுக்கையாக விருந்தார். கடிதத்தைக் கொடுத்துவிட்டு அவர் படுத்திருந்த மரப் பலகைக்கு எதிரில் உட்கார்ந்தேன்.

அவர் கடிதத்தை முற்றும் படித்தார். படிக்குங் காலையில் அவர் கண்களிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர் துளித்து வழிந்தது. கடிதமும் நனைந்து போயிற்று. ஒரு கணநேரம் அவர் கண்ணை மூடிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்; பின்னர் கடிதத்தைக் கிழித்துப் போட்டார். கடிதத்தைப் படிப்பதற்காக எழுந்து உட்கார்ந்திருந்தவர்

மீண்டும் படுத்துக்கொண்டார். நானும் அழலானேன். அவரது அளவிறந்த மன வேதனையை நான் உணர்ந்தேன். நான் ஓர் ஓவியக் கலைஞனாயிருந்தால் அந்தக் காட்சி அப்படியே இன்று படமாக எழுதிவிடுவேன். இன்னும் என் மனக் கண்ணின் முன்பு அக்காட்சி அவ்வளவு தெளிவாகக் காணப்படுகிது.

அவ்வன்புக் கண்ணீர்த் துளிகளினால் என் ஹிருதயம் சுத்தமாயிற்று; என் பாவம் நீங்கிற்று. அத்தகைய அன்பை அநுபவித்தோர் மட்டுமே அதன் இயல்பை உணர்தல் கூடும். "அன்பென்னுங் கணைகளினால் எய்யப் பெற்றவனே அதன் ஆற்றலை அறிவான்" என்பது பாட்டு.

இது எனக்கு அஹிம்ஸா தர்மத்தின் ஓர் அரிய உதாரண பாடமாக இருந்தது. அக்காலத்தில் இந்நிகழ்ச்சியில் தந்தையின் அன்பைமட்டுமே கண்டேன். இன்றைய தினமோ அது சுத்த அஹிம்ஸையே யன்றி வேறில்லை என அறிந்துள்ளேன். அத்தகைய அஹிம்ஸை உலக மனைத்தையும் தழுவுவதாகும். மேலும், அது தான் தொட்டதையெல்லாம் பொன்னாக்கி விடுகிறது. அதன் ஆற்றலுக்கு அளவு ஏது?

இத்தகைய உன்னதமான மன்னிக்குங் குணம் என் தந்தைக்கு இயல்பாக ஏற்பட்டதன்று. அவர் கோபங் கொண்டு கடுஞ்சொல் மொழிவாரென்றும், நெற்றியில் புடைத்துக் கொள்வாரென்றும் எண்ணினேன். ஆனால் அவருடைய சாந்தம் ஆச்சரியகரமானதா யிருந்தது. நான் ஒளியாது என் குற்றத்தை ஒப்புக்கொண்டதே இதற்குக் காரணம் என நம்புகிறேன். மன்னிப்பதற்கு உரியவர் ஒருவரிடம் குற்றத்தை ஒளியாது ஒப்புக்கொள்வதுடன்,

இனிமேல் குற்றம் செய்வதில்லையென்றும் உறுதிமொழி கூறுவதுதான் மிகத் தூய கழிவிரக்கமாகும். நான் எனது குற்றத்தை ஒப்புக்கொண்டதின் பயனாக என்னைப்பற்றி என் தந்தைக்குக் கவலையே யில்லாமல் போயிற்று. என்னிடம் அவர் கொண்டிருந்த அன்பும் அளவிறந்ததாகப் பெருகிற்று.

ஒன்பதாம் அத்தியாயம்

தந்தையின் மரணமும் என் இருவகை அவமானமும்

நான் இப்போது கூறப்போகும் நிகழ்ச்சிகள் எனது பதினாறுவது பிராயத்தில் நடைபெற்றன. என் தந்தை பௌத்திர நோயினால் படுத்த படுக்கையாகக் கிடந்தார் என்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். என் அன்னையும், வீட்டு வேலைக்காரக் கிழவன் ஒருவனும், நானுமே அவருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து வந்தோம். எனக்குத் தாதிக்குரிய கடமைகள் ஏற்பட்டிருந்தன. அவை இரணத்தைக் கட்டுதல், மருந்து கொடுத்தல் வீட்டில் கலக்க வேண்டிய மருந்துகளைக் கலந்து தயாரித்தல் முதலியவையாகும். பிரதி தினமும் இரவில் அவருடைய கால்களைப் பிடித்து விடுவேன். அவர் தூங்கிய பின்னரோ, அல்லது அவர் என்னை போகச்சொன்ன பிறகோதான் படுக்கைக்குச் செல்வேன். இப்பணிவிடை செய்வதில் அளவற்ற ஆவல் கொண்டிருந்தேன். அதை எப்போதேனும் அசட்டை செய்ததாக எனக்கு ஞாபகமே யில்லை. தினசரிக் கடன்களுக்கான நேரம் போகப் பாக்கி நேரம் முழுவதும் பள்ளிக்கூடத்திலும், தந்தையின் ஊழியத்

திலுமாகக் கழிந்து வந்தது. அவர் அநுமதி கொடுக்கும் போது அல்லது அவருக்குக் கொஞ்சம் உடம்பு சௌகரியமா யிருக்கும்போதும் மட்டும் மாலை நேரத்தில் உலாவச் சென்று வருவேன்.

இது, என் மனைவி மகப் பேற்றை எதிர்பார்த்திருந்த காலமுமாகும். இன்றைக்கு எண்ணிப் பார்க்கும்போது அதன் பொருட்டு நான் இருவகையில் வெட்கித் தலைகுனிய வேண்டியவனென உணர்கிறேன். அக்காலத்தில் நான் மாணுக்கனுயிருந்தும் புலனடக்கத்தைக் கைக்கொள்ளாம லிருந்தது ஒன்று; கல்வி விஷயத்தில் எனது கடமையை நான் உணர்ந்திருந்தும் காமங் காரணமாக அதில் தவறிய தும், அதையும் விடச் சிறந்த கடமையான பெற்ருேர் சேவையினின்று காமங் காரணமாகவே விழுந்துபட்டதும் மற்ருென்று. குழந்தைப் பருவத்திலிருந்து சிரவண னுடைய பித்ருபக்தி எனது இலட்சியமாக இருந்து வந்தும் யாது பயன்! ஒவ்வோர் இரவும் எனது கரங்கள் தந்தையின் கால்களைப் பிடித்துக் கொண்டிருக்குங்கால், என் மனம் மட்டும் படுக்கை யறையிலேயே நிற்கும். அதிலும், சமயம், வைத்திய சாஸ்திரம், பகுத்தறிவு எல்லாம் மனைவியுடன் உடல் சேர்க்கை கூடாதென்று ஒருமுகமாக வலியுறுத்தும்படியான ஒரு சந்தர்ப்பத்தில் காம வயத்தனுய் அதில் ஈடுபட்டேன். என் வேலையி லிருந்து என்னை விடுவிக்கும்போதெல்லாம் மகிழ்ச்சி யடைவேன். தந்தைக்கு வணக்கஞ் செலுத்திவிட்டு நேராகப் படுக்கை யறைக்குச் செல்வேன்.

என் நிலை இவ்வாறிருக்க, தந்தையின் உடல் நிலை நாளுக்கு நாள் கேடாகி வந்தது. ஆயுர்வேத பண்டிதர்கள்,

யூனனி ஹக்கீம்கள், மற்றும் அரை குறை வைத்தியர்கள் எல்லாரும் தங்களாலானவற்றை யெல்லாம் பார்த்து விட்டார்கள். ஆங்கில ஸர்ஜன் ஒருவரும் தம் திறமையைப் பிரயோகித்துப் பார்த்தார். இறுதியான முறையாக, சத்திர சிகிச்சை (ஆபரேஷன்) செய்ய வேண்டுமென அவர் சொன்னார். ஆனால் குடும்ப வைத்தியர் இதற்குக் குறுக்கே நின்றார். இவ்வளவு முதுமைப் பருவத்தில் சத்திர சிகிச்சை கூடாதென்று அவர் சொன்னார். அவ்வைத்தியர் கெட்டிக்காரர்; பெயர் பெற்றவர். எனவே அவருடைய யோசனை தான் கடைசியில் ஒப்புக்கொள்ளப்பட்டது. 'சத்திர சிகிச்சைக்காக வாங்கிய மருந்துகளெல்லாம் வீணாயின. வைத்தியர் சத்திர சிகிச்சையை அநுமதித்திருந்தால் இரணம் எளிதில் ஆறியிருக்குமென்பது என்னுடைய தோற்றம். மேலும் பம்பாயில் பிரசித்தி பெற்ற ஸர்ஜன் ஒருவரிடமே சத்திர சிகிச்சை செய்து கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் இறைவன் வேறு விதமாகத் திருவுளங் கொண்டான். மரணம் நெருங்கி நிற்கும்போது, சரியான மருந்தை யாரே சொல்லக்கூடும்? சத்திர சிகிச்சைக்காகச் சேகரிக்கப்பட்டு இப்போது வீணான பொருள்களுடன் தந்தை பம்பாயிலிருந்து திரும்பி வந்தார். இனி உயிருடன் வாழ்வோமென்ற நம்பிக்கையை அவர் இழந்துவிட்டார். நாளுக்கு நாள் பலவீனம் அதிகரித்துக்கொண்டு வந்தது. கடைசியாக, மல ஜல விஸர்ஜனங்களையும் படுக்கையிலிருந்து வண்ணமே செய்யும்படி அவரைக் கேட்டுக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டது. ஆனால் அவர் அதை தீர்மானமாக மறுத்து விட்டார். கடைசிவரையில் அவர் மிகுந்த சிரமத்துடன் படுக்கையை விட்டு எழுந்து சென்றே மலஜலம் கழித்து வந்தார். புறத் தூய்மையைப் பற்றி வைஷ்ணவ சமயத்தின் விதிகள் அவ்வளவு கடுமையானவை.

இத்தகைய புறத்தூய்மை இன்றியமையாதது என் பதில் ஐயமில்லை. ஆனால் மேனாட்டு வைத்திய சாஸ்திரம் புறத் தூய்மைக்கு எவ்விதக் குந்தகமுமின்றி ஸ்நானம் உள்ளிட்ட எல்லா நித்தியக் கடன்களையும் படுக்கையிலேயே முடிப்பதற்கு வசதி செய்திருக்கிறது. இம்முறையினால் நோயாளிக்கு எவ்வித அசௌகரியமும் நேர்வதில்லை. படுக்கையும் சிறிதளவு கூட அசுத்தமாவதில்லை. இத்தகைய தூய்மை வைஷ்ணவ சமயவிதிகளுக்கு முற்றிலும் பொருத்தமானதே என நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆனால் அக்காலத்தில் என் தந்தை படுக்கையிலிருந்து எழுந்திருப்பதில் காட்டிய உறுதி எனக்குப் பெரு வியப்பை மட்டுமே அளித்தது. அவ்வுறுதியை நான் பெரிதும் மதித்துப் போற்றினேனே யன்றி வேறில்லை.

கடைசியாக அப்பயங்கர இரவு வந்தது. அப்போது என் சிறிய தந்தை இராஜகோட்டையில் இருந்தார். என் தந்தையின் உடல் நிலை கேவலமாகி வருகிறதென அறிந்து அவர் இராஜகோட்டைக்கு வந்திருந்ததாக எனக்கு ஞாபகம். சகோதரர்கள் ஒருவரோடொருவர் அளவற்ற அன்பு பூண்டிருந்தார்கள். சிறிய தந்தை நாள் முழுவதும் தம் தமயனாரின் படுக்கை யருகிலேயே உட்கார்ந்திருப்பார். இரவில் எங்கள் எல்லாரையும் உறங்க அனுப்பிவிட்டுத் தாம் மட்டும் தமயனாரின் படுக்கை யருகிலேயே படுத்துறங்குவார். அன்றிரவு நமனுடைய இரவாகுமென்று யாரும் எதிர் பார்க்கவில்லை. ஆனால் எந்த நிமிஷத்திலும் அபாயம் உண்டென்று தெரிந்தே யிருந்தது.

இரவு 10½ அல்லது 11 மணி ஆயிற்று. வழக்கம் போல் தந்தையின் கால்களைப் பிடித்துக் கொண்டிருந்தேன். சிறிய தந்தை தாம் பிடிப்பதாகக்கூறி என்னைப் போகச்

சொன்னார். நான் மகிழ்ச்சியடைந்து நேரே படுக்கை யறைக்குச் சென்றேன். என் மனைவி, பாவம், உறக் கத்தில் ஆழ்ந்து இருந்தாள். ஆனால் நான் போன பின்னர் அவள் எவ்வாறு தூங்கக்கூடும்? அவளை எழுப்பினேன். ஐந்தாறு நிமிஷங்களுக் கெல்லாம் வேலைக்காரன் வந்து கதவைத் தட்டினான். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. 'எழுந்திருங்கள். அப்பாவுக்கு உடம்பு அதிகமாயிருக்கிறது' என்றான் வேலைக்காரன். முன்னமே அவருக்கு உடம்பு அதிகமாகத்தான் இருந்தது. எனவே இச்சமயத்தில் உடம்பு அதிகம் என்றால் என்னபொருள் என ஊகித்துக் கொண்டேன். படுக்கையிலிருந்து குதித்து எழுந்து வெளியே வந்தேன். 'செய்தி என்ன சொல்' என்றேன். 'தந்தை காலமாகிவிட்டார்' என்று பதில் வந்தது.

எல்லாம் முடிந்து போயிற்று! கைகளைப் பிசைந்து கொண்டேன். அளவற்ற வெட்கமும், துன்பமும் ஒரே காலத்தில் என்னைச் சூழ்ந்தன. தந்தையின் அறைக்கு விரைந்து ஓடினேன். காமத்தினால் நான் குருடனாகா மலிருந்திருந்தால், தந்தையின் மரணத்தறுவாயில் அவரைப் பிரிந்திருந்த பெருந் துன்பம் நேரிட்டிராது என்பதை எண்ணினேன், அவருடைய கால்களைப் பிடித்துக் கொண்டே இருந்திருப்பேன்; என்னுடைய மடியின்மீது படுத்து அவர் உயிர் துறந்திருப்பார். அந்த பாக்கியத்துக்கு என் சிறிய தந்தை கொடுத்து வைத்திருந்தார். தமயனி டம் அவர் கொண்டிருந்த அளவற்ற வாத்சல்யம் அந்திய காலத்தில் அங்கிருந்து பணிவிடை செய்யும் பாக்கியத்தை அவருக்கு நல்கிற்று! மரணம் நெருங்கிவிட்ட தென்பதை என் தந்தை உணர்ந்திருக்க வேண்டும். சைகையினால் பேனாவும் காகிதமும் கேட்டு வாங்கி 'இறுதிக் கிரியைக

ளுக்குத் தயார் செய்யுங்கள்' என்று எழுதியிருந்தார். கையிலணிந்திருந்த தடைக்காப்பையும் தங்கத்தினுல் கட்டப் பெற்ற துளசிமணி மாலையையும் எடுத்துத் தனியாக எறிந் திருந்தார். பின்னர் ஒரு கண நேரத்தில் அவர் உயிர் நீத்தார்.

பின்னுல் எனது அவமான மொன்றைப்பற்றிச் சொல்வதாக முன் அத்தியாய மொன்றில் குறிப்பிட் டிருந்தேன். விழிப்புடனிருந்து பணிவிடை செய்திருக்க வேண்டிய என் தந்தையின் மரணத்தறுவாயிலும் சிற்றின்ப ஆசைக்கு நான் வயமானதுதான் அந்த அவமானமாகும். என் வாழ்க்கையிலே இது என்றும் அழியாத, என்றும் மறக்க வொண்ணுத ஒரு கறை. என் பெற்ருேரிடம் நான் அளவற்ற பக்திகொண்டிருந்தே னென்பதும், அவர்களுக்காக எதையும் நான் தியாகம் செய்திருப்பேன் என்பதும் உண்மையாயினும், அதே சமயத்தில் என் மனம் காமத்துக்கு அடிமைப்பட் டிருந்தபடியால் அப் பக்தியானது சோதிக்கப்பட்டு மன்னிக்கவே முடியாத வண்ணம் தவறிவிட்டது. எனவே, மனைவிக்கு உண்மை யுள்ள கணவனுயிருப்பினும் காமாதுரன் என்றே நான் என்னைக் கருதி வந்திருக்கிறேன். நீண்ட காலம் முயன்று அநேக சோதனைகளுக்கான பின்னரே, இக் கொடிய காமத் தளையினின்றும் நான் விடுதலை பெற முடிந்தது.

இருவகைப்பட்ட என் அவமானத்தைக் கூறும் இந்த அத்தியாயத்தை முடிக்கு முன், இன்னும் சொல்ல வேண்டு வது ஒன்று பாக்கி யிருக்கிறது. என் மனைவி ஈன்ற சிறு பிண்டம் மூன்று நான்கு நாட்களில் உயிர் நீத்துச் சென்றது. வேறு முடிவை எதிர்பார்த்திருக்க முடியாது.

என்னுடைய இவ் வுதாரத்தினால் இல்வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் அனைவரும் எச்சரிக்கப் படுவார்களாக!

பத்தாம் அத்தியாயம்

சமயத் தோற்றங்கள்

எனது ஆறுவது அல்லது ஏழாவது வயதிலிருந்து பதினாறும் வயதுவரை பள்ளிக்கூடத்தில் பல விஷயங்களும் கற்பிக்கப்பட்டேன். ஆனால் மதத்தைப் பற்றி மட்டும் ஏதும் கற்பிக்கப்படவில்லை. உபாத்தியாயர்கள் எவ்வித பிரயாசையுமின்றி எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கக்கூடிய எவ்வளவோ விஷயங்கள் சொல்லிக் கொடுக்கப்படாமலே போயின வென்று கூறலாம். எனினும் போதனையின் மூலமாயன்றி உலகத்தினின்று அங்குமிங்குமாய்ச் சிறிது சிறிது அறிந்து வந்தேன். சமயம் என்பதை அதன் உயர்ந்த பொருளில் ஆத்மானுபூதி அல்லது ஆத்மஞானம் என்ற கருத்தில் இங்கு உபயோகிக்கிறேன்.

வைஷ்ணவ குடும்பத்தில் பிறந்தவனாதலின் அடிக்கடி விஷ்ணு கோயிலுக்குப் போகவே செய்தேன். ஆயினும் கோயில் என் மனதைக் கவரவில்லை.) அங்குள்ள ஆடம்பரமும், பகட்டும் எனக்குப் பிடிக்கவில்லை. | அங்கே பல துன்மார்க்கங்கள் நடைபெறுவதாகவும் கேள்விப்பட்டேன். எனவே, கோயிலுக்குப் போவதில் சிரத்தையிழந்தேன். இவ்வாறு கோயிலிலிருந்து நான் பெறக்கூடியது எதுவுமிலதாயிற்று.

கோயிலில் பெறமுடியாததை-என் செவிலித்தாயும் வீட்டின் பழைய வேலைக்காரியுமான ஒருத்தியிடமிருந்து

அடைந்தேன். அவள் பெயர் அரம்பை. அவள் என்னிடம் வைத்திருந்த பிரியத்தை இன்னமும் நான் மறந்தேனில்லை. பிசாசு பயம் எனக்குண்டு என்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். இப்பயத்தை நீக்கும் மருந்தாக ஸ்ரீராம நாமத்தை அரம்பை எனக்கு உபதேசித்தாள். அவளுடைய மருந்தை விட அவளிடத்தில் எனக்கு அதிக நம்பிக்கை யிருந்தது. எனவே, இளம்பிராயத்தில் பேய், பிசாசு பயம் நீங்கும் பொருட்டு இராமஜபம் செய்ய லானேன். இது கொஞ்ச நாளே நடந்தது. ஆனால் இளம்பிராயத்தில் அவ் வுத்தமி அரம்பை விதைத்த விதை வீண் போகவில்லை, இன்றைக்கும் ஸ்ரீராமநாமம் எனது அருமருந்தாக இருந்து வருவது அவள் உபதேசத்தின் பயன் என்றே கருதுகிறேன்.

இக்காலத்தில் இராமாயண பக்தரான எனது பங்காளி சகோதரர் ஒருவர், நானும் என் சிறிய தமையனும் இராம ரட்சை கற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தார். இராம ரட்சை மந்திரத்தை நெட்டுருச் செய்து, தினம் காலையில் ஸ்நானம் முடிந்ததும் பாராயணம் செய்து வந்தோம். போர்பந்தரில் இருந்தவரையில் இவ்வழக்கம் நடந்துவந்தது, இராஜகோட்டைக்குச் சென்றதும் அதை மறந்துவிட்டேன். உண்மையில் அதில் எனக்கு அதிக நம்பிக்கை யில்லை. போர்பந்தரில் அதைப் பாராயணம் செய்து வந்ததற்கு, உச்சரிப்புத் தவறின்றி இராமரட்சை சொல்லக்கூடு மென்ற பெருமை ஓரளவு காரணமாகும்.

ஆனால் என் தந்தையின் முன்பு இராமாயண பாராயணம் செய்யப்பட்டதைக் கேட்டுக்கொண் டிருந்ததானது உண்மையிலேயே இராமாயணத்தினிடம் எனக்குப் பக்தி உண்டுபண்ணிவிட்டது. தந்தை நோய் வாய்ப்பட்டிருந்த

போது கொஞ்சநாள் போர்பந்தரில் இருந்தார். பிரதி தினமும் மாலையில் அவர் இராமாயண சிரவணம் செய்வது வழக்கம். பாராயணம் செய்தவர் பெரிய இராம பக்தர். அவர் பெயர் லதா மகராஜ். அவர் பிலேசுவரத்தைச் சேர்ந்தவர். அவரைக் குஷ்டரோகம் பீடித்திருந்ததாம். இராம ஜபத்தின் மகிமையாலும், பிலேசுவரர் கோயிலி லுள்ள ஸ்ரீ மகாதேவ ஸ்வாமியின் நிர்மால்யமான வித்வத் தளிர்களை இரணங்களில் வைத்துக் கட்டியதினாலும் அவர் அக்கொடிய நோயைப் போக்கிக் கொண்டார் என்று சொல்வார்கள். அவர் எவ்வகை மருந்தும் அருந்த வில்லையாம். அவருடைய நம்பிக்கையே அவரைக் குணப் படுத்திற்றும். இது உண்மையாகவு மிருக்கலாம்; அல்லா மலு மிருக்கலாம். நாங்கள் என்னமோ இக்கதையை உண்மையென்றே நம்பினோம். இராமாயண பாராயணம் செய்யத் தொடங்கியபோது அவர் உடலில் அந்நோய் இல்லை யென்பது உண்மை. அவருக்கு நல்ல சரீரமிருந்தது. மிகவும் இனிய குரலில் இராமாயண கீதங்களைப் பாடுவார்; பின்னர் அவைகளுக்குப் பொருள் உரைப்பார். அப்போது அவர் தம்மை மறந்து பரவசமாவதுடன் கேட்போரையும் மெய்ம்மறக்கச் செய்வார். எனக்கு அப்போது பதின் மூன்று வயது இருந்திருக்கும். என்றாலும் அவர் இராமா யணம் படிப்பதைக் கேட்டு நான் பரவசமானது இன்னும் நினைவிலிருக்கிறது. இராமாயணத்தினிடத்தில் எனக்குள்ள அளவற்ற பக்திக்கு அப்போதே அடிகோலப்பட்டது. இன்று, துளசிதாஸ் இராமாயணத்தைப் பக்தி நூல்களில் தலை சிறந்ததாக நான் கருதுகிறேன்.

இதற்குச் சில மாதங்களுக்குப் பின்பு இராஜகோட் டைக்கு வந்தோம். இங்கே இராமாயண பாராயணம்

இல்லை. ஏகாதசிதோறும் பாகவதம் படிக்கப்பட்டது. நான் அதைக் கேட்கச் சில சமயம் செல்வதுண்டு. ஆனால் படித்தவர் உருக்கமுண்டாக்கக் கூடியவரல்லர். பாகவதம் சமய ஆவேசத்தை ஊட்டக்கூடிய நூல் என்று இன்று நான் அறிந்துள்ளேன். குஜராத்தி மொழியில் அதை மிகுந்த சுவையுடன் படித்திருக்கிறேன். இருபத்தொரு நாள் உபவாசம் இருந்தபோது பண்டித மாளவியா சம்ஸ்கிருத பாகவதத்திலிருந்தே சில பகுதிகளைப் படிக்கக் கேட்டேன். குழந்தைப் பருவத்திலேயே அவரைப்போன்ற பக்த சிகாமணி ஒருவரிடம் அதைக் கேட்டு, அதனிடம் பக்தி கொண்டோமில்லையே என்று அப்போது வருந்தினேன். குழந்தைப் பருவத்தில் ஏற்படும் அபிப்பிராயங்கள் ஆழ்ந்த வேர் கொண்டு ஒருவனுடைய இயற்கையுடன் ஒன்றாகி விடுகின்றன. எனவே, இளம் பிராயத்தில் இத்தகைய நல்ல நூல்கள் பல கேட்கும் பேறு பெற்றோமில்லையே யென்ற துயரம் என்னைவிட்டு எப்போதும் நீங்காது.

ஆனால் இராஜகோட்டையிலேயே எனக்குச் சமயப் பொறுமைக்கு அடிகோலப்பட்டது. ஹிந்து மதத்தின் உட்பிரிவுகள், பிற சகோதர மதங்கள் இவைகளிடத்து சகிப்புத் தன்மை உண்டாயிற்று. என்னுடைய பெற்றோர்கள் விஷ்ணு கோயிலுக்குச் செல்வது போலவே, சிவன் கோயில், இராமன்கோயிலுக்கும் செல்வார்கள். சிறுவர்களாகிய எங்களையும் அழைத்துப் போவதுண்டு. ஜைன பிட்சுக்கள் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார்கள். நாங்கள் ஜைனர்கள் அல்லோமாயினும் எங்கள் வீட்டில் உணவு கொள்வார்கள். என் தந்தையிடம் சமயப் பிரச்னைகளைப் பற்றியும் உலக விஷயங்களைப் பற்றியும் அவர்கள் பேசுவார்கள்.

என் தந்தையார்க்கு முஸ்லிம், பார்ஸி நண்பர்களும் இருந்தார்கள். அவர்கள் தத்தம் சமயங்களைப் பற்றிப் பேசும்போது தந்தை சிரத்தையுடன் செவி கொடுத்துக் கேட்பார். அவருக்குப் பணிவிடை புரிந்துவந்த நான் பல முறைகளில் இச் சம்பாஷணைகளைக் கேட்க நேர்ந்தது. இவற்றின் பயனாக எல்லாச் சமயங்களிடத்தும் சகிப்புத் தன்மை எனக்கு ஏற்பட்டது.

கிறிஸ்துவ மதம் மட்டும் இதற்கு விலக்காயிருந்தது. அதனிடம் எனக்கு ஒருவகை வெறுப்பு ஏற்பட்டது. அதற்கு ஒரு காரணம் உண்டு. அக்காலத்தில் பள்ளிக் கூடத்தருகில் மூலையில் கிறிஸ்துவப் பாதிரிமார் நின்று ஹிந்துக்களையும், ஹிந்து தெய்வங்களையும் தூஷிப்பார்கள். இதை என்னால் சகிக்கக்கூடவில்லை. ஒருமுறைதான் இவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்க நின்றிருப்பேன். பின்னர் அவர்கள் கிட்ட நெருங்காதிருப்பதற்கு அதுவே போதுமானதா யிருந்தது. இக்காலத்திலேயே ஒரு பிரபல ஹிந்து, கிறிஸ்துவ மதத்தைத் தழுவியது குறித்துக் கேள்விப் பட்டேன். அவர் 'ஞானஸ்நானம்' செய்விக்கப்பட்டபோது மாட்டிறைச்சி தின்று, சாராயம் குடிக்கவேண்டி யிருந்த தென்றும், உடனே தொப்பியுள்பட ஐரோப்பிய உடை தரிக்கவுந் தொடங்கி விட்டாரென்றும் ஊரெல்லாம் பேச்சாயிருந்தது. இவை எனக்குப் பிடிக்கவில்லை. மாட்டிறைச்சி தின்னவும், சாராயம் குடிக்கவும், உடையை மாற்றவும் கட்டாயப்படுத்தும் மதத்துக்கு மதம் என்ற பெயரே தகாது என்று எண்ணினேன். மதம் மாறியவர் தமது மூதாதைகளின் மதத்தையும் பழக்க வழக்கங்களையும், தேசத்தையும் தூஷிக்கத் தலைப்பட்டு விட்டாரென்றும் கேள்விப்பட்டேன். இவை எல்லாம் சேர்ந்து கிறிஸ்துவ மதத்தில் எனக்கு வெறுப்பை யுண்டாக்கின.

மற்றச் சமயங்களிடத்தில் சகிப்புத் தன்மை எனக்கு ஏற்பட்டுவிட்டதனுலேயே, ஆண்டவனிடம் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை யுண்டாகிவிட்டது என்பதில்லை. அக்காலத்தில், தந்தையார் சேர்த்து வைத்திருந்த புத்தகங்களில் மனுஸ்மிருதியைப் படிக்க நேர்ந்தது. அதில் ஜகத் சிருஷ்டியைப் பற்றியும், அதுபோன்ற விஷயங்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கும் விவரங்கள் எனக்கு நம்பிக்கை யூட்டவில்லை. இவற்றின் பயனுக எனக்கு ஓரளவு நாஸ்திக மனப் பான்மையும் உண்டாயிற்று.

இப்போதும் ஜீவியவந்தராயிருக்கும் எனது பங்காளி சகோதரர் ஒருவரின் அறிவு வன்மையில் எனக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. எனது ஐயங்களை அவரிடம் கூறினேன். ஆனுல் அவரால் அவ்வையங்களைத் தீர்க்கக் கூடவில்லை, "உனக்கு வயது வரும்போது இச்சந்தேகங்களை நீயே தீர்த்துக்கொள்வாய். இந்த வயதில் இப்படிப்பட்ட ஐயங்களே தோன்றக் கூடாது" என்ருர். இதன்மேல் நான் வாய் திறக்கவில்லை; ஆனுல் மன அமைதி பெற்றுவிடவும் இல்லை. மனுஸ்மிருதியில் உணவு முதலியவற்றைப் பற்றிக் கூறும் அத்தியாயங்கள் தினசரி வாழ்க்கைக்கு முற்றும் மாறுபட்டனவாகக் காணப்பட்டன. இவை சம்பந்தமான கேள்விகளுக்கும் மேற்கண்ட விதமான விடைகளே கிடைத்தன. அறிவு முதிர்ச்சியும், அதிகப் படிப்பும் ஏற்படின் இவ்விஷயங்கள் எல்லாம் தெளிவாகுமென்று எண்ணிக்கொண்டேன்.

மனுஸ்மிருதி அக்காலத்தில் எனக்கு அஹிம்ஸா தர்மத்தை உபதேசிக்கவில்லை யென்பதுமட்டும் நிச்சயம். நான் புலாலுண்ட வரலாற்றைப்பற்றி முன்னமே கூறியுள்ளேன். புலால் உண்ணுவதை மனுஸ்மிருதி ஆதரிப்ப

என் தந்தையார்க்கு முஸ்லிம், பார்ஸி நண்பர்களும் இருந்தார்கள். அவர்கள் தத்தம் சமயங்களைப் பற்றிப் பேசும்போது தந்தை சிரத்தையுடன் செவி கொடுத்துக் கேட்பார். அவருக்குப் பணிவிடை புரிந்துவந்த நான் பல முறைகளில் இச் சம்பாஷணைகளைக் கேட்க நேர்ந்தது. இவற்றின் பயனாக எல்லாச் சமயங்களிடத்தும் சகிப்புத் தன்மை எனக்கு ஏற்பட்டது.

கிறிஸ்துவ மதம் மட்டும் இதற்கு விலக்காயிருந்தது. அதனிடம் எனக்கு ஒருவகை வெறுப்பு ஏற்பட்டது. அதற்கு ஒரு காரணம் உண்டு. அக்காலத்தில் பள்ளிக் கூடத்தருகில் மூலையில் கிறிஸ்துவப் பாதிரிமார் நின்று ஹிந்துக்களையும், ஹிந்து தெய்வங்களையும் தூஷிப்பார்கள். இதை என்னால் சகிக்கக்கூடவில்லை. ஒருமுறைதான் இவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்க நின்றிருப்பேன். பின்னர் அவர்கள் கிட்ட நெருங்காதிருப்பதற்கு அதுவே போதுமானதா யிருந்தது. இக்காலத்திலேயே ஒரு பிரபல ஹிந்து, கிறிஸ்துவ மதத்தைத் தழுவியது குறித்துக் கேள்விப் பட்டேன். அவர் 'ஞானஸ்நானம்' செய்விக்கப்பட்டபோது மாட்டிறைச்சி தின்று, சாராயம் குடிக்கவேண்டி யிருந்த தென்றும், உடனே தொப்பியுள்பட ஐரோப்பிய உடை தரிக்கவுந் தொடங்கி விட்டாரென்றும் ஊரெல்லாம் பேச்சாயிருந்தது. இவை எனக்குப் பிடிக்கவில்லை. மாட்டிறைச்சி தின்னவும், சாராயம் குடிக்கவும், உடையை மாற்றவும் கட்டாயப்படுத்தும் மதத்துக்கு மதம் என்ற பெயரே தகாது என்று எண்ணினேன். மதம் மாறியவர் தமது மூதாதைகளின் மதத்தையும் பழக்க வழக்கங்களையும், தேசத்தையும் தூஷிக்கத் தலைப்பட்டு விட்டாரென்றும் கேள்விப்பட்டேன். இவை எல்லாம் சேர்ந்து கிறிஸ்துவ மதத்தில் எனக்கு வெறுப்பை யுண்டாக்கின.

மற்றச் சமயங்களிடத்தில் சகிப்புத் தன்மை எனக்கு ஏற்பட்டுவிட்டதனலேயே, ஆண்டவனிடம் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை யுண்டாகிவிட்டது என்பதில்லை. அக் காலத்தில், தந்தையார் சேர்த்து வைத்திருந்த புத்தகங்களில் மனுஸ்மிருதியைப் படிக்க நேர்ந்தது. அதில் ஜகத் சிருஷ்டியைப் பற்றியும், அதுபோன்ற விஷயங்களைப் பற்றி யும் குறிப்பிட்டிருக்கும் விவரங்கள் எனக்கு நம்பிக்கை யூட்டவில்லை. இவற்றின் பயனாக எனக்கு ஓரளவு நாஸ்திக மனப் பான்மையும் உண்டாயிற்று.

இப்போதும் ஜீவியவந்தராயிருக்கும் எனது பங்காளி சகோதரர் ஒருவரின் அறிவு வன்மையில் எனக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. எனது ஐயங்களை அவரிடம் கூறினேன். ஆனல் அவரால் அவ்வையங்களைத் தீர்க்கக் கூடவில்லை. "உனக்கு வயது வரும்போது இச்சந்தேகங்களை நீயே தீர்த்துக்கொள்வாய். இந்த வயதில் இப்படிப்பட்ட ஐயங்களே தோன்றக் கூடாது" என்றார். இதன்மேல் நான் வாய் திறக்கவில்லை; ஆனல் மன அமைதி பெற்று விடவும் இல்லை. மனுஸ்மிருதியில் உணவு முதலியவற்றைப் பற்றிக் கூறும் அத்தியாயங்கள் தினசரி வாழ்க்கைக்கு முற்றும் மாறுபட்டனவாகக் காணப்பட்டன. இவை சம்பந்தமான கேள்விகளுக்கும் மேற்கண்ட விதமான விடைகளே கிடைத்தன. அறிவு முதிர்ச்சியும், அதிகப் படிப்பும் ஏற்படின் இவ்விஷயங்கள் எல்லாம் தெளிவாகு மென்று எண்ணிக்கொண்டேன்.

மனுஸ்மிருதி அக்காலத்தில் எனக்கு அஹிம்ஸா தர்மத்தை உபதேசிக்கவில்லை யென்பதுமட்டும் நிச்சயம். நான் புலாலுண்ட வரலாற்றைப்பற்றி முன்னமே கூறி யுள்ளேன். புலால் உண்ணுவதை மனுஸ்மிருதி ஆதரிப்ப

தாகக் காணப்பட்டது. பாம்பு, மூட்டைப்பூச்சி போன்றவைகளைக் கொல்லுதல் அறநெறிக்கு இயைந்ததென்றும் நம்பினேன். அந்த வயதில் மூட்டைப்பூச்சி முதலியவைகளைக் கொல்வதைக் கடமையாகக் கருதிக் கொன்றதாக நினைவிருக்கிறது.

ஆனால் அக்காலத்தில் என் ஹிருதயத்தில் ஆழப் பதிந்தது ஒன்றுண்டு. சன்மார்க்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை யென்றும், சத்தியமே சன்மார்க்கத்தின் சாரம் என்றும் உறுதிகொண்டேன். எனவே சத்தியமே எனது வாழ்க்கையின் குறிக்கோளாயிற்று. நாளுக்குநாள் அது வளரத் தொடங்கியது. அதற்கு நான் கொண்ட பொருளும் விரிவாகி வந்தது.

அச்சமயம் ஒரு குஜராத்தி பாட்டு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. 'தீமைக்குப் பதில் நன்மை செய்' என்னும் அப்பாட்டின் போதனை என் வாழ்க்கையில் வழி காட்டும் தத்துவமாயிற்று. அதில் எனக்கு அவ்வளவு பிரேமை ஏற்பட்டுவிட்டபடியால் அத்தத்துவத்தில் பற்பல சோதனைகள் செய்யத் தொடங்கினேன். மிக அற்புதமானவை என நான் கருதும் அப்பாட்டின் வரிகள் பின்வருமாறு:—

ஒரு குவளை தண்ணீருக்குப் பதில் ஒருவேளை விருந்தளி;

அன்புடன் கூறும் முகமனுக்கு ஆர்வத்துடன் பணிந்து வணங்கு;

ஒரு காசு உனக்களித்தவனுக்கு, ஒளிர் பொன் கொடுத்து மகிழ்;

உன் உயிரைக் காத்தவனுக்கு, உயிர் அளிக்கத் தயங்காதே;

இங்ஙனம் அறிஞர் உரைகளையும் செயல்களையும் மதித்து நட;

ஒவ்வொரு சிறு தொண்டுக்கும் பதின் மடங்கு பரிசு பெறுவாய்;

ஆனால் உண்மையில் பெரியோர், மன்பதையை ஒன்றென உணர்ந்தோர்;

தீமைக்குப் பதில் அவர்கள் நன்மை செய்து மகிழ்கின்றனர்.

பதினோராம் அத்தியாயம்

இங்கிலாந்து செல்ல ஆயத்தம்

1887-ம் ஆண்டில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினேன். ஆமதாபாத், பம்பாய் இவ்விரண்டிடங்களிலும் அப்போது பரீட்சை நடத்தப்பட்டது. கத்தியவார் வறுமை மிகுந்த நாடாதலின் சமீபத்திலுள்ளதும் அதிக செலவில்லாததுமான ஆமதாபாத்துக்கே அந்நாட்டு மாணாக்கர் சென்றனர். என் குடும்பத்தின் வறுமை காரணமாக நானும் அவ்விடத்துக்கே சென்றேன். இராஜ கோட்டையிலிருந்து ஆமதாபாத்துக்கு முதன் முதலாக அதிலும் துணையின்றி நான் பிரயாணம் செய்தது இப்போதுதான்.

மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறிய பின், கலாசாலையில் நான் தொடர்ந்து படிக்க வேண்டுமென்று

வீட்டுப் பெரியவர்கள் விரும்பினார்கள். பவநகரில் ஒரு கலாசாலை இருந்தது. பம்பாயிலும் இருந்தது. ஆனால் பம்பாயைவிடப் பவநகரில் செலவு குறைவாயிருக்கு மென்பதை முன்னிட்டு, நான் அங்கு சென்று ஸமால்தாஸ் கலாசாலையில் சேரத் தீர்மானித்தேன். அவ்வாறே சென்று சேர்ந்தேன். ஆனால் அங்குத் திக்குத் திசையே புரிய வில்லை. எல்லாம் கஷ்டமாக இருந்தன. ஆசிரியர்களின் உபந்நியாசங்கள் முதலில் புரியவே யில்லை. அவைகளில் எனக்குச் சிரத்தை ஏற்படுவது எப்படி? அது ஆசிரியர் களின் குற்றமன்று. அக்கலாசாலை ஆசிரியர்கள் முதல் தரமானவர்களென்று பெயர் பெற்றவர்கள். நான் கலா சாலைக் கல்விக்குப் பண்படுத்தப் படாதவனாயிருந்ததே காரணம். முதல் ஆறுமாதம் ஆனதும் விடுமுறைக்கு வீடு திரும்பினேன்.

மாவ்ஜி தவே என்னும் பிராமணர் எங்கள் குடும்பத் தின் பழைய நண்பர். இவர் கல்வி யறிவும், சூட்சும புத்தியும் படைத்தவர். என் தந்தையின் மரணத்துக்குப் பின்னரும் அவர் எங்கள் குடும்பத்துடன் தொடர்பு வைத்திருந்தார். விடுமுறைக்கு நான் ஊர் சென்றிருந்த போது அவர் எங்கள் வீட்டுக்கு ஒருமுறை வந்தார். என் தாயாருடனும் தமையனாருடனும் பேசிக்கொண்டிருக்கை யில் என் படிப்பைப்பற்றி விசாரித்தார். நான் ஸமால் தாஸ் கலாசாலையில் கல்வி பயில்வதாக அறிந்ததும் அவர் கூறியதாவது:—“காலம் மாறிவிட்டது. தகுந்த கல்விப் பயிற்சி இல்லாமல் நீங்கள் ஒருவரும் உங்கள் தந்தையின் பதவிக்கு வர முடியாது. இந்தப் பையன் இன்னமும் படித்து வருவதால் அவனை அப்பதவிக்குத் தயார்செய்ய நீங்கள் முயலவேண்டும். பி. ஏ. பரீட்சையில் அவன்

தேறுவதற்கு இன்னும் நாலைந்து ஆண்டுகள் செல்லும். தேறிய பின்னரும் அறுபது ரூபா சம்பளத்துக்குத் தகுதி யாவானே யொழிய திவான் பதவிக்குத் தகுதியாக மாட்டான். அதற்குப் பின் என் புதல்வனைப்போல் சட்டப் பரிட்சைக்குச் சென்றால் இன்னும் இரண்டு வருஷங்கள் ஆகும். இதற்குள்ளாக எத்தனையோ வக்கீல் கள் திவான் உத்தியோகத்துக்கு மனுப்போடத் தயாராகி விடுவார்கள். இவற்றை யெல்லாம்விட அவனை இங்கிலாந் துக்கு அனுப்புவது எத்தனையோ மடங்கு நல்லதென எனக்குத் தோன்றுகிறது. பாரிஸ்டர் ஆவது மிகவும் சுலபம் என்று என் புதல்வன் கேவல்ராம் கூறுகிறான். மூன்று ஆண்டுகளில் திரும்பிவந்து விடலாம். செலவு நான்கு அல்லது ஐந்து ஆயிரத்துக்குமேல் ஆகாது. இங்கி லாந்திலிருந்து சமீபத்தில் திரும்பி வந்த பாரிஸ்டரைப் பாருங்கள்! எத்தனை 'தோரணை' யாக வாழ்க்கை நடத்து கிறார்? அவர் கேட்டால் போதும்; திவான் பதவி கிடைத்துவிடும். இந்த வருஷத்திலேயே மோகனதாஸை இங்கிலாந்துக்குக் கட்டாயம் அனுப்பி வையுங்கள். இங்கி லாந்தில் கேவல்ராமுக்கு நண்பர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிமுகக் கடிதம் கொடுப்பான். மோகன தாஸ் அங்கே சுகமாக இருந்துவிட்டு வரலாம்."

ஜோஷிஜி—அவரை நாங்கள் அவ்வாறு கூப்பிடுவது வழக்கம்—பின்னர் திரும்பி என்னைப் பார்த்து "இங்கே படிப்பதை விட இங்கிலாந்து செல்ல நீ விரும்புகிறா யல்லவா?" என்று பரிபூரண நம்பிக்கையுடன் கேட்டார். அதைவிட எனக்கு மகிழ்ச்சி தரும் யோசனை வேறெதுவும் இருந்திருக்க முடியாது. கலாசாலைப் படிப்பு அவ்வளவு தொல்லையா யிருந்தது. எனவே மேற்படி யோசனையை

விரைந்தேற்று, எவ்வளவு விரைவில் அனுப்புகிறார்களோ அவ்வளவுக்கு நல்லது என்று பதில் சொன்னேன். ஆனால் பரீட்சையில் துரிதமாகத் தேறுவதென்பது சுலபமான காரியமன்று எனத் தோன்றிற்று. எனவே வைத்தியத் தொழில் பயிற்சிக்குப் போகக்கூடாதா என்று கேட்டேன்.

என் சகோதரர் குறுக்கிட்டு "தந்தைக்கு அது பிடிப்பதே யில்லை. பிணங்களை அறுக்கும் வேலை வைஷ்ணவர்களுக்குத் தகாதது என்று அவர் சொன்னபோது, உன்னை மனதில் வைத்துக்கொண்டே சொன்னார். நியாயவாதித் தொழிலுக்கு நீ தயாராக வேண்டுமென்பதே தந்தையின் விருப்பம்" என்று கூறினார்.

அப்போது ஜோஷிஜி உரைத்ததாவது:—"காந்திஜியைப்போல் வைத்தியத் தொழிலே உதவாதென்ற கொள்கை எனக்கில்லை. நமது சாஸ்திரங்களும் அப்படிச் சொல்லவில்லை. ஆனால் வைத்தியப் பட்டம் திவான் உத்தியோகத்துக்கு உன்னைத் தகுதியாக்காது. நீ திவான் உத்தியோகத்துக்கோ, கூடுமானால் அதைவிடப் பெரிய உத்தியோகத்துக்கோ வரவேண்டு மென்பது என் விருப்பம். அப்படி வந்தால்தான் இப்பெரிய குடும்பத்தை நீ காப்பாற்றக்கூடும். காலம் விரைவாக மாறி வருகிறது. காலட்சேபம் நாளுக்குநாள் கஷ்டமாகி வருகிறது. இங்கிலையில் நீ பாரிஸ்டராவதே அறிவுடைமையாகும்." பின்னர் என் தாயாரைப் பார்த்து அவர் கூறியதாவது:—"நான் இப்போது போகவேண்டும். நான் கூறியதைப்பற்றி நன்கு யோசியுங்கள். மறுமுறை நான் இங்கு வரும்போது இங்கிலாந்து போக ஏற்பாடு செய்யப்படுவதாகக் கேள்வியுற விரும்புகிறேன். நான் எவ்வழியிலேனும் உதவி செய்யக் கூடுமானால் நிச்சயமாகத் தெரிவியுங்கள்."

ஜோஷிஜி விடைபெற்றுச் சென்றார். நான் ஆகாயக் கோட்டைகள் பல கட்டலானேன்.

எனது மூத்த சகோதரர் மனம் சிந்தையிலாழ்ந்தது. என்னை அனுப்புவதற்குப் பணம் எங்கிருந்து தேடுவது? என்னைப் போன்ற இளைஞன் ஒருவனைத் தனிமையாக வெளி நாட்டுக்கு அனுப்புவது உசிதமா?

என் தாயாரும் அதிக கலக்கத்துக்குள்ளானார். என்னைப் பிரிய அவருக்கு மனமில்லை. எனவே, சாக்குப் போக்குச் சொல்ல முயன்றார். "குடும்பத்தில் இப்போது பெரியவர் உன்னுடைய சிறிய தகப்பனார். முதலில் அவரைக் கலந்து கொள்ளவேண்டும். அவர் சம்மதித்தால் பின்னர் யோசனை செய்வோம்" என்று அவர் கூறினார்.

என் சகோதரருக்கு வேறொரு யோசனை தோன்றிற்று. அவர் சொன்னதாவது:—"போர்பந்தர் சமஸ்தானத்தாரிடம் உதவி எதிர்பார்க்க நமக்கு உரிமையுண்டு. இப்போது அங்கு நிர்வாக உத்தியோகஸ்தர் மிஸ்டர் லெலி. அவருக்கு நமது குடும்பத்தினிடம் நல்ல மதிப்புண்டு. நமது சிறிய தகப்பனாரிடமும் அவர் விசுவாசமுள்ளவர். ஆகையால் இங்கிலாந்தில் உன் படிப்புக்குச் சமஸ்தானத்திலிருந்து ஏதேனும் உதவி அளிக்க அவர் சிபார்சு செய்யக் கூடும்."

இந்த யோசனை எனக்குப் பிடித்திருந்தது. உடனே போர்பந்தருக்குப் புறப்பட ஆயத்தம் செய்யலானேன். அக்காலத்தில் ரயில் பாதை கிடையாது. ஐந்து நாள் கட்டை வண்டியில் பிரயாணம் செய்ய வேண்டும். நான் அக்காலத்தில் கோழையென்பதை முன்னமே சொல்லியிருக்கிறேன். ஆனால் அக்கணத்திலே, இங்கிலாந்துக்குப்

போகும் ஆசை என்னைப் பரிபூரணமாகக் கொள்ளை கொண்டபடியால், என் கோழைத்தனம் பறந்து போயிற்று. தோராஜி என்னும் இடம் வரையில் கட்டை வண்டியில் போனேன். பின்னர் ஒரு நாள் முன்னதாகப் போகும் பொருட்டு ஒட்டகை ஒன்றை அமர்த்திக் கொண்டேன். நான் ஒட்டகைச் சவாரி செய்தது இதுவே முதன் முறையாகும்.

கடைசியாக, போர்பந்தரை அடைந்தேன். சிறிய தந்தையின் அடிபணிந்து அவரிடம் எல்லாவற்றையும் கூறினேன். அவர் யோசனை செய்து கூறியதாவது:— "நமது மதத்துக்கு விரோதம் செய்யாமல் இங்கிலாந்தில் வசிக்கலாமா வென்பதைப்பற்றி எனக்கு நிச்சயமில்லை. நான் கேள்விப்பட்ட வரையில், அது ஐயத்துக்கிடமானதே. இந்தப் பெரிய பாரிஸ்டர்களைப் பார்க்கும்போது, அவர்களுடைய வாழ்க்கைக்கும் ஐரோப்பியர்களுடைய வாழ்க்கைக்கும் எவ்வகை வேற்றுமையும் புலனாகவில்லை. அவர்கள் எல்லா வகை உணவும் உட்கொள்ளுகிறார்கள். அவர்கள் வாயில் சுருட்டு இல்லாத நேரம் கிடையாது. இங்கிலீஷ் காரர்களைப்போல் நாணமின்றி அவர்கள் உடை தரிக்கிறார்கள், நமது குடும்பத்துக்கு இவையெல்லாம் தகுந்தவையல்ல. சமீபத்தில் நான் ஸ்தல யாத்திரைக்குப் புறப்படவிருக்கிறேன். இன்னும் நீண்ட காலம் நான் உயிர் வாழ்ந்திரேன். மரண வாயிலில் நின்றுகொண்டிருக்கும் நான், கடல் கடந்து இங்கிலாந்து செல்ல உனக்கு எவ்வாறு அநுமதி கொடுப்பேன்? ஆனால் உன் வழியில் நான் குறுக்கே நில்லேன். உன் தாயாரின் அநுமதியே முதன்மையாக வேண்டும். அவள் அநுமதி கொடுத்தால் சுகமாகப்போய் வா. நான் தடை செய்

யேன் என்று தெரிவி எனது ஆசிகள் உனக்கு எப்போது மிருக்கும்."

"தங்களிடமிருந்து இதற்குமேல் நான் எதிர்பார்க்க முடியாது. இனி, தாயாரை வயப்படுத்த முயல்கிறேன். ஆனால் மிஸ்டர் லெலிக்குத் தாங்கள் என்னைச் சிபார்சு செய்யக்கூடாதா?" என்று கேட்டேன்.

"அது எப்படி நான் செய்ய முடியும்? ஆனால் துரை நல்லவர். உன்னுடைய உறவு முறையைக் குறிப்பிட்டு அவரைப் பார்க்கவேண்டு மென்று தெரிவித்துக்கொள். அவர் நிச்சயமாக உன்னைப் பார்க்கச் சம்மதிப்பார். ஏதேனும் உதவி செய்யவுங் கூடும்" என்று அவர் கூறினர்.

என் சிறிய தந்தை துரைக்குச் சிபார்சுக் கடிதம் கொடுக்க ஏன் மறுத்தார் என்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. நான் இங்கிலாந்து செல்வது மத விரோதமான காரியமென்று அவர் எண்ணியதால் அக்காரியத்தில் ஒத்துழைக்கத் தயங்கி இருக்கலாமெனத் தோன்றுகிறது.

மிஸ்டர் லெலிக்கு எழுதினேன். தமது ஜாகையில் வந்து பார்க்கும்படி அவர் பதில் விடுத்தார். மாடிப் படியில் அவர் ஏறிக்கொண் டிருந்தபோது என்னைப் பார்த்தார். நின்று கூடப் பேசவில்லை. "முதலில் பி, ஏ. பரீட்சையில் தேறிவிட்டு என்னை வந்து பார். இப்போது உனக்கு எவ்வகை உதவியும் செய்ய முடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டு மேலேறிச் சென்றார். துரையைப் பார்ப்பதற்கென்று தடபுடலான ஏற்பாடு செய்துகொண்டு போயிருந்தேன். அவரிடம் பேசுவதற்குச் சில வாக்கியங்களையும் நெட்டுருச் செய்திருந்

தேன். தலை வணங்கி இரு கரங்களாலும் வந்தன மளித்தேன். ஆனால் ஒன்றும் பயனில்லாமற் போயிற்று!

என் மனைவியின் நகைகளைப்பற்றி நினைத்தேன். என் மூத்த சகோதரர் உதவ மாட்டாரா என்றும் எண்ணினேன். அவரிடம் எனக்குப் பூரண நம்பிக்கை யுண்டு. அவருடைய தயாள குணம் அளவு கடந்தது. தமது புதல்வனெனவே எண்ணி அவர் என்னிடம் அன்பு பூண்டிருந்தார்.

போர்பந்தரிலிருந்து இராஜகோட்டைக்குத் திரும்பிச் சென்று நிகழ்ந்த எல்லாவற்றையும் கூறினேன். ஜோஷிஜியிடமும் கலந்து யோசித்தேன். அவரென்னவோ, அவசிய மாயின் கடன் பட்டாலும் பாதக மில்லையென உரைத்தார். என் மனையாளின் நகைகளை விற்றுவிடலா மென நான் கூறினேன். சுமார் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய்க்கு அவற்றை விற்கலாம். எப்படியேனும் பணந்தேடிக் கொடுப்பதாக என் சகோதரர் கூறினார்.

அன்னை மட்டும் இன்னமும் மன மிசையவில்லை. இங்கிலாந்து பிரயாணத்தைப்பற்றி அவர் நுட்பமாக விவரம் விசாரிக்கலானார். இங்கிலாந்துக்குப் போகும் இளைஞர்கள் கெட்டுப் போகிறார்கள் என்று யாரோ ஒருவர் அவருக்குச் சொல்லியிருந்தார். இங்கிலாந்து போவோர் புலால் உண்ண ஆரம்பித்து விடுவார்களென்று வேறொருவரும், அங்கு சாராயம் குடியாமல் வசிக்க முடியாதென்று மற்றும் ஒருவரும் அவருக்குச் சொல்லியிருந்தார்.

“இவை குறித்து என்ன சொல்கிறாய்?” என்று அவர் என்னைக் கேட்டார். “என்னிடம் நம்பிக்கை வைக்கமாட்

டீர்களா? உங்களிடம் ஒரு நாளும் பொய்யுரையேன். அப் பொருள்களைத் தொடுவதில்லையென ஆணையிடுகிறேன். அத்தகைய அபாயம் ஏதேனும் இருப்பின் ஜோஷிஜி என்னைப்போகச் சொல்வாரா?" என்று கூறினேன்.

"உன்னை நான் நம்புவேன். ஆனால் தூரதேசத்தில் உன்னை நம்பி எவ்வாறு விட்டிருப்பேன்? என் மனம் பிரமைகொண் டிருக்கிறது. செய்வ தென்னவென்று தெரியவில்லை. பேசார்ஜி ஸ்வாமியைக் கேட்கிறேன்" என்று அவர் சொன்னார்.

பேசார்ஜி ஸ்வாமி என்பவர் பிறப்பினால் பனியா ஜாதியினர். இப்போது ஜைன பிட்சுவா யிருந்தார். ஜோஷிஜியைப்போல் அவரும் எங்கள் குடும்பத்துக்கு வேண்டியவர். அவர் என் துணைக்கு வந்து "பையனிடம் இம்மூன்று உறுதி மொழிகளையும் வாங்கிக்கொள்கிறேன். பின்னர் அவனைப் போகச் சொல்லலாம்" என்று கூறினார். அவர் கூறியவண்ணம் மது, மாமிசம், மாதர் இன்பம் இவைகளை நாடுவதில்லை யென்று பிரதிக்ஞை செய்து கொடுத்தேன். பின்னர் என் தாயாரும் அநுமதி யளித்தார்.

நான் படித்த உயர்தரப் பள்ளிக்கூடத்தில் நான் இங்கிலாந்து போவதை முன்னிட்டு எனக்கு வாழ்த்துக் கூறி அனுப்ப ஒரு கூட்டம் நடந்தது. இராஜகோட்டையி லிருந்து ஓர் இளைஞன் இங்கிலாந்து செல்வது அசாதாரண நிகழ்ச்சி யன்றோ? மேற்படி கூட்ட முடிவில் வந்தனங் கூறும் பொருட்டுச் சில வாக்கியங்களை எழுதி வைத் திருந்தேன். ஆனால் அவற்றைத் தட்டுத் தடுமாறிப் படிப் பதற்குள் நிரம்பப் பிரயாசையாகிவிட்டது. படிக்க

எழுந்து நின்றபோது என் உடல் முழுவதும் நடுங்கியதும், தலை சுற்றியதும் நினைவிருக்கின்றன.

பெரியோர்களின் ஆசி பெற்று பம்பாய்க்குப் புறப்பட்டேன். இராஜ கோட்டையிலிருந்து பம்பாய்க்கு இதுவே என் முதல் பிரயாணம். எனது சகோதரர் உடன் வந்தார். ஆனால் கைக்கெட்டியது வாய்க்கெட்டு வதற்குள் எத்தனையோ விபத்துக்கள் நேரிடக்கூடுமன்றோ? பம்பாயில் எனக்குக் கஷ்டங்கள் காத்திருந்தன.

பன்னிரண்டாம் அத்தியாயம்

சாதிப் பிரஷ்டன்

என் அன்னையின் அநுமதியும், ஆசியும் பெற்று, மிகுந்த உற்சாகத்துடன் பம்பாய்க்குப் புறப்பட்டேன். என் மனைவியையும், பிறந்து சில மாதங்களேயான குழந்தையையும் விட்டுச் சென்றேன். ஆனால் பம்பாய் சேர்ந்ததும், ஜூன்—ஜூலை மாதங்களில் இந்து சமுத்திரத்தில் கொந்தளிப்பு அதிகமென்றும், நான் இப்போதுதான் முதன் முதலாகக் கடற் பிரயாணம் செய்யப்போவதால் நவம்பர் மாதத்துக்கு முன் போகக் கூடாதென்றும் என் சகோதரரிடம் நண்பர்கள் தெரிவித்தார்கள். சமீபத்தில் புயற் காற்றில் அகப்பட்டு ஒரு கப்பல் மூழ்கி விட்டதாகவும் ஒருவர் கூறினர். இதனல் மன அமைதி இழந்த என் சகோதரர் உடனே நான் பிரயாண மாவதற்கு அநுமதி கொடுக்கத் துணியவில்லை. எனவே பம்பாயில் ஒரு நண்பரின் வீட்டில் என்னை விட்டுவிட்டு அவர் தம் வேலையைப் பார்க்க இராஜகோட்டைக்குத் திரும்பினர். என் பிரயாணச் செலவுக்கான பணத்தை மைத்துனர்

ஒருவரிடம் கொடுத்திருந்ததுடன் எனக்கு வேண்டிய உதவிகள் செய்யும்படி நண்பர்களிடமும் சொல்லி யிருந்தார்.

பம்பாயில் நாளை எண்ணிக்கொண்டு காலங் கழித் தேன். இங்கிலாந்து செல்வதைப்பற்றி ஓயாது கனவு கண்டுகொண் டிருந்தேன்.

இதற்கு மத்தியில் என்னுடைய சாதியாரிடையே நான் கப்பற் பிரயாணம் செய்யப் போவதைப் பற்றிக் கிளர்ச்சி உண்டாயிற்று. இதுவரை மோத் பனியா சாதியைச் சேர்ந்தவர் எவரும் இங்கிலாந்து சென்றதில்லை. நான் செல்லத் துணிந்தால் தகுந்த சிட்சை விதிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள் சாதிக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அதன்முன் ஆஜராகும்படி எனக்குக் கட்டளை பிறந்தது. நான் போனேன். திடீ ரென்று அவ்வளவு தைரியம் எவ்வாறு பெற்றேன் என்று எனக்கே தெரியவில்லை. சிறிதும் அஞ்சாமல், தயங்காமல் கூட்டத்திற்கு முன்பு சென்றேன். சாதித் தலைவரான சேத் எனக்கு எட்டிய உறவினர். என் தந்தைக்கு நிரம்ப வேண்டியவர். அவர் என்னைப் பார்த்துக் கூறினர்:— "நீ இங்கிலாந்து செல்லத் தீர்மானித்திருப்பது தகுதியன்று என நம் சாதியார் அபிப்பிராயப் படுகின்றனர். கடல் கடந்து செல்ல லாகாதென்று நமது சமயம் கட்டளை யிடுகின்றது. மற்றும், மதத்துக்கு விரோதமின்றி அங்கு வசிக்க முடியாதென்றும் கேள்விப்பட் டிருக்கிறோம். அங்கு ஐரோப்பியர்களுடன் உட்கார்ந்து உணவு கொள்ள வும் குடிக்கவும் வேண்டியிருக்கும்!"

இதற்கு நான் பின்வருமாறு விடையளித்தேன்:— "இங்கிலாந்து செல்வது மதத்துக்கு விரோதமென்றே

நான் கருதவில்லை. மேற் கல்விப் பயிற்சியை முன்னிட்டே நான் அங்குச் செல்ல உத்தேசித்திருக்கிறேன். மேலும் நீங்கள் பெரிதும் அஞ்சுகிற மூன்று பொருள்களையும் தொடுவதில்லை யென்று என் தாயாரிடம் பிரதிக்ஞை செய்திருக்கிறேன். அப் பிரதிக்ஞை எனக்கு நிச்சயமாகப் பாதுகாப்பா யிருக்கும்."

அப்போது சேத் மீண்டும், "ஆனால் அங்கே நமது மதாசாரங்களைக் கடைப்பிடிக்க முடியாதென்று நாங்கள் சொல்கிறோமே? உன் தந்தைக்கு நான் எவ்வளவு வேண்டியவன் என்பது உனக்குத் தெரியாதா? என்னுடைய புத்திமதியைக் கேள்" என்றார்.

"தாங்கள் என் தந்தைக்கு வேண்டியவர் என்பதை அறிவேன். தாங்கள் எனக்குப் பெரியாரும் ஆவீர்கள். ஆனால் இவ்விஷயத்தில் நான் எதுவும் செய்வதற்கில்லை. இங்கிலாந்து செல்லும் தீர்மானத்தை மாற்ற முடியாது. என் தந்தையின் நண்பரும் அவருக்கு ஆலோசனை கூறி வந்தவரும், கல்விமானுமான ஒரு பிராமணர் நான் இங்கிலாந்து செல்வதற்கு ஆட்சேபம் கூறவில்லை. என் தாயும் தமையனும்கூட அனுமதி கொடுத்துவிட்டனர்" என்று நான் கூறினேன்.

"என்றாலும், சாதிக் கூட்டத்தின் கட்டளையை நீ மீறி நடக்கப் போகிறாயா?"

"வேறு வழியில்லாவிடில் என் செய்வேன்? இவ்விஷயத்தில் சாதிக்கூட்டம் தலையிடக் கூடாதென்று நான் நினைக்கிறேன்."

இதைக் கேட்டதும் சேத்துக்குக் கோபம் பிறந்தது. கடுமொழிகள் கூறலானார். அவற்றினால் நான் அசைந்து

விடவில்லை. எனவே அவர் கடைசியாகப் பின்வருமாறு உத்தரவு பிறப்பித்தார்:—இன்றைய தினமிருந்து இந்தப் பையனைச் சாதிப்பிரஷ்டனாகக் கருதவேண்டும். அவனுக்கு உதவி செய்வோரும் அவனை வழி அனுப்பச் செல்வோரும் ஒன்றேகால் ரூபா அபராதம் விதிக்கப் படுவார்."

இந்தக் கட்டளையைக் கேட்டு நான் கலங்கிவிட வில்லை. சேத்திடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினேன். ஆனால் என் சகோதரர் இதனை எவ்வாறு ஏற்பாரோ வென்று ஐயுற்றேன். அதிர்ஷ்டவசமாக, அவரும் உறுதியாக இருந்தார். சேத்தின் கட்டளையை யறிந்த பின்னரும் எனக்குப் போய்வர அநுமதி யளிப்பதாகக் கடிதம் எழுதினார்.

இந்நிகழ்ச்சியின் பயனாகப் பிரயாணப் படுவதற்கு என்னுடைய ஆவல் மிகுதியாயிற்று. என் சகோதரரைக் கட்டாயப்படுத்தி அவருடைய மனதை மாற்றிவிட்டால் என் செய்கிறது? எதிர்பாராத சம்பவம் ஏதேனும் நேர்ந்து விட்டாலோ? இவ்வாறு நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, ஜுனாகாத்தைச் சேர்ந்த வக்கீல் ஒருவர் பாரிஸ்டர் ஆவதற்காகச் செப்டம்பர் 4௳ புறப்படும் ஒரு கப்பலில் இங்கிலாந்துக்குப் பிரயாணமாகிறார் என்று கேள்விப்பட்டேன். என் சகோதரர் என்னைக் கவனித்துக் கொள்ளும்படி சொல்லியிருந்த நண்பர்களைக் கண்டு இவ்விஷயத்தைக் கூறினேன். அத்தகைய துணையுடன் செல்லும் சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாதென்று அவர்களும் அபிப்பிராயப்பட்டார்கள். காலந் தாழ்த்துவதற்கு இடமில்லை. என் சகோதரருக்கு தந்தியடித்தேன். அவர் உடனே அநுமதியளித்தார். அவர்

பணங்கொடுத்துப் போயிருந்த மைத்துனரிடம் பணத்தைக் கேட்டேன். ஆனால் அவர் சேத்தின் கட்டளையைக் குறிப்பிட்டு, தாம் சாதிப் பிரஷ்டராக முடியாது என்று கூறிவிட்டார். பின்னர் எங்கள் குடும்ப நண்பர் ஒருவரைத் தேடிக்கண்டு, பிரயாணத்துக்கும் வழிச் செலவுக்கும் கடன் கொடுக்கும்படியும், என் சகோதரரிடமிருந்து அதைப் பெற்றுக் கொள்ளும்படியும் வேண்டிக்கொண்டேன். அவர் அதற்கிணங்கியதுடன் எனக்கு உற்சாகமூட்டினார். அவரிடம் அளவற்ற நன்றி யுடையவனானேன். பணத்தில் ஒரு பகுதியைக் கொண்டு உடனே கப்பற்சீட்டு வாங்கினேன். பின்னர் பிரயாணத்துக்குத் தயார் செய்யத் தொடங்கினேன். இவ்விஷயத்தில் அநுபவமுள்ள நண்பர் ஒருவர் இருந்தார். அவர் உடைகளும் பிறவும் தயாரித்துக் கொடுத்தார். சில உடைகள் எனக்குப் பிடித்திருந்தன. சில கொஞ்சமும் பிடிக்கவே யில்லை. முக்கியமாக கழுத்துச் சுருக்கு எனக்குப் பெரும் வெறுப்பை யளித்தது. பிற்காலத்தில் இக்கழுத்துச் சுருக்கு அணிவதில் நான் பெருமகிழ்ச்சி யடைந்ததுண்டு. குட்டைச் சட்டை (ஜாக்கிட்) அடக்க மின்மைக் கறிகுறி என்று தோன்றிற்று. ஆனால் இங்கிலாந்து செல்லும் பேராவலுக்கு முன்பு இந்த வெறுப்புகள் எம்மாத்திரம்? பிரயாணத்துக்கு வேண்டியதற்கு மேலேயே உணவுப் பொருள்களும் தயாரித்துக் கொண்டேன். கப்பலில் ஜுனாகாத் வக்கீல் ஸ்ரீ திரியம்பக ராய் மஜூம்தார் இருந்த அறையிலேயே நண்பர்கள் எனக்கும் இடம் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். என்னைக் கவனித்துக் கொள்ளும்படியும் அவரிடம் சொன்னார்கள். ஸ்ரீ மஜூம்தார் வயது வந்த பெரிய மனிதர்; உலக அநுபவமுள்ளவர். நானோ பதினெட்டு வயதுச் சிறுவன்; உலக மறியாதவன்.

என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமென்று அவர் என் நண்பர்களுக்குக் கூறினார். செப்டம்பர்மீ 4உ பம்பாயிலிருந்து பிரயாணமானேன்.

பதின்மூன்றும் அத்தியாயம்

லண்டன் நகர் சேர்ந்தது

முதன் முதல் கடற் பிரயாணம் செய்வோருக்குச் சாதாரணமாய் வரக்கூடிய நோய் எனக்கு வரவேயில்லை. ஆனால் நாட்செல்லச் செல்ல அலுப்பு அதிகமாற்று. பண்டசாலை உத்தியோகஸ்தரிடம் பேசக்கூட எனக்குக் கூச்சமாயிருந்தது. ஆங்கிலத்தில் பேசும் பழக்கமே எனக்குக் கிடையாது. நாங்கள் இருந்த பகுதியில் ஸ்ரீ மஜூம்தாரைத் தவிர மற்ற எல்லாப் பிரயாணிகளும் ஆங்கிலேயர்கள். அவர்களுடன் நான் பேசுவதற்கில்லை. அவர்கள் என்னிடம் வந்து ஏதேனும் பேசினால் புரிவதே கஷ்டமாயிருந்தது. அவர்கள் சொல்வது விளங்கிய போதும் பதில் சொல்ல முடிவதில்லை. பேசுவதற்குமுன் ஒவ்வொரு வாக்கியத்தையும் மனதில் சொல்லிப் பார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. மேனாட்டாரைப்போல் மேஜையில் அமர்ந்து கத்தி, முள் முதலிய கருவிகளை உபயோகித்து எனக்குச் சாப்பிடத் தெரியாது. இறைச்சி கலவாத போஜன பதார்த்தம் என்னவிருக்கிறதென்று கேட்கப் போதிய துணிவு கிடையாது. எனவே நான் மேஜைக்குச் சென்று ஒருநாளும் உணவருந்தவே யில்லை. அறைக்குள்ளேயே உட்கார்ந்து சாப்பிட்டேன். பம்பாயிலிருந்து கொண்டுவந்திருந்த மிட்டாய்களும், பழங்களுமே பெரும்பாலும் என் உணவாயின. ஸ்ரீ மஜூம்தாருக்கு

இத்தகைய கஷ்டம் எதுவும் தோன்றவில்லை. அவர் எல்லாருடனும் சரளமாகப் பழகினர். கப்பலில் மேற் றட்டில் அடிக்கடி சென்று உலாவுவார். நானே நாள் முழுதும் என் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தேன். ஜனங்கள் அதிகம் இல்லாத சமயம் பார்த்தே மேற் றட்டுக்குச் செல்வேன். பிரயாணிகளுடன் கலந்து பழ கும்படியும் தாராளமாகச் சம்பாஷிக்கும்படியும் ஸ்ரீ மஜ்ஹூம்தார் எனக்கு அடிக்கடி கூறிவந்தார். வக்கீல்கள் வாசாலகர்களாய் இருக்க வேண்டுமென்று கூறி, வக்கீல் தொழிலில் தமது அநுபவங்கள் பலவற்றையும் எடுத்துச் சொன்னர்கள். ஆங்கிலம் பேசுவதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவவிட வேண்டாமென்றும், அன்னிய மொழியில் தவறுகள் ஏற்படவே செய்யுமென்றும், அதற் காக கவலைப்படக் கூடாதென்றும் புத்திமதி கூறினர். ஆனால் என்ன கூறியும் என் கூச்சம் போகவில்லை.

ஆங்கிலப் பிரயாணி ஒருவர் என்னிடம் எவ்வாறே அபிமானங்கொண்டு என்னைப் பேச்சுக்கு இழுத்தார். என்னைவிட அவர் வயதில் பெரியவர், என்னுடைய சாப் பாட்டைப் பற்றியும், நான் யார், எங்கே போகிறே னென்றும், நான் கூச்சப்படுவதுடன் காரணத்தைக் குறித்தும் விசாரித்தார். என்னை மேஜைக்குச் சாப்பிட வரும்படி சொன்னர். மாமிசம் சாப்பிடுவதில்லை என்று நான் வற்புறுத்திக் கூறியபோது அவர் சிரித்தார். நாங்கள் செங்கடலை அடைந்ததும் அவர் நட்புரிமையுடன் சொன்ன தாவது:—"இதுவரை எல்லாம் சரிதான். ஆனல் பிஸ்கே குடாவுக்குப் போய்விட்டால் உமது தீர்மானத்தை மாற்றிக் கொண்டே தீரவேண்டும். இங்கிலாந்து மிகக் குளிர்ச்சி யான தேசம். இறைச்சி யில்லாமல் அங்கு உயிர் வாழ்தலே அசாத்யம்."

"மாமிச உணவு கொள்ளாமல் அங்கே வசிக்க முடியும் என்று நான் கேள்விப்பட் டிருக்கிறேனே?" என்று நான் கூறினேன்.

"அவையெல்லாம் வெறுங் கதை. உமக்குச் சந்தேகமே வேண்டாம். எனக்குத் தெரிந்த வரையில் மாமிசம் புசியாதவர் அங்கு ஒருவர்கூடக் கிடையாது. நான் மதுபானம் செய்பவனுயினும், உம்மை மது அருந்தும்படி சொல்கிறேனு? ஆனல் நீர் மாமிசம் தின்றே தீரவேண்டும். அதின்றி ஜீவிக்க முடியாது."

"தங்கள் புத்திமதிக்காக வந்தனம். ஆனல் மாமிசத்தைத் தொடுவதில்லையென்று என் தாயாரிடம் பிரதிக்ஞை செய்திருக்கின்றேன். எனவே மாமிசம் தின்னுமல் இங்கிலாந்தில் இருக்க முடியாதென்று கண்டால் திரும்பி வந்தாலும் வந்து விடுவேனே யொழிய பிரதிக்ஞா பங்கம் செய்யமாட்டேன்" என்று நான் சொன்னேன்.

பிஸ்கே குடாவை அடைந்தோம். ஆனல் அங்கு மதுவும், மாமிசமும் அவசியமென்னும் உணர்ச்சி எனக்கேற்படவில்லை. மாமிசம் சாப்பிடாதிருந்ததற்கு அத்தாட்சிப் பத்திரங்கள் ஆங்காங்கு சேகரித்துக் கொண்டு வரும்படி எனக்கு உத்திரவிடப்பட்டிருந்த தாதலின், அந்த ஆங்கிலேய நண்பரை ஒன்று தரும்படி கேட்டேன். அவர் மகிழ்ச்சியுடன் கொடுத்தார். கொஞ்சநாளைக்கு அதைப் பத்திரப் படுத்தி வைத்திருந்தேன். ஆனல் பின்னர், மாமிசம் சாப்பிடுவோரும் அத்தகைய அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறக் கூடுமென்று கண்டபோது அம்மோகம் போய்விட்டது. என்னுடைய வார்த்தையை நம்ப மாட்டார்களென்றல் அத்தாட்சிப் பத்திரத்தினல் யாது பயன்?

கடைசியாக, ஸௌதாம்டன் துறைமுகத்தை அடைந்தோம். ஒரு சனிக்கிழமை யன்று அங்குச் சேர்ந்ததாக எனக்கு ஞாபகம். கப்பலில் இருந்தபோது கறுப்பு உடை தரித்திருந்தேன். என் நண்பர்கள் தயாரித்துக் கொடுத்திருந்த வெள்ளைக்கம்பளி உடுப்பை இறங்கும்போது அணிவதற்கென்றே வைத்திருந்தேன். கப்பலிலிருந்து இறங்கும்போது வெள்ளை உடுப்புத் தரித்துக்கொண்டால் நன்றாயிருக்குமென்பது என் எண்ணம். அவ்வாறே உடையை மாற்றிக் கொண்டேன். அப்போது செப்டம்பர் மாதத்தின் கடைசியாதலால் என்னைத் தவிர வேறு யாரும் வெள்ளைக் கம்பளி உடை தரித்திருக்கவில்லை. இறங்கியவர்கள் எல்லாரும் கிரிண்ட்லே கம்பெனியின் ஏஜண்டிடம் சாமான்களை ஒப்புவிப்பதைப் பார்த்து நானும் பெட்டிச் சாவிகள் உள்பட எல்லாச் சாமான்களையும் அவரிடம் ஒப்புவித்தேன்.

டாக்டர் பி. ஜே. மேதா, ஸ்ரீ தளபதி ராம் சுக்லா, இராஜா ரஞ்சித்சிங், தாதாபாய் நௌரோஜி இந்நால்வருக்கும் என்னிடம் அறிமுகக் கடிதங்கள் இருந்தன. லண்டனில் விக்டோரியா ஹோட்டலில் தங்கும்படி கப்பலில் ஒருவர் எங்களுக்கு யோசனை சொல்லியிருந்தார். எனவே, நானும், ஸ்ரீ மஜ்மூதாரும் அங்குப் போய்ச் சேர்ந்தோம். நான் ஒருவனே வெள்ளை உடுப்பு அணிந்திருந்தது எனக்கு ஏற்கனவே அவமானமாயிருந்தது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாதலின் அன்றும் கிரிண்ட்லே கம்பெனியிலிருந்து சாமான் வராதென்று ஹோட்டலில் அறிந்ததும் அசாத்திய ஆத்திரம் உண்டாயிற்று.

ஸௌதாம்டனிலிருந்தே டாக்டர் மேதாவுக்கு நான் தந்தி கொடுத்திருந்தேன். அன்று மாலை எட்டு மணிக்கு

அவர் என்னைப் பார்க்க வந்தார். மிக்க அன்புடன் எனக்கு முகமன் கூறினர். நான் கம்பளி உடை தரித்திருந்ததைப் பார்த்து அவர் புன்னகை புரிந்தார். நாங்கள் பேசிக் கொண்டே யிருக்கையில் அவருடைய தொப்பியை நான் எடுத்து, அது எவ்வளவு மிருதுவா யிருக்கிறதென்று பார்ப்பதற்குக் கையினல் தடவினேன். அது ஒருவகைப் பிராணியின் மயிரினல் அலங்கரிக்கப்பட்ட தொப்பி. நான் தடவியதன் பயனக மயிர் கலைந்து போயிற்று. டாக்டர் மேதா நான் செய்ததைச் சற்றுக் கோபமாகப் பார்த்து அப்படிச் செய்யாமல் நிறுத்தினர். ஆனல் விஷமம் நடந்தது நடந்துவிட்டது. வருங்காலத்துக்கு இது எனக்கு ஓர் எச்சரிக்கையா யிருந்தது. ஐரோப்பியரின் மரியாதைச் சம்பிரதாயத்தில் இதுவே எனக்கு முதல் பாடம். அச் சம்பிரதாய முறைகளைப்பற்றி டாக்டர் மேதா எனக்கு வேடிக்கையாகப் பாடங் கற்பித்தார். "பிறருடைய பொருள்களை ஒருபோதும் தொடாதே. முதல் முதல் அறிமுகமான வுடனேயே இந்தியாவில் நாம் கேட்பது போல் கேள்விகள் கேளாதே. இரைந்து பேசாதே. இந்தியாவில் கூப்பிடுவதுபோல் எல்லாரையும் 'ஸார்' என்று கூப்பிடாதே. இங்கே எஜமானர்களைத்தான் வேலைக்காரர்களும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களும் அவ்வாறு கூப்பிடுவார்கள்" என்று இவ்விதமாகப் பல விஷயங்கள் தெரிவித்தார். ஹோட்டலில் வசிப்பதில் செலவு அதிகமாகு மென்றும், ஏதேனு மொரு குடும்பத்தில் சாப்பிட்டுக்கொண்டு வசித்தலே நலமென்றும் அவர் கூறினர். மேற்கொண்டு இவ்விஷயத்தைப்பற்றிய யோசனையைத் திங்கட்கிழமை வரை தள்ளி வைத்தோம்.

ஹோட்டல் வாசம் எனக்கும் சரி, ஸ்ரீ மஜும்தாருக்கும் சரி, சற்றும் ஒத்துக்கொள்ளவில்லை. செலவும்

அதிகம். சிந்து மாகாண வாசியான ஒருவர் மால்டாவி லிருந்து எங்களுடன் பிரயாணம் செய்து வந்தார். ஸ்ரீ மஜ்முதாரும் அவரும் நண்பர்களாயினர். அவர் லண்டனுக்குப் புதியவர் அல்லராகையால் எங்களுக்கு அறைகள் பார்த்துக் கொடுப்பதாகக் கூறினர். நாங்கள் சம்மதித்தோம். திங்கட்கிழமை எங்கள் சாமான்கள் வந்து சேர்ந்ததும் ஹோட்டல் கணக்கைத் தீர்த்து விட்டு, அந்நண்பர் வாடகைக்குப் பிடித்திருந்த அறைக ளுக்குப் போய்ச் சேர்ந்தோம். ஹோட்டல் கணக்கு ஏறக்குறைய 3 பவுன் ஆயிற்று. இதை அறிந்ததும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. இத்தனைக்கும், நான் அநேகமாகப் பட்டினி கிடந்தேன் என்று சொல்லலாம். அங்கே கொடுத்த உணவு எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. ஏதாவது ஒருவகை உணவு பிடிக்கவில்லை யென்று மற்றொன்று கேட்டால் இரண்டுக்கும் பணங் கொடுக்க வேண்டி யிருந்தது. அவ்வளவே யன்றி, உண்மையில் இத்தனை நாள் வரைக்கும் நான் காலந் தள்ளியது பம்பாயி லிருந்துகொண்டு வந்திருந்த உணவுப் பொருள்களைக் கொண்டே யாகும்.

புதிய அறைகளிலும் எனக்கு மன அமைதி ஏற்பட வில்லை. இடைவிடாமல் சொந்த நாட்டையும், வீட்டையும் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். என் அன்னையின் அன்பைப்பற்றியும் ஓயாது சிந்தித்தேன். இரவில் கண்ணீர் பெருகிக் கன்னங்களை நனைத்த வண்ணமிருக்கும். வீட்டைப்பற்றிய பற்பல ஞாபகங்கள் உறக்கமில்லாமல் செய்தன. என்னுடைய துயரத்தைச் சொல்லிப் பகிர்ந்து கொள்வதற்கும் ஒருவருமில்லை. இருந்தாலும் பயன் என்ன? என் துயரம் எவ்விதத்திலும் ஆறுதலடையாது

என்பதை அறிந்திருந்தேன். எல்லாம் வழக்கத்துக்கு மாறு யிருந்தன. ஜனங்கள் புதியவர்கள்; அவர்களுடைய நடை உடை பாவனைகள், வீடுகள் எல்லாம் புதியன. ஆங்கில நாட்டு மரியாதை முறைகளுக்கு நான் முற்றிலும் புதியவன். ஏதேனும் தவறு செய்துவிடப் போகிறேமே யென்று இடைவிடாமல் எச்சரிக்கையுடனிருக்க வேண்டி யிருந்தது. சைவ உணவு விரதம் கொண்டிருந்ததால் அசௌகரியம் அதிகமாயிற்று. விரத பங்கமின்றி நான் சாப்பிடக்கூடிய பதார்த்தங்களும் சுவையற்றவையாய்ச் சப்பென்று இருந் தன. எனவே, இருதலைக்கொள்ளி எறும்பு போலானேன். இங்கிலாந்து வாசம் சகிக்க முடியாதது என்று தோன் றிற்று. இந்தியாவுக்குத் திரும்புவதைப் பற்றியோ நினைப் பதற்குமில்லை. இவ்வளவு தூரம் வந்துவிட்ட பின்னர் மூன்று வருஷம் இருந்தே தீரவேண்டுமென்று என் மனச் சான்று அறிவுறுத்தியது.

பதினான்காம் அத்தியாயம்

இஷ்ட விரதம்

திங்கட்கிழமையன்று டாக்டர் மேதா என்னைப் பார்க்க விக்டோரியா ஹோட்டலுக்குச் சென்றார். அங்கிருந்து நாங்கள் புறப்பட்டுச் சென்றுவிட்டதாக அறிந்ததும், புதிய விலாசத்தைக் கேட்டு அறிந்துகொண்டு வந்து சேர்ந்தார். கப்பல் பிரயாணத்தின்போது வெறும் அறிவீனத்தினால் உடம்பில் தேமல் வருவித்துக் கொண் டிருந்தேன். கப்பலில் ஸ்நானம் முதலியவைகளுக்கு நாங் கள் கடற்றண்ணீரையே உபயோகித்தோம். கடல் நீரில் சவர்க்காரம் கரையாது. ஆயினும் 'சோப்' தேய்த்துக்

கொள்ளாமல் குளிப்பது நாகரிகத்துக் கழகென்றெனக் கருதி நான் அதை உபயோகித்து வந்தேன். இதனல் உடம்பு சுத்தமாவதற்குப் பதிலாகப் பிசுக்கென்று ஆயிற்று. இதன் பயனுகவே தேமல் வந்தது. டாக்டர் மேதாவிடம் அதைக் காட்டினேன். அவர் போடச் சொன்ன காடித் திராவகத்தைப் போட்டதும் எரிச்சல் எடுத்து நான் கதறி அழுதது நினைவிலிருக்கிறது. என்னுடைய அறை, சாமான்கள் முதலியவற்றை டாக்டர் மேதா பரிசோதித்து விட்டுத் திருப்தி யின்மைக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். அவர் கூறியதாவது:—"இந்த இடம் உதவாது. இங்கிலாந்துக்கு வருவது படிப்புக்காகவே யன்று. அதைவிட முக்கியமானது ஆங்கிலேயரின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள் இவற்றில் அநுபவம் பெறுவதேயாகும். இதற்கு நீ ஒரு குடும்பத்தில் இருக்கவேண்டும். ஆனல் அதற்கு ஏற்பாடு செய்யும்வரை சில தினங்கள் என்னுடைய நண்பர்........என்பாருடன் வசித்துச் சிறிது பயிற்சி பெறுதல் நலம். அவரிடம் நான் உன்னை அழைத்துப் போகிறேன்."

நன்றியறிதலுடன் அவருடைய யோசனையை ஏற்றுக் கொண்டு அந்நண்பருடைய அறைகளுக்கே சென்றேன். அவர் என் விஷயத்தில் காட்டிய அன்பும், செலுத்திய கவலையும் அளவற்றவை. தமது சொந்த சகோதரராகவே என்னைப்பாவித்து நடத்தினர். ஆங்கில நடை உடை பாவனைகளில் பயிற்றுவித்தார். அம்மொழியில் பேசவும் பழக்கிக் கொடுத்தார். ஆனல் எனது உணவு விஷயந்தான் பெரிய பிரச்னையாகி விட்டது. உப்பு, மசாலை முதலியவை கலவாமல் வேக வைத்த கறிவகைகள் எனக்குச் சுவைக்கவே யில்லை. எங்களுக்கு உணவளித்த வீட்டுக்காரி எனக்கு என்ன தயார் செய்வதென்று தெரியாமல் திகைத்

தாள். காலை வேளையில் ஓட் மீல் என்னும் தானியத்திலான கூழ் அளிக்கப்பட்டது. இது கூடியவரை போதுமானதாயிருந்தது. ஆனால் மத்தியானத்திலும், மாலையிலும் நான் பட்டினியாகவே இருந்து வந்தேன். மாமிசம் சாப்பிடும்படி அந்நண்பர் ஓயாது வாதித்துக்கொண்டு வந்தார். நானும் என் விரதத்தைச் சமாதானமாகச் சொல்லி விட்டு மௌனம் சாதித்து வந்தேன். மத்தியான சிற்றுண்டிக்கும் மாலைப் போஜனத்திற்கும் பசலைக்கீரையும் ரொட்டியும்கூட அளிக்கப்பட்டன. நானோ நன்றாகச் சாப்பிடுகிறவன். பெரு வயிறு படைத்தவன். ஆனால் இரண்டு மூன்று ரொட்டித் துண்டுகளைவிட அதிகமாகக் கேட்க எனக்கு வெட்கமாயிருந்தது. அதிகங் கேட்பது தகுதியன்றெனத் தோன்றிற்று. இத்துடன் இவ்விரு வேளைகளிலும் பால் கூடக் கிடையாது. இந்நிலைமை குறித்து ஒருமுறை அந்நண்பர் வெறுப்படைந்து சொன்னதாவது:—நீர் என்னுடைய சகோதரரா யிருந்தால் இத்தனை நாள் உம்மை மூட்டைகட்டி அனுப்பியிருப்பேன். எழுத்து வாசனை யறியாத தாயாரிடம் செய்து கொடுத்த பிரதிக்ஞையைக் கட்டிக்கொண்டு அழுவதா? மேலும் இங்குள்ள நிலைமை உமக்கு அப்போது தெரியாது. எனவே, அது பிரதிக்ஞையே யன்று. சட்டத்தில் அது பிரதிக்ஞையாகப் பாவிக்கப்பட மாட்டாது. அத்தகைய வாக்குறுதியை விடாமல் பிடித்துக் கொண்டிருப்பது மூட நம்பிக்கையைத் தவிர வேறில்லை. இந்தப் பிடிவாதத்தினால் இங்கே உமக்கு எவ்வகைப் பயனும் உண்டாகாது. மாமிசத்தை நீர் முன்னம் தின்று அது உமக்குச் சுவைத்ததாக ஒப்புக் கொள்கிறீர். மாமிசம் முற்றும் அநாவசியமான இடத்தில் அதை உண்டீர். இங்கே அது இன்றியமையாததா யிருக்குமிடத்தில் உண்ண மறுக்கிறீர். என்ன பரிதாபம்!"

எனினும், நான் என் மன உறுதியினின்றும் பிறழ வில்லை. நாள் தவறாமல் அவர் என்னிடம் இதைப்பற்றித் தர்க்கம் செய்வார். ஆனால் நான் மட்டும் முடியாதென்றே கூறி வந்தேன். அவர் வாதம் செய்யச் செய்ய என் மன உறுதியும் அதிகமாகிக்கொண்டே வந்தது. தினம் ஆண்டவனின் துணையை நாடிப் பிரார்த்தனை செய்வேன். அதனால் பலம் பெற்று வந்தேன். கடவுளைப்பற்றிய அறிவு அப்போ தெனக்கு உண்டாகி விட்டதென்பதில்லை. என் நம்பிக்கையே எனக்கு முக்கிய ஆதாரமாயிருந்தது. எனது செவிலித் தாயான உத்தமி அரம்பை விதைத்த விதை இந்நம்பிக்கையாகப் பயன் தந்தது.

பெந்தாம் என்பவர் எழுதிய "Theory of Utility" என்னும் நூலை ஒரு நாள் நண்பர் எனக்குப் படித்துக் காட்டினார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பாஷை அவ்வளவு கடினமாயிருந்தது. அவர் படித்துப் பொருள் விளக்கவும் ஆரம்பித்தார். அப்போது நான் கூறிய தாவது:—"தயவு செய்து மன்னித்து விடுங்கள். இந்த நுட்பமான விஷயங்கள் எனக்குப் பிடிபடவேயில்லை. மாமிசம் சாப்பிடுதல் அவசியமானதென்று நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் பிரதிக்ஞா பங்கம் செய்ய முடியாது. அதைப்பற்றி நான் வாதம் செய்யவுமில்லை. உங்களுடன் வாதாடி வெற்றி பெற முடியாதென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். என்னை அறிவீனன் என்றோ பிடிவாதக்காரன் என்றோ தள்ளிவிடுங்கள். என்னிடம் தாங்கள் அன்பு கொண்டவர்களென்றும், என்னுடைய நலத்தில் கவலையுடையவர்களென்றும் நன் கறிவேன். என் நிலைமைக்கு இரங்கியே தாங்கள் மீண்டும் மீண்டும் இதைப்பற்றிச் சொல்கிறீர்கள் என்பதும்

எனக்குத் தெரியும். ஆனால் நான் என்ன செய்வேன்? என்னதான் இருப்பினும் பிரதிக்ஞை பிரதிக்ஞையே யன்றோ? அதற்குப் பங்கம் செய்ய என்னால் ஆகாது."

நண்பர் ஆச்சரியத்துடன் என்னை உற்று நோக்கினார். புத்தகத்தை மூடிவிட்டு "நல்லது, நான் இனிமேல் வாதம் செய்யவில்லை" என்றார். நான் மகிழ்ச்சி யடைந்தேன். அதற்குப் பின் அவர் எப்போதும் இதைப்பற்றித் தர்க்கம் செய்யவில்லை. ஆனால் என்னைப்பற்றிக் கவலைப்படுவதை மட்டும் அவர் நிறுத்தவில்லை. அவர் சுருட்டுக் குடிப்பதுண்டு. மதுபானமும் செய்வார். ஆனால் இவை இரண்டையும் மேற்கொள்ளும்படி அவர் எனக்குச் சொல்லவில்லை. அதற்கு மாறாக அவ்விரண்டும் வேண்டா மென்றே அவர் கூறி வந்தார். புலால் அருந்தாமல் நான் பலவீனமாகிவிடப் போகிறேனே யென்றும், இதனால் நான் இங்கிலாந்தில் உற்சாகத்துடன் வசிக்க முடியாமற் போய்விடுமே என்றும் மட்டும் அவர் கவலைப்பட்டாரே யன்றி வேறில்லை.

என் பயிற்சிக் காலமான ஒருமாதம் இவ்வாறு கழிந்தது. இந்நண்பரின் வீடு ரிச்மாண்டு என்னுமிடத்தில் இருந்தது. இங்கிருந்து லண்டனுக்கு வாரத்தில் ஓரிரண்டு முறைக்குமேல் போவது முடியாத காரியம், எனவே லண்டனிலேயே ஏதேனும் ஒரு குடும்பத்தில் நான் வசிக்க வேண்டுமென்று டாக்டர் மேதாவும் ஸ்ரீ தளபதிராம் சுக்லாவும் தீர்மானித்தார்கள். வெஸ்ட் கென்ஸிங்டனில் ஆங்கிலோ இந்தியர் ஒருவர் வீட்டை ஸ்ரீ சுக்லா கண்டு பிடித்து அங்கு என்னைக் கொண்டு சேர்த்தார். அவ் வீட்டின் எஜமாட்டி விதந்துவான பெண்மணி. என்னுடைய விரதத்தைப்பற்றி அவரிடம் தெரிவித்தேன், என்னைச்

சரியாக கவனித்துக்கொள்வதாக அம்மூதாட்டி வாக்களித்தார். எனவே அவருடைய வீட்டில் வசிக்க ஆரம்பித்தேன். இங்கேயும் நான் பெரிதும் பட்டினி கிடக்கவே வேண்டியிருந்தது. மிட்டாய்களும் தின்பண்டங்களும் அனுப்பும்படி வீட்டுக்கு எழுதியிருந்தேன். அவை இன்னும் வந்து சேரவில்லை. எனக்கு அளிக்கப்பட்ட உணவெல்லாம் சப்பென்று இருந்தன. பிரதிதினமும் அம் மூதாட்டி உணவு எனக்குப் பிடிக்கிறதா என்று கேட்டுவந்தார். ஆனால் பாவம், அவர் என்ன செய்வார்? எனக்கு இன்னமும் கூச்ச மதிகமாயிருந்தது. 'இன்னும் கொஞ்சம் வேண்டும்' என்று கேட்க என் மனந் துணிவதில்லை. அந்த அம்மையாருக்கு இரு புதல்விகள் இருந்தனர். அவர்கள் வலியுறுத்தி ரொட்டித் துண்டுகள் இரண்டொன்று அதிகமாகவே எனக்கு அளித்து வந்தனர். ஆனால், முழுரொட்டி ஒன்று தின்றால் தான் என் வயிறு நிறையும் என்பது அவர்களுக்கு எவ்வாறு தெரியும்?

ஆனால் இதற்குள் எனக்குக் கால் முளைத்துவிட்டது. இன்னும் ஒழுங்காகப் படிப்பு ஆரம்பிக்கவில்லை. ஸ்ரீ சுக்லாவின் தூண்டுதலினால் அப்போதுதான் பத்திரிகை படிக்கத் தொடங்கி யிருந்தேன். இந்தியாவில் நான் பத்திரிகை படித்ததே யில்லை. இங்கே கொஞ்ச நாள் விடாமல் படித்ததின் பயனாகப் பத்திரிகையில் சுவை ஏற்படலாயிற்று. டெய்லி நியூஸ், டெயிலி டெலிகிராப், பால் மால் கெஜட் இம்மூன்று பத்திரிகைகளையும் மேலெழுந்த வாரியாக வேனும் படித்துவிடுவேன். இதற்கு ஒருமணி நேரத்திற்கு மேல் செல்லாது. பாக்கி நேரத்தை கழிக்கும் பொருட்டு ஊர் சுற்ற ஆரம்பித்தேன். சைவ போஜனசாலை ஒன்றைத் தேடலானேன். இத்தகைய போஜனசாலைகள் நகரத்தில்

இருக்கின்றனவென்று வீட்டு எஜமாட்டி கூறியிருந்தார், தினம் பத்துப் பன்னிரண்டு மைல் சுற்றுவேன். எங்கேனும் மலிவான போஜன சாலை ஒன்றில் புகுந்து வயிறு நிறைய ரொட்டி தின்பேன். ஆயினும் திருப்தி யடைவது மட்டும் கிடையாது. இவ்வாறு சுற்றி அலைகையில் ஒருநாள் பாரிங்டன் தெருவில் இருந்த சைவ போஜனசாலை ஒன்றைக் கண்டு பிடித்தேன். ஒரு குழந்தை தன் மனதுக்கினிய பொருளைக் கண்டதும் மகிழ்ச்சி கொள்வதுபோல் நான் அது குறித்து அளவிலா மகிழ்ச்சி கொண்டேன். உள்ளே நுழைவதற்கு முன் கதவுக்கருகில் கண்ணாடிச் சாளரம் ஒன்றுக்குப் பின்னால் விற்பனைக்குப் புத்தகங்கள் வைக்கப்பட் டிருப்பதைப் பார்த்தேன். சாக பட்சணத்தின் மேன்மையைப் பற்றி ஸால்ட் என்பவர் எழுதிய 'Plea for Vegetarianism' என்ற புத்தகம் அதில் இருந்தது. ஒரு ஷில்லிங் கொடுத்து அதை வாங்கிக்கொண்டு நேரே போஜன அறைக்குள் நுழைந்தேன். நான் இங்கிலாந்தில் அடிவைத்த பின்னர் இன்றுதான் வயிறார உணவு கொண்டேன். கடைசியாக ஆண்டவன் எனக்குத் துணை புரிந்தான்.

ஸால்ட் என்பவர் எழுதிய மேற்சொன்ன புத்தகத்தை அடியிலிருந்து முடிவுவரை விடாமற் படித்தேன். அது பெரிதும் என் மனதைக் கவர்ந்தது. அப்புத்தகத்தைப் படித்த தினத்திலிருந்து எனது இஷ்டத்தினால் சைவ உணவு விரதங் கொண்டவனானேனெனக் கூறலாம். என் தாயாருக்கு நான் செய்து கொடுத்த பிரதிக்ஞையை நினைந்து நினைந்து என் அதிர்ஷ்டத்தை வியந்துகொண்டேன். இதுகாறும் எனது உண்மைப் பற்று காரணமாகவும். தாயார் முன்பு செய்த வாக்குறுதி பிறழக் கூடாதென்ற

உறுதி காரணமாகவும் புலால் உண்ணுதிருந்தேன். ஆனுல் என் உள்ளத்தில் இந்தியன் ஒவ்வொருவனும் புலால் உண்ண வேண்டுமென்ற எண்ணம் நிலைபெற்றிருந்தது. நான் சுயேச்சை பெற்றுப் பகிரங்கமாகப் புலால் உண்டு மற்றவரையும் அவ்வழியில் திருப்பக்கூடிய நாளை ஆவ லுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனுல் இப் போது என் இஷ்டத்தினுல் சைவ உணவில் பற்றுக் கொண்டேன். அன்றைய தினத்திலிருந்து சைவ உணவுக் கொள்கையைப் பரப்புவது என் வாழ்க்கைக் கடனுயிற்று.

பதினைந்தாம் அத்தியாயம்

ஆங்கிலேய கனவானுக முயற்சி

சைவ உணவில் எனக்கிருந்த உறுதி நாளுக்கு நாள் வலுவுற்று வந்தது. ஸால்ட்டின் புத்தகம் படித்த பின்னர் உணவு சம்பந்தமான ஆராய்ச்சி நூல்களைப் படிப் பதில் எனக்கு ஆவல் உண்டாயிற்று. சைவ உணவைப் பற்றிக் கூறும் நூல்கள் என்னென்ன கிடைத்தனவோ அவ்வளவையும் படித்துவந்தேன். இவற்றுள் ஒன்று ஹோவார்டு வில்லியம்ஸ் என்பார் எழுதிய 'போஜன தர்மம்' (The Ethics of Diet) என்னும் நூல். அது 'ஆதிகாலத்திலிருந்து நாளது வரையில் மனிதர்களின் உணவு சம்பந்தமாக எழுதப்பட்ட எல்லாப் புத்தகங்களின் சரித்திர சாரம்' பிதாகோரஸ், ஏசுநாதர் இவர்கள் முதலாக நாளதுவரை இருந்த எல்லாத் தத்துவஞானி களும், தீர்க்கதரிசிகளும் சாக பட்சணமே செய்து வந்தார்களென்று நிரூபிக்க அந்நூலில் முயற்சி செய்யப் பட்டிருந்தது. உணவு முறையைப்பற்றி டாக்டர் அன்னு

கிங்ஸ்போர்டு எழுதிய நூலும் (The Perfect Way in Diet), டாக்டர் அல்லின்ஸ் ஆரோக்கியத்தையும் சுகாதாரத்தையும் பற்றி எழுதியிருந்த புத்தகங்களும் மிகவும் உபயோகமாயிருந்தன. அல்லின்ஸ், உணவை ஒழுங்கு செய்வதின் மூலமாகவே நோய்களைக் குணமாக்கும் ஒரு முறையைத் தம் நூல்களில் ஸ்தாபித்திருந்தார். அவர் சைவ உணவே புசிப்பவர். தம்மிடம் சிகிச்சைக்கு வருவோரையும் அவர் சைவ உணவு உட்கொள்ளும்படி வலியுறுத்திவந்தார். இந்நூல்களை யெல்லாம் படித்ததின் பயனாக, உணவு விஷயமான பரிசோதனைகள் என் வாழ்க்கையில் ஒரு முக்கியமான இடம் பெற்றன. ஆரம்பத்தில் தேக சுகத்தைக் கருதியே பெரும்பாலும் இச்சோதனைகளை நடத்திவந்தேன். பிற்காலத்தில் சமயப் பற்றே அச்சோதனைகட்குப் பிரதான நோக்கமாயிற்று.

இதற்கிடையில் என் நண்பர் என்னைப்பற்றிக் கவலைப் படுவதை நிறுத்தவில்லை. என்னிடம் அவருக்கிருந்த அன்பு காரணமாக நான் புலாலுண்ணாவிடின் உடல் வளம் குன்றிப் போவதுடன் வெறும் 'களிமண்'ணா யிருந்து விடுவேனென்று அவர் எண்ணினர். ஏனெனில் புலாலுண்ணாதவரை ஆங்கில சமூகத்தில் கூச்சமின்றிப் பழக முடியாதென்பது அவர் கருத்து. சைவ உணவு சம்பந்தமான புத்தகங்களை நான் படிப்பதாக அறிந்ததும், இவை என் மூளையைக் கெடுத்து விடப் போகின்றனவே யென்று அவர் அஞ்சினர். நான் என் வேலையை மறந்து உணவுச் சோதனைகளில் காலங்கழித்துப் பித்தனாகிவிடப் போகிறேனே என எண்ணி என்னைச் சீர்திருத்தக் கடைசியாக ஒரு முயற்சி செய்தார். ஒருநாள் நாடகத்துக்கு வரும்படி என்னை அழைத்தார். நாடகத்துக்கு முன்பு ஹால்பர்ன் போஜனசாலையில் இருவரும் உணவு அருந்துவது என்று

ஏற்பாடு செய்திருந்தார். இந்த போஜன சாலைக் கட்டிடம் எனக்கு ஓர் அரண்மனைபோல் தோன்றிற்று. விக்டோரியா ஹோட்டலை விட்டுப் போன பின்னர் அவ்வளவு பெரிய போஜனசாலை ஒன்றுக்கு நான் போனதில்லை. விக்டோரியா ஹோட்டலில் தங்கியிருந்தபோது திக்குத் திசை புரியாதவனு யிருந்தபடியால் அவ்விடத்து அநுபவம் இங்கே எனக்கு உதவியாயில்லை. அடக்கங் காரணமாக நான் கேள்வி எதுவும் கேட்கமாட்டேன் என்று எண்ணி அவர் என்னை மேற்படி போஜனசாலைக்கு அழைத்துச் சென்றார். அங்கு உணவருந்திக் கொண்டிருந்த பலர் நடுவில் நாங்கள் இருவரும் ஒரு மேஜையில் சாப்பிட உட்கார்ந்தோம். முதலிலே குழம்பு பரிமாறப்பட்டது. என்ன குழம்பு என்று நான் தெரிந்துகோள்ள விரும்பினே னுயினும் நண்பரைக் கேட்கத் துணியவில்லை, பரிசாரகனைக் கேட்கலாமென்று அவனை அழைத்தேன். அதைக் கவனித்த நண்பர் 'என்ன?' என்று கடுமையாகக் கேட்டார். குழம்பு புலால் கலப்பற்றதா என்று கேட்க விரும்புவதாகத் தயக்கத்துடன் கூறினேன். "நாகரிக ஜனங்களின் சகவாசத்துக்கு நீர் தகுதியற்றவர். சரியாக நடந்து கொள்ளத் தெரியாவிடில் வெளியே சென்று வேறெந்த ஹோட்டலிலாவது சாப்பிட்டு விட்டு எனக்காக வாசலில் காத்திரும்" என்று அவர் ஆத்திரமாய் மொழிந்தார். நானே அளவிறந்த மகிழ்ச்சியுடன் வெளியே ஏகினேன். பக்கத்திலிருந்த சைவ உணவுச்சாலை மூடப்பட்டிருந்தது. எனவே அன்றிரவு பட்டினி கிடந்தேன். நாடகத்துக்கு நண்பருடன் சென்றேனுயினும் என்னால் ஏற்பட்ட அசந்தர்ப்ப நிகழ்ச்சியைப்பற்றி அவர் ஒரு வார்த்தையும் கேட்கவில்லை. நானும் ஒன்றும் சொல்ல வில்லை. நான் சொல்லக் கூடியதுதான் என்ன?

நண்பர்கள் என்ற முறையில் எங்களுக்குள் பூசல் விளைந்தது இதுவே கடைசி முறை. இதனால் எங்கள் நட்புரிமைக்கு எவ்விதக் கெடுதலும் நேரிடவில்லை என் நண்பரின் முயற்சி களுக்கெல்லாம் காரணமாயிருந்தது என்னிடம் அவர் கொண்டிருந்த அன்பே என்பதை உணர்ந்தேன். அபிப்பிராயத்திலும், செயலிலும் எங்களுக்குள் வேற்றுமை யிருந்ததாயினும் அதனாலேயே அவரிடம் நான் பன் மடங்கு அதிக மதிப்புக் கொண்டேன் என்று சொல்லலாம்.

ஆனால் என்னைப்பற்றி அவர் கொண்டிருந்த மனக் கவலையைத் தீர்த்துவிட வேண்டுமென்று முடிவு செய்தேன். இனி அசந்தர்ப்பமாய் நடந்து கொள்வதில்லை யென்றும், ஜன சமூகத்தில் நாகரிகமாய்ப் பழக முயல்வேனென்றும் அவருக்கு உறுதி கூற விரும்பினேன். சாக பட்சண விரதத்தினால் எனக்கேற்பட்டிருந்த குறை பாட்டுக்கு ஈடு செய்யும் பொருட்டு மற்ற நாகரிக நடை உடை பாவனைகளை நன்கு பயில வேண்டுமென எண்ணினேன். இதன் பொருட்டு முடியாத காரிய மொன்றை மேற்கொண்டேன். அதாவது நான் ஓர் ஆங்கில கனவானாகிவிட முயற்சி செய்யலானேன்.

பம்பாயிலிருந்து நான் கொண்டுவந்த உடுப்புகள் ஆங்கில நாகரிகத்துக் கேற்றவை யல்லவெனக் கருதி, புதிய உடுப்புகள் வாங்கினேன். பத்தொன்பது ஷில்லிங் கொடுத்துச் சிறந்த தொப்பியொன்று வாங்கிக் கொண்டேன். அக்காலத்தில் அது மிகவும் அதிக விலையாகும். இதுவும் போதாதென்று லண்டனில் நாகரிக வாழ்க்கைக்கே மத்திய ஸ்தலமான பாண்ட் தெருவில், மாலை வேளையில் தரிக்கும் உடுப்பு ஒன்றுக்குப் பத்து பவுன் தொலைத்தேன்.

தயாளுவும் உத்தமருமான என் சகோதரருக்கு எழுதித் தங்கத்தினலான இரட்டைக் கடிகாரச் சங்கிலி தருவித்தேன். கடையில் தயாராய்ச் செய்து விற்கும் கழுத்துச் சுருக்கு அணிவது நாகரிகமன்றுதலால், நானே கழுத்துச் சுருக்குத் தயாரிக்கக் கற்றுக்கொண்டேன். இந்தியாவில் நாவிதனிடம் க்ஷவரம் செய்து கொள்ளும் தினங்களிலன்றிக் கண்ணாடி பார்த்தறியேன். இங்கும் பிரதிதினமும் நிலைக் கண்ணாடியின் முன்பு நின்று, தலை மயிரைச் சீவி, சரியான 'தோரணை' ப்படி பிளந்துவிடுவதிலும், கழுத்துச் சுருக்கை நேர் செய்வதிலும் பத்து நிமிஷம் செலவழித்தேன். என் மயிர் மிருதுவான தன்று. எனவே அதைச் சீவி ஒழுங்கு படுத்துவதற்கு தினம் ஒரு பெரும் போராட்டம் நடத்த வேண்டி யிருந்தது. ஒவ்வொரு முறை தொப்பி வைத்துக் கொள்ளும் போதும் தொப்பியை எடுக்கும்போதும் கை தானகவே தலை மயிரை நாடிற்று. இவ்வாறே நாகரிக மாந்தர் நடுவில் அமர்ந்திருக்கும் போதெல்லாம் கரம் தானகவே சென்று தலை மயிரை அடிக்கடி ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கும்.

இவை எல்லாம் போதா வென்று, ஆங்கில கனவானதற் குரியவை என்று கருதப்படும் மற்றும் சில பயிற்சிகளிலும் கவனம் செலுத்தினேன். நடனம் பழகுவதும், பிரஞ்சு பாஷை கற்பதும், பிரசங்க வன்மை பெறுவதும் அவசிய மென்று சொன்னர்கள். பிரஞ்சு பாஷை இங்கிலாந்துக்கு அண்டை நாட்டு மொழி என்பது மட்டுமன்று; ஐரோப்பா முழுவதிலும் வெவ்வேறு நாட்டார் ஒருவரோடொருவர் பேசுவதற்குரிய பொது மொழியாகவு மிருந்தது. நானே ஐரோப்பாவில் பிரயாணஞ் செய்ய விருப்பங் கொண்டிருந்தேன். நடனப் பயிற்சி வகுப்பு ஒன்றில் சேரத் தீர்மானித்து மூன்று பவுன் சம்பளமும்

கொடுத்தேன். மூன்று வாரங்களில் ஆறு பாடமோ என்னவோ கற்றுக் கொண்டேன். ஆனால் சங்கீதத்துக் கிசைய நடனம் பயில்வது என்றால் ஆகாத காரியமா யிருந்தது. பியானோ வாத்தியத்தின் இசையே எனக்குப் பிடிபடவில்லை. எனவே தாளத்துக் கொத்தபடி காலை எடுத்து வைக்க முடியவில்லை. பின்னர், என் செய்வது? துறவி ஒருவர் எலி உபத்திரவத்திற்காகப் பூனை வளர்க்க ஆரம்பித்தா ரென்றும், பின்னர் பூனைக்குப் பால் கொடுக்க ஒரு பசு வாங்கினா ரென்றும், பசுவை மேய்க்க ஒரு மனிதனைப் பிடித்தாரென்றும், இப்படியே பெரிய குடும்பி யாகிவிட்டா ரென்றும் ஒரு கதை யுண்டு. இத்துறவியின் குடும்பத்தைப்போல் எனது ஆவல்களும் வளரலாயின. மேலூட்டு இசைப்போக்கைத் தெரிந்துகொள்வதற்காக 'பிடில்' வாசிக்கக் கற்றுக்கொள்ள விரும்பினேன். எனவே, இன்னொரு மூன்று பவுன் கொடுத்து 'பிடில்' ஒன்று வாங்கிக்கொண்டு உபாத்தியாயினிக்கு வேறு பணமும் செலவு செய்தேன். பிரசங்க வன்மை பெறும் பொருட்டு மற்றோர் ஆசிரியரைத் தேடிப் பிடித்து அவருக்கு ஒரு கினீ (21 ஷில்லிங்) சம்பளம் கொடுத்தேன். பெல் என்பவர் தொகுத்த சொற்பொழிவு நூலை (Standard Elocutionist) அவர் பாட புத்தகமாகச் சிபார்சு செய்தார். அந்நூலை வாங்கி, முதலில் பிட் * என்பவரின் பிரசங்க மொன்றைப் படிக்கத் தொடங்கினேன். ஆனால் மிஸ்டர் பெல் † என் காதில் எச்சரிக்கை மணியடித்துத் தட்டி எழுப்பினார். நான் விழித்துக் கொண்டேன்.

* பிட் (Pitt) என்பவர் பிரசங்க வன்மைக்குப் பெயர் போன பிரிட்டிஷ் முதன் மந்திரிகளில் ஒருவர். † ஆங்கிலத்தில் பெல் Bell) என்னும் பதம் மணி என்ற பொருளுடையது.

பின்வருமாறு சிந்திக்கலானேன்:—இங்கிலாந்தில் நான் ஆயுள் முழுதும் கழிக்கப்போவதில்லை. பின்னர் எதற்காக ஆங்கிலத்தில் பிரசங்க வன்மைப் பயிற்சி பெறவேண்டும்? நடனப் பயிற்சியினால் நான் எவ்வாறு கனவானாக முடியும்? 'பிடில்' இந்தியாவிலேயே கற்றுக்கொள்ளலாம். நான் இங்கிலாந்துக்கு வந்த காரியமென்ன? மாணாக்கனை நான் என் படிப்பை யல்லவா கவனிக்க வேண்டும்? பாரிஸ்டர் ஆவதற்குத் தகுதி செய்துகொள்ள வேண்டாமா? என்னுடைய ஒழுக்கத்தினால் நான் கனவானாயின் நன்று. இல்லாவிடில் அந்த ஆசையைத் துறந்துவிட வேண்டுவதே.

இத்தகைய எண்ணங்கள் என்னைப் பற்றிக் கொண்டன. பிரசங்கப் பயிற்சிக்காக நான் அமர்த்திய ஆசிரியருக்கு இவ் விஷயங்களைக் குறிப்பிட்டு இனிமேல் அவரிடம் வாராததற்காக மன்னிக்கும்படி கடிதம் எழுதினேன். அவரிடம் இரண்டு மூன்று பாடங்களே கற்றுக்கொண்டேன். நடனப் பயிற்சி ஆசிரியருக்கும் இவ்வாறே கடிதம் எழுதினேன். 'பிடில்' உபாத்தியாயினியிடம் நேரில் சென்று பிடிலை வந்த விலைக்கு விற்றுத் தரும்படி வேண்டினேன். அப்பெண்மணி என்னிடம் நட்புரிமையுடன் பேசினார். நான் இதுகாறும் பொய்யான வாழ்க்கை இலட்சியத்தை மேற்கொண்டிருந்ததாகக் கண்டுபிடித்த விவரத்தை அவரிடம் கூறினேன். அதை முழுதும் மாற்றிவிட வேண்டுமென நான் உறுதி கொண்டிருந்ததை அவர் பாராட்டித் தைரிய மூட்டினார்.

ஆங்கில கனவானாக வேண்டுமென்னும் இம்மோகம் சுமார் மூன்று மாத கால மிருந்திருக்கலாம். நாகரிகமான உடையிலிருந்த பைத்தியம் மட்டும், பின்னர் வருஷக்

கணக்காக நீடித்திருந்தது. ஆனால் அன்றைய தினத்திலிருந்து நான் மாணுக்கனாகி விட்டேன்.

பதினாறும் அத்தியாயம்

மாறுதல்கள்

நடனம் முதலிய பயிற்சிகளில் நான் ஈடுபட்டிருந்த போது இந்திரிய சுகத்தில் ஆழ்ந்துவிட்டதாக யாரும் எண்ணவேண்டாம். அப்போது நான் முழுதும் மதி மயங்கிப் போய்விடவில்லையென்பதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். அவ்வப்போது ஆத்ம சோதனை செய்தே வந்தேன். நான் செலவழித்த ஒவ்வொரு பார்த்திங்கு (காலணு) க்கும் கணக்கு வைத்திருந்தேன். கவலையுடன் யோசனை செய்தே செலவழித்தேன். வண்டிச் சத்தம், தபாற்கூலி, பத்திரிகை வாங்கும் செலவு முதலிய மிகச் சிறு செலவினங்களையும் எழுதி வந்தேன். தினந்தோறும் படுக்கைக்குச் செல்வதற்கு முன் செலவு கூட்டிப் போட்டுப் பாக்கி கட்டுவேன். அப்போதிருந்து அவ்வழக்கம் என்னை விட்டகலாமலே இருந்து வந்திருக்கிறது. இதன் பயனாக, நான் லட்சக் கணக்கான பொதுப் பணத்தை நிர்வகித்து வந்திருக்கிறேனாயினும், ஒவ்வொரு நிதி விஷயத்திலும் சிக்கனமாய்ச் செலவு செய்து வந்திருக்கிறேன். நான் நடத்திய இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் கையிருப்புப் பணம் எப்போதும் இருந்து வந்ததேயன்றிக் கடன் ஏற்பட்டதே கிடையாது. இவ்விஷயத்தில் ஒவ்வோர் இளைஞனும் என் வாழ்க்கையை உதாரணமாகக் கொண்டு, தன்னிடம் வந்து செலவழிகிற ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு வைத்து வந்தால் முடிவில் அவன் லாபமடைவது நிச்சயம்.

என் வாழ்வு முறையைக் கருத்துடன் கவனித்து வந்தேனாதலின், இன்னும் சிக்கனமாயிருத்தல் அவசியம் என்று கண்டேன். எனவே, எனது செலவுகளைப் பாதியளவாகக் குறைத்துவிட வேண்டுமென்று முடிவு செய்தேன். கணக்கில் வண்டிச்சத்தச் செலவு அதிகம் காணப்பட்டது. ஒரு குடும்ப மொன்றில் நான் உண வருந்தி வந்தபடியால் வாரந்தோறும் குறிப்பிட்ட தொகை கொடுக்கவேண்டி யிருந்தது. மற்றும், குடும்பத்தைச் சேர்ந்தவர்களை மரியாதைக்காக எப்போதேனும் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்வதிலும், அவர்களுடன் விருந்துகள், வேடிக்கைகள் முதலியவற்றுக்குச் செல்வதிலும் செலவு அதிகமாயிற்று. இவைகள் எல்லாவற்றிற்கும் வண்டிச் செலவு ஏராளம். முக்கியமாக பெண்மணி ஒருவரை உடன் அழைத்துச் சென்ருல் எல்லாச் செலவுகளையும் ஆண்மகனே பொறுத்துக்கொள்ள வேண்டுவது சம்பிரதாயமா யிருந்தது. வெளியே சாப்பிடுவதற்கு அதிக செலவானதோடு அவ்வேளைகளுக்காக, வீட்டிற்கு வாரந்தோறும் கொடுத்த தொகையில் குறைக்கப்படுவதுமில்லை. இந்தச் செலவுகளை எல்லாம் நிறுத்திவிடலாமென்று எனக்குத் தோன்றிற்று. சம்பிரதாயம் என்ற பொய் உணர்ச்சியினுல் வரும் வீண் செலவுகளையும் ஒதுக்கிவிட எண்ணினேன்.

எனவே, இனிமேல் குடும்பத்தில் வசிப்பதற்குப் பதிலாகத் தனி அறைகள் வாடகைக்கு எடுத்துக்கொண்டு வசிக்கவும், அவ்வப்போது செய்ய வேண்டியுள்ள வேலைக்குத் தகுந்தபடி வெவ்வேறு இடத்திற்கு ஜாகையை மாற்றிக்கொள்ளவும் தீர்மானித்தேன். இதனுல் அநுபவமும் பெறலாமென்று எண்ணினேன். எனக்கு வேலை

இருந்த இடத்துக்கு அரைமணி நேரத்தில் நடந்துபோகக் கூடிய தூரத்திற்குள் அறைகள் அமர்த்திக்கொண்டேன். இதனால் வண்டிச் சத்தம் மீதியாயிற்று. இதற்கு முன், காரியமாகப் போக வேண்டிய இடங்களுக்கு வண்டிச் சத்தம் கொடுத்துப் போவேன். பின்னர் உலாவுவதற் கென்று தனியாகச் செல்வேன். புதிய ஏற்பாட்டினால் பணம் மீதியானதுடன் தினம் எட்டு மைல் முதல் பத்து மைல் வரை நடப்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவ்வாறு நீண்ட தூரம் நடக்கும் வழக்கத்தை நான் மேற்கொண் டிருந்ததின் பயனாகவே இங்கிலாந்தில் இருக்கும் காலம் முழுவதும் நோயற்ற வாழ்க்கை யுடையவனா யிருந்தேன். என் உடலும் உரம் பெற்றது.

இரண்டு அறைகள் உள்ள ஒரு ஜாகையை வாட கைக்குப் பிடித்தேன். ஒன்றை உட்கார்ந்து வேலை செய்வ தற்கும், மற்றொன்றைப் படுக்கைக்கும் உபயோகித்தேன். என் லண்டன் வாழ்க்கையில் இது இரண்டாவது நிலை. மூன்றாவது இனி வர விருந்தது.

இந்த மாறுதல்களினால் பாதிச் செலவு மீதியாயிற்று. ஆனால் காலத்தை எவ்வாறு பயன் படுத்துவது? பாரிஸ்டர் பரீட்சைக்கு அதிகம் படிக்க வேண்டுவதில்லை யென அறிந் திருந்தேன். ஆதலின் நேரத்திற்குப் பஞ்சமே கிடையாது. ஆங்கில மொழிப் பயிற்சி எனக்குப் போதாமலிருந்தது ஓயாத்தொந்தரவாய் இருந்து வந்தது. "முதலில் பி. ஏ. பட்டம் பெற்றுப் பின்னர் என்னிடம் வா" என்று மிஸ்டர் லெலி (பிற்காலத்தில் ஸர் பிரடெரிக் லெலி) கூறிய மொழிகள் இன்னும் என் செவியில் தொனித்துக் கொண் டிருந்தன. பாரிஸ்டர் பரீட்சையில் தேறுவது மட்டும் போதாதென்றும் இலக்கியக் கல்விக் குரிய பட்டமும்

ஏதாவது பெறவேண்டுமென்றும் எண்ணினேன். ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ் சர்வ கலாசாலைகளைப்பற்றி விசாரித்தேன். நண்பர்களிடமும் கலந்தேன். அவ்விடங்களுக்குச் சென்றால் அதிக செலவாகுமென்றும், நீண்ட காலம் இங்கிலாந்தில் வசிக்க வேண்டிவரும் என்றும் தெரியவந்தன. கடினமான பரீட்சையில் தேறித் திருப்தி பெற விரும்பினால் லண்டன் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப் போகும்படி ஒரு நண்பர் யோசனை கூறினார். அதற்கு அதிக உழைப்பு வேண்டுமென்றும், பொது அறிவு பெரிதும் வளர்ச்சி யுறுமென்றும், அதற்காகச் செலவு கிடையாதென்றும் தெரியவந்தன. இந்த யோசனை எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் பரீட்சைக்குரிய விஷயங்களை அறிந்ததும் பயந்துவிட்டேன். லத்தீன் பாஷையும், அதைத் தவிர தற்கால ஐரோப்பிய பாஷை யொன்றும் கட்டாயமாகப் படிக்கவேண்டி யிருந்தது. லத்தீன் மொழி படித்துத் தேறுதல் எப்படி என மலைத்தேன். ஆனால் அந்நண்பர் அப்பாஷைக்குப் பெரிதும் பரிந்து பேசினார். "நியாய வாதிகளுக்கு லத்தீன் மிகவும் பயன்படும். லத்தீன் தெரிந்தால் சட்ட புத்தகங்களை எளிதில் படித்தறியலாம். ரோமன் சட்டத்தில் ஒரு பரீட்சை முழுதும் லத்தீனிலேயே எழுதியாக வேண்டும். அம்மொழி கற்பதால் ஆங்கில ஞானமும் அபிவிருத்தி யடையும்." என்று அவர் கூறினார். நண்பர் கூறியது உசிதமாகப் பட்டது. எனவே, எவ்வளவு கஷ்டமா யிருந்தாலும் லத்தீன் கற்றுக்கொள்ளத் தீர்மானித்தேன். முன்னாலேயே பிரஞ்சு கற்றுக்கொள்ள ஆரம்பித்திருந்தேனாதலின் தற்கால ஐரோப்பிய பாஷையாக அதை எடுத்துக் கொண்டேன். மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குத் தயார் செய்யும் ஒரு வகுப்பைச் சேர்ந்தேன். ஆறு மாதத்திற்

கொருமுறை பரீட்சை. எனக்கு ஐந்து மாத காலமே பாக்கி யிருந்தது. ஆங்கில கனவானுக விரும்பிய நான் இப்போது கருத்துள்ள மாணுக்கனுனேன். தினந்தோறும் படிப்புக்கும் மற்ற வேலைகளுக்கும் நிமிஷந் தவருமல் காலவரையறை ஏற்படுத்திக் கொண்டேன். ஆனுல் குறிப்பிட்ட காலத்திற்குள் மற்ற பாடங்களுடன் லத்தீன் பிரஞ்சு இவ்விரண்டு மொழிகளையும் கற்றுக் கொண்டுவிடும் அளவுக்கு என் அறிவும் ஞாபக சக்தியும் துணை செய்யவில்லை. முடிவில், லத்தீன் பரீட்சையில் சுழி போட்டேன். இதனுல் வருத்த முற்றேனுயினும் நம்பிக்கை யிழந்துவிடவில்லை. இதற்குள் அம்மொழியில் எனக்குச் சுவையும் ஏற்பட்டு விட்டது. பிரஞ்சுப் பரீட்சைக்கு இன்னொரு முறை போவதால் அம் மொழியில் என் அறிவு அபிவிருத்தியடையுமென எண்ணினேன். விஞ்ஞானப் பகுதியில் மட்டும் புதிய விஷயம் ஒன்றை எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தேன். இந்தியாவில் ரசாயன சாஸ்திரம் கட்டாய பாடமா யிருந்தபடியால் இங்கும் முதன் முறை அதை எடுத்துக் கொண்டிருந்தேன். ஆனுல் சோதனைகள் நடத்துவதற்கு இடமில்லாதபடியால் அது அவ்வளவு சுவையாக இல்லை. எனவே இம்முறை சடசாஸ்திரத்தில் 'வெப்பம், வெளிச்சம்' என்னும் விஷயங்களை எடுத்துக்கொண்டேன். அவை எளிதானவை என்று கேள்விப்பட்டிருந்தேன். அநுபவத்தில் அது உண்மை என்று தெரிந்தது.

இவ்வாறு இரண்டாம் முறை பரீட்சைக்குத் தயார் செய்கையில் வாழ்க்கை முறையை இன்னும் எளியதாக்க முயன்றேன். என் வாழ்க்கை முறை இன்னமும் என் குடும்ப நிலைமைக்குத் தகுந்ததாகவில்லையென்று நினைத்தேன். அநேக கஷ்டங்களுக் கிடையே நான் கேட்கும்

போதெல்லாம் தவருது பணம் அனுப்பி வந்த என் சகோதரரை நினைத்தபோது என் மனம் பெரிதும் வருந்தியது. மாதம் எட்டு பவுன் முதல் பதினைந்து பவுன் வரை செலவு செய்த மாணுக்கர்களில் பெரும்பாலோர் உபகாரச் சம்பளம் பெறுவோரா யிருத்தலை யறிந்தேன். மிக எளிய வாழ்வுக்கு உதாரணமானவர்களும் இல்லாமற் போக வில்லை. என்னைவிட எளிய வாழ்க்கை நடத்திய ஏழை மாணுக்கர் பலரை நான் பார்க்க நேர்ந்தது. ஒரு மாணுக்கர் நகரின் ஆபாசச் சந்து ஒன்றில் வாரம் இரண்டு ஷில்லிங் வாடகை கொடுத்துக் கொண்டு ஒரே அறையில் இருந்தார். இரண்டு பென்ஸ் பெறுமான கோக்கோ, ரொட்டி இவற்றுடன் அவருக்கு ஒரு வேளை சாப்பாடு முடிந்துவிடும். அவரைப்போல் ஆவதைப்பற்றி நான் நினைப்பதற்கே யில்லையாயினும், இரண்டு அறைகளுக்குப் பதிலாக ஓர் அறை போதுமென்றும், சில வேளை நானே அறையில் உணவு தயாரித்துக் கொள்ளலாமென்றும் தீர்மானித்தேன். இதனுல் மாதத்திற்கு நான்கு ஐந்து பவுன் மீதியாவதா யிருந்தது. எளிய வாழ்வைப்பற்றிய புத்தகங்கள் சிலவும் எனக்குக் கிடைத்தன. இரட்டை அறைகளைக் காலி செய்துவிட்டுத் தனி அறை ஒன்றைப் பிடித்தேன். எண்ணெய் அடுப்பு ஒன்று வாங்கிக் காலை வேளைக்கு நானே சமையல் செய்துகொள்ளலானேன். இதற்கு இருபது நிமிஷங்களுக்கு மேலாகவில்லை. ஏனெனில், என் காலை வேளை உணவு ஓட்தானியக் கூழும் கோக்கோவுந்தான். சிற்றுண்டி வெளியில் சாப்பிட்டேன். மாலையில் மீண்டும் அறையிலேயே ரொட்டியும், கோக்கோவும் தயாரித்துக்கொண்டேன். இம்மாதிரி நாள் ஒன்றுக்கு ஒரு ஷில்லிங் மூன்று பென்ஸ் செலவில் வாழ்க்கை நடத்தலானேன். இக்காலம் படிப்பில் நான்

பெருமுயற்சி எடுத்துக்கொண்ட காலமுமாகும். எளிய வாழ்க்கையை மேற்கொண்ட காரணத்தினால் படிக்க நிரம்பச் சாவகாச மிருந்தது. முடிவில் பரீட்சையில் தேறினேன்.

எளிய வாழ்வு முறையைக் கைக்கொண்டதால், என் வாழ்க்கை இன்பமற்றதாயிற்று என்று வாசகர்கள் எண்ண வேண்டாம். அதற்கு மாறாக இம் மாறுதல் என் அகவாழ்வையும் புறவாழ்வையும் ஒற்றுமைப்படுத்திற்று. என் குடும்பத்தின் நிலைமைக்கும் அது ஒத்ததாயிருந்தது. பழைய வாழ்க்கையைவிட அது உண்மையோ டியைந்ததா யிருந்த தென்பது நிச்சயம். என் ஆன்மா ஆனந்தக்கடலில் மூழ்கித் திளைத்தது.

பதினேழாம் அத்தியாயம்

உணவுப் பரிசோதனைகள்

நான் ஆத்ம பரிசோதனை செய்யச் செய்ய, என் அக வாழ்விலும் புறவாழ்விலும் இன்னும் மாறுதல்கள் அவசியமென்று உணரலானேன். வாழ்வு முறையிலும், செலவினங்களிலும் மாறுதல் செய்யத் தொடங்கிய உடனே—அதற்கு முன்னரே என்றும் கூறலாம்—என் உணவில் மாறுதல்கள் செய்யத் தொடங்கிவிட்டேன். சைவ உணவை ஆதரித்து எழுதிய நூலாசிரியர்கள், மிகவும் நுட்பமாக அவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்திருந்ததைக் கண்டேன். சமயம், விஞ்ஞானம், சௌகரியம். வைத்தியம் ஆகிய இந்நான்கு வழியிலும் காரணங்கூறி ஊனுணவு கூடாதென்று அந்நூலாசிரியர் வலியுறுத்தி யிருந்தனர். புலாலுணவு அறவொழுக்கத்துக்கு மாறு

பட்ட தென்பதற்கு அவர்கள் பின்வருமாறு காரணங் கூறினர்:—'மனிதன் மிருகங்களைவிட மேலானவனு யிருப்பது அவன் மிருகங்களைக் கொன்று தின்று வயிற்றை நிரப்பிக் கொள்வதற்காகவன்று. மேல் வர்க்கத்தைச் சேர்ந்த ஜீவர்கள் கீழ வர்க்கத்தைச் சேர்ந்தவைகளை ஆதரித்துக் காப்பாற்ற வேண்டும். மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்வதுபோல் மனிதர்களும் மிருகங்களும் பரஸ்பரம் உதவி செய்து கொள்ள வேண்டும்.' மற்றும், மனிதன் சுகாநுபவத்திற்காக உணவு கொள்ளுதல் முறையன்றென்றும், உயிர் வாழ்வதற்காகவே அவன் உண வருந்தல் வேண்டுமென்றும் அவர்கள் ஸ்தாபித்திருந்தனர். இக் காரணத்தினுல், அவர்களில் சிலர், புலால் மட்டுமேயன்றி முட்டைகளும், பாலுங் கூட உதவா என்று கூறித் தாங்களும் அவற்றை அருந்துவதை நிறுத்தி யிருந்தனர்.

விஞ்ஞானத்துறையில் ஆராயும்போது, மனிதனின் உடல் அமைப்பு அவன் சமைத்து உண்பதற்காகப் படைக்கப்பட்டவன் அல்லன் என்றும் பச்சையாகக் கடித்துத் தின்னும் இயல்புடன் படைக்கப்பட்டவன் என்றும் காட்டுவதாகச் சிலர் முடிவு கட்டியிருந்தனர். மனிதன் குழந்தைப் பருவத்தில் தாய்ப்பால் மட்டும் அருந்தலாமேயன்றி, பல்முளைக்கத் தொடங்கியதும் கெட்டியான உணவுப் பொருள்களைக் கடித்துத் தின்ன ஆரம்பித்துவிட வேண்டுமென்று அவர்கள் கூறினுர்கள். வைத்திய சாஸ்திரத்தின்படி ஊறுகாய், மசாலை வகைகளைச் சேர்ந்த எல்லாவற்றையும் விலக்கி விடவேண்டு மென்று அவர்கள் சொன்னுர்கள். சௌகரியத்தையும், பொருட் செலவையும் உத்தேசிக்கும் போது, சைவ உணவே மிகச் சிக்கனமானது என்று அவர்கள் நிரூபித்திருந்தனர். இந்த எல்லாக் காரணங்

களையும் நான் மனதிற் கொண்டேன். சைவ உணவுச் சாலைகளில் மேற்சொன்ன ஒவ்வொரு காரணத்தையும் முன்னிட்டு அவ்விரதங் கொண்ட மனிதர்களைச் சந்தித்தேன். இங்கிலாந்தில் சைவ உணவுச் சங்கம் ஒன்றும் இருந்தது. இச்சங்கத்தார் ஒரு வாரப் பத்திரிகை நடத்தி வந்தனர். நான் அப்பத்திரிகையின் சந்தாதாரனாகச் சேர்ந்தேன். சங்கத்திலும் அங்கத்தினனானேன். விரைவில் நிர்வாக சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இங்கே சைவ உணவு இயக்கத்தின் பிரதான புருஷர் பலருடன் எனக்குப் பழக்கம் உண்டாயிற்று. சொந்தத்தில் உணவுப் பரிசோதனைகள் நடத்தவும் ஆரம்பித்தேன்.

ஊரிலிருந்து தருவித்த மிட்டாய்களையும் ஊறுகாய் வகைகளையும் உட்கொள்வதை நிறுத்தினேன். மனம் இப்போது வேறுவழியில் சென்றிருந்தபடியால், மசாலை கலவாமல் வேக மட்டும் வைத்த காய் கறி வகைகள் இப்போது சுவையாயிருந்தன. இத்தகைய சோதனைகள் பலவற்றின் பயனாக, சுவை என்பது நாவில் இல்லையென்றும் மனதிலேயே இருக்கிறதென்று அறிந்து கொண்டேன்.

சிக்கனத்தின் அவசியம் என் மனதைவிட்டு அகலவேயில்லை. அக்காலத்திலும், தேயிலை, காப்பி பானங்கள் தீங்கு விளைப்பனவென்றும், கோக்கோ பானம் நல்லது என்றும் கருதியவர் பலர் இருந்தனர். உடலுக்கு வளம் தரும் பொருள்களை மட்டுமே ஒருவன் உட்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தேனாதலால் வழக்கமாகத் தேயிலை அல்லது காப்பிபானம் அருந்துவதை விட்டுவிட்டுக் கோக்கோ பானத்தை மேற்கொண்டேன்.

நான் உணவு கொண்ட போஜனசாலைகளில் இரண்டு பிரிவுகள் இருந்தன. ஒரு பிரிவில் பலவகை உணவுப் பண்டங்கள் உண்டு. அவரவர்கள் இஷ்டமானதை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் பண்டங்களின் விலையைக் கொடுத்துவிட வேண்டும். இப்பிரிவில் உணவு கொள்வோருக்கு ஒரு ஷில்லிங் முதல் இரண்டு ஷில்லிங்வரை ஆகும். பெரும்பாலும் பணக்காரர்களே இப்பிரிவில் சாப்பிடுவார்கள். மற்ருெரு பிரிவில் ஒரு சாப்பாட்டுக்கு ஆறு பென்ஸ்-தான். மூன்று தினுசு உணவும், கொஞ்சம் ரொட்டியும் மட்டுமே கொடுப்பார்கள். நான் அதி சிக்கன வாழ்க்கையை மேற்கொண்டிருந்தபோது இந்தப் பிரிவிலேயே சாப்பிட்டு வந்தேன்.

பிரதான சோதனையுடன், பல சிறு சோதனைகளும் நடந்து வந்தன. உதாரணமாக ஒருமுறை மாவுப் பண்டங்கள் எல்லாவற்றையும் விலக்கியிருந்தேன். இன்ெனாரு சமயம் ரொட்டி, பழம் இரண்டும் மட்டுமே உண்டு வந்தேன். மற்ருெரு முறை பால், பாற்கட்டி, முட்டைகள் இவைகளை மட்டும் ஆகாரமாகக் கொண்டிருந்தேன். கடைசியிற் சொன்ன சோதனையைப்பற்றிச் சிறிது கவனிக்க வேண்டும். அது இரண்டு வாரங்கூட நடைபெறவில்லை. மாவுப் பொருள்களை விலக்கச் சொன்ன ஒருவர் முட்டைகளைப் பெரிதும் சிலாகித்து எழுதியிருந்தார். முட்டைகளைப் புலாலுடன் சேர்க்கக் கூடாதென்பது அவருடைய மதம். முட்டை தின்பதில் உயிருள்ள பிராணி எதற்கும் தீங்கு செய்யப்படவில்லை ெயன வெளிப்படையாகத் தோன்றியது. இந்த வாதத்தில் மயங்கி நான் முட்டை தின்னத் தொடங்கினேன். ஆனல் இம்மயக்கம் அதிக நாள் நீடித்திருக்கவில்லை. நான் செய்த பிரதிக்

ஞைக்கு இப்போது புதிய வியாக்யானம் செய்தல் தவறு என உணர்ந்தேன். நான் பிரதிக்ஞை செய்தது என் அன்னையிடம். எனவே, அவருடைய வியாக்யானத்தையே நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் முட்டையையும் புலாலாகவே கருதினார் என்பதை நான் அறிவேன். இவ்வாறு பிரதிக்ஞையின் உண்மைக் கருத்தை அறிந்ததும் முட்டைகளையும், அது சம்பந்தமான பரிசோதனைகளையும் அறவே விட்டுவிட்டேன்.

இவ்வாதம் சம்பந்தமாகக் கவனிக்கவேண்டிய நுட்பமான விஷயம் ஒன்றுண்டு. இங்கிலாந்தில் புலால் என்பதற்கு மூவகை வியாக்கியானங்கள் கூறப்பட்டன. ஒரு சாரார் புலால் என்பது பறவைகள், மிருகங்கள் இவற்றின் இறைச்சி மட்டுமே என்று கூறினர். இவர்கள் அவ்விருவகை இறைச்சியையும் விலக்கி மீனும், முட்டையும் உட்கொண்டார்கள். மற்றொரு சாரார் எல்லா உயிர் பிராணிகளின் இறைச்சியும் புலாலே என்றனர். எனவே இவர்கள் மீன்களையும் விலக்கினார்கள். ஆனால் முட்டைகளை மட்டும் அநுமதித்தார்கள். மூன்றாவது சாரார் உயிர்ப் பிராணிகள் எல்லாவற்றின் தசையும், அவ்வாறே அவைகளால் தரப்படும் பொருள்களும் உதவா என்றனர். இவர்களுடைய கொள்கையின்படி முட்டை, பால் இவைகளும் புலாலுணவே யாகும். என்னைப் பொறுத்தவரை, புலால் என் அன்னையார் கொண்ட பொருளே என்னைக் கட்டுப்படுத்துமென்று நம்பினேன். எனவே, என் பிரதிக்ஞையை நிறைவேற்றும் பொருட்டு முட்டைகளை விலக்கியே யாகவேண்டு மென எண்ணி அவ்வாறே செய்தேன். இதனால் பெரிதும் கஷ்டம் ஏற்பட்டது. ஏனெனில் சைவ உணவுச் சாலைகளில்கூடப் பல உணவுப் பொருள்களில்

முட்டை சேர்த்திருந்தார்கள். எனவே, முன்னமே தெரிந்திருந்தாலன்றி, ஒவ்வொரு வகை உணவும் முட்டை சேர்ந்ததா, சேராததா என்று விசாரித்தறியவேண்டிய சங்கடமான நிலைமை ஏற்பட்டது. ஏனெனில் மிட்டாய்கள் பணியாரங்கள் பலவற்றில் முட்டை சேர்ந்தே யிருந்தது. என் கடமையை உணர்ந்ததால் இந்தக் கஷ்டம் நேரிட்டதாயினும், அதனால் என் உணவு மிகவும் எளியதாயிற்று. இது மீண்டும் தொல்லை யளித்தது. எவ்வாறெனில், என் நாவுக்குச் சுவை யளிக்கத் தொடங்கிய பல உணவு வகைகளை இதனால் விட்டுவிட வேண்டி வந்தது. ஆனால் இந்தக் கஷ்டங்களை நான் அதிக நாள் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் பிரதிக்ஞையை அணுவளவும் பிறழாது நிறைவேற்றி வருகிறேனென்னும் எண்ணம் மனதிற்குப் பெருந் திருப்தியை யளித்தது. நாவின் சுவையைவிட மனத்தின் இச்சுவை அதிக இன்பமும் சுகமும் தருவதாயிருந்ததோடு நீடித்ததாயு மிருந்தது.

ஆனால் இது பெரிதன்று. மற்றொரு பிரதிக்ஞையைப் பொறுத்த பெருஞ் சோதனை இனிமேல்தான் வரவிருந்தது. எனினும் ஆண்டவன் அருள் பெற்றோர்க்கு யாரே தீங்கிழைக்க வல்லார்?

பிரதிக்ஞைகள் அல்லது சபதங்களுக்குப் பொருள் கொள்வதைப்பற்றி இவ்விடத்தில் சில வார்த்தைகள் கூறுதல் பொருந்தும். உலகெங்கும் பிரதிக்ஞைக்குப் பொருள்கொள்ளும் விஷயம் பெருஞ் சச்சரவுக்கு இடமாயிருந்து வந்திருக்கிறது பிரதிக்ஞை எத்துணைத் தெளிவானதா யிருப்பினும் ஜனங்கள் தங்களுக்கநுகூலமாக அதைத் திரித்துப் பொருள் கொள்கிறார்கள். ஜன சமூகத்தில் எல்லா வகுப்புகளிலும், அரசர்கள் முதல் ஏழைக்

குடியானவர்கள் வரை இத்தகையோரைக் காணலாம். சுய நலத்தினால் அவர்கள் குருடர்களாகித் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதல்லாமல் உலகத்தையும் கடவுளையும் ஏமாற்ற முயல்கிறார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில், யார் முன்னிலையில் பிரதிக்ஞை செய்யப்படுகிறதோ அவர்கள் கூறும் வியாக்யானத்தை உண்மையாக ஏற்றுக்கொள்வதே சிறந்த முறையாகும். இரு பொருள் தரக்கூடிய பிரதிக்ஞைகள் விஷயத்தில் பலத்திற் குறைந்தவர்களின் பொருளை ஏற்றுக்கொள்ளுதல் அடுத்தபடியான முறை. இவ்விரண்டு முறைகளும் நிராகரிக்கப்பட்டால் அசத்தியத்தில் வேர் கொண்டவையான சச்சரவும் அநீதியும் விளையும். சத்தியத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டவன் எளிதில் முதல் முறையைக் கைக்கொள்ளுகிறான். அவன் வியாக்யானங் கேட்கப் படித்தவர்களிடம் செல்வதில்லை. எனவே, அம்முறைப்படி, என் அன்னை புலால் என்பதற்கு என்ன பொருள் கொண்டாரோ அதுவே எனக்கு உண்மைப் பொருளாகும். அநுபவ முதிர்ச்சியும், 'அதிக அறிவு பெற்றுள்ளோம்' என்னும் கர்வமும் எனக்குக் கற்பிக்கும் பொருள் உண்மைப் பொருளாக மாட்டாது.

இங்கிலாந்தில் நான் சிக்கனத்தையும், தேக சுகத்தையும் இலட்சியங்களாகக் கொண்டே உணவுச் சோதனைகள் நடத்தினேன். சமயத்துக்கும் உணவுக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றித் தென்னாப்பிரிக்கா செல்வதற்கு முன்னால் நான் சிந்திக்கவேயில்லை. அங்கே நான் நடத்திய கடுஞ் சோதனைகளைக் குறித்துப் பின்னர் தெரிவிப்பேன். ஆயினும் இச் சோதனைகள் எல்லாவற்றிற்கும் விதை விதைக்கப்பட்டது இங்கிலாந்திலேயே.

ஒரு மதம் விட்டுப் பிற மதம் புகுந்தவன் புதிய மதத்தினிடம், அதிலேயே பிறந்து வளர்ந்தவர்களைவிட அதிக அபிமானம் கொண்டிருப்பது இயல்பு. சைவ உணவு என்பது அப்போது இங்கிலாந்தில் புதிய கொள்கையாயிருந்தது. எனக்கும் அப்படியே. ஏனெனில் இங்கிலாந்துக்குப் போனபோது புலாலுணவு இன்றியமையாதது என்னும் நம்பிக்கை கொண்டவனாயிருந்து, பின்னர் அறிவாராய்ச்சியின் மூலமாய்ச் சைவ உணவே சிறந்ததென்னும் கொள்கைக்குத் திரும்பியவன் நான். எனவே, புதிதாக மதம் மாறியவனின் தீவிர உற்சாகத்துடன், நான் இருந்த பேஸ்வாடர் என்னும் பகுதியில் சைவ உணவுச் சங்கம் ஒன்றை ஸ்தாபிக்கத் தீர்மானித்தேன். அங்கு வசித்த ஸர் எட்வின் அர்னால்டு அவர்களை இச்சங்கத்தின் உப அக்கிராசனராயிருக்கும்படி கேட்டுக்கொண்டேன். 'வெஜிடேரியன்' என்னும் சைவ உணவுப் பத்திரிகையின் ஆசிரியர் டாக்டர் ஓல்ட்பீல்ட் என்பார் சங்கத்தின் அக்கிராசனரானார். காரியதரிசிப் பொறுப்பை நானே ஏற்றுக்கொண்டேன். கொஞ்ச நாள் இச்சங்கம் நன்று நடைபெற்று வந்தது. ஆனால் அடிக்கடி இடம் மாறும் என் வழக்கத்தின்படி அவ்விடத்தை விட்டு வேறிடத்திற்கு ஜாகையை மாற்றியதும் சங்கமும் கலைந்து போயிற்று. ஆயினும் இந்தச் சிறு அநுபவத்தினின்றும் பொது ஸ்தாபனங்களை அமைத்து நடத்தும் வழியில் ஓரளவு பயிற்சி பெற்றேன்.

பதினெட்டாம் அத்தியாயம்

சங்கோசம்—எனது காப்பு

முன் அத்தியாயத்தில் சைவ உணவுச் சங்கத்தின் நிர்வாக சபைக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூறினேன். நிர்வாக சபைக் கூட்டம் ஒவ்வொன்றுக்கும் நான் தவறாமல் போய் வந்தேன். ஆனால் வாய் திறந்து பேசுவது மட்டுமில்லை. டாக்டர் ஓல்ட்பீல்ட் ஒரு முறை "என்னிடம் நீங்கள் நன்றாகப் பேசுகிறீர்களே! கமிட்டிக் கூட்டத்தில் மட்டும் ஏன் வாய்மூடி மௌனியாயிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். எல்லாரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைக் கூறுகையில் நான் மட்டும் மௌனஞ் சாதிப்பது ஒரு விநோதமாகவே தோன்றுமல்லவா? பேசுவதற்கு எனக்கு ஆசை யில்லாமலில்லை. பேசத் தெரியாத குறைதான். மற்ற எல்லா அங்கத்தவர்களும் என்னைவிட அதிக விஷயந் தெரிந்தவர்களாக எனக்குத் தோன்றினர்கள். எப்போதேனும் நான் நிரம்ப தைரியப்படுத்திக்கொண்டு பேச ஆரம்பிக்கலா மென்று நினைத்தால் அப்போது வேறு விஷயம் எடுத்துக்கொள்ளப் பட்டுவிடும். இவ்வாறு நீண்டகாலம் நிகழ்ந்து வந்தது.

இதற்கிடையில் ஒரு முக்கியமான விஷயம் விவாதத்திற்கு வந்தது. அது விவாதிக்கப்படும் கூட்டத்துக்குப் போகாமலிருப்பது தவறென்றும், மௌனமாய் வாக்கு மட்டும் கொடுத்து வருவதோ கோழைத்தனமாகு மென்றும் நினைத்தேன். அவ்விஷயம் பின்வருமாறு எழுந்தது:— அச்சங்கத்தின் அக்கிராசனர் மிஸ்டர் ஹில்ஸ் என்பார். அவர் தேம்ஸ் இரும்புத் தொழிற்சாலையின் சொந்தக்காரர். ஒழுக்கத் தூய்மை விஷயத்தில் அவர் கண்டிப்பான

கொள்கைகளை யுடையவர். அவருடைய பண உதவியினு லேயே சங்கம் நடந்து வந்ததென்று கூறுவது மிகை யாகாது. நிர்வாக சபை அங்கத்தவரில் பலர் அவர் ஆதர வில் வாழ்க்கை நடத்துபவர். சைவ உணவு இயக்கத்தில் பிரசித்தி பெற்றவரான டாக்டர் அல்லின்ஸன் என்பாரும் நிர்வாக சபையில் ஓர் அங்கத்தவரா யிருந்தார். பிரஜா உற்பத்தியைச் செயற்கை முறைகளால் கட்டுப்படுத்தும் இயக்கம் அப்போது புதிதாக ஆரம்பமாகி யிருந்தது. டாக்டர் அல்லின்ஸன் அவ்வியக்கத்தை ஆதரிப்பவர். தொழிலாளர்களிடையே அவர் அம்முறைகளைப் பிரசாரம் செய்து வந்தார். மிஸ்டர் ஹில்ஸோ அவ்வியக்கம் ஒழுக்க நெறியை அடியுடன் குலைக்கக்கூடிய தென்று கருதினர். சைவ உணவுச் சங்கத்தின் நோக்கம் உணவுச் சீர் திருத்தம் மட்டும் அன்றென்றும், ஒழுக்கச் சீர்திருத்தமும் அதன் வேலையாகு மென்றும் அவர் எண்ணினர். எனவே டாக்டர் அல்லின்ஸனைப் போன்றருக்குச் சங்கத்தில் இடங் கொடுக்கக் கூடாதென்பது அவர் அபிப்பிராயமா யிருந்தது. டாக்டர் அல்லின்ஸனைச் சங்கத்தினின்றும் நீக்கும் பொருட்டு ஒரு தீர்மானமும் கொண்டு வரப் பட்டது. இவ் விவாதம் என் மனதைப் பெரிதும் கவர்ந் திருந்தது. டாக்டர் அல்லின்ஸன் ஆதரித்த பிரஜா உற் பத்தியைக் கட்டுப்படுத்தும் செயற்கை முறைகள் அபாய கரமானவை யென்றும், அவரை எதிர்த்து வேலை செய்வ தற்கு மிஸ்டர் ஹில்ஸுக்கு உரிமை யுண்டென்றும் நான் கருதினேன், மேலும் மிஸ்டர் ஹில்ஸினிடம் எனக்குப் பெரு மதிப்புண்டு. அவருடைய தாராள குணத்தை நான் வியந்தேன். ஆனல் ஒழுக்க நெறிக் கொள்கைகளைப் பற்றிய அபிப்பிராய பேதங் காரணமாக ஒருவரைச் சைவ உணவுச் சங்கத்தினின்று விலக்குவது சிறிதும் நியாய

மாகாதென்று எனக்குத் தோன்றியது. அத்தகையோரைச் சங்கத்தினின்று விலக்கிவிட வேண்டுமென்பது மிஸ்டர் ஹில்ஸின் சொந்த அபிப்பிராயமேயாகும். சங்கத்தின் குறிப்பிட்ட நோக்கம் சாக பட்சணக் கொள்கையைப் பரப்புவதேயல்லாமல் ஏதோ ஓர் ஒழுக்க முறையைப் பரப்புவதன்று. ஆதலின் ஒழுக்க முறை சம்பந்தமாக ஒருவனுடைய அபிப்பிராயம் எத்தகையதாயினும், சைவ உணவு விரதம் மேற்கொண்டவன் எவனும் இச்சங்கத்தில் சேர உரிமையுடையவன் என்று நான் எண்ணினேன்.

என்னைப் போன்றே அபிப்பிராயங் கொண்டவர் கமிட்டியில் இன்னும் சிலர் இருந்தனர். ஆயினும் என்னுடைய அபிப்பிராயத்தை இம்முறை நானே வெளியிடவேண்டுமென்று என் மனச்சான்று வலியுறுத்திற்று. ஆனால் இதை எவ்வாறு செய்வது? பேசுவதற்கு எனக்குத் தைரியமில்லை. ஆதலின் எழுதிப் படிக்கலாமென்று தீர்மானித்தேன். அவ்வாறே எழுதி எடுத்துக்கொண்டு சங்கத்தின் கூட்டத்துக்குப் போனேன். எனினும் எழுதியதைப் படிக்கக்கூட என்னால் இயலாமற் போயிற்று. அக்கிராசனர், வேறொருவரைக் கொண்டு நான் எழுதியதைப் படிக்கச் செய்தார். முடிவில் டாக்டர் அல்லின்ஸன் கட்சி தோற்றுப் போயிற்று. இவ்வாறு நான் தலையிட்ட முதல் போராட்டத்திலேயே அபஜெயமடையும் கட்சியைச் சேர்ந்தவனாயிருத்தல் கண்டேன். ஆனால் என்னுடைய கட்சி நியாயமானதென்றே எண்ணம் எனக்கு ஆறுதல் அளித்தது. இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் நான் கமிட்டியினின்றும் ராஜினமா செய்ததாக நினைவிருக்கிறது.

நான் இங்கிலாந்திலிருந்த காலமுழுவதும் இந்தச் சங்கோச சுபாவம் என்னைவிட்டு அகலவில்லை. சாதாரணமாக நண்பர்களைப் பார்த்து வரச் செல்லும்போது கூட ஐந்தாறு பேருக்குமேல் இருந்தால் நான் ஊமையாய்ப் போய் விடுவேன்.

ஒருமுறை ஸ்ரீ மஜூம்தாரும் நானும் வெண்ட்னர் என்னும் இடத்துக்குப்போனோம். அங்குச் சாகபட்சண விரதங்கொண்ட ஒரு குடும்பத்தாருடன் தங்கினோம். 'போஜன தர்மம்' என்னும் நூலின் ஆசிரியர் மிஸ்டர் ஹோவார்டு என்பவரும் அவ்வூரில் தங்கியிருந்தார். அவரை நாங்கள் சந்திக்க நேர்ந்தது. சைவ உணவுப் பிரசாரக் கூட்ட மொன்றில் உபந்நியாசம் செய்வதற்கு அவர் எங்களை அழைத்தார். பிரசங்கத்தை எழுதிப் படிப்பது தவறாகக் கருதப்பட மாட்டாதென்று விசாரித்துத் தெரிந்து கொண்டேன். முன்பின் பொருத்தமாயும், சுருக்கமாயும் தங்கள் கருத்தை வெளியிடும் பொருட்டும் பலர் அவ்வாறு செய்வதுண்டு என அறிந்தேன். நினைவிலிருந்து பேசுவதோ என்னால் இயலாத காரியம். எனவே, நான் கூற விரும்பியவற்றை எழுதிக்கொண்டு போனேன். படிக்க எழுந்து நின்றேன். நா எழவில்லை; கண் மங்கலடைந்தது; உடல் நடுங்கியது. பிரசங்கம் இத்தனைக்கும் ஒரே தாளில் அடங்கியதொன்று. அதைக்கூட என்னால் படிக்க முடியவில்லை. ஸ்ரீ மஜூம்தார் எனக்காக அதைப் படிக்க வேண்டியதாயிற்று. அவருடைய சொந்தப் பிரசங்கம் என்னவோ மிக நன்றாயிருந்தது. சபையோர் கரகோஷம் செய்தனர். என்னுடைய வெட்கத்தைச் சொல்ல முடியாது. எனது திறமையின்மை குறித்துப் பெரிதும் துயர மடைந்தேன்.

இங்கிலாந்தில் கடைசி முறையாக நான் ஒரு பொதுக் கூட்டத்தில் பேச முயன்றது, தாய் நாட்டுக்குத் திரும்ப வேண்டிய நாள் நெருங்கி யிருந்த போதாகும். இம் முறையும் பிறரின் நகைப்புக்கு இடமாக என்னைச் செய்து கொண்டேனே யன்றி வேறில்லை. முன்னர்க் குறிப்பிட்டுள்ள ஹால்பார்ன் போஜனசாலையில் சைவ உணவு இயக்கத்தைச் சேர்ந்த என் நண்பர்களுக்கு விருந்தளிக்கத் தீர்மானித்தேன். "சைவ போஜன சாலைகளில்தான் அவ்வுணவு கிடைக்கு மென்பதென்ன? மற்ற போஜனசாலைகளிலும் சொன்னால் ஏன் செய்து தர மாட்டார்கள்?" என்று எண்ணினேன்.

எனவே, ஹால்பார்ன் போஜனசாலை நிர்வாகியிடம் பேசிச் சுத்த சைவ உணவு அளிப்பதற்கு ஏற்பாடு செய்தேன். இப்புதிய ஏற்பாடு என் நண்பர்களுக்குப் பெரு மகிழ்ச்சியை யளித்தது. எல்லா விடங்களிலும் விருந்துகள் சந்தோஷானுபவத்துக் காகவே நடத்தப்படுகின்றன. ஆனால் மேனாட்டிற்போல் விருந்துண்ணல் ஓர் அருங்கலையாக ஆக்கப்பட்டிருப்பது வேறெங்கும் இல்லை. விருந்துகள், அங்கே சங்கீதம், பிரசங்கம் முதலிய ஆடம்பரங்களுடன் நடத்தப்படுகின்றன. நான் நடத்திய சிறு விருந்திலும் இவ்வாடம்பரங்கள் இல்லாமற் போகவில்லை. பேசுவதற்கு என் முறை வந்தபோது எழுந்து நின்றேன். முதலிலேயே மிகுந்த கவலையுடன் சில வாக்கியங்களைச் சிந்தித்து வைத்திருந்தேன். ஆனால் முதல் வாக்கியத்துக்கப்பால் என்னால் போக முடியவில்லை. என் ஞாபக சக்தி அடியுடன் அப்போது போய் விட்டது. நகைச்சுவை பொருந்திய பிரசங்கமொன்றைச் செய்ய உத்தேசித்திருந்த நான், இவ்வாறு என்னையே நகைப்புக் கிடமாகச் செய்து கொண்டேன். முடிவில் "கனவான்களே, என்னுடைய

அழைப்புக் கிணங்கி இவ்விருந்துக்கு விஜயம் செய்ததின் பொருட்டு உங்களுக்கு வந்தன மளிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தேன்.

தென்னுப்பிரிக்காவிலேயே நான் இச்சங்கோசத்தைப் போக்கடித்துக் கொண்டேன். ஆனல் எப்போதுமே சரி, அக்குணம் என்னைவிட்டு முழுதும் அகன்றது என்று சொல்லமுடியாது. முன்னலேயே தயார் செய்யாமல் சொற்பொழிவு நிகழ்த்துதல் என்னல் இயலாததொன்ரு யிருந்தது. முன்பின் பழக்கமில்லாத கூட்டங்களில் பேசுவதற்கு நான் பெரிதும் தயங்கினேன். உபந்நியாசம் செய்யாமல் தப்பித்துக்கொள்ளச் சிறிதேனும் இடமிருந்தால் நான் அதை விடுவதில்லை. இன்றைய தினங்கூட, வெறும் பேச்சுப்பேசி நண்பர்களின் காலப் போக்குக்கு வழிசெய்ய என்னல் முடியாதென நினைக்கிறேன். அப்படிச் செய்ய விரும்பவும் மாட்டேன்.

ஆனல் ஒன்று கூறவேண்டும். என் இயற்கையிற் படிந்திருந்த சங்கோச குணத்தினல், அவ்வப்போது பிறர் நகைப்புக்குப் பாத்திரமாகும் ஒன்றேயன்றி வேறு எவ்வித பிரதி கூலமும் எனக்கு நிகழவில்லை. அதற்கு மாருக, இச்சங்கோச சுபாவம் உண்மையில் எனக்கு நலந்தருவதாகவே யிருந்திருக்கிறது. மொழிகளை எண்ணிப் பேச நான் கற்றுக்கொண்டது அதனல் விளைந்த ஒரு பெரும் நன்மை. எண்ணங்களைக் கட்டுக் குட்படுத்தும் வழக்கமும் எனக்குப் படியலாயிற்று. இவற்றின் பயனுக தற்போது யோசனை யில்லாத ஒரு வார்த்தை யேனும் என் நாவினின்ரே, பேனவினின்ரே புறப்படுவதில்லை யென நான் சொல்லிக் கொள்ளுதல் சாத்தியமா யிருக்கின்றது. என்னுடைய சொற் பொழிவுகளில் கூறியவற்றிற்

காகவோ, கட்டுரைகளில் வரைந்தவற்றிற்காகவோ நான் எப்போதேனும் வருந்த நேர்ந்ததாக எனக்கு நினைவே யில்லை. எனக்கு நேரிட்டிருக்கக்கூடிய எத்தனையோ கஷ்டங்களினின்றும் இவ்வாறு தப்பினேன். எவ்வளவோ காலவிரயமும் ஏற்படாமற் போயிற்று. சத்திய உபாசகன் பாரமார்த்திகத் துறையில் பயில வேண்டிய கட்டுப்பாடுகளுள் மௌனமும் ஒன்று என அநுபவம் எனக்குக் கற்பித்திருக்கிறது. வேண்டுமென்றே, தன்னை யறியாமலோ உண்மையை மறைத்தும், திரித்தும், மிகைப்படுத்தியும் கூறும் குணம் மனிதனுக்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள ஒரு பெருங்குறையாகும். அதினின்றும் தப்புவதற்கு மௌனப் பயிற்சி இன்றியமையாத சாதனம். வார்த்தைகளை எண்ணிப் பேசுவோன் யோசனையற்ற மொழிகளைக் கூறான். பேசுவதற்கு ஆசைப்படும் எத்தனையோ பேரை நாம் காண்கிறோம். எந்தக் கூட்டத்திலும் சரி, ஜனங்கள், பேசுவதற்கு அனுமதிகோரும் சீட்டுக்களை அனுப்பி அக்கிராசனரைத் தொந்திரவு செய்யாமல் இருப்பதில்லை. அநுமதி யளித்தால், பேசுகிறவர் கால வரையறையைக் கடந்துவிடுவதும், இன்னும் கொஞ்சம் நேரம் கேட்பதும், அநுமதி யில்லாமல் பேசிக்கொண்டே போவதும் சர்வ சாதாரணம். இப் பேச்சுக்களால் உலகத்துக்கு எவ்வித நன்மையும் விளைவதாகச் சொல்லமுடியாது. அவ்வளவு காலமும் வீணேயாகும். உண்மையில் எனது சங்கோச குணம் பலவகை அபாயங்களினின்றும் என்னைக் காப்பாற்றும் கேடயமாயிருந்து வந்திருக்கிறது. என் வளர்ச்சிக்கு அது துணை செய்திருக்கிறது. நான் உண்மை காண்பதற்கு அதுவே பேருதவியாயிருந்து வந்திருக்கிறது.

பத்தோன்பதாம் அத்தியாயம்

பொய்மைப் புரை

இக்காலத்துடன் ஒப்பிடும்போது நாற்பதாண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் இந்திய மாணாக்கர் சிலரே யிருந்தனர். இவர்கள் மணஞ்செய்து கொண்டவர்களாயிருப்பினும் இங்கிலாந்தில் பிரும்மசாரிகளைப்போல் நடிப்பது வழக்கம். இங்கிலாந்தில் பள்ளிக்கூட மாணாக்கர்களாயினும், கலாசாலை மாணாக்கர்களாயினும் எல்லாரும் பிரும்ம சாரிகளே. மண வாழ்க்கைக்கும் படிப்புக்கும் பொருந்தாது என்று அங்கே கருதப்படுகிறது. இந்நாட்டிலும் பண்டை நாளில் இவ் வழக்கமே நிலவி யிருந்தது; மாணாக்கன் பிரும்ம சாரி என்றே சாதாரணமாக அழைக்கப்பட்டான். ஆனால் இக்காலத்தில் இங்கே குழந்தை மணம் பரவியிருக்கிறது. இங்கிலாந்தில் இத்தகைய மணம் கிடையவே கிடையாது. ஆதலின் இங்கிலாந்து சென்ற இந்திய இளைஞர்கள் தாங்கள் இல்லறம் மேற்கொண்டவர்களென்று தெரிவிக்க வெட்கப்பட்டார்கள். இம்மாதிரி நடிப்பதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. விவாகமானவர்கள் என்ற விவரம் தெரிந்து போய்விட்டால், இவ்விளைஞர்கள் தாங்கள் வசிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த இளம் பெண்களுடன் உலாவப் போகவும், சல்லாபம் செய்யவும் முடியாது. இத்தகைய சல்லாபம் பெரும்பாலும் குற்றமற்றதேயாகும். பெற்றோர்கள் இதற்கு ஆதரவும் அளித்தார்கள். அந்நாட்டில் இளைஞர்களும், இளம் பெண்களும் இவ்வாறு வாழ்தல் அவசியமாகவே யிருக்கலாம். ஏனெனில் அங்கு ஒவ்வோர் இளைஞனும் வாழ்க்கைத் துணைவி ஒருத்தியைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும். ஆனால் இந்திய

இளைஞர்கள் இங்கிலாந்து போந்ததும் ஆங்கிலேய இளைஞர்களைப்போல் நடந்து கொண்டால், முடிவு பெரும்பாலும் துன்பத்துக் கிடமாகவே யிருக்கும். இது அநுபவத்தில் தெரிந்துள்ள விஷயம். ஆங்கில இளம் பெண்களுடன் தோழமை பூணுவதற்காக நமது இளைஞர்கள் பொய் வாழ்வு நடத்தி வருவதைக் கண்டேன். இந்தத் தொற்று நோய் என்னையும் பற்றிக்கொண்டது. நான் மணம் புரிந்து ஒரு புதல்வனையும் பெற்றவனாயினும் அங்கே பிரும்மசாரியைப் போல் நடிக்கத் தயங்கினேனில்லை. ஆனால் இந்தப் பொய் வாழ்வினால் நான் இன்பமெதுவும் அடையவில்லை. எனது இயற்கையான சங்கோச குணத்தினால் இவ்வழியில் அதிக தூரம் போய்விடாமல் தப்பினேன். நான் வாய்திறவாமல் இருக்கும்போது, என்னுடன் சம்பாஷிக்கவும், உலாவச் செல்லவும் எந்தப் பெண்தான் வலிய வருவாள்?

என்னிடம் சங்கோசம் எவ்வளவு குடிகொண்டிருந்ததோ அவ்வளவு கோழைத்தனமும் இருந்தது. வெண்ட்னரில் நான் சாப்பிட்டுக்கொண்டிருந்தது போன்ற குடும்பங்களில், விருந்தாளிகளை வீட்டுக்காரியின் புதல்வி உலாவ அழைத்துச் செல்வது வழக்கம். அவ்வாறே நான் இருந்த வீட்டுப் பெண்ணும் வெண்ட்னரைச் சுற்றியுள்ள அழகிய குன்றுகளைச் சுற்றிப் பார்க்க என்னை ஒருநாள் அழைத்துச் சென்றாள். நானே வேகமாய் நடப்பவன்; ஆயினும் அப்பெண் என்னைவிட விரைவாக நடந்தாள். வழியெல்லாம் ஏதேதோ பேசிக்கொண்டே போனாள். நானோ 'ஆம்' 'இல்லை' என்று மட்டும் பதிலளித்தேன். அபூர்வமாக ஒவ்வொரு சமயம் 'ஆம்' என்ன சௌந்தர்யம்!' என்றேன். அவள் பறவை யென்னப் பறந்து

சென்றாள். நான் எப்போது வீட்டுக்குத் திரும்பப் போகிறோமென்று யோசனை செய்யலானேன். கடைசியில் குன்றின் உச்சியை அடைந்தோம். கீழிறங்குவது எப்படி என்பதுவே இப்பொழுது கேள்வியாயிற்று. இருபத்தைந்து பிராயமுள்ள அவ் விளம் பெண், பின்னே உயர்ந்ததான 'பூட்ஸு' அணிந்திருந்தாளாயினும், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப்போல் குன்றின் உச்சியிலிருந்து கீழே குதித்தோடினாள். நான் இறங்குவதற்குத் தவித்தேன். அவள் குன்றின் அடிவாரத்தில் நின்றுகொண்டு புன்னகை புரிந்து எனக்கு உற்சாகமூட்டினாள். தான் வந்து கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வரட்டுமா என்றும் கேட்டாள். என் கோழைத் தனத்துக்கும் அளவுண்டல்லவா? நிரம்பக் கஷ்டத்தின்மீது, சிலவிடங்களில் மெதுவாக நகர்ந்து எப்படியோ கடைசியாகக் கீழே போய்ச் சேர்ந்தேன். அவள் 'சபாஷ்' என்று கூவிச் சிரித்தபோது எனக்கு வெட்கம் இன்னும் அதிகமாயிற்று.

ஆனால் எங்குமே நான் தீங்குறாமல் தப்பிவிடவில்லை. என்னிடமிருந்த பொய்மைப் புரையை நீக்க இறைவன் திருவுளங் கொண்டார். வெண்ட்னாருக்குப் போவதற்கு முன் பிரைடன் என்னுமிடத்துக்குப் போயிருந்தேன். அங்கே போஜன சாலையில் வயது சென்ற மூதாட்டியார் ஒருவரைச் சந்தித்தேன். அவர் விதவை; கொஞ்சம் சொத்துள்ளவர். நான் இங்கிலாந்து சென்ற முதல் வருஷத்தில் இது நிகழ்ந்தது. போஜன சாலையில் கொடுத்த உணவுப் பொருள் ஜாபிதா பிரஞ்சு மொழியில் எழுதப் பட்டிருந்தபடியால் எனக்குப் புரியவில்லை. நான் உட்கார்ந்திருந்த மேஜையிலேயே அம்மூதாட்டியாரும் அமர்ந்

திருந்தார். நான் அவ்விடத்திற்குப் புதியவன் என்பதையும் என்னுடைய தயக்கத்தையும் கவனித்த அவர் உடனே எனக்கு உதவி செய்ய முன் வந்தார். "நீர் இவ்விடத்துப் பழக்கமில்லாதவர் எனக் காண்கிறது. என்ன யோசனை செய்கிறீர்? ஏன் சாப்பாடு எதுவும் கொண்டுவரும்படி சொல்லவில்லை?" என்று அவர் கேட்டார். நான் உணவு ஜாபிதாவை எடுத்து எழுத்துக் கூட்டி வாசிக்க முயன்று, ஜாபிதாவில் கண்ட பொருள்களைப்பற்றிப் பரிமாறுகிறவனை விசாரிக்கத் தயார் செய்து கொண்டிருந்தபோது அவர் இவ்வாறு கேட்டார். நான் அவருக்கு வந்தனமளித்து விட்டு, எனக்குப் பிரஞ்சு பாஷை தெரியாததால் எதெது புலால் கலவாத உணவு என்று கண்டுபிடிக்க முடியவில்லை எனக் கூறினேன்.

'இவ்வளவு தானே? உமக்கு நான் உதவி செய்கிறேன். இந்த ஜாபிதாவை விளக்கிக் கூறி எதெது நீர் சாப்பிடலாம் என்று காட்டுகிறேன்" என்றார் அம் மூதாட்டியார். நான் அவருடைய உதவியை நன்றியுடன் ஏற்றுக்கொண்டேன். இவ்வாறு எங்கள் இருவருக்கும் அறிமுகம் ஆயிற்று. இப்படி ஆரம்பமானது பின்னர் நட்புரிமையாக முதிர்ந்தது. இங்கிலாந்தில் நான் இருந்த அளவும், பின்னர் வெகு காலம் வரையிலுங்கூட இந்நட்புரிமை இருந்து வந்தது. அவர் தமது லண்டன் விலாசத்தை எனக்குத் தெரிவித்ததுடன் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தம் வீட்டில் விருந்துண்ண அழைத்தார். இதுவன்றிச் சில விசேஷ சந்தர்ப்பங்களிலும் அவர் எனக்கு அழைப்பு அனுப்புவார். என்னுடைய கூச்சம் போவதற்காக இளம் பெண்களுடன் என்னை அறிமுகம் செய்துவைத்து அவர்களுடன் சம்பாஷிக்கச் செய்வார்.

அவர்களில் சிறப்பாக ஒரு யுவதியைக் குறிப்பிட வேண்டும். அவள் அம் மூதாட்டியாருடன் வசித்து வந்தவள். அடிக்கடி நாங்கள் இருவரும் முற்றிலும் தனிமையில் விடப்படுவோம்.

முதலில் இவையெல்லாம் எனக்கு நிரம்பத் தொல்லையாயிருந்தன. என்னால் ஏதேனுமொரு விஷயத்தைப்பற்றிப் பேச்சுத் தொடங்க முடியாது. விகடமாய்ப் பேசி நகைப்புண்டுபண்ணவும் என்னால் இயலாமலிருந்தது. ஆனால் அம் மூதாட்டியார் இவ்விஷயங்களில் எனக்குப் பயிற்சி அளித்தார். நானும் கற்றுக்கொள்ளலானேன். கொஞ்ச நாள் சென்றதும் ஞாயிற்றுக்கிழமைகளை ஆவலுடன் எதிர் பார்க்கத் தொடங்கினேன். மேலே குறிப்பிட்ட இளமங்கையின் சம்பாஷணையில் விருப்பங் கொண்டேன்.

அம் மூதாட்டி தினந்தோறும் தமது வலையை விசாலமாக்கிக்கொண்டு வந்தார். நானும் அம் மங்கையும் அடிக்கடி சந்திப்பதில் அவர் அதிக சிரத்தை காட்டினார். எங்களைப்பற்றி அவர் தம் மனதில் ஏதோ திட்டம் போட்டிருந்தார் போலும்.

நான் பெருஞ் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். எனக்குள் பின்வருமாறு எண்ணமிட்டேன்:—“அந்தோ! நான் விவாகமானவன் என்னும் விவரத்தை முன்னமே அம்மூதாட்டியாருக்குத் தெரிவித்திருக்கக் கூடாதா?. அப்போது எங்களிருவருக்கும் விவாகம் நிச்சயம் செய்ய அவர் உத்தேசித்திருக்க மாட்டாரல்லவா? இப்பொழுதும் மோசம் போய்விடவில்லை. இப்பொழுதேனும் உண்மையைத் தெரிவித்தால் இனிப் பெருந் துன்பம் உண்டாகாமல் தடுத்துக் கொள்ளலாம்.”

இவ்வாறெண்ணி அடியிற் கண்டவாறு ஒரு கடிதம் எழுதினேன்:—

பிரைடனில் நாம் முதன் முதலில் சந்தித்த தினத்தி லிருந்து தாங்கள் என்னிடம் மிகுந்த பிரியங் காட்டி வந்தி ருக்கிறீர்கள். தன்னைத் தங்கள் புதல்வனாகவே யெண்ணி என் பொருட்டுக் கவலை எடுத்து வந்திருக்கிறீர்கள். எனக்கு மணம் செய்துவைக்க வேண்டுமென்று விரும்பி அதற்காக இளம் பெண்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்து வருகிறீர்கள். ஆனால் காரியம் மிஞ்சிப்போவதற்கு முன்னால், தங்களுடைய அன்புக்கு நான் அருகனல்லன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தங்கள் வீட்டுக்கு வரத் தொடங்கியபோதே நான் இல்லறத்தான் என்பதைத் தெரிவித்திருக்க வேண்டும். இங்கிலாந்தில் இந்திய மாணாக்கர்கள் பிரும்மசாரிகள் போல் நடப்பதை அறிந்து நானும் அவ்வாறு செய்து வந்தேன். என் தவறினை இப்போது உணர்கிறேன். சிறுவனா யிருந்தபோதே எனக்கு மணம் ஆகிவிட்டது. இதுகாலை எனக்கு ஒரு புதல்வனும் உளன். இத்தனை காலம் இவ்விவரங்களைத் தங்களுக்கு அறிவியா திருந்ததின் பொருட்டு என் உளம் வருந்துகிறது. இப்பொழுதேனும் உண்மை சொல்வதற்கு இறைவன் எனக்குத் தைரியம் அளித்ததுபற்றி மகிழ்ச்சி கொள்ளுகிறேன். என்னைத் தாங்கள் மன்னித்து விடு வீர்களா? எனக்குத் தாங்கள் அறிமுகம் செய்துவைத்த இளம் பெண் விஷயத்தில் தகுதியற்ற உரிமை எதையும் நான் எடுத்துக் கொண்டதில்லை யென்று உறுதி கூறு கிறேன். நான் எவ்வளவு தூரம் போகலாமென்பதை உணர்ந்தே நடந்துகொண்டேன், நான் ஏற்கனவே கலியாணமானவன் என்பது தங்களுக்குத் தெரியாதாத

லின், எங்களிருவருக்கும் விவாகம் நிச்சயமாக வேண்டு மென்று தாங்கள் விரும்பியது இயல்பே. விஷயம் இதற்குமேல் போகக்கூடாதென்று எண்ணி உண்மை கூறலானேன்.

"இக்கடிதத்தைப் படித்ததும், தங்கள் அன்புக்கு அபாத்திரனாக நான் நடந்துகொண்டதாய்த் தாங்கள் கருதி னால் அதற்காகத் தங்கள்மீது வருத்தப்படமாட்டேன். தாங்கள் இதுகாறும் என்னிடம் காட்டிவந்த பிரியத் திற்கும், செய்த உதவிக்கும் என்னென்றைக்கும் நன்றிக் கடன் பட்டவனாவேன். இதற்குப் பிறகும் தாங்கள் என்னைப் புறக்கணியாமல், தங்கள் வீட்டுக்கு வரத் தகுதி யுள்ளவனாகக் கருதினால் நான் மகிழ்ச்சி யடைவேனென்று சொல்ல வேண்டுவதில்லை. தங்கள் அன்புக்கு இதை மற்றோர் அறிகுறியாகக் கருதுவதுடன் அவ்வன்புக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளவும் முயற்சிப்பேன்."

இத்தகைய கடிதத்தை ஒரு நிமிஷத்தில் எழுதிவிட்டே னென்று வாசகர்கள் எண்ணவேண்டாம். பல முறைகள் அடித்தும் திருத்தியும் நான் அதை எழுதி முடித்தேன். இக்கடிதத்தினால் என் உள்ளத்திலிருந்த ஒரு பெருஞ்சுமை நீங்கிற்று. மறு தபாலில் அவ்வம்மையாரின் பதிலுங் கிடைத்தது. அதன் கருத்து வருமாறு:—

"உண்மை யறிவிக்கும் உமது கடிதம் பெற்றேன். நாங்கள் இருவரும் மிகவும் மகிழ்ச்சி யடைந்தோம். இடி இடி யென்று சிரித்தோம். நீர் கூறும் பொய்மைக் குற்றம் மன்னிக்கற்பாலதே. ஆனால் உண்மை நிலையை எங்களுக்கு அறிவித்தது நலமேயாகும். உமக்கு நான் அனுப்பிய அழைப்பு இதனால் மாறுபடவில்லை. அடுத்த

ஞாயிற்றுக்கிழமை கட்டாயமாக உம்மை எதிர்பார்க்கிறோம். உமது குழந்தை மணத்தைப்பற்றி எல்லா விவரங்களையும் கேட்டுச் சிரித்து மகிழ ஆவல் கொண்டிருக்கிறோம். இந்நிகழ்ச்சியினால் நமது நட்புரிமை சிறிதும் பாதிக்கப்படவில்லை யென்று நான் உறுதி கூறவும் வேண்டுமா ?"

இவ்வாறு எனது பொய்மைப் புரை நீங்கப் பெற்றேன். அதன் பின்னர் அவசியம் நேர்ந்தபோதெல்லாம் நான் விவாகமானவன் என்று தெரிவிக்கத் தயங்குவதில்லை.

இருபதாம் அத்தியாயம்

சமய நூல் ஆராய்ச்சிக்கு ஆரம்பம்

இங்கிலாந்தில் எனது இரண்டாம் ஆண்டு வாசத்தினிறுதியில் இரு சகோதரர்களுடன் எனக்குப் பழக்க மேற்பட்டது. அவர்களிருவரும் பிரமஞான சங்கத்தைச் சேர்ந்தவர்கள்; விவாகமாகாதவர்கள். என்னிடம் கீதையைப்பற்றி அவர்கள் பிரஸ்தாபித்தார்கள். ஸர் எட்வின் அர்னால்டின் ஆங்கில மொழிபெயர்ப்பை அவர்கள் அப்போது படித்துக் கொண்டிருந்தார்கள். கீதையின் சம்ஸ்கிருத மூலத்தை தங்களுடன் படிப்பதற்கு என்னை அழைத்தார்கள். சம்ஸ்கிருதத்திலாவது, குஜராத்தியிலாவது நான் அதுவரை பகவத் கீதை படித்ததே யில்லை. எனவே எனக்குப் பெரிதும் வெட்கமாயிருந்தது. நான் இதுகாறும் கீதை படித்ததில்லையென்றும், அவர்களுடன் சேர்ந்து படிக்கப் பெரிதும் விரும்புவதாகவும் கூறினேன். சம்ஸ்கிருதத்தில் எனக்கு அதிக பயிற்சி யில்லையாயினும்,

மொழிபெயர்ப்பில் மூலத்தின் பொருள் தெளிவாக வரா விடின் சொல்லக்கூடிய அளவுக்கு அப்பாஷை தெரியு மென்று சொன்னேன். ஆகவே அவர்களுடன் சேர்ந்து கீதை படிக்க ஆரம்பித்தேன். இரண்டாவது அத்தியா யத்தில் உள்ள அடியிற் கண்ட பொருள் கொண்ட சுலோகங்கள் என் உள்ளத்தில் நன்கு பதிந்தன:—

"மனிதன் இந்திரிய விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பத ஞல் அவற்றில் பற்றுதல் உண்டாகிறது. பற்றுதலிலிருந்து ஆசை பிறக்கிறது. ஆசை குரோதமாகக் கொழுந்து விட்டெரிகிறது. குரோதத்தினுல் சிந்தை மயக்கமும், அதிலிருந்து நினைவுத் தவறுதலும் உண்டாகின்றன. நினைவுத் தவறுதலால் புத்தி நாசமடைகின்றது. புத்தி நாசத்தால் மனிதன் அழிகின்றுன்."

மேற் சொன்ன சுலோகங்கள் இன்னும் என் செவி களில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. பகவத் கீதை ஒரு விலை யற்ற மாணிக்கமென்று எனக்குத் தோன்றியது. அந்த அபிப்பிராயம் நாளடைவில் உறுதிப்பட்டு வந்து இன்றைய தினம் ஞான நூல்களில் பகவத் கீதைக்கு ஒப்பானது எதுவு மில்லையென்று நான் கருதுகிறேன். என்னை இருள் சூழுங் காலங்களில் அந்நூலே எனக்கு உற்ற துணையா யிருந்து வந்திருக்கிறது. பகவத் கீதையின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் எல்லாவற்றையும் அநேக மாக நான் படித்திருக்கிறேன். அவற்றுள் ஸர் எட்வின் அர்னுல்டின் மொழிபெயர்ப்பே தலைசிறந்ததெனக் கருது கிறேன். அவர் மொழிபெயர்ப்பு, மூலத்தின் பொருளி னின்றும் சிறிதும் மாறுபடவில்லையாயினும், அது மொழி பெயர்ப்பாகவே தோன்றவில்லை. அப்போது அந்நண்பர் களுடன் மேலெழுந்த வாரியாகவே கீதை படித்தேன்.

சில வருஷங்களுக்குப் பின்னரே அதைக் கருத்தூன்றிப் படிக்க ஆரம்பித்தேன். அப்போது கீதை எனக்குத் தினம் பாராயணம் செய்வதற்குரிய நூலாயிற்று.

ஸர் எட்வின் அர்னால்டைப் பற்றி, அவர் பகவத் கீதை மொழிபெயர்த்தவர் என்ற அளவிலேயே அதுவரை கேள்விப்பட்டிருந்தேன். அவர் எழுதிய 'ஆசிய தீபம்' (புத்தர் சரிதை) என்னும் நூலையும் அச்சகோதரர்களே என்னைப் படிக்கச் சொன்னார்கள். பகவத் கீதை மொழி பெயர்ப்பை விட அதிக சிரத்தையுடன் அப்புத்தகத்தை நான் படித்தேன். அதைப் படிக்கத் தொடங்கிய பின் முடியும் வரையில் நிறுத்தவே யில்லை. ஒரு முறை அவர்கள் என்னைப் பிளாவட்ஸ்கி அம்மையாரிடம் அழைத்துச் சென்று, அவரையும் பெஸண்டு அம்மையாரையும் அறிமுகம் செய்து வைத்தார்கள். பெஸண்டு அம்மையார் அப்போது தான் பிரமஞான சங்கத்தில் சேர்ந்திருந்தார். அந் நிகழ்ச்சி சம்பந்தமாக அப்போது நடந்த விவரதத்தை நான் சிரத்தையுடன் கவனித்து வந்தேன். அச்சங்கத்தில் சேரும்படி அந்நண்பர்கள் எனக்கு யோசனை கூறினார்கள். நான் மரியாதையாக மறுதளித்து விட்டேன். "என்னுடைய சொந்த மதத்தைப்பற்றி நான் இன்னும் நன்கறிந்து கொள்ளாதிருக்கையில், மதச் சங்கம் எதையும் சேர விரும்பவில்லை" என்று சொன்னேன். அவர்கள் சொற்படி 'பிரமஞானத்தின் திறவுகோல்' என்ற பிளாவட்ஸ்கி அம்மையாரின் நூலைப் படித்ததாகவும் ஞாபகமிருக்கிறது. அப்புத்தகம் ஹிந்து சமய நூல்களைப் படிக்க வேண்டுமென்னும் ஆவலை எனக்குண்டாக்கிற்று. ஹிந்து மதத்தில் குருட்டு நம்பிக்கைகளே மிகுந்திருக்கின்றன வென்று பாதிரிமார்களின் பிரசாரத்தினால்

எனக்குண்டா யிருந்த தப்பபிப்பிராயமும் நீங்கப் பெற்றேன்.

இதே காலத்தில் மான்செஸ்டரிலிருந்து வந்த உத்தமக் கிறிஸ்துவர் ஒருவரை நான் சந்தித்தேன். சைவ போசனசாலை யொன்றில் அவர் எனக்கு அறிமுகமானார். கிறிஸ்துவ மதத்தைப்பற்றி அவர் எனக்குச் சொன்னார். இராஜகோட்டையில் கிறிஸ்துவ மதப் பிரசாரத்தைப்பற்றி எனக்கு ஞாபகமிருந்த விவரங்களை அவரிடம் கூறினேன். அதைக் கேட்டு அவர் வருத்த மடைந்தார். "நான் புலால் அருந்துவதில்லை; மதுபானமும் செய்வதில்லை. கிறிஸ்து வர்கள் பலர் புலாலுண்பதும், மதுபானம் செய்வதும் உண்மையே. ஆனால் எங்கள் வேதத்தில் மது, மாமிசம் அருந்தும்படி கட்டளையிடப்படவில்லை. தயவு செய்து தாங்கள் பைபில் வாசியுங்கள்" என்று அவர் சொன்னார். அவருடைய புத்திமதியை ஏற்றுக்கொண்டேன். அவர் எனக்கு பைபிள் பிரதி ஒன்று வாங்கிக்கொடுத்தார். அவரே பைபிள் விற்பனை செய்ததாகவும் எனக்கு நினை விருக்கிறது. விளக்கத்துக்காகப் படங்கள் முதலியவை அடங்கிய பைபிள் பதிப்பு ஒன்றை அவரிடம் வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன். ஆனால் பைபிளில் பழைய ஏற்பாடு (Old Testament) எனக்குச் சிறிதும் சுவையளிக்க வில்லை. 'ஆதியாகமம்' என்னும் முதற் பகுதியைப் படித்தேன். அதற்குப் பின்வரும் பகுதிகளை எப்போது படிக்கத் தொடங்கினாலும் எனக்கு உறக்கம் வந்துவிடும். ஆனால், படித்தோம் என்ற பெயருக்காக, சிரத்தை யின்றியும், பொருளை அறிந்துகொள்ளாமலும் ஒருவாறு படித்து முடித்தேன். 'எண்ணாகமம்' என்ற பகுதியைப் படித்தபோது எனக்கு வெறுப்பு உண்டாயிற்று.

ஆனால் புதிய ஏற்பாடு (New Testament) இவ்வா றன்று. சிறப்பாக, மலைப்பொழிவு (Sermon on the Mount) என் ஹிருதயத்தைக் கவர்ந்தே விட்டது. கீதை யுடன் அதை ஒப்பிட்டுப் பார்த்தேன். "தீமைக்குத் தீமை செய்யாதீர்கள். வலது கன்னத்தில் அடித்தவனுக்கு இடது கன்னத்தையும் காட்டுங்கள். உங்கள் சட்டையை எவனேனும் எடுத்துக்கொண்டு போனால் உங்கள் போர்வையையும் அவனுக்குக் கொடுங்கள்" என்பன போன்ற உபதேசங்கள் எனக்கு அளவற்ற ஆனந்தத்தை யளித்தன. "ஒரு குவளை தண்ணீருக்கு ஒரு வேளை உண வளி" என்ற ஷாமல் பட்டரின் பாட்டு எனக்கு நினைவு வந்தது. கீதையின் உபதேசத்தையும், 'ஆசிய தீப'த்தின் அரும் பொருளையும், மலைப் பொழிவையும் ஒன்று படுத்திப் பார்க்கலானேன். துறவே உயரிய சமயம் என்ற கருத்து என் உள்ளத்தைக் கவர்ந்தது.

மேற்கூறிய நூல்களைப் படித்ததிலிருந்து, மற்ற சமயா சாரியர்களின் சரித்திரங்களையும் படிக்கவேண்டு மென்னும் ஆவல் எனக்குண்டாயிற்று. கார்லைல் என்பார் எழுதிய 'வீரரும் வீர பூசையும்' என்ற நூலைப் படிக்கும்படி ஒரு நண்பர் கூறினார். அந்நூலில் 'வீர தீர்க்கதரிசி' என்ற அத்தியாயத்தில் முகமது நபியின் பெருமையைப் பற்றியும் அவரது தைரியம், கடும் விரத வாழ்க்கை இவைகளைப் பற்றியும் படித்துத் தெரிந்துகொண்டேன்.

சமயங்களைப்பற்றி இவ்வளவே அப்போது தெரிந்து கொள்ள முடிந்தது. பரீட்சைக்குப் படிக்கவேண்டி யிருந்ததால் மற்ற படிப்புகளில் அதிக நேரம் செலவழிக்க முடியவில்லை. ஆனால் சமய நூல்கள் இன்னும் அதிகம் படிக்க வேண்டுமென்றும், முக்கிய மதங்கள் எல்லா

வற்றையும் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டேன்.

நாஸ்திக வாதத்தைப் பற்றியும் நான் சிறிது தெரிந்து கொள்ளாதிருக்க முடியாதன்றோ? பிராட்லா என்பவரின் பெயரும், நாஸ்திகம் என்று சொல்லப்பட்ட அவருடைய கொள்கையும் ஒவ்வோர் இந்தியருக்கும் தெரிந்திருந்தன. நாஸ்திகத்தைப்பற்றி ஏதோ ஒரு புத்தகமும் படித்தேன். அதன் பெயர் நினைவில்லை. ஆனால் அதனால் என் மனம் சிறிதும் மாறுதலடையவில்லை. ஏனெனில் நாஸ்திகம் என்னும் பாலைவனத்தை நான் முன்னாடியே கடந்தவனாயிருந்தேன். அப்பொழுது பெஸண்டம்மையாரின் பெயர் பெரிதும் பிரபலப்பட்டிருந்தது. அவர் நாஸ்திகத்திலிருந்து அப்போதுதான் ஆஸ்திகராகி யிருந்தார். நாஸ்திகக் கொள்கையில் எனக்கிருந்த வெறுப்பு இதனால் உறுதி பெற்றது. 'நான் பிரமஞான சங்கத்தில் சேர்ந்தேன்!' என்ற அவருடைய புத்தகத்தையும் படித்திருந்தேன்.

இச்சமயத்திலேயே பிராட்லா மரணமடைந்தார். வோகிங் கல்லறையில் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டது. லண்டனிலிருந்த இந்தியர்கள் எல்லாரும் பிரேத ஊர்வலத்துக்குச் சென்றிருந்தனர். நானும் போயிருந்தேன். பாதிரிமார் சிலரும் வந்திருந்தனர். பிரேத ஊர்வலம் முடிந்த பின் நாங்கள் திரும்பிப் போவதற்குப் புகை வண்டி நிலயம் ஒன்றில் சற்று நேரம் காத்திருக்க நேர்ந்தது. அப்பொழுது கூட்டத்திலிருந்த நாஸ்திகர் ஒருவர் வந்திருந்த பாதிரிகளில் ஒருவரை கேள்வி கேட்கத் தொடங்கினார். "நல்லது ஐயா, கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நீங்கள் நம்புகிறீர்கள் அல்லவா?" என்று அவர் கேட்டார்.

'ஆம், நம்புகிறேன்' என்று அவ்வுத்தமர் மெதுவான குரலில் பதில் சொன்னார்.

"பூமியின் சுற்றளவு 28,000மைல் என்பதையும் தங்கள் ஒப்புக்கொள்கிறீர்களல்லவா?" என்று அந்நாஸ்திகர் மிகச் சாமர்த்தியமாகக் கேள்வி போடுவதாக நினைத்துக் கொண்டு கேட்டார்.

'ஆம், ஆம்.'

"அப்படியானால், தயவு செய்து சொல்லுங்கள். தங்கள் கடவுள் எவ்வளவு பெரியவர்? அவர் எங்கே இருக்கிறார்?"

'நல்லது, நமக்கு அறியுந் திறன் உண்டாயின், நம் இருவரின் ஹிருதயங்களிலும் அவர் இருக்கவே செய்கிறார்.'

"ஓ! இதுதானே வேண்டாமென்கிறேன்? என்னைக் குழந்தை யென்று நினைத்துக் கொண்டீர்களா?" என்று அந்நாஸ்திக வீரர் கூறிவிட்டுப் பெரும் வெற்றியடைந்தவர் போல் சுற்றிலுமுள்ளவர்களைப் பார்த்தார்.

பாதிரியாரோ அடக்கத்தை அணிகலனாகப் பூண்டு மௌனமாயிருந்தார். இவ்வாக்குவாதமானது நாஸ்திகத்தினிடம் எனக்கிருந்த வெறுப்பை இன்னும் மிகுதியாக்கிற்று.

இருபத்தோராம் அத்தியாயம்

"திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை"

ஹிந்து மதத்தைப்பற்றியும், உலகின் பிற சமயங்களைப் பற்றியும் நான் ஓரளவு தெரிந்துக் கொண்டிருந்தேனாயினும், எனக்கு நேரும் சோதனைகளில்

என்னைக் காப்பதற்கு அவ்வறிவு போதாது என்பதை அறிந்தேனில்லை. சோதனைகளின்போது ஒரு மனிதனுக்குத் துணை செய்து காப்பது எது என்பதைப்பற்றி அவை நிகழும் சமயத்தில் அவனுக்கு ஏதும் தெரியவில்லை. நாஸ்திகனு யிருந்தால், தற்செயலாகத் 'தப்பிப் பிழைத்தேன்' என்பான். இறைவனிடம் நம்பிக்கை யுள்ளவனுயின், ஆண்டவன் தன்னைக் காத்தருள் செய்ததாகக் கூறுவான். தனது சமயக் கல்வியும், பாரமார்திகப் பயிற்சியுமே ஆண்டவன் அருளுக்குக் காரணமா யிருந்தன என்று முடிவு செய்வான். ஆனுல் அவன் ரட்சிக்கப்படும் நேரத்தில், தன்னை ரட்சிப்பது தன் பாரமார்த்திகப் பயிற்சி தானு, அல்லது வேறேதுனுமா என்று அவன் அறியான். தங்கள் பாரமார்த்திக பலத்தைக் குறித்துப் பெருமை கொண்டிருந்தவர்களுக்குள்ளே அப்பெருமை மண்ணிற் சாய்வதைப் பாராதவர் எவரே உளர்! சாதன அநுபவம் இல்லாத வெறும் சமய அறிவானது சோதனைக் காலத்தில் உமியைப் போல் பயனற்றதாய்க் காண்கிறது.

வெறும் சமய அறிவின் பயனற்ற தன்மையை முதன் முதலில் நான் இங்கிலாந்திலேயே கண்டேன். அதற்கு முன்னுல் எனக்கு நேர்ந்த சோதனைகளில் எவ்வாறு காப்பாற்றப் பட்டேன் என்று சொல்ல முடியாது. ஏனெனில் அப்போதெல்லாம் மிகச் சிறு வயதினனு யிருந்தேன். ஆனுல் இப்போதோ எனக்கு இருபது வயது ஆகியிருந்தது. கணவனுகவும், தந்தையாகவும் கொஞ்சம் அநுபவம் பெற்றிருந்தேன்.

எனது இங்கிலாந்து வாசத்தில் கடைசி வருஷத்தில் அதாவது 1890-ல் இச்சம்பவம் நிகழ்ந்ததாக எனக்கு ஞாபக மிருக்கிறது. போர்ட்ஸ்மௌத் நகரில் சைவ

உணவு மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதற்கு நானும் என் இந்திய நண்பர் ஒருவரும் அழைக்கப் பெற்றிருந்தோம். போர்ட்ஸ் மௌத் ஒரு கடற்கரை நகரம். மாலுமித் தொழில் செய்வோர் அந்நகரில் அதிகம். அங்குத் துன்மார்க்கத்தி லீடுபட்ட பெண் மக்களையுடைய வீடுகள் நிரம்ப உண்டு. இவர்கள் தொழிலாக விபசாரம் செய்யாதவர்களாயினும், தங்கள் கற்பு நிலையைக் குறித்து அதிக கவலைப்படாதவர்கள். இத்தகைய வீடு ஒன்றில் எங்களுக்கு விடுதி அமர்த்திக் கொடுக்கப்பட்டிருந்தது. வரவேற்புக் கமிட்டியாருக்கு இந்த விவரம் தெரியாதென்று சொல்ல வேண்டுவதில்லை. போர்ட்ஸ் மௌத்தைப்போன்ற ஒரு நகரில், எங்களைப்போன்று இரண்டொரு நாள் தங்கிப் போகிறவர்களுக்கு நல்ல விடுதி கெட்ட விடுதி என்று கண்டுபிடித்து அமர்த்துவது எளிதன்று.

மாலையில் மகா நாட்டிலிருந்து விடுதிக்குத் திரும்பினோம். சாப்பாட்டுக்குப் பின்னர்ச் சீட்டாட ஆரம்பித்தோம். வீட்டுக்காரியும் எங்களுடன் சீட்டு விளையாட வந்தாள். இங்கிலாந்தில் கௌரவமுள்ள குடும்பங்களிலும் இது வழக்கமாகும். விளையாடும்போது, ஆட்டக்காரர் அனைவரும் குற்றமற்ற கேலிப் பேச்சு பேசுதல் சாதாரணம். ஆனால் இங்கே எனது நண்பரும், வீட்டுக்காரியும் தகாத பரிகாசங்களும் செய்யத் தொடங்கினார்கள். எனது நண்பர் இவ்வித்தையில் கைதேர்ந்தவர் என்பது எனக்குத் தெரியாது. நானும் மதிமயங்கிப்போய் இந்தக் கேலிப் பேச்சில் கலந்துகொள்ள வாரம்பித்தேன். சீட்டையும் விளையாட்டையும் மறந்து நான் வரம்பு மீறிப் போக விருக்குந் தறுவாயில் ஆண்டவன் எனது நண்பர் மூலமாக எச்சரிக்கை செய்து தடுத்தாட்கொண்டான்.

"ஓ! இந்தப் பிசாசு உன்னிடம் எங்கிருந்து வந்தது, அப்பனே? எழுந்திருந்து போ! சீக்கிரம்!" என்று அவர் கூறினார்.

நான் வெட்கித் தலை குனிந்தேன். அவ்வெச்சரிக்கையை ஏற்றுக்கொண்டேன். உள்ளுக்குள் அந்நண்பருக்கு நன்றியறிதல் செலுத்தினேன். எனது அன்னையின் முன்னிலையில் நான் செய்த பிரதிக்ஞையை நினைவு கூர்ந்தேன். அவ்விடத்தினின்றும் ஓட்டம் பிடித்தேன். வேட்டை நாயினால் துரத்தப்பட்ட மானைப்போல் உடல் நடு நடுங்க ஹிருதயம் பட பட வென்று அடித்துக்கொள்ள என் அறையை அடைந்தேன்.

என் மனைவியைத் தவிர்த்த வேறு ஸ்திரீ ஒருத்தி என் உள்ளத்தில் காம இச்சையைக் கிளப்பியது இதுவே முதன் முறையாகும். அன்றிரவு எனக்கு உறக்கமே பிடிக்கவில்லை. இந்த வீட்டில் இனி இருக்கலாமா? ஓடிப்போய் விடக்கூடாதா? நாம் எவ்விடத்தில் இருக்கிறோம்? விழிப்புடனிராவிடில் என்ன நேரிடும்? இத்தகைய எண்ணங்கள் பல தோன்றித் தூக்கமில்லாமல் செய்தன. இதுமுதல் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளத் தீர்மானித்தேன். அந்த வீட்டை விட்டுப் போவது போதாதென்றும் ஆனால் அந்நகரைவிட்டே கிளம்பிச் சென்றுவிடுவதென்றும் முடிவு செய்தேன். மகா நாடு இன்னும் இரண்டு தினமே நடக்கவிருந்தது. மறு நாள் மாலை நான் புறப்பட்டுச் சென்றதாக ஞாபகம். என் நண்பர் மட்டும் இன்னும் சில தினங்கள் அங்கேயே இருந்தார்.

அப்போது சமயத்தின் உட்பொருள் ஏதுவென்று எனக்குத் தெரியாது. அவ்வாறே கடவுளின் உண்மையைப்

பற்றியும், அவருடைய திருவருள் இயங்கும் விதத்தைப் பற்றியும் யாதும் அறியேன். அச்சந்தர்ப்பத்தில் பகவான் என்னைக் காப்பாற்றினர் என்று மட்டும் ஒரே வழி உணர்ந்தேன். இவ்வாறே சோதனைகள் ஏற்பட்டபோ தெல்லாம் அவர் என்னைக் காத்தருள் செய்திருக்கிறார். இன்றைய தினம் 'கடவுள் காப்பாற்றினர்' என்னும் சொற்றொடர் எனக்கு ஆழ்ந்த பொருள் பொதிந்ததா யிருக்கிறதாயினும், இன்னமும் அதன் முழுக் கருத்தையும் நான் அறிந்துகொண்டதாகச் சொல்ல முடியாது. முழுக் கருத்தையும் உணர்ந்துகொள்ள இன்னும் அதிக சாதன அநுபவம் வேண்டும். ஆனால் பாரமார்த்திகத் துறையிலும், வக்கீல் தொழிலிலும், பொது ஸ்தாபனங்களை நடத்து வதிலும், அரசியலிலும், எனக்குச் சோதனைகள் நேரிட்ட போதெல்லாம் பகவான் கருணை புரிந்து காப்பாற்றினர் என்று நான் உறுதியாகச் சொல்லக்கூடும். நம்பிக் கைக்குச் சற்றும் இடமில்லாமல் போன பின்பும், துணைவர்களும், சுகபோகங்களும் கைவிட்டுப் போன பிற கும், எப்படியோ உதவி வந்து சேர்வதை என் அநுபவத் தில் கண்டறிந் துள்ளேன். இறைவனிடம் மன்றாடுதலும், பூசையும், பிரார்த்தனையும், பிறவும் வெறும் மூடக் கொள்கைகள் அல்ல. உணவு கொள்ளுதல், தண்ணீ ரருந்தல், அமர்தல், நடத்தல் இவற்றைவிட அவை உண்மை யான செயல்கள். அவையே மெய்வினைகள், மற்றவை யெல்லாம் பொய் வினைகள் என்று கூறுதலும் மிகை யாகாது.

•

அத்தகைய பூசை அல்லது பிரார்த்தனை வாக்குவன்மை காட்டுவதற் குரியதல்ல. அவை உதட்டிலிருந்து வருவன வல்ல. பிரார்த்தனை ஹிருதய அந்தரங்கத்தினின்றும்

எழுவது. எனவே நாம் ஹிருதயத்தைத் தூயதாக்கி, அன்பொன்றைத் தவிர வேறெதற்கும் அங்கு இடமில்லாமற் செய்தோமாயின், வீணையின் எல்லாத் தந்திகளும் சுருதி கூட்டி வைக்கப்பெறும்போது இனிய சங்கீதம் எழுந்து இன்பம் விளைப்பதுபோல், உண்மைப் பிரார்த்தனை எழுந்து இறைவன் அருள் கூட்டுவிக்கும். பிரார்த்தனைக்குப் பேச்சு வேண்டாம்; புலன்களினால் எத்தகைய முயற்சியும் அவசியமில்லை. ஹிருதயத்தைக் காமக்ரோதாதிகளி லிருந்து விடுவித்துத் தூய தாக்குவதற்குப் பிரார்த்தனை உத்தமமான சாதனம் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் அதனுடன் அளவிறந்த தாழ்மைக் குணமும் கலந்திருத்தல் அத்தியாவசியமாகும்.

இருபத்திரேண்டாம் அத்தியாயம்

நாராயண ஹேமசந்திரர்

ஏறக்குறைய இதே சமயத்தில் நாராயண ஹேமசந்திரர் இங்கிலாந்துக்கு வந்தார். அவர் சிறந்த நூலாசிரியர் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். தேசீய இந்தியச் சங்கத்தைச் சேர்ந்த மிஸ் மானிங் என்னும் பெண்மணியின் வீட்டில் நாங்கள் சந்தித்தோம். பிறருடன் கலந்து பழகும் குணம் என்னிடம் இல்லையென்று அப் பெண்மணிக்குத் தெரியும். அவருடைய வீட்டுக்குப் போனால் நான் வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பது வழக்கம். யாரேனும் என்னுடன் பேசினால் மட்டுமே பதில் சொல்வேன். எனவே அவர் என்னை நாராயண ஹேமசந்திரருக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஹேமசந்திரருக்கு ஆங்கிலம் தெரியாது.

அவருடைய உடையோ விநோதமாயிருந்தது. 'தொள தொள' வென்றிருந்த காற்சட்டையும், பார்ஸி மாதிரியில், சுருக்கம் விழுந்து அழுக்குப் பிடித்த பழுப்பு நிற மேற் சட்டையும், கம்பளிக் குல்லாவும் அணிந்திருந்தார். கழுத் துப்பட்டை அல்லது சுருக்கு கிடையாது. நீண்ட தாடி வளர்த்துக் கொண்டிருந்தார்.

உருவத்தில் அவர் குட்டையானவர். ஒல்லியான தேக முடையவர். முகம் அம்மை வடு நிறைந்தது. மூக்கு கூரானது மன்று; தட்டையானது மன்று. கையினால் ஓயாமல் தாடியைத் தடவிக்கொண்டே யிருந்தார். நாகரிக மனிதர்கள் கூடியுள்ள இடத்தில் இப்படிப்பட்ட விநோத மனிதர்மீது எல்லாருடைய கவனமும் செல்வது இயல்பே யன்றோ?

"தங்களைப்பற்றி நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்கள் புத்தகங்கள் சிலவும் படித்திருக்கிறேன். நான் இருக்கும் இடத்திற்குத் தாங்கள் வந்தால் மிகவும் மகிழ்ச்சி யடைவேன்" என்று அவரிடம் கூறினேன்.

ஹேமசந்திரர் கொஞ்சம் கம்மலான குரல் உள்ளவர். முகத்தில் புன்னகையுடன் "ஓ! வருகிறேன். நீர் எங்கே இருக்கிறீர்?" என்று அவர் கேட்டார்.

"ஸ்டோர் தெருவில்."

"நான் இருப்பதும் அங்கேதான். நான் ஆங்கிலம் கற்றுக்கொள்ள விரும்புகிறேன். கற்றுக் கொடுக்கிறீரா?"

"என்னால் இயலும் அளவு கற்றுக் கொடுக்கத் தயார். அது எனக்குப் பெரிதும் மகிழ்ச்சி தரும். தாங்கள் விரும்பினால் தங்கள் இருப்பிடத்துக்கே வந்து கற்பிக் கிறேன்."

"வேண்டாம், வேண்டாம், நானே வருகிறேன். வரும்போது மொழிபெயர்ப்பு அப்பியாச புத்தகம் ஒன்றும் கொண்டு வருவேன்."

பின்னர் அவர் எப்போது வருவதென்பதைப்பற்றிப் பேசி முடிவு செய்தோம். விரைவில் நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களானோம்.

ஹேமசந்திரருக்கு இலக்கணம் என்றால் எப்படியிருக்குமென்று தெரியாது. 'குதிரை' என்பது வினைச் சொல் என்றும் 'ஓடு' யென்பது பெயர்ச்சொல் என்றும் கூறுவார். இத்தகைய அவரது விநோதத் தவறுகள் பல இன்னும் எனக்கு நினைவிருக்கின்றன. எனக்குத் தெரிந்த சிறிதளவு இலக்கணத்தை அவருக்குக் கற்பிக்க முயன்றது பயன் தரவில்லை. தமக்கு இலக்கணம் தெரியாதது ஓர் அவமானம் என்பதாகவும் அவர் கருதவேயில்லை.

கொஞ்சமும் தயக்க மென்பதில்லாமல் அவர் பின் வருமாறு கூறுவார்:—"உம்மைப்போல் நான் பள்ளிக் கூடத்துக்கு எப்போதும் சென்றதில்லை. என் எண்ணங்களை வெளியிடுவதற்கு இலக்கணத்தின் அவசியத்தை நான் உணர்ந்தது மில்லை. நீர் இவ்வளவு படித்தவராயிற்றே? நல்லது, உமக்கு வங்காளி பாஷை தெரியுமா? எனக்குத் தெரியும். வங்காளத்தில் நான் பிரயாணம் செய்திருக்கிறேன். மகரிஷி தேவேந்திர நாத் தாகூரின் நூல்களைக் குஜராத்தியருக்கு மொழி பெயர்த்துக் கொடுத்தவன் நான்தான். இன்னும் பல மொழிகளிலும் உள்ள அறிவுச் செல்வத்தையும் குஜராத்தியருக்கு மொழி பெயர்த்துக் கொடுக்க விரும்புகிறேன். மூலத்திற்கு நேரான மொழி பெயர்ப்பு நான் செய்வதில்லை யென்பது உமக்குத் தெரியும். மூலத்தின் கருத்தை மொழி பெயர்ப்பில்

கொண்டு வந்து விடுவதுடன் நான் திருப்தி யடைகிறேன். என்னைவிட அறிவாற்றலிற் சிறந்தவர்கள் வருங்காலத்தில் இன்னும் பெரிய காரியங்களைச் செய்யலாம். ஆனால் இலக்கணத்தின் உதவியின்றி நான் செய்திருக்கு மளவில் திருப்தி கொண்டிருக்கிறேன். மகாராஷ்டிரமும், ஹிந்தியும், வங்காளியும் எனக்குத் தெரியும். இப்போது ஆங்கிலம் கற்கத் தொடங்கி யிருக்கிறேன். ஒவ்வொரு மொழியிலும் எனக்கு வார்த்தைகள் ஏராளமாய்த் தெரிந்தால் போதும். என்னுடைய ஆசை இத்துடன் முடிவடைந்து விட்டது என்று நினைக்கிறீரா? அந்த பயமே வேண்டாம்! பிரான்சு தேசத்துக்குச் சென்று பிரஞ்சு மொழி கற்றுக்கொள்ள விரும்புகிறேன். அம்மொழியில் இலக்கியச் செல்வம் அதிகம் என்று கேள்விப்பட்டுள்ளேன். கூடுமானல் ஜர்மனி தேசமும் சென்று ஜர்மானிய பாஷை கற்றுக் கொள்ளவும் விரும்புகிறேன்.".

இப்படி இடைவிடாது அவர் பேசிக்கொண்டு போவார். பிறநாடுகளில் பிரயாணம் செய்வதிலும், பிற மொழிகளைக் கற்பதிலும் அவருக்கிருந்த ஆசை அளவற்றது.

"அப்படியானல் அமெரிக்காவுக்குக் கூடப் போவீர்களா?" என்று கேட்டேன்.

"கட்டாயம் போவேன், புது உலகத்தைப் பாராமல் நான் இந்தியாவுக்குத் திரும்புதல் எப்படிச் சாத்தியம்?"

"ஆனல் இவ்வளவுக்கும் பணத்துக்கு என்ன செய்வீர்கள்?"

"பணம் எதற்காக! உம்மைப்போல் நான் நாலைக்குக் கார னல்லன். பசிக்கு உணவும், உடம்பை

மூடத்துணியுமே எனக்கு வேண்டும். நான் எழுதிய புத்தகங்களிலிருந்து கிடைப்பதும், என் நண்பர்கள் கொடுப்பதுமே இதற்குப் போதும். எப்போதும் மூன்றும் வகுப்பிலேயே நான் பிரயாணம் செய்வது வழக்கம். அமெரிக்காவுக்குப் போகும் போதும் கப்பல் மேற்றட்டில் பிரயாணம் செய்வேன்."

ஹேமசந்திரரின் எளிய வாழ்க்கையும், அவருடைய கபடமற்ற தன்மையும் ஒன்றுக்கொன்று பொருத்தமாயிருந்தன. கர்வம் என்பது அவரிடம் அணுவளவும் கிடையாது. ஆனால் நூலாசிரியர் என்ற தமது திறமையைப்பற்றி மட்டும் அவர் கொஞ்சம் உள்ளதற்கு அதிகமாகவே எண்ணிக் கொண்டிருந்தார்.

நாங்கள் தினந்தோறும் சந்தித்தோம். எங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் நிரம்ப ஒற்றுமையிருந்தது. இருவரும் சைவ உணவு உண்பவர்கள். அடிக்கடி நாங்கள் சேர்ந்து சிற்றுண்டி அருந்தினோம். இது, நானே சமையல் செய்துகொண்டு வாரம் 17 ஷில்லிங் செலவில் வாழ்க்கை நடத்திய காலம். சிலமுறை நான் அவர் அறைக்குச் செல்வேன். மற்றும் சிலமுறை அவர் என் அறைக்கு வருவார். நான் ஆங்கில முறையில் சமையல் செய்து கொண்டிருந்தேன். இந்திய முறையில் செய்யப்படாவிட்டால் அவருக்குத் திருப்தி உண்டாகாது. பருப்பு இல்லாமல் அவருக்குச் சரிப்படாது. காரட் கிழங்குக் குழம்பு முதலியவை தயாரிப்பேன். என் சுவை இப்படிக் கெட்டுப் போயிற்றே என்று அவர் இரக்கப் படுவார். ஒரு முறை எங்கேயோ இந்தியக் காராமணி கண்டு பிடித்துப் பாகம் செய்துகொண்டு வந்தார். எனக்கு அது நிரம்பப் பிடித்திருந்தது. இதிலிருந்து, நான் தயாரிப்பதில்

நன்றாயிருக்கும் உணவுப் பண்டங்களை அவருக்கு அனுப்பு வதும் அவர் எனக்கு அவ்வாறே அனுப்புவதும் வழக்க மாயிற்று.

அப்போது கார்டினல் மானிங்கின் பெயர் எங்கும் பிரசித்தியாயிருந்தது. அக்காலத்தில் இங்கிலாந்தில் நேர்ந்த துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஜான் பர்ன்ஸ் கார்டினல் மானிங் இவர்களுடைய முயற்சியினால் விரைவில் முடிவடைந்திருந்தது. கார்டினல் மானிங்கின் எளிய வாழ்வைக் குறித்து முதன் மந்திரி டிஸ்ரேலி வியந்து கூறியதை ஹேமசந்திரருக்கு அறிவித்தேன். "அப்படி யானால் அந்த மகானை நான் பார்க்கவேண்டும்" என்று அவர் கூறினார்.

"அவர் பெரிய மனிதராயிற்றே? தாங்கள் எப்படி அவரைப் பார்க்க முடியும்?" என்று கேட்டேன்.

"அதற்கு வழி எனக்குத் தெரியும். என் பொருட்டு நீர் அவருக்கு எழுதவேண்டும். நான் ஒரு நூலாசிரிய னென்றும், அவருடைய ஜீவகாருண்ய வேலைக்காக நேரில் கண்டு வாழ்த்துக்கூற விரும்புகிறேனென்றும் எழுதும். என்க்கு ஆங்கிலம் தெரியாதாதலால் மொழிபெயர்ப்ப தற்காக உம்மையும் உடன் அழைத்துவர வேண்டியிருப்ப தாகத் தெரிவியும்."

அப்படியே ஒரு கடிதம் எழுதினேன். இரண்டு மூன்று நாளில் கார்டினலிடமிருந்து பதில் வந்தது. அவர் தம்மைப் பார்ப்பதற்கு ஒரு நேரங் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறே நாங்கள் இருவரும் சென்றோம். யாரையாவது பார்க்கச் செல்லுகையில் தரிப்பதற்கென என்னிடம் ஓர் உடுப்பு இருந்தது. அதை நான் தரித்துக்கொண்டேன்.

ஹேமசந்திரர் வழக்கம்போல் அதே மேற்சட்டையும் காற்சட்டையும் தான் அணிந்து வந்தார். இதன்பொருட்டு நான் கேலிசெய்தபோது அவர் கூறியதாவது:—"உம்மைப் போன்ற நாகரிக மனிதர்கள் எல்லாரும் வெறுங் கோழைகள். மகான்கள், ஒருவனது வெளித் தோற்றத்தைக் கண்டு அவனது பெருமையை மதிப்பிடுவதில்லை. அவனது ஹிருதயம் நல்லதா என்றே பார்ப்பார்கள்."

கார்டினல் மாளிகையை அடைந்து நாங்கள் ஆசனத்தில் அமர்ந்ததும், மெலிந்த, உயரமான கிழவர் ஒருவர் வந்து எங்களைக் கை குலுக்கினார். ஹேமசந்திரர் உடனே பின் வருமாறு வாழ்த்துரை கூறினார்:—"தங்கள் காலத்தை அதிகமாய் வீணாக்க நான் விரும்பவில்லை. தங்களைப்பற்றி நான் நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளருக்காக நீங்கள் செய்த அரிய வேலையின் பொருட்டு உங்களுக்கு வந்தனம் செலுத்த வேண்டுமென எனக்கு ஆவல் உண்டாயிற்று. உலகில் உள்ள மகான்கள் எல்லாரையும் சென்று தரிசிப்பது என் வழக்கம். அதனாலேயே தங்களுக்கு இத்தொந்திரவு கொடுத்தேன்."

இப்படி அவர் குஜராத்தியில் கூறியதை நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னேன்.

"நீங்கள் வந்தது குறித்துச் சந்தோஷம். லண்டன் வாழ்க்கை உங்களுக்கு ஒத்திருக்குமென்றும், இங்குள்ள ஜனங்களுடன் பழக்கம் செய்து கொள்வீர்களென்றும் நம்புகிறேன். ஆண்டவன் உங்களுக்கு அருள் புரிவானாக."

இவ்வாறு கூறிவிட்டுக் கார்டினல் எழுந்து நின்று விடையளித்தார்.

ஒருமுறை ஹேமசந்திரர் அரையில் வேஷ்டியும், மேலே உட்சட்டையும் மட்டும் அணிந்து நான் இருந்த இடத்துக்கு வந்தார். வீட்டுக்காரி அப்போது புதியவள். அவள் ஹேமசந்திரரை இதற்குமுன் பார்த்ததில்லை. அவ்வுத்தமி கதவைத் திறந்து அவரைப் பார்த்ததும் பயமடைந்து ஓடிவந்து "யாரோ பித்தன்போல் தோன்றும் ஒருவன் உங்களைப் பார்க்க விரும்புகிறான்" என்று கூறினள். நான் போய்ப் பார்த்தபோது ஹேமசந்திரரா யிருக்கக் கண்டு வியப்படைந்தேன். அவருடைய கோலம் என்னைத் திடுக்கிடச் செய்தது. அவர் முகத்தில் மட்டும் வழக்கமான புன்னகையே குடிகொண் டிருந்தது.

"தெருவிலுள்ள சிறுவர்கள் தங்களைத் தொடர்ந்து தொந்திரவு கொடுக்க வில்லையா?" என்று கேட்டேன்.

"ஆம். அவர்கள் என் பின்னல் ஓடி வந்தார்கள். ஆனல் அவர்களை நான் லட்சியம் செய்யாமையால் பேசாது திரும்பி விட்டார்கள்" என்றார்.

லண்டனில் சில மாதங்கள் தங்கியிருந்த பிறகு ஹேமசந்திரர் பாரிஸுக்குச் சென்றார். அங்கே பிரெஞ்சு பாஷை படிக்கவும் சில பிரெஞ்சு நூல்களை மொழி பெயர்க்கவும் தொடங்கினர். அவருடைய மொழி பெயர்ப்பைச் சரிபார்க்கப் போதிய அளவு எனக்குப் பிரெஞ்சு தெரிந்திருந்தது. எனவே மொழி பெயர்ப்பைப் படிக்க என்னிடம் கொடுத்தார். ஆனல் அது மொழி பெயர்ப்பாகவே இல்லை. சாராம்சத்தையே திரட்டி யிருந்தார்.

அமெரிக்காவுக்குப் போகும் தீர்மானத்தையும் அவர் கடைசியாக நிறைவேற்றினர். ஆனல் கப்பல் மேற்றட்டில்

பிரயாணம் செய்யும் சீட்டுப் பெறுவதற்கு நிரம்பக் கஷ்டப்பட வேண்டியிருந்தது. அமெரிக்கா ஐக்ய இராஜ்யத்தி லிருந்தபோது ஒருமுறை அவர் வேஷ்டியும் உட்சட்டையும் மட்டும் தரித்து வெளியே போனமையால், 'அநாகரிகமாக உடை யணிந்த' குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். விசாரணையில் விடுதலை யடைந்தார் என்பது என் ஞாபகம்.

இருபத்து மூன்றும் அத்தியாயம்

பாரிஸ் கண் காட்சி

பாரிஸ் நகரில் 1890 ஆம் வருஷத்தில் ஒரு பெரிய கண் காட்சி நடைபெற்றது. அதற்காக விமரிசையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தது குறித்துப் பத்திரிகையில் படித்திருந்தேன். பாரிஸ் நகரைப் பார்க்கவேண்டுமென்னும் ஆசையும் நிரம்ப இருந்தது. எனவே, இச்சமயத்தில், போய் வந்தால் இரண்டையும் பார்த்ததாகுமென எண்ணினேன். கண் காட்சியில் முக்கியமாக எய்பெல் கோபுரம் (Eiffel Tower) பிரசித்தி பெற்றிருந்தது. ஏறக்குறைய அது 1000 அடி உயரமுள்ளது. முழுதும் இரும்பினால் கட்டப்பட்டது. இன்னும் பார்க்கத் தகுந்த பொருள்கள் பல இருப்பினும் இக்கோபுரமே அவற்றுள் தலையாயதா யிருந்தது. ஏனெனில் அவ்வளவு உயரமான கட்டிடம் கீழே விழாமல் நிற்க முடியாதென்று அதுகாறும் கருதப்பட்டு வந்தது.

பாரிஸில் சைவ உணவு விடுதி ஒன்று இருப்பதாகக் கேள்விப் பட்டிருந்தேன். எனவே, அங்கு சென்று ஓர் அறையை ஏழு நாளைக்கு வாடகைக்குப் பிடித்தேன்.

பிரயாணத்தின்போதும், பாரிஸ் காட்சிகளைப் பார்த்த போதும் நிரம்பச் செட்டாகச் செலவு செய்தேன். பாரிஸ் நகரின் அமைப்புப் பட மொன்றும், கண் காட்சியின் பட மொன்றும், கண் காட்சியைப் பற்றிய விவரங்ளடங்கிய புத்தகம் ஒன்றும் வாங்கிக்கொண்டு அவற்றின் உதவியால் பெரும்பாலும் கால் நடையாகவே எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தேன். அவற்றைக் கொண்டே பிரதான வீதிகள், பார்க்கவேண்டிய முக்கியமான இடங்கள் எல்லாவற்றையும் கண்டுபிடித்தல் சாத்தியமா யிருந்தது.

கண் காட்சியைப் பற்றிய வரையில், அது மிகப் பெரிய தொன்று என்பதும், பல்வேறு வகைப் பொருள்கள் வைக்கப் பட்டிருந்தன என்பதுமே ஞாபக மிருக்கின்றன. 'எப்பெல்' கோபுரத்தில் இரண்டு மூன்று முறை ஏறி இறங்கியபடியால் அதைப்பற்றி நன்ருய் நினைவிருக்கிறது. கோபுரத்தின் முதல் மாடியில் போஜனசாலை யொன் றிருந்தது. அவ்வளவு உயரமான இடத்தில் சுற்றுண்டி அருந்தினேன் என்று சொல்லித் திருப்தி யடையும் பொருட்டு ஏழு ஷில்லிங் தொலைத்தேன்.

பாரிஸ் நகரிலுள்ள பண்டைக்காலக் கோயில்கள் இன் னும் என் நினைவில் இருக்கின்றன. அக் கோயில்களின் கம்பீரத் தோற்றமும், அவற்றுல் குடிகொண்டிருந்த அமைதியும் மறக்க முடியாதவையாகும். நாட்டர் டேம் கோயிலின் அற்புத அமைப்பும், அதன் உட்புறத்தில் செய்யப்பட்டிருக்கும் விமரிசையான சித்திரிப்பு வேலை களும், அழகான சிற்பங்களும் பார்த்தோர் உள்ளத்தை விட்டு என்றும் அகலா. கோடிக் கணக்காகச் செலவு செய்து இத்தகைய தெய்வீகக் கோயில்களைக் கட்டியவர்

களின் ஹிருதயத்தில் தெய்வ பக்தி குடிகொண்டிருந்திருக்கவே வேண்டுமென எண்ணினேன்.

பாரிஸ் நகரின் நாகரிக 'தோரணை'களைப் பற்றியும், களியாட்டங்களைப் பற்றியும் நான் நிரம்பக் கேள்விப்பட்டிருந்தேன். ஒவ்வொரு வீதியிலும் அவற்றை மெய்ப்படுத்தும் காட்சிகளைக் கண்டேன். ஆனால் அந்நகரின் கோயில்களுக்குள் ஒருவன் நுழைந்துவிட்டால் வெளிப்புறத்துச் சத்தத்தையும், சந்தடியையும் மறந்து விடுவான். உடனே அவனிடம் ஒரு மாறுதல் காணப்படும். கன்னி மேரியின் சிலையின் முன்பு மண்டியிட்டுத் தொழுவோரை அணுகும்போது அவன் பயபக்தியுடன் செல்வான். இவ்வாறு மண்டி யிடுதல், பிரார்த்தனை செய்தல் எல்லாம் வெறும் மூட நம்பிக்கை யாகாது என்று அப்போது எனக்குத் தோன்றிற்று. இன்றளவும் அவ் வுணர்ச்சி வளர்ந்து வருகிறதேயன்றி வேறில்லை. பயபக்தியுடன் அங்கு மண்டியிட்டுக் கொண்டிருந்தவர்கள் வெறுங் கல்லுக்கோ பிரார்த்தனை செலுத்திக்கொண் டிருந்தார்கள்? அவர்களைக் கவர்ந்திருந்தது மெய்யன்பே யாகும். அவர்கள் பூசித்தது கல்லையன்று. அக் கல் எதற் கறிகுறியாய் நின்றதோ அத்தெய்வீகத்தையே அவர்கள் ஆராதித்தார்கள். இத்தகைய ஆதாரனையால் அவர்கள் இறைவன் மகிமையை வளர்த்தார்களே யல்லாமல் குறைக்கவில்லை யென எனக்குத் தோன்றியது.

எப்பெல் கோபுரத்தைப்பற்றி இங்கு ஒரு வார்த்தை கூறவேண்டும். இன்று அக்கோபுரம் எவ்வாறு பயன் படுகிறது என்பது எனக்குத் தெரியாது. அப்போது அக் கோபுரத்தைப்பற்றிப் பலர் புகழ்ந்ததையும், மற்றும் பலர்

குறை கூறியதையும் கேட்டேன். அதைக் கண்டித்தவர்களில் முதன்மையானவர் டால்ஸ்டாய் என்று நினைவிருக்கிறது. மேற்படி கோபுரமானது மனிதனுடைய அறிவுக்கு ஞாபகச் சின்னமன்றென்றும் அவனுடைய அறியாமைக்கே ஒரு நினைவுக்குறியாகுமென்றும் அவர் கூறினர். "லாகிரிப் பொருள்களுள் புகையிலையே மிகக் கொடியது. குடிகாரன் ஒருபோதும் செய்யத் துணியாத குற்றங்களைப் புகையிலை உபயோகிப்பவன் செய்வான். மது ஒருவனைப் பைத்திய மாக்கும். புகையிலையோ அவனது மதியை மயக்கி ஆகாயக் கோட்டை கட்டச் செய்யும். இத்தகைய மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும்போது மனிதன் கட்டியவைகளுள் எப்பெல் கோபுரமும் ஒன்று" என அவர் எழுதினர். அக்கோபுரத்தில் கலைத்திறன் என்பது சிறிதும் கிடையாது. கண் காட்சிக்கு எவ்வகையிலும் அது உண்மை அழகு அளித்ததாகச் சொல்ல முடியாது. அத்தகைய உயரமான கட்டிடம் அப்போது முற்றிலும் புதிதாகையால் மனிதர்கள் அதைப் பார்க்கவும் அதில் ஏறவும் கும்பல் கும்பலாக வந்தார்கள். கண் காட்சியில் அதை ஒரு விளையாட்டுக் கருவி யென்றே சொல்லலாம். நாம் குழந்தைகளாய் இருக்கும் வரை விளையாட்டுக் கருவிகள் நம் மனதைக் கவர்கின்றன. நாம் எல்லோரும் இன்னும் குழந்தைகளே என்பதற்கு எப்பெல் கோபுரம் ஒரு நிதர்சனமான அத்தாட்சியா யிருந்தது. இவ்வுண்மை தெளிவாக விளங்கியது அக் கோபுரத்தினுல் விளைந்த பயன் எனக் கூறலாகும்.

இருபத்து நான்காம் அத்தியாயம்

பாரிஸ்டர் ஆனேன்—ஆனல்?

நான் இங்கிலாந்து போனது பாரிஸ்டர் ஆவதற்காக. அதைப்பற்றி ஏதும் சொல்லாமல் இதுகாறும் தள்ளிக்கொண்டே வந்துவிட்டேன். இனியேனும் அதைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுதல் அவசியமாகும்.

ஒரு மாணுக்கன் பாரிஸ்டர் ஆவதற்கு முன் இரண்டு நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும். மாணுக்கர்களும், அவர்களுக்குப் பட்டம் வழங்க வேண்டியவர்களான பாரிஸ்டர் நீதிபதிக் குழுவினரும் சேர்ந்து உணவருந்தும் விருந்து களுக்குச் செல்லுதல் ஒன்று; பரீட்சையில் தேறுதல் மற்றொன்று; ஒவ்வொரு மூன்று மாதத்திலும் 24 விருந்துகள் நடைபெறுகின்றன. இவற்றுள் குறைந்தது ஆறு விருந்துகளுக்கு மாணுக்கன் செல்லவேண்டும். இவ்வாறு மொத்தம் மூன்று வருஷங்கள் விருந்துண்ண வேண்டும். விருந்துக்குச் செல்பவர்கள் சாப்பிட்டே ஆகவேண்டு மென்று கட்டாயமில்லை. குறிப்பிட்ட நேரத்தில் சென்று விருந்து முடியும் வரை இருந்தால் போதும். ஆனல் நல்ல உணவுப் பண்டங்களும், உயரிய மது வகைகளும் அளிக்கப்பட்டபடியால் சாதாரணமாக எல்லாரும் வயிறு நிறைய உண்டு குடித்தலே வழக்கம். ஒவ்வொரு விருந்துக்கும் இரண்டு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரையில் கொடுக்கவேண்டி யிருந்தது, இத் தொகை மிதமானதென்றே கருதப்பட்டது. ஏனெனில் ஹோட்டல்களில் சாப்பிட்டால் மது வகைகளுக்கு மட்டும் அவ்வளவு கொடுக்க வேண்டியிருக்கும். இந்தியாவில் இன்னும் நாகரிக மடையாத ஜனங்களுக்கு, 'உணவுக்

கிரயத்தைவிடப் பானத்தின் கிரயம் இவ்வளவு அதிகமா?" என்று ஓர் ஆச்சரியம் ஏற்படலாகும். முதன் முதல் இவ் விவரம் எனக்குத் தெரிந்தபோது நான் திடுக்கிட்டுப் போனேன். குடியில் இவ்வளவு பணத்தை வாரியிறைக்க எப்படித்தான் ஜனங்கள் மனந் துணிகிறார்களோ வென்று வியப்புறுகிறேன். அநேகமாக இவ்விருந்துகளில் நான் ஒன்றும் சாப்பிடுவதில்லை. ரொட்டி, வேக வைத்த உருளைக்கிழங்கு, முட்டைக் கோஸ் என்னும் கீரை இவையே நான் சாப்பிடக் கூடியவை இவைகளும் ஆரம் பத்தில் எனக்குப் பிடியாததால் சாப்பிடவில்லை. பின்னால் அவை எனக்குச் சுவைக்கத் தொடங்கியபோது வேறு உணவுப் பொருள்கள் கேட்கவும் எனக்குத் தைரிய முண்டாகிவிட்டது.

மாணுக்கர்களுக்கு அளிக்கப்பட்ட சாப்பாட்டைவிட பாரிஸ்டர் - நீதிபதி கூட்டத்துக்கு அளிக்கப்பட்ட சாப் பாடு உயர்தரமானது. என்னைத் தவிர சைவ உணவு விரதங் கொண்ட பார்ஸீ மாணுக்கர் ஒருவரும் இருந்தார். நாங்கள் அவ்விரதத்தை முன்னிட்டு, பாரிஸ்டர் - நீதிபதிக் கூட்டத்துக்கு அளிக்கப்பட்ட சைவ உணவுப் பதார்த்தங் களில் சில எங்களுக்குத் தரும்படி கோரினோம். எங்கள் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டது. அதன் பயனாக எங்க ளுக்குப் பழங்களும், இன்னும் சில கறிவகைகளும் கிடைத்தன.

விருந்தில், நான்கு நான்கு பேருக்கு இரண்டு மதுப் புட்டிகள்வீதம் கொடுக்கப்பட்டன. நான் மது அருந்ாதவ னாதலால் என்னைத் தங்கள் தங்கள் கோஷ்டியில் சேர்ந்து கொள்ளும்படி எல்லாரும் அழைத்தார்கள். ஏனெனில் மற்ற மூவரும் இரண்டு புட்டிகளைக் காலி

செய்து விடலாமன்றே? மூன்று மாதங்களுக் கொரு முறை விசேஷ விருந்து ஒன்று நடக்கும். அன்று சாதாரணமாகக் கொடுக்கப்படும் மதுவகைகளோடு 'சாம்பேன்' முதலிய உயர்ந்த மது வகைகள் அதிகப்படியாகக் கொடுக்கப்படும். அத்தகைய தினங்களில் எனக்குக் கிராக்கி நிரம்ப அதிகம்.

மாணுக்கர்கள் பாரிஸ்டர் தொழிலுக்குத் தகுதியாவதற்கு இவ்விருந்துகளால் என்ன பயன் என்பது அப்போதும் எனக்குத் தெரியவில்லை; இப்போதும் தெரியவில்லை. ஒரு காலத்தில் மிகச் சில மாணுக்கர்களே இருந்தபோது அவர்களும் பாரிஸ்டர் - நீதிபதிகளும் பேசிப் பழகுவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன; உபந்நியாசங்களும் செய்யப்பட்டன. மாணுக்கர்கள் உலக ஞானம் பெறுவதற்கும், நாஸூக்காகப் பழகத் தெரிந்து கொள்வதற்கும், பேசுந் திறமை அடைவதற்கும் இவ்விருந்துகள் சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தந்தன. என்னுடைய காலத்தில் இது ஒன்றும் சாத்தியமில்லை. நீதிபதிகளும் பாரிஸ்டர்களும் மாணுக்கர்களிடமிருந்து தனியே தூரத்தில் உட்கார்ந்தார்கள். இவ்வழக்கத்துக்கு நாளடைவில் பொருளில்லாமலே போயிற்று. எனினும் பழமையில் பற்றுள்ள இங்கிலாந்து இன்னும் அவ்வேற்பாட்டைக் கடைப்பிடித்தே வருகிறது.

பரீட்சைக் குரிய பாடக்கிரமம் மிகவும் சுலபமானது. பாரிஸ்டர்கள் 'சாப்பாட்டு பாரிஸ்டர்கள்' என்று வேடிக்கையாக அழைக்கப்பட்டு வந்தார்கள். பெயருக்குத்தான் பரீட்சை என்பது எல்லாருக்கும் தெரியும். என் காலத்தில் இரண்டு பரீட்சைகள் உண்டு. ஒன்று ரோமன் சட்டத்திலும், மற்றென்று இங்கிலாந்தின் பழமை வழக்கச்

சட்டத்திலும், இவற்றில் தனித்தனிப் பகுதிகளுக்குப் பரீட்சைகளுக்குச் செல்லலாம். பரீட்சைகளுக்குப் பாட புத்தகங்கள் ஏற்பட் டிருந்தன. ஆனால் அவற்றைப் படிப்பார் யாருமில்லை. குறிப்புப் புத்தகங்களை இரண்டு வாரம் மேலெழுந்தவாரியாகப் படித்துவிட்டு ரோமன் சட்டப் பரீட்சையில் எழுதித் தேறியவர்களையும், அவ்வாறே இரண்டு மூன்று மாதம் குறிப்புகளைப் படித்து விட்டு இங்கிலாந்து சட்டத்தில் தேறியவர்களையும் எனக்குத் தெரியும். பரீட்சை வினாக்கள் மிகச் சுலப மானவை. பரீட்சகர்களோ தாராள மனமுள்ளவர்கள். ரோமன் சட்டப் பரீட்சையில் 100-க்கு 95 பேர் முதல் 99 பேர் வரை தேறிவிடுவார்கள். முடிவான பரீட்சையில் தேறுபவர்கள் 100-க்கு 75 பேருக்குக் குறைவில்லை. ஆதலின் பரீட்சையில் தவறிவிடுவோமோ வென்ற பயமே கிடையாது. மேலும் பரீட்சைகள் வருஷத்தில் ஒருமுறை யன்று, நான்கு முறை நடந்தன. இவ்வளவு சௌகரிய மான பரீட்சைகளை யாரும் கஷ்டமென்று கருதமாட் டார்க ளன்றோ?

ஆனால் நான் மட்டும் அவற்றைக் கஷ்டமாகச் செய்து கொண்டேன். பாட புத்தகங்கள் எல்லாவற்றையும் படித்து விடுதல் என் கடமை யென்று எண்ணினேன். அவற்றைப் படியாமலிருப்பது மோசம் செய்வதாகும் என்று நினைத்தேன். புத்தகங்கள் வாங்குவதில் பணம் நிரம்பச் செலவு செய்தேன். ரோமன் சட்டத்தை லத்தீன் பாஷையில் படிக்கத் தீர்மானித்தேன். மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப் படித்த லத்தீன் இப்பொழுது மிகவும் உபயோகமா யிருந்தது. தென்னாப்பிரிக்காவில் ரோமன்-டச்சு சட்டமே நாட்டின் சட்டமாதலால், இப்பொழுது

நான் படித்ததவ்வளவும் பின்னால் எனக்குப் பயன்படாமற் போகவில்லை.

இங்கிலாந்தின் பழமை வழக்கச் சட்டத்தை ஒன்பது மாதம் கஷ்டப்பட்டுப் படித்து முடித்தேன். புரூம், ஸ்னெல், வொயிட்-டியூடர், வில்லியம்ஸ்-எட்வர்டு, கூடிவ் முதலியோரால் எழுதப்பட்ட சட்ட புத்தகங்களை வாசித்தேன். வில்லியம்ஸ்-எட்வர்டு என்பவர்களால் எழுதப்பட்ட 'மெய்ச்சொத்து' என்னும் புத்தகம் ஒரு புதுக் கதையைப்போல் சுவை தருவதா யிருந்தது. இந்தியா திரும்பிய பின்னர் அவ்வளவு சுவையுடன் நான் படித்ததாக நினைவிருக்கும் புத்தகம் மேயன் எழுதிய 'ஹிந்து சட்ட'மே யாகும். ஆனால் இந்தியச் சட்ட புத்தகங்களைப்பற்றிக் கூற இது இடமன்று.

பரீட்சைகளில் தேறி 1891-ம் வருஷம் ஜுன் மாதம் 10-ந் தேதி பாரிஸ்டர் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளப் பட்டேன். 11௳ ஹைகோர்ட்டில் நியாயவாதியாகப் பதிவு செய்யப் பெற்றேன். 12௳ யன்று இந்தியாவுக்குப் புறப் பட்டேன்.

இவ்வளவு தூரம் படித்தேனாயினும் என்னுடைய அதைரியத்துக்கும் தவிப்புக்கும் அளவில்லை. வக்கீல் தொழில் செய்வதற்குத் தகுதிபெற்று விட்டதாக எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால் இதைப்பற்றி ஒரு தனி அத்தியாயத்திலேயே விவரமாய்க் கூற இயலும்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

என் அதைரியம்

பாரிஸ்டர் ஆதல் மிகச் சுலபமாகவே இருந்தது. ஆனால் பாரிஸ்டர் தொழில் நடத்துவதே கஷ்டமாகத் தோன்றிற்று. நான் சட்டங்களைப் படித்திருந்தேனே யொழியச் சட்டவாதம் செய்யும் முறை பயலவில்லை. சட்டக் கோட்பாடுகளைச் சிரத்தையுடன் படித்திருந்தேன். ஆனால் அவற்றை ஆதாரமாகக்கொண்டு வாதிக்கும் முறை அறிந்தேனில்லை. 'உன்னுடைய சொத்தை மற்றவர்களுடைய சொத்துக்குத் தீங்கு நேராத வகையில் உபயோகப் படுத்துவாயாக' என்பது சட்டக் கோட்பாடுகளில் ஒன்று. ஆனால் கட்சிக் காரனுக்குச் சாதகமாக இக்கோட்பாட்டைப் பயன் படுத்துவது எவ்வாறு என்று எனக்குத் தெரியவில்லை. இக்கோட்பாட்டின் மேல் எழுந்த பெரிய வழக்குகளின் விவரம் எல்லாவற்றையும் படித்தேன். எனினும் வருங்காலத்தில் அதை உபயோகப்படுத்தி வழக்குகளில் வாதமிடலாம் என்னும் நம்பிக்கை வரவில்லை.

மேலும், இந்தியச் சட்டத்தைப்பற்றி நான் எதுவுமே படிக்கவில்லை. ஹிந்து, முஸ்லிம் சட்டங்கள் எப்படியிருக்குமென்பதே தெரியாது. பிராது நகல் எழுதக்கூட அறிந்தவனல்லன். கடல் நடுவில் விடப்பட்டவன்போல் திசை தெரியாது தவித்தேன். ஸர் பிரோஸிஷா மேதா நீதிமன்றங்களில் சிங்கத்தைப் போல் கர்ச்சனை செய்வார் எனக் கேள்விப்பட்டிருந்தேன். அவ்வித்தையை அவர் இங்கிலாந்தில் எவ்வாறு கற்றுக்கொண் டிருக்கக் கூடுமென்று ஆச்சரியப்பட்டேன். அவரைப்போல் நியாய வாதத்தில் அவ்

வளவுதிறமை பெறலாம் என்று கனவில்கூட நான் ஆசைப் படுவதற்கில்லை. அந்தத் தொழிலில் ஜீவனோபாயத்துக்கு வருமானம் கிடைத்தாலே போதுமென நினைத்தேன். அது வேனும் கிடைக்குமா என்பதே எனக்குப் பெரிதும் சந்தேகமா யிருந்தது.

நான் சட்டம் படித்துக்கொண் டிருந்தபோதே இத் தகைய ஐயங்களும் கவலைகளும் என்னைப் பிடுங்கித் தின்றன. இவற்றை எனது நண்பர் சிலருக்குத் தெரிவித் தேன். தாதாபாய் நௌரோஜியின் புத்திமதியைக் கேட்கும்படி அவர்களில் ஒருவர் சொன்னார். நான் இங்கி லாந்து சென்றபோது தாதாபாய் நௌரோஜிக்கு ஓர் அறிமுகக் கடிதம் கொண்டு போனேனென்று முன்னமே சொல்லி யிருக்கிறேன். ஆனால் அக்கடிதத்தை நான் உடனே பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவ்வளவு பெரிய மனிதருக்கு அநாவசியமாகத் தொந்திரவு கொடுக்கக் கூடாதென்று எண்ணினேன். ஆனால் அவர் பிரசங்கம் செய்யப் போகிறார் என்று அறிவிக்கப்படும்போ தெல்லாம் தவறாது செல்வேன். அவருடைய உருவத் தோற்றமும் உபந்நியாசமும் கண்ணுக்கும் செவிக்கும் நல்விருந்தா யிருக்கும். ஒரு மூலையிலிருந்து கேட்டுவிட்டுப் பிரசங்கம் முடிந்ததும் போய்விடுவேன். மாணக்கர்களோடு நெருங் கிப் பழகுவதற்காக அவர் ஒரு சங்கம் கண்டிருந்தார். அதன் கூட்டங்களுக்கு நான் போவதுண்டு. மாணக்கர் களின் நலத்தில் தாதாபாய் காட்டும் கவலையையும், அவ ரிடம் மாணக்கர் வைத்திருந்த நன்மதிப்பையும் கண்டு மகிழ்ச்சி யடைவேன். இவ்வாறு சிலகாலமான பின்னர், அவர்பால் அணுகி அறிமுகக் கடிதத்தைக் கொடுக்க எனக்குத் தைரியம் பிறந்தது. "உமக்கு விருப்பமானபோ தெல்லாம் என்னிடம் வந்து புத்திமதி கேட்கலாம்"

என்று அவர் சொன்னர். ஆனல் ஒருமுறை கூட நான் அவரிடம் செல்லவில்லை. இன்றியமையாத அவசியம் ஏற்பட்டாலன்றி அவருக்குத் தொந்திரவு கொடுக்கலாகா தென்று எண்ணினேன். எனவே என் நண்பரின் யோசனையின்படி அவரிடம் சென்று புத்திமதி கேட்க நான் துணியவில்லை. அந்த நண்பரோ, வேருெருவரோ—நன்கு ஞாபகமில்லை—மிஸ்டர் பிரடரிக் பிங்கட் என்பாரைப் பார்க்கும்படி யோசனை கூறினர். மிஸ்டர் பிங்கட் கன்ஸர்வேடிவ் கட்சியினராயினும் இந்திய மாணக்கர்களிடம் அன்புகொண்டவர். அவரன்பு பரிசுத்தமானது; சுயநலக் கலப்பற்றது. மாணக்கர் பலர் அவரிடம் புத்திமதியை நாடி வந்தனர். அவரை வந்து பார்க்க அனுமதி கோரி நானும் அவருக்கு எழுதினேன். அவருடைய அநுமதியும் கிடைத்தது. அவரைச் சந்தித்துப் பேசிய விவரத்தை நான் என்றும் மறவேன். நெருங்கிப் பழகிய நண்பரைப்போல் அவர் எனக்கு முகமன் கூறினர். என்னுடைய கவலைகளைக் கேட்டு அவர் நகைத்தார். அவர் கூறியதாவது:—ஒவ்வொருவரும் பிரோஸிஷா மேதாவாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறீரா? பிரோஸிஷாக்களும் பட்ருடீன்களும் அபூர்வமாகவே இருப்பார்கள். சாதாரண வக்கீலாக இருப்பதற்கு அசாதாரணமான சாமர்த்தியம் எதுவும் வேண்டுவதில்லை. இதை உறுதியாக நம்பும். சாதாரண முயற்சியும், கண்யமும் இருந்தால் ஜீவனேபாயத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை. வழக்குகள் எல்லாமே சிக்கல் உள்ளவைகளாயிரா. இருக்கட்டும், பொது அறிவுக்குரிய படிப்பு எந்த அளவில் படித்திருக்கிறீர்? சொல்லும் பார்ப்போம்.”

என்னுடைய பொதுப் படிப்பு மிகக் கொஞ்சம் என்பதை அவர் அறிந்தபோது சற்று ஏமாற்றமடைந்தார்

என்பதைக் கண்டேன். ஆனால் இது ஒரு கணத்தில் மாறி விட்டது. புன்னகை பூத்த முகத்துடன் அவர் கூறிய தாவது:—"உம்முடைய கஷ்டம் என்னவென்பது எனக்குத் தெரிகிறது. உமது பொதுப் படிப்பு நிரம்ப சொற்பம். வக்கீலுக்கு உலக ஞானம் இன்றியமையாதது. உமக்கு அதுதான் இல்லை. இந்திய சரித்திரம்கூட நீர் படித்ததில்லை. வக்கீல் தொழில் செய்வோனுக்கு மனித சுபாவம் நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஒரு மனிதனுடைய குணங்களை அவன் முகத் தோற்றத்திலிருந்து அறியும் ஆற்றல் வேண்டும். மேலும் இந்தியன் ஒவ்வொருவனுக்கும் இந்திய சரித்திரம் தெரிந்திருக்க வேண்டாமா? வக்கீல் தொழிலுக்கும் அதற்கும் சம்பந்தமில்லையாயினும் உமக்குச் சரித்திர ஞானம் அவசியம். கேயும், மாலிஸனும் இயற்றிய 1857-ம் வருஷத்துக் கலகத்தின் சரித்திரங் கூட நீர் படித்ததில்லை. உடனே அதை வாங்கிப் படியும். மனித சுபாவத்தை முகத்தில் படித்தறிவதற்கு லவேடர், ஷெம்மல் பென்னிக் என்பவர்கள் எழுதிய இரண்டு புத்தகங்களையும் உடனே வாங்கி வாசியும்"

பெரியாரான இந்நண்பரிடம் நான் அளவற்ற நன்றியுடையவனானேன். அவர் முன்னிலையில் என்னுடைய பயங்கள் எல்லாம் பறந்துபோயின. ஆனால் அவரை விட்டுப் பிரிந்ததும் பழையபடியே கவலைப்படத் தொடங்கினேன். ஒருவன் முகத்திலிருந்து அவன் குணங்களைக் கண்டு கொள்வதெப்படி? இக்கேள்வி என் உள்ளத்தை அலைத்துக் கொண்டிருந்தது. மறுநாள் லவேடரின் புத்தகத்தை வாங்கினேன். ஷெம்மெல் பென்னிக்கின் புத்தகம் கடையில் கிடைக்க வில்லை. லவேடரின் புத்தகம் மிகவும் கஷ்டமாயிருந்தது. படிப்பதற்கு ரசமாகவும் இல்லை. ஷேக்ஸ்பியரின் முகத்தோற்றத்தைப் பற்றிப் படித்தேனு

யினும், லண்டன் தெருக்களில் குறுக்கு நெடுக்காகச் சென்றுகொண்டிருந்த ஷேக்ஸ்பியர்களைக் கண்டுகொள்ளும் ஆற்றல் பெற்றேனில்லை.

லவேடரின் புத்தகத்தினால் நான் புதிய அறிவு எதுவும் பெறவில்லையென்று சொல்லலாம். பொதுவாக, மிஸ்டர் பிங்கட்டின் புத்திமதிகள் எனக்கு நேர்முகமாக எவ்வித நன்மையும் செய்யவில்லை. ஆனால் அவருடைய அன்பு எனக்கு உறுதுணையா யிருந்தது. புன்னகை பூத்த அவரது கள்ளமற்ற முகம் எப்போதும் என் நினைவில் பதிந்து கிடந்தது. பிரோஸிஷா மேதாவுக் கிருந்ததுபோல் அவ்வளவு ஞாபக சக்தியும், திறமையும் இருந்தால்தான் வக்கீல் தொழிலில் வெற்றி பெறலாம் என்பதில்லை என்றும் கண்யமும், முயற்சியும் இருந்தால் போதுமென்றும் அவர் உறுதி கூறியதை நான் நம்பினேன். இவ்விரண்டு குணங்களும் என்னிடம் ஓரளவு இருந்தபடியால் சிறிது கவலை நீங்கப் பெற்றவனானேன்.

கேயும் மாலிஸனும் எழுதிய சிப்பாய்க் கலகத்தின் சரித்திரத்தை இங்கிலாந்தில் படிக்க முடியவில்லை. ஆனால் சந்தர்ப்பம் கிடைத்ததும் படிக்கவேண்டுமென்று எண்ணியிருந்தேன். பின்னால் தென்னாப்பிரிக்காவில் அதைப் படித்தேன்.

இவ்வாறு மனதில் ஒரு புறத்தில் மிக அதைரியமும் மற்றொரு புறத்தில் சிறிதளவு நம்பிக்கையுங் கொண்டவனாய் எஸ். எஸ். அஸ்ஸாம் என்னும் கப்பலில் பிரயாணம் செய்து பாம்பாயில் வந்து இறங்கினேன். துறைமுகத்தில் கடலின் கொந்தளிப்பு அதிகமாயிருந்தபடியால் தோணிப் படகு மூலம் கரை சேர வேண்டியிருந்தது.

சத்திய சோதனை

இரண்டாம் பாகம்

தடுத்து நிறுத்திவிட என்னால் முடிந்தது. ஒன்றும் நேரி டாதது போலவே வாழ்க்கையில் இறங்கினேன்.

டாக்டர் மேதா பல நண்பர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். அவர்களில் ஒருவர் டாக்டர் மேதாவின் சகோதரரான ஸ்ரீ சங்கர் ஜகஜீவன் என்பார். இவருக் கும் எனக்குமிடையே அத்தியந்த நேயம் உண்டாகி வளர லாயிற்று. ஆனால் அப்போது எனக்கு அறிமுகமானவர் களில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியவர் கவி ராய் சந்து என்னும் இராஜ சந்திரர் ஆவர். இவர் டாக்டர் மேதாவின் மூத்த சகோதரர் ஒருவரின் மாப்பிள்ளை. ரேவா சங்கர் ஜகஜீவனின் பெயரால் நடைபெற்ற நகை வியாபாரக் கடையின் கூட்டாளி. அவருக்கு அப்போது 25 வயதுக்கு மேலிராது. ஆனால் முதன் முறை சந்தித்தபோதே, அவர் சிறந்த ஒழுக்கமும், புலமையும் உடையவர் என்பது எனக்குத் தெரிந்து விட்டது. அவர் சதாவதானி என்று பெயர் பெற்றிருந்தார். அவர் தம் அதிசய ஞாபகசக்தி யின் துணையினால் புரியும் அருஞ் செயல்கள் சிலவற்றைப் பார்க்கும்படி டாக்டர் மேதா எனக்குக் கூறினார். ஐரோப்பிய பாஷைகள் எல்லாவற்றிலும் எனக்கு எவ் வளவு வார்த்தைகள் தெரியுமோ அவ்வளவையும் சொல்லி அவைகளைத் திருப்பி ஒப்பு விக்கச் சொன்னேன், ஒன்று விடாமல் நான் சொல்லிய வரிசைப்படியே அவர் கூறினார். அவருடைய இச்சக்தியை நான் பெரிதும் வியந்தேனாயினும், அதில் மயங்கிப் போய் விடவில்லை. ஆனால் பின்னர் நான் அறியவந்த அவருடைய குண நலன்கள் சில உண்மையி லேயே என்னை மயக்கி அடிமை கொண்டன. சமய நூல் களில் அவருக்கிருந்த அபார அறிவும், அவரது மாசற்ற ஒழுக்கமும், ஆத்மானுபூதிச் செல்வத்தை அடைவதில்

என் தமையனார் என்னைச் சந்திப்பதற்காகத் துறை முகத்துக்கே வந்திருந்தார். அவர் ஏற்கனவே டாக்டர் மேதாவுடன், அவர் சகோதாருடனும் அறிமுகம் செய்து கொண்டிருந்தார். டாக்டர் மேதா தமது வீட்டிலேயே நான் தங்க வேண்டுமென்று வலியுறுத்தியபடியால் நாங்கள் அவர் வீடு போந்தோம். இவ்வாறு இங்கிலாந்தில் ஆரம்ப மான பழக்கம் இந்தியாவில் வளரலாயிற்று. நாளடைவில் அது எங்கள் இரண்டு குடும்பங்களுக்குள்ளும் நிரந்தரமான நட்பாக முதிர்ச்சி யடைந்தது.

என் தாயாரை பார்க்க வேண்டுமென்று என் உள்ளம் தவித்தது. இறைவனடி சேர்ந்து விட்டாரென்றும், இனி தமது பூத உடலினால் என்னை வரவேற்று வாஞ்சையுடன் தழுவி மகிழப் போவதில்லை யென்றும் நான் அறியேன். அந்தத் துக்கச்செய்தி இப்போதே எனக்கு அறிவிக்கப் பட்டது. ஸ்நாநம் முதலிய வழக்கமான கிரியைகளைச் செய்து முடித்தேன். நான் இங்கிலாந்திலிருந்த போதே என் அருமை அன்னையார் இறந்து போனார். அன்னிய நாட்டில் தனித்திருக்கையில் என்னை பெருந் துக்கத்துக் காளாக்க வேண்டா மென்ற கருத்துடன் என் தமையனார், அச்செய்தியை தெரிவியாமல் வைத்திருந்தார். ஆனால் இப்போதும், அச்செய்தி கேட்டுப் பெரிதும் கலங்கியே போனேன். இதைப்பற்றி நான் அதிகமாக விவரித்தல் கூடாது. தந்தையின் மரணத்தை விடத் தாயின் மரணம் அதிக துக்கம் விளைத்துவிட்டது என்று மட்டும் கூறு கிறேன். என் உள்ளத்திலிருந்த நெடுநாள் ஆசைகள் எவ்வளவோ இதனால் பங்க முற்றுப் போயின. ஆனால் இது குறித்து நான் அழுது புலம்ப ஆரம்பித்து விடவில்லை யென்பது நினைவில் இருக்கிறது. கண்ணீரைக்கூடத்

தடுத்து நிறுத்திவிட என்னால் முடிந்தது. ஒன்றும் நேரி டாதது போலவே வாழ்க்கையில் இறங்கினேன்.

டாக்டர் மேதா பல நண்பர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். அவர்களில் ஒருவர் டாக்டர் மேதாவின் சகோதாரரான ஸ்ரீ சங்கர் ஜகஜீவன் என்பார். இவருக் கும் எனக்குமிடையே அத்தியந்த நேயம் உண்டாகி வளர லாயிற்று. ஆனால் அப்போது எனக்கு அறிமுகமானவர் களில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியவர் கவி ராய் சந்து என்னும் இராஜ சந்திரர் ஆவர். இவர் டாக்டர் மேதாவின் மூத்த சகோதரர் ஒருவரின் மாப்பிள்ளை. ரேவா சங்கர் ஜகஜீவனின் பெயரால் நடைபெற்ற நகை வியாபாரக் கடையின் கூட்டாளி. அவருக்கு அப்போது 25 வயதுக்கு மேலிராது. ஆனால் முதன் முறை சந்தித்தபோதே, அவர் சிறந்த ஒழுக்கமும், புலமையும் உடையவர் என்பது எனக்குத் தெரிந்து விட்டது. அவர் சதாவதானி என்று பெயர் பெற்றிருந்தார். அவர் தம் அதிசய ஞாபகசக்தி யின் துணையினால் புரியும் அருஞ் செயல்கள் சிலவற்றைப் பார்க்கும்படி டாக்டர் மேதா எனக்குக் கூறினார். ஐரோப்பிய பாஷைகள் எல்லாவற்றிலும் எனக்கு எவ் வளவு வார்த்தைகள் தெரியுமோ அவ்வளவையும் சொல்லி அவைகளைத் திருப்பி ஒப்பு விக்கச் சொன்னேன், ஒன்று விடாமல் நான் சொல்லிய வரிசைப்படியே அவர் கூறினார். அவருடைய இச்சக்தியை நான் பெரிதும் வியந்தேனாயினும், அதில் மயங்கிப் போய் விடவில்லை. ஆனால் பின்னர் நான் அறியவந்த அவருடைய குண நலன்கள் சில உண்மையி லேயே என்னை மயக்கி அடிமை கொண்டன. சமய நூல் களில் அவருக்கிருந்த அபார அறிவும், அவரது மாசற்ற ஒழுக்கமும், ஆத்மானுபூதிச் செல்வத்தை அடைவதில்

அவருக்கிருந்த அடங்கா ஆவலுமே இக்குணங்கள். ஆத்மாநுபூதி இலட்சியம் ஒன்றுக்காகவே அவர் உயிர் வாழ்ந்தாரெனக் கண்டேன். முக்தானந்தரின் பாட்டு ஒன்றை எப்போதும் அவர் சொல்லிக்கொண்டேயிருப் பார். அவர் ஹிருதயத்திலே அப்பாட்டு பதிக்கப்பட் டிருந்ததெனச் சொல்லலாம். அது வருமாறு:—“தினசரி வாழ்க்கையில் நான் புரியும் செயல் ஒவ்வொன்றிலும் ஆண்டவனை எப்போது காண்கிறேனோ அப்போதே நான் கிருதார்த்தனாவேன். முக்தானந்தரின் உயிரைத் தாங்கி நிற்கும் நூலிழை அவனே என்பதில் சந்தேகம் யாது?”

ராய் சந்தரின் வியாபாரம் அற்ப சொற்பமானதன்று; லட்சக் கணக்கினது. முத்து, வைரப் பரீட்சைகளில் அவர் கைதேர்ந்தவர். வியாபார சம்பந்தமான எவ்வளவு சிக்கலான பிரச்னையும் அவருக்கரியதன்று. ஆனால் இது ஒன்றும் அவர் வாழ்க்கையில் முக்கியமான இடம் பெற வில்லை. ஆண்டவனை நேருக்கு நேர் தரிசிக்க வேண்டு மென்ற அடங்காப் பிரேமையே அவருடைய வாழ்வின் முதன்மையான நோக்கமாயிருந்தது. அவருடைய வியா பார மேஜைமீது மத சம்பந்தமான புத்தகம் ஒன்றும், அவருடைய தினசரி (டைரி) யும் எப்போதும் இருந்து கொண்டிருக்கும். வியாபார வேலை முடிந்த உடனே சமய நூலையோ தினசரியையோ எடுத்துக் கொள்வார். அவர் எழுதியவற்றுள் பிரசுரமாகி யிருப்பவை பெரும் பாலும் அவருடைய தினசரியிலிருந்து எடுக்கப்பட்டவை யாகும். வியாபாரத் துறையில் பெரிய பேரங்களைப் பேசி முடித்துவிட்டு அடுத்த கணக்கில் ஆத்ம ரகசிய தத்து வங்களைப்பற்றி எழுதத் தொடங்கிய ஒருவர் வியாபாரியே யாகார் என்று சொல்லவும் வேண்டுமோ? அத்தகைய வரைச் சத்திய உபாசகர் என்றே கூறவேண்டும்.

இவ்வாறு அவர் வியாபார உலகின் மத்தியில் அமர்ந்திருக்கையிலேயே கடவுளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை ஒருமுறை இருமுறையன்று—பல முறைகளில் நான் பார்த்தேன். அவர் மனம் சாந்த நிலையினின்று நழுவியதை நான் ஒருபோதும் கண்டதில்லை. அவருக்கு என்னிடம் வியாபார விஷயமாகவோ வேறு சுயநலக் காரணம் பற்றியோ எவ்வித சம்பந்தமும் கிடையாது. எனினும் என்னுடன் அவர் நெருங்கிப் பழக மனமுவந்தார். அக்காலத்தில் நான் வக்காலத்து இல்லா வெறும் பாரிஸ்டரேயாயினும் அவர் என்னைப் பார்த்தபோதெல்லாம் பாரமார்த்திக விஷயங்களைப் பற்றிப் பேசத் தொடங்குவார். அப்போது நான் இருளில் வழி தெரியாமல் தடவிக்கொண்டிருந்தவன். சமய சம்பந்தமான விவாதங்களில் அதிக சிரத்தையிருந்ததாகவும் சொல்ல முடியாது. ஆனால் அவருடைய பேச்சில் மட்டும் எனக்கு மிகவும் பிரியமாயிருந்தது. அதற்குப்பின் நான் எவ்வளவோ மதத் தலைவர்கள், சமய குருக்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் ராய் சந்தரைப்போல் என் மனதைக் கவர்ந்தவர் அவர்களில் ஒருவர்கூட இல்லையென்று சொல்லலாம். அவருடைய மொழிகள் என் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று பதிந்தன. அவரது ஒழுக்கப்பற்றைப் போலவே அவரது அறிவு மேன்மையும் அவரிடம் நான் மதிப்புக் கொள்வதற்குக் காரணமாயிற்று. என்னை வேண்டுமென்று அவர் தப்பு வழியில் செலுத்தமாட்டாரென்றும், தமது ஹிருதய அந்தரங்கத்தில் எழும் எண்ணங்களையும் எனக்குத் தெரிவித்து விடுவாரென்றும் உறுதியான நம்பிக்கை பெற்றேன். எனவே பாரமார்த்திக வாழ்வுத் துறையில் ஏதேனும் நெருக்கடி நேரும்போதெல்லாம் அவரே எனக்குத் தஞ்சமா யிருந்து வந்தார்.

அவரிடம் நான் இவ்வளவு மதிப்பு வைத்திருந்தே னயினும், எனது ஹிருதய சிம்மாசனத்தில் அவரை எனது குரு நாதனுக ஏற்றிவைத்தே னில்லை. அச் சிம்மாசனம் இன்றளவும் வெறுமையாகவே யிருக்கிறது. நானும் குரு நாதனை இன்னும் தேடிக்கொண்டுதா னிருக்கிறேன்.

ஆத்ம சாதனத் துறையில் குருவின் முக்கியத்தைப் பற்றிய ஹிந்துமதக் கொள்கையில் எனக்கு நம்பிக்கை யுண்டு. குரு உபதேசமின்றி ஒருவன் மெய்ஞ்ஞானம் பெறமுடியாது என்னும் தத்துவத்தில் பெரிதும் உண்மை யிருக்கிறது. லௌகிகக் கல்விப் பயிற்சிக்கு, வேறு வழி யில்லாவிடில், அரைகுறையாகத் தெரிந்த உபாத்தியாய ரிடமே செல்லலாம். ஆனுல் பாரமார்த்திக ஞானம் பெறுவதற்கு இது கூடாது. அதற்குப் பரிபூரண ஞானியையே குருவாகக் கொள்ளவேண்டும். ஆதலின் பூரணத்துவம் பெறுவதற்கு நாம் இடைவிடா முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் ஒருவன் தன் தகுதிக் கிசைந்த வண்ணமே குருவைப் பெருகிறுன். பூரணத்துவம் பெறுதற்காகச் சதா முயற்சி செய்துகொண்டிருத்தல் நம்முடைய உரிமை. இத்துறையில் முயற்சியே பயனுமாம். மற்றவை இறைவன் திருவுள்ளப்படி நடைபெறும்.

இவ்வாறு, ராய் சந்தரை என் குருநாதனுக ஹிருதய சிம்மாசனத்தில் ஏற்றிவையாவிடினும் பல சந்தர்ப்பங் களில் அவர் எனக்கு அருந்துணையாகவும் வழிகாட்டி யாகவும் இருந்தார் என்பதைப் போகப்போகப் பார்ப் போம். தற்கால மனிதர்களில் என் உள்ளத்தைக் கவர்ந்து என் வாழ்க்கையின் போக்கைச் சமைத்தவர் மூவர். ராய் சந்தர் தமது ஜீவிய சங்கத்திஞலும், டால்ஸ்டாய்

'ஆண்டவன் இராஜ்யம் உனக்குள்ளே' (The Kingdom of god is within you) என்ற புத்தகத்தாலும், ரஸ்கின் என்பார் 'முடிந்த நிலை' (Unto this Last) என்ற நூலினாலும் அவ்வாறு என் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாயினர். பின் இருவரையும் பற்றி உரிய இடத்தில் விவரமாகக் கூறுவேன்.

இரண்டாம் அத்தியாயம்

வாழ்க்கை தொடங்கிய விதம்

என் தமையனர் என்னைப்பற்றிப் பெரிய ஆகாயக் கோட்டை கட்டியிருந்தார். பணம், பெயர், புகழ் இவற்றில் அவருக்குப் பற்று அதிகம். அவர் விசாலமான ஹிருதயம் படைத்தவர். அளவுக்கு மிஞ்சிய தாராள குண முள்ளவர். இத்துடன் அவர் கபடமற்ற சுபாவ முடையவராயு மிருந்ததால் அவருக்கு நண்பர்கள் பலர் ஏற்பட்டிருந்தனர். அவர்கள் மூலமாக என்னிடம் கட்சிக்காரர்கள் அதிகமாய் வருவதற்கு ஏற்பாடு செய்யலாம் என அவர் நம்பினர். எனக்கு ஏராளமான வருவாய் கிடைக்குமென்று எதிர்பார்த்து அவர் வீட்டுச் செலவுகளையும் மிகுதியாகப் பெருக்கி விட்டார். நான் தொழில் நடத்துவதற்கு வேண்டிய முன் ஏற்பாடு ஒன்றும் அவர் யாக்கி வைக்கவில்லை.

நான் வெளிநாட்டுப் பிரயாணம் செய்தது குறித்து என் சாதியாரிடையே தோன்றிய கிளர்ச்சி இன்னும் இருந்தே வந்தது. அதன் பயனுகச் சாதியில் இரண்டு கட்சிகள் ஏற்பட்டிருந்தன. ஒரு கட்சியார் என்னை

உடனே சாதியில் திரும்பச் சேர்த்துக் கொண்டனர். மற்றொரு கட்சியார் என்னைச் சாதிப்பிரஷ்டனாக வைத்திருப்பதில் உறுதி கொண்டிருந்தனர். முதலில் சொன்னவர்களை மகிழ்விப்பதற்காக என் சகோதரர் இராஜகோட்டைக்குப் போவதற்கு முன் என்னை நாஸிக் நகருக்கு அழைத்துச் சென்று, அங்கே புண்ணிய நதியான கோதாவரியில் ஸ்நானம் செய்வித்தார். பின்னர் இராஜகோட்டைக்குச் சென்றதும் சாதி விருந்து ஒன்றும் நடத்தினர். எனக்கு இது ஒன்றும் பிடிக்கவில்லை. ஆனால் என் சகோதரர் என்னிடம் அளவற்ற அன்பும், அதற்கேற்ப நான் அவரிடம் பக்தியும் கொண்டிருந்தபடியால், அவருடைய விருப்பத்தின்படியெல்லாம் மறுத்துக் கூறாமல் நடந்தேன். இப்படியாக, புனர் சாதிப் பிரவேசத்தைப் பற்றிய தொல்லை ஒருவாறு முடிவடைந்தது.

என்னைச் சாதியில் ஏற்றுக்கொள்ள மறுத்த கட்சியாரை என்னை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய நான் எப்பொழுதும் முயலவேயில்லை. அக்கட்சியின் தலைவர்கள் மீது எனக்குக் கோபம் வரவுமில்லை. அவர்களில் சிலர் என்னை வெறுத்தனர். ஆனால் நான் அவர்கள் உள்ளம் புண்படும்படியான காரியம் எதுவும் செய்யாமல் மிக ஜாக்கிரதையாயிருந்துவந்தேன். அவர்கள் என்னைச் சாதிப்பிரஷ்டனாக்கி விதித்த கட்டுப்பாடுகளுக்கு முற்றிலும் இணங்கி நடந்தேன். இக் கட்டுப்பாடுகளின்படி, எனது மாமனார், மாமியார், சகோதரி, மைத்துனர் முதலிய உறவினர் யாரும் எனக்கு விருந்தளித்தல் கூடாது. ஆகவின் அவர்கள் வீட்டில் நான் தண்ணீர்கூட அருந்துவதில்லை. இக் கட்டுப்பாட்டை இரகசியமாக மீற அவர்கள் சித்தமாயிருந்தனர். ஆனால் பகிரங்கமாகச் செய்யக்

கூடாத ஒரு காரியத்தை இரகசியமாகச் செய்தல் என் இயல்புக்கே முற்றும் மாறுனதாகும்.

இவ்வாறு சிறிதும் குறை கூறுவதற்கிடமின்றி நான் நடந்துகொண்டபடியால் சாதியினுல் எனக்குத் தொந்திரவு நேரிட்டதே யில்லை. அக்கட்சியார் இன்னமும் என்னைச் சாதிப் பிரஷ்டனுகவே கருதி வருகிருர்க ளாயினும் பொதுவாக அவர்கள் என்னிடம் அன்பும் தயாளமுமே காட்டி வந்திருக்கிருர்கள். சாதிக்கென்று நான் எதுவும் செய்ய வேண்டுமென எதிர்பாராமலே என்னுடைய வேலைக்கு அவர்கள் உதவியும் செய்திருக்கிருர்கள். நான் அவர்களை எதிர்த்துப் போராடாமல் இருந்ததின் பயனே இது என்பது என் நம்பிக்கை. நான் என்னைச் சாதியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கிளர்ச்சி செய்து இன்னும் அதிக கட்சிகளை உண்டாக்க முயன்று அவர்களுக்குக் கோபமூட்டி யிருப்பேனுயின், அவர்களும் நிச்சயமாகப் பதிலுக்குப் பதில் செய்திருப்பார்கள். இங்கிலாந்திலிருந்து வந்ததும் சாதிக் கிளர்ச்சி என்னும் பெருஞ் சுழலில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடி யிருப்பேன். ஒரு வேளை பொய் நடிப்பை மேற்கொள்ள வேண்டியும் வந்திருக்கலாம். நிற்க,

என் இல்வாழ்க்கை இன்னும் நான் விரும்பியவாறுகவில்லை. இங்கிலாந்து வாசத்தினுலும் என்னிடமிருந்த பொறுமைக் குணம் அகலவில்லை. ஒவ்வொரு சிறு விஷயத்துக்கும் என் மனைவிமீது சந்தேகப்பட்டு எரிந்து விழுந்தேன். எனவே என் ஆசைகள் எல்லாம் கைகூடாமலே யிருந்தன. என் மனைவி எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளுதல் அவசிய மென்றும் அவளுக்கு நானே சொல்லிக் கொடுக்கலா மென்றும் எண்ணி யிருந்தேன்.

ஆனால் இந்நோக்கம் நிறைவேறு வண்ணம் என் காமம் குறுக்கே நின்றது. என்னிட மிருந்த குறை காரணமாய் அவள் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. ஒரு முறை கோபித்துக்கொண்டு அவளைத் தந்தை வீட்டுக்கே அனுப்பி விட்டேன். அவளைக் கொடிய மனத் துயரத்துக்கு ஆளாக்கிய பிறகே திரும்ப அழைத்துக் கொண்டேன். இவை யெல்லாம் எனது அறிவீனமே யென்று பின்னால் அறிந்தேன்.

குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் முறையில் சீர் திருத்தம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருந்தேன். என் சகோதரருக்குக் குழந்தைகள் இருந்தன. நான் இங்கிலாந்துக்குப் புறப்பட்டபோது கைக்குழந்தையாக விட்டுச் சென்ற என் புதல்வன் இப்போது நாலுவயதுச் சிறுவனாயிருந்தான். இந்தக் குழந்தைகளுக்குத் தேகாப்பியாசம் கற்பித்து அவர்களைத் திடகாத்திரர்களாய்ச் செய்யவேண்டுமென்றும், என்னுடைய நேரான மேற் பார்வையில் அவர்களை வளர்க்க வேண்டுமென்றும் எனக்கு ஆசையுண்டு. இதில் என் சகோதரருடைய ஆதரவும் எனக்குக் கிடைத்தது. ஏறக்குறைய இம் முயற்சியில் வெற்றி பெற்றேனென்று கூறலாம். குழந்தைகளின் சங்கத்தை நான் பெரிதும் விரும்பினேன். குழந்தைகளுடன் பரிகாசம் செய்து விளையாடும் வழக்கம் இன்னமும் என்னிடம் இருந்து வருகிறது. குழந்தைகளுக்குப் பாடங் கற்பிக்கும் உபாத்திமைத் தொழில் எனக்கு மிகவும் ஏற்றது என்ற எண்ணம் அன்று முதல் எனக்கு உண்டு.

உணவுச் சீர்திருத்தத்தின் அவசியத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை. ஏற்கனவே வீட்டிலுள்ளார்

தேயிலேயும், காபியும் அருந்தி வந்தனர். நான் இங்கிலாந்து வாழ்க்கையிலிருந்து திரும்பியதும் வீட்டில் அதிக வித்தியாசம் காணக்கூடாது என்பதற்காக என் சகோதரர் சில ஏற்பாடுகள் செய்திருந்தார். விசேஷ சந்தர்ப்பங்களில் உபயோகிப்பதற்காக வீட்டிலிருந்த பீங்கான் சாமான் முதலியன இப்போது தினசரி உபயோகத்துக்கு வந்திருந்தன. நான் செய்த சீர்திருத்தங்கள் இவைகளுக்குச் சிகரம் வைத்தது போலாயின. ஓட்மீல் கூழையும், தேயிலே, காப்பிக்குப் பதிலாகக் கோக்கோவையும் நான் புதிதாகச் சேர்த்தேன். ஆனால் கோக்கோவும் கூடச் சேர்ந்ததே யொழியத் தேயிலேயும், காபியும் போகவில்லை. ஏற்கனவே செருப்புகளும், பூட்ஸுகளும் உபயோகத்தில் இருந்தன. நான் ஐரோப்பிய உடையையும் சேர்க்கவே எல்லாம் ஐரோப்பிய மயமாயின.

இவ்வாறு செலவு பெருகலாயிற்று. தினந்தோறும் புதிய புதிய பொருள்கள் வாங்கிச் சேர்க்கப்பட்டன. வீட்டு வாயிலில் வெள்ளை யானையைக் கொண்டுவந்து கட்டியாகி விட்டது. அதற்குத் தீனி போடுவது எப்படி யென்றுதான் தெரியவில்லை. இராஜ கோட்டையில் தொழில் நடத்த ஆரம்பித்தல் நகைப்புக் கிடமாகும் என்பது நிச்சயம். சாதாரண வக்கீல் ஒருவருக்குத் தெரிந்த விஷயங்கள் கூட எனக்குத் தெரியா. ஆயினும் அவரைப்போல் பத்து மடங்கு ஊதியம் எனக்குக் கொடுக்க வேண்டுமென எதிர்பார்த்தேன்! இந்நிலைமையில் என்னை அமர்த்துவதற்கு எந்தக் கட்சிக்காரன் தான் அவ்வளவு முட்டாளா யிருப்பான்? அப்படியே ஒரு முட்டாள் இருப்பினும், என் அறியாமையுடன் இறுமாப்பையும், மோசத்தையுங் கூட்டி, உலகத்துக்கு நான்

டிருக்கும் கடன் சுமையை இன்னும் பெரிதாக்கிக் கொள்ள வேண்டுமோவென எண்ணினேன்.

பம்பாய்க்குச் சென்று உயர்தர நீதிமன்றத்தில் சில நாள் அநுபவம் பெறும்படியும், அங்கே இந்தியச் சட்டம் படிப்பதுடன் கூடியவரை முயன்று வழக்குகள் சம்பாதிக்கப் பார்க்கும்படியும் நண்பர்கள் யோசனை கூறினார்கள். இந்த யோசனையை ஏற்றுக்கொண்டு நான் பம்பாய் போய்ச் சேர்ந்தேன்.

பம்பாயில் ஒரு பரிசாகரனை வைத்துக்கொண்டு ஜாகை ஏற்படுத்தினேன். பரிசாரகன் பிராமணன், நான் என்னுடைய தொழிலில் எவ்வளவு தேர்ந்தவனோ அவ்வளவு தேர்ச்சிதான் அவனுக்கும் அவனுடைய தொழிலில் உண்டு. நான் அவனை வேலைக்காரனாகப் பாவித்து நடத்தாமல் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனாகவே நடத்தினேன். அவன் உடம்பின்மீது தண்ணீரை ஊற்றிக் கொள்வான்; ஆனால் சுத்தமாகத் தேய்த்துக் குளிப்பதென்றால் அவனுக்குத் தெரியாது. அவன் ஆடை அழுக்கடைந்தது. பூணூலும் அப்படியே. சாஸ்திரங்களைப் பற்றியோ வெனில் அவன் கேள்விப்பட்டதேயில்லை. ஆனால், அவனைவிட நல்ல பரிசாரகனை எங்கே போய்த் தேடுவது?

"நல்லது ரவிசங்கர்! உனக்குச் சமைக்கத் தெரியாமலிருக்கலாம். சந்தியா வந்தனமாவது தெரிந்திருக்க வேண்டுமே" என்று அவனை நான் கேட்பேன்.

"சந்தியாவந்தனமா? சரிதான், ஐயா! கலப்பை தான் எங்களுக்குச் சந்தியா வந்தனம். மண்வெட்டிதான் அக்னி ஹோத்ரம். அப்படிப்பட்ட பிராமணன் நான். தங்கள்

தயவினால் தான் பிழைக்க வேண்டும். இல்லாவிட்டால் விவசாயம் இருக்கவே இருக்கின்றது" என்று ரவிசங்கர் பதிலளிப்பான்.

எனவே, நான் ரவிசங்கருடைய உபாத்தியாயனாக வேண்டியிருந்தது. சாவகாசத்துக் கென்னவோ குறை வில்லை. அரைவாசி சமையல் நான் செய்தேன். கறி காய் வர்க்கங்களை ஆங்கில முறையில் சமைத்துச் சோதனை செய்யலானேன். எண்ணெய் அடுப்பு ஒன்று வாங்கி, ரவிசங்கரின் உதவிகொண்டு அடுப்பங்கரை உத்தியோகத் தில் இறங்கினேன். ஒரே பந்தியில் உண்பது பற்றி எனக்கு ஆட்சேபமில்லை. ரவிசங்கருக்கும் ஆட்சேப மிராது போகவே, நாங்கள் சுகமாக வாழ்க்கை நடத்தி வந்தோம். ஆனால் ஒரே ஒரு குறை மட்டும் குறுக்கே நின்றது. ரவிசங்கர் அழுக்காகத்தான் இருப்பேன் என்று ஆணையிட்டான்! சோற்றையும அசுத்தமாகவே வைத் திருப்பேன் என்று பிடிவாதம் செய்தான்.

ஆனால் பம்பாயில் நாலைந்து மாதங்களுக்கு மேல் என்னால் காலட்சேபம் செய்ய முடியவில்லை. செலவு நாளுக்கு நாள் பெருகி வர, அதற்குத் தகுந்த வருவாயை மட்டும் காணோம்.

இவ்வாறு நான் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தேன். பாரிஸ்டர் தொழில் நல்ல தொழிலன்று எனக் கண்டேன். அதில் ஆடம்பரம் அதிகம். அறிவோ கொஞ்சம். எனக்கு ஏற்பட்டிருந்த பொறுப்பை யெண்ணிப் பெரிதும் கவலைக் குள்ளானேன்.

மூன்றாம் அத்தியாயம்

முதல் வழக்கு

நான் பம்பாயில் இருந்தபோது ஒரு பக்கத்தில் இந்தியச் சட்டங்கள் படிக்கவும் மற்றொரு பக்கத்தில் உணவுப் பரிசோதனைகள் செய்யவும் தொடங்கினேன். இச் சோதனைகளில் வீரசந்திர காந்தி என்னும் நண்பரும் என்னுடன் சேர்ந்துகொண்டார். என் சகோதரரோ, எனக்கு வழக்குகள் தேடிக்கொடுக்கத் தம்மாலியன்றவரை முயன்று கொண்டிருந்தார்.

இந்தியச் சட்டம் படித்தல் மிகத் தொல்லையான வேலை. முக்கியமாய் சிவில் புரோஸீஜர் கோட் புத்தகத்தை என்னால் படிக்கவே முடியவில்லை. ஆனால் சாட்சியச் சட்டம் இவ்வாறன்று. வீரசந்திர காந்தி ஸொலிஸிடர் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தார். பாரிஸ்டர்களைப் பற்றியும் வக்கீல்களைப்பற்றியும் அவர் எனக்குப் பற்பல கதைகள் சொல்வார். "ஸர் பிரோஸிஷாவின் திறமையின் இரகசியம் அவருக்குச் சட்டங்களிலுள்ள அபார அறிவேயாகும். சாட்சியச் சட்டம் முழுதும் அவருக்குத் தலைக்கீழ்ப்பாடம். முப்பத்திரண்டாவது பிரிவு சம்பந்தமான எல்லா வழக்குகளையும் அவர் அறிவார்" என்றும், "பட்ருடின் தயாப்ஜியின் விவாதத் திறமை ஆச்சரியகரமானது; நீதிபதிகளையும் பிரமிக்க செய்வது" என்று அவர் கூறுவார். பெரிய பெரிய தீரர்களைப் பற்றிய இத்தகைய கதைகளைக் கேட்டு என் மனத்தளர்ச்சி மிகுதியாயிற்று.

அவர் மேலுங் கூறுவார்:—'பாரிஸ்டர்கள் சில சமயங்களில் ஐந்து ஆறு வருஷ காலம் வருவாயின்றிக் காத்திருக்க வேண்டி வரும். இப்படிப்பட்டவர்கள் பலர்

உண்டு. ஆகையினலேயே நான் ஸொலிஸிடர் பரீட்சைக்குப் போகிறேன். மூன்று வருஷ காலத்துக்குள் நீங்கள் உங்கள் வாழ்க்கைப் படகைச் செலுத்தக் கூடுமானல் அதிர்ஷ்டசாலி யென்று எண்ணிக் கொள்ளுங்கள்."

மாதம் மாதம் செலவுகள் என்னவோ ஏறிக்கொண்டிருந்தன. வீட்டுக்குள்ளே பாரிஸ்டர் தொழிலுக்கு இன்னும் தயார் செய்து கொண்டிருக்கையில் வெளியே 'பாரிஸ்டர்' என்ற விளம்பரப் பலகை தொங்கவிட்டிருப்பது குறித்து என் மனச்சான்று உறுத்திக்கொண்டேயிருந்தது. இதன் பயனுக நான் படிப்பில் முழுக் கவனம் செலுத்தக்கூடவில்லை. சாட்சியச் சட்டம் படிப்பதில் ஓரளவு எனக்கு விருப்பம் விழுந்தது. மேயன் என்பவரின் ஹிந்து சட்டத்தை மிகுந்த சிரத்தையுடன் படித்தேன். ஆனலும் வழக்கு நடத்துவதற்குரிய தைரியம் எனக்கு வரவில்லை. நான் எவ்வளவு அதைரியங் கொண்டிருந்தேனென்று விவரித்தல் அசாத்தியம். மாமனர் வீட்டுக்குப் புதிதாக வந்த மருமகள்போல் பரிதவித்தேன்.

இச்சமயத்திலேயே மமிபாய் என்னும் பெண்மணியின் வழக்கை நடத்துவதாக ஏற்றுக்கொண்டேன். அது 'ஸ்மால்காஸ்' வழக்கு. வழக்கு கொண்டுவரும் தரகனுக்குத் தரகு கொடுக்கவேண்டும் என்று சொன்னர்கள். இதற்கு நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன்.

"மாதம் 3000, 4000 சம்பாதிக்கும் பெயர் பெற்ற வக்கீலான இன்னர் கூடத் தரகு கொடுக்கிருரே!" என்றார்கள்.

"நான் அவரைப் பின்பற்ற வேண்டுவதில்லை. எனக்கு மாதம் 300 ரூபாய் கிடைத்தால் போதும். என் தந்தைக்கு அதற்குமேல் கிடைக்கவில்லை" என்று பதிலளித்தேன்.

"ஆனால் அந்தக் காலம் மலையேறிவிட்டது. பம்பாயில் வாழ்க்கைச் செலவு எவ்வளவோ பெருகி யிருக்கிறது; காசில் கருத்தா யிருந்தாலன்றிச் சரிப்படாது."

என்ன சொல்லியும் நான் கேட்கவில்லை. தரகு கொடுக்கப் பிடிவாதமாய் மறுத்தேன். எனினும் மமிபாயின் வழக்கு என்னிடமே வந்தது. வழக்கு சுலபமானது. 30 ரூபாய் கூலி பேசினேன். வழக்கு ஒரு நாளைக்குமேல் நீடிக்கக்கூடியதன்று.

'ஸ்மால் காஸ்' கோர்ட்டில் நான் ஆஜரானது இதுவே முதல் தடவை. பிரதிவாதியின் சார்பாக நான் ஆஜரானபடியால் வாதியின் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவேண்டி வந்தது. நான் எழுந்து நின்றேன். ஆனால் மேலே ஒன்றும் ஓடவில்லை. என் தலை சுழன்றது. நீதி மன்றம் முழுவதும் சுழல்வதுபோல் காணப்பட்டது. கேள்வி ஒன்றும் கேட்பதற்குத் தோன்றவில்லை. நீதிபதி சிரித்திருக்க வேண்டும். அங்கிருந்த மற்ற வக்கீல்களுக்கும் இந்தக் காட்சி குதூகலத்தை அளித்திருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால் நானோ இது ஒன்றையும் பார்க்கும் நிலையில் இல்லை. திரும்ப ஆசனத்தில் உட்கார்ந்து, என் கட்சிக்காரியின் பிரதிநிதியிடம் என்னால் வழக்கை நடத்த முடியாதென்றும், வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாகவும், படேல் என்பவரை அமர்த்திக் கொள்ளும்படியும் சொன்னேன். அவ்வாறே ஸ்ரீ படேல் ரூ. 51-க்கு அமர்த்தப்பட்டார். அவருக்கு இவ்வழக்கு குழந்தை விளையாட்டா யிருந்தது.

நீதிமன்றத்திலிருந்து ஜாகைக்கு விரைந்து சென்றேன். என் கட்சிக்காரி ஜெயித்தாளோ தோற்ருளோ அறியேன். நிகழ்ந்ததை நினைந்து வெட்கினேன். இனிமேல் வழக்கு நடத்துவதற்குத் தைரியம் வரும் வரையில் வழக்கு ஒப்புக் கொள்வதில்லை யெனத் தீர்மானித்தேன். உண்மையில் அதற்குப் பிறகு தென்னுப்பிரிக்காவுக்குப் போவதற்கு முன்னுல் நான் நீதிமன்றத்தில் அடி வைக்கவில்லை. ஆனுல் மேற் சொன்னவாறு தீர்மானித்ததில் பாராட்டுதற்குரிய தெதுவும் கிடையாது. வேறு வழியின்மையாலேயே அத்தகைய முடிவுக்கு வந்தேன். என்னை அமர்த்தினுல் தோல்வி நிச்சய மென்றறிந்தும் என்னிடம் வழக்கை ஒப்படைக்கும்படி எவன்தான் அவ்வளவு பெரிய முட்டாளா யிருப்பான்?

ஆயினும் பம்பாயில் மற்ருெரு வழக்கு என்னிடம் வராமற் போகவில்லை. வழக்கு விண்ணப்பம் தயாரித்துக் கொடுத்தலே அவ்வேலை யாகும். போர்பந்தரில் ஓர் ஏழை முஸ்லிமின் நிலம் பறிமுதல் செய்யப்பட்டது. நான் எனது தந்தைக்கேற்ற தனயனு யிருப்பேனென எண்ணி அவர் என்னிடம் வந்தார். அவருடைய கட்சி பலமற்றது எனத் தோன்றியது. ஆயினும் ஒரு விண்ணப்பம் எழுதிக் கொடுக்கச் சம்மதித்தேன். அச்சுக் கூலியை அவர் பொறுத்துக் கொள்வதாகச் சொன்னுர். நகல் விண்ணப்பம் எழுதி என் நண்பர்களிடம் படித்துக் காட்டினேன். அவர்கள் நன்ருயிருக்கிறதென்று சொல்லவே, விண்ணப்பம் தயாரிப்பதற்கேனும் நான் தகுதியுள்ளவன் என்னும் நம்பிக்கை எனக்கேற்பட்டது. உண்மையிலேயே நான் அவ்வாற்றல் பெற்றிருந்தேன்.

கூலியில்லாமல் விண்ணப்பங்கள் தயாரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தால் எனது தொழில் நன்ருக நடத்தல் கூடும்! ஆனால் அடுப்பில் உலை ஏறுவதற்கு வழி வேண்டுமே! எனவே, எங்கேனும் உபாத்தியாயர் வேலை ஒப்புக்கொள்ளலாமா வென எண்ணினேன். எனக்கு நல்ல ஆங்கில ஞான மிருந்தபடியால், மெட்ரிகுலேஷன் வகுப்புக்கு ஆங்கிலம் போதிக்கும் வேலை எனக்கு மிகப் பிரியமா யிருந்திருக்கும். இதன் மூலம் வீட்டுச் செலவில் ஒரு பகுதிக்கேனும் வழி பிறக்குமென எண்ணினேன். "ஓர் ஆங்கில உபாத்தியாயர் தேவை. தினம் ஒரு மணி நேரம் கற்பிக்க வேண்டும். சம்பளம் ரூபாய் 75" என்று ஒரு விளம்பரத்தைப் பத்திரிகையில் பார்த்தேன். பிரசித்தி பெற்ற உயர்தர பள்ளிக்கூட மொன்றினுல் அவ்விளம்பரம் செய்யப்பட் டிருந்தது. நான் விண்ணப்பம் போடவே, நேரில் வந்து பார்க்கும்படி பதில் வந்தது. மிகுந்த உற்சாகத்துடன் போனேன். ஆனால் தலைமை ஆசிரியர் நான் பி. ஏ. பட்டதாரி அல்லன் என அறிந்ததும் என்னை ஏற்க மறுத்துத் தமது வருத்தத்தை தெரிவித்தார்.

"லத்தீன் மொழியை இரண்டாம் பாஷையாகக் கொண்டு லண்டன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறியிருக்கிறேனே" என்று நான் கூறினேன்.

"உண்மையே, ஆனால் எங்களுக்கு பி. ஏ. தான் வேண்டும்" என்ருர் தலைமை ஆசிரியர்.

வேறு வழியில்லை. செய்வதென்னவென்று தெரியாமல் கைகளைப் பிசைந்தேன். என் சகோதரரும் நிரம்பக் கவலைக் குள்ளானுர். இனி பம்பாயில் இருப்பதில் பயனில்லை என்று இருவரும் முடிவு செய்தோம். என் சகோதரர் இராஜகோட்டையில் ஒரு சின்ன வக்கீ

லாகையால் நானும் அங்கேயே வந்தால் விண்ணப்பங்கள் தயாரிப்பது முதலான வேலைகள் தாக்கூடு மென்று கூறினர். ஏற்கனவே இராஜ கோட்டையில் ஜாகை இருந்தபடியால், பம்பாய் ஜாகையைக் கலைப்பதால் கிரம்பப் பணம் மீதியாகும். எனக்கு இந்த யோசனை உசிதமாகத் தோன்றிற்று. இவ்வாருக ஆறு மாத வாசத்திற்குப் பிறகு எனது பம்பாய்க் குடித்தனம் கலைக்கப்பட்டது.

பம்பாயி லிருந்தபோது நான் தினந்தோறும் உயர்தர நீதிமன்றத்துக்குப் போய் வருவதுண்டு. ஆனல் அங்கே நான் எதுவும் கற்றுக் கொண்டதாகச் சொல்ல முடியாது. கற்றுக் கொள்வதற்கு வேண்டிய சட்டஞானம் எனக்குப் போதாது. பல சமயங்களில் வழக்கு நடைமுறை எனக்குப் பிடிபடுவதே யில்லை. எனவே உட்கார்ந்தபடியே தூங்கிவிடுவேன். இதில் எனக்குக் கூட்டாளிகள் பலர் இருந்தபடியால் நான் அவ்வளவாக வெட்கப்படவில்லை. கொஞ்ச காலத்துக்குப் பிறகு, நீதிமன்றத்தில் உறங்குவது ஒரு நாகரிக வழக்கம் என்று எண்ணக் கற்றுக் கொண்டேன். எனவே வெட்க உணர்ச்சியே இல்லாமல் போயிற்று.

பம்பாய் இக்காலத்திலும், என்னைப்போல் வருவாய் இல்லாத பாரிஸ்டர்கள் இருப்பரேல், அவர்களுக்கு வாழ்க்கை நடத்துவது குறித்துச் சில அநுபவ யோசனைகள் கூற விரும்புகிறேன். நான் கிர்க்காம் என்னும் பகுதியில் வசித்தே னாயினும், குதிரை வண்டியேனும், டிராம் வண்டியேனும் ஏறுவது கிடையாது. நீதிமன்றத்துக்குத் தினந்தோறும் நடந்தே சென்றுகொண்டிருந்தேன். இதற்குச் சுமார் முக்கால் மணி நேரம்

பிடிக்கும். திரும்பி வருங் காலையிலும் அநேகமாக நடந்தே வந்தேன். வெயிலில் நடந்து நடந்து எனக்கு வெயில் சூடே தோன்றாமல் போய் விட்டது. நீதி மன்றத்துக்கு நடந்துபோய் நடந்துவரும் வழக்கத்தினால் பணம் நிரம்ப மீதியாயிற்று. மேலும் பம்பாயில் எனது நண்பர்கள் பலரும் நோயினால் பீடிக்கப் படுவது வழக்கமா யிருந் திருக்க, எனக்கு மட்டும் ஒரு முறை கூட நோய் வந்ததாக ஞாபகமில்லை. நான் பணம் சம்பாதிக்க ஆரம்பித்த பிறகும் காரியாலயத்துக்கு நடந்து சென்று வரும் வழக் கத்தை விடவில்லை. இந்த நல் வழக்கத்தின் நற்பயன்களை இன்றளவும் நான் துய்த்து வருகிறேன்.

நான்காம் அத்தியாயம்

முதல் அதிர்ச்சி

பம்பாயில் ஆசாபங்கமுற்ற நான் இராஜகோட்டைக்குச் சென்று எனக்கென்று ஒரு தனிக் காரியால யத்தை ஏற்படுத்திக் கொண்டேன். இங்கு என் தொழில் சுமாராய் நன்றாகவே நடந்து வந்தது. விண்ணப்பங்கள் மகஜர்கள் முதலியவை தயாரித்து கொடுப்பதில் சராசரி மாதம் முந்நூறு ரூபாய் வருவாய் கிடைத்தது. ஆனால் இதற்கு எனது திறமையைவிட என் சகோதரரின் செல் வாக்கே முக்கிய காரணமாகும். அவருடைய கூட்டாளி வக்கீலிடம் வழக்கமாக வரும் கட்சிக்காரர்கள் பலர் உண்டு. மிகவும் முக்கியமான—அல்லது முக்கியமான தென்று அவருக்குத் தோன்றுகிற—விண்ணப்பம் முதலி யவைகளை அவர் பெரிய பாரிஸ்டர்களிடம் அனுப்பி வைப் பது வழக்கம். ஏழைக் கட்சிக்காரர்களுக்கு எழுத வேண்டிய விண்ணப்பங்கள் என் பங்குக்கு விழுந்தன.

வழக்குப் பிடித்துத் தருவதற்குத் தரகு கொடுப்ப தில்லை யென்னும் கொள்கையைப் பம்பாயில் கடைப் பிடித்து நடந்ததாக முன்னம் கூறியுள்ளேன். ஆனால் இங்கே அக்கொள்கையினின்றும் பிறழ வேண்டி வந்த தென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். "அங்கும் இங்கும் நிலைமை வேறு. பம்பாயில் வழக்குப் பிடித்து வரும் தரகர்களுக்குத் தரகு கொடுக்க வேண்டும். இங்கே பாரிஸ்டர்களை அமர்த்திக் கொடுக்கும் வக்கீல்களுக்கே தரகு தர வேண்டும். பம்பாயைப் போலவே இங்கும் நூற்றுக்கு இவ்வளவு வீதம் என்று தரகு கொடாத பாரிஸ்டர் ஒருவர் கூட இல்லை" என்று எனக்குச் சொன்னார்கள். என் சகோதாரின் வாதத்துக்கு என்னால் பதில் உரைக்க முடியவில்லை. அவர் கூறியதாவது:—"நான் இன்னொரு வக்கீலுடன் கூட்டாளியா யிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமே. உன்னால் செய்யக்கூடுமான வேலைகள் எல்லாவற்றையும் உனக்கே தந்துவிட வேண்டு மென்றுதான் நான் எப்போதும் விரும்புவேன். ஆனால் என் கூட்டாளிக்கு நீ தரகு கொடுக்க மறுத்துவிட்டால் எனது நிலை நிரம்ப சங்கடமாகி விடும். நீயும் நானும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாதலால், உனது வருவாய் முழுதும் நமது பொதுப் பெட்டிக்கே வந்து சேருகிறது. எனவே எனக்கு அதில் பங்கு கிடைத்து வருகிறது. ஆனால் என் கூட்டாளிக்கு என்ன வழி? உனக்குக் கொடுக்கும் வேலையை வேறொரு பாரிஸ்டருக்குக் கொடுத்தால் அவர் நிச்சயமாகத் தரகு பெறுவாரல்லவா?" இந்த வாதத்தில் மயங்கிவிட்டேன். பாரிஸ்டர் தொழில் நடத்தவேண்டு மானால், தரகு விஷயத்தில் எனது கொள்கையை வலி யுறுத்துவதற்கில்லை யென்று உணர்ந்தேன். இவ்வாறு வாதித்து என்னை நானே சமாதானம் செய்துகொண்டேன்.

—ஏன்? என்னை நானே ஏமாற்றிக்கொண்டேனென்று கூறுதல் பொருந்தும். ஆனால் இதைத் தவிர, எனக்கு நினைவிருக்கும் வரை, வேறு எந்த வழக்குக்கும் தாகு கொடுத்ததில்லை என்பதையும் கூறவேண்டும்.

இவ்வாறு என் வாழ்க்கை நடப்பதற்குப் போதிய வருவாய் கிடைக்க ஆரம்பித்த தாயினும், இச் சமயத்திலேயே என் வாழ்க்கையின் முதலாவது பேரதிர்ச்சியும் ஏற்பட்டது. பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் எப்படியிருப்பார்கள் என்பதாக இதற்குமுன் நான் கேள்விப் பட்டதுண்டு. ஆனால் நேருக்கு நேராக யாருடன் அதுவரை சந்திப்பு நேர்ந்ததில்லை.

காலஞ்சென்ற போர்பந்தர் இராணுவிற்கு முடிசூட்டி நடப்பதற்கு முன் என் சகோதரர் அவருக்கு அந்தரங்கக் காரியதரிசியாகவும் யோசனை சொல்வோராகவும் இருந்து வந்தார். அச்சமயத்தில் இராணுவுக்குத் தவறான யோசனை சொன்னார் என்று ஓர் குற்றத்தை என் சகோதரரின் தலைமீது சுமத்தி யிருந்தார்கள். இவ்விஷயம் பொலிடிகல் ஏஜண்டினிடம் சென்று அவர் பரிசீலனையில் இதுகாலை இருந்து வந்தது. அவர் என் சகோதரிடம் கெட்ட அபிப்பிராயம் கொண்டவர். இங்கிலாந்தில் இவ்வுத்தியோகஸ்தரை நான் பார்த்திருந்தேன். அங்கு அவர் என்னிடம் ஓரளவு நட்புரிமை பாராட்டினரென்று சொல்லலாம். என் சகோதரர் நான் இந்த நட்பை பயன்படுத்திப் பொலிடிகல் ஏஜண்டிடம் பேசித் தம்மைப்பற்றி அவர் கொண்டுள்ள தப்பபிப்பிராயத்தைப் போக்கவேண்டுமென விரும்பினார். எனக்கு இது சிறிதும் பிடிக்கவில்லை. இங்கிலாந்தில் ஏற்பட்ட சிறிதளவு அறிமுகத்தை இவ்வாறு பயன் படுத்திக்கொள்ள முயல்வது தவறு என்று எண்ணி

னேன். என் சகோதாரிடம் உண்மையிலேயே குற்ற மிருந்தால் என்னுடைய சிபார்சினல் பயன் விளையாது. அவர் குற்றமற்றவரா யிருப்பின் முறைப்படி விண்ணப்பம் அனுப்பிவிட்டுத் தாம் நிரபராதி யென்ற தைரியத்துடன் முடிவை எதிர் நோக்குவதே சரியாகும். ஆனல் இந்த யோசனை என் சகோதாருக்குப் பிடிக்கவில்லை. "உனக்குக் கத்தியவாரைப்பற்றி ஒன்றும் தெரியாது. நீ உலக அநுபவம் பெற வேண்டும். இங்கே செல்வாக்குத்தான் பிரதானம். உனக்குத் தெரிந்த ஓர் உத்தியோகஸ்தரிடம் என்னைப்பற்றி ஒரு நல்ல வார்த்தை கூறுவது எளிது. சகோதரனுக்குச் செலுத்த வேண்டிய இச்சிறு கடனை ஆற்றத் தயங்குவது உனக்குத் தகாது" என்று அவர் இயம்பினர்.

அவரை மறுத்துக் கூற இயலாதவனய் எனது விருப்பத்துக்கு விரோதமாக அவ் வுத்தியோகஸ்தரிடம் சென்றேன். அவரிடம் இவ்விஷயமாகப் போக எனக்கு எவ்வித உரிமையுங் கிடையாதென்றும், இதனல் என் சுய மரியாதைக்கு இழுக்குத் தேடிக்கொள்கிறே னென்றும் நன்குணர்ந்திருந்தேன். ஆயினும் அவரைப் பார்ப்பதற்கு அநுமதி கோரினேன். அநுமதியும் கிடைத்தது. பழைய அறிமுகத்தை நான் அவருக்கு நினைப்பூட்டிய வுடனேயே, கத்தியவாருக்கும் இங்கிலாந்துக்கும் வித்தியாசம் உண் டென்று அறிந்தேன். ஓய்வு எடுத்துக் கொண்ட உத்தி யோகஸ்தரும், வேலையிலுள்ள உத்தியோகஸ்தரும் வெவ் வேறு மனிதர்கள் என்பதையும் கண்டேன். பொலிடிகல் ஏஜண்டு பழைய அறிமுகத்தை ஒப்புக் கொண்டார். ஆனல் அதை நினைவூட்டியதனல் அவருடைய கடு கடுப்பு அதிகமானதாகக் காணப்பட்டது. "அவ்வறிமுகத்தைத்

தூர் உபயோகப்படுத்துவதற்காக வந்தீரா, என்ன?" என்ற கேள்வி அவர் நெற்றியில் எழுதப்பட்டிருந்தது போல் தோன்றியது. ஆயினும், நான் வந்த காரியத்தைக் கூறத் தொடங்கினேன். அதற்குள் துரை பொறுமை யிழந்து "உமது சகோதரர் சூழ்ச்சிக்காரர். உம்மிட மிருந்து இனி எதுவும் நான் கேட்க விரும்பவில்லை. எனக்கு நேரங் கிடையாது உமது சகோதரர் சொல்ல வேண்டுவது ஏதேனுமிருந்தால் முறைப்படி எழுதிக் கொள்ளட்டும்" என்று கூறினர். இந்த விடை போது மானது. அதற்கு நான் உரியவனுயு மிருக்கலாம். ஆனல் தன்னலம் மனிதனைக் குருடனாக்கி விடுகிறதன்றோ? நான் என் கதையை நிறுத்தினேனில்லை. துரை எழுந்து நின்று 'போதும், நீர் போகலாம்' என்றார்.

"தயவு செய்து நான் சொல்வதைக் கேட்டு விடுங் கள்" என்றுரைத்தேன் நான். அவருடைய கோபம் அதிகமாயிற்று. தமது சேவகனைக் கூப்பிட்டு என்னை வெளியே அனுப்பும்படி சொன்னார். நான் இன்னமும் தயங்கிக்கொண் டிருக்கையிலேயே சேவகன் வந்து என் தோள்களில் கையைப் போட்டு அறைக்கு வெளியே கொண்டு வந்து விட்டான்.

துரையும் சேவகனும் போய்விட்டனர். கோபமும் ஆத்திரமும் பொங்கத் துடிதுடித்துக்கொண்டு நான் வெளியே வந்தேன். உடனே பின்வருமாறு ஒரு சீட்டு எழுதி அனுப்பினேன்:—"நீர் என்னை அவமதித்து விட்டீர். உமது சேவகனைக் கொண்டு என்னைத் தாக்கியிருக்கிறீர். இவற்றிற்குத் தகுந்த பரிகாரம் செய்யாவிடின் உம்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வேன்."

கீழ்க்கண்ட பதிலை அதி விரைவில் துரையின் சேவகன் கொண்டுவந்து கொடுத்தான்.

"நீர் என்னிடம் முரட்டுத்தனமாய் நடந்துகொண்டீர். நான் வெளியே போகச் சொன்னேன். நீர் போகவில்லை. எனவே, சேவகனை விட்டு வெளியே அனுப்பச் சொல்வதை யன்றி எனக்கு வேறு வழியில்லை. அவன் சொல்லிய பிறகும் நீர் மறுத்தீர். எனவே உம்மை வெளியே கொண்டு விடுவதற்கு வேண்டிய அளவு அவன் பலாத்காரத்தைப் பிரயோகிக்க வேண்டி வந்தது. உமது விருப்பம்போல் என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்."

சட்டைப் பையில் இந்தப் பதிலுடன் வீடுவந்து சேர்ந்தேன். நிகழ்ந்த எல்லாவற்றையும் சகோதரரிடம் கூறினேன். அவர் மிகுதியும் வருந்தினாராயினும், எனக்கு ஆறுதல் சொல்ல வகை காணவில்லை. அவருடைய வக்கீல் நண்பர்களிடம் கலந்து யோசித்தார். துரைமீது எவ்வாறு நடவடிக்கை எடுத்துக்கொள்வ தென்பது எனக்குத் தெரிய வில்லை. அப்போது ஏதோ ஒரு வழக்கின் நிமித்தம் ஸர்பிரோஸிஷா மேதா இராஜகோட்டைக்கு வந்திருந்தார். ஆனால் என்னைப்போன்ற பாலிய பாரிஸ்டர் அவரைப் பார்க்கத் துணிவதெப்படி? எனவே அவரை அமர்த்தி யிருந்த வக்கீல் மூலமாக இந்நிகழ்ச்சி சம்பந்தமான விவரங்களை அனுப்பி அவருடைய புத்திமதியை வேண்டி னேன். அவர் பின்வருமாறு கூறினார்:—"வக்கீல்கள், பாரிஸ்டர்கள் பலருக்கு இத்தகைய நிகழ்ச்சிகள் சாதாரண அநுபவம் என்பதாகக் காந்தியிடம் சொல்லுங்கள். இங்கிலாந்திலிருந்து இப்போதுதான் திரும்பி வந்துள்ள படியால் அவருக்கு ரோஷம் அதிகமா யிருக்கிறது.

பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களை அவர் அறியார். ஏதேனும் கொஞ்சம் ரூபாய் சம்பாதித்துச் சுக வாழ்க்கை நடத்த வேண்டுமானால் துரையின் பதில் கடிதத்தைக் கிழித் தெறிந்துவிட்டு வெட்கத்தை வெளியில் சொல்லாம லிருக் கட்டும். துரைமீது நடவடிக்கை நடத்துவதால் அவருக்கு எத்தகைய லாபமும் ஏற்படாது. அநேகமாகத் தமக்கே அழிவு தேடிக்கொள்வார். இன்னும் அவருக்கு வாழ்க்கை அநுபவம் போதாதென்று சொல்லுங்கள்."

இந்தப் புத்திமதி எனக்குக் கொடிய நஞ்சாக இருந்த தாயினும் வேறு வழியின்றி அதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய தாயிற்று. எனக்கு நேர்ந்த அவமதிப்பைப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு பேசாமல் இருந்தேன். ஆனால் அதினின்றும் நான் ஒரு படிப்பினை கற்றுக் கொள்ளாமல் இல்லை. "இனி ஒருக்காலும் இத்தகைய சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ளேன். இதுபோல் நட்பை வேறு அனுகூலம் பெற உபயோகிப்பதற்கு முயலேன்" என்று தீர்மானித்தேன். அன்றைய தினத்தி லிருந்து இன்றுவரை நான் ஒரு முறையேனும் அவ்வுறுதியி னின்றும் பிறழ்ந்ததில்லை. இந் நிகழ்ச்சியானது என் வாழ்க்கையின் போக்கையே மாற்றி யமைத்து விட்டது.

ஐந்தாம் அத்தியாயம்

தென்னாப்பிரிக்கா செல்ல ஆயத்தம்

அவ் வுத்தியோகஸ்தரிடம் நான் போனது தவறு என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் காட்டிய கடுகடுப்பும் வெஞ்சினமும் அத்தவறுக்கு ஏற்றனவல்ல. வெளியில் பிடித்துத் தள்ளச் சொல்லும்படியான அவ்

வளவு பெரிய தவறு நான் செய்யவில்லை. எனக்காக அவர் செலவழித்த காலமெல்லாம் ஐந்து நிமிஷத்துக்கு மேல் இராது. ஆனால் நான் வாய் திறந்து பேசியதே அவருக்குப் பொறுக்கவில்லை. என்னைப் போகுமாறு அவர் மரியாதையாய்க் கேட்டுக்கொண் டிருக்கலாம். ஆனால் அவர் அதிகார வெறியினால் முற்றும் மதிமயங்கிப் போயிருந்தார். அவ் வுத்தியோகஸ்தரிடம் பொறுமை என்னுங் குணம் சூன்ய மென்றும், தம்மைப் பார்க்க வருவோரை அவமதிப்பது அவருடைய சாதாரண வழக்க மென்றும் பின்னால் தெரிந்து கொண்டேன். ஏதேனும் அணுவளவு அவர் விருப்பத்துக்கு மாறாக நிகழ்ந்துவிட்டா லும் நிச்சயம் துரைக்குக் கோப முண்டாகிவிடுமாம்.

என்னுடைய வேலை பெரும்பாலும் அவருடைய நீதி மன்றத்தில் நடந்தாக வேண்டி யிருப்பது இயல்பன்றோ? அவரை நான் சமாதானப்படுத்துவது இயலாத காரியம். எப்படியேனும் அவருடைய தயவைத் தேடிக்கொள்ள வேண்டு மென்னும் விருப்பமும் எனக்கில்லை. உண்மையில் அவர்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதாக அச்சுறுத்தி விட்டுப் பின்னர் பேசாம லிருந்துவிடுவதே எனக்குப் பிடிக்கவில்லை.

இதற்கிடையில், நாட்டின் அரசியல் விஷயங்களைப் பற்றிச் சிறிது அறிந்து கொள்ளலானேன். கத்தியவார் பல சிறு சமஸ்தானங்களடங்கிய பிரதேச மாகையால் அங்கு அரசியல் வாதிகளுக்குக் குறைவில்லை. சமஸ் தானங்கள் ஒன்றுக்கொன்று சூழ்ச்சி முறைகளைக் கையாளுவதும்; உத்தியோகஸ்தர்கள் அதிகாரம் பெற வேண்டிச் சூழ்ச்சிகள் புரிவதும் சர்வ சாதாரணமாக இருந்தன. மன்னர்கள் சுய புத்தியின்றி எப்போதும்

பிறரை நம்பி யிருப்பவர்களாயும் இருந்தார்கள். ஏதேனும் காரியம் ஆகவேண்டி யிருந்தால் துரையின் சேவகன் முதல் எல்லாருடைய தயவையும் பெறவேண்டும். சிரஸ்தார் என்னும் உத்தியோகஸ்தர் துரையைவிடப் பெரியவர். துரையின் காதுகளும் கண்களும் அவரே. அதாவது அவர் மூலமாக அன்றித் துரைக்கு எந்த விஷயமும் போகாது. சிரஸ்தார் வைத்ததே சட்டம். துரையைவிட அவருக்கு வருவாய் அதிகமென்று பிரசித்தியாகச் சொல்லப்படுவதுண்டு. இது ஒருவேளை மிகைப் படுத்திக் கூறப்பட்டிருக்கலாம். ஆனல் அவருடைய வாழ்க்கை முறை அவரது சொற்ப சம்பளத்துக்கு இயைந்ததாயில்லை யென்பது உண்மை.

இதனலெல்லாம், கத்தியவார் நச்சுக்காற்று நிரம்பிய பிரதேசம் என்று எனக்குத் தோன்றிற்று. அங்கிருந்து தீங்குருமல் தப்புவது எப்படி என்று ஓயாது சிந்திக்கலானேன்.

என் மனம் முற்றும் சோர்வுற்றது. என்னுடைய மனச்சோர்வை என் சகோதரரும் நன்கு அறிந்து கொண்டார். எங்கேனும் ஓர் உத்தியோகம் கிடைத்தால் இந்தச் சூழ்ச்சி உலகினின்றும் விடுபட்டிருக்கலாம் என்று நாங்கள் இருவரும் எண்ணினேம். ஆனல் சூழ்ச்சி முறைகளைக் கையாளாமல் மந்திரி பதவி அல்லது நீதிபதி உத்தியோகம் பெறுதல் இயலாத காரியம். பாரிஸ்டர் தொழில் நடத்துவதற்கோ துரையின் கோபம் குறுக்கே நின்றது.

அப்போது போர்பந்தர் சமஸ்தானம் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஓர் உத்தியோகஸ்தரின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. சமஸ்தான மன்னருக்குச்

சில புதிய அதிகாரங்களை வாங்கிக் கொடுக்கும் வகையில் எனக்கு அங்கே கொஞ்சம் வேலை ஏற்பட்டது. மேலும், குடியானவர்களிடமிருந்து அதிக குத்தகை வாங்கப்படுவது குறித்தும் நான் நிர்வாக உத்தியோகஸ்தரைப் பார்க்க வேண்டி யிருந்தது. இவ் வுத்தியோகஸ்தர் இந்தியரான போதிலும் இறுமாப்பில் துரையைத் தோற்கடிப்பவராக இருந்தார். அவர் திறமை யுள்ளவர். ஆனுல் அவரது திறமையினுல் குடியானவர்களுக்கு எவ்வித நலமும் விளைய வில்லை. இராணுவுக்குச் சில புதிய அதிகாரங்கள் வாங்கிக் கொடுப்பதில் நான் ஓரளவு வெற்றி யடைந்தே னுயினும், குடியானவர்களுக்கு என் முயற்சியால் நன்மை ஏற்படவில்லை. அவர்கள் விஷயத்தை மேற்சொன்ன அதிகாரி சரிவரக் கவனிக்கக் கூடவில்லை யென்று எனக்குத் தோன்றிற்று.

எனவே, நான் இதிலும் ஏமாற்ற மடைந்தேனென்று சொல்லலாம். என் கட்சிக்காரர்களுக்கு நீதி செய்யப் படவில்லை யென்பதை உணர்ந்தேன். ஆனுல் அதைத் தேடிக் கொடுக்கும் ஆற்றல் எனக்கில்லை. பொலிடிகல் ஏஜெண்டுக்காவது கவர்னருக்காவது நான் அப்பீல் செய் திருக்கலாம். ஆனுல் பயன் எதுவும் விளைந்திராது. அவர் கள் 'நாங்கள் தலையிட முடியாது' என்று தள்ளி யிருப் பார்கள். இம்மாதிரி விஷயங்களுக்கு ஏதேனும் விதி முறைகள் சட்ட திட்டங்கள் இருப்பின் கொஞ்சம் ஆறு தலுக்கு இடமுண்டு. ஆனுல் இங்கே துரையிட்டதே சட்டமாயிருந்தது. எனக்குண்டான எரிச்சலைச் சொல்லி முடியாது.

இதற்கிடையில் போர்பந்தரிலிருந்து ஒரு வியாபாரக் கம்பெனியார் என் சகோதாருக்கு ஒரு கடிதம் எழு

தினர்கள். அதன் சாரமாவது:—"தென்னாப்பிரிக்காவில் எங்களுக்கு வியாபாரம் நடந்து வருகிறது. எங்கள் கம்பெனி பெரிய கம்பெனி. அங்கே நீதி மன்றத்தில் 40,000 பவுன் எங்களுக்கு வரவேண்டுமென்பதாக ஒரு பெரிய வழக்குத் தொடுத்திருக்கிறோம். வழக்கு நீண்ட காலமாய் நடந்து வருகிறது. சிறந்த வக்கீல்களையும் பாரிஸ்டர்களையும் அமர்த்தி யிருக்கிறோம். உங்கள் சகோதாரை அங்கு அனுப்பக்கூடுமானால் எங்களுக்கு உதவியா யிருப்பதோடு அவருக்கும் நன்மையுண்டு. எங்கள் வழக்கைப் பற்றி அவர் அங்குள்ள வக்கீல்களுக்கு எங்களை விட நன்றாக எடுத்துக் கூறக்கூடும். ஒரு புதிய தேசத்தைப் பார்க்கவும் புதியவர்களோடு பழக்கம் செய்துகொள்ளவும் அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்."

என் சகோதரர் இதைப்பற்றி என்னிடம் கூறினார். வக்கீல்களுக்கு வழக்கைப்பற்றி விளக்கிக் கூறவேண்டிய வேலைதானா அல்லது நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி யிருக்குமா என்பது நன்றாகத் தெரியவில்லை. ஆயினும் எனக்கு ஆசை விழுந்துவிட்டது.

மேலே குறிப்பிட்ட கம்பெனி தாதா அப்துல்லா அண்டு கம்பெனியாகும். அதன் கூட்டாளியான காலஞ் சென்ற சேத் அப்துல் கரீம் ஜாவேரிக்கும் என் சகோதரர் என்னை அறிமுகம் செய்து வைத்தார். சேத் கூறிய தாவது:—"வேலை கஷ்டமன்று. பல ஐரோப்பியப் பிர முகர்கள் எங்களுக்கு அங்கே நண்பர்கள் அவர்களுடன் நீங்கள் பழக்கம் செய்துகொள்ளலாம். எங்கள் கடை வேலையிலும் நீங்கள் உதவி செய்யலாம். எங்கள் கடிதப் போக்கு வரவு பெரும்பாலும் ஆங்கிலத்தில் நடைபெறு கிறது. எனவே அந்த வழியிலும் நீங்கள் உபயோகமா

யிருக்கக் கூடும். அங்கே எங்கள் விருந்தாளியாக இருப்பீர்களாதலால் செலவு ஒன்றும் உங்களுக்கில்லை."

"எத்தனை காலத்துக்கு எனது ஊழியம் உங்களுக்குத் தேவை? சன்மானம் என்ன? என்று நான் கேட்டேன்.

"ஒரு வருஷத்துக்குமேல் வேண்டியிராது. போக வர முதல் வகுப்புப் பிரயாணச் செலவும் மொத்தத்தில் 105 பவுனும் தருகிறோம்."

இது பாரிஸ்டர் என்ற முறையில் தென்னாப்பிரிக்கா செல்வதன்று; கம்பெனியின் ஊழியனாகப் போவதேயாகும். ஆனால் எப்படியாவது இந்தியாவை விட்டுப் போனால் போது மென்ற மனோநிலையில் அப்போதிருந்தேன். புதிய தேசத்தைப் பார்க்கலாம், புதிய அநுபவம் பெறலாம் என்னும் ஆசை வேறு இருந்தது. மேலும் சகோதரருக்கு 105 பவுன் மொத்தமாய் அனுப்பிக் குடும்பச் செலவுக்கு உதவி செய்யலாம். எனவே, பேரம் பேசாமல் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு தென்னாப்பிரிக்கா செல்ல ஆயத்தமானேன்.

ஆறும் அத்தியாயம்

நேட்டால் சேர்ந்தது

இங்கிலாந்துக்குப் புறப்பட்டபோது வீட்டை விட்டுச் செல்வதில் எனக்கு எவ்வளவு துக்கம் ஏற்பட்டதோ அவ்வளவு தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டபோது இல்லை. என் அன்னை காலமாகி விட்டாள். உலக அநுபவம் கொஞ்சம் பெற்றிருந்தேன். வெளி நாட்டிலும் பிரயாணம் செய்திருந்தேன். இராஜ

கோட்டையிலிருந்து பம்பாய் செல்வது இப்போது மிகவும் சாதாரண விஷயமா யிருந்தது.

இம்முறை என் மனைவியைப் பிரிந்து செல்வதில் மட்டுமே வருத்தம் ஏற்பட்டது. இங்கிலாந்திலிருந்து திரும்பிய பின்னர் எங்களுக்கு இன்னொரு குழந்தை பிறந்திருந்தது. எங்களுடைய அன்பு இன்னமும் காமக் கலப்பற்றதாகி விடவில்லை. ஆயினும் அது நாளுக்கு நாள் தூய்மைப் பட்டு வந்தது. நான் ஐரோப்பாவிலிருந்து திரும்பிய பின்னர் நாங்கள் அதிகமாகச் சேர்ந்து வாழவில்லை. மேலும் இப்போது நான் அவளுடைய ஆசிரியனா யிருந்த படியாலும், சில சீர்திருத்தங்களைச் செய்வதில் அவளுக்கு உதவி செய்து வந்தபடியாலும், இருவரும் சேர்ந்திருப்பது அவசியமென்பதே உணர்ந்தோம். ஆயினும் தென்னுப் பிரிக்காவில் எனக்கு வீழ்ந்திருந்த மோகம் பிரிவாற்றுமையைச் சகிப்பதற்குத் தைரியம் அளித்தது. 'இன்னும் ஓராண்டில் எப்படியும் நாம் சந்திப்போம்' என்று அவளுக்குத் தேறுதல் கூறிவிட்டுப் பம்பாய்க்குப் புறப் பட்டேன்.

தாதா அப்துல்லா கம்பெனியின் காரியஸ்தர் மூலமாக நான் பிரயாணச் சீட்டு பெற வேண்டி யிருந்தது. ஆனல் குறிப்பிட்ட கப்பலில் இடவசதி கிடைக்கவில்லை. அதில் புறப்படாவிடின் நான் பம்பாயிலேயே தங்கிவிட வேண்டியதாக நேரிடும். "எங்களா லியன்றவரை முயன்றும் முதல் வகுப்புச் சீட்டுக் கிடைக்கவில்லை. மேற்றளத்தில் பிரயாணஞ் செய்யச் சித்தமா யிருந்தால் மட்டுமே இக்கப்பலில் போகலாம். முதல் வகுப்புக்குரிய உணவு உங்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்துவிடக் கூடும்" என்று காரியஸ்தர் கூறினர். அப்போதெல்லாம்

நான் முதல் வகுப்பிலன்றிப் பிரயாணஞ் செய்வதில்லை. பாரிஸ்டர் ஒருவர் கேவலம் கப்பலின் மேற்றளத்தில் எப்படிப் பிரயாணஞ் செய்வது? எனவே இந்த யோசனையை மறுத்துவிட்டேன். காரியஸ்தர் கூறியதை நான் நம்பவில்லை. முதல் வகுப்பில் இடமில்லாமற் போகாதென்று எண்ணினேன். அவருடைய சம்மதி பெற்று நானே இடந்தேடிப் பிடிப்பதற்காகப் புறப் பட்டுச் சென்றேன். கப்பலுக்குச் சென்று தலைமை உத்தியோகஸ்தரைக் கண்டேன். "இடத்துக்கு இவ்வளவு கிராக்கி எப்போது மேற்பட்டதில்லை. இக்கப்பலில் மோஸாம்பிக் கவர்னர் ஜெனரல் பிரயாணம் செய்வதால் கூட்டம் அதிகம். என் செய்வது?" என்று அவர் கூறினர்.

"எப்படியாவது நெருக்கிப் பிடித்து என்னை உள்ளே நுழைத்துவிடத் தங்களால் ஆகாதா?" என்று கேட்டேன்.

அவர் தலையிலிருந்து கால்வரை என்னை உற்றுப் பார்த்துப் புன்னகை புரிந்தார். "ஒருவழி இருக்கிறது. என்னுடைய சொந்த அறையில் அதிகப்படியாக ஒருவருக்கு இடம் உண்டு. சாதாரணமாகப் பிற பிரயாணிகளுக்கு அதைக் கொடுப்பதில்லை. உங்களுக்காக வேண்டுமானல் அவ்விடத்தைத் தருகிறேன்" என்றார். அவருக்கு நன்றி கூறிவிட்டுக் காரியஸ்தரிடம் சென்று பிரயாணச் சீட்டு வாங்கச் செய்தேன். இவ்வாறு 1893-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தென்னப்பிரிக்காவுக்கு உற்சாகத்துடன் புறப்பட்டேன். அங்கே அதிர்ஷ்டம் எனக்காகக் காத்திருக்கிறதென்று நம்பிச் சென்றேன்.

வழியில் கப்பல் நிற்கவேண்டிய முதலாவது துறைமுகம் லாமூவாகும். புறப்பட்ட பதின்மூன்றும் நாள்

அத் துறைமுகஞ் சேர்ந்தோம். இதற்குள்ளாக நானும் கப்பற் றலைவரும் நண்பர்களாகி விட்டோம். அவருக்குச் சதுரங்க ஆட்டத்தில் பித்து உண்டு. ஆனால் அவ்வாட்டம் அதிகமாகத் தெரியாததலின், அவரையும் விடக் குறை வாகத் தெரிந்த ஒருவர் அவரோடு விளையாடுவதற்கு வேண்டி யிருந்தது. எனவே, என்னை அழைத்தார். சதுரங்கத்தைப்பற்றி நான் நிரம்பக் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் அதுவரை ஆடியது மட்டும் கிடையாது. அவ் வாட்டத்தில் அறிவுக் கூர்மையைப் புயன்படுத்துவதற்கு அதிக இடமுண்டு என்று சொல்லக் கேட்டிருந்தேன். கப்பற்றலைவர் எனக்கு அவ்வாட்டங் கற்றுக்கொடுப்ப தாகச் சொன்னார். என்னிடம் அளவற்ற பொறுமைக் குணம் இருந்தபடியால் எனக்குச் சொல்லிக் கொடுக்க அவருக்கு நிரம்பப் பிரியமாயிருந்தது. ஒவ்வொரு முறை நான் தோற்கும்போதும், எனக்குக் கற்றுக் கொடுப்பதில் அவரது அவா அதிகமாயிற்று. சதுரங்கம் எனக்குப் பிடித்தே யிருந்தது. ஆனால் அக்கப்பலிலிருந்து இறங்கிய வுடன் அவ்விருப்பமும் மறைந்தது. காய்களை நகர்த்தி வைக்கும் அளவுக்கு மேல் நான் அவ்வாட்டம் கற்றுக் கொள்ளவு மில்லை.

கப்பல் லாமூவில் மூன்று, நான்குமணி நேரம் நங்கூரம் போட்டிருந்தது. பட்டணம் பார்த்து வருவ தற்காக நான் கப்பலிலிருந்து இறங்கிச் சென்றேன். கப்பற்றலைவரும் கரைக்குச் சென்றார். ஆனால் துறை முகம் அபாயகரமான தென்றும், கப்பல் புறப்படுவதற்கு முன் திரும்பிவிட வேண்டுமென்றும் எச்சரிக்கை செய்தார்.

லாமூ மிகச் சிறிய பட்டணம். தபால் ஆபீஸுக்குச் சென்றேன். அங்கே இந்திய குமாஸ்தாக்களைக் கண்டு

மகிழ்ச்சி யடைந்தேன். அவர்களுடன் கொஞ்ச நேரம் பேசிக்கொண் டிருந்தேன். ஆப்பிரிக்கா சுதேசிகள் சிலரையும் பார்த்தேன். அவர்களது வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள முயன்றேன். அவை என் மனதைப் பெரிதும் கவர்ந்தன. இதில் சிறிது நேரம் சென்றது. கப்பல் மேற்றளத்தில் பிரயாணஞ் செய்த சிலருடன் எனக்குப் பழக்கமாகி யிருந்தது. அவர்கள் ஒருவேளை யேனும் அமைதியாகச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு வாலா மென்று கரைக்கு வந்திருந்தார்கள் அவர்கள் இப்போது கப்பலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்க ளாதலால் அவர்கள் ஏறிய படகிலேயே நானும் ஏறினேன். துறை முகத்தில் கடல் கொந்தளிப்பா யிருந்தது. படகிலோ சுமை அதிகம். கப்பலின் ஏணிக்கு நேராகப் படகை நிறுத்துவது இயலாத காரியமாகி விட்டது. படகு ஏணியைத் தொடும். ஆனல் யாரும் ஏறுவதற்கு முன்பு நகர்ந்துவிடும். கப்பல் புறப்படுவதற்கான முதற் சங்கு ஊதியாகிவிட்டது. நான் பெரிதுஞ் சஞ்சல முற்றேன். எங்கள் நிலைமையைக் கப்பற்றலைவர் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் ஐந்து நிமிஷம் கப்பல் நிற்கும்படி செய்தார். கப்பலுக் கருகில் மற்ெருரு படகு இருந்தது. ஒரு நண்பர் எனக் காகப் பத்து ரூபாவுக்கு அதைப் பேசிக் கொடுத்தார். அந்தப் படகு வந்து கூட்டம் அதிகமாயிருந்த படகிலிருந்து என்னை ஏற்றிக்கொண்டது. இதற்குள் ஏணியைத் தூக்கி விட்டார்கள். எனவே ஒரு கயிற்றைத் தொங்கவிட்டு என்னை மேலே யிழுக்கும்படியாயிற்று. நான் கப்பலில் அடி வைத்தேனே இல்லையோ, கப்பலும் புறப்பட்டு விட்டது. மற்றப் பிரயாணிகள் பின்னல் விடப்பட்

டார்கள். கப்பற்றலைவர் எச்சரிக்கை எவ்வளவு முக்கிய மானது என்று இப்போது உணர்ந்தேன்.

லாமூவுக்கு அடுத்த துறைமுகம் மொம்பாஸா; பிறகு ஸான்ஸிபார். ஸான்ஸிபாரில் நீண்டகாலம்—சுமார் பத்து நாள் வரை தங்கிவிட்டோம். பிறகு வேறொரு கப்பலில் ஏறினோம்.

கப்பற்றலைவர் என்னிடம் பிரியங் கொண்டிருந்தார். ஆனால் அந்தப் பிரியம் விபரீத பயனைத் தந்தது. என்னையும், ஆங்கில நண்பர் ஒருவரையும் 'தமாஷா'கக் கரைக்குப் போய் வரலாம் என்று கூப்பிட்டார். மூவரும் அவருடைய படகில் கரைக்குச் சென்றோம். 'தமாஷா'கப் போய் வருவதென்றால் என்னவென்பது எனக்குக் கொஞ்சமும் தெரியாது. இத்தகைய விஷயங்களில் நான் பெரும் பூஜ்யம் என்பதைக் கப்பற்றலைவர் அறியார். 'டாபர்' ஒருவன் எங்களை நீகிரோ மாதர் சிலர் வசித்த வீட்டுக்கு அழைத்துச் சென்றான். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அறையைக் காட்டி உள்ளே போகச் சொன்னான். நான் அறைக்குள் சென்றதும் வெட்கம் சகிக்க முடியாமல் ஊமையாய் நின்றேன். ஒரு வார்த்தையும் பேசவில்லை. அந்த ஸ்திரீ என்னைப்பற்றி என்ன நினைத்தாளோ ஆண்டவனுக்கே தெரியும். கப்பற்றலைவர் அழைத்ததும் உள்ளே நுழைந்த வண்ணமே வெளியே வந்தேன். எனது நிலையை அவர் அறிந்துகொண்டார். முதலில் எனக்கு அவமானமாயிருந்தது. ஆனால் அந்த விஷயத்தை நினைத்தாலும் எனக்குப் பயங்கரமாயிருந்தபடியால் வரவர அவமான உணர்ச்சி குன்றியது. அந்த ஸ்திரீயைப் பார்த்தபோது என் மனம் சிறிதும் பேதியாமலிருந்ததை எண்ணி ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினேன். எனது

பலவீனம் எனக்குப் பெரும் வெறுப்பை யளித்தது. அறைக்குள் போகாமலே மறுத்துவிடத் தைரியமில்லாமற் போனதை நினைத்து என்னிடம் நானே இரக்கமுற்றேன்.

என் வாழ்க்கையில் இத்தகைய சோதனைகளில் இது மூன்றாவதாகும். இளைஞர்கள் பலர், ஆரம்பத்தில் பரிசுத்தர்களா யிருந்தும், பிழைபட்ட அவமான உணர்ச்சியினால் பாவத்தில் தள்ளப்படுகிறார்கள். நான் இச் சோதனைக்கு ஈடு கொடுத்து வெளி வந்ததின் பொருட்டுப் பெருமை பாராட்டிக் கொள்ளச் சிறிதும் இடமில்லை. அறைக்குள் செல்லவே மறுத்திருப்பின் நான் புகழுக் குரியவனாகி யிருப்பேன். என்னைக் காத்தருள் செய்த பெருமை கருணைக்கடலான பகவானுக்கே உரியது. இந்நிகழ்ச்சியினால் இறைவனிடம் எனது நம்பிக்கை அதிகமாயிற்று. பொய் வெட்கத்தை உதறிவிடவும் ஓரளவு கற்றுக் கொண்டேன்.

ஸான்ஸிபாரில் ஒரு வாரத்திற்குமேல் இருக்கவேண்டி வந்ததால் விடுதி அமர்த்திக் கொண்டு நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தேன். ஸான்ஸிபாரில் செடி கொடி மரங்கள் செழித்து வளர்ந்திருப்பதுபோல் மலையாளம் ஒன்றிலேயே நான் பார்த்திருக்கிறேன். பிரம்மாண்டமான விருட்சங்களையும், அவற்றின் பெரிய பழங்களையும் பார்த்துப் பிரமித்துப் போனேன்.

அடுத்த துறைமுகமான மோஸாம்பிக்கை அடைந்து பின்னர் அங்கிருந்து புறப்பட்டு மே மாத இறுதியில் நேட்டாலை அடைந்தோம்.

ஏழாம் அத்தியாயம்

சில அநுபவங்கள்

நேட்டாலுக்குத் துறைமுகம் டர்பன். அதற்குப் போர்ட் நேட்டால் என்றும் பெயருண்டு. என்னை அழைத்துச் செல்லும் பொருட்டு அப்துல்லா சேத் துறைமுகத்துக்கு வந்திருந்தார். கப்பல் கரைக் கருகில் வந்ததும் தங்கள் தங்கள் நண்பர்களை வரவேற்கும் பொருட்டுக் கரையிலிருந்து கப்பலுக்கு வந்தவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றேன். அப்போது, இந்தியர்களுக்கு அதிக மரியாதை காட்டப்படுவதில்லை யென்று கண்டேன். அப்துல்லா சேத்தை அறிந்தவர்கள் அவரிடம் ஒருவகை அகம்பாவத்துடன் நடந்துகொண்டதைப் பார்த்த போது என் மனம் வருந்திற்று. ஆனால் அப்துல்லா சேத்துக்கு அது வழக்கமாய்ப் போயிருந்தது. என்னைப் பார்த்தவர்கள் ஏதோ ஒரு விநோதப் பொருளை நோக்குவதுபோல் உற்றுப் பார்த்தார்கள். என் உடை மற்ற இந்தியர்களிடமிருந்து என்னை வேறுபடுத்திக் காட்டிற்று. வங்காளிகள் அணிவது போன்ற தலைப்பாகையும் மேலங்கியும் அணிந்திருந்தேன்.

அப்துல்லா சேத் என்னைக் கம்பெனியின் கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றார். அவருடைய அறைக்குப் பக்கத்தில் எனக்கென்று ஓர் அறை கொடுக்கப்பட்டது. ஆனால் நாங்கள் ஒருவரை யொருவர் நன்கு அறிந்து கொள்ள முடியவில்லை. அவரது சகோதரர் என் மூலம் அனுப்பியிருந்த கடிதங்களை அவர் படித்தார். அதனால் அவருடைய மனக் குழப்பம் அதிகமாயிற்றே யன்றி வேறில்லை. தம் சகோதரர் ஒரு வெள்ளை யானையைப்

பிடித்து அனுப்பியிருப்பதாக அவர் எண்ணினர். என் உடைகளும் வாழ்வு முறையும் ஐரோப்பியர்களுடைய உடையையும் வாழ்வு முறையையும் போல் அதிக பணம் விழுங்கக்கூடியனவாக அவருக்குத் தோன்றின. எனக்குக் கொடுப்பதற்கு விசேஷமான வேலை எதுவும் அப்போ தில்லை. அவர்களுடைய வழக்கு டிரான்ஸ்வாலில் நடந்து கொண்டிருந்தது. என்னை உடனே அங்கு அனுப்பி வைப்பதற்கு அர்த்தமில்லை. என்னுடைய திறமையும், கண்யத்தையும் அவர் எவ்வளவு தூரம் நம்புவது? என்னைத் தாமே கண்காணித்துக் கொள்ளலா மென்பதற்கு அவர் பிரிடோரியாவில் இருக்கவும் மாட்டார். பிரதிவாதிகள் பிரிடோரியாவில் இருந்தனர். அவர்கள் ஒரு வேளை என்னை வசப்படுத்தி விடக்கூடும். வழக்கு சம்பந்தமான வேலையை என்னிடம் நம்பி ஒப்புவிக்க முடியாதெனில் வேறென்ன வேலைதான் கொடுப்பது? மற்ற வேலை யெல்லாம் அவரது குமாஸ்தாக்களே என்னைவிட நன்றாகச் செய்து விடுவார்கள். மேலும் குமாஸ்தாக்கள் தவறு செய்தால் அவர்களைக் கண்டிக்கலாம். நான் தவறு செய்தால் அதற்கு இடமுண்டா? எனவே வழக்கு சம்பந்த மான வேலை எதுவும் கொடுப்பதற்கில்லை யென்றால் என்னைத் தண்டத்துக்கு வைத்திருக்க வேண்டியே வரும்.

அப்துல்லா சேத் எழுதப் படிக்கத் தெரியாதவ ரென்றே சொல்லிவிடலாம். ஆனால் அவர் பெரிய அநு பவசாலி; கூரிய மதி படைத்தவர்; தமது மதி நுட்பத் தைத் தாமே உணர்ந்து மிருந்தார். சம்பாஷணைக்கு வேண்டிய அளவு ஆங்கிலம் அவர் அப்பியாசத்தினின்றும் கற்றிருந்தார். இதுவே அவரது தொழில் நடப்பதற்குப் போதுமானதா யிருந்தது. இந்தச் சொற்ப ஆங்கில

அறிவைக்கொண்டு பாங்கி மானேஜர்களிடமும், ஐரோப்பிய வியாபாரிகளிடமும் அவர் விவகாரம் நடத்தியதுடன் தமது வக்கீலுக்கும் வழக்கு சம்பந்தமான விவரங்களை விளக்கி வந்தார். அங்கிருந்த இந்தியர்களுக்கு அவரிடம் மிகுந்த மதிப்பு உண்டு. தென்னுப்பிரிக்காவிலுள்ள பெரிய இந்தியக் கம்பெனிகளில் அவருடையதும் ஒன்று. அவருடைய கம்பெனியே எல்லாவற்றிலும் பெரியது என்றும் சொல்லிவிடலாம். அவருக்கு இவ்வளவு அநுகூலங்கள் அமைந்திருந்தும் ஒரு பிரதிகூலம் மட்டும் இருந்தது. அதாவது இயற்கையிலேயே அவர் சந்தேகப் பிராணி!

இஸ்லாம் மதத்தின் சிறப்பைக் குறித்து அவர் பெருமை கொண்டவர். இஸ்லாமிய தத்துவங்களைப்பற்றிச் சம்பாஷிப்பதில் அவருக்குப் பிரியம் அதிகம். அவருக்கு அரபு பாஷை தெரியாதாயினும், பரிசுத்த குர் ஆனைப் பற்றியும், மற்ற இஸ்லாமிய சமய நூல்களைப் பற்றியும் நன்கு தெரிந்து கொண்டிருந்தார். அடிக்கடி அந்நூல்களிலிருந்து உதாரணங்கள் எடுத்துக் கூறுவார். அவருடைய சேர்க்கையின் பயனுக நான் இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி நிரம்பத் தெரிந்துகொண்டேன். எங்கள் இருவருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டபோது மத விஷயங்களைப்பற்றி நீண்டநேரம் விவாதிப்பதுண்டு.

நான் நேட்டாலுக்கு வந்த இரண்டாம் நாளோ மூன்றும் நாளோ அவர் என்னை டர்பன் நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றூர். அங்குப் பலருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்ததுடன் தமது வக்கீலுக்கு அருகில் உட்கார வைத்தார். மாஜிஸ்ட்ரேட் சற்று நேரம் என்னை உற்றுப் பார்த்துக்கொண் டிருந்துவிட்டுக் கடைசியாக

என்னுடைய தலைப்பாகையை எடுத்துவிடும்படி சொன்னார். நான் அவ்வாறு செய்ய மறுத்து வெளியே சென்றேன்.

எனவே, இங்கேயும் எனக்குப் போராட்டம் காத்துக் கொண்டிருந்தது.

இந்தியரில் சிலர் மட்டும் தலைப்பாகைகளை எடுத்து விடும்படி ஏன் வற்புறுத்தப்படுகிறார்கள் என்று அப்துல்லா சேத் எனக்கு விளக்கிக் கூறினார். முஸ்லிம் உடைதரித்த வர்கள் தலைப்பாகை அணிந்துகொண் டிருக்கலா மென்றும், மற்ற இந்தியர்கள் நீதிமன்றத்தில் நுழைந்ததும் தலைப் பாகையை எடுத்துவிட வேண்டுமென்றும், இது வழக்க மாய் நடந்து வருகிறதென்றும் அவர் சொன்னார்.

இந்த நுணுக்கமான வேற்றுமை எதற்காக ஏற் பட்டது என்பது சில விவரங்களைக் கூறினால் தான் நன்கு விளங்கும். இந்த இரண்டு மூன்று நாள் அநுபவத்தில் இந்தியர்கள் வெவ்வேறு பகுதியாராகப் பிரிக்கப்பட்டிருந் தனர் எனக் கண்டேன். ஒரு பகுதியார் முஸ்லிம் வியா பாரிகள். இவர்கள் தங்களை 'அராபியர்கள்' எனக் கூறிக் கொண்டார்கள். மற்றொரு பகுதியார் ஹிந்து குமாஸ் தாக்கள். மூன்றாவது பகுதியார் பார்ஸி குமாஸ்தாக்கள். பார்ஸி குமாஸ்தாக்கள் தங்களைப் 'பாரஸீகர்' என்று சொல்லிக் கொண்டார்கள். ஹிந்து குமாஸ்தாக்களின் நிலையே திரிசங்கு சுவர்க்கமா யிருந்தது. 'அராபியர்க ளுடன் சேர்ந்தாலன்றி அவர்களுக்கு வேறு கதி இல்லை. இம்மூன்று பிரிவினரும் சமூக விஷயங்களில் ஓரளவு கலந்து பழகி வந்தனர். ஆனால் இம்மூன்று வகுப்பாரைவிடப் பெரியதொரு நான்காம் வகுப்பு இருந்தது. இது தமிழ் நாட்டிலிருந்தும், தெலுங்கு நாட்டிலிருந்தும், வட இந்தி யாவிலிருந்தும் வந்த ஒப்பந்தத் தொழிலாளரும், விடுதலை

பெற்ற தொழிலாளரும் அடங்கிய வகுப்பாகும். ஒப்பந்தத் தொழிலாளர் என்பார் ஐந்து வருஷங்களுக்கு வேலை செய்வதாக ஒப்பந்தம் செய்துகொண்டு நேட்டாலுக்கு வந்தவர். 'எக்ரிமெண்ட்' என்னும் ஆங்கில வார்த்தையின் திரிபாகிய 'கிரிமித்'திலிருந்து 'கிரிமித்யர்' என்று அவர்களுக்குப் பெயர் வழங்கலாயிற்று. மற்ற மூன்று வகுப்பாருக்கும் இவர்களுக்கும் வியாபார சம்பந்தத்தைத் தவிர வேறு தொடர்பு கிடையாது. சாதாரணமாக ஆங்கிலேயர் இவர்களைக் 'கூலிகள்' என்று அழைத்தனர். தென்னுப்பிரிக்கா இந்தியரில் பெரும் பான்மையோர் தொழிலாளி வகுப்பைச் சேர்ந்தவரானபடியால் எல்லா இந்தியருமே சாதாரணமாகக் 'கூலி' அல்லது 'சாமி' என்று அழைக்கப்பட்டனர். 'சாமி' என்பது தமிழரின் பெயர்கள் பலவற்றில் விகுதியாக வருவது. இது 'ஸ்வாமி' என்னும் சமஸ்கிருத பதத்தின் திரிபே யாகும். 'ஸ்வாமி என்னும் பதம் 'எஜமானன்' என்று பொருள் படுவது. ஆதலின் இந்தியன் ஒருவனுக்குத் தன்னை ஓர் ஆங்கிலேயன் 'சாமி' என்றழைப்பதினுல் ஆத்திரம் ஏற்பட்டால், அவன் சர்மர்த்திய முடையவனு' மானுல், "நீர் 'சாமி' என்று என்னைக் கூப்பிடுவதில் எனக்கு ஆட்சேபமில்லை. ஆனுல் சாமி என்ருல் எஜமானன் எனப் பொருள் என்பதை மறந்து விடுகிறீர். நான் உமது எஜமானன் அல்லவே!" என்று பதில் சொல்லி வாயடக்க முயல்வதுண்டு. சில ஆங்கிலேயர் இதைக்கேட்டு வெட்கிப் போவர். மற்றும் சிலர் கோபங்கொண்டு திட்டுவதுடன், சமயம் நேர்ந்தால் அடிக்கவும் அடிப்பர். 'சாமி' என்பது இழிவு படுத்தும் வார்த்தை என்பது அவர்களின் எண்ணம். அதற்கு 'எஜமானன்' என்று பொருள் கொடுப்பதெனில் அவர்களை அவமதிப்பதாகு மன்ருே?

எனவே என்னைக் 'கூலி பாரிஸ்டர்' என்று அழைத்தார்கள். இந்திய வியாபாரிகள் 'கூலி வியாபாரி' கள் என்றே அழைக்கப்பட்டனர். இவ்வாருகக் கூலி என்பதின் உண்மைப் பொருள் மறைந்து எல்லா இந்தியர்களுக்கும் அது பொதுவானதொரு பட்டமாயிற்று. கூலி என்று அழைக்கப் படும் போது முஸ்லிம் வியாபாரி ஆத்திரமடைந்து "நான் கூலியல்லன்; அராபியன்" என்ருவது, "நான் வியாபாரி" என்ருவது கூறுவான். அந்த ஆங்கிலேயன் மரியாதைக் குணமுள்ளவனுனல் அவனைக் 'கூலி' என்று அழைத்ததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்வான்.

இந்த நிலைமையில் தலைப்பாகை அணிந்துகொள்ளும் விஷயம் மிக முக்கியமான தொன்ருயிற்று. இந்தியத் தலைப்பாகையைப் பிறர் கட்டளையின்படி எடுத்தல் அவமதிப்புக்குத் தலை குனிவதாகவே முடியும். எனவே தலைப்பாகையை அறவே கை விட்டு ஆங்கில முறையில் தொப்பியை அணிந்து கொண்டுவிட்டால், அவமதிப்பிலிருந்தும், அது சம்பந்தமான விவரமாகத் தொல்லைகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன்.

ஆனல் அப்துல்லா சேத் இந்த யோசனையை அங்கீகரிக்க வில்லை. "அப்படி ஏதாவது செய்தால் பெருந் தீங்கு விளையும்; தலைப்பாகைகளே அணிவோம் என்று வற்புறுத்தி வருவோரைக் காட்டிக் கொடுத்ததாகும். மேலும் தலைப்பாகை தங்கள் தலைக்கு அந்தஸ்தாக இருக்கிறது. தொப்பி யணிந்தால் உங்களை ஹோட்டல் வேலைக்காரனுகவே எண்ணிக் கொள்வார்கள்" என்று அவர் சொன்னர்.

இந்தப் புத்திமதியில் அநுபவ அறிவும், தேசபக்தியும், கொஞ்சம் குறுகிய நோக்கமும் அடங்கி யிருந்தன.

அநுபவ அறிவு வெளிப்படை. தேசபக்தி யில்லாவிடில் தலைப்பாகையை அவர் வற்புறுத்தி யிரார். ஹோட்டல் வேலைக் காரனைப்பற்றி அலட்சியமாகக் குறிப்பிட்டது குறுகிய புத்தியைக் காட்டிற்று. தொழிலாளி வகுப்பைச் சேர்ந்த இந்தியர்களில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்னும் மூன்று பிரிவினர் இருந்தனர். கிறிஸ்தவர்கள், முதலில் ஒப்பந்தத் தொழிலாளிகளாக வந்து கிறிஸ்து மதத்தைத் தழுவியவர்களின் சந்ததிகள். 1893-ம் வருஷத்திலேயே அவர்கள் அதிக தொகையினராக இருந்தார்கள். அவர்கள் ஆங்கில உடை யணிந்ததுடன் பெரும் பான்மையோர் ஹோட்டல் வேலைக்காரர்களாக ஊழியம் செய்து பிழைத்து வந்தனர். தொப்பி கூடா தென்று அப்துல்லா சேத் கூறியது இவ்வகுப்பாரை மனதிற் கொண்டேயாம். ஹோட்டலில் வேலைக்காரனாயிருப்பது இழிவான தொழில் என்று கருதப்பட்டது. இன்றளவும் பலரிடையே இத்தகைய எண்ணம் குடி கொண்டிருக்கிறது.

மொத்தத்தில் அப்துல்லா சேத்தின் புத்திமதி எனக்கு உசிதமாகப்பட்டது. நீதிமன்றத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பத்திரிகைகளுக்கு எழுதினேன். அங்கு நான் தலைப்பாகை அணிந்திருந்தது நியாயமே என்று வாதாடினேன். பத்திரிகைகளில் இவ்விஷயமான விவாதம் பலமாக நடந்தது. "வேண்டாத விருந்தாளி" என்று பத்திரிகைகள் எனக்குப் பட்டஞ் சூட்டின. இவ்வாறு தென்னாப்பிரிக்கா போந்த சில தினங்களுக்குள் நான் சற்றும் எதிர்பாராத வண்ணம் என் பெயர் நிரம்ப விளம்பரப் படுத்தப்பட்டது. சிலர் என்னை ஆதரித்தனர். மற்றுஞ் சிலர் எனது துணிச்சலைப் பலமாகக் கண்டித்தனர்.

ஏறக்குறைய எனது தென்னுப்பிரிக்கா வாசத்தின் இறுதி வரையில் தலைப்பாகையை நான் கைவிடவில்லை யென்று கூறலாம். ஆனால் அங்கு எப்போது எக்காரணம் பற்றி தலைக்கு எந்த அணியையும் அணிவதை விட்டேன் என்பதைப் பின்னால் விவரிப்பேன்.

எட்டாம் அத்தியாயம்

பிரிடோரியா போகும் வழியில்

டர்பன் நகரில் வசித்த இந்தியக் கிருஸ்துவர்களிடம் எனக்கு விரைவில் பழக்கம் ஏற்பட்டது. நீதி மன்றத்தில் மொழிபெயர்ப்பாளர் உத்தியோகம் வகித்த மிஸ்டர் பால் என்பார் ரோமன் கத்தோலிக்கர். அவரும் காலஞ் சென்ற மிஸ்டர் சுபான் காட்பிரேயும் எனக்கு அறிமுகம் ஆயினர். சுபான் காட்பிரே சென்ற ஆண்டில் தென்னுப் பிரிக்கா பிரதிநிதிக் கூட்டத்தில் ஒருவராய் இந்தியா போந்த மிஸ்டர் ஜேம்ஸ் காட்பிரேயின் தந்தை, அவர் அப்போது புரோடஸ்டண்டு மிஷனின் கீழ் உபாத்தியாயரா யிருந்தார். காலஞ்சென்ற பார்ஸி ரஸ்டம்ஜி, ஆதம்ஜீ மியாகான் என்போரையும் இக்காலத்தி லேயே சந்தித்தேன். இவர்கள் இதுகாறும் தொழில் முறையிலன்றி மற்றப்படி ஒருவரோ டொருவர் பழக்க மில்லாதவர்கள். ஆயினும் பின்னால் அவர்கள் அனைவரும் என்னோடு நெருங்கிப் பழக நேர்ந்ததைப் போகப்போகப் பார்ப்போம்.

இவ்வாறு நான் புதுப்புது மனிதர்களுடன் பழக்கம் செய்துகொண்டு வருங்காலத்தில் கம்பெனிக்கு அவர்க ளுடைய பிரிடோரியா வக்கீலிடமிருந்து கடிதம் வந்தது.

வழக்குக்கு ஆயத்தம் செய்ய வேண்டுமென்றும், அப்துல்லா சேத்தாவது அல்லது அவருடைய பிரதிநிதியாவது உடனே பிரிடோரியாவுக்கு வந்து சேரவேண்டு மென்றும் அவர் எழுதி யிருந்தார்.

அப்துல்லா சேத் அக்கடிதத்தை என்னிடம் கொடுத்துப் படிக்கச்செய்து, "பிரிடோரியாவுக்குப் போகிறீர்களா?" என்று என்னைக் கேட்டார். "வழக்கின் விவரம் தெரிந்து கொண்ட பின்னரே சொல்ல முடியும். அங்கு என்ன செய்ய வேண்டு மென்பது குறித்து எனக்கு ஒன்றும் தெரியாதே" என்று பதில் சொன்னேன். எனக்கு வழக்கின் விவரத்தை அறிவிக்கும்படி அவர் குமாஸ்தாக்களிடம் கூறினர்.

வழக்கைப்பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கியதும் "அ - ஆ" விலிருந்தே ஆரம்பிக்க வேண்டு மெனக் கண்டேன். ஸான்ஸிபாரில் நான் இருந்த சில தினங்களில் நீதிமன்ற நிகழ்ச்சிகளைக் கவனிக்கப் போயிருந்தேன். பார்ஸி வக்கீல் ஒருவர் ஒரு சாட்சியை விசாரணை செய்து கொண்டிருந்தார். கணக்குப் புத்தகங்களில் பற்று, வரவு பத்திகளின் பதிவுகளைப்பற்றி அவர் கேள்விகள் கேட்டார். அவை எல்லாம் கிரேக்க பாஷையைப்போல் எனக்குப் புதியனவாகத் தோன்றின. பள்ளிக்கூடத்திலும் சரி, இங்கிலாந்து வாசத்தின்போதும் சரி, கடைக் கணக்கு முறையைப்பற்றி மட்டும் நான் எதுவும் படிக்கவில்லை.

நான் தென்னுப்பிரிக்காவுக்கு எதை உத்தேசித்து வந்தேனே அவ்வழக்கு பெரிதும் கணக்குகளைப் பற்றியது. கணக்கு முறை தெரிந்தவனே அவ்வழக்கு விவரத்தை அறியவும் விளக்கிக் கூறவும் கூடும். ஏதோ பற்று வரவுகளைப்பற்றிக் குமாஸ்தா சொல்லிக்கொண்டே யிருந்தார்.

இதனால் என் மனக்குழப்பம் அதிகமாயிற்றே யன்றி வேறு பயன் இல்லை. பி. நோட் (P. Note) என்றால் என்ன வென்றே எனக்குத் தெரியவில்லை. அகராதியில் அந்த வார்த்தை கிடையாது. எனது அறியாமையைக் குமாஸ்தா விடம் தெரிவித்து, பி. நோட் என்றால் பிராமிசரி நோட்டு என அறிந்து கொண்டேன். கணக்கு முறையைப்பற்றிய ஒரு புத்தகமும் வாங்கிப் படித்தேன். இதனால் ஓரளவு நம்பிக்கை யுண்டாயிற்று. வழக்கும் புரிந்தது. அப்துல்லா சேத் கணக்கு எழுதத் தெரியாதவராயினும், தமது அநுபவ அறிவைக்கொண்டு கணக்கு சம்பந்தமான எல்லாச் சிக்கலான பிரச்னைகளையும் தீர்த்துவிடக் கூடியவரா யிருந்ததைக் கண்டேன். பிரிடோரியாவுக்குப் புறப்படத் தயாரா யிருப்பதாகத் தெரிவித்தேன்.

"அங்கு எங்கே தங்குவீர்கள்?" என்று சேத் கேட்டார்.

"தாங்கள் எங்கே தங்கச் சொல்கிறீர்களோ அங்கே தங்குகிறேன்" என்று பதிலளித்தேன்.

"அப்படியானால் நம்முடைய வக்கீலுக்கே எழுது கிறேன். அவர் நீங்கள் தங்குவதற்கு இடந் தயார்செய்து கொடுப்பார். அங்குள்ள எனது நண்பர்களுக்கும் கடிதம் வரைகிறேன். ஆனால் அவர்களில் எவரோடும் தங்க வேண்டாம். நமது எதிரிகளுக்குப் பிரிடோரியாவில் மிகுந்த செல்வாக்குண்டு. நமது அந்தரங்கக் கடிதங்களை அவர்களில் எவரேனும் படிக்க நேரிடின் பெருந் தீங்கு ஏற்படலாம். அவர்களிடம் நீங்கள் எவ்வளவுக்கு நெருங்காதிருக்கிறீர்களோ அவ்வளவுக்கு நல்லது" என்று அப்துல்லா சேத் உரைத்தார்.

நான் அப்போது கூறியதாவது:—"தாங்கள் வக்கீல் தயார் செய்து கொடுக்கும் இடத்தில் தங்குகிறேன். இல்லாவிடில் நானே இடந்தேடிக்கொள்கிறேன். தாங்கள் அது குறித்துக் கவலைப்பட வேண்டாம். நமக்குள் அந்தரங்கமாகவுள்ள விஷயங்களை எவரும் அறிந்து கொள்ளார். ஆனால் எதிர்க் கட்சியாருடன் அறிமுகம் செய்து கொள்ளலாமென்றே எண்ணியிருக்கிறேன். அவர்களை நண்பர்களாக்கிக்கொள்ளவும் விரும்புகிறேன். கூடுமானால் வழக்கை நீதிமன்றத்துக்கு வெளியே ராஜியாகத் தீர்த்து வைப்பதற்கு முயல்வேன். பார்க்கப்போனால் தயேப்சேத் தங்கள் உறவினர்தானே?"

இவ்வழக்கில் பிரதிவாதியான சேத் தயேப் ஹாஜீ கான் முகமது என்பார் அப்துல்லா சேத்துக்கு நெருங்கிய பந்து.

ராஜி என்னும் வார்த்தையைக் கேட்டதுமே அப்துல்லா சேத் சிறிது திடுக்கிட்டதைக் கண்டேன். ஆனால் இதற்குள் நான் டர்பனுக்கு வந்து ஆறு, ஏழுநாள் ஆகிவிட்டதாதலின் நாங்கள் ஒருவரை யொருவர் அறிந்து கொண்டிருந்தோம். இப்போது என்னை 'வெள்ளை யானை' என்று அவர் கருதவில்லை. ஆதலின் அவர் சொன்னதாவது:—"ஆம், ஆம், உண்மையே. நீதி மன்றத்துக்கு வெளியே வழக்குத் தீர்ந்துவிட்டால் உத்தமந்தான். ஆனால் நாங்கள் உறவினராதலால் ஒருவரை யொருவர் நன்கு அறிவோம். தயேப் சேத் இலேசில் ராஜிக்கிணங்கும் மனிதர் அல்லர். கொஞ்சம் விழிப்புடனிருக்கத் தவறினால், நம்மிடமுள்ள இரகசியங்களை யெல்லாம் அறிந்துகொண்டு கவிழ்த்துவிடப் பார்ப்பார். ஆதலின் எந்தக் காரியமும் இருமுறை யோசித்துச் செய்யுங்கள்."

"அதைப் பற்றித் தாங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். வழக்கைப் பற்றித் தயேப் சேத்தினிட மாவது வேறு யாரிடமாவது நான் பேசவேண்டிய அவசியமே இல்லை. அநாவசியமாக வழக்காடிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக ராஜீயாகப் போய் விடலாமே என்று மட்டும் யோசனை கூறுவேன்" என்று பதிலளித்தேன்.

டர்பனுக்கு வந்த ஏழாம் நாளோ எட்டாம் நாளோ அதை விட்டுப் புறப்பட்டேன். முதல் வகுப்பு வண்டிக்குப் பிரயாணச் சீட்டு வாங்கப்பட்டிருந்தது. இரவில் படுக்கை வேண்டுமென்றால் தனியாக ஐந்து ஷில்லிங் கொடுத்துச் சீட்டுப் பெறுவது வழக்கம். படுக்கைச் சீட்டும் வாங்கிவிட வேண்டுமென்று அப்துல்லா சொன்னார். பிடிவாதமும், கர்வமும் ஒரு புறமும், ஐந்து ஷில்லிங் மீத்துவிட வேண்டுமென்னும் எண்ணம் ஒரு புறமும் ஆண்ட நான் இதனை உறுதியாக மறுத்து விட்டேன். அப்துல்லா சேத் அப்போதே எச்சரிக்கை செய்தார். "இங்கே பாருங்கள். இது இந்தியா அன்று. ஆண்டவன் புண்ணியத்தில் நமக்கு ஒன்றும் குறைவில்லை. ஆதலின் செலவுக்குச் சோம்பிக் கஷ்டத்துக்கு ஆளாக வேண்டாம்" என்று அவர் கூறினார்.

நான் அவருக்கு வந்தன மளித்து என் பொருட்டுக் கவலைப்பட வேண்டாமென்று சொன்னேன்.

நேட்டாலின் தலைநகராகிய மேரிட்ஸ்பர்க்குக்கு வண்டி இரவு 9 மணிக்குப் போய்ச் சேர்ந்தது. இங்கே தான் பிரயாணிகளுக்குப் படுக்கை கொடுக்கப்படுவது வழக்கம். ரயில்வே ஊழியர் ஒருவர் வந்து படுக்கை வேண்டுமாவென்று கேட்டார். "வேண்டாம்,

என்னிடம் படுக்கை யிருக்கிறது" என்று விடை யளித்தேன். அவ்வூழியர் சென்றார். ஆனால் அடுத்தாற்போல் பிரயாணி ஒருவர் வந்து என்னை மேலும் கீழும் உற்றுப் பார்த்தார். நான் கறுப்பு மனிதன் என்பது தெரிந்ததும் அவர் மனம் அமைதி யிழந்தது. அவர் வெளியே சென்று இரண்டொரு உத்தியோகஸ்தர்களை அழைத்துக் கொண்டு திரும்பி வந்தார். அவர்கள் எல்லாரும் சும்மா யிருந்தனர். பின்னர் மற்றோர் உத்தியோகஸ்தர் வந்து "வெளியே வாரும், நீர் சாமான் வண்டிக்குப் போக வேண்டும்" என்று கூறினர்.

"என்னிடம் முதல் வகுப்புச் சீட்டு இருக்கிறது" என்று நான் சொன்னேன்.

"அக்கரையில்லை; நீர் சாமான் வண்டிக்குத்தான் போகவேண்டும்"

"இந்த வண்டியில் பிரயாணம் செய்ய டர்பனில் எனக்கு அநுமதி யளிக்கப்பட்டது. நான் இந்த வண்டியிலேயே பிரயாணம் செய்யப்போகிறேன்"

"ஒரு நாளுமில்லை. வண்டியைக் காலிசெய்கிறீரா, உம்மை வெளியில் பிடித்துத் தள்ளப் போலீஸ்காரனைக் கூப்பிடட்டுமா?"

"போலீஸ்காரன் வரட்டும்; நானே வலிய இங்கிருந்து நகரமாட்டேன்."

போலீஸ்காரன் வந்தான். என்னைக் கையைப்பிடித்து இழுத்து வெளியே தள்ளினான். என்னுடைய சாமான்களும் வெளியே யெடுத் தெரியப்பட்டன. நான் வேறு வண்டிக்குப் போக மறுத்தேன். வண்டியும் போய் விட்டது. என்னுடைய கைப் பையை மட்டும் எடுத்துக் கொண்டு பிரயாணிகள் உட்காருவதற்கான அறையை

யடைந்து உட்கார்ந்தேன். மற்றச் சாமான்கள் ரயில்வே உத்தியோகஸ்தர்கள் வசம் இருந்தன.

அதுவோ குளிர்காலம். தென்னுப்பிரிக்காவில் உயரமான பிரதேசங்களில் குளிர் மிக அதிகம். மேரிட்ஸ் பர்க் நகர் உயரமான இடத்தில் அமைந்திருக்கிறபடியால் அங்கே குளிரின் கடுமை சொல்லமுடியாது. என்னுடைய மேலங்கி மற்றச் சாமான்களுடன் இருந்தது. மீண்டும் அவமதிக்கப் போகிருர்களே என்னும் பயத்தினுல் அதைக் கேட்டு வாங்கிக் கொள்ளத் துணியவில்லை. எனவே குளிரால் நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அறையில் வெளிச்ச மில்லை. நள்ளிரவில் ஒரு பிரயாணி வந்தார். அவர் என்னுடன் பேச விரும்பினுர்போலக் காணப்பட்டது. ஆனுல் பேசுவதற்கு எனக்குச் சிறிதும் உற்சாக மில்லை.

என்னுடைய கடமை என்னவென்று சிந்திக்கலானேன். என் உரிமைகளுக்காக இங்கே போராடுவதா? இந்தியாவுக்குத் திரும்பிவிடுவதா? அல்லது அவமானங்களைக் கவனியாமல் பிரிடோரியாவுக்குச் சென்று வழக்கை முடித்துவிட்டு ஊருக்குத் திரும்புவதா? ஏற்றுக்கொண்ட கடமையை ஆற்றுமல் இந்தியாவுக்குத் திரும்புவது கோழைத்தனமாகும். எனக்கு இங்கு ஏற்பட்ட தொல்லை, நிறத்துவேஷம் என்னும் நோயின் வெளிப்படையான அறிகுறியே யல்லாது வேறில்லை. இந்த நோயை வேருடன் அழிக்க முயலுவதும், அம் முயற்சியில் வரும் துன்பங்களை அநுபவிப்பதும் என் கடமையென எண்ணினேன். நிற வேற்றுமை யுணர்ச்சி தொலைவதற்கு அவசியமான அளவு மட்டுமே அநீதிகளுக்கு நியாயந்தேட வேண்டுமெனத் தீர்மானித்தேன்.

எனவே அடுத்த வண்டியில் பிரிடோரியாவுக்குப் போவதென்று நிச்சயித்தேன்.

மறுநாள் காலையில் ரயில்வே ஜெனரல் மானேஜருக்கு ஒரு நீண்ட தந்திச் செய்தி அனுப்பினேன். அப்துல்லா சேத்துக்கும் விவரம் அறிவித்தேன். அவர் உடனே ஜெனரல் மானேஜரைக் கண்டு பேசினர். மானேஜர், ரயில்வே உத்தியோகஸ்தர்களின் நடக்கை நியாயமானதே யென்று வற்புறுத்திவிட்டு, ஆனால் என்னை அடுத்த வண்டியில் ஏற்றி ஜாக்கிரதையாக அனுப்பும்படி ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தெரிவித்து விட்டதாகக் கூறினாராம். அதன் மேல் அப்துல்லா சேத் மேரிட்ஸ்பர்க்கில் இருந்த இந்திய வியாபாரி களுக்கும், மற்ற இடங்களிலிருந்த தம் நண்பர் களுக்கும் என்னைவந்து பார்த்து வேண்டுவன செய்யும்படி தந்தியடித்தார். மேரிட்ஸ்பர்க் இந்தியர்கள் ஸ்டேஷனுக்கு வந்து எனக்குத் தேர்தல் கூறு முகத்தால் அவரவர்கள் அநு பவித்துள்ள இத்தகைய கஷ்டங்களைப்பற்றிக் கூறலானார் கள். எனக்கு நேர்ந்தது அசாதாரணமான நிகழ்ச்சியன் றென்றும், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் பிரயாணம் செய்யும் இந்தியர்களுக்கு ரயில்வே உத்தியோ கஸ்தர்களும் வெள்ளைக்காரப் பிரயாணிகளும் தொந்திரவு கொடுப்பது சகஜமென்றும் கூறினார்கள். இத்துயரக் கதைகளைச் செவி மடுப்பதில் அன்று பகல் முழுவதும் கழிந்தது. மாலை வண்டி வந்தது. அதில் எனக்காக ஓர் இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. டர்பனில் படுக்கைச் சீட்டு வாங்க மறுத்த நான் இப்போது அச்சீட்டு ஒன்று வாங்கிக் கொண்டேன்.

ரயில் சார்லஸ் டவுனுக்கு என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்தது.

ஒன்பதாம் அத்தியாயம்

இன்னும் கஷ்டங்கள்

வண்டி காலையில் சார்லஸ் டவுனை அடைந்தது. அக் காலத்தில் சார்லஸ் டவுனிலிருந்து ஜோகானிஸ் பர்க்குக்கு ரயில் கிடையாது. மாற்றுக் குதிரைகள் போட்டு ஓட்டிய நான்கு சக்கர வண்டியில் போக வேண்டும். வண்டி வழியில் ஸ்டாண்டர்டன் என்னு மிடத்தில் இரவு தங்குவது வழக்கம். குதிரை வண்டிக்கும் என்னிடம் சீட்டு இருந்தது. ஒரு நாள் மேரிட்ஸ்பர்க்கில் தாமதித்து விட்டதனால் அது விதிப்படி செல்லாமற் போகாது. மேலும் சார்லஸ் டவுனிலிருந்த குதிரை வண்டி ஏஜண்டுக்கு அப்துல்லா சேத் தந்தி யடித்திருந்தார்.

ஆனால் மேற்படி ஏஜண்டுக்கு என்னை வண்டியில் ஏற்ற மறுக்க ஒரு சாக்குத்தான் தேவையாயிருந்தது. நான் அவ்விடத்துக்குப் புதியவன் என்று கண்டதும் அவர் "உம்முடைய சீட்டு ரத்தாகி விட்டது" என்று கூறினர். அவருக்கு நான் முறையாகப் பதிலளித்தேன். இடமில்லாமை காரணமாக அவர் இப்படிச் சொல்ல வில்லை; அவர் மனதிலிருந்த காரணம் முற்றும் வேறானது. பிரயாணிகளுக்கு வண்டிக்குள் இடங் கொடுத்தாக வேண்டும். ஆனால் நான் 'கூலி' யாதலாலும், புது மனிதனாகக் காணப்பட்ட படியாலும், மற்ற வெள்ளைக் காரர்களோடு சேர்த்து உட்காரவையாவிடில் நலம் என்று வண்டித் 'தலைவன்' நினைத்தான். வண்டியை மேற் பார்வை செய்து வந்த வெள்ளைக்காரனுக்குத் 'தலைவன்' என்று பட்டம். வண்டியின் பெட்டிமீது வண்டி ஓட்டிக்கு இருபுறத்திலும் இரண்டு ஆசனங்கள் இருந்தன.

இவற்றுள் ஒன்றில் தலைவன் உட்கார்ந்து செல்வது வழக்கம். இன்று அவன் எனக்குத் தன் இடத்தைக் கொடுத்து விட்டுத் தான் உள்ளே உட்கார்ந்தான். இது பெரும் அநீதியென்றும், என்னை அவமதிப்பதாகும் என்றும் எனக்குத் தெரிந்தே இருந்தன. ஆனால் அவற்றைப் பொறுத்துக் கொள்வதே நலமென்று எண்ணினேன். நான் பலாத்காரமாக உள்ளே நுழைந்திருக்க முடியாது. ஆட்சேபங் கிளப்பினாலோ வண்டி என்னை விட்டுவிட்டுப் போய்விடும். இதனால் இன்னொரு நாள் வீணாகும். மறுநாள் என்ன நேரிடுமோ வென்பது ஆண்டவனுக்கே தெரியும். எனவே உள்ளுக்குள் ஆத்திரத்தினால் பொருமினேனாயினும், அதை வெளியில் காட்டாமல் வண்டி ஓட்டிக்குப் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

மூன்று மணி சுமாருக்கு வண்டி பார்த்தேகோப் என்னுமிடத்தை அடைந்தது. அங்கு வந்ததும், வண்டித் தலைவன் நான் உட்கார்ந்திருந்த இடத்தில் அமர்ந்து சற்றுக் காற்று வாங்கவும் புகைச் சுருட்டுக் குடிக்கவும் விரும்பினான்போலும். எனவே அவன் அழுக்கு நிறைந்த சாக்குத் துணி ஒன்றை வண்டி யோட்டியிட மிருந்து வாங்கி, வண்டியில் கால் வைத்து ஏறுவதற்கான படிமீது விரித்து விட்டு, என்னைப் பார்த்து "சாமி, இதன் மீது உட்கார். வண்டி ஓட்டிக்குப் பக்கத்தில் நான் உட்கார வேண்டும்" என்றான். இப்போது என்னாலும் சகிக்க முடியாமற் போயிற்று. பயத்தினால் உடல் நடுங்க நான் கூறியதாவது:—நீரே இங்கு என்னை உட்கார வைத்தீர். நியாயமாக உள்ளே எனக்கு இடங் கொடுத்திருக்க வேண்டும். அந்த அவமதிப்பை நான் சகித்துக் கொண்டேன். இப்போது நீர் வெளியே உட்கார்ந்து புகைச் சுருட்டுக்

குடிக்க விரும்புவதால் உமது காலினடியில் உட்காரச் சொல்கிறீர். நான் அங்கு உட்கார மாட்டேன். ஆனால் உள்ளே உட்காருவதற்குத் தயார்."

நான் இவ்வாறு தட்டுத் தடுமாறிச் சொல்லிக் கொண்டேயிருக்கையில் அவன் என்னிடம் வந்து என் காதுகளில் ஓங்கி அறையலானான். என் கையைப் பிடித்துக் கீழே இழுக்க முயன்றான். வண்டிப் பெட்டியின் பித்தளைக் கம்பிகளை நான் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். மணிக்கட்டு எலும்புகள் முறிந்து போனாலும் பிடியை விடுவதில்லையென்று உறுதி கொண்டேன். அம்மனிதன் என்னைத் திட்டிக்கொண்டே இழுப்பதையும் அடிப்பதையும் நான் சும்மாயிருப்பதையும் மற்றப் பிரயாணிகள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் பலசாலி; நானோ பலவீனன். இந்தக் காட்சியைக் கண்ட பிரயாணிகளில் சிலர் இரக்கமடைந்து "அப்பா, அவரை விட்டுவிடு. அடியாதே. அவர்மீது குற்றம் இல்லை அவர் கூறுவது உண்மை. அங்கு இடமில்லாவிட்டால் அவர் உள்ளே வந்து எங்களுடன் உட்காரட்டும்" என்றனர். "ஒருக்காலுமில்லை" என்று கூறினான் அம்மனிதன். ஆயினும் கொஞ்சம் அவமானமுற்றவனாகக் காணப்பட்டான். அடிப்பதை நிறுத்திக் கையையும் விட்டான். இன்னும் சிறிது நேரம் திட்டிவிட்டு, வண்டி ஓட்டிக்கு மறுபக்கத்தில் உட்கார்ந்திருந்த ஹாட்டன்டாட் (ஆப்பிரிக்கா சுதேசிகளில் ஓர் இனம்) வேலைக்காரனை வண்டிப் படியில் உட்காரச்செய்து தான் அவனுடைய இடத்தில் உட்கார்ந்தான்.

மற்றப் பிரயாணிகள் தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்ததும் வண்டி புறப்பட்டது. என் ஹிருதயம் அதி

விரைவாக அடித்துக்கொண்டிருந்தது. பிரிடோரியாவுக்கு உயிருடன் போய்ச் சேருவோமோ என்றெண்ணினேன். அவ்வப்போது வண்டித் தலைவன் என்னைக் கோபமாகப் பார்த்து விரலை ஆட்டி "பொறு, பொறு; ஸ்டாண்டர்டனுக்குப் போனதும் உனக்கு வழி சொல்கிறேன்" என்று உறுமிக் கொண்டிருந்தான். நான் மௌனமாயிருந்து எனக்குத் துணைபுரிந்து காப்பாற்றும்படி ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன்.

இருட்டிய பின்னர் ஸ்டாண்டர்டனை அடைந்தோம் அங்கு இந்தியர் முகங்களைப் பார்த்ததும் ஓரளவு ஆறுதலடைந்து பெருமூச்சுவிட்டேன். வண்டியிலிருந்து இறங்கியதும் அந்நண்பர்கள் "சேத் அப்துல்லாவிடமிருந்து எங்களுக்குத் தந்தி கிடைத்தது. தங்களை ஈஸா சேத்தின் கடைக்கு அழைத்துச் செல்ல வந்திருக்கிறோம்" என்றார்கள். எனக்கு அளவுகடந்த மகிழ்ச்சி யுண்டாயிற்று. அவ்வாறே சேத் ஈஸா ஹாஜி ஸுமார் என்பாரின் கடைக்குச் சென்றோம். சேத்தும் அவரது குமாஸ்தாக்களும் என்னைச் சூழ்ந்துகொண்டனர். பிரயாணத்தில் எனக்கு நேர்ந்த கஷ்டங்களை யெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்தேன். எல்லாரும் மிகவும் வருத்தப் பட்டதுடன் தங்கள் தங்கள் அநுபவங்களைக் கூறி எனக்குத் தேறுதல் கூறினார்கள்.

குதிரை வண்டிக் கம்பெனியின் ஏஜண்டுக்கு எல்லா விவரங்களையும் அறிவிக்க விரும்பினேன். ஆதலின் அன்று நிகழ்ந்தன வெல்லாவற்றையும் விவரமாய்க் கூறி ஒரு கடிதம் எழுதினேன். அவருடைய மனிதனின் அச்சுறுத்தலைக் குறிப்பிட்டு அடுத்த நாள் காலை புறப்படும்போது வண்டிக்குள் மற்றப் பிரயாணிகளுடன் இடந் தருவதாக

உறுதி யளிக்கவேண்டு மென்று கேட்டிருந்தேன். அதற்கு ஏஜண்டு பின்வருமாறு பதில் விடுத்தார்:—“ஸ்டாண்டர் டனிலிருந்து பெரிய வண்டி போகிறது. மனிதர்களும் வேறு. நீங்கள் புகார் கூறும் மனிதன் வரமாட்டான். மற்றப் பிரயாணிகளுடன் உங்களுக்கு இடந்தரப்படும்” இப்பதில் ஓரளவு எனக்கு ஆறுதல் தந்தது. என்னை அடித்தவன்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் உத் தேசம் எனக்குக் கிடையாது. எனவே அச்சம்பவம் இத் துடன் முடிவு பெற்றது.

காலையில் ஈஸா சேத்தின் மனிதர்கள் என்னை வண்டிக் குக் கொண்டு விட்டார்கள். அதில் நல்ல இடம் கிடைத் தது. எவ்விதத் தொல்லைக்கும் ஆளாகாமல் அன்றிரவு ஜோகானிஸ்பர்க் போய்ச் சேர்ந்தேன்.

ஸ்டாண்டர்டன் சிறு கிராமம். ஜோகானிஸ்பர்க் பெரிய நகரம். அப்துல்லா சேத் ஜோகானிஸ்பர்க்குக்கும் செய்தி அனுப்பியிருந்தார். எனக்கு முகமது காஸம் கம்ருதீன் கம்பெனியின் விலாசம் கொடுத்திருந்தார். இக் கம்பெனியின் ஆள், என்னைச் சந்தித்து அழைத்துப் போவ தற்காக வண்டி நிற்குமிடத்துக்கு வந்திருந்தானும். ஆனல் நான் அவனைப் பார்க்கவில்லை. அவனும் என்னை அடை யாளங் கண்டுபிடிக்கவில்லை. எனவே ஒரு ஹோட்ட லுக்குச் செல்வதென்று தீர்மானித்தேன். சில ஹோட்டல் களின் பெயர்கள் எனக்குத் தெரிந்திருந்தன. ஒரு ஜட்கா வண்டி பிடித்து, கிராண்ட் நேஷனல் ஹோட்டலுக்குப் போகும்படி சொன்னேன். அங்குச் சென்றதும் மானே ஜரைப் பார்த்து ஓர் அறை வேண்டு மென்று கேட்டேன். அவர் என்னைச் சற்று உன்னிப்பாய்ப் பார்த்துவிட்டு “இடமில்லை; வருந்துகிறேன்” என்று மரியாதையாகக்

கூறி விடை கொடுத்தார். எனவே வண்டிக்காரனை முகம்மது காஸிம் கம்ருதீன் கடைக்கு ஓட்டச் சொன்னேன். இங்கே அப்துல் கனி சேத் என் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அன்புடன் முகமன் கூறி வரவேற்றார். ஹோட்டல் சங்கதியைக் கேட்டதும் அவர் இடி இடியென்று சிரித்தார். "ஹோட்டலில் இடங் கிடைக்குமென்று எதிர்பார்த்தீர்களா? பேஷ்! நன்றாயிருக்கிறது!" என்றார்.

"அப்படி எதிர்பார்த்தத்தில் என்ன விநோதம்?" என்று கேட்டேன்.

"இங்கே கொஞ்ச நாள் இருந்தால் தெரிந்து கொள்வீர்கள். எங்களைப்போன்றவர்கள் மட்டுமே இந்நாட்டில் வசிக்க முடியும். இங்கே பணந் தேடவே வந்திருக்கிறோமாதலின் அதை உத்தேசித்து அவமதிப்புகளை நாங்கள் பாராட்டுவதில்லை" என்று அவர் கூறினார். பின்னர் தென்னாப்பிரிக்காவில் இந்தியர் படும் கஷ்டங்களையெல்லாம் விரித்துரைத்தார்.

சேத் அப்துல் கனியைப்பற்றிப் பின்னால் போகப் போக இன்னும் தெரிந்து கொள்வோம்.

இப்போது அவர் மேலுங் கூறியதாவது:—"உங்களைப் போன்றவர்கள் இந்நாட்டில் வசிக்க இயலாது. இங்கே பாருங்கள். நாளை நீங்கள் பிரிடோரியாவுக்குப் போக வேண்டுமல்லவா? மூன்றாம் வகுப்பிலேயே நீங்கள் பிரயாணம் செய்தாக வேண்டும். நேட்டால் நிலைமையை விட டிரான்ஸ்வால் நிலைமை அதிக மோசம். இங்கு முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புச் சீட்டுகள் இந்தியர்களுக்குக் கொடுக்கப்படுவதேயில்லை."

"இவ்விஷயத்தில் நீங்கள் பிடிவாதமாக முயற்சி செய்திருக்க மாட்டீர்கள்" என்று நான் கூறினேன்.

"விண்ணப்பங்கள் எவ்வளவோ அனுப்பி இருக்கிறோம். ஆனால் ஒன்று உண்மை. நம்மவர்கள் சாதாரணமாக முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புகளில் பிரயாணம் செய்ய விரும்புவதில்லை."

ரயில்வே விதிகள் அடங்கிய புத்தகம் தருவித்துப் பார்த்தேன். டிக்கட் கொடுக்க மறுப்பதற்கு விதிகள் ஓரளவு இடங்கொடுத்தன. பழைய டிரான்ஸ்வால் சட்டங்களின் பாஷை திட்டமாகவே இராது. அதிலும் ரயில்வே விதிகள் நிரம்ப வழவழவென்று இருந்தன.

"எனக்கு முதல் வகுப்பில் போகவே விருப்பம். அது முடியாதெனில் பிரிடோரியாவுக்கு நேரே ஜட்கா வண்டியில் போய்விடுகிறேன். 37 மைல் தானே" என்று சேத்திடம் சொன்னேன்.

இதனால் ஏற்படக்கூடிய காலவிரயத்தையும் பணச் செலவையும் அவர் எடுத்துக் காட்டினார். ஆனால் முதல் வகுப்பில் பிரயாணம் செய்வதற்கு இசைந்தார். எனவே ஸ்டேஷன் மாஸ்டருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் நான் 'பாரிஸ்டர்' என்பதையும், எப்போதும் முதல் வகுப்பில் பிரயாணம் செய்பவன் என்பதையும் குறிப்பிட்டு, கூடிய சீக்கிரத்தில் நான் பிரிடோரியா போக விரும்புகிறபடியால் அவருடைய பதில் பார்த்துக் கிளம்புவதற்கு நேரமில்லையென்றும், மறு நாள் காலை நேரில் பதில் பெற்றுக் கொள்வதாகவும், முதல் வகுப்புச் டிக்கட் கிடைக்குமென்று எதிர்பார்ப்பதாகவும் எழுதியிருந்தேன். நேரில் வந்து பதில் பெற்றுக்கொள்வதாகச் சொன்னதில் ஒரு

விசேஷ நோக்கம் உண்டு. ஸ்டேஷன் மாஸ்டர் எழுத்து மூலமாகப் பதில் அனுப்புவராயின் நிச்சயமாக "முடியாது" என்றே எழுதிவிடுவாரென நினைத்தேன். ஏனெனில் 'கூலி' பாரிஸ்டரைப்பற்றி அவர் கொண்டிருக்கும் அபிப் பிராயம் ஒரு மாதிரியானதாகவே யிருக்கும். ஆனால் நாகரிகமான ஆங்கில உடை தரித்து அவரிடம் நேரில் சென்று பேசினால் ஒருவேளை மனதை மாற்றி முதல் வகுப்புச் சீட்டுக் கொடுக்கும்படி செய்யக்கூடும். ஆகவே, மறுநாள் காலையில் நாகரிகமான சட்டை, கழுத்துச்சுருக்கு முதலியவை அணிந்து ஸ்டேஷனுக்குச் சென்றேன். சீட்டு வாங்குமிடத்தில் ஒரு பவுனை வைத்து முதல் வகுப்புச் சீட்டு ஒன்று தரும்படி கேட்டேன்.

"கடிதம் அனுப்பியது நீர்தானே?" என்று ஸ்டேஷன் மாஸ்டர் வினவினார்.

"ஆம்; சீட்டுத் தந்தீர்களானால் நிரம்ப உபகாரமா யிருக்கும். பிரிடோரியாவுக்கு இன்று நான் கட்டாய மாகப் போய்ச் சேரவேண்டும்" என்றேன்.

அவர் புன்னகை புரிந்தார். என்பால் இரக்கமுற்று அவர் கூறியதாவது:—நான் டிரான்ஸ்வாலில் மனிதன் அல்லன்; ஹாலந்து தேசத்தான். உமது உணர்ச்சிகளை மதிப்பதுடன் உம்மிடம் அநுதாபமுங் கொண்டிருக்கி றேன். உமக்குச் சீட்டுக் கொடுக்க விரும்புகிறேன். ஆனால் ஒரு நிபந்தனையின்மீதே கொடுக்க முடியும். மூன்றும் வகுப்புக்குப் போகும்படி 'கார்டு' (Gaurd) உம்மைக் கட்டாயப்படுத்தினால் என்னை மாட்டிவிடக் கூடாது. அதாவது ரயில்வே கம்பெனிமீது நீர் வழக்குத் தொடரக்கூடாது. சுகமாகப் போய் வாரும். உம்மைப் பார்த்தால் கனவான் என்று தெரிகிறது."

இவ்வாறு கூறி அவர் சீட்டுக் கொடுத்தார். அவருக்கு வந்தன மளித்துவிட்டு நிபந்தனையின்படி நடப்பதாக வாக் குறுதி கொடுத்தேன்.

ஸ்டேஷனில் என்னை வண்டியேற்றி அனுப்ப அப்துல் கனி வந்திருந்தார். எனக்குச் சீட்டுக் கிடைத்தது குறித்து அவர் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். எனினும் பின்வருமாறு எச்சரிக்கை செய்தார்:—"நீங்கள் சுகமாகப் பிரிடோரியா போய்ச் சேர்ந்தால் ஆண்டவன் புண்ணியம். 'கார்டு' உங்களை முதல் வகுப்பில் விட்டு வைக்கமாட்டானென அஞ்சுகிறேன். அவன் இடங் கொடுத்தாலும் மற்றப் பிரயாணிகள் விடமாட்டார்கள்."

முதல் வகுப்பு வண்டியில் அமர்ந்தேன். வண்டியும் புறப்பட்டது. ஜெர்மிஸ்டன் என்னும் ஸ்டேஷனில் பரி சோதனை செய்வதற்காக 'கார்டு' வந்தான். என்னைப் பார்த்ததும் அவனுக்குக் கோபம் பொங்கிற்று. மூன்றும் வகுப்புக்குப் போகும்படி விரலால் ஜாடை செய்தான். என் முதல் வகுப்புச் சீட்டைக் காட்டினேன். "அதைப் பற்றி அக்கரை யில்லை. மூன்றும் வகுப்புக்குப் போ" என்றான்.

அவ்வண்டியில் என்னைத் தவிர ஆங்கிலப் பிரயாணி ஒருவரே இருந்தார். அவர் 'கார்டை'க் கண்டித்தார். "அந்தக் கனவானை ஏன் தொந்திரவு செய்கிறீர்? அவ ரிடம் முதல் வகுப்புச் சீட்டு இருப்பதைப் பார்க்கவில்லையா? அவர் என்னுடன் பிரயாணம் செய்வதில் எனக்குக் கொஞ்சமும் ஆட்சேபமில்லை" என்றார். பின்னர் என்னைப் பார்த்து "நீங்கள் இருக்கு மிடத்திலேயே சௌகரியமா யிருங்கள்" என்று கூறினர்.

"கூலியுடன் பிரயாணம் செய்ய நீரே விரும்பினல் எனக்கென்ன கவலே?" என்று முணுமுணுத்துவிட்டு 'கார்டு' போய் விட்டான்.

மாலே எட்டு மணி சுமாருக்கு வண்டி பிரிடோரியா போய்ச் சேர்ந்தது.

பத்தாம் அத்தியாயம்

பிரிடோரியாவில் முதல் தினம்

அப்துல்லா சேத்தின் அட்டர்னி என்னைச் சந்திக்க யாரையேனும் பிரிடோரியா ஸ்டேஷனுக்கு அனுப்பி வைப்பாரென்று எதிர்பார்த்தேன். இந்தியர் யாரும் வந்திருக்க மாட்டார் என்று எனக்குத் தெரியும். ஏனெனில் இந்தியர் எவருடைய வீட்டிலும் தங்குவதில்லே யென்று நான் வாக்குறுதி கொடுத்திருந்தேன். ஆனல் ஸ்டேஷனில் அட்டர்னியின் மனிதன் யாருங்கூட வந்திருக்கவில்லே. அன்று ஞாயிற்றுக்கிழமை யானதால் யாரையும் அனுப்பச் சௌகரியப்படவில்லே யெனப் பின்னல் தெரிந்து கொண்டேன். என்ன செய்வது, எங்கே போவது என்று புரியாமல் திகைத்தேன். ஹோட்டல்களில் எனக்கு இடங் கொடுக்க மாட்டார்கள் என்று பயந்தேன்.

பிரிடோரியா ஸ்டேஷன் 1914-ம் ஆண்டில் இருந்தது போல் 1893-ம் வருஷத்தில் இல்லே. விளக்குகள் மங்கலா யெரிந்து கொண்டிருந்தன. பிரயாணிகள் மிகச் சிலர். எல்லாப் பிரயாணிகளும் போகட்டும் என்று காத்திருந் தேன். சீட்டு வசூலிப்பவரு (டிக்கட் கலெக்டர்)க்குக்

கொஞ்சம் ஓய்வு கிடைத்ததும் அவரிடம் என்னுடைய சீட்டைக் கொடுத்துவிட்டு ஏதேனும் ஒரு ஹோட்டலுக்காவது அல்லது நான் போகக்கூடிய வேறிடத்துக்காவது வழி கேட்கலாமென்றும், இல்லாவிட்டால் இரவு ஸ்டேஷனிலேயே தங்கி விடலாமென்றும் எண்ணினேன். இது கேட்பதற்குக்கூட உண்மையில் எனக்குப் பயமாயிருந்தது. ஒரு வேளை என்னை அவர் அவமதிக்கக்கூடுமென எண்ணினேன்.

அவ்வாறே எல்லாப் பிரயாணிகளும் போன பிறகு சீட்டு வசூலிப்பவரிடம் என்னுடைய சீட்டைக் கொடுத்து ஹோட்டலைப்பற்றி விசாரித்தேன். அவர் மரியாதையாகப் பதில் சொன்னார். ஆனால் அவரால் எனக்கு அதிக உதவி ஏற்படாதெனக் கண்டேன். பக்கத்திலிருந்த அமெரிக்க நீகிரோவர் ஒருவர் இச்சமயத்தில் சம்பாஷணையில் கலந்து கொண்டார். அவர் கூறியதாவது:—

"இவ்விடத்துக்கு நீங்கள் முற்றிலும் புதியவர் என்று தெரிகிறது. நண்பர்கள் யாருங்கூட இல்லைபோலும். நல்லது, என்னுடன் வந்தால் சிறு ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் செல்கிறேன். அதன் சொந்தக்காரர் ஓர் அமெரிக்கர். அவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் உங்களுக்கு இடங் கொடுப்பார் என்று எண்ணுகிறேன்."

அவருடைய கூற்றில் எனக்கு ஐயங்கள் தோன்றுமில்லை. ஆயினும் அவருக்கு வந்தனமளித்து அவருடன் வர இசைந்தேன். ஜான்ஸ்டன் என்பாரின் குடும்ப ஹோட்டலுக்கு என்னை அவர் அழைத்துச் சென்றார். மிஸ்டர் ஜான்ஸ்டனைத் தனியாக அழைத்துப் பேசினார். அவர் இரவு தங்க எனக்கு இடந் தருவதாக ஒப்புக்

கொண்டார். ஆனால் என்னுடைய அறையில் தனியாகவே உணவு கொள்ள வேண்டுமென்று சொன்னார்.

"என் வரையில் எனக்கு நிறவேற்றுமை என்பது கிடையாது. ஆனால் என் ஹோட்டலுக்கு வருவோரெல்லாரும் ஐரோப்பியர்கள். சாப்பாட்டு அறையில் அவர்களுடன் வைத்து உங்களுக்குச் சாப்பாடு போட்டால் அவர்கள் கோபித்துக்கொண்டு போய்விடுவார்கள்" என்று அவர் கூறினார்.

"இரவு தங்குவதற்கேனும் இடந் தருவதற்காகத் தங்களுக்கு வந்தனம். இங்குள்ள நிலைமையை நான் ஒருவாறு அறிந்து கொண்டிருக்கிறேன். உங்களுடைய கஷ்டம் எனக்குத் தெரிகிறது. என் அறையிலேயே சாப்பிடுவதில் எனக்கு ஆட்சேபமில்லை. நாளைய தினம் வேறு ஏற்பாடு செய்து கொள்ளக்கூடுமென நம்புகிறேன்" என்று நான் பதிலளித்தேன்.

என்னை ஓர் அறையில் அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். உணவை எதிர்பார்த்து அங்கே தனியாக உட்கார்ந்து, சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். ஹோட்டலில் அப்போது அதிகம் பேரில்லை. எனவே விரைவில் வேலைக்காரன் உணவுடன் வருவானென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனால் மறுபடியும் மிஸ்டர் ஜான்ஸ்டனே வந்தார். அவர் கூறியதாவது:—"நீங்கள் உங்கள் அறையிலேயே உணவருந்த வேண்டும் என்று நான் சொன்னது எனக்கே வெட்கமாயிருந்தது. எனவே இதைப்பற்றி மற்றவர்களிடம் பேசினேன். சாப்பாட்டு அறையில் நீங்கள் உணவு கொள்வதில் அவர்களுக்கு ஆட்சேபம் உண்டா என்று கேட்டேன். அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். மேலும் உங்களுக்கு இஷ்டமாயிருக்கும்

வரை இங்கேயே இருக்கலா மென்றும் சொன்னார்கள். ஆதலின், உங்களுக்குப் பிரியமானால், தயவு செய்து சாப்பாட்டு அறைக்கே வாருங்கள். மற்றும், உங்களுக்கு இஷ்டமா யிருக்கும் வரை நீங்கள் இங்கேயே தங்கி யிருக்கலாம்.''

அவருக்கு நான் வந்தனங் கூறினேன். சாப்பாட்டு அறைக்குச் சென்று திருப்தியாக உணவு கொண்டேன்.

மறுநாள் காலையில் அட்டர்னியைப் பார்க்கச் சென்றேன். அவர் பெயர் மிஸ்டர் பேகர். அவரைப் பற்றி அப்துல்லா சேத் விவரமாகச் சொல்லி யிருந்த படியால் அவர் என்னை முக மலர்ச்சியுடன் வரவேற்றது எனக்கு வியப்பளிக்கவில்லை. மிக அன்புடன் அவர் என் யோக க்ஷேமங்களை விசாரித்தார். என்னைப்பற்றி எல்லா விவரங்களும் கூறினேன். கடைசியாக அவர் சொன்னதாவது:—''பாரிஸ்டர் என்ற முறையில் உங்களுக்கு இங்கே வேலை யில்லை. மிகச் சிறந்த வக்கீல்களை அமர்த்தி யிருக்கிறோம். ஆனால் வழக்கு நிரம்பவும் சிக்கலானது; நீடித்து நடக்கக்கூடியது. ஆதலின் அவசியமான விவரங்களைச் சேகரித்துக் கொடுப்பதில் உங்கள் உதவி தேவையா யிருக்கும். இனி, என்னுடைய கட்சிகாரரிடமிருந்து தெரிய வேண்டிய விவரங்களை யெல்லாம் உங்கள் மூலமாகவே தெரிந்து கொள்வேன். என்னுடைய வேலை இதனால் எளிதாகு மாகையால் பெரியதோர் அநுகூலமே யாகும். உங்களுக்கு இன்னும் ஜாகை தயார் செய்ய வில்லை. உங்களைப் பார்த்த பின்னரே அவ்விஷயமாக ஏற்பாடு செய்யவேண்டு மென்று எண்ணினேன். இங்கு நிறவேற்றுமை உணர்ச்சி நிரம்ப அதிகம். உங்களைப் போன்றவர்களுக்கு ஜாகை கிடைப்பது எளிதன்று.

ஆனால் ஏழை ஸ்திரீ ஒருத்தி எனக்குத் தெரியும். அவள் ரொட்டி வியாபாரி ஒருவரின் மனைவி. அவள் உங்களுக்கு இடமும் உணவும் அளிக்க இணங்குவாளென நினைக்கிறேன். அவளுக்கும் இதனால் லாபம் உண்டு. அவள் வீட்டுக்குப் போவோம், வாருங்கள்."

இவ்வாறு கூறி அவர் என்னை அந்த ஸ்திரீயின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவளிடம் என்னைப் பற்றித் தனிமையில் பேசினார். வாரம் 35 ஷில்லிங்குக்கு எனக்குத் தங்க இடமும் உணவும் அளிப்பதாக அவள் ஒப்புக்கொண்டாள்.

மிஸ்டர் பேகர் அட்டர்னி தொழில் நடத்தியதோடு கூட, மத சம்பந்தமான உபந்நியாசங்களும் செய்து வந்தார். அவர் இன்றளவும் ஜீவித்திருக்கின்றார். இப்போது அட்டர்னி தொழிலை விட்டு விட்டு சமயப் பிரசாரம் மட்டும் செய்து வருகிறார். அவர் நல்ல சொத்துக்காரர். இன்னமும் என்னுடன் கடிதப் போக்கு வரவு செய்துகொண்டு வருகிறார். அவர் கடிதங்களில் எப்போதும் ஒரு விஷயத்தைப் பற்றியே எழுதி வருகிறார். பல காரணங்களை ஆதாரமாகக் காட்டிக் கிறிஸ்துவ மதமே மதங்களுக்குள் தலை சிறந்தது என்றும், கடவுளின் ஒரே புதல்வரும் மக்கட் குலத்தின் இரட்சகருமாயிருப்பவர் ஏசுநாதர் ஒருவரே என்பதை ஒப்புக்கொண்டாலொழிய ஒருவன் நித்திய சாந்தியடைய முடியாதென்றும் அவர் தம் கடிதங்களில் வலியுறுத்தி வருகிறார்.

முதல் முறை மிஸ்டர் பேகரை நான் சந்தித்தபோதே அவர் மத சம்பந்தமாக என்னுடைய கொள்கைகளைப் பற்றிக் கேட்டார். நான் கூறியதாவது:—பிறப்பினால்

நான் ஹிந்து. ஆனால் ஹிந்து மதத்தைப்பற்றி எனக்குத் தெரிந்தது கொஞ்சம். மற்ற மதங்களைப்பற்றி அவ்வளவு கூடத் தெரியாது. உண்மையில், மத சம்பந்தமாக என்னுடைய நிலை என்னவென்று எனக்கே தெரியவில்லை. என்னுடைய மதத்தைப்பற்றியும், கூடுமானவரை பிற சமயங்களைப்பற்றியும் நன்கு ஆராய்ச்சி செய்ய உத்தேசித்திருக்கிறேன்."

மிஸ்டர் பேகர் இதைக்கேட்டு மகிழ்ச்சி யடைந்தார். "தென்னாப்பிரிக்கா மதப் பிரசார சபையில் நான் ஒரு நிர்வாக அங்கத்தவன். என்னுடைய சொந்தச் செலவில் பிரார்த்த னாலயம் ஒன்று கட்டியிருக்கிறேன். அதில் தவறாமல் மத உபந்நியாசங்கள் செய்து வருகிறேன். எனக்கு நிறவேற்றுமை உணர்ச்சி கிடையாது. எனது சகாக்களும் நானும் தினந்தோறும் மத்தியானம் ஒரு மணிக்குக் கூடிச் சாந்தியும், ஞான ஒளியும் வேண்டிச் சில நிமிஷநேரம் பிரார்த்திப்பது வழக்கம். நீங்கள் எங்களுடன் சேர்ந்து கொண்டால் மகிழ்ச்சி யடைவேன். எனது சகாக்களுக்கு உங்களை அறிமுகம் செய்து வைப்பேன். அவர்கள் உங்களைக் கண்டால் சந்தோஷப் படுவார்கள். நீங்களும் அவர்களுடைய சங்கத்தில் விருப்பங் கொள்வீர்க ளென்பது நிச்சயம். படிப்பதற்குச் சமய நூல்கள் சிலவும் உங்களுக்குத் தருகிறேன். ஆனால் நூல்களுக்குள்ளே தலை சிறந்த நூல் பைபிள் ஆகும். அதை நீங்கள் முதன்மையாகப் படிக்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

அவருக்கு வந்தன மளித்துக் கூடுமானவரை அவர் குறிப்பிட்ட பிரார்த்தனைகளுக்குத் தவறாமல் வருவதாக வாக்களித்தேன்.

" அப்படியானால் நாளை ஒரு மணிக்கு இங்கே உங்களை எதிர் பார்ப்பேன். இருவரும் சேர்ந்து பிரார்த்தனைக்குச் செல்லலாம்" என்று மிஸ்டர் பேகர் உரைத்ததும் அவரிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

மிஸ்டர் ஜான்ஸ்டனிடம் சென்றேன். கணக்குத் தீர்த்து அவருக்குப் பணம் கொடுத்துவிட்டுச் சாமான்களுடன் புதிய ஜாகைக்குப் போனேன். அங்கே சிற்றுண்டி அருந்தினேன். புதிய ஜாகையின் சொந்தக்காரி நிரம்ப நல்லவள். எனக்காகச் சைவ உணவு தயாரித்து வைத்திருந்தாள். வெகு சீக்கிரத்தில் நான் அவளுடைய குடும்பத்தினரில் ஒருவன்போலாகி விட்டேன்.

பிறகு, அப்துல்லா சேத் கடிதம் கொடுத்திருந்த நண்பரைப் பார்க்கச் சென்றேன். தென்னாப்பிரிக்காவில் இந்தியர் படும் கஷ்டங்களைக் குறித்து அவரிடமிருந்து இன்னும் சில விவரங்கள் தெரிந்து கொண்டேன். அவர் என்னைத் தம்முடன் தங்கவேண்டுமென்று வற்புறுத்தினார். அவருக்கு வந்தன மளித்து முன்னாலேயே வேறு ஏற்பாடு செய்துவிட்டதாகக் கூறினேன். எனக்கு என்ன தேவையானாலும் தயங்காமல் தம்மைக் கேட்கும்படி அவர் வற்புறுத்திக் கூறினார்.

இதற்குள் இருட்டிவிட்டதால் வீட்டுக்குத் திரும்பினேன். இரவு போஜனம் ஆனதும் எனது அறைக்குள் சென்று உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்தேன். தற்போதைக்கு நான் செய்யக்கூடிய வேலை எதுவும் இல்லை. இதை அப்துல்லா சேத்துக்குத் தெரிவித்து விட்டேன். பின் வருமாறு எண்ணமிடலானேன்:—மிஸ்டர் பேகர் என் விஷயத்தில் காட்டும் சிரத்தையின் கருத்தென்ன? சமயத் தொண்டில் அவருடைய சகாக்களாயுள்ளோரின்

கூட்டுறவினால் என்ன பயன் பெறுவேன்? கிறிஸ்தவ மத ஆராய்ச்சியில் எவ்வளவு தூரம் ஈடுபடுவது? ஹிந்து மதத்தைப்பற்றிய நூல்கள் எப்படிச் சம்பாதிப்பது? என்னுடைய சொந்த மதத்தை நன்கு அறிந்து கொள்ளாத நான் கிறிஸ்துவ மத உண்மையை எவ்வாறு அறியமுடியும்? இப்படியாகப் பலவாறு எண்ணமிட்டுக் கடைசியில் தானாக என்னைத் தேடிவரும் எதையும் பேதா பேதம் சிறிது மின்றி ஆராய்ச்சி செய்யவேண்டு மென்றும், ஆண்டவன் அவ்வப்போது காட்டும் வழிபற்றி மிஸ்டர் பேகருட னும் அவர் சகாக்களுடனும் நடந்துகொள்ள வேண்டு மென்றும், என்னுடைய சொந்த மதத்தை நன்கு ஆராய்ந்து அறிவதற்கு முன்பு பிற மதத்தைத் தழுவலாகா தென்றும் முடிவுக்கு வந்தேன்.

இவ்வாறு சிந்தித்துக் கொண்டேன் உறக்கத்தி லாழ்ந்தேன்.

பதினோராம் அத்தியாயம்

கிறிஸ்துவர் சேர்க்கை

மறுநாள் ஒருமணிக்கு மிஸ்டர் பேகரின் பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் சென்றேன். அங்கு மிஸ் ஹாரில், மிஸ் காப் (Gabb), மிஸ்டர் கோடெஸ் முதலியோருக்கு என்னை அவர் அறிமுகம் செய்து வைத்தார். பிரார்த்தனை செய்வதற்காக எல்லோரும் மண்டியிட்டனர். நானும் அவ்வாறே செய்தேன். ஒவ்வொருவருடைய விருப் பத்தையு மனுசரித்துப் பல வரங்கள் கோரி ஆண்டவனைப் பிரார்த்தனை செய்வது வழக்கம். சாதாரணமாக, அன்றைய தினம் அமைதியாகக் கழியவேண்டு மென்றோ, அல்லது

பகவான் தங்கள் ஹிருதயத்தின் கதவுகளைத் திறந்துவிட வேண்டுமென்றே தினந்தோறும் பிரார்த்திப்பதுண்டு. இன்று என்னுடைய நலத்துக்காக ஒரு பிரார்த்தனை சேர்த்துக்கொள்ளப்பட்டது. அது வருமாறு:—“ஆண்டவனே, இன்று எங்களிடையே புதிதாக வந்திருக்கும் சகோதரருக்கு ஞான மார்க்கத்தைக் காட்டியருள்வாய். எங்களுக்கு அருளிய மனச் சாந்தியை அவருக்கும் தருவாய். எங்களை ஆட்கொண்ட ஏசு பெருமான் அவரையும் காத்தருள் புரியட்டும். ஏசுவின் பெயரால் இவ்வளவும் வேண்டுகிறோம்.” இந்தப் பிரார்த்தனைகளில் தோத்திர கீதங்கள் பாடுவதோ வேறு சங்கீதமோ கிடையாது. ஒவ்வொரு நாளும் விசேஷ வரம் ஒன்று கோரிப் பிரார்த்தனை செய்த பின்னர், கூட்டம் கலைந்து அவரவர் சிற்றுண்டி அருந்தச் செல்வது வழக்கம். எல்லாங் கூடிப் பிரார்த்தனை ஐந்து நிமிஷங்களுக்குமேல் ஆகாது.

மிஸ் ஹாரிஸ், மிஸ் காப் இருவரும் முதுமைப் பருவமடைந்த கன்னி ஸ்திரீகள். மிஸ்டர் கோடெஸ் “குவேகர்” என்னும் மத வைராக்யக் கூட்டத்தைச் சேர்ந்தவர். பெண்மணிகள் இருவரும் ஒருங்கே வசித்தனர். பிரதி ஞாயிற்றுக் கிழமையும் மாலை 4 மணிக்குத் தங்கள் வீட்டுக்குத் தேயிலைப் பானம் அருந்த வரும்படி என்னை அவர்கள் அழைத்தார்கள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் நாங்கள் சந்திக்கும்போதெல்லாம், முந்தைய வாரத்தில் சமய ஆராய்ச்சித் துறையில் நான் செய்த முயற்சிகளை மிஸ்டர் கோகடஸ்ஸினிடம் தெரிவிப்பேன். நான் படித்த சமய நூல்களைப்பற்றியும் அவை சம்பந்தமாக நான் கொண்ட அபிப்பிராயங்களைப் பற்றியும் விவாதிப்போம். பெண்மணிகள் தங்கள் இனிய

அநுபவங்களைப் பற்றியும், தாங்கள் பெற்ற மன அமைதியைப் பற்றியும் பேசுவார்கள்.

மிஸ்டர் கோடெஸ் கபடமற்ற இளைஞர். உறுதியுள்ளவர். நாங்கள் இருவரும் சேர்ந்து உலாவச் செல்வது வழக்கம். மற்றும் சில கிறிஸ்துவ நண்பர்களின் வீடுகளுக்கும் அவர் என்னை அழைத்துச் சென்றார்.

எங்கள் பழக்கம் நெருக்கமாக ஆக, அவர் தாமே புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து எனக்குக் கொடுக்கலானார். என்னுடைய அலமாரியும் நிரம்பிவிட்டது. புத்தகங்களைச் சுமை சுமையாக என்மீது சுமத்தினார் என்று சொல்லலாம். அவை எல்லாவற்றையும் படிப்பதாக உண்மை உள்ளத்துடன் வாக்களித்து அவ்வாறே படித்து வந்தேன், படித்தவற்றைப்பற்றி இருவரும் வாதித்தோம்.

1893-ல் அத்தகைய புத்தகங்கள் பல படித்தேன். அவை எல்லாவற்றின் பெயரும் ஞாபகமில்லை. மூன்று புத்தகங்கள் நினைவி லிருக்கின்றன. அவை:—டாக்டர் பார்க்கர் எழுதிய "வியாக்யானம்" (Commentary); பியர்ஸன் என்பார் எழுதிய "பல நிச்சய ருசுக்கள்" (Many Infallible Proofs); பட்லர் இயற்றிய "உவமானம்" (Analogy). இப் புத்தகங்களில் சில பகுதிகள் எனக்கு விளங்கவே யில்லை. சில பகுதிகள் நன்றாயிருந்தன. சில விடங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. "பல நிச்சய ருசுக்கள்" என்பவை இந்நூலாசிரியர் பைபிளின் மதத்தை அறிந்த அளவில் அம்மதத்துக்கு ஆதாரவாக எடுத்துக் காட்டும் ருசுக்கள் ஆகும். பார்க்கரின் "வியாக்யானம்" தர்ம மார்க்கத்தில் ஊக்கமளிக்கும் நூல். ஆனால் சாதாரணமான கிறிஸ்துவக் கோட்பாடுகளில் நம்பிக்கை

யில்லாத ஒருவனுக்கு அதனால் உதவி எதுவும் கிடையாது. பட்லரின் "உவமானம்" ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்த கஷ்டமான நூல். அதில் கூறப்பட்ட விஷயங்கள் நன்கு விளங்க வேண்டுமானால் ஐந்தாறு முறை திருப்பித் திருப்பிப் படிக்க வேண்டும். நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாக்குவதே அந்நூலின் நோக்கம் என்று எனக்குத் தோன்றிற்று. கடவுள் ஒருவர் உண்டென்று நிரூபிப்பதற்காக அதில் கூறப்படும் வாதங்கள் எனக்கு அநாவசியமா யிருந்தன. ஏனெனில் நான் சந்தேக நிலையை முன்னமேயே கடந்திருந்தேன். ஆனால் ஏசுநாதர் ஒருவரே கடவுளின் அவதார மென்றும், கடவுளுக்கும் மனிதனுக்கு மிடையே நின்று மனிதனைக் கடவுள்பால் சேர்க்க வல்லவர் அவர் ஒருவரே என்றும் நிரூபிக்க அதிற் காணப்பட்ட வாதங்கள் என் மனதைச் சிறிதும் கவரவில்லை.

ஆனால் மிஸ்டர் கோடெஸ் அவ்வளவு எளிதில் தோல்வியை ஒப்புக்கொண்டு விடுபவரல்லர். என்னிடத்தில் அவர் பெரிதும் பிரியங் கொண்டிருந்தார். என் கழுத்தில் வைஷ்ணவர்களின் சின்னமான துளசிமணி மாலை இருப்பதை அவர் கண்டார். இது குருட்டு நம்பிக்கையின் சின்னமென் றெண்ணி அவர் வருந்தினார். "இம்மூட நம்பிக்கை உங்களுக்குத் தகாது. அந்த மாலையை இங்கே கொடுங்கள். உடைத்தெறிந்து விடுகிறேன்" என்று அவர் சொன்னார்.

"இல்லை, அப்படிச் செய்யக்கூடாது. இம்மாலை என் தாயார் எனக்களித்த புனிதப் பொருள்" என்றேன்.

"அதில் உங்களுக்கு நம்பிக்கை யுண்டா? சொல்லுங்கள்" என்று அவர் வினவினார்.

"இம்மாலையின் மறைபொருள் என்னவோ, எனக்குத் தெரியாது. அதை அணியாவிட்டால் எனக்குக் கெடுதல் நேர்ந்துவிடுமென்றும் நான் கருதவில்லை. ஆனால் என் அன்னை அன்புடன் என் கழுத்திலணிந்த மாலையைப் போதிய காரணமின்றி எடுத்தெறிய ஒருப்படேன். எனக்கு அதனால் நலம் விளையுமென்று என் தாயார் உறுதியாக நம்பி யிருந்தார். நாளடைவில் இம்மாலை நலிந்து, தானே உடைந்து போனால், புதியதொன்றை வாங்கி அணிந்துகொள்ள மாட்டேன். ஆனால் இதை உடைத்தெறியச் சம்மதியேன்."

மிஸ்டர் கோடெஸ்ஸுக்கு என்னுடைய மதத்தில் நம்பிக்கை கிடையாதாதலால் என்னுடைய வாதமும் அவருக்குத் திருப்தி யளிக்கவில்லை. அஞ்ஞானப் படுகுழியிலிருந்து என்னைக் கரையேற்ற அவர் அவாக் கொண்டிருந்தார். மற்ற மதங்களில் ஓரளவு உண்மை யிருக்கலாமாயினும், கிறிஸ்துவ மதத்திலேயே முழு உண்மை உண்டென்றும், அதை ஏற்றுக் கொண்டாலொழிய மோட்சம் கிட்டாதென்றும், ஏசுநாதர் மனிதனுக்காகப் பரிந்து பேசினாலன்றி அவனுடைய பாவங்கள் மன்னிப்புப் பெறாவென்றும், நல்வினைகளால் பயன் யாதொன்று மில்லையென்றும் அவர் எனக்கு அறிவுறுத்த விரும்பினார்.

புத்தகங்கள் பலவற்றை எனக்கு அறிமுகம் செய்து வைத்தது போலவே, மதப் பற்றுள்ள கிறிஸ்துவர்கள் என்று அவர் கருதிய சிலரையும் பழக்கம்செய்து வைத்தார். கிறிஸ்துவர்களில் "பிளிமௌத் சகோதரர்" என்ற ஒரு தனிக் கூட்டமுண்டு. இக்கூட்டத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தை அவர் எனக்கு அறிமுகப்படுத்தினார்.

மிஸ்டர் கோடெஸ் மூலம் எனக்குப் பழக்கமானவர்களில் அநேகர் உத்தமர்; பெரும்பாலோர் கடவுளுக்குப் பயந்து நடப்பவர். ஆனால் மேற்படி குடும்பத்தாரோடு நான் பழகிக்கொண்டிருந்தபோது, "பிளிமௌத் சகோதரர்"களில் ஒருவர் கூறிய வாதம் நான் சற்றும் எதிர்பாராததா யிருந்தது. அவர் சொன்னதாவது:—

"எங்கள் மதத்தின் மேன்மையை உங்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் சொல்வதிலிருந்து, உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் நீங்கள் செய்துவிட்ட தவறுகளையே நினைந்து வருந்திக் கொண்டும், அவற்றைச் சரிப்படுத்திக் கொண்டும், அவற்றிற்குக் கழுவாய் தேடிக்கொண்டும், காலங்கழிக்கிறீர்க ளென்று தோன்றுகிறது. இந்த இடைவிடா வினைச் சுழலிலிருந்து நீங்கள் எப்படிக்கரையேற முடியும்? உங்களுக்கு மனச் சாந்தியே ஏற்படாது. நாம் எல்லோரும் பாவிகள் என்று நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள். இப்போது எங்கள் நம்பிக்கை எவ்வளவு பரிபூரண மானது என்று பாருங்கள். சீர்திருந்துவதற்காகவும், கழுவாய் தேடுவதற்காகவும் நாம் செய்யும் முயற்சிகள் பயனற்றவை; ஆயினும் நமக்குப் பாவ விமோசனம் வேண்டும். பாவமூட்டையை நாம் எவ்வாறு சுமக்க முடியும்? ஏசுநாதர்மீது அச் சுமையைப் போட்டு விடவே நம்மால் ஆகும். அவர் ஒருவரே ஆண்டவனின் பாவமற்ற புதல்வர். 'என்னை நம்புவோர் நித்திய வாழ்வை எய்துவர்' என்பது அவரது திருவாக்கு. ஆண்டவன் அருட்டிறன் இதிலன்றோ காணக்கிடக்கிறது? ஏசுநாதர் நமக்காகக் கழுவாய் தேடுகிறார் என்று நம்புவதால் எங்கள் பாவங்கள் எங்களைச் சார்வதில்லை. நாமோ பாவம் செய்தே யாகவேண்டும். பாவஞ் செய்

யாமல் இவ் வுலகில் உயிர் வாழ முடியாது. ஆகையி ஞலேயே ஏசுபெருமான் தாம் துன்ப மநுபவித்து மனித வர்க்கத்தின் எல்லாப் பாவங்களுக்காகவும் கழுவாய் தேடி விட்டார். இவ்வுண்மையை ஒப்புக்கொள்வோர் மட்டுமே நித்தியமான மனச் சாந்தியை யடைய முடியும். உங்களு டையது எத்தகைய அமைதியற்ற வாழ்வென்றும், எங் களைச் சேர்ந்தால் எத்தகைய மன நிம்மதி பெறலா மென்றும் சிந்தித்துப் பாருங்கள்."

இந்த வாதம் எனக்கு அணுவளவும் திருப்தி யளிக்க வில்லை. நான் பணிவுடன் பதில் கூறியதாவது:—"கிறிஸ்து வர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கும் கிறிஸ்துவ சமயம் இதுவே யானுல் நான் அதை ஏற்றுக்கொள்ள முடி யாது. பாவங்களின் பயன்களினின்றும் விடுபட வேண்டு மென்பது என் விருப்பமே யன்று. பாவத்திலிருந்தே, பாவங்களைப் பற்றிய எண்ணங்களிலிருந்து கூட, விடுதலே பெறவேண்டு மென்பது என் மனோரதம். அம்மனோரதம் ஈடேறும் வரை அமைதியற்ற வாழ்க்கை நடத்துவதற்கு நான் ஒருப்படுவேன்"

இதற்கு அச் சகோதரர் "உங்களுக்கு நான் உறுதி கூறுகிறேன். உங்கள் முயற்சி ஒரு நாளும் பயன்தரப் போவதில்லை. நான் கூறியதைப்பற்றி இன்னெரு முறை நன்கு சிந்தியுங்கள்" என்றுரைத்தார்.

அச்சகோதரரின் சொல்லும், செயலும் ஒத்திருந்தன. அவர் வேண்டுமென்றே சில தவறுகளைச் செய்து அவற்றைக் குறித்துத் தாம் கவலைப்படாம லிருப்பதை எனக்கு உதாரணமாகக் காட்டினர்.

ஆனால் எல்லாக் கிறிஸ்துவர்களுமே இத்தகைய கொள்கையில் நம்பிக்கை யுள்ளவர்க ளல்லரென்று எனக்கு முன்னமேயே தெரியும். மிஸ்டர் கோடெஸ் ஸையே உதாரணமாகக் குறிப்பிடலாம். அவர் எப் போதும் இறைவனுக்குப் பயந்து நடந்தார். அவர் ஹிரு தயம் தூய்மையானது. சுய முயற்சியால் தூய்மை பெறலா மென்பதில் அவருக்கு நம்பிக்கையுண்டு. மேற் சொன்ன இரு பெண்மணிகளும் இத்தகைய நம்பிக்கை கொண்டவர்களே. நான் படித்த புத்தகங்களில் சில பக்தி ரசம் ததும்புபவையா யிருந்தன. ஆதலின் மேற்சொன்ன என் கடைசி அநுபவத்தின் பொருட்டு மிஸ்டர் கோடெஸ் பெரிதுங் கவலை கொண்டாராயினும், அவர் கவலைப்பட வேண்டாமென்றும், பிளிமௌத் சகோதரர் ஒருவரின் கோணல் நம்பிக்கை காரணமாக நான் கிறிஸ்துவ சமயத்தில் வெறுப்புக்கொள்ள மாட்டே னென்றும் உறுதி கூறினேன்.

கஷ்டங்கள் எனக்கு வேறிடத்தில் தோன்றின. இவை பைபிளையும், பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள அதன் வியாக்யானத்தையும் பற்றியவை யாகும்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

இந்தியர்களின் பழக்கம் தேடுதல்

கிறிஸ்துவர்களின் சேர்க்கையைப்பற்றி இன்னும் எழுதுவதற்கு முன்பு அதே காலத்தில் நிகழ்ந்த மற்ற அநுபவங்களைப்பற்றிக் கூறுவது அவசியம்.

நேட்டால் இந்தியரிடை தாதா அப்துல்லா எத்தகைய உயர் பதவி வகித்து வந்தாரோ அத்தகையப் பதவியைப்

பிரிட்டோரியா இந்தியர்களிடை சேத் தயேப் ஹாஜிகான் முகமது வகித்து வந்தார். அவருடைய ஆதரவின்றி எந்தப் பொதுக் காரியமும் அங்கு நடைபெறுது. நான் பிரிட்டோரியா சேர்ந்த முதல் வாரத்திலேயே அவருடன் அறிமுகம் செய்து கொண்டேன். அந் நகரிலுள்ள ஒவ்வோர் இந்தியருடனும் நான் பழக்கம் பெற விரும்புவதாகச் சொன்னேன். அங்குள்ள இந்தியர்களின் நிலைமையை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் கொண்டிருந்த ஆவலைத் தெரிவித்து அதற்கு அவருடைய உதவியை நாடினேன். அவர் என் முயற்சிக்கு உதவி செய்வதாக மகிழ்ச்சியுடன் வாக்களித்தார்.

முதன்முதலாகப் பிரிட்டோரியா இந்தியர்கள் எல்லாரையும் ஒரு பொதுக் கூட்டத்தில் சேர்த்து, டிரான்ஸ்வாலில் அவர்களது நிலை இத்தகையதென்று எடுத்துக் காட்டத் தீர்மானித்தேன். பொதுக் கூட்டம் சேத் ஹாஜி முகமது ஹாஜி ஜூஸாப் வீட்டில் நடந்தது. இவருக்கு ஓர் அறிமுகக் கடிதம் பெற்றிருந்தேன். பெரும்பாலும் முஸ்லிம் வியாபாரிகளே கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். ஹிந்துக்கள் சிலரும் வந்திருந்தனர். ஆனல் பிரிட்டோரியாவிலிருந்த இந்தியர்களில் ஹிந்துக்கள் மிகச் சிறு தொகையினரே யாவர்.

நான் பொதுக் கூட்டத்தில் உபந்நியாசம் செய்தது என் வாழ்நாளிலேயே இதுதான் முதல் முறை என்று சொல்லி விடலாம். அங்கே பேசுவதற்கு, முன்னதாகவே தயார்செய்து கொண்டு போனேன். விஷயம் "வியாபாரத்தில் உண்மை கடைப்பிடித்தல்" என்பது. வியாபாரத்தில் சத்தியமாக நடத்தல் சாத்தியமில்லை யென்று வியாபாரிகள் சொல்லக் கேட்டிருந்தேன். அப்போதும்

சரி, இப்போதும் சரி, நான் அவ்வாறு நினைக்கவில்லை. இன்றுங்கூட, வியாபாரமும் சத்தியமும் ஒன்றுக்கொன்று முரணானவை என்று வாதமிடும் வியாபார நண்பர்கள் இருக்கிறார்கள். சத்தியம் மத சம்பந்தமான விஷய மென்றும், வியாபாரம் உலக விவகாரத்தைச் சேர்ந்த தென்றும், இவை யிரண்டும் முற்றிலும் வேறானவை யென்றும் அவர்கள் கூறுகின்றார்கள். உசிதமான அள வுக்கு உண்மை பேசலாமே யன்றி வியாபாரத்தில் கலப் பற்ற முழு உண்மை ஒருக்காலும் சாத்தியமில்லை யென்பது அவர்கள் கொள்கை. என்னுடைய சொற்பொழிவில் இந்தக் கொள்கையைப் பலமாக எதிர்த்து வியாபாரி களுக்கு அவர்கள் கடமையை அறிவுறுத்த முயன்றேன். அவர்கள் வெளி நாட்டுக்கு வந்திருப்போராதலால், முற்றிலும் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய கடமை அவர்களுக்கு இருமடங்காக ஏற்பட்டிருக்கிற தென்றும், ஏனெனில் சிறு தொகையினரான அவர்க ளுடைய ஒழுக்கத்தை அளவாகக் கொண்டே கோடிக் கணக்கான பாரத மக்களின் ஒழுக்கம் மதிக்கப்படு மென்றும் வலியுறுத்தினேன்.

அங்கே நமது ஜனங்களின் பழக்க வழக்கங்கள்; அவர்களைச் சுற்றியிருந்த ஆங்கிலேயருடைய பழக்க வழக்கங்களுடன் ஒப்பிடும்போது, சுகாதாரக் குறை யுள்ளனவாய் இருந்ததை நான் கவனித்திருந்தேன். இதை அவர்களுக்கு எடுத்துக் காட்டினேன். வெளி நாட்டுக்கு வந்திருக்கும் இந்தியர்கள், ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவர், குஜராத்தி, மதராஸி, பஞ்சாபி, சிந்தி முதலிய எல்லா வேற்றுமைகளையும் அறவே மறந்து விடுவதின் அவசியத்தை வற்புறுத்தினேன்.

கடைசியாக, இந்தியர்களுடைய கஷ்டங்களை அவ்வப்போது அதிகாரிகளுக்குத் தெரிவித்துப் பரிகாரம் தேட ஒரு சங்கம் அமைக்கப்பட வேண்டு மென்றும், என்னுலியன்றவரை அச்சங்கத்திற்குரிய வேலையில் ஈடுபட்டுழைக்கச் சித்தமா யிருப்பதாகவும் கூறி முடித்தேன்.

என்னுடைய உபந்நியாசம் சபையோரின் மனதைப் பெரிதும் கவர்ந்திருப்பதாகக் கண்டு கொண்டேன்.

பின்னர் சற்று நேரம் விவாதம் நடந்தது. சிலர் எனக்கு வேண்டிய விவரங்களைச் சேகரித்துத் தருவதாகச் சொல்லினர். எனக்கு இது தைரிய மளித்தது. கூட்டத்துக்கு வந்தவர்களில் மிகச் சிலருக்கே ஆங்கிலம் தெரியு மென்று கண்டேன். அந்நாட்டில் ஆங்கில பாஷை உபயோகமாயிருக்கு மென்று நான் கருதியதால் சாவகாசம் உள்ளவர்கள் ஆங்கிலங் கற்றுக்கொள்ள வேண்டுமென்று யோசனை கூறினேன். அதிக வயதானவர்களும் புதிய பாஷை ஒன்றைக் கற்றுக்கொள்ளுதல் அசாத்தியமில்லையெனக் கூறி, அப்படிக் கற்றுக் கொண்டவர்களின் உதாரணங்கள் சிலவற்றை எடுத்துக் காட்டினேன். வகுப்பு ஒன்று ஏற்படுத்தினுல் அதில் நானே ஆங்கிலம் போதிப்பதாகவும் அல்லது தனித் தனியாக வேண்டுமானுலும் சொல்லித் தருவதாகவும் ஒப்புக்கொண்டேன்.

வகுப்பு ஏற்படவில்லை; ஆனுல் மூன்று இளைஞர்கள் தங்களுக்குச் சௌகரியமா யிருக்கும்போது நான் அவர்கள் வீட்டுக்குவந்து போதிக்க ஒப்புக்கொண்டால் கற்றுக்கொள்வதாகச் சொன்னுர்கள். அவர்களில் இருவர் இஸ்லாமியர்; மூன்றுமவர் ஹிந்து. முஸ்லிம்களில் ஒருவர் நாவிதர்; மற்றவர் குமாஸ்தா. ஹிந்து, சில்லரைக் கடைக்காரர். அவர்கள் சௌகரியப்படி வந்து சொல்லிக்கொடுக்

கச் சம்மதித்தேன். பாடங் கற்பிப்பதற்கு எனது திறமை யைப்பற்றிய வரையில் எனக்குச் சந்தேகமே யில்லை. என் மாணுக்கர்கள் கவேப்புற்ருலும் நான் சலிப்படைய மாட்டேன். சில சமயங்களில் நான் அவர்கள் வீட்டுக்குப் போகும்போது அவர்கள் வேலையா யிருப்பார்கள். இதனுல் நான் பொறுமை யிழப்பதில்லை. அவர்களில் எவரும் ஆங்கிலத்தில் புலமை பெற வேண்டுமென விரும்ப வில்லை. ஆனல் இருவர் எட்டு மாதத்தில் நல்ல அபிவிருத்தி காண்பித்தனர். அவ்விருவரும் ஆங்கிலத்தில் கணக்கெழுத வும், சாதாரண வியாபாரக் கடிதங்கள் எழுதவும் போதிய பயிற்சி பெற்றனர். நாவிதர் தம்மிடம் க்ஷவரத்துக்கு வருவோரிடம் பேசுவதற்கு வேண்டிய அளவு கற்றுக் கொண்டார். என்னிடம் ஆங்கிலம் பயின்றதின் பயனுக மாணுக்கரில் இருவர் நல்ல வருவாய் சம்பாதிப்பதற்குத் தகுதி பெற்றனர். நிற்க,

மேற்படி பொதுக்கூட்டத்தின் முடிவு எனக்குத் திருப்தி யளித்தது. வாரம் ஒரு முறையோ, மாத மொரு முறையோ—நன்கு ஞாபகமில்லை—அத்தகைய பொதுக் கூட்டங்கள் கூட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே கூட்டங்கள் ஏறக்குறைய ஒழுங்காக நடை பெற்று வந்தன. அக்கூட்டங்களில் எல்லோரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தாராளமாகத் தெரிவித்து வந்தனர். இதன் பயனுக, பிரிட்டோரியாவில் எனக்குத் தெரியாத இந்தியர் ஒருவரும் இல்லாயினர். மற்றும் அவர் களில் ஒவ்வொருவருடைய நிலைமையையுங்கூட நான் நன்கு தெரிந்துகொண்டேன். இதன்மீது பிரிட்டோரியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஏஜண்டாயிருந்த மிஸ்டர் ஜாகோபஸ் டி வெட் என்பாரை அறிமுகம் செய்து கொள்

வதற்குத் தூண்டுதலேற்பட்டது. அவருக்கு இந்தியரிடம் அநுதாபம் உண்டு. ஆனால் அவருக்குச் செல்வாக்குக் கொஞ்சமும் கிடையாது. எனினும் தம்மாலியன்றவரை எங்களுக்கு உதவி செய்வதாக வாக்களித்தார். நான் வேண்டும் போதெல்லாம் தம்மை வந்து பார்த்துப் போகலாமெனச் சொன்னார்.

பின்னர் ரயில்வே அதிகாரிகளுடன் கடிதப் போக்கு வரவு செய்யத் தொடங்கினேன். ரயில்வே பிரயாணத்தில் இந்தியர்களுக்கு உண்டாக்கப்படும் நிர்ப்பந்தங்கள் அவர்களுடைய சட்ட திட்டங்களின்படிகூட நியாயம் ஆகா என்று எடுத்துக் காட்டினேன். இதற்கு ஒரு பதில் கிடைத்தது. அதில், முறைப்படி உடை தரித்துவரும் இந்தியர்களுக்கு முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புச் சீட்டுக் கொடுக்கப்படுமெனக் கூறப்பட்டிருந்தது. இதனால் குறை சிறிதும் நிவர்த்தியானதாகக் கொள்வதற்கில்லை. ஏனெனில் ஒருவர் முறைப்படி உடை தரித்திருக்கிறாரா என்று முடிவு செய்வது ஸ்டேஷன் மாஸ்டரைப் பொருத்ததா யிருந்தது.

இந்தியர் விஷயங்களைப்பற்றிய சில தஸ்தாவேஜிகளை பிரிட்டிஷ் ஏஜண்டு எனக்குக் காட்டினார். தயேப் சேத்தும் அத்தகைய விவரங்கள் தந்திருந்தார். அவற்றினின்றும் ஆரஞ்சு பிரீ ஸ்டேட் மாகாணத்திலிருந்து இந்தியர்கள் எவ்வளவு கொடுமையாகத் துரத்தப்பட்டு வருகிறார்களென அறிந்து கொண்டேன்.

சுருங்கக் கூறின், பிரிடோரியாவில் நான் தங்கியதின் பயனாக, டிரான்ஸ்வாலிலும், ஆரஞ்சு பிரீ ஸ்டேட்டிலும் இருந்த இந்தியர்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்ய முடிந்தது. வருங் காலத்தில் இவ்வாராய்ச்சி எனக்கு அளவில்லாத

பயன் நல்கப் போகிறதென்று அப்போது நினைத்தவனே யல்லன். ஏனெனில், அவ்வாண்டி னிறுதிக்குள் வீடு திரும்பிவிடலா மென்றே நான் எண்ணி யிருந்தேன். வழக்கு முடிந்துவிட்டால் இன்னும் சீக்கிரமாகவே கிளம்பிவிடலா மென்றும் எண்ணியதுண்டு. ஆனால் ஆண்டவன் திருவுள்ளம் வேறு விதமா யிருந்தது.

பதின்மூன்றும் அத்தியாயம்

'கூலி' வாழ்வின் கஷ்டங்கள்

டிரான்ஸ்வாலிலும் ஆரஞ்சு பிரீ ஸ்டேட்டிலும் இருந்த இந்தியர்களின் நிலைமையை விவரமாக எடுத்துக் கூற இது இடமன்று. அதைப்பற்றி நன்கு தெரிந்து கொள்ள விரும்புவோர் நான் எழுதிய "தென் னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹ வரலாறு" என்னும் புத்த கத்தைப் படிப்பார்களாக. ஆனால் இங்கே அந்நிலைமை குறித்துச் சுருக்கமாகக் கூறுதல் அவசியமாகும்.

ஆரஞ்சு பிரீ ஸ்டேட்டில் 1888-ம் ஆண்டிலோ இன்னும் முன்போ இயற்றப்பட்ட ஒரு விசேஷ சட்டத்தி னால் இந்தியர்களுடைய உரிமைகள் எல்லாம் பிடுங்கப் பட்டன. அங்கே இந்தியர்கள் இருக்க விரும்பினால் ஹோட்டல் வேலைக்காரர்களாகவோ, வேறு சிற்றூழியம் செய்பவர்களாகவோ தான் இருக்கலாம். பெயருக்கு நஷ்ட ஈடு என்று கொடுத்து வியாபாரிகள் துரத்தப் பட்டார்கள். அவர்கள் செய்துகொண்ட விண்ணப் பங்கள், மகஜர்கள் எல்லாம் பயன்படா தொழிந்தன.

டிரான்ஸ்வாலில் 1885-ல் ஒரு கடுமையான சட்டம் செய்யப்பட்டது. 1886-ல் இச் சட்டத்தில் சில

மாற்றங்கள் செய்யப்பட்டன. திருத்திய சட்டத்தின்படி டிரான்ஸ்வாலுக்குள் புகும் ஒவ்வொரு இந்தியனும் மூன்று பவுன் தலை வரி கொடுக்க வேண்டும். அவர்களுக்கென்று ஒதுக்கி வைத்த இடங்களிலேயே அவர்கள் நிலம் வைத்துக் கொள்ளலாம். அனுஷ்டானத்தில் அங்கேயும் நிலம் அவர்களுக்குச் சொந்த மாகாது. அவர்களுக்கு வாக்குரிமையும் இல்லை. இந்த நிர்ப்பந்தகள் எல்லாம் ஆசியாக்காரர்களுக்கென்று இயற்றிய விசேஷ சட்டத்தின்படி ஏற்பட்டவை. கறுப்பு மனிதர் எல்லாருக்கும் பொதுவாக ஏற்பட்ட பிற சட்டங்களுக்கும் இந்தியர் உள்பட வேண்டியதா யிருந்தது. இவற்றின்படி இந்தியர்கள் பொது நடைப் பாதைகளில் நடத்தல் கூடாது. இரவு 9 மணிக்குமேல் அநுமதிச் சீட்டில்லாமல் வெளியே புறப்படக்கூடாது. ஆனால் இந்தக் கடைசி விதி இந்தியர்கள் விஷயத்தில் சமயோசிதம்போல் பிரயோகிக்கப் பட்டது. 'அராபியர்' என்று கூறிக்கொண்டவர்கள்மீது அதிகாரிகள் தயவு தாட்சண்யமாக இதைப் பிரயோகிப்பதில்லை. எனவே இவ்வாறு விலக்குச் செய்வது போலீசாரின் சித்தத்தையே முழுதும் பொருத்திருத்தல் இயல்பேயன்றோ?

மேற்சொன்ன இரு விதிகளின் கீழும் ஏற்படும் நிர்ப்பந்தங்களை நான் அநுபவிக்க நேர்ந்தது. அடிக்கடி இரவில் மிஸ்டர் கோடெஸ்ஸுடன் நான் உலாவச்செல்வது வழக்கம். இரவு பத்து மணிக்கு முன்னால் பெரும்பாலும் வீடு திரும்புவதில்லை. போலீஸார் என்னைக் கைது செய்தால் என் செய்வது? என்னைவிட மிஸ்டர் கோடெஸ்ஸுக்கு இதைப்பற்றிக் கவலை அதிகமாயிருந்தது. அவர் தம்முடைய நீக்ரோ வேலைக்காரர்களுக்கு அநுமதிச்

சீட்டுகள் வழங்குவது வழக்கம். ஆனால் எனக்கு அத்தகைய சீட்டு எப்படி வழங்குவது? எஜமானன் ஒருவன் தன் வேலைக்காரனுக்கு மட்டுமே அனுமதிச் சீட்டுக் கொடுக்கலாம். ஆதலின் நான் அனுமதிச் சீட்டுக் கேட்டு மிஸ்டர் கோடெஸ் கொடுக்க விரும்பினாலும் அவர் அவ்வாறு செய்திருக்க முடியாது. ஏனெனில் அது மோசம் செய்வதாகும்.

எனவே மிஸ்டர் கோடெஸ்ஸோ, அவருடைய நண்பர் ஒருவரோ அரசாங்க அட்டர்னியான டாக்டர் கிராஸே என்பாரிடம் என்னை அழைத்துச் சென்றார். பாரிஸ்டர் ஆவதற்கு நான் பயிற்சிபெற்ற ஸ்தாபனத்திலேயே டாக்டர் கிராஸேயும் பயிற்சி பெற்றவர் எனத் தெரிய வந்தது. இரவு 9-மணிக்குப் பிறகு வெளியே புறப்படுவதற்கு எனக்கு அனுமதிச் சீட்டு வேண்டும் என்ற செய்தி கேட்டு அவர் பெரிதும் ஆத்திரம் அடைந்து என்னிடம் அநுதாபம் தெரிவித்தார். சாதாரண அநுமதிச் சீட்டுக் கொடுப்பதற்குப் பதிலாக, போலீஸ் தொந்திரவின்றி எப்போது வேண்டுமானாலும் வெளியே யிருக்கும் உரிமை யளித்து ஒரு கடிதம் கொடுத்தார். இந்தக் கடிதத்தை வெளியே போகும்போ தெல்லாம் எடுத்துச் சென்றேன். ஆனால் அதை உபயோகிப்பதற்குச் சந்தர்ப்பம் எதுவும் ஏற்படாதது தற்செயலே யன்றி வேறில்லை.

டாக்டர் கிராஸே என்னைத் தம் வீட்டுக்கு வரும்படி அழைத்தார். நாங்கள் இருவரும் நண்பர்களானோம் என்று சொல்லலாம். சமயம் நேர்ந்தபோது அவர் வீட்டுக்குப் போவேன். அவர் மூலமாகவே அவருடைய சகோதாருடைய பழக்கமும் எனக்கு ஏற்பட்டது.

டாக்டர் கிராஸேயைவிட அவருடைய சகோதரர் அதிக புகழ் பெற்றவர். ஜோகானிஸ் பர்க்கில் அவர் பப்ளிக் பிராஸிகியூடரா யிருந்தார். போயர் யுத்தத்தின்போது ஓர் ஆங்கில உத்தியோகஸ்தரைக் கொலை செய்யச் சதியா லோசனை புரிந்ததாக அவர் குற்றம் சாட்டப்பட்டு இராணுவக் கோர்ட்டில் ஏழு வருடச் சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டார். வக்கீல் தொழில் நடத்தும் உரிமை யையும் அவரிடமிருந்து பறித்து விட்டார்கள். ஆனால் யுத்தம் நின்ற பிறகு அவர் விடுதலை செய்யப்பட்டதுடன் மீண்டும் மேற்படி உரிமை அவருக்கு அளிக்கப்பட்டது. பிற்காலத்தில் என்னுடைய பொது வாழ்க்கையில் இவர் களுடைய பழக்கம் நிரம்பப் பயன்பட்டது; என் வேலை பெரிதும் எளிதாவதற்கு அப்பழக்கம் காரணமா யிருந்தது. நிற்க,

கால் நடைப் பாதைகளில் நடக்கக்கூடா தென்ற விதியினால் எனக்கு நேர்ந்த தொல்லைகள் இவ்வளவு சுலப மாகப் போய்விடவில்லை. உலாவச் செல்லும்போதெல்லாம் 'அக்கிராசனர் வீதி' (President Street) வழியாக ஒரு மைதானத்துக்குப் போவது வழக்கம். அக்கிராசனர் குரூகரின் வீடு அந்த வீதியில் இருந்தது. அவ்வீடு படா டோபம் இல்லாத மிகச் சாதாரணமான வீடு. பக்கத்தி லிருந்த மற்ற வீடுகளுக்கும் அதற்கும் அதிக வித்தியாசம் தெரிவதில்லை. வீட்டைச் சுற்றித் தோட்டங்கூடக் கிடை யாது. பிரிடோரியா லட்சாதிபதிகள் பலருடைய வீடுகள் அவருடைய வீட்டைவிடப் பகட்டாகவும், சுற்றிலும் தோட்டங்களுடனும் அமைக்கப்பட்டிருந்தன. அக்கிரா சனர் குரூகரின் எளிய வாழ்வு பிரசித்தி பெற்றதாகும். அவர் வீட்டுக்கு முன்னால் போலீஸ் சேவகன் காவல்

புரிந்தது ஒன்றே அவ்வீடு ஓர் உத்தியோகஸ்தருடையது என்பதைக் காட்டிற்று. அநேகமாக எப்போதும் நான் அவ்வீட்டுக்கு முன்னுலிருந்த கால் நடைப்பாதை வழியாக அச்சேவகனைக் கடந்தே செல்வது வழக்கம் நீண்ட காலம் எவ்வகைத் தடையும் ஏற்படவில்லை.

காவற் சேவகர்கள் அடிக்கடி மாறுவார்கள். ஒரு சமயம் சேவகன் ஒருவன் சிறிதும் முன்னெச்சரிக்கை செய்யாமலும் கால் நடைப் பாதையை விட்டு அப்புறம் போகும்படி கூடச் சொல்லாமலும் என்னை உதைத்துத் தெருவில் தள்ளினுன். நான் திகைத்துப் போனேன். அவனை நான் ஏதும் கேட்பதற்கு முன்னுல், அப்பக்கமாக அதே சமயத்தில் குதிரை சவாரிசெய்து சென்ற மிஸ்டர் கோடெஸ் என்னிடம் வந்து "காந்தி" நான் எல்லாவற்றையும் பார்த்துவிட்டேன். அம் மனிதன்மீது வழக்குத் தொடுத்தால் நான் சாட்சியங்கூறத் தயார். இப்படி முரட்டுத்தனமாக உங்களை அம் மனிதன் அடித்துவிட்டது குறித்து நிரம்ப வருந்துகிறேன்". என்ருர்.

"நீங்கள் வருந்த வேண்டாம். பாவம், அவனுக்கு என்ன தெரியும்? கறுப்பு மனிதர்கள் எல்லாரும் அவனுக்கு ஒன்றுதான். என்னை இப்போது நடத்தியது போலவே அவன் நீகிரோவர்களை நடத்தி வருகிருன் என்பதில் ஐயமில்லை. என்னுடைய சொந்தக் குறை எதற்காகவும் நான் நீதிமன்றத்துக்குப் போவதில்லை" யென்று கூறினேன்.

"உங்கள் அரிய குணத்துக் கேற்றவாறே சொல்கிறீர்கள். ஆனுல் மறுபடியும் சிந்தியுங்கள். இப்படிப் பட்டவர்களுக்கு ஒரு பாடங் கற்பித்தல் அவசியம்"

என்று அவர் கூறிவிட்டுப் பிறகு அப்போலீஸ்காரனைக் கண்டித்தார். போலீஸ்காரன் போயர் ஆதலின் அவர்கள் டச்சு பாஷையில் பேசினார்கள். அவர்கள் சம்பாஷணை எனக்கு விளங்கவில்லை. ஆனால் முடிவில் அவன் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இதற்கு அவசியமேயில்லை. ஏனெனில் அவனை நான் முன்னமே மன்னித்து விட்டேன்.

அந்த வீதி வழியாகப் பின்னர் நான் போவதேயில்லை. அந்தச் சேவகனுடைய ஸ்தானத்துக்கு வெவ்வேறு சேவகர் வரக்கூடும். அவர்களுக்கு மேற்படி நிகழ்ச்சி தெரிய நியாயமில்லை. அவர்களும் இதே மாதிரி நடந்து கொள்ளலா மன்றோ? வீணாக இன்னும் ஓர் உதையை வலிய வாங்கிக் கொள்வதில் என்ன பயன்? எனவே வேறு வழியாகப் போகத் தொடங்கினேன்.

இந்நிகழ்ச்சியின் பயனாக இந்தியர்களிடம் எனக்கு அநுதாபம் அதிகமாயிற்று. மேற்கூறிய விதிகள் சம்பந்தமாக பிரிட்டிஷ் ஏஜண்டைப் பார்த்து முதலில் பேசிவிட்டுப் பின்னர் அவசியமென்று கண்டால் பரீட்சார்த்தமாக ஒரு வழக்கு நடத்திப் பார்க்கலாமா வென்று அவர்களுடன் கலந்து யோசித்தேன்.

இவ்வாறு, தென்னாப்பிரிக்கா இந்தியர்களைப்பற்றிப் படித்தும் கேட்டும் தெரிந்துகொண்டதுடன், சொந்த அநுபவத்திலும் அவர்களுடைய கஷ்டமான நிலையை நன்கறிந்து கொண்டேன். சுயமரியாதையுள்ள இந்தியன் வசிப்பதற்குத் தென்னாப்பிரிக்கா தக்க இடமில்லையென அறிந்தேன். இந்த நிலைமையைச் சீர்திருத்துவ தெப்படி என்பது குறித்து மேலும் மேலும் சிந்திக்கலானேன்.

ஆனால் இப்போது தாதா அப்துல்லாவின் வழக்கைக் கவனிப்பதே என் முதன்மையான கடமையா யிருந்தது.

பதினான்காம் அத்தியாயம்

வழக்குத் தயார் செய்தல்

பிரிடோரியாவில் நான் தங்கியிருந்த ஓராண்டும் என் வாழ்க்கையிலேயே மிக முக்கியமான அநுபவம் பெற்ற காலமாகும். பொது ஊழியம் செய்யக் கற்றுக் கொள்வதற்கு இங்கேதான் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. பொது ஊழியம் செய்ய எனக்குள்ள சக்தியில் ஒரு பகுதியை இங்கேயே பெற்றேன். இங்கேயே என்னுடைய சமயப்பற்று ஜீவசக்தி யுள்ள தாயிற்று. வக்கீல் தொழில் நடத்துவதில் உண்மை அறிவு நான் பெற்றதும் இங்கேதான். அநுபவமுள்ள (ஸீனியர்) பாரிஸ்டரிடமிருந்து தொழிலுக்குப் புதிய (ஜுனியர்) பாரிஸ்டர் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்களை இங்கேயே கற்றுக்கொண்டேன். வக்கீல் தொழில் என்னால் நடத்த முடியும் என்னும் நம்பிக்கை பெற்றதும், தொழிலில் வெற்றியின் இரகசியத்தை அறிந்துகொண்டதும் இங்கேயே யாகும்.

தாதா அப்துல்லாவின் வழக்கு அற்ப சொற்பமான வழக்கன்று. 40,000 பவுனுக்கு வழக்குத் தொடரப்பட்டிருந்தது. வியாபாரத்தில் பற்று வரவு சம்பந்தமாக ஏற்பட்ட வழக்கானபடியால் கணக்கு நுணுக்கங்கள் அதில் நிரம்ப இருந்தன. வழக்குக்கு ஆதாரங்கள் புரோ நோட்டுகளும், புரோநோட்டுகள் தருவதாக வாக் குறுதியுமே. புரோநோட்டுகள் போதிய யோசனைக்கு

இடமின்றி மோசடியாக எழுதி வாங்கப்பட்டன என்பது எதிர்வாதம். இந்தச் சிக்கலான வழக்கில் நிகழ்ச்சிகளையும் சட்டத்தையும் பற்றிய நுட்பங்கள் ஏராளமாக இருந்தன.

இருதரப்பிலும் பெரிய வக்கீல்களும் அட்டர்னிகளும் அமர்த்தப்பட் டிருந்தனர். எனவே அவர்களுடைய வேலை முறையைப் படித்தறிவதற்கு எனக்குச் சிறந்த சந்தர்ப்பம் கிடைத்தது. வாதியின் வழக்கை அட்டர்னிக்குத் தயார் செய்யும் வேலையும், வழக்குக்குச் சாதகமான விவரங்களைத் தொகுத்துச் சேர்க்கும் வேலையும் எனக்குக் கொடுக்கப் பட்டன. நான் தொகுத்துச் சேர்த்தவைகளில் அட்டர்னி எவ்வளவைத் தள்ளி எவ்வளவை எடுத்துக்கொண்டார் என்பதும், பின்னர் அட்டர்னி தயாரித்துக் கொடுத்த விவரங்களில் வக்கீல் எவ்வளவு தூரம் பயன்படுத்திக் கொண்டார் என்பதும் தொழில் முறையில் எனக்குச் சிறந்த படிப்பினைகளா யிருந்தன. சட்ட நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்கும், சாட்சியங்களைக் கோவையாகத் தொகுப்பதற்கும் எனக்கு எவ்வளவு ஆற்றல் உண் டென்பதை இதன் மூலம் தெரிந்து கொள்ளுதல் சாத்திய மாயிற்று.

வழக்கில் நிரம்ப சிரத்தை யெடுத்துக் கொண்டேன். அதில் அமிழ்ந்தேவிட்டேன் என்று சொல்லலாம். வழக்கு சம்பந்தமான எல்லா தஸ்தாவேஜிகளையும் படித்தேன். என் கட்சிக்காரர் அபாரமான திறமையுள்ளவர். அத் துடன் அவருக்கு என்னிடம் பூரண நம்பிக்கை யிருந்தது. இவற்றினால் என்னுடைய வேலை சுலபமாயிற்று. வியா பாரக் கணக்கு முறையும் படித்தேன். கடிதப் போக்கு வரவு பெரும்பாலும் குஜராத்தி மொழியி லிருந்தபடியால் பல கடிதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவேண்டி

யிருந்தது. ஆதலின் மொழி பெயர்க்கும் சக்தியும் எனக்கு அதிகமாக ஏற்பட்டது.

முன்னமே சொன்னதுபோல், நான் சமய ஆராய்ச்சியிலும், பொது வேலையிலும் மிகுந்த சிரத்தை கொண்டு அத் துறைகளில் கொஞ்சம் காலத்தைச் செலவிட்டு வந்தேனாயினும், என் உள்ளத்தை முதன்மையாகக் கவர்ந்திருந்தவை அவையல்ல. வழக்குத் தயாரிப்பதிலேயே முதன்மையாகக் கவனம் செலுத்தினேன். அவசியமான போதெல்லாம் மற்ற வேலைகளை விட்டுவிட்டுச் சட்டம் படித்தலிலும் பழைய வழக்குகளின் நடை முறைகளை ஆராய்தலிலும் ஈடுபட்டேன். இதன் பயனாக, இவ் வழக்கைப்பற்றிய விவரங்கள் எல்லாவற்றையும் தெளிவாக அறிந்து கொண்டேன். வாதி, பிரதிவாதிகளுக்குக்கூட நான் அறிந்திருந்த அளவு வழக்கைப்பற்றித் தெரியாது என்று சொல்லிவிடலாம். ஏனெனில் இரு கட்சியாரின் தஸ்தாவேஜிகளும் என்னிட மிருந்தன.

காலஞ்சென்ற மிஸ்டர் பிங்கட் கூறிய புத்திமதியை நினைவு கூர்ந்தேன். "விவரங்களே சட்டத்தில் முக்காற் பகுதி" என்று அவர் சொன்னார். பிற்காலத்தில், தென்னாப்பிரிக்காவின் பிரசித்தி பெற்ற பாரிஸ்டரான காலஞ்சென்ற மிஸ்டர் லேனார்டு இந்தக் கூற்றை உறுதிப்படுத்தினார். என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த ஒரு வழக்கில், நியாயம் என் கட்சிக்காரன் பக்கமே இருப்பினும் சட்டம் அவனுக்கு விரோதமா யிருப்பதாகக் காணப்பட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் மிஸ்டர் லேனார்டிடம் போனேன். அவரும் வழக்கின் விவரங்கள் என் கட்சிக்காரனுக்கு நிரம்ப அநுகூலமா யிருப்பதாகக் கருதினார். அவர் கூறியதாவது:—

"காந்தி, என் அநுபவத்தில் ஒன்று நான் கற்றுக்கொண்டிருக்கிறேன். அது என்னவென்றால், வழக்கின் விவரங்களை நாம் கவனித்தால் சட்டம் தன்னைத்தானே கவனித்துக் கொள்ளும் என்பதே. எனவே இவ்வழக்கின் விவரங்களை இன்னும் நன்கு ஆராய்ச்சி செய்யும்." அவ்வாறே நான் மறுபடியும் வழக்கு விவரங்களைப் பரிசீலனை செய்தேன். அதே விவரங்கள் இப்போது எனக்குப் புதிய மாதிரியில் காணப்பட்டன. என் கட்சிக்கு ஆதாரமாகக் காட்டக் கூடிய பழைய தீர்ப்பு ஒன்றும் அகப்பட்டது. நான் மிக மகிழ்ச்சி யடைந்தவனாய், மிஸ்டர் லேனர்டிடம் மீண்டும் சென்று எல்லாவற்றையும் அறிவித்தேன். "சரி, வழக்கை ஜெயித்து விடுவோம். ஆனால் எந்த நீதிபதி இதை விசாரிக்கிறார் என்பதை மட்டும் மனதில் கொள்ளவேண்டும்" என்றார்.

தாதா அப்துல்லாவின் வழக்கைத் தயாரித்துக்கொண்டிருந்தபோது, வழக்கில் விவரங்கள் இவ்வளவு முக்கியமானவை என்பதை நான் நன்குணரவில்லை. விவரங்கள் எனில் உண்மை நிகழ்ச்சிகளே யாகும். உண்மை வழி நிற்பதென்று நாம் உறுதி கொண்டுவிட்டால் சட்டம் இயற்கையாகவே நமது துணைக்கு வருகிறது. இவ்வழக்கில் விவரங்கள் தாதா அப்துல்லாவின் கட்சியையே வலுப்படுத்துவனவா யிருந்ததைக் கண்டேன். எனவே சட்டம் அவர் கட்சிக்கு ஆதரவளித்தே தீரவேண்டும். ஆனால் விவகாரத்தை நடத்திக் கொண்டே போனால், வாதி, பிரதிவாதி இருவரும் அழிந்து போவது நிச்சயமென்றும் கண்டேன். அவர்கள் இருவருமோ பந்துக்கள்; ஒரே நகரத்தைச் சேர்ந்தவர்கள். வழக்கு எத்தனை நாள் நீடித்து நடக்குமென்பது யாருக்குந் தெரியாது. நீதி மன்றத்தி

லேயே முடிவு ஏற்படுவதென்றால், முடிவு இந்த யுகத்தில் இல்லையெனச் சொல்லும்படியிருந்தது. இதனால் யாருக்கு நன்மை? எனவே இருவரும் கூடுமானால் வழக்கு உடனே முடிவடைந்துவிட வேண்டுமென்றே விரும்பினார்கள்.

தயேப் சேத்திடம் நான் சென்று வழக்கை மத்தியஸ்தத்திற்கு விட்டுத் தீர்த்துக் கொள்ளும்படி புத்திமதி கூறினேன்; வேண்டிக்கொள்ளவும் செய்தேன். அவருடைய வக்கீலிடம் இதைப்பற்றி யோசனை கேட்கும்படி சொன்னேன். இரு கட்சியினரின் நம்பிக்கைக்குமுரிய மத்தியஸ்தர் ஒருவரை நியமிக்கக் கூடுமானால் வழக்கு வெகு சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும் என்று கூறினேன். வக்கீல்கூலி நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டிருந்தது. அவர்கள் பெரிய வியாபாரிகளேயாயினும், அவர்களுடைய சொத்து முழுவதையும் அதுவே விழுங்கிவிடுமென்று தோன்றிற்று. மற்றும் இவ்வழக்கிலேயே அவர்கள் கவனம் முழுதும் சென்றிருந்தபடியால் வேறு வேலை பார்ப்பதற்கு நேரமில்லை. இதற்கிடையில் பரஸ்பர விரோதம் அதிகமாகிக்கொண்டே வந்தது. வக்கீல் தொழிலில் வெறுப்புக்கொண்டேன். இருதரப்பு வக்கீல்களுக்கும் தங்கள் தங்கள் கட்சிக்காரர்களுக்கு அநுகூலமான சட்ட நுட்பங்களைக் கிளப்பிக்கொண்டே இருத்தல் கடமையாயிற்று. வெற்றியடையும் கட்சியினர் தாங்கள் செலவழித்த தொகை முழுவதையும் ஒருநாளும் திரும்பப் பெறுவதில்லையென்பதை அப்போதே முதன் முதலாகக் கண்டேன். கோர்ட்பீஸ் சட்டத்தின்படி, வாதி பிரதிவாதிகளுக்குள் இவ்வளவு செலவு தொகைக்குத்தான் தீர்ப்புச் செய்யலாமென்று விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. ஆனால் உண்மையில் கட்சிக்காரன் அட்டர்னிக்குக் கொடுக்

கும் தொகை இதைவிடப் பன்மடங்கு அதிகம். இவ் வேற்பாட்டின் அநீதி என்னால் சகிக்கக்கூடியதாயில்லை. இரு கட்சியாரிடமும் நட்புரிமை பாராட்டி அவர்களுக்குள் ராஜி செய்து வைப்பது என் கடமை என்று கருதினேன். இதற்காக என் சக்தி முழுவதையும் பயன் படுத்தித் தீவிர மான முயற்சி செய்தேன். கடைசியாக, தயேப் சேத் சம்மதித்தார். மத்தியஸ்தர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் முன்பு இருதரப்பிலும் வாத மிடப்பட்டது. முடிவில் தாதா அப்துல்லா வெற்றி பெற்றார்.

ஆனால் இதனால் நான் திருப்தி யடைந்துவிடவில்லை. மத்தியஸ்தரின் தீர்ப்பின்படி, தொகை முழுவதையும் உடனே கொடுத்துவிட வேண்டுமென்று தாதா அப்துல்லா வற்புறுத்தினால், தயேப் சேத்தினால் கொடுக்க முடியாமற் போய்விடும். தென்னாப்பிரிக்காவி லிருந்த போர்பந்தர் வியாபாரிகளுக்குள், 'இன்ஸால்வண்ட்' ஆவதைவிட மரணமே சிறந்தது என்ற பலமான கொள்கை இருந்து வந்தது. 37,000 பவுனும் செலவு தொகையும் ஒரே யடியாகக் கொடுத்தல் தயேப் சேத்தி னால் இயலாத காரியம். பைசா பாக்கியின்றி கொடுத்து விடவே அவர் உத்தேசித்தார். ஆனால் ''இன்ஸால் வெண்ட்' என்ற அவப்பெயர் அடைய விரும்பவில்லை. இதற்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. பல தவணைகளில் சிறு சிறு தொகைகளாகக் கட்டித் தீர்க்க தாதா அப்துல்லா இணங்க வேண்டும். மத்தியஸ்தத்துக்கு அவர்களை இணங்கச் செய்தலைவிடத் தவணைகளில் பணம் வாங்கிக்கொள்ள தாதா அப்துல்லாவை இணங்கச் செய்தல் எனக்கு அதிக பிரயாசையா யிருந்தது. ஆனால் அவர் முடிவில் மிகப் பெருந் தன்மையுடன் இதற்கு

ஒப்புக்கொண்டார். தொகையைப் பல தவணைகளில் நீண்ட காலத்தில் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தார். முடிவு இரு கட்சியினருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை யளித்தது. இதனால் பொது ஜனங்களிடையே அவர்களுடைய மதிப்பும் அதிகமாயிற்று. நானோ ஆனந்தக் கடலில் மூழ்கினேன். உண்மையான வக்கீல் தொழில் முறையைக் கற்றுக்கொண்டு விட்டேன். மனித இயற்கையின் உயரிய கூறுகளைக் காணவும், மனிதரின் ஹிருதயங்களை வயப்படுத்தவும் கற்றுக் கொண்டவனானேன். கட்சிக்காரர்களுக்குள் பிளவை நீக்கி ஒற்றுமையை நாட்டுவதே வக்கீலின் உண்மை வேலையென்று அறிந்தேன். இந்தப் படிப்பினை அப்போது என்றும் அழியா வண்ணம் என் ஹிருதயத்தில் பதிந்துவிட்டபடியால், பிற்காலத்தில் நான் வக்கீல் தொழில் நடத்திய இருபது ஆண்டுகளிலும், கட்சிக்காரர்களுக்குள் ராஜி செய்து வைப்பதிலேயே என் காலத்தில் பெரும் பகுதி கழிந்தது. நூற்றுக் கணக்கான வழக்குகளை அப்படி ராஜி செய்து வைத்திருக்கிறேன். இதனால் நான் அடைந்த நஷ்டம் யாதுமில்லை. பண நஷ்டங்கூட இல்லை. நிச்சயமாக ஆன்ம நஷ்டங் கிடையாது.

பதினைந்தாம் அத்தியாயம்

சமய எழுச்சி

கிறிஸ்துவ நண்பர்களுடன் எனது அநுபவங்களைப் பற்றி இப்போது மீண்டும் கூறுதல் அவசியமாயிருக்கிறது.

எனது வருங்காலத்தைப்பற்றி மிஸ்டர் பேகருக்குக் கவலை அதிகமாகி வந்தது. வெல்லிங்டனில் நடந்த

புரோடஸ்டாண்டு கிறிஸ்துவர்களின் மகா சபைக்கு அவர் என்னை அழைத்துச் சென்றார். சமய விளக்கம் அதாவது ஆத்மத் தூய்மை பெறும்பொருட்டுச் சில ஆண்டுகளுக் கொருமுறை இத்தகைய மகா சபைகளை நடத்துவது அவர்களுக்குள் வழக்கமா யிருந்தது. இதைச் சமய புனருத்தாரண முயற்சி யென்று கூறலாம். அந்தப் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற பாதிரியாரான ரெவரண்ட் ஆண்ட்ரூ மர்ரே என்பவர் மேற்படி வெல்லிங்டன் மகா சபைக்கு அக்கிராசனம் வகித்தார். அம்மகா சபையில் குடிகொண் டிருக்கக்கூடிய பக்தி பாவசமும், அங்குக் கூடும் ஜனங்களின் உற்சாகமும் சிரத்தையும் என்னைக் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவும்படி நிச்சயம் செய்யுமென மிஸ்டர் பேகர் நம்பி யிருந்தார்.

ஆனால் அவர் முடிவாக நம்பியிருந்தது பிரார்த்தனையின் சக்தியையேயாம். ஹிருதய உருக்கத்துடன் செய்யப் படும் பிரார்த்தனைக்கு இறைவன் செவி கொடாமலிரார் என்பது அவரது உறுதியான நம்பிக்கை. இதற்கு அத் தாட்சியாக அவர் சில உதாரணங்களும் கூறுவதுண்டு. பிரிஸ்டல் நகரில் ஜார்ஜ் முல்லா என்பார் ஒருவர் இருந்தாராம். அவர் உலக சம்பந்தமான தமது தேவை களுக்குக்கூட ஆண்டவனுக்குப் பிரார்த்தனை செலுத்தி விட்டு அவரையே நம்பியிருப்பது வழக்கமாம். பிரார்த் தனையின் வலிமையைக் குறித்து அவர் கூறியவற்றை யெல்லாம் நான் சிரத்தையுடன் கேட்டிருந்து என் மனச்சான்று எப்போது கூறுகிறதோ அந்தக் கணத்தி லேயே கிறிஸ்துவ சமயத்தைத் தழுவப் பின்வாங்கேன் என்று உறுதி கூறினேன். நீண்ட நாளாகவே மனச் சான்று காட்டும் வழி நடக்கக் கற்றுக்கொண்டிருந்தேனு

தலின் இப்படி உறுதி கூறுவதற்கு நான் தயங்கவேயில்லை. மனச்சான்று வழிநடப்பதில் எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி யுண்டாயிற்று. அதற்கு மாருக எதுவும் செய்தல் எனக்கு மிகுந்த துயரத்தை யளிப்பதோடு மிகவும் கஷ்டமாகவும் இருக்கும்.

எனவே நாங்கள் வெல்லிங்டனுக்குச் சென்ருேம். மிஸ்டர் பேகர், கறுப்பு மனிதன் ஒருவனைத் தமது தோழனாக அழைத்துச் சென்று சமாளிப்பதற்குத் திணறிப் போனார். என்பொருட்டாக அவர் பலசமயங்களில் பல அசௌகரியங்களுக் காளானார், பிரயாணத்தின்போது நடுவில் ஞாயிற்றுக்கிழமை யொன்று வந்தது பரிசுத்த தினமாகிய அன்று மிஸ்டர் பேகரும் அவருடைய சகாக் களும் பிரயாணம் செய்ய மாட்டார்களாதலால் அன்று பிரயாணத்தை நிறுத்தவேண்டி வந்தது. ஸ்டேஷன் ஹோட்டலின் மானேஜர் கொஞ்சநேரம் விவாதத்துக்குப் பின்னர் என்னை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தாராயினும், சாப்பாட்டு அறைக்குள் விடமுடியாதென்று திட்டமாகச் சொல்லிவிட்டார், மிஸ்டர் பேகர் இலேசில் விட்டுவிடு கிறவர் அல்லர். ஹோட்டல் விருந்தாளிகளின் உரிமை களைக் குறித்து அவர் எவ்வளவோ போராடிப் பார்த்தார். அவருடைய கஷ்டங்களை நான் நன்கறிந்தேன். வெல் லிங்டனிலும் நான் மிஸ்டர் பேகருடனேயே தங்கினேன். அவருக்கு என்னால் நேர்ந்த அசௌகரியங்களை மறைக்க அவர் எவ்வளவோ முயன்ருராயினும் நான் அவற்றை அறிந்து கொள்ளாமலில்லை.

இம் மகாசபை பக்திமான்களான கிறிஸ்துவர்களின் கூட்டமாகும். அவர்களுடைய நம்பிக்கை எனக்கு மகிழ்ச்சி யளித்தது. ரெவரண்ட் மர்ரே அவர்களையும்

கண்டேன். எனக்காகப் பலர் பிரார்த்தனை செய்வதைப் பார்த்தேன். தோத்திரப் பாட்டுகளில் சில மிகவும் இனிமையா இருந்தன.

மகாசபை மூன்று தினங்கள் நடந்தது. அதற்கு வந்திருந்த பிரதிநிதிகளின் பக்தி சிரத்தையை நான் அறிந்து பாராட்டக்கூடியதா யிருந்தது. ஆனால் நான் மதம் மாறுவதற்கு எவ்வித காரணத்தையும் கண்டேனில்லை. கிறிஸ்துவ மதத்தைத் தழுவினால்தான் எனக்கு மோட்சம் கிட்டுமென்று நான் நம்பக்கூடவில்லை. உத்தமர்களான கிறிஸ்துவ நண்பர் சிலரிடம் நான் இவ்வாறு கூறியபோது அவர்கள் பிரமித்துப் போனார்கள். ஆனால் நான் வேறென்ன செய்ய முடியும்?

எனக்குத் தோன்றிய கஷ்டங்கள் மேலெழுந்த வாரியானவையல்ல. கடவுளின் அவதார புதல்வர் ஏசுநாதர் ஒருவரே என்றும், அவரிடம் நம்பிக்கை வைப்போர் மட்டுமே நித்திய வாழ்வு எய்துவரென்றும் என்னால் நம்ப முடியவில்லை. கடவுளுக்குப் புதல்வர்கள் இருக்கக் கூடுமானால் நாம் எல்லாரும் அவருடைய புதல்வர்களே. ஏசுநாதர் கடவுளைப் போன்றவரானால், அல்லது கடவுளேயானால் மனிதர் எல்லாரும் கடவுளைப் போன்றவராகவோ கடவுளேயாகவோ ஆதல்கூடும். ஏசுநாதர் தமது மரணத்தினால், தாம் சிந்திய இரத்தத்தினால் உலகத்தின் பாவங்கள் எல்லாவற்றுக்கும் கழுவாய் தேடிவிட்டார் என்பதை என் அறிவு அப்படியே ஒப்பத் தயாராயில்லை. இக் கொள்கையை அப்படியே எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் உட்கருத்தை நோக்கவேண்டுமென்றும் எனக்குத் தோன்றின. மற்றும், மானிடர்களுக்கே ஆன்மா உண்டு என்பதும், மற்ற ஜீவப் பிராணிகளுக்குக் கிடையா தென்பதும்,

தலின் இப்படி உறுதி கூறுவதற்கு நான் தயங்கவேயில்லை. மனச்சான்று வழிநடப்பதில் எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி யுண்டாயிற்று. அதற்கு மாறாக எதுவும் செய்தல் எனக்கு மிகுந்த துயரத்தை யளிப்பதோடு மிகவும் கஷ்டமாகவும் இருக்கும்.

எனவே நாங்கள் வெல்லிங்டனுக்குச் சென்றோம். மிஸ்டர் பேகர், கறுப்பு மனிதன் ஒருவனைத் தமது தோழனாக அழைத்துச் சென்று சமாளிப்பதற்குத் திணறிப் போனார். என்பொருட்டாக அவர் பலசமயங்களில் பல அசௌகரியங்களுக் காளானார், பிரயாணத்தின்போது நடுவில் ஞாயிற்றுக்கிழமை யொன்று வந்தது பரிசுத்த தினமாகிய அன்று மிஸ்டர் பேகரும் அவருடைய சகாக் களும் பிரயாணம் செய்ய மாட்டார்களாதலால் அன்று பிரயாணத்தை நிறுத்தவேண்டி வந்தது. ஸ்டேஷன் ஹோட்டலின் மானேஜர் கொஞ்சநேரம் விவாதத்துக்குப் பின்னர் என்னை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தாராயினும், சாப்பாட்டு அறைக்குள் விடமுடியாதென்று திட்டமாகச் சொல்லிவிட்டார், மிஸ்டர் பேகர் இலேசில் விட்டுவிடு கிறவர் அல்லர். ஹோட்டல் விருந்தாளிகளின் உரிமை களைக் குறித்து அவர் எவ்வளவோ போராடிப் பார்த்தார். அவருடைய கஷ்டங்களை நான் நன்கறிந்தேன். வெல் லிங்டனிலும் நான் மிஸ்டர் பேகருடனேயே தங்கினேன். அவருக்கு என்னால் நேர்ந்த அசௌகரியங்களை மறைக்க அவர் எவ்வளவோ முயன்றாராயினும் நான் அவற்றை அறிந்து கொள்ளாமலில்லை.

இம் மகாசபை பக்திமான்களான கிறிஸ்துவர்களின் கூட்டமாகும். அவர்களுடைய நம்பிக்கை எனக்கு மகிழ்ச்சி யளித்தது. ரெவராண்ட் மர்ரே அவர்களையுங்

கண்டேன். எனக்காகப் பலர் பிரார்த்தனை செய்வதைப் பார்த்தேன். தோத்திரப் பாட்டுகளில் சில மிகவும் இனிமையா இருந்தன.

மகாசபை மூன்று தினங்கள் நடந்தது. அதற்கு வந்திருந்த பிரதிநிதிகளின் பக்தி சிரத்தையை நான் அறிந்து பாராட்டக்கூடியதாயிருந்தது. ஆனால் நான் மதம் மாறுவதற்கு எவ்வித காரணத்தையும் கண்டேனில்லை. கிறிஸ்துவ மதத்தைத் தழுவினால்தான் எனக்கு மோட்சம் கிட்டுமென்று நான் நம்பக்கூடவில்லை. உத்தமர்களான கிறிஸ்துவ நண்பர் சிலரிடம் நான் இவ்வாறு கூறியபோது அவர்கள் பிரமித்துப் போனார்கள். ஆனால் நான் வேறென்ன செய்ய முடியும்?

எனக்குத் தோன்றிய கஷ்டங்கள் மேலெழுந்தவாரியானவையல்ல. கடவுளின் அவதார புதல்வர் ஏசுநாதர் ஒருவரே என்றும், அவரிடம் நம்பிக்கை வைப்போர் மட்டுமே நித்திய வாழ்வு எய்துவரென்றும் என்னால் நம்ப முடியவில்லை. கடவுளுக்குப் புதல்வர்கள் இருக்கக் கூடுமானால் நாம் எல்லாரும் அவருடைய புதல்வர்களே. ஏசுநாதர் கடவுளைப் போன்றவரானால், அல்லது கடவுளேயானால் மனிதர் எல்லாரும் கடவுளைப் போன்றவராகவோ கடவுளேயாகவோ ஆதல்கூடும். ஏசுநாதர் தமது மரணத்தினால், தாம் சிந்திய இரத்தத்தினால் உலகத்தின் பாவங்கள் எல்லாவற்றுக்கும் கழுவாய் தேடிவிட்டார் என்பதை என் அறிவு அப்படியே ஒப்பத் தயாராயில்லை. இக் கொள்கையை அப்படியே எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் உட்கருத்தை நோக்கவேண்டுமென்றும் எனக்குத் தோன்றின. மற்றும், மானிடர்களுக்கே ஆன்மா உண்டு என்பதும், மற்ற ஜீவப் பிராணிகளுக்குக் கிடையா தென்பதும்,

அவை மரணத்தின்போது அடியோடு அழிந்துவிடுகின்றன என்பதும் கிறிஸ்துவக் கொள்கை. நான் இதற்கு மாறான அபிப்பிராயம் கொண்டிருந்தேன். ஏசுநாதரை நான் தியாகமூர்த்தியென்றும், சத்தியத்துக்காக உயிர் நீத்த மகான் என்றும், தெய்வாம்சம் பொருந்திய சமயாசாரியர் என்றும், ஒப்புக்கொண்டேன். ஆனால் உலகிலேயே இதுகாறும் பிறந்தவர்களுள் அவரே சர்வோத்தம புருஷர் என்று நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. சிலுவையில் அவர் உயிர் நீத்தது உலகுக்கு ஓர் அரிய உதாரணமேயாகும் ஆனால் அதில் அற்புதம் அல்லது இரகசிய விசேஷம் ஏதேனும் இருப்பதாய் அங்கீகரிக்க என் ஹிருதயம் மறுத்துவிட்டது. தூய வாழ்வு நடத்திய கிறிஸ்துவர்கள் பலர் இருந்திருப்பது உண்மையே. ஆனால் அத்தகைய வாழ்வு நடத்திய மகான்கள் மற்ற மதங்களிலும் இருந்திருக்கிறார்கள். கிறிஸ்துவ மதத்தில் பாவிகள் புண்ணியவான்களானது குறித்து நான் கேள்விப்பட்டது போலவே மற்ற மதங்களிலும் மனிதர் சீர்திருந்தி யிருப்பதைப் பார்த்திருக்கிறேன். தத்துவத் துறையில் பார்க்குங்கால் கிறிஸ்துவ மதக் கொள்கைகளில் அசாதாரணமான தெதுவுமில்லை. தியாக நெறியை முன்னிட்டுப் பார்க்கையிலோ, ஹிந்துக்கள் கிறிஸ்துவர்களினும் பெரிதும் மேம்பட்டவர்கள் என்று தோன்றிற்று. கிறிஸ்துவ மதத்தைப் பரிபூரண மதமென்றோ எல்லா மதங்களிலும் தலை சிறந்த தொன்றென்றோ நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

சமயம் நேர்ந்தபோது எனது கிறிஸ்துவ நண்பர்களிடம் இவ்வெண்ணங்களைத் தெரிவித்தேன். அவர்கள் அளித்த பதில் எனக்குத் திருப்தி யளிக்க வில்லை.

இவ்வாறு கிறிஸ்துவ மதத்தைப் பூரண மதமென்றோ, மதங்களுக்குள் சிரேஷ்டமான மதமென்றோ நான் ஒப்புக் கொள்ளவில்லையெனில், ஹிந்து மதம் அத்தகைய தொன்றென்றும் நான் உறுதிபெற்று விடவில்லை. ஹிந்து மதத்தின் குறைகள் என் கண் முன்னே நன்றாகப் புலப் பட்டுக் கொண்டிருந்தன. தீண்டாமை ஹிந்து மதத்தின் ஒரு பகுதியானால் அது அழுகிப்போன பகுதியாகவே இருக்க வேண்டும். பற்பல சாதிகள், கோட்பாடுகள் முதலிய பிரிவுகளின் நியாயமும் எனக்குப் புலனாகவில்லை. வேதங்கள் ஆண்டவனால் வெளியிடப்பட்டவை என்பதின் கருத்தென்ன? வேதம் இறைவனால் வெளியிடப்பட்ட தெனில், விவிலிய நூலும் குர்ஆனுங் கூட ஏன் அத்தகை யனவா யிருக்கக் கூடாது?

கிறிஸ்துவ நண்பர்கள் என்னைத் தங்கள் மதத்திற் சேர்க்க முயன்றதுபோலவே முஸ்லிம் நண்பர்களும் முயன்று கொண்டிருந்தார்கள். இஸ்லாமிய நூல்களைப் படிக்குமாறு அப்துல்லா சேத் என்னைத் தூண்டிக் கொண்டே யிருந்தார். சமயம் நேர்ந்தபோ தெல்லாம் இஸ்லாத்தின் சிறப்பைப்பற்றி அவர் சில மொழிகள் கூறத் தவறுவதில்லை.

ஸ்ரீ இராஜசந்திரருக்கு நான் எழுதிய ஒரு கடிதத்தில் எனது கஷ்டங்களை விவரித்திருந்தேன். இந்தியாவில் சமயத் துறையில் உயர் பதவி வகித்தோர் இன்னும் சிலருக்கும் எழுதினேன். அவர்களிடமிருந்து பதில்கள் கிடைத்தன. இராஜசந்திரரின் கடிதம் எனக்கு ஒருவாறு ஆறுதல் தந்தது. பொறுமையோ டிருந்து ஹிந்து சமயத்தைப்பற்றி இன்னும் படிக்குமாறு அவர் எழுதி யிருந்தார். அவருடைய வாக்கியம் ஒன்றின் கருத்து

வருமாறு:—"காய்தல் உவத்தல் அகற்றி நடுநிலையினின்று ஆராய்ந்ததில் நான் அறிந்துகொண்டது யாதெனில், ஹிந்து மதத்தின் ஆழ்ந்த நுட்பமான கருத்துக்களும், ஆன்ம தரிசனமும், தயையும் வேறெந்த மதத்திலும் இல்லை யென்பதே."

ஸேல் என்பாரின் குர்ஆன் மொழி பெயர்ப்பை வாங்கிப் படிக்கலானேன். இஸ்லாத்தைப் பற்றிய வேறு சில நூல்களும் வாங்கினேன். இங்கிலாந்தி லிருந்த கிறிஸ்துவ நண்பர்களுடன் கடிதப் போக்கு வரவு செய்தேன். அவர்களில் ஒருவர் எட்வர்ட் மெயிட்லாந்தை எனக்குப் பழக்கம் செய்து வைத்தார். அவர் தாம் அனா கிங்ஸ்போர்டுடன் சேர்ந்து எழுதிய 'பரிபூரண நெறி' (The perfect way) என்னும் நூலை எனக்கு அனுப்பினார். தற்போது பொதுவாக அங்கீகரிக்கப் பட்டிருக்கும் கிறிஸ்துவக் கொள்கைகளை அந்நூல் கண்டிக் கிறது. 'பைபிளின் புதிய வியாக்கியானம்' என்னும் புத்தகத்தையும் அவர் எனக் கனுப்பினார். அவ்விரண்டு புத்தகங்களையும் நான் பெரிதும் விரும்பினேன். அவை ஹிந்து மதத்தை ஆதரிப்பனவென்று எனக்குத் தோன் றிற்று. 'ஆண்டவன் இராஜ்யம் உனக்குள்ளே என்னும் டால்ஸ்டாயின் புத்தகம் என்னைப் பரவசப்படுத்தி விட்டது. அதிற்கண்ட கருத்துக்கள் என்றும் மழியா வண்ணம் என் சிந்தையில் பதிந்தன. இப்புத்தகத்தின் சத்தியம், சுதந்திர சிந்தனை, சிறந்த அறநெறி அவற்றின் முன்பு மிஸ்டர் கோடெஸ் எனக்குக்கொடுத்த புத்தகங்கள் எல்லாம் சூரியன் முன் மின்மினி போல் மங்கி மறைந்தன.

இவ்வாறாக, கிறிஸ்துவ மதப் படிப்பானது என் கிறிஸ் துவ நண்பர்கள் சிறிதும் எதிர்பாராத துறையில் என்னைச்

செலுத்தியது. எட்வர்ட் மெயிட்லாந்துடன் நீண்ட காலம் கடிதப் போக்குவரவு செய்தேன். ஸ்ரீ இராஜசந்திரருக்கு அவர் அந்திய காலம் வரையிலும் எழுதி வந்தேன். அவர் அனுப்பிய புத்தகங்களில் சிலவற்றைப் படித்தேன். பஞ்சீகரணம், மணிரத்னமாலா, யோகவாசிஷ்டத்தின் முமுட்சுப் பிரகரணம், ஹரிபத்ர சூரியின் ஷட்தர்சன ஸமுச்சயம் ஆகிய இவை அவற்றுள் சிலவாகும்.

இவ்வாறு, என் கிறிஸ்துவ நண்பர்கள் எதிர்பாராத நெறியைக் கைக்கொண்டேனாயினும், சமய ஆராய்ச்சி தாகத்தை என் மனதில் எழுப்பியதின் பொருட்டு அவர்களுக்கு என்றென்றைக்கும் நன்றிக் கடன்பட்டுள்ளேன். அவர்களுடைய சேர்க்கையைப் பற்றிய ஞாபகங்களை எக்காலத்திலும் போற்றி வருவேன். அன்றைக்குப் பிறகும் எனக்கு அத்தகைய நண்பர்களின் இனிய, பரிசுத்த சங்கம் மேலும் மேலும் அதிகமாகக் கிடைத்தே வந்தது.

பதினாறும் அத்தியாயம்

"நானென்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது"

வழக்கு முடிந்துவிட்டபடியால், இனி நான் பிரிடோரியாவில் இருப்பதற்குக் காரணம் எதுவும் இல்லை. எனவே டர்பனுக்குத் திரும்பிச் சென்று தாய் நாட்டுக்குப் புறப்பட ஆயத்தம் செய்யலானேன். ஆனால் அப்துல்லா சேத் பிரிவுபசாரம் ஒன்று நடத்தாமல் என்னை அனுப்பி விடுவாரா? என்னைச் சிறப்பிக்கும் பொருட்டு ஸிடன் ஹாமில் அவர் ஒரு விருந்து நடத்தினார்.

விருந்தினர் நாள் முழுதும் அங்கேயே கழிக்கவேண்டு மென்று ஏற்பாடாகி யிருந்தது. அன்று அங்கே கிடந்த பத்திரிகைகள் சிலவற்றை நான் புரட்டிக்கொண்டிருக் கையில், ஒரு மூலையில் 'இந்தியர்களின் வாக்குரிமை' என்ற தலைப்புடன் இருந்த செய்தியைப் படிக்க நேர்ந்தது. அச்செய்தி அப்போது சட்ட சபையில் விவாதத்திலிருந்த மசோதாவைப் பற்றியது. நேட்டால் சட்டசபைக்கு அங்கத்தவர் தேர்ந்தெடுக்கும் உரிமையை இந்தியர்களிட மிருந்து பறித்துவிடும் நோக்கத்துடன் அம் மசோதா கொண்டு வரப்பட்டிருந்தது. எனக்கு மேற்படி மசோதா வைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அங்குக் கூடியிருந்தவர் களில் பெரும்பான்மையோரின் நிலையும் அதுவே யாகும்.

அப்துல்லா சேத்தினிடம் இதைப்பற்றிக் கேட்டேன். அவர் கூறியதாவது:—"இவ்விஷயங்களைப்பற்றி எங்க ளுக்கு என்ன தெரியும்? எங்கள் வியாபாரத்தைப் பாதிக் கும் சங்கதிகளை மட்டுமே நாங்கள் அறிந்துகொள்ள முடியும். ஆரஞ்சுபிரீ ஸ்டேட்டில் எங்கள் வியாபாரம் முழுதும் போய் விட்ட தென்பதை நீங்கள் அறிவீர்கள். அதைப்பற்றி நாங்கள் கிளர்ச்சி செய்தும் பயனில்லை. பார்க்கப்போனல் நாங்கள் எழுதப் படிக்க தெரியாத முடவர்கள் தானே? தினசரி மார்க்கெட் விகிதங்களைத் தெரிந்துகொள்வதற்கு மட்டுமே நாங்கள் பத்திரிகை பார்க் கிறேம். சட்ட விவகாரங்களைப்பற்றி எங்களுக்கு என்ன தெரியும்? எங்கள் கண்களும் செவிகளும் இங்குள்ள ஐரோப்பிய அட்டர்னிகளே."

"இங்கேயே பிறந்து வளர்ந்து கல்வி பயின்றுள்ள இந்திய இளைஞர்கள் இருக்கிறார்களே. அவர்கள் உங்க ளுக்கு உதவி செய்வதில்லையா?" என்று வினவினேன்.

அப்துல்லா சேத் துக்கம் நிறைந்த விடையிறுத்தார்:— "அவர்களா? அவர்கள் எங்கள் அருகிலேயே வருவதில்லை. உண்மையில் நாங்களும் அவர்களை லட்சியம் செய்வதில்லை. அவர்கள் கிறிஸ்துவர்களாதலின் வெள்ளைக்காரப் பாதிரிமாரின் சொற்படி ஆடுகிறவர்கள். அப்பாதிரிகளோ அரசாங்கத்துக் குட்பட்டவர்கள்."

இம்மொழிகள் என் கண்களைத் திறந்தன. மேற்குறிப்பிட்ட வகுப்பார் நம்மவர்களே என்று உரிமை பாராட்ட வேண்டுமென எனக்குத் தோன்றியது. கிறிஸ்துவ மதத்தின் பொருள் இதுதானா? அவர்கள் கிறிஸ்துவர்களான காரணத்தினால் இந்தியரல்லாதவர்களாய்ப் போய்விட்டார்களா?

ஆனால் நானோ தாய் நாட்டுக்குப் புறப்படுந் தறுவாயிலிருந்தேன். எனவே என் சிந்தையிலெழுந்த எண்ணங்களை வெளியிடத் தயங்கினேன். "இந்த மசோதா சட்டமானால் நமது நிலைமை மகா கஷ்டமாகிவிடும். இந்தியர்களின் சவப்பெட்டிமீது அடிக்கப்படும் முதல் ஆணி இம் மசோதாவாகும். நமது சுயமரியாதையின் வேரை இது கல்லுவதாயிருக்கின்றது" என்று மட்டும் அப்துல்லா சேத்தினிடம் சொன்னேன்.

அப்போது அவர் உரைக்கலுற்றார்:—"நீங்கள் கூறுவது உண்மையாயிருக்கலாம். ஆனால் இந்த வாக்குரிமை விஷயம் எழுந்த வரலாற்றை உங்களுக்குச் சொல்கிறேன், கேளுங்கள். சில காலத்துக்கு முன் வரை இதைப்பற்றி நாங்கள் ஒன்றுமே அறியாமலிருந்தோம். எங்களுடைய சிறந்த அட்டர்னிகளில் ஒருவரான மிஸ்டர் எஸ்கோம்பை உங்களுக்குத் தெரியுமே? அவர்தான் முதன் முதலாக இந்த விஷயத்தை எங்கள் மண்டையில் ஏற்றினார். போராட்டத்

தில் அவர் நல்ல தீரர். அவருக்கும் இங்குள்ள ஓர் என்ஜினியருக்கும் அவ்வளவாகப் போதாது. என்ஜினியர் அடுத்த தேர்தலில் தம்மைத் தோற்கடித்து விடுவாரோவென்று அவர் பயந்தார். ஆதலின் அவர் எங்கள் உண்மை நிலையை எங்களுக்கே அறிவிக்க முன் வந்தார். அவருடைய தூண்டுதலின்மீது நாங்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொண்டு அவருக்கு வாக்குக் கொடுத்தோம். நீங்கள் கருதுவதுபோல் வாக்குரிமையை அவ்வளவு முக்கியமென்று நாங்கள் கருதாத காரணத்தை இப்போது நீங்கள் அறிந்துகொள்ளலாம். ஆயினும் நீங்கள் சொல்வதிலிருந்து அதன் முக்கியம் தெரிகிறது. நல்லது; நீங்கள் கூறும் யோசனைதான் என்ன?"

மற்ற விருந்தினர் எங்கள் சம்பாஷணையைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் கூறியதாவது:—"என்ன செய்யப்பட வேண்டுமென்று நான் சொல்லட்டுமா? இந்தக் கப்பலுக்கு நீங்கள் வாங்கியிருக்கும் பிரயாணச் சீட்டை ரத்து செய்துவிடுங்கள். இன்னும் ஒரு மாதம் இங்கேயே இருங்கள். நீங்கள் காட்டும் வழிபற்றி நாங்கள் போராடத் தயார்."

உடனே எல்லாரும் "அதுதான் சரி, அதுதான் சரி. அப்துல்லா சேத், எப்படியாவது சகோதரர் காந்தியை நீங்கள் நிறுத்திவிட வேண்டும்" என்று ஒருமுகமாகக் கூவினர்.

சேத் காரியத்தில் கண்ணான மனிதர். அவர் சொன்னதாவது:—"அவரை இனி நான் நிறுத்துவதற்கு நியாயமில்லை. அவரிடம் எனக்குள்ள உரிமை இப்போது உங்களுக்கும் இருக்கிறது. எனினும் நீங்கள் கூறுவதென்னவோ உண்மையே. நாம் எல்லாரும் சேர்ந்து

அவரைத் தங்கிப் போகும்படி கேட்போம். ஆனால் அவர் பாரிஸ்டர் என்பது உங்களுக்கு நினை விருக்கவேண்டும். அவருடைய சன்மானத்துக்கு என்ன ஏற்பாடு?"

சன்மானத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டது எனக்கு மிகுந்த வருத்தத்தை யளித்தது. எனவே நான் குறுக்கிட்டுச் சொன்னதாவது:—"அப்துல்லா சேத், சன்மானத்தைப்பற்றி பேசவேண்டாம். பொது ஊழியத்துக்குச் சன்மானம் ஏது? நான் தங்குவதாயின் ஊழியனாக மட்டுமே தங்கமுடியும். இந்நண்பர்கள் எல்லாரிடமும் எனக்குப் பழக்கமில்லையென நீங்கள் அறிவீர்கள், அவர்கள் இம்முயற்சியில் ஒத்துழைப்பார்களென்று உங்களுக்கு நம்பிக்கை யிருந்தால் இன்னும் ஒரு மாதம் இங்கே தங்க நான் சித்தமா யிருக்கிறேன். ஆனால் ஒன்று கூற வேண்டும். எனக்கு நீங்கள் பணம் எதுவும் கொடுக்க வேண்டா மென்றாலும் நாம் தலையிட விருக்கும் முயற்சி பணமில்லாமல் நடைபெறாது. தந்திகள் அனுப்பவேண்டி யிருக்கும்; துண்டுப் பிரசுரங்கள் அச்சிட வேண்டி யிருக்கும்; சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டி வரலாம்; இவ்விடத்து அட்டர்னிகளிடம் கலந்து ஆலோசிப்பது அவசிய மாகலாம்; எனக்கு உங்கள் சட்டங்கள் தெரியாதலின் சட்ட புத்தகங்கள் சில வாங்கவேண்டி யிருக்கலாம். இவை யெல்லாம் பணம் இல்லாமல் நடவா. இந்த வேலைக்கு ஒருவன் போதாதென்பதும் நிச்சயம். பலர் உதவி செய்ய முன்வர வேண்டும்."

உடனே ஒரே சமயத்தில் பல குரல்கள் எழுந்தன. "ஆண்டவன் மகிமையே மகிமை, அவனது அருளே அருள். பணம் தானே வரும். நீங்கள் வேண்டுமளவு மனிதர்கள் முன்வரத் தயாரா யிருக்கிறார்கள். தயவு

செய்து நீங்கள் மட்டும் இருக்கச் சம்மதியுங்கள். எல்லாம் நன்ருகும்" என்று பலர் ஏககாலத்தில் கூவினர்.

இவ்வாறு அந்தப் பிரிவுபசாரக் கூட்டமானது காரியக் கமிட்டியாக மாறிற்று. சாப்பாடு முதலியவற்றை விரைவில் முடித்துக்கொண்டு அவரவர் வீட்டுக்குத் திரும்பலாமென்று நான் யோசனை சொன்னேன். என் மனதிற்குள் போராட்டத்திற்கு ஒரு திட்டம் போட்டுக் கொண்டேன். வாக்காளர் ஜாபிதாவில் யார் யாருடைய பெயர் இருக்கிறதென்று தெரிந்து கொண்டேன். இன்னும் ஒரு மாதம் தென்னுப்பிரிக்காவில் தங்குவதென்று முடிவு செய்தேன்.

இவ்வாறு ஆண்டவன் தென்னுப்பிரிக்காவில் எனது வாழ்க்கைக்கு அடிகோலினன். தேசிய சுய மரியாதைக்கான பெரும் போராட்டத்துக்கு விதை விதைத்தான்.

பதினேழாம் அத்தியாயம்

நேட்டாலில் நிலைபெற்றது

சேத் ஹாஜி முகமது ஹாஜி தாதா என்பார் 1893-ம் ஆண்டில் நேட்டால் இந்திய சமூகத்தின் பிரமுகர்களுள் தலைசிறந்தவராகக் கருதப்பட்டார். செல்வத்தில் மிகுந்தவர் சேத் அப்துல்லா ஹாஜி ஆதம். ஆனால் அவரும் மற்றவர்களும் பொது விஷயங்களில் சேத் ஹாஜி முகமதுக்கே முதன்மைப் பதவி யளித்தார்கள். எனவே அவருடைய அக்கிராசனத்தின்கீழ் அப்துல்லா சேத்தின் வீட்டில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் வாக்குரிமை மசோதாவை எதிர்ப்பதென்று தீர்மானிக்கப் பட்டது.

தொண்டர்கள் சேர்க்கப்பட்டார்கள். நேட்டாலில் பிறந்த இந்தியர்களுக்கு மேற்படி கூட்டத்துக்கு வரும்படி அழைப்பு அனுப்பியிருந்தோம். அவர்கள் பெரும்பாலும் கிறிஸ்துவ இளைஞர்கள். டர்பன் நீதிமன்ற மொழி பெயர்ப்பாளரான மிஸ்டர் பால், பாதிரிமார் பள்ளிக்கூட மொன்றின் தலைமை யாசிரியரா யிருந்த மிஸ்டர் ஸுபான் காட்பிரே இவ்விருவரும் கிறிஸ்துவ இந்திய இளைஞர் இன்னும் பலரை அழைத்துக்கொண்டு கூட்டத்துக்கு வந்திருந்தனர். இவர்கள் எல்லாரும் தங்களைத் தொண் டர்களாகப் பதிவு செய்து கொண்டனர்.

வியாபாரிகளில் பலரும் தொண்டர்களாக முன் வந்தனர். அவர்களுள் சேத் தாவுது முகமது, முகமது காஸம் கம்ருடீன், ஆதம்ஜி மியான்கான், ஏ. குழந்தை வேலுப்பிள்ளை, ஸி. லச்சிராம், அரங்கசாமிப் படையாச்சி, ஆமோது ஜீவா ஆகிய இவர்கள் முக்கியமானவர்கள். பார்ஸி ரஸ்டம்ஜி தொண்டரானார் என்று சொல்ல வேண்டுவதில்லை. குமாஸ்தாக்களில் தாதா அப்துல்லா கம்பெனியையும், மற்றும் பெரிய கம்பெனிகளையும் சேர்ந்த ஸ்ரீமான்கள் மானக்ஜி, ஜோஷி, நரஸிம்மராம் முதலிய பலர் தொண்டராயினர். பொது ஊழியத்தில் ஈடுபட்டு வேலைசெய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டது அவர்கள் எல்லாருக்கும் ஓரளவு வியப்பையும் திருப்தியையும் அளித்தது. இது அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு புதிய அநுபவம் அன்றோ? இந்திய சமூகத்துக்கே தோன்றி யிருந்த பெரும் விபத்துக்கு முன்னால் உயர்ந்தவர், தாழ்ந்த வர், பெரியவர், சிறியவர், எஜமானர், ஊழியர், ஹிந்து, முஸ்லிம், பார்ஸி, கிறிஸ்தவர், குஜராத்தி, மதராஸி சிந்தி முதலிய வேற்றுமைகள் எல்லாம் மறைந்தன. எல்லாரும்

ஒரு தாய் நாட்டின் புதல்வர்களாயும் தொண்டர்களாயும் ஆயினர்.

மசோதா இரண்டாம் முறை படிக்கப்பட்டு விட்டதோ, படிக்கப்படுந் தருணமா யிருந்ததோ நன்கு நினைவில்லை. சட்டசபையில் அது சம்பந்தமாகப் பேசிய வர்கள் இந்தியர்கள் அக்கடுமையான மசோதாவை எதிர்த்து எதுவும் சொல்லாமல் இருப்பதே அவர்கள் வாக்குரிமைக்குத் தகுதி யற்றவர்கள் என்பதை நிரூபிப் பதாக வாதித்தார்கள்.

நான் கூட்டத்தில் நிலைமையை எடுத்துச் சொன் னேன். முதற் காரியமாக, மசோதாவின்மீது விவாதத்தைத் தள்ளி வைக்கும்படி சட்டசபையின் அக்கிராசனருக்கு ஒரு தந்தியனுப்பினோம். முதன் மந்திரி, ஸர் ஜான் ராபின் ஸன் இவர்களுக்கும், தாதா அப்துல்லாவின் நண்பரான மிஸ்டர் எஸ்கோம்புக்கும் அதேவிதமாகத் தந்தி யனுப் பினோம். விவாதம் இரண்டு நாளைக்குத் தள்ளி வைக்கப்படு மென்று அக்கிராசனர் உடனே பதில் செய்தி விடுத்தார். இச்செய்தி எங்களுக்கு மகிழ்ச்சி யளித்தது.

சட்டசபைக்கு அனுப்புவதற்கு விண்ணப்பம் தயாரிக் கப்பட்டது. அதற்கு மூன்று நகல் பிரதிகள் தயாராக வேண்டும். பத்திரிகைகளுக்கு அனுப்ப அதிகப்படியாக ஒரு பிரதியும் வேண்டும். கூடுமானவரையில் விண்ணப் பத்தில் கையொப்பங்கள் வாங்கத் தீர்மானிக்கப்பட்டி ருந்தது. இவ்வளவு வேலையும் ஒரே இரவில் ஆகவேண்டும். எனவே ஆங்கிலந் தெரிந்த தொண்டர்களும் மற்றும் பலரும் இரவு முழுதும் கண் விழித்து வேலை செய்தனர். மிஸ்டர் ஆர்தர் என்னும் கிழவர் அழகான கையெழுத்து எழுதுபவர் என்று பெயர் பெற்றவர். அசல் விண்ணப்

பத்தை அவர் எழுதினர். இன்னும் நான்கு பிரதிகளை ஒருவர் சொல்ல நால்வர் எழுதினர். இவ்வாறு ஒரே சமயத்தில் ஐந்து பிரதிகள் தயாராயின, தொண்டர்களில் வியாபாரிகளா யிருந்தவர்கள், தங்கள் சொந்த வண்டிகளிலோ அல்லது சொந்தத்தில் பணங்கொடுத்து வாடகை வண்டிகள் அமர்த்திக்கொண்டோ சென்று, விண்ணப்பத்தில் கையொப்பங்கள் வாங்கி வந்தனர். இதுவும் விரைவில் முடிந்தது. விண்ணப்பம் அனுப்பப்பட்டது. பத்திரிகைகள் அதைப் பிரசுரித்துச் சாதகமான அபிப்பிராயமும் எழுதின. சட்டசபையிலும் சிறிதளவு அநுகூலமான அபிப்பிராயம் ஏற்பட்டது. விண்ணப்பத்தின் மீது விவாதம் நடந்தது. மசோதாவைக் கொண்டு வந்தவர்கள், விண்ணப்பத்தில் கண்டிருந்த வாதங்களுக்கு ஏதோ நொண்டிச் சமாதானம் கூறினர்கள். கடைசியாக மசோதா நிறைவேறிவிட்டது.

இந்த முடிவு நாங்கள் எதிர்பார்த்ததே. ஆனால் இது சம்பந்தமான கிளர்ச்சி இந்திய சமூகத்துக்கே புத்துயிர் அளித்துவிட்டது. இந்தியர்கள் எல்லாரும் ஒரே சமூகத்தினர் என்றும், வியாபார உரிமைகளுக்காகப் போராடுவது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அரசியல் உரிமைகளுக்காகப் போராடுவதும் அவசியமென்றும் அவர்கள் உறுதி கொள்ளலாயினர்.

அச்சமயத்தில் லார்ட் ரிப்பன் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குடியேற்ற நாட்டு மந்திரியா யிருந்தார். அவருக்கு ஒரு மகஜர் அனுப்பத் தீர்மானித்தோம். இது எளிதான காரியமன்று; ஒரு நாளில் செய்யக் கூடியதுமன்று. இதற்கும் தொண்டர்கள் சேர்க்கப்பட்டார்கள். எல்லாரும் தங்கள் தங்கள் வேலையைக் குறைவறச் செய்தனர்.

மேற்படி மகஜரைத் தயாரிப்பதற்கு நான் நிரம்ப சிரமப்பட்டேன். அவ்விஷயம் சம்பந்தமாகக் கிடைத்த புத்தகங்கள் எல்லாவற்றையும் படித்தேன். நியாயத்தையும், உசிதத்தையும் ஆதாரமாகக்கொண்ட வாதங்களை மகஜரில் கூறியிருந்தேன். இந்தியாவில் இந்தியர்களுக்கு ஒருவகை வாக்குரிமை இருந்தபடியால் நேட்டாலிலும் இந்தியர்கள் வாக்குரிமை பெறுவது நியாயமென்றும், வாக்குரிமையை உபயோகிக்கக்கூடிய இந்தியர் சிலரே யாதலால் அதை அவர்களுக்கு அளிப்பது உசிதமென்றும் வாதித்திருந்தேன்.

இரண்டு வார காலத்தில் பதினாயிரம் கையொப்பங்கள் வாங்கப்பட்டன. இவ்வளவு கையொப்பங்கள் வாங்குவது சாமானியமான தன்று. மாகாண முழுவதிலும் சுற்றியாக வேண்டியிருந்தது. தொண்டர்களோ இத்தகைய வேலைக்கு முற்றிலும் புதியவர்கள். விண்ணப்பத்தின் கருத்தை முற்றும் உணராத எவரிடமும் கையொப்பம் வாங்கக்கூடா தென்று தீர்மானித்திருந்தோமாதலால், இதற்கென்று விசேஷ திறமையுள்ள தொண்டர்களைத் தெரிந்தெடுக்க வேண்டியிருந்தது. கிராமங்கள் ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் உள்ளவை. தொண்டர்கள் பலர் முழு மனதுடன் வேலை செய்தால்தான் அது முடியும். அவர்கள் உண்மையிலேயே அப்படியே வேலை செய்தார்கள். ஒவ்வொருவரும் தத்தம் வேலையை உற்சாகத்துடன் செய்து முடித்தனர். ஆனால் இதை நான் எழுதும்போது சேத் தாவுது முகமது, ரஸ்டம்ஜி, ஆதம்ஜி மியாகான், ஆமோது ஜீவா ஆகிய இவர்களின் உருவங்கள் என் மனக்கண்ணின் முன்பு தெளிவாகத் தோன்றுகின்றன. இவர்களே மிகுதியான கையொப்பங்களை வாங்கி வந்தார்கள். தாவுது சேத் நாள்

முழுவதும் தமது வண்டியில் பிரயாணம் செய்த வண்ண மிருந்தார். எல்லாரும் அன்பு மிகுதியால் வேலை செய்தனர். ஒருவராவது தாம் சொந்தமாகச் செலவு செய்த பணத்தைக்கூடக் கேட்கவில்லை. தாதா அப்துல்லாவின் வீடு ஒரு பெரிய சத்திரமாகவும், பொதுக் காரியாலயமாகவும் ஆயிற்று. எனக்கு உதவிசெய்த படித்த இந்தியர் சிலரும், இன்னும் பலரும் அவர் வீட்டில் உணவருந்தினர். பொதுவாக, இவ்வேலையில் உதவி செய்த ஒவ்வொருவருக்கும் பணச் செலவு நிரம்ப நேர்ந்தது.

கடைசியாக மகஜரை அனுப்பினோம். அதற்கு ஆயிரம் பிரதிகள் அச்சடித்து விநியோகித்தோம். நேட்டாலில் உள்ள நிலைமைகளைப்பற்றி இந்திய மகாஜனங்களுக்கு முதன் முதலாக இம்மகஜர்தான் அறிவித்தது. இந்தியாவில் எனக்குத் தெரிந்த பத்திரிகைகள், பிரமுகர்கள் எல்லாருக்கும் ஒவ்வொரு பிரதி அனுப்பினேன்.

"டைம்ஸ் ஆப் இந்தியா" மகஜரைப்பற்றி எழுதிய தலையங்கத்தில் இந்தியரின் கோரிக்கைகளைப் பலமாக ஆதரித்தது. இங்கிலாந்தின் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த பத்திரிகைகளுக்கும், பிரமுகர்களுக்கும் அவ்வாறே மகஜரின் பிரதிகள் அனுப்பப்பட்டன. லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையும் எங்கள் கட்சியை ஆதரித்து எழுதிற்று. மசோதா நிராகரிக்கப்படலாமென்று நாங்கள் நம்பிக்கை கொள்ளலானோம்.

இப்போது நான் நேட்டாலை விட்டுப்போவது இயலாத காரியமாகிவிட்டது. இந்திய நண்பர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு அங்கேயே நிலையாகத் தங்கிவிடும்படி மன்றாடினார்கள். என்னுடைய கஷ்டங்களை நான் எடுத்துச் சொன்னேன். பொதுப் பணத்தில் ஜீவனம் நடத்திக்

கொண்டு இருப்பதில்லையென நான் தீர்மானித்திருந்தேன். தனி ஜாகை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வது அவசிய மென்றும், வீடு நல்ல வீடாயும், நல்ல இடத்தில் உள்ள தாயு மிருக்கவேண்டு மென்றும் எண்ணினேன். மற்றும் பாரிஸ்டர்களுக்குரிய தோரணையில் வாழ்க்கை நடத்தா விடில் இந்திய சமூகத்துக்கு என்னால் கௌரம் ஏற்படா தென்றும் நினைத்தேன். வருஷத்திற்குக் குறைந்தது 300 பவுன் இல்லாமல் அத்தகைய ஜாகையை நிர்வகிக்க இயலா தென்று தோன்றிற்று. எனவே, பாரிஸ்டர் தொழிலில் குறைந்தது அவ்வளவு வருமானந் தரக்கூடிய வேலையாவது எனக்களிப்பதாக அவர்கள் உறுதி கொடுத்தால் மட்டுமே அங்கே தங்கலாமென்று தீர்மானித்தேன், எனது இந்த முடிவை அவர்களுக்கு அறிவித்தேன்.

"பொது வேலைக்காகவே அவ்வளவு தொகை தங்களுக்குக் கொடுக்கப்படவேண்டு மென்றல்லவா நாங்கள் நினைக்கிறோம்? சுலபமாக அவ்வளவு தொகை நாங்கள் சேர்த்து விடக்கூடும். அதைத் தவிர வக்கீல் வேலையில் கிடைத்த அளவுக்குத் தாங்கள் சம்பாதித்துக் கொள்ளலாம்" என்று அவர்கள் கூறினார்கள்.

"இல்லை, இல்லை. பொது வேலைக்கு உங்களிடம் பணம் பெற்றுக் கொள்ளேன். பாரிஸ்டர் தொழில் திறமை அவ்வேலைக்கு அதிகம் வேண்டுவதில்லை. பொது ஊழியத்தில் உங்கள் எல்லாரையும் வேலை வாங்குவதே என்னுடைய முக்கிய வேலையாயிருக்கும். இதற்கு உங்களிடம் பணங் கேட்பதெப்படி? மற்றும், பொது வேலையில் நேரும் செலவுகளுக்காக அடிக்கடி உங்களிடம் நிதி திரட்ட வேண்டி ஏற்படலாம். என்னுடைய ஜீவனத்துக்கும் உங்களிடமிருந்தே பணம் பெற்றுவந்தால் இதற்கு அவ்

வளவு தாராளமாகப் பெருந்தொகைகள் கேட்கமுடியாது. முடிவில் வேலை நின்றுபோய் விடும். மேலும் நீங்கள் வருஷந்தோறும் பொது வேலைக்காக 300 பவுனுக்கு மேலேயே செலவிடத் தயாரா யிருக்க வேண்டுமென்பது என் கருத்து."

"சில காலமாகத் தங்களுடன் பழகித் தங்கள் இயல்பை நாங்கள் நன்கறிந்து கொண்டிருக்கிறோம். தங்களுக்கு அவசியமாக வேண்டியிருக்கு மளவுக்கே பணம் பெற்றுக்கொள்வீர்களென்று எங்களுக்கு நிச்சயமுண்டு. உங்களை இங்கே தங்கச் செய்யும் நாங்கள், உங்கள் செலவுக்குப் பணம் சேர்த்துத் தரவேண்டாமா?"

"உங்களுடைய அன்பினாலும், தற்போதைய உற்சாகத்தினாலும் இப்படிப் பேசுகிறீர்கள். இந்த அன்பும் உற்சாகமும் நீடித்திருக்குமென்பது என்ன நிச்சயம்? மற்றும் உங்கள் நண்பன், ஊழியன் என்ற முறையில் நான் சில சமயம் உங்களைக் கடிந்துகொள்ள நேரலாம். அப்போதும் நீங்கள் என்னிடம் அன்பு காட்டுகிறீர்களா வென்பது ஆண்டவனுக்கே தெரியும். எங்ஙனமாயினும், பொது வேலைக்காக நான் சம்பளம் பெற்றுக்கொள்ளக் கூடாது. நீங்கள் எல்லாரும் உங்களுடைய வழக்குகளுக்கு என்னை வக்கீலாக அமர்த்தச் சம்மதித்தலே சாலும் இதுவே உங்களுக்குக் கஷ்டமாயிருக்கலாம். நான் வெள்ளைக்கார பாரிஸ்டர் அல்லன். நீதி மன்றத்தார் என்னை எவ்வளவு தூரம் மதிப்பார்கள் என்று சொல்லுவதற்கில்லை. வக்கீல் தொழிலில் நான் எவ்வளவு தூரம் வெற்றி பெறுவேனென்பதும் நிச்சயமாகத் தெரியாது. இங்கிலையில் என்னை உங்களுடைய வக்கீலாக அமர்த்திக் கொள்வதற்கே நீங்கள் நிரம்பத் துணியவேண்டும். அப்

படித் துணிந்து அமர்த்திக் கொண்டால் அதுவே என்னுடைய பொது வேலைக்குச் சன்மானம் என்று கருதுவேன்."

இவ்விவாதத்தின் பயனாகச் சுமார் இருபது வியாபாரிகள் ஒரு வருஷ காலத்துக்கு என்னைத் தங்கள் வக்கீலாக அமர்த்தி அதற்காக முன் பணமும் கொடுத்தார்கள். நான் தாய்நாட்டுக்குத் திரும்பும் காலையில் எனக்கு ஒரு பண முடிப்பு அளிக்க தாதா அப்துல்லா தீர்மானித்திருந்தார். அந்தப் பணத்தைக்கொண்டு இப்போது அவர் நாற்காலி, மேஜை முதலிய சாமான்கள் வாங்கிக் கொடுத்தார்.

இவ்வாறு நான் நேட்டாலில் நிலையாகத் தங்கினேன்.

பதினெட்டாம் அத்தியாயம்

நிறத் தடை

மதிநுட்பம் வாய்ந்த ஒரு கிழவி; கண் குருடானவள்; ஒருதலைச் சார்பில்லாதவள்; கையில் தராசைத் தூக்கி நிறுத்து நடுநிலை நியாயம் வழங்குகிறாள்—இத்தகைய பதுமை ஒன்று நீதிமன்றத்தின் சின்னமாக அமைக்கப் பட்டிருத்தல் வழக்கம். அக்கிழவி குருடாயிருப்பதின் கருத்து, ஒருவனுடைய வெளித்தோற்றத்தைக் கண்டு எதுவும் தீர்மானித்து விடாமல் அவனது உண்மை யோக்யதையை உணர்ந்து தீர்ப்பளிக்கிறாள் என்பதே. ஆனால் உயர்தர நீதிமன்றம் இக்கருத்துக்கு நேர் மாறாக நடந்து தனது சின்னத்தைப் பொய்ப்படுத்த வேண்டுமென்று நேட்டால் வக்கீல் சங்கத்தார் முயன்றனர்.

மேற்படி உயர்தர நீதிமன்றத்தில் அட்வொகேட்டாக என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டேன். பம்பாய் உயர்தர நீதிமன்றத்தின் அங்கீகார பத்திரம் ஒன்று என்னிடம் இருந்தது. இப் பத்திரம் பெறுங்காலையில் இங்கிலாந்தில் கிடைத்த பாரிஸ்டர் அத்தாட்சிப் பத்திரத்தை பம்பாய் நீதிமன் றத்தில் கொடுத்து விட்டேன். விண்ணப்பத்துடன் இரண்டு நன்னடக்கை அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பு வது அவசியமா யிருந்தது. இவ்வத்தாட்சிப் பத்திரங்கள் ஐரோப்பியர்கள் கொடுத்தனவா யிருந்தால் அவற்றிற்கு அதிக மதிப்பு இருக்கு மென்று கருதினேன். எனவே சேத் அப்துல்லா மூலம் எனக்குப் பழக்கமான இரண்டு ஐரோப்பிய வியாபாரிகளிடம் அத்தாட்சிப் பத்திரங்கள் வாங்கினேன். ஏற்கனவே வக்கீல் தொழில் நடத்தும் ஒருவர் மூலமாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சாதாரணமாய், அட்டர்னி ஜெனரல், கூலி எதுவும் பெறுமல் இவ்விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது வழக்கம். மிஸ்டர் எஸ்கோம்ப் தான் அப்போது அட்டர்னி ஜெனரல். இவர் தாதா அப்துல்லா கம்பெனிக் குச் சட்ட விஷயங்களில் ஆலோசனை சொல்பவர் என்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். எனவே அவரிடம் சென்றேன். என் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க அவர் பிரியத்துடன் சம்மதித்தார்.

நான் சற்றும் எதிர்பாராத விதமாய் வக்கீல் சங்கத்தார் இப்போது ஒரு காரியம் செய்தனர். என் விண்ணப்பத்தைத் தாங்கள் எதிர்ப்பதாக அவர்கள் எனக்கு ஓர் அறிக்கை அனுப்பினுர்கள். இங்கிலாந்தில் நான் பெற்ற அசல் அத்தாட்சிப் பத்திரத்தை விண்ணப்

பத்துடன் சேர்க்கவில்லை யென்பது அவர்களுடைய ஆட்சேபங்களில் ஒன்று. ஆனால் முதன்மையான ஆட்சேபம் இதுவன்று. 'நீதிமன்றத்தில் அட்வொகேட்டாக அங்கீகரிப்பதற்குரிய விதி முறைகள் செய்யப்பட்டபோது, வெள்ளைக்காரனல்லாத ஒருவன் விண்ணப்பம் செய்து கொள்வானென்பது எப்படித் தெரிந்திருக்க முடியும்? நேட்டால் செழித்துத் தற்போது வளத்தில் சிறந்திருப்பதற்கு ஐரோப்பியர்களின் முயற்சியே காரணமாகும். ஆதலின் வக்கீல் தொழிலில் ஐரோப்பியர்களே மிகுந்திருப்பது அவசியம். கறுப்பர்கள் சேர்த்துக்கொள்ளப் படின் நாளடைவில் ஐரோப்பியர்களை விட அவர்கள் தொகையில் வலுத்துவிடலாம். ஐரோப்பியர்களுக்குப் பாதுகாப்பு அரண் எதுவும் இல்லாமற் போய்விடும்'— இதுவே அவர்களது முதன்மையான ஆட்சேபம்.

வக்கீல் சங்கத்தின் சார்பாக என் விண்ணப்பத்தை எதிர்ப்பதற்குப் பெயர்பெற்ற வக்கீல் ஒருவர் அமர்த்தப் பட்டிருந்தார். அவரும் தாதா அப்துல்லா கம்பெனியுடன் சம்பந்த முள்ளவரானபடியால், தம்மை வந்து பார்த்துப் போகும்படி சேத் அப்துல்லா மூலம் அவர் சொல்லி யனுப்பினார். அவ்வாறே நான் போய்க் கண்டபோது அவர் மனம் விட்டுத் தாராளமாகப் பேசினார். எனது பூர்வோத்தரங்களைப்பற்றி விசாரித்தார். பிறகு அவர் கூறியதாவது:—"உங்களுக்கு விரோதமாக நான் சொல்லக் கூடிய தேதுவுமில்லை. நீங்கள் இந்நாட்டிலேயே பிறந்த போலி வேஷதாரியோ என்னவோ என்று பயந்தேன். உங்கள் விண்ணப்பத்துடன் இங்கிலாந்தில் பெற்ற அத்தாட்சிப் பத்திரம் சேர்க்கப்படாமையால் என் ஐயம் அதிகமாயிற்று. சிலர் தங்களுக்குச் சொந்த மில்லாத

அத்தாட்சிப் பத்திரங்களைத் தங்களுடையதெனக் காட்டி மோசம் செய்வதுண்டு. ஐரோப்பிய வியாபாரிகளிடம் நீங்கள் வாங்கியுள்ள அத்தாட்சிப் பத்திரங்கள் என் வரையில் பயனற்றவை. அவர்களுக்கு உங்களைப்பற்றி என்ன தெரியும்? அவர்களுடன் நீங்கள் எவ்வளவு காலம் பழகியிருக்க முடியும்?"

"ஆனல் இங்கே எல்லாரும் எனக்கு அன்னியர்கள் தானே? சேத் அப்துல்லாகூட முதன் முதல் என்னைத் தெரிந்துகொண்டது இந்நாட்டிலேயே" என்று நான் உரைத்தேன்.

"நீங்கள் இருவரும் ஒரே இடத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறீர்களல்லவா? உங்கள் தந்தை அங்கே முதன் மந்திரியா யிருந்திருப்பின், சேத் அப்துல்லாவுக்கு உங்கள் குடும்பத்தைப்பற்றி அவசியம் தெரிந்திருக்கும். அவரிடமிருந்து நன்னடக்கைப் பத்திரம் வாங்கிச் சேர்த்து விட்டால், பின்னர் எனக்கு எவ்வகை ஆட்சேபமும் இராது. அப்போது, உங்கள் விண்ணப்பத்தை என்னல் எதிர்க்க முடியாதென்று வக்கீல் சங்கத்துக்குத் தெரிவித்துவிடு வேன்."

அவருடைய இம்மொழிகள் எனக்குக் கோப மூட்டின. எனக்குள் பின்வருமாறு சொல்லிக்கொண் டேன்:—"தாதா அப்துல்லாவிடம் நன்னடக்கைப் பத் திரம் வாங்கிச் சேர்த்திருந்தால், அதை நிராகரித்து விட்டு ஐரோப்பியர்களிட மிருந்து அத்தாட்சிப் பத்திரம் வேண்டு மென்று சொல்லி யிருப்பார்கள். இப்போது இப்படிச் சொல்கிறர்கள். நான் அட்வொகேட்டாக அங்கீகாரம் பெறுவதற்கும், என்னுடைய பிறப்பு வளர்ப்பு முதலிய பூர்வோத்தரங்களுக்கும் என்ன சம்பந்தம்? பிறப்பு

தாழ்மையானதாயோ, கேவலமான தாயோ இருப்பினும் அதை எனக்கு விரோதமாக எப்படி உபயோகப்படுத்த முடியும்?" ஆனால் சினத்தை அடக்கிக் கொண்டு நான் அவருக்கு அமைதியுடன் பதிலளித்ததாவது:—"இத்தகைய விவரங்களைக் கேட்க வக்கீல் சங்கத்துக்கு எவ்வகை உரிமையேனும் உண்டென்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஆயினும் நீங்கள் விரும்பும் வண்ணம் தாதா அப்துல்லா சேத்திடமிருந்து அத்தாட்சி வாங்கி அனுப்பத் தயாராயிருக்கிறேன்."

அவ்வாறே தாதா அப்துல்லாவிடமிருந்து நன்னடக்கைப் பத்திரம் வாங்கி அவருக்கு அனுப்பினேன். அவர் தாம் திருப்தி யடைந்து விட்டதாகக் கூறினார். ஆனால் வக்கீல் சங்கம் இதனாலும் திருப்தியடையவில்லை. நீதிமன்றத்தில் என் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டபோது அச் சங்கத்தின் சார்பாக எதிர்க்கப்பட்டது. ஆனால் நீதிமன்றத்தார் மிஸ்டர் எஸ்கோம்பை விடையிறுக்கும்படியும் கேளாமல் எதிர்ப்பை நிராகரித்து விட்டனர். தலைமை நீதிபதி பின்வரும் கருத்தடங்கிய மொழிகளைக் கூறினார்:—

"விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடன் அசல் அத்தாட்சிப் பத்திரத்தைச் சேர்க்கவில்லை யென்னும் வாதம் பொருளற்றது. அவர் பொய்யான அத்தாட்சிகளைச் சேர்த்திருந்தால் அவர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள இடமிருக்கிறது. விசாரணையில் குற்றவாளியென்று நிரூபிக்கப்பட்டால் அவர் பெயரை அப்போது எடுத்துவிடலாம். வெள்ளைக்காரர், வேறு நிறத்தார் என்னும் வேற்றுமையைச் சட்டம் அங்கீகரிக்கவில்லை. ஆதலின் மிஸ்டர் காந்தியை அட்வொகேட்டாக அங்கீகரிக்க மறுப்பதற்கு நமக்கு எவ்வகை அதிகாரமும் கிடையாது. அவருடைய விண்

ணப்பத்தை அங்கீகரிக்கிறோம். மிஸ்டர் காந்தி இனி நீங்கள் சத்தியப் பிரமாணம் செய்யலாம்."

அவ்வாறே நீதிமன்ற ரிஜிஸ்டரார் முன்பு நின்று சத்தியப் பிரமாணம் செய்தேன். உடனே தலைமை நீதிபதி கூறியதாவது:—"மிஸ்டர் காந்தி, இப்போது உங்கள் தலைப்பாகையை எடுத்து விடவேண்டும். தொழில் நடத்தும் பாரிஸ்டர்கள் அணியவேண்டிய உடையைப்பற்றி நீதிமன்றத்தின் விதிகளுக்கு நீங்கள் இணங்கி நடத்தல் அவசியம்."

என் சக்திக்கு ஓர் எல்லை உண்டு என்பதை இப்போது கண்டேன். ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தலைப்பாகையை எடுக்கப் பிடிவாதமாக மறுத்த நான் உயர்தர நீதி மன்றத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தலைப் பாகையை எடுத்துவிட்டேன். நான் அக்கட்டளையை எதிர்த்துப் போராடியிருந்தால், அப்போராட்டத்தின் நியாயத்தை ஸ்தாபிக்க முடியாதென்பதில்லை. ஆனால் இதனினும்பெரிய போராட்டங்களுக்கு என்னுடைய சக்தியைச்சேகரித்து வைக்க விரும்பினேன். தலைப்பாகை தான் வைத்துக்கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்து என் போர்த்திறமையைச் சிதறவிடக் கூடாதென்று எண்ணினேன். இன்னும் பெரிய காரியங்களுக்கு அதைச் சேர்த்து வைத்தல் தகுதியென்று நினைத்தேன்.

இவ்வாறு நான் பணிந்துவிட்டது சேத் அப்துல்லாவுக்கும், பிற நண்பர்களுக்கும் பிடிக்கவில்லை. தலைப்பாகையுடனேயே நீதிமன்றத்தில் பேசும் உரிமையை வலியுறுத்தியிருக்க வேண்டுமென அவர்கள் எண்ணினார்கள். அவர்களுடன் வாதிட்டுத் திருப்ப முயன்றேன். "ரோமாபுரியில் இருக்கும்போது ரோமர்கள் செய்வதுபோல் செய்"

என்னும் பழமொழியின் உண்மையை அவர்களுக்கு அறிவுறுத்த முயன்றேன். "இந்தியாவில் ஓர் ஆங்கில உத்தியோகஸ்தரோ நீதிபதியோ தலைப்பாகையை எடுக்கும்படி உங்களுக்குக் கட்டளையிட்டால் அதற்குக் கீழ்ப்படிய மறுத்தல் சரியாகும். ஆனால் இங்கே, நேட்டாலில், நீதிமன்றத்தில் தொழில் புரியும் நான், அந் நீதிமன்றத்தின் வழக்க மொன்றுக்கு உட்பட மறுத்தல் தகுதியன்று" எனக் கூறினேன்.

இத்தகைய வாதங்களினால் நண்பர்களை ஓரளவு சமாதானம் செய்தேன். ஆனால் ஒரே விஷயத்தை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு நோக்குடன் பார்த்து முடிவு செய்ய வேண்டுமென்னும் கொள்கையை அவர்கள் முழுதும் ஒப்புக்கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. என் வரையில், என் வாழ் நாள் முழுவதிலும், சத்தியத்தில் நான் கொண்ட உறுதியே ராஜியின் மேன்மையையும் எனக்கு உணர்த்தி வந்திருக்கிறது. ராஜி செய்து கொள்ளும் தன்மை சத்தியாக்கிரகத்தின் ஒரு முக்கியமான அம்சம் என்பதைப் பிற்காலத்தில் அறிந்தேன். இத் தன்மையின் பயனாக என் உயிருக்குப் பல முறைகளில் அபாயம் நேர்ந்திருக்கிறது. நண்பர்களின் பிரியத்தை இழக்க வேண்டி நேரிட்டிருக்கிறது. ஆனால் சத்தியம் ஓரம்சத்தில் பூவிதழினும் மேன்மையான தாயினும், மற்றோரம்சத்தில் கற்பாறையினும் கடினமானதாகும்.

வக்கீல் சங்கத்தாரின் எதிர்ப்புக் காரணமாக என் பெயர் தென்னாப்பிரிக்காவில் இன்னும் கொஞ்சம் விளம்பரப்படுத்தப்பட்டது. பெரும்பான்மையான வக்கீல் சங்கத்தார் பொறாமை காரணமாக இப்படிச் செய்ததாகப் பத்திரிகைகள் குறிப்பிட்டு அவர்களது எதிர்ப்பைக்

கண்டித்தன. இவ்வாறு என் பெயர் பிரபலமடையவே என் வேலை ஓரளவு சுலபமாகியது.

பத்தோன்பதாம் அத்தியாயம்

நேட்டால் இந்தியக் காங்கிரஸ்

வக்கீல் தொழில் அந்நாளிலிருந்து எனக்கு இரண்டாவது வேலையாகவே இருந்து வந்தது. நேட்டாலில் நான் தங்கியது பயன்பெற வேண்டுமானால் பொது வேலையில் முதன்மையாகக் கவனஞ் செலுத்தல் அவசியம். இந்தியர்களின் வாக்குரிமையைப் பறிக்கும் மசோதாவைப் பற்றி மகஜர் அனுப்பியதுடன் வேலை முடிந்து விடவில்லை. குடியேற்ற நாட்டு மந்திரியை அதைக் கவனிக்கச் செய்ய வேண்டுமாயின் இடைவிடாத கிளர்ச்சி இன்றியமையாதது. இதற்கு நிரந்தரமான ஸ்தாபனம் ஒன்று காணுதல் அவசியமென்று கருதினேன். எனவே சேத் அப்துல்லாவிடமும் மற்ற, நண்பர்களுடனும் கலந்து யோசித்தேன். முடிவில் எல்லாரும் சேர்ந்து அத்தகைய நிரந்தரமான அமைப்பு ஒன்றை நிறுவத் தீர்மானித்தோம்.

இந்தப் புதிய அமைப்புக்கு என்ன பெயர் கொடுப்பதென்னும் விஷயம் பெரிதும் என்னைச் சிந்தனைக்காளாக்கிற்று. அது ஒரு குறிப்பிட்ட கட்சிச் சார்பானதாயிருத்தல் கூடாது. 'காங்கிரஸ்' என்ற பெயரை இங்கிலாந்திலுள்ள கன்சர்வேடிவ் கட்சியினர் வெறுத்தனர் என்று எனக்குத் தெரிந்திருந்தது. ஆனால் இந்தியாவின் உயிரே காங்கிரஸ்தான். அப்பெயரையே நேட்டாலில் பரவச்செய்ய விரும்பினேன். அப்பெயரைக் கொள்ளத் தயங்குதல் கோழைத்தன மாகுமென்று தோன்றிற்று.

எனவே, இப்புதிய அமைப்புக்கு 'நேட்டால் இந்தியக் காங்கிரஸ்,' என்று பெயரிட வேண்டுமென நான் யோசனை சொன்னதுடன் அதற்குரிய காரணங்களையும் விளக்கமாகக் கூறினேன். இவ்வாறாக, மேமீ 22வ யன்று நேட்டால் இந்தியக் காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பெற்றது.

அன்றைய தினம் தாதா அப்துல்லாவின் விசாலமான அறையில் எள் விழ இடமின்றி ஜனங்கள் கூடியிருந்தார்கள். வந்திருந்தவர் அனைவரும் காங்கிரஸை உற்சாகத்துடன் ஆதரித்தனர். அதன் அமைப்பு விதிகள் மிக எளியவை. சந்தா மட்டும் அதிகம். மாதம் ஐந்து ஷில்லிங் கட்டுவோரே அங்கத்தவரா யிருத்தல் கூடும். பணக்காரர்கள் அதற்கு மேலும் இயன்றவரை கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. எல்லாருக்கும் முதன்மையாக அப்துல்லா சேத் மாதம் 2 பவுன் தருவதாய்க் கையொப்ப மிட்டார். இன்னும் இருவரும் அவ்வாறே செய்தனர். நானும் தாராளமா யிருக்க வேண்டுமென்று எண்ணி ஒரு பவுனுக்குக் கையொப்பம் செய்தேன். இது எனக்குச் சிறு தொகையன்று. ஆயினும் நான் சம்பாதித்து வாழ்க்கை நடத்தக்கூடுமானால் இச் சந்தா என் சக்திக்கு மேற்பட்டதா யிராதென்று கருதினேன். சந்தா செலுத்த இயலுமாறு ஆண்டவன் எனக்குத் துணை புரிந்தார். எனக்குப் பிறகு, மாதம் ஒரு பவுன் சந்தாகட்டும் அங்கத்தினர் இன்னும் பலர் சேர்ந்தனர். இவர்களை விட அதிக தொகையினர் 10 ஷில்லிங்குக்குக் கையொப்பம் செய்தனர். இவையன்றி நன்கொடைகள் வேறு அளிக்கப்பட்டன. அவற்றை நன்றியுடன் ஏற்றுக் கொண்டோம்.

ஆனால் கேட்டவுடன் சந்தா செலுத்துபவர் மிகக் குறைவு என்பதில் அநுபவத்தில் தெரிய வந்தது. டர்பன்

நகருக்கு வெளியே யிருந்த அங்கத்தினரிடம் அடிக்கடி சந்தா கேட்கச் செல்வது இயலாத காரியம். அந்த நிமிஷத்தி லிருந்த உற்சாகம் அடுத்த நிமிஷத்தில் அழிந்து பட்டதாய்த் தோன்றியது. டர்பன் அங்கத்தினரைகூடச் சந்தாவுக்கு நிரம்பத் தொந்திரவு செய்ய வேண்டியிருந்தது.

காரியதரிசி நானுதலால் சந்தா வசூலிக்கும் வேலை எனக்கே ஏற்பட்டிருந்தது. நாளடைவில் என் குமாஸ்தாவுக்குச் சந்தா வசூலிப்பதே வேலையாய்ப் போய் விட்டது. அவரும் அலுத்துப் போனுர். இந்நிலைமைக்குப் பரிகாரம், வருஷ சந்தாவாக ஏற்படுத்தி அதையும் முன்னுலேயே கட்டிவிட வேண்டுமென விதி ஏற்படுத்துவதே என்று கருதினேன். எனவே காங்கிரஸ் கூட்டமொன்றைக் கூட்டி என் யோசனையை எடுத்துக் கூறினேன். எல்லோரும் வருஷ சந்தா ஏற்பாட்டை ஆதரித்தார்கள். குறைந்த வருஷ சந்தா 3 பவுன் என்று நிர்ணயிக்கப்பட்டது. இதன் பயனுகச் சாந்தா வசூலிக்கும் வேலை நிரம்பச் சுலபமாயிற்று.

கடன் வாங்கிய பணத்தைக் கொண்டு பொது வேலை நடத்தக்கூடாதென்று ஆரம்பத்திலேயே அறிந்து கொண்டேன். மற்ற எல்லா விஷயங்களிலும் ஜனங்களின் வாக்குறுதியை நம்பலாம். ஆனுல் பண விஷயமொன்றில் மட்டும் நம்புவதற்கில்லை. கொடுக்க ஒப்புக்கொண்ட தொகையைத் தாமதமின்றிக் கொடுக்கும் மனிதரை நான் கண்டதே கிடையாது. இந்தப் பொது விதிக்கு நேட்டால் இந்தியர்கள் விலக்கானவர்களா யில்லை. எனவே பணம் வந்தாலன்றி நாங்கள் வேலை எதுவும் நடத்துவதில்லையாதலால் நேட்டால் இந்தியக் காங்கிரஸ் எப்போதும் கடன் பட்டதில்லை.

புதிய அங்கத்தினரைச் சேர்ப்பதில் என் சகாக்கள் விசேஷ உற்சாகம் காட்டினார்கள். இவ்வேலை அவர்களுக்குப் பெரிதும் பிடித்திருந்தது. அது அவர்களுக்குப் பெரிதும் பயனுள்ள ஓர் அநுபவமாயு மிருந்தது. ஏராளமான ஜனங்கள் சந்தா செலுத்தி அங்கத்தினராகச் சந்தோஷத்துடன் முன் வந்தார்கள். உள் நாட்டில் தூரத்திலுள்ள கிராமங்களில் வேலை செய்தல் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. பொது வேலையின் இயல்பை ஜனங்கள் அறிந்திருக்கவில்லை. எனினும் தூர தூரத்திலுள்ள இடங்களிலிருந்தும் எங்களுக்கு அழைப்புகள் வந்து கொண்டிருந்தன. ஒவ்வோரிடத்திலுமுள்ள பெரிய வியாபாரிகள் எங்களை விருந்தினராய் வரவேற்க முன் வந்தார்கள்.

இந்தச் சுற்றுப் பிரயாணத்தின்போது ஒரு முறை எங்களுக்குக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டது. நாங்கள் யாருடைய விருந்தாளிகளாகச் சென்றிருந்தோமோ அவரிடமிருந்து ஆறு பவுன் சந்தா எதிர் பார்த்தோம். ஆனால் அவர் மூன்று பவுனுக்குமேல் தர முடியாதென்று பிடிவாதம் பிடித்தார். அவரிடமிருந்து அத்தொகையைப் பெற்றுக் கொண்டோமாயின் மற்றவர்களும் அவரையே பின்பற்றுவார்கள். எதிர்பார்த்த அளவு தொகை சேராது. இரவு நெடு நேரம் ஆகிவிட்டது. எங்களுக்கோ பசி அதிகமாயிருந்தது. எனினும் நாங்கள் உத்தேசித்த தொகையை வசூலியாமல் உண்வருந்த மனம் எழவில்லை. எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பயனில்லை. அவர் ஒரே பிடிவாதமாயிருந்தார். அதே பட்டணத்தைச் சேர்ந்த மற்ற வியாபாரிகள் அவருடன் வாதிட்டுப் பார்த்தார்கள். அவர் உறுதியை அசைக்க முடியவில்லை. நாங்களும் விடுவதில்லை

யென்று தீர்மானித்தோம். இரவு முழுவதும் இப்படியே கழிந்தது. என்னுடைய சகாக்களில் பெரும்பான்மையோர் கோபத்தினால் குமுறிக்கொண்டிருந்தன ராயினும் அதை வெளிக் காட்டாதிருந்தனர். கடைசியாகப் பொழுது விடியுந் தருணத்தில் அவர் இணங்கி வந்தார். ஆறு பவுன் சந்தா கொடுத்து எங்களுக்கு விருந்துமளித்தார். இது தோங்காத் என்னும் பட்டணத்தில் நடந்தது. ஆனால் இந்நிகழ்ச்சியைப் பற்றிய செய்தி வட கடற்கரையிலுள்ள ஸ்டேங்கர் வரையிலும், உள்நாட்டில் சார்லஸ்டௌன் வரையிலும் பரவிவிட்டது. இதன் பயனாகச் சந்தா வசூல் துரிதமாக நடந்தது.

ஆனால் நிதி சேகரிப்பதுடன் வேலை முடிந்துவிடவில்லை. உண்மையில், அவசியத்துக்கு அதிகமாகக் கையில் பணம் வைத்திருக்கக்கூடா தென்னும் பாடத்தை நான் முன்னமேயே கற்றுக் கொண்டிருந்தேன்.

மாதம் ஒருமுறையும், அவசியமானபோது வாரம் ஒருமுறையும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக் கூட்டங்களில் முந்தைய கூட்டத்து நடவடிக்கைகளை வாசித்து விட்டுப் பின்னர் பல விஷயங்களையும்பற்றி வாதம் செய்வது வழக்கம். ஆனால் பொதுக் கூட்டத்தில் விவாதம் செய்வதிலாவது, எடுத்த விஷயத்தைப்பற்றிச் சுருக்கமாகப் பேசுவதிலாவது அங்கத்தினர்களுக்கு அதுவரையில் அநுபவம் கிடையாது. பேசுவதற்கு எழுந்து நிற்கவே எல்லாரும் தயங்கினார்கள். கூட்ட நடைமுறையைப் பற்றி விதிகளை நான் அவர்களுக்கு விளக்கிச் சொன்னேன். அவர்கள் அவ்விதிகளுக் கிணங்கி நடந்தார்கள். இது தங்களுக்கு ஒரு கல்விப் பயிற்சி என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இதற்கு முன்னால் கூட்டத்தில்

பேசியே அறியாதவர்களும் பொது விஷயங்களைப்பற்றிச் சிந்தனைசெய்து பகிரங்கமாகப் பேசக் கற்றுக் கொண்டார்கள்.

பொது வேலைகளில் சில்லரைச் செலவுகளே பெருந் தொகைகளாகிவிடு மென்பதை நான் அறிந்திருந்தேன். எனவே ஆரம்பத்தில் ரசீது புத்தகங்கள் கூட அச்சடிக்க வேண்டாமெனத் தீர்மானித்தேன். எனது காரியாலயத்திலிருந்த சைக்ளோஸ்டைல் என்னும் பிரதிகள் எடுக்கும் கருவியில் ரசீதுகளும் அறிக்கைகளும் தயாரித்துக் கொண்டேன். காங்கிரஸுக்கு நிதியும் அங்கத்தினரும் நிரம்பச் சேர்ந்து வேலையும் அதிகமான பின்னரே ரசீது, அறிக்கை முதலியவற்றை அச்சடிக்கத் தொடங்கினேன். எல்லா அமைப்புகளுக்கும் இத்தகைய சிக்கனம் அத்யாவசியமானது. ஆனால் பெரும்பாலும் இவ்விஷயத்தில் கவனஞ் செலுத்தப்படுவதில்லை யென்பதை நான் அறிவேன். அதனாலேயே சிறிதாகத் தொடங்கிப் பெரிதாக வளர்ந்த அந்த ஸ்தாபனத்தின் ஆரம்ப நாட்களைப்பற்றி இச்சிறு விவரங்களையும் கூறலுற்றேன்.

ஜனங்கள் தாங்கள் கொடுத்த பணத்துக்கு ரசீது பெறுவதில் கவலை காட்டுவதில்லை. ஆனால் நாங்கள் ரசீது கொடுப்பதை எப்போதும் வலியுறுத்தி வந்தோம். இவ்வாறாக ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு ஏற்பட்டது. நேட்டால் இந்தியக் காங்கிரஸின் பழைய தஸ்தாவேஜிகளைப் புரட்டினால் இன்றும் 1894-ம் ஆண்டுக் கணக்குப் புத்தகத்தை அப்படியே காணலா மென்று நான் துணிந்து கூற முடியும். எந்த அமைப்புக்கும் வரவு செலவுக் கணக்கு ஒழுங்காக வைத்திருத்தல் இன்றியமையாத தொன்றாகும். இன்றேல் அந்த ஸ்தாபனம் விரைவில்

கெட்ட பெயர் எடுக்கும் என்பதில் ஐயமில்லை. ஒழுங்கு பட்ட கணக்கு வையாமல் உண்மையை அதன் இயற்கைத் தூய்மை நிலையில் பாதுகாத்தல் இயலாத காரியம்.

எங்கள் காங்கிரஸ் வேலையின் மற்றொரு முக்கிய அம்சம் யாதெனில், தென்னாப்பிரிக்காவிலேயே பிறந்தவர்களான படித்த இந்தியர்களுக்குச் செய்த ஊழியமாகும். இப்படிப்பட்ட இந்தியர்களுக்கென்று கல்விச் சங்கம் ஒன்று காங்கிரஸின் ஆதரவில் காணப்பட்டது. இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் பெரும்பாலும் மேற்கூறிய படித்த இந்திய இளைஞர்களே ஆவார்கள். பெயருக்குச் சிறுதொகை சந்தாவாக ஏற்படுத்தப்பட்டது. அவர்களுடைய தேவைகளையும், குறைகளையும் வெளியிடுவதற்கும், அவர்களிடையே புதிய கருத்துக்களைப் பரப்புவதற்கும், இந்திய வியாபாரிகளுடன் அவர்களுக்குத் தொடர்பு ஏற்படுவதற்கும், சமூக ஊழியம் செய்ய அவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இச் சங்கம் பயன்பட்டது. அதை ஒருவகை விவாதச் சங்கம் என்று சொல்லலாம். ஒழுங்காக நடந்து வந்த சங்கக் கூட்டங்களில் பற்பல விஷயங்களையும்பற்றி இளைஞர்கள் பேசவோ, எழுதிப் படிக்கவோ செய்தார்கள். சங்கத்தின் ஆதரவில் ஒரு சிறு வாசகசாலையும் திறந்து வைக்கப்பட்டது.

காங்கிரஸ் வேலையின் மூன்றாவது அம்சம் பிரசாரமாகும். தென்னாப்பிரிக்காவிலும், இங்கிலாந்திலுமுள்ள ஆங்கிலேயருக்கும், இந்திய மகா ஜனங்களுக்கும் நேட்டாலின் உண்மை நிலையைத் தெரிவிக்க ஏற்பாடு செய்தோம். இந் நோக்கத்துடன் நான் இரண்டு துண்டுப் பிரசுரங்கள் எழுதினேன். முதலாவது பிரசுரம்

"தென்னாப்பிரிக்காவிலுள்ள ஒவ்வொரு பிரிட்டிஷாருக்கும் வேண்டுகோள்" என்னும் தலைப்பை யுடையது. அதில் நேட்டால் இந்தியர்களின் பொதுவான நிலைமை தகுந்த சாட்சியங்களின் ஆதாரவுடன் விவரிக்கப்பட்டிருந்தது. மற்றொரு பிரசுரத்தின் தலைப்பு 'இந்தியரின் வாக்குரிமை ஒரு வேண்டுகோள்' என்பது. இவ் விஷயத்தைப் பற்றிய சரித்திரம் புள்ளி விவரங்களுடன் அதில் சுருக்கமாகக் கூறப்பட்டிருந்தது. இந்தத் துண்டுப் பிரசுரங்களைத் தயாரிப்பதற்கு நான் சிரமப்பட்டு உழைத்தேன். ஆனால் உழைப்புக்கேற்ற பயன் கிட்டிற்று. அப் பிரசுரங்கள் விஸ்தாரமாகப் பரப்பப்பட்டன.

இந்த வேலைகளின் பயனாகத் தென்னாப்பிரிக்காவிலேயே இந்தியர்களுக்கு நண்பர்கள் பலர் ஏற்பட்டனர். இந்தியாவிலிருந்த எல்லாக் கட்சியினருடைய அநுதாபத்தையும் பெற்றோம். மற்றும், தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் மேலே நடத்திக்கொண்டு போவதற்கு ஒழுங்குபட்ட வேலை திட்டமும் ஏற்பட்டது.

இருபதாம் அத்தியாயம்

பாலசுந்தரம்

ஹிருதய பூர்வமான, பரிசுத்த, அத்தியந்த ஆசை எதுவும் பூர்த்தியாகாமற் போவதில்லை. என் சொந்த அநுபவத்தில் இவ்வுண்மையை அடிக்கடி நான் கண்டிருக்கிறேன். ஏழைகளுக்குத் தொண்டுபுரிதல் என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த அத்தியந்த விருப்பமாகும். இவ்விருப்பம் என்னை எப்போதும் ஏழைகளிடையே

கொண்டு சேர்த்தது; அவர்களுடன் கலந்து அவர்களில் ஒருவனுகும் ஆற்றலையும் எனக்குத் தந்தது.

நேட்டால் இந்தியக் காங்கிரஸில், தென்னுப்பிரிக் காவிலேயே பிறந்து, வளர்ந்த இந்தியர்களும், குமஸ்தா வகுப்பினரும் அங்கத்தவராகி யிருந்தார்களாயினும், பயிற்சி பெருத கூலி வேலைக்காரர்களான ஒப்பந்தத் தொழிலாளிகள் அதில் இன்னும் இடம் பெறவில்லை. காங்கிரஸ் அவர்களுடைய காங்கிரஸாக இன்னும் ஆக வில்லை. சந்தா கொடுத்து அங்கத்தினராதல் அவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதா யிருந்தது. அவர்களுக்கு தொண்டு செய்வதினுல் மட்டுமே காங்கிரஸ் அவர்க ளுடைய அபிமானத்தைப் பெறமுடியும். விரைவிலேயே இதற்கு ஒரு சந்தர்ப்பமும் நேரிட்டது. நானுவது காங்கிரஸாவது அத்தொண்டுக்கு உண்மையில் சித்தமாவ தற்கு முன்யாகவே அது நேர்ந்தது. நான் வக்கீல் தொழில் ஆரம்பித்து மூன்று நான்கு மாதங்கூட ஆகவில்லை. காங்கிரஸும் குழவிப் பருவத்தை இன்னும் தாண்டவில்லை. இச்சமயத்தில் ஒரு தமிழன் கிழிந்த கந்தை அணிந்து, கையில் முண்டாசுத் துணியுடன், முன் பற்கள் இரண்டு உடையப் பெற்றவனுய், வாயிலிருந்து இரத்தம் கொட்ட, உடல் நடுங்க, அழுதுகொண்டு என் முன் நின்முன். அவன் தன் எஜமானரால் நன்கு புடைக்கப்பட்டிருந்தான். என்னுடைய குமாஸ்தா தமிழராதலின் அவர் மூலம் அவனைப்பற்றிய எல்லா விவரங்களையும் தெரிந்து கொண் டேன். அவன் பெயர் பாலசுந்தரம். டர்பன் வாசியான ஒரு பிரபல ஐரோப்பியரிடம் அவன் ஒப்பந்தத்தொழிலாளி யாக வேலை செய்துகொண்டிருந்தான். எஜமானர் ஏதோ காரணத்தினுல் அவன்மீது கோபங்கொண்டு நையப்

புடைத்து அவனது முன்னம் பற்கள் இரண்டையும் உடைத்து விட்டார்.

அவனை உடனே வைத்தியரிடம் அனுப்பி வைத்தேன். அக்காலத்தில் அங்கு வெள்ளைக்கார வைத்தியர்கள் மட்டுமே கிடைத்தார்கள். பாலசுந்தரத்துக்கு ஏற்பட்டிருந்த காயங்களின் நிலைமைப்பற்றி வைத்தியரிடமிருந்து ஓர் அத்தாட்சிப் பத்திரம் வாங்கிக் கொண்டேன். பின்னர் நேரே அவனை மாஜிஸ்ட்ரேட்டிடம் அழைத்துச் சென்று அவனுடைய வாக்கு மூலத்தைச் சமர்ப்பித்தேன். அதைப் படித்ததும் மாஜிஸ்ட்ரேட் பெரிதும் ஆத்திரமடைந்து உடனே எஜமானருக்குக் கட்டளை அனுப்பினர்.

எஜமானருக்குத் தண்டனை வாங்கி வைக்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பமன்று. பாலசுந்தரத்தை அவரிடமிருந்து விடுவிக்க வேண்டுமென்பதே என் நோக்கம். ஒப்பந்தத் தொழிலாளி முறையைப்பற்றிய சட்டத்தைப் படித்தேன். சாதாரணமான வேலைக்காரன் ஒருவன், முன்னறிவியாமல் வேலையை விட்டுச் சென்றால், எஜமானன் அவன்மீது நஷ்ட ஈட்டுக்கு சிவில் வழக்குத் தொடரலாம். ஆனால் ஒப்பந்தத் தொழிலாளியின் விஷயம் வேறு. மேற்கண்டவாறு ஓர் ஒப்பந்தத் தொழிலாளி செய்தால், அவன்மீது குற்றச் சட்டப்படி வழக்குத் தொடர்ந்து குற்றம் நிரூபிக்கப்பட்டால் சிறைத் தண்டனை விதிக்கலாம். ஆகையினாலேயே ஸர் வில்லியம் அண்டர், ஒப்பந்தத் தொழிலாளிமுறை அடிமை முறையைப்போல மிகக் கேடானது என்று கூறினார். அடிமையைப் போலவே ஒப்பந்தத் தொழிலாளியும் எஜமானனுடைய உடைமையாவான்.

பாலசுந்தரத்தை விடுவிக்க இரண்டே வழிகள் இருந்தன. ஒன்று ஒப்பந்தத் தொழிலாளிகளின் பாது காவலரைக் கொண்டு அவனுடைய ஒப்பந்தத்தை ரத்து செய்வது அல்லது வேறே எஜமானருக்கு மாற்றுவது. இரண்டாவது வழி, பாலசுந்தரத்தின் எஜமானரைக் கொண்டே அவனை விடுவிக்கச் செய்வது. அவ்வெஜமான ரிடம் நான் சென்று பின் வருமாறு கூறினேன்:— "உங்கள்மீது வழக்குத் தொடுத்துத் தண்டனை வாங்கி வைக்க எனக்கு விருப்பமில்லை. நீங்கள் அவனை அதிகம் அடித்து விட்டீர்க ளென்பதை உணர்ந்திருப்பீர்களென நம்புகிறேன். ஒப்பந்தத்தை வேறொருவருக்கு மாற்றி விட்டால் நான் திருப்தி யடைவேன்." இதற்கு அவர் உடனே சம்மதித்தார். பின்னர் ஒப்பந்தத் தொழிலாளி களின் பாதுகாவலரையும் பார்த்தேன். அவரும் இதற் கிசைந்தாராயினும், புதிய எஜமானர் ஒருவரை நானே தேடிக் கண்டுபிடிக்க வேண்டு மென்று நிபந்தனை விதித்தார்.

எனவே, எஜமானர் ஒருவரைத் தேடப் புறப் பட்டேன். அவர் ஐரோப்பியரா யிருக்க வேண்டும். ஏனெனில் இந்தியர்களுக்கு ஒப்பந்தக்கூலி வைத்துக் கொள்ள உரிமை கிடையாது. அச்சமயத்தில் எனக்கு ஐரோப்பியர்கள் மிகச் சிலரே தெரிந்திருந்தனர். அவர் களில் ஒருவரைப் பார்த்தேன். அவர் பாலசுந்தரத்தை எடுத்துக்கொள்ள அன்புடன் இசைந்தார். அவருக்கு நன்றி கூறிவிட்டுத் திரும்பினேன். மாஜிஸ்ட்ரேட், பால சுந்தரத்தின் எஜமானர் குற்றவாளி யென்று தீர்ப்பளித்து, அவர் ஒப்பந்தத்தை வேறு ஒருவருக்கு மாற்றிவிட ஒப்புக் கொண் டிருப்பதாகப் பதிவு செய்தார்.

பாலசுந்தரத்தின் விஷயம் ஒப்பந்தத் தொழிலாளி ஒவ்வொருவருடைய காதுக்கும் எட்டிற்று. அவர்கள் என்னைத் தங்கள் நண்பனாகக் கருதலானார்கள். இதன் பொருட்டு நான் அளவற்ற ஆனந்த மடைந்தேன். அதுமுதல் ஒப்பந்தத் தொழிலாளிகள் இடையீடில்லாமல் எனது காரியாலயத்துக்கு வந்தவண்ண மிருந்தார்கள். அவர்களுடைய சுகதுக்கங்களை அறிந்து கொள்வதற்கு இவ்வாறு எனக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது.

பாலசுந்தரம் வழக்கின் எதிரொலி தொலை தூரத்தில் சென்னை வரையில் சென்று கேட்டது. அம்மாகாணத்தின் பற்பல பகுதிகளிலிருந்தும் ஒப்பந்தத் தொழிலாளிகளாக நேட்டாலுக்கு வந்தவர்கள் முன்னமே அங்கிருந்த தங்கள் சகோதரர்களிடமிருந்து இவ்வழக்கைப்பற்றித் தெரிந்து கொண்டார்கள்.

மேற்கூறிய சம்பவத்தைப் பொறுத்தவரை, அசாதாரணமான சங்கதி அதில் எதுவும் இல்லை. ஆனால், நேட்டாலில் தங்கள் கட்சி பேசுபவர், தங்களுக்குப் பரிந்து பகிரங்கமாக வேலை செய்பவர் ஒருவர் இருக்கிறார் என்பதே ஒப்பந்தத் தொழிலாளிகளுக்கு வியப்பையும், மகிழ்ச்சியையும் ஒருங்கே அளித்து நம்பிக்கை யூட்டிற்று.

கையில் முண்டாசுத் துணியுடன் பாலசுந்தரம் என் காரியாலயத்தில் நுழைந்தான் என்று மேலே குறிப்பிட்டேன். அதில், நமது தாழ்வை நன்கெடுத்துக் காட்டும் துயரகரமான விசேஷம் ஒன்றிருந்தது. நீதிமன்றத்தில் என்னுடைய தலைப்பாகையை எடுத்துவிடச் சொன்ன போது நடந்ததைப்பற்றி முன்னமேயே கூறியிருக்கிறேன். இந்தியர் ஒவ்வொருவரும், ஒப்பந்தத் தொழிலாளி

யாயினும், மற்றவராயினும், ஐரோப்பியர் ஒருவரைக் காணப் போகும்போது தலை அணியைக் கையி லெடுத்துக் கொள்ள வேண்டு மென்னும் வழக்கம் கட்டாயப்படுத்தி அமுலுக்குக் கொண்டுவரப்பட் டிருந்தது. தலையணி குல்லாவா யிருந்தாலும், தலைப்பாகையா யிருந்தாலும், அல்லது சாதாரண துண்டைச் சுற்றிக் கொண்டிருந்தாலும் எடுத்துவிட வேண்டியதுதான். இது செய்யாமல் இரு கரங்களையும் கூப்பி வணங்கினாலும் போதாது. அவ் வழக்கத்தை என் முன்பும் அனுஷ்டிக்க வேண்டுமென்று பாலசுந்தரம் நினைத்தான். என் அநுபவத்தில் இப்படி நிகழ்ந்தது இதுவே முதல்முறை. அவமானத்தினால் என் மனம் குன்றிப்போயிற்று. துணியைத் தலையில் சுற்றிக் கொள்ளும்படி அவனிடம் சொன்னேன். முதலில் சிறிது தயங்கிவிட்டுப் பின்னர் அப்படியே செய்தான். அப் போது அவன் முகத்தில் மகிழ்ச்சி ததும்பியதைக் கவனித்தேன்.

மனிதர்கள், தங்கள் சகோதரர்களைத் தாழ்மைப் படுத்துவதினால் தங்களுக்குச் சிறப்பு வருவதாக எண்ணு வது எப்படி என்னும் பெரு மர்மம் இன்னமும் எனக்குப் புலனாகவில்லை.

இருபத்தோராம் அத்தியாயம்

மூன்று பவுன் தலைவரி

பாலசுந்தரத்தின் வழக்கின் பயனாக எனக்கு இந்திய ஒப்பந்தத் தொழிலாளிகளுடன் பழக்கம் உண்டா யிற்று. அவர்களுடைய நிலைமையைப்பற்றி நன்கு ஆராய்ந்து அறிந்துகொள்ள என்னைத் தூண்டிய வேறொரு

காரணம் இப்போது ஏற்பட்டது. அவர்கள்மீது விசேஷ வரிப்பளுவைச் சுமத்தச் செய்யப்பட்ட முயற்சியே இக்காரணமாகும்.

அவ்வாண்டில், அதாவது 1894-ல், ஒப்பந்தத் தொழிலாளி வகுப்பைச் சேர்ந்த இந்தியர்களின் மீது வருஷ வரி 25 பவுன் விதிக்க நேட்டால் அரசாங்கம் முயற்சி செய்தது. இந்த யோசனையை அறிந்ததும் நான் ஆச்சரியத்தினால் திடுக்கிட்டுப் போனேன். காங்கிரஸ் கூட்டத்தின் முன்பு இவ்விஷயத்தைக் கொண்டு வந்தேன். அரசாங்கத்தின் முயற்சியை எதிர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உடனே தீர்மானிக்கப்பட்டது.

இவ்வெதிர்ப்பைப்பற்றி மேலே செல்வதற்கு முன்னால், மேற்படி வரியின் பூர்வோத்தரத்தைச் சுருக்கமாகக் கூறவேண்டும். 1860-ம் ஆண்டுக்குச் சமீப காலத்தில் நேட்டாலிலிருந்த ஐரோப்பியர் அங்கே கரும்பு சாகுபடி செய்ய ஏராளமான வசதியுண்டு என அறிந்தனர். ஆனால் இதற்குக் கூலியாட்கள் தேவையாயிருந்தார்கள். நேட்டாலின் பூர்வ குடிகளான ஸுலூ சாதியார் பயிர்த் தொழிலுக்குத் தகுதியற்றவர். ஆதலின் வெளி நாட்டிலிருந்து கூலியாட்கள் தருவியாமல் கரும்பு சாகுபடியும், சர்க்கரை உற்பத்தியும் செய்ய முடியாமலிருந்தது. எனவே நேட்டால் அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்கு எழுதி இந்தியாவில் ஆட்கள் திரட்ட அநுமதி பெற்றது. இவ்வாறு திரட்டப்படும் கூலிகள் நேட்டாலில் ஐந்து வருஷம் வேலை செய்வதாக ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும். இந்த ஐந்து வருஷம் ஆனதும் அங்கேயே குடியேறும் உரிமையும், சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ளும் உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்படுமெனச்

சொல்லப்பட்டது. இவ்வாக்குறுதிகள் மூலம் இந்தியத் தொழிலாளர் ஆசை காட்டிச் சேர்க்கப்பட்டனர். ஒப்பந்தக் காலம் முடிந்த பின்னரும் இந்தியத் தொழிலாளரைக் கொண்டு தங்கள் நிலங்களைப் பயிர் செய்து கொள்ளலாம் என்று வெள்ளைக்காரர்கள் நினைத்திருந்தார்கள்.

இந்தியர்கள், எதிர்பார்க்கப் பட்டதைவிட அதிகமாகவே தென்னாப்பிரிக்காவுக்கு உபயோகப்பட்டார்கள். அவர்கள் கறிகாய் அதிகமாகப் பயிர் செய்தார்கள்; பல இந்தியக் காய்கறி வகைகளைப் புதிதாகக் கொண்டுவந்து சேர்த்ததுடன், அங்கேயே பயிரானவற்றைக் குறைந்த செலவில் பயிரிடுதல் சாத்தியமாகும்படி செய்தார்கள். தென்னாப்பிரிக்காவுக்கு மா மரம் கொண்டுவந்தவர்கள் அவர்களே. அவர்கள் விவசாயத்துடன் நிற்கவில்லை; வியாபாரத் துறையிலும் ஈடுபட்டார்கள்; நிலம் வாங்கி வீடு கட்டினார்கள். இவ்வாறு, கூலிகளாக வந்து பலர், வீடு, நிலம் படைத்த குடித்தனக்காரர்களாயினர். அவர்களைப் பின் தொடர்ந்து இந்தியாவிலிருந்து வியாபாரிகள் வந்து குடியேறலானார்கள். இவ்வாறு முதன் முதலாக வந்த வியாபாரி சேத் அபயக்கர் ஆமோத் என்பார். அவருடைய வியாபாரம் விரைவில் செழித்தோங்கிற்று.

வெள்ளைக்கார வியாபாரிகள் இப்போது பீதியுறலானார்கள். முதலில் அவர்கள் இந்தியத் தொழிலாளரை விரும்பி வரவேற்றபோது அவர்கள் இவ்வளவு தொழில் திறமை யுடையார் என்று எதிர் பார்க்கவில்லை. இந்தியர்கள் சொந்தத்தில் நிலம் வாங்கி விவசாயம் செய்வதை யாவது சகிக்கலாம்; வியாபாரத்திலும் அவர்கள் போட்டியிட வருவதைப் பொறுக்க முடியாதென அவ்வெள்ளைக்காரர் நினைத்தனர்,

இந்தியர்களிடம் விரோதம் மூண்டதற்கு ஆதி காரணம் இதுவே. பின்னர் அது வளர்ப்பதற்குப் பல சாதனங்கள் ஏற்பட்டன. அவர்களுடைய வாழ்வு முறையுடன் மாறு பட்ட நமது வாழ்க்கை முறைகள், நமது எளிய வாழ்வு, சொற்ப லாபத்துடன் திருப்தியடையும் குணம், சுகாதார விதிகளைப்பற்றி நாம் கொண்டுள்ள அலட்சியப் பான்மை, சுற்றுப் புறங்களைத் தூய்மையாக வைத்திருப்பதில் நமது கவலையின்மை, வீடுகளைச் செப்பனிட்டு வைத்திருப்பதில் நாம் காட்டும் லோபித் தனம், கடைசியாக மத வேற்றுமை ஆகிய இவை அவ்விரோதம் கொழுந்து விட்டெரியும்படி செய்தன. இந்தியரின் வாக்குரிமையைப் பறிக்கும் மசோதாவிலும், ஒப்பந்தத் தொழிலாளி வகுப்பைச் சேர்ந்த இந்தியர்மீது வரி போடும் மசோதாவிலும் சட்டத்தின் மூலமாய் இவ் விரோதம் வெளியாயிற்று. சட்டத்திற்குப் புறம்பாக ஏற்கனவே பலவகைத் தொந்திரவுகள் ஆரம்பமாகி விட்டன.

இந்தியரின் போட்டியைத் தொலைப்பதற்குக் கூறப் பட்ட முதல் யோசனை, தொழிலாளிகளை ஒப்பந்தக் காலம் முடிவதற்குள் பலாத்காரமாக இந்தியாவுக்கே திருப்பி அனுப்பி விடுவதாகும். ஆனல் இதற்கு இந்திய அரசாங் கத்தார் இணங்க மாட்டார்களென்று கருதப்பட்டு அதன்மேல் வேறொரு யோசனை கூறப்பட்டது. அது வருமாறு:—

(1) ஒப்பந்தக் காலம் முடிந்ததும் ஒப்பந்தத் தொழிலாளி இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டும். இல்லா விடின்,

(2) புதிய ஒப்பந்தம் இரண்டு வருஷத்துக்கு எழுதித் தரவேண்டும். இரண்டு வருஷத்துக் கொருமுறை ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டும். இவ்வாறு புதுப்பிக்கும் போதெல்லாம் சம்பள உயர்வு கொடுக்கப்படும்.

(3) இந்தியாவுக்குப் போகவும் மறுத்து, ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவும் இணங்காவிடின் வருஷத்திற்கு 25 பவுன் வரி கட்ட வேண்டும்.

ஸர் ஹென்ரி பின்ஸ், மிஸ்டர் மேஸன் என்பவர்கள் அடங்கிய பிரதிநிதிக் கூட்டம் ஒன்று மேற்கண்ட யோசனைக்கு இந்திய அரசாங்கத்தின் சம்மதம் பெற்று வருவதற்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது. அச் சமயத்தில் லார்டு எல்ஜின் இராஜப்பிரதிநிதியா யிருந்தார். அவர் 25 பவுன் வருஷ வரிக்கு இணங்கவில்லை. ஆனால் மூன்று பவுன் தலைவரி விதிப்பதற்குச் சம்மதித்தார். இராஜப் பிரதிநிதி அப்படிச் சம்மதித்தது பெருந் தவறாகு மென்று நான் எண்ணினேன். இப்போதும் அதே அபிப் பிராயங் கொண்டுள்ளேன். அச்சம்மதி கொடுத்தபோது இந்தியாவின் நலத்தை அவர் அணுவளவும் உத்தேசிக்க வில்லை. நேட்டால் ஐரோப்பியர்களுக்கு இப்படி அநுகூலஞ்செய்து கொடுத்தல் அவருடைய கடமையே யன்று. மேற்கண்ட யோசனைபின்படி ஒவ்வோர் ஒப்பந்தத் தொழிலாளியும் மூன்று அல்லது நான்கு வருஷ காலத்தில், தனக்கும் தன் மனைவிக்கும், 16 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வோர் ஆண் குழந்தைக்கும், 13 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் மும்மூன்று பவுன் வரி செலுத்த வேண்டியவனானான். கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் ஆக நான்கு பேரடங்கிய ஒரு குடும்பத்துக்கு, குடும்பத் தலைவன் மாதம் 14 ஷில்லிங்குக்கு மேல் சம்பா

திக்க முடியாதிருக்கும்போது, வருஷத்தில் 12 பவுன் வரி விதித்து வசூலித்தல் மகா கொடியதென்று சொல்ல வேண்டுவதில்லை. உலகில் வேறெங்கும் இத்தகைய அநீதி நிகழ்ந்ததில்லை.

இவ்வரியை எதிர்த்து நாங்கள் தீவிரமாக கிளர்ச்சி செய்தோம். நேட்டால் இந்தியக் காங்கிரஸ் மௌனம் சாதித்திருந்தால், இராஜப்பிரதிநிதி 25 பவுன் வரிக்கும் சம்மதங் கொடுத்திருக்கலாம். 25 பவுன் வரி 3 பவுன் வரியானதற்குக் காங்கிரஸ் கிளர்ச்சியே காரணமா யிருந் திருக்க வேண்டும். ஆனால் இந்த உத்தேசம் தவறாகவு மிருக்கலாம். இந்திய அரசாங்கம் ஆதி முதலே 25 பவுன் வரியை அங்கீகரியாமல் அதை மூன்று பவுன் வரியாக்கி யிருத்தல் கூடும். எப்படி யிருந்தாலும் இந்திய அரசாங்கம் நம்பிக்கைத் துரோகக் குற்றத்துக்கு ஆளாகின்றது. இந்தியாவின் நலத்துக்குப் பொறுப்பாளியான இராஜப்பிரதிநிதி இந்த ஜீவகாருண்ய மற்ற கொடும் வரியை ஒரு நாளும் அங்கீகரித்திருக்கக் கூடாது.

வரியை 25 பவுனிலிருந்து 3 பவுனுக்குக் கொண்டு வந்ததை ஒரு பெரும் வெற்றியாகக் காங்கிரஸ் கருதவில்லை. ஒப்பந்தத் தொழிலாளிகளான இந்தியரின் நலத்தை முழுதும் பாதுகாக்க முடியவில்லையே யென்று வருந்தினோம். அவ்வரியை ஒழித்துவிட வேண்டுமென்றே காங்கிரஸ் எப்போதும் உறுதி கொண்டிருந்தது. ஆனால் இருபது ஆண்டுகள் சென்ற பின்னரே இவ்வுறுதி நிறைவேறிற்று. நேட்டால் இந்தியர்கள் மட்டுமன்றி தென்னாப்பிரிக்கா இந்தியர் அனைவரும் ஒரு முகமாய் முயன்றதின் பயனாகவே அவ்வரி ஒழிந்தது. காலஞ் சென்ற ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலேக்குக் கொடுத்த வாக்குறுதி

நிறைவேற்றப்படாததை ஆதாரமாகக் கொண்டு முடிவான போராட்டம் எழுந்தது. அப்போராட்டத்தில் ஒப்பந்தத் தொழிலாளி இந்தியர்கள் தங்கள் கடனைக் குறைவற ஆற்றினார்கள். அவர்களில் பதினாயிரம் பேருக்குமேல் சிறைவாச தண்டனை அநுபவித்தார்கள். சிலர் துப்பாக்கிப் பிரயோகத்தினால் உயிர் துறக்கவும் நேர்ந்தது.

இறுதியில் சத்தியமே ஜெய மடைந்தது. இந்தியர்கள் அநுபவித்த துன்பங்களில் அச் சத்தியம் பிரகாசித்தது. ஆனால் தளராத நம்பிக்கையும் அளவிடப்படாத பொறுமையும், இடைவிடாத முயற்சியும் இருந்திராவிடின் அப் போராட்டம் வெற்றி பெற்றிருக்க முடியாது. தென்னாப் பிரிக்கா இந்திய சமூகம் அப்போராட்டத்தை இடையில் கைவிட்டிருந்தால்—கிளர்ச்சியை நிறுத்தி வரிக்குட் படுவதைத் தவிர வேறு வழியில்லையென்று காங்கிரஸ் தீர் மானித்திருந்தால்—இன்றுவரை அக்கொடிய வரி விதிக்கப் பட்டேவந்திருக்கும். தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்கும் சரி, பாரத தேசத்துக்கும் சரி, மகத்தான ஓர் அவமானத் துக்கு அறிகுறியாய் அது விளங்கிக்கொண்டு வந்திருக்கும்.

இருபத்திரெண்டாம் அத்தியாயம்

பல சமய ஆராய்ச்சி

தென்னாப்பிரிக்கா இந்திய சமூகத்தின் ஊழியத்தில் நான் பூரணமாய் ஈடுபட்டிருந்தே னென்றால், அதற்குக் காரணம் ஆத்மானுபூதிப் பேற்றில் எனக்கிருந்த ஆவலேயாகும். ஆண்டவனை யறிதல் தொண்டின் மூலமாகவே இயலும் என்று நான் உணர்ந்தேன். ஆதலின் தொண்டு செய்யும் மதத்தையே என்னுடைய மதமாகக்

செய்துகொண்டேன். என்வரையில் தொண்டு என்பது பாரத நாட்டின் தொண்டேயாகும். ஏனெனில் அத் தொண்டு நான் தேடாமலே என்னை நாடி வந்தது. மேலும் அதற்கு நான் தகுதியும் பெற்றிருந்தேன். பிரயாணம் செய்வதில் விருப்பங் காரணமாகவும், கத்தியவாரில் அது காலை நடந்து வந்த சூழ்ச்சிகளினின்றும் தப்புவதற்காக வும், ஜீவனோபாயத்தை முன்னிட்டும் நான் தென்னுப் பிரிக்காவுக்கு வந்தேன். வந்த இடத்தில் மேற்சொன்ன வாறு இறைவனைத் தேடுவதில் நான் ஈடுபட்டிருப்பதாகக் கண்டேன். ஆத்மஞான முயற்சியை மேற் கொண் டிருப்பதாக உணர்ந்தேன்.

என் கிறிஸ்துவ நண்பர்கள் அசாத்தியமான அறிவுப் பசியை எனக்கு உண்டாக்கி விட்டார்கள். அது தணியாப் பசியாகிவிட்டது. நான் அதை அலட்சியம் செய்ய விரும்பி னுலும் அவர்கள் சும்மா விடுவதில்லை. டர்பனில் தென்னுப் பிரிக்கா மதப்பிரசார சபையின் தலைவரான மிஸ்டர் ஸ்பென்ஸர் வால்டன் என்னைக் கண்டுபிடித்தார். விரைவில் நான் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவன்போல் ஆனேன். பிரிடோரியாவில் நான் கிறிஸ்துவர்களுடன் பழகியிருந்ததே இப்போது இந்நட்பு ஏற்படுவதற்கு ஆதார மாயிருந்தது என்று சொல்ல வேண்டுவதில்லை. மிஸ்டர் வால்டன் ஒரு தனிப் போக்குள்ளவர். என்னை ஒருமுறை யேனும் கிறிஸ்துவ மதத்தைத் தழுவும்படி அவர் சொன்ன தாக நினைவில்லை. ஆனால் அவரது வாழ்க்கையைத் திறந்த புத்தகத்தைப்போல் அவர் எனக்குக் காட்டினார். அவ ருடைய எல்லாச் செயல்களையும் கவனிக்க இடங்கொடுத் தார். அவருடைய மனைவியார் சாதுவான பெண்மணி; கல்வி கேள்விகளிற் சிறந்தவர். இத்தம்பதிகளின் போக்கு

எனக்கு நிரம்பப் பிடித்திருந்தது. எங்களுக்குள் அடிப் படையான வேற்றுமைகள் உண்டென்பதை அறிந்திருந் தோம். எவ்வளவு வாதமிட்டாலும் அவ்வித்தியாசங்கள் மறையக் கூடியவையல்ல. ஆனால் சகிப்புத் தன்மை, சத்தியம் இவை உள்ள இடத்தில் இவ்வேற்றுமைகளாலும் நன்மை உண்டாகுமேயன்றி வேறில்லை. மேற்சொன்ன சதிபதிகளின் தாழ்மைக் குணமும், விடாமுயற்சியும், கடமைப்பற்றும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. நாங்கள் அடிக்கடி சந்தித்து வந்தோம்.

இந்த நட்பு, சமய ஆராய்ச்சியில் எனது சிரத்தை குன்றாதிருக்கச் செய்தது. சமயப்படிப்புக்குப் பிரிடோரி யாவில் கிடைத்த அவ்வளவு நேரம் இங்கே கிடைத்தல் இயலாத காரியம். ஆயினும் சாவகாசம் கிடைத்தபோ தெல்லாம் அதை வீணாக்காமல் இத்துறையில் பயன்படுத்தி வந்தேன். சமய சம்பந்தமான கடிதப்போக்கு வரவும் நடந்து வந்தது. இராஜ சந்திரர் எனக்கு வழிகாட்டி வந்தார். நர்மதா சங்கரரின் 'தர்மவிசாரம்' என்னும் நூலை ஒரு நண்பர் எனக்கனுப்பினார். அதன் முகவுரை என் ஆராய்ச்சிக்கு நிரம்ப உதவியா யிருந்தது. இக்கவி முதலில் நடத்திய துன்மார்க்க வாழ்வைக் குறித்து நான் கேள்விப்பட்டிருந்தேன். அவர் வாழ்வு முறையில் சமய ஆராய்ச்சியின் பயனாக ஏற்பட்ட புரட்சியைப்பற்றி அம் முகவுரையில் கூறியிருந்த பகுதி என் மனதைக் கவர்ந்து விட்டது. அப் புத்தகத்தை அடியிலிருந்து கடைசிவரை ஓர் எழுத்தும் விடாமல் கவனமாகப் படித்து முடித்தேன். மற்றும், 'இந்தியா நமக்குக் கற்பிக்கக்கூடிய தென்ன?" என்னும் மாக்ஸ் முல்லரின் புத்தகத்தையும், பிரம ஞான சபையார் வெளியிட்டிருந்த உபநிஷதங்களின் மொழி

பெயர்ப்பையும் சிரத்தையுடன் படித்தேன். இவற்றினுலெல்லாம் ஹிந்து மதத்தில் நான் வைத்திருந்த மதிப்பு அதிகமாயிற்று. அதன் சௌந்தரியங்கள் எனக்கு நன்கு புலப்படலாயின. ஆனுல் இதனுல் பிறமதங்களிடம் எனக்கு மதிப்புக் குறைந்து போய்விடவில்லை. வாஷிங்டன் இர்விங் இயற்றிய 'முகமதும் அவருடைய சீடர்களும்' என்னும் புத்தகமும், நபிகள் நாயகத்துக்குக் கார்லைல் கூறியுள்ள புகழுரைகளும் முகமது நபியிடம் எனது நன்மதிப்பை அதிகரிக்கச் செய்தன. 'ஜாரதுஷ்டிராரின் உபதேசங்கள்' என்னும் புத்தகம் ஒன்றையும் படித்தேன்.

இவ்வாறு பல மதங்களைப்பற்றியும் என் அறிவு விருத்தி யடைந்து வந்தது. இவ்வாராய்ச்சி ஆன்ம பரிசோதனை செய்து கொள்வதற்கு எனக்கு ஒரு தூண்டு கோலா யிருந்தது. ஆராய்ச்சியில் எதெது நல்லதென்று தோன்றுகிறதோ அதை யெல்லாம் அனுஷ்டானத்தில் கொண்டு வரும் வழக்கம் ஏற்பட்டு வளரலாயிற்று. இவ்வாறு, ஹிந்து மத நூல்களில் யோகாப்பியாசத்தைப் பற்றி நான் படித்தறிந்த அளவுக்கு, அம் முறைகளில் சிலவற்றைச் சாதனையில் கொண்டுவர முயன்றேன். ஆனுல் இம் முயற்சியில் வெகு தூரம் முன்னேற முடியவில்லை. இந்தியா சென்றதும் யோகி ஒருவரின் துணை கொண்டு அவ்வப்பியாசங்களைச் செய்யலா மெனத் தீர்மானித்தேன். அவ்வாசை இதுகாறும் நிறைவேறவில்லை.

டால்ஸ்டாயின் புத்தகங்களையும் கவனஞ் செலுத்திப் படிக்கத் தொடங்கினேன். 'சுவிசேஷங்களின் சாரம்' 'என்ன செய்வது?" முதலிய டால்ஸ்டாயின் புத்தகங்கள் என் மனதைப் பெரிதும் கவர்ந்தன. உலகில் ஜீவகோடிகள்

எல்லாவற்றினிடத்தும் அன்பு செலுத்துவதின் பெருமை நாளுக்கு நாள் எனக்கு நன்கு புலனாகி வந்தது.

இச்சமயத்திலே மற்றொரு கிறிஸ்துவக் குடும்பத்துடனும் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது. அவர்களுடைய யோசனையின்படி, பிரதி ஞாயிற்றுக்கிழமையும் வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த ஒரு கோயிலுக்குப் போய் வந்தேன். இத்தினங்களில் அவர்களுடைய வீட்டுக்கு விருந்துண்ண வரும்படியும் அழைத்திருந்தார்கள். கோயிலுக்குப் போனதில் அவ்வளவாக நான் திருப்தியடையவில்லை. அங்கு நடந்த உபந்நியாசங்கள் மனிதனுக்கு பக்தி சிரத்தையை யெழுப்புவனவல்ல. கோயிலுக்கு வந்தவர்களும் சமயப் பற்றுள்ளவர்களாகக் காணப்படவில்லை. அக்கூட்டம் பக்திமான்களுடைய கூட்டமன்று. உலகப் பற்றே அதிகமாயுள்ள மனிதர்கள், பொழுது போக்குக்காகவும் வழக்கத்தை யொட்டியும் கோயிலுக்கு வந்திருந்தார்களென்று தோன்றிற்று. இங்கே, சில சமயங்களில், என்னை அறியாமல் தூக்கம் வந்து விடுவதுண்டு. இதனால் வெட்க மடைந்தேனாயினும், பக்கத்தி லிருந்தவர்களின் நிலையும் இப்படித்தான் என்று அறிந்து ஆறுதலடைவேன். இம்மாதிரி எவ்வளவு நாள் சிரத்தை யில்லா காரியத்தைச் செய்துகொண்டிருப்பது? கடைசியில் கோயிலுக்குப் போவதை நிறுத்திவிட்டேன்.

மேற்படி குடும்பத்தாருடன் என் பழக்கம் திடீரென நின்று போயிற்று. 'இனிமேல் வரவேண்டாம்' என அவர்களே எச்சரிக்கை செய்துவிட்டார்கள் என்று சொல்லலாம். இது பின்வருமாறு நிகழ்ந்தது. அவ்வீட்டு எஜமாட்டி நிரம்ப நல்லவர்; சூதுவாதறியாதவர். ஆனால் குறுகிய மனப்பான்மை யுடையவர், எப்போதும் நாங்கள்

மத சம்பந்தமான விஷயங்களைப்பற்றி விவாதிப்போம். அர்னால்டின் 'ஆசிய தீபம்' என்னும் புத்தர் சரிதத்தை அப்போது நான் மறுபடியும் படித்துக்கொண்டிருந்தேன். ஒருமுறை நாங்கள் ஏசுநாதருடைய வாழ்வு முறையையும், புத்தரின் வாழ்க்கை நெறியையும் ஒப்பிடத் தொடங்கினோம். "புத்தருடைய அபார கருணையைப் பாருங்கள்! அவருடைய கருணை மனிதவர்க்கத்தை மட்டும் தழுவியதன்று; ஜீவராசிகள் அனைத்தையும் தழுவி நிற்பது. அவருடைய தோள்களில் ஆட்டுக்குட்டி ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருந்ததை எண்ணுங்காலத்தில் நம் ஹிருதய ஊற்றுக்களில் அன்பு வெள்ளம் பொங்குகிற தன்றோ? ஜீவராசிகள் அனைத்தினிடத்தும் செலுத்தப்படும் இத்தகைய அன்பு ஏசுநாதர் வாழ்க்கையில் புலனாகவில்லை" என்று நான் கூறினேன். இவ்வாறு நான் ஒப்பிட்டது அப்பெண் மணிக்கு மனவருத்தத்தை யளித்தது. அவருடைய மனோ நிலையை அறிந்ததும் உடனே அப்பேச்சை நிறுத்திக் கொண்டேன். பின்னர் உணவறைக்குச் சென்றோம். அப்பெண்மணிக்கு ஐந்து வயதுள்ள புதல்வன் ஒருவன் இருந்தான். குழந்தைகளின் மத்தியில் விளையாடிக் கொண்டிருப்பதைப்போல் எனக்கு மகிழ்ச்சி தருவது வேறொன்று மில்லை. இச்சிறுவனும் நானும் நீண்ட நாள் நண்பர்கள். அன்று உணவருந்துகையில் அவனுடைய தட்டிலிருந்த இறைச்சித்துண்டை நிரம்ப இகழ்ந்தும், என் தட்டிலிருந்த ஆப்பிள் பழத்தைச் சிலாகித்தும் நானே பேசினேன். விவரந் தெரியாத அப்பாலனும் என் பேச்சில் மயங்கி ஆப்பிள் பழத்தைப் புகழ ஆரம்பித்தான்.

ஆனால் அவன் தாயாரோ? அவர் திடுக்கிட்டுப் போனார். எனக்கு இது எச்சரிக்கையாயிற்று. உடனே

அப்பேச்சை மாற்றிவிட்டேன். அடுத்த ஞாயிற்றுக் கிழமை வழக்கம்போல் அவர்கள் வீட்டுக்குப் போனேன். ஆனால் என்ன ஆகுமோ என்ற நடுக்கத்துடனேயே போனேன். போகாமல் நின்று விடவேண்டுமென எனக்குத் தோன்றவில்லை. அது நன்றாயிராது என எண்ணினேன். ஆனால் அப்புண்யவதி என் சங்கடத்தை நிவர்த்தி செய்தார். அவர் கூறியதாவது:—

"காந்தி! என் பையனுக்கு உங்களுடைய சகவாசத்தினால் நன்மை விளையாதென்று கூறவேண்டியவளாயிருக்கிறேன். இதை நீங்கள் தவறாக எண்ணிக்கொள்ளுதல் கூடாது. எவ்வொரு நாளும் அவன் புலால் உண்ணத் தயங்குகிறான்; பழம் கேட்கிறான்; உங்களுடைய வாதத்தை நினைவூட்டுகிறான். இவ்வளவு மிஞ்சிப் போகும்படி விட்டிருக்கக் கூடாது. மாமிசம் உண்ணுவதை நிறுத்திவிட்டால் அவன் பலவீன மடைவது நிச்சயம். நோய் வாய்ப்படவுங் கூடும். அதை நான் எப்படிச் சகிப்பேன்? இனிமேல் உங்களுடைய வாதங்களை யெல்லாம் பெரியவர்களாகிய எங்களிடம் மட்டும் வைத்துக்கொள்ளுங்கள். குழந்தைகளுடன் வாதம் செய்தீர்களானால் அவர்கள் கட்டாயம் கெட்டுப் போவார்கள்."

நான் பின்வருமாறு பதிலளித்தேன்:—"அம்மணி, இதன் பொருட்டு நிரம்பவருந்துகிறேன். எனக்கு குழந்தைகள் உண்டு. எனவே தங்கள் குழந்தையின் நலங் குறித்துத் தங்களுக்குள்ள கவலையை நான் அறிந்து கொள்ளக்கூடும். இந்த அசந்தர்ப்பமான நிலைமைக்கு நாம் சுலபமாய்ப் பரிகாரந் தேடிவிடலாம். என்னுடைய பேச்சினால் மாறுவதைவிட எனது நடத்தையைப் பார்ப்

பதினால் குழந்தையின் மனம் அதிகமாய் மாறும். நான் என்ன சாப்பிடுகிறேன், எதை விலக்குகிறேன் என்பவை குழந்தையின் மனதில் நன்கு பதியும். எனவே, நான் தங்கள் வீட்டுக்கு வாராமல் நின்று விடுவதே உத்தமம். இதனால் நமது நட்புக்கு எவ்வகையிலும் ஊறு நேரிட வேண்டியதில்லை."

அந்தப் பெண்மணி பெரியதொரு பாரம் நீங்கியவர் போல் "ரொம்ப வந்தனம்" என்றார்.

இருபத்து மூன்றும் அத்தியாயம்

குடித்தனம் செய்தல்

குடித்தனம் ஏற்படுத்துதல் எனக்குப் புதிய அநுபவம் அன்று. ஆனால் பம்பாயிலும், லண்டனிலும் நான் நடத்திய குடித்தனங்களுக்கும், நேட்டால் குடித்தனத்துக்கும் ரொம்ப வேற்றுமை யுண்டு. இங்கே செலவான தொகையில் ஒரு பகுதி கௌரவத்தை உத்தேசித்து மட்டுமே செலவழிந்தது. பாரிஸ்டர் பதவிக்கும், இந்தியர்களின் பிரதிநிதி என்ற அந்தஸ்துக்கும் ஏற்றபடி வாழ்க்கை நடத்துதல் அவசிய மென்று கருதினேன். எனவே, நல்ல பிரதானமான இடமொன்றில் அழகிய சிறு வீடொன்றை வாடகைக்குப் பிடித்தேன். அதற்குத் தகுந்த மேஜை, நாற்காலி முதலிய சாமான்கள் வாங்கிப் போட்டேன். எளிய உணவே அருந்தினே னென்றாலும், அடிக்கடி ஆங்கில நண்பர்களையும் இந்திய சகாக்களையும் விருந்துண்ண அழைத்தேனாதலால் உணவுச் செலவு அதிகமேயாயிற்று.

வீடு என்றிருந்தால் நல்ல வேலைக்காரன் ஒருவன் நிரம்ப அவசியம். ஆனால் எவனொருவனையும் வேலைக்காரனாகப் பாவித்து வேலை வாங்கி நான் அறியேன்.

என்னுடன் ஒரு தோழன் இருந்தான். குடித்தன நிர்வாகத்தில் அவன் எனக்கு உதவிசெய்து வந்தான். சமையற்காரன் ஒருவன் குடும்பத்தைச் சேர்ந்தவன்போல் இருந்து வந்தான். என்னுடைய காரியாலயத்தின் குமாஸ்தாக்களும் என்னுடனே உண வருந்தி என்னுடனேயே வசித்து வந்தார்கள்.

இவ்வாறு குடித்தனம் நடத்துவதில் நான் வெற்றி பெற்றேனென்றே சொல்லலாம். எனினும் வாழ்க்கையின் துயரகரமான அநுபவங்கள் சில அதில் எனக்கேற்படாமற் போகவில்லை.

மேலே நான் குறிப்பிட்ட என் தோழன் மிகவும் கெட்டிக்காரன். அவன் எனக்கு உண்மையாக நடந்துகொள்வானென எண்ணியிருந்தேன். ஆனால் இதில் நான் ஏமாற்றப்பட்டேன். என்னுடனிருந்த குமாஸ்தா ஒருவரிடம் இவன் பொறாமை கொண்டு அவரிடம் எனக்கு அவநம்பிக்கை ஏற்படும்படியாகச் சூழ்ச்சிகள் செய்துவிட்டான். இந்த குமாஸ்தா நண்பர், நிரம்ப ரோஸக்காரர். நான் அவரைச் சந்தேகிக்கிறேன் என்று அவருக்குத் தெரிந்ததும் உடனே வீட்டைவிட்டுப் போனதுடன் வேலையையும் ராஜிநாமா செய்துவிட்டார். எனக்கு இது துன்பமளித்தது. ஒருக்கால் அவருக்கு அநீதி செய்துவிட்டோமோ வென எண்ணினேன். இதன் பொருட்டு என் மனச்சான்று எப்போதும் என்னை வருந்திக் கொண்டே யிருந்தது.

இதற்கிடையில், சமையற்காரன் சில தினங்கள் விடுமுறை எடுத்துக் கொண்டதனுலோ அல்லது வேறு காரணத்தினுலோ வீட்டில் இல்லை. அவன் இல்லாத நாட்களுக்கு வேருெரு சமையற்காரனை அமர்த்தவேண்டியிருந்தது. இப் புதிய சமையற்காரன் பெரிய 'காலாடி' என்று பின்னுல் தெரிந்துகொண்டேன். ஆனுல் எனக்கு அவன் ஆண்டவன் அனுப்பிய தூதனுனன். அவன் வந்த இரண்டு மூன்று தினங்களுக்குள், என் வீட்டில் எனக்குத் தெரியாமல் சில ஒழுங்கீனமான செயல்கள் நடைபெறுவதாக அறிந்துகொண்டான். இதைப்பற்றி எனக்கு எச்சரிக்கை செய்யவேண்டுமென்று தீர்மானித்தான். பிறரை எளிதில் நம்பக்கூடியவனென்றும் ஆனுல் நேர்மை யுடையவனென்றும் அப்போது நான் பெயர் வாங்கியிருந்தேன். எனவே என் வீட்டில் ஒழுங்கீனங்கள் நடைபெறுவதாகக் கண்டதும் அவன் திடுக்கிட்டுப் போய்விட்டான். தினந்தோறும் மத்தியான வேளைச் சிற்றுண்டி அருந்த 1 மணிக்கு நான் வீடு திரும்புவது வழக்கம். ஒரு நாள் 12 மணிக்கு அப்புதிய சமையற்காரன் இரைக்க இரைக்க காரியாலயத்துக்கு ஓடி வந்து "தயவு செய்து உடனே வீட்டுக்கு வாருங்கள்; ஓர் அதிசயம் இருக்கிறது" என்ருன்.

"சங்கதி என்ன சொல்; இந்த நேரத்தில் நான் எப்படிக் காரியாலயத்தைவிட்டு வாமுடியும்?" என்று கேட்டேன்.

"இப்போது வராவிடின் பின்னுல் வருந்துவீர்கள்; அவ்வளவுதான் சொல்ல முடியும்" என்ருன் சமையற்காரன்.

அவனுடைய பிடிவாதத்திலிருந்து ஏதோ விஷயம் இருக்கவேண்டு மெனத் தீர்மானித்து உடனே அவன் பின்னால் புறப்பட்டேன். ஒரு குமாஸ்தாவும் எங்களுடன் வந்தார். சமையற்காரன் நேரே எங்களை மேல்மாடிக்கு அழைத்துச் சென்று என்னுடைய தோழனுடைய அறையைச் சுட்டிக் காட்டி, "கதவைத்திறந்து விஷய மின்னதென நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்றான்.

இப்பொழுது எனக்கு எல்லாம் விளங்கிவிட்டன. கதவை இடித்தேன். பதில் இல்லை. பின்னர் சுவர்கள் அதிரும்படியாக ஓங்கி ஓங்கி இடித்தேன். கடைசியில் கதவு திறக்கப்பட்டது. உள்ளே விபசாரி ஒருத்தி இருந்தாள். உடனே வீட்டைவிட்டு வெளியேறும்படியும், இனி என்றும் இங்கு அடி வைக்கக்கூடாதென்றும் எச்சரிக்கை செய்து அனுப்பினேன்.

பின்னர், அத்தோழனிடம் நான் சொன்னதாவது :— "இந்தக் கணத்திலிருந்து உனக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நான் பெரிதும் ஏமாந்து போனேன். ஊர் சிரிக்க இடம் வைத்துக் கொண்டேன். உன்னை நம்பியிருந்தேனே ! அதற்கு நீ செய்த கைம்மாறு இதுதானா ?"

இப்போதேனும் நல்லறிவு பெற்றுப் பதில் சொல்வதற்குப் பதிலாக, அவன் என்னைக் காட்டிக் கொடுத்து விடுவதாகப் பயமுறுத்தினான்.

"ஒளிப்பதற்கு என்னிடம் ஒன்றுமில்லை. நான் செய்ததெதையும் நீ தாராளமாக வெளிப்படுத்தலாம். ஆனால் இந்த நிமிஷமே நீ இவ்விடத்தை விட்டுப் போய்விட வேண்டும்" என்று நான் கூறினேன். இதனால் அவனுடைய கோபம் அதிகமாயிற்று. வேறு வழி யில்லாமற்

போகவே நான் கீழே நின்றுகொண்டிருந்த குமாஸ்தா விடம் " தயவு செய்து உடனே போலீஸ் சூபரின்டெண்டி னிடம் சென்று, என் வந்தனங்களைத் தெரிவித்துவிட்டு, என்னுடன் வசித்துக் கொண்டிருந்த ஆசாமி ஒருவன் தவருக நடந்தபடியால் அவனை வீட்டை விட்டுப் போகச் சொன்னதாகவும், அவன் போக மறுப்பதால் தயவு செய்து போலீஸ் உதவி வேண்டுமென்று கேட்பதாகவும் தெரிவியுங்கள் " என்றேன்.

இதைக் கேட்டதும் அவனுக்குப் புத்தி வந்தது. அவனுடைய குற்றம் அவனை அதைரியப்படுத்திற்று. என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தான் உடனே வீட்டை விட்டுப் போவதாகவும், போலீஸாருக்குத் தெரிவிக்க வேண்டாமென்றும் சொன்னுன். அப்படியே வீட்டை விட்டுப் போனுன்.

இந்தச் சம்பவம் என் வாழ்க்கையில் ஒரு நல்ல தருணத்தில் எனக்கு எச்சரிக்கையாக ஏற்பட்டது. இந்தக் கெட்ட மனிதன் என்னை அவ்வளவு தூரம் ஏமாற்றிவிட் டான் என்பதை அப்போதே தெரிந்து கொண்டேன். அவ னுக்கு நான் இடங் கொடுத்தது ஒரு நல்ல நோக்கத்தை முன்னிட்டுக் கெட்ட சாதனத்தைக் கைக்கொண்டதாகும். அத்தோழன் தீய நடக்கையுள்ளவன் என்பது எனக்குத் தெரிந்தே யிருந்தது. ஆனுல் அவன் என்னிடம் உண்மையாய் நடந்து கொள்வானென்றும், அவனைச் சீர்திருத்திவிடலா மென்றும் நம்பினேன். அவனைச் சீர்திருத்தும் முயற்சியில் ஏறக்குறைய என் அழிவையே தேடிக்கொண்டேன். நண்பர்கள் அன்புடன் கூறிய எச்சரிக்கைகளையும் அசட்டை செய்தேன். அவனிடம் நான் வைத்திருந்த பிரியம் என்னைக் குருடனுக்கி யிருந்தது.

புதிய சமையற்காரன் வந்திராவிட்டால் எனக்கு உண்மை தெரிந்திராமலே போயிருக்கலாம். இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் நான் பற்றறுத்த வாழ்க்கை நடத்த ஆரம்பித்தேன். இச் சம்பவம் நேர்ந்திராவிட்டால் அவன் விஷயத்தில் நான் நிரம்பக் காலத்தை வீணாக்கி வந்திருப்பேன். என்னை இருளிலேயே வைத்திருந்து தப்பு வழியில் நடத்தும் சக்தி அவனிடம் இருந்தது.

ஆனால் முன்னர் பல முறைகளில் போலவே இப்போதும் ஆண்டவன் எனக்குத் துணை புரிந்தார். என்னுடைய நோக்கங்கள் தூயனவா யிருந்தபடியால் நான் தவறு செய்த போதிலும் அவர் என்னைக் காத்தருள் செய்தார். வாழ்க்கையின் ஆரம்பத்தில் நேர்ந்த இந்த அநுபவமானது வருங் காலத்துக்கு எனக்கு ஓர் எச்சரிக்கை யாயிற்று.

புதிய சமையற்காரனை ஆண்டவனால் அனுப்பப்பட்ட ஒரு தூதனாகவே கருதினேன். அவனுக்குச் சமையல் வேலை தெரியவில்லை. அவ்வேலையில் அவனை நீண்ட காலம் வைத்திருந்திருக்கவும் மாட்டேன். ஆனால் அவனை யன்றி வேறு யாரும் என் கண்களைத் திறந்திருக்க முடியாது. அந்த விபசாரி என் வீட்டுக்கு வந்தது இது முதல் தடவை யன்றென எனக்குப் பின்னால் தெரிந்தது. இதற்கு முன்பும் பல முறைகளில் அவள் வந்திருந்தாளாம். ஆனால் யாருக்கும் என்னிடம் தெரிவிக்கத் தைரியமில்லை. ஏனெனில் நான் அத்தோழனை முழுதும் நம்பினேன் என்பது எல்லாருக்கும் தெரியும். எனக்கு இந்த ஊழியம் செய்வதற்கென்றே அந்த சமையற்காரன் வந்தான் போலும்! ஏனெனில் அந்த நிமிஷமே அவன் வேலையை விட்டுப் போக அநுமதி கேட்டான்.

“நான் உங்கள் வீட்டில் இருக்க முடியாது. உங்களை எளிதில் பிறர் ஏமாற்றி விடுகிறார்கள். இது எனக்குத் தகுந்த இடமன்று” என்று அவன் கூறினான். அவன் போவதற்கு அநுமதி கொடுத்தேன். நிற்க,

முன்னர் என்னை விட்டுப் போன குமாஸ்தாவிடம் எனக்கு அவநம்பிக்கை உண்டுபண்ணியவன் மேற் சொன்ன தோழனே என்று இப்போது தெரிந்தது. அந்த குமாஸ்தாவுக்கு நான் செய்த அநீதிக்குப் பரிகாரஞ் செய்யவேண்டு மெனப் பெரிதும் முயற்சி செய்தேன். ஆனால் அவருக்குப் பூரண திருப்தி அளிக்க முடியவில்லை யென்ற வருத்தம் இன்றளவும் எனக்கு உண்டு. ஒரு முறை ஏற்பட்டுவிட்ட பிளவு, பின்னர் எவ்வளவுதான் ஒட்டுப் போட்டாலும் முன்போல் ஆகிவிடுமா?

இருபத்து நான்காம் அத்தியாயம்

தாய் நாடு நோக்கல்

தென்னாப்பிரிக்காவுக்கு நான் வந்து இப்போது மூன்று வருஷங்களாய்விட்டன. அங்குள்ள ஜனங்களை நான் தெரிந்து கொண்டிருந்தேன். அவர்களும் என்னை அறிந்து கொண்டு விட்டார்கள். 1896-ல் ஆறு மாத காலம் தாய் நாட்டுக்குச் சென்றுவர அநுமதி கேட்டேன். தென்னாப்பிரிக்காவில் நான் நீண்ட காலம் வசிக்க வேண்டி யிருக்குமென அப்போது நிச்சயமாகி விட்டது. பாரிஸ்டர் தொழில் நன்றாக நடந்து வந்தது. ஜனங்களுக்கு அங்கே நான் தேவையா யிருந்தேன் என்பது தெளிவாகத் தெரிந்தது. எனவே வீட்டுக்குச் சென்று மனைவியையும், குழந்தைகளையும் அழைத்துக்

கொண்டு திரும்பி வந்து தென்னுப்பிரிக்காவிலேயே குடியேறி விடுவதென்று தீர்மானித்தேன். மேலும் தாய் நாட்டுக்குப் போனுல் அங்கே கொஞ்சம் வேலை செய்யலாமென்றும் எண்ணினேன். தென்னுப்பிரிக்கா இந்தியர்களின் நிலையைப் பொது ஜனக்களுக்கு அறிவித்து அவர்களுக்கு இவ்விஷயத்தில் அதிக சிரத்தை உண்டு பண்ணலாமெனக் கருதினேன். ஆருப் புண்ணுயிருந்த மூன்று பவுன் தலைவரி ஒழியும்வரை அமைதி ஏற்பட முடியாதன்ரே?

ஆனுல் நான் இல்லாதபோது காங்கிரஸ் வேலையையும் கல்விச் சங்கத்தையும் யார் கவனிப்பது? ஆதம்ஜி மியாகான், பார்ஸீ ரஸ்டம்ஜி - இவ்விருவரும் அதற்கேற்ற வர்கள் என்று எனக்குத் தோன்றிற்று. வியாபார வகுப் பினரில் பொதுவேலை செய்ய முன் வரக்கூடியவர்கள் இப்போது பலர் இருந்தார்கள். ஆனுல் அவர்களுக்குள், இந்திய சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றிருந்ததோடு, காரியதரிசிகளாயிருந்து ஒழுங்காக வேலை செய்து வரக் கூடியவர் இவ்விருவருமே. காரியதரிசிக்குக் காரியம் நடத்தவேண்டிய அளவுக்கேனும் ஆங்கிலம் தெரிந்திருத்தல் அவசியம். எனவே ஆதம்ஜி மியாகானின் பெயரை நான் காங்கிரஸுக்குச் சிபார்சு செய்தேன். காங்கிரஸும் அதை அங்கீகரித்து அவரைக் காரியதரிசியாக நியமித்தது. இவ்வாறு அவரைத் தேர்ந்தெடுத்தது மிகவும் சரியான காரியமெனப் பின்னுல் அநுபவத்தில் தெரிய வந்தது. ஆதம்ஜி எல்லோருக்கும் திருப்தி யளித்தார் அவரிடம் விடா முயற்சி, தாராள சிந்தை, இனிய தன்மை, மரி யாதை முதலிய நற்குணங்கள் பிரகாசித்தன. காரியதரிசி வேலை பார்ப்பதற்கு பாரிஸ்டர் பட்டம் பெற்றவனே,

உயர்தர ஆங்கிலக் கல்வி பயின்றவனேதான் வேண்டு மென்பது அவசியமில்லையென அவர் நிரூபித்துவிட்டார்.

1896-ம் ஆண்டின் மத்தியில் கல்கத்தாவுக்குப் புறப் பட்ட 'பொங்கோலா' என்னும் கப்பலில் நான் தாய் நாட்டுக்குப் பிரயாணமானேன்.

கப்பலில் பிரயாணிகள் மிகச் சிலரே யிருந்தனர். அவர்களில் இருவர் ஆங்கில உத்தியோகஸ்தர். அவர்க ளுடன் நான் நெருங்கிப் பழக நேர்ந்தது. அவர்களில் ஒருவருடன் தினந்தோறும் ஒரு மணி நேரம் நான் சொக் கட்டாடினேன். கப்பலின் டாக்டர் 'தமிழ் ஸ்வ போதினி' புத்தகம் ஒன்று எனக்குக் கொடுத்தார். அதை நான் படிக்கத் தொடங்கினேன். நேட்டாலில் என்னுடைய அனுபவத்திலிருந்து, முஸ்லிம்களுடன் நெருங் கிப் பழகுவதற்கு உருதுவும், சென்னை இந்தியர்களுடன் பழகுவதற்குத் தமிழும் கற்றுக் கொள்ள வேண்டுமெனத் தெரிந்து கொண்டிருந்தேன்.

மேற் குறிப்பிட்ட ஆங்கில நண்பரும் நானும் சேர்ந்து உருது படித்தோம். அவர் கேட்டுக்கொண்டதன்மீது மேற்றளத்திலிருந்த பிரயாணிகளிலிருந்து நல்ல உருது முனிஷி ஒருவரைக் கண்டு பிடித்தேன். எனவே எங்கள் படிப்பு நன்றாக அபிவிருத்தி யடைந்து வந்தது. என்னைவிட அந்த உத்தியோகஸ்தருக்கு ஞாபக சக்தி அதிகம். ஒரு முறை ஒரு வார்த்தையைப் படித்துவிட்டால் பின்னர் அவர் அதை மறக்கவேமாட்டார். ஆனால் எனக்கு உருது எழுத்துக்களை நினைவில் வைத்திருப்பது நிரம்பக் கஷ்டமா யிருந்தது. அதிக முயற்சியுடன் நான் படித்தேனாயினும், அந்த உத்தியோகஸ்தருடன் போட்டியிட முடியவில்லை.

தமிழில் நல்ல அபிவிருத்தி யடைந்து வந்தேன். கற்றுக்கொடுக்க எவரும் இல்லையானாலும், 'தமிழ் ஸ்வ போதினி' நன்றாக எழுதப்பட்ட புத்தகமானபடியால், பிறருடைய உதவி அதிகமாகத் தேவையில்லாம லிருந்தது.

இந்தியாவை யடைந்த பிறகும் இப்பாஷைகளைத் தொடர்ந்து படிக்கலாமென எண்ணியிருந்தேன். ஆனால் அது இயலாததாயிற்று. 1893-ம் ஆண்டுக்குப் பின்னர் நான் படித்ததெல்லாம் பெரும்பாலும் சிறைச்சாலைகளி லேயே யாகும். சிறைச்சாலைப் படிப்பினால் தமிழிலும், உருதுவிலும் ஓரளவு நான் அபிவிருத்தி யடைந்தேன். தென்னாப்பிரிக்கா சிறைகளில் தமிழும், எரவாடா சிறையில் உருதுவும் படித்தேன். ஆனால் தமிழ் பேசுவ தற்கு நான் எப்போதும் கற்றுக் கொள்ளவில்லை. சிறி தளவு படிக்கத் தெரிந்திருப்பதும் பழக்கமின்மையால் துருப்பிடித்துப் போகிறது.

தமிழாவது, தெலுங்காவது தெரியாமலிருப்பது எவ்வ ளவு பெரிய இடையூறு என்பதை இன்னமும் நான் உணர்ந்து வருகிறேன். தென்னாப்பிரிக்காவில் திராவிட மக்கள் என்மீது சொரிந்த அன்பு இன்றளவும் போற்று தற்குரிய ஒரு ஞாபகமாக இருந்து வருகிறது. தமிழ் நண்பர் ஒருவரையோ, தெலுங்கு நண்பர் ஒருவரையோ பார்க்கும்போதெல்லாம், தென்னாப்பிரிக்காவில் தமிழர்க ளிலும், தெலுங்கர்களிலும், பலர் காட்டிய உறுதியும், விடாமுயற்சியும், சுயநலக் கலப்பற்ற அருந்தியாகமும் என் நினைவுக்கு வராமல் இருப்பதில்லை. அவர்களில் ஆடவர்களும் சரி, பெண்களும் சரி, பெரும்பாலும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். எழுத்து வாசனை யில்லாத ஜனங்களுக்காகவே தென்னாப்பிரிக்காப் போராட்டம்

எழுந்தது. எழுதப் படிக்க அறியாத வீரர்களாலேயே அப் போராட்டம் நடத்தப்பட்டது. ஏழைகளுக்காக நடத்திய அப் போராட்டத்தில் ஏழைகள் தங்கள் கடனைக் குறைவற ஆற்றினார்கள். அவர்களுடைய தாய் மொழியை நான் அறியாதிருந்தது, கபடமற்ற அந்த சாது ஜனங்களின் உள்ளங்களைக் கவர்வதற்கு எனக்கு ஓர் இடையூறு யிருக்கவில்லை. அவர்கள் கொச்சை ஹிந்துஸ்தானி அல்லது ஆங்கிலம் தட்டுத் தடுமாறிப் பேசினார்கள். எனவே எங்கள் வேலை நடப்பதற்குக் கஷ்டம் எதுவும் தோன்றவில்லை.

ஆனால் அவர்கள் என்னிடம் காட்டிய பேரன்புக்கு நன்றியறிதலாகத் தமிழும், தெலுங்கும் நான் கற்றுக் கொள்ள விரும்பினேன். முன்னமே சொன்னதுபோல் தமிழில் சிறிது அபிவிருத்தி யடைந்தேன். ஆனால் தெலுங்கில் அட்சராப்பியாசத்துக்கு அப்பால் போகவில்லை இனி மேல் மேற்படி மொழிகளை நான் கற்றல் அசாத்தியம். ஆகவே, திராவிட மக்களேனும். ஹிந்துஸ்தானி கற்றுக் கொள்வார்களென நம்புகிறேன். தென்னாப்பிரிக்காவிலுள்ள திராவிடர்களில், ஆங்கிலந் தெரியாதவர்கள் தட்டுத் தடுமாறியேனும் ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி பேசுகிறார்கள். பேசுபவர்கள் மட்டுமே ஹிந்தி கற்றுக் கொள்வதில்லை. ஆங்கிலந் தெரிந்திருப்பது நமது சொந்த பாஷைகளைக் கற்பதற்கு எவ்வாறு தடையாகிறதோ நான் அறியேன்.

எடுத்த விஷயத்தைவிட்டு நெடுந்தூரம் போய்விட்டேன். என் பிரயாண விவரத்தைக் கூறி முடித்தல் வேண்டும். 'பொங்கோலா' கப்பலின் தலைவரும், நானும் நண்பர்களானோம். அவர் மிகவும் நல்லவர். 'பிளிமௌத்

சகோதரர்' கூட்டத்தைச் சேர்ந்தவர். நாங்கள் கப்ப லோட்டுதல் சம்பந்தமான விஷயங்களைக் காட்டிலும் பாரமார்த்திக விஷயங்களைப் பற்றியே அதிகமாகச் சம் பாஷித்தோம். ஒழுக்க நெறிக்கும், மதத்துக்கும் அவர் வேற்றுமை கற்பித்தார். பைபிளின் உபதேசம் அவருக்குக் குழந்தை விளையாட்டாக இருந்தது. அவ்வுபதேசத்தின் அழகெல்லாம் அது மிகச் சுலபமானதா யிருத்தலேயாகும் என்று அவர் கூறினர். "ஆடவர், பெண்டிர், குழந்தைகள் எல்லோரும் ஏசுநாதரிடத்திலும், அவருடைய தியாகத் திலும் மட்டும் நம்பிக்கை வைக்கட்டும்; அவர்களுடைய பாவங்கள் நிச்சயமாக மன்னிக்கப்படும்" என்று அவர் சொல்வார். பிரிடோரியாவில் நான் சந்தித்த பிளிமௌத் சகோதரரை இவருடைய பேச்சு எனக்கு நினைவூட்டிற்று. ஒழுக்கநெறி சம்பந்தமான கட்டுப்பாடுகள் விதிக்கும் மதம் எதுவும் நல்லதன்று என்பது அவர் அபிப்பிராயம். இவ் வளவு விவாதமும் என்னுடைய சைவ உணவு விரதத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்தது. 'நீர் ஏன் மாமிசம் தின்னக்கூடாது? மாட்டிறைச்சி தின்றால்தான் என்ன தவறு? கடவுள் தாவர வர்க்கத்தை மனித குலத்தின் நன்மைக்காகவே படைத்திருப்பதுபோல் கீழ் வர்க்கங் களைச் சேர்ந்த பிராணிகளையும் படைத்திருக்கிறா ரல்லவா?' என்று அவர் கேட்டார். இந்தக் கேள்விகள் மத சம்பந்த மான விவாதத்திலேயே கொண்டுபோய்விடும்.

நாங்கள் ஒருவருடைய கருத்தை ஒருவர் மாற்ற முடியவில்லை. மதமும், ஒழுக்கநெறியும் ஒன்றே என்னும் என் அபிப்பிராயம் எனக்கு உறுதிப்பட்டது இதற்கு மாறான கொள்கையில் கப்பற்றலைவரும் உறுதி கொண் டிருந்தார்.

புறப்பட்ட 24-நாள் இன்பகரமான அப்பிரயாணம் முடிவடைந்தது. ஹூக்ளி நதியின் சௌந்தர்யத்தைக் கண்டு ஆனந்தித்துக்கொண்டே கல்கத்தாவில் இறங்கினேன். அன்றைய தினமே ரயிலில் பம்பாய்க்குப் பிரயாணமானேன்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

தாய் நாட்டில்

பம்பாய்க்குச் செல்லும் வழியில் ரயில் அலகாபாத்தில் 45 நிமிஷம் நின்றது. இந்த நேரத்துக்குள் அந் நகரைச் சுற்றி பார்த்துவிட்டு வந்துவிடலாமென எண்ணிப் புறப்பட்டேன். மருந்துக் கடையில் ஒரு மருந்து வாங்கவும் வேண்டியிருந்தது மருந்துக் கடைக்காரர் உறங்கி விழுந்து கொண்டிருந்தார். கேட்ட மருந்தைக் கொடுப்பதற்கு அநியாயத் தாமதம் செய்தார். கடைசியில் மருந்தை வாங்கிக்கொண்டு ரயில் நிலையத்துக்கு வந்தபோது வண்டி அப்போதுதான் புறப்பட்டுப் போய்விட்டதென அறிந்தேன். இத்தனைக்கும் ஸ்டேஷன் மாஸ்டர் என்னிடம் அன்புகூர்ந்து வண்டியை ஒரு நிமிஷம் அதிகமாகவே நிறுத்தி வைத்தாராம். அப்படியும் என்னைக் காணமற் போகவே அவர் ஜாக்கிரதையாக எனது சாமான்களை மட்டும் வண்டியிலிருந்து எடுத்துவிட ஏற்பாடு செய்திருந்தார்.

கெல்னர் கட்டிடத்தில் ஓர் அறையை அன்றைய தினம் இருக்க வாடகைக்கு வாங்கிக் கொண்டேன். அங்கு அப்போதே வேலை துவங்கத் தீர்மானித்தேன். அந்நகரில் பிரசுரமான 'பயனியர்' பத்திரிகையைப்பற்றி

நான் நிரம்பக் கேள்விப்பட் டிருந்தேன். இந்தியரின் கோரிக்கைகளை எதிர்க்கும் பத்திரிகை அதுவென்றும் எனக்குத் தெரியும். மிஸ்டர் செஸ்னி என்பவர் அப்போது அப்பத்திரிகையின் ஆசிரியர் என்று எனக்கு ஞாபகம். எல்லாக் கட்சியினரின் உதவியையும் தேட நான் தீர்மானித்திருந்தபடியால் மிஸ்டர் செஸ்னிக்கு ஒரு குறிப்பு எழுதி அனுப்பினேன். வண்டி தவறிப் போனதைப்பற்றிக் கூறிவிட்டு நாளை வண்டிக்குப் புறப்படக் கூடிய வண்ணம் அவரைப் பார்த்துப் பேச அநுமதி கொடுக்கும்படி அதில் கேட்டிருந்தேன். அவர் உடனே ஒரு நேரங் குறிப்பிட்டுப் பதில் அனுப்பினார். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சி யளித்தது. அவர் பொறுமையுடன் நான் கூறியவற்றிற்கெல்லாம் செவி கொடுத்த போது அம்மகிழ்ச்சி அதிகமாயிற்று. நான் என்ன எழுதினாலும் அதைப்பற்றித் தமது பத்திரிகையில் குறிப்பிட்டு அபிப்பிராயம் எழுதுவதாகவும், ஆனால் இந்தியர்களுடைய கோரிக்கைகள் எல்லாவற்றையும் ஆதரிப்பதாக உறுதி கூற முடியாதென்றும், தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரரின் கட்சியையும் அறிந்து அதற்குரிய மதிப்புக் கொடுத்தல் தமது கடமையென்றும் அவர் தெரிவித்தார்.

"அவ்வளவு போதும். இவ்விஷயத்தை ஆராய்ந்து உங்கள் பத்திரிகையில் விவாதிக்க வேண்டுமென்பதே என் கோரிக்கை. நான் கேட்பதெல்லாம் உங்களுக்குரிய நீதி செய்யப்பட வேண்டுமென்றே யல்லாமல் வேறில்லை" என்று நான் சொன்னேன்.

பின்னர், அத்தினத்தை நகரைச் சுற்றிப் பார்ப்பதிலும், திரிவேணி சங்கமத்தின் அற்புதக் காட்சியைக்

கண்டு களிப்பதிலுமாகக் கழித்தேன். எனது வேலைத் திட்டத்தைப்பற்றியும் யோசித்துக் கொண்டிருந்தேன்.

இவ்வாறு எதிர் பாராவண்ணம் 'பயனியர்' பத்தி ராதிபரைக் கண்டு பேசியது பின்னர் நிகழ்ந்த பல சம்ப வங்களுக்கும் அடிப்படையாகி, இறுதியில் நேட்டாலில் என்னை ஜனக்கூட்டம் கொன்றுவிட முயற்சி செய்ததில் வந்து முடிவடைந்தது.

பம்பாயில் தங்காமல் நேரே இராஜகோட்டைக்கே சென்றேன். தென்னாப்பிரிக்கா நிலைமையைப்பற்றி ஒரு துண்டுப் பிரசுரம் எழுதத் தயார் செய்யத் தொடங்கி னேன். அதை எழுதி அச்சிட்டு வெளியிடுவதற்கு ஒரு மாதம் பிடித்தது. அப்பிரசுரத்தின் மேலட்டை பச்சை நிறமாயிருந்ததால் பின்னால் அது 'பச்சைப் பிரசுரம்' என்ற பெயர் பெற்றது. அதில் தென்னாப்பிரிக்கா இந்தியர் நிலைமையின் கேட்டை வேண்டுமென்றே குறைத்தே எழுதியிருந்தேன். முன்னர் குறிப்பிட்டுள்ள இரண்டு துண்டுப் பிரசுரங்களிலும் உபயோகித்த பாஷையை விட மிதமான பாஷையையே உபயோகித்திருந்தேன். ஏனெனில் எந்த விஷயத்தையும் தூரத்திலிருந்து கேள்விப் பட்டால் அது உள்ளதை விடப் பெரிதாகக் காணப்படும் என்று எனக்குத் தெரிந்திருந்தது.

பதினாயிரம் பிரதிகள் அச்சிட்டு இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களுக்கும், பத்திரிகை களுக்கும் அனுப்பினேன். 'பயனியர்' பத்திரிகையே முதன் முதலாகத் தலையங்கத்தில் அதைப்பற்றிக் குறிப் பிட்டு எழுதிற்று. இந்தக் கட்டுரையின் சாராம்சம் ராய்ட்டரால் இங்கிலாந்துக்குத் தந்தி மூலம் அனுப்பப் பட்டது. அச் சாராம்சத்தின் சுருக்கம் ராய்ட்டரின்

லண்டன் காரியாலயத்தினுல் நேட்டாலுக்கு அனுப்பப் பட்டது. இது மூன்றே வரிகள் அடங்கிய தந்திச் செய்தி. நேட்டாலில் இந்தியர்கள் நடத்தப்படும் விதத் தைக் குறித்து நான் கொடுத்திருந்த விவரத்தை இதில் சுருக்கமாக - ஆனல் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருந்தது. மேலும் அச்செய்தி என்னுடைய மொழிகளிலில்லை. நேட்டாலில் இதன் விளைவு என்னவாயிற்றென்று பின்னல் பார்ப்போம். 'பயனிய'ருக்குப் பிறகு முக்கியமான பத்திரிகை ஒவ்வொன்றும் இவ்விஷயத்தைக் குறித்து அபிப்பிராயம் எழுதின.

துண்டுப் பிரசுரங்களைத் தபாலில் போடுவதற்குத் தயாராகக் கட்டுதல் எளிய காரியமன்று. இதற்குச் சம்பளங் கொடுத்து ஆள் நியமித்தால் ரொம்பச் செலவு ஆகிவிடும். எனவே அதைவிட எளிய உபாயம் ஒன்று செய்தேன். அக்கம்பக்கத்திலுள்ள குழந்தைகள் எல்லா ரையும் சேர்த்துப் பள்ளிக்கூடம் இல்லாத நாளில் காலை நேரத்தில் 2 அல்லது 3 மணி நேரம் எனக்கு உதவி செய்யும்படி கேட்டேன். அவர்கள் சந்தோஷமாய் இணங்கினர்கள். இத்தொண்டுக்காக அவர்களுக்கு ஆசி கூறுவதோடு நான் சேகரித்து வைத்திருந்த பழைய தபால் தலைகளைத் தருவதாகச் சொன்னேன். அவர்கள் மிக விரைவில் வேலையை முடித்துவிட்டார்கள். சிறு குழந்தை களைத் தொண்டர்களாக்கி வேலை வாங்குவதில் எனது முதல் அநுபவம் இதுவே. அக்குழந்தை நண்பர்களில் இருவர் இப்போது என்னுடன் வேலை செய்யும் சகாக்களா யிருக்கின்றனர்.

இக்காலத்தில் பம்பாயில் பிளேக் என்னும் கொள்ளை நோய் பரவத் தொடங்கிற்று. சுற்றுப் புறங்கள் எங்கும்

பீதி ஏற்பட்டது. இராஜகோட்டையிலும் அந்நோய் வந்து விடக் கூடுமெனப் பயம் இருந்தது. சுகாதார இலாகாவுக்கு நான் சிறிது உதவி செய்யக்கூடுமெனத் தோன்றியதால் என் ஊழியத்தை ஏற்றுக்கொள்ளும்படி சமஸ்தான அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டேன். அவ்வாறே அவர்கள் என்னை ஏற்றுக்கொண்டு இவ்விஷயமாக ஏற்படுத்தப்பட்ட கமிட்டியில் என்னை அங்கத்தினனாக நியமித்தார்கள். கக்கூசுகள் சுத்தமாய் வைக்கப்பட வேண்டுமென்று நான் விசேஷமாய் வற்புறுத்தியதின் மீது கமிட்டியார் ஒவ்வொரு தெருவிலும் கக்கூசுகளைப் பரிசோதிக்கத் தீர்மானித்தனர். ஏழை மக்கள் தங்கள் கக்கூசுகளை நாங்கள் பரிசோதிப்பதற்கு எவ்வித ஆட்சேபமும் சொல்லவில்லை. மற்றும் எங்கள், யோசனைகளை ஏற்று அவற்றைச் சுத்தமாய் வைப்பதற்கு ஏற்பாடு செய்தனர். ஆனால் பணக்காரர்களில் சிலர் கக்கூசுகளை நாங்கள் பரிசோதிக்கவே கூடாதென்று தடுத்தார்கள். எங்கள் யோசனைகளை நிறைவேற்றுவது குறித்துக் கேட்பானேன்? பொதுவாக, ஏழைகளின் கக்கூசுகளை விடப் பணக்காரர்களின் கக்கூசுகள் அதிக ஆபாசமா யிருப்பதைக் கண்டோம். அவை இருளடர்ந்தும், அசுத்தம் நிறைந்தும் இருந்தன. பொறுக்க முடியாத துர்நாற்றம் வீசிற்று. புழுக்கள் நெளிந்தன. கக்கூசுகளைச் சுத்தமாக வைத்திருக்க நாங்கள் கூறிய யோசனைகள் மிகவும் சுலபமானவை. மலஜலம் தரையில் வீழ்ந்து ஊறும்படி விடுவதற்குப் பதிலாகச் சிறு தொட்டிகளை உபயோகிக்கும்படியும், கக்கூசின் வெளிச் சுவர்களுக்குள்ளே யிருந்த தனித்தனிச் சிறு சுவர்களை இடித்துவிட்டு வெளிச்சமும், காற்றும் அதிகமாக உலாவுதற்கும், தோட்டி நன்றாகச் சுத்தம் செய்வதற்கும் இடந்தரும்படியும் சொன்னோம். மேல் வகுப்பினர்

இக்கடைசி யோசனைக்குப் பற்பல ஆட்சேபங்களைக் கிளப்பினர். அவர்களில் பெரும்பான்மையோர் அதை நிறைவேற்றிவைக்கவில்லை.

தீண்டாதாரின் இருப்பிடங்களையும் கமிட்டியார் சோதிக்க வேண்டியிருந்தது. கமிட்டி அங்கத்தினரின் ஒருவரே என்னுடன் அங்கு வரச்சித்தமா யிருந்தார். மற்றவர்கள் தீண்டாதவர்களுடைய இருப்பிடங்களுக்குச் செல்வதை ஏதோ மகா பாதகமான சங்கதி யென்று நினைத்தார்கள். அதிலும் அவர்களுடைய கக்கூசுகளைச் சோதிப்பதென்றால் சொல்ல வேண்டுமா? ஆனால் மேற்படி வகுப்பாரின் இருப்பிடங்களை நான் சென்று பார்த்ததும் வியப்பும், திருப்தியும் அடைந்தேன். நான் அத்தகைய இடங்களுக்குச் சென்றது அதுவே முதல் தடவை அங்கிருந்த ஸ்திரீ புருஷர்கள் எங்களைக் கண்டதும் வியப்புற்றார்கள். அவர்களுடைய கக்கூசுகளைப் பரிசோதிக்க வேண்டுமெனச் சொன்னேன். அவர்கள் அளவிறந்த ஆச்சரியத்துடன் கூறியதாவது:—"எங்களுக்குக் கக்கூசா? வெகு நன்று! நாங்கள் வெளியே சென்று திறந்த இடங்களிலேயே மலஜலங் கழிக்கிறோம். உங்களைப் போன்ற பெரிய மனிதர்களுக்கல்லவா கக்கூசுகள்?"

"நல்லது; உங்கள் வீடுகளைப் பரிசோதிப்பதில் ஆட்சேபம் எதுவுமில்லையே?" என்று கேட்டேன்.

"யாதொரு ஆட்சேபமுமில்லை, ஐயா! எங்கள் வீடுகளின் மூலை முடுக்குகளையும் தாராளமாக நீங்கள் பார்க்கலாம். எங்களுடைய வீடுகள் வீடுகளா? கேவலம் வளைகள்."

அவ்வாறே வீடுகளுக்குள் சென்று பார்த்தேன். வெளிப் புறங்களைப்போலவே உட்புறங்களும் சுத்தமா

யிருப்பது கண்டு அளவற்ற மகிழ்ச்சி யடைந்தேன். வாயில்கள் நன்ருகக் கூட்டப்பட்டிருந்தன. தரை நன்ருகப் பசுஞ் சாணத்தினுல் மெழுகப்பட்டிருந்தது. இந்த சிற்சில பானைகளும் தட்டுகளும் துல்லியமாய்ப் பிரகாசித்தன. இவ்விடத்தில் பிளேக் நோய் தோன்றுமெனப் பயப்படுவதற்குச் சிறிதும் இடமில்லை.

மேல் வகுப்பாரின் வீடுகளைப் பரிசோதித்து வரும் போது நான் பார்த்த ஒரு கக்கூசைச் சிறிது விவரியாமலிருக்க முடியவில்லை. வீட்டின் ஒவ்வோர் அறையிலும் ஒரு ஜலதாரை இருந்தது. இது தண்ணீர் போவதற்கும், சிறு நீர் விடுவதற்கும் பொதுவாக உபயோகிக்கப்பட்டது. எனவே வீடுமுழுதும் ஒரே நாற்றம் எனச்சொல்ல வேண்டுதில்லை. ஆனுல் ஒரு வீட்டின் மாடியிலிருந்த படுக்கையறை எல்லாவற்றிலும் மிஞ்சிவிட்டது. இதிலிருந்த சாக்கடை மலஜலம் இரண்டுங் கழிக்கும் கக்கூசாகவே உபயோகிக்கப்பட்டது. அந்தச் சாக்கடை ஒரு குழாய் வழியாய்க் கீழ்த்தரைக்குச் சென்றது. அந்த அறையில் குடிகொண்டிருந்த துர்நாற்றத்தை ஒரு கணமும் சகிக்க முடியவில்லை. அங்கு மனிதர்கள் எப்படித் தூங்கினுர்கள் என்று வாசகர்களே கற்பனை செய்துகொள்ள வேண்டுவதே.

வைஷ்ணவர்களின் பெரிய கோயிலான 'ஹாவேலி'யையும் கமிட்டியார் சென்று சோதித்தனர். மேற்படி கோயில் அர்ச்சகர் எங்கள் குடும்பத்தின் நண்பர். எனவே அவர் கோயில் முழுவதையும் சோதிக்க எங்களுக்கு அநுமதி தந்ததுடன் நாங்கள் கூறும் யோசனைகளையும் நிறைவேற்றி வைப்பதாக வாக்களித்தார். அக்கோயிலில் அவர்கூட ஒரு முறையேனும் பார்த்திராத ஒரு பகுதி இருந்தது. சுவரின் மேலாக எச்சல் இலைகளையும், குப்பை

களையும் இங்கு எறிந்துவிடுவது வழக்கம். இங்கே காக்கைகளும், பருந்துகளும் நிரந்தரமாக வாசம் செய்தன. கக்கூசுகள் அசுத்தமாயிருந்தனவென்று சொல்ல வேண்டுவதில்லை. எங்கள் யோசனைகளை எந்த அளவுக்கு அர்ச்சகர் நிறைவேற்றினர் என்று எனக்குத் தெரியாது. நான் அவ்வளவு காலம் இராஜகோட்டையில் தங்கியிருக்கவில்லை.

தெய்வத்தின் திருக்கோயில் ஒன்றில் இவ்வளவு அசுத்தமும், ஆபாசமும் இருக்கக்கண்டு நான் பெரிதும் மனத்துயரடைந்தேன். பரிசுத்தமானதென்று கருதப்படும் ஓர் இடத்தில் சுகாதார விதிகள் கண்டிப்பாக அநுசரிக்கப்படுமென்று யாரும் எதிர்பார்த்தல் இயல்பு. அகத் தூய்மையைப்பற்றியும், புறத்தூய்மையைப்பற்றியும் ஸ்மிருதி கர்த்தர்கள் ரொம்ப வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள் என்பது அப்போதே எனக்குத் தெரிந்திருந்தது.

இருபத்தாறும் அத்தியாயம்

இரு பெரும் அவாக்கள்

பிரிட்டிஷ் அரசாட்சியினிடம் எனக்கிருந்த அளவு விசுவாசமுடைய வேறொருவரை நான் கண்டதில்லை. என் சத்தியப் பற்றே இந்த விசுவாசத்துக்கு அடிப்படையாயிருந்ததென்பதை இப்போது காண்கிறேன். இராஜ விசுவாசம் பூண்டவன்போல் நடித்தல் என்னால் இயலாத காரியம். இவ்வாறே என்னிடம் இயலாத எந்த நற்குணத்தையும் இருப்பதாகப் பாவித்து நடிக்க என்னால் முடியாது. நேட்டாலில் நடந்த ஒவ்வொரு கூட்டத்திலும் இராஜ வாழ்த்துக் கீதம் பாடப்படுவதுண்டு. அப்பாட்டில் நானும் கலந்துகொள்ள வேண்டுமென்று அப்போது மனப்

பூர்வமாக விரும்பினேன். பிரிட்டிஷ் ஆட்சியில் உள்ள குறைபாடுகள் எனக்கு அப்போதே தெரியாமலில்லை. எனினும் மொத்தத்தில் அது ஏற்றுக்கொள்ளத் தக்க ஆட்சியே என்று எண்ணினேன். பிரிட்டிஷ் ஆட்சி ஆளப் படுவோருக்குப் பொதுவாக நன்மை செய்வதென்று அக் காலத்தில் நான் நம்பி யிருந்தேன்.

அப்போது தென்னாப்பிரிக்காவில் நான் கண்ட நிறத் துவேஷம் பிரிட்டிஷ் பரம்பரை தர்மத்துக்கு முற்றும் மாறு பட்டதென்றும், அது தென்னாப்பிரிக்காவில் தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் ஓர் உணர்ச்சியே என்றும் நம்பினேன். எனவே இராஜ விசுவாசங் காட்டுவதில் நான் ஆங்கிலேய ருக்குப் பின்னிடவில்லை. இராஜ வாழ்த்துக் கீதத்தின் வர்ண மெட்டை மிக முயன்று கற்றுக்கொண்டு அக்கீதம் பாடப்படும் போதெல்லாம் நானும் கலந்து கொண்டேன். ஆர்ப்பாட்டமும், வெளிப்பகட்டுமில்லாமல் இராஜ விசுவா சத்தை வெளிக்காட்டிக் கொள்ளக்கூடிய தருணம் ஏற் படும்போதெல்லாம் நான் அவ்வாறு செய்யத் தவறுவ தில்லை.

ஆனால் என் ஆயுளில் ஒரு முறையேனும் இந்த இராஜ விசுவாசத்தின் மூலமாய்ச் சுய நல மொன்றையடைய நான் முயன்றதில்லை. இராஜ விசுவாசம் செலுத்துவதை நான் ஒரு நன்றிக் கடனென்றே கருதினேன். அதற்காக எவ்வித வெகுமதியும் நான் எதிர்பார்க்கவில்லை.

நான் இந்தியா போய்ச் சேர்ந்த காலத்தில், விக்டோ ரியா மகாராணியாருடைய ஆட்சியின் அறுபதாவது ஆண்டு விழாக் கொண்டாடுவதற்கு (Diamond Jubilee) ஏற்பாடுகள் நடந்து வந்தன. இராஜகோட்டையில் இதற் கென்று நியமிக்கப்பட்ட கமிட்டியில் என்னையும் ஓர்

அங்கத்தினனுகும்படி சொன்னார்கள். நான் அதற் கிணங்கினேனாயினும், கொண்டாட்டம் பெரிதும் வெளிப் பகட்டாகவே யிருக்குமெனச் சந்தேகம் உண்டாயிற்று. வேஷம் போடும் காரியங்கள் பல நடத்தல் கண்டு பெரிதும் துயர மடைந்தேன். கமிட்டியை விட்டு விலகி விடலாமா வென்றுகூட யோசித்தேன். முடிவில் எனக்கேற்பட்ட வேலையைச் சரிவரச் செய்து முடிப்பதுடன் திருப்தி யடைந்திருக்கத் தீர்மானித்தேன்.

மேற்படி வைபவத்தின் ஞாபகார்த்தமாக மரங்கள் வைத்துப் பயிராக்க வேண்டுமென்பது ஒரு யோசனை. பலர் இதை வெளிப்பகட்டுக்காகவும், உத்தியோகஸ்தர்களை மகிழ்விப்பதற்காகவுமே செய்தனர். மரம் வைக்க வேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை யென்றும், அது ஒரு யோசனைதானென்றும், எனவே செய்தால் அதைச் சரியாகச் செய்ய வெண்டுமென்றும், இல்லாவிடில் பேசா திருப்பதே உத்தம மென்றும் நான் எடுத்துக் கூறினேன். என்னுடைய கருத்துக்களைப்பற்றி அவர்கள் எள்ளி நகை யாடியதாக எனக்கு ஞாபகம். என் பங்குக்கு ஏற்பட்ட மரத்தை நான் கவலையுடன் நாட்டி ஜாக்கிரதையாகத் தண்ணீர்விட்டு வளர்த்தேன்.

என் வீட்டுக் குழந்தைகளுக்குக்கூட இராஜ வாழ்த் துப் பாட்டுக் கற்றுக் கொடுத்தேன். இராஜகோட்டை போதனு முறைக் கலாசாலை மாணுக்கர்களுக்கு நான் அக்கீதம் கற்றுக் கொடுத்ததாக நினைவிருக்கிறது. ஆனால் அது இவ்விழாவின் போதா, ஏழாம் எட்வர்ட் அரசரின் முடிசூட்டுக் கொண்டாட்டத்தின்போதா என்பது நன்கு ஞாபகமில்லை. பிற்காலத்தில் அக்கீதத்தின் உள் ளுரை எனக்கு அருவருப்பை யளிக்கத் தொடங்கிற்று.

அஹிம்ஸா தர்மத்தைப்பற்றி எனது கொள்கை முதிர்ச்சியடைந்து வந்தபோது என் எண்ணங்களையும், பேச்சையும் பற்றி அதிக எச்சரிக்கையுட னிருக்கத் தொடங்கினேன். மேற்படி கீதத்தில் முக்கியமாக,

"அவளுடைய (அரசியின்) பகைவர்களை (ஆண்டவன்) சிதற வடிக்கட்டும்;

அவர்களை வீழ்த்தட்டும்;

அவர்களுடைய அரசியலைக் குழப்பிக் கெடுக்கட்டும்;

அவர்களுடைய துஷ்ட தந்திரங்களை உருப்படாமற் செய்யட்டும்"

என்னும் வாக்கியங்கள் அஹிம்ஸையில் பற்றுக் கொண்ட எனக்கு அருவருப்பை யளித்தன. டாக்டர் பூத் என்பாரிடம் இது குறித்து என் கருத்தைத் தெரிவித்தேன். அஹிம்ஸையில் உறுதியுள்ளவன் மேற்படி வரிகளைப் பாடுதல் தகுதி யன்றென்று அவரும் ஒப்புக் கொண்டார். 'பகைவர்கள்' எனக் கூறப்படுவோர் 'துஷ்டர்கள்' என்று எவ்வாறு நாம் கூற முடியும்? அவர்கள் பகைவர்கள் என்பதால் அவர்கள் செய்வதே தவறு என்று எப்படி ஏற்படும்? கடவுளிடம் நாம் நீதிதான் வேண்டலாம். டாக்டர் பூத் என் கருத்துக்களை முழுதும் அங்கீகரித்தார். எனவே அவருடைய கோயிலைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு புதிய இராஜ விசுவாச கீதமும் அவர் தயாரித்தார். டாக்டர் பூத்தைப்பற்றிப் பின்னால் விவரமாகக் கூறுவேன்.

இராஜ விசுவாசத்தைப்போலவே, நோயாளிகளுக்குப் பணிவிடை செய்யும் அவா என் இயற்கையில் வேரூன்றி யிருந்தது. நண்பர்களாயினும், அன்னியர்களாயினும்

நோய் வாய்ப்பட்டவர்களுக்குத் தொண்டு செய்வதெனில் எனக்கு எப்போதும் பிரியம்.

இராஜகோட்டையில் தென்னுப்பிரிக்கா நிலைமையைப் பற்றிய துண்டுப் பிரசுரத்தைத் தயாரித்துக் கொண்டிருந்த போது, பம்பாயிக்கு அவசரமாகப் போய் திரும்ப ஒரு சந்தர்ப்பம் நேரிட்டது. நகரங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்தி இவ்விஷயமாக பொதுஜன உணர்ச்சி உண்டு பண்ண வேண்டுமென எனக்கு எண்ணமிருந்தது. முதலில் பம்பாய் நகரில் இவ்வுத்தேசத்தை நிறைவேற்றத் தீர்மானித்தேன். நீதிபதி ரானடேயைப் பார்த்தேன். அவர் நான் கூறியவற்றைக் கவனமாகக் கேட்டிருந்து ஸர் பிரோஸிஷா மேதாவைப் பார்க்கும்படி கூறினர். அடுத்தாற்போல நான் பார்த்த நீதிபதி பட்ருடின் தயாப்ஜியும் அவ்வாறே சொன்னர். "ரானடேயும், நானும் உமக்கு உதவி எதுவும் செய்ய இயலாது. எங்கள் நிலைமையை நீர் அறிவீர். பொது விஷயங்களில் நாங்கள் தலையிட்டு வேலைசெய்தல் முறையன்று. ஆனல் எங்கள் அநுதாபமெல்லாம் உமது பக்கமே இருக்கின்றன. உமக்குத் திறமையாக வழிகாட்டக் கூடியவர் ஸர் பிரோஸிஷா மேதாவேயாவார்" என்று அவர் கூறினர்.

ஸர் பிரோஸிஷாவைப் பார்க்க நான் எண்ணியே இருந்தேன். ஆனல் இவ்வளவு பெரியவர்களுங்கூட அவருடைய யோசனையைக் கேட்கச் சொன்னதிலிருந்து ஸர் பிரோஸிஷாவுக்குப் பொது ஜனங்களிட மிருந்த அபாரமான செல்வாக்கின் இயல்பை உணர்ந்தேன். பின்னர் அவரிடம் சென்றேன். அவரைப்பற்றி நான் கேள்விப்பட்டதிலிருந்து அவர் முன்னிலையில் பயத்தி ஞல் திகைத்துப் போவேனென எதிர்பார்த்தேன்.

'பம்பாயின் சிங்கம்' என்றும் 'பம்பாய் மாகாணத்தின் முடிசூடா மன்னர்' என்றும் அவர் பொதுஜனங்களால் பட்டம் சூட்டப் பெற்றிருந்தார் என்பதை நானறிவேன். ஆனால் உண்மையில் அம்மன்னர் என்னைத் திகைப்புறச் செய்தாரில்லை. அன்புள்ள தந்தை வயது வந்த புதல்வனைச் சந்திக்குமாறுபோல் அவர் என்னைச் சந்தித்தார். அப்போது அவர் தமது காரியாலயத்தில் இருந்தார். நண்பர்களும், சீடர்களும் அவரைச் சூழ்ந்திருந்தார்கள். அவர்களுள் ஸ்ரீ டி. இ. வாச்சாவும், ஸ்ரீ காமாவும் இருந்தனர். மேதா அவர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். ஸ்ரீ வாச்சாவைப்பற்றி நான் முன்னமே கேள்விப்பட்டிருந்தேன். அவர் ஸர் பிரோஸிஷாவுக்கு வலதுகை போன்றவர். புள்ளி விவரங்களில் அவர் பெரிய நிபுணர் என்று வீரசந்திர காந்தி எனக்குச் சொல்லியிருந்தார். ஸ்ரீ வாச்சா 'நாம் மறுபடியும் சந்திக்க வேண்டும், காந்தி' என்று கூறினார்.

அறிமுகம் செய்து வைத்ததற்கு இரண்டு நிமிஷ நேரத்துக்குமேல் ஆகவில்லை. பின்னர் நான் கூறியவற்றை ஸர் பிரோஸிஷா கவனமாகக் கேட்டார். நீதிபதி ரானடே, தயாப்ஜி இவர்களைக் கண்ட விவரத்தையும் கூறினேன். 'காந்தி உமக்கு உதவி செய்யவேண்டுவது அவசியமெனக் காண்கிறேன். இங்கே ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று அவர் உரைத்தார். உடனே தம்முடைய காரியதரிசி ஸ்ரீ முன்ஷியை அழைத்துப் பொதுக் கூட்டத்துக்குத் தேதி குறிப்பிடச் சொன்னார். தேதி முடிவானதும், அதற்கு முதல்நாள் தம்மை மீண்டும் வந்து பார்க்கும்படி கூறி எனக்கு விடைகொடுத்தனுப்பினார். இந்தச் சந்திப்பின் பயனாக என் பயங்களெல்லாம்

நிவர்த்தியாயின. மிகுந்த மனமகிழ்ச்சியுடன் வீடு திரும்பினேன்.

பம்பாயில் தங்கியிருந்தபோது என் மைத்துனரை (சகோதரியின் கணவரை) பார்க்கச் சென்றிருந்தேன். அவர் நோய் வாய்ப்பட்டுக் கிடந்தார். அவர் பணக்காரரல்லர். என் சகோதரி ஒருத்தியாக அவருக்குப் பணிவிடை செய்ய முடியவில்லை. நோய் கடுமையானதென்று தெரிந்தபடியால் அவரை இராஜகோட்டைக்கு அழைத்துப் போவதாகச் சொன்னேன். அவர் அதற்கிணங்கினார். எனவே அவரையும், என் சகோதரியையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனேன். அவருடைய நோய் நான் எதிர் பார்த்ததை விட நீண்ட நாள் நீடித்திருந்தது. அவரை என் அறையில் கிடத்தி இரவும் பகலும் அவருடனேயே இருந்து பணிவிடை செய்து வந்தேன். இரவில் பாதி நேரம் விழித்திருக்க வேண்டியிருந்தது. இத்துடன் தென்னாப்பிரிக்கா சம்பந்தமான வேலையையும் கவனித்து வந்தேன். கடைசியாக, நோய் குணமடையாமலே அவர் உயிர் நீத்தார். அந்திய காலத்தில் அவருக்குப் பணிவிடை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது எனக்குப் பெரும் ஆறுதலாயிருந்தது.

நோயாளிக்குப் பணிவிடை செய்வதில் எனக்கிருந்த விருப்பம் நாளுக்கு நாள் வளர்ந்து அடங்கா அவா ஆயிற்று. இதன் பயனாகப் பல முறைகளில் நான் மற்ற வேலைகளை அலட்சியம் செய்யவும் நேர்ந்ததுண்டு. சில சமயங்களில் என் மனைவியையும், மற்றும் வீட்டிலுள்ள எல்லாரையும் இத்தொண்டில் நான் ஈடுபடச் செய்திருக்கிறேன்.

இத்தகைய தொண்டு செய்வதில் ஒருவனுக்கு மகிழ்ச்சி விளைந்தாலன்றி அதைச் செய்வதில் பொருளில்லை. வெளி வேஷத்துக்காகவோ, பொது ஜன அபிப்பிராயத்தினிடம் பயத்தினாலோ இத்தொண்டு செய்யப்புகும் மனிதன் ஆன்ம வளர்ச்சியும், உற்சாகமும் குன்றப் பெறுகிறான். மகிழ்ச்சியில்லாமல் செய்யும் தொண்டினால் அதை ஏற்றுக் கொள்பவனுக்கேனும், செய்பவனுக் கேனும் நன்மை கிடையாது. ஆனால் மகிழ்ச்சியுடன் செய்யப்படும் தொண்டிற்கு முன்பு மற்ற இன்பங்களும், சுக போகங்களும் சூரியன் முன்பு மின் மினியாகின்றன.

இருபத்தேழாம் அத்தியாயம்

பம்பாய் கூட்டம்

என் சகோதரி கணவர் மரணமுற்ற மறுநாளே நான் பம்பாயில் ஏற்பாடாகியிருந்த பொதுக் கூட்டத்துக்குப் போக வேண்டியதாயிருந்தது. நான் செய்ய வேண்டிய பிரசங்கங்கத்தைப்பற்றிச் சிந்திக்க நேரமேயில்லை. மனக்கவலையுடன் இரவு பகலாகக் கண் விழித்துக் காத்திருந்ததினால் பெரிதும் களைப்புற்றிருந்தேன். என் தொண்டையும் கம்மிப் போயிருந்தது. எனினும் ஆண்டவனிடம் முழு நம்பிக்கையுடன் பம்பாய் சென்றேன். என் உபந்நியாசத்தை எழுதிக்கொண்டு போகவேண்டுமென்னும் எண்ணம் எனக்குண்டாகவேயில்லை.

ஸர் பிரோஸிஷா சொல்லியிருந்தபடி கூட்டத்துக்கு முதல் நாள் மாலை 5-மணிக்கு அவர் காரியாலயத்துக்குச் சென்றேன்.

"பிரசங்கம் தயாரா யிருக்கிறதா, காந்தி?" என்று அவர் வினவினர்.

நான் பயத்தினல் நடுங்கிக்கொண்டு கூறியதாவது:—"இல்லை, ஐயா! ஞாபகத்திலிருந்தே கூட்டத்தில் பேசி விடலாமென எண்ணியிருக்கிறேன்."

"பம்பாயில் அது சரிப்படாது. இங்கே பத்திரிகை நிருபர்கள் கெட்டிக்காரர்களல்லர். இந்தக் கூட்டத்தினல் பயன் ஏற்படவேண்டுமானல் நீர் பிரசங்கத்தை எழுதிவிட வேண்டும். நாளைப் பொழுது விடிவதற்குள் அது அச்சாகி விடவேண்டும். உம்மால் இது செய்ய முடியு மென நம்புகிறேன்."

எனக்குச் சிறிது அச்சமாகவே யிருந்த தாயினும் அங்ஙனமே செய்ய முயல்வதாகக் கூறினேன்.

"அப்படியானல் எழுத்துப்பிரதி எப்போது தயா ராகும்? ஸ்ரீ முன்ஷியை எப்போது வரச் சொல்லட்டும்?"

"இன்றிரவு 11 மணிக்கு வரச்சொல்லுங்கள்."

மறுநாள் கூட்டத்திற்குச் சென்றபோது ஸர் பிரோஸிஷாவின் புத்திமதி எவ்வளவு யுத்தமானது எனக் கண்டேன். ஸர் கவாஸ்ஜி ஜிஹாங்கீர் மண்டபத்தில் கூட்டம் நடந்தது. ஸர் பிரோஸிஷா மேதா பேசுவதா யிருந்தால் மண்டபத்தில் இடைவெளியே யன்றி ஜனங் கள்—முக்கியமாக மாணக்கர்கள்—நிறைந்திருப்பார்கள் என்று கேள்விப்பட்டிருந்தேன். என்னுடைய அனுபவத் தில் இவ்வளவு பெரிய கூட்டத்தை முதன் முறை இப் போதே கண்டேன். என்னுடைய குரல் யாருக்குமே கேளாதெனத் தோன்றிற்று. எனவே பிரசங்கத்தைப்

படிக்க ஆரம்பித்தபோது என் உடம்பு நடுங்கிற்று. ஸர் பிரோஸிஷா அடிக்கடி 'உரக்க, உரக்க' என்று கூறி உற்சாகப்படுத்தினுர். ஆனுல் இது என்னை உற்சாகப் படுத்துவதற்குப் பதிலாக என் குரல் வரவர ஈனமாவ தற்கே ஏதுவா யிருந்ததென்று ஞாபகம்.

இத்தருணத்தில் எனது பழைய நண்பரான ஸ்ரீமான் கேசவராவ் தேஷ்பாண்டே என்துணைக்கு வந்தார். என் பிரசங்கத்தை அவர் கையில் கொடுத்தேன். அவருடைய குரல் அக்கூட்டத்திற்குத் தகுந்தது. எனினும் கூட்டம் அவர் வாசிப்பதைக் கேட்க மறுத்து விட்டது. 'வாச்சா, வாச்சா' என்னும் சத்தம் எங்கும் எழுந்தது. எனவே ஸ்ரீவாச்சா எழுந்து பிரசங்கத்தைப் படிக்கத் தொடங்கினுர். உடனே ஆச்சரியமான பயன் ஏற்பட்டது. கூட்டத்தில் அமைதி நிலவலாயிற்று. முடிவுவரை எல்லோரும் கவனமாகக் கேட்டனர். அவ்வப்போது கரகோஷமும், 'வெட்கம் வெட்கம்' என்ற சத்தமும் கிளம்பின. இதனுல் என் ஹிருதயம் பூரித்தது.

ஸர் பிரோஸிஷா, பிரசங்கம் தமக்குப் பிடித்திருந்ததாகச் சொன்னுர். நான் ஆனந்தக் கடலில் மூழ்கினேன்.

இக் கூட்டத்தின் பயனுக என் முயற்சிக்கு இரு நண்பர்களின் பூரண அநுதாபத்தைப் பெற்றேன், அவர்களில் ஒருவர் ஸ்ரீ தேஷ்பாண்டே; மற்றவர் ஒரு பார்ஸி நண்பர். பின்னவர் இன்று பெரிய அரசாங்க உத்தியோகம் வகிப்பதால் அவர் பெயரைக் கூருது விடுகிறேன். இவர்கள் இருவரும் என்னுடன் தென்னுப்பிரிக்காவுக்கு வருவதாக உறுதி கொண்டார்கள். ஆனுல் அப்போது ஸ்மால் காஸ் கோர்ட் நீதிபதியாயிருந்த ஸ்ரீ

சி. எம். கர்ஸட்ஜி அப்பார்ஸி நண்பருக்கு மணம் செய்து வைக்கத் தீர்மானித்திருந்தபடியால் அவருடைய உறுதியைக் கைவிடும்படி செய்தார். மணஞ் செய்து கொள்வதா, தென்னாப்பிரிக்கா போவதா என்று அவர் தீர்மானிக்க வேண்டியதாயிற்று. பின்னதைக் கைவிட்டு முன்னதையே அவர் கைக் கொண்டார். ஆனால் இந் நண்பர் இவ்வாறு உறுதி பிறழ்ந்ததற்கு அவருடைய வகுப்பையே சேர்ந்த பார்ஸி-ரஸ்டம்ஜி பிற்காலத்தில் செய்த தொண்டு பரிகாரமாகுமென்பதில் ஐயமில்லை இவ்வாறே பார்ஸி சகோதரிகள் பலர் இது காலை கதர்த் தொண்டிற் கென்றே தங்கள் வாழ்நாளை அர்ப்பணம் செய்து, மேற் சொன்ன நண்பர் உறுதி பிறழ்வதற்குக் காரணமாயிருந்த மணப்பெண்ணின் குற்றத்தைத் துடைத்து வருகிறார்கள். அச்சதிபதிகளை நான் மகிழ்ச்சியுடன் மன்னித்து விட்டேன். ஸ்ரீ தேஷ்பாண்டேக்கு அப்போது கலியாணத் தடை இல்லாவிடினும் அவரும் அப்போது வேறு காரணங்களால் வர முடியவில்லை. இவ்வாறு அவர் உறுதி பிறழ்ந்த குற்றத்திற்கு இதுகாலை தாமே தகுந்த பிராயச்சித்தம் செய்து வருகிறார். தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பியபோது வழியில் ஸான்ஸிபாரில் தயாப்ஜி குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரைக் கண்டேன். அவரும் தென்னாப்பிரிக்காவுக்கு வந்து எனக்கு உதவி புரிவதாகச் சொன்னாராயினும் முடிவில் வரவேயில்லை. அதற்கு இப்போது ஸ்ரீ அப்பாஸ் தயாப்ஜி கழுவாய் தேடி வருகிறார். இவ்வாறு என்னுடன் மற்றொரு பாரிஸ்டரை அழைத்துப் போவதற்கு நான் செய்த முயற்சிகள் மூன்றும் பயன்தரா தொழிந்தன.

இது சம்பந்தமாக ஸ்ரீ பெஸ்டோன்ஜி பாதுஷாவின் ஞாபகம் எனக்கு வருகிறது. நான் இங்கிலாந்தில் வசித்த

காலத்திலிருந்து அவரும் நானும் நட்புரிமையுடன் பழகி வந்தோம். முதன் முதலில் லண்டனில் சைவ போஜன சாலை யொன்றில் அவரை நான் சந்தித்தேன். 'பித்தர்' என்று பெயர் பெற்ற அவருடைய சகோதரர் ஸ்ரீ பர்ஜோர்ஜி பாதுஷாவைப்பற்றி அதற்கு முன்பே கேள்விப் பட்டிருந்தேன். நான் அவரைச் சந்தித்ததில்லையாயினும் நண்பர்கள் அவருடைய விநோத குணாம்சங்களைப் பற்றிச் சொல்வார்கள். குதிரைகளிடம் இரக்கத்தினால் அவர் (குதிரை பூட்டிய) டிராம் வண்டிகளில் ஏறுவதில்லையாம். அபார ஞாபக சக்தி உடையவராயினும் பட்டப்பரீட்சை எதற்கும் செல்ல மறுத்து விட்டாராம். அத்துடன் எதற் கும் கட்டுப்படாத சுயேச்சைப் புத்தியுள்ளவராம். பார் ஸியா யிருந்தும் புலால் உணவு கொள்வதில்லையாம். பெஸ்டோன்ஜி இவ்வளவு புகழ் பெற்றவரல்லராயினும், அவர் புலமையிற் சிறந்தவர் என்று பெயர் வாங்கி யிருந் தார். ஆனால் எங்கள் இருவருக்கும் பொதுவா யிருந்தது சைவ உணவேயாகும். புலமையில் அவரருகில் செல்லவும் என்னால் முடியாது.

பம்பாயில் அவரை மீண்டும் சந்தித்தேன். இப்போது அவர் ஹைகோர்ட்டில் உத்தியோகம் வகித்திருந்தார். நான் அவரைக்கண்டபோது உயர்தர குஜராத்தி மொழி அகராதி ஒன்றுக்குத் தமது பகுதியைக் தயாரிக்கும் வேலையில் ஈடு பட்டிருந்தார். தென்னாப்பிரிக்கா வேலை சம்பந்தமாக உதவி கேளாமல் நான் எந்த நண்பரையும் விடுவதில்லை. ஆனால் மற்றவர்களைப் போலன்றி அவர் எனக்கு உதவி செய்யக் கண்டிப்பாக மறுத்து விட்டார். அத்துடன் நானுங்கூடத் தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பிச் செல்லலாகாதென்று அவர் புத்திமதி கூறினார்.

"உமக்கு நான் உதவி செய்ய இயலாது. நீர் தென்னாப்பிரிக்கா செல்வதும் எனக்குப் பிடிக்கவில்லை. தாய் நாட்டில் நாம் செய்வதற்கு வேலையில்லையா? நமது தாய் மொழிக்குச் செய்யவேண்டிய தொண்டு எவ்வளவு கிடக்கிறது, பாரும்! புது விஞ்ஞான நூல்களுக்கேற்ற மொழிகளைக் கண்டுபிடித்தாக வேண்டும். செய்ய வேண்டிய வேலையில் இது ஒருசிறு பகுதி. இந்த நாட்டின் வறுமையை எண்ணிப் பாரும். தென்னாப்பிரிக்காவிலுள்ள நமது சகோதரர்கள் கஷ்டப்படுவது உண்மையே. ஆனால் அவ் வேலைக்காக உம்மைப் போன்ற ஒருவரைத் தியாகம் செய்துவிட எனக்குப் பிரியமில்லை. இங்கே நாம் முதலில் சுயாட்சி பெற்றோமானால் அங்குள்ள நமது நாட்டாருக்கு உதவி செய்தவர்களாவோம். உம்மைத் திருப்ப முடியாதென எனக்குத் தெரியும். ஆனால் உம்மை யொத்த வேறு எவரும் உம்முடன் போவதற்கு நான் துணை செய்ய மாட்டேன்."

இந்தப்புத்திமதி எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் பெஸ்டோன்ஜி பாதுஷாவிடம் இதனால் எனக்கு மதிப்பு அதிகமாயிற்று. அவரது தேசபக்தியும் தாய்மொழிப் பற்றும் என் மனதைக் கவர்ந்தன. இந் நிகழ்ச்சியினால் எங்கள் நட்பு அதிகமாயிற்றே யன்றி வேறில்லை. அவருடைய கருத்தை நான் நன்கறிந்து கொண்டேன். ஆனால் இதன் பயனாய்த் தென்னாப்பிரிக்காவில் எனது வேலையை விட்டுவிடத் தீர்மானிப்பதற்கு மாறாக, அவ்வேலையில் இன்னும் அதிக உறுதியே கொண்டேன். தாய் நாட்டுத் தொண்டில் எந்தச் சிறு துறையையும் தேசபக்தன் அலட்சியம் செய்யக்கூடாது. பின்வரும் கீதையின் உபதேசமும் எனக்கு முற்றும் தெளிவாக இருந்தது :—

"நன்ருகச் செய்யப்படும் பரதர்மத்தைக் காட்டிலும், குணமற்ற தெனினும் ஸ்வதர்மமே சிறந்தது. ஸ்வதர் மத்தில் இறந்துவிடினும் நன்றேயாம். பரதர்மம் பயத்துக் கிடமானது."

இருபத்தெட்டாம் அத்தியாயம்

பூனுவிலும் சென்னையிலும்

ஸர் பிரோஸிஷா என் வேலையை எளிதாக்கி விட்டார். எனவே பம்பாயிலிருந்து பூனுவுக்குச் சென்றேன். இங்கே இரண்டு கட்சிகள் இருந்தன. எல்லாக் கட்சி யாரின் உதவியும் எனக்கு வேண்டியிருந்தது. முதலில் லோகமான்ய திலகரைப் போய்ப் பார்த்தேன். அவர் கூறியதாவது:—

"எல்லாக் கட்சியாருடைய உதவியையும் நீங்கள் நாடுவது முற்றும் சரியே. தென்னுப்பிரிக்கா விஷயத்தில் அபிப்பிராயபேதம் இருக்கமுடியாது. ஆனல் அக்கிரா சன்ர் எந்தக் கட்சியிலும் சேராதவரா யிருந்தால் நலம். ஆசிரியர் பந்தர்க்கரைப் போய்ப் பாருங்கள். கொஞ்ச நாளாக அவர் பொது வாழ்வில் அதிகமாகத் தலையிடுவ தில்லை. ஆனல் இந்த விஷயத்துக்காக அவர் வெளியே வருதல் கூடும். அவரைப் பார்த்து அவர் என்ன சொல்லுகிருரென்று தெரிவியுங்கள். உங்களுக்கு என்னு லான எல்லா உதவியும் செய்வேன். நீங்கள் விரும்பும் போதெல்லாம் என்னைத் தாராளமாக வந்து பார்க்கலாம்."

லோகமான்யரை நான் பார்த்தது இதுதான் முதன் முறை. அவருக்கு ஜனங்களிடையே யிருந்த தனிப்பெருஞ்

செல்வாக்கின் இரகசியத்தை அப்போதே தெரிந்து கொண்டேன்.

பின்னர் கோகலேயைக் காணச் சென்றேன். பெர்க்யூஸன் கலாசாலை மைதானத்தில் அவரைச் சந்தித்தேன். அவர் என்னைப் பரிவுடன் வரவேற்றார். அவருடைய இனிய சுபாவம் என் ஹிருதயத்தைத் தட்சணமே கொள்ளைகொண்டது. அவரையும் இப்போதே முதல் முறையாகப் பார்த்தேன். ஆயினும் பழைய நண்பர் ஒருவரைச் சிறிது காலம் பிரிந்திருந்து மீண்டும் காண்பது போலவே எனக்குத் தோன்றிற்று. ஸர் பிரோஸிஷா ஹிமாலயத்தைப்போல் எனக்குக் காணப்பட்டார்; லோகமான்யர் சமுத்திரம்போல் தோன்றினார்; கோகலே கங்கை நதியை யொத்தவரா யிருந்தார். மனிதன் அப்பரிசுத்த நதியில் ஸ்நானம் செய்து இன்புறக்கூடும். ஹிமாலயத்தை ஏறிக் கடத்தல் இயலாத காரியம்; சமுத்திரத்தில் ஒருவன் துணிந்து இறங்குதல் எளிதன்று; ஆனால் கங்கையோ தன்னிடம் வருமாறு அனைவரையும் பரிவுடனழைத்தது. கையில் தடுப்புடன் படகிலேறி அவ்வாற்றில் மிதப்பது ஆனந்தமன்றோ! பள்ளிக்கூடத்தில் சேர விரும்பும் மாணாக்கனை உபாத்தியாயர் பரீட்சிப்பதுபோல் கோகலே என்னைப் பரீட்சித்தார். யார் யாரிடம் போகவேண்டுமென்றும், எப்படி அவர்களை அணுகுவதென்றும் அவர் யோசனை சொன்னார். நான் செய்யவிருந்த உபந்நியாசத்தை முதலில் பார்க்க விரும்புவதாகவும் கூறினார். கலாசாலை முழுவதும் என்னை அழைத்துக் கொண்டுபோய்க் காட்டினார். எந்த நேரத்திலும் எனக்கு வேண்டிய உதவி செய்வதாக வாக்களித்தார். டாக்டர் பந்தார்க்கரைப் பார்த்த விவரத்தை வந்து

தெரிவிக்கும்படி கூறி விடையளித்தார். மிகுந்த உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் அவரிடமிருந்து சென்றேன். அரசியல் துறை சம்பந்தப்பட்ட வரையில் கோகலே உயிர் வாழ்ந்திருந்த போதும், அப்படியே இன்றுவரையிலும் என் ஹிருதயத்தில் ஓர் உன்னதமான தனிப் பீடத்தை வகித்து வருகிறார்.

டாக்டர் பந்தார்க்கர், தந்தை தநயனை வரவேற்கும் ஆர்வத்துடன் என்னை வரவேற்றார். நான் அவரைப் பார்க்கச் சென்றபோது நடுப்பகல் வேளை. அந்த நேரத்தில் நான் சுறு சுறுப்புடன் பிறரைப் பார்க்கச் சென்றுகொண்டிருந்ததே அந்தப் பண்டித மணிக்கு மிகுந்த சந்தோஷத்தையளித்தது. எக்கட்சியிலும் சேராதவர் பொதுக் கூட்டத்திற்கு அக்கிராசனராக வேண்டுமென்று நான் கூறிய போது அவர் தட்சணமே அதை ஆதரித்து 'அதுதான் சரி' 'அதுதான் சரி' என்று இயம்பினார்.

நான் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லி முடித்ததும் அவர் உரைத்ததாவது:—"நான் அரசியலில் தலையிடுவதில்லையென்று யாரைக் கேட்டாலும் சொல்வார்கள். ஆனால் உமது வேண்டுகோளை என்னால் மறுக்க முடியவில்லை. நீர் கூறும் விஷயம் மிக முக்கியமானது. உம்முடைய முயற்சியோ என் மனதைக் கவர்ந்து விட்டது. எனவே உமது கூட்டத்திற்கு வர மறுக்க என் மனம் இசையவில்லை. திலகரையும், கோகலேயையும் நீர் கலந்து கொண்டது நிரம்ப சரி. அவர்களுடைய இரு சபைகளின் ஆதரவிலும் நடக்கும் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியா யிருக்கும் என்று அவர்களிடம் தெரிவியுங்கள். கூட்டநேரத்தைப்பற்றி

என்னைக் கேட்டல் அவசியமில்லை. அவர்களுக்குச் சௌகரியமான நேரம் எதுவும் எனக்குச் சௌகரியமே.''

புலமை வாய்ந்தவர்களும், தன்னல மற்றவர்களுமான இப்பூனா தேச பக்தர்கள் ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி ஒரு சிறு இடத்தில் கூட்டத்தை நடத்தினார்கள். மன மகிழ்ச்சியுடனும், என் வேலையில் முன்னைவிட அதிக நம்பிக்கையுடனும் நான் பூனாவிலிருந்து புறப்பட்டேன்.

பின்னர் சென்னைக்குச் சென்றேன். அங்கே ஜனங்கள் அளவற்ற உற்சாகங் கொண்டிருந்தார்கள். பால சுந்தரத்தைப் பற்றிய விவரம் பொதுக் கூட்டத்தில் எல்லாருடைய சிந்தையையும் கவர்ந்து விட்டது. என் பிரசங்கம் அச்சிடப்பட்டிருந்தது. அது நான் வழக்கமாய்ச் செய்யும் பிரசங்கங்களை விடச் சற்று நீளமான தென்றே சொல்ல வேண்டும். அப்படி யிருந்தும் ஜனங்கள் ஒவ்வொரு மொழியையும் கவனமாகக் கேட்டார்கள். கூட்டத்தின் முடிவில் 'பச்சைப் பிரசுர'த்துக்கிருந்த கிராக்கியைச் சொல்ல முடியாது. இரண்டாவது திருத்தமான பதிப்பு 10,000 பிரதிகள் அச்சிட்டு வெளியிட்டேன். அவை ஏராளமாக விற்பனையாயின வாயினும் அவ்வளவு பிரதிகள் அச்சிட்டிருக்க வேண்டியதில்லை யென்று கண்டேன். என்னுடைய உற்சாகத்தில் கிராக்கி இவ்வளவு தான் இருக்கக் கூடுமென்பதைச் சரியாக மதிப்பிடாமற் போய் விட்டேன். என்னுடைய உபந்நியாசம் ஆங்கிலந் தெரிந்த ஜனங்களுக்கே உத்தேசிக்கப் பட்டது. சென்னையில் இவ்வகுப்பார் மட்டும் பதினாயிரம் பிரதிகளையும் வாங்கிக் கொண்டிருக்க முடியாது.

சென்னையில் எல்லாரினும் அதிகமாக எனக்கு உதவி புரிந்தவர் 'மெட்ராஸ் ஸ்டாண்டர்டு' பத்திரிகையின்

ஆசிரியரான காலஞ்சென்ற ஸ்ரீ ஜீ. பரமேசுவரம் பிள்ளை ஆவார். தென்னுப்பிரிக்கா இந்தியர் பிரச்னையைக் குறித்து அவர் நன்கு ஆராய்ச்சி செய்திருந்தார். என்னை அடிக்கடி தமது காரியாலயத்துக்கு அழைத்து வேண்டிய யோசனைகள் கூறுவார். 'ஹிந்து' ஆசிரியர் ஸ்ரீ ஜி. சுப்பிரமண்ய ஐயர், டாக்டர் சுப்பிரமண்ய ஐயர் இவர்களும் நிரம்ப அநுதாபங் காட்டினுர்கள். ஸ்ரீ ஜி. பரமேசுவரம் பிள்ளை தமது பத்திரிகையில் எனக்கு எவ்வளவு இடம் வேண்டுமானுலும் தருவதாக வாக்களித்தார். அவருடைய இவ்வுதவியை ஏற்று நான் பல கட்டுரைகள் வரைந்தேன். பச்சையப்பன் மண்டபத்தில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு டாக்டர் சுப்பிரமண்ய ஐயர் தலைமை வகித்ததாக நினைவிருக்கிறது.

நான் சந்திக்க நேர்ந்த நண்பர்களில் பெரும்பாலோர் என்னிடம் காட்டிய அன்பும், நான் எக்காரியத்திற்காக வந்தேனே அதில் அவர்கள் காட்டிய உற்சாகமும் அளவற்றனவா யிருந்தபடியால், அவர்களுடனே ஆங்கிலத்திலேயே பேச வேண்டியதா யிருந்தும், அந்நியர் மத்தியில் இருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை. அன்பென்னும் ஆயுதத்தினுல் தகர்த்தெறிய முடியாத தடையும் ஒன்றுண்டோ?

இருபத்தோன்பதாம் அத்தியாயம்

"விரைவில் திரும்புங்கள்"

சென்னையிலிருந்து கல்கத்தா சென்றேன். அங்கே என்னைத் தொல்லைகள் சூழ்ந்தன. கல்கத்தாவில் எனக்கு யாரையுந் தெரியாது. எனவே கிரேட் ஈஸ்டர்ன்

ஹோட்டலில் ஓர் அறையை ஜாகையாக ஏற்படுத்திக் கொண்டேன். இங்கு 'டெயிலி டெலிகிராப்' பத்திரிகையின் பிரதிநிதியான மிஸ்டர் எல்லர்தார்பே என்பார் எனக்குப் பழக்கமானார். அவர் பெங்கால் கிளப் என்னும் ஐரோப்பிய விடுதியில் தங்கியிருந்தார். எனவே அங்கு வரும்படி என்னை அழைத்தார். மேற்படி கிளப்பின் பிரதான அறைக்கு இந்தியரை அழைத்துக்கொண்டு போகக் கூடாதென்று அவருக்குத் தெரியாது. என்னை அழைத்துக்கொண்டு போனதும் அவருக்கு இது தெரிய வந்தது. உடனே தமது அறைக்கு என்னை அழைத்துச் சென்றார். கல்கத்தாவிலுள்ள ஆங்கிலேயர் இத்தகைய வேற்றுமை மனப்பான்மை கொண்டவரா யிருப்பது குறித்து அவர் வருத்தந் தெரிவித்தார். பிரதான அறைக்கு என்னை அழைத்துச் செல்ல முடியாதது குறித்து என்னை மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

அக்காலத்தில் வங்காளத்தின் தெய்வமாய் விளங்கியவர் சுரேந்திர நாத் பானர்ஜி. எனவே அவரை நான் பார்த்தல் அவசியமென்று சொல்ல வேண்டுவதில்லை. அவரைப் பார்க்கச் சென்றபோது அவர் பல நண்பர்களால் சூழப்பெற்றிருந்தார். அவர் கூறியதாவது:—

"உமது வேலையில் ஜனங்கள் சிரத்தை கொள்ளமாட்டார்களென்று எனக்குத் தோன்றுகிறது. இங்கே எங்களுடைய தொல்லைகள் கொஞ்சமல்ல வென்பது உமக்கே தெரியும். எனினும் இயன்ற அளவு முயற்சி செய்து பாரும். நீர் மகாராஜாக்களின் அநுதாபத்தைப் பெற முயலுதல் வேண்டும். பிரிட்டிஷ் - இந்தியச் சங்கத்தின் பிரதிநிதிகளைப் பார்க்கத் தவறிவிடாதீர். ராஜா ஸர். பியாரி மோஹன் முகர்ஜி, மகாராஜா தாகூர் இவர்களை நீர்

பார்க்க வேண்டும். அவர்கள் இருவரும் விசால புத்தி படைத்தவர்கள்; பொது வேலைகளில் ஈடுபட்டு வருபவர்கள்."

மேற்சொன்ன கனவான்களை நான் பார்த்தேன். ஆனால் பயன் ஒன்றுமில்லை. என்னை வேண்டா வெறுப்புடன் அவர்கள் வரவேற்றார்கள். கல்கத்தாவில் பொதுக் கூட்டம் நடத்துவது எளிதன்று என்றும், ஏதாவது செய்யக் கூடுமானால் சுரேந்திரநாத் பானர்ஜியால்தான் செய்ய முடியும் என்றும் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

இவ்வாறு, என் வேலை வரவரக் கஷ்டமாகி வருவதைக் கண்டேன். பின்னர் 'அமிருத பஜார் பத்திரிகை'க் காரியாலயத்துக்குப் போனேன். அங்கு நான் சந்தித்த கனவான் என்னை 'ஊர் சுற்றும் யூதன்' என்று கருதிப் போகச் சொல்லிவிட்டார். 'வங்க வாஸி' ஆசிரியரோ இன்னும் ஓர் அடி முன் சென்றார். ஒரு மணி நேரம் அவர் என்னைக் காக்க வைத்தார். அவரைப் பார்க்க பலர் வந்திருந்தனர். அவர்கள் எல்லாரும் போன பிறகும் என்மீது அவருக்குத் தயவு பிறக்கவில்லை. என்னைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் அவர் மனங் கொள்ளவில்லை. வெகு நேரம் காத்திருந்துவிட்டுக் கடைசியில் என்னுடைய விஷயத்தை எடுக்க ஆரம்பித்தேன். உடனே அவர் குறுக்கிட்டு 'எங்களுக்கு வேலை தலைக்கு மேல் இருப்பது உமக்குத் தெரியவில்லையா? உம்மைப் போல் எங்களைப் பார்க்க வருவோர் கணக்கில்லாமலிருக்கின்றனர். நீர் போய் விடுதல் நலம். உமது விஷயத்தைக் கேட்க இப்போது சௌகரியப்படாது' என்றார். ஒரு கணநேரம் எனக்குக் கோபம் வந்தது. ஆனால் உடனே பத்திரிகாசிரியரின் நிலையை உணர்ந்தேன்.

'வங்கவாஸி'ப் பத்திரிகையின் புகழைப்பற்றி நான் நிரம்பக் கேள்விப்பட்டதுண்டு. ஓயாமல் அவரைப் பார்க்க மனிதர் வந்துகொண்டிருப்பதையுங் கண்டேன். அவர்கள் எல்லாரும் அவருக்குப் பழக்கமானவர். பத்திரிகைக்கு எழுத அவருக்கு விஷயத்திற்கு குறைவில்லை. தென்னுப்பிரிக்கா சங்கதியோ அக்காலத்தில் எவருக்குந் தெரியாது.

கஷ்டப்படுபவனுக்குத் தன்னுடைய கஷ்டம் எவ்வளவோ பெரிதாகத் தோன்றலாம். ஆனல் பத்திரிகாசிரியர் ஒருவரைப் பார்க்க வருவோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறையுடனேயே வருவர். அவர்கள் எல்லாருக்கும் அவர் பதில் சொல்வதென்பது எவ்வாறு சாத்தியம்? மேலும், குறை கூறிக்கொள்ள வரும் மனிதன் நாட்டில் பத்திராதிபர் பேரதிகாரம் படைத்தவர் என்று எண்ணிக் கொள்கிறன். தமது அதிகாரம் தமது காரியாலயத்தின் வாயிற்படிக்கு வெளியே செல்லாதென்பது அவருக்கன்றே தெரியும்? ஆகவே, இந்நிகழ்ச்சியினல் நான் அதைரியம் அடைந்துவிடாமல் மற்றப் பத்திரிகைகளின் ஆசிரியன்மாரைப் பார்க்கச் சென்றேன். வழக்கம்போல் ஆங்கிலோ - இந்தியப் பத்திரிகாசிரியர்களையும் பார்த்தேன். 'ஸ்டேட்ஸ்மான்' 'இங்கிலீஷ்மான்' பத்திரிகைகள் இவ் விஷயத்தின் முக்கியத்தை உணர்ந்தன. அப்பத்திரிகைகளின் பிரதிநிதிகளிடம் நான் தெரிவித்த நீண்ட விவரங்கள் முழுதும் வெளியிடப்பட்டன.

'இங்கிலீஷ்மான்' ஆசிரியர் மிஸ்டர் ஸாண்டர்ஸ் என்பார் என்னைத் தம்முடைய சொந்த மனிதனுக ஏற்றுக் கொண்டார். அவருடைய காரியாலயத்தையும், பத்திரிகையையும் நான் எப்படி வேண்டுமானுலும் உபயோகப்

படுத்திக் கொள்ளலாமென்று சொன்னார். அவர் இவ் விஷயமாக எழுதிய தலையங்கத்தை அச்சாவதற்கு முன்பே என்னிடம் காட்டி அதில் என் விருப்பத்தின்படி மாறுதல் செய்யவும் அநுமதி கொடுத்தார். எங்கள் இருவருக்கு மிடையே நட்புரிமை தோன்றி வளர்ந்தது என்று கூறுதல் மிகையாகாது. தம்மாலியன்ற எல்லா உதவியும் எனக்குச் செய்வதாக அவர் வாக்களித்ததுடன் அவ்வாக்குறுதியை முற்றும் நிறைவேற்றி வைத்தார். அவர் நோய் வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாக ஆகும்வரை என்னுடன் கடிதப் போக்கு வரவு செய்துகொண் டிருந்தார்.

என்னுடைய வாழ்நாள் முழுவதிலும் இவ்வாறு நான் சற்றும் எதிர்பாராதவர்களுடன் நட்புரிமை பெறும் பாக்கியம் கிடைத்து வந்திருக்கிறது. எனது உண்மைப் பற்றும், மிகைப்படுத்ாது உள்ளதை உள்ளவாறே கூறும் தன்மையுமே மிஸ்டர் ஸாண்டர்ஸின் மனதைக் கவர்ந்தன. என் முயற்சியில் அவர் ஆதரவு காட்டுவ தற்கு முன்பு என்னை மிகவும் நுணுக்கமான பல கேள்விகள் கேட்டார். தென்னாப்பிரிக்கா வெள்ளைக் காரரின் கட்சியையும் நான் பாரபட்சமின்றி எடுத்துக் கூறியதைக் கண்ட பின்னரே அவர் என் முயற்சியில் அநுதாபங் கொண்டார்.

எதிரிகளுக்கும் நியாயம் செய்வதினால் மட்டுமே நாம் விரைவில் நியாயம் பெற முடியுமென்று என்னுடைய அநுபவத்தில் எனக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது.

இவ்வாறு, நான் எதிர்பாராத வகையில் மிஸ்டர் ஸாண்டர்ஸின் உதவி எனக்குக் கிடைத்தபடியால், கல்கத்தாவில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தியே விடலா

மென்று நான் நம்பிக்கை கொள்ளலானேன். ஆனால் இத்தருணத்தில் டர்பனிலிருந்து 'பார்லிமெண்ட் ஜனவரியில் கூடுகிறது. விரைவில் திரும்புங்கள்' என்ற தந்தி வந்தது.

ஆகவே, நான் கல்கத்தாவிலிருந்து அவசரமாகப் புறப் படுவதின் காரணத்தை விளக்கிப் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டுப் பம்பாய்க்குப் புறப்பட்டேன். புறப்படுவதற்கு முன், தென்னுப்பிரிக்காவுக்குப் போகும் முதல் கப்பலில் எனக்கு இடம் தயாரித்து வைக்கும்படி தாதா அப்துல்லா கம்பெனியின் பம்பாய் ஏஜண்டுக்குத் தந்தி யடித்தேன். தாதா அப்துல்லா அப்போதுதான் 'கோர்லாண்டு' என்னும் நீராவிக் கப்பலை விலைக்கு வாங்கி யிருந்தார். அக்கப்பலிலேயே நான் பிரயாணம் செய்ய வேண்டு மென்று அவர் வற்புறுத்தியதுடன், என்னையும் குடும்பத்தையும் இலவசமாக ஏற்றிக்கொண்டு போவ தாகவுங் கூறினர். இவ்வுதவியை நான் வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டேன். டிசம்பர் மாதத் தொடக்கத்தில் தென்னுப்பிரிக்காவுக்கு இரண்டாம் முறை பிரயாணமா னேன். இம்முறை என் மனைவியையும், இரு புதல்வர் களையும், விதவையான என் சகோதரியின் ஏக புதல்வனையும் அழைத்துச் சென்றேன். அதே காலத்தில் டர்பனுக்கு 'நாடேரி' என்னும் மற்ருெரு நீராவிக் கப்பலும் புறப் பட்டது. இக்கப்பல் கம்பெனியின் ஏஜண்டுகள் தாதா அப்துல்லா கம்பெனியாரே யாவர். இவ்விரு கப்பல் களிலும் சுமார் எண்ணூறு பிரயாணிகள் இருந்திருக்க வேண்டும். இவர்களில் பாதிபேர் டிரான்ஸ்வாலுக்குச் செல்பவர்.

சத்திய சோதனை

மூன்றும் பாகம்

முதலாம் அத்தியாயம்

புயலின் குமுறல்

மனைவி, குழந்தைகளுடன் நான் பிரயாணம் செய்தது இதுவே முதன்முறை. ஹிந்துக்களில் மத்திய வகுப்பாரில் குழந்தைப் பருவத்திலேயே மணஞ்செய்து விடும் ஏற்பாட்டைப்பற்றியும், இதன் பயனாகக் கணவன் படித்தவனாயினும், மனைவி எழுத்து வாசனை யறியாதவளாயு மிருப்பது குறித்தும் இச்சரித்திரத்தில் அடிக்கடி கூறி வந்திருக்கிறேன். இவ்வாறு இவ்விருவருடைய வாழ்க்கைகளையும் ஒரு பெரும் அகழ் பிரித்து நிற்பதால் கணவன், மனைவியின் உபாத்தியாயனாகவேண்டி வருகிறது. எனவே, என் மனைவியும் குழந்தைகளும் என்னென்ன முறையில் உடையணிய வேண்டுமென்பது குறித்தும், அவர்கள் அருந்த வேண்டிய உணவு, புதிய இடத்தில் அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதம் முதலியவை குறித்தும் நானே சிந்தித்து முடிவு செய்யவேண்டியிருந்தது. அக்காலத்திய ஞாபகங்கள் பல இப்போது நகைப்பூட்டுவனவா யிருக்கின்றன.

ஹிந்துக்களில் மனைவியானவள் பதி சொல் இம்மியளவும் தவருது கீழ்ப்படிந்து நடப்பதே சிறந்த சமய நெறி என்று கருதுகிருள். கணவனே மனைவியை அடிமை கொண்ட எஜமானனுகத் தன்னை எண்ணி, அவள் தான் காலாலிட்டதைத் தலையால் செய்யக் கடமைப்பட்டவள் எனக் கருதுகிருன்.

அக்காலத்தில், நாங்கள் நாகரிகமடைந்தவர்களாகக் காணப்பட வேண்டுமானால், நடை உடை பாவனைகள் கூடியவரை ஐரோப்பிய முறையை யொட்டியவையா

யிருக்க வேண்டுமென்று நான் கருதினேன். அப்படியிருந்தால்தான் எங்களுக்குக் கொஞ்சம் செல்வாக்கு உண்டாகுமென்றும், செல்வாக்கில்லாவிடில் தென்னுப்பிரிக்கா இந்தியர்களுக்கு எவ்வித நன்மையும் செய்ய முடியாதென்றும் எண்ணினேன்.

ஆகவே, என் மனைவியும், குழந்தைகளும் எவ்வாறு உடையணிய வேண்டுமென்று தீர்மானித்தேன். அவர்கள் கத்தியவார் வைசியர்களாகக் காணப்படுவது எனக்குப் பிடிக்கவில்லை. அப்போது இந்தியர்களுக்குள் பார்ஸி சாதியார் மிக நாகரிக மடைந்தவர்களாகக் கருதப்பட்டார்கள். ஆதலின் முழு ஐரோப்பிய உடை சரிப்படாது என்று தெரிந்ததும் பார்ஸி முறையில் உடை தரிக்கச் செய்வதென்று தீர்மானித்தேன். எனவே என் மனைவி பார்ஸி மாதர் அணியும் புடவையும், குழந்தைகள் பார்ஸிகளைப் போன்று மேற்சட்டை கால்சட்டையும் அணிந்தார்கள். காலுறைகளும் ஜோடுகளும் எல்லாருக்கும் இன்றியமையாதன என்று சொல்லவேண்டுவதில்லை. என் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் அவை பழக்கமாவதற்கு நீண்ட நாளாயிற்று. ஜோடுகளால் இறுக்கப்பட்டுப் பாதங்கள் நசுங்கின. காலுறைகள் வியர்வையால் நனைந்து நாற்றமெடுத்தன. கால் விரல்களோ அடிக்கடி புண்ணுயின. இத்தகைய ஆட்சேபங்களுக்கு நான் பதில்கள் தயாராக வைத்திருந்தேன். ஆனால் இந்தப் பதில்களினல் அவர்கள் திருப்தியடையவில்லை என்றும் என் அதிகாரத்துக்குப் பயந்தே அவற்றை அணிந்தார்களென்றும் எண்ணுகிறேன். வேறு வழியில்லாததாலேயே அவர்கள் உடை மாறுதலுக்குச் சம்மதித்தார்கள். இவ்வாறே, இன்னும் அதிக வேண்டாவெறுப்பாய்க் கத்தி, முள் இவற்றை

உபயோகித்துச் சாப்பிட இணங்கினார்கள். இத்தகைய நாகரிக சின்னங்களில் எனக்குப் பைத்தியம் நீங்கியபோது கத்தி, முள் முதலியவற்றை அவர்கள் விடுத்தார்கள். ஆனால் புதிய முறைகளைக் கைக்கொள்ளும்போது கஷ்டமாயிருந்ததுபோலவே, நீண்ட நாள் பழகிப்போன பின்னர் பழைய முறைகளுக்குத் திரும்புவதும் கஷ்டமாயிருந்தது. எனினும் இன்றையதினம் மேற்படி 'நாகரிக'ப் பகட்டுப் பொருள்களைத் தலையைச் சுற்றி எறிந்துவிட்டதன் நிமித்தம் நாங்கள் பெரிய சுமை நீங்கி விடுதலை பெற்றதாகவே எண்ணி மகிழ்கிறோம்.

அதே கப்பலில் எங்கள் உறவினர் சிலரும், மற்றும் பழக்கமானவர் சிலரும் பிரயாணம் செய்தனர். அவர்களையும் மற்றும் மேற்றட்டில் இருந்த பிரயாணிகளையும் நான் அடிக்கடி சந்தித்துப் பேசினேன். கப்பல் என் கட்சிக்காரரின் நண்பர்களுக்குச் சொந்தமானதாகையால் நான் எங்கும் தங்கு தடையின்றிப் போகக் கூடியதாயிருந்தது.

கப்பல் இடையிலுள்ள துறைமுகங்களில் தங்காமல் நேரே சென்றபடியால் பதினெட்டு நாளில் நேட்டால் போய்ச் சேர்ந்தோம். ஆனால் தரையில் நாங்கள் இறங்கியதும் அடிக்க விருந்த உண்மைப் பெரும்புயலைப் பற்றிய எச்சரிக்கையேபோல், நேட்டாலுக்கு நான்கு நாள் பிரயாண தூரத்தில், கடலில் ஒரு பெருங் காற்றில் அகப்பட்டுக் கொண்டோம். அதுவே டிசம்பர் மாதம். உலகில் தென் பகுதிக்கு அது கோடைகாலம்; காற்றடிக்கும் காலம். எனவே அப்பிர தேசத்தில் அப்போது பெருங் காற்றுகள் சர்வ சாதாரணம். நாங்கள் அகப்பட்டுக் கொண்ட காற்று மிகப் பலமாக வீசியபடியாலும் நீண்ட

காலம் நீடித்திருந்தபடியாலும் பிரயாணிகளுக்குப் பய முண்டாகிவிட்டது. அது பக்தியும், பயங்கரமும் பொருந்திய காட்சியாகும். எல்லாருக்கும் பொதுவான பெரும் விபத்தின் முன்பு அனைவரும் ஒன்றுபட்டு நின்றனர். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஏகனான ஆண்டவனைச் சிந்திக்கலானார்கள். பலர் பற்பல 'வேண்டுதல்'கள் செய்து கொண்டனர். கப்பற்றலைவரும் பிரயாணிகளுடன் சேர்ந்து ஆண்டவனைப் பிரார்த்தித்தார். மற்றும் அவர் இந்தப் புயலில் அபாயம் இல்லையென்று கூற முடியாதாயினும் இதைவிட அபாயகரமான புயல்களைத் தாம் பார்த்திருப்பதாகவும், நன்கு கட்டப்பட்ட கப்பல் எவ்வளவு பெரும் புயலையும் சமாளித்துக்கொள்ளும் என்றும் தைரியம் சொன்னார். ஆனால் பிரயாணிகளுக்கு இதனாலெல்லாம் ஆறுதல் உண்டாகவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் காற்றின் வேகத்தால் மோதப்பட்டுக் கப்பலில் பல விடங்களிலும் 'கிறீச்' 'கிறீச்' என்ற சத்தமும், முறியும் சத்தமும் உண்டாயின. கப்பலில் எந்த நிமிஷமும் துவாரம் ஏற்பட்டுத் தண்ணீர் உட்புகுந்து விடலாமென்பதை இச்சத்தங்கள் நினைவூட்டி வந்தன. கப்பல் அப்படியும் இப்படியும் பலமாக அசைந்தபடியால் எந்தக் கணமும் அது கவிழ்ந்தே விடலாமென்றும் தோன்றியது. எவரும் இத்தகைய தருணத்தில் கப்பல் மேற்றளத்தில் இருக்கத் துணியமாட்டார்கள் என்று சொல்ல வேண்டுவதில்லை. 'எல்லாம் ஆண்டவன் சித்தம்' என்று அச்சமயத்தில் சொல்லாதவரில்லை. இந்த நிலைமை 24 மணி நேரம் நீடித்திருந்ததாக ஞாபகமிருக்கிறது. கடைசியில் வானம் வெளி வாங்கிற்று. கதிரவன் தரிசனந் தந்தான். புயல் அடித்து ஓய்ந்துவிட்டதென்று கப்பற்றலைவர் கூறினார். ஜனங்களின் முகத்தில்

மகிழ்ச்சி தாண்டவமாடிற்று. ஆபத்து விலகவே ஆண்டவன் நாமத்தையும் மறந்தனர்; உண்ணுதல், குடித்தல், ஆட்டம், பாட்டம் முதலிய களியாட்டங்களில் ஈடுபட்டனர். மரண பயம் விலகியதும் ஹிருதய பூர்வமாய் ஆண்டவனைச் சிந்தித்ததுபோய் மீண்டும் மாயை வந்து மூடிக்கொண்டது. வழக்கம்போல் நமாஸ்களும், பிரார்த்தனைகளும் நடவாமலில்லை. ஆனால் அந்த நேரத்தில் இருந்த பக்தியும், சிரத்தையும் அப்புறம் இல்லை.

ஆனால் இந்தப்புயல் என்னை மற்றப் பிரயாணிகளுடன் சேர்த்துப் பிணைத்து விட்டது. இத்தகைய புயல்கள் பலவற்றை நான் முன்னமே பார்த்திருந்தபடியால் எனக்கு அச்சமுண்டாகவில்லை. மேலும் கடற் பிரயாணம் எனக்குப் பிடித்துப் போயிருந்தது. கடல் நோய் எனக்கு வருவதில்லை. எனவே நான் பயம் எதுவுமின்றிப் பிரயாணிகளின் இடையே அடிக்கடி சென்று தைரிய மூட்டிக்கொண்டும், ஒவ்வொரு மணியும் கப்பற்றலைவர் புயல் நிலையைபற்றி அறிவித்த செய்திகளை அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டுமிருந்தேன். இவ்வாறு நான் எல்லாருடனும் நட்புக்கொண்டது எனக்கு எவ்வளவு தூரம் தருணத்தில் கைகொடுத்தது என்பதைப் பின்னால் பார்ப்போம்.

டிசம்பர் 18-ந்தேதியோ, 19-ந்தேதியோ கப்பல் டர்பன் துறைமுகத்தை அடைந்து நங்கூரம் போட்டது. 'நாடேரி' கப்பலும் அதே நாளன்று வந்து சேர்ந்தது.

ஆனால் உண்மைப் புயல் இனிமேலேயே அடிக்கவிருந்தது.

இரண்டாம் அத்தியாயம்

புயல்

டிசம்பர் மீ 18-ந்தேதியன்றோ, அதற்கு முன்பின் தேதிகளிலோ டர்பன் துறைமுகத்தில் இரண்டு கப்பல்களும் நங்கூரம் பாய்ச்சி நின்றன என்று சென்ற அத்தியாயத்தின் இறுதியில் கூறப்பட்டது. தென்னுப்பிரிக்கா துறைமுகங்கள் எல்லாவற்றிலும் நன்றாக வைத்திய பரிசோதனை செய்யப்படுவதற்கு முன்னால் பிரயாணிகள் எவரும் இறங்க விடப்படுவதில்லை. கப்பலில் தொற்று நோய் உடைய பிரயாணி ஒருவர் இருந்துவிட்டால் அந்தக் கப்பல் குறிப்பிட்ட காலம்வரை வைத்திய பரிசோதனையின் கீழ் இருத்தல் வேண்டும். பம்பாயில் நாங்கள் புறப்படும்போது பிளேக் நோய் பரவியிருந்தபடியால் கப்பலிலிருந்து இறங்குவதற்கு முன் சிறிது காலம் காத்திருக்க நேரிடலாமென நாங்கள் அஞ்சினோம். வைத்திய பரிசோதனை முடிந்து டாக்டர் அத்தாட்சிப் பத்திரம் கொடுக்கும் வரையில் ஒவ்வொரு கப்பலும் ஒரு மஞ்சள் நிறக் கொடியைப் பறக்கவிட வேண்டும், மஞ்சள் கொடி இறக்கப்பட்ட பின்னரே பிரயாணிகளின் நண்பர்கள், உறவினர் முதலியோர் கப்பலுக்குள் வந்து பார்க்கலாம்.

முறைப்படி எங்கள் கப்பலிலும் மஞ்சள்கொடி பறக்க விடப்பட்டிருந்தது. டாக்டர் வந்து பரிசோதனை செய்தார். பிளேக் கிருமிகள் வளர்ச்சி யுறுவதற்கு 23 தினங்கள் செல்லுமென அவர் அபிப்பிராயப்பட்ட படியாலும், நாங்கள் பம்பாயிலிருந்து புறப்பட்டு 18 நாளே ஆகியிருந்தபடியாலும், இன்னும் ஐந்து நாள் வைத்திய பரிசோதனையின் கீழ் இருந்த பின்னரே பிரயாணிகள்

இறங்கலாமென்று அவர் உத்தரவு பிறப்பித்தார். ஆனால் இந்த உத்திரவு சுகாதார நோக்கத்தைமட்டும் காரணமாகக் கொண்டதன்று. அதற்கு வேறு காரணங்களும் இருந்தன.

டர்பன் நகரில் வெள்ளைக்காரர்கள் எங்களை இறங்க விடாமலே திருப்பி யனுப்பிவிட வேண்டுமென்று கிளர்ச்சி செய்துகொண் டிருந்தார்கள். மேற்படி உத்தரவுக்கு இது ஒரு காரணமாகும். தினந்தோறும் நகரில் நடக்கும் விசேஷங்களை தாதா அப்துல்லா கம்பெனியார் எங்களுக்குத் தவறாது தெரிவித்துக்கொண்டு வந்தனர். ஒவ்வொரு நாளும் வெள்ளைக் காரரின் பெருங் கூட்டங்கள் நடைபெற்றனவாம். தாதா அப்துல்லா கம்பெனியை அவர்கள் பலவகையாகப் பயமுறுத்தினார்களாம். அத்துடன் சில சமயம் ஆசையும் காட்டினார்களாம். இரண்டு கப்பல்களையும் திருப்பி யனுப்பிவிட்டால் கம்பெனிக்கு நஷ்டஈடு செய்து விடுவதாகச் சொன்னார்களாம். ஆனால் தாதா அப்துல்லா கம்பெனியார் பயமுறுத்தல்களுக்கு அஞ்சுகிறவர்களல்லர். அப்போது கம்பெனியை நிர்வகித்து வந்தவர் கம்பெனியின் கூட்டாளியான சேத் அப்துல் கரீம் ஹாஜி ஆதம் என்பார். என்ன நேர்வதாயிருந்தாலும் பிரயாணிகளை இறக்கியே விடுவதென்று அவர் தீர்மானித்திருந்தார். தினந்தோறும் அவர் எனக்கு விவரமான கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தார். காலஞ்சென்ற ஸ்ரீ மனுசுக்லல் நாஸார் அதிர்ஷ்டவசமாக அப்போது என்னைப் பார்ப்பதற்கென்று டர்பனுக்கு வந்திருந்தார். அவர் திறமைசாலி; அஞ்சா நெஞ்சம் படைத்தவர். டர்பன் இந்தியர்களுக்கு அவர் வழி காட்டினார். இந்திய சமூகத்தின் வக்கீலான மிஸ்டர் லாப்டனும் அஞ்சாமை

யுள்ளவர். வெள்ளைக்காரர்களின் நடத்தையை அவர் பலமாகக் கண்டித்தார். இந்தியர்களுக்கு, அவர்களிடம் பணம் பெறும் வக்கீல் என்ற முறையில் மட்டுமன்றி அவர்களுடைய உண்மை நண்பராக அவர் ஆலோசனை சொல்லி வந்தார்.

இவ்வாறு டர்பன் நகரம் சமவலிமை இல்லாத இரு கட்சியினரின் போர்க்களம் ஆயிற்று. ஒரு புறத்தில் சிறு தொகையினரான ஏழை இந்தியர்களும், அவர்களுடைய நண்பர் ஒரு சிலரும்; இன்னொரு புறத்திலோ பலசாலி களும், தொகையில் பெருத்தவர்களும், கல்வியிலும் செல் வத்திலும் மேம்பட்டவர்களுமான வெள்ளைக்காரர்கள். இவர்களுக்கு அரசாங்கத்தின் துணையும் இருந்தது. நேட்டால் அரசாங்கத்தார் பகிரங்கமாக அவர்களுக்கு உதவி செய்தனர். மந்திரிகளுக்குள் செல்வாக்கு மிகுந்தவ ரான மிஸ்டர் ஹாரி எஸ்கோம்ப் அவர்களுடைய கூட்டங்களுக்கு வெளிப்படையாகச் சென்று கலந்து கொண்டார்.

இவ்வாறாக, எங்களைத் துறைமுகத்தில் ஐந்து நாள் நிறுத்தியதன் உண்மைக் காரணம், எங்களைப் பயமுறுத் தியோ, கம்பெனியைப் பயமுறுத்தியோ இந்தியாவுக்குத் திரும்பிப்போகச் செய்துவிட வேண்டுமென்பதே யென விளங்கிற்று. எங்களுக்கும் அச்சுறுத்தும் கடிதங்கள் வரத் தொடங்கின. "நீங்கள் திரும்பிப் போகாவிடின் கடலில் தள்ளப்படுவீர்கள் என்பது நிச்சயம். திரும்பிப் போகச் சம்மதித்தாலோ பிரயாணச் செலவுப் பணம் திருப்பிக் கொடுக்கவும் படலாம்" என்று அக்கடிதங்கள் கூறின. கப்பலிலிருந்த மற்றப் பிரயாணிகளிடையே நான்

அடிக்கடி சென்று அவர்களுக்குத் தைரியமூட்டி வந்தேன். 'நாடேரி' கப்பலின் பிரயாணிகளுக்கும் ஆறுதல் செய்திகள் அனுப்பினேன். எல்லாரும் தைரியத்துடன் அமைதியாக இருந்தார்கள்.

பிரயாணிகளின் பொழுது போக்குக்காகப் பலவகை விளையாட்டுகளை ஏற்படுத்தினோம். கிறிஸ்மஸ் தினத்தன்று கப்பற்றலைவர் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளை விருந்துண்ண அழைத்தார். நானும் என் குடும்பத்தாரும் விருந்தினரில் முக்கியமானவர். விருந்துக்குப் பின்னர் நான் பேசவேண்டிய முறை வந்தபோது 'மேனாட்டு நாகரிகம்' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசினேன். அது களியாட்டத்துக்குரிய தருணமென்றும், ஆழ்ந்த சிந்தனைக்குரிய விஷயத்தைப்பற்றிப் பேசும் சந்தர்ப்ப மன்றென்றும் எனக்குத் தெரியும். ஆனால் என் பேச்சு வேறு விதமாயிருந்திருக்க முடியாது. நான் களியாட்டத்தில் மேலுக்குக் கலந்து கொண்டிருந்தேனே யன்றி என் உள்ளம் டர்பனில் நடந்துகொண்டிருந்த போராட்டத்திலேயே ஈடுபட்டிருந்தது. ஏனெனில் அப் போராட்டம் உண்மையில் என்னை உத்தேசித்தன்றோ நடத்தப்பட்டது? என்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றங்கள் இரண்டு :—

(1) இந்தியாவிலிருந்தபோது நான் நேட்டால் வெள்ளைக்காரரை இல்லாததும் பொல்லாததும் சொல்லிக் கண்டித்தே னென்பது ;

(2) நேட்டாலை இந்திய மயமாக்கிவிடும் எண்ணத்துடன் இரண்டு கப்பல் நிறையப் பிரயாணிகளை அழைத்துக்கொண்டு வந்திருந்தே னென்பது.

என் பொறுப்பை நான் நன்குணர்ந்திருந்தேன். என் நிமித்தம் தாதா அப்துல்லா கம்பனியார் பெரும் அபாயங்களுக் குள்ளாகி யிருந்தார்கள் என்பதும், பிரயாணிகளின் உயிர்களுக்கே ஆபத்து நேரலாமென்பதும், என்னுடைய குடும்பத்தை என்னுடன் அழைத்துக் கொண்டுவந்து அவர்களையும் ஆபத்தான நிலையில் வைத்து விட்டேனென்பதும் எனக்கு நன்கு தெரிந்திருந்தன.

ஆனால் நான் நிரபராதி. நேட்டாலுக்கு வரும்படி ஒருவரையேனும் நான் தூண்டியவனல்லன். பிரயாணிகள் கப்பலில் ஏறியபோது அவர்களைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. இரண்டொரு உறவினரைத்தவிர மற்றப்படி நூற்றுக்கணக்கான அப்பிரயாணிகளில் ஒருவருடைய பெயர், விலாசங்கூட நான் அறியமாட்டேன். மற்றும் இந்தியாவில் இருந்தபோது, நேட்டால் வெள்ளைக்காரர் களைப்பற்றி நேட்டாலிலேயே நான் சொல்லாத ஒரு வார்த்தையும் சொன்னதில்லை. அவர்களைப்பற்றி உண்மை யில் நான் கூறியவற்றிற்கெல்லாம் ஏராளமான சாட்சி யங்கள் இருந்தன.

ஆகையினாலேயே மேனாட்டு நாகரிகத்தின் நிலை குறித்து நான் வருந்தினேன். நேட்டால் வெள்ளைக் காரர் அந் நாகரிக விருட்சத்தின் கனிகளேயாவர். அவர்கள் அந்நாகரிகத்தின் பிரதிநிதிகள்; அந் நாகரி கத்தை ஆதரிப்பவர்கள். நீண்ட நாளாக இந்நாகரிகம் என் உள்ளத்தை அலைத்துக்கொண்டிருந்தது. இப்போது அச்சிறு கூட்டத்தின் முன்பு அதைப்பற்றி என் கருத்துக்களை வெளியிட்டேன். கப்பற்றலைவரும், மற்ற நண்பர்களும் என்னுடைய மொழிகளுக்குப் பொறுமை யுடன் செவி கொடுத்தனர். நல்ல நோக்கத்துடன் நான்

பேசியதுபோல் அவர்களும் நன்னோக்கத்துடன் என் பேச்சைக் கேட்டனர். இதன் பயனாக அவர்களுடைய வாழ்வுப் போக்கில் எத்தகைய மாறுதலேனும் ஏற்பட்டதா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதற்குப் பின்னரும் கப்பற்றலைவருடனும், மற்ற கப்பல் உத்தியோகஸ்தர்களுடனும் மேனாட்டு நாகரிகத்தைப்பற்றி நீண்டநேரம் சம்பாஷித்தேன். மேற்குறிப்பிட்ட பிரசங்கத்தில்'மேனாட்டு நாகரிகம், கீழ்நாட்டு நாகரிகத்தைப் போலன்றிப் பெரிதும் பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கூறியிருந்தேன். இவ்விஷயத்தில் என் கொள்கையை என்னாலேயே நிறைவேற்றி வைக்க முடியுமாவென அவர்கள் வினவினார்கள். ஒருவர்—கப்பற்றலைவர் என்றே ஞாபகம்—"வெள்ளைக்காரர்கள் தாங்கள் பயமுறுத்துகிறபடியே காரியத்திலும் செய்தார்களாயின் நீங்கள் அஹிம்சைக் கொள்கையை எவ்வாறு நிலைநிறுத்துவீர்கள்?" என்று வினவினர். நான் பின் வருமாறு பதிலளித்தேன்:—"அவர்களை மன்னிப்பதற்கும், சட்டப்படி வழக்குத் தொடராதிருப்பதற்கும் வேண்டிய நல்லுணர்வையும், தைரியத்தையும் இறைவன் எனக்கு அளிப்பாரெனவே நம்புகிறேன். அவர்கள்மீது எனக்குக் கோபமில்லை. அவர்களுடைய அறியாமைக்காகவும், குறுகிய நோக்கத்துக்காகவும் வருந்துகிறேனேயன்றி வேறில்லை. தாங்கள் இன்றைய தினம் செய்யும் காரியம் முறையானது, நியாயமானது' என்று அவர்கள் மனப்பூர்வமாக நம்புகிறார்களென அறிவேன். ஆதலின் அவர்கள்மீது கோபித்துக்கொள்வதற்குக் காரணம் எதுவுமில்லை."

கேள்வி கேட்டவர் புன்னகை புரிந்தார். நான் கூறியவற்றை அவர் நம்பவில்லை யென்பதற்கு அப்புன்னகை

அறிகுறி போலும். இவ்வாறு நாட்கள் கழிந்துகொண்டிருந்தன. எத்தனை நாள் காத்திருக்க வேண்டுமென்பது இன்னும் நிச்சய மாகாமலே இருந்தது. வைத்திய பரிசோதனை அதிகாரி, விஷயம் தம் கையைத் தாண்டிப் போய்விட்டதென்றும், அரசாங்கத்தாரிடமிருந்து உத்தரவு வந்ததும் கீழிறங்க அநுமதி கொடுத்து விடுவதாகவும் கூறினார்.

கடைசியாக, எனக்கும் மற்றப் பிரயாணிகளுக்கும் இறுதிச் செய்திகள் அனுப்பப்பட்டன. உயிர் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் பணிந்து விடும்படியாகச் சொல்லப்பட்டோம். பிரயாணிகளும் நானும் அதற்கிறுத்த விடையில் நேட்டால் துறைமுகத்தில் இறங்க எங்களுக்கு உரிமை யுண்டென்பதை வலியுறுத்தியதுடன், என்ன வரினும் நேட்டாலில் இறங்கி எங்கள் உரிமையை நிலை நாட்ட உறுதிகொண் டிருப்பதாகத் தெரிவித்தோம்.

இருபத்துமூன்று நாள் ஆனதும் கப்பல்கள் 'ஹார்பரு'க்குள் வர அநுமதிக்கப்பட்டன. பிரயாணிகளை இறங்க அநுமதித்து உத்தரவுகளும் பிறப்பிக்கப் பட்டன.

மூன்றும் அத்தியாயம்

சோதனை

கப்பல்கள் கரையோரமாகக் கொண்டுபோய் நிறுத்தப் பட்டன. பிரயாணிகள் இறங்கத் தொடங்கினார்கள். ஆனால் கப்பற்றலைவருக்கு மிஸ்டர் எஸ்கோம்ப் ஒரு செய்தி யனுப்பி யிருந்தார். என் மீது வெள்ளைக்காரர்கள் மிகவும்

கோபங்கொண் டிருக்கிறார்களென்றும், என் உயிருக்கே அபாயம் நேரிடலாமென்றும், ஆதலின் என்னையும், என் குடும்பத்தாரையும் இருட்டிய பின்னர் இறங்கச் சொல்ல வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் துறைமுகத் தலைமை உத்தியோகஸ்தர் மிஸ்டர் டாடம் என்பவர் எங்கள் வீட்டுக்குப் பத்திரமாய் அழைத்துக்கொண்டு போய் விடுவாரென்றும் அவர் சொல்லியனுப்பியிருந்தார். கப்பற்றலைவர் இச்செய்தியை என்னிடம் தெரிவித்தபோது அதன்படி நடக்க நான் இணங்கினேன். ஆனால் அரை மணி நேரத்திற்கெல்லாம் மிஸ்டர் லாப்டன் கப்பலுக்கு வந்து சேர்ந்தார். அவர் கப்பற்றலைவரிடம் கூறியதாவது:—"மிஸ்டர் காந்திக்கு ஆட்சேபம் இரா விடில் அவரை என்னுடன் அழைத்துச் செல்ல விரும்பு கிறேன். இந்தக் கப்பல் சொந்தக்காரர்களின் வக்கீல் நானாகையால், மிஸ்டர் எஸ்கோம்பின் யோசனைப்படி நீர் நடத்தல் கட்டாயமன்று." பின்னர் அவர் என்னிடம் வந்து சொன்னதாவது:—"உங்களுக்குப் பயமா யிரா விடில் உங்கள் மனைவியையும் குழந்தைகளையும் வண்டியில் மிஸ்டர் ரஸ்டம்ஜியின் வீட்டுக்கு அனுப்பிவிட்டு நாமிரு வரும் பின்னால் நடந்து செல்லலாம். திருடனைப்போல் இரவில் நகரில் நுழையும் யோசனை எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. உமக்கு யாரேனும் தீங்கு செய்வார்க ளென நான் நினைக்கவில்லை. இப்போது எல்லாம் அமைதியா யிருக்கிறது. வெள்ளைக்காரர்கள் அவரவர் வீடு சென்று விட்டார்கள். இது எங்ஙனமாயினும் நீர் இரகசியமாக நகரில் பிரவேசித்தல் கூடவே கூடா தென்பது என் உறுதியான அபிப்பிராயம்." அவர் வார்த்தைக்கு நான் உடனே இணங்கினேன். என் மனைவியும், குழந்தைகளும் வண்டியில் பத்திரமாக

ஸ்ரீ ரஸ்டம்ஜியின் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். கப்பற் றலைவரிடம் அநுமதி பெற்றுக்கொண்டு மிஸ்டர் லாப்டனுடன் நான் கரையிலிறங்கிச் சென்றேன். துறைமுகத்திலிருந்து ஸ்ரீ ரஸ்டம்ஜியின் வீடு இரண்டு மைல் தூரத்திலிருந்தது.

நாங்கள் கப்பலிலிருந்து இறங்கியதும் சிறுவர் சிலர் என்னைப் பார்த்து தெரிந்துகொண்டு 'காந்தி, காந்தி' என்று கூச்சலிட்டனர் அதைக் கேட்டு ஐந்தாறு மனிதர் ஓடிவந்து அவர்களுடன் சேர்ந்து கூச்சலிடத் தொடங்கினர். கூட்டம் பெரிதாகிவிடக் கூடுமென மிஸ்டர் லாப்டன் அஞ்சினர். எனவே ரிக்ஷா வண்டி ஒன்றைக் கூவி அழைத்தார். ரிக்ஷா வண்டியில் ஏறுதல் எனக்குப் பிடிப்பதே இல்லை. முதன்முறை இப்போதே ரிக்ஷாவில் ஏறவேண்டி இருந்தது. ஆனால் அதில் ஏறுவதற்கு அங்கு நின்ற சிறுவர்கள் இடங் கொடுக்கவில்லை. ரிக்ஷா வண்டிக்காரப் பையனை அவர்கள் பெரிதும் பயமுறுத்திவிடவே அவன் ஓட்டம் பிடித்தான். நாங்கள் மேலே செல்லச் செல்லக் கூட்டமும் பெருகிக்கொண்டு வந்தது. கடைசியில் மேலே நடப்பது இயலாத காரியமாயிற்று. முதலில் அவர்கள் மிஸ்டர் லாப்டனைப் பிடித்து இழுத்து என்னிடமிருந்து பிரித்துவிட்டார்கள். பின்னர் என்மீது கற்களையும் அழுகிய முட்டைகளையும் எறிந்தார்கள். ஒருவர் என் தலைப்பாகையைப் பிடுங்கிக் கொண்டார். மற்றவர்கள் என்னை அடிக்கவும், உதைக்கவும் ஆரம்பித்தார்கள். நான் முற்றும் களைப்புற்றேன். கீழே விழாதிருக்கும் பொருட்டு அங்கிருந்த வீட்டின் முன்புற வேலிக் கம்பிகளையும் பிடித்துக்கொண்டு நின்றேன். சற்றே மூச்சு விடலாமென்று நினைத்தேன்.

ஆனால் அது முடியவில்லை. மேலும் மேலும் அவர்கள் நெருங்கி என்னைத் தாக்கினார்கள். அச்சமயத்தில், போலீஸ் சூபரிண்டெண்டெண்டு மிஸ்டர் அலெக்ஸாண்டரின் மனைவியார் அவ்வழியே சென்றார். அவர் என்னை அறிவார். தீரமுள்ள அப் பெண்மணி என்னருகே வந்து, அப்போது வெய்யில் இல்லையாயினும் தமது குடையைப் பிரித்துக்கொண்டு எனக்கும், கூட்டத்துக்கும் நடுவில் நின்றார். ஜனக் கூட்டத்தின் கோபவெறி இதனால் தடைபட்டது. மிஸ்ஸஸ் அலெக்ஸாண்டர்மீது படாமல் என்னை அடிப்பது அவர்களுக்குக் கஷ்டமாயிருந்தது.

இதற்குள், இந்நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த இந்திய இளைஞர் ஒருவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடி விவரம் அறிவித்தார். போலீஸ் தலைவர் மிஸ்டர் அலெக்ஸாண்டர் உடனே சில சேவகர்களை என் துணைக்கு அனுப்பினார். என்னைச் சுற்றி வளையம்போல் நின்று பத்திரமாக நான் போகவேண்டிய இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு வரும்படி அவர் சொல்லி யனுப்பினார். நல்ல சமயத்தில் அவர்கள் வந்து சேர்ந்தார்கள். நாங்கள் சென்ற வழியிலேயே போலீஸ் ஸ்டேஷனும் இருந்தது. அங்கே போனதும் ஸ்டேஷனிலேயே அடைக்கலம் புகுந்துவிடும்படி மிஸ்டர் அலெக்ஸாண்டர் சொன்னார். நான் அவருக்கு நன்றி கூறிவிட்டு அதை மறுத்துவிட்டேன். "அவர்கள் தங்கள் தவறினை உணரும்போது சாந்தமடைவார்க ளென்பது நிச்சயம். அவர்களுடைய நியாய புத்தியில் எனக்கு நம்பிக்கை யிருக்கிறது" என்றேன். பின்னர் வேறு அபாயமின்றி போலீஸ் துணையுடன் மிஸ்டர் ரஸ்டம்ஜியின் வீடுபோய்ச் சேர்ந்தேன். பட்ட அடியினால் உடம்பெல்லாம் தழும்பேறி இருந்த

தாயினும் ஓர் இடத்தில்தான் பலமான காயம் ஏற்பட்டிருந்தது. அங்கிருந்த கப்பலின் வைத்தியர் ஸ்ரீ தாதிபர்ஜார் இயன்ற உதவிசெய்தார்.

வீட்டினுள்ளே அமைதி குடிகொண்டிருந்தது. ஆனால் வீட்டுக்கு வெளியே வெள்ளைக்காரர் சூழ்ந்து கொண்டிருந்தனர். இரவும் வரலாயிற்று. 'காந்தியை வெளியே அனுப்புங்கள்' என்ற கூச்சல் பலமாக எழுந்தது. நிலைமையை விரைவில் அறியும் ஆற்றல் வாய்ந்தவரான போலீஸ் தலைவர் இதற்குள் அங்கே வந்து ஜனக்கூட்டம் தீச்செயலில் இறங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார். அவர்களைப் பயமுறுத்துதல் இச்சமயத்தில் பயன்படாதெனக் கண்டு அவர்களைக் 'குஷி'ப் படுத்தி வைத்துக் கொண்டிருக்க முயன்றார். ஆயினும் அவருக்குக் கவலையில்லாமலில்லை. எனக்கு அவர் பின்வருமாறு சொல்லியனுப்பினார்: 'உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்ற விரும்பினால் நீங்கள் மாறுவேடம் பூண்டு இவ்வீட்டை விட்டுத் தப்பிச் செல்வது அவசியம்."

இவ்வாறாக, இந்த ஒரே நாளில் ஒன்றுக்கொன்று நேர்மாறான இரண்டு நிலைகள் எனக்கு ஏற்பட்டன. உயிருக்கு அபாயம் நேரிடலாமென்பது வெறும் உத்தேசமாக மட்டுமிருந்தபோது மிஸ்டர் லாப்டன் என்னைப் பகிரங்கமாக வெளிக்கிளம்பும்படி சொன்னார். அவருடைய யோசனையை நான் ஏற்று நடந்தேன். அபாயம் நிச்சயமென்னும் நிலை ஏற்பட்டபோது மற்றொரு நண்பர் நேர்மாறான யோசனை கூறினார். அதையும் நான் ஏற்று நடந்தேன். என் உயிருக்கு அபாயத்தை முன்னிட்டே அப்படிச் செய்தேனோ, அல்லது என் நண்பரின் உயிரையும், சொத்தையும் காப்பாற்றுவதின் பொருட்டா, அல்லது

என் மனைவி, குழந்தைகளுக்கு அபாயம் நேரிடாதிருக்கும் பொருட்டா என்று யாரே கூற முடியும்? முதலிலே ஜனக் கூட்டத்தை நான் 'தைரியமாக' எதிர்த்தது, பின்னர் மாறுவேடம் பூண்டு அக்கூட்டத்தினின்று தப்பியோடி யதும் இரண்டும் சரியானவையேயென்று யார் நிச்சய மாகச் சொல்ல முடியும்?

நடந்துபோன நிகழ்ச்சிகளின் நியாயா நியாயங்களைப் பற்றிய விசாரணையில் இறங்குவது வீண் வேலையாகும். ஆனால் அவற்றை உள்ளபடி அறிந்துகொள்ளலும், கூடு மானால் வருங் காலத்திற்கு அவற்றினின்று படிப்பினை கற்றுக்கொள்ளுதலும் பயனுடையவையாகும். குறிப் பிட்ட சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட மனிதன் ஒருவன் எவ்வாறு நடந்துகொள்வானென்று நிச்சயமாகக் கூறுதல் கடினம். மேலும் ஒரு மனிதனுடைய வெளிப்படையான நடக்கையிலிருந்து அவனுடைய குணத்தை ஐயத்துக்கிட மின்றி நிர்ணயிக்க முடியாதென்பதையும் நாம் காணலாம். ஏனெனில் ஒருவனுடைய குணத்தை நிர்ணயிக்க அவன் வெளிப்படையான நடக்கை மட்டும் போதிய ஆதாரமாக மாட்டாது. இது நிற்க.

தப்பித்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் என் னுடைய காயங்களை மறந்துவிடும்படி செய்தன. போலீஸ் தலைவரின் யோசனைப்படியே இந்தியப் போலீஸ் சேவக னின் உடை தரித்துக்கொண்டேன். தலைக்குக் கவசமாக சென்னையில் வழங்கும் அங்கவஸ்திர மொன்றை ஒரு தட்டின்மீது சுற்றி அதைத் தலையில் வைத்துக்கொண்டேன். இரகசிய போலீஸைச் சேர்ந்த இருவர் மாறுவேடம் பூண்டு எனக்குத் துணையாக வந்தனர். அவர்களில் ஒருவர்

இந்திய வியாபாரியைப் போல் வேடம் பூண்டிருந்தார். முகத்துக்கு வர்ணம் பூசி இந்தியருடைய முகத்தைப்போல் அவர் செய்துகொண்டார். மற்றொருவரின் வேடம் எனக்கு ஞாபகமில்லை. ஒரு குறுக்குச் சந்தின் வழியாகப் பக்கத்திலிருந்த ஒரு கடைக்குச் சென்றோம். கடையின் கிடங்கில் குவித்திருந்த சாக்குகளின் வழியே புகுந்து சென்று வாயிற்புறமாக வெளிவந்து கூட்டத்தில் ஊடுருவிச் சென்றோம். தெருக்கோடியில் வண்டி தயாராக வைக்கப்பட்டிருந்தது. அதிலேறி, சற்று முன்னால் மிஸ்டர் அலெக்ஸாண்டர் எனக்கு அடைக்கலம் தருவதாகச் சொன்ன போலீஸ் ஸ்டேஷனுக்கே போய்ச் சேர்ந்தோம். அவருக்கும் இரகசியப் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி செலுத்தினேன்.

மேற்கண்டவாறு நான் தப்பியோடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கையில், மிஸ்டர் அலெக்ஸாண்டர்,

"புளிப்பு இலந்தை மரத்தின் மீது
பழைய காந்தியைத் தூக்கில் போடு"

என்ற பாட்டைப்பாடி ஜனக்கூட்டத்தைக் 'குஷிப்படுத்திக் கொண்டிருந்தாராம். போலீஸ் ஸ்டேஷனுக்கு நான் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்ததாக அவருக்குச் செய்தி வந்ததும் அவர் கூட்டத்துக்குப் பின்வருமாறு அச்செய்தியைத் தெரிவித்தார். "நல்லது. நீங்கள் தேடும் மனிதர் பக்கத்துக் கடைவழியாகத் தப்பியோடிவிட்டார். இனி நீங்கள் திரும்பிப் போகலாம்." இதைக் கேட்டதும் கூட்டத்தில் சிலர் கோபங்கொண்டனர்; சிலர் சிரித்தனர்; மற்றும் சிலர் அக் கதையை நம்பமாட்டோமென்றனர்.

"நல்லது. என்னை நீங்கள் நம்பாவிடில் உங்களுக்குள் ஒருவர் அல்லது இருவரைப் பிரதிநிதியாக நியமியுங்கள். அவர்களை வீட்டுக்குள் அழைத்துச் சென்று காட்டுகிறேன். காந்தியை அவர்கள் கண்டுபிடித்துவிட்டால், அவரை உங்களிடம் ஒப்புவித்து விடுவதாக உறுதி கூறுகிறேன். அவர்கள் கண்டுபிடியாவிடின் நீங்கள் கலைந்துபோய் விடவேண்டும். ரஸ்டம்ஜியின் வீட்டை அழித்துவிட வேண்டுமென்றாவது, காந்தியின் மனைவி, குழந்தைகளுக்குத் தீங்குசெய்ய வேண்டு மென்றாவது உங்களுக்கு எண்ணமிராதென நம்புகிறேன்" என்று மிஸ்டர் அலெக்ஸாண்டர் கூறினார்.

அவ்வாறே வீட்டைச் சோதனை போடுவதற்குப் பிரதிநிதிகள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் விரைவில் திரும்பி வந்து ஏமாற்றமான செய்தியைத் தெரிவிக்கவே ஜனக் கூட்டம் கலைந்துபோயிற்று. போலீஸ் தலைவர் நிலைமையைச் சாமர்த்தியமாகச் சமாளித்தது குறித்துச் சிலர் அவரை மெச்சிக்கொண்டும், சிலர் கோபத்தினால் குமுறிக்கொண்டும் திரும்பிச் சென்றனர்.

அப்போது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குடியேற்ற நாட்டு இலாகா மந்திரியா யிருந்தவர் காலஞ்சென்ற மிஸ்டர் சேம்பர்லின். என்னைத் தாக்கியவர்களைக் கைது செய்து வழக்குத் தொடர வேண்டுமென்று அவர் நேட்டால் அரசாங்கத்துக்குத் தந்தியடித்தார். உடனே மிஸ்டர் எஸ்கோம்ப் என்னைக் கூப்பிட்டனுப்பினார். எனக்கு நேர்ந்த கஷ்டங்களைப்பற்றி அவர் வருத்தந் தெரிவித்துவிட்டுக் கூறியதாவது :—"உங்கள் உடம்புக்குச் சிறிதேனும் தீங்கு செய்யப்படினும் நான் வருத்தப்படாமலிருக்க முடியாதென்பதை நிச்சயமாய் நம்புங்கள்.

மிஸ்டர் லாப்டனுடைய புத்திமதியை ஏற்று என்ன நேர்ந்தாலும் அநுபவிப்பதாக உறுதி கொள்வதற்கு உங்களுக்குப் பூரண உரிமை யுண்டென்பதில் ஐய மில்லை. ஆனால் என்னுடைய யோசனைக்குச் சற்று செவி கொடுத்திருந்தீர்களாயின் வருந்தத்தக்க இந்நிகழ்ச்சிகள் நேர்ந்திருக்க மாட்டா. உங்களைத் தாக்கியவர்களை நீங்கள் அடையாளத்துடன் சொல்ல முடியுமானால் அவர்களைக் கைதுசெய்து வழக்கு நடத்தத் தயாராயிருக்கிறேன். மிஸ்டர் சேம்பர்லினும் இப்படிச் செய்யவேண்டு மென்றே விரும்புகிறார்."

நான் பின்வருமாறு பதிலளித்தேன்:—"நான் யார் மீதும் வழக்கு நடத்தப் போவதில்லை. ஒருவர் இருவரை நான் அடையாளங் கண்டுபிடிக்க முடியும். ஆனால் அவர்களுக்குத் தண்டனை வாங்கி வைப்பதால் யாது பயன்? மேலும் என்னைத் தாக்கியவர்கள்மீது நான் குற்றங் கூறவே மாட்டேன். கேட்டால் வெள்ளைக்காரரைப் பற்றி நான் இந்தியாவில் மிகைப்படுத்திக் கூறி அவதூறு செய்ததாக அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இச்செய்திகளை அவர்கள் நம்பினார்களெனில் அவர்கள் கோபங்கொள்வதில் வியப்பில்லை. குற்றம் தலைவர்க ளுடையது, உங்களுடையது என்றே கூறுவேன். ஜனங்க ளுக்கு நீங்கள் சரியான வழி காட்டியிருக்கலாம். ஆனால் நீங்களும் ராய்ட்டர் செய்திகளையே நம்பி நான் மிகைப் படுத்திக் கூறியிருக்க வேண்டுமென நிச்சயம் செய்து கொண்டீர்கள். யாருக்கும் தண்டனை வாங்கித்தர எனக்கு விருப்பமில்லை. உண்மை தெரியவரும்போது அவர்களே தங்கள் நடத்தைக்காக வருந்துவார்கள் என்பதில் சந்தேக மில்லை."

"இதைத் தயவுசெய்து எழுத்தில் எழுதித் தருவீர்களா? ஏனெனில் மிஸ்டர் சேம்பர்லினுக்கு நான் அறிவித்துவிட வேண்டும். ஆனால் அவசரப்பட்டுக் கொண்டு வாக்கு மூலம் எதுவும் கொடுக்கும்படி உங்களைக் கேட்கவில்லை. நீங்கள் விரும்பினால் மிஸ்டர் லாப்டனோடும் பிற நண்பர்களோடும் கலந்துகொண்டு முடிவுக்கு வாருங்கள். ஆனால் இதுமட்டும் கூறுவேன். உங்களைத் தாக்கியவர்கள்மீது வழக்குத் தொடர உங்களுக்குள்ள உரிமையை விட்டுக் கொடுப்பீர்களானால், அமைதியை நிலை நாட்டுவதில் எனக்கு உதவி செய்தவர்களாவதுடன் உங்கள் கீர்த்தியையும் பன்மடங்கு பெருக்கிக் கொள்வீர்கள்."

"வந்தனம், நான் யாரையும் கலந்துகொள்ளுதல் அவசியமில்லை. தங்களிடம் வருவதற்கு முன்னரே இவ் விஷயத்தில் முடிவுக்கு வந்துவிட்டேன். என்னைத் தாக்கியவர்கள் மீது வழக்குத் தொடரக் கூடாதென்பது என் உறுதியான கொள்கை. அதை இந்தக் கணமே எழுத்தில் எழுதித்தரச் சித்தமாயிருக்கிறேன்" என்று பதிலிறுத்துவிட்டு அவ்வாறே வாக்குமூலம் எழுதிக் கொடுத்தேன்.

நான்காம் அத்தியாயம்

புயலுக்குப் பின் அமைதி

மிஸ்டர் எஸ்கோம்பை நான் பார்க்கப் போனது போலீஸ் ஸ்டேஷனில் சரண் புகுந்த இரண்டு நாளைக்குப் பின்னர். இன்னும் போலீஸ் ஸ்டேஷனை விட்டு நான் வீட்டுக்குப் போய்விடவில்லை. என்னுடன் பாதுகாப்புக்கு இரண்டு போலீஸ் சேவகர்கள் அனுப்பப் பட்டார்கள். ஆனால் இதற்குள் அத்தகைய பாதுகாப்பு எதுவும் தேவையில்லாமற் போய்விட்டது.

நான் கப்பலிலிருந்து இறங்கிய அன்றே 'நேட்டால் அட்வர்டைஸர்' என்னும் பத்திரிகையின் பிரதிநிதி என்னைக் கண்டு பேச வந்தார். அவர் என்னைப் பல கேள்விகள் கேட்டார். அவருக்கு நான் அளித்த விடைகளில், என் மீது சுமத்தப்பட்டிருந்த எல்லாக் குற்றங்களையும் ருசுக்களுடன் மறுத்திருந்தேன். நல்ல வேளையாக, ஸர் பிரோஸிஷா மேதாவின் புத்திமதியின்படி இந்தியாவில் எல்லாவிடங்களிலும் உபந்நியாசங்களை எழுதியே படிக்க வந்தது இப்போது பெரிதும் பயன்பட்டது. எல்லா உபந்நியாசங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் எழுதிய கட்டுரைகள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றிற்கும் என்னிடம் பிரதிகள் இருந்தன. மேற்படி பத்திரிகைப் பிரதிநிதியிடம் இப் பிரதிகள் எல்லாவற்றையும் கொடுத்து, தென்னாப்பிரிக்காவில் இன்னும் கடுமையான மொழிகளில் கூறாதது எதையும் இந்தியாவில் நான் சொல்லவில்லை யென்பதை எடுத்துக் காட்டினேன். 'கோர்லாண்டு' 'நாடேரி' கப்பல்களில் தென்னாப்பிரிக்காவுக்கு வந்த பிரயாணிகள் விஷயத்தில் என்னுடைய முயற்சி சிறிதும் இல்லை யென்பதையும் நிரூபித்தேன். அவர்களில் பலர் ஏற்கனவே இங்கே குடியேறித் தாய் நாடு சென்று மீள்பவர்களென்றும், மற்றும் பெரும்பான்மையோருக்கு நேட்டாலில் குடியேறும் உத்தேசமேயில்லையென்றும், அவர்கள் டிரான்ஸ்வாலுக்குப் போகிறார்களென்றும் எடுத்துக் காட்டினேன். அக்காலத்தில் பணந்தேடும் நோக்கத்துடன் வருபவர்களுக்கு நேட்டாலை விட டிரான்ஸ்வாலில் அதிக வசதிகள் இருந்தபடியால் இந்தியர்களில் பலர் அங்கே போகவே விரும்பினர்.

மேற்படி பத்திரிகையில் வெளியான இவ்விவரமும், என்னைத் தாக்கியவர்கள்மீது நான் வழக்குத் தொடுக்க

மறுத்ததும் பொதுஜன அபிப்பிராயத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. டர்பன் ஐரோப்பியர்கள் தங்கள் நடத்தையைக் குறித்து வெட்கப்படலானார்கள். பத்திரிகைகள் நான் குற்ற மற்றவனென்று தீர்ப்புக் கூறி ஜனக் கூட்டத்தின் செயலைக் கண்டித்தன. இவ்வாறு வெள்ளைக்காரர்களின் பலாத்காரம், எனக்கு, அதாவது தென்னுப்பிரிக்கா இந்தியரின் உரிமை இயக்கத்துக்கு ஒரு பெரும் நன்மையாகவே முடிந்தது. இந்திய சமூகத்தின் கௌரவம் இதனால் அதிகப்பட்டதுடன் என் வேலையும் சுத்தமாயிற்று.

மூன்று நான்கு நாளைக்குப் பின்னர் என் வீட்டுக்குச் சென்றேன். எப்போதும் போல் வாழ்க்கை நடத்தத் தொடங்க அதிக காலமாகவில்லை. மேற்படி சம்பவத்தின் பயனாக வக்கீல் தொழிலிலும் வருமானம் அதிகமாயிற்று.

ஆனால் அந்நிகழ்ச்சியினால் இந்திய சமூகத்தின் கௌரவம் அதிகமாயிற்றாயினும், இந்தியர்மீது விரோதம் வளர்வதற்கும் அது காரணமாயிற் றென்பதில் சந்தேகமில்லை. இந்தியனும் ஆண்மையுடன் போராட வல்லவன் என்று நிரூபிக்கப் பட்டதும், அவன் வெள்ளைக்காரர்களுக்கு ஓர் அபாயம் என்று கருதப்படலானான். நேட்டால் சட்டசபையில் இரண்டு மசோதாக்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றுள் ஒன்று இந்திய வியாபாரிகளுக்குத் தீமை பயப்பது; மற்றொன்று நேட்டாலில் இந்தியர் குடியேறுவதற்குக் கடுமையான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவது ஆனால் அதிர்ஷ்டவசமாக, வாக்குரிமைக்காக ஏற்கனவே நடத்திய போராட்டத்தின் பயனாய், தனிப்பட இந்தியரைப் பாதிக்கும் சட்டம் எதுவும் செய்யக்கூடாதென்று முடிவாகி யிருந்தது. அதாவது நிறவேற்றுமை, சாதி

வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்ட சட்டம் கூடாது. ஆதலின் மேற்கண்ட மசோதாக்களின் வாசகம் எல்லாரையும் பொதுவாகப் பாதிப்பதாகவே இருந்தது. ஆனால் அவற்றின் உண்மை நோக்கம் நேட்டாலில் வசித்த இந்தியர்களுக்கு அதிக நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மேற்படி மசோதாக்களினால் என்னுடைய பொது வேலை பெரிதும் அதிகமாயிற்று. இந்தியர்களும் தங்கள் கடமையை முன் எப்போதையும் விட அதிகமாய் உணரத் தொடங்கினார்கள். அம்மசோதாக்களை இந்திய பாஷைகளில் மொழிபெயர்த்து விளக்கிக்கூறி ஜனங்கள் அவற்றின் உள் நோக்கங்களை நன்றாகத் தெரிந்துகொள்ளும்படி செய்தோம். குடியேற்ற நாட்டு மந்திரிக்கு விண்ணப்பம் செய்துகொண்டோம். ஆனால் அவர் தலையிட மறுத்துவிட்டபடியால் மசோதாக்கள் சட்டமாயின.

இப்போது என் காலத்தில் பெரும் பகுதி பொது வேலையிலேயே செலவழியத் தொடங்கிற்று. முன்னமே சொன்னதுபோல் ஸ்ரீ மனுசுக்லல் நாஸார் அதற்கு முன்பே டர்பனுக்கு வந்திருந்தார். இப்போது அவர் என்னுடன் வசிக்கலானார். அவர் பொது வேலைக்கே தமது காலத்தை அளித்தபடியால் என்னுடைய பாரம் நிரம்பக் குறைந்தது.

நான் இல்லாதபோது, சேத் ஆதம்ஜி மியாகான் தமது கடனைச் செவ்வனே ஆற்றியிருந்தார். காங்கிரஸுக்கு அவர் அதிக அங்கத்தினர் சேர்த்திருந்ததுடன் காங்கிரஸ் நிதியையும் சுமார் ஆயிரம் பவுன் அதிகம் செய்திருந்தார். மேற்படி மசோதாக்களினாலும், கப்பலிலிருந்து நாங்கள் இறங்குவதின் சம்பந்தமாக நடந்த தடபுடலினாலும்

ஜனங்களுக்குள் ஏற்பட்டிருந்த எழுச்சியை நான் நல் வழியில் பயன் படுத்திக்கொண்டேன். காங்கிரஸின் அங்கத்தினர் தொகையும், நிதியும் இன்னும் அதிகமாகும் பொருட்டு ஒரு வேண்டுகோள் விடுத்தேன். நிதி இப்போது 5,000 பவுன் ஆயிற்று. நிரந்தரமான நிதி சேர்த்துக் காங்கிரஸுக்கென்றே சொத்துக்கள் வாங்கி அவற்றின் வருவாயினால் காங்கிரஸ் வேலையை எவ்வித இடையூறுமின்றி நடத்திக்கொண்டு போக வேண்டு மென்பது என் விருப்பம். பொது ஸ்தாபனம் ஒன்றின் நிர்வாகத்தில் இதுவே என்முதல் அநுபவம் ஆகும். என்னு டைய யோசனையை என் சகாக்களிடம் தெரிவித்தபோது அவர்கள் முழுமனதுடன் ஆதரித்தார்கள். எனவே, மேற்படி நிதியைக்கொண்டு சொத்து வாங்கி வாடகைக்கு விட்டோம். அதினின்று வந்த வருவாய் காங்கிரஸின் நடைமுதல் செலவுக்குப் போதுமாயிருந்தது. சொத்தை நிர்வகிக்கச் செல்வாக் குள்ளவர்களடங்கிய தர்மகர்த்தர் சபை ஒன்றையும் ஏற்படுத்தினோம். சொத்து இன்னமும் இருந்து வருகிறது. ஆனால் அது பிற்காலத்தில் பல உட்கலகங்களுக்குக் காரணமாகிவிட்டது. இதன் பயனாக அதன் வருவாய் இப்போது நீதிமன்றத்தில் குவிந்து கொண்டு வருகிறது.

இவ்வருந்தத்தக்க நிலைமை நான் தென்னாப்பிரிக்காவை விட்டு வந்த பின்னரே ஏற்பட்டது. ஆனால் இதற்கு வெகு காலம் முன்பே, பொது ஸ்தாபனங்களுக்கு நிரந்தர நிதி ஏற்படுத்துவது குறித்த என் அபிப்பிராயம் மாறிவிட்டது. அதற்குப் பின்னர் எவ்வளவோ பொது அமைப்புகளை நிர்வகித்து எனக்கு ஏற்பட்ட அநுபவத்தின் பயனாக, நிரந்தர நிதிகளைக்கொண்டு பொது ஸ்தாபனங்களை

நடத்தல் தவறு என்னும் அபிப்பிராயமே உறுதிப்பட்டிருக்கிறது. ஒரு பொது ஸ்தாபனத்தின் நிரந்தர நிதியிலேயே அதன் தார்மிக வீழ்ச்சிக்கு வித்து இருக்கிற தென்பதில் ஐயமில்லை. பொது ஸ்தாபனம் எனில், பொது ஜனங்களின் சம்மதியுடன் பொது ஜனங்களின் பணத்தைக்கொண்டு நடக்கும் அமைப்பு என்று பொருள். அத்தகைய ஸ்தாபனத்துக்குப் பொது ஜனங்களின் ஆதரவு எப்போது இல்லாமற் போகிறதோ, அப்போது அந்த ஸ்தாபனம் இருப்பதற்கே உரிமை இழந்ததாகிறது. நிரந்தர நிதியைக்கொண்டு நடத்தப்படும் அமைப்புகள் பொதுஜன அபிப்பிராயத்தை மதியாமல் அதற்கு மாறாக அடிக்கடி வினை நிகழ்த்துவதைக் காண்கிறோம். நமது தேசத்தில் எங்கும் இது சர்வ சாதாரணம். மத ஸ்தாபனங்கள் என்று கூறப்படும் அமைப்புகளில் சில கணக்குச் சொல்வதே கிடையாது. தர்மகர்த்தர்கள் சொத்துக்குச் சொந்தக்காரர்களாகி விட்டார்கள். அவர்கள் யாருக்கும் கணக்குச் சொல்லக் கடமைப்பட்டவர்க ளல்லர். ஆகவே அன்றன்று வரும் வருவாயைக்கொண்டு வாழ்க்கை நடத்துவதே பொது ஸ்தாபனங்களின் இலட்சியமாயிருக்கவேண்டு மென்பதில் எனக்கு அணுவளவும் ஐயமில்லை.

பொது ஜனங்களின் ஆதரவைப் பெற முடியாத அமைப்புக்கு 'பொது ஸ்தாபனம்' என்ற பெயர் தாங்கியிருக்க உரிமை கிடையாது. வருஷந்தோறும் ஒரு ஸ்தாபனத்துக்குக் கிடைக்கும் சந்தாத் தொகையைக் கொண்டே பொது ஜனங்கள் அதை எவ்வளவு தூரம் விரும்புகிறார்க ளென்பதையும், அதன் நிர்வாகத்தின் நேர்மையையும் நிர்ணயிக்க வேண்டும். ஒவ்வொரு

ஸ்தாபனமும் இச்சோதனைக் குள்ளாகித் தேறுதல் அவசிய மென்பது என் அபிப்பிராயம்.

ஆனால், நான் கூறுவதை யாரும் பிழையாக உணர வேண்டாம். நிரந்தரமான கட்டிடங்கள் இன்றி நடை பெறுவதே சாத்தியமில்லாத அமைப்புகள் சில இருக் கின்றன. அவற்றிற்கு நான் மேற்கூறியவை பொருந்தா. பொது ஸ்தாபனங்களின் நடைமுதல் செலவுகள் வருஷா வருஷம் கிடைக்கும் சந்தாத் தொகையைக் கொண்டே ஆகவேண்டு மென்பது என் கருத்து.

நான் கொண்ட இவ்வபிப்பிராயங்கள் தென்னாப் பிரிக்கா சத்தியாக்கிரஹத்தின்போது உறுதிப்பட்டன. ஆறு ஆண்டு காலம் நடந்த அந்த மகத்தான இயக்கத் திற்கு லட்சக்கணக்கான ரூபா தேவையா யிருந்ததாயினும் நிரந்தர நிதி எதுவுமின்றியே அது நடைபெற்றது. சந்தா வந்து சேராவிடில் அடுத்த நாள் காரியம் நடைபெறுவ தெப்படி யென்று தெரியாமலிருந்த காலங்கள் என் ஞாபகத்தில் இருக்கின்றன. ஆனால் பின்னால் வரப் போகும் அந்நிகழ்ச்சிகளைப்பற்றி இங்கே நான் கூறுதல் கூடாது. இனிவரும் வரலாற்றில் மேற்சொன்ன அபிப் பிராயம் மெய்ப்பிக்கப்படுவதை நேயர்கள் காண்பார்கள்.

ஐந்தாம் அத்தியாயம்

குழந்தையின் படிப்பு

நான் டர்பன் துறைமுகத்தில் 1897-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இறங்கியபோது என்னுடன் மூன்று பாலர்கள் இருந்தார்கள், பத்து வயதான என் சகோதரி

புதல்வன் ஒருவன். முறையே 9 வயதும், 5 வயதுமுள்ள என் புதல்வர்கள் இருவர். இவர்களை எங்கே படிக்க வைப்பது?

ஐரோப்பியக் குழந்தைகளுக்கென்று ஏற்பட்ட பள்ளிக் கூடங்களுக்கு அவர்களை அனுப்பி யிருக்கலாம். இந்தியக் குழந்தைகளை அப்பள்ளிகளில் சேர்ப்பதில்லை யாயினும் தயவு தாட்சண்யமாக என் குழந்தைகளை மட்டும் சேர்த்துக் கொண்டிருப்பார்கள். அப்படிச் செய்ய எனக்கு விருப்பமில்லை. இந்தியக் குழந்தைகளுக்கென்று தனியாகப் பாதிரிமார்கள் நடத்திய பள்ளிக்கூடங்கள் இருந்தன. இங்கு அனுப்புவதற்கும் எனக்குப் பிரியமில்லை. ஏனெனில் இப்பள்ளிக்கூடங்களில் அளிக்கப்பட்ட கல்வியை நான் விரும்பவில்லை. இதற்கு, அப்பள்ளிக் கூடங்களில் ஆங்கிலத்திலேயே பாடங் கற்பிக்கப்பட்டது முக்கிய காரணம். ஒருக்கால், பிழையான தமிழ் அல்லது ஹிந்தியில் கற்பிக்க ஏற்பாடு செய்யலாம். இதற்கும் நிரம்பக் கஷ்டப்பட வேண்டி யிருக்கும். இன்னும் பல குறைகள் இருந்தன. குழந்தைகளுக்கு இத்தகைய படிப்பு அளித்தல் எதுக்குப் பிடிக்கவில்லை. ஆதலின் நானே அவர்களுக்குக் கல்வி கற்பிக்க முயன்றேன். ஆனால் இது ஒழுங்காக நடத்தல் இயலாத காரியமாயிருந்தது. தகுதியுள்ள குஜராத்தி உபாத்தியாயரும் கிடைக்கவில்லை.

எனவே என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தேன். என் மேற்பார்வையின் கீழ்க் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க ஓர் ஆங்கில உபாத்தியாயர் வேண்டுமென்று விளம்பரம் செய்தேன். இந்த உபாத்தியாயர் கூடிய அளவு ஒழுங்காகப் பாடங்கற்பிக்க வேண்டுமென்றும், மற்றப்படி ஒழிந்தபோது நான் கற்பிக்க

முடிந்ததைக் கொண்டு குழந்தைகள் திருப்தியடைய வேண்டுமென்றும் தீர்மானித்தேன். கடைசியில் ஓர் ஆங்கில மாதை' மாதம் 7 பவுன் சம்பளத்தில் உபாத்தியாயினியாக ஏற்படுத்தினேன். சிறிது காலம் இந்த ஏற்பாடு நடைபெற்று வந்தது. ஆனால் எனக்குத் திருப்தியாக இல்லை. சிறுவர்களுடன் நான் எப்போதும் குஜராத்தியிலேயே பேசிப் பழகி வந்தபடியால் அவர்கள் கொஞ்சம் குஜராத்தி கற்றுக் கொண்டார்கள். அவர்களைத் திரும்ப இந்தியாவுக்கு அனுப்பவும் எனக்கு விருப்பமில்லை. சிறு குழந்தைகள் தாய் தந்தையரை விட்டுப் பிரிந்திருக்கக் கூடாதென்பது அந்நாளிலிருந்தே என் நம்பிக்கையாகும். ஒழுங்குடன் நடைபெறும் ஒரு குடும்பத்தில் குழந்தைகள் இயற்கையாகப் பெறக்கூடிய கல்விப் பயிற்சி மாணாக்கர் விடுதிகளில் பெறல் அரிது. ஆதலின் குழந்தைகளை என்னிடமே வைத்துக்கொண்டேன். என்னுடைய மருமகனையும், மூத்த புதல்வனையும் ஒருமுறை இந்தியாவில் மாணாக்கர் விடுதிகளில் விட்டு வாசிப்பதற்கு ஏற்பாடு செய்தேனாயினும், சில மாதங்களுக்கெல்லாம் மீண்டும் அழைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பிற்காலத்தில் என் மூத்த புதல்வன் பிராய மடைந்து வெகுநாளான பிறகு என்னிடம் மனஸ்தாபப்பட்டுப் பிரிந்து, இந்தியாவுக்குச் சென்று, ஆமதாபாத்தில் ஓர் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தான். ஆனால் என் மருமகன் நான் அளித்த கல்வியுடன் திருப்தியடைந்திருந்தானென்பது என் எண்ணம். துரதிர்ஷ்டவசமாக நல்ல இளம்பிராயத்தில் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து அவன் காலஞ்சென்றான். எனது மற்ற மூன்று புதல்வர்களும் பொதுப் பள்ளிக்கூடங்களுக்குச் சென்றதே இல்லை. தென்னாப்பிரிக்கா 'சத்தியாக்கிரஹிகளின் புதல்வர்களுக்கென்று நான் ஆரம்பித்துச்

சிறிது காலம் நடத்தின பள்ளிக்கூடத்தில் படித்ததே அவர்கள் ஒழுங்காகக் கற்ற கல்வியாகும்.

மேற்படி சோதனைகள் எல்லாம் அரை குறையாகவே முடிந்தன. நான் விரும்பியவளவு குழந்தைகளுக்காகக் காலத்தைச் செலவு செய்ய முடியவில்லை. இதனாலும், வேறு விலக்கமுடியாத காரணங்களாலும் நான் ஆசைப்பட்ட அளவு என் புதல்வர்களுக்கு இலக்கியக் கல்வி தர முடியாமற் போயிற்று. இதன் பொருட்டு என் புதல்வர்கள் எல்லாருமே என்மீது குறைகூறி யிருக்கிறார்கள். எம். ஏ., பி. ஏ, பட்டம் பெற்றவர்களைச் சந்திக்கும் போதும், மெட்ரிகுலேஷன் பரீட்சை தேறியவர்களைப் பார்க்கும்போதுங்கூட அவர்கள் தங்களுக்குப் பள்ளிப் படிப்பு இல்லாதது ஒரு குறைபாடா யிருப்பதாக உணர்கிறார்களெனத் தோன்றுகிறது.

அவர்கள் என்ன எண்ணினாலும் சரி; என் வரையில், அவர்களுக்கு எப்படியாவது பள்ளிப் படிப்பு அளிப்பது என்று நான் தீர்மானித்துச் செய்திருந்தேனாயின், அநுபவம் என்னும் கலாசாலையிலும், பெற்றோர்களுடைய சேர்க்கையினாலுமே பெறக்கூடிய பயிற்சியை அவர்கள் இழந்திருப்பார்களென்றே நான் கருதுகிறேன். நான் இன்று அவர்களைப்பற்றிச் சிறிதும் கவலையில்லா திருப்பதுபோல் அப்போது இருக்க முடியாது. என்னை விட்டுப் பிரிந்து, இங்கிலாந்திலோ தென்னாப்பிரிக்காவிலோ அவர்கள் பெற்றிருக்கக்கூடிய செயற்கைக் கல்வியானது, எளிய வாழ்விலும் ஊழியம் புரிவதிலும் அவர்களுக்கு இப்போதுள்ள பயிற்சியை அளித்திராது. மேலும் அவர்களுடைய செயற்கை வாழ்வு முறைகள் என்னுடைய பொது ஊழியத்துக்கு ஓர் இடையூறாகவும் இருந்திருக்கும்.

ஆகவே, எனக்காவது அவர்களுக்காவது திருப்தி தரும் அளவுக்கு அவர்களுக்கு இலக்கியக் கல்வி நான் அளிக்க முடியவில்லை யாயினும், என்னுடைய ஆற்றலுக் கியைந்த அளவில் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறி விட்டதாக நான் கருதவில்லை. அவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாது போய்விட்டோமே யென்று நான் வருந்தவுமில்லை. மேலும், இன்று என் மூத்த புதல்வனிடம் காணும் விரும்பத் தகாத குணங்கள், கட்டுப்பாடும் ஒழுங்குமற்ற என் இளமை வாழ்வின் எதிரொலியே யென்று நான் எப்போதும் கருதி வந்திருக்கிறேன். என் வாழ்நாளின் அப்பகுதி, அரைகுறையான அறிவும் சுகபோகப் பற்றும் கலந்திருந்த காலமென்று நான் கருதுகிறேன். என் மூத்த குமாரனே அப்போது எப்படி வளைத்தாலும் வளையக்கூடிய பிராயத்தினனாயிருந்தான். எனவே, அது நான் போதிய அநுபவம் பெறாதவனாய்ப் புலனின்பத்தில் மதிமயங்கி யிருந்த காலம் என்று அவன் ஒப்புக்கொள்ளாததில் ஆச்சரியமில்லை. அதற்கு மாறாக, என் வாழ்நாளிலேயே அதுதான் சிறந்த பகுதி என்று அவன் நம்பியிருக்கிறான். பிற்காலத்தில் என் வாழ்நாளில் ஏற்பட்ட மாறுதல்களே மதிமயக்கத்தினால் ஏற்பட்டவை யென்றும், அம்மதி மயக்கத்தைத் தவறாக அறிவுத்தெளிவு என்று நான் எண்ணுவதாகவும் அவன் கருதுகிறான். இவ்வாறு கொள்ள அவனுக்குப் பூரண உரிமையுண்டு. ஆரம்ப வருஷங்களிலேயே நான் உண்மையில் அறிவுத்தெளிவு பெற்றிருந்தேனென்றும், வாழ்வில் பெரும் மாறுதல் ஏற்பட்ட பிற்காலமெல்லாம் மாயையும், அகந்தையும் சூழ்ந்த வருஷங்களென்றும் அவன் ஏன் கொள்ளக்கூடாது? என் நண்பர்கள் அடிக்கடி பின்வரும் கேள்விகளைப்போட்டு என்னை மடக்கி

யிருக்கிறார்கள் :—என் புதல்வர்களுக்குக் கலாசாலைக் கல்வி யளித்திருந்தால் என்ன தீமை விளைந்திருக்கும்? இவ்வாறு அவர்களுடைய சிறகுகளை வெட்டி விடுவதற்கு எனக் கென்ன உரிமை? அவர்கள் கலாசாலைப் பட்டம் பெற்றுத் தங்களுக்கு விருப்பமான தொழில்களை மேற்கொள்வதற்கு நான் ஏன் குறுக்கே நின்றிருந்திருக்க வேண்டும்.

இந்தக் கேள்விகளில் அவ்வளவு பொருள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எத்தனையோ மாணக்கர்க ளுடன் நான் பழகி யிருக்கிறேன். நானேயோ, பிறர் மூலமாயோ, கல்வியைப்பற்றிய என் கொள்கைகளை மற்றக் குழந்தைகள் மீதும் சுமத்திப் பரீட்சித்து அதன் பயன்களை பார்த்திருக்கிறேன். என் புதல்வர்களுடன் ஒத்த வயதினரான இளைஞர் எவ்வளவோ பேர் எனக்குத் தெரியும். பொதுவாக ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்கள் என் புதல்வர்களை விட எவ்வகையிலும் உயர்ந்தவர்க ளென்று நான் கருதவில்லை. அவர்களிடமிருந்து என் குமாரர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது அதிகம் இருப்ப தாகவும் நான் நம்பவில்லை.

ஆனால் இது சம்பந்தமாக என்னுடைய சோதனை களின் முடிவான பயன் கால தேவதையின் கர்ப்பத்திலே இருக்கிறது. நாகரிக வளர்ச்சியின் சரித்திரத்தை ஆராய்ச்சி செய்வோருக்கு ஓர் எடுத்துகாட்டாய்ப் பயன்பட வேண்டு மென்றே இவ்விஷயத்தை இங்கே விவரித்தேன். ஒழுங்கு பெற்ற குடும்பத்தில் பெறும் கல்விக்கும், பள்ளிக் கூடக் கல்விக்குமுள்ள வித்யாசத்தையும், பெற்றோர்கள் தங்கள் வாழ்வு முறையில் ஏற்படுத்திக் கொள்ளும் மாறு தல்கள் குழந்தைகளை எப்படிப் பாதிக்கின்றன என்பதை

இதினின்றும் ஓரளவு அறிந்து கொள்ளலாம். சத்திய உபாசகன் தன் சோதனைகளில் எவ்வளவு தூரம் போக வேண்டி வருமென்பதையும், சுதந்திர தேவியானவள் தன் பக்தனிட மிருந்து எத்தனை எத்தனைத் தியாகங்களை வேண்டு கிறாள் என்பதையும் ஓரளவு விளக்கிக் காட்டுவது இவ்வத்தி யாயத்தின் நோக்கமாகும். நான் சுயமரியாதை உணர் வற்றவனா யிருந்து, மற்ற இந்திய குழந்தைகளுக்குக் கிடைக்காத கல்வியை என் குழந்தைகளுக்கு மட்டும் பெறு வதில் திருப்தி யுற்றிருந்தேனாயின், அவர்களுக்கு நல்ல இலக்கியக் கல்வி யளித்திருப்பே னென்பதில் ஐயமில்லை. ஆனால் சுதந்திரம், சுயமரியாதை என்னும் இவற்றில் அவர் கள் கற்றுக்கொண்ட உதாரண பாடம் அவர்களுக்கு இல்லாமலே போயிருக்கும். சுதந்திரம் வேண்டுமா? புத்தகக் கல்வி வேண்டுமா? என்ற கேள்வி எழும்போதும், சுதந்திரமே புத்தகக் கல்வியைவிட ஆயிரம் மடங்கு பெரிய தென்று கூறாதவர் யார்?

1920-ம் ஆண்டில் இந்திய இளைஞர்களை அவர்க ளுடைய அடிமைக் கோட்டைகளிலிருந்து—அதாவது பள்ளிக்கூடங்கள், கலாசாலைகளிலிருந்து—வெளியே வரும் படி நான் அழைத்தேன். அடிமைத் தளைகளைப் பூண்டு இலக்கியக் கல்வி கற்பதைவிட, சுதந்திரப் பேற்றுக்காக எழுத்துவாசனை அறியாதவர்களாயிருந்து கல்லுடைத்துப் பிழைத்தல் மேல் என்று புத்தி சொன்னேன். என் னுடைய இந்தப் புத்தி மதியின் மூலை எதுவென்பதை அவ் விளைஞர்கள் இப்போது கண்டு கொள்ளலாம்.

ஆறும் அத்தியாயம்

தொண்டில் பற்று

என்னுடைய தொழில் நன்றாகவே நடந்து கொண்டு வந்தது. ஆனால் அதனாலேயே நான் திருப்தி யடைந்து விடவில்லை. இன்னும் என் வாழ்வை எளிய தாக்கிக்கொள்வ தெப்படி, யென்றும், என் சகோதர மனிதர்களுக்கு உருவான தொண்டு ஏதேனும் செய்தல் எப்படி யென்றும் நான் அடிக்கடி எண்ணமிட்டுக் கொண்டு வந்தேன். இப்படி யிருக்கும்போது ஒரு நாள் குஷ்டரோகி ஒருவன் என் வீட்டுக்குப் பிச்சை கேட்க வந்தான். அவனுக்கு ஒரு வேளை சோறு போட்டு துரத்தி விட எனக்கு மனம் வரவில்லை. எனவே என் வீட்டிலேயே அவனுக்கு அடைக்கலம் தந்தேன். அவனுடைய புண் களைக் கட்டினேன். மற்றும் அவனுக்கு வேண்டிய சிகிச்சைகளையும் செய்து வந்தேன். ஆனால் இம்மாதிரி நெடுகச் செய்துகொண்டு போக முடியவில்லை. என் வீட்டிலேயே நிரந்தரமாக அவனை வைத்துக் கொண்டிருக்க மனமில்லை. அது இயலாமலு மிருந்தது. எனவே, சில நாளைக்குப் பின்னர் ஒப்பந்தத் தொழிலாளிகளுக்கென்று ஏற்பட்ட அரசாங்க வைத்திய சாலைக்கு அவனை அனுப் பினேன்.

ஆனால் என் மனம் இன்னும் அமைதியுறவில்லை. நிலை யான ஜீவகாருண்யத் தொண்டு ஏதேனும் செய்யவேண்டு மென்று நான் தாபங்கொண்டேன். அப்போது ஸெயிண்ட் அய்டான் மிஷனுக்கு டாக்டர் பூத் என்பார் தலைவராயிருந்தார். அவர் எளியவர்க் கிரங்கும் இயல்பு வாய்ந்தவர், தம்மிடம் வரும் நோயாளிகளுக்கு இலவச

மாகச் சிகிச்சைசெய்து வந்தார். பார்ஸி ரஸ்டம்ஜியின் தர்ம சொத்தைக் கொண்டு டாக்டர் பூத்தினுடைய மேற்பார்வையில் ஒரு சிறு தர்ம வைத்தியசாலை ஏற்படுத்துவது சாத்தியமாயிற்று. இந்த வைத்திய சாலையில் நோயாளிகளுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று நான் தீவிர விருப்பங் கொண்டேன். வைத்திய சாலையைச் சேர்ந்த மருந்து நிலையத்தில், மருந்து கலந்து கொடுக்கும் வேலை தினம் ஒரு மணி முதல் இரண்டு மணி வரை இருந்தது. என்னுடைய காரியாலய வேலையை அந்த அளவுக்குக் குறைத்துக்கொண்டு மேற்படி நிலையத்தில் 'கம்பவுண்டர்' வேலை பார்க்கத் தீர்மானித்தேன். என்னுடைய தொழில் பெரும்பாலும் காரியாலயத்தில் நடைபெறுவதாகவே இருந்தது. சாஸன பத்திரங்கள் எழுதுதல், மத்தியஸ்தம் முதலியவையே அதிகம் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் சில வழக்குகள் இருக்கும். ஆனால் அவை பெரும்பாலும் அதிக விவாதத்துக் கிடமற்றனவா யிருக்கும். என்னுடன் தென்னாப்பிரிக்காவுக்கு வந்து என்னுடனேயே வசித்து வந்த மிஸ்டர் கான், நான் இல்லாதபோது என் வழக்குகளைக் கவனித்துக் கொள்வதாக வாக்களித்தார். எனவே வைத்திய சாலையில் தொண்டு செய்ய எனக்கு அவகாசம் கிடைத்தது. இதற்கு வைத்திய சாலைக்குப் போய்வரும் நேரத்தையும் சேர்த்து இரண்டு மணிநேரம் பிடிக்கும். இத்தொண்டு எனக்கு ஓரளவு மனச் சாந்தியை யளித்து வந்தது. நோயாளிகளின் நோய்களைக் கேட்டறிந்து, விவரங்களை வைத்தியரிடம் கூறி, அவர் எழுதித் தரும் மருந்துகளைக் கலந்து கொடுப்பதே என் வேலை. இதன் பயனாக, துன்புற்ற இந்தியர்களுடன் நெருங்கிப் பழக எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. அவர்களிற் பெரும்

பாலோர் தமிழ் நாடு, ஆந்திரம் அல்லது வட இந்தியாவி லிருந்து வந்த ஒப்பந்தத் தொழிலாளிகள்.

வைத்திய சாலையில் தொண்டுசெய்து இப்போது நான் பெற்ற அநுபவம், போயர் யுத்த காலத்தில், போர்வீரர் களில் காயம் பட்டவர்களுக்கும், நோயாளிகளுக்கும் ஊழியம் செய்வதாக நான் முன்வந்த போது பெரிதும் பயன்பட்டது.

குழந்தை வளர்த்தல் ப்ரச்னை எப்போதும் என் முன்னே இருந்து கொண்டிருந்தது. தென்னாப்பிரிக்காவில் எனக்கு இரண்டு புதல்வர்கள் பிறந்தார்கள். அவர்களை வளர்க்கும் விஷயத்தில் வைத்திய சாலையில் நான் பெற்ற அநுபவம் உபயோகமாயிருந்தது. என்னுடைய சுதந்திரப் பற்றுக் காரணமாக எனக்கு அடிக்கடி சோதனைகள் ஏற்பட்டு வந்தன. என் மனைவியின் பிரசவ காலத்தில் சிறந்த வைத்திய உதவி ஏற்படுத்திக் கொள்வதென்று நானும், என் மனைவியும் தீர்மானித்திருந்தோம். ஆனால் நல்ல தருணத்தில் வைத்தியரும், தாதியும் கைவிட்டுப் போய்விட்டால் நான் என்ன செய்வது? மற்றும் தாதியோ இந்தியப் பெண்ணா யிருக்கவேண்டும். பயிற்சி பெற்ற இந்தியத் தாதி கிடைப்பது இந்தியாவிலேயே கஷ்ட மென்றால் தென்னாப்பிரிக்காவில் கிடைப்பது எவ்வளவு கஷ்டமென்று சொல்ல வேண்டுவதில்லை. எனவே, பிரசவ சிகிச்சை சம்பந்தமாகத் தெரிந்திருக்க வேண்டிய விவரங் களை நானே படிக்கலானேன். டாக்டர் திரிபுவனதாஸ் எழுதிய 'தாய்க்குப் புத்திமதிகள்' என்னும் நூலைப் படித் தேன். அந்நூலில் கண்ட முறைப்படியும், என்னுடைய அநுபவங்களை யொட்டியும் என் இரு குழந்தைகளையும் வளர்த்தேன். ஒவ்வொரு பிரசவத்துக்கும் இரண்டுமாத

காலத்திற்கு மேற் போகாமல் ஒரு தாதியை அமர்த்திக் கொண்டோம். அவள் பெரிதும் என் மனைவியையே கவனித்தாள். குழந்தைகளை நானே பார்த்து வந்தேன்.

கடைசி குழந்தை பிறந்தபோது எனக்குப் பெருஞ் சோதனையாயிருந்தது. திடீரென்று பிரசவ வேதனை தோன்றி விட்டது. சமயத்தில் வைத்தியர் கிடைக்க வில்லை. மருத்துவச்சியை அழைத்து வரவும் சிறிது தாமதம் ஏற்பட்டது. அவள் வந்திருந்தாலும் பிரசவத்துக்கு அவள் உதவி செய்திருக்க முடியாது. சுகப்பிரசவ மாகும்படி பார்த்துக்கொள்ளும் பொறுப்பு எனக்கே ஏற்பட்டது. டாக்டர் திரிபுவனதாஸின் புத்தகத்தைக் கவனமாய்ப் படித் திருந்தது இப்போது பெரிதும் பயன்பட்டது. எனக்குச் சிறிதும் பயமாகவே யில்லை. குழந்தைகளை முறைப்படி வளர்க்க வேண்டுமானால் பச்சைக் குழந்தையைப் பேணும் முறை பெற்றோர்களுக்குத் தெரிந்திருத்தல் அவசியமென்று நான் கருதுகிறேன். மேற்படி விஷயத்தை நான் கவன மாக படித்திருந்ததின் நற்பயன்கள் என் வாழ்க்கை நெடுக நன்கு விளங்கி வந்திருக்கின்றன. குழந்தை வளர்த்தலைப்பற்றி ஆராய்ந்து அவ்வறிவை நான் தக்க வழியில் பயன்படுத்தி யிராவிடின் இன்று என் புதல் வர்கள் இவ்வளவு உடல் சுகமுள்ளவர்களா யிருக்க முடியாது. முதல் ஐந்து பிராயம் வரை குழந்தை கற்றுக் கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை யென்று ஒரு குருட்டுக் கொள்கை இருந்து வருகிறது. உண்மை இதற்கு நேர்மாறானதாகும். முதல் ஐந்து பிராயத்தில் கற்றுக்கொள்ளாததைக் குழந்தை பிற்காலத்தில் கற்றுக் கொள்வதே இல்லை. தாயின் கருவிலிருக்கும்போதே குழந்தையின் படிப்பு ஆரம்பமாகி விடுகிறது. கருதரிக்கும்

நிமிஷத்தில் பெற்றோர்களின் உடல் நிலையும், மனோ நிலையும் அப்படியே குழந்தையினிடம் பிரதிபலிக்கின்றன. பின்னர், கர்ப்ப காலத்தில் தாயினுடைய மனோ நிலை, ஆசாபாசங்கள், வாழ்க்கை முறை இவற்றினாலும் குழந்தை பாதிக்கப் பெறுகிறது. பிறந்த பின்னர் அது பெற்றோர் களைப் பார்த்து அவர்களைப் போலவே செய்யக் கற்றுக் கொள்கிறது. பின்னர் பல வருஷகாலம் குழந்தையின் வளர்ச்சி பெற்றோரையே முழுதும் பொறுத்ததா யிருக் கிறது.

இவ்வுண்மைகளை அறிந்துள்ள சதிபதிகள் சிற்றின் பத்துக்காகக் கூடுவதை அறவே யொழிப்பார்கள். குழந்தைப் பேற்றை விரும்பும்போது மட்டுமே அவர்கள் சேர்க்கையைக் கருதுவார்கள். உண்பதையும், உறங்கு வதையும்போல் ஆண் பெண் சேர்க்கை வாழ்வுக் கவசியமான தனி வினைகளில் ஒன்று என்று கருதுதல் அறியாமையின் சிகரமாகும். உலகம் நிலைபெற்றிருப்பதே பிள்ளைப்பேற்று வினையைச் சார்ந்திருக்கிறது. உலகமோ ஆண்டவனின் திருவிளையாடற் கூடம்; அவனுடைய மகிமை ஒளியினின்று பிரதிபலித்த ஜோதி. எனவே அவ் வுலகத்தின் ஒழுங்கான வளர்ச்சியை முன்னிட்டுப் பிள்ளைப்பேற்று வினையையும் கட்டுக்குட்படுத்திக்கொண்டு வருதல் அவசியம். இதை உணர்ந்தவன் எப்பாடு பட்டேனும் தன் காம இச்சையை அடக்கியாள்வான். தன் குழந்தைகள் உடல் நலமும், மனோ நலமும், ஆன்ம நலமும் பெற்றுய்வதற்கு அவசியமான அறிவைத் தேடிப் பெறுவான். அவ்வறிவைத் தன் சந்ததிகளுக்கும் பயன் படுமாறு அளித்து இன்புறுவான்.

ஏழாம் அத்தியாயம்

பிரமசரியம் I

இச் சரிதத்தில், பிரமசரிய விரதத்தை மேற்கொள்வது குறித்து நான் சிரத்தையுடன் சிந்திக்கத் தொடங்கிய காலத்துக்கு இப்போது வந்துவிட்டோம். விவாகமான நாளிலிருந்தே ஏக பத்தினி விரதத்தில் நான் உறுதிகொண்டவனு யிருந்தேன். சத்தியத்தினிடம் எனக்கிருந்த பற்று காரணமாக என் மனைவிக்கு உண்மையாய் நடத்தல் இன்றியமையாததாயிற்று. ஆனுல் என் மனைவி விஷயத்திலும் பிரமசரியங் காக்க வேண்டுவதின் அவசியத்தைத் தென்னுப்பிரிக்காவிலேயே முதன் முதலில் உணரலானேன். குறிப்பிட்ட எந்த நிகழ்ச்சியோ, புத்தகமோ என் சிந்தையை இத்துறையில் திருப்பிற்று என்று திட்டமாகச் சொல்ல இயலாது. ஆனுல் இராஜசந்திரரின் நட்பு இதற்குப் பெரிதும் காரணமா யிருக்கலாமென்று ஓரளவு ஞாபக மிருக்கிறது. இராஜசந்திரரைப்பற்றி முன்னமே எழுதியுள்ளேன். அவருக்கும் எனக்கும் நடந்த ஒரு சம்பாஷணை எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. மிஸ்டர் கிளாட்ஸ்டனின் மனைவியார் தமது கணவனிடம் வைத்திருந்த பக்தியைக் குறித்து நான் பெரிதும் புகழ்ந்து கூறினேன். மிஸ்டர் கிளாட்ஸ்டன் காமன்ஸ் சபையில் இருக்கும்போது கூட அவருக்குத் தம் கையாலேயே தேயிலைப் பானம் செய்து தரவேண்டுமென்று அப் பெண்மணி வலியுறுத்துவாராம். புகழ் வாய்ந்த இத் தம்பதிகள் தங்கள் வாழ்க்கையை ஒழுங்குபெற அமைத்திருந்தபடியால், இது அவர்களுடைய வாழ்க்கையின் வழக்கங்களுள் ஒன்ருகி விட்டதாம். கவி இராஜசந்திரரிடம் நான் இதைப்பற்றிப் பேசுகையில், பொதுவாகச் சதிபதி

களின் காதலைச் சிலாகித்துக் கூறினேன். அப்போது அவர் கூறியதாவது:—"மிஸ்ஸஸ் கிளாட்ஸ்டன், மனைவி யென்ற முறையில் தம் கணவனுரிடம் வைத்துள்ள ஆசை பெரிதா? இந்த உறவின் காரணமாக அன்றி, அவர் மிஸ்டர் கிளாட்ஸ்டனுக்குச் செய்யும் அன்புத் தொண்டு பெரிதா? எது பெரிதென்பது உமது அபிப்பிராயம்? அப் பெண்மணி அவருடைய சகோதரியாகவோ, வேலைக்காரி யாகவோ இருந்து இதே விதமான தொண்டு செய் திருந்தால் நீர் என்ன சொல்வீர்? இத்தகைய சகோதரி களையும், வேலைக் காரிகளையும் பற்றி நாம் கேள்விப்பட்ட தில்லையா? வேலைக்காரன் ஒருவன் இதேவித அன்புரிமைத் தொண்டு செய்கிறுனென வைத்துக்கொள்ளும். அப் போது மிஸ்ஸஸ் கிளாட்ஸ்டனுடைய பதிபக்தியைக் கண்டு நீர் மகிழ்வதுபோல் மகிழ்வீரா? இந்த நோக்கத்துடன் அவ்விஷயத்தைப்பற்றிச் சிந்தித்துப் பாரும்."

இராஜசந்திரரும் மணஞ் செய்துகொண்டவர்தான். அந்த நிமிஷத்தில் அவருடைய மொழிகள் எனக்குச் சற்றே கடுப்பானவையாகத் தோன்றின. ஆயினும் அவை என் மனதில் ஆழப் பதிந்து விட்டன. மனைவி, கணவனிடம் காட்டும் அன்பைவிட வேலைக்காரன் எஜமானனிடம் காட்டும் விசுவாசம் ஆயிரம் மடங்கு பாராட்டற்குரியதாக எனக்குத் தோன்றிற்று. மனைவியும் கணவனும் பிரிக்கமுடியாத தளையினுல் பிணைப்புண்டவர்க ளாதலின் கணவனிடம் மனைவி பக்தி வைத்தால் முற்றும் இயல்பே யாகும். அதில் வியப்புறத்தக்க தொன்றுமில்லை. ஆனால் இதற்கிணையான பக்தி எஜமானனிடம் வேலைக் காரன் காட்டுவதென்றால் எளிதன்று. அதற்குத் தனி முயற்சி தேவை, கவியின் கருத்து எனக்குச் சிறிது சிறிதாகத் தெளிவாய் விளங்கலாயிற்று.

அங்ஙனமாயின், எனக்கும், என் மனைவிக்குமுள்ள உறவு எத்தகையதாயிருக்க வேண்டும்? இக்கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது. என் மனைவியை என் காமத்துக்குக் கருவியாக்குவதுதானா அவளுக்கு நான் உண்மையாய் நடந்துகொள்ளும் முறை? காமத்துக்கு நான் அடிமையாயுள்ள வரையில் மனைவியிடம் என் அன்பு ஒரு காசும் பெருததாகும். என் மனைவியைப் பொறுத்த வரை, அவள் என்னைச் சிற்றின்பத் துறைப்படுத்த முயன்றதே இல்லையென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, எனக்கு விருப்பமிருந்தால், பிரமசரிய விரதங் கொள்வது மிகவும் எளிய தொன்றென்பதில் ஐயமில்லை. என் மன உறுதிக் குறைவு அல்லது காமமே தடையாயிருந்தது.

இவ்விஷயத்தில் என் மனச்சான்று அறிவுறுத்தத் தொடங்கிய பின்னரும் இருமுறை தவறி விட்டேன். காரணம், அப்போது என் முயற்சியின் நோக்கம் தாழ்வான தொன்ரு யிருந்ததே யாகும். இனிமேல் குழந்தைகள் பெறலாகா தென்பதே என் முக்கிய நோக்கமா யிருந்தது. இங்கிலாந்தி லிருந்தபோது, கருத் தரித்தலைச் செயற்கை முறைகளால் தடை செய்வதுபற்றிச் சிறிது படித்திருந்தேன். சைவ உணவைப்பற்றிக் கூறிய அத்தியாயத்தில், பிள்ளைப் பேற்றைத் தடுப்பது பற்றிய டாக்டர் அல்லின்ஸனின் பிரசாரத்தைப்பற்றிக் குறிப் பிட்டிருக்கிறேன். அவருடைய பிரசாரத்தினல் அச் செயற்கை முறைகளில் என் மனம் சிறிதளவு சென்றிருந் தாலும், மிஸ்டர் ஹில் அம்முறைகளை எதிர்த்துச் செய்த பிரசாரம் அதை முழுதும் மாற்றிவிட்டது. செயற்கைச் சாதனங்களைப் புறக்கணித்து, உள் முயற்சியை அதாவது புலனடக்கத்தைக் கொள்ள வேண்டு மென்று அவர்

கூறியதே என் மனதில் நிலையான இடம் பெற்றது. ஆகவே, இனிமேல் குழந்தைகள் வேண்டாமென்று நான் எண்ணியபடியால், அந்நோக்கத்துடன், புலனடக்கம் பெற முயலலானேன். இம்முயற்சியில் தோன்றிய கஷ்டங்கள் அளவில்லாதன. தனித்தனிப் படுக்கைகளில் படுக்கத் தொடங்கினோம். நாள் முழுதும் உழைத்துக் களைத்துப்போன பின்னரே படுக்கச் செல்வதென்று உறுதி கொண்டேன். இம் முயற்சிகள் எல்லாம் அவ்வளவாகப் பயன் தரவில்லை. ஆயினும், அக்காலத்தைப்பற்றி எண்ணும்போது, தவறிப் போன இம்முயற்சிகள் எல்லாவற்றின் முடிந்த பயனே, இறுதியான தீர்மானமாய் உருக் கொண்டதென்று எனக்குத் தோன்றுகிறது.

அவ்வுறுதியான தீர்மானம் செய்ய 1906-ம் ஆண்டு வரை சென்றுவிட்டது. இன்னும் சத்தியாக்கிரஹ இயக்கம் தொடங்கவில்லை. அவ்வியக்கம் ஏற்படப் போகிறதென்று அப்போது கனவிலும் எண்ணியது கிடையாது. போயர் யுத்தம் நடந்து முடிந்த அடியோடு நேட்டாலில் ஸுலு சாதியாரின் 'கலகம்' எழுந்தது. அப்போது ஜோகானிஸ்பர்க்கில் வக்கீல் தொழில் நடத்திக் கொண்டிருந்தேன். நெருக்கடி நேர்ந்த அத்தருணத்தில் நேட்டால் அரசாங்கத்துக்கு என்னாலான ஊழியம் செய்ய வேண்டுமென்று கருதினேன். நேட்டால் அரசாங்கமும் என் ஊழியத்தை ஏற்க இசைந்தது. இது பற்றிப் பின்னர் விவரமாகக் கூறுவேன். ஆனால் இச்சமயத்தில் எனக்கேற்பட்ட வேலையே, புலனடக்கத்தின் அவசியத்தைப் பற்றிப் பெரிதும் நான் சிந்திக்கும்படி செய்தது. வழக்கம் போல் இவ்விஷயத்தைப்பற்றியும் என் துணைவர்களுடன் ஆலோசித்தேன். பிள்ளைப் பேறும், அதன் பயனாக ஏற்

படும் குழந்தை வளர்ப்பும் பொது ஊழியத்துடன் முரண் படுவன என்று எனக்குத் தோன்றிற்று. மேற்படி 'கலக'த்தின்போது ஊழியம் செய்யப்போகுங் காலையில் ஜோகானிஸ்பர்க்கிலிருந்த என் ஜாகையைக் கலைத்துவிட நேர்ந்தது. சேவை செய்ய ஒப்புக்கொண்ட ஒரு மாதத் திற்குள், மிகவும் சிரமப்பட்டு வேண்டிய வசதிகளை அமைத்திருந்த வீட்டைக் காலிசெய்ய வேண்டியிருந்தது. என் மனைவியையும், குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு போய்ப் போனிக்ஸில் விட்டுவிட்டு, நேட்டால் துருப்பு களின் உதவிக்காக ஏற்பட்டிருந்த இந்திய சைன்ய சேவைப் படைக்குத் தலைவனாகச் சென்றேன். பெருங் கஷ்டங்களுக் கிடையே ஓரிடத்திலிருந்து ஓரிடம் போக வேண்டி யிருந்த அக்காலத்திலேதான் முடிவான தீர் மானம் என் உள்ளத்தில் பளிச்சென்று உதயமாயிற்று. இம்மாதிரி சமூக ஊழியத்துக்கே என் வாழ்நாளைச் செல விடவேண்டுமாயின், பிள்ளைப்பேற்றில் அவாவையும், பொருளாசையையும் அறவே ஒழித்து, குடும்பக் கவலை களினின்றும் நீங்கிய வானப்பிரஸ்த வாழ்வை மேற் கொள்ளவேண்டு மென்ற எண்ணம் ஏற்பட்டது.

மேற்படி 'கலகம்' சம்பந்தமாக, ஆறு வார காலமே எனக்கு வேலை இருந்தது. ஆனால் இச்சிறு காலப்பகுதியே என் வாழ்நாளில் மிக முக்கியமானதாயிற்று. பிரதிக்ஞை களின் முக்கியத்தை முன்னெப்போதையும் விடத் தெளிவாக அறிந்து கொள்ளலானேன். பிரதிக்ஞை என்பது சுதந்திரக் கோயிலின் கதவைச் சாத்துவதில்லை யென்றும், உண்மையில் அக்கதவைத் திறப்பது அதுவே என்றும் உணர்ந்தேன். இதற்கு முன்பு நான் வெற்றி பெறாததின் காரணங்கள், உறுதிக் குறைவும், சுய

நம்பிக்கையின்மையும், ஆண்டவன் அருளில் நம்பிக்கை யின்மையுமேயாம். அப்போதெல்லாம் என்மனம், சந்தேகமென்னும் கொந்தளிப்புள்ள கடலில் அலைக்கப்பட்டுக் கிடந்தது. மனிதன் விரதமெடுத்துக் கொள்ளாமையே அவனை ஆசை வலையில் விழச் செய்கிறதென்றும், அதற்கு மாருகப் பிரதிக்ஞையினுல் தன்னைத்தானே கட்டுக்குள்ளாக்குதல், தூர்த்த வாழ்விலிருந்து ஏகபத்தினி விரதம் பூண்டவனுவதை யொக்குமென்றும் உணர்ந்தேன். "நான் முயற்சியில் நம்பிக்கை யுள்ளவன்; எனவே விரதங்களினுல் கட்டுப்படுத்திக் கொள்ளமாட்டேன்" என்னும் மனோபாவம் பலவீனத்துக் கறிகுறியே யன்றி வேறில்லை. எதை விலக்க வேண்டு மென்கிருேமோ, அதனிடம் அந்தரங்கத்தில் ஆசை யுண்டென்பதை இம்மனோபாவம் வெளிப்படுத்துகிறது. இல்லாவிடில், முடிவான தீர்மானம் செய்வதில் கஷ்டம் என்ன வந்தது? பாம்பு என்னைக் கடிக்குமென்று தெரிந்தால், அதனிடமிருந்து ஓட நான் முயற்சிமட்டும் செய்வதில்லை. அதனிடமிருந்து ஓடியே தீர்வதென்று உறுதி செய்துகொள்கிறேன். வெறும் முயற்சி மட்டுமெனில் நிச்சய மரணமாக முடியலாம் என நான் அறிவேன். வெறும் முயற்சி, பாம்பு கட்டாயம் கடித்தேவிடும் என்ற நிச்சயமான உண்மையை யறியாததற்கே அறிகுறியாகும். எனவே முயற்சி செய்து பார்ப்பதுடன் திருப்தி யடைவதென்ருல், உறுதியான செயலின் அவசியத்தை இன்னும் நன்குணர்ந்து கொள்ளவில்லை யென்றே பொருள்படும். "வருங்காலத்தில் என் அபிப்பிராயம் மாறக்கூடுமல்லவா? பின்னர், இப்போது பிரதிக்ஞையினுல் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளுதல் எப்படிச் சரியாகும்?" என்னும் சந்தேகம் சில சமயங்களில் நமக்குத் தடையாயிருக்கின்றது. ஆனுல் இச்சந்

தேகம் எதைக் காட்டுகிறது? ஒரு குறிப்பிட்ட பொருளைத் துறந்தே யாகவேண்டு மென்ற தெளிந்த அறிவு இன்னும் உண்டாக வில்லை யென்பதையே. ஆகையினால்தான் "அவாவறுத்தலில்லாத துறவு நீடித்திராது" என்று நிஷ்குலானந்தர் பாடினார். எங்கே அவா ஒழிந்ததோ, அங்கே துறவுப் பிரதிக்ஞை இயற்கையாக ஏற்படுகிறது; ஏற்பட்டே தீரும்.

எட்டாம் அத்தியாயம்

பிரமசரியம் II

நன்றாய் விவாதித்து ஆழ்ந்த சிந்தனை செய்த பின்னர் 1906-ம் ஆண்டில் நான் பிரமசரிய விரதம் பூண்டேன். அதுவரை என் மனையாளிடம் இவ்விஷயமாக என் எண்ணங்களைத் தெரிவித்ததில்லை. விரதம் எடுத்துக் கொண்டபோது மட்டுமே அவளிடம் கலந்து பேசினேன். அவள் ஆட்சேபம் எதுவும் கூறவில்லை. ஆனால் நான் முடிவான தீர்மானம் செய்தல் எளிதாயில்லை. அதற்கு வேண்டிய மனோவலிமை எனக்குப் போதாமலிருந்தது. சிற்றின்ப இச்சையை அடக்கி யாள்வ தெப்படி? மனைவியிடத்தில் சிற்றின்பச் சேர்க்கை இல்லாத உறவு பூண்டிருத்தல் ஒரு புதுமையாகத் தோன்றிற்று. ஆனாலும், ஆண்டவன் அருள் வலிமையில் பூரண நம்பிக்கையுடன் துணிந்து விரதம் பூண்டேன்.

சென்ற இருபது ஆண்டுகளாக இவ்விரதங் காத்து வந்திருப்பதை எண்ணும் போதெல்லாம் எனக்கு அளவற்ற மகிழ்ச்சியும், வியப்பும் விளைகின்றன. 1901-ம் ஆண்டிலிருந்தே புலனடக்கத் துறையில் முயன்று ஓரளவு

வெற்றி பெற்று வந்திருந்தேன். ஆனால் 1906-ல் விரதம் பூண்டபின்னர் நான் பெற்ற சுதந்திர ஆனந்தத்தை அதற்குமுன் எப்போதும் அடைந்ததில்லை. ஏனெனில் விரதம் பூணுவதற்கு முன்பு, எந்த நிமிஷத்திலும் நான் ஆசைக்கு அடிமையாகி விடுதல் கூடுமானதா யிருந்தது. இப்போதோ விரதம் ஒரு கேடயமா யிருந்து என்னைக் காப்பாற்றும் என்னும் உறுதி ஏற்பட்டது. பிரம சரியத்தின் அரிய சக்திகள் எனக்கு நாளுக்கு நாள் நன்கு புலனாகின. நான் விரதம் பூண்டது போனிக்ஸில் இருந்தபோது. சைன்ய சேவைப்படை வேலை முடிந்ததும் போனிக்ஸுக்குச் சென்றேன். அங்கிருந்து ஜோகானிஸ் பர்க்குக்குப் போகவேண்டி யிருந்தது. அங்குப் போய் ஒரு மாதத்திற்கெல்லாம் சத்தியாக்கிரஹத்துக்கு அடிப் படை போடப்பட்டது. எனக்குத் தெரியாமலே பிரம சரிய விரதம் என்னைச் சத்தியாக்கிரஹத்துக்குத் தயார் செய்து வந்தது போலும். சத்தியாக்கிரஹம் முன் கூட்டியே சிந்தித்து ஏற்பாடு செய்யப்பட்ட திட்டமன்று; நான் சிறிதும் நினையாமலிருக்கையில் அது தானாகவே வந்ததாகும். ஆனால் இதற்கு முன்பு நான் செய்துவந்த காரியங்களே இந்த இலட்சியத்தினிடம் என்னைக் கொண்டுவந்து சேர்த்தன என்பதும் தெளிவாயிருந்தது. ஜோகானிஸ்பர்க்கில் ஏராளமான செலவுடன் நடத்திய ஜாகையைக் கலைத்து விட்டு நான் போனிக்ஸுக்குப் போனது பிரமசரிய விரதம் பூணுவதற்காகவே போலும் எனக் காணப்பட்டது.

பிரமசரிய விரதத்தைப் பூரணமாய் அனுஷ்டிப்பதே பிரமஞானப் பேறுகும் என்னும் அறிவு சாஸ்திரங்களைப் படித்ததினால் எனக்கு வரவில்லை. அனுபவத்திலிருந்து

சிறிது சிறிதாக இவ்வுண்மையில் நான் உறுதி பெற்றேன். இதை வற்புறுத்தும் சாஸ்திரங்களை நான் படித்தது பிற் காலத்திலேயே யாகும். உடல், மனம், ஆன்மா என்னும் மூன்றையும் காப்பாற்றுவது பிரமசரியமே என்னும் அறிவு விரதம் எடுத்துக்கொண்ட பின்னர் எனக்கு நாளுக்கு நாள் தெளிவாக விளங்கி வந்தது ஏனெனில் இப்போது பிரமசரியம் ஒரு கடின விரதமாக இல்லை. அது ஆனந்தமும் ஆறுதலும் தரும் ஓர் அரிய சாதனமாகி விட்டது. தினந்தோறும் அதனிடம் ஒவ்வொரு புதிய அழகைக் கண்டு வந்தேன்.

இவ்வாறு அதனால் வரும் ஆனந்தம் நாளுக்கு நாள் அதிகமாகி வந்ததாயினும், அதைக் கடைப்பிடிப்பது எளியதா யிருந்ததென்று யாரும் எண்ணவேண்டாம். 56-ம் வயதைக் கடந்துள்ள இப்போதும் அவ்விரதத்தைக் கடைப் பிடித்தல் எவ்வளவு கடினமான தென்பதை நான் நன்குணர்கிறேன். அவ்விரதம் கத்தி முனையில் நடப்பதை யொத்த தென்றும், ஒவ்வொரு கணமும் விழிப்புடனிருந்து அதைக் காத்தல் வேண்டுமென்றும் நாளுக்கு நாள் தெளி வாகி வருகிறது.

பிரமசரிய விரதங் காப்பதற்கு முதலாவது இன்றி யமையாத நிபந்தனை சுவைப்புலனடக்க மாகும். சுவைப் புலனை முற்றும் அடக்கி வந்தால் பிரமசரியங் காப்பது மிக எளிதாவதைக் கண்டேன். எனவே சைவ உணவுக் காரனாக மட்டுமன்றி, பிரமசாரி யென்னும் முறையிலும் இப்போது உணவுப் பரிசோதனைகள் நடத்தத்தொடங்கி னேன். இச்சோதனைகளின் பயனாக பிரமசாரியின் உணவு அளவுக்குட்பட்டதாயும், எளியதாயும், மசாலை, தாளிப்பு முதலியவை இல்லாததாயும், கூடுமானால் சமைக்

கப்படாத பச்சை உணவாயும் இருக்கவேண்டுமெனக் கண்டேன்.

ஆறு ஆண்டு சோதனை நடத்தியதன் பயனாக, பிரமசாரிக்குச் சிறந்த உணவு புதிய பழங்களும் கொட்டைப் பருப்பு வகைகளுமே என்னும் முடிவுக்கு வந்துள்ளேன். இந்த உணவு மட்டும் அருந்திக் கொண்டிருந்தபோது சிற்றின்ப இச்சையை அறவே யொழித்தவனா யிருந்ததுபோல் வேறு உணவு அருந்தியபோது இருக்க முடியவேயில்லை. தென்னாப்பிரிக்காவில் நான் பழங்கள் கொட்டைகள் மட்டும் அருந்திக்கொண்டிருந்தபோது பிரமசரிய விரதங் காக்க என்னுடைய முயற்சியே தேவையில்லாமலிருந்தது. பால் அருந்தத் தொடங்கிய பின்னர் இதற்குப் பெரு முயற்சி தேவையா யிருந்து வந்திருக்கிறது. தனிப்பழ உணவை விடுத்துப் பால் சேர்த்துக்கொள்ளுதல் எப்படி அவசியமாயிற்று என்பது குறித்து உரிய இடத்தில் எழுதுவேன். பால் உணவு பிரமசரிய விரதங் காத்தலைப் பெரிதும் கஷ்டமாக்கி விடுகிறது என்று கூறுவதே இங்குப் போதுமானது. இவ்விஷயத்தில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இதிலிருந்து பிரமசாரிகள் எல்லாரும் பாலைத் தள்ளிவிட வேண்டுமென்று யாரும் முடிவு செய்துவிட வேண்டாம். அநேக சோதனைகள் செய்த பிறகே, பிரமசரிய விரதத்துக்கும் பற்பல உணவு வகைகளுக்கும் உள்ள தொடர்பை நிச்சயிக்கலாம். பாலைப்போல் தசையை வளர்கக்கூடியதும், எளிதில் செரிக்கக் கூடியதுமான பழத்தை நான் இன்னும் கண்டு பிடித்தேனில்லை. டாக்டர்கள், வைத்தியர்கள், ஹக்கீம்கள் எவ்வளவோ பேரைக்கேட்டும் பயனில்லை. எனவே, பால் ஓரளவு கிளர்ச்சி தரக்கூடியது என்று அறிந்துள்ளேனாயினும்,

தற்போதைக்கு அதை விலக்கி விடும்படி நான் யாருக்கும் யோசனை கூறமாட்டேன்.

பிரமசரியத்துக்கு வெளி உதவிகளுள் உபவாசமும் ஒன்று. உணவு வகைகளைத் தெரிந்தெடுத்தலும், உணவுக் கட்டுப்பாடும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு உபவாசமும் அவசியமானது. புலன்கள் கட்டுக்கடங்காது ஓடும் இயல்பின. எல்லாப் புறங்களிலும், மேலும் கீழும், சுற்றிலும் வேலி எடுத்துத் தடுத்தாலன்றி அவற்றை அடக்கி வைத்தல் இயலாது. உணவில்லாவிடில் புலன்கள் வலிவிழந்து விடுகின்றன என்பது அனைவரும் அறிந்ததொன்று. எனவே புலனடக்க முயற்சிக்குத் துணையாக உபவாசத்தைக் கைக்கொள்ளல் பெரிதும் பயனுள்ளதென்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. ஆனால் சிலர் விஷயதில் உபவாசம் பயன்படுவதில்லை. ஏனெனில் உடல் உபவாசத்தினால் மட்டுமே புலனடக்கம் கைகூடுமென எண்ணிக்கொண்டு அவர்கள் உடம்பை உணவில்லாமல் வைத்துக் கொள்கிறார்களே யன்றி உள்ளத்திற்கு விருந்தளித்த வண்ணமிருக்கிறார்கள். அதாவது, உபவாசம் முடிந்ததும் இன்னின்ன இனிய உணவு வகைகளை அருந்துவது, இன்னின்ன பானங்களைப் பருகுவது என்று சிந்தித்த வண்ணமாயிருக்கிறார்கள். இத்தகைய உபவாசம் அவர்களுடைய சுவைப் புலனடக்கத்துக்கோ, காமத்தைத் தவிர்ப்பதற்கோ துணையாயிராதென்பது நிச்சயம். பட்டினி கிடக்கும் உடம்புடன் உள்ளமும் ஒத்துழைக்கும் போது தான் உபவாசத்தினால் பயனுண்டு. அதாவது உடம்புக்கு இல்லையென மறுக்கும் பொருள்களை உள்ளம் வெறுக்க வேண்டும். சிற்றின்ப ஆசைகளுக்கெல்லாம் மூல வேர் மனமேயாகும். ஆதலின் உபவாசம் புலனடக்

கத்துக்கு ஓரளவே துணை செய்யும். பட்டினி கிடக்கும் மனிதன் ஒருவன் காமக் குரோதங்களுக்கு வயப்பட்டிருத்தல் கூடுமானதே. ஆனால் உபவாச விரதமில்லாமல் காமத்துக்கு அழிவில்லை யென்று பொது விதியாகச் சொல்லலாம். எனவே பிரமசரிய விரதங் காப்பதற்கு உபவாசம் இன்றியமையாதது என்றும் கூறலாம். பிரம சரிய விரதம் அனுஷ்டிக்க விரும்புவோரில் பலர் அதில் தவறிவிடுவதற்குக் காரணம், அவர்கள் தங்கள் பிற புலன் களின் உபயோகத்தைப்பற்றியவரையில் பிரமசாரிகளல்லா தவர்கள்போல் வாழ்க்கை நடத்துவதே யாகும், வெயில் தகிக்கும் வேனிற்காலத்தில் மாரிகாலக் குளிரை அனுபவிக்க விரும்புவோனுடைய முயற்சியையே அவர்களுடைய முயற்சியொக்கும். பிரமசாரியின் வாழ்வு நெறி மற்றவர் களுடைய வாழ்வு நெறியிலிருந்து முற்றிலும் வேறுபட்டதா யிருத்தல் வேண்டும். அவ்வேற்றுமை சூரியன் ஒளியைப் போல் தெளிவாக விளங்குவதா யிருத்தல் வேண்டும். பிரமசாரியின் வாழ்வுக்கும் மற்றவர்களுடைய வாழ்வுக்கும் வெளிப்படையான ஒற்றுமை மட்டுமே இருக்கமுடியும். இருவரும் கட்புலனைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் பிரமசாரி ஆண்டவன் மகிமைகளைப் பார்ப்பதற்கே அதை பயன்படுத்துகிறான். மற்றவனோ தன்னைச் சுற்றிலும் நிகழும் நெறியற்ற செயல்களைப் பார்ப்பதற்கு அதை உபயோகிக்கிறான். இருவரும் செவியினால் கேட்கிறார்கள். ஆனால் பிரமசாரி ஆண்டவன் புகழைத்தவிர வேறெதையும் கேட்பதில்லை. மற்றவன் செவியிலோ ஆபாசப் பேச்சுகளே விழுகின்றன. இருவரும் இரவில் நீண்ட நேரம் கண் விழிக் கிறார்கள். ஒருவன் பிரார்த்தனையில் அந்நேரத்தைக் கழிக் கிறான். மற்றவன் பயனற்ற களியாட்டத்தில் காலங் கழிக்கிறான். இருவரும் அந்தராத்மாவுக்கு உணவளிக்

கிறார்கள். ஆனால் ஒருவன் ஆண்டவன் திருக்கோயிலைச் செப்பனிட்டுப் பாதுகாக்க மட்டுமே உணவளிக்கிறான். மற்றவனோ கண்டதையெல்லாம் தின்று அத்தூய திருக்கோயிலை நாற்றமுள்ள சாக்கடையாக்கிவிடுகிறான். இவ்வாறு அவ்விருவரும் வட துருவத்தையும் தென் துருவத்தையும்போல் அகன்றுள்ள வாழ்க்கை நடத்துகிறார்கள். நாளாக, ஆக இருவருக்கு மிடையே தூரம் அதிகமாகுமே யன்றி குன்றாது.

பிரமசரிய மென்றால், மனோவாக்குக் காயங்களினால் புலனடக்கம் பெறுதல் என்றே பொருள். மேலே நான் குறிப்பிட்டதுபோன்ற கட்டுப்பாடுகளின் அவசியத்தை ஒவ்வொரு நாளும் நான் நன்கறிந்து வருகிறேன். துறவும் பிரமசரியமும் வரையறைக் குட்படாத சக்தி பொருந்தியனவாகும். எனவே அத்தகைய பிரமசரியம் வரையறைக் குட்பட்ட முயற்சியினால் அடையக் கூடாததாம். பலருக்கு அது ஓர் இலட்சியமாக மட்டுமே இருக்க முடியும். பிரமசரியத்தைக் கடைப்பிடிக்க விரும்புவோன் ஒருவன் எப்போதும் தன் குறைகளை உணர்ந்தவனாயிருப்பான். தன் ஹிருதய அந்தரங்கத்தின் மூலை முடுக்குகளையும் சோதித்து அங்குள்ள சிற்றின்ப ஆசைகளைக் கண்டு பிடித்து அவற்றைத் துரத்த ஓயாது முயல்வான். எண்ணங்கள் முற்றிலும் வயப்பட்டாலன்றிப் பூரண பிரமசரியம் கைகூடுதல் இயலாத தொன்று. எண்ணங்கள் தாமாகத் தோன்றி இஷ்டப்படி ஓடுதல் மனத்தின் இயல்புகளில் ஒன்று. எனவே எண்ணங்களை அடக்குதல் மனதை அடக்குவதாகும். மனதை அடக்குதலோ காற்றை அடக்குதலினும் கடினமானது. எனினும், உள்ளத்தினுள்ளே இறைவன் இருப்பதால் அம்மனத்தை அடக்குதலும் சாத்தியமாகிறது. மனதை அடக்குதல் கடினமா

யிருப்பதால் சாத்தியமே யில்லையென்று யாரும் எண்ண வேண்டாம். பிரிமசரியம் மிக உயரிய இலட்சியமாகும். எனவே அதை யடையவும் மிக உயரிய முயற்சி தேவையா யிருப்பதில் வியப்பில்லை.

ஆனால் இந்தியாவுக்கு வந்த பின்னரே மனித முயற்சி யால்மட்டும் அத்தகைய பிரமசரியத்தை அனுஷ்டிக்க முடியாதென்று எனக்குத் தெரியவந்தது அது வரையில், காமக் குரோதங்களை அறவே யொழிப்பதற்குப் பழ உணவு உட்கொள்வதொன்றே போதுமென்ற மதிமயக் கத்தில் ஆழ்ந்தவனாய், இனிச் செய்ய வேண்டுவ தொன்றுமே யில்லையென்று இறுமாந்திருந்தேன்.

என் போராட்டங்களைப்பற்றி வேறு தனி அத்தியா யத்தில் கூறவேண்டுமாதலின் இங்கே விவரித்தல்கூடாது. இறைவன் பதம் அடையவேண்டு மென்னும் நோக்கத் துடன் பிரமசரியத்தைக் கடைப்பிடிக்க விரும்புவோர் அத தங்களால் ஆகாதோவெனச் சோர்வடைய வேண்டா மென்று மட்டும் இங்கே கூறுவேன். ஆனால் அவர்கள் தங்கள் சுய முயற்சியில் எத்துணை நம்பிக்கை வைத்திருக் கிறார்களோ அவ்வளவு ஆண்டவனிடமும் நம்பிக்கை உள்ளவர்களாயிருக்க வேண்டும். "நிராகார தேகியிட மிருந்து விஷயங்கள் தங்கள் சுவையை மட்டும் விட்டு ஓடிப்போகின்றன. பரம்பொருளின் தரிசனம் கிட்டும் போது அந்தச் சுவையும் மறைந்துவிடுகிறது." என்று பகவத்கீதை (2-59) கூறுகிறது. எனவே மோட்சத்தை நாடுவோனுக்கு இறைவன் நாமமும், அருளுமே கடைசி யான சாதனங்களாகும். நான் இந்தியாவுக்கு வந்த பின்னரே இவ்வுண்மை எனக்குப் புலனாயிற்று.

ஒன்பதாம் அத்தியாயம்

எளிய வாழ்க்கை

நான் தொடங்கியது சுகவாழ்க்கை என்பது உண்மையே. ஆனால் அது நீண்டநாள் நீடித்திருக்கவில்லை. நிரம்பக் கவலையெடுத்து வீட்டுக்கு வேண்டிய அலங்கார சாமான்களைச் சேகரித்திருந்தேன். ஆனால் அவ் வாழ்க்கையில் எனக்குப் பற்று உண்டாகவில்லை. ஆதலின் சுக வாழ்க்கை தொடங்கியதும் தொடங்காததுமாய்ச் செலவைக் குறைக்க ஆரம்பித்தேன். வண்ணான் கூலி நிரம்ப ஆகிக்கொண்டிருந்தது. அவன், காலத்தில் துணி கொண்டுவருவதில்லை யாதலால் இரண்டு மூன்று டஜன் உட்சட்டை (ஷர்ட்)களும் கழுத்துப் பட்டி (காலர்)களும் இருந்தாலும் போதுவதில்லை. தினந்தோறும் கழுத்துப் பட்டியையும், ஒவ்வொரு நாள் விட்டு உட்சட்டையையும் மாற்றியாக வேண்டும். இதனால் செலவு இரட்டிப்பாகி வந்தது. இது அநாவசியச் செலவென்று எனக்குத் தோன்றிற்று. இச்செலவை மீத்து விடுவதற்காகச் சலவைக் கருவிகள் வாங்கினேன். சலவைத் தொழிலைப்பற்றி ஒரு புத்தகத்தில் படித்து நான் கற்றுக் கொண்டதுடன் என் மனைவிக்கும் கற்றுக் கொடுத்தேன். இதனால் எனக்கு வேலை அதிகமாயிற்றாயினும் அத் தொழிலின் புதுமை காரணமாக அதைச் செய்தல் மகிழ்ச்சி தருவதாயிருந்தது.

முதன் முதலாக நான் வெளுத்த கழுத்துப் பட்டியை என்றும் மறக்க முடியாது. அளவுக்கு அதிகமாகப் பசை மாவை உபயோகித்து விட்டேன். இரும்பு போதுமான வளவு சூடாகவில்லை. அத்துடன் தீப்பட்டு எரிந்துவிடப்

போகிறதே என்ற பயத்தினால் அதைப் போதிய அளவு அழுக்கவும் இல்லை. இதன் பயனாக, பட்டி விருவாய் இருந்ததாயினும் அதிலிருந்த அதிகப்படியான பசை மா உதிர்ந்து கொண்டே யிருந்தது. இந்தப் பட்டியுடன் நீதி மன்றத்துக்குப் போய் மற்ற பாரிஸ்டர்களின் நகைப்புக் காளானேன். ஆனால் அந்த நாளிலேயே கேலிக்குப் பயப் படாத தன்மை கொண்டவனா யிருந்தேன்.

"நல்லது; என் கழுத்துப் பட்டியை நானே வெளுத்தது இதுதான் முதல்முறை. ஆகையினாலேயே மா உதிர்ந்து கொண்டிருக்கிறது. இதன் பொருட்டு நான் தொல்லைப்படவில்லை. மேலும் நீங்கள் கொஞ்சம் சிரித்து மகிழ்வதற்கும் காரணமா யிருப்பதால் எனக்குச் சந்தோஷமே" என்றேன்.

"இங்கே சலவைச் சாலைகளுக்குக் குறைவா என்ன?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"சலவைக்கூலி நிரம்ப அதிகமாகிறது. கழுத்துப் பட்டி வெளுக்கும் கூலி ஏறக்குறைய அதன் விலையளவுக்கு வந்து விடுகிறது. மேலும் வண்ணானை நம்பியே எத்தனை காலம் வாழ்க்கை நடத்துவது? அதைவிட என் உடைகளை நானே வெளுத்துக் கொள்ள விரும்புகிறேன்."

தன் வேலைகளைத் தானே செய்து கொள்வதின் சிறப்பை அந்நண்பர்கள் அறியும்படி என்னால் செய்ய முடியவில்லை. போகப்போக, சலவைத் தொழிலில் நான் பெரிதும் தேர்ச்சி பெற்றவனானேன். என்னுடைய சலவை வண்ணான் சலவைக்கு எவ்வகையிலும் தாழ்ந்ததா யில்லை. மற்றவர்களுடைய கழுத்துப் பட்டிகளைவிட என்னுடைய கழுத்துப் பட்டி விறுவிலும், பளபளப்பிலும் குறைந்ததாயில்லை.

கோகலே தென்னப்பிரிக்காவுக்கு வந்தபோது, தமக்கு மகாதேவ கோவிந்த ரானடே அளித்த அன்புப் பரிசான உத்தரீயம் ஒன்றைக்கொண்டு வந்திருந்தார். அந்த அரிய ஞாபகச் சின்னத்தை அவர் பெரிதும் போற்றிப் பாது காத்து வந்தார். சில விசேஷ சந்தர்ப்பங்களில் மட்டுமே அவர் அதை அணிந்துகொள்வது வழக்கம். அத்தகைய விசேஷ சந்தர்ப்பம் ஒன்று நேர்ந்தது. ஜோகானிஸ்பர்க் இந்தியர்கள் அவரைச் சிறப்பிக்க ஒரு விருந்து நடத்தினர்கள். இதற்கு அவ்வுத்தரீயத்தை அணிவது முடியாதபடி அது கசங்கிப் போயிருந்தது. எனவே அதை இஸ்திரி போடுதல் அவசியமா யிருந்தது. வண்ணனிடம் கொடுத்து உடனே இஸ்திரி போட்டுக் கொண்டுவாச் செய்தல் இயலாத காரியம். என்னுடைய கைத்திறமையைக் காட்டுவதாகக் கூறினேன். "வக்கீல் தொழிலில் என்றல் உமது ஆற்றலில் நம்பிக்கை வைப்பேன். வண்ணன் வேலைக்கு உம்மை எப்படி நம்புவது? துணியைக் கெடுத்து விட்டால் என் செய்வது? அது எனக்கு எவ்வளவு அருமையான பொருள் தெரியுமா?" என்றார், கோகலே.

பின்னர், அவ்வன்புப் பரிசைப் பற்றிய வரலாற்றை மகிழ்ச்சி ததும்ப அவர் கூறினர். நான் இன்னமும் பிடிவாதம் பிடித்து, நன்றாகச் செய்து தருவதாய் உறுதி கூறினேன். அவர் அநுமதியின் மீது அதை இஸ்திரி செய்து கொடுத்து அவரிடம் என் வேலைக்கு அத்தாட்சியும் பெற்றேன். இனி உலகமெல்லாம் எனக்கு அத்தாட்சி யளிக்க மறுத்தாலும் கவலையில்லை யெனக் கருதினேன்.

வண்ணனுக்கு அடிமையாயிருப்பதிலிருந்து என்னை மீட்டுக் கொண்டதுபோலவே, நாவிதனின் ஆதிக்கத்தி லிருந்தும் விடுதலை பெற்றேன். இங்கிலாந்துக்குப் போகிற

வர்கள் எல்லாரும் க்ஷவரத்தொழில் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்தவரை மயிரையும் தாமே வெட்டிக் கொள்வோர் இல்லை. நான் அதையும் கற்றுக் கொள்ள வேண்டி வந்தது. ஒரு முறை பிரிடோரியாவில் மயிர் வெட்டும் ஆங்கிலேயர் ஒருவரிடம் சென்றேன். அவர் மிக அவமதிப்புடன் என் மயிரை வெட்ட மறுத்துவிட்டார். இதனால் மனம் புண்ணான நான் உடனே சென்று மயிர் கத்திரி ஒன்று வாங்கி வந்து கண்ணாடி முன் நின்று மயிரை வெட்டிக்கொண்டேன். முன் புறத்து மயிரைக் கூடியவரை நன்றாக வெட்டி விட்டேன். ஆனால் பின்புறத்து மயிரைக் கெடுத்து விட்டேன். நீதிமன்றத்திலிருந்த நண்பர்கள் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள்.

"உமது மயிருக்கு என்ன ஆபத்து வந்தது, காந்தி? எலி கடித்து விட்டதா என்ன?" என்று ஒருவர் கேட்டார்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. வெள்ளைக்கார நாவிதன் என் கறுப்பு மயிரை வெட்டத் தயவு வைக்கவில்லை. எனவே, நன்றாயிருக்கிறதோ இல்லையோ, தானே வெட்டிக் கொள்வதே சரியென்று செய்தேன்."

என் விடை அந்நண்பர்களுக்கு வியப்பளிக்கவில்லை. என் மயிரை வெட்ட மறுத்தது பற்றி நாவிதன்மீது குற்றம் சொல்வதற்கில்லை. கறுப்பு மனிதருக்கு மயிர் வெட்டினால் வெள்ளைக்காரர் அவனிடம் வர மறுத்து விடுதல் கூடும். நமது நாவிதர்களைத் தீண்டத் தகாத சகோதரர்களுக்கு க்ஷவரம் செய்ய நாம் அநுமதிக்கிறோமா? இக்கருமத்தின் பயனைத் தென்னாப்பிரிக்காவில் ஒரு முறையன்று — பலமுறையும் நான் அநுபவிக்க நேர்ந்தது. அது நம்முடைய பாவத்துக்குத் தண்டனையே

யென்னும் உறுதியானது என்னைக் கோபத்தினின்றுங் காப்பாற்றி வந்தது.

சுயமுயற்சி, எளிய வாழ்க்கை இவற்றினிடம் எனக் கேற்பட்ட அடங்காப் பற்றானது கடைசியில் எவ்வளவு தீவிரமான வடிவங்களைக் கொண்டது என்பது பற்றி உரிய இடத்தில் விவரமாய்க் கூறுவேன். ஆனால் விதை நீண்ட காலத்துக்கு முன்பே விதைக்கப்பட்டிருந்தது அது வேர் விட்டுச் செடியாகக் கிளம்பி மலர் வெடித்துப் பழம் பழுத் தற்குத் தண்ணீரில்லாதது ஒன்றே குறையாயிருந்தது. உரிய காலத்தில் தண்ணீர் பாயவே இக்குறை தீர்ந்தது.

பத்தாம் அத்தியாயம்

போயர் யுத்தம்

இப்போது 1897-ம் ஆண்டுக்கும் 1899-ம் ஆண்டுக்கும் இடையில் நேர்ந்த பல அநுபவங்களை விட்டு விட்டுப் போயர் யுத்தத்திற்கு வருகிறேன். யுத்தம் தொடங்கிய போது என் அநுதாபம் முற்றும் போயர்கள் பக்கமே இருந்தது. ஆனால் இம்மாதிரி விஷயங்களில் என் சொந்தக் கருத்துக்களை வலியுறுத்தும் உரிமை எனக்கில்லை யென்று அப்போது நம்பினேன். இது சம்பந்தமாக என் உள்ளத்தில் நடந்த போராட்டத்தைப் பற்றித் தென்னுப் பிரிக்கா ஸத்தியாக்கிரஹ வரலாற்றில் விவரமாக எழுதி யிருக்கிறேன். அதன் நியாயாநியாயங்களைக் குறித்து நான் இங்கு மீண்டும் விவரிக்கப்புகுதல் கூடாது. வேண்டு வோர் அந்நூலில் கண்டு கொள்க. பிரிட்டிஷ் ஆட்சியின் பால் அப்போது நான் கொண்டிருந்த பக்தியானது என்னை அந்த யுத்தத்தில் பிரிட்டிஷ் கட்சியைத் தழுவுமாறு செய்தது

என்று மட்டும் இங்கே கூறுதல் போதும். பிரிட்டிஷ் குடிகளுக்குரிய உரிமைகளை நான் கோரினேனாதலின், ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்புக்கு துணை புரிவதும் என் கடமை ஆகுமென்று கருதினேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள்ளே, அவ்வேகாதிபத்தியத்தின் மூலமாகவே இந்தியாவுக்குப் பூரண கதிமோட்சம் கிட்டும் என்பது அப்போது என் நம்பிக்கை. எனவே, என்னால் சேர்க்க முடிந்தவரை தோழர்களைச் சேர்த்து, அவர்களைச் சைன்ய சேவைப் படை (Ambulance corps) யாக அமைத்தேன். மிகுந்த பிரயாசையுடன், அரசாங்கம் எங்கள் ஊழியத்தை ஏற்றுக் கொள்ளும்படி செய்தேன்.

இந்தியர்கள் அபாயங்களுக்குட்படத் துணியாத கோழைகள் என்றும், தற்கால சுயநலத்தைத் தவிர வேறு பரந்த நோக்கமில்லாதவர்களென்றும் ஆங்கிலேயர் பொதுவாக நம்பி வந்தனர். ஆதலின் என்னுடைய யோசனையைக் கேட்டதும் பல ஆங்கில நண்பர்கள் என்னை அதைரியப் படுத்தினார்கள். ஆனால் டாக்டர் பூத் மட்டுமே இந்த யோசனையை மனப்பூர்வமாக ஆதரித்தார். சைன்ய சேவைக்கு அவர் எங்களைப் பயிற்சி செய்தார். நாங்கள் யுத்த களத்தில் ஊழியத்திற்குத் தகுந்தவர்கள் என்று வைத்தியர்களிடம் அத்தாட்சிப் பத்திரங்களும் வாங்கி அனுப்பினோம். மிஸ்டர் லாப்டனும் காலஞ்சென்ற மிஸ்டர் எஸ்கோம்பும் உற்சாகத்துடன் எங்கள் யோசனையை ஆதரித்தார்கள். கடைசியாகப் போர்க்களத்துக்குச் சென்று சேவை செய்ய அநுமதி கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டோம். அரசாங்கத்தார் எங்கள் விண்ணப்பம் வந்து சேர்ந்த விவரத்தை வந்தனத்துடன் குறிப்பிட்டு, ஆனால் அப்போ

யைக்கு எங்கள் ஊழியம் தேவையில்லையென்று தெரிவித்து விட்டனர்.

இந்த மறுதளிப்புடன் நான் திருப்தி யடைந்து சும்மா யிருந்து விடவில்லை. டாக்டர் பூத்தின் உதவிகொண்டு நேட்டால் பிஷப் பாதிரியாரைப் போய்ப் பார்த்தேன். எங்கள் சேவைப்படையில் கிறிஸ்துவ இந்தியர் பலரும் இருந்தனர். பிஷப் பாதிரியார் என் யோசனையைக் குறித்து மிகவும் மகிழ்ச்சி யடைந்ததுடன், எங்கள் ஊழியம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உதவி புரிவதாக வாக்களித்தார்.

காலமும் எங்கள் பக்கலில் இருந்தது. போயர்கள், எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக துணிவும், தீரமும், உறுதியும் காட்டினார்கள். கடைசியில் எங்கள் சேவைக்கும் தேவை ஏற்பட்டது.

எங்கள் படை 40 தலைவர்கள் உள்பட 1100 பேர் கொண்டதாயிருந்தது. இவர்களில் 300 பேர் சுதந்திர இந்தியர்; மற்றவர்கள் ஒப்பந்தத் தொழிலாளிகள். டாக்டர் பூத்தும் எங்களுடன் இருந்தார். படை நல்ல ஊழியம் செய்து கீர்த்தி பெற்றது. துப்பாக்கிப் பிரயோக எல்லைக்கு வெளியே தான் எங்கள் வேலையென்று ஏற்பட்டிருந்தும், நாங்கள் செஞ்சிலுவை (Red Cross)க்குரிய பாதுகாப்புப் பெற்றவர்களா யிருந்தும், நெருக்கடியான வேலை யொன்றில் துப்பாக்கிப் பிரயோக எல்லைக்குட் புறத்தில் சேவை செய்யும்படி சொல்லப் பட்டோம். மேற்சொன்ன வரையறை நாங்கள் வேண்டிப்பெற்ற தன்று. நாங்கள் துப்பாக்கிப் பிரயோக எல்லைக்குள் வருவதை அதிகாரிகள்தான் விரும்பவில்லை. ஆனால் ஸ்பியான் கோப் என்னுமிடத்தில் பிரிட்டிஷ் துருப்புகள்

எதிரி துருப்புகளால் திருப்பி யடிக்கப்பட்ட பின்னர் நிலைமை மாறிவிட்டது. நாங்கள் அபாயத்துக்கு உட்படக் கடமைப்பட்டிருக்க வில்லையாயினும், போர் முனைக்குச் சென்று காயம் பட்டவர்களைக் கொண்டுவந்தால் அரசாங்கத்தின் நன்றிக் குறியவர்களாவோம் என்று ஜெனரல் புல்லர் எங்களுக்குச் செய்தி யனுப்பினர். இங்கு ஒரு கணமும் நாங்கள் தயங்கவில்லை. இவ்வாறு ஸ்பியான்கோப் சண்டையின் பயனாக நாங்கள் துப்பாக்கிப் பிரயோக எல்லைக்குள்ளாகவே சேவை செய்யலானோம். இந்நாட்களில் நாங்கள் காயம் பட்டவர்களைப் பல்லக்குகளில் சுமந்துகொண்டு தினம் 20 மைலிலிருந்து 25 மைல் வரை பிரயாணம் செய்யவேண்டி யிருந்தது. இவ்வாறு நாங்கள் தூக்கிச் சென்றவர்களில் ஜெனரல் வுட்கேட் போன்ற பிரபல போர் வீரர்களும் இருந்தார்கள்.

ஆறுவார ஊழியத்துக்குப் பின்னர் எங்கள் சேவைப் படை கலைக்கப்பட்டது. ஸ்பியான்கோப், வால்கிரன்ஸ் என்னுமிடங்களில் நேரிட்ட தோல்விகளுக்குப் பின்னர் பிரிட்டிஷ் சேனாதிபதி அவசரமாக முன்னேறி லேடிஸ்மித் முதலிய இடங்களுக்குத் துணைபுரியும் உத்தேசத்தைக் கைவிட்டு, இங்கிலாந்திலிருந்தும், இந்தியாவிலிருந்தும் உதவி வரும் வரை மெதுவாக காரியம் செய்யத் தீர்மானித்தார்.

எங்கள் சிறு ஊழியம் அச்சமயத்தில் பெரிதும் கொண்டாடப்பட்டது. இந்தியர்களிடம் மதிப்பு அதிகமாயிற்று. பத்திரிகைகள் "நாம் எல்லாரும் ஏகாதிபத்தியத்தின் புதல்வர்கள் தானே" என்பதைப் பல்லவியாகக் கொண்டு புகழ்ச்சிப் பாட்டுகள் பிரசுரித்தன.

ஜெனரல் புல்லர் தமது அறிக்கையில் இந்திய சேவைப் படையின் ஊழியத்தைப் பாராட்டி யிருந்தார். படையின் தலைவர்களுக்கு யுத்த சன்மானப் பதக்கங்கள் அளிக்கப் பட்டன.

இந்திய சமூகம் கட்டுப்பாடு அதிகம் பெற்றதாயிற்று. ஒப்பந்தத் தொழிலாளி இந்தியருடன் எனக்கு நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அவர்களும் கண் விழிக்கப் பெற்றனர். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், தமிழர்கள், குஜராத்திகள், சிந்தியர் என்னும் அனைவரும் இந்தியர்களே, எல்லாரும் ஒரே தாய் நாட்டின் புதல்வர்களே என்னும் உணர்ச்சி அவர்களிடையே வேரூன்றலாயிற்று. இந்தியர்களின் குறைகள் இப்போது நிவர்த்தி செய்யப்படல் நிச்சயம் என்று எல்லாரும் நம்பலாயினர். அச்சமயத்தில் வெள்ளைக்காரரின் மனப்பான்மையும் பெரிதும் மாறுதலடைந்திருந்ததாகக் காணப்பட்டது. யுத்தத்தின்போது இந்தியருக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் மிக இனிய நேயபாவம் ஏற்பட்டிருந்தது. ஆயிரக் கணக்கான வெள்ளைக்காரப் போர் வீரர்களுடன் நாங்கள் அப்போது பழகநேரிட்டது. அவர்கள் எங்களிடம் நட்புரிமை காட்டியதுடன்; போர்க்களத்தில் அவர்களுக்கு ஊழியம் செய்ய நாங்கள் வந்திருந்தது குறித்துப் பெரிதும் நன்றி பாராட்டினார்கள்.

சோதனை நேருங் காலத்தில் மனித இயற்கை எவ்வளவு மேன்மை யடைகிறது என்பதற்கு உதாரணமாக, நினைக்க இன்பந்தரும் ஒரு ஞாபகத்தை இங்கே கூறுதிருக்க முடியவில்லை. சிவ்லி பாசறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். அங்கு, லார்ட் லாபர்ட்ஸின் புதல்வர் லெப்டினண்ட் ராபர்ட்ஸ் படுகாயமுற்று மாண

மடைந்தார். அவர் உடலைப் போர்க்களத்தினின்று தூக்கிச் செல்லும் சிறப்பு எங்கள் படைக்குக் கிடைத்தது. அன்று வறட்சி மிகுந்த தினம். ஒவ்வொருவரும் தண்ணீருக்குத் தவித்துக் கொண்டிருந்தனர். வழியில் தாகந் தணித்துக் கொள்ளக்கூடிய ஒரு சிறு அருவி ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் முதலில் யார் தண்ணீர் அருந்துவது? வெள்ளைக்கார போர்வீரர்கள் அருந்திய பின்னரே நாங்கள் அருவியில் இறங்குவதென்று முடிவு செய்திருந்தோம். ஆனால் அவர்கள் இதற்குச் சம்மதிக்க வில்லை; எங்களை முதலில் குடிக்கச் சொன்னார்கள். இவ்வாறு, யார் முதலில் தண்ணீர் அருந்துவது என்பது குறித்துக் கொஞ்ச நேரம் சந்தோஷகரமான போட்டி நடந்தது.

பதினோராம் அத்தியாயம்

சுகாதாரச் சீர்திருத்தமும் பஞ்ச நிவாரணமும்

ஜன சமூகத்தின் எந்த ஓர் அங்கத்தினரும் சங்கத்துக்குப் பயன் படாத வாழ்க்கை நடத்துவது எனக்கு எப்போதுமே பிடிப்பதில்லை. சமூகத்தின் குறைபாடுகளை மறைப்பதையும் அவற்றிற்கு உடந்தையா யிருப்பதையும் நான் எப்போதுமே மனதார வெறுத்தேன். குறைபாடுகளைப்போக்கிக் கொள்ளாமல் உரிமைகளுக்கு மட்டும் போராடுவதும் எனக்குப் பிடிப்பதில்லை. எனவே, நேட்டால் இந்திய சமூகத்தின் மீது சுமத்தப்பட்டு வந்த ஒரு குறைபாட்டை ஒழிக்க நேட்டாலில் நான் குடியேறின நாள் தொட்டு முயன்று வந்தேன். இந்தியர்கள் தங்கள் வீடுகளையும் சுற்றுப் புறங்களையும் சுத்தமாய்

வைத்துக் கொள்வதில்லை யென்றும், பொதுவாக அவர்கள் தூய்மையில் கவலையில்லாதவர்க ளென்றும் குறை கூறப் பட்டு வந்தது. இதில் ஓரளவு உண்மை யில்லாம லில்லை. எனவே, சமூகத்தின் பிரமுகர்கள் ஏற்கனவே தங்கள் தங்கள் வீடுகளை ஒழுங்கு படுத்தும் முயற்சி தொடங்கி யிருந்தனர். ஆனால் டர்பனில் பிளேக் நோய் பரவுவது நிச்சயம் என்று ஏற்பட்டபோதே வீட்டுக்கு வீடு சென்று சோதனை செய்ய ஆரம்பித்தோம். நகரசபை அங்கத் தவரைக் கலந்து கொண்டும், அவர்களுடைய ஆதரவுடனும் இவ்வேலை தொடங்கினோம். அவர்களே இவ்விஷயத்தில் எங்கள் ஒத்துழைப்பை நாடினார்கள். எங்களுடைய ஒத் துழைப்பினால் அவர்களுடைய வேலை எளிதாயிற்று; எங்கள் கஷ்டங்களும் குறைந்தன. கொள்ளை நோய்கள் பரவும் போதெல்லாம், நிர்வாக அதிகாரிகள் விரைவில் பொறுமையிழந்து அளவு மீறிய கடும் முறைகளைக் கையாளுவதும், தங்களுக்குப் பிடியாதவர்கள் எல் லாரையும் அல்லற்படுத்துவதும் சாதாரண வழக்கம். இந்திய சமூகம் தானாகவே சுகாதார முறைகளை மேற் கொண்டதால் இத்தகைய கொடுமைகளில் அகப்படாது மீண்டது.

இவ்வேலையில் வருந்தற்குரிய அநுபவங்கள் நேராமற் போகவில்லை. உரிமைகளுக்காக நடத்திய போராட்டத்தில் ஜனங்களுடைய உதவியைப் பெற்றதுபோல் அவ்வளவு எளிதாக இப்போது தங்கள் கடமையை நிறைவேற்றச் செய்வதில் பெற முடியாதிருப்பதைக் கண்டேன். சில விடங்களில் அவமதிப்பே கிடைத்தது. சிலர் என்னை மாரியாதையாக நடத்தினாலும் என் வேண்டுகோளை அசட்டையாக விட்டனர். சுற்றுப் புறங்களைச் சுத்தமாய்

வைத்தற்கு வேண்டிய அளவு முயற்சி எடுத்துக் கொள்ளுதல் ஜனங்களுக்கு நிரம்பப் பிரயாசையா யிருந்தது. இத்தகையோரிட மிருந்து இவ்வேலைக்குப் பணம் எதிர் பார்த்தல் வீண் ஆசை என்று சொல்ல வேண்டுவதில்லை. அளவற்ற பொறுமை யின்றிப் பொது ஜனங்களை எந்த வேலையும் செய்யச் சொல்ல முடியா தென்னும் பாடத்தை இவ்வநுபவங்களினால் முன்னெப் போதையும் விட நன்றாக அறிந்துகொண்டேன். சீர்திருத்தத்தில் கவலை, சீர்திருத்தக் காரனுக்கே உண்டு. சமூகத்துக்கு இதைப் பற்றிக் கவலை யில்லை. சமூகத்தினிடமிருந்து எதிர்ப்பையும், வெறுப்பையும், சில சமயம் உயிருக்கே அபாயமான கொடுமைகளையுமே எதிர் பார்க்க முடியும். சீர்திருத்தக்காரன் உயிரினும் முக்கியமானதென்று கருதும் சீர்திருத்தத்தைச் சமூகம் பிற்போக்கான முறையென்று கருதலாமன்றோ?

எனினும், இக்கிளர்ச்சியின் பயனாக, இந்திய சமூகம் வீடுகளையும், சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத் திருக்க வேண்டுவதின் அவசியத்தை ஓரளவு உணர்ந்து கொண்ட தென்றே சொல்லலாம். நான் அதிகாரிகளின் நன்மதிப்புக்குப் பாத்திரனானேன். இந்திய சமூகத்தின் குறைகளை வெளியிட்டு அதன் உரிமைகளை வலியுறுத்துவதை என் தொழிலாகக் கொண்டவனாயினும், சமூகத்தைத் தூய்மைப் படுத்துவதிலும் அவ்வளவு கவலை காட்டி வலியுறுத்துகிறேனென்பதை அவர்கள் கண்டார்கள்.

ஆனால் செய்யவேண்டிய வேலை இன்னும் ஒன்று பாக்கி யிருந்தது. அது, வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்கள் தங்கள் தாய்நாட்டுக்குச் செலுத்தவேண்டிய கடமை ஒன்று உண்டென்னும் உணர்ச்சியை அவர்களுக்கு ஊட்டுவதேயாகும். இந்தியா ஏழ்மைப்பட்ட தேசம்.

தென்னாப்பிரிக்கா சென்ற இந்தியர் பணந்தேடும் நோக்கத்துடன் சென்றவர். எனவே, தாய் நாட்டின் கஷ்ட காலத்தில் தங்கள் சம்பாத்யத்தில் ஒரு பகுதியைத் தாய் நாட்டிலுள்ள சகோதரர்களுக்கு உதவுதல் அவர்களுடைய கடமையாகும். 1897-ம் ஆண்டிலும் 1899 ஆண்டிலும் இந்தியாவில் தோன்றிய கொடிய பஞ்சங்களின்போது தென்னாப்பிரிக்கா இந்தியர் இவ்வுதவி செய்தனர். பஞ்ச நிவாரண வேலைக்கு அவர்கள் தயங்காது நன்கொடையளித்தார்கள். 1897-ல் செய்ததைவிட 1899-ல் அதிக பண உதவி செய்தார்கள். பஞ்ச நிவாரணத்துக்கு நன்கொடையளிக்குமாறு ஆங்கிலேயருக்கும் விண்ணப்பம் செய்துகொண்டோம். அவர்களும் நன்கு உதவினார்கள். ஒப்பந்தத் தொழிலாளிகள் கூடத் தங்கள் விகிதத்தைக் கொடுத்தார்கள். அக்காலத்தில் தொடங்கப்பட்ட ஏற்பாடு இன்னமும் நடந்து வருகிறது. பெரிய விபத்துகள் நேரிடும்போதெல்லாம் இந்தியாவுக்குப் பெருந் தொகைகள் உதவிக்கு அனுப்பத் தென்னாப்பிரிக்கா இந்தியர் இதுகாறும் தவறியதில்லை.

இவ்வாறு, தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்குச் செய்த ஊழியம் ஒவ்வொரு படியிலும் சத்தியத்தின் புதிய புதிய அம்சங்களை எனக்கு புலப்படுத்தி வந்தது. சத்தியம் என்பது ஒரு பெரிய விருட்சம். அதற்கு நீர் ஊற்றி வளர்க்க வளர்க்க அதிக பழங்களைத் தருகிறது. சத்தியமென்னும் சுரங்கத்தில் எவ்வளவு ஆழமாகத் தோண்டிச் சோதனை போடுகிறோமோ அவ்வளவுக்கு அதில் புதைந்து கிடக்கும் அரிய இரத்தினங்களைக் கண்டு பிடிப்போம். தொண்டு செய்வதற்குப் புதிய புதிய துறைகளே அந்த இரத்தினங்களாகும்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

இந்தியா திரும்பத் தீர்மானம்

யுத்த ஊழியத்தினின்று நான் விடுவிக்கப்பட்டதும் இனி என் வேலை இந்தியாவிலேயே இருப்பதாக எண்ணலானேன். தென்னப்பிரிக்காவில் செய்வதற்கு வேலையில்லாமலில்லை. ஆனால் அங்கிருந்தால், பணந் தேடுதலே முதன்மையான வேலையாகி விடுமெனப் பயந்தேன்.

இந்தியாவிலிருந்த நண்பர்களும் திரும்பி வருமாறு அடிக்கடி கடிதம் எழுதினார்கள். தாய் நாட்டில் இன்னும் நல்ல ஊழியம் செய்ய முடியுமென்று தோன்றிற்று. தென்னப்பிரிக்கா வேலைக்கோ ஸ்ரீமான்கள் கானும், மனுசுக்லல் நாஸாரும் இருந்தனர். எனவே, என் சகாக்களிடம் என்னை விடுவிக்கும்படி கேட்டேன். நிரம்பக் கஷ்டத்தின்மீது அவர்களை அதற்கு இணங்கச் செய்தேன். ஆனால் அப்போதும் ஒரு நிபந்தனையின்மீதே அவர்கள் எனக்கு விடை கொடுக்க இணங்கினார்கள். தென்னப்பிரிக்கா இந்திய சமூகம் மறுபடியும் ஓராண்டுக்குள் என்னை வேண்டினால் நான் திரும்பி வர வேண்டுமென்று அவர்கள் நிபந்தனை கூறினார்கள். இது கஷ்டமான நிபந்தனை யென்று கருதினேனாயினும் சமூகத்துடன் என்னைப் பிணைத்திருந்த அன்பானது அந்நிபந்தனையை ஏற்கும்படி செய்தது. "அன்பெனும் நூலிழையினால் என்னைக் கண்ணபிரான் கட்டியே விட்டான். நான் அவனது கொத்தடிமை யானேன்" என்று மீராபாய் பாடினாள். எனக்கும், சமூகத்தோடு என்னைச் சேர்த்துக் கட்டியிருந்த அன்பெனும் நூலிழையை அறுத்தல் இயலாத காரியமா யிருந்தது. பொதுஜன வாக்கு தெய்வத்தின்

வாக்காகும். அதிலும் இங்கே நண்பர்களின் வாக்கு ஹிருதய பூர்வமான உண்மை வாக்காதலின் அதைத் தள்ள முடியாமலிருந்தது. எனவே நிபந்தனையை ஏற்று அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

அக்காலத்தில் நேட்டால் இந்தியர்களுடன் மட்டுமே எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது. அவர்கள் என்னை அன்பெனும் அமுத வெள்ளத்தில் முழுக்காட்டினார்கள். ஒவ்வோரிடத்திலும் பிரிவுபசாரக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. விலை யுயர்ந்த அன்புப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

1896-ல் நான் இந்தியா திரும்பியபோதும் இத்தகைய வெகுமதிகள் எனக்குத் தரப்பட்டன. ஆனால் இம்முறை அவை அசாத்தியமாயிருந்தன. தங்கத்தினாலும், வெள்ளியினாலும் செய்த பொருள்களை யல்லாமல் விலையுயர்ந்த வைர நகைகளும் அப்பரிசுகளில் இருந்தன.

இவ்வெகுமதிகளை ஏற்றுக்கொள்ள எனக்கு உரிமை ஏது? அவற்றை ஏற்றுக் கொண்டால் நான் பிரதி பயனை எதிர்பாராது சமூகத்துக்குத் தொண்டு செய்தவனாதல் எப்படி? என் கட்சிக்காரர்கள் கொடுத்த சில பொருள்களைத் தவிர மற்றவை எல்லாம் சமூகத்துக்கு நான் செய்த ஊழியத்தை முன்னிட்டுக் கொடுக்கப்பட்டனவே யாகும். மேலும், கட்சிக்காரர்களும் பொது ஊழியத்தில் எனக்கு உதவி யிருக்கிறார்களாதலின் அவர்கள் வேறு, பொது வேலையில் என் சகாக்கள் வேறு என்று நான் வேற்றுமை பாராட்டுவதற்கில்லை.

பரிசுகளுள், தங்கத்தினாலான கண்ட சரம் ஒன்றும் இருந்தது. 52 பவுன் பெறுமான இவ்வாபரணம் என்

மனைவிக்கென்று கொடுக்கப்பட்டதாகும். ஆனால் அதுவும் என்னுடைய பொது ஊழியத்தை முன்னிட்டே கொடுக்கப்பட்டதாதலின் மற்றவைகளினின்றும் அதை வேறு பிரிப்பதற்கில்லை.

இப்பரிசுகளால் மிகுதியானவற்றைப் பெற்ற அன்றிரவு முழுவதும் தூக்கமில்லாமல் கழித்தேன். என் அறையில் மேலுங்கீழும் நடந்து கொண்டே தீவிரமாகச் சிந்தித்தேன். ஆயினும் முடிவு காணவில்லை. நூற்றுக் கணக்கில் பெறுமானமுள்ள பரிசுகளைப் புறக்கணித்தல் கடினமான காரியமே. ஆனால் அவற்றை வைத்துக் கொண்டு விடுவதோ அதனினும் கஷ்டமானதொன்று.

நான் அவற்றை வைத்துக்கொள்ளக் கூடுமென்றாலும், குழந்தைகள் விஷயமென்ன? மனைவியின் செய்தியென்ன? அவர்களைத் தொண்டு வாழ்க்கைக்கு நான் தயார் செய்து வந்தேன். தொண்டுக்குத் தொண்டே வெகுமதி என்று அவர்கள் உணரும்படி செய்ய முயன்று வந்தேன்.

வீட்டில் விலையுயர்ந்த நகை எதுவும் கிடையாது. விரைவாக எளிய வாழ்வு முறையை மேற்கொண்டு வந்தோம். இந்நிலைமையில் தங்கக் கடிகாரங்களை வைத்துக் கொள்ளுதல் எப்படி? தங்கச் சங்கிலிகளையும், வைர மோதிரங்களையும் அணிவது எவ்வாறு? நகைப் பைத்தியத்தை ஒழிக்கவேண்டுமென்று அப்போது நான் ஜனங்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தேன். என்னைத் தேடி வந்த நகைகளை இப்போது நான் என் செய்வது?

அவற்றைச் சொந்தத்துக்கு வைத்துக்கொள்ளக் கூடாதென்று தீர்மானித்தேன். அவற்றைச் சமூகத்துக்கே சொந்தமாக்கிச் சமூகத்தின் சார்பாக பார்ஸி

ரஸ்டம்ஜி முதலிய சிலரைத் தர்மகர்த்தர்களாக நியமித்து ஒரு கடிதம் எழுதினேன். மறுநாள் காலையில் என் மனைவி, குழந்தைகளுடன் கலந்தாலோசித்த பின்னர் அப்பெரும் பாரத்தை நிவர்த்தி செய்தேன்.

என் மனைவியை இதற்கிணங்கச்செய்தல் கஷ்டமாயிருக்கும் என்று எனக்குத் தெரிந்தேயிருந்தது. ஆனால் குழந்தைகளைப்பற்றிய வரையில் ஏதும் கஷ்டமிராதென்றும் நிச்சயமாக அறிந்திருந்தேன். ஆகவே, என் பொருட்டுப் பேசுவதற்கு அவர்களை வக்கீல்களாக நியமிக்கத் தீர்மானித்தேன்.

குழந்தைகள் உடனே என் யோசனைக்கு இணங்கின. "விலையுயர்ந்த இப்பரிசுகள் நமக்கெதற்காக? அவற்றைச் சமூகத்துக்கே திரும்பக் கொடுத்துவிட வேண்டுவதுதான். அப்படி எப்போதேனும் நமக்குத் தேவையாயிருந்தால் நாமே எளிதில் வாங்கிக்கொள்ளலாமே" என்று அவர்கள் உரைத்தார்கள்.

நான் பெரு மகிழ்ச்சி கொண்டேன். "அப்படியானால் உங்கள் தாயாரிடம் இதைப்பற்றிப் பேசி இணங்கச் செய்வீர்களல்லவா?" என்றேன்.

"தடையில்லாமல். அது எங்கள் வேலை. அம்மாவுக்கு நகை வேண்டியதில்லை. எங்களுக்காக வைத்திருக்க விரும்பலாம். நாங்களே வேண்டாமென்னும் போது அம்மா ஏன் தடை சொல்ல வேண்டும்?" என்றனர்.

பேச்சளவில் இது சுலபமே. ஆனால் காரியத்தில் நிரம்பக் கஷ்டமாய் முடிந்தது.

கஸ்தூரிபாய் கூறியதாவது:—"உங்களுக்கு இப்பொருள்கள் தேவையில்லாதிருக்கலாம். உங்கள் குழந்

தைகளுக்கும் தேவையில்லாம லிருக்கலாம். கொஞ்சம் தூக்கி விட்டுவிட்டால், அவர்கள் உங்களிஷ்டப்படி கூத்தாடுவார்கள். நான் நகை யணிந்துகொள்ளக் கூடா தென்று சொல்ல உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் எனக்கு மருமக்கள்மார் வந்தால் அவர்கள் செய்தி என்ன? அவர்களுக்கு நிச்சயமாய் நகை வேண்டியிருக்கும். நாளைக்கு நமது நிலைமை எப்படி யிருக்குமோ யார் கண்டார்? இவ்வளவு அன்புடன் அளிக்கப்பட்ட பரிசு களைத் திருப்பி கொடுக்க நான் ஒருக்காலும் சம்மதியேன்."

இவ்வாறு, வாதங்கள் சரமாரியாகப் பொழிந்தன. இவற்றைப் பலப்படுத்துவதற்கு முடிவில் கண்ணீர் மழை யும் பெய்யத் தொடங்கிற்று. ஆனால் குழந்தைகள் உறுதியாயிருந்தன. நான் அசையவில்லை யென்று சொல்ல வேண்டியதில்லை.

நான் சாந்தமாகக் கூறியதாவது:—"குழந்தைக ளுக்குக் கலியாணம் இனிமேல் நடைபெற வேண்டும். இளமையிலேயே அவர்களுக்கு மணஞ்செய்து வைக்கும் உத்தேசம் நமக்கில்லை. வயது வந்த பின்னர் அவர்களே தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொள்வார்கள். மேலும், நகை யாசை கொண்ட பெண்களை நமது புதல்வர்களுக்குக் கலியாணஞ் செய்துவைக்கப் போவதில்லை யென்பது நிச்சயம். அப்படியே அவர்களுக்கு நகை போடுவது அவசியமானல் வாங்கிக் கொடுப்பதற்கு நான் இல்லையா? அப்போது என்னைக் கேள்."

"உங்களையா கேட்பது? இத்தனை நாட்களுக்குப் பிறகு உங்களை எனக்குத் தெரியாதா? என்னுடைய நகைகளைப் பிடுங்கிக்கொண்டவர் நீங்கள் அல்லவா? என்னுடைய நகைகளை நான் போட்டிருக்கவும் விடாத நீங்களா என்

மருமக்கள் மாருக்கு நகை செய்து போடப் போகிறீர்கள்? நன்றாயிருக்கிறது! இப்போதே என் குழந்தைகளைச் சாமியார்களாக்கப் பார்க்கிறவர் அல்லவா நீங்கள்? இல்லை; இல்லை. நகைகளைத் திருப்பிக் கொடுக்கக்கூடாது. மேலும் என்னுடைய கண்ட சரத்தைக் கேட்க உங்களுக்கென்ன உரிமை?"

"நல்லது; கண்ட சரம் உன்னுடைய ஊழியத்தைப் பாராட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டதா, என்னுடைய ஊழியத்தை முன்னிட்டா?" என்று நான் வினவினேன்.

"உங்களுடைய ஊழியத்துக்காகத் தான். ஆனால் நீங்கள் செய்த ஊழியம் நான் செய்ததன்றோ? இரவும் பகலும் நான் உங்களுக்காக உழைத்ததெல்லாம் எங்கே போயின? அவை யெல்லாம் ஊழியம் அல்லவா? போகிறவர் வருகிறவர் எல்லாரையும் வீட்டுக்கு அழைத்து வந்து என்னைக் கண்ணீர் வடிக்கச் செய்தீர்களே. அவர்களுக்கெல்லாம் நான் அடிமையைப்போல் உழைக்கவில்லையா?"

இவ்வினைக்கள் கூறிய அம்புகள்போல் என் ஹிருதயத்தில் தைத்தன. அவற்றுள் சிலவற்றில் பெரிதும் உண்மை இருந்தது. எனினும், நகைகளைத் திருப்பிக் கொடுத்துவிடுவதென நான் உறுதி கொண்டிருந்தேன். எப்படியோ கடைசியில் அவளைச் சம்மதிக்கச் செய்தேன். 1896-ம் ஆண்டிலும் 1901-லும் பெற்ற எல்லாப் பரிசுகளையும் திருப்பிக்கொடுத்து விட்டேன். அவற்றின் பராமரிப்புக்குத் தர்மகர்த்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். என்னுடைய விருப்பத்தின்படியேனும் தர்மகர்த்தர்களின் விருப்பத்தின்படியேனும் அவை சமூகத்தின் நன்மைக்கே பயன்படுத்தப் படவேண்டுமென்று தர்ம சாஸனம்

எழுதப்பட்டு நகைகள் பாங்கியில் பத்திரப்படுத்தப் பட்டன.

பொதுக் காரியங்களுக்காகப் பணந் தேவையா யிருக்கும்போ தெல்லாம், மேற்படி பரிசுப் பொருள்களை உபயோகிக்க வேண்டுமென நான் உத்தேசிப்பதுண்டு. ஆனால் அத்தகைய சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் வேண்டிய பணம் கிடைத்துவிடு மாதலால் அவற்றைத் தொடுவதில்லை. அத்தியாவசியமான தேவை ஏற்படும் போது மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு அந்நிதி இன்றளவும் பத்திரமாயிருந்து வருகிறது. அதற்குப் பிறகும் அத்துடன் பொருள்கள் சேர்க்கப்பட்டு வந்திருக்கின்றன.

இவ்வாறு செய்ததின் பொருட்டு நான் எப்போதும் வருந்தியதில்லை. நாளடைவில் என் மனைவியும் அப்படிச் செய்ததே அறிவுடைமை என்பதை உணர்ந்து கொண்டாள். இதனால் எவ்வளவோ சோதனைகளுக்குள்ளாகாமல் நாங்கள் பாதுகாக்கப் பட்டோம்.

பொது ஊழியத்தி லீடுபட்டோர் விலையுயர்ந்த வெகுமதிகளை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பது என் உறுதியான அபிப்பிராயமாகும்.

பதின்மூன்றும் அத்தியாயம்

மீண்டும் இந்தியாவில்

எனவே, தாய்நாட்டுக்கு மீண்டும் பிரயாணமானேன். மொரீஷியஸ் (மொரிசி), இடையில் கப்பல் தங்க வேண்டிய துறைமுகங்களி லொன்று. கப்பல் அங்கு நீண்ட நேரம் தாமதித்தபடியால் நான் கரைக்குச் சென்று

அங்குள்ள நிலைமையைக் கூடிய வரையில் தெரிந்து கொண்டேன். அத்தீவின் கவர்னர் ஸர் சார்லஸ் புரூஸின் விருந்தினனுக்கவும் ஓர் இரவு இருந்தேன்.

இந்தியா சேர்ந்ததும், நாடு சுற்றுவதில் சில காலங் கழித்தேன். அது 1901-ம் ஆண்டு. அவ்வருஷத்திய காங்கிரஸ் மகா சபை கல்கத்தாவில் ஸ்ரீ (இப்போது ஸர்) டின்ஷா வாச்சாவின் அக்கிராசனத்தின் கீழ்க் கூடியது. அதற்கு நான் போயிருந்தேன். நான் சென்றிருந்த முதலாவது காங்கிரஸ் இதுவேயாகும்.

பம்பாயிலிருந்து ஸர் பிரோஸிஷா மேதா பிரயாணம் செய்த அதே ரயிலில் நானும் பிரயாணம் செய்தேன். தென்னுப்பிரிக்கா இந்தியர் நிலையைக் குறித்து அவருடன் பேச வேண்டியிருந்தது. அவர் எத்தகைய இராஜபோக வாழ்க்கை நடத்தினுர் என்பது எனக்கு முன்னமே தெரியும். அவர் அந்த ரயிலில் விசேஷ வசதிகள் அமைந்த தனி வண்டி ஒன்று அமர்த்தியிருந்தார். குறிப்பிட்ட இரண்டு ரயில்வே நிலையங்களுக்கிடையே அவருடைய வண்டியில் பிரயாணம் செய்து நான் சொல்லவேண்டியதைச் சொல்லுமாறு எனக்குக் கட்டளை பிறந்தது. அவ்வாறே குறிப்பிட்ட நிலையத்தில் அவர் வண்டிக்குச் சென்றேன். அவருடன் ஸ்ரீ டின்ஷா வாச்சாவும் ஸ்ரீ (இப்போது ஸர்) சிமன்லால் சேதால்வட்டும் இருந்தனர். அவர்கள் அரசியலைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் ஸர் பிரோஸிஷா கூறியதாவது:—“காந்தி, உமக்கு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாதென்று தோன்றுகிறது. நீர் வேண்டுகிறபடி தீர்மானம் நிறைவேற்றுவதில் ஆட்சேபமில்லை. ஆனல் நமது நாட்டிலேயே நமக்கு உரிமைகள் இல்லையே! நமது

சொந்த நாட்டில் நமக்கு அதிகார மெதுவுமில்லாம லிருக்கும்போது குடியேற்ற நாடுகளில் நீங்கள் இதைவிட நல்ல நிலைமையிலிருக்க முடியாதென்று தோன்றுகிறது.''

நான் திடுக்கிட்டுப் போய்விட்டேன். ஸ்ரீ சேதால் வட்டும் இவ்வபிப்பிராயத்தை ஆதரிப்பதாகக் காணப் பட்டது. ஸ்ரீ வாச்சாவோ என்னைப் பரிதாப நோக்குடன் பார்த்தார்.

ஸர் பிரோஸிஷாவிடம் என் கட்சியை எடுத்து வாதிக்க முயன்றேன். ஆனால் பம்பாயின் முடிசூடா மன்னரை என்னைப்போன்ற ஒருவன் திருப்புவது இயலாத காரியம் என்று சொல்ல வேண்டுவதில்லை. என்னுடைய தீர்மா னத்தைக் கொண்டுவரவேணும்; எப்படியும் அனுமதி கிடைக்கு மென்பதை எண்ணித் திருப்தியடைந்தேன்.

என்னை உற்சாகப்படுத்த வேண்டி ''தீர்மானத்தை முன்னதாகவே என்னிடம் காட்டுவீர்களல்லவா?'' என்று ஸ்ரீ டின்ஷா வாச்சா கேட்டார். அவருக்கு வந்தன மளித்துவிட்டு ரயில் நின்ற அடுத்த நிலையத்தில் இறங்கிச் சென்றேன்.

கல்கத்தா போய்ச் சேர்ந்தோம். வரவேற்புக் கழகத்தார் மிகச் சிறப்புடன் அக்கிராசனரை அவரது ஜாகைக்கு அழைத்துச் சென்றனர். நான் எங்கே போக வேண்டு மென்று ஒரு தொண்டரைக் கேட்டேன். அவர் என்னை ரிப்பன் கலாசாலைக்கு அழைத்துச் சென்றார். அங்கே பிரதிநிதிகள் பலருக்கு ஜாகை ஏற்பாடு செய்திருந் தார்கள். அதிர்ஷ்ட வசமாக நான் இருந்த பகுதியிலேயே லோகமான்யரின் ஜாகையும் இருந்தது. நான் சென்ற மறுநாள் அவர் வந்ததாக ஞாபகம்.

லோகமான்யர் இருக்குமிடத்தில் அவருடைய தர்பார் கூடுவது இயல்பேயாகும். நான் ஓவியக்காரனுயிருந்தால், நண்பர்கள் பலர் சூழ அவர் தம் படுக்கையில் வீற்றிருந்த காட்சியை அப்படியே படம் எழுதி விடுவேன். அக் காட்சி அவ்வளவு தெளிவாக இன்னமும் என் கண்முன் நிற்கிறது. அவரைப் பார்க்கவந்த எவ்வளவோ பேரில் "அமிருத பஜார் பத்திரிகை"யின் காலஞ் சென்ற ஆசிரியர் பாபு மோதிலால் கோஷைப்பற்றியே எனக்கு இப்போது நினைவிருக்கிறது. அவர்களுடைய உரத்த சிரிப்பும், ஆளும் இனத்தாரின் தவறுகளைப்பற்றிய அவர்கள் சம்பாஷணையும் என்றும் மறக்கற்பாலன வல்ல.

நிற்க, மேற்படி காங்கிரஸ் விடுதியின் நிலையைக் குறித்துச் சில விவரங்கள் தெரிவிக்க விரும்புகிறேன். தொண்டர்கள் ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக்கொண் டிருந்தார்கள். ஒருவரை ஏதேனும் செய்யச் சொன்னல் அவர் இன்னொருவரிடம் சொல்வார். அவர் மூன்ரு மவரிடம் சொல்வார். எனவே, பிரதிநிதிகள் திக்குத் திசை புரியாமல் தவித்தார்கள்.

தொண்டர் சிலரிடம் நட்புரிமை கொண்டேன். தென்னுப்பிரிக்காவைப்பற்றிச் சில விவரங்களைக் கூறிய போது அவர்கள் சற்று வெட்க மடைந்தார்கள். தொண்டின் இரகசியத்தையும் அவர்களுக்கு அறிவுறுத்த முயன்றேன். அவர்கள் அதை அறிந்துகொண்டார்க ளெனக் காணப்பட்டது. ஆனல் தொண்டுசெய்யும் பேறு அவ்வளவு எளிதில் பெறக்கூடியதன்று. முதலில் விருப்பம் வேண்டும்; பின்னர் அநுபவம் வேண்டும். கபடமற்ற வர்களும், நல்ல ஹிருதயம் படைத்தவர்களுமான அவ் விளைஞர்களுக்கு விருப்பத்துக்குக் குறைவில்லை. ஆனல்

அநுபவம் பூஜ்யம். காங்கிரஸ் வருஷத்தில் மூன்றுநாள் கூடிவிட்டுப் பின்னர் தூங்கச் செல்வது அக்காலத்தில் வழக்கமாயிருந்தது. இந்த மூன்றுநாள் திருவிழாவில் ஒருவர் என்ன பயிற்சி பெறக்கூடும்? பிரதிநிதிகளும் தொண்டர்களுக் கேற்றவர்களாகவே யிருந்தார்கள். அவர்களுக்கும் பயிற்சி கிடையாது. அவர்கள் தாங்களே எதுவும் செய்வதில்லை. "தொண்டரே! அதைச் செய்யும்" "தொண்டரே! இங்கு வாரும்" என்று அவர்கள் ஓயாது கட்டளை பிறப்பித்த வண்ணமிருந்தார்கள்.

தீண்டாமையை இவ்விடுதியிலும் நான் நேருக்கு நேர் காண நேரிட்டது. தமிழர்களின் சமையலறை மற்றச் சமயலறைகளிலிருந்து தனியே 'தூரத்தில் அமைக்கப்பட்டிருந்தது. தாங்கள் உணவருந்தும்போது பிறர் பார்த்தாலும் திருஷ்டி தோஷம் ஏற்பட்டுவிடும் என்பது தமிழ்ப் பிரதிநிதிகளின் நம்பிக்கையாயிருந்தது. எனவே, கலாசாலை மைதானத்தில் அவர்களுக்கென்று, தட்டியினல் சுவரெடுத்துத் தனிச்சமையலறை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இதில் உள்ளே செல்வோர் திக்குமுக்காடிப் போகும் வண்ணம் புகை நிறைந்திருந்தது. சமையல், சாப்பாடு, கையலம்புதல் எல்லாம் அவ்வறையிலேயே; திறப்பேயில்லாது இறுக்கி மூடப்பட்ட பெட்டியைப் போல் அவ்வறை இருந்தது. இது போலி வர்ணசிரமக் கேடு என்று எனக்குத் தோன்றிற்று. காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குள்ளாகவே இவ்வளவு தீண்டாமை பாராட்டப்பட்டால், அவர்கள் யாருக்குப் பிரதிநிதிகளாக வந்துள்ளார்களோ அந்த ஜனங்களிடம் இக்கொள்கை எவ்வளவு தூரம் குடிகொண்டிராது என்று கருதி நான் பெருமூச் செறிந்தேன்.

சுகாதாரக் கேட்டுக்கோ அளவே யில்லாம லிருந்தது. எங்கே பார்த்தாலும் தண்ணீர் குட்டை குட்டையாகத் தேங்கி நின்றது. கக்கூசுகள் மிகச் சில. அவற்றின் துர் நாற்றத்தை நினைத்தால் இப்போதும் எனக்கு மூச்சுத் திணறுகிறது. தொண்டர்களிடம் இதைப்பற்றிக் கூறினேன். அவர்கள் 'அது தோட்டிகளின் வேலை; எங்களுடைய வேலையன்று' என்று திட்டமாகக் கூறிவிட்டார்கள். விளக்குமாறு ஒன்று வேண்டுமென்று ஒரு தொண்டரைக் கேட்டேன். அவர் ஆச்சரியத்தினால் திடுக்கிட்டுப் போய் என்னைப் பார்த்து விழித்தார். கடைசியில் ஒரு விளக்கு மாறு சம்பாதித்துக் கக்கூசைச் சுத்தம் செய்தேன். ஆனால் என்னுடைய உபயோகத்துக்கு மட்டுமே இது செய்துகொண்டேன். கக்கூசுகள் மிக சிலவாயும் அவற்றை உபயோகிப்போர் பலராயும் இருந்தபடியால், அடிக்கடி சுத்தம் செய்தல் அவசியமாயிருந்; இது நான் செய்து முடிக்கக்கூடியதன்றெனச் சொ வேண்டுவதில்லை. எனவே, என் காரியத்தைப் பார் கொண்டதுடன் திருப்தியடைந்தேன். மற்றவ நாற்றத்தையும் அசுத்தத்தையும் பொருட்படுத்திய தெரியவில்லை.

இது மட்டுமன்று. பிரதிநிதிகளில் சிலர் அறைகளின் வெளிப்புறத்துத் தாழ்வாரத்தை இர தில் அசுத்தம் செய்யவும் பின்வாங்கவில்லை. தொண்டர்களிடம் இத்தகைய அசுத்தமான காட்டினேன். அவ்விடங்களைச் சுத்தம் செ முன் வரவில்லை. அக் கௌரவத்தை பங்கிட்டுக்கொள்ள ஒருவரும் தயாராயிச் கண்டேன். இப்போது நிலைமை பெரிது

யடைந்திருக்கிறது. ஆனால் இன்றுகூட, காங்கிரஸ் விடுதியில் கண்டவிடமெல்லாம் அசுத்தமாக்கும் பிரதிநிதிகள் இல்லாமற் போகவில்லை. அவ்வாறே அவ்விடங்களைச் சுத்தப்படுத்தவும் எல்லாத் தொண்டர்களும் எப்போதும் தயாராக முன் வருவதில்லை.

காங்கிரஸ் மகா சபை இன்னும் சில தினங்கள் நீடித்து நடக்குமானால், கொள்ளை நோய் பரவுவதற்குப் பெரிதும் அநுகூலமான நிலைமை ஏற்பட்டிருப்பது கண்டேன்.

பதினான்காம் அத்தியாயம்

குமாஸ்தா வேலையும் குற்றேவலும்

காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கு இன்னும் இரண்டு தினங்கள் இருந்தன. எனவே அந் நாட்களில் காங்கிரஸ் காரியாலயத்தில் ஊழியம் செய்து சிறிது அநுபவம் பெற விரும்பினேன். ஆதலின் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்து தினசரிக் கடன்களை முடித்ததும் காங்கிரஸ் காரியாலயத்துக்குப் போனேன்.

பாபு பூபேந்திரநாத் வஸுவும், ஸ்ரீ கோஷாலும் காரிய தரிசிகள். பூபேந்திர பாபுவிடம் சென்று நான் தொண்டு செய்ய விரும்புவதாகக் கூறினேன். அவர் என்னை முகமெடுத்துப் பார்த்துவிட்டு "நான் தங்களுக்குக் கொடுப்பதற்கு வேலை ஒன்றுமில்லை ஒருக்கால் கோஷால் பாபு ஏதேனும் கொடுக்கலாம். தயவு செய்து அவரிடம் செல்லுங்கள்" என்றார்.

எனவே, ஸ்ரீ கோஷாவிடம் சென்றேன். அவர் என்னை ஏற இறங்கப் பார்த்தார். பின்னர் புன்னகை

யுடன் "குமாஸ்தா வேலையே உங்களுக்குக் கொடுக்கக் கூடும். செய்ய முடியுமா?" என்றார்.

"தடையில்லாமல். என்னால் கூடுமான எல்லா வேலைகளையும் செய்யச் சித்தமா யிருக்கிறேன்" என்று பதிலளித்தேன்.

"இதுவே சரியான மனப்பான்மை" என்றார் ஸ்ரீ கோஷால். அங்கிருந்த தொண்டர்களைப் பார்த்து "இந்த இளைஞர் கூறியது உங்கள் செவியில் விழுந்ததா?" என்று கேட்டார்.

பின்னர் என் பக்கமாகத் திரும்பி அவர் கூறியதாவது:—"நிரம்ப நல்லது. அதோ ஒரு குவியல் கடிதங்கள் கிடக்கின்றன. அந்த நாற்காலியில் அமர்ந்து அவற்றைக் கவனியுங்கள். என்னைப் பார்க்க நூற்றுக் கணக்கான மனிதர்கள் வருவதை நீங்கள் காண்கிறீர்களல்லவா? நான் என்ன செய்வேன்? அவர்களைப் பார்த்து விடை சொல்வதா? வேலையற்றவர்கள் எழுதும் கடிதங்களுக்குப் பதில் எழுதிக்கொண்டிருப்பதா? இந்த வேலையை ஒப்படைப்பதற்கு எனக்குக் குமாஸ்தா யாரும் இல்லை. இக்கடிதங்களில் பெரும்பாலானவற்றில் விஷயம் ஒன்றுமே கிடையாது. இருந்தாலும் அவற்றை நீங்கள் படித்துப் பாருங்கள். அவசியமென்று தோன்றினால் கடிதம் வந்து சேர்ந்ததாகத் தெரிவியுங்கள். கவனித்துப் பதிலெழுத வேண்டியவை என்று தோன்றும் கடிதங்களை என்னிடம் கொடுங்கள்."

என்னிடம் அவர் இவ்வளவு நம்பிக்கை காட்டியது எனக்கு அளவற்ற மகிழ்ச்சி தந்தது.

ஸ்ரீ கோஷால் என்னிடம் இவ்வேலையை ஒப்படைத்த போது அவருக்கு என்னைப்பற்றி ஒன்றுமே தெரியாது. பின்னரே அவர் என்னைப்பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

வேலை நிரம்ப எளிதாயிருந்தது. அவ்வளவு கடிதங்களையும் வெகு விரைவில் முடித்துவிட்டேன். ஸ்ரீ கோஷால் உவகை யடைந்தார். அவர் பேச்சுக்காரர். மணிக்கணக்காகப் பேசிக்கொண்டிருப்பார். என்னுடைய பூர்வ சரித்திரத்தைப்பற்றிச் சிறிது அவர் என்னைக் கேட்டுத் தெரிந்து கொண்டதும், எனக்குக் குமாஸ்தா வேலை கொடுத்ததற்காக வருத்தப்பட்டார். அவருக்குப் பின்வருமாறு சமாதானம் சொன்னேன்:—

"இது குறித்துக் கவலை வேண்டாம். தங்களுக்கு முன்னால் நான் எம்மாத்திரம்? காங்கிரஸ் தொண்டில் தலைமயிர் நரைத்துப்போனவர் தாங்கள். நானோ அநுபவமில்லாத இளைஞன். இந்த வேலையை என்னை நம்பிக் கொடுத்ததற்காகத் தங்களுக்குப் பெரிதும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். ஏனெனில் நான் காங்கிரஸ் வேலை செய்ய விரும்புகிறேன். அவ்வேலையைப்பற்றிய சில்லரை விவரங்களைத் தெரிந்துகொள்ளும் அரிய சந்தர்ப்பத்தைத் தாங்கள் எனக் களித்தீர்கள்."

ஸ்ரீ கோஷால் சொன்னதாவது:—"உண்மை சொல்லப்போனால், இத்தகைய மனோபாவந்தான் வேண்டும். ஆனால் இக்காலத்து இளைஞர்கள் இதை உணர்வதில்லை. காங்கிரஸ் பிறந்த நாள் தொட்டு எனக்குக் காங்கிரஸ் அநுபவம் உண்டு. உண்மையில், காங்கிரஸுக்குப் பிறப்பளித்த பெருமையை மிஸ்டர் ஹியூமுடன் பங்கிட்டுக் கொள்ள எனக்கும் உரிமையுண்டு."

இவ்வாறு நாங்கள் நண்பர்களானேம். தம்முடன் நான் சிற்றுண்டி அருந்த வேண்டுமென்று அவர் வற்புறுத்தினர்.

ஸ்ரீ கோஷாலின் சட்டைக்கு அவருடைய வேலைக்காரன் பொத்தான் போட்டுவிடுவது வழக்கம். இந்தத் தொண்டை நான் செய்வதாகச் சொன்னேன். பெரியவர்களிடம் எனக்கு எப்போதும் மரியாதை அதிகம். பெரியவர்களுக்குத் தொண்டு செய்தல் எனக்கு ரொம்பப் பிரியம். ஸ்ரீ கோஷால் இதற்கு ஆட்சேபம் கூறவில்லை. அதற்கு மாறாக மிகவும் மகிழ்ச்சியே கொண்டார். தமது சட்டைக்குப் பொத்தான் போடும்படி கேட்கையில் அவர் பின்வருமாறு கூறுவார்:—“காங்கிரஸ் காரியதரிசிக்குப் பொத்தான் போட்டுக்கொள்ளக்கூட நேரமில்லை, பார்த்தீர்களா? எப்பொழுது பார்த்தாலும் ஏதேனும் வேலை இருந்துகொண்டே யிருக்கிறது.” அவரது கபடமற்ற பேச்சு எனக்கு விநோதமா யிருந்ததேயன்றி, வெறுப்புத் தரவில்லை. அத்தகைய தொண்டினால் நான் அடைந்துள்ள நன்மை அளவிடற் பாலதன்று.

சில தினங்களில், காங்கிரஸ் நடைமுறையைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டேன். தலைவர்களில் அநேகமாக எல்லாரையும் சந்தித்தேன். கோகலே, சுரேந்திரநாதர் முதலிய தீரர்களை அருகிருந்து பார்க்கச் சந்தர்ப்பங் கிடைத்தது. எவ்வளவு நேரம் அங்கு வீணாக்கப் படுகிறதென்பதையும் பார்த்தேன். நமது காரியங்களில் ஆங்கில பாஷை எவ்வளவு பிரதான பதவி வகித்து வருகிறது என்பதைக் கவனிக்க அப்போதே எனக்குப் பெரிதும் வருத்தமாயிருந்தது. சக்தியை வீணுக்குச் செலவு செய்யாமல் பாதுகாக்க வேண்டு மென்று யாரும் கருதியதாகத்

தெரியவில்லை. ஒரு வேலையைப் பலர் செய்தனர். பல முக்கியமான வேலைகளைச் செய்வார் இல்லை.

இவ்வாறு என் மனம் குறை கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருந்தது. எனினும், நான் பிறர் கஷ்டங்களை உணரும் இயல்பு படைத்தவனாதலின், அந்த நிலைமையில் அதைவிட நன்றாகச் செய்தல் இயலாத காரியமாயிருக்கலாமென எண்ணினேன். இவ்வியல்பே, எந்த வேலையையும் குறைவாக மதிப்பிடும் துர்க்குணத்திலிருந்து என்னைக் காப்பாற்றியது.

பதினைந்தாம் அத்தியாயம்

காங்கிரஸ் நடைமுறை

கடைசியில் காங்கிரஸ் மகாசபை கூடிற்று. விசாலமானபந்தலும், அணிவகுத்து நின்ற தொண்டர் படையும், மேடை மீதமர்ந்திருந்த தலைவர் குழாமும் என்னைப் பிரமிப்படையச் செய்தன. இந்தப் பெரிய மகாசபையில் நான் எம்மாத்திரம் என எண்ணி வியப்புற்றேன்.

அக்கிராசன உபந்நியாசம் ஒரு தனிப் புத்தகமெனலாம். அதை அடியிலிருந்து முடிவுவரை படித்து முடித்தல் இயலாத காரியம். சில பகுதிகள் மட்டும் படிக்கப் பட்டன.

பின்னர், விஷயாலோசனைக் கூட்டத்துக்குத் தேர்தல் நடந்தது. கோகலே இக்கூட்டத்துக்கு என்னை அழைத்துச் சென்றார்.

ஸர் பிரோஸிஷா என் தீர்மானத்துக்கு அநுமதி தர ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் விஷயாலோசனைக்

கூட்டத்தில் அதை யார், எப்போது கொண்டுவரப் போகிறார்களென்று நான் கவலைப்படலானேன். ஒவ்வொரு தீர்மானத்தின் மீதும் நீண்ட உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. எல்லாம் ஆங்கிலத்தில் என்று சொல்ல வேண்டுவதில்லை. ஒவ்வொரு தீர்மானத்தையும் தாங்கி நிற்கப் பெயர்பெற்றதலைவர் ஒருவர் இருந்தார். பேரிகை முழக்கம் போன்ற அவர்களுடைய பேச்சுக்களினிடையே எனது ஈனக்குரலைக் கவனிப்பார் யார்? எனவே, நேரமாக ஆக என் நெஞ்சம் துரிதமாக அடித்துக்கொள்ளத் தொடங்கிற்று. கடைசியில் ஆலோசனைக்கு வந்த தீர் மானங்கள் மின்னல் வேகத்தில் முடிவு செய்யப்பட்டன. இரவு 11-மணி; எல்லாருக்கும் எழுந்துபோக அவசரம். எனக்கோ பேசுவதற்குத் தைரியமில்லை. நான் முன்னமேயே கோகலேயைப் பார்த்து அவரிடம் தீர் மானத்தைக் காட்டியிருந்தேன். எனவே, அவருடைய நாற்காலிக்கருகில் நகர்ந்து சென்று 'தயவு செய்து எனக்காக ஏதேனும் செய்யுங்கள்" என்றேன். "உங்கள் தீர்மானத்தை நான் மறந்துவிடவில்லை. தீர்மானங்களை எவ்வளவு வேகத்தில் அடித்துக்கொண்டு போகிறார்கள் என்பதைப் பார்க்கிறீர்களே! ஆனால் உங்கள் தீர் மானத்தைவிட்டு விடாமல் நான் பார்த்துக் கொள் றேன்" என்றார் கோகலே.

"எல்லாம் முடிந்து விட்டன வல்லவா?" என்று ஸர் பிரோஸிஷா கேட்டார்.

"இல்லை; இல்லை. தென்னாப்பிரிக்கா தீர்மானம் ஒன்று பாக்கியிருக்கிறது. ஸ்ரீ காந்தி நெடு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்" என்று கோகலே சத்த மிட்டுக் கூறினார்.

ஸர் பிரோஸிஷா "தீர்மானத்தைத் தாங்கள் பார்த்து விட்டீர்களல்லவா?" என்று கேட்டார்.

"ஓ! பார்த்தேன்."

"எப்படி இருக்கிறது?"

"நிரம்ப நன்றாயிருக்கிறது."

"நல்லது, காந்தி! எங்கே அதைப் படியும்."

நடுநடுங்கிக் கொண்டே தீர்மானத்தைப் படித்தேன். கோகலே ஆமோதித்தார்.

"ஒரு மனதாக நிறைவேறியது" என்று எல்லாரும் ஏககாலத்தில் கூவினார்கள்.

"காந்தி, இதைக் காங்கிரஸில் பிரரேபித்துப் பேச உமக்கு ஐந்து நிமிஷம் தரப்படும்" என்றார் ஸ்ரீ வாச்சா.

இந்நடைமுறை எனக்குச் சிறிதும் பிடிக்கவேயில்லை. தீர்மானம் இன்னதென்று அறிந்துகொள்ளவே யாரும் முயன்றார்களில்லை. ஒவ்வொருவரும் வேலையை முடித்துப் போக அவசரப் பட்டார்கள். கோகலே தீர்மானத்தைப் பார்த்து விட்டபடியால் மற்றவர்கள் அதைப் பார்ப்பதும் அறிந்துகொள்வதும் அநாவசியமென்று கருதப்பட்டது.

மறுநாள் காலையில், நான் அன்று பேசவேண்டியதைப் பற்றி எண்ணிக் கவலைப்படலானேன். ஐந்து நிமிஷத்தில் எதை என்று பேசுவது? கூடியவரை நன்றாகத் தயார் செய்திருந்தேன். ஆயினும் சமயத்தில் வார்த்தைகள் வர மறுத்து விட்டன. எழுதிப் படிக்க வேண்டாமென்றும், ஞாபகத்தி லிருந்தே பேசுவதென்றும் தீர்மானித்திருந்தது ஆபத்தாய் முடிந்தது. தென்னாப்பிரிக்காவில் எனக்கேற்பட்ட பேச்சுத்திறமை இச்சமயத்தில் என்னைக் கைவிட்டுச் சென்றதாகக் காணப்பட்டது.

தென்னுப்பிரிக்கா தீர்மானம் வந்ததும் ஸ்ரீ டின்ஷா வாச்சா என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். நான் எழுந்து நின்றேன். தலை கிறு கிறுவென்று சுழன்றது. எப்படியோ மெதுவாகத் தீர்மானத்தைப் படித்தேன். யாரோ ஒருவர், வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறு வதைப் புகழ்ந்து ஒரு கவி பாடிப் பிரதிநிதிகளுக்கு விநியோகித்திருந்தார். நான் அக்கவியைப் படித்துவிட்டுத் தென்னுப்பிரிக்காவில் குடியேறியுள்ள இந்தியர்களின் குறைகளைப் பற்றிக் குறிப்பிட்டேன். இதற்குள் ஸ்ரீ வாச்சா மணியை யடித்து விட்டார். நான் பேசத் தொடங்கி ஐந்து நிமிஷம் ஆகவில்லை யென்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தது. இன்னும் இரண்டு நிமிஷம் பாக்கி என்று எச்சரிக்கை செய்வதற்காகவே மணி அடிக்கப்பட்டதென்று எனக்குத் தெரியாது. மற்றவர்கள் அரைமணி நேரமும், முக்கால் மணி நேரமும், பேசியபோ தெல்லாம் மணி அடிக்கப்படக் காணும். எனவே, நான் மனவருத்த மடைந்து மணியடித்ததும் உட்கார்ந்து விட்டேன். ஆனால் எனது குழந்தைப் புத்திக்கு, நான் படித்த கவியில் ஸர் பிரோஷிஷாவுக்குப் பதில் இருப்பதாகத் தோன்றிற்று. * தீர்மானம் நிறைவேறி விட்டதென்று சொல்லவேண்டுவதில்லை. அந்நாளில் பிரதிநிதிகளுக்கும், நடவடிக்கைகளைப் பார்க்க வந்தவர்களுக்கும் அதிக வேற்றுமை கிடையாது. எல்லாரும் கையைத் தூக்கி னர்கள். எல்லாத் தீர்மானங்களும் ஏகமனதாக நிறை வேறின. என் தீர்மானமும் இதே கதியை யடைந்தது. இதனால் அதன் முக்கியம் போய் விட்டதென்று கருதினே னயினும், காங்கிரஸ் மகாசபையினால் அது நிறைவேற்றப் பட்ட தென்னும் எண்ணமே எனக்கு மகிழ்ச்சி தந்தது.

* 13-ம் அத்தியாயம் பார்க்க.

காங்கிரஸ் முத்திரை வைத்ததென்றால் தேசமுழுவதும் ஏற்றுக்கொண்டதாகும் என்னும் உணர்வு எவருக்குத்தான் மகிழ்ச்சி அளியாது?

பதினாறும் அத்தியாயம்

கர்ஸான் பிரபுவின் தர்பார்

காங்கிரஸ் முடிவுற்றது. ஆனால் நான் தென்னாப்பிரிக்கா வியாபாரச் சங்கங்களையும், இன்னும் பல பிரமுகர்களையும் பார்க்கவேண்டியிருந்ததால், கல்கத்தாவில் ஒரு மாதம் தங்கினேன். இம்முறை ஹோட்டலில் தங்குவதற்குப் பதிலாக, 'இந்தியா கிளப்பில்' ஓர் அறை கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்துகொண்டேன். பிரபல இந்தியர்கள் சிலர் இக்கிளப்பின் அங்கத்தவரா யிருந்தபடியால், அவர்களுடன் பழகுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்குமென்றும் அவர்களுக்கு மெதுவாகத் தென்னாப்பிரிக்கா விஷயத்தில் சிரத்தை உண்டாக்கலாமென்றும் எதிர்பார்த்தேன். கோகலே 'பிலியர்டு' விளையாட்டு ஆடுவதற்காக இந்தக் கிளப்புக்கு அடிக்கடி வருவதுண்டு. நான் சிறிது காலம் கல்கத்தாவில் இருக்கப் போவதாக அவர் அறிந்ததும் தமது ஜாகையில் வந்து தங்கும்படி அழைத்தார். நான் இவ்வழைப்பை ஏற்று நன்றி கூறினேனாயினும், நானாக அவர் வீட்டுக்குப் போவது நன்றாயிராதென்றெண்ணிச் சும்மா விருந்தேன். அவர் இரண்டொருநாள் பார்த்துவிட்டுத் தாமேவந்து என்னை அழைத்துச் சென்றார். எனது சங்கோச சுபாவத்தைக் கண்டுகொண்ட அவர் "காந்தி, நீர் இந்த நாட்டில் இருக்க வேண்டியவர். இப்படிச் சங்கோசப் பட்டால் காரியம் நடவாது. எவ்

வளவு பேரோடு முடியுமோ அவ்வளவு பேருடனும் நீர் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். நீர் காங்கிரஸ் வேலை செய்ய வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்" என்றார்.

கோகலேயுடன் நான் தங்கியிருந்த வரலாற்றைப் பற்றிக்கூறப் புகுவதற்குமுன் இந்தியா கிளப்பில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறேன்.

இந்த சமயத்திலேயே கர்ஸான் பிரபு தர்பார் நடத்தினார். தர்பாருக்கு அழைக்கப்பெற்ற சில இராஜாக்களும், மகாராஜாக்களும் கிளப்பின் அங்கத்தவராவர். கிளப்பில் அவர்கள் எப்போதும் வங்காளிகள் வழக்கமாக அணியும் அழகிய வேஷ்டி, சட்டை, அங்கவஸ்திரம், ஆகியவற்றையே அணிவது வழக்கம். தர்பார் தினத்தன்று அவர்கள் குற்றேவல்காரர்களுக்குத் தக்க உடையான காற்சட்டைகளும், பளப்பளப்பான பூட்ஸுகளும் அணிவதைக் கண்டேன். இதனால் மனம் நொந்த நான் அவர்களில் ஒருவரை இம்மாறுதலுக்குக் காரணம் என்னவென்று கேட்டேன்.

"எங்களுடைய துரதிர்ஷ்டமான நிலைமை எங்களுக்கே தெரியும். எங்களுடைய செல்வத்தையும் பட்டங்களையும் காப்பாற்றிக் கொள்வதற்காக நாங்கள் எவ்வளவு அவமதிப்புகளுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறதென்பதை நாங்களே அறிவோம்" என்று அவர் கூறினார்.

"ஆனால் குற்றேவல்காரருக்குரிய இந்தத் தலைப்பாகையும், பூட்ஸும் எதற்காக?" என்று வினவினேன்.

"எங்களுக்கும் குற்றேவல்காரர்களுக்கும் என்ன வித்தியாசம்! ஒன்றுமே இல்லை. நாங்கள் கர்ஸான் பிரபுவின் குற்றேவற்காரர்கள் தானே! தர்பாருக்கு நான் போகாதிருந்தால் அதன் பயன்களை அநுபவிக்க நேரும். வழக்கமான உடை தரித்துச் சென்றாலோ பெரிய குற்றமாகும். போகத்தான் போகிறேனே! கர்ஸான் பிரபுவிடம் பேசும் சந்தர்ப்பம் கிடைக்குமென்கிறீரா! அந்த நினைப்பே வேண்டாம்!"

இவ்வாறு மனம் விட்டுப் பேசிய நண்பரிடம் எனக்கு இரக்கமுண்டாயிற்று.

இது இன்னொரு தர்பாரை எனக்கு நினைவூட்டுகிறது.

ஹார்டிஞ் பிரபு ஹிந்து சர்வ கலாசாலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டியபோது ஒரு தர்பார் நடைபெற்றது. வழக்கம்போல் இராஜாக்களும் மகாராஜாக்களும் குழுமியிருந்தனர். இவ்விழாவுக்கு வருமாறு பண்டித மாளவியா எனக்குத் தனிப்பட அழைப்பு அனுப்பி யிருந்தார். அவ்வாறே நான் சென்றிருந்தேன்.

மகாராஜாக்கள் பெண்களைப் போல் ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருந்ததைக் காண என் மனம் புண்ணாயிற்று. அவர்கள் பட்டாடைகள் தரித்து, கழுத்தில் முத்து ஆரங்களும், கையில் கொலுசுகளும், தலைப்பாகைகளில் முத்து, வைர பதக்கங்களும் அணிந்திருந்தார்கள். இவ்வளவும் அல்லாமல், தங்கப் பிடிகளுடன் கூடிய பட்டாக்கத்திகள் அவர்களுடைய அரைக் கச்சுகளினின்றும் தொங்கிக் கொண்டிருந்தன.

இவ்வாடை அணிகள் அவர்களுடைய இராஜரீகத்தின் சின்னங்களல்ல வென்றும், அடிமைத் தனத்தின் சின்னங்

களே யென்றும் கண்டேன். பேடிமையின் சின்னங்களான இப்பட்டயங்களை அவர்கள் தாங்களாகவே விரும்பி அணிகிறார்களென்று முதலில் எண்ணினேன். ஆனால் பின்னர், இந்த இராஜாக்கள் தங்களுடைய நகைகளையெல்லாம் இத்தகைய வைபவங்களின்போது அணிதல் கட்டாயமென்று அறிந்தேன். அவர்களில் சிலர் அவ்வணிகளை மனப் பூர்வமாக வெறுக்கிறார்களென்றும், தர்பார்களில் தவிர மற்ற வேலைகளில் அணிவதேயில்லையென்றும் கேள்விப்பட்டேன்.

நான் கேள்விப்பட்ட இவ்விவரங்கள் எவ்வளவு தூரம் உண்மையானவையென்று எனக்குத் தெரியாது. ஆனால் மற்ற வேலைகளில் அவர்கள் அணிந்தாலும், அணியாவிடினும் பெண்களில் சிலர் மட்டுமே அணியும் அவ்வாபரணங்களை அணிந்து இராஜப் பிரதிநிதியின் தர்பார்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதே மனம் நோகச் செய்யப் போதுமானதன்றோ?

செல்வம், அதிகாரம், மதிப்பு இவற்றின் பொருட்டு மாந்தர் எத்தனை எத்தனை பாவங்களுக்கும், அநீதிகளுக்கும் உள்ளாக வேண்டியிருக்கிறது!

பதினேழாம் அத்தியாயம்

கோகலேயுடன் ஒரு மாதம்—I

நான் கோகலேயுடன் வசிக்கத் தொடங்கிய முதல் நாளிலிருந்தே, எனது சொந்த வீட்டில் இருப்பது போல் எண்ணுமாறு அவர் செய்தார். தமது சொந்தத் தம்பியைப்போல் என்னைப் பாவித்து நடத்தினார். எனது

தேவைகள் எல்லாவற்றையும் பற்றி நன்கு விசாரித்துத் தெரிந்துகொண்டு அவற்றை நான் குறைவறப் பெறுவதற்கு ஏற்பாடு செய்தார். அதிர்ஷ்டவசமாக எனது தேவைகள் மிகக் கொஞ்சமாயிருந்தன. என்னுடைய காரியங்களை நானே செய்து கொள்ளப் பழகியிருந்தபடியால் எனக்கு யாரும் குற்றேவல் புரிதல் அவசியமில்லாமல் இருந்தது. இவ்வாறு என் காரியங்களை நானே செய்து கொண்டதும், மற்றும் தூய்மையான என் வழக்க பழக்கங்களும், விடா முயற்சி, ஒழுங்கு முதலிய குணங்களும் கோகலேயின் மனதைப் பெரிதும் கவர்ந்தன. அடிக்கடி அவர் அசாத்தியமாக என்னைப் புகழ்ந்து பேசுவார்.

தம்முடைய காரியங்களில் எதையும் எனக்குத் தெரியக்கூடாதென்று அவர் மறைத்து வைத்ததாகக் காணப்படவில்லை. அவரைப் பார்க்க வந்த பிரமுகர்கள் எல்லாரையும் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்களுள் என் ஞாபகத்தில் சிறப்பாக நிற்பவர் டாக்டர் (தற்போது ஸர்) பி. சி. ராய். அவர் கோகலேயின் ஜாகைக்கு வெகு சமீபத்தில் வசித்தபடியால் அடிக்கடி வருவதுண்டு.

" இவர் தான் ஆசிரியர் ராய். இவர் மாதம் ரூ. 800 சம்பளம் வாங்குகிறாராயினும் தமக்காக ரூ. 40 மட்டும் வைத்துக்கொண்டு பாக்கியைப் பொது நலத்துக்காகச் செலவிடுகிறார். இவருக்குக் கலியாணம் ஆகவில்லை. கலியாணம் செய்து கொள்ளும் விருப்பமும் இவருக்கில்லை" என்று கூறி டாக்டர் ராயை கோகலே எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அப்போது நான் பார்த்த டாக்டர் ராய்க்கும் இப்போ துள்ள டாக்டர் ராய்க்கும் நான் அதிக வித்தியாசம் காண வில்லை. இப்போது போலவே அப்போதும் அவர் எளிய உடையே தரித்திருந்தார். ஆனால் ஒரே ஒரு வேற்றுமை யுண்டு. இப்போது கதராணிகிறார்; அப்போது இந்திய ஆலைத்துணி அணிந்திருந்தார். கோகலேக்கும் டாக்டர் ராய்க்கும் நடந்த சம்பாஷணைகளை எவ்வளவு நேரம் கேட்டிருந்தாலும் எனக்கு அலுப்பதில்லை. இன்னும் சிறிது நேரம் பேசமாட்டார்களா வெனத் தோன்றும். ஏனெனில் அவர்களுடைய சம்பாஷணை பொது நன்மை யைப் பற்றியதாகவும், அறிவு வளர்ச்சிக் குரியதாகவுமே இருக்கும். சில சமயம் அவர்கள் பொது ஜனத் தலைவர்க ளிடமுள்ள குறைகளைப் பற்றியும் பேசுவார்கள். அப் போது என் மனம் பெரிதும் வருந்தும். இச்சம்பாஷணை களைக் கேட்டிருந்ததின் பயனாக, சுதந்திரப்போராட் டத்தின் முன்னணியில் நிற்கும் வீரர்கள் என நான் எண்ணி யிருந்த பலர் உண்மையில் நிரம்பச் சின்ன மனிதர்களாகத் தோன்றலாயினர்.

கோகலே வேலை செய்யும்போது பார்த்துக் கொண் டிருத்தல் மகிழ்ச்சி தருவதாயிருந்ததோடு சிறந்த படிப் பினையாகவு மிருந்தது. ஒரு நிமிஷமேனும் அவர் காலத்தை வீணாக்குவதில்லை. அவர் யார் யாருடன் பழகினாலும், நட்புக்கொண்டாலும் அப்பழக்கம், நட்பு எல்லாம் பொது நலத்தைக் குறிக்கொண்டனவாகவே இருக்கும். அவ ருடைய பேச்சுக்களும் தேச முன்னேற்றத்தைப் பற்றி யனவாகவே இருக்கும். பொய்யேனும் கபடமேனும் அணுவளவும் அவர் பேச்சில் காணப்படா. இந்தியாவின் வறுமையும், பராதீன நிலையும் அவருள்ளத்தில் இடை

விடாது குடிகொண்டிருந்தன. பலர் பற்பல முயற்சிகளில் அவருக்குச் சிரத்தை யூட்ட முயல்வார்கள். ஆனால் எல்லோருக்கும் அவர் ஒரே விடையே தருவது வழக்கம். "அக்காரியத்தைத் தாங்களே செய்யுங்கள். என் வேலையை நான் செய்கிறேன். நான் வேண்டுவது தேச விடுதலை. அதைப் பெற்றுவிட்டால் மற்ற விஷயங்களைப் பற்றிப் பின்னர் யோசிக்கலாம். என்னுடைய காலம் ஆற்றல் எல்லாம் இப்போது அதற்கே தேவையா யிருக்கின்றன" என்பார்.

ரானடேயிடம் அவர் வைத்திருந்த பக்தி ஒவ்வொரு நிமிஷமும் வெளியாகிக் கொண்டிருந்தது. எந்த விஷயத்திலும் ரானடேயின் அபிப்பிராயத்தையே அவர் முடிவானதாகக் கொள்வார். அடிக்கடி ரானடேயின் அபிப்பிராயம் இது என்று எடுத்துக் காட்டுவார். நான் கோகலேயுடன் தங்கியிருந்தபோது ரானடேயின் சிரார்த்தமோ, ஜன்ம நட்சத்திரமோ வந்தது. எது என்று நன்றாக ஞாபகமில்லை. கோகலே அத்தினத்தைத் தவறாமல் சிரத்தையுடன் அனுஷ்டித்து வந்தார். அப்போது அவருடன் என்னைத் தவிர, ஆசிரியர் கதாவடே என்னும் நண்பரும், மற்றொரு ஸப் ஜட்ஜ் நண்பரும் இருந்தனர். மேற்படி சிரார்த்தம் அல்லது ஜன்ம நட்சத்திரக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள அவர் எங்களை அழைத்தார். அப்போது ரானடேயைப் பற்றித் தமது ஞாபகங்களை எங்களுக்கு எடுத்துக் கூறினார். இடையில் ரானடே, திலாங், மண்டலீக் இம்மூவரையும் ஒப்பிட்டு விவரித்தார். திலாங்கின் அழகிய வசன நடையைச் சிலாகித்துப் பேசினார். மண்டலீக் பெரிய சீர்திருத்தக்காரர் என்று கூறி, அவர் தமது கட்சிக்காரர்களின் நலத்தில் எவ்வளவு

கவலை யுள்ளவரா யிருந்தார் என்பதைக் காட்ட ஓர் உதாரணம் சொன்னார். வெளியூர் நீதிமன்ற மொன்றுக்கு அவர் போக வேண்டிய அன்று ரயில் தவறி விட்டதாம். ஆயினும் அவர் 'ஸ்பெஷல்' வண்டி அமர்த்திக்கொண்டு மேற்படி நீதிமன்றஞ் சேர்ந்து தமது கட்சிக்காரர் கஷ்ட மடையா வண்ணம் பார்த்துக் கொண்டாராம். ஆனால் இவர்கள் எல்லாரையும் விட எல்லாத் துறைகளிலும் மேதாவியாக விளங்கியவர் ரானடே யென்றும், அவர் பெயர் பெற்ற நீதிபதியா யிருந்தது போலவே பெரிய சரித்திராசிரியராயும், சிறந்த பொருளாதார நிபுணராயும், சீர்திருத்தக்காரராயும் இருந்தார் என்றும் சொன்னார். ரானடே நீதிபதியா யிருந்தபோதும் அச்ச மின்றிக் காங்கிரஸ் மகா சபைகளுக்குப் போவதுண்டாம். அவ ருடைய மதி நுட்பத்தில் எல்லாருக்கும் நம்பிக்கை யுண்டாதலால் அவருடைய முடிவுகளுக்கு மாறு கூறாமல் ஒப்புக் கொள்வார்களாம். இவ்வாறு தமது குருவின் குணாதிசயங்களை வருணித்து வரும்போது கோகலேக்கு அளவுகடந்த மகிழ்ச்சி பொங்கிக்கொண்டே யிருக்கும்.

அந்நாளில் கோகலே குதிரை வண்டி ஒன்று வைத் திருந்தார். அவருக்கு இதன் அவசியம் யாது என்பது எனக்குப் புலப்படவில்லை. எனவே இதைப்பற்றி அவ ரிடம் வாக்குவாதம் செய்தேன். "தாங்கள் டிராம் வண்டியில் போய் வரக்கூடாதா? அதனால் தலைவருடைய கௌரவத்துக்குக் குறைவு நேர்ந்து விடுமா?" என்றேன்.

இக்கேள்வியால் சிறிது வருத்தமுற்று அவர் கூறிய தாவது:—"நீங்கள் கூட என்னை அறிந்துகொள்ளத் தவறி விட்டீர்கள் பார்த்தீர்களா? எனக்குக் கிடைக்கும் சட்ட சபைப் படியை என் சொந்த சௌகரியங்களுக்காக

உபயோகப்படுத்துவதில்லை. நீங்கள் டிராம் வண்டியில் விருப்பம்போல் போகும் சுதந்திரம் பெற்றிருப்பது குறித்து நான் பொறாமைப்படுகிறேன். அவ்வாறு நான் செய்ய முடியாதிருப்பது குறித்து வருந்துகிறேன். நீங்களும் என்னைப்போல் பொது ஜனங்களால் நன்கறியப் படும் துர்ப்பாக்கியராகும்போது டிராம் வண்டியில் போவது உங்களுக்கும் கஷ்டமாகவே யிருக்கும். தலைவர்கள் செய்வனவெல்லாம் சொந்த சௌகரியத்தை உத்தேசித்தே செய்கிறார்கள் என எண்ண வேண்டாம். உங்கள் எளிய வழக்க பழக்கங்கள் எனக்குப் பெரிதும் பிடித்திருக்கின்றன. நானும் என்னாலியன்ற அளவு எளிய வாழ்வு முறையையே கைக்கொண்டுள்ளேன். ஆனால் என்னைப் போன்றவனுக்குக் கொஞ்சம் பணச் செலவு ஆகாமல் முடியாது.”

இவ்வாறு, நான் கூறிய புகார்களில் ஒன்றுக்குத் திருப்திகரமாக விடை சொல்லிவிட்டார். ஆனால் மற்றொன்றுக்கு அவர் கூறிய பதில் எனக்குத் திருப்தி தரவில்லை. “நீங்கள் உலாவக்கூடச் செல்வதில்லையே! உங்களை ஓயாமல் வியாதி பிடுங்கித் தின்பதில் ஆச்சரியம் யாது? பொது ஊழியத்தில் ஈடுபட்டால் தேகாப்பியாசத்துக்குச் சாவகாசமே இல்லாமற் போகவேண்டுமா, என்ன?” என்று வினவினேன்.

“நீங்கள் பார்க்கிறீர்களே! உலாவச் செல்வதற்கு எனக்குப் பொழுது எங்கே இருக்கிறது?” என்று அவர் விடை யளித்தார்.

நான் கோகலேயிடம் பெருமதிப்பு வைத்திருந்த படியால் அவரை எதிர்த்துப் பேச எப்போதும் துணிவ தில்லை. எனவே மேற்படி பதில் எனக்குத் திருப்தி தர

வில்லை யாயினும் வாளா விருந்தேன். ஆனால் அப்போதும் சரி, இப்போதும் சரி, ஒருவனுக்கு எவ்வளவு அதிகமான வேலை யிருந்தபோதிலும், சாப்பாட்டுக்குச் சாவகாசம் ஏற்படுத்திக் கொள்வது போல் தேகாப்பியாசத்துக்கும் சாவகாசம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது என் உறுதியான நம்பிக்கை யாகும். இதனால் ஒருவனது வேலை செய்யுந்திறமை குறையா தென்பதும், அதற்கு மாறாக அத்திறமை அதிக மாகு மென்பதும் என் தாழ்மையான அபிப்பிராயம்.

பதினேட்டாம் அத்தியாயம்

கோகலேயுடன் ஒரு மாதம்—II

கோகலேயுடன் தங்கியிருந்த காலத்தில் நான் எப்போதும் வீட்டிலேயே உட்கார்ந்திருந்து விடவில்லை; வெளியே நிரம்பச் சுற்றினேன்.

தென்னாப்பிரிக்கா கிறிஸ்துவ நண்பர்களுக்கு, இந்தியாவில் இந்தியக் கிறிஸ்துவர்களுடன் பழகி அவர்களுடைய நிலையை அறிந்து கொள்வேனென்று கூறியிருந்தேன். பாபு காளி சரண பானர்ஜியைப்பற்றி நான் கேள்வியுற்றிருந்ததுடன், அவரிடம் எனக்குப் பெரு மதிப்பு ஏற்பட்டிருந்தது. அவர் காங்கிரஸில் ஒரு பிரதான புருஷராக விளங்கினர். எனவே காங்கிரஸினின்று ஒதுங்கி நின்று ஹிந்து முஸ்லிம்களுடன் கலப்பின்றி யிருந்த சாதாரண இந்தியக் கிறிஸ்துவர்களைப்பற்றி நான் கொண்டிருந்த ஐயங்கள் அவர் விஷயத்தில் இல்லை. அவரைப் பார்க்க விரும்புவதாக கோகலேயிடம் சொன்னேன். அவர் கூறியதாவது:—“நீங்கள் அவரைப் பார்ப்பதால்

என்ன பயன்? அவர் மிகவும் நல்ல மனிதரே. ஆனால் உங்களுக்குத் திருப்தி தரமாட்டார். அவரை நான் நன்கு அறிவேன். ஆயினும் நீங்கள் விரும்பினால் கட்டாயம் அவரைச் சென்று பார்க்கலாம்."

எனவே, அவரை வந்துபார்க்க அநுமதி கோரிக் கடிதம் எழுதினேன். ஒரு தினம் குறிப்பிட்டு அவர் உடனே பதில் விடுத்தார். குறிப்பிட்ட தினத்தில் நான் சென்றபோது அவர் மனைவி மரணத்தறுவாயில் இருக்கக் கண்டேன். அவர் வீடு சாதாரணமானதொன்று. காங்கிரஸில் அவர் காற்சட்டை, மேற்சட்டை முதலியவை அணிந்திருக்கப் பார்த்தேன். இப்போது அவர் வங்காளத்து வேஷ்டியும் சட்டை ஒன்று மட்டும் அணிந்திருக்கக் கண்டு மகிழ்ந்தேன். நானே அப்போது பார்ஸி முறையில் மேற் சட்டையும், காற்சட்டையும் தரித் திருந்தேனாயினும் அவருடைய எளிய உடை எனக்குப் பிடித்திருந்தது.

வீண் பேச்சில் பொழுது போக்காமல் உடனே என்னுடைய சந்தேகங்களைத் தெரிவித்தேன். "மனிதன் பாவஞ் செய்து வீழ்ச்சியுற்றான் என்னும் கொள்கையில் உமக்கு நம்பிக்கை யுண்டா?" என்று கேட்டார்.

'ஆம்; உண்டு' என்றேன்.

"அங்ஙனமாயின், ஹிந்து மதம் அதற்கு விமோசனம் தருவதில்லை. கிறிஸ்துவ மதம் தருகிறது. பாவத்தின் விளைவு மரணமேயாகும். அதினின்று விடுதலை பெறும் வழி ஏசுவிடம் அடைக்கலம் புகுவதே என்று பைபிள் சொல்லுகிறது."

பகவத் கீதை கூறும் பக்தி மார்க்கத்தைப்பற்றி நான் குறிப்பிட்டேன். அது பயன்படவில்லை. அவர் என்னிடம்

காட்டிய அன்புக்காக வந்தனங் கூறி விடை பெற்றேன். அவர் எனக்குத் திருப்திதரவில்லை யாயினும் இச்சந்திப்பி ஞல் நான் பயனடையாமற் போகவில்லை.

இந்நாட்களில் கல்கத்தாவின் வீதிகளில் நான் ஓயாது சுற்றிக்கொண்டிருந்தேன். பல விடங்களுக்குக் கால் நடையாகவே சென்றேன். நீதிபதி மித்ரரையும், ஸர் குருதாஸ் பானர்ஜியையும் போய்ப் பார்த்தேன். தென் ஞப்பிரிக்கா விஷயமாக அவர்களுடைய உதவி எனக்குத் தேவையா யிருந்தது. இதே காலத்தில் ராஜா ஸர் பியாரி மோஹன் முக்கர்ஜியையும் பார்த்தேன்.

காளி சரண பானர்ஜி என்னுடன் பேசுகையில் காளி கோயிலைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அக்கோயிலைப் பற்றிநான் புத்தகங்களிலும் படித்திருந்தபடியால் அதைப் பார்க்க ஆவல் கொண்டு ஒரு நாள் சென்றேன். நீதிபதி மித்ரரின் வீடு மேற்படி கோயிலுக்குச் சமீபத்திலேயே இருந்தபடியால் அவரைப் பார்த்த அன்றே கோயிலுக்கும் போனேன். வழியில் காளிக்குப் பலி கொடுப்பதற்காக ஆடுகள் வரிசை வரிசையாய்ப் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்தேன். கோயிலுக்குப் போகும் சந்தில் இருபுறமும் பிச்சைக்காரர்கள் அணிவகுத்து நின்ருர்கள். அவர்களில் பிச்சைக்கார சாதுக்களும் இருந்தனர். அந்நாளிலேயே உடல் வலிமையுள்ளவர்களுக்குப் பிச்சை கொடுப்பது முற்றுந் தவறு என்னும் கொள்கையில் உறுதி யுடையவன் நான். ஒரு கும்பல் பிச்சைக்காரர் என்னைப் பின் தொடர்ந்து வந்தனர். ஒருவன் தாழ்வார மொன்றில் உட்கார்ந்திருந்தான்.

“தம்பி, எங்கே போகிருய்?” என்று அவன் என்னைப் பார்த்துக் கேட்டான்.

நான் போகுமிடத்தைச் சொன்னதும் என்னையும் என் தோழரையும் உட்காரும்படி சொன்னான். அவ்வாறே உட்கார்ந்தோம்.

"ஆடுகளைப் பலியிடுவது மதம் என்று கருதுகிறாயா?" என்று அவனைக் கேட்டேன்.

"மிருகக் கொலையை மதமென்று யார்தான் சொல்வார்கள்?"

"அப்படியானால் அது கூடாதென்று நீ ஏன் போதனை செய்யக்கூடாது?"

"அது என்னுடைய வேலையன்று. இறைவனை வழிபடுவதே எங்கள் வேலை."

"இறைவன் வழிபாட்டுக்கு உங்களுக்கு வேறு இடம் கிடைக்கவில்லையா?"

"எங்களுக்கு எல்லா இடமும் ஒன்றே. ஜனங்கள் ஆட்டுமந்தையைப் போன்றவர்கள். தலைவர்கள் காட்டும் வழியைத் தொடர்ந்து மற்றவர்கள் ஓடுவார்கள். சாதுக்களாகிய எங்கள் வேலை அதுவன்று."

விவாதத்தை வளர்த்தாமல் இத்துடன் நிறுத்திவிட்டுக் கோயிலுக்குச் சென்றோம். எங்களை எதிர்கொண்டழைக்க இரத்த ஆறுகள் ஓடிவந்தன. அங்கு நிற்பதற்கே எனக்குச் சகிக்கவில்லை. நான் ஆத்திரமடைந்தேன்; அமைதி யிழந்தேன். அக்காட்சியை நான் என்றும் மறந்தவனில்லை.

அன்று மாலையே சில வங்காளி நண்பர்கள் என்னை ஒரு விருந்துக்கு அழைத்திருந்தார்கள். அங்கு ஒரு நண்பரிடம் இந்தக் குரூரமான ஆராதன முறையைப் பற்றிச் சொன்னேன். அவர் "ஆடுகளுக்கு வலியே தெரியாது.

பேரிகை முழக்கம் முதலிய சத்தங்கள் அவற்றிற்குத் துன்ப உணர்ச்சி யில்லாமற் செய்து விடுகின்றன" என்றார்.

இதை என்னால் நம்ப முடியவில்லை. ஆடுகளுக்கு வாயிருந்தால் வேறு கதை சொல்லும் என்று அவருக்கு விடை யளித்தேன். இரக்கமற்ற இக்கொடும் வழக்கம் நிறுத்தப்பட வேண்டுமென்று எண்ணினேன். புத்தருடைய க்தையை நினைந்தேன். ஆனால் இவ்வேலை என் ஆற்றலுக் கப்பாற்பட்டது என்றும் கண்டேன்.

இன்றும் அதே அபிப்பிராயம் கொண்டவனு யிருக்கிறேன். மனிதனுடைய உயிரை விட ஆட்டுக்குட்டியின் உயிர் எவ்வகையிலும் தாழ்ந்த தன்று என்பது என் கருத்து. மனித உடலுக்காக ஆட்டுக்குட்டியின் உயிரை வாங்க நான் ஒரு நாளும் சம்மதியேன். ஒரு பிராணி எவ்வளவுக்கு ஆதரவற்றதாயிருக்கிறதோ அவ்வளவுக்கு அதைக் கொடுமையிலிருந்து காப்பாற்றும் பொறுப்பு மனிதனுக்கு ஏற்படுகிறதென்பது என் மதம். ஆனால் அத்தகைய தொண்டுக்குத் தன்னைத் தகுதி செய்து கொள்ளாத மனிதன் அப்பாது காப்பை அளிக்க இயலாது. ஆடுகளை இவ்வநாச்சார பலியினின்றும் காப்பாற்றும் சக்தி பெறுவதற்கு முன் நான் இன்னும் என்னைத் தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டும்; இன்னும் அதிகத் தியாகம் செய்ய வேண்டும். இத்தகைய ஆத்மத் தூய்மையையும், தியாகத்தையும் வேண்டி வேண்டி நான் இன்று உயிர்விட வேண்டியவனு யிருக்கிறேன். இவ்வுலகில் தெய்வீக இரக்கங் கொண்ட ஒரு பெரிய மகா புருஷரோ, மகனீயையோ தோன்றி, இம்மகா பாவத்தினின்றும் நம்மை விடுவித்து, குற்றமற்ற ஏழைப் பிராணிகளின் உயிரைக் காப்பாற்றி, நமது கோயிலையும் தூய்மைப்

படுத்த மாட்டாரா என்று இடைவிடாது பிரார்த்தித்து வருகிறேன். வங்காளம்—கல்வியிலும், அறிவிலும், தியாகத்திலும், ஈவிரக்கத்திலும் தலை சிறந்த வங்காளம்—இப் பாதகப் படுகொலையைச் சகித்திருப்ப தெங்ஙனம்?

பத்தோன்பதாம் அத்தியாயம்

கோகலேயுடன் ஒரு மாதம்—III

மாதத்தின் பேரால் காளி மாதாவுக்கு அளிக்கப்பட்ட பயங்கரமான பலியானது வங்காளிகளின் வாழ்க்கையை அறிந்து கொள்வதில் எனக்கிருந்த ஆசையை அதிகமாக்கிற்று. பிரஹ்ம சமாஜத்தைப்பற்றி நான் நிரம்பப் படித்தும் கேள்விப்பட்டு மிருந்தேன். பிரதாப சந்திர மஜூம்தாரின் வாழ்க்கையைப் பற்றிச் சிறிது தெரிந்து கொண்டிருந்ததோடு அவர் உபந்நியாசம் செய்த சில கூட்டங்களுக்கும் சென்றிருந்தேன். இப்போது, அவரால் இயற்றப்பட்ட கேசவ சந்திரசேனரின் ஜீவிய சரிதத்தை வாங்கி ஆவலுடன் படித்தேன். ஆதி பிரஹ்ம சமாஜத்திற்கும், ஸாதாரண பிரஹ்ம சமாஜத்துக்கும் உள்ள வேற்றுமை எனக்குத் தெரிய வந்தது. பண்டித சிவநாத சாஸ்திரியைக் கண்டு பேசினேன். பின்னர், ஆசிரியர் கதாவடேயுடன் மகரிஷி தேவேந்திரநாத தாகூரைப் பார்க்கச் சென்றேன். அப்போது அவரைப் பார்க்க யாரும் அநுமதிக்கப்படவில்லை யாதலின், நாங்களும் பார்க்க முடியவில்லை. ஆனால் அவர் இருப்பிடத்தில் நடந்த பிரம சமாஜ உற்சவம் ஒன்றுக்கு அழைப்புப் பெற்றோம். அங்கே வங்காளிகளின் இனிய சங்கீதம் கேட்கும் பேறு எங்களுக்குக் கிடைத்தது. அப்போ

திருந்து வங்காளத்து சங்கீதத்தினிடம் பற்றுக் கொண்டவனுனேன்.

பிரஹ்ம சமாஜத்தைப்பற்றிப் போதிய அளவு தெரிந்து கொண்ட பிறகு விவேகானந்த ஸ்வாமியைப் பாராமல் மனத் திருப்தி யடைவது இயலாததாயிற்று. எனவே மிகுந்த உற்சாகத்துடன் பேலூர் மடத்துக்குச் சென்றேன். வழி முழுதுமோ, பெரும் பகுதியோ கால் நடையாகவே சென்றதாக ஞாபகம். மடம் அமைக்கப் பட்டிருந்த ஏகாந்தப் பிரதேசம் என் மனத்தைக் கவர்ந்து இன்ப மூட்டிற்று. ஆனால் ஸ்வாமிகள் அப்போது நோய் வாய்ப்பட்டு கல்கத்தாவிலுள்ள தமது வீட்டில் இருப்பதாகவும், அவரைப் பார்க்க முடியாதென்றும் அறிந்த போது எனக்கு உண்டான ஏமாற்றத்துக்கும் வருத்தத்துக்கும் அளவில்லை. பின்னர் சகோதரி நிவேதிதை யம்மையாரின் இருப்பிடத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு சௌரிங்கீ சாலையிலிருந்த ஒரு மாளிகையில் அவரைப் பார்த்தேன். அவரைச் சூழ்ந்திருந்த பெருமிதம் என்னைத் திடுக்கிடச் செய்துவிட்டது. அவருடன் சம்பாஷித்ததிலும் நாங்களிருவரும் ஒத்துப் போகக்கூடிய விஷயங்கள் பல இல்லை என்று தெரியவந்தது. இதைப்பற்றி நான் கோகலேயிடம் சொன்னபோது அவர் தாம் இது குறித்து வியப்புறவே யில்லை யென்றும், சகோதரி நிவேதிதையைப் போன்ற ஆவேச இயல்புடைய * ஒருவருக்கும் எனக்கும் எவ்விஷயத்திலும் ஒற்றுமை ஏற்பட முடியாதென்றும் கூறினர்.

* ஆங்கிலத்தில் Volatile என்னும் பதம் உபயோகிக்கப் பட்டிருக்கிறது. அநுபந்தம் பார்க்க.

ஸ்ரீ பெஸ்டோன்ஜி பாதுஷாவின் வீட்டில் அவ்வம்மையாரை மீண்டும் ஒரு முறை சந்தித்தேன். அவர் பெஸ்டோன்ஜியின் வயது முதிர்ந்த தாயாரோடு பேசிக் கொண்டிருக்கையில் அங்கு நான் போக நேர்ந்தது. எனவே, அவர்களிடையே மொழி பெயர்த்துச் சொல்லும் வேலை எனக்கேற்பட்டது. அப்பெண்மணியுடன் ஒத்துப் போக முடியவில்லையாயினும் அவர் ஹிந்து மதத்தினிடம் கொண்டிருந்த அளவிறந்த அன்பைக்கண்டு வியந்தேன். அவருடைய புத்தகங்களைப் பற்றிப் பிற்காலத்திலேயே தெரிந்துகொண்டேன்.

என்னுடைய காலம், தென்னாப்பிரிக்கா வேலை சம்பந்தமாகக் கல்கத்தா பிரமுகர்களைப் பார்ப்பதிலும், கல்கத்தாவிலுள்ள மத ஸ்தாபனங்களையும் பொது ஸ்தாபனங்களையும் சென்று பார்த்து ஆராய்வதிலுமாகக் கழிந்து வந்தது. ஒருமுறை டாக்டர் மல்லிக் அவர்களின் தலைமையின்கீழ், "போயர் யுத்தத்தில் இந்திய சேவைப் படையின் ஊழியம்" என்ற விஷயமாக உபந்நியாசம் செய்தேன். "இங்கிலீஷ்மன்" பத்திரிகையுடன் எனக்கேற்பட்டிருந்த பழக்கம் இச்சமயத்திலும் பெரும் உதவியா யிருந்தது. மிஸ்டர் ஸாண்டர்ஸ் நோய்வாய்ப்பட்டிருந்தாராயினும் 1896-ல் செய்த அளவு இப்போதும் உதவி செய்தார். எனது இவ்வுபந்நியாசம் கோகலேக்குப் பிடித்திருந்தது. டாக்டர் ராய் இதைப்பற்றிப் புகழ்ந்து கூறியது அவருக்குப் பெரு மகிழ்ச்சி யளித்தது.

இவ்வாறு கோகலேயின் வீட்டில் நான் தங்கியிருந்தின் பயனாக, கல்கத்தாவில் என் வேலை நிரம்பவும் சுலபமாயிற்று. பிரபல வங்காளி குடும்பங்களுடன் எனக்கு

அறிமுகம் ஏற்பட்டது. வங்காளத்துடன் எனக்கேற்பட்ட நெருங்கிய தொடர்புக்கு அதுவே ஆரம்பமாகும்.

மிக முக்கியமான இம்மதத்தைப்பற்றி இன்னும் பல ஞாபகங்களை விட்டுச் செல்லவேண்டியவனா யிருக்கிறேன். இடையில், 'பர்மாவுக்கு அவசரமாகச் சென்று திரும்பியதைப்பற்றி மட்டும் குறிப்பிட்டு மேலே செல்கிறேன். பர்மாவில் பொங்கிகள் எனப்படும் சந்நியாசிகளின் சோம்பேறி வாழ்வு எனக்குப் பெரிதும் மனவருத்த மளித்தது. பொற் கோயிலையும் பார்த்தேன். அங்கே கணக்கற்ற சிறு மெழுகுவர்த்தி தீபங்கள் எரிந்த காட்சி எனக்குப் பிடிக்கவில்லை. கோயிலின் கர்ப்பக்கிரஹத்தில் எலிகள் ஓடியது ஸாது தயானந்தரின் அநுபவத்தை எனக்கு நினைவூட்டிற்று. பர்மியப் பெண்மணிகளின் சுதந்திர வாழ்க்கையையும் அவர்களுடைய சுறு சுறுப்பையும் கண்டு மகிழ்ந்தேன். அவ்வளவுககு, ஆண் மக்களின் 'மத மதப்பு' எனக்கு வருத்தமளித்தது. நான் பர்மாவிலிருந்த சிறு காலத்திற் குள்ளாகவே, பம்பாய் இந்தியா ஆகாததுபோல் இரங்கூனும் பர்மா ஆகாது என்று கண்டு கொண்டேன். இந்தியாவிலுள்ள நாம் ஆங்கில வியாபாரிகளின் தரகர்களாகி யிருப்பதுபோல் பர்மாவில் நம்மவர்களும் ஆங்கில வியாபாரிகளுடன் சேர்ந்துகொண்டு பர்மியரைத் தரகர்கள் ஆக்கியிருப்பதுங் கண்டேன்.

பர்மாவிலிருந்து திரும்பியதும் கோகலேயிடம் விடைபெற்றுக் கொண்டேன். அவரிடமிருந்து பிரியவேண்டி வந்தது எனக்குப் பெரிதும் துயரமளித்தது. ஆனால் கல்கத்தாவில் என்னுடைய வேலை முடிந்து விட்டபடியால் அங்கே இனித் தங்குவதற்கு முகாந்திர மெதுவுமில்லை.

ஓரிடத்தில் நிலைபெறுவதற்கு முன்னால் இந்தியா முழுவதும் ஒருமுறை மூன்றாம் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்து மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளின் கஷ்டங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தேன். இதைப்பற்றிக் கோகலேயிடம் தெரிவித்தேன். அவர் முதலில் எள்ளி நகையாடினாராயினும், நான் பார்க்க விரும்புவது என்னவென்று விளக்கிக் கூறிய போது சந்தோஷத்துடன் சம்மதந் தந்தார். முதன் முதலில் காசிக்குச் சென்று அங்கு அப்போது நோயாய்ப் படுத்திருந்த ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையாருக்கு என் வணக்கஞ் செலுத்த உத்தேசித்தேன்.

எனவே, மூன்றாம் வகுப்புப் பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக் கொள்ளவேண்டியதாயிற்று. கோகலே சிற்றுண்டி வனம் ஒன்று தந்தார். அதில் நிறையலட்டுகளும் பூரிகளும் வைத்திருந்தார். 12 அணு பெறுமான கித்தான் பை ஒன்றும், சாயா * கம்பளியினாலான நீளமான மேற்சட்டையொன்றும் வாங்கிக் கொண்டேன். இச் சட்டையையும், ஒரு வேஷ்டி, ஒரு துண்டு, ஓர் உட்சட்டை இவற்றையும் பையில் வைத்தேன். இவையல்லாமல், போர்த்திக் கொள்ளத் துப்பட்டி ஒன்றும், தண்ணீர்க் கூஜா ஒன்றும் இருந்தன. இவ்வளவு சாமான்களையும் சேகரித்துக் கொண்டு பிரயாணப்பட்டேன். கோகலேயும், டாக்டர் ராயும் என்னை வழி யனுப்ப ரயில்வே நிலையத்துக்கு வந்தார்கள். அவ்வளவு சிரமம் அவர்களுக்கு வேண்டாமென்று நான் வேண்டிக்கொண்டும் அவர்கள் கேட்க

* இவ்வூர் போர்பந்தர் சமஸ்தானத்தில் முரட்டுக் கம்பளித் துணிகளுக்குப் பெயர்போன இடம்.

வில்லை. "நீங்கள் முதல் வகுப்பில் சென்றால் நான் வந்திருக்க மாட்டேன். இப்போது கட்டாயம் வர வேண்டும்." என்றார் கோகலே.

கோகலே ரயில்வே நிலையத்திற்குள் வருவதை யாரும் தடுக்கவில்லை. அவர் பட்டுத் தலைப்பாகையும், குட்டைச் சட்டையும், வேஷ்டியும் அணிந்திருந்தார். ஆனால் வங்காளி உடை தரித்திருந்த டாக்டர் ராயை டிக்கட் பரிசோதகர் நிறுத்திவிட்டார். அவர் தமது நண்பர் என்று கோகலே கூறியதும் விடப்பட்டார்.

இவ்வாறு அவர்களுடைய ஆசிகளைப் பெற்றுப் பிரயாணமானேன்.

இருபதாவது அத்தியாயம்

காசியில்

கல்கத்தாவிலிருந்து இராஜகோட்டைக்குப் பிரயாணம். வழியில் காசி, ஆக்ரா, ஜயபுரி, பளன்புரி இவ்விடங்களில் தங்கிச் செல்ல உத்தேசித்தேன். இவற்றை யல்லாமல் வேறிடங்களைப் பார்க்கச் சாவகாசம் இல்லை. ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு நாளே தங்கினேன். பளன்புரியைத் தவிர மற்ற இடங்களில் சாதாரண யாத்ரீகர்களைப் போலவே தர்ம சாலைகளிலோ, பண்டாக்கள் வீட்டிலோ தங்கினேன். இப்பிரயாணத்தில் ரயில் சத்தம் உள்பட ரூ. 31-க்கு மேல் ஆகவில்லையென்று நினைவிருக்கிறது.

மூன்றாம் வகுப்புப் பிரயாணத்துக்கு 'மெயில்' வண்டிகளைவிடச் சாதாரண வண்டிகளையே நான்

விரும்பினேன். 'மெயில்' வண்டிகளில் கூட்டம் அதிகம் என்று எனக்குத் தெரியும். அவ்வண்டிகளில் மூன்றும் வகுப்புச் சத்தம் அதிக மென்பது மற்றொரு காரணம்.

மூன்றும் வகுப்பு வண்டிகள் அப்போது எவ்வளவு அசுத்தமா யிருந்தனவோ ஏறக்குறைய அவ்வளவு அசுத்த மாகவே இன்றும் இருக்கின்றன; கக்கூசுகளும் அவ்வளவு மோசமாகவே இருக்கின்றன. தற்போது சிறிது அபி விருத்தி ஏற்பட்டிருக்கலாமெனினும், முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கும் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்கும் அளிக்கப்படும் வசதிகளிலுள்ள வேற்றுமை, இவ்விரு வகுப்புச் சத்த விகிதங்களின் வித்தியாசத்துக்குச் சற்றும் பொருத்தமா யில்லை. மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் ஆடுகளைப்போல் நடத்தப்படுகிறார்கள். ஆடுகளுக்குரிய சௌகரியங்களே அவர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. ஐரோப்பாவில் இருக்க நேர்ந்தபோதெல்லாம் நான் மூன்றும் வகுப்பிலேயே பிரயாணம் செய்வது வழக்கம். முதல் வகுப்பில் அது எவ்வாறிருக்கிறதென்று பார்ப்ப தற்காக ஒரே ஒருமுறை மட்டுமே பிரயாணம் செய்தேன். ஆனால் முதல் வகுப்புக்கும் மூன்றும் வகுப்புக்கும் இந்நாட்டிலுள்ளது போன்ற வேற்றுமை காணவில்லை. தென்னாப்பிரிக்காவில் மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் பெரும்பாலும் நீகிரோவரே யாவர். எனினும் அங்கே மூன்றும் வகுப்பு வசதி இங்கே உள்ளதைவிட அதிகம். தென்னாப்பிரிக்காவில் சில விடங்களில் மூன்றும் வகுப்பு வண்டிகளிலும் பிரயாணிகளுக்குத் தூங்குவதற்கு இடமும், மெத்தை தைத்த ஆசனங்களும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். வண்டிகளில் அளவுக்குமேல் கூட்டம் அதிகமாகி விடாத படியும் பார்த்துக் கொள்கிறார்கள். இந்நாட்டு மூன்றும்

வகுப்பு வண்டிகளிலோ குறிப்பிட்ட எண்ணுக்கு அதிக மானவர்கள் பிரயாணம் செய்வதே வழக்கமா யிருப் பதைக் கண்டிருக்கிறேன்.

ரயில்வே அதிகாரிகள் காட்டும் அசட்டை ஒரு புறமும், பிரயாணிகளின் யோசனையற்ற ஆபாச வழக் கங்கள் இன்னொரு புறமும் சேர்ந்து தூய்மைப் பற்றுள் ளவருக்கு மூன்றும் வகுப்புப் பிரயாணத்தை ஒரு பெரும் சோதனையாக்கி விடுகின்றன. மற்றப் பிரயாணிகளின் சௌகரியங்களைச் சிறிதும் கவனியாமல் வண்டியில் குப்பை போடுதல், எந்நேரமும் எவ்விடத்திலும் சுருட்டுக் குடித்தல், வெற்றிலை புகையிலை மென்று வண்டி முழு வதையுமே ஒரு பெரிய எச்சில் குழியாக்கி விடுதல், கூச்சல் போடுதல், ஆபாச மொழி பேசுதல் முதலியவை பிரயாணிகளின் துர் வழக்கங்களாகும். 1902-ல் மூன்றும் வகுப்புப் பிரயாணத்தின்போது நான் பெற்ற அநுபவத் துக்கும், 1915-லிருந்து 1919-வரை இடைவிடாது மூன்றும் வகுப்புப் பிரயாணம் செய்தபோது நான் அடைந்த அநுபவத்துக்கும் எனக்குச் சிறிதளவும் வேற்றுமை புலனாகவில்லை. இந்தப் பயங்கரமான நிலைமை சீர்திருத்த மடைவதற்கு எனக்கு ஒரே ஒரு வழிதான் தோன்றுகிறது. அவ்வழி படித்த வகுப்பார் மூன்றும் வகுப்பிலேயே பிரயாணஞ் செய்வதென்று விரதங் கொள்வதேயாகும். அவர்கள் மற்றவர்களின் வழக்க பழக்கங்களைச் சீர்ப்படுத்த வேண்டும்; அவசியமான போதெல்லாம் புகார் எழுதி ரயில்வே அதிகாரிகளுக்கு அமைதியில்லாமல் செய்யவேண்டும்; தங்கள் சொந்த சௌகரியங்களைப் பார்த்துக்கொள்ளும் பொருட்டுச் சிப்பந்திகளுக்கு லஞ்சம் கொடுத்தல் முதலிய சட்ட

விரோதமான உபாயங்களைக் கையாளவே கூடாது; எவரும் விதிகளைமீறி நடப்பதைப் பார்த்துக்கொண்டு வாளாயிருத்தல் கூடாது.

இம்முறை கைக்கொள்ளப்பட்டால் கிரம்ப அபி விருத்தி ஏற்படுமென்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

1918-19-ல் கடுமையான நோய்வாய்ப்பட்டதனால் துரதிர்ஷ்ட வசமாக நான் மூன்றும் வகுப்புப் பிரயாணத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. இதை எப்போது நினைத்தாலும் எனக்குத் துக்கமும் வெட்கமும் உண்டாகாதிருப்பதில்லை. அதிலும் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளின் கஷ்டங்களைப் போக்குவதற்கான கிளர்ச்சி வலுவடையத் தொடங்கிய சமயத்தில் இவ்வாறு நேர்ந்தது எனக்குப் பெரிதும் வருத்தந்தரும் விஷயமாகும். ரயில் வண்டிகளிலும் கப்பல்களிலும் பிரயாணம் செய்யும் ஏழைகளின் கஷ்டங்கள், அவற்றை மிகுதிப்படுத்தும் அவர்களுடைய வழக்கங்கள், அன்னிய நாட்டு வியாபாரத்துக்கு அளிக்கப்படும் மிகையான வசதிகள் முதலியவை மிக முக்கியமான விஷயங்களாதலால் அவை சம்பந்தமாக ஒரு தனிக்கிளர்ச்சி அவசியமாகும். விடாமுயற்சியும், திறமையுமுள்ள தொண்டர் இரண்டொருவர் தங்கள் முழு நேரத்தையும் செலவிட்டு வேலை செய்வதற்கு இத்துறையில் இடமுண்டு.

மூன்றும் வகுப்புப் பிரயாணிகளை இத்துடன் விட்டு, காசியில் எனது அநுபவங்களுக்கு வருகிறேன். அங்கே காலை நேரத்தில் போய்ச் சேர்ந்தேன். யாரேனும் ஒரு பண்டா வீட்டில் தங்குவதாகத் தீர்மானித்திருந்தேன். வண்டியை விட்டிறங்கியதும் பிராமணர் பலர் என்னைச்

சூழ்ந்துகொண்டனர். அவர்களில் மற்றவர்களை விடத் தூயவராயும் நல்லவராயும் காணப்பட்ட ஒருவருடைய வீட்டுக்குச் சென்றேன். நான் எண்ணிய வண்ணமே அவர் திருப்தியளித்தார். அவருடைய வீட்டின் முற்றத்தில் பசு மாடு ஒன்று கட்டியிருந்தது. மாடியில் எனக்குத் தங்குவதற்கு இடங் கொடுக்கப்பட்டது. வைதிக முறைப்படி கங்கையில் ஸ்நானம் முதலிய அநுஷ்டானங்கள் செய்யாமல் நான் உணவருந்த விரும்பவில்லை. பண்டா இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். ஒன்றேகால் ரூபாய்க்குமேல் ஒரு பைசாகூட தட்சணை கொடுக்க முடியாதென்றும், அதற்குள் காரியங்கள் ஆகுமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் முன்னதாகவே தெரிவித்து விட்டேன்.

பண்டா மறு வார்த்தை சொல்லாது இதற்கு இணங்கினர். "யாத்ரீகர் ஏழையாயினும் பணக்காரராயினும் நாங்கள் செய்து வைக்கும் கிரியை ஒன்றுதான். ஆனால் தட்சணை அவரவருடைய சக்தியையும் விருப்பத்தையும் பொறுத்தது" என்று அவர் சொன்னர். வழக்கமான கிரியைகளை என் விஷயத்தில் சிறிதேனும் சுருக்கியதாக எனக்குத் தெரியவில்லை. 12 மணிக்குப் பூஜை முடிந்தது. பின்னர் விசுவநாதர் கோயிலுக்குத் தரிசனத்திற்குச் சென்றேன். அங்கு நான் கண்ட காட்சி எனக்கு மிகுந்த மனத்துயர் தந்தது. 1891-ல் பம்பாயில் நான் பாரிஸ்டர் தொழில் செய்துகொண்டிருந்த போது பிரார்த்தன சமாஜ் மண்டபத்தில் "காசியாத்திரை" என்ற விஷயமாக ஒரு பிரசங்கம் கேட்டிருந்தேன். எனவே, ஓரளவு ஏமாற்றத்துக்குச் சித்தமாயிருந்தேனென்றே சொல்லலாம். ஆனல் உண்மையில் நான் அடைந்த ஏமாற்றம் எதிர்பார்த்ததை விடப் பன் மடங்கு வருத்தந்தருவதாயிருந்தது.

குறுகிய வழுக்கலான சந்து ஒன்றின் மூலம் கோயி லுக்குச் செல்ல வேண்டும். அவ்விடத்தில் அமைதி யென்பது அணுவளவு மில்லை. கடைக்காரர்களும், யாத்ரீகர்களும் செய்த சத்தமும், ஏகமாய் மொய்த்த ஈக்களும் சகிக்க வொண்ணாதவையா யிருந்தன.

தியானத்துக்கும் பிரார்த்தனைக்கும் ஏற்றதா யிருக்கு மென்று எவரும் எதிர்பார்க்கக்கூடிய அவ்விடம் உண்மை யில் அவ்வாறில்லவே இல்லை. புற உலகத்தை மறந்து தன்னிலேயே ஆழ்ந்து விடக் கூடியவர்களுக்கே அங்கு தியானம் செய்தல் சாத்தியம். இவ்வாறு பக்தி பரவசத் தில் மெய் மறந்து தியானத்தில் ஆழ்ந்திருந்த சகோதரிகள் சிலரைக்கண்டேன். இதற்காகக் கோயில் அதிகாரிகளை எள்ளளவும் பாராட்டுவதற்கில்லை. கோயிலைச்சுற்றித் தூய்மையும் இனிமையும் சாந்தமும் குடிகொண்டிருக்கச் செய்வது அதிகாரிகளின் கடமையாகும். இதற்குப் பதிலாக, தந்திரசாலியான வியாபாரிகள் மிட்டாய்களும், புது தினுசு விளையாட்டுக்கருவிகளும் விற்றுக்கொண்டிருந்த கடைகளையே அங்கு நான் கண்டேன்.

கோயிலை அடைந்ததும் நுழை வாயிலில் அழுகி நாற்ற மெடுத்த பூக்குவியல் எனக்கு நல்வரவு கூறிற்று! உட்புறம் நல்ல சலவைக் கல்லால் தளவரிசை போடப்பட்டிருந்தது. ஆனால் அழகுணர்ச்சியற்ற பக்தர் ஒருவர் அக்கற்களை உடைத்து ஆங்காங்கு ரூபாய்களைப் பதித்திருந்தார். இந்த ரூபாய்கள் அவ்வளவும் அழுக்குச் சேரும் பாண்டங்களா யிருந்தன.

ஞான வாபி (அறிவுக்கிணறு)க்குச் சென்றேன். கடவுளைத் தேடிவந்த நான் இங்கே அவரைக் காணக் கூடாமையால் கொஞ்சம் சாந்த மிழந்தவனாகவே யிருந்

தேன். ஞான வாபியைச் சுற்றிலுங்கூட ஆபாசமே நிறைந்திருப்பதைக் கண்டேன். தட்சணை கொடுக்க எனக்கு மனமில்லை. எனவே ஒரு தம்படி கொடுத்தேன். அங்கிருந்த பண்டாவுக்குக் கோபம் வந்து தம்படியை வீசி எறிந்தார். என்னைத் திட்டி விட்டு "நீ நேரே நாகத்துக்கே போய்ச் சேர்வாய்" என்று சபித்தார்.

நான் மனங்கலங்கவில்லை. "மகராஜ், என் தலைவிதி எப்படியிருப்பினும், தங்களைப் போன்றவர் இப்படிப் பேசுவது தகாது. வேண்டுமென்றால் தம்படியை எடுத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் அதுவும் போய்விடும்?" என்றேன்.

"போ, தொலை. உன் தம்படி யாருக்கு வேண்டும்?" என்று கூறி மீண்டும் திட்டத் தொடங்கினர் பண்டா.

தம்படியை எடுத்துக்கொண்டு பிராமணனுக்கு ஒரு தம்படி நஷ்டமென்றும், எனக்கு அது லாபமென்றும் எண்ணிக்கொண்டே திரும்பினேன். ஆனால் பண்டாவா தம்படியை விடுகிறவர்? அவர் என்னைத் திரும்பக் கூப்பிட்டு "சரிதான், தம்படியைக் கொடுத்து விட்டுப்போ. உன்னைப்போல் நானும் இருக்கலாமா? நான் அந்த தம்படியை ஏற்றுக் கொள்ளாவிடில் உனக்குத்தான் கஷ்டம்வரும்" என்றார்.

மௌனமாகத் தம்படியை அவர் கையில் கொடுத்து விட்டுப் பெருமூச்சுடன் திரும்பினேன்.

அதற்குப் பின்னர் இருமுறை காசிவிசுவநாதர் கோயிலுக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் இவை 'மகாத்மா' பட்டமெனும் துன்பம் என்மீது சுமத்தப்பட்டதற்குப் பிறகாதலின், மேற்சொன்னவை போன்ற அநுபவங்கள்

அம்முறைகளில் இயலாதவையாயின. என்னைத் 'தரிசிக்க' ஆவல் கொண்ட ஜனங்கள் நான் கோயிலைத் 'தரிசிக்க' இடங் கொடுப்பதில்லை. 'மகாத்மா'க்களின் துயரங்களை 'மகாத்மா'க்களே அறிவார்கள். மற்றப்படி குப்பையும், கூச்சலும் முன்போலவே இருந்தன.

ஆண்டவன் கருணையில் யாருக்கேனும் ஐயமிருக்குமாயின் அவர் இத்தகைய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போய்ப் பார்ப்பாராக. யோகீசுவரனான இறைவன் தன் பெயரால் நடக்கும் எத்தனை அக்கிரமங்களையும் வெளி வேஷங்களையும் பொறுத்துக் கொண்டிருக்கிறான்! வெகு காலத்துக்கு முன்பே அவன் "யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம்" என்று திருவாய் மலர்ந்தான். மனிதன் விதைப்பதை அறுக்கிறான். கருமப் பயனை அநுபவியாது தப்பித்துக்கொள்ளல் எவராலும் இயலாத காரியம். எனவே இதில் ஆண்டவன் தலையிடுவதற்கு அவசியமே யில்லை. சட்டத்தை இயற்றிவிட்டு அவன் அப்புறம் சென்றுவிட்டான் என்றே கூறலாம்.

கோயிலுக்குப் போய் வந்த பின்னர், ஸ்ரீமதி பெஸண்டைக் காணச் சென்றேன். அவர் அப்போதுதான் நோய் நீங்கிக் குணமடைந்தார் என்பது எனக்குத் தெரியும். என் பெயரை எழுதி அனுப்பினேன். அம்மையார் உடனே வெளியில் வந்தார். ஆனால் நான் அவருக்கு வணக்கஞ் செலுத்த மட்டுமே விரும்பியபடியால் பின் வருமாறு கூறினேன்:—"தங்கள் உடல் மெலிவை அறிவேன். தங்களைப் பார்த்து என் வணக்கஞ் செலுத்தி விட்டுப் போக வந்தேனே யன்றி வேறில்லை. இந்த உடல் நிலையிலும் என்னைப் பார்க்கச் சம்மதித்ததற்காகத் தங்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்குமேல் தங்களுக்குத் தொந்திரவு கொடுக்க நான் விரும்பவில்லை."

இவ்வாறு கூறி அவரிடம் விடை பெற்றுச் சென்றேன்.

இருபத்தோராம் அத்தியாயம்

பம்பாயில் ஸ்திரவாசமா?

நான் பம்பாயிலேயே நிலைபெற்று வக்கீல் தொழில் செய்ய வேண்டுமென்றும், பொது வேலையில் தமக்கு உதவிபுரிய வேண்டுமென்றும் கோகலே பெரிதும் விரும்பினார். அந்நாளில் பொது வேலையென்பது காங்கிரஸ் வேலையைத் தவிர வேறில்லை. கோகலேயின் உதவியினால் காணப்பட்ட ஸ்தாபனத்தின் முக்கியமான வேலையும் காங்கிரஸ் நிர்வாகத்தை நடத்தி வைப்பதேயாகும்.

கோகலேயின் யோசனை எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் பாரிஸ்டர் தொழில் நடத்திப் பெயர் சொல்லலாமென்பதில் எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. முன்னர் அத்தொழிலில் வெற்றிபெறத் தவறியதுபற்றிய பழைய ஞாபகங்கள் இன்னும் இருந்துகொண்டிருந்தன. மேலும் கட்சிக்காரர்கள் பெறும் நிமித்தம் முகஸ்துதி செய்யும் வழக்கத்தை இன்னமும் நான் விஷத்தைப்போல் வெறுத்து வந்தேன்.

ஆகவே முதலில் இராஜகோட்டையில் தொழில் நடத்தத் தொடங்குவதென்று தீர்மானித்தேன். எனது பழைய நன்பரும், இங்கிலாந்து செல்லும்படி முதன் முதலில் தூண்டிய வருமான ஸ்ரீ கேவல் ராம் மாவ்ஜி தவே

அங்கிருந்தார். அவர் தொடக்கத்திலேயே எனக்கு மூன்று வக்காலத்துகள் கொடுத்துதவினார். இவற்றுள் இரண்டு, கத்தியவார் பொலிடிகல் ஏஜண்டின் நீதிநிர்வாக உதவி உத்தியோகஸ்தர் முன்பு அப்பீல் வழக்குகள். மூன்றாவது, ஜாம் நகரில் அசல் தாப்பு வழக்கு. இது சிறிது முக்கியமானது. அதைத் திறம்பட நடத்தலா மென்னும் தைரியம் எனக்கில்லையென்று சொன்னபோது, கேவல் ராம் தவே கூறியதாவது:—"வெற்றி தோல்வி களைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். உம்மா லியன்றவரை முயற்சி செய்யும். உமக்கு உதவி செய்ய நான் இருக்கவே இருக்கிறேன்."

காலஞ்சென்ற ஸ்ரீ ஸமர்த் எதிரி தரப்பு வக்கீல். நான் கூடியவரை நன்றாகவே தயார் செய்திருந்தேன். எனக்கு இந்தியச் சட்டத்தைப்பற்றி அதிகம் தெரியா தாயினும், கேவல்ராம் தவே அவ்வழக்கு சம்பந்தமாக ஒன்று பாக்கியின்றி எனக்குச் சொல்லிக் கொடுத் திருந்தார். ஸர் பிரோஸிஷாவுக்குச் சாட்சியச் சட்டம் முழுதும் தலை கீழ்ப்பாடமா யிருந்ததே அவர் தொழிலில் வெற்றியடைந்ததின் இரகசியம் என்று நான் தென்னாப் பிரிக்கா செல்வதற்குமுன் நண்பர்கள் சொல்லக் கேட்டி ருந்தபடியால், கப்பல் பிரயாணத்தின்போது இந்தியச் சாட்சியச் சட்டத்தை நன்றாகப் படித்திருந்தேன். தென் னாப்பிரிக்காவில் நான் பெற்ற தொழிலநுபவமும் துணையா யிருந்தது.

முடிவில் வழக்கை ஜெயித்துக் கொடுத்தேன். இதனால் என்னுடைய திறமையில் எனக்கு நம்பிக்கை அதிகப்பட்டது. அப்பீல் வழக்குகளைப்பற்றி எனக்குப் பயமேயில்லை. அவற்றிலும் வெற்றி கிடைத்தது. இவற்றின்

பயனுக, பம்பாயிலும் நான் தொழில் செய்து பெயர் சொல்லக்கூடும் என்னும் நம்பிக்கை ஏற்படலாயிற்று.

முடிவாகப் பம்பாய் செல்லத் தீர்மானித்ததைப் பற்றிச் சொல்வதற்கு முன்னுல், ஆங்கில உத்தியோகஸ்தர் களின் அறியாமையையும், பிறர் கஷ்டமறியா மனப் பான்மையையும் பற்றி எனது அநுபவத்தைக் கூற விரும்புகிறேன். மேற்படி நீதி நிர்வாக உதவி உத்தி யோகஸ்தர் எப்போதும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருப்பது வழக்கம். அவர் போகு மிடங்களுக் கெல்லாம் வக்கீல்களும் கட்சிக்காரர்களும் பின் தொடர்ந்து சென்ருக வேண்டும். தலைமை ஸ்தலத்தை விட்டுப் போக நேரும்போது வக்கீல்கள் அதிக பணம் கேட்பார்கள். எனவே, கட்சிக்காரர்களுக்கு இருமடங்கு செலவு. இத்தகைய அசெளகரியங்களைப்பற்றி நீதிபதி கவனிப்பதே யில்லை.

நான் மேலே குறிப்பிட்ட அப்பீல் வழக்குகள் விராவல் என்னுமிடத்தில் விசாரிக்கப்பட விருந்தன. அங்கு அப்போது பிளேக் நோய் பரவியிருந்தது. அச்சிறு பட்டணத்தின் ஜனத்தொகை 5,500 தான். எனினும் தினம் 50 பேர்வரை அந்நோய் வாய்ப்பட்டதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. பட்டணம் அநேகமாகக் காலி செய்யப்பட்டுப் பாழாய்க் கிடந்தது. அதற்குச் சிறிது தூரத்தில் காலியாயிருந்த ஒரு தர்ம சாலையில் நான் தங்கினேன். ஆனுல் என்னுடைய கட்சிக்காரர்கள் எங்கே தங்குவது? அதிலும் அவர்கள் ஏழைகளானுல் தெய்வத்தைத் தவிர அவர்களுக்கு வேறு கதி கிடையாது.

இந்நீதிமன்றத்திலேயே என்னுடைய நண்பர் ஒருவ ருக்கும் வழக்குகள் இருந்தன. விராவலில் பிளேக் நோய்

பரவியிருப்பதால் நீதிமன்றத்தை வேறிடத்துக்கு மாற்ற வேண்டுமென்று விண்ணப்பம் செய்யுமாறு அவர் எனக்குத் தந்தி யடித்திருந்தார். விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததும் துரை "உங்களுக்குப் பயமாயிருக்கிறதா?" என்று கேட்டார்.

"என்னுடைய பயம் இப்போது விஷய மன்று. நான் எப்படியேனும் பார்த்துக் கொள்வேன். கட்சிக்காரர்கள் கதி என்ன?" என்றேன்.

துரை சொன்னதாவது:—"பிளேக் இந்தியாவில் நிலைத்துவிட்டது. அதற்கேன் பயப்பட வேண்டும்? விராவலின் சீதோஷ்ண நிலை மிக நன்றாயிருக்கிறது. (பட்டணத்துக்கு வெகு தூரத்தில் கடற்கரையில் அரண்மனை போன்ற கூடாரத்தில் துரை வசித்தார்.) ஜனங்கள் இவ்வாறு திறந்த வெளியில் வசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்."

இந்த வாய் வேதாந்தத்தை எதிர்த்து வாதமிடுவதால் என்ன பயன் விளையும்? கடைசியில் துரை தமது சிரஸ்தாரிடம் கூறியதாவது:—"மிஸ்டர் காந்தி சொல்வதைக் கவனித்துக் கொள்ளும். அதிக அசௌகரியமாயிருந்தால் எனக்குத் தெரிவியும்."

துரை தமக்குச் சரியென்று தோன்றியதைக் கண்யமாகச் செய்தார் என்பதில் சந்தேகமில்லை. ஏழை இந்தியர்களின் கஷ்டங்களை அவர் எவ்வாறு உணருதல் கூடும்? இந்திய மக்களின் தேவைகள், வழக்க பழக்கங்கள் விசேஷித்த குணாதிசயங்கள் முதலியவற்றை அவர் அறிந்து கொள்ளுதல் எப்படிச் சாத்தியம்? தங்க நாணயங்களையே உபயோகித்துப் பழக்கமான ஒருவன் செப்புக் காசுகளைக்

கணக்கிடல் எப்படி? யானை எறும்பினிடம் மிகுந்த கருணை கொண்டிருக்கலாம். ஆயினும் எறும்பின் தேவைகளையும், சௌகரியங்களையும் பற்றி அதனால் சிந்திக்க முடியுமா? அவ்வாறே யானையின் தேவைகளையுடைய ஆங்கிலேயன் எறும்பின் தேவைகளையுடைய இந்தியர்களின் சௌகரியங்களைப் பற்றி எண்ணவோ, சட்டம் செய்யவோ முடியாதவனாயிருக்கிறான்.

இனி, கதைத் தொடர்ச்சிக்கு வருகிறேன். மேற்கூறியவாறு வழக்குகளில் வெற்றி கிடைத்தபோதிலும் இராஜகோட்டையில் இன்னும் சிறிது காலம் தங்கியிருப்பதென்று எண்ணிக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு நாள் கேவல்ராம் தவே வந்து சொன்னதாவது:—"காந்தி, நீர் இங்கே சோம்பிக்கிடப்பதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நீர் பம்பாய்க்குச் செல்லவேண்டும்."

"அங்கே எனக்கு யார் வேலை தேடிக் கொடுப்பார்கள்? செலவுக்கு நீங்கள் ஏற்பாடு செய்வீர்களா?" என்று வினவினேன்.

"ஆம், செய்கிறேன். அவ்வப்போது பம்பாயிலிருந்து உம்மைப் பெரிய பாரிஸ்டர் என்பதாக வரவழைப்போம். மனு தயாரித்தல் முதலிய வேலைகளை அவ்விடத்துக்கே அனுப்புகிறோம். ஒரு பாரிஸ்டரை நிரம்பப் பெரியவராக்கவோ, ஒன்றுமில்லாதவராக்கவோ வக்கீல்களாகிய எங்களால் முடியும். ஜாம் நகரிலும், விராவலிலும் உமது திறமையை மெய்ப்பித்து விட்டீர். ஆதலின் உம்மைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை. நீர் பொது ஊழியத்திற்குப் பிறந்தவர். ஆதலின் உம்மைக் கத்தியவாரில் புதைந்து கிடக்க விடமாட்டோம். பம்பாய்க்கு எப்போது போகிறீர், சொல்லும்."

"நேட்டாலிலிருந்து பணம் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன். வந்ததும் புறப்படுகிறேன்" என்று பதிலளித்தேன்.

இரண்டு வாரத்தில் பணம் வந்து சேர்ந்தது. பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்றேன். பாயன் கில்பர்ட், ஸயானி என்பவர்களின் காரியாலயக் கட்டிடத்தில் அறைகள் அமர்த்திக் கொண்டேன். பம்பாயில் ஸ்திரவாசம் ஏற்பட்டு விட்டதாகத் தோன்றிற்று.

இருபத்திரெண்டாம் அத்தியாயம்

நம்பிக்கை சோதிக்கப்படல்

கோட்டையில் காரியாலய அறைகளும், கர்க்காமில் வீடும் அமர்த்திக் கொண்டேனாயினும், நான் அமைதியான வாழ்க்கை தொடங்க ஆண்டவன் சம்மதமில்லை. புதிய வீட்டிற்கு வந்து சில தினங்கள் ஆவதற்குள் எனது இரண்டாவது புதல்வன் மணிலாலுக்குக் கடுமையான அஸ்தி சுரம் (டைபாய்டு) கண்டது. (அவன் ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்பு கடும் வைசூரியால் துன்புற்றவன்.) அஸ்தி சுரத்துடன் கபவாத சுரம் (நிமோனியா) கலந்திருந்தது. சுரவேகத்தில் இரவு நேரங்களில் பிதற்றல் முதலிய குறிகளும் இருந்தன.

டாக்டரை அழைத்து வந்தேன். மருந்து அதிக பயன் தாராதென்றும், கோழிமுட்டையும், கோழிக் குஞ்சு மாமிச ரசமும் உணவாகக் கொடுத்து வந்தால் நலமென்றும் அவர் சொன்னார்.

மணிலாலுக்கு அப்போது பத்து வயது. எனவே அவனுடைய விருப்பத்தைக் கேட்டு எதுவும் செய்வதற்கில்லை. அவனுக்காக நானே முடிவு செய்தாகவேண்டும். டாக்டர் பார்சி வகுப்பைச் சேர்ந்தவர்; மிகவும் நல்லவர். நாங்கள் சாகபட்சணிகளாதலின், அவர் கூறிய இரண்டில் எதையும் என் புதல்வனுக்குத் தர முடியாதென்றும், வேறு கொடுக்கக் கூடியது ஏதேனும் சொல்லக்கூடுமா என்றும் கேட்டேன்.

"தங்கள் புதல்வனின் உயிருக்கே அபாயம் ஏற்படக் கூடிய நிலைமை. பாலும் நீரும் கலந்து கொடுக்கலாமாயினும் அது அவ்வளவு போஷணை தராது. தங்களுக்குத்தான் தெரியுமே. எத்தனையோ ஹிந்து குடும்பங்களில் என்னைக் கூப்பிடுகிறார்கள். நான் கூறுவதெதையும் கொடுப்பதற்கு ஆட்சேபிப்பதில்லை. தாங்களும் தங்கள் புதல்வன் விஷயத்தில் அவ்வளவு கடின சித்தங் காட்டாமலிருத்தல் நலம்" என்று டாக்டர் கூறினர்.

அப்போது நான் உரைத்ததாவது:—"தாங்கள் கூறுவது முற்றும் சரியே. டாக்டராகிய தங்கள் தங்கள் நிலையிலிருந்து வேறெதுவும் சொல்ல முடியாது. ஆனால் என்னுடைய பொறுப்பு மிகவும் அதிகம். பையன் வயது வந்தவனுயிருந்தால் நிச்சயமாக அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு அதற்கிணங்க நடக்க முயன்றிருப்பேன்; இப்போது அவனுக்காகநானே சிந்தித்து முடிவு செய்ய வேண்டியவனுயிருக்கிறேன். இத்தகைய சந்தர்ப்பங்களிலேயே ஒருவனுடைய நம்பிக்கை சோதிக்கப்படுகிறது என்பது என் கருத்து. மாமிசம், முட்டை முதலியவற்றை மனிதன் தின்னலாகாதென்பது என்னுடைய சமயக் கொள்கையில் ஒரு பகுதியாகும். இக்கொள்கை

சரியாகவோ, தவருகவோ இருக்கலாம். அதைப்பற்றிக் கவலையில்லை. உயிர் வாழ்வதற்காக நாம் கைக்கொள்ளும் சாதனங்களுக்கும் ஓர் எல்லையிருக்கவேண்டுமென்பது என் நம்பிக்கை. உயிர் வைத்திருப்பதற்காகவும் நாம் சில காரியங்களைச்செய்யக்கூடாது. இத்தகைய சமயங்களில்கூட எனக்கோ, என்னைச் சேர்ந்தவர்களுக்கோ மாமிசம் அல்லது முட்டை உபயோகிப்பதை என் மதம் அநுமதிக்கவில்லை. எனவே, தாங்கள் கூறுவது உண்மையேயாகக்கூடுமாயினும் அவ்வபாயத்துக்குத் துணிந்தே காரியம் செய்தாக வேண்டும். ஆனால் தங்களை ஒன்று மன்ருடிக் கேட்டுக் கொள்கிறேன். தங்களுடைய சிகிச்சையை ஏற்றுக்கொள்ள முடியாத படியால், எனக்குத் தெரிந்துள்ள ஜல சிகிச்சை முறைகளைக் கையாண்டு பார்க்கப் போகிறேன். ஆனால் நாடி பார்க்கவும், ஹிருதயம், நுரையீரல் முதலியவற்றைப் பரிசோதிக்கவும் எனக்குத் தெரியா. அவ்வப்போது தாங்கள் வந்து பரிசோதித்துக் குழந்தையினுடைய நிலைமையை எனக் கறிவித்துச் சென்ருல் மிகவும் நன்றியுள்ளவனு யிருப்பேன்."

உத்தமரான அந்த டாக்டர் எனது கஷ்டங்களை உணர்ந்ததுடன் என் வேண்டுகோளுக்கும் இசைந்தார். மணிலாலுக்கு இது சம்பந்தமான முடிவு செய்யும் பிராயம் வரவில்லை யாயினும், எனக்கும் டாக்டருக்கும் நடந்த சம்பாஷணையின் விவரத்தை அவனிடம் கூறி அவன் அபிப்பிராயத்தைக் கேட்டேன்.

"தங்களுடைய ஜல சிகிச்சையே செய்யுங்கள். எனக்கு முட்டையும் மாமிச ரசமும் வேண்டாம்" என்று மணிலால் கூறினன்.

நான் முட்டை அல்லது இறைச்சி ரசம் கொடுத்திருந்தால் அவன் அருந்தியிருப்பான் என்று எனக்குத் தெரிந்தே யிருந்ததாயினும், அவனுடைய பதில் எனக்கு மகிழ்ச்சி தந்தது.

கூன் என்பவரின் சிகிச்சை முறையை நான் அறிந்திருந்தேன். அதைக் கையாண்டு சிறிது அநுபவமும் பெற்றிருந்தேன். உபவாசத்தினுல் பயன் விளையும் என்பதும் எனக்குத் தெரியும். எனவே, கூன் முறைப் படி மணிலாலுக்கு ஆசன ஸ்நானங்கள் (Hip baths) செய்வித்தேன். தொட்டியில் மூன்று நிமிஷத்துக்குமேல் வைத்திராமல் ஜாக்கிரதையா யிருந்தேன். மூன்று தினங்களுக்கு ஆரஞ்சுப்பழ ரசமும் தண்ணீரும் கலந்து அதையே உணவாகக் கொடுத்து வந்தேன்.

ஆனுல் உஷ்ணம் குறையவேயில்லை. சில சமயம் 104 டிக்ரி வரையில் ஏறிற்று. இரவில் பிதற்றல் அதிகமாயிருந்தது. நான் கவலை கொள்ளலானேன். ஊர் ஜனங்கள் என்ன சொல்வார்கள்? என் தமையனுர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்? வேருெரு டாக்டரைக் கூப்பிட்டா லென்ன? இல்லாவிடில் ஆயுர்வேத வைத்தியரை அழைக்கலாமா? என் செய்வது? பெற்ருேர்களுக்குத் தங்களுடைய கொள்கைப் பித்துக்களைத் தங்கள் குழந்தைகள்மீது சுமத்துவதற்கு என்ன உரிமை?

இத்தகைய எண்ணங்கள் இடைவிடாது தோன்றிக் கொண்டிருந்தன. பின்னர் இவற்றிற்கு நேர் மாருன எண்ணங்களும் உதயமாகும். நான் எனக்கு எவ்வித சிகிச்சை செய்து கொள்வேனே அதே சிகிச்சை என் புதல்வனுக்கும் செய்வது குறித்து ஆண்டவன் நிச்சயமாய் மகிழ்ச்சியே யடைவானன்ருே? எனக்கு ஜலவைத்தி

யத்தில் நம்பிக்கை யுண்டு. வேறு வைத்தியத்தில் நம்பிக்கை யில்லை. டாக்டர்களேனும் குணப்படுத்தி விடுவதாக உறுதி கூறுகிறார்களா? இல்லை. அவர்களும் சோதனையே செய்கிறார்கள். உயிர் இருப்பதும் போவதும் ஆண்டவன் சித்தத்தைப் பொறுத்தவை. அவனை நம்பி, அவன் பெயரைச் சொல்லி எனக்குச் சரியான சிகிச்சை என்று தோன்றுவதை ஏன் கையாளக் கூடாது?

இவ்வாறு, இருவகைப்பட்ட எண்ணங்களால் என் உள்ளம் அலைப்புற்றது. இரவு வேளை. மணிலாலின் படுக்கையில் அவனுக்கருகில் படுத்துக் கொண்டிருந்தேன். ஒரு யோசனை தோன்றிற்று. எழுந்திருந்து ஒரு நீளமான துணியை நீரில் நனைத்துப் பிழிந்தேன். அதை அவன் உடல்மீது தலையை மட்டும் விட்டுவிட்டுச் சுற்றினேன். தலையில் ஓர் ஈரத்துண்டைக் கட்டினேன். பின்னர் இரண்டு கம்பளிகளைப் போட்டுப் போர்த்தினேன். பழுக்கக் காய்ந்த இரும்பைப்போல் உடம்பு கொதித்தது. ஒரே வறட்சியாயிருந்தது. வியர்வை கொஞ்சங்கூட இல்லை.

நிரம்பக் களைப்படைந்து போனேன். மணிலாலை அவன் தாயாரைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வெளியே சிறிது உலாவிவரப் புறப்பட்டேன். சௌபாத்தி கடற்கரைக்குச் சென்றேன். மணி பத்தாயிற்று. இரண்டொருவரே அங்கே உலாவிக் கொண்டிருந்தனர். ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி யிருந்தபடியால் அவர்களை நான் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ‘ஆண்டவனே! இந்தச் சோதனை நேரத்தில் என் மானங் காத்தல் நினது பொறுப்பு” என்று பிரார்த்தித்தேன். என் உதடுகள் இராம நாமத்தை ஜபித்த வண்ணமிருந்தன. சிறிது நேரம்

உலாவிய பிறகு வீடு திரும்பினேன் ஹிருதயம் 'பட்' 'பட்' என்று அடித்துக்கொண்டிருந்தது.

அறையில் நுழைந்ததும் மணிலாலின் குரல் கேட்டது. "பாபு! வந்துவிட்டீர்களா?" என்றான்.

"ஆம், கண்மணி!"

"தயவுசெய்து என்னை எடுத்து விடுங்கள். உடம்பு எரிகிறது."

"குழந்தாய், வியர்வை வியர்த்திருக்கிறதா?"

"வியர்வையில் மூழ்கி யிருக்கிறேன். தயவுசெய்து உடனே எடுத்துவிடுங்கள்."

நெற்றியைத் தொட்டேன். வியர்வை முத்து முத்தாய்த் துளித்திருந்தது. உஷ்ணம் குறைந்து கொண்டிருந்தது. ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினேன்.

"மணிலால், இனி சுரம் நிச்சயமாகக் குணமாய் விடும். இன்னும் சிறிது வியர்க்கட்டும். எடுத்து விடுகிறேன்" என்றேன்.

"அப்பா! வேண்டாம். தயவு செய்து இந்த உலைக் களத்திலிருந்து இப்போது என்னை எடுத்துவிடுங்கள். வேண்டுமானால் அப்புறம் ஒருமுறை ஈரத்துணி சுற்றலாம்."

வேறு விஷயங்களைப்பற்றிப் பேச்சுக் கொடுத்துக் கொண்டே இன்னும் சில நிமிஷங்கள் அப்படியே வைத்திருந்தேன். நெற்றியிலிருந்து வியர்வை அருவியாக ஓடிற்று. பின்னர் போர்வைகளையும் ஈரத்துணியையும் எடுத்துவிட்டு உடம்பைத் துடைத்தேன். அப்படியே

தந்தையும் மகனும் ஒரே படுக்கையில் படுத்துத் தூங்கி விட்டோம்.

கட்டையைப்போல் இருவரும் தூங்கினோம். மறு நாள் காலையில் சுரம் நிரம்பவும் குறைந்துவிட்டது. இவ்வாறே பாலும் பழச்சாறும் மட்டும் அருந்தி 40 நாள் காலம் கழித்தான். ஆனால் அன்றைக்குப்பின் எனக்குப் பயம் போய்விட்டது. அது பெரும் பிடிவாதமான சுரமாயினும், அதைக்கட்டுக்குள் கொண்டுவந்தாய்விட்டது. இன்று என் புதல்வர்களுக்குள் மணிலாலே தேக சுகத்தில் சிறந்தவனா யிருக்கிறான். அவன் குணமடைந்ததற்குக் காரணம் ஆண்டவன் கருணையா, ஜல சிகிச்சை முறையா கவலையுடன் உணவு கொடுத்துப் பணிவிடை செய்து வந்ததா என்று யாரால் சொல்ல முடியும்? ஒவ்வொருவரும் தத்தம் நம்பிக்கைக் கேற்ப முடிவு செய்வார்களாக. என் வரையில், ஆண்டவன் என் மானத்தைக் காப்பாற்றினார் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. அந்நம்பிக்கை இன்றளவும் மாறாமலே இருந்து வருகிறது.

இருபத்து மூன்றாம் அத்தியாயம்

மீண்டும் தென்னாப்பிரிக்கா பிரயாணம்

மணிலால் சுகமடைந்தானாயினும், கர்க்காம் வீடு வாசத்திற்குத் தகுதியற்றதெனக் கண்டேன். ஈரங் காத்தவீடு; வெளிச்சமும் போதாது. எனவே ஸ்ரீ ரேவா சங்கர் ஜகஜ்ஜீவனுடன் கலந்து யோசித்து பம்பாயின் சுற்றுப்புறத்தில் நல்ல காற்றோட்டமுள்ள பங்களா ஒன்றைக் குடிக்கூலிக்கு அமர்த்திக்கொள்ளத் தீர்மானித்தேன். பாந்திராவிலும் ஸாந்தாக்ரூஸிலும் சுற்றி

யலேந்தேன். பாந்திராவில் மாடடிக்கும் சாலையைப் பார்த்ததும் அவ்விடம் வேண்டாமென்று தீர்மானித்தேன். காட்கோபார், சமுத்திரக் கரையிலிருந்து வெகு தூரத்தி லிருந்ததால் அதுவும் பிடிக்கவில்லை. கடைசியில் ஸாந்தா கிரஸ்ஸில் ஒரு நல்ல பங்களாவைப் பிடித்தோம். சுகா தாரத்தைப் பற்றியவரை அதுவே மிகச் சிறந்த தென்பதில் ஐயமில்லை.

ஸாந்தாகிரஸ்ஸிலிருந்து சர்ச்கேட்டுக்கு முதல் வகுப்பு 'ஸீஸன் டிக்கட்' ஒன்று வாங்கிக்கொண்டேன். என்னுடைய வண்டியில் நான் ஒருவனே முதல் வகுப்புப் பிரயாணி எனறெண்ணி ஓரளவு இறுமாப்புக் கொண்ட தாக எனக்கு நினைவிருக்கிறது. அடிக்கடி பாந்திராவுக்கு நடந்து சென்று அங்கிருந்து சர்ச்கேட்டுக்கு நேராகச் சென்ற வேகமான வண்டியில் ஏறிப் போவதுண்டு.

நான் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே எனக்கு வக்கீல் தொழிலில் வருவாய் கிடைத்து வந்தது. தென்னுப் பிரிக்காவிலிருந்த என் கட்சிக்காரர்கள் அவ்வப்போது எனக்கு ஏதேனும் வேலை கொடுத்து வந்தார்கள். இவ்வாறு வாழ்க்கை நடப்பதற்குப் போதிய ஊதியம் கிடைத்து வந்தது.

ஹைகோர்ட்டில் இன்னும் எனக்கு வேலை கிடைத்த பாடில்லை.. ஆனால் அக்காலத்தில் நடந்து வந்த சட்ட விவாதக் கூட்டங்களுக்கு நான் போவதுண்டு. அவற்றில் கலந்து கொள்ளமட்டும் துணிவதில்லை. இவ்விவாதங்களில் பிரதானமாகக் கலந்துகொண்டவர்களில் ஜமயத்ராம நானுபாய் ஒருவர் என்று ஞாபகம் இருக்கிறது. மற்றும் பல புதிய பாரிஸ்டர்களைப்போல் நானும் ஹைகோர்ட்டில் நடக்கும் வழக்குகளைக் கவனிக்கப் போவது வழக்கம்.

இப்படிப் போனதில் என் சட்ட ஞானத்தை வளர்க்கும் நோக்கத்தைவிடச் சமுத்திரக் காற்று வாங்கும் நோக்கமே அதிகமா யிருந்தது. அவ்வின்பந் துய்ப்பதற்காக வந்தவன் நான் ஒருவன் மட்டுமல்லன் எனக் கண்டேன். பெரும் பான்மையோர் இந்நோக்கத்துடனேயே வந்தபடியால் அது குறித்து வெட்கப்படுதல் அவசிய மில்லையெனத் தெரிந்தது.

ஆயினும் கடற்காற்று வாங்குவதுடன் நான் நின்று விடவில்லை. ஹைகோர்ட் புத்தக சாலையைப் பயன் படுத்திக் கொள்ளத் தொடங்கினேன். புதிய மனிதர்களை அறிமுகம் செய்து கொண்டேன். கூடிய விரைவில் ஹைகோர்ட்டில் வேலை கிடைக்கலாம் என்று தோன்றிற்று.

இவ்வாறு ஒரு புறத்தில் நான் என் தொழில் சம்பந்த மாக ஓரளவு கவலை நீங்கப் பெற்றவனுகி வருகையில் மற்றொரு புறத்தில் கோகலே என்மீது கண்ணோட்டம் செலுத்திக் கொண்டிருந்தார். என்னை முன்னுக்குக் கொண்டுவருவது குறித்து அவர் திட்டங்கள் போட்ட வண்ணமிருந்தார். பிரதி வாரமும் இரண்டு மூன்றுமுறை என்னுடைய அறைகளுக்கு வருவார். தம்முடன் தமது நண்பர்களையும் அழைத்து வந்து பழக்கப்படுத்தி வைப்பார். அவருடைய வரும் வேலை முறையைக் குறித்து விவரிப்பார்.

ஆனல் ஆண்டவன் என் வருங்காலத்தைப்பற்றி என்னுடைய திட்டம், எதுவும் நடக்க விடுவதில்லை என்ப தைக் குறிப்பிட வேண்டும். அவனுடைய திட்டங்களும் யோசனைகளும் தனியாயிருந்தன.

நான் உத்தேசித்தபடி பம்பாயில் நிலைத்துவிட்டே னென்று எண்ணிக்கொண்டிருந்தபோது, சிறிதும் எதிர் பாராத வண்ணம் தென்னுப்பிரிக்காவிலிருந்து ஒரு தந்தி வந்தது. "சேம்பர்லின் இங்கு வரப்போகிறார். தயவு

செய்து உடனே திரும்பி வாருங்கள்" என்று தந்தி கூறிற்று. எனது வாக்குறுதியை நினைவு கூர்ந்து, பிரயாணத்துக்குப் பணம் அனுப்பினால் உடனே கிளம்புவதாகப் பதில் தந்தியடித்தேன். அவர்கள் தாமதம் செய்யாமல் பணம் அனுப்பினார்கள். காரியாலய அறைகளைக் காலி செய்துவிட்டுத் தென்னாப்பிரிக்கா கிளம்பினேன்.

தென்னாப்பிரிக்காவில் ஒரு வருஷத்துக்காவது வேலையிருக்குமென்று கருதினேன். ஆதலின் பங்களாவை மட்டும் காலி செய்யாமல் அதிலேயே என் மனைவியும் குழந்தைகளும் வசிக்குமாறு ஏற்பாடு செய்தேன்.

ஊக்கமுள்ள இளைஞர்கள் சொந்த நாட்டில் முன்னுக்கு வரும் வழி அகப்படாவிடில் பிற நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்பது அப்போது என் கொள்கை. எனவே என்னுடன் அத்தகைய இளைஞர்கள் நான்கு, ஐந்து பேரை அழைத்துச் சென்றேன். இவர்களில் ஒருவர் மகன்லால் காந்தி.

காந்தி குடும்பம் எப்போதுமே பெரிய குடும்பமாகும். பழைய வழியை விடுத்துக் கடல் கடக்கத் துணியும் எல்லாரையும் கண்டு பிடித்து அழைத்துச் செல்ல விரும்பினேன். குடும்பத்தில் பலரை என் தந்தையார் சமஸ்தான உத்தியோகங்களில் அமர்த்துவது வழக்கம். அவ்வுத்தியோக மோகத்திலிருந்து அவர்களை விடுவிக்க விரும்பினேன். ஆனால் அவர்களுக்கு வேறு உத்தியோகம் தேடிக்கொடுக்க எனக்குச் சக்தியில்லை. சக்தி யிருந்தாலும் செய்திருக்க மாட்டேன். அவர்கள் பிறரை நம்பியிராமல் தற்சார்பு உள்ளவர்களாக ஆகவேண்டுமென்பதே என் விருப்பம்.

ஆனால் எனது இலட்சியங்கள் உன்னதமாக ஆக, இவ்விளைஞர்களையும் அவ்விலட்சியங்களை ஏற்றுக்கொள்

ளும்படி செய்ய முயலலானேன். மகன்லால் காந்தி விஷயத்தில் என் முயற்சி பெரும் வெற்றி யளித்தது. இதைப்பற்றிப் பின்னர் கூறுவேன்.

மனைவி குழந்தைகளை விட்டுப்பிரிய நேர்ந்ததும், நிலையான வாழ்வை நடுவில் குலைக்கவேண்டி யிருந்ததும், நிச்சயமான நிலைமையிலிருந்து நிச்சயமற்ற நிலைமைக்குச் செல்ல வேண்டி வந்ததும்,—இவையெல்லாம் சிறிது நேரத்துக்குத் துயரமாகவே யிருந்தன. ஆனால் நிச்சய மற்ற வாழ்வுக்குப் பயப்படாத தன்மை நான் பெற்றி ருந்தேன். சத்திய சொரூபமாயிருக்கும் ஆண்டவனைத் தவிர வேறொன்றும் நிச்சயமில்லாத இவ்வுலகில் நிச்சய மான வாழ்வை எதிர் பார்ப்பதே தவறுகுமென்பது என் கருத்து. நம்மைச் சுற்றிலும் காணப்படுபவை, நிகழ்பவை, எல்லாம் அநித்தியமானவையும், நிச்சயமற்றவையுமே யாம். இவற்றுள் எல்லாம் மறைந்து நிற்கும் பரம் பொருள் ஒன்றே நிச்சயமானதாகும். இந்த நிச்சயப் பொருளை ஒரு கண நேரமேனும் தரிசித்து அதனுடன் வாழ்க்கை யென்னும் வண்டியை இணைத்து விடுபவன் எவனோ அவனே பாக்கியசாலி யாவன். அந்தச் சத்தியப் பொருளைத் தேடுதலே வாழ்வின் நித்தியானந்தமாகும்.

மிகவும் சரியான தருணத்தில் டர்பன் நகர் போய்ச் சேர்ந்தேன். அங்கே வேலை தயாராகக் காத்திருந்தது. மிஸ்டர் சேம்பர்லினை ஒரு பிரதிநிதிக் கூட்டம் பேட்டி காண்பதற்குத் தேதியும் குறிப்பிட்டாகி விட்டது. அவரிடம் சமர்ப்பிக்க வேண்டிய விக்ஞாபனத்தைத் தயார்செய்துகொண்டு பிரதிநிதிக் கூட்டத்துடன் போக வேண்டிய கடமை எனக்கேற்பட்டது.

அநுபந்தம்

சகோதரி நிவேதிதை

1927ஆம் ஜூன் 30உ வெளியான 'எங் இந்தியாவில் மகாத்மா காந்தி எழுதிய குறிப்பின் சுருக்கம் வருமாறு:—

'சத்திய சோதனை' மூன்றாம் பாகம் பத்தொன்பதாம் அத்தியாயத்தில் சகோதரி நிவேதிதையைப்பற்றி வரும் பகுதியின்மீது 'மாடர்ன் ரிவியூ' பின் வரும் குறிப்பு வரைந்திருக்கிறது:—"வேறு விவரம் எதுவும் சொல்லாமல் சகோதரி நிவேதிதையைச் 'சுற்றியிருந்த பெருமிதம்' என்று குறிப்பிட்டிருப்பது, அவரது வாழ்க்கை முறையைப் பற்றிப் பிழைபட்ட எண்ணம் உண்டுபண்ணக் கூடிய தாகும். உண்மையென்னவென்றால் ஸ்ரீ காந்தி சகோதரி நிவேதிதையைப் பார்த்தபோது அவர் அமெரிக்க ஸ்தானாதி பதி காரியாலயத்தைச் சேர்ந்த மிஸ்ஸஸ் ஓல்புல், மிஸ் ஜோஸபைன் மக்லீட் என்னும் பெண்மணிகளின் விருந் தினரா யிருந்தார். ஆதலின் 'பெருமித'த்துக்கு அவர் பொறுப்பாளி யல்லர். போஸ் பாரா சந்தில் பழைய காலத்து வீடு ஒன்றில் அவர் நடத்திய எளிய, தவ வொழுக்க வாழ்க்கை அவருடைய நண்பர்களுக்கும் அவரை அறிந்தவர்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்த தாகும். ஸ்ரீ கோகலே ஸ்ரீ காந்தியுடன் ஆங்கிலத்தில் பேசினாரா, அவர் (Volatile) என்னும் பதத்தை உபயோகப்படுத்தினாரா என்று நமக்குத் தெரியாது. ஏனெனில், 'எங் இந்தியா'வில் வருவது குஜராத்தியி லிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். அப்பதத்துக்கு யார் பொறுப்பாளி யானாலும் அவர் சகோதரி நிவேதி

தைக்கு அநீதி இழைத்திருக்கிறார். அப்பதத்துக்கு ஆங்கில அகராதிகளில் "குதூகல இயல்புள்ள; நிலையற்ற; உறுதியில்லாத" என்னும் பொருள்கள் காணப்படுகின்றன. சகோதரி நிவேதிதை குதூகல இயல்புள்ளவரல்லர். அவர் உள்ளம் உயரிய விஷயங்களிலேயே ஈடுபட்டிருந்தது. ஹிந்து மதத்தினிடமும், இந்தியாவினிடமும் அவர் வைத்திருந்த உறுதியான பக்தி பிரசித்திபெற்றது. 'ஹிந்து மதத்தினிடம் அவர் கொண்டிருந்த அளவிறந்த அன்பை'ப்பற்றி ஸ்ரீ காந்தி குறிப்பிட்டிருப்பது மிகவும் சரியானதும் நியாயமானதுமாகும்."

இந்தத் திருத்தத்தை நான் மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறேன். 'மாடர்ன் ரிவியூ'வில் இந்தக் குறிப்பைப் பார்ப்பதற்கு முன்னால், நான் சகோதரி நிவேதிதையைச் சந்தித்த இடம் அவர் சொந்த இருப்பிடம் அன்றென்றும், அவர் வேறொருவரின் விருந்தினரா யிருந்தாரென்றும் எனக்குத் தெரியாது. வாசகர்கள் என்னுடைய குறைகளை உணர்ந்து கொள்ளவேண்டும். நான் படித்திருப்பது மிகக் கொஞ்சம். எனக்கு எவ்வளவோ விருப்ப மிருந்த போதிலும், தற்கால இந்தியாவின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் காரணமாயிருந்த பெரியோர்களின் சரித்திரங்களைக் கூட நான் படித்ததில்லை. ஆனால் இப்படி என் படிப்பு குறைவாயிருப்பதற்குக் காரணம் சோம்பேறித்தனம் அன்றென எண்ணி ஆறுதல் அடைகிறேன். என் வாழ்க்கை இளமைப் பருவத்திலிருந்து இடைவிடா உழைப்பும் போராட்டமும் நிறைந்த வாழ்க்கை யாதலால் படிப்பதற்கு அதிக நேரங் கிடைக்கவில்லை. மொத்தத்தில் இதனால் நான் அடைந்தது லாபமா நஷ்டமா என்பது

எனக்கே இன்னும் நிச்சயப்படவில்லை. வாரந்தோறும் நான் எழுதிவரும் சரிதத்தில் பற்பல ஸ்திரீ புருஷர்களைப் பற்றி நான் சொல்வதெல்லாம், சத்திய ஆராய்ச்சியில் ஈடு பட்டிருக்கையில் அவ்வப்போது என் மனோநிலையை விளக்குவதற்காகவே யன்றி வேறில்லை. இதற்கு அவசிய மில்லாத எவ்வளவோ வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் பிறமனி தர்களைப் பற்றிய குறிப்புகளையும் அவை சுவையளிக்கக் கூடுமாயினும் விட்டுவிடுகிறேன். ஆதலின் நான் இக் கதையில் பிற மனிதர்களைப்பற்றி எழுதும் மதிப்புரையே அவர்களைப்பற்றி என்னுடைய முடிவான அபிப்பிராய மென்றாவது, அதுவே உண்மை யென்றாவது வாசகர்கள் கொள்ளுதல் அவர்களுக்கும் எனக்கும் அநீதி செய்வ தாகும். பிறரைப்பற்றிய குறிப்புகள் அவ்வக்காலத்தில் என் மனதில் தோன்றிய எண்ணங்களைச் சொல்வன வென்று மட்டுமே கருதப்பட வேண்டும். சகோதரி நிவேதிதை, ஸ்வாமி விவேகானந்தர், மகரிஷி தேவேந்திர நாதர் முதலியோரைப்பற்றி நான் சொல்லப்புகுந்தது சத்தியத்தை தேடுவதில் எனக்கிருந்த அடங்கா ஆவலையும், அப்போதுகூடத் தென்னாப்பிரிக்காவில் என் அரசியல் வேலையெல்லாம் சத்திய ஆராய்ச்சியில் ஒரு பகுதியே யென்பதையும், அரசியல் வேலையை முன்னிட்டு அவ் வாராய்ச்சியை நான் ஒரு நாளும் கைவிடவில்லை யென் பதையும் விளக்குவதற்காகவே யன்றி வேறில்லை. ஆதலின் 'மாடர்ன் ரிவியூ' குறிப்பைப் படித்ததும் அதை மிக மகிழ்ச்சியுடன் இங்கெடுத்துப் போட்டிருக்கிறேன்.

'Volatile' என்னும் பதத்தைப் பொறுத்த வரையில் ஸ்ரீ மகாதேவ தேஸாய் மொழி பெயர்த்தவரான போதிலும் மொழி பெயர்ப்பு நான் பார்த்தே பிரசுரிக்கப்

படுவதால் நான் பொறுப்பைக் கழித்துக்கொள்ள முடியாது. ஆனால் நானாவது அவராவது அகராதியில் காணப்படும் பொருள்களைக் கருதவேயில்லை. கோகலே என்ன பதம் உபயோகித்தார் என்பது எனக்கு ஞாபகமில்லை. குஜராத்தியில் 'தேஜி' என்னும் பதம் உபயோகிக்கப் பட்டிருக்கிறது. சகோதரி நிவேதிதைக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணை எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஆனால் அதை நான் விவரிக்கப் போவதில்லை. மூலத்திலோ மொழிபெயர்ப்பிலோ உள்ள எந்தத் தவறும் ஹிந்து மதத்தினிடமும் இந்தியாவினிடமும் அவ்வளவு அபார அன்பு வைத்திருந்த ஒருவருடைய பெயருக்குக் கேடு விளைக்க முடியாது. அவர் என்றென்றைக்கும் நன்றியறிதலுடன் போற்றப்பட்டுவருவார் என்பதில் ஐயமில்லை.

வாகீஸ்வரீ அச்சு நிலையம் சென்னை:—1948.

சத்திய சோதனை

மகாத்மா காந்தியின் சுய சரிதம்

இரண்டாம் புத்தகம்

ரா. கிருஷ்ணமூர்த்தி
மொழி பெயர்த்தது

T. விஸ்வநாதன்
வெளியிட்டது

காபிரைட்] [விலை ரூபா 3.

வாகீஸ்வரி அச்சு நிலையம்,
சென்னை :—1948.

பொருளடக்கம்

நான்காம் பாகம்

அத்தியாயம் பக்கம்

சத்திய சோதனை

நான்காம் பாகம்

சத்திய சோதனை

நான்காம் பாகம்

முதல் அத்தியாயம்

சேம்பர்லின் விஜயம்

தென்னுப்பிரிக்காவில் மூன்றரைக் கோடி பவுன் நன்கொடை சம்பாதிக்கவும், ஆங்கிலேயர், போயர் எல்லாருடைய இதயங்களையும் கவரவும் சேம்பர்லின் வந்திருந்தார். எனவே இந்தியப் பிரதிநிதிக் கூட்டத்துக்கு அவர் திருப்திகரமான பதில் தரவில்லை. அவர் கூறியதாவது:— "சுயாட்சி பெற்ற குடியேற்ற நாடுகள் மீது சாம்ராஜ்ய அரசாங்கத்துக்கு அதிகாரம் எதுவுமில்லையென்பது நீங்கள் அறிந்ததே. உங்கள் குறைகள் உண்மையானவையென்றே காணப்படுகிறது. அவைகளை நீக்க என்னாலியன்றவளவு முயல்கிறேன். ஆனால் நீங்கள் ஐரோப்பியர்கள் மத்தியில் வசிக்க விரும்பினால் அவர்களை சமாதானப் படுத்த முயல வேண்டும்."

இவ்விடையினால் பிரதிநிதிக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களின் உற்சாகம் பறந்து போயிற்று. நானும் ஏமாற்றமடைந்தேன். அச்சம்பவம் என் கண்களைத் திறந்தது. தீவிரமாக வேலை செய்யவேண்டுமென்று உணர்த்திற்று. இதை என் சகாக்களிடம் தெரிவித்தேன்.

உண்மையில், மிஸ்டர் சேம்பர்லினின் பதிலில் தவறு ஒன்றுமில்லை உண்மையை மழுப்பாமல் அவர் உள்ளது உள்ளபடி கூறியது நல்லதே யாகும். "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்னும் விதியை அவர் எங்களுக்கு நயமான மொழிகளில் தெரிவித்தாரே யன்றி வேறில்லை. கத்தி எடுத்தவன் வைத்ததுதான் சட்டம் என்பதை அவர் எங்களுக்குத் தெளிவாக்கினார்.

ஆனால் எங்களிடமோ கத்தியில்லை. கத்தியினால் வெட்டுப் படுவதற்கு வேண்டிய தைரியமும், தேக பலமுங் கூட எங்களுக்குக் கிடையாது.

மிஸ்டர் சேம்பர்லின் தென்னாப்பிரிக்காவில் சிறிது காலமே இருப்பதாக உத்தேசித்திருந்தார். இந்தியாவில் ஸ்ரீநகரிலிருந்து குமரி முனை 1900 மைலானால், இங்கே டர்பனிலிருந்து கேப்டவுன் 1100 மைலுக்குக் குறைவில்லை. இவ்வளவு தூரத்தையும் சண்ட மாருதத்தின் வேகத்தில் சேம்பர்லின் கடக்க வேண்டி யிருந்தது. நேட்டாலிலிருந்து டிரான்ஸ்வாலுக்கு விரைந்து சென்றார். அங்கிருந்த இந்தியர்களுக்காகவும் நான் ஒரு விண்ணப்பம் தயாரித்து அவரிடம் சமர்ப்பிக்க வேண்டியவனா யிருந்தேன். ஆனால் பிரிடோரியாவுக்குப் போவது எப்படி? அங்கே நான் போவதற்கு அவசியமான சட்ட சம்பந்தமான ஏற்பாடுகளை அங்குள்ள இந்தியரால் செய்ய முடியவில்லை. போயர் யுத்தம் டிரான்ஸ்வாலை வனாந்திரமாக்கி விட்டது. உணவுப் பொருள்களோ, துணிமணிகளோ அங்கே கிடைப்பதில்லை. கடைகள் காலியாகவோ, மூடப்பட்டோ கிடந்தன. நாளடைவில் அவை எல்லாம் திறக்கப்படுமென்றாலும், கடைகள் திறக்கப்பட்டு உணவுப் பொருள்கள் சேகரிக்கப்படும் வரையில் ஏற்கெனவே

டிரான்ஸ்வாலி லிருந்து ஓடிப் போனவர்களைக் கூட அங்குத் திரும்பிவர விடக்கூடாது என்று கருதப்பட்டது. எனவே, டிரான்ஸ்வாலுக்குப் போகும் ஒவ்வொருவரும் அநுமதிச் சீட்டுப் பெற வேண்டுமென்று விதி செய்திருந்தார்கள். அவ்வநுமதிச் சீட்டுப் பெறுவதில் ஐரோப்பியர்களுக்குக் கஷ்டமே யிருப்பதில்லை. ஆனால் இந்திரியர்களுக்குத்தான் ரொம்பக் கஷ்டமா யிருந்தது.

யுத்தத்தின்போது இந்தியாவிலிருந்தும் இலங்கையி லிருந்தும் தென்னாப்பிரிக்காவுக்கு வெள்ளைக்கார சிப்பாய்க ளும், இராணுவ உத்தியோகஸ்தர்களும் பலர் வந்திருந்தார் கள். இவர்களில் தென்னாப்பிரிக்காவிலேயே குடியேற விரும்பியவர்களுக்கு உத்தியோகம் தேடிக் கொடுப்பது தங்கள் கடமை யென்று பிரிட்டிஷ் அதிகாரிகள் கருதினார் கள். இவர்களில் சிலர் தங்களுடைய புத்தியின் சாமர்த்தி யத்தினால் ஒரு புதிய இலாகாவை சிருஷ்டித்தனர். நீகிரோவர்களுக்கென்று ஒரு தனி இலாகா இருந்தது. ஆசியாக்காரர்களுக்கென்று ஒரு தனி இலாகா ஏன் இருத்தல் கூடாது? இது மிகவும் உசிதமாகவே காணப் பட்டது. எனவே, நான் தென்னாப்பிரிக்கா போவதற்குள் அப்புதிய இலாகா ஏற்பட்டு நாலா பக்கமும் தன்னுடைய அதிகாரத்தைப் பரப்பிக்கொண்டு வந்தது. அநுமதிச் சீட்டு வழங்கும் உத்தியோகஸ்தர்கள் டிரான்ஸ்வாலுக்குத் திரும்ப விரும்பிய மற்ற எல்லாருக்கும் அநுமதிச் சீட்டு வழங்கலா மாயினும், ஆசியாக்காரர்களுக்கு மட்டும் தங்களுடைய சிபார்சின் மீதே வழங்கவேண்டுமென்று புதிய இலாகாக் காரர்கள் சொன்னார்கள். புதிய இலாகாவுக்கு ஏதேனும் வேலை வேண்டி யிருந்தது. அந்த இலாகாவைச் சேர்ந்தவர் களுக்கோ பணம் வேண்டி யிருந்தது. வேலை இல்லா

விட்டால், இலாகாவுக்கு அவசியமில்லை யென்று கண்டு அது மூடப்பட்டுவிடலாம். எனவே அவர்கள் இவ்வேலையை தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொண்டார்கள்.

அநுமதிச் சீட்டுப் பெற விரும்பிய இந்தியர்கள் இந்த இலாகாவுக்கே விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. விண்ணப்பம் அனுப்பினால் பல நாள் கழித்தே அதற்குப் பதில் வரும். டிரான்ஸ்வாலுக்குத் திரும்ப விரும்பிய இந்தியர் பலரானபடியால், அநுமதிச் சீட்டு வாங்கித் தருவதற்குத் தரகர்கள் ஏராளமாகத் தோன்றலானார்கள். இவர்களும் மேற்படி உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து ஏழை இந்தியர்களின் பணத்தை ஆயிரக் கணக்கில் கொள்ளையிட்டார்கள். சிபார்சு இல்லாமற் போனால் அநுமதிச் சீட்டே கிடைப்ப தில்லையென்றும், அப்போதுங் கூட 100 பவுன்வரை கொடுக்கவேண்டி யிருந்ததென்றும் கேள்விப்பட்டேன். இவ்வாறாக, நான் டிரான்ஸ்வாலுக்குப் போக வழியில்லையென்று காணப்பட்டது. எனது பழைய நண்பரான டர்பன் போலீஸ் சூபரிண்டெண்டின் வீட்டுக்குச் சென்றேன். "தயவு செய்து டிரான்ஸ்வாலுக்குப் போக ஓர் அநுமதிச் சீட்டு வாங்கித் தாருங்கள். நான் டிரான்ஸ்வாலில் வசித்தவன் என்பது தங்களுக்குத் தெரியுமே" என்று அவரிடம் கேட்டுக்கொண்டேன். அவர் உடனே தொப்பி யணிந்து, என்னுடன் வெளியே புறப்பட்டு வந்து அநுமதிச் சீட்டும் வாங்கித் தந்தார். ரயிலுக்குப் போவதற்குச் சரியாக ஒரு மணி நேரந்தான் பாக்கியிருந்தது. சாமான்களைக் கட்டித் தயாராக வைத்திருந்தேன். எனவே சூபரிண்டெண்டு அலெக் ஸாண்டருக்கு நன்றி செலுத்தி விட்டு உடனே பிரிடோரியாவுக்குப் பிரயாணமானேன்.

என் முயற்சிக்கு எவ்வளவு கஷ்டங்கள் காத்திருக்கின்றன என்பதை இப்போது ஒருவாறு உணர்ந்திருந்தேன். பிரிடோரியா சென்றதும் விக்ஞாபனத்தைத் தயாரித்தேன். டர்பனில் சேம்பர்லினைப் பேட்டி காண இந்தியர்கள் கோரியபோது, அவர்களுடைய பிரதிநிதிகள் யார் என்று முன்னடியே கேட்டதாக எனக்கு நினைவில்லை. ஆனால் இங்கே புதிய இலாகா வேலை செய்து கொண்டிருந்தது எனவே முதலில் பிரதிநிதிகளின் பெயர்களைத் தெரிவிக்கும்படி கேட்டிருந்தார்கள். என்னை விலக்கிவிட வேண்டுமென்பது உத்தியோகஸ்தர்களின் விருப்பம் என்று பிரிடோரியா இந்தியர்கள் இதற்கு முன்பே தெரிந்து கொண்டிருந்தார்கள்.

இந்தத் துயரகரமான, ஆனால் வேடிக்கையான சம்பவத்தைப் பற்றி மற்றோர் அத்தியாயத்தில் விவரமாகக் கூறுகிறேன்.

இரண்டாம் அத்தியாயம்

அதிகாரி வர்க்க தெய்வங்கள்

புதிய இலாகாவின் தலைமை அதிகாரிகளுக்கு நான் டிரான்ஸ்வாலுக்குள் நுழைந்ததெப்படி என்பது விளங்கவில்லை. அவர்களிடம் அடிக்கடி வந்துகொண்டிருந்த இந்தியர்களை விசாரித்துப் பார்த்தார்கள். ஆனால் திட்டமான விவரம் எதுவும் கிடைக்கவில்லை. ஒருக்கால், நான் டிரான்ஸ்வாலில் முன்னம் வசித்தவன் என்ற தைரியத்தினால் அநுமதிச் சீட்டு இல்லாமல் பிரவேசித்திருக்கலாமோ வென்று ஊகித்தார்கள். அங்ஙனமாயின், என்னைக் கைது செய்யலாமன்றோ?

பெரிய யுத்தம் ஏதேனும் நடந்தால் அது முடிந்ததும் சிலகாலத்துக்கு அரசாங்கத்துக்கு விசேஷ அதிகாரங்கள் கொடுப்பது வழக்கம். தென்னாப்பிரிக்காவிலும் இப்படியே நடந்தது. அமைதி நாட்டும் அவசரச் சட்டம் ஒன்று அரசாங்கத்தார் செய்திருந்தனர். இச் சட்டத்தின்படி, அனுமதிச் சீட்டில்லாமல் டிரான்ஸ்வாலில் நுழைபவர் எவரையும் கைது செய்து சிறைப்படுத்தி விடலாம். என்னை இச்சட்டத்தின் கீழ் கைது செய்யலாமா வென்று அதிகாரிகள் யோசனை செய்தனர். ஆனால் அனுமதிச் சீட்டு காட்டும்படி என்னைக் கேட்க எவருக்கும் தைரியம் வரவில்லை. எனவே டர்பனுக்குத் தந்தி கொடுத்துக் கேட்டார்கள். அனுமதிச் சீட்டுப் பெற்றே வந்திருக்கிறேன் என்று அறிந்ததும் பெரும் ஏமாற்ற மடைந்தார்கள். ஆனால் இத்தகைய ஏமாற்றத்தினால் சோர்ந்து விடுவோர் அவர்களல்லர். டிரான்ஸ்வாலுக்கு நான் வந்து விட்டே னாயினும் சேம்பர்லினைப் பேட்டி காணாமல் தடுத்து விடலாமன்றோ.?

எனவே, சேம்பர்லினைப் பேட்டி காணும் பிரதிநிதிகள் யார் யார் என்று தெரிவிக்கும்படி கேட்டார்கள் தென்னாப்பிரிக்காவெங்கும் நிற வேற்றுமை உணர்ச்சி குடிகொண்டிருந்ததை நான் அறிவேன். ஆனால் இந்தியாவில் எனக்கு அனுபவமாகி யிருந்த இழிவான தந்திரங்களும், கீழான உபாயங்களும் இங்குள்ள அதிகாரிகளாலும் கையாளப் படுமென்று எதிர்பார்க்கவே யில்லை. தென்னாப்பிரிக்காவில் அரசாங்க இலாக்காக்கள் பொது ஜனங்களின் நன்மைக்காகவே ஏற்பட்டிருந்தன. அவை பொதுஜன அபிப்பிராயத்துக் கிணங்கவே நடைபெற்றன. எனவே, உத்தியோகஸ்தர்கள் தாழ்மைக் குணத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டனர். இதன் பயனை வெள்ளைக்காரரல்லாத

வேறு நிறத்தாரும் ஓரளவு அனுபவித்தனர். ஆசியாவி லிருந்து உத்தியோகஸ்தர்கள் வந்ததும் இது மாறிவிட்டது. அவர்கள் வைத்ததே சட்டமாக அதிகாரம் நடத்தியவர்கள். எனவே அந்த வழக்கத்தையே இங்கும் கொண்டு வந்தனர். தென்னுப்பிரிக்காவில் ஒரு வகை ஜனநாயகம், அதாவது ஜனங்களுக்குப் பொறுப்பான ஆட்சிமுறை இருந்து வந்தது. ஆசியாவிலிருந்து இப்போது இறக்குமதியானதோர் ஜனநாயகக் கலப்பற்ற தனி ஆட்சி முறை. ஏனெனில், ஆசிய நாடுகளை ஆண்டு வந்தது பொறுப்பற்ற அன்னிய அதிகார வர்க்கம். தென்னுப்பிரிக்காவி லிருந்த ஐரோப்பியர் கள் அந்நாட்டில் நிரந்தரமாகக் குடியேறித் தென்னுப்பிரிக் காவின் குடிகளாகி விட்டவர்கள். அரசாங்க உத்தியோகஸ் தர்கள் மீது அவர்களுக்குச் செல்வாக்கு இருந்தது. ஆனால் இப்போது ஆசியாவிலிருந்து அதிகாரிவர்க்க தெய்வங்கள் வந்திருந்தன. இதன் பயனாக இந்தியர்கள் இருதலைக் கொள்ளி எறும்பானார்கள்.

இந்த அதிகாரக் கொடுமையை நான் பெரிதும் அநுப வித்தேன். இலாகாத் தலைவரை வந்து பார்க்கும்படி முதலில் எனக்குக் கட்டளை வந்தது. இவர் இலங்கையிலிருந்து வந்த ஓர் உத்தியோகஸ்தர். "கட்டளை வந்தது" என்று நான் மிகைப்படுத்திச் சொல்வதாகக் கருதப்படலாம். ஆனால் அவ்வாறன்று; அதை விளக்கிக் கூறுகிறேன். எழுத்து மூல மான உத்திரவு எதுவும் எனக்கு வரவில்லை. இந்தியத் தலைவர் கள் அடிக்கடி ஆசிய இலாகா உத்தியோகஸ்தர்களைப் போய்ப் பார்க்கவேண்டி யிருந்தது. இவர்களில் காலஞ் சென்ற சேத் தயாப் ஹாஜிகான் முகமது ஒருவர். இலாகாத் தலைவர் அவரை நான் யார் என்றும், எதற்காக வந்திருக் கிறேனென்றும் கேட்டாராம்.

"அவர் எங்களுக்கு ஆலோசனை சொல்பவர். எங்கள் வேண்டுகோளின் மீதே இங்கு வந்திருக்கிறார்" என்று சேத் கூறினார்.

"அப்படியென்றால், நாங்கள் இங்கு இருப்பது எதற்காக? உங்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் நிய மிக்கப்பட வில்லையா? இங்குள்ள நிலைமைகளைப் பற்றி காந்திக்கு என்ன தெரியும்?" என்று அதிகாரி வர்க்க தெய்வம் கேட்டது.

தயாப் சேத் இதற்கு ஒருவாறு விடையளித்தார். "நீங்கள் இருப்பது உண்மைதான். ஆனால் காந்தி எங்கள் மனிதர். அவருக்கு எங்கள் பாஷை தெரியும். எங்கள் கஷ்ட நிஷ்டூரங்களையும் அவர் அறிவார். எப்படியும் நீங்கள் உத்தியோகஸ்தர்கள் தானே?" என்றார்.

என்னைத் தம்மிடம் அழைத்துக்கொண்டு வரும்படி தாயப் சேத்துக்கு துரை உத்தரவிட்டார். சேத்துடனும், இன்னும் சிலருடனும் துரையைப் பார்க்கச் சென்றேன். எங்களுக்கு ஆசனங்கள் கொடுக்கவில்லை. எல்லாரும் நின்று கொண்டிருந்தோம்.

இங்கே நீர் வந்தது எதற்காக?" என்று துரை என்னை நோக்கிக் கேட்டார்.

"எனது இந்திய சகோதரர்கள் ஆலோசனை கூறி உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். அதன்மீது வந் தேன்" என்று பதிலளித்தேன்.

"ஆனால் இங்கே வர உமக்கு உரிமை இல்லையென்று தெரியாதா? நீர் வைத்துக்கொண்டிருக்கும் அநுமதிச் சீட்டு உமக்குத் தவறாகக் கொடுக்கப்பட்டது. இங்கே குடியேறி விட்ட இந்தியராக உம்மைக் கருத முடியாது நீர் திரும்பிப்

போயே தீர வேண்டும். மிஸ்டர் சேம்பர்லினை நீர் பேட்டி காண முடியாது. இங்குள்ள இந்தியர்களைப் பாதுகாப்பதற் கென்றே ஆசிய இலாகா ஏற்பட்டிருக்கிறது. நல்லது; இப்போது நீர் போகலாம்."

இத்துடன் அவர் எனக்கு வெளியே போக வழி காட்டிவிட்டார். பதில் சொல்வதற்கே அவகாசம் கொடுக்க வில்லை. ஆனால் மற்ற நண்பர்களை நிறுத்திக் கொண்டு நன்றாகத் திட்டினார். என்னை உடனே திருப்பி அனுப்பி விடும்படி அவர்களுக்கு யோசனை கூறினார்.

மிகுந்த எரிச்சலுடன் அவர்கள் திரும்பி வந்தார்கள். இவ்வாறு நாங்கள் சிறிதும் எதிர்பாராத பிரச்னையொன்று குறுக்கிட்டது.

மூன்றும் அத்தியாயம்

அவமதிப்புக்குத் தலை குனிந்தது

இந்த அவமதிப்பினால் என் மனம் துடி துடித்தது. ஆயினும் இதற்கு முன் பல முறைகளில் இத்தகைய அநுபவம் பெற்றிருந்தேனாதலின், அவமதிப்பை பொறுமை யுடன் சகிக்கும் ஆற்றல் பெற்றிருந்தேன். எனவே ஆர அமர யோசித்து எவ்வழி உசிதமென்று தோன்றுகிறதோ அதைக் கடைப்பிடிக்கத் தீர்மானித்தேன்.

ஆசிய இலாகாத் தலைவரிடமிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், நான் ஏற்கனவே டர்பனில் மிஸ்டர் சேம்பர்லினை பேட்டி கண்டு விட்டபடியால், இங்கு அவரைக் காணப்போகும் பிரதிநிதிக் கூட்டத்தி லிருந்து என் பெயரை எடுத்து விடுதல் அவசியமாயிற்று என்று கண்டிருந்தது.

இதை என் சகாக்களால் பொறுக்க முடியவில்லை. பிரதிநிதிகள் அனுப்பும் யோசனையையே கைவிட்டு விடுவதாக அவர்கள் சொன்னார்கள். இதனால் ஏற்படக்கூடிய சங்கடமான நிலையை அவர்களுக்கு எடுத்துக்காட்டினேன்

"நீங்கள் உங்கள் கட்சியை சேம்பர்லின் முன்பு எடுத்துச் சொல்லாவிட்டால், உங்களுக்குச்சொல்வதற்குக் கட்சியெதுவுமே யில்லையென்று பாவித்துக்கொள்வார்கள். நாம் சொல்லப் போவதை எழுத்து மூலமாகத் தானே சொல்லப் போகிறோம்? மனு எழுதித் தயாரா யிருக்கிறது. அதைநான் படித்தாலும், வேறொருவர் படித்தாலும் ஒன்றுதான். மிஸ்டர் சேம்பர்லின் நம்முடன் இவ்விஷயத்தைப் பற்றி விவாதிக்கப் போவதில்லை. இந்த அவமதிப்புக்கு நான் உட்பட்டே தீரவேண்டுமெனத் தோன்றுகிறது" என்றேன்.

நான் பேசி முடித்தேனோ இல்லையோ, தயாப் சேத் ஆத்திரத்துடன் கூறியதாவது:—"உங்களை அவமதித்தது இந்திய சமூகத்தையே அவமதித்ததாகாதா? நீங்கள் எங்களுடைய பிரதிநிதி என்பதை நாங்கள் எவ்வாறு மறக்க முடியும்?"

"உண்மையே. ஆனால் சமூகமுங்கூட இத்தகைய அவமதிப்புகளுக்கு உட்பட்டே தீரவேண்டும். வேறு வழி நமக்கு இல்லையா!" என்று விடை யளித்தேன்.

"என்ன வந்தாலும் வரட்டும், இனியும் புதிய அவமதிப்புகளை நாம் ஏன் வலிய வாங்கிக்கொள்ள வேண்டும்? இப்போதுள்ளதைவிடப் பெரிய கேடு எதுவும் நமக்கு வர முடியாது. ஏதேனும் உரிமைகள் இருந்தாலல்லவா அவை போய்விடுமே யென்று பயப்பட வேண்டும்?" என்றார் தயாப் சேத்,

ரோஷமுள்ள இந்தப் பதில் எனக்குப் பிடித்திருந்த தாயினும், ரோஷப்படுவதால் இப்போது பயன் ஒன்று மில்லையென்று உணர்ந்திருந்தேன். இந்திய சமூகத்தின் ஆற்றல் இவ்வளவுதான் என்பது எனக்கு நன்றாய் தெரிந்திருந்தது. எனவே, நண்பர்களைச் சமாதானப்படுத்தி. எனக்குப் பதிலாக இந்திய பாரிஸ்டர் ஸ்ரீமான் ஜார்ஜ் காட்பிரேயைத் தலைவராக அழைத்துச் செல்லும்படி சொன்னேன்.

இவ்வாறாக, காட்பிரேயின் தலைமையில் பிரதிநிதிக் கூட்டம் சென்றது. மிஸ்டர் சேம்பர்லின் தமது பதிலில் என்னை விலக்கியது குறித்தும் குறிப்பிட்டார். "ஒரு பிரதிநிதி சொல்வதையே மீண்டும் மீண்டும் கேட்பதற்குப் பதிலாகப் புதியவர் ஒருவர் சொல்வதைக் கேட்பது நல்லதல்லவா ?" என்று சொல்லி, இந்தியர்களின் மனப் புண்ணை ஆற்ற முயன்றார்.

ஆனால், இம் முயற்சிகளினால் காரியம் முடிவடைவதற்குப் பதிலாக, சமூகத்துக்கும், எனக்கும் வேலை அதிகமேயாயிற்று. மறுபடியும் நாங்கள் அடியிலிருந்து வேலை துவங்க வேண்டியிருந்தது. "நீங்கள் சொன்னதின் மேல் தானே நாங்கள் (போயர்) யுத்தத்தின்போது உதவி செய்தோம்? அதனுடைய பலன்களை இப்போது பார்க்கிறீர்கள் அல்லவா ?" என்று சிலர் குத்திக் காட்டினார்கள் ஆனால் இதற்கு நான் பயந்து விடவில்லை. நான் சொன்னதாவது:—" அவ்வாறு நான் யோசனை கூறியதன்பொருட்டு வருந்தவில்லை.யுத்தத்தின்போது நாம் உதவிசெய்தது மிகவும் நல்லது என்றே இப்போதும் கூறுகிறேன். அது நமது கடமையைச் செய்ததாகுமேயன்றி வேறில்லை. கடமை

களைச் செய்ததற்குப் பலன்களை எதிர்பார்த்தல் கூடாது. ஆனால் நல்ல காரியம் எதுவும் முடிவில் பயனளித்தே தீரும் என்பது என் உறுதியான நம்பிக்கை. போனவற்றை மறந்து, நமது முன்னணி வேலையைப் பற்றிச் சிந்தித்தலே இப்போது நமது கடமை"

இதை எல்லாரும் ஒத்துக்கொண்டார்கள். மேலும் நான் கூறியதாவது:—"நீங்கள் என்னை எதற்காக அழைத்தீர்களோ அவ்வேலை முடிவடைந்து விட்டது. ஆனால் நீங்களே எனக்குத் தாய் நாட்டுக்குத் திரும்ப விடை கொடுத்தால்கூட நான் இப்போது டிரான்ஸ்வாலை விட்டுப் போகக் கூடாதென்று எண்ணுகிறேன். இதற்கு முன் நான் நேட்டாலிலிருந்து வேலை செய்ததுபோல் இப்போது இங்கே இருந்து செய்யவேண்டும். இனிக் குறைந்தது ஒரு வருஷத்திற்கு, இந்தியா திரும்புவதைப் பற்றி நான் நினைத்தல் கூடாது. எனவே டிரான்ஸ்வால் உயர்தர நீதி மன்றத்தில் (ஸுப்ரீம் கோர்ட்டில்) வக்கீல் தொழில் நடத்த அநுமதி பெறவேண்டும். இந்தப் புதிய ஆசிய இலாகாவுடன் போராட்டம் நடத்தி வெற்றி பெறலாமென்னும் தைரியம் எனக்கிருக்கிறது. நாம் அப்படிச் செய்யாவிடில் இந்தியர்களை முழுதும் கொள்ளை யடித்து விடுவதுடன், கடைசியில் நாட்டை விட்டும் துரத்தி விடுவார்கள். தினந்தோறும் புதிய அவமானங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். மிஸ்டர் சேம்பர்லின் என்னைப் பார்க்க மறுத்ததும், ஆசிய இலாகா உத்தியோகஸ்தர் அவமதித்ததும் பெரிய காரியங்களல்ல. சமூகம் முழுவதற்கும் ஏற்படும் அவமதிப்பே பெரியது. நாயின் வாழ்க்கையாவது இன்னும் சிறிது மேன்மையாயிருக்கும். அத்தகைய வாழ்வு நம்மை நடத்தச் சொல்கிறார்கள். இதை நாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது."

இவ்வாறு நான் வேலை ஆரம்பித்தேன். பிரிடோரியாவிலும், ஜோகானிஸ்பர்க்கிலுமுள்ள இந்தியர்களுடன் கலந்து பேசி, கடைசியில் ஜோகானிஸ்பர்க்கில் வக்கீல் தொழில் தொடங்குவதென்று தீர்மானித்தேன்.

டிரான்ஸ்வால் உயர்தர நீதி மன்றத்தில் வக்கீல் தொழில் நடத்த எனக்கு அநுமதி கிடைக்குமாவென்று சந்தேகமாகவே யிருந்தது. ஆனால் வக்கீல் சங்கத்தார் என் விண்ணப்பத்தை எதிர்க்கவில்லை. நீதி மன்றத்தாரும் அதை அங்கீகரித்தனர். ஆயினும் மற்றோர் இடையூறு இருந்தது. இந்தியனுக்கு நல்ல இடத்தில் காரியாலயம் அகப்படுவது கஷ்டம். ஆனால், அங்கே பிரபல வியாபாரிகளில் ஒருவராயிருந்த மிஸ்டர் ரிச் என்பாருடன் எனக்கு நெருங்கிய பழக்கம் ஏற்பட்டிருந்தது. அவர்க்குத் தெரிந்திருந்த வீட்டுத் தரகர் ஒருவர் மூலமாக, நகரத்தில் வக்கீல்கள் வசித்த பகுதியில் நல்ல இடம் எனக்குக் கிடைத்தது. இவ்வாறு வக்கீல் தொழில் ஆரம்பித்தேன்.

நான்காம் அத்தியாயம்

தியாக உணர்வு மிகுதல்

டிரான்ஸ்வாலில் இந்தியர்களின் உரிமைகளுக்காக நடத்திய போராட்டத்தைப் பற்றியும், ஆசிய இலாகாவுடன் நடந்த போராட்டத்தைப் பற்றியும் கூறுவதற்கு முன்னால், என் வாழ்க்கையின் இன்னும் சில அம்சங்களைப்பற்றி விவரித்தல் அவசியமாகிறது.

இதுவரை என்னிடம் இருவகைஆசைகள் குடிகொண்டிருந்தன. தியாக உணர்வு ஒருபக்கம் இருந்ததாயினும், அத

ேைடு, வருங்காலத்துக்குச்சிறிது பொருள் சேர்த்துவைக்க வேண்டுமென்னும் ஆசையும் இல்லாமற் போகவில்லை.

பம்பாயில் வக்கீல் தொழில் ஆரம்பித்த காலத்தில், அமெரிக்காவிலிருந்து ஆயுள் நிதிச் சங்கத்தின் தரகர் (Life Insurance Agent) ஒருவர் பம்பாயிக்கு வந்திருந்தார். நல்ல 'முகவெட்டு'ம், தேனொழுக இனிமையாகப் பேசும் சுபாவமும் உடையவர். வெகுநாள் நண்பரைப்போல அவர் எனது வருங்கால வாழ்வைப் பற்றிப் பேசத் தொடங்கினர். "அமெரிக்காவில் உம்மைப்போன்ற அந்தஸ்துள்ளவர்கள் எவரும் ஆயுள் நிதிச் சங்கத்தில் சேராமல் இருப்பதில்லை. வருங்காலத்தில் உங்கள் மனைவி, குழந்தைகளின் நலத்தை உத்தேசித்து நீங்களும் அச்சங்கத்தில் சேரவேண்டாமா? வாழ்வோ அநித்யம். இன்றைக்கிருப்பாரை நாளைக்குக் காணேம். அமெரிக்காவில் நாங்கள் ஆயுள் நிதிச் சங்கத்தில் சேர்வதை ஒரு மதக் கடைமையாகக் கருதுகிறேம். நீரும் ஒரு சிறு தொகை சேர்த்துக் கொள்வது நலமல்லவா?", என்ருர்.

இதற்கு முன்னர் தென்னுப்பிரிக்காவிலும், இந்தியாவிலும் எத்தனையோ ஆயுள் நிதித் தரகர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் பேச்சைக் காது கொடுத்துக் கேட்பதுமில்லை. ஏனெனில், அத்தகைய சங்கத்தில்சேர்வது பயத்திற்கும், கடவுளிடம் நம்பிக்கை யின்மைக்கும் அறிகுறியாகுமென்று கருதினேன். ஆனல் இப்போது இவ்வமெரிக்கரின் வலையில் வீழ்ந்து விட்டேன். அவர் தம் வாதங்களை வரிசையாகச் சொல்லிக் கொண்டிருக்கையில் என் மனைவியும், குழந்தைகளும் என் மனக்கண் முன் நின்ருர்கள். எனக்கு நானே சொல்லிக் கொண்டதாவது:—

"அப்பனே! உன் மனைவியின் நகைகள் எல்லாவற்றையும்

ஏறக்குறைய விற்றுவிட்டாய். உனக்கு ஏதாவது நேர்ந்தால் அவளையும், குழந்தைகளையும் காப்பாற்றும் பொறுப்பு உன் ஏழைச் சகோதரர் தலையில் அல்லவா சாரும்? அவர் உனக்குத் தந்தையாக இருந்து வந்தவராயிற்றே? அவர் மீது இந்த பாரத்தையும் போடுவது உனக்குத் தகுமா?" இதுபோன்ற வாதங்களால் மனதைத் திருப்தி செய்துகொண்டு ரூபா 10,000 க்கு ஆயுள் நிதிச் சங்கத்தில் சேர்ந்தேன்.

ஆனால் தென்னுப்பிரிக்காவில் வாழ்க்கை முறை மாறியதும் என் மனப் பான்மையும் திரும்பி விட்டது. இச் சோதனை காலத்தில், நான் செய்த ஒவ்வொரு காரியமும் ஆண்டவன் பெயரால், அவனுடைய தொண்டு எனக் கருதியே செய்தேன். தென்னுப்பிரிக்காவில் எத்தனை காலம் இருக்கவேண்டி வருமென்பது நிச்சயமில்லை. இந்தியாவுக்குத் திரும்ப முடியாமலே போய்விடுமோ வெனவும் அஞ்சினேன். எனவே என் மனைவியையும், குழந்தைகளையும் என்னுடனேயே வைத்திருக்க வேண்டுமென்றும், இனிமேல் எப்போதும் அவர்களைப் பிரிந்திருக்கக் கூடாதென்றும், அவர்களைக் காப்பாற்றுவதற்குப் போதிய பணம் சம்பாதிக்க வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டேன். இத்தகைய மனப்பான்மை ஏற்படவே, ஆயுள் நிதிச் சங்கத்தில் சேர்ந்தது பற்றி வருந்தலானேன். இன்ஷியூரன்ஸ் ஏஜண்டின் வலையில் வீழ்ந்து விட்டது குறித்து வெட்கப்பட்டேன்.

பின் வரும் எண்ணங்கள் என் உள்ளத்தில் எழுந்தன:—"என் சகோதரர் என் தந்தையின் ஸ்தானத்தில் இருப்பது உண்மையாயின், நான் ஒரு வேளை இறக்க நேர்ந்தால் என் மனைவியைக் காப்பாற்றுவதை ஒரு சுமையாகக் கருதுவாரா? மேலும் மற்றவர்களுக்கு முன்னால் என்னை

யமன் கொண்டு போவான் என்று நான் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? பார்க்கப்போனால், எல்லாரையும் உண்மையில் காப்பாற்றி யருள்பவர் சர்வ வல்லமையுள்ள ஆண்டவனே யல்லாமல் நானாவது, என் சகோதராவது அல்ல. ஆயுள் நிதிச் சங்கத்தில் சேர்ந்ததால் என் மனைவியும், குழந்தைகளும் தற்சார்பை இழக்கும்படி செய்து விட்டேன். அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வார்களென ஏன் எதிர்பார்க்கக் கூடாது? உலகில் எண்ணி லடங்காத எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் இருக்கின்றனவே, அவர்களெல்லோரும் என்ன வாகிறார்கள்? என்னையும் அவர்களில் ஒருவனாக ஏன் கருதிக் கொள்ளக் கூடாது?''

இத்தகைய பற்பல எண்ணங்கள் சமுத்திரத்தின் அலைகளே போல் என் மனதில் தோன்றி மறைந்தன. ஆனால் அவற்றிற்கிணங்க நான் உடனே வினை நிகழ்த்தவில்லை. தென்னாப்பிரிக்கா சென்ற பின் ஒரு முறை ஆயுள் நிதிக்குக் கட்டணம் செலுத்தியதாக நிச்சயமாய் ஞாபகமிருக்கிறது.

வெளி சந்தர்ப்பங்களும் இத்தகைய எண்ணப் போக்குக்குத் துணை செய்தன. முதன் முதலில் தென்னாப்பிரிக்கா சென்ற போது கிறிஸ்தவர்களின் தோழமை என்னிடம் சமய உணர்ச்சி குன்றாமல் இருக்கச் செய்தது. இப்போது பிரமஞான சங்கத்தாரின் கூட்டுறவு அவ்வுணர்ச்சிக்குப் பலந் தந்து வந்தது. மிஸ்டர் ரிச் பிரமஞான சங்கத்தைச் சேர்ந்தவர். ஜோகானிஸ்பர்க்கில் அச்சங்கத்தாரை அவர் தான் எனக்குப் பழக்கம் பண்ணி வைத்தார். அச்சங்க கொள்கைகள் விஷயத்தில் எனக்குக் கருத்து வேற்றுமை யிருந்தபடியால் நான் அச்சங்கத்தில் அங்கத்தினனாகவில்லை. ஆனால் அநேகமாக அங்கத்தினர் எல்லாரிடமும் நெருங்கிப் பழகினேன். அவர்களுடன் தினந்தோறும் சமயக்கொள்கை

களைப் பற்றி விவாதம் செய்து வந்தேன். அச்சங்க நூல்கள் சில வாசித்தேன். அவர்களுடைய கூட்டங்களிலும் சில முறை பேசியிருக்கிறேன். பிரமஞான சங்கத்தின் தலையாய கொள்கை உலக சகோதரத்துவ உணர்ச்சியைப் பரப்புவதே யாகும். இதுகுறித்து எங்களுக்குள் நிரம்ப விவாதம் நடந்தது. அங்கத்தினருடைய நடத்தை மேற்படி இலட்சியத்துடன் முரண்படுவதாகத் தோன்றும் போதெல்லாம் நான் எடுத்துக் காட்டுவேன். இவ்வாறு குற்றங் கண்டு பிடித்தல் எனக்குப் பெருநன்மை செய்தது. என்னுடைய குற்றங்களையும் நான் தேடி அறியுமாறு அது செய்தது.

ஐந்தாம் அத்தியாயம்

ஆன்ம சோதனையின் பயன்

1893-ம் ஆண்டில் நான் கிறிஸ்துவ நண்பர்களுடன் நெருங்கிப் பழக நேர்ந்தபோது, மத ஆராய்ச்சி துறையில் ஆரம்ப நிலையிலேயே இருந்தேன். நான் ஏசுநாதரின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும்படி செய்ய அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். திறந்த மனத்துடனும், தாழ்மைக் குணத்துடனும் அவர்கள் கூறியதற்கெல்லாம் செவி கொடுத்தேன். அதே காலத்தில் என்னாலியன்ற அளவு ஹிந்துமத ஆராய்ச்சி செய்ததுடன் மற்ற மதங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் முயன்றேன்.

1903-ம் ஆண்டில் நிலைமை ஓரளவு மாறுதலடைந்து விட்டது. பிரமஞான சங்கத்து நண்பர்கள் என்னைத் தங்கள் சங்கத்தில் சேரும்படி செய்ய உத்தேசித்திருந்தது உண்மையே. ஆனால் இது என்னிடமிருந்து ஹிந்து மதத்தைப் பற்றிய உண்மைகளைக் கிரஹிக்கும் நோக்கத்துடனேயாம்

பிரமஞான சங்கத்து நூல்களில் ஹிந்து மதத்தைப் பற்றிய குறிப்புகள் மலிந்திருப்பதால், அவற்றை விளக்குவதற்கு நான் உபயோகமாயிருப்பேனென்று அவர்கள் கருதினார்கள். எனக்கு ஸமஸ்கிருதப் பயிற்சி மிகக் குறைவென்றும், ஹிந்து சமய நூல்களை நான் மூலத்தில் படித்ததில்லை யென்றும், மொழிபெயர்ப்பில் படித்திருப்பதும் மிகச் சொற்பமென்றும் எடுத்துக்கூறினேன். ஆனால் ஸமஸ்காரம். (பூர்வ ஜன்ம வாசனைகள்) புனர் ஜன்மம் இவற்றில் அவர்கள் நம்பிக்கை யுடையவர்களாதலின் நான் சிறிதளவேனும் அவர்களுக்குப் பயன்படுவேனென்று கருதினார்கள். எனவே என் நிலைமை மிகவும் கஷ்டமாய்ப் போயிற்று, அவர்களில் சிலருடன் ஸ்வாமி விவேகானந்தரின் இராஜ யோகத்தையும், மற்றும் சிலருடன் ஸ்ரீ துவிவேதியின் இராஜ யோகத்தையும் படிக்கத் தொடங்கினேன். ஒரு நண்பருடன் பதஞ்சலி யோகசூத்ரமும், மற்றும் பலருடன் பகவத் கீதையும் படிக்க வேண்டி வந்தது. சமய நூலாராய்ச்சிச் சங்கம் என்பதாக ஒன்று ஏற்படுத்தி அங்கே ஒழுங்காகப் படித்து வந்தோம். கீதையிடம் எனக்கு முன்னரே பேரன்பும், நம்பிக்கையும் ஏற்பட்டிருந்தன. அதை இன்னும் ஆழ்ந்து படிக்க வேண்டுவதின் அவசியத்தை இப்போது உணர்ந்தேன். இரண்டொரு மொழி பெயர்ப்புகள் என்னிடம் இருந்தன. அவற்றின் துணைகொண்டு மூல கிரந்தத்தைப் படித்தறிய முயன்றேன்.

தினம் ஒன்று அல்லது இரண்டு சுலோகங்களை மனப்பாடம் செய்வதென்றும் தீர்மானித்தேன். காலைக் கடன்களை ஆற்றும் நேரத்தை இதற்குப் பயன் படுத்தினேன். பல் துலக்கப் பதினைந்து நிமிஷமும். ஸ்நானம் செய்ய இருபது நிமிஷமும் எனக்கு ஆவது வழக்கம் மேனாட்டா

ரைப்போல் நின்றுகொண்டு 'புருஷ்'ஷினுல் பல் துலக்கு வேன். எனவே, நான் நிற்கும் இடத்திற்கு எதிரே, சுவரில், கீதா சுலோகங்கள் எழுதப்பெற்ற காகிதங்களை ஒட்டி விடு வேன். மனப்பாடம் பண்ணுகையில் அவ்வப்போது அவற் றைப் பார்த்து ஞாபகப்படுத்திக் கொள்வேன். அன்றன் றைய பாடத்தை நெட்டுருச் செய்யவும், பழைய சுலோகங் கள் மறவாமலிருப்பதற்காக ஒருமுறை அவற்றைச் சொல்ல வும் மேற் சொன்ன நேரம் போதுமாயிருந்தது. இவ்வாறு பதின்மூன்று அத்தியாயங்களை நெட்டுருச் செய்ததாக ஞாபகம் இருக்கிறது. ஆனுல் வேறு வேலை அதிகமான போது கீதை மனப்பாடம் பண்ணுவதை விட்டுவிட வேண் டியதாயிற்று. சிந்தனை செய்வதற்கு எனக்குக் கிடைத்த காலத்தையெல்லாம் சத்தியாக்கிரஹத்தின் பிறப்பும், வளர்ச் சியும் கொள்ளை கொண்டன. இன்று வரை அவ்வாறுதான் இருந்து வருகிறது.

கீதை ஆராய்ச்சி மற்ற நண்பர்கள் விஷயத்தில் என்ன பயனை விளைவித்ததென்று நான் அறியேன். ஆனுல் என் வரையில், அந்நூல் வாழ்க்கைக்கு வழி காட்டும் தவருத் துணையாகி விட்டது. தினசரி வாழ்க்கையில் ஐயங்கள் தோன்றும் போதெல்லாம். கீதையைப் பார்க்கலானேன். பொருள் தெரியாத வார்த்தைகளுக்கு அகராதியில் பார்த் துத் தெரிந்து கொள்வது போல், என்னுடைய கஷ்டங்களி லும், சோதனைகளிலும் இவ்வொழுக்க முறை அகராதியைப் பார்த்து மனந்தெளிந்தேன். "அபரிக்ரஹம்" (உடைமை இன்மை), "சம பாவம்" என்பன போன்ற சொற்றொடர் கள் என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. சம பாவத்தை எப்படி வளர்ப்பது, எப்படிப் பாது காப்பது என்னும் கேள்விகள் எழுந்தன. நம்மை அவமதிப்பவர்களையும்,

லஞ்சம் வாங்கும் உத்தியோகஸ்தர்களையும், நேற்றைய தினம் சகாக்களாயிருந்து இன்று அநாவசியமான தடைகளைக் கிளத்துபவர்களையும், எப்போதும் நமக்கு நல்லவர்களாயிருந்து வருபவர்களையும் சம பாவத்துடன் நோக்குவதெப்படி? உடைமைகள் ஒன்றுமில்லாமல் செய்து கொள்ளுதல் எவ்வாறு? உடம்பே ஓர் உடைமை யல்லவா? மனைவியும், குழந்தைகளும் உடைமைகள் அல்லரா? என்னிடம் அலமாரிகள் நிறைய விருந்த புத்தகங்கள் அனைத்தையும் கொளுத்தி விடவேண்டுமா? "எனது" என்னக்கூடிய எல்லாவற்றையும் உண்மையிலேயே துறந்து விட்டு ஆண்டவன் பணியில் ஈடுபடுவதா?

இவ்வையங்களுக்குத் தெளிவான விடை உடனே கிடைத்தது. உடமைகள் எல்லாவற்றையும் அடியோடு தியாகம் செய்தாலன்றி இறைவன் தொண்டில் ஈடுபட முடியாதென்பதே அவ்விடையாகும். நான் ஆங்கிலச் சட்டம் படித்திருந்தது இப்போது பயன் பட்டது. சம நீதியைப்பற்றி ஸ்நெல் என்பார் எழுதியுள்ள விரிவுரை என் ஞாபகத்திற்கு வந்தது. கீதையின் உபதேசத்தைப் படித்த பின்னர் 'தர்மகர்த்தா (டிரஸ்டி) என்னும் பதத்தின் பொருளை நன்கு தெரிந்து கொண்டேன். நீதி சாஸ்திரத்தினிடம் எனக்கு மதிப்பு அதிகமாயிற்று. கீதையின் "அபரிக்ரஹ" உபதேசத்தின் கருத்தை உணர்ந்தேன். மோட்ச விருப்பமுள்ளவர்கள் தங்கள் உடமைகளுக்குத் தாங்கள் தர்மகர்த்தர்களென்றே கருதி நடந்து கொள்ள வேண்டுமென்பதே அதன் கருத்தென அறிந்தேன். தர்மகர்த்தன் ஒருவனுடைய ஆதிக்கத்தில் எவ்வளவு சொத்துக்கள் இருந்தாலும், அவன் அவற்றில் ஒரு தூசையும் தன் உடைமையாகக் கருதாததுபோல் மோட்ச இச்சை யுள்ளவன்

இருத்தல் வேண்டும். அபரிக்ரஹம், சம பவாம் எனும் இரு குணங்களையும் பெறவேண்டுமானால் மனோ நிலை மாறுதலடைய வேண்டியது அவசிய மென்றும் தெளிவா யுணர்ந்தேன். அதன் பின்னரே ரேவா சங்கர் பாய்க்கு ஆயுள் நிதிச் சங்கத்தைப்பற்றி எழுதினேன். இனி அந்நிதிக்கு எனக்காகக் கட்டணம் செலுத்த வேண்டாமென்றும், இதற்கு முன் செலுத்திய கட்டணத் தொகையில் ஏதேனுமொரு பகுதியைத் திரும்பிப் பெறக்கூடுமானால் முயலும் படியும், இல்லாவிடின் அதை நஷ்டமானதாகக் கருதி விடும் படியும் தெரிவித்தேன். என்னைப் படைத்த கடவுளே என் மனைவியையும், குழந்தைகளையும் படைத்தாராதலின், அவர்களை அவரே காப்பாற்றுவாரென உறுதி கொண்டிருப்பதாய்க் குறிப்பிட்டிருந்தேன். எனக்குத் தந்தைபோல் இருந்துவந்த சகோதரருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அது வரை நான் மிச்சம் செய்த பொருளையெல்லாம் அவருக்கு அளித்து வந்ததாகவும், வருங்காலத்தில் என்னிடமிருந்து எதுவும் எதிர்பார்க்கக் கூடாதென்றும் இனி ஏதாவது மீதமானால் பொது நன்மைக்கே செலவிடப் போவதாகவும் தெரிவித்தேன்.

ஆனால் இத்தீர்மானத்தை அவர் எளிதில் அறிந்து கொள்ளும்படி செய்யக் கூடவில்லை. அவருக்கு நான் செலுத்த வேண்டிய கடமையை நினைவூட்டியும், தந்தையை விட மேதாவியாவதற்கு நான் முயலக் கூடாதென்றும், தந்தையைப்போல் நானும் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றும் அவர் கடுமையாகப் பதில் எழுதியிருந்தார். தந்தை செய்து வந்ததையே நானும் செய்வதாகவும், "குடும்பம்" என்பதின் பொருளை சிறிது விரிவாக்கிக் கொண்டால் நான் செய்யுங்காரியம் எவ்வளவு சிறந்த

தென்று தெரியவரும் என்றும் பணிவுடன் தெரிவித்துக் கொண்டேன்.

இத்துடன் என் சகோதரர் என்னைக் கைவிட்டு விட்டார். எனக்குக் கடிதம் எழுதுவதை அறவே நிறுத்தி விட்டார். இதனால் மிகத் துயரமடைந்தே னாயினும், என்னுடைய கடமையென்று நான் கருதியதை விடுவதினால் இன்னும் அதிக துயரம் நேரிடுமாதலின், என் தீர்மானத்தைக் கைவிட வில்லை. ஆனால் இதன் காரணமாக, என் சகோதரரிடம் எனக்கிருந்த அன்பு அளவிலோ, தூய்மையிலோ ஓர் அணுவளவும் குறையவில்லை. அவருடைய துன்பங்களுக் கெல்லாம் காரணம் அவர் என்னிடம் வைத்திருந்த அபார அன்பே யாகும். நான் பணங் கொடுக்கவில்லை யென்பது பற்றி அவருக்கு அவ்வளவு மனத்தாங்கலில்லை? குடும்பத்தைக் காப்பாற்றவில்லை யென்னும் அவப் பெயர் எனக்கு வரக்கூடா தென்பதே அவருடைய முக்கிய நோக்கம்.

ஆனால் அவர் வாழ்நாள் முடியுந் தறுவாயிலிருந்த போது என் மனோ நிலையைச் செவ்வனே அறிந்து கொண்டார். மரணம் நெருங்கியிருந்த காலையில் அவர் நான் செய்ததே சரியென உணர்ந்து மிகவும் உருக்கமான ஒரு கடிதம் எழுதினார். அதில் என்னிடம் மன்னிப்புங் கேட்டுக் கொண்டிருந்தார். தமது புதல்வர்களை என்னிடம் ஒப்படைப்பதாகவும், என் விருப்பம் போல் அவர்களை வளர்க்கலாமென்றும், என்னைப் பார்க்கப் பெரிதும் விழைவதாகவும் எழுதியிருந்தார். தாமே தென்னாப்பிரிக்கா வர விரும்புவதாகத் தந்தி யடித்தார். அப்படியே செய்யலா மென்று பதில் தந்தி கொடுத்தேன். ஆனால் இறைவன் சித்தம் அவ்வாறில்லை. புதல்வர்களைப் பற்றி அவர் விருப்பமும் நிறை

வேற வில்லை. தென்னப்பிரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்பே அவர் காலமானர். அவருடைய புதல்வர்கள் பழைய முறையில் வளர்க்கப் பட்டவர்களாதலால், அவர்களால் தங்கள் வாழ்வு முறையை மாற்றிக்கொள்ள இயலவில்லை. அவர்களை என்பால் இழுக்கவும் என்னல் முடியவில்லை. இது அவர்களுடைய தவறன்று. "இயற்கைக் குணத்தை மாற்ற யாரால்தான் முடியும்?" என்று ஒரு முதுமொழியுண்டு. பிறப்புக்கு முன்னலிருந்தே ஏற்பட்டுவிட்ட குணங்களைக் கைவிடுதல் எளிதன்று தான் வளர்ச்சி பெற்ற வழியே தன் புதல்வர்களும், தன் பாதுகாப்பிலுள்ளவர்களும் வளர்ச்சி யுறுவார்களென்று எதிர் பார்ப்பது வீண் ஆசையேயாகும்.

பெற்ரோரா யிருப்பது எவ்வளவு பயங்கரமான பொறுப்பு என்பதை விளக்க இவ்வுதாரணம் ஓரளவு பயன் படுகிறது.

ஆறும் அத்தியாயம்

ஆயிரம் பவுன் நஷ்டம்

என் வாழ்க்கையில் தியாகம், எளிய வாழ்வு முதலான இலட்சியங்கள் நிறைவேற்வும, சமய உணர்ச்சி வலுப்படவும் தொடங்கி நாளுக்கு நாள் அபிவிருத்தி யடைந்து வந்த காலத்தில், சைவ உணவுக் கொள்கையில் பற்றும் அதிகமாகி வந்தது. அக் கொள்கையைப் பரப்புவதில் ஆவல் மிகுந்தது. ஒரு கொள்கையைப் பரப்புவதென்றல் அதற்கு நான் ஒரு வழியையே கடைப்பிடிப்பது வழக்கம். என்னுடைய சொந்த நடத்தையில் அக் கொள்கையை அனுசரிப்பதின் மூலமாகவும், அறிவு வளர்ச்சியில் பற்றுள்ள

வர்களுடன் விவாதிப்பதின் மூலமாகவுமே எந்தக் கொள்கையையும் பரப்பி வருவேன்.

ஜோகானிஸ்பர்க்கில் சைவ போஜன விடுதி ஒன்று இருந்தது. கூன் துரையின் ஜல சிகிச்சை முறையில் நம்பிக்கையுள்ள ஜெர்மானியர் ஒருவர் அதை நடத்திவந்தார். அவ் விடுதிக்கு நான் அடிக்கடி போக ஆரம்பித்தேன். எனது ஆங்கிலேய நண்பர்களையும் அங்கு அழைத்துச் செல்லத் தொடங்கினேன். ஆனால் அது நஷ்டத்திலேயே நடந்து வந்தபடியால் நீண்டநாள் நீடித்திராது என்று கண்டேன். அதற்கு எவ்வளவு தூரம் உதவி செய்யலாமோ அவ்வளவும் செய்தேன். கொஞ்சம் கைப்பணமும் செலவழித்தேன். ஆயினும் கடைசியில் அதை மூடும்படியாகவே ஆயிற்று.

பிரம ஞான சங்கத்தாரில் பெரும்பான்மையோர் சைவ உணவுக்காரர்கள். அச்சங்கத்தில் கொஞ்சம் உற்சாகமுள்ள ஒரு பெண்மணி இருந்தார். அவர் பெரிய ஏற்பாடுகளுடன் சைவபோஜன விடுதி ஒன்றை ஏற்படுத்த முன் வந்தார். அவருக்குக் கலையில் அதிக பிரியம். ஊதாரி குணமுள்ளவர். கணக்கு வைப்பதென்றால் இன்னதென்றே தெரியாது அவருடைய நண்பர்கள் பலர். முதலில் அவர் சிறு அளவிலேயே ஆரம்பித்தார். பின்னர், அவர் அம்முயற்சியை விரிவுபடுத்த விரும்பிப் பெரிய அறைகளை வாடகைக்குப் பிடிக்க விரும்பினார். இதற்காக என்னை உதவி கேட்டார். இவ்வாறு அவர் என்னிடம் வந்தபோது அவருடைய பொருள் நிலையைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அவர் கூறிய வரவு செலவுத் திட்டங்கள் எல்லாம் சரியாயிருக்குமென நம்பினேன். அவருக்கு உதவி செய்யும் சக்தியும் அப்போது எனக்கு இருந்தது. என்னுடைய கட்சிக்காரர்கள் பெருந் தொகைகளை என்னிடம் கொடுத்து வைப்பது வழக்கம்.

அவர்களில் ஒருவருடைய பணத்தில் ஆயிரம் பவுன், அவருடைய சம்மதம்பெற்றுக் கடன் கொடுத்தேன். இந்தக் கட்சிக்காரர் பெருங் குணமுள்ளவர். தென்னாப்பிரிக்காவுக்கு முதலில் ஒப்பந்தக் கூலியாக வந்தவர். என்னிடம் பரிபூர்ண நம்பிக்கை வைத்திருந்தார். ஆதலின் "உங்களுக்கு விருப்பமிருந்தால் தாராளமாய்க் கொடுங்கள். இந்த விஷயம் ஒன்றும் எனக்குத் தெரியாது. எனக்கு உங்களைத் தெரியும், அதுவே போதும்" என்று கூறினார்.

இந் நண்பர் பெயர் பாதாரி. பிற்காலத்தில் இவர் சத்தியாக்கிரஹ இயக்கத்தின் முன்னணியில் நின்று, சிறைவாசமும் அனுபவித்தார். எனவே, அவருடைய சம்மதம் போதுமென எண்ணிக் கடன் கொடுத்தேன்.

மேற்படி தொகை திரும்பி வராதென்று இரண்டு மூன்று மாதங்களில் தெரிந்துபோயிற்று. இவ்வளவு பெரிய நஷ்டம் நான் பொறுக்கக் கூடியதன்று. வேறு எவ்வளவோ காரியங்களுக்கு இத்தொகையை உபயோகப்படுத்தியிருக்கலாம். கடன் திரும்பி வரவேயில்லை. ஆனால் என்னை நம்பிய பாதாரியின் மீது இந்நஷ்டத்தைச் சுமத்துவதெப்படி? அவர் என்னை அறிவாரே யன்றி வேறெதையும் அறியார். எனவே, அந் நஷ்டத்தை நான் ஈடுசெய்தேன்.

இந்த விவகாரத்தைப் பற்றி மற்றொரு கட்சிக்கார நண்பரிடம் கூறினேன். அவர் நட்புரிமையுடன் என் அசட்டுத்தனத்தைக் கண்டித்தார். அதிர்ஷ்ட வசமாக நான் இன்னும் மகாத்மாவாகி விடவில்லை. 'பாபு' (தந்தை)வாகக் கூட ஆகவில்லை. நண்பர்கள் என்னை அன்புரிமையுடன் 'பாய்' (சகோதரர்,) என்று கூப்பிடுவது வழக்கம். அவர் கூறியதாவது:—"பாய்! இது உங்களுக்கழகன்று, எவ்வளவோ

காரியங்களுக்கு உங்களை நம்பியிருக்கிறோம். இந்தப் பணம் திரும்பி வரப் போவதில்லை. பாதாரி நஷ்டமடையும்படி நீங்கள் விடமாட்டீர்களென்று எனக்குத் தெரியும். உங்கள் கையிலிருந்தே கொடுக்கப் போகிறீர்கள். ஆனால் உங்களுடைய சீர்திருத்தத் திட்டங்களுக் கெல்லாம் இப்படியே கட்சிக்காரர் பணத்திலிருந்து செலவழித்து வந்தால் கட்சிக் காரர்கள் அழிந்து போவதுடன் நீங்களும் பிச்சை யெடுக்கும் நிலைக்கு வந்துவிடுவீர்கள். எங்கள் எல்லாருக்கும் நீங்கள் தர்மகர்த்தர். நீங்கள் பிச்சைக் காரரானால் எங்கள் பொது முயற்சி யெல்லாம் நின்றுபோய் விடும்."

இந்நண்பர் இன்னும் உயிர்வாழ்ந்து வருகிறார் என்று சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன். தென்னாப்பிரிக்காவிலும் சரி, வேறெங்கும் சரி, அவரை விடத் தூய்மை பொருந்திய மனிதரை நான் கண்டதில்லை. அவர் எப்போதாவது பிறரைச் சந்தேகித்து, அச்சந்தேகத்துக்கு ஆதாரமில்லை யென்றுகண்டால், மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்வார். இதை நான் பலமுறைகளில் பார்த்திருக்கிறேன்.

இம்முறை, அவர் எனக்கு எச்சரிக்கை செய்தது மிகவும் நியாயமென்று கண்டேன். ஏனெனில், பாதாரியின் நஷ்டத்தை ஈடு செய்து விட்டேனாயினும், அம்மாதிரி நஷ்டம் இன்னும் ஒருமுறை நேர்ந்தால் ஈடு செய்திருக்க முடியாது. கடன் படவேண்டி வந்திருக்கும். என் வாழ் நாளில் நான் கடன் பட்டதே கிடையாது. கடன் படுதலை மனதார வெறுத்து வந்திருக்கிறேன். சீர்திருத்த இயக்கங்களில் உற்சாகத்தினால்கூட ஒருவன் தன் சக்தியை மீறிக் காரியம் செய்யக் கூடாதென உணர்ந்தேன். என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருந்த தொகையைக் கடன் கொடுத்தது, "பயன்

எதிர் பாராது கடமையைச்செய்" என்ற கீதையின் முக்கிய உபதேசத்தை மீறியதாமென அறிந்தேன். இத்தவறு, பிற்காலத்தில் என் வாழ்க்கைக்கே ஓர் எச்சரிக்கையாக இருந்து வந்திருக்கிறது.

சைவ உணவு தர்மத்துக்காக நான் செய்த இத்தியாகம் மனமாரச் செய்ததன்று; எதிர்பாரத்ததுமன்று. வேறு வழி யின்றிச் செய்ததே யாகும்.

ஏழாம் அத்தியாயம்

ஜல சிகிச்சையும் மண் சிகிச்சையும்

என்னுடைய வாழ்க்கை முறை எளியதாகிக் கொண்டு வர வர, மருந்துகளிடம் வெறுப்பும் அதிகமாகி வந்தது. டர்பனில் வக்கீல் தொழில் நடத்தி வந்தபோது நரம்புத் தளர்ச்சி, வாயு சம்பந்தமான எரிச்சல் இவற்றால் பீடிக்கப்பட்டேன். அப்போது டாக்டர் பி. ஜே. மேதா என்னைப் பார்க்க வந்திருந்தார். அவருடைய சிகிச்சை யினால் குணமடைந்தேன். அதன் பின்னர் இந்தியாவுக்குத் திரும்பிய வரையில் எனக்கு எவ்வகை நோயும் வந்ததாக ஞாபகமில்லை.

ஆனால் ஜோகானிஸ்பர்க்கில் இருந்த போது மலச் சிக்கலும், தலை வலியும் என்னைப் பீடித்து வந்தன. தலை வலி அடிக்கடி வரும். அவ்வப்போது பேதி மருந்து உட் கொண் டும், பத்தியமாக உணவு அருந்தியும், படுக்கையில் விழுந்து விடாமல் தப்பித்து வந்தேன். ஆனால் பூரண சௌக்கியமாய் இருந்தேனென்று சொல்ல முடியாது. பேதி மருந்து களுக்கு எத்தனை நாள் அடிமையா யிருப்பது என்று அடிக் கடி யோசிப்பதுண்டு.

இக்காலததில் தான், மான்செஸ்டர் நகரில் "காலை உணவு மறுப்புச் சங்கம்" என்று ஒரு சங்கம் ஏற்பட்டிருப்பதைப் பற்றிப் படிக்க நேர்ந்தது. ஆங்கிலேயர் அதிக வேளையும், அதிக அளவும் உணவருந்துகிறார்களென்றும், நடு நிசி வரை உணவருந்துவதினாலேயே வைத்தியர்களுக்குப் பணம் ஏராளமாய்க் கொடுக்கவேண்டி யிருக்கிறதென்றும், இந்நிலைமையில் அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் காலை யுணவையாவது விட்டு விடுதல் அவசியம் என்றும் இச்சங்கத்தினர் சொன்னார்கள். இவ்வழக்கங்கள் எல்லாம் என்னிடம் இல்லையாயினும், அவர்களுடைய கொள்கை ஓரளவு எனக்கும் பொருந்தும் என்று தோன்றிற்று. தினந்தோறும் மூன்று முறை நல்ல சாப்பாடும், மாலையில் ஒரு முறை தேயிலைப் பானமும் நான் அருந்துவது வழக்கம். எப்போதும் குறைவாகச் சாப்பிடுவது கிடையாது. சைவ உணவாயும், தாளிதம் இல்லாமலும் மட்டும் இருந்து விட்டால், எவ்வளவு வகைப் பதார்த்தங்கள் கிடைத்தாலும் வஞ்சனையின்றிச் சாப்பிடுவேன். காலையில் ஆறு அல்லது ஏழு மணிக்கு முன்னால் எழுந்திருப்பதில்லை. எனவே, காலை யுணவை நிறுத்தி விட்டால் தலை வலி போய் விடலாமென்று எண்ணினேன். அவ்வாறே செய்து பார்த்தேன். சில நாளைக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் தலை வலி அறவே நின்று விட்டது. இதிலிருந்து தேவைக்கு அதிகமாக நான் உணவருந்தி வந்ததாக முடிவு செய்தேன்.

ஆயினும், உணவில் இம்மாறுதலால் மலச் சிக்கல் நிவர்த்தியாகவில்லை. டாக்டர் கூன் முறைப்படி ஆசன ஸ்நானம் செய்து பார்த்தேன். சிறிது குணந் தெரிந்ததாயினும், முற்றும் நிவர்த்தியாகவில்லை. இதற்கிடையில், சைவ

போஜன விடுதி வைத்த ஜெர்மானியரோ, வேறு நண்பர் ஒருவரோ, "இயற்கைக்குத் திரும்புதல்" என்னும் புத்தகத்தை எனக்குப் படிக்கக் கொடுத்தார். அது ஜஸ்ட் என்பவரால் எழுதப்பட்டது. மண் சிகிச்சையைப் பற்றி அதில் கூறப்பட்டிருந்தது. புதிய பழங்களும், கொட்டைகளுமே மனிதனுடைய இயற்கை உணவு என்றும் அவர் கூறியிருந்தார். இதைப் படித்தவுடன், கனிகள் மட்டுமே அருந்தும் விரதம் நான் தொடங்கி விடவில்லை. ஆனால் மண் சிகிச்சையை உடனே சோதித்துப் பார்த்தேன். அதன் பயனைக் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தேன். மண் சிகிச்சையாவது: சுத்தமான மண்ணைக் குளிர்ந்த தண்ணீரில் நனைத்து, மெல்லிய துணியில் பரப்பி அதை அடிவயிற்றில் கட்டிக் கொள்வதேயாகும். படுக்கப் போகும்போது இப்படிக் கட்டிக்கொண்டு படுப்பேன். இரவில் விழித்துக் கொள்ளும்போதோ அல்லது காலையில் எழுந்திருக்கும் போதோ அதைஎடுத்து விடுவேன். இதனால் மலச் சிக்கல் அடியோடு என்னை விட்டு நீங்கியது. அதிலிருந்து அச் சிகிச்சையை நான் அடிக்கடி கையாண்டு வந்ததுடன், என்னுடைய நண்பர்களுக்கும் அதையே கையாளும்படி சொல்லி வந்திருக்கிறேன். இது குறித்து நான் எப்போதும் வருந்தும்படி நேர்ந்ததில்லை. ஆனால் இந்தியாவில் அவ்வளவு நம்பிக்கையுடன் நான் இச் சிகிச்சையைக் கையாண்டு பார்த்ததில்லை, ஏனெனில், இங்கு ஓரிடத்தில் உட்கார்ந்து சோதனைகள் நடத்த எனக்குச் சாவகாசம் கிடையாது. ஆயினும் மண் சிகிச்சை, ஜல சிகிச்சைகளில் என்நம்பிக்கை இன்றளவும் குறைவுபடவே யில்லை. ஓரளவு இன்றும் மண் சிகிச்சையைக் கையாண்டு வருகிறேன். சந்தர்ப்பம் நேரும்

போது என் சகாக்களுக்கும் அதைக் கையாளும்படி சொல்லி வருகிறேன்.

என் வாழ் நாளில் இருமுறை கடுமையான நோய்களுக்கு ஆளாகி யிருக்கிறேனாயினும், மனிதனுக்கு மருந்து தின்னுதல் அவசியமே யில்லை யென்று உறுதிகொண்டிருக்கிறேன். ஆயிர நோய்களில் 999, உணவை ஒழுங்குபடுத்திக்கொள்வதாலும், ஜல சிகிச்சை, மண் சிகிச்சை முதலிய குடும்ப வைத்திய முறைகளாலுமே குணப்படுத்தக் கூடியன. ஒவ்வொரு சிறு நோய்க்கும் டாக்டரையோ, வைத்தியரையோ, ஹக்கீமையோ தேடிச் சென்று எல்லா வகை மருந்துகளையும் விழுங்குபவர்கள். தங்கள் ஆயுளைக் குறைத்துக் கொள்வதோடு, தத்தம் உடலுக்கு எஜமானர்களா யிருப்பதற்குப் பதிலாக அவற்றின் அடிமைகளாகி, புலனடக்க மிழந்து, மனிதர் தன்மையினின்றும் நீங்குகிறார்கள்.

நான் நோய்வாய்ப் பட்டிருக்கும் நிலையில் இதை எழுதுங் காரணத்தினால், யாரும் அலட்சியம் செய்யலாகாது. என் நோய்களின் காரணங்களை நான் நன்கறிவேன். அவற்றிற்கு நானே பொறுப்பாளி யாவேன். இவ் வுணர்வினால்தான் நான் இன்னும் பொறுமை இழக்கவில்லை. உண்மையில் அவை ஆண்டவன் எனக்களித்த பாடங்கள் என்று எண்ணி பகவானுக்கு நன்றி கூறி யிருக்கிறேன். பல முறைகளில் மருந்துண்ணும் ஆசையுடன் போராடி வெற்றி பெற்றிருக்கிறேன். சில சமயங்களில் என் பிடிவாதம் டாக்டர்களால் பொறுக்க முடியாமற் போகிறது என்பதை அறிவேன். அவர்கள் என்னிடம் வைத்த அன்பினால்தான் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு என்னை கைவிடா திருக்கிறார்கள்.

எட்டாம் அத்தியாயம்

ஓர் எச்சரிக்கை

இவ்வத்தியாயத்திலும் சரிதத் தொடர்ச்சியை விட்டு வேறு விஷயங்களைப் பற்றி எழுதவேண்டியவனு யிருக்கிறேன். மண் சிகிச்சையில் சோதனை நடத்திக்கொண் டிருந்த காலத்திலேயே, உணவுப் பரிசோதனைகளும் நடத் திக்கொண்டிருந்தேன். இவ் விருவகைச் சோதனைகளைப் பற்றியும் பின்னல் குறிப்பிடவேண்டி யிருக்குமாயினும், உணவுப் பரிசோதனைகளைப் பற்றி இங்கே சில மொழிகள் கூறுதல் பொருத்தமற்றதாகாது.

ஆனல் அவ்விஷயமாக இந்நூலில் நான் விரிவாக எழுதப் போவதில்லை. பல வருஷங்களுக்கு முன்பே குஜராத்தியில் எழுதிய சில கட்டுரைகளில் அச்சோதனை களைப் பற்றி விவரித்துள்ளேன். அக்கட்டுரைகள் "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகையில் வெளியாயின. பின்னர் அவைகளே "ஆரோக்கிய வழி" என்ற பெயருடன் புத்தக வடிவில் வெளியிடப்பட்டன. என்னல் எழுதப்பட்ட சிறு நூல்களுள் மேனுட்டிலும் சரி, கீழ் நாட்டிலும் சரி, மிகப் பலரால் படிக்கப்பட்ட புத்தகம் இதுவே யாகும். இதன் இரகசியம் இன்ன தென்று இன்றளவும் நான் கண்டு பிடிக்க முடியவில்லை. "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகையின் நேயர்களுக் கென்றே அது எழுதப்பட்டது. ஆனல் மேனுட்டாரிலும், கீழ் நாட்டாரிலும் அப்பத்திரிகையைக் கண்ணுலும் பார்த்திராத அநேகருடைய வாழ்வு முறையை அது பெரி தும் மாற்றியமைத்து விட்டது என்று நான் அறிவேன். அவர்கள் இவ்விஷயமாக என்னுடன் கடிதப் போக்கு வரவு

ஆனல், எடுத்த விஷயத்தை விட்டு நெடுந்தூரம் போகக் கூடாது. மேலே கதையைத் தொடர்வதற்கு முன் வாசகர் களுக்கு ஓர் எச்சரிக்கை செய்யவேண்டுவது அவசிய மாகும். இந்த அத்தியாயத்தைப் படித்துவிட்டு, ஜஸ்ட் என் பார் எழுதிய புத்தகம் வாங்குபவர்கள், அதிலுள்ள எல்லா வற்றையும் வேத வாக்காக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஓர் ஆசிரியர் ஒரு விஷயத்தின் ஓர் அம்சத்தைப் பற்றியே தான் அநேகமாக எழுதுவார். ஆனல் ஒவ்வொரு விஷயத் தையும் வெவ்வேறு எழு நிலையிலிருந்து நோக்குதல் சாத்தி யம். ஏழுபேர் ஒரு விஷயத்தின் ஏழு அம்சங்களைப்பற்றி எழுதினல் தனித்தனியே ஒவ்வொன்றும் சரியாயிருக்கலாம். ஆனல் ஒரே சமயத்தில் ஒரே வகையான சந்தர்ப்பங்களில் அவை யெல்லாம் சரியாயிருக்க முடியாது. மேலும் பல புத்தகங்கள், நிறைய விற்கவேண்டுமென்னும் நோக்கத்துட னும், பெயர், புகழ்தேடும் நோக்கத்துடனும் எழுதப்படு கின்றன. ஆதலின் இத்தகைய புத்தங்களைப் படிப்போர் தங்கள் பகுத்தறிவை உபயோகித்துப் படிக்க வேண்டும் சோதனைகள் எதுவும் செய்யத் தொடங்குவதற்கு முன்னல் அநுபவசாலியான ஒருவரிடம் ஆலோசனை கேட்கவேண் டும். அல்லது புத்தகத்தைப் பொறுமையுடன் நன்ருகப் படித்து மனதில் வாங்கிக்கொண்டு அதன்பின்னரே அதில் குறிப்பிட்டுள்ள வினைகளைத் தொடங்க வேண்டும்.

நடத்தி வருகிறார்கள். ஆதலின் அப் புத்தகத்தைப்பற்றி இங்கே சிறிது கூறுவது அவசியமாயிற்று. அதிலே நான் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களை எள்ளளவும் மாற்றுவ தற்குக் காரணம் எதுவும் எனக்குப் புலப்படவில்லை யாயினும், எனது நடை முறையில் சில முக்கியமான மாறுதல்களைச்செய்து விட்டேன். புத்தகம் படித்தவர்கள் எல்லாரும் அம்மாறுதல்களைப் பற்றி அறியார்களாதலின், அவற்றை இங்கே குறிப்பிடுதல் அவசியமென்று கருது கிறேன்.

நான் எழுதுவன எல்லாம் ஆன்மார்த்த நோக்கத்துட னேயே எழுதுகின்றேன். என்னுடைய செயல் ஒவ்வொன் றும் அத்தகைய நோக்கங்கொண்டதே யாகும். மேற் கூறிய நூலும் அந் நோக்கத்துடனேயே எழுதப்பட்டது. ஆதலின் அப்புத்தகத்தில் கூறியுள்ள சில சித்தாந்தங்களை வாழ்க்கையில் அனுசரிக்க முடியாதிருப்பது எனக்கு அள வற்ற மனத்துயரை யளிக்கிறது.

மனிதன் குழந்தையா யிருக்கும்போது அருந்தும் தாய்ப்பாலையன்றி வேறு பால் எதுவும் அருந்த வேண்டுவ தில்லை யென்பது என் உறுதியான கொள்கையாகும். வெயி லினால் பக்குவமான பழங்கள், கொட்டைகள் இவற்றை யன்றி மனிதன் வேறு உணவு அருந்தலாகாது. திராட்சை யைப் போன்ற பழங்களிலிருந்தும், வாதாமியைப் போன்ற கொட்டைகளி லிருந்தும் தசைக்கும், நரம்புக்கும் வேண் டிய போஷணையை அவன் பெறலாம். இத்தகைய உண வருந்தி வாழ்பவனுக்கு, காமம் முதலிய தீக்குணங்களை அடக்குதல் எளிதா யிருக்கும். "மனிதன் எதை உண்ணு கிறானோ அதுபோலவே ஆகிறான்" என்னும் பழமொழியில் நிரம்ப உண்மை யுண்டென்று நானும் என் சகாக்

களும் அநுபவத்திலிருந்து அறிந்திருக்கிறேம். இக்கருத்துக்கள் மேற்படி புத்தகத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இந்தியாவிற்கு வந்த பின், நடை முறையில், என் கொள்கைகள் சிலவற்றை நானே மறுக்கும்படி நேர்ந்திருக்கிறது. ஐரோப்பிய மகா யுத்தத்துக்கு ஆள் திரட்டும் வேலையில் ஈடுபட்டிருந்த போது, உணவில் சிறிது முறை பிறழ்ந்து விட்டதன் பயனால் நோய் வாய்ப்பட்டு நமனுடன் மன்றாடும் நிலைக்கு வந்து விட்டேன். இதனால் பெரிதும் மெலிந்து போன உடம்பைப் பால் அருந்தாமலே தேற்றிக் கொள்ள முயன்றேன். எனக்குத் தெரிந்த டாக்டர்கள், வைத்தியர்கள், பௌதிக சாஸ்திரிகள் அனைவரையும் பாலுக்குப் பதிலாய் அதைப் போல் சத்துள்ள பொருளொன்றைத் தெரிந்து சொல்லும்படி வேண்டிக் கொண்டேன். வாதாங்கொட்டைப் பால் முதலிய சிலவற்றைச் சிலர் குறிப்பிட்டார்கள். இவற்றைப் பரிசோதனை செய்து என் உடல் நிலையை இன்னும் கேவலமாக்கிக் கொண்டேனே யல்லாமல், நோய்ப் படுக்கையினின்று எழுந்திருக்க வழியைக் காணேன். வைத்தியர்கள் சாரகரின் வைத்திய சாஸ்திரத்திலிருந்து சுலோகங்களைப் படித்துக் காட்டினார்கள். நோயாளிக்கு உணவு கொடுக்கும் விஷயத்தில் மதக் கோட்பாடுகளைக் கவனிக்கக் கூடாது என்று அவை கூறின. எனவே பாலருந்தாமல் வாழ்க்கை நடத்துவதற்கு அவர்கள் எனக்கு உதவி செய்தல் எங்ஙனம்? அல்லது, பிராந்தியும், மாட்டிறைச்சியும் அருந்தும்படி தயக்கமின்றி யோசனை சொன்ன ஆங்கில டாக்டர்கள் தான் எனக்கு இவ்விஷயத்தில் எப்படி உதவி செய்வார்கள்?

பசுவின் பாலாவது, எருமைப் பாலாவது அருந்துவ தில்லை யென்று நான் விரதம் பூண்டிருந்தேன். இவ்விரதத்தின் கருத்து எந்தப் பாலும் அருந்தக் கூடாது என்பதே யாகும். ஆனால் விரதம் எடுத்துக் கொண்டபோது பசுவும், எருமையுமே என் நினைவில் இருந்தபடியாலும், இப்போது நான் உயிர் வாழ விரும்பிய படியாலும் எப்படியோ மனதைத் திருப்தி செய்து கொண்டு ஆட்டின் பால் அருந்துவதென்று தீர்மானித்தேன். இவ்வாறு ஆட்டுப் பால் அருந்தத் தொடங்கியபோது வெளிப்படையாக விரதத்தைக் காப்பாற்றினேன் என்றாலும், உண்மையில் விரத பங்கம் செய்து விட்டேனென்று உணர்ந்தே யிருந்தேன்.

அப்போது, ரவ்லட் சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்த வேண்டுமென்னும் எண்ணம் என்னைப் பற்றி யிருந்தது. இதனால் உயிர் வாழ வேண்டுமென்னும் ஆசையும் மிகுந்தது. இவ்வாசைய காரணமாய், என் வாழ்க்கையில் மிகப் பெரிய சோதனைகளில் ஒன்று இடையில் தடைப்படலாயிற்று.

"உண்ணல், குடித்தலுக்கும், ஆன்மாவுக்கும் சம்பந்தமில்லை. ஆன்மா உண்பதுமில்லை; குடிப்பதுமில்லை. வெளியிலிருந்து உள்ளே செல்வது எது என்பது முக்கியமன்று. உள்ளிருந்து வெளியே வருவனவாகிய பேச்சும், நடக்கையுமே பிரதானம்" என்பது போன்ற வாதங்களை நான் அறிவேன். இவ் வாதத்தில் ஓரளவு பொருளுண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இது குறித்து நான் விவாதிக்கப் போவதில்லை. என்னுடைய உறுதியான அபிப்பிராயத்தைக் கூறிவிட்டுத் திருப்தியடைவேன். அதாவது:—பகவானுக்குப் பயந்து நடந்து, அவரை நேருக்கு நேர் காண

விரும்புவோனுக்கு, எண்ணத்தையும், பேச்சையும் கட்டுப் படுத்தல் எவ்வளவு அவசியமோ அவ்வளவு உணவின் தன்மையிலும் அளவிலும் கட்டுப்பாடு செய்தல் அவசிய மாகும்.

ஆனால் என்னுடைய சித்தாந்தத்தை நானே நடத்திக் காட்ட முடியாதிருக்கும் ஒரு விஷயத்தில், அதைத் தெரி விப்பதோடு எச்சரிக்கை செய்யவும் நான் கடமைப் பட்டிருக்கிறேன். என் சித்தாந்தத்தின் பலத்தைக்கொண்டு பாலருந்துவதை நிறுத்தியவர்கள், அதனால் அவர்களுக்கு எல்லா வகையிலும் நன்மை உண்டாயிருந்தாலன்றி அச் சோதனையை விட்டு விடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அல்லது அநுபவமுள்ள வைத்தியர்களின் ஆலோசனை கேட்க வேண்டும். இதுவரையில் என்னுடைய அநுபவத்தி னால் நான் தெரிந்துகொண்டிருப்பது என்ன வென்றால், ஜீரண சக்தி குறைவானவர்களுக்கும், படுத்த படுக்கையா யிருப்பவர்களுக்கும், பாலைப்போல் எளிதில் செரிக்கக் கூடியதும், சத்துள்ளதுமான உணவு வேறில்லை யென்பதே யாகும்.

இவ் வத்தியாயத்தைப்படிப்பவர்களில் அநுபவமுள்ள வர்கள் யாரேனும், பாலைப்போல் எளிதில் ஜீரணிக்கக் கூடியதும், சத்துள்ளதுமான தாவர உணவுப் பொருளை அறிந்திருந்து எனக்கு எழுதித் தெரிவித்தால், மிக நன்றி யுள்ளவனா யிருப்பேன். ஆனால் அது புத்தகத்தில் படித்துத் தெரிந்து கொண்டதாயிராமல் சொந்த அநுபவத்தில் அறிந் ததா யிருக்கவேண்டும்.

ஒன்பதாம் அத்தியாயம்

அதிகாரிகளுடன் சிறு போர்

இனி, ஆசிய இலாகாவுக்குத் திரும்புகிறேன். ஜோகானிஸ்பர்க் நகரந்தான் ஆகிய இலாகா உத்தியோகஸ்தர்களின் கோட்டை. இவ் வுத்தியோகஸ்தர்கள், இந்தியர், சீனர் முதலிய ஆசியாக்காரர்களைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக அவர்களை நசுக்கிப் பிழிந்துகொண்டிருந்ததை நான் பார்த்து வந்தேன். "நியாயமாக உரிமை யுள்ளவர்களுக்கு (டிரான்ஸ்வாலுக்கு வர) அநுமதி கிடைப்பதில்லை. உரிமை யில்லாதவர்கள் 100 பவுன் லஞ்சம் கொடுத்தால் திருட்டுத் தனமாய் உள்ளே கொண்டுவரப் படுகிறார்கள். இந்த அநியாயத்துக்கு நீங்கள் பரிகாரந் தேடவில்லை யென்றால் வேறு யார் தேடுவது?"—இம்மாதிரி முறையீடுகள் தினந்தோறும் வந்து கொண்டிருந்தன. எனக்கும் இத்தகைய உணர்ச்சி ஏற்பட்டது. இந்தத் தீமையைத் தொலைக்க முயன்று வெற்றி பெறாவிடில் நான் டிரான்ஸ்வாலில் வசிப்பதால் யாது பயன் என்று சிந்திக்கலானேன்.

எனவே, மேற் கூறிய அநீதிகளுக்கு சாட்சியங்கள் சேகரிக்கத் தொடங்கினேன். போதிய அளவு சேகரமானதும் போலீஸ் கமிஷனரிடம் சென்றேன். அவர் நீதிமானாகக் காணப்பட்டார். என்னை அலட்சியமாய்ப் புறக்கணிப்பதற்கு மாறாக, பொறுமையுடன் நான் கூறியவற்றிற்குச் செவி கொடுத்து, என் வசமிருந்த சாட்சியங்கள் எல்லாவற்றையும் காட்டும்படி கேட்டார். சாட்சிகளை அவரே நேரில் விசாரித்துத் திருப்தி செய்துகொண்டார். ஆனால் தென்னாப்பிரிக்காவில், வெள்ளைக்காரர் மீது கறுப்பு மனிதர் தொடுக்கும் வழக்குகளில், வெள்ளைக்கார ஜூரிகள் குற்ற

வாளியைத் தண்டித்தல் எவ்வளவு கஷ்ட மென்பதை என்னைப் போலவே அவரும் உணர்ந்திருந்தார். அவர் கூறியதாவது:—"நம்மாலியன்றவரை முயன்று பார்ப்போம் ஜூரிகள் விடுதலை செய்து விடுவார்களோ வென்று பயந்து இத்தகைய குற்றவாளிகளைச் சும்மா விட்டு விடக் கூடாது. அவர்களைக் கைது செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். என்னுடைய முயற்சியில் எதுவும் பாக்கி வைப்பதில்லை. நீங்கள் உறுதியாக நம்பலாம்."

உத்தியோகஸ்தர்கள் பலரை நான் சந்தேகித்தேனாயினும், எல்லார் விஷயத்திலும் போதிய சாட்சியமில்லை. எனவே, சிறிதும் ஐயமின்றிக் குற்றவாளிகள் தான் என்று எனக்கு நிச்சயமாய்த் தோன்றிய இருவர் மீது மட்டும் வாரண்டு பிறப்பிக்கப்பட்டது.

நான் செய்வ தெதையும் மூடு மந்திரமாகச் செய்வதில்லை. தினந்தோறும் போலீஸ் கமிஷனரிடம் போய் வருகிறே னென்பதைப் பலர் அறிந்திருந்தார்கள். வாரண்டு பிறப்பிக்கப்பட்ட இரண்டு உத்தியோகஸ்தர்களும் திறமையுள்ள ஒற்றர்களை வைத்திருந்தனர். இவ் வொற்றர்கள் என் காரியாலயத்தைக் காவல் புரிந்து என்னுடைய போக்கு வரவுகளை அவர்களுக்கு அறிவிப்பது வழக்கம். ஆயினும் அவ் வுத்தியோகஸ்தர்கள் மிகப் பொல்லாதவர்க ளாதலால், அவர்களின் கீழ் ஒற்றர்கள் பலர் இருந்திருக்க மாட்டார்களென்றே நினைக்கிறேன். இந்தியர்களும், சீனர்களும் எனக்கு உதவி செய்திராவிடில் அவ் வுத்தியோகஸ்தர்களைக் கைது செய்திருக்க முடியாது.

இவர்களில் ஒருவர், வாரண்டு பிறந்த செய்தியறிந்ததும், ஓடி ஒளிந்து விட்டார். போலீஸ் கமிஷனர்,

வேறு மாகாணத்திலும் செல்லக்கூடிய வாரண்டு பிறப்பித்து, அவரைத் தேடிப் பிடித்து டிரான்ஸ்வாலுக்குக் கொண்டுவந்தார். விசாரணை நடந்தது. குற்றத்தைநிரூபிக்கப் பலமான சாட்சியம் இருந்ததுடன், அவர்களில் ஒருவர் ஓடி ஒளிந்து கொண்டதும் ஜூரிகளுக்குத் தெரிந்திருந்தது எனினும் அவ்விருவரும் குற்றவாளிகள் அல்லவென்று தீர்ப்புக் கூறப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அளவில்லாத ஏமாற்றமடைந்தேன். போலீஸ்கமிஷனரும் நிரம்ப வருத்தப்பட்டார். வக்கீல் தொழில்மீது எனக்கு அப்போது தான் பெரும் வெறுப்பு ஏற்பட்டது. குற்றத்தை மறைப்பதற்கு ஒருவனுடைய புத்திக் கூர்மையை உபயோகப் படுத்தலா மென்று கண்டேன். எனவே. புத்தியினிடமே எனக்கு அருவருப்பு உண்டாயிற்று.

வழக்கு இப்படி முடிந்ததாயினும், அவ் வுத்தியோகஸ்தர்களின் குற்றம் மிகவும் வெளிப்படையா யிருந்தபடியால், அரசாங்கத்தார் அவர்களை உத்தியோகத்தில் வைத்திருக்க முடியவில்லை. இருவரும் தள்ளப்பட்டனர். ஆசிய இலாகா ஓரளவு தூய்மை யடைந்தது. இந்திய சமூகமும் சிறிது தைரியம் பெற்றது.

இந் நிகழ்ச்சியினால் எனக்கு மதிப்பு அதிகமாயிற்று என் தொழிலும் வளர்ச்சி யடைந்தது. இந்தியர்கள் மேற்படி இலாகாவின் சூதாட்டத்தில் தொலைந்துக்கொண்டிருந்த பணத்தில் பெரும் பகுதி மீதமாயிற்று. அயோக்யர்கள் இன்னும் தங்கள் தொழிலை நடத்திக் கொண்டிருந்தபடியால், முழுப் பணமும் மீதியாகவில்லை. ஆனால் யோக்யர்கள் தங்கள் யோக்யப் பொறுப்பைக் காப்பாற்றிக் கொள்வது இப்போது இயல்வதாயிற்று.

இவ் வுத்தியோகஸ்தர்கள் இவ்வளவு கெட்டவர்களா யிருந்தார்களாயினும். அவர்கள் மீது தனிப்பட எனக்கு துவேஷம் சிறிதும் இல்லையென்று சொல்வேன். அவர்களும் இதை யறிந்திருந்த படியால் தங்களுக்குக் கஷ்டம் நேர்ந்த போது என்னுடைய உதவியைக் கோரினர்கள். அவர் களுக்கு உதவியும் செய்தேன். நான் எதிர்க்காமலிருந்தால், ஜோகானிஸ்பர்க் நகர சபையில் அவர்களுக்கு உத்தியோகம் கிடைக்க வழி யிருந்தது. அவர்களுடைய நண்பர்களில் ஒரு வர் இது சம்பந்தமாக என்னை வந்து பார்த்தார். நான் குறுக்கே நிற்பதில்லை யென்று வாக்களித்தேன். அவர்க ளுக்கு உத்தியோகம் கிடைத்தது.

இந்த மனப்பான்மை காரணமாக, என்னுடன் பழக நேர்ந்த உத்தியோகஸ்தர்கள் என்னிடம் விரோத பாவம் கொள்ளவில்லை. அவர்களுடைய இலாகாவை நான் எதிர்த் துச் சண்டை போட்டாலும், கடு மொழிகளை உபயோகித் தாலும், அவர்கள் என்னிடம் சிநேக பாவத்துடனேயே இருந்தனர். இத்தகைய நடக்கை என்னுடைய இயற்கை யில் படிந்தது என்பது அப்போது தெளிவாய் எனக்குப் புலப்படவில்லை. பிற்காலத்தில். அது சத்தியாக் கிரஹத்தின் ஒரு முக்கிய அம்சமென்றும், அஹிம்ஸையின் இயல்பு அது தான் என்றும் அறிந்தேன்.

மனிதன் வேறு, அவனுடைய செயல் வேறு என்பதை சத்தியாக்கிரஹி நன்கு அறிந்து கொள்ள வேண்டும் நற்செயலைப் பாராட்டுதலும், தீச் செயலைக் கண்டித்தலும் முறையே யாகும். ஆனால் நற் செயல் புரியும் மனிதன் மரியாதைக்கும், தீச் செயல் புரிவோன் இரக்கத்துக்குமே உரியவனாகிறான். "பாவத்தைப் பகை; பாவியைப் பகையாதே" என்னும் உபதேசத்தை அறிந்து கொள்ளுதல்

மிக எளிது. ஆனால் நடை முறையில் அவ்வுபதேசத்தைக் கடைப் பிடித்தல் மிக அரிதா யிருக்கிறது. பகைமை என்னும் நஞ்சு உலகில் பரவுவதற்குக் காரணம் இது தான்.

சத்தியத் தேட்டத்தின் அடிப்படை இந்த அஹிம்சையே யாகும். அஹிம்சையை அடிப்படையாகக் கொள்ளாதவரை அத்தேட்டம் பயனற்றதே யாகுமென்று தினந்தோறும் நான் நன்குணர்ந்து வருகிறேன். ஓர் ஏற்பாடு அல்லது காரிய முறை தீயதானால், அதை எதிர்த்துத் தாக்குதல் முற்றும் நியாயமான காரியம். ஆனால் அம்முறையை ஏற்படுத்திய மனிதனைத் தாக்குதல் தன்னையே தாக்கிக் கொள்வதாகுமே யன்றி வேறில்லை. ஏனெனில் நாம் எல்லாரும் ஒரு மண்ணில் செய்த பாண்டங்களே யாவோம். ஒரே கடவுளின் புதல்வர்களாதலால் நம்மிடத்திலுள்ள தெய்வீக சக்திகளும் மகத்தானவை. ஒரு மனிதனை அலட்சியம் செய்தாலும், அத் தெய்வீக சக்திகளை அலட்சியம் செய்வதே யாகும். இதனால் அம்மனிதனுக்கு மட்டுமன்றி உலக முழுவதற்கும் தீங்கு செய்தவர்களாவோம்.

பத்தாம் அத்தியாயம்

ஒரு புனித ஞாபகம்

என் வாழ்க்கையில் நிகழ்ந்த பற்பல சம்பவங்கள், பல மதத்தினரோடும் வகுப்பினரோடும் நான் நெருங்கிப் பழகுவதற்கு ஏதுக்களாயின. இவ்வாறு பலருடனும் பழகிய அநுபவத்திலிருந்து நான் ஒன்று உறுதியாகக் கூற முடியும். அது என்னவெனில், உறவினர்-வேற்று மனிதர், சொந்த நாட்டார் - அந்நியர், வெள்ளைக்காரர் - கறுப்பு

மனிதர், ஹிந்துக்கள்-முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள் முதலிய பிற மதத்தினர் என்ற வேற்றுமை உணர்ச்சி நான் எக்காலத்திலும் பாராட்டியதே கிடையாது என்பதாம். இத்தகைய வேற்றுமை பாராட்டும் சக்தியே என் இதயத்துக்கு இல்லையென்று சொல்லிவிடலாம். இதை என்னிடமுள்ள விசேஷ நற்குணங்களில் ஒன்ருக நான் சொல்லிக் கொள்வதற்கில்லை. ஏனெனில் அது நான் முயன்று தேடிப் பெற்றதன்று; என் இயற்கையில் தானுகவே அமைந்த குணமாகும். இது போலன்றி, அஹிம்ஸை, பிரமசரியம், அபரிக்ரஹம் முதலிய மூல தர்மங்களைப் பின் பற்றுவதற்காக நான் இடைவிடாத முயற்சி செய்து வந்தேன் என்று சொல்லவேண்டும்.

டர்பனில் வக்கீல் தொழில் நடத்திக் கொண்டிருந்த போது என்னுடைய காரியாலய குமாஸ்தாக்கள் பெரும் பாலும் என்னுடன் தங்கி யிருப்பது வழக்கம். அவர்களில் ஹிந்துக்களும், கிறிஸ்தவர்களும் இருந்தார்கள். மாகாண வாரியாகப் பிரித்துச் சொல்வதெனில், குஜராத்திகளும், தமிழர்களும் இருந்தனர். என்னுடைய நெருங்கிய உறவினராகவன்றி அவர்களை வேறுவிதமாக எண்ணியதாய் எனக்கு ஞாபகமேயில்லை. அவர்களை என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக நடத்தி வந்தேன். இதற்கு என் மனைவி எப்போதேனும் குறுக்கே நின்ருல் அப்போது எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்படும்.

என்னுடைய வீடு மேனுட்டு முறையில் கட்டப்பட்டிருந்தது. ஆதலின் அதன் அறைகளிலிருந்து அழுக்குத் தண்ணீர் வெளியே போவதற்கு சாக்கடைகள் அமைக்கப் படவில்லை. அறைகளில் இவ்வாறு சாக்கடை வைத்தல் கூடாது தான். எனவே, ஒவ்வோர் அறையிலும் அழுக்கு

நீர்ப் பாண்டம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இப் பாண்டங்களைச் சுத்தம் செய்வதற்கு வேலைக்காரன் வைப்பதற்குப் பதிலாக நானும், என் மனைவியுமே அவற்றைச் சுத்தம் செய்து வந்தோம். வீட்டில் கொஞ்ச காலம் இருந்து பழகிவிட்ட குமாஸ்தாக்கள், அவரவர்கள் உபயோகித்த பாண்டங்களை அவரவர்களே சுத்தம் செய்து வந்தார்கள். இங்ஙன மிருக்கையில் புதிதாக ஒரு கிறிஸ்தவ குமாஸ்தா வந்து சேர்ந்தார். அவருடைய பெற்றோர்கள் பஞ்சமர்கள். புதிதாய் வந்தவராதலின் அவருடைய படுக்கை யறையைச் சுத்தம் செய்தல் எங்களுடைய கடமையாயிருந்தது. என் மனைவி, மற்றவர்களுடைய பாண்டங்களைச் சுத்தம் செய்வதில் எவ்வித ஆட்சேபமும் கூறியது கிடையாது. ஆனால் பஞ்சமனாயிருந்த ஒருவரின் பாண்டத்தைச் சுத்தம் செய்யவேண்டி வந்தபோது அவளால் பொறுக்க முடியாமல் போயிற்று. இதன் பயனாக எங்களுக்குள் மனஸ்தாபம் விளைந்தது. நான் பாண்டங்களை சுத்தம் செய்வதும் அவளால் சகிக்கக் கூடவில்லை. அவளுக்கும் செய்யப் பிரியமில்லை. கோபத்தினால் சிவந்த கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பெருக, அக்கோபப் பார்வையினாலேயே என்னைக் கடிந்தவளாய் கையில் பாண்டத்துடன் அவள் ஏணியின் வழியே இறங்கி வந்த காட்சி இப்போதும் என் மனக் கண் முன் நிற்கிறது. என் மனைவியிடம் நான் வைத்திருந்த அன்பு மிகக் குரூரமான வகையைச் சேர்ந்தது. என்னை அவளுடைய உபாத்தியாயனாகக் கருதி யிருந்தேன் எனவே அவளிடம் எனக்கிருந்த குருட்டுத்தனமான அன்பின் காரணமாக அவளைப் பெரிதும் உபத்திரவப் படுத்தினேன்.

அவள் பாண்டத்தைத் தூக்கிச் சென்றதனாலேயே நான் திருப்தி யடையவில்லை. அதை அவள் சந்தோஷத்துடன் செய்ய வேண்டுமென்று விரும்பினேன். எனவே, உரத்த சத்தம் போட்டு, "என்னுடைய வீட்டில் இம்மாதிரி மூடத்தனத்தைப் பொறுக்க முடியாது" என்றேன்.

அம்மொழிகள் கூறிய அம்புபோல் அவள் இதயத்தில் தைத்தன.

"உங்கள் வீட்டை நீங்களே வைத்துக்கொண்டு என்னைத் தொலைத்து விடுங்கள்" என்று அவள் கூச்சலிட்டாள். அப்போது என்னை நானே மறந்து விட்டேன். என் இதயத்திலிருந்த இரக்க ஊற்று வற்றிப் போயிற்று. அவளுடைய கையைப் பிடித்து ஏணிக்கு எதிரேயிருந்த வாயிற்படிக்கு இழுத்துக்கொண்டு போனேன். வெளியே தள்ளுவதற்காகக் கதவைத் திறந்தேன்.

அவள் கன்னங்களின் வழியாய்க் கண்ணீர் தாரை தாரையாய் வழிந்து கொண்டிருந்தது. அவள் கூறியதாவது:—உங்களுக்கு வெட்கமில்லையா? இப்படிச் சுய உணர்வு போய்விட வேண்டுமா? எனக்குப் போக்கிடமெங்கே? தஞ்சமளிப்பதற்கு இங்கு என் பெற்றோர்களாவது, உறவினர்களாவது இருக்கிறார்களா? நீங்கள் என்ன உதைத்தாலும், அடித்தாலும் நான் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆண்டவன் ஆணை! கதவைச் சாத்துங்கள். யாராவது பார்த்துச் சிரிக்கப்போகிறார்கள்!" என்றாள்.

வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லையாயினும் உள்ளுக்குள் மிகவும் வெட்கப்பட்டேன். கதவைச் சாத்தினேன். என் மனைவி என்னை விட்டு எங்கும் போவதற்கில்லையென்றால், நானும் அவளைவிட்டுப் பிரியமுடியாது. நாங்கள் எத்தனையோ சண்டை போட்டிருக்கிறோமாயினும்

முடிவில் சமாதான மடைந்து விடுவோம். அளவற்ற பொறுமை யுடையவளாதலால், என் மனைவியே ஒவ்வொரு முறையும் வெற்றி யடைவாள்.

இன்றைய தினம், பாரபட்சமின்றி மேற்படி நிகழ்ச்சியை நான் கூறக் கூடியவனு யிருக்கிறேன். ஏனெனில், அதிர்ஷ்ட வசமாக அந்தக் காலமெல்லாம் மலையேறி விட்டது. இப்போது நான் காமப் பித்தினுல் கண்ணிழந்த கணவனல்லன். என் மனைவியின் உபாத்தியாயனுமல்லன். ஸ்ரீமதி கஸ்தூரி பாய் விரும்பினுல், நான் முன்னர் அவளுக்கு எவ்வளவு தொல்லை யளித்தேனே அவ்வளவு எனக்கு இப்போது அளிக்கலாம். எங்களுடைய நட்பு பல முறை சோதிக்கப்பட்டு முதிர்ந்த நட்பாகும். இப்போது நாங்கள் ஒருவரை யொருவர் காமப் பொருளாகக் கருதுவதில்லை. எனக்கு நோய்வந்த போதெல்லாம் அவள் தாதியாயிருந்து எத்தகைய வெகுமதியும் எதிர் பாராமல் அருந்தொண்டு செய்திருக்கிருள்.

மேற்படி சம்பவம் 1898-ல் நிகழ்ந்தது. அப்போது பிரமசரியத்தின் பெருமையைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. மனைவி கணவன் சிற்றின்பக் கருவி என்றும், கணவனின் கட்டளையைச் செய்யவே ஏற்பட்டவளென்றும் நான் கருதிய காலம். கணவனின் இன்ப, துன்பங்களில், அவள் பங்காளி யென்றும்,கணவனின் வாழ்க்கைத் துணைவி என்றும் அப்போது அறிந்தேனில்லை.

1900-ம் வருஷத்தில் தான் இந்தக் கொள்கைகளெல்லாம் முற்றும் மாறுதலடைந்தன. 1906-ல் புதிய கொள்கைகள் திட்டமான உருக்கொண்டன. ஆனுல், இதைப்பற்றி உரிய இடத்தில் விவரமாக கூறுவேன். இந்திரிய சுகத்தில் ஆசை வரவரக் குறைந்து மறைந்த

போது என் குடும்ப வாழ்க்கை அமைதியும், ஆனந்தமும் குடிகொண்டதாயிற்று என்று மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

இந்தப் புதித் நிகழ்ச்சியை நான் கூறியதிலிருந்து, தற்போது நானும் என் மனைவியும் தம்பதிகளுக்கு இலக்கியமா யிருப்பதாக யாரும் முடிவு செய்ய வேண்டாம். எங்களுக்குள் பூரண இலட்சிய ஒற்றுமை இல்லை. ஸ்ரீமதி கஸ்தூரி பாய்க்குத் தனியே ஏதேனும் இலட்சியங்கள் உண்டா வென்று ஒருகால் அவளுக்கே தெரியாமலிருக்கலாம். இன்றைய தினம் கூட என்னுடைய செயல்களில் பல அவளுக்குப் பிடியாதவை யாயிருத்தல் சாத்தியம். நாங்கள் அவற்றைப் பற்றி விவாதிப்பதில்லை. விவாதிப்பதில் பயனில்லை என்பது என் கருத்து. ஏனெனில் அவளுக்கு அவர் பெற்றோர்கள் கல்வி யளிக்கவில்லை. நானும் அவளுக்குக் கல்விப் பயிற்சி தந்திருக்க வேண்டிய காலத்தில் அப்படிச் செய்யவில்லை. ஆனால் அவளிடம் ஓர் அருங்குணம் நிரம்ப இருக்கிறது. ஹிந்து மனைவிமார் பெரும்பாலோரிடம் இக்குணம் உண்டென்று சொல்லலாம். அது யாதெனில், விருப்பத்துடனே விருப்பமின்றியோ, அறிந்தோ அறியாமலோ, என் அடிச் சுவட்டைப் பின்பற்றி நடப்பதால் அவள் மேன்மை யுறலாம் என்று கருதி வந்திருக்கிறாள். புலனடக்கத்துடன் வாழ்க்கை நடத்த நான்செய்த முயற்சிகளுக்கு அவள் எப்போதும் குறுக்கே நின்றதில்லை. ஆதலின், எங்களுடைய அபிப்பிராயங்களில் நிரம்ப வேற்றுமை இருந்தபோதிலும், எங்கள் வாழ்க்கை எப்போதும் திருப்தியும், மகிழ்ச்சியும், வளர்ச்சியும் உடையதாய் இருந்து வந்திருக்கிறது.

பதினோராம் அத்தியாயம்

ஐரோப்பிய நண்பர்கள்—1

இந்த அத்தியாயத்தில் நான் கூற எண்ணும் விஷயத்திற்குப் போகுமுன், இந்தச் சரிதத்தை வாரா வாரம் எப்படி எழுதி வருகிறேன் என்பதை விளக்குதல் அவசிய மாகிறது.

இச்சரிதை எழுதத் தொடங்கியபோது, எம்முறையில் எழுதுவதென்பதைக் குறித்து யாதொரு திட்டமும் நான் போட்டுக் கொள்ளவில்லை. சுய சரிதை எழுதுவதற்கு ஆதாரமாய்க் கொள்ளக்கூடிய தினசரிக் குறிப்புகளோ, வேறு தஸ்தவேஜிகளோ என்னிடமில்லை. எழுத உட்கார்ந்த பின்னர், இறைவன் அருள் எவ்வழி காட்டுகிறதோ, அவ்வழியே எழுதுகிறேன். என்னுடைய செயல்கள் எண்ணங்கள் எல்லாம் அவ்வருளினால் தூண்டப்பட்டே ஏற்படுவனவென்று திட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால் என் வாழ்நாளில் நான் மேற்கொண்ட மிகப் பெருங் காரியங்களையும், அவ்வாறே மிகச்சிறு முயற்சிகளையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது, அவை எல்லாவற்றையும் தூண்டி நடத்தியது இறைவன் அருளே என்று கூறுதல் தவறாகா தெனக் கருதுகிறேன்.

ஆண்டவனை நான் பார்த்ததில்லை; அவனை அறிந்ததுமில்லை. ஆனால் உலகமெல்லாம் ஆண்டவனிடம் வைத்துள்ள நம்பிக்கையை என் நம்பிக்கையாகக் கொண்டேன். எனது நம்பிக்கை அழிக்க முடியாத தொன்றாதலின், அதை அநுபவத்துக்குச் சமமானதாகவே நான் கருதுகிறேன். ஆனால் நம்பிக்கையை அநுபவம் எனக் கூறுதல், உண்

மைக்கு ஊறு செய்வதாகுமெனச் சொல்லப்படலா மாதலின், ஆண்டவனிடம் எனக்குள்ள நம்பிக்கையை விளக்கிக் கூற வார்த்தைகள் இல்லை எனல் அதை விடப் பொருத்தமா யிருக்கலாம்.

இதிலிருந்து, இறைவன் அருள் துணையினாலேயே இச்சரிதையை எழுதுகிறேன் என நான் நம்புவதின் காரணத்தை அறிதல் சிறிது சுலபமா யிருக்கும். சென்ற அத்தியாயத்தை எழுதத் தொடங்கியபோது, இவ் வத்தியா யத்துக்குக் கொடுத்திருக்கும் தலைப்பையே கொடுத்துத் தொடங்கினேன். ஆனால் அதை எழுதி வரும்போது, ஐரோப்பியர்களுடன் என் அநுபவங்களைக் கூறுவதற்கு முன்னால் முகவுரையாகச் சில விஷயம் சொல்ல வேண்டு மென உணர்ந்தேன். எனவே தலைப்பையும் விஷயத்தையும் மாற்றினேன்.

இப்போது இந்த அத்தியாயத்தைத்தொடங்குகையில், மீண்டும் ஒரு புதிய பிரச்னை ஏற்படுகின்றது. ஆங்கில நண்பர்களைப் பற்றி என்னென்ன விஷயங்களைக் கூறுவது, என்னென்னவற்றை விடுப்பது என்பது முக்கியமான கேள்வி. பொருத்தமான விஷயங்களைக் கூறாது விடின் சத்தியம் ஒளி குன்றி விடும். இச் சரிதத்தை எழுதுவதே பொருத்தமானதா என்று நிச்சயம் ஏற்படாதிருக்கும் போது, விவரங்களில் எது பொருத்தமானது, எது பொருத்தமற்றதென நிச்சயித்தல் கடினமன்றோ?

சுய சரிதம் எதுவும் பிறர் எழுதும் சரித்திரத்தைப் போல் ஆகாதென்று நீண்ட காலத்துக்கு முன் நான் படித்ததின் உண்மையை இப்போது நன்குணர்கிறேன். எனக்கு நினைவிருப்பன எல்லாவற்றையும் இக்கதையில்

எழுதுகிறேனில்லை. சத்தியத்துக்கு ஊறு நேரா வண்ணம் எவ்வளவு சொல்லவேண்டும், எவ்வளவு விடுக்க வேண்டும் என்பதை யாரே கூறமுடியும்? என் வாழ்க்கைச் சம்பவங்கள் சிலவற்றைக் குறித்து நான் கூறும் ஒரு தலைச்சார்பான சாட்சியங்களுக்கு நீதி மன்றமொன்றில் எவ்வளவு மதிப்பு இருக்கும்? முந்தைய அத்தியாயங்களைப் பற்றி யாரேனும் வேலையற்றவர் ஒருவர் என்னைக் குறுக்கு விசாரணை செய்வரேல், இன்னும் பல விவரங்களைத் தெளிவு படுத்தலாம். அவர் விரோதப் பான்மை யுடையவராயின், 'என்பாசாங்குகளில் பலவற்றை வெளிப்படுத்தி விட்டதாயும்' பெருமை யடித்துக் கொள்ளக் கூடும்.

ஆதலின், இந்தச் சரிதத்தை நிறுத்தி விடுதலே உசிதமாயிராதா என ஒவ்வொரு சமயம் எனக்கெண்ண முண்டாகிறது. ஆனால், என் உள்ளத்தினுள்ளே குடிகொண்ட இறைவன் நிறுத்தச் சொல்லும் வரை நான் எழுதியே தீர வேண்டும். ஒரு முறை தொடங்கி விட்ட காரியம் எதையும் அது தர்ம விரோதமானதென்று நிரூபிக்கப்படும் வரையில் நிறுத்தக் கூடாதென்பது முது மொழியன்றோ?

குற்றங் கண்டுபிடிப்பவர்களை மகிழ்விப்பதற்காக நான் இந்த சுயசரிதத்தை எழுத வில்லை. இதை எழுதுவதுங் கூட சத்தியமார்க்கத்தின் சோதனைகளில் ஒன்றாகும். என் சகாக்களுக்குச் சிறிது மன ஆறுதலையும், சிந்தனைக்குரிய விஷயத்தையும் அளிப்பது இதை எழுதுவதின் நோக்கங்களில் ஒன்று என்பதில் ஐயமில்லை. உண்மையில் அவர்களுடைய விருப்பத்துக்கிணங்கியே நான் இதை எழுதத் தொடங்கினேன் ஜயராம் தாஸும், ஸ்வாமி ஆனந்தரும் பிடிவாதம் செய்யாதிருந்தால் இதை எழுதத் தொடங்கியே

யிருக்க மாட்டேன். ஆதலின், நான் இச் சரிதத்தை எழுதுவது தவறுனல், அவர்களுக்கு அத் தவறில் பங்குண்டு.

நிற்க; இனி, எடுத்த விஷயத்துக்குச் செல்கிறேன். டர்பனில் என் வீட்டில் இந்தியர்கள் ஜாகை வைத்துக் கொண்டிருந்ததுபோலவே சில சமயம் ஆங்கில நண்பர்களும் வாசம் செய்தார்கள். அவ்வாறு தங்கியவர்களெல்லாரும் விருப்பமுடன் தங்கினர்களென்று சொல்வதற்கில்லை. நான்தான் பிடிவாதம் செய்தேன். இவ்வாறு செய்தது எல்லார் விஷயத்திலும் அறிவுடைமையாக முடியவில்லை. சிலர் விஷயத்தில் பெரிதும் துயரந்தரும் அநுபவங்கள் நிகழ்ந்தன. ஆனல் இத்தகையோரில் இந்தியர்களும் உண்டு; ஐரோப்பியர்களும் உண்டு. அவ்வநுபவங்களைப் பற்றி நான் இப்போது வருந்துகிறேனில்லை. அதற்கு மாருக, இன்னமும் அவ்வழக்கத்தையே பின்பற்றி வருகிறேன். இதனல் என் நண்பர்களுக்குப் பலமுறை அசௌகரியமும், மனத்தொல்லையும் அளித்துள்ளேன். ஆயினும் அவர்கள் என்னிடம் பேரன்பு காட்டிப் பொறுத்து வந்திருக்கிருர்கள். அன்னியர்களுடன் நான் பழகுவது என் நண்பர்களுக்கு வருத்தம் அளிக்கும்போதெல்லாம் நண்பர்களைத் தான் குற்றம் கூறுவேன். தெய்வ நம்பிக்கையுள்ளவர்கள் தங்கள் இருதயத்தில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் பிறரிடமும் காண்பார்கள். எனவே அவர்கள், எல்லாருடைய மத்தியிலும் விருப்புவெறுப்பின்றி வாழக் கூடியவர்களா யிருத்தல் வேண்டும். இவ்வாறு வாழும் ஆற்றலைப் பெறுவதெப்படி? நாம் தேடாமலே வரும் சந்தர்ப்பங்களை ஒதுக்கித் தள்ளுவதால் பெறமுடியுமா? தொண்டில் பற்றுடன் அச்சந்தர்ப்பங்களை வரவேற்று அவற்றினல் மன

அமைதி கெடாமல் காக்கப் பயில்வதாலேயே அத்திறமை பெற முடியும்.

ஆதலின், போயர் யுத்தம் தொடங்கியபோது என் வீட்டில் ஜனங்கள் நிறைந்திருந்தார்களாயினும், ஜோகானிஸ் பர்க்கிலிருந்துவந்த இரண்டு ஆங்கிலேயர்களை வரவேற்றேன். அவர்கள் இருவரும் பிரமஞான சங்கத்தைச் சேர்ந்தவர். இவர்களில் மிஸ்டர் கிச்சின் என்பாரைப்பற்றிப் பின்னால் நாம் அதிகம் தெரிந்து கொள்ள நேரும். இந்நண்பர்களின் காரணமாக, என் மனைவி அடிக்கடி கண்ணீர் விட வேண்டியிருந்தது. இம்மாதிரி சந்தர்ப்பங்கள் என்னால் அவளுக்கு எவ்வளவோ ஏற்பட்டிருக்கின்றன. ஆங்கில நண்பர்கள் ஏக குடும்பமாக என்னுடன் வசிக்க நேர்ந்தது இதுவே முதல் முறையாகும். இங்கிலாந்தில் நான் ஆங்கிலேயர் வீடுகளில் வசித்திருக்கிறேனாயினும், அவர்கள் வாழ்க்கை முறையைப் பின்பற்றி வசித்து வந்தேன். ஏறக்குறைய, போஜன விடுதியில் தங்குவது போல் தான். இங்கேயோ நிலைமை அதற்கு முற்றிலும் மாறாயிருந்தது. ஆங்கில நண்பர்கள் என் குடும்பத்தினரே யானார்கள். பல காரியங்களுக்கு இந்திய முறையைக் கைக்கொண்டார்கள். வீட்டின் அறைகள் மேனாட்டு முறையில் கட்டப்பட்டிருந்தனவாயினும், பெரிதும் இந்திய வாழ்வு முறையையே கைக்கொண்டிருந்தோம். அவர்களை என் குடும்பத்தாராக வைத்துக் கொள்வதில் எனக்குச் சிறிது கஷ்டம் ஏற்பட்டது நினைவிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு எவ்வித அசௌகரியமும் தோன்றவில்லையென்று நான் நிச்சயமாகக் கூற முடியும். இவ்வித நெருங்கிய பழக்கம் டர்பனில் இருந்ததை விட ஜோகானிஸ்பர்க்கில் அதிகமாயிற்று.

பன்னிரண்டாம் அத்தியாயம்

ஐரோப்பிய நண்பர்கள்—2

ஜோகானிஸ்பர்க்கில் ஒரு சமயம் என்னிடம் நான்கு இந்தியக் குமாஸ்தாக்கள் இருந்தனர். அவர்களை என் புதல்வர்களாகவே நடத்தி வந்தேன். இந்த நாலுபேருங் கூட என் வேலைக்குப் போதவில்லை. டைப் அடிக்கத் தெரிதல் மிக்க அவசியமாயிருந்தது. அந்த வித்தை எங்களில் எனக்குத்தான் தெரியும் என்று பெயர். அவர்களில் இருவருக்கு டைப் அடிக்கக் கற்றுக் கொடுத்தேனாயினும் அவர்கள் ஆங்கிலம் அதிகம் தெரியாதவர்களான படியால் போதிய திறமை பெறவில்லை. மேலும் அவர்களில் ஒருவரைக் கணக்கராகப் பயிற்சி செய்விக்க விரும்பினேன். நேடாலிலிருந்து யாரையும் தருவித்துக் கொள்ளவும் முடியவில்லை. ஏனெனில் அநுமதிச் சீட்டின்றி யாரும் டிரான்ஸ்வாலுக்குள் நுழையக்கூடாது. என்னுடைய சொந்தக் காரியத்துக்காக அனுமதிச் சீட்டு உத்தியோகஸ்தரின் தயவை நாட நான் தயாராயில்லை.

என்ன செய்வதென்று தெரியாதவனானேன். வேலை பாக்கி குவிந்து கொண்டேயிருந்தது. எவ்வளவு முயன்றாலும் தொழில் சம்பந்தமான வேலைகளையும், பொது வேலைகளையும் நானே செய்து முடிக்க இயலாதெனத் தோன்றிற்று. ஐரோப்பிய குமாஸ்தாவை அமர்த்திக் கொள்ள எனக்கு விருப்பந்தான். ஆனால் கறுப்பு மனிதனாகிய என்கீழ் வேலை செய்ய வெள்ளைக்காரரோ, வெள்ளைக்கார ஸ்திரீயோ வருவார்களா வென்று ஐயுற்றேன். எனினும் முயற்சி செய்து பார்க்கத் தீர்மானித்தேன். டைப் குமாஸ்தாக்களின் எஜண்ட் ஒருவர்

எனக்குத் தெரிந்தவரா யிருந்தார். அவரிடம் சென்று, கூடுமானல் டைப் அடிக்குங் குமாஸ்தா ஒருவரை எனக்குத் தேடிக் கொடுக்கும்படி சொன்னேன். டைப் அடிக்கும் பெண்கள் இருக்கிறார்களென்றும். அவர்களில் ஒருவரை அமர்த்தித் தருவதாகவும் அவர் வாக்களித்தார், அவ்வாறே மிஸ் டிக் (Miss Dick) என்னும் ஸ்காத்லந்து தேசத்துப் பெண்ணை அனுப்பி வைத்தார். அப்பெண் ஸ்காத்லந்தி லிருந்து அப்போது தான் வந்தார். கண்யமான ஜீவனோ பாயம் எங்கே கிடைத்தாலும் அதை ஏற்றுக்கொள்ள அவர் தயாரா யிருந்தார். பணத் தேவையும் அவருக் கிருந்தது. அவரைப் பார்த்தவுடனேயே எனக்குப் பிடித்துப் போயிற்று.

"இந்தியரின் கீழ் ஊழியம் செய்ய உமக்கு ஆட்சேப மில்லையா?" என்று வினவினேன்.

"கிடையவே கிடையாது" என்று அவர் உறுதியாகக் கூறினர்.

"என்ன சம்பளம் எதிர்பார்க்கிறீர்"

"17½ பவுன் கேட்டால் அதிகமா யிருக்குமோ?"

"நான் எதிர்பார்க்கும் வேலை செய்தீரானல் 17½ பவுன் அதிகமாகாது. எப்போது வேலை ஒப்புக்கொள்ள முடியும்?"

"தங்களுக்கு விருப்பமாயின இந்தநிமிஷமே ஒப்புக் கொள்கிறேன்."

பெரிதும் மகிழ்ச்சியடைந்து, உடனே அவருக்கு வேலை கொடுத்து செய்யச் சொன்னேன். சிறிது காலத் திற்குள் அவர் என்னுடைய டைப் குமாஸ்தாவாக மட்டு மிராமல், என்னுடைய புதல்வி அல்லது சகோதரியைப்

போல் ஆகிவிட்டார். அவருடைய வேலையில் குற்றங் கண்டு பிடிக்கக் காரணம் ஏற்பட்டதே யில்லை. அடிக்கடி ஆயிரக்கணக்கில் பணத்தை அவரிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவரே கணக்கும் எழுதிவந்தார் என் பூரண நம்பிக்கைக்கு அவர் பாத்திரமானது மட்டுமன்று; என்னைத் தம் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாகக் கருதித் தம் அந்தரங்க எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் தெரிவித்து வந்தார். விவாக விஷயத்தில் கூட என் புத்திமதியைக் கேட்டே முடிவாக நிச்சயித்தார். அவரைக் கன்னிகாதானம் செய்து கொடுக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. மிஸ் டிக் மணம் புரிந்து மிஸ்ஸஸ் மக்டானல்டு ஆனதும் என்னைவிட்டுச் செல்ல நேர்ந்தது. ஆனால் கலியாணத்துக்குப் பிறகு கூட மிகுதியாக வேலையிருக்கும் காலையில் நான் வேண்டிய போதெல்லாம் அவர் உதவி செய்யத் தவறியதே கிடையாது.

எனினும் அவருடைய இடத்திற்கு நிரந்தரமான டைப் குமாஸ்தா ஒருவர் வேண்டி யிருந்தது. அதிர்ஷ்ட வசமாக இன்னொரு பெண் கிடைத்தார். அவர் பெயர் மிஸ் ஷ்லெஸின். அவரை மிஸ்டர் காலன்பாக் என்பார் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். மிஸ்டர் காலன்பாக்கைப் பற்றி உரிய இடத்தில் கூறுவேன். மேற்படி பெண்மணி தற்போது டிரான்ஸ்வாலில் ஒரு பெண் பள்ளிக்கூடத்தின் தலைவியா யிருக்கிறார். என்னிடம் வேலைக்கு வந்தபோது அவருக்குச் சுமார் பதினேழு வயதிருக்கும். அவரிடம் சில விசித்திர சுபாவங்கள் இருந்தன. அவற்றை ஒவ்வொரு சமயத்தில் என்னாலும் மிஸ்டர் காலன்பாக்கினாலும் பொறுக்க முடியாமல் போகும். அவருக்கு வேலை செய்யும் நோக்கத்தை விட அநுபவம் பெறும் நோக்கமே அதிகமா

யிருந்தது. நிற வேற்றுமை உணர்ச்சி என்பது அவரது இயல்பிலேயே கிடையாது. வயதுக்கோ, அநுபவத் துக்கோ அவர் மரியாதை செய்வதுமில்லை. ஒருவரை அவ மதிப்பதற்கோ, அவர் முகத்துக்கு நேரே அவரைப் பற்றித் தாம் கொண்டுள்ள கருத்தைத் தெரிவிப்பதற்கோ தயங்க மாட்டார். அவருடைய அதி தீவிரத்தன்மை என்னைப் பல முறை கஷ்டத்தில் புகுத்தியதுண்டு. ஆனால் அவருடைய கபடற்ற வெகுளி சுபாவம் அக்கஷ்டங்கள் தோன்றிய உடனேயே மறைந்து விடும்படி செய்யும். அவர் டைப் அடித்த கடிதங்களில் படித்துப் பாராமலே நான் கையொப் பம் செய்வதுண்டு. என்னைவிட நன்ருய் ஆங்கில நடை எழுதுகிருர் என்று நான் கருதியதாலும், அவர் எனக்கு உண்மையாக நடப்பார் என்று பூரண நம்பிக்கை யிருந்த படியாலும் இப்படிச் செய்தேன்.

அவருடைய தியாகம் மகத்தானது. நீண்ட காலம் அவர் மாதம் 6 பவுனுக்கு மேல் சம்பளம் வாங்கிக்கொள்ள வில்லை. மாதம் 10 பவுனுக்கு மேல் எக்காலத்திலும் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அதிகம் பெற்றுக் கொள்ளவேண்டு மென்று நான் வற்புறுத்தினல் அவர் கோபிப்பார். "உங்களிடம் சம்பளம் வாங்குவதற்காக நான் இங்கிருக்கவில்லை. உங்களுடைய இலட்சியங்கள் எனக்குப் பிடித்திருப்பதாலும், உங்களுடன் வேலை செய்ய விரும்புவதாலுமே இங்கிருக்கிறேன், என்பார்."

ஒரு சந்தர்ப்பத்தில் அவர் என்னிடம் 40 பவுன் வாங்கிக் கொள்ளும்படி நேரிட்டது. அதைக் கடனுகவே பாவிக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தினர். சென்ற வருஷத்தில் முழுத் தொகையையும் திருப்பி அனுப்பி விட்டார். அவருடைய தைரியம் அவருடைய தியாகத்

துக்கு இணை சொல்லக் கூடியதாயிருந்தது. பளிங்குபோல் மாசற்ற நடக்கையும், போர் வீரனையும் வெட்கச் செய்யும் தைரியமும் உடைய சில பெண்மணிகளுடன் பழகும் பாக்கியம் நான் பெற்றிருக்கிறேன். அவர்களில் இவரும் ஒருவராவர். இப்போது அவர் வயது முதிர்ந்த ஸ்திரீயா யிருப்பார். என்னுடன் இருந்தபோது அவர் மனதை நான் அறிந்திருந்ததுபோல் இப்போது அறிந்திருக்க வில்லை. ஆனால் அந்த யுவதியுடன் எனக்கேற் பட்டிருந்த பழக்கம் எப்போதும் மறக்கவொண்ணாத ஒரு பரிசுத்த ஞாபகமாயிருக்கும். ஆதலின் அவரைப் பற்றி எனக்குத் தெரிந்தவற்றைச் சொல்லாவிடின் சத்தியத்துக்கு துரோகம் செய்தவனாவேன்.

இரவு, பகல் என்று பாராமல் அவர் எங்கள் இயக்கத்துக்காக உழைத்தார். நள்ளிரவு வேளையில் செய்தி கொண்டு போவார். துணைக்கு ஆள் அனுப்புவதாகச் சொன்னால் கோபத்துடன் மறுப்பார். ஆயிரக்கணக்கான தீர இந்தியர்கள் அவருடைய புத்திமதியை எதிர் பார்த்து நின்றனர். சத்தியாக்கிரஹம் நடந்த காலத்தில் அநேகமாகத் தலைவர்கள் எல்லாரும் சிறை சென்ற பின்னர் அவர் ஒருவராக நின்று இயக்கத்தை நடத்தினர். அப்போது ஆயிரக்கணக்கான மனிதர்களை வைத்து அவர் நிர்வகிக்க வேண்டி யிருந்தது. ஏராளமான கடிதங்களுக்குப் பதில் எழுத வேண்டியிருந்தது. "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகையை நடத்த வேண்டியிருந்தது. இவ்வளவையும் சோர்வென்பதில்லாமல் அவர் பார்த்து வந்தார்.

மிஸ் ஷ்லெஸினைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் எழுதிக் கொண்டு போகலாம். ஆனால் அவரைப்பற்றி கோகலே கொண்டிருந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்து

இந்த அத்தியாயத்தை முடிக்கிறேன். கோகலே என்னுடைய சகாக்களில் ஒவ்வொருவரையும் அறிந்திருந்தார். அவர்களில் பலரை அவருக்குப் பிடித்திருந்தது. அவர்களைப் பற்றி அவர் தமது நன்மதிப்பைத் தெரிவிப்பதுண்டு. என்னுடைய இந்திய, ஐரோப்பிய சகாக்கள் எல்லாருள்ளும் மிஸ் ஷ்லெஸினுக்கே அவர் முதன்மை ஸ்தானத்தை அளித்தார்.

"மிஸ் ஷ்லெஸினிடம் நான் கண்ட தியாகத்தையும், தூய்மையையும், அஞ்சாமையையும் போல் வேறு யாரிடமும் கண்டதில்லை. உங்களுடைய சகாக்கள் அனைவரிலும் அவரே முதன்மையானவர் என்பது என் அபிப்பிராயம்." என்று அவர் கூறினார்.

பதின்மூன்றும் அத்தியாயம்

"இண்டியன் ஒபீனியன்"

நான் நெருங்கிப் பழகிய மற்ற ஐரோப்பியர்களைப் பற்றிச்சொல்வதற்கு முன்னால் இரண்டு, மூன்று முக்கிய விஷயங்களைப் பற்றிக் கூற வேண்டியிருக்கிறது. எனினும் அவர்களில் ஒருவரைப்பற்றி மட்டும் இங்கேயே சொல்லி விடுதல் அவசியமாகும். மிஸ் டிக் என்னும் பெண்மணியை என் உதவிக்கு அமர்த்திக் கொண்டது போதவில்லை. இன்னும் யாரேனும் உதவிக்கு அவசியமாயிருந்தது. முன் அத்தியாயங்களில் மிஸ்டர் ரிச் என்பவரைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் ஒரு வியாபாரக் கம்பெனியின் மானேஜராக இருந்தார். கம்பெனியை விட்டு நீங்கி, என் கீழ் வக்கீல் வேலைக்குப் பயிற்சி பெறலாமென்று யோசனை சொன்

னேன். அதை அவர் ஒப்புக்கொண்டு என் சிரமத்தைப் பெரிதும் குறைத்தார்.

ஏறக்குறைய இதே காலத்தில் ஸ்ரீமான் மதன் ஜீத் "இண்டியன் ஒபீனியன்" என்னும் பத்திரிகை தொடங்குவதைப்பற்றி என்னைப் புத்திமதி கேட்டார். அவர் ஏற்கனவே அச்சுக்கூடம் ஒன்று வைத்து நடத்திக்கொண்டிருந்தார். அவரது யோசனையை நான் அங்கீகரிக்கவே 1904-ம் ஆண்டில் பத்திரிகை தொடங்கப் பட்டது. ஸ்ரீமான் மனுசுக்கல் நஸர் முதலாவது பத்திராசிரியரானார். ஆனால் வேலை முழுதும் என் தலையிலேயே விடிந்தது. அநேகமாக நானே பத்திரிகையை நடத்தி வர வேண்டிய தாயிற்று. ஸ்ரீ மனு சுக்லல் நஸாருக்குப் பத்திரிகை நடத்தும் ஆற்றல் இல்லாமலில்லை. இந்தியாவில் அவர் பத்திரிகைத் தொழிலில் நிரம்ப அநுபவம் பெற்றவர். ஆனால் நான் இருக்கும்போது, சிக்கலான தென்னாப்பிரிக்கா பிரச்னைகளைக் குறித்து எழுத அவர் முன் வருவதில்லை. தலையங்கப் பத்திகளின் பொறுப்பு முழுவதையும் என் தலைமீதே சுமத்தி விட்டார். இன்று வரை அப்பத்திரிகை வாரப் பதிப்பாகவே இருந்து வருகிறது. ஆரம்பத்தில் குஜராத்தி, ஹிந்தி, தமிழ், ஆங்கிலம் என்னும் நான்கு மொழிகளிலும் வெளியிடப்பட்டு வந்தது. ஆனால் தமிழ் ஹிந்தி பகுதிகள் வெறும் கண் மயக்கு என்று கண்டேன். அவை எந்நோக்கத்துடன் வெளியிடப்பட்டனவோ அந்நோக்கம் பூர்த்தியாவதில்லை. எனவே, அப்பகுதிகளைத் தொடர்ந்து நடத்துவது ஏமாற்றுவதாகு மென்று நினைத்து, அவைகளை நிறுத்தி விட்டேன்.

இப்பத்திரிகையில் பணம் எதுவும் போட வேண்டியிருக்குமென்று நான் எண்ணவேயில்லை. ஆனால் விரைவி

லேயே பண உதவியின்றி அது நடை பெற இயலாதென்று விளங்கி விட்டது. பெயரளவில் நான் பத்திராதிபன் அல்லனாயினும், அதை நடத்தும் பொறுப்பு முழுதும் என்னுடையதுதான் என்று இந்தியர் ஐரோப்பியர் எல்லாரும் அறிந்திருந்தனர். அப்பத்திரிகை ஆரம்பிக்கப்படாமலே இருந்திருந்தால் எவ்வித தீங்கும் நேர்ந்திராது. ஆனால்தொடங்கிய பின்னர் அதை நிறுத்துவதாயின் பொருள் நஷ்டமும், அவமானமும் ஏற்படுவது நிச்சயம். ஆதலின் என்னுடைய சொந்தப் பணத்தை அதில் கொட்டிக் கொண்டிருந்தேன். கடைசியில் நான் மீத்த பணத்தையெல்லாம் அதிலேயே போடும்படியும் ஆயிற்று. ஒரு சமயம் மாதா மாதம் 75 பவுன் பத்திரிகைக்குக் கொடுக்க வேண்டி யிருந்ததாக ஞாபகம் இருக்கிறது.

•

இவ்வளவு வருஷங்களுக்குப் பின்னர் இப்போது எண்ணிப் பார்க்கையில் மேற்படி பத்திரிகை இந்திய சமூகத்துக்குச் சிறந்த ஊழியம் செய்திருப்பதாகவே கருதுகிறேன். என்னால் நடத்தப்பட்டு வந்தவரை, பத்திரிகையில் அவ்வப்போது தோன்றிய மாறுதல்கள் என்னுடைய வாழ்க்கை மாறுதல்களுக்கு அறிகுறியா யிருந்து வந்தன. இன்று "நவஜீவ" னும், "எங் இந்தியா" வும் உள்ளதுபோல் அக்காலத்தில் "இண்டியன் ஒபீனியன்" என் வாழ்க்கையின் ஒரு பகுதிக்குக் கண்ணாடிபோல் இருந்து வந்தது. வாரந்தவறாமல் என் உள்ளத்திலிருந்து பொங்கிய உணர்ச்சிகளை அதன் பத்திகளிலே வெளியிட்டு வந்தேன். சத்தியாக்கிரஹ தத்துவங்களையும், அநுஷ்டானத்தையும் நான் அறிந்திருந்த வண்ணம் விளக்கிக் காட்டி வந்தேன். பத்து வருஷ காலம், அதாவது 1914-ம் ஆண்டு வரையில், சிறைச்சாலைக்குள் கட்டாய ஓய்வு கிடைத்த

காலங்களிலல்லாமல், "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகையின் ஓர் இதழாவது என்னுடைய கட்டுரையின்றி வெளிவந்ததில்லை.

அக் கட்டுரைகளில் ஒரு வார்த்தையேனும் யோசனையின்றி எழுதியதாகவாவது, வேண்டுமென்று மிகைப்படுத்தியோ, பிறரை மகிழ்விப்பதற்காகவோ எழுதியதாகவாவது எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் அப் பத்திரிகை தன்னடக்கத்தில் பயிற்சிபெற எனக்கு ஓர் அரிய சாதனமாயிருந்தது. எனது நண்பர்களுக்கோ, என் எண்ணங்களை அவ்வப்போது அறிந்து கொள்வதற்குரிய சாதனமாயிற்று. மாறுப்பட்ட கருத்துடையவர்களுக்கும் அதில் ஆட்சேபிக்கத் தக்கதை அதிகம் அகப்படுவதில்லை. உண்மையில், "இண்டியன் ஒபீனிய" னின் நேர்மைப் போக்கானது எதிரிகளையும் நிதானித்து எழுதும்படி செய்தது. "இண்டியன் ஒபீனியன்" இன்றி சத்தியாக்கிரஹ இயக்கத்தை நடத்துதல் அநேகமாகசாத்தியமாயிருந்திராது. சத்தியாகிரஹப் போரின் நம்பத்தகுந்த விவரங்களுக்கும், தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்கும் வாசகர்கள் அப்பத்திரிகையின் வெளியீட்டை ஆவலுடன் எதிர் நோக்கலாயினர். எனக்கு அப்பத்திரிகை, மனித இயற்கையை அவன் எல்லா அம்சங்களிலும் படித்தறிவதற்கு ஒரு சாதனமாயிருந்தது. பத்திரிகாசிரியருக்கும், வாசகர்களுக்கும் நெருங்கிய, பரிசுத்தமான தொடர்பை ஏற்படுத்துவதை நான் எப்போதும் நோக்கமாய்க் கொண்டிருந்தேன். நிருபர்களின் இதய அந்தரங்க உணர்ச்சிகளைக் கொண்ட கடிதங்கள் ஏராளமாய் வந்து குவிந்து கொண்டேயிருந்தன. எழுதியவரின் மனோநிலையை யொட்டி, நட்புரிமையுடனோ,

குறை கூறியோ, கோபாவேசத்துடனே அவை எழுதப் பட்டு இருக்கும். இவ்வளவு கடிதங்களையும் படித்து, சிந்தித்துப் பதில் எழுதுவது சிறந்த கல்விப் பயிற்சியாக இருந்தது. சமூகம் எண்ணிய எண்ணங்கள் எல்லாம் இக்கடிதங்களில் எனக்குத் தெரியவந்தன. பத்திரிகாசிரியரின் பொறுப்பை அவை மூலம் நான் நன்கறிந்து கொண்டேன். இவ்வழியில் எனக்கு இந்திய சமூகத்தின் மீது ஏற்பட்ட செல்வாக்கினுல் தான் பிற்காலத்தில் சத்தியாக்கிரஹப் போர் நடத்துதல் சாத்திய மாயிற்று. அப் போர் கௌரவமாக நடந்து, வெற்றி யடைந்ததற்கும் அதுவே மூல காரணமாகும்.

"இண்டியன் ஒபீனியன்" தொடங்கப்பட்ட முதல் மாதத்திலேயே, பத்திரிகைத் தொழிலின் இலட்சியம் பொதுஜன ஊழியமாகவே இருத்தல் வேண்டுமென உணர்ந்தேன். பத்திரிகைகளின் சக்தி அபாரமானது. ஆனுல் கரையில்லாத ஜனப் பிரவாகம் நாட்டை யெல்லாம் மூழ்கடித்துப் பயிரைப் பாழாக்குவது போல், கட்டுக்குட்படாத பேணுவும் அழிவு வேலைக்கே பயன்படுகிறது. கட்டுப்பாடே இல்லாதிருப்பதை விட வெளியிலிருந்து ஏற்படும் கட்டுப்பாடு தீமை பயப்பதாகும். பத்திரிகைகள் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடு ஏற்படுத்திக் கொள்வதில் தான் நன்மை யுண்டு. தற்போது உலகில் உள்ள பத்திரிகைகளில் இப்பரீட்சையில் தேறக் கூடியவை எவ்வளவு இருக்கும்? உபயோகமற்ற பத்திரிகைகளை யார் நிறுத்துவது? உபயோகமானவை, உபயோக மில்லாதவை என்று முடிவு செய்வது யார்? உலகில் நன்மை தீமைகள் எப்போதும் கலந்திருப்பதைப் போல், பயனுள்ள பத்திரிகைளும் பயனில்லாப் பத்திரிகைகளும் இருக்கவே செய்யும். மனிதன்

தன் அறிவினல் ஆராய்ந்து பயனுள்ளதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

பதினேன்காம் அத்தியாயம்

கூலிச் சேரிகள்

ஹிந்துக்களாகிய நாம், சமூகத்துக்குச் சிறந்த தொண்டு செய்து வரும் சில வகுப்பாரை "தீண்டாதார்" என்று சொல்லி, பட்டணங்களிலும், கிராமங்களிலும் தனிப்பட ஒதுக்கி வைத்திருக்கிறோம். அவர்கள் வசிக்கும் இடங்களுக்குத் தனிப்பெயர் கொடுத்து, அந்தப் பெயருக்கும் இழிவு கற்பித்திருக்கிறோம். இவ்வாறே கிறிஸ்தவ ஐரோப்பாவிலும் யூதர்கள் ஒரு காலத்தில் "தீண்டாதா"ரா யிருந்தனர். அவர்களுடைய வாசஸ்தலங்களுக்கு "கெட்டோ" என்ற பெயர் வழங்கப்பட்டிருந்தது. அம்மாதிரியாகவே இன்றைய தினம் நாம் தென்னப்பிரிக்காவில் "தீண்டாதா"ரா யிருக்கிறோம். அங்கு நாம் மீண்டும் தீண்டக் கூடியவராவதற்கு ஆண்ட்ரூஸின் தியாகமும், சாஸ்திரியின் இனிய பேச்சுத்திறனும் எவ்வளவுதூரம் பயன்படுமென்று இனிக் காணக் கிடக்கின்றது.

பண்டைக் காலத்து யூதர்கள் தாங்களே ஆண்டவன் அருள் பெற்ற சாதியார் என்றும், மற்றவர்கள் அவன் அருள் பெருதவர்களென்றும் கருதினர்கள். இதற்கு விந்தையான தண்டனை அவர்களுடைய சந்ததியார் தலைமீது விடிந்தது. அத்தண்டனை அநீதியானதென்றும் கூறலாம். அவ்வாறே ஹிந்துக்கள், தங்களை ஆரியர்கள் அதாவது நாகரிக சாதியார் என்றும், தங்களுடைய

சொந்த பந்துக்களில் ஒரு பகுதியாரை அநாரியர் அல்லது தீண்டத்தகாதார் என்றும் கருதினார்கள். அக்கர்மபயன் தென்னாப்பிரிக்காவிலுள்ள ஹிந்துக்கள் தலைமீது மட்டு மன்றி, முஸ்லிம்கள், பார்ஸிகள், முதலியோரின் தலைமீதும் விடிந்திருக்கிறது. அவர்கள் ஒரே தேசத்தாராயும், ஒரு நிறத்தாராயும் இருப்பதால், அந்த அதிசய, அநீதியான தண்டனையைத் தாங்களும் அநுபவிக்க வேண்டியவர்களானார்கள்.

'கூலிச் சேரிகள்' என்ற தலைப்பின் கருத்தை இப்போது வாசகர்கள் ஓரளவு அறிந்து கொண்டிருப்பார்கள். தென்னாப்பிரிக்காவில் நாம் 'கூலிகள்' என்னும் அவப் பெயரைப் பெற்றிருக்கிறோம். இந்தியாவில் 'கூலி' என்றால் சாதாரணமாய் சாமான் தூக்கும் வேலைக்காரனையே குறிக்கும். ஆனால் தென்னாப்பிரிக்காவில் அதற்கு, 'பறையன்' அல்லது 'தீண்டாதான்' என்பதற்கு நாம் என்ன பொருள் கொள்கிறோமோ, அத்தகைய பொருள் கொள்ளப்படுகிறது. எனவே, அது ஒரு வகைச் சொல் லாயிற்று. 'கூலிகள்' வசிப்பதற்கென்று ஒதுக்கப் பட்ட இடங்கள் "கூலிச் சேரிகள்" என்ப் பெயர் பெற்றன. ஜோகானிஸ்பர்க்கில் இத்தகைய சேரி ஒன்றிருந்தது. ஆனால் மற்ற இடங்களில் இந்தியர்களுக்குச் சாசுவத குடிவார உரிமைகள் இருந்ததுபோலல்லாமல், ஜோகானிஸ்பர்க்கில் இந்தியர்கள் 99 வருஷக் குத்தகைக்கு நிலம் பெற்றிருந்தார்கள். இவ்விடத்தில் இந்தியர்கள் மிக நெருக்கமாய் வசிக்க வேண்டியிருந்தது. ஜனத்தொகை அபிவிருத்திக்குத் தகுந்தாற்போல் சேரியின் விஸ்தீரணம் அதிகமாக வில்லை. கக்கூசுகளை அரை குறையாக சுத்தம் பண்ணுவதல்லாமல், வேறு சுகாதார

வசதிகளுக்கு நகரசபை எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. நல்ல சாலைகளும், விளக்குகளும் போடுவதைப் பற்றிச் சொல்ல வேண்டாம். ஜனங்கள் சுகமாயிருக்க வேண்டுமென்பதில் கவலையில்லாதபோது, அவர்களுடைய வாசஸ்தலத்தில் சுகாதார வசதிகள் ஏன் ஏற்படுத்தவேண்டும்? அங்கு வசித்த இந்தியர்களோ நகர சுகாதார விதிகளையே சற்றும் அறியாதவர்கள். எனவே, நகரசபையின் உதவியும், மேற் பார்வையும் இன்றி அவர்கள் எதுவும் செய்ய முடியாம லிருந்தது. தென்னாப்பிரிக்கா சென்ற இந்தியர்கள் எல்லாரும் ராபின்ஸன் குரூஸோக்களாயிருந்திருந்தால் கதை வேறு விதமா யிருந்திருக்கும். ஆனால் உலகில், எல்லாரும் ராபின்ஸன் குரூஸோ போன்றவர்களாகச் சென்று குடியேறிய தேசத்தைப் பற்றி நாம் கேள்விப்பட்டதே யில்லை. சாதாரணமாக, ஜனங்கள் பணந் தேடவும், வியாபார நிமித்தமுமே வெளி நாடுகளுக்குச் செல்கிறார்கள். தென்னாப்பிரிக்கா சென்ற இந்தியர்களில் பெரும்பாலோர் கல்வி யறிவில்லாத ஏழை விவசாயிகள். அவர்கள் விஷயத்தில் எவ்வளவு கவலையும், பாதுகாப்பும் எடுத்துக் கொண்டாலும் அவசியமாகும். அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற வியாபாரிகளும், படித்த இந்தியர்களும் மிகச் சிலரேயாவர்.

இவ்வாறு, இந்தியர்களின் அறியாமையும், நகர சபையின் அசட்டையும் சேர்ந்து இந்தியர் இருப்பிடத்தை முற்றும் சுகாதாரக் கேடுள்ளதாகச் செய்தன. அந் நிலைமையை சீர்திருத்தம் செய்வதற்குப் பதிலாக, நகர சபையார், தங்களுடைய அசட்டையினாலேயே ஏற்பட்ட சுகாதாரக் குறைவைக் காரணமாகக்கொண்டு, அவ்விருப்பிடத்தையே அழித்துவிட முயன்றார்கள். இந்நோக்கத்

துடன், இந்தியர்களுக்கு அவ்விடத்தில் வசிப்பதற்குஇருந்த உரிமையைப் பறிக்க மாகாண சட்ட சபையில்அதிகாரமும் பெற்றார்கள். இத்தகைய நிலைமையில்தான் நான் ஜோகானிஸ்பர்க்கில் குடியேறினேன்.

இந்தியர்களிட மிருந்து பறித்துக்கொள்ளும் நிலத்துக்கு நகரசபை நஷ்ட ஈடு கொடுக்க வேண்டு மல்லவா? எனவே, நஷ்ட ஈடு சம்பந்தமாக எழும் வழக்குகளை விசாரிக்க விசேஷ நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. நகர சபையார் கொடுக்கும் பணத்தை ஒப்புக்கொள்ளத் தயாரா யில்லாத இந்தியர், மேற்படி நீதி மன்றத்துக்கு 'அப்பீல்' செய்து கொள்ளலாம். நகர சபையார் நிர்ணயித்ததை விட அதிக தொகைக்குத் தீர்ப்பளிக்கப் பட்டால், அவர்கள் செலவு தொகை கொடுக்கக் கடமைப் பட்டிருந்தார்கள்.

இந்தியர்களில் பலர் என்னைத் தங்கள் வக்கீல்களாகத் தேர்ந்தெடுத்தனர். இவ்வழக்குகளில் பணஞ் சம்பாதிக்க நான் விரும்பவில்லை. எனவே, வெற்றியடையும் வழக்குகளில் நீதி மன்றம் தீர்ப்பளிக்கும் செலவு தொகையே போதுமென்றும், பொதுவாக எல்லா வழக்குகளிலும் ஜெயித்தாலும், தோற்றாலும் பத்து பவுனுடன் திருப்தியடைவே னென்றும் சொன்னேன். அவர்கள் கொடுக்கும் பணத்தில் பாதியை வைத்தியசாலை கட்டுவதற்கோ, ஏழைகளுக்கு வேறு ஸ்தாபனம் ஏற்படுத்துவதற்கோ ஒதுக்கி வைப்பேனென்றும் கூறினேன். இது அவர்க ளெல்லாருக்கும் மகிழ்ச்சியளித்தது இயல்பேயாகு மன்றோ?

எழுபது வழக்குகளில் ஒன்றே ஒன்றுதான் தோல்வியடைந்தது. எனவே பெருந் தொகை வருவாயாகக்

கிடைத்தது. ஆனால் வந்ததை யெல்லாம் விழுங்க, "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகை இருந்தது. 1600 பவுன் வரை அதற்குக் கொடுத்ததாக ஞாபகமிருக்கிறது. இவ்வழக்குகளில் பெரிதும் கஷ்டப்பட்டு உழைத்தேன். எப்போதும் கட்சிக்காரர்கள் என்னைச் சூழ்ந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலோர்; பீஹார் மாகாணத்திலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் ஒப்பந்தக் கூலிகளாக வந்தவர்கள். இவர்கள் தங்களுக்குப் பிரத்தியேகமாய் ஏற்படக் கூடிய குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கென்று இந்திய வியாபாரிகளின் சம்பந்தமில்லாத ஒரு தனிச்சங்கம் அமைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் கபடமற்ற நெஞ்சும், தாராள புத்தியும், உயரிய நடக்கையும் படைத்தவர்கள். ஸ்ரீமான்கள் ஜெயராம் சிங்கும், பாத்ரியும் அவர்களுடைய தலைவர்கள். ஸ்ரீமான் ஜெயராம்சிங் மேற்படி சங்கத்தின் அக்கிராசனர். அவர்கள் இருவரும் இப்போது காலஞ் சென்று விட்டனர். அவர்களால் நான் பெரிதும் உதவி பெற்றேன். ஸ்ரீமான் பாத்ரி என்னுடன் நெருங்கிப் பழகி சத்தியாக்கிரக இயக்கத்தின் தீவிரமாக ஈடுபட்டார். இவர்களையொத்த நண்பர்களின் மூலம் வட இந்தியாவையும், தென்னிந்தியாவையும் சேர்ந்த பற்பல இந்தியர்களுடனும் நான் நெருங்கிப் பழக நேர்ந்தது, அவர்களுடைய வக்கீலாகமட்டு மிராமல் சகோதரன் போலவே யானேன். அவர்களுக்கும் பொதுவாகவும், பிரத்யேகமாகவும் இருந்த துயரங்களையும் கஷ்டங்களையும் பகிர்ந்து அனுபவித்தேன்.

இந்தியர்கள் என்னை எப்படி அழைத்தார்கள்என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். சேத் அப்துல்லா என்னைக் 'காந்தி' என்றழைக்க மறுத்து விட்டார்,

அதிர்ஷ்டவசமாக 'சாகிப்' என்றழைத்து என்னை யாரும் அவமானப் படுத்தவில்லை. [வட நாட்டார் வெள்ளைக்கார துரைமார்களை 'சாகிப்' என்றழைப்பது வழக்கம்.] அப்துல்லா சேத் மிகவும் நல்ல சொல் ஒன்றைக் கண்டு பிடித்தார். அது 'பாய்' என்பதாகும். பாய் எனில், 'அண்ணா' என்று பொருள். மற்றவர்களும் அவரைப் பின்பற்றி என்னை 'பாய்' என்றே அழைக்கலானார்கள். நான் தென்னாப்பிரிக்காவை விட்டுக் கிளம்பும் வரையில் இப்படியே அழைத்து வந்தனர், ஆனால் ஒப்பந்தக் கூலிகளாய் வந்து விடுதலை பெற்ற இந்தியர்களும் என்னை 'அண்ணா' என்று அழைத்ததுதான் எனக்கு மிகுதியும் இன்பந் தருவதாயிருந்தது.

பதினைந்தாம் அத்தியாயம்

கரு மகா மாரி—1

கூலிச் சேரி நகர சபைக்குச் சொந்தமான உடனே இந்தியர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி விட வில்லை. அவர்களை வெளியேற்றுவதற்கு முன்னால் அவர்கள் வசிக்க வேறு தகுந்த இடம் கண்டு பிடித்தல் அவசியமா யிருந்தது. நகர சபை எளிதில் வேறு இடம் கண்டு பிடிக்க முடியாதபடியால், இந்தியர்கள் அதே 'ஆபாச'ச் சேரியில் இருக்கும்படி விடப்பட்டார்கள். அவர்களுடைய நிலைமை இன்னும் மோசமானதுதான் வித்தியாசம். சொந்த வீட்டில் வசித்தது போய், நகரசபையின் இடத்தில் குடிக்கூலிக் கிருப்பவர்களானார்கள். இதன் பயனாக அவ்விடத்தில் சுகாதாரக் கேடு இன்னும் அதிகமாயிற்று. இந்தியர்கள் சொந்தக்காரர்களா யிருந்தபோது சட்டத்

துக்குப் பயந்தாவது ஓரளவு தூய்மை பாது காத்து வந்தார்கள். நகர சபைக்கு அத்தகைய பயம் எதுவும் இல்லை! குடியிருப்போரின் தொகை அதிக மாயிற்று. அத்துடன் ஆபாசமும், ஒழுங்கீனமும் பெருகின.

இந்நிலைமை குறித்து இந்தியர்கள் பொருமிக் கொண் டிருக்கையில் திடீரென்று கரு மகாமாரி (Black Plague) நோய் தோன்றிற்று. இதற்கு (Pneumonic Plague) என்றும் பெயருண்டு. இது சாதாரண மகா மாரியை (Bubonic Plague) விட மிகக் கொடிய கொள்ளை நோயாகும்.

அதிஷ்டவசமாக, இந்தியர் இருப்பிடத்தில் அது தொடங்கவில்லை.ஜோகான்னிஸ்பர்க்கின் அருகிலிருந்து தங்கச் சுரங்கம் ஒன்றிலேயே முதன் முதலில் அது தோன்றியது. இச் சுரங்கத்தில் வேலை செய்தவர்கள் பெரும்பாலும் நீகிரோவர். இவர்களை சுத்தமாய் வைத்திருப்பதற்கு வெள் ளைக்கார முதலாளிகள் பொறுப்பாளிகளாவர். மேற்படி சுரங்கத்தில் சில இந்தியர்களும் வேலைசெய்து கொண் டிருந்தனர். இவர்களில் 23 பேரைத் திடீரென்று அந்நோய் பற்றவே அவர்கள் ஒரு நாள் மாலை கூலிச்சேரியில் தங்கள் ஜாகைக்கு வந்து சேர்ந்தனர். அச்சமயம் அவர்களை அந்நோய் கடுமையாகப் பீடித்திருந்தது. ஸ்ரீமான் மதன்ஜித் "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகைக்குச் சந்தாதார் சேர்ப்பதற்காகவும், சந்தா வசூலிப்பதற்காகவும், அப் போது அங்கே சென்றிருந்தார். அவர் அச்சமென்பதை அறியாதவர். கொள்ளை நோய்க் கிரையான அம்மனிதர் களைக் கண்டதும் அவர் இதயம் தவித்து உருகிற்று. உடனே எனக்குப் பின்வரும் குறிப்பை எழுதி அனுப்பினார். "கரு மகா மாரி திடீரென்று உண்டாகி

யிருக்கிறது. தாங்கள் உடனே வந்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் மகத்தான துன்பம் நேரிடுதல் நிச்சயம். தயவு செய்து உடனே வாருங்கள்."

ஸ்ரீ மதன் ஜித் மிக்க தைரியத்துடன் காலியாயிருந்த வீடு ஒன்றின் பூட்டை உடைத்துத் திறந்து அதற்குள் நோயாளிகள் எல்லாரையும் இருக்கச் செய்தார். நான் உடனே சைகிளில் சென்றேன். எந்த நிலைமையில் மேற்படி வீட்டை எடுத்துக் கொண்டோம் என்பது குறித்து நகர சபைக் காரியஸ்தருக்கு எழுதி அனுப்பினேன்.

ஜோகானிஸ்பர்க்கில் வைத்தியத் தொழில் செய்து கொண்டிருந்த டாக்டர் வில்லியம் காட்பிரே இச்செய்தி கேட்டதும் ஓட்டமாக ஓடிவந்தார். அவர் நோயாளி களுக்கு வைத்தியம் செய்ததுடன். தாதியைப் போல் அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளும் செய்யலானார். ஆனால் 23 நோயாளிகளைப் பார்த்துக்கொள்ளுதல் எங்கள் மூவரால் இயலுங் காரியமாயில்லை.

இதயம் மட்டும் தூயதாயிருந்தால், விபத்து நேரும் போது அதனுடன் போராட ஆயுதங்களும், மனிதர்களும் தாமே வந்து சேர்வார்கள் என்பது என் நம்பிக்கை. இது என் அநுபவத்தில் அறிந்ததுமாகும். அச்சமயம் என் காரியாலயத்தில் நான்கு இந்தியர்கள் இருந்தனர். அவர்க ளில் மூவரின் பெயர்: கல்யாண்தாஸ், மானக்லால், குன் வந்தராய் தேஸாய். மற்றொருவரின் பெயர் ஞாபகமில்லை. கல்யாண்தாஸை அவர் தந்தை என்னிடம் ஒப்படைத்திருந் தார். கல்யாண்தாஸைப்போல் கீழ்ப்படிதல் குணமும், உதவி செய்வதில் விருப்பமும் உள்ள வேறொருவரை நான் தென்னாப்பிரிக்காவில் சந்தித்ததில்லை. அதிர்ஷ்ட வசமாக

அவருக்கு அப்போது கலியாணம் ஆகாமலிருந்தது. ஆதலின் அவருக்கு எவ்வளவு பெரிய அபாயகரமான கடமையையும் அளிக்க நான் தயங்கவில்லை. மானக்லாலே ஜோகானிஸ் பர்க்கில் கண்டு பிடித்தேன். அவரும்*கலியாண மாகாதவர் என்று நினைவிருக்கிறது. அந் நால்வரையும்—அவர்களை என் குமாஸ்தாக்கள் என்றாலும், சகாக்கள் என்றாலும் புதல்வர்கள் என்றாலும் சரிதான்—பலி கொடுக்கத் தீர்மானித்தேன். கல்யாண்தாஸைக் கேட்பதே அவசிய மில்லை. மற்ற மூவரும் கேட்டவுடன் தயாராயிருப்பதாகத் தெரிவித்தார்கள். "தாங்கள் எங்கிருக்கிறீர்களோ அங்கே நாங்களும் இருப்போம்" என்று அவர்கள் சுருக்கமாய் விடையளித்தனர். அவ் விடை எனக்கு அளவற்ற இன்பமளித்தது.

மிஸ்டர் ரிச் பெரிய குடும்பஸ்தர். அவரும் இத் தொண்டில் இறங்கச் சித்தமா யிருந்தார். நான் தான் அவரைத் தடுத்தேன். அவரை அவ்வபாயத்துக் குள்ளாக்க எனக்கு மனம் வரவில்லை. எனவே அவர் அபாய எல்லைக்கு வெளிப் புறத்தில் ஆகவேண்டிய காரியங்களைச் செய்தார்.

அந்த இரவின் பயங்கரத்தை எப்படிச் சொல்வது! இரவு முழுவதும் கண்விழித்துப் பணிவிடை ஆற்றிக்கொண் டிருந்தோம். இதற்குமுன் நான் நோயாளிகளுக்குத் தொண்டு செய்திருக்கிறேன். ஆனால் இந்த பயங்கர நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்குத் தொண்டு செய்த தில்லை. டாக்டர் காட்பிரேயின் தீரம் மற்றவர்களையும் தொற்றிக்கொண்டது. மருந்து கொடுத்தல், நோயாளிகள் கேட்பதை யளித்தல், அவர்களையும், அவர்களுடைய படுக்கைகளையும் சுத்தமாய் வைத்தல், உற்சாக மூட்டுதல், இவ்வளவுதான் நாங்கள் செய்யவேண்டியவை.

சோர்வில்லா உற்சாகத்துடனும், தைரியத்துடனும் அவ்விளைஞர்கள் வேலை செய்தது எனக்கு அளவில்லா மகிழ்ச்சி யளித்தது. டாக்டர் காட்பிரேயும், அநுபவ சாலியான ஸ்ரீமான் மதன்ஜித்தும் காட்டிய தைரியத்தைப் பற்றி ஆச்சரியம் அதிகம் இல்லை. ஆனால் வயது வராத அவ்வாலிபர்களின் தீரத்தைப் பற்றி என்னென்று கூறுவேன்?

அந்த இரவு எப்படியோ நோயாளிகள் அனைவரையும் காப்பாற்றிக் கரை சேர்த்தோம்.

இந்தப் பரிதாப சம்பவமானது, எனக்குப் பரமார்த் திகத்துறையில் ஓர் அநுபவமாயிருந்த தாதலின், அதைப் பற்றி அடுத்த இரண்டு அத்தியாயங்களில் விரிவாகக் கூறவேண்டும்.

பதினாறும் அத்தியாயம்

கரு மகா மாரி—2

நகர சபைக் காரியஸ்தர் எனக்கு எழுதிய பதிலில், காலி வீட்டை எடுத்துக்கொண்டு, நோயாளிகளையும் கவனித்து வருவதற்காக எனக்கு நன்றி தெரிவித்தார். அத்தகைய அவசர நிலைமையை நகர சபையார் சமாளிப் பதற்குரிய சாதனங்கள் இல்லையென்று ஒப்புக்கொண்டு, ஆனால் தங்களாலியன்ற உதவியைச் செய்வார்களென்று கூறினார். நகர சபையார் தங்கள் கடமையை உணர்ந்த பிறகு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில் தாமதம் செய்யவில்லை.

மறுநாள், காலியாயிருந்த கிடங்கு ஒன்றை என் வசம் ஒப்புவித்து நோயாளிகளை அவ்விடத்துக்கு மாற்றும்படி

யோசனை சொன்னார்கள். ஆனால் அவ்விடத்தைச் சுத்தம் செய்யும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. கட்டிடம் மிகவும் அசுத்தமாயும், வசதிகள் அற்றதாயும் இருந்தது. நாங்களே அதைச் சுத்தம் செய்தோம். தர்ம சிந்தையுள்ள இந்தியர்களின் உதவியால் சில படுக்கைகளையும், மற்ற வசதிகளையும் தயாரித்தோம். இவ்வாறு அதைத் தற்காலிக வைத்திய சாலையாக ஆக்கிக்கொண்டோம். நகர சபையார் ஒரு தாதியை அனுப்பி வைத்தார்கள். அவள் பிராந்தியும், மற்ற வைத்திய சாதனங்களும் கொண்டு வந்தாள். ஆனால் இன்னமும் டாக்டர் காட்பிரே தான் பொறுப்பு வகித்தார்.

தாதி அன்புளங் கொண்டவள்; தானே நோயாளிகளுக்குப் பணிவிடை செய்ய விரும்பினாள். ஆனால் அவளையும் நோய் தொற்றிக் கொள்ளாதிருக்கும் பொருட்டு, அவள் நோயாளிகளைத் தொடும்படியே நாங்கள் விடவில்லை.

அடிக்கடி நோயாளிகளுக்குப் பிராந்தி கொடுத்து வரும்படி எங்களுக்குச் சொல்லப்பட்டிருந்தது. தாதிமுன்னெச்சரிக்கையாகத் தானும் பிராந்தி அருந்தியதுடன் எங்களையும் அருந்தும்படி சொன்னாள். ஆனால் எங்களில் யாரும் அதைத் தொடவில்லை நோயாளிகளுக்கு அது நன்மை தருமென்பதிலும் எனக்கு நம்பிக்கையில்லை. டாக்டர் காட்பிரேயின் அநுமதி பெற்று, பிராந்தி குடியாமல் இருக்கச் சித்தமாயிருந்த மூன்று நோயாளிகளுக்கு மண் சிகிச்சை செய்தேன். அவர்களுடைய தலையிலும் மார்பிலும் ஈர மண் வைத்துக் கட்டினேன். அவர்களில் இருவர் பிழைத்தெழுந்தனர். மற்ற இருபது பேரும் கிடங்கிலேயே உயிர் நீத்தார்கள்.

இதற்கிடையில், நகர சபையார் சுறு சுறுப்புடன் வேறு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வந்தனர். ஜோகானிஸ்பர்க்குக்கு ஏழு மைல் தூரத்தில் தொற்று நோயாளிகளை வைப்பதற்கு ஓர் இடம் இருந்தது. இறந்தவர்கள் போக மீதியிருந்த இரண்டு பேரும் அவ்விடத்தில் தயாரிக்கப்பட்ட கூடாரங்களுக்கு அனுப்பப் பட்டனர். புதிதாக நோய்வாய்ப் படுபவர்களையும் அவ்விடத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. எனவே நாங்கள் விடுதலை பெற்றோம்.

சில நாளைக்குள் மேற்கூறிய தாதி அந் நோய்க்கு ஆளாகி உடனே இறந்து போனாள் என்று தெரிய வந்தது. நோயாளிகளில் இருவர் மட்டும் பிழைத்தது எப்படி என்றும், எங்களுக்கு நோய் வராதிருந்தது எப்படி என்றும் சொல்ல முடியாது. ஆனால் இந்த அநுபவத்தின் பயனாக மண்சிகிச்சையில் என் நம்பிக்கை அதிகமாயிற்று. அவ்வாறே, பிராந்தியை மருந்தாக உபயோகிப்பதிலுங் கூடப் பயனுண்டா என்பதில் அவநம்பிக்கை வலுவடைந்தது. இந்த நம்பிக்கையும் அவநம்பிக்கையும் தகுந்த ஆதாரங்களைக் கொண்டன வல்லவென்று அறிவேன். எனினும் இவ்விஷயமாக அப்போது என்மனதில் தோன்றிய எண்ணங்கள் இன்றளவும் மாறாமல் இருந்து வருகின்றன.

கொள்ளை நோய் கிளம்பியதும் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதில், இந்தியர் வசித்த பகுதி நகரசபையாரின் வசம் வந்தபின்னர் அவர்கள் அதை அசட்டை செய்து விட்டார்களென்றும், அதனால் கொள்ளை நோய் தோன்றியதற்கு நகர சபையினரே பொறுப்பாளிகளாவார்களென்றும் கூறி பலமாகக் கண்டித்திருந்தேன். இக் கடிதத்தின் பயனாகவே, மிஸ்டர் ஹென்ரி போலக்

எனக்குத் துணைவராகக் கிடைத்தார். காலஞ் சென்ற ஜோசப் டோக் பாதிரியாரின் நட்புக்கும் அக் கடிதம் ஓரளவு காரணமா யிருந்தது.

சைவ போஜனசாலை யொன்றில் உணவருந்தி வந்தே னென்று முன்னொரு அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கி றேன். இங்கு மிஸ்டர் அல்பார்ட் வெஸ்ட் என்பாரைச் சந்தித்தேன். ஒவ்வொரு நாள் மாலையும் நாங்கள் மேற்படி போஜனசாலையில் சந்தித்து போஜனம் அருந்தியதும் உலா வச் செல்வது வழக்கம். மிஸ்டர் வெஸ்ட் ஒரு சிறு அச்சுக் கூடத்தில் பங்காளியா யிருந்தார். மகா மாரி தோன்றிய தைப் பற்றி நான் எழுதியிருந்த கடிதத்தை அவர் பத்திரிகை யில் படித்தார். அதோடு நான் போஜனசாலைக்கு வராமற் போகவே அவர் கவலைப்படலானார்.

என் சகாக்களும், நானும் மகா மாரி தோன்றியதி லிருந்து உணவைக் குறைத்துக் கொண்டு விட்டோம் கொள்ளை நோய்கள் பரவியிருக்கும்போது குறைவாகச்சாப் பிடுவது நீண்டநாளாக நான் அநுசரித்து வந்த முறை. ஆதலின் இந்நாட்களில் நான் மாலை உணவு அருந்துவதில்லை. மத்தியானச் சிற்றுண்டி மற்றவர்கள் வருவதற்கு முன் அருந்தி விட்டுப் போய் விடுவேன். போஜன சாலையின் சொந்தக்காரரை எனக்கு நன்ருய்த் தெரியும். நான் நோயா ளிகளுக்குப் பணிவிடை செய்து வருவதால் மற்றவர்க ளுடன் கூடியவரை நெருங்கிப் பழகாமலிருக்க விரும்புவ தாக அவரிடம் தெரிவித்திருந்தேன்.

இவ்வாறு என்னைப் போஜன சாலையில் காணமற் போகவே, ஒரு நாள் அதிகாலையில் நான் உலாவச் செல்ல ஆயத்தப் பட்டுக் கொண்டிருந்தபோது மிஸ்டர் வெஸ்ட்

என் வீட்டுக்கு வந்து கதவை இடித்தார். நான் கதவைத் திறந்ததும் அவர் சொன்னதாவது:—"போஜன சாலையில் உங்களைக் காணாததினால் ஏதேனும் நேர்ந்திருக்குமோ வென்று பயந்தேன். ஆதலின் அதிகாலையிலேயே உங்கள் வீட்டுக்கு வந்து பார்க்கத் தீர்மானித்தேன். போகட்டும், இப்போது நீங்கள் சொல்லும் வேலையைச் செய்ய சித்தமா யிருக்கிறேன். நோயாளிகளுக்குப் பணிவிடை செய்யத் தயார் என்னைச் சார்ந்திருப்பவர்கள் யாருமில்லை யென்பது தான் உங்களுக்குத் தெரியுமே?"

அவருக்கு நான் நன்றியறிதல் தெரிவித்து விட்டு ஒரு கணமும் யோசனை செய்யாமல் பதிலளித்ததாவது:— "உங்களை நோயாளிகளுக்குப் பணிவிடை செய்ய நான் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. புதிதாய் யாருக்கும் நோய் காணாவிட்டால் இரண்டொரு நாளில் எங்களுக்கே அவ்வேலை யில்லாமற்போகும். ஆனால் நீங்கள் செய்யக் கூடியது ஒன்றிருக்கிறது."

"அது என்ன?"

"டர்பனிலுள்ள 'இண்டியன் ஒபீனியன்' அச்சுக் கூடத்தை நீங்கள் பார்த்துக் கொள்ள முடியுமா? ஸ்ரீ மதன் ஜித்துக்கு இங்கே வேலையிருக்கலாம். அங்கு யாராவது ஒருவர் தேவை. நீங்கள் அங்கே சென்றால் கவலையின்றி யிருப்பேன்."

"எனக்கு இங்கே ஓர் அச்சுக்கூட முண்டென்று உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் அநேகமாகப் போக முடியுமென்றே நினைக்கிறேன். ஆனால் முடிவான பதில் சாயங்காலம் சொல்லலா மல்லவா? மாலையில் உலாவும் போது அதைப்பற்றிப் பேசுவோம்.

எனக்குப் பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று. அவ்வாறே அன்று மாலை சந்தித்துப் பேசினோம். அவர் போக ஒப்புக் கொண்டார். சம்பளத்தைப் பற்றி அவர் கவலைப்படவே யில்லை. ஏனெனில் அவர் நோக்கம் பணம் சம்பாதிப்ப தன்று; எனினும், மாதம் பத்து பவுன் சம்பளமும், லாபம் வந்தால் அதில் ஒரு பகுதியும் கொடுப்பதென்று தீர்மானிக்கப் பட்டது. மறு நாளே மாலை ரயிலில் மிஸ்டர் வெஸ்ட் டர்பனுக்குப் புறப்பட்டார். அவருடைய பாக்கிவசூலை என்னிடம் ஒப்புவித்துச் சென்றார். அன்று முதல் நான் தென்னாப்பிரிக்காவை விட்டுப் புறப்படும் வரை அவர் எனது சுக துக்கங்களில் பங்காளியா யிருந்து வந்தார்.

மிஸ்டர் வெஸ்ட், லிங்கன்ஷயரில் லௌத் என்னு மிடத்தைச் சேர்ந்த குடியானவர் குடும்பத்தில் பிறந்தவர். சாதாரண பள்ளிப் படிப்பு உடையவர். ஆனால் அநுபவம் என்னும் பள்ளிக்கூடத்திலும், சுயமுயற்சியினாலும் அதிகம் படித்திருந்தார். தூய்மையும், தெளிவும், கடவுள் பயமும், ஜீவகாருண்யமும் உள்ள ஆங்கிலேயர் அவர். இதற்கு மாறான குணம் எதையும் அவரிடம் நான் கண்டதில்லை.

பின்வரும் அத்தியாயங்களில் அவரைப் பற்றியும், அவருடைய குடும்பத்தாரைப் பற்றியும் இன்னும் அதிகம் தெரிந்து கொள்வோம்.

பதினேழாம் அத்தியாயம்

கூலிச்சேரி தீக்கிரையானது

நோயாளிகளைக் கவனிக்கும் வேலை எனக்கும் என் சகாக்களுக்கும் இல்லாமற் போயிற்றாயினும், கொள்ளை நோயின் காரணமாக ஏற்பட்ட

இன்னும் பல பிரச்னைகள் முடிவு செய்யப்படாமல் பாக்கி யிருந்தன.

'கூலிச்சேரி' விஷயத்தில் நகர சபையின் அசட்டை யைப்பற்றி முன்னமே சொல்லி யிருக்கிறேன். ஆனால் வெள் ளைக்காரர்களின் சௌக்கியத்தைப் பற்றிய வரை அச்சபை யார் மிக்க விழிப்புடன் இருந்தனர். அவர்களுடைய சுகத் தைப் பாதுகாக்க ஏராளமான பணம் செலவு செய்திருந்த தோடு, இப்போது கொள்ளை நோயை அடியோடு ஒழிப்ப தற்குப் பணத்தைத் தண்ணீரைப்போல் வாரி இரைத்த னர். இந்தியர்கள் விஷயத்தில் நகர சபை செய்தவை குறித்தும், செய்யாது விட்டவை குறித்தும் அதன் மீது நான் பற்பல குற்றங்கள் சுமத்தியிருந்தேனாயினும், வெள்ளை நகர வாசிகளின் க்ஷேமத்தில் அச்சபை காட்டிய அக்கறை யைப் பாராட்டாதிருக்க முடியவில்லை. அதன் நன் முயற்சிகளுக்கு என்னாலியன்ற உதவி செய்தேன். நான் ஒத்துழைக்க மறுத்திருந்தால் நகர சபையின் வேலை கஷ்ட மாகி யிருக்கலாம். அப்போது, ஆயுதந் தரித்த படைகளை ஏவவும், மற்றும் பலவந்த முறைகளைக் கையாளவும் நகர சபை தயங்கி யிராது.

ஆனால் அவ்வாறெதுவும் நேராமல் செய்தோம். இந்தி யர்களுடைய நடக்கை நகர சபை அதிகாரிகளுக்கு மகிழ்ச்சிதந்தது. இதனால் மகா மாரி சம்பந்தமான பிந்தைய நடவடிக்கைகள் பெரும்பாலும் சுலபமாயின. இந்தியர்க ளிடம் எனக்கிருந்த செல்வாக்கை யெல்லாம் பயன்படுத்தி நகர சபையின் முறைகளுக்கு இணங்கும்படி செய்தேன். இவையெல்லாம் இந்தியர்களுக்குக் கஷ்டமாகவே இருந்த தாயினும், அவர்களில் யாரும் என் புத்திமதியைப் புறக் கணித்ததாக எனக்கு ஞாபகமில்லை.

கூலிப் பகுதியைச் சுற்றிப் பலமான காவல் போட்டு, அநுமதியில்லாமல் உள்ளே போவதும், வெளியே வருவதும் இயலாமல் செய்யப்பட்டது. எனக்கும் என் சகாக்களுக்கும் மட்டும் நினைத்தபோது உள்ளே போய் வர அநுமதிச் சீட்டுகள் வழங்கி யிருந்தார்கள். அவ்விடத்தில் வசித்த எல்லாரையும் வெளியேறச் செய்து, ஜோகானிஸ் பர்க்குக்கு 13 மைல் தூரத்திலிருந்த திறந்த வெளியில் கூடாரங்களில் மூன்று வார காலம் வசிக்கச் செய்து விட்டு சேரிக்குத் தீ வைத்துவிட வேண்டுமென்பது நோக்கம். உணவுப் பொருள்களுடனும், மற்றும் அவசியமான சாமான்களுடனும் ஜனங்களைக் கிளப்பிக் கொண்டுபோய்க் கூடாரத்தில் சேர்க்கச் சில நாள் ஆகு மல்லவா? இந்த இடைக்காலத்திற்கு காவல் அவசியமா யிருந்தது.

ஜனங்கள் பெரிதும் பயப்பிராந்தி யடைந்திருந்தார்கள். அடிக்கடி நான் வந்துகொண்டிருந்தது அவர்களுக்கு ஆறுதலா யிருந்தது. ஏழைகள் பலர் தாங்கள் மிகுத்திருந்த சிறு தொகைகளைத் தரையில் புதைத்து வைத்திருந்தார்கள். அவற்றையெல்லாம் தோண்டி யெடுக்க வேண்டியிருந்தது. அவர்களுக்குப் பாங்கி கிடையாது. பாங்கி யென்றாலே தெரியாது. நானே அவர்களுடைய பாங்கி யானேன். என் காரியாலயத்தில் பணம் வந்து குவிந்தது. இத்தகைய நெருக்கடியில் என் உழைப்புக்குக் கூலி கேட்பது நியாய மாகாதென்று கருதினேன். எப்படியோ வேலையைச் சமாளித்துக் கொண்டேன். என்னுடைய பணத்தைப் போட்டு வைத்திருந்த பாங்கியின் மானேஜரை எனக்கு நன்றாய்த்தெரியும். இந்தப் பணங்களையும் அவரிடந்தான் போட்டு வைக்க வேண்டு மெனத் தெரிவித்தேன். செப்புக்காசும், வெள்ளி நாணயங்களும் ஏராளமாய்

வந்தால் பாங்கிகளுக்குத் தொந்திரவு தான். அதிலும் மகா மாரி பரவியிருந்த பிரதேசத்திலிருந்து வரும் நாணயங்களைத் தொடுவதற்குப் பாங்கி குமாஸ்தாக்கள் மறுத்து விடலா மென்னும் பயமும் இருந்தது. ஆனால் மேற்படி மானேஜர் எனக்கு எல்லா வழியிலும் உதவினார். நாணயங்களில் நோய்க் கிருமிகள் இருக்க முடியா வண்ணம் அவற்றை மருந்தினால் சுத்தம் செய்து அனுப்பத் தீர்மானித்தோம். ஏறக்குறைய 60,000 பவுன் பாங்கில் கட்டப்பட்டதாக ஞாபக மிருக்கிறது. பணம் அதிகம் வைத்திருந்தவர்களை, தவணை முறையில் போடும்படி சொன்னேன். அவர்கள் அவ்வாறே செய்தார்கள். இதன் மூலம் சிலர் பணத்தைப் பாங்கியில் போட்டு வைக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டனர்.

• •

கடைசியாக, அவ்விடத்திலிருந்த இந்தியர்கள் அனைவரும் தனி ரயில் வண்டியில் ஜோகானிஸ்பர்க்குக்கு அருகிலிருந்த கிளிப்ஸ் ரூட் பண்ணைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டனர். அங்கு நகர சபை தன் சொந்தச் செலவில் அவர்களுக்கு உணவுப் பொருள்கள் அளிக்க ஏற்பாடு செய்திருந்தது. இவ்வாறு திறந்த வெளியில் கூடாரத்தில் வசித்துப் பழக்கமில்லாதவர்க ளாதலால் ஜனங்கள் முதலில் வியப்பும், வேதனையும் அடைந்தார்கள். ஆனால் பெரிய அசௌகரியம் எதுவும் அவர்களுக்கு இருக்கவில்லை. 24-மணி நேரத்திற்குள் தங்கள் துன்பங்களை மறந்து குதூகலமாய் வாழலானார்கள். தினம் ஒருமுறை நான் சைகிளில் சென்று அவர்களைப் பார்த்து வந்தேன். நான் போனபோதெல்லாம் அவர்கள் பாடிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் சந்தோஷமா யிருந்தார்கள். மூன்று வாரம் திறந்த வெளியில் வசித்ததின்

பயனாக அவர்களுடைய தேக சுகம் பெரிதும் அபிவிருத்தி யடைந்தது.

இந்தியர் பகுதி காலி செய்யப்பட்ட மறுநாளே அதற்குத் தீ வைக்கப்பட்டதாக எனக்கு ஞாபகம். தீக்கிரையாகாமல் எந்தச் சாமானையும் காப்பாற்ற நகரசபை விருப்பங் காட்டவில்லை. இதே சமயத்தில் நகர சபை மார்க்கெட்டில் சில செத்த எலிகள் அகப்பட்டதன் காரணமாக, மார்கெட்டிலிருந்த நகர சபையின் மரம் முழுவதையும் கொளுத்தி விட்டார்கள். இதில் 10,000 பவுன் நஷ்டமேற்பட்டது.

நகரசபைக்கு இவ்வாறு ஏராளமாக செலவு நேர்ந்ததாயினும், கொள்ளை நோய் பரவாமல் தடுப்பதில் அது வெற்றி பெற்றுவிட்டது. மீண்டும், நகரத்தில் பயமின்றி வாழ்தல் சாத்தியமாயிற்று.

பதினெட்டாம் அத்தியாயம்

ஒரு புத்தகத்தின் மந்திர சக்தி

ஈரு மகாமாரியின் பயனாக ஏழை இந்தியர்களிடம் என் செல்வாக்கு வளர்ந்தது. தொழில் பெருகியதோடு பொறுப்பும் அதிகமாயிற்று. புதிய ஐரோப்பியர் சிலருடன் நெருங்கிப் பழக நேர்ந்ததின் பயனாக, புதிய கடமைகள் ஏற்பட்டன.

மிஸ்டர் வெஸ்டுடன் பழக்கம் சைவ உணவுச் சாலையில் நேர்ந்ததுபோல் மிஸ்டர் போலக்கின் அறிமுகமும் அங்கேதான் ஏற்பட்டது. ஒரு நாள் மாலை நான் உணவருந்திக் கொண்டிருந்தபோது, மற்றொரு மேஜையில் அமர்ந்து

சாப்பிட்டுக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் தமது பெயர் எழுதிய சீட்டை அனுப்பி என்னுடன் பேச விரும்புவதாகத் தெரிவித்தார். என்னுடைய மேஜைக்கு வரும்படி அவரை யழைத்தேன். அவ்வாறே வந்து சேர்ந்தார்.

"நான் 'கிரிடிக்' பத்திரிகையின் உபபத்திராதிபன். மகாமாரியைப்பற்றி நீங்கள் பத்திரிகைகளுக்கு எழுதி யிருந்த கடிதத்தைப் படித்தேன். அதிலிருந்து உங்களைப் பார்க்க வேண்டு மென்னும் ஆவல் உண்டாயிற்று. இந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டது குறித்து மிகவும் மகிழ்ச்சி யடைகி றேன்" என்று அவர் சொன்னார்.

மிஸ்டர் போலக்கின் கபடமற்ற தன்மை என்னைக் கவர்ந்து விட்டது. அன்று மாலையே நாங்கள் ஒருவரை யொருவர் நன்கறிந்து கொண்டோம். வாழ்க்கையின் முக் கிய தத்துவங்களைப்பற்றி எங்கள் கொள்கைகள் ஏறக் குறைய ஒத்தவையாயிருந்தன. அவர் எளிய வாழ்க்கையை விரும்பினார். அவருடைய புத்தி ஒப்புக்கொள்ளும் எதையும் நடக்கையில் கொண்டுவந்து விடும் அதிசய ஆற்றல் அவரி டம் இருந்தது. அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பல முக்கியமான மாறுதல்கள் நினைத்த மாத்திரத்தில் செய்து முடித்தவை யாகும்.

"இண்டியன் ஒபீனியன்" பத்திரிகைக்கு நாளுக்கு நாள் பணச் செலவு அதிகமாகிக் கொண்டு வந்தது. மிஸ்டர் வெஸ்டு அனுப்பிய முதல் அறிக்கையே பீதி தருவதா யிருந்தது, அவர் எழுதியதாவது:—"நீங்கள் எதிர்பார்க்கும் வண்ணம் லாபம் வருமென்று எனக்குத் தோன்றவில்லை. நஷ்டம் வரலாமென்றும் அஞ்சுகிறேன். கணக்குப் புத்தகங்கள் ஒழுங்காக வைக்கப்படவில்லை.

நிலுவை ஏராளமாய் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவற்றைப் பற்றித் திட்டமான விவரம் கண்டு பிடிக்க முடியவில்லை. எல்லாம் தலைகீழாக மாற்றப்பட வேண்டும். ஆனால் நீங்கள் பயப்பட வேண்டாம். என்னாலியன்ற வளவு காரியங்களை ஒழுங்கு படுத்த முயல்வேன். லாபம் வந்தாலும், வராவிடினும் வேலை பார்க்கவே போகிறேன்.

லாபம் வராதென்று கண்டதும் மிஸ்டர் வெஸ்ட் வேலையை விட்டுப் போயிருக்கக் கூடும். அப்படிச் செய்திருந்தால் அவர்மீது குற்றம் சுமத்தி யிருக்க மாட்டேன். தகுந்த ஆதாரமின்றி 'லாபம் வரக்கூடிய தொழில்' என்று அதைக் கூறியதற்காக, என்னைக் கடிந்து கொள்ளவும் அவருக்கு உரிமையுண்டு. ஆனால் அவ்வாறு ஒரு வார்த்தையேனும் அவர் சொல்லவில்லை. ஆயினும், இதிலிருந்து, நான் எளிதில் பிறரை நம்பி விடுபவன் என்னும் எண்ணம் அவருக்கு உண்டாகியிருக்க வேண்டும். ஸ்ரீ மதன் ஜித் போட்ட வரவு செலவுத் திட்டத்தை நான் பரிசீலனை செய்யாமலே ஒப்புக்கொண்டு, லாபம் வருமென்பதாக மிஸ்டர் வெஸ்டுக்குச் சொன்னேனல்லவா?

பொது ஊழியத்தில் ஈடுபட்டவன் தானே ஆராய்ந்து உண்மையென்று தேராத விஷயங்களைச் சொல்லக் கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக சத்திய உபாசகன் மிகவும் எச்சரிக்கை யுடையவனாயிருத்தல் வேண்டும். தான் நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளாத விஷயத்தைப் பிறர் நம்பும்படி செய்வது சத்தியத்துக்கு ஊறு செய்வதாகும். இதை யெல்லாம் இப்போது நான் நன்கு அறிந்திருந்த போதிலும், பிறரை எளிதில் நம்பும் வழக்கத்தை இன்னும் முற்றும் போக்கடித்துக் கொள்ளவில்லை. இதை மிகுந்த மனத்துயருடன்

தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய ஆற்றலுக்கு அதிகமாக வேலை செய்து விடவேண்டுமென்னும் ஆசையே இதற்குக் காரணமாகும். இந்த ஆசை, என்னைவிட என் சகாக்களுக்கு அடிக்கடி அதிக தொந்திரவை அளித்து வந்திருக்கிறது.

மிஸ்டர் வெஸ்டின் கடிதம் கிடைத்ததும் நேட்டாலுக்குப் புறப்பட்டுச் சென்றேன். மிஸ்டர் போலக் இப்போது என்னுடைய பூரண நம்பிக்கைக்கு உரியவரா யிருந்தார். அவர் ரயில் நிலையத்துக்கு என்னை வழி யனுப்பவந்தார். பிரயாணத்தின்போது படிப்பதற்கு ஒரு புத்தகம் கொடுத்தார். அது நிச்சயமாய் எனக்குப் பிடித்திருக்கு மென்று கூறினார். அது ரஸ்கினுடைய "Unto this Last" என்னும் புத்தகம்.

அதைப் படிக்கத் தொடங்கிய பின்னர் இடையில் கீழே வைக்க முடியவில்லை. என் உள்ளத்தை அது முழுதும் கவர்ந்து விட்டது. ஜோகானிஸ்பர்க்கிலிருந்து நேட்டாலுக்கு 24-மணி நேரப் பிரயாணம். வண்டி டர்பனுக்கு மாலையில் போய்ச் சேர்ந்தது. அன்றிரவு எனக்குத் தூக்கம் பிடிக்கவே யில்லை. அந்த நூலின் இலட்சியங்களுக்கிணங்க என் வாழ்வு முறையை மாற்றிக் கொள்ளத் தீர்மானித்தேன்.

இதற்குமுன் ரஸ்கினுடைய புத்தகம் ஒன்றுகூட நான் படித்ததில்லை. நான் கல்வி கற்ற காலத்தில் பாடபுத்தகங்களல்லாமல் வேறு புத்தகமே படித்ததில்லையென்று சொல்லிவிடலாம். உலக வாழ்க்கையில் பிரவேசித்த பின்னரோ படிப்பதற்கு நேரமே கிடைப்பதில்லை. ஆதலின் புத்தக ஞானம் எனக்கு மிகவும் குறைவென்றே கூறவேண்டும்.

இதனால் எனக்கு அதிக நஷ்டம் நேர்ந்துவிட வில்லையென்பது என் நம்பிக்கை. படித்தது குறைவாயிருந்த படியால், படித்ததைக் கூடியவரை நன்றாக ஜீரணித்துக் கொள்வதற்கு சாத்தியப்பட்டது. நான் படித்த சில புத்தகங்களுக்குள்ளே, என் வாழ்வு முறையில் உடனே மாறுதல் உண்டு பண்ணியது "Unto this Last" என்பதேயாகும். பிற்காலத்தில், அதை குஜாராத்திரியில் "சர்வோதயா" (சர்வஜன நலம்) என்னும் பெயருடன் மொழி பெயர்த்தேன்.

ஏற்கனவே என் உள்ளத்தில் உறுதிப்பட்டிருந்த கொள்கைகளில் சிலவற்றை ரஸ்கினுடைய இச்சிறந்த புத்தகத்தில் பிரதிபலித்திருக்கக் கண்டதாக என் நம்பிக்கை. ஆகையினால்தான் அந்நூல் என் உள்ளத்தை அவ்வளவு தூரம் கவர்ந்தது மன்றி, என் வாழ்வு முறையையும் அடியோடு மாற்றிவிட்டது. மனிதனுடைய இதயத்தில் மறைந்து நிற்கும் நல்ல சக்திகளை விகாசிக்கச் செய்பவனே கவியாவான். கவிகளின் இவ் வாற்றல் எல்லார் விஷயத்திலும் ஒரே விதமாகப் பயன்படுவதில்லை. ஏனெனில் எல்லாரும் ஒரே அளவில் வளர்ச்சி பெற்றிருக்க வில்லையன்றோ?

அப்புத்தகம் பின்வரும் சித்தாந்தங்களைப் போதிப்பதாக நான் அறிந்து கொண்டேன்:—

(1) தனி மனிதனுடைய நன்மை சர்வ ஜனநன்மையில் அடங்கியதாகும்.

(2) வக்கீலின் உழைப்பும் நாவிதனுடைய உழைப்பும் ஒரே பெறுமானமுள்ளவை தான். ஏனெனில் அனைவருக்கும் தங்கள் உழைப்பினால் ஜீவனோபாயம் சம்பாதிக்கும் உரிமை சமமாக உண்டு.

(3) உடலை உழைத்து வாழும் வாழ்வே, அதாவது குடியானவனுடைய அல்லது கைத்தொழிலாளியின் வாழ்க்கையே மேன்மையான வாழ்க்கையாகும்.

மேற்சொன்னவற்றில், முதலாவது கொள்கை ஏற்கனவே எனக்குத் தெரிந்திருந்தது. இரண்டாவது கொள்கை, அவ்வளவு தெளிவாக இல்லாவிடினும், ஓரளவு உதயமாகியிருந்தது. ஆனால் மூன்றாவது கொள்கை என் மனதில் தோன்றியதே கிடையாது. இரண்டாவது, மூன்றாவது கொள்கைகள் முதல் கொள்கையில் அடங்கின என்பதை மேற்சொன்ன புத்தகம் வெட்ட வெளிச்சமாக எனக்கு விளங்கச் செய்தது. வெளிச்சங் கண்டதும் நானும் கண் விழித்தெழுந்தேன். இந்தக் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவரத் தயாரானேன்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

போனிக்ஸ் குடியேற்றம்

மிஸ்டர் வெஸ்டினிடம் இவ்விஷய மனைத்தையும் பற்றிக் கலந்து பேசினேன். ரஸ்கினுடைய புத்தகத்தினால் என் மனோநிலையில் ஏற்பட்டுள்ள மாறுதலைப் பற்றி விவரமாய்க் கூறினேன். "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகையை ஒரு விவசாயப் பண்ணைக்குக் கொண்டு போய், அங்கு ஒவ்வொருவரும் ஜீவனத்துக்கு அவசியமான சம ஊதியம் பெற்றுக்கொண்டு பண்ணை வேலை செய்ய வேண்டுமென்றும், ஒழிந்த வேளையில் அச்சுக்கூட வேலையைப் பார்க்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்ய விரும்புவதாகத் தெரிவித்தேன். இந்த யோசனையை மிஸ்டர்

வெஸ்ட் அங்கீகரித்தார். ஜாதி, நிற வேற்றுமையின்றி எல்லாருக்கும் மாதச் சம்பளம் 3 பவுன் என்று நிர்ணயிக்கப் பட்டது.

ஆனால் அச்சுக்கூடத்தில் வேலை செய்துகொண்டிருந்த சுமார் பத்துப் பன்னிரண்டு பேரும் இந்த ஏற்பாட்டுக்கு இணங்குவார்களா வென்பது கேள்வி. எங்கேயோ மூலையிலுள்ள ஒரு பண்ணையில் வந்து குடியேறவும், உயிர் வாழப் போதுமான சம்பளம் மட்டும் பெற்றுக்கொள்ளவும் அவர்கள் அனைவரும் சம்மதிப்பார்களென்று எதிர்ப்பார்க்க முடியுமா? ஆதலின் புதிய திட்டத்தை உடனே ஒப்புக் கொள்ளாதவர்கள் வழக்கம்போல் சம்பளம் பெற்று வேலை செய்ய வேண்டு மென்றும், நாளடைவில் குடியேற்ற வாசிகளில் ஒருவராக ஆக முயலவேண்டு மென்றும் தீர்மானித்தோம்.

பின்னர் அச்சுக்கூட ஊழியர்களிடம் கலந்து பேசினேன். ஸ்ரீ மதன்ஜித்துக்கு என் யோசனை பிடிக்கவேயில்லை. அது மூடத்தனமென்று அவர் கருதினர். அப்படிச் செய்தால் எல்லாம் பாழாகி விடுமென்றும், வேலைக்காரர்கள் ஓடிப்போவார்க ளென்றும், "இண்டியன் ஒபீனியன்" நின்று விடுமென்றும், அச்சுக்கூடத்தை மூடவேண்டியதாகு மென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

அச்சுக்கூடத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்களில் என் பங்காளி சகோதரரான மகன்லால் காந்தியும் ஒருவர். வெஸ்டினிடம் என் யோசனையைத் தெரிவித்த போதே அவரிடமும் தெரிவித்தேன். அவருக்கு மனைவியும், குழந்தைகளும் இருந்தார்கள். ஆனால் அவர் குழந்தைப்

பிராயத்திலிருந்து என் கீழ்ப் பயிற்சி பெறவும், வேலை செய்யவும் விரும்பி அவ்வாறே செய்து வந்தவர். என்னிடம் அவருக்குப் பூரண நம்பிக்கை இருந்தது. ஆதலின் ஓர் ஆட்சேபமும் சொல்லாமல் உடனே என் யோசனைக் கிணங்கினார். அன்று முதல் இன்று வரை அவர் என்னுடனேயே இருந்து வருகிறார். இயந்திர வேலைக்காரரான கோவிந்தசாமியும் என் யோசனைக் கிணங்கினார். மற்றவர்கள் புதிய ஏற்பாட்டை ஒப்புக்கொள்ள வில்லை. ஆனால் அச்சுக்கூடத்தை எங்கே கொண்டுபோனாலும் அங்கே தாங்களும்வருவதாகச் சொன்னார்கள்.

வேலைக்காரர்களுடன் பேசி முடிப்பதற்கு இரண்டு தினங்களுக்கு மேல் ஆகவில்லை யென்று நினைக்கிறேன். உடனே, 'டர்பனுக்கு சுற்றுப் புறத்தில் ஏதேனும் ஒரு ரயில்வே நிலையத்தை யடுத்த இடத்தில் நிலம் விலைக்குத் தேவை' என்று விளம்பரம் செய்தேன். போனிக்ஸ் என்னும் இடத்தில் நிலம் விற்கத் தயாரா யிருப்பதாய் பதில் வந்தது. மிஸ்டர் வெஸ்டும், நானும் ஸ்தலத்தைப் பார்வையிடச் சென்றோம். ஒரு வாரத்திற்குள் 20 ஏக்கரா கொண்ட நிலம் வாங்கி விட்டோம். அந் நிலத்தில் இனிய நீர் ஊற்று ஒன்றும், மாமரம், கிச்சிலி மரம் சிலவும் இருந்தன. இதை யடுத்து 80 ஏக்கரா விஸ்தீரணமுள்ள நிலம் ஒன்று இருந்தது. அதில் இன்னும் அதிக பழ விருட்சங்களும், ஒரு பழைய குடிசையும் இருந்தன. இதையும் நாங்கள் வாங்கினோம். இரண்டும் சேர்ந்து ஆயிரம் பவுன் விலையாயிற்று.

இத்தகைய முயற்சிகளில் காலஞ்சென்ற ஸ்ரீ ரஸ்டம்ஜி எனக்கு எப்போதும் உதவியா யிருந்து வந்தார். அவர் இந்தத் திட்டத்தைப் பெரிதும் விரும்பினார். ஒரு பெரிய

கிடங்குக்குக் கூரை வேயப்பட்டிருந்த இரும்புத் தகடு களையும், மற்றும் வீடு கட்டும் சாமான்களையும் அவர் கொடுத்தார். இவற்றைக் கொண்டு வேலை தொடங்கினோம். என்னுடன் போயர் யுத்தத்தின்போது ஊழியம் செய்த இந்தியத் தச்சரும், கொத்தரும், சிலர் அச்சுக்கூடத்துக்கு ஒரு கொட்டகை போட்டுத் தந்தார்கள். 75 அடி நீளமும், 50 அடி அகலமுமுள்ள இக் கொட்டகையின் வேலை ஒரு மாதத்தில் முடிந்து விட்டது. மிஸ்டர் வெஸ்டும் மற்றவர் களும் பெரும் அபாயத்துக்குத் துணிந்து அங்கேயே தச்சர் கொத்தர் முதலியோருடன் தங்கி யிருந்தனர் அதுவரை அவ்விடம் மனிதசஞ்சார மற்றதா யிருந்தது அடர்ந்த புல் முளைத்திருந்தது. பாம்புகள் குடி புகுந்திருந்தன. எனவே அங்கு வசித்தல் மிகவும் அபாயகரம் என்று சொல்ல வேண்டுவதில்லை. முதலில் எல்லாரும் கூடாரத்தில் வசித்தோம். பிரதான கட்டிடம் ஒரு மாதத்தில் தயாராகி விட்டது. சாமான்களில் பெரும் பகுதியை ஒரே வாரத்தில் கொண்டு வந்து சேர்த்து விட்டோம். டர்பனிலிருந்து அவ் விடம் பதின்மூன்று மைல். போனிக்ஸ் ரயில் நிலையத்தி லிருந்து இரண்டரை மைல் தான்.

"இண்டியன் ஒபீனியன்" பத்திரிகையின் ஒரே ஓர் இதழ் மட்டுமே, வெளியே 'மெர்க்குரி' அச்சுக் கூடத்தில் அச்சடிக்க வேண்டி நேர்ந்தது.

பொருள் சேர்க்கும் நோக்கத்துடன் இந்தியாவி லிருந்து என்னுடன் தென்னாப்பிரிக்கா போந்திருந்த என் நண்பர்களையும், உறவினர்களையும் இப்போது போனிக் ஸுக்கு இழுக்க முயன்றேன். அவர்கள் ஏதேதோ தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள். பணந் திரட்டுவதற் கென்றே வந்தவர்களாதலின் அவர்களை இந்தப் புதிய வாழ்

வுக்கு இணங்கச் செய்வது மிகவும் கஷ்டமா யிருந்தது. ஆயினும் சிலர் சம்மதித்தனர். அவர்களில் மகன்லால் காந்தியின் பெயரையே சிறப்பாகக் குறிப்பிடக்கூடும். மற்றவர்கள் தங்கள் தங்கள் தொழில்களுக்கே திரும்பிச் சென்றூர்கள். மகன்லால் காந்தி மட்டும் தமது பழைய தொழிலுக்கு அடியோடு தலை முழுகி விட்டு என்னிடம் சேர்ந்தார். தார்மிக சோதனைகளில் எனக்கு முதன் முதல் துணைவர் ஆனவர்களிலே அவரே. தமது திறமையினுலும் தியாகத்தினுலும் பக்தியினுலும் தலை சிறந்து விளங்குகிருர். பற்பல கைத் தொழில்களையும் தாமே கற்றுத் தேர்ச்சி யடைந்தவர் என்ற முறையில் எனது துணைவர்களுக் குள்ளே அவருக்கு ஓர் உயர் தனி ஸ்தானம் உண்டு.

இவ்வாறு 1904-ல் போனிக்ஸ் குடியேற்றம் ஆரம்பிக் கப்பட்டது. எவ்வளவோ இடுக்கண்களைக் கடந்து இன்று வரை "இண்டியன் ஒபீனியன்" அங்கேயே பிரசுரிக்கப் பட்டு வருகிறது.

இம் முயற்சியின் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட கஷ்டங் கள் செய்த மாறுதல்கள், ஆசைகள், ஏமாற்றங்கள் முதலியவற்றைப் பற்றித் தனி அத்தியாய மொன்றில் கூற வேண்டும்.

இருபதாம் அத்தியாயம்

முதல் இரவு

போனிக்ஸில் "இண்டியன் ஒபீனியன்" முதல் இதழை அச்சிட்டு வெளியிடுதல் இலகுவான காரியமாயில்லை. முன்னெச்சரிக்கையாக நான் இரு காரி யங்கள் செய்யாம லிருந்திருப்பின் முதல் இதழ் வெளி

யிடப் படாமலே போயிருக்கும்; அல்லது மிகத் தாமதமாக வெளியாகி யிருக்கும். அச்சுக் கூடத்தில் என்ஜின் வைத்து வேலை செய்ய எனக்குப் பிரியமில்லை. விவசாய வேலை கையினால் செய்யு மிடத்தில் அச்சுக்கும் கை இயந்திரம் உபயோகப் படுத்துவதே பொருத்தமா யிருக்கும் என நினைத்தேன். ஆனால் இது இயலாத காரியமென்று தோன்றியபடியால், எண்ணெய் என்ஜின் ஒன்று அமைத் திருந்தோம். ஆயினும், என்ஜின் வேலை செய்யாவிடின், கையினால் காரியம் நடத்துவதற்குரிய ஏற்பாடும் தயாரா யிருக்கட்டுமென்று வெஸ்டினிடம் சொல்லி யிருந்தேன். எனவே, கையினால் இயக்கக்கூடிய சக்கரம் ஒன்றும் அவர் வைத்திருந்தார். இதுவரை பத்திரிகையின் அளவு சாதாரண தினசரிப் பத்திரிகைகளின் அளவா யிருந்து வந்தது. இனி, போனிக்ஸைப் போன்ற மூலையில் வெளி யாகும் பத்திரிகைக்கு அந்த அளவு தகுதியல்ல வென்று எண்ணி 'பூல்ஸ் காப்' அளவுக்கு மாற்றினோம். அவசரம் நேர்ந்தால் 'டிரெடில்' இயந்திரத்தில் அடித்து விடவும் சௌகரியமா யிருக்கட்டு மென்று கருதி இப்படிச் செய் தோம்.

ஆரம்பத்தில், பத்திரிகை வெளியாவதற்கு முன்தின இரவுகளில் நாங்கள் எல்லாரும் கண் விழித்து வேலைசெய்ய வேண்டி யிருந்தது. இளைஞர், விருத்தர் அனைவரும் பத்தி ரிகை மடிப்பதில் உதவி செய்வார்கள். இரவு பத்து மணியி லிருந்து நடுநிசிக்குள் வேலை முடிவது வழக்கம்.

ஆனால் முதல் இதழ் வெளியாக வேண்டிய தினத் துக்கு முன்னிரவு நாங்கள் பெற்ற அநுபவம் என்றும் மறக்கக் கூடாத தொன்றாகும். அச்சுக் கோத்து முடிந்து இயந்திரத்தில் பொருத்தியாகி விட்டது. ஆனால் என்ஜின்

வேலை செய்யவில்லை. என்ஜினை அமைத்து ஓட்டித் தருவ தற்கு டர்பனிலிருந்து என்ஜினியரை வரவழைத்திருந்தோம். அவரும் வெஸ்டும் தங்களாலியன்றவரை பார்த்தும் என்ஜினை ஓட்டச்செய்ய முடியவில்லை. வெஸ்ட் துக்கத்தி லாழ்ந்தவராய் கண்ணில் நீர் ததும்ப என்னிடம் வந்து "என்ஜின் ஓடவில்லை, நாளை பத்திரிகை வெளிவராது" என்றார். அவருக்குச் சமாதானமாக நான் கூறியதாவது:—

"அதற்கு நாமென்ன செய்யலாம்? கண்ணீர்விடுவதில் பயனில்லை. மனிதப் பிரயத்தனத்தினால் ஆகக்கூடிய தெல்லாம் செய்து பார்த்து விடுவோம். கைச் சக்கரத்தின் விஷய மென்ன;"

"கைச்சக்கரம் இருக்கிறது. அதைச்சுற்ற ஆட்களுக்கு எங்கே போவது? நம்மால் முடியும் காரியமல்ல. நான்கு பேராய் மாற்றி மாற்றிச் சுற்றவேண்டும். நமது ஆட்களோ ஏற்கனவே களைத்துப் போயிருக்கிறார்கள்" என்றார்.

கட்டிட வேலை இன்னும் முழுதும் முடியவில்லை. ஆதலின் தச்சர்கள் எங்களுடன் இருந்தார்கள். அவர்கள் அச்சுக் கூடத்திலேயே படுத்துறங்கினார்கள். அவர்களைச் சுட்டிக் காட்டி "இந்தத் தச்சர்களை நாம் உபயோகப் படுத்திக்கொள்ளக் கூடாதா? அவர்களும் சேர்ந்தால் இரவு முழுவதும் நாம் வேலை செய்யலாம். இந்த உபாயம்ஒன்று பாக்கி இருக்கிறது" என்று நான் கூறினேன்.

"தச்சர்களை எழுப்ப எனக்குத் துணிவில்லை. நமது ஆட்களோ உண்மையிலேயே நிரம்பக் களைத்துப் போயிருக் கிறார்கள்" என்றார் வெஸ்ட்.

"அந்தக்கவலை உங்களுக்கு வேண்டாம்; அவர்களுடன் பேசி முடிப்பதற்கு நான் இருக்கிறேன்" என்றேன்.

"அப்படியானால் வேலை நடந்துவிடக் கூடும்" என்றார் வெஸ்ட்.

தச்சர்களை எழுப்பி அவர்களை இவ்வேலையில் உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டேன். அதிகமாக அவர்களை வற்புறுத்தவே அவசியமில்லாம லிருந்தது, "அவசரத்தில் உதவி செய்யவில்லை யென்றால் நாங்கள் இருந்து என்ன பயன்? நீங்கள் இளைப்பாறுங்கள். நாங்கள் அவ்வேலையைப் பார்த்துக் கொள்ளுகிறோம். எங்களுக்கு அது எளியது" என்றார்கள். எங்கள் சொந்த ஆட்கள் வேலைக்குத் தயாரா யிருந்தார்களென்று சொல்லவேண்டுவதில்லை.

வெஸ்ட் மிகுந்த ஆனந்தங் கொண்டார். வேலை ஆரம் பித்தபோது அவர் தோத்திரப் பாட்டு ஒன்று பாடத் தொடங்கினார், தச்சர்களைப் பிரித்து விட்டேன். முறைப்படி மற்றவர்களும் வேலை செய்தார்கள். இவ்வாறு காலை 7 மணி வரையில் வேலை செய்தோம். ஆனால் இன்னும் வேலை நிறைய பாக்கி இருந்தது. இப்போது மீண்டும் என்ஜினியரை எழுப்பி என்ஜினை ஓட்டச்சொல்லிப் பார்க் கலாமென்று மிஸ்டர் வெஸ்டினிடம் சொன்னேன். இம் முறையேனும் அவர் வெற்றி பெற்றால் வேலை காலத்தில் முடிந்து விடும்.

அவ்வாறே வெஸ்ட் அவரை எழுப்பினார் அவர் உடனே என்ஜின் அறைக்குச் சென்றார். என்ன ஆச்சர்யம்! என்ஜினைத் தொட்ட உடனே அது ஓட ஆரம்பித்தது! அச்சுக்கூடம் முழுவதிலும் ஆனந்தகோஷம் நிரம்பியது. "இதன் காரணம் என்ன? நேற்றிரவு நாம் எவ்வளவோ முயன்றும் பயன்படாமற் போயிருக்க, இன்று காலை கோளாறு ஒன்றுமே யில்லாததுபோல் ஓடத் தொடங்கி விட்டதே" என்று நான் கேட்டேன்.

வெஸ்டோ என்ஜினியரோ - நன்ருக நினைவில்லை - கூறியதாவது :—“இதற்குக் காரணம் கூறுதல் கஷ்டம். இயந்திரங்கள் சில சமயம் நடந்து கொள்வதைப் பார்த்தால் நம்மைப் போலவே அவற்றிற்கும் ஓய்வு தேவை என்று காணப்படுகிறது.”

என்ஜின் வேலை செய்ய மறுத்தது எங்களுக்கு ஏற்பட்ட ஒரு சோதனை என்றே எனக்குத் தோன்றிற்று. நல்ல சமயத்தில் அது மீண்டும் ஓடத் தொடங்கியது எங்கள் உண்மையான, மனப்பூர்வமான உழைப்பின் பயன் என்று கருதினேன்.

பத்திரிகைப் பிரதிகளைக் காலத்தில் தபாலுக்கு அனுப்பினேம். எல்லாருக்கும் சந்தோஷமாயிருந்தது.

இந்த ஆரம்ப பிடிவாதமானது பின்னல் பத்திரிகை ஒழுங்காக வெளியாகுமென்பதை உறுதிப்படுத்திற்று. பின்னல் ஒரு காலத்தில் வேண்டுமென்றே நாங்கள் என்ஜின் உபயோகிப்பதை நிறுத்திக் கையினல் வேலை செய்தோம். போனிக்ஸ் குடியேற்ற வாசிகள் தார்மிக உந்நத நிலையை எய்தியிருந்த நாட்கள் அந்நாட்களே என்பது என் கருத்து.

இருபத்தோராம் அத்தியாயம்

போலக் துணிந்திறங்குதல்

போனிக்ஸ் குடியேற்றத்தை நான் ஏற்படுத்தினேனயினும், அங்கே நிரந்தரமாய் வாசம்செய்ய முடியவில்லை. சிற்சில இடைக்காலங்களிலேயே அங்கே தங்குதல் சாத்தியமாயிற்று. இதை நினைத்தால் இப்போதும்

வருத்தமுண்டாகிறது. நாளடைவில் வக்கீல் தொழிலி லிருந்து நீங்கி, போனிக்ஸுக்குச் சென்று குடியேறி,உடல் உழைப்பினுல் ஜீவனேபாயந் தேடவேண்டு மென்றும், தொண்டின் பூரண இன்பத்தை அங்கே காணவேண்டு மென்றும் தொடக்கத்தில் நோக்கங் கொண்டிருந்தேன். ஆனுல், அந்நோக்கம் நிறைவேற நான் கொடுத்து வைக்க வில்லை. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது என்னும் உண்மையைப் பலமுறையும் அநுப வத்தில் கண்டிருக்கிறேன். ஆனுல் சத்தியத் தேட்டமே ஒருவனுடைய முடிவான இலட்சியமா யிருக்குமானுல் அவன் போடும் திட்டங்கள் எவ்வளவுதான் தவறிப் போனுலும் முடிவு தீமையாவதில்லை யென்றும், சில சமயங்களில் எதிர் பார்த்ததைவிட அதிக நன்மையாய் முடிகிறதென்றும் கண்டுள்ளேன். போனிக்ஸ்குடியேற்றம் எதிர்பாரா விதமாய் மாறுதலடைந்ததும், மற்றும் பல எதிர்பாரா நிகழ்ச்சிகளும் எங்கள் ஆரம்ப நோக்கத்தைவிட நன்மையாய் முடிந்தன என்று கூறுதல் கஷ்டமாயினும், அவை தீங்கு பயக்கவில்லை யென்று நிச்சயமாய்க் கூறலாம்.

நாங்கள் எல்லாரும் உடல் உழைப்பினுல் ஜீவனம் செய்தல் சாத்தியமாகும் பொருட்டு, அச்சுக்கூடத்தைச் சுற்றி யிருந்த நிலத்தை மும்மூன்று ஏக்கராகப் பங்கிட்டுக் கொண்டோம். இந்த நிலப்பகுதிகளில் ஒன்று என் பங்குக்கும் விழுந்தது. ஒவ்வொரு பகுதியிலும் இருப்புத் தகடுகளால் வீடு கட்டிக்கொண்டோம். இத்தகைய வீடுகளை நாங்கள் விரும்பவில்லை. சாதாரணக் குடியான வர்களுக் கேற்றவண்ணம் வைக்கோல் கூரைபோட்ட மண் குடிசைகளேனும், சிறு செங்கல் வீடுகளேனும் கட்ட வேண்டுமென்பது எங்கள் ஆசை. ஆனுல் அது நிறைவேற

வதற்கில்லை. அத்தகைய வீடுகள் கட்டுவதற்கு அதிக செலவும், அதிக காலமும் பிடிக்கும். எங்களுக்கோ கூடிய சீக்கிரம் குடியேற்றத்தில் நிலைபெற்றுவிட வேண்டுமென ஆவலாயிருந்தது.

மனுசுக்லல் நாஸார்தான் இன்னமும் பத்திரிகாசிரியரா யிருந்தார். அவர் புதிய ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ள வில்லை யாதலின் டர்பனிலேயே வசித்தார். அங்கே 'இண்டியன் ஒபீனிய' னின் கிளைக்காரியாலயம் ஒன்று இருந்தது.

அச்சுக்கூட வேலைகளுக்குள் மிகவும் தொல்லையானது அச்சுக் கோத்தலே யாகும். ஆனால் கற்றுக்கொள்ள மிக எளியதும் அதுதான். அந்த வேலைக்கு சம்பளங் கொடுத்துச் சில தொழிலாளிகளை வைத்திருந்தோம். எனினும் எல்லாருக்கும் அவ்வேலை தெரிந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தோம். முன்னமே அச்சுக் கோக்கத் தெரியாதவர்கள் இப்போது கற்றுக் கொண்டோம். கடைசி வரையில் நான் இவ்வேலையில் பஞ்சையாகவே இருந்தேன். மகன்லால் காந்தி எல்லாருக்கும் முதன்மையா யிருந்தார். அவர் இதற்குமுன் அச்சுக்கூடத்தில் வேலை செய்ததே யில்லையாயினும். அச்சுக் கோப்பதில் மிகத் திறமையும் வேகமும் பெற்றார். அச்சுக்கூடத்தின் மற்ற எல்லா வேலைகளையும் அவர் அதிவிரைவில் கற்றுக் கொண்டது எனக்கு மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அளித்தது. தம் திறமையின் அளவு அவருக்கே தெரியாதென்பது என் எண்ணம்.

குடியேற்றத்தில் கட்டிடங்கள் கட்டி முடிந்து நாங்கள் நிலைபெற்றவுடனேயே நான் புதிய 'வீட்டை'

விட்டு ஜோகானிஸ்பர்க்குக்குப் போகவேண்டியதா யிருந்தது. அதிக காலம் அவ்விடத்து வேலையைக் கவனியாது விட்டிருக்க முடியவில்லை.

ஜோகானிஸ்பர்க்குக்குப் போனதும்மிஸ்டர் போலக்கினிடம் நான் செய்திருந்த முக்கியமான மாறுதல்களைத் தெரிவித்தேன். தாம் இரவல் கொடுத்த புத்தகம் இவ்வளவு பயன் அளித்தது என் றறிந்த போது அவருக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. "இப்புது முயற்சியில் நானும் கலந்து கொள்ள சாத்தியப் படாதா?" என்று கேட்டார். "சந்தேக மில்லாமல் விருப்பமானால் நீங்களும் குடியேற்றத்தைச் சேரலாம்" என்றேன். "நீங்கள் சேர்த்துக் கொண்டால் நான் இதோ தயாராயிருக்கிறேன்" என்றார் போலக்.

அவருடைய உறுதி என்னைக் கவர்ந்து விட்டது. 'கிரிடிக்' பத்திரிகையில் தம் வேலையை உடனே ராஜீனமா கொடுத்து ஒரு மாதத்திற்குள் தம்மை விடுவிக்கும்படி கேட்டுக் கொண்டார். விடுதலை பெற்றபின் போனிக்ஸ் வந்து சேர்ந்தார். தமது இனிய சுபாவத்தினால் அவர் எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்து விரைவிலேயே போனிக்ஸ் குடும்பத்தைச் சேர்ந்தவரானார். எளியவாழ்வு என்பது அவருடைய இயற்கையில் படிந்திருந்தபடியால் போனிக்ஸ் வாழ்க்கை அவருக்குக் கஷ்டமாகவே தோன்றவில்லை. தண்ணீரில் வசித்தல் மீனுக்கு இயற்கையாயிருப்பதுபோல் அவ் வாழ்க்கை அவரது இயல்புக்கொத்ததாயிருந்தது. ஆனால் அதிக காலம் அவரை அங்கு வைத்திருக்க முடியவில்லை மிஸ்டர் ரிட்ச் இங்கிலாந்து சென்று தமது சட்டப் படிப்பை முடித்துவரத் தீர்மானித்திருந்தார். வக்கீல் காரியாலய வேலைகளை நான் ஒருவனே

செய்தல் இயலாத காரியமா யிருந்தது. எனவே, மிஸ்டர் போலக்கைக் காரியாலயத்துக்கு வந்து உதவி செய்யும்படியும், அட்டர்னியாகப் பயிற்சி பெறும்படியும் கேட்டுக் கொண்டேன். முடிவில் நாங்கள் இருவருமே வக்கீல் தொழிலை விடுத்து போனிக்ஸுக்குச் சென்று அங்கேயே நிலையாக வசிக்கலாம் என்று எண்ணி யிருந்தேன். ஆனால் இந்த மனோரதம் ஈடேறவே யில்லை.

போலக் ஒரு நண்பரிடம் நம்பிக்கை கொண்டுவிட்டால் எந்த விஷயத்திலும் அவருடன் வாதிடுவதற்குப் பதிலாக ஒத்துப்போகவே முயலும் இயல்புடையவர். "போனிக்ஸ் வாழ்க்கை எனக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது. இங்கே சந்தோஷமாய்க் காலங் கழிக்கிறேன். குடியேற்றத்தை அபிவிருத்தி செய்யலாமென்றும் நம்பிக்கை யிருக்கிறது. ஆயினும் இதைவிட்டுக் காரியாலயத்துக்கு வருவதால் நமது இலட்சியங்கள் விரைவில் கைகூடுமென நீங்கள் கருதும் பட்சத்தில், அவ்வாறே செய்யத் தயாராயிருக்கிறேன்" என்று பொருள்பட அவர் பதில் எழுதினார். இந்த பதில் எனக்கு மனப்பூர்வமான மகிழ்ச்சி தந்தது. போலக் போனிக்ஸிலிருந்து ஜோகானிஸ்பர்க்குக்கு வந்து அட்டர்னி தொழிலுக்குப் பயிற்சி பெறலானார்.

இதே சமயத்தில், ஸ்காட்லந்து தேசத்தாரும் பிரம ஞான சங்கத்தை சேர்ந்தவருமான மிஸ்டர் மாக்கிண்டர் என்பார் உள்ளூர் சட்டப் பரீட்சை ஒன்றுக்குப் போக என்னிடம் பயிற்சிபெற்று வந்தார். நான் சொன்னதின் மேல் அவரும் போலக்கைப் பின்பற்றி என்னிடம்குமாஸ்தாவாகச் சேர்ந்தார்.

இவ்வாறு, போனிக்ஸின் இலசிட்யங்களை விரைவில் அடைய வேண்டுமென்றும் உயரிய நோக்கத்துடன்,

அதற்கு முற்றும் மாறான திசையை நோக்கி வெகு விரைவாகப் போகலானேன். எளிய வாழ்க்கை என்னும் பெயரால் விவரிக்கப்பட்ட இவ்வலையில் நான் அடியோடு சிக்கிக் கொள்ளாமல் தப்பியதற்கு ஆண்டவன் அருந்துணையே காரணமாகும்.

நானும் என் இலட்சியங்களும் எவரும் கனவிலும் எதிர் பாராத விதத்தில் காப்பாற்றப்பட்டோம். இதைப் பற்றி விவரிக்க இன்னும் சில அத்தியாயங்கள் தாண்ட வேண்டும்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

பகவானால் காக்கப் பெறுவோர்

சமீப காலத்தல் இந்தியா திரும்பலாம் என்னும் நம்பிக்கை இப்போது எனக்கு இல்லாமல் போயிற்று. ஓராண்டுக்குள் திரும்பி வந்து சேர்வதாக என் மனைவிக்கு வாக்களித்திருந்தேன். ஓராண்டு சென்று விட்டது. ஆனால் சமீபத்தில் திரும்பக் கூடுமென்று தோன்றவில்லை. ஆதலின் என் மனைவியையும் குழந்தைகளையும் வரவழைத்துக் கொள்ளத் தீர்மானித்தேன். அவர்கள் கப்பலில் வந்து கொண்டிருந்தபோது எனது மூன்றாவது புதல்வன் இராமதாஸ் கப்பல் தலைவருடன் விளையாடுகையில் கையை முறித்துக் கொண்டு விட்டான். கப்பல் தலைவர் கப்பல் வைத்தியரைக்கொண்டு சிகிச்சை செய்வித்து அவனை ஜாக்கிரதையாகக் கவனித்து வந்தார். கப்பலிலிருந்து இறங்கியபோது இராமதாஸ் கைக்கட்டுடன் இருந்தான். வீடு சேர்ந்ததும் தகுந்த டாக்டரைக் கொண்டு ரணத்தைக் கட்டி வரும்படி கப்பல் வைத்தியர் கூறினார். ஆனால்

அப்போது மண் சிகிச்சையில் நான் பூரண நம்பிக்கை கொண்டிருந்த காலம். எனது அரை குறை வைத்தியத்தில் நம்பிக்கையுடைய கட்சிக்காரர் சிலரையுங் கூட மண் சிகிச்சையும் ஜல சிகிச்சையும் செய்து கொள்ளப் பண்ணி யிருந்தேன்.

இந்நிலைமையில் இராமதாஸுக்கு நான் என்ன செய்வது? அவனுக்கு அப்போது எட்டு வயது. நானே சிகிச்சை செய்வது அவனுக்குச் சம்மதமா என்று கேட்டேன். அவன் புன்னகையுடன் முழு சம்மதம் என்று சொன்னான். அவ்வயதில் தனக்கு எது நல்லது என்று அவன் தீர்மானித்தல் சாத்தியமில்லை. ஆனுல் முறையான வைத்திய சிகிச்சைக்கும், அரைகுறை வைத்தியத்துக்கும் உள்ள வேற்றுமை அவனுக்கு நன்ருய்த் தெரிந்திருந்தது வீட்டு வைத்திய முறைகளைக் கையாளும் வழக்கம் எனக்குண்டு என்றும் அவன் அறிவான். என்னிடம் நம்பிக்கை வைத்துத் தன்னை என் வசம் ஒப்புவித்தான். பயத்தினுல் நடுநடுங்கிக் கொண்டே கட்டை அவிழ்த்தேன். ரணத்தை அலம்பிச் சுத்தமான மண் வைத்துக் கட்டினேன். இம் மாதிரி சுமார் ஒரு மாதகாலம் செய்து வந்தேன். ரணம் முற்றிலும் ஆறிவிட்டது. தொந்திரவு எதுவும் நேரவும் இல்லை. வழக்கமான சிகிச்சை செய்தாலும் ரணம் ஆறுவதற்கு இவ்வளவு நாள் ஆகுமென்று கப்பல் டாக்டர் சொல்லி யிருந்தார்.

இதுவும் இன்னும் சில சோதனைகளும் இத்தகைய வீட்டு வைத்திய முறைகளில் என்னுடைய நம்பிக்கையை அதிகப்படுத்தின. இதற்குப் பிறகு, அதிக தன்னம்பிக்கையுடன் அம்முறைகளைக் கையாளலானேன். ரணம், சுரம், அஜீரணம், காமாலை முதலிய பல ரோகங்களுக்கு ஜல

சிகிச்சை, மண் சிகிச்சை, உபவாச சிகிச்சை இவைகளைக் கையாண்டேன். பெரும்பாலும் நோய்கள் குணமடைந்து வந்தன. ஆனால் இம்முறைகளில் தென்னாப்பிரிக்காவில் எனக்கிருந்த நம்பிக்கை தற்போதில்லை. அவற்றில் அபாயங்கள் உண்டு என்று அநுபவத்தில் தெரிய வந்திருக்கிறது.

ஆதலின், இச்சோதனைகளைப் பற்றி இங்கே கூறுவது அவற்றின் வெற்றியை நிரூபிக்கும் நோக்கத்துடன் அன்று. எந்தச் சோதனையும் பூரண வெற்றி யளித்ததாக நான் கூற மாட்டேன். முறையான பயிற்சி பெற்ற டாக்டர்கள் கூடத் தங்கள் சோதனைகள் பரிபூரண வெற்றியளித்ததாகச் சொல்வதில்லை. புதிய சோதனைகள் செய்ய விரும்புவோன் முதலில் தன்னிடமே அவற்றைத் தொடங்க வேண்டுமென்று காட்டுவதே என் நோக்கமாகும். இதனால் விரைவில் உண்மை கண்டு பிடித்தல் சாத்தியமாகிறது. உண்மை உள்ளத்துடன் சோதனை செய்பவனைப் பகவான் எப்போதும் காப்பாற்றுகிறார்.

இயற்கை வைத்திய சோதனைகளில் எவ்வளவு அபாயங்கள் இருந்தனவோ அவ்வளவு ஐரோப்பியர்களுடன் நெருங்கிப் பழகும் சோதனைகளிலும் இருந்தன. அவ்வபாயங்கள் வேறு வகையைச் சேர்ந்தவை என்று மட்டுமே சொல்லலாம். ஆனால் அவ்வாறு ஐரோப்பியர்களுடன் நெருங்கிப் பழகுவதற்குச் செய்த முயற்சிகளில் அபாயங்களைப் பற்றி நான் நினைக்கவே யில்லை.

போலக்கை என் வீட்டிற்கு வந்து என்னுடன் தங்கும்படி கேட்டுக் கொண்டேன். நாங்கள் இருவரும் இரத்த சகோதரர்கள் போல் வசிக்கலானோம். அவருக்கு சில வருஷங்களுக்கு முன்பே விவாகம் நிச்சயமாகி யிருந்தது.

ஆனல் உசிதமான காலத்தை எதிர் பார்த்துக் கலியாணம் தள்ளிவைக்கப் பட்டிருந்தது. போலக் இல்வாழ்க்கையில்நிலை பெறுவதற்கு முன்னல் கொஞ்சம் பணம் சேர்த்துக் கொள்ள விரும்பியதாகக் காணப்பட்டது. என்னை விட நன்ருய் அவர் ரஸ்கினுடைய நூல்களைப் படித்திருந்தார். ஆனல் அவருடைய மேனட்டுத் தொடர்பானது ரஸ்கினின் போதனையை உடனே அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதற்குத் தடையாய் நின்றது. அவரிடம் பின் வருமாறு நான் வாதாடினேன்:—

"மணமக்களுக்குள் இதய ஒற்றுமைஏற்பட்டிருக்கும் போது, பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டுக் கலியாணத்தைத் தள்ளிவைத்தல் சரியாகாது. வறுமை கலியாணத்துக் கொருதடையானல் ஏழைகள் கலியாணமே செய்து கொள்ள முடியாது. மேலும், இப்போது நீங்கள் என்னுடன் வசிக்கிறீர்கள். வீட்டுச் செலவைப் பற்றிய கவலையில்லை. கூடிய சீக்கிரத்தில் நீங்கள் மணம் செய்து கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது" என்றேன். முன் அத்தியாயமொன்றில் கூறியிருப்பது போல், மிஸ்டர் போலக்கினிடம் ஒரு விஷயத்தைப் பற்றி இருமுறை வாதமிட வேண்டி யிருப்பதில்லை. நான் கூறியதின் நியாயத்தை அவர் உணர்ந்து, உடனே இங்கிலாந்திலிருந்த தமது காதலிக்குக் கடிதம் எழுதினர். அப் பெண்மணி மகிழ்ச்சியுடன் சம்மதித்துச் சில மாதங்களில் ஜோகானிஸ்பர்க் வந்து சேர்ந்தார். கலியாணத்துக்குச் செலவு எதுவும் செய்யும் எண்ணமே இல்லை. விசேஷ உடை கூட அவசியமென்று அவர்கள் கருதவில்லை. இதய ஒற்றுமை கொண்ட இத் தம்பதிகளின் திருமணத்துக்கு சமயக் கிரியைகளும் தேவையில்லாமலிருந்தன. மிஸ்டர்

போலக் பிறப்பினுல் யூதர். அவர் மனைவி கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தவர். நீதி தர்மமே அவர்களுடைய பொது மதமா யிருந்தது.

இவ் விவாகம் சம்பந்தமான ஒரு விநோத சம்பவத்தை இங்கே குறிப்பிடுதல் பொருந்தும். டிரான்ஸ்வாலில் ஐரோப்பியரின் மணங்களைப் பதிவு செய்யும் உத்தியோகஸ்தர் வெள்ளைக்கார ரல்லாதவர்களின் கலியாணங்களைப்பதிவு செய்யக்கூடாது. இந்தக் கலியாணத்தில்நான் மாப்பிள்ளைத் தோழனு யிருந்தேன். ஐரோப்பிய நண்பர் ஒருவர் கிடைக்க மாட்டார் என்பதற்காகவன்று. ஆனுல் போலக் நான்தான் வரவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தார். எனவே, நாங்கள் மூவரும் விவாகப் பதிவு உத்தியோகஸ்தரிடம் சென்ருேம். கறுப்பு மனிதனுகிய நான் மாப்பிள்ளைத் தோழனு யிருக்கும் கலியாணத்தில் மணமகனும் மணமகளும் அசல் வெள்ளைக் காரர்கள் என்று அவர் எப்படி நிச்சயங்கொள்ள முடியும்? எனவே, இது சம்பந்தமாக விசாரித்து முடிவாகும்வரை விவாகப் பதிவைத் தள்ளி வைக்க வேண்டுமென்று அவர் சொன்னுர். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதற்கடுத்தநாள் கிறிஸ்மஸ் பண்டிகைக்காக விடுமுறை. எல்லா ஏற்பாடுகளும் முடிவாகி யிருந்த கலியாணத்தை இந்த அற்பச் சாக்கின் மீது தள்ளி வைப்பதென்ருல் யார்தான் பொறுக்க முடியும்? மேற்படி இலாகாவின் தலைவரான தலைமை மாஜிஸ்ட்ரேட்டை எனக்குத் தெரிந்திருந்தது. மணமக்களையும் அழைத்துக்கொண்டு அவரிடம் நான் சென்றேன். அவர் விஷயத்தைக் கேட்டுச் சிறித்து விட்டு மேற்படி உத்தியோகஸ்தருக்கு ஒரு கடிதம் கொடுத்தார். கடைசியில் விவாகம் பதிவு செய்யப்பட்டது.

இதுகாறும் என்னுடன் வசித்த ஐரோப்பியர்கள் முன்னமேயே எனக்குத் தெரிந்தவர்களா யிருந்தனர். இப்போது எங்களுக்கு முற்றும் புதியவரான ஓர் ஆங்கிலப் பெண் எங்களுடன் வசிக்கலானர். இத் தம்பதிகளுடன் எனக்கு எப்போதேனும் வேற்றுமை நேரிட்டதாகவே ஞாபகமில்லை. மிஸ்ஸஸ் போலக்குக்கும் என் மனைவிக்கும் சிற்சில வித்தியாசங்கள் அவ்வப்போது நேரிடுவதுண்டு. ஆனல் அவை மிக ஒழுங்காக நடத்தப்படும் தனிக்குடும்பங் களிலும் நேரிடுபவையே யாகும். என் குடும்பமோ பல் வேறு சாதியாரும், பல்வேறு குணதிசயங்களை உடையவர் களும் சேர்ந்த கலப்புக் குடும்பம். நன்றாகச் சிந்தித்துப் பார்த்தோமாயின், சாதி, இனம் என்னும் வித்தியாசங்கள் கற்பனமாத்திரமே யென்று விளங்கும். உண்மையில் நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே யாவோம்.

இந்த அத்தியாயத்திலேயே வெஸ்டின் திருமணத்தை யும் நடத்தி விடுகிறேன். என் வாழ்நாளின் இப்பகுதியில், பிரம சரியத்தைப்பற்றிய என் கொள்கைகள் திடப்பட் டிருக்கவில்லை. எனவே, எனது பிரமசாரி நண்பர்கள் எல்லாருக்கும் கலியாணம் செய்துவைப்பதில் சிரத்தை கொண்டிருந்தேன். ஒரு சமயம் மிஸ்டர் வெஸ்ட் தம் தாய் தந்தையரைப் பார்ப்பதற்காக சொந்த ஊருக்குச் சென்ற போது, கூடுமானல் கலியாணம் செய்துகொண்டு திரும் பும்படி புத்திமதி சொன்னேன். போனிக்ஸ் எல்லாருக் கும் பொதுவீடா யிருந்தது. நாங்கள் அனைவரும் விவசாயி கள் ஆகிவிட்டதாகப் பாவித்துக் கொண்டிருந்தோம். எனவே, கலியாணத்தைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் நாங்கள் பயப்படவில்லை. வெஸ்ட், லெயிஸஸ்ட ரைச் சேர்ந்த அழகிய இளம் பெண் ஒருத்தியை மணஞ்

செய்துகொண்டு வந்து சேர்ந்தார். அப்பெண் செருப்புத் தொழில் செய்த குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரும் மேற்படி தொழிற்சாலையில் சிறிது அநுபவம் பெற்றவர். அவரை 'அழகிய இளம் பெண்' என்று நான் சொன்ன போது உடலின் அழகைக் குறிப்பிடவில்லை. முதன் முதல் அவரை நான் சந்தித்த போதே அவர் உள்ளத்தின் அழகு என்னைக் கவர்ந்துவிட்டது. இதயத் தூய்மையே உண்மை அழகன்றோ? இவர்களுடன் வெஸ்டின் மாமியாரும் வந்தார். அம் மூதாட்டியார் இன்றளவும் ஜீவித்துவருகிறார். அவருடைய உற்சாகமும், உழைப்பும், சந்தோஷ சுபாவமும் பாலியர்களாகிய நாங்கள் பார்த்து வெட்கிக்கும்படியிருந்தன.

ஐரோப்பிய நண்பர்களைக் கலியாணம் செய்து கொள்ளத் தூண்டியது போலவே, இந்திய நண்பர்களைத் தத்தம் குடும்பங்களை வரவழைத்துக் கொள்ளும்படி செய்தேன். போனிக்ஸ் இவ்வாறு ஒரு சிறு கிராமமாயிற்று. ஐந்தாறு குடும்பங்கள் அங்கே குடியேறிப் பல்கிப் பெருகலாயின.

இருபத்துமூன்றும் அத்தியாயம்

குடும்ப வாழ்க்கை

டர்பனில் குடும்பச் செலவு அதிகம் ஆகிவந்தபோதிலும் அங்கேயே எளிமை வாழ்வுக்கு அடிகோலியாகி விட்ட தென்பதை முன்னம் குறிப்பிட்டிருக்கிறேன். ஜோகானிஸ்பர்க்கில் வாழ்வுமுறை இன்னும் பெரிய மாறுதல் அடைந்தது. ரஸ்கினின் கொள்கைகளுக் கிணங்கக் குடும்ப வாழ்க்கையை மாற்றி அமைக்க முயன்றேன்,

பாரிஸ்டர் ஒருவரின் வீட்டில் சாத்தியமாகக் கூடிய அளவுக்கு எளிய வாழ்வு முறை ஏற்பட்டது. நாற்காலி, மேஜைகள் ஓரளவு இல்லாமல் சரிப்படவில்லை. புறவாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதலைக் காட்டிலும் உள்ளத்தில் உண்டான மாறுதலே முக்கியமா யிருந்தது. உடலுழைப்புத் தேவையான வேலைகளை யெல்லாம் நாமே செய்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் வளர்ந்து வந்தது. குழந்தைகளையும் இக் கொள்கைகளுக் கிணங்கப் பயில்விக்கலானேன்.

கடை ரொட்டி வாங்குவதற்குப் பதிலாக, டாக்டர் கூன் முறைப்படி வீட்டிலேயே ரொட்டி தயாரித்துக் கொள்ளத் தொடங்கினேம். கடையில் சாதாரணமாய் விற்கும் ஆலையில் அரைத்த மாவு இந்த ரொட்டிக்கு உபயோகமில்லை. கோதுமை வாங்கிக் கை இயந்திரத்தில் அரைத்துக் கொள்வதுதான் சரியென்று தீர்மானித்தோம். இதுதான் எளிமை வாழ்வுக்கும், சுகாதாரத்துக்கும், சிக்கனத்துக்கும் பொருந்திய முறையென்று கருதினேம். எனவே, கையால் சுற்றும் மாவு இயந்திரம் ஒன்று 7 பவுன் கொடுத்து வாங்கினேன். அவ்வியந்திரத்தின் இரும்புச் சக்கரத்தை ஒருவராகச் சுற்றுவது அசாத்தியமா யிருந்தது. ஆனல் இருவர் சேர்ந்து சுற்றுதல் எளிதா யிருந்தது. சாதாரணமாய் நானும் போலக்கும் குழந்தைகளும் அதைச் சுற்றுதல் வழக்கம். எப்போதாவது என் மனைவியும் ஒரு கைகொடுப்பாள். ஆனல் பெரும்பாலும் மாவரைக்கும் சமயத்தில் அவளுக்குச் சமையல் வேலை யிருக்கும். போலக்கின் மனைவி வந்தபின் அவரும் எங்களுடன் மாவரைக்கச் சேர்ந்து கொண்டார். குழந்தைகளுக்குச் சக்கரம் சுற்றுவது நல்ல தேகாப்பியாசமா யிருந்தது. இவ்

வேலையேனும் வேறு எந்த வேலையேனும் செய்ய வேண்டுமென்று அவர்களை ஒருபோதும் கட்டாயப்படுத்துவது கிடையாது. மாவரைத்தலை அவர்கள் ஒரு விளையாட்டாகவே செய்தார்கள். களைத்துப்போனவுடன் நிறுத்தி விடலாமென்று சொல்லி யிருந்தேன். ஆனால் குழந்தைகள் சாதாரணமாய் வேலை செய்யச் சுணங்குவதில்லை. இவர்கள் சிலரைப் பற்றிப் பின்னால் விரிவாகச் சொல்லப்போகிறேன். வேலையில் பின் தங்கியவர்கள் சிலரும் இருந்தனர். ஆனால் பெரும்பாலோர் உற்சாகமாக வேலை செய்தார்கள். அந்நாளில் எந்தக் குழந்தையும் வேலைசெய்ய பயந்ததாகவாவது, களைப்பா யிருப்பதாய் சாக்குச் சொன்னதாகவாவது எனக்கு ஞாபகம் இல்லை.

வீட்டு வேலைகளுக்காக வென்று ஒரு வேலைக்காரனை அமர்த்தி யிருந்தோம். அவன் எங்களுடன் குடும்பத்தில் ஒருவனாகவே வசித்து வந்தான். குழந்தைகள் அவனுக்கு உதவி செய்தார்கள். நகரசபைத் தோட்டி குப்பைகளை எடுத்துக்கொண்டு போய் விடுவான். ஆனால் கக்கூசை அலம்பி சுத்தப்படுத்தும் வேலையை நாங்களே கவனித்தோம். வேலைக்காரனை செய்யச் சொல்வதில்லை. அவன் செய்வானென்று எதிர் பார்ப்பதுமில்லை. இது குழந்தைகளுக்கு மிகவும் நல்ல பயிற்சியாயிற்று. இதன் பயனாக, எனது புதல்வர்கள் எல்லாரும் தோட்டி வேலையில் அருவருப்பு அற்றவர்களானார்கள். சுகாதார விதிகளையும் நன்குணர்ந்தார்கள். ஜோகானிஸ்பர்க் வீட்டில் யாருக்கும் நோய் வருவது மிக அருமையா யிருந்தது. தப்பித்தவறி யாராவது நோயில் படுத்தால் குழந்தைகளே அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகள் விருப்பத்துடன் செய்தார்கள். குழந்தைகளுடைய புத்தகப் படிப்பை நான் அலட்சியம்

செய்ததாகக் கூறமாட்டேன். ஆனால் அவசியமானபோது அதை பலி கொடுக்கத் தயங்கவில்லை யென்பது நிச்சயம். ஆதலின், என் புதல்வர்கள் என்மீது குறை கூறுவதற்கு ஓரளவு காரணமுண்டு ஒவ்வொரு சமயம் இதைத் தெரிவித்து மிருக்கிறார்கள். ஓரளவு நான் அக் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டியவனாகிறேன். அவர்களுக்கு இலக்கியக் கல்வி அளிக்கவேண்டு மென்னும் விருப்பம் எனக்கு இல்லாமலில்லை. நானே அவர்களுக்கு அக்கல்வி போதிக்கவும் முயன்றேன். ஆனால் இடையிடையே ஏதேனும் ஓர் இடையூறு ஏற்பட்டுவிடும். அவர்களுக்கு வீட்டில் கல்வி கற்பிப்பதற்காக உபாத்தியாயர் யாரையும் நான் ஏற்படுத்த வில்லை. எனவே, தினந்தோறும் என்னோடு காரியாலயத்துக்கு நடந்து வந்து, திரும்பி வீட்டுக்கு நடந்து வரவேண்டுமென்று ஏற்படுத்தி யிருந்தேன். போகவர மொத்தம் ஐந்து மைல் தூரம் ஆனபடியால் இந்த நடை அவர்களுக்கும் எனக்கும் ஓரளவு தேகப் பயிற்சியாயிற்று. நடக்கும்போது, வேறு யாரும் என்னுடன் பேசிக்கொண்டு வராவிடின், சம்பாஷணையின் மூலம் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க முயன்றேன். என் புதல்வர்களில் மூத்தவனான ஹரிலால் மட்டும் இந்தியாவிலேயே இருந்து விட்டான் பாக்கி மூவரும் 'மேலே கண்டவாறு வளர்க்கப்பட்டனர். அவர்களுடைய இலக்கியக் கல்விக்கு தினம் ஒரு மணி நேரமேனும் தவறாது செலவிட்டு வந்திருப்பேனாயின், மிகச் சிறந்த கல்வி அளித்திருக்கலாம். ஆனால் இது சாத்தியப்படவில்லை.

தக்க இலக்கியக் கல்வி என் புதல்வர்களுக்குத் தரமுடியாமல் போனது அவர்களுக்கும் எனக்கும் துயரந் தரும் விஷயமே யாகும், என் மூத்த புதல்வன் ஹரிலால்,

இந்தக் குறையை என் முன் தனிமையிலும், பத்திரிகைகளில் பகிரங்கமாகவும் வெளியிட்டிருக்கிறான். மற்றப் புதல்வர்கள், விலக்கமுடியாத காரணங்களினாலேயே நான் அவர்களுக்கு இலக்கியக் கல்வி யளிக்கவில்லை யென்பதை உணர்ந்து தயாளத்துடன் என்னை மன்னித்து விட்டார்கள். எனினும் அவர்கள் இலக்கியக்கல்வி பெறாதபடியால் குடிமுழுகிப்போய் விட்டதாக எண்ணி நான் துக்க சாகரத்தில் மூழ்கி விடவில்லை. தந்தையொருவன் எப்படியிருக்க வேண்டுமென்பது என் இலட்சியமோ. அவ்வாறு நான் இல்லையே யென்ற வருத்தத்தைத் தவிர வேறு வருத்தம் எனக்குக் கிடையாது. சமூக நன்மையை முன்னிட்டே அவர்களுடைய இலக்கியக் கல்வியைப் பலிகொடுத்ததாக நான் கருதுகிறேன். இந்த நம்பிக்கை தவறாயிருக்கலாம். எனினும் மனப்பூர்வமாக அவ்வாறு நம்பினேன் என்பதில் ஐயமில்லை ஆனால் அவர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி யளிப்பதில் நான் எள்ளளவும் அசட்டை காட்டியது கிடையாது. இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்வதுதான் பெற்றோர்களின் முதன்மையான கடமையென்பது என்கருத்து. என் புதல்வர்களிடம் ஒழுக்கக் குறைபாடுகள் ஏதேனும் காணப்படுமாயின் அவற்றிற்கு என்னுடைய அசட்டை காரணமல்ல வென்று நிச்சயமாய்க் கூறுவேன். என்னிடமும் எம்மனைவியிடமும் உள்ள குறைகளே அவர்களிடம் பிரதிபலித்திருக்கின்றன வெனக் கொள்ளவேண்டும்.

குழந்தைகள் பெற்றோர்களின் உடற் கூறுகளைமட்டு மன்றி, அவர்களுடைய குணம்சங்களையும் பிதிரார்ஜிதமாகப் பெறுகின்றன. சுற்றிலுமுள்ள வாழ்வு நிலைமைகள் குழந்தையின் குணங்களைப் பெரிதும் மாற்றி யமைக்கின்றன

வென்பது உண்மையே. ஆனால் வாழ்க்கை தொடங்கும் போது குழந்தையின் மூலதனம் பெற்றோர்களிட மிருந்து பெற்றதே யாகும். பிதிரார்ஜித தீக்குணங்களை குழந்தைகள் தள்ளிவெற்றி பெறுவதைக் கண்டிருக்கிறேன். ஆத்மா இயற்கையில் தூயதாகையினால்தான் இத்தகைய வெற்றி சாத்யமாகிறது.

குழந்தைகளுக்கு ஆங்கிலக் கல்வி யளிக்க வேண்டுமா, வேண்டாமா வென்பதைப்பற்றி நானும் போலக்கும் அடிக் கடி தீவிரமாக வாதம் செய்வதுண்டு. இவ்விஷயமாக நான் எப்போதும் உறுதியான கொள்கையுடையவன். குழந்தை களை பால வயதிலிருந்து ஆங்கிலத்திலேயே எண்ணவும், பேசவும் பயில்விக்கும் இந்தியர்கள் தங்கள் குழந்தைகளுக் கும் தேசத்துக்கும் பெரிய துரோகம் செய்கிறார்கள் என் பது என்கொள்கை. இதனால் அக்குழந்தைகள் நாட்டின் பரம்பரையான பாரமார்த்திக சமுதாயச் செல்வங்களை இழந்தவர்களாகிறார்கள். அந்த அளவில் அவர்கள் தேச சேவைக்குத் தகுதியற்றவர்க ளாகிறார்கள். இத்தகைய உறுதிகொண்டவ னாதலின், குழந்தைகளிடம் நான் எப் போதும் குஜராத்தியிலேயே பேசிவந்தேன். போலக்குக்கு இது பிடிக்கவில்லை. அவர்களுடைய வருங்கால வாழ்வை நான் கெடுத்து வருவதாக அவர் நினைத்தார், பூரண அன்புடன் தமது முழு வலிமையையும் காட்டி அவர் என்னுடன் வாதிப்பார். ஆங்கிலம் உலகமுழுவதும் பரவி யுள்ள பாஷை யென்றும், சிறு பிராயத்தில் அதைக் கற்றுக் கொள்வோர் வாழ்க்கைப் போராட்டத்தில் மற்றவர்களை விட பெரியதோர் அநுகூலம் பெற்றவர்களாவார்கள் என் றும் அவர் கூறினார். என்றாலும், என் உறுதியை அவரால் மாற்ற முடியவில்லை. என்னுடைய கட்சிதான் நியாயமான

தென்று அவர் ஒப்புக்கொண்டாரா, அல்லது நான் சுத்த பிடிவாதக்காரன் என்று விட்டுவிட்டாரா என்பது இப்போது ஞாபகமில்லை. இது இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம். அதற்குப் பின் நான் பெற்றுள்ள அனுபவங்களினால் இவ்விஷயத்தில் என் உறுதி இன்னும் வலிமை பெற்றிருக்கிறது. இலக்கியக் கல்வி பூரணமாய்ப் பெறாத குறைபாடு என் குமாரர்களிடம் இருப்பினும், தாய் பாஷையில் அவர்கள் பெற்ற பயிற்சி அவர்களுக்கும் நாட்டுக்கும் பெரும் நன்மையளித்து வருகிறது. அதனாலேதான் அவர்கள் தற்போது தங்கள் சொந்த நாட்டில் அன்னியர்களாயிருக்கவில்லை. அல்லாமலும் இயற்கையாக அவர்கள் இரு பாஷைகளும் அறிந்தவர்களானார்கள். ஆங்கிலமே முக்கிய பாஷையாயிருந்த தேசத்தில் வசித்தபடியாலும், ஆங்கில நண்பர்கள் பலருடன் தினசரி வாழ்க்கையில் கலந்து பழகியபடியினாலும், கஷ்டமின்றி ஆங்கிலம் பேசவும் எழுதவும் வல்லவர்களானார்கள்.

இருபத்துநான்காம் அத்தியாயம்

ஸுலு 'கலகம்'

ஜோகானிஸ்பர்க்கில் நிலைபெற்று விட்டேனென்று எண்ணிய பின்னரும் எனக்கு நிலையான வாழ்க்கை இல்லாமற் போயிற்று. இனி அமைதியான வாழ்க்கை நடத்தலாமென்று நான் எண்ணியபோது எதிர் பாராத நிகழ்ச்சி ஒன்று நேரிட்டது. நேட்டாலில் ஸுலு 'கலகம்' ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று. ஸுலுக்களிடம் எனக்கு எவ்வகை

விரோதமுமில்லை, அவர்கள் இந்தியர் எவருக்கும் எவ் வகைத் தீங்கும் செய்ததில்லை. அதைக் ‘கலகம்’ என்று சொல்வதைப்பற்றியும்கூட எனக்குச் சந்தேகம் தான். ஆனால் அக்காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உலகத்தின் நன்மைக்காகவே இருக்கிறது என்று நான் நம்பினேன். உண்மையான இராஜ விசுவாசியாயிருந்தபடியால் ஏகாதிபத்தியத்துக்குக் கேடு நினைத்தலே எனக்கு இயலாமல் இருந்தது, ஆதலின் கலகக்காரர்களின் கட்சி நியாயமானாலும், அநியாயமானாலும், என்னுடைய தீர்மானத்தை அது பாதிப்பதற்கில்லை. நேட்டாலில் ‘பாதுகாப்புத் தொண்டர் படை’ ஒன்று இருந்தது. அப்படி கலகத்தை அடக்குவதற்காகத் திரட்டப்பட்டு விட்டது என்று பத்திரிகைகளில் படித்தேன்.

நேட்டாலுடன் நான் நெருங்கிய தொடர்புள்ளவனாதலால் நேட்டாலின் பிரஜையாகவே என்னைக் கருதினேன்; ஆதலின் அவசியமானால் ‘இந்திய சேவைப் படை’ யொன்றை அமைக்கத் தயாராயிருப்பதாகக் கவர்னருக்கு எழுதினேன். அதை ஏற்றுக்கொண்டு அவர் உடனே பதில் விடுத்தார்.

என் சேவையை இவ்வாறு உடனே ஏற்றுக்கொள்வார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் அதிர்ஷ்டவசமாக, கடிதம் எழுதுவதற்கு முன்னாலேயே அவசியமான ஏற்பாடுகள் எல்லாம் செய்திருந்தேன். என் சேவை அங்கீகரிக்கப்பட்டால் ஜோகானிஸ்பர்க் குடித்தனத்தைக் கலைத்து விடுவதென்றும், போலக் சிறு வீடு ஒன்றுக்குக் குடிபோக வேண்டுமென்றும், கஸ்தூரிபாய் போனிக்ஸுக்குச் சென்று தங்க வேண்டுமென்றும் தீர்மானித்திருந்தேன். இத்தீர்மானத்தில் என் மனைவியின்

பூரண சம்மதத்தைப் பெற்றிருந்தேன். இம்மாதிரி விஷயங்களில் அவள் எப்போதும் குறுக்கே நின்றது கிடையாது. ஆதலின் கவர்னரிடமிருந்து பதில் வந்ததும் வீட்டுச் சொந்தக்காரனுக்கு வழக்கமான ஒரு மாத அறிக்கை கொடுத்தேன். சாமான்களில் சிலவற்றைப் போலக்கின் வசம் விட்டுவிட்டுச் சிலவற்றைப் போனிக்ஸுக்கு அனுப்பினேன்.

பின்னர், டர்பனுக்குச் சென்று, சேவைப்படைக்கு மனிதர்கள் வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டேன். பெரியபடை தேவையாயில்லை. இருபத்துநான்கு பேர் அடங்கிய படை அமைக்கப்பட்டது, அவர்களில் என்னைத் தவிர நால்வர் குஜராத்தியர்; ஒருவர் பட்டாணி வகுப்பைச் சேர்ந்த சுதந்திர பிரஜை; மற்றவர்கள் எல்லாரும் ஒப்பந்தம் நீங்கிய தென்னிந்தியத் தொழிலாளிகள்.

வேலை சுலபமாக நடக்கும் பொருட்டும் வழக்கத்திலிருந்த முறையை யனுசரித்தும் தலைமை வைத்திய அதிகாரி எனக்கு ஓர் அந்தஸ்து அளித்தார். தற்காலிகமாக என்னை 'ஸார்ஜண்ட் மேஜர்' ஆக்கினர். இன்னும் நான் குறிப்பிட்ட மூவரை 'ஸார்ஜண்ட்' களாகவும், ஒருவரைக் 'கார்ப்போரல்' ஆகவும் செய்தார். அரசாங்கத்தார் ஒழுங்கு முறைக்குரிய உடைகளும் அளித்தார்கள். ஏறக்குறைய, ஆறு வாரம் எங்கள் படைசேவை செய்தது. 'கலகப்' பிரதேசத்தை யடைந்ததும் 'கலகம்' என்று சொல்வதற்கே அங்கு ஒன்றுமில்லை யென்று கண்டேன். எதிர்த்து நிற்பவர் யாரையுங் காணோம். சிறு கலவரம் பெருங் கலகமாக மிகைப்படுத்திச் சொல்லப்பட்டிருந்தது. ஸுலுக்கள் மீது விதிக்கப்பட்ட ஒரு புதிய வரியைக்

கொடுக்க வேண்டாமென்று அவர்களுடைய சாதித் தலைவன் ஒருவன் யோசனை கூறினனும். வரிவசூல் செய்யப் போன ஒரு ஸார்ஜண்டை ஈட்டியால் குத்திவிட்டார்களாம். உடனே இச்சம்பவங்களுக்குக் கலகம் என்று பெயர் கொடுத்து விட்டார்கள். விஷயம் எதுவாயினும், என் அநுதாபம் முழுதும் ஸுலூக்கள் பக்கமே இருந்தது. சைன்யத்தின் தலைமை ஸ்தானத்தை அடைந்ததும், காயமற்ற ஸுலூக்களுக்குப் பணிவிடை புரிவதே எங்கள் வேலையென்றறிந்து அளவற்ற மகிழ்ச்சி யடைந்தேன். அங்குத் தலைமையிலிருந்த வைத்திய உத்தியோகஸ்தர் எங்களை வரவேற்ருர். காயமடைந்த ஸுலூக்களுக்கு வெள்ளைக் காரர்கள் மனதாரப் பணிவிடை செய்வதில்லை யென்றும், அவர்களுடைய புண்கள் அழுகிக்கொண் டிருக்கின்றன வென்றும், என்ன செய்வதென்று தெரியாமல் தாம் திகைத்துக்கொண் டிருந்ததாகவும் அவர் கூறினர். அந்த ஏழை ஜனங்கள் மீதிரங்கிப் பகவானே எங்களை அனுப்பி வைத்திருப்பதாக எண்ணுவதாய் அவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். ரணங் கட்டுவதற்கு வேண்டிய சாமக் கிரியைகளை எங்களுக்குக் கொடுத்துத் தற்காலிக வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்ருர். ஸுலூக்கள் எங்களைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தனர். வெள்ளைக்கார ஸோல்ஜர்கள் வேலிக் கம்பிகளின் வழியாக எட்டிப் பார்த்து அவர்களுடைய ரணங்களைக் கட்டவேண்டாமென்று எங்களுக்குச் சொல்வார்கள். நாங்கள் அவர்கள் பேச்சுக்குச் செவி கொடுப்பதில்லை. அவர்கள் கோபமடைந்து, சொல்லத் தகாத வசை மொழிகளை ஸுலூக்கள் மீது பொழிவார்கள்.

நாளடைவில் நான் இந்த ஸோல்ஜர்களுடன் நெருங்கிப் பழகலானேன். பின்னர், அவர்கள் எங்கள் வேலையில்

தலையிடுவதை நிறுத்தினார்கள். சைன்யத்தில் பெரிய உத்தியோகஸ்தர்களில் கர்னல் ஸ்பார்க்ஸ், கர்னல் ஷைலி என்னும் இருவர் இருந்தனர். இவர்கள் 1896-ல் என்னைப் பலமாக எதிர்த்தவர்கள்; இப்போது என்னுடைய நடத்தையைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். என்னைப் பார்ப்பதற்கு வந்து வந்தனங் கூறினார்கள். ஜெனரல் மாக்கன்ஸிக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். இவர்களுக்கு இராணுவ சேவையே தொழில் என்பதாக வாசகர்கள் எண்ண வேண்டாம். கர்னல் ஷைலி டர்பனில் பெயர்பெற்ற வக்கீல். கர்னல் ஸ்பார்க்ஸ் டர்பனில் ஒரு பெரிய கசாப்புக் கடையின் சொந்தக்காரர். ஜெனரல் மாக்கன்ஸி நேட்டால் விவசாயிகளில் பிரசித்தி பெற்ற ஒருவர். இவர்களெல்லாரும் கௌரவ இராணுவ சேவைக்காக முன் வந்து அம்முறையில் பயிற்சி பெற்றவர்களே யாவர்.

எங்களால் பணிவிடை செய்யப் பெற்றவர்கள் சண்டையில் காயமடைந்தவர்க ளல்லர். ஒரு பகுதியார் சந்தேகத்தின் மீது கைதிகளாக்கப் பட்டவர். ஜெனரல் அவர்களுக்குக் கசையடி தண்டனை விதித்திருந்தார். கசையடியினால் கெட்ட ரணங்கள் உண்டாகி யிருந்தன. அவற்றிற்குச் சிகிச்சை செய்யாதபடியால் அழுகத் தொடங்கி விட்டன. மற்றொரு பகுதியார் சிநேக ஸுலுக்கள். 'பகைவர்' களிடமிருந்து வேறு பிரிக்க அவர்களுக்குப் பட்டயங்கள் கொடுக்கப் பட்டிருந்தும் தவறுதலாக ஸோல்ஜர்களால் சுடப்பட்டவர்கள்.

இதுவன்றி, வெள்ளைக்கார ஸோல்ஜர்களுக்கும் நான் மருந்து கலந்து கொடுக்கவேண்டி யிருந்தது. இது எனக்கு மிகவும் சுலபமான வேலை. டாக்டர் பூத்தின் சிறு வைத்திய

சாலையில் ஒரு வருஷம் பயிற்சிபெற்றிருந்தே னல்லவா? இத் தொண்டின் மூலம் பல ஐரோப்பியர்களுடன் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது.

அதிவிரைவாக பிரயாணம் செய்துகொண் டிருந்த ஒரு படையுடன் நாங்கள் இணைக்கப்பட்டிருந்தோம். எங்கெங்கே அபாயம் என்று அறிவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் போகும்படி அப்படைக்குக் கட்டளை. பெரும்பாலும் அப்படை குதிரைவீரர்க ளடங்கியது. படை போகு மிடத்துக் கெல்லாம் நாங்கள் கால்நடையாகக் காயமடைந்தவர்களின் பல்லக்குகளைத் தோளில் சுமந்துகொண்டு போகவேண்டும். இரண்டு மூன்று தடவை தினத்துக்கு நாற்பது மைல் நாங்கள் பிரயாணம் செய்யவேண்டி யிருந்தது. ஆனால் நாங்கள் எங்கே சென்றாலும் இறைவன் திருப்பணியே செய்யவேண்டி யிருந்தது குறித்து நன்றியுள்ளவனா யிருக்கிறேன். தவறுதலாகக் காயப்படுத்தப்படும் சிநேக ஸுலுக்களைப் பல்லக்குகளில் சுமந்து தலைமை ஸ்தலத்துக்குக் கொண்டு வந்து அவர்களுக்குப் பணிவிடை செய்வதே எங்கள் வேலையாயிருந்தது.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

இதய சோதனை

ஸுலு 'கலகம்' சம்பந்தமாக எனக்குப் புதிய அநுபவங்கள் பல நேர்ந்தன. அவை என்னைப் பெரிதும் சிந்தனைக்காளாக்கின. ஸுலு கலகத்தில் யுத்த பயங்கரங்களை நான் தெளிவாகக் கண்டது போல், போயர் யுத்தத்தின்போது காணவில்லை. "அது

யுத்தமே அன்று; மனித வேட்டை" என்பது என் அபிப்பிராயம். நான் சம்பாஷிக்க நேர்ந்த ஆங்கிலேயர் பலரும் இதே விதமான கருத்தைத் தெரிவித்தனர். ஒவ்வொரு நாள் காலையிலும் குற்றமற்ற ஜனங்கள் வாழ்ந்த குடிசைகளில் ஸோல்ஜர்கள் துப்பாக்கி வெடி தீர்க்கும் சத்தத்தைக் கேட்டுக்கொண்டு, அவர்கள் மத்தியில் வாழ்தல் ஒரு பெருஞ் சோதனையாயிருந்தது. எனினும், நான் அந்த வேதனையைப் பொறுமையுடன் சகித்துவந்தேன். காயமடைந்த ஸுலுக்களுக்குப் பணிவிடை செய்வதே எங்கள் வேலையாயிருந்தபடியால் சிறிது ஆறுதல் பெற்றேன். நாங்கள் இல்லாவிடில் அவர்களைக் கவனிப்பார் யாருமில்லையென்பது நிச்சயம். ஆதலின் இவ்வேலை என் மனத்திற்குச் சமாதானமா யிருந்தது.

இக்காலத்தில் வேறு சில விஷயங்களைப் பற்றியும் சிந்திக்கலானேன். அந்தப் பிரதேசத்தில் ஜனங்கள் மிகக் கொஞ்சம். குன்றுகளிலும், பள்ளத்தாக்குகளிலும், வெகு தூரத்துக்கு ஒன்றாக, கள்ளமற்ற 'அநாகரிக' ஸுலுக்களின் கிராமங்கள் சிதறிக்கிடந்தன, எனவே, இந்த ஏகாந்தமான பிரதேசங்களின் வழியாக, காய மடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டோ, சும்மாவோ நடந்து செல்கையில் அடிக்கடி மெய்மறந்த சிந்தனையில் ஆழ்ந்தேன்.

பிரமசரியத்தையும், அதில் அடங்கிய பொருள்களையும் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்தேன். அது குறித்து எனக்கு உறுதியான அபிப்பிராயங்கள் ஏற்பட்டு வேர் கொண்டன. என் சகாக்களுடன் அதைப்பற்றி விவாதித்தேன். ஆத்மஞான மடைவதற்குப் பிரமசரியம் எவ்வளவு இன்றியமையாததென்று அப்போது நான் அறியவில்லை. ஆனால் ஆத்மாவின் பூரண சக்தியுடன் மக்கட் குலத்துக்குத்

தொண்டுசெய்ய விரும்பும் ஒருவனுக்குப் பிரமசரியம் அத்தியாவசியமென்று கண்டேன். அப்போது நான் செய்தது போன்ற ஊழியம் செய்ய மேலும் மேலும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்குமென்றும், இல்வாழ்க்கை இன்பத்திலும், குழந்தைகள் பெற்று வளர்ப்பதிலும் ஈடுபட்டிருந்தால் அச் சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன் படுத்திக்கொள்ள முடியாதென்றும் உணரலானேன்.

சுருங்கக்கூறின், உடல் அல்லது ஆன்மா, இவ்விரண்டிலொன்றுக்காகவே நான் உயிர் வாழ முடியுமென்று கண்டேன். உதாரணமாக, இப்போது என் மனைவி குழந்தைப் பேற்றை எதிர்பார்க்கும் சமயமாயிருந்தால், நான் இத் தொண்டில் ஈடுபட்டிருக்க முடியாது. பிரமசரிய விரதத்தைக் கைக்கொள்ளாத வரையில் குடும்பஊழியமும், சமூக ஊழியமும் முரண்பட்டவை. அவ்விரதம் பூண்டால் இரண்டும் ஒரே சமயத்தில் செய்யக் கூடியவை யாகும்.

இவ்வாறு சிந்தித்து, முடிவான விரதம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆத்திர மடைந்தேன். விரதம் மேற்கொள்ளலா மென்னும் எண்ணமே ஒருவகை உற்சாகமளித்தது. மனக்கோட்டை கட்டுவதற்கு இடமேற்பட்டது. ஊழியம் செய்வதற்குரிய பலப்பல துறைகள் மனக்கண்ணின் முன்பு புலப்படலாயின.

இவ்வாறு உடலுழைப்பும், மன உழைப்பும் எனக்கு மிகுந்திருந்த காலத்தில். கலகத்தை அநேகமாகஅடக்கியாகி விட்டதென்றும், விரைவில் எங்களை அனுப்பி விடுவார்களென்றும் செய்தி வந்தது. இரண்டொரு நாட்களுக்குப் பின்னர் உண்மையிலேயே விடுதலை செய்யப்பட்டோம். பின்னர் சில தினங்களில் வீடு போய்ச் சேர்ந்தோம்.

எங்கள் படையின் ஊழியத்துக்காக வந்தன மளித்துக் கவர் னர் எனக்குக் கடிதம் எழுதினர்.

போனிக்ஸ் போய்ச் சேர்ந்ததும், சகன்லால், மகன் லால், வெஸ்ட் முதலியோரிடம் பிரமசரியத்தைப்பற்றி உற் சாகமாய்ப் பேசினேன். அவர்கள் அவ்விரதம் கொள்ளும் யோசனையை விரும்பியதுடன். அதன் அவசியத்தையும் ஒப்புக் கொண்டார்கள். ஆனால் அதிலுள்ள கஷ்டங்களையும் அவர்கள் எடுத்துக் கூறினர்கள். அவர்களில் சிலர் தீரத் துடன் பிரமசரிய விரதம் மேற்கொண்டனர். அப்படி மேற்கொண்டவர்களில் சிலர் அதில் வெற்றி பெற்றார்க ளென்றும் நான் அறிவேன்.

நானும் துணிந்திறங்கினேன். வாழுள் முழுதும் பிரம சரியத்தை அனுஷ்டிப்பதென்னும் விரதம் மேற்கொண் டேன். அது எவ்வளவு பெரிய மகத்தான காரிய மென் பதை அப்போது நான் அறியவில்லை யென்று ஒப்புக் கொள்ள வேண்டும். அதன் கஷ்டங்கள் இன்று கூட என்முன் நிற்பதைக் காண்கிறேன். அதன் முக்கியமும் நாளுக்கு நாள் எனக்கு நன்கு புலனுகி வருகிறது. பிரம சரியமில்லாத வாழ்க்கை சாரமற்றதாகவும் மிருகப் பிராய மானதாகவும் எனக்குத் தோன்றுகிறது. இயற்கையில் விலங்குக்கும் புலனடக்கமென்பது தெரியாது. மனிதன் புலனடக்கத்தை அனுஷ்டிக்கக் கூடியவஞ யிருப்பதால் தான் மனிதனுகிறுன்; புலனடக்கத்தை அனுஷ்டிக்கு மளவிலேயே மனிதனுகிறுன். நமது சமய நூல்களில் பிரம சரியத்தின் பெருமையை மிகைப் படுத்திக் கூறியிருப்பதாக முன்னெல்லாம் நான் கருதியிருந்தேன். ஆனல் பிரமசரி யத்தைப் பற்றி அவை கூறுவனவெல்லாம் முற்றும்

சரியானவை, அநுபவத்தில் அறிந்தவை என்று நாளுக்கு நாள் தெளிவாக உணர்ந்து வருகிறேன்.

ஆச்சரியகரமான சக்தி பொருந்திய இந்தப் பிரமசரியம் சுலபமான காரிய மன்றென்றும், அது உடலை மட்டும் பொறுத்த விஷயமன்றென்றும் கண்டேன். பிரமசரியம் உடல் கட்டுப்பாட்டில் ஆரம்பமாகிறது. ஆனால் உடலுடன் முடிவதில்லை. பரிபூரண பிரமசரியம் அசுத்த எண்ணத்திற்குக் கூட இடங் கொடாது. உண்மைப் பிரமசாரி, புலனாசையைப் பூர்த்தி செய்வது குறித்துக் கனவிலும் எண்ணமாட்டான். இந்நிலை யடையாத வரையில் பூரண பிரமசரியத்திற்கு இன்னும் ஏறவேண்டிய படிகள் அதிக மிருக்கின்றன வென்றே சொல்லவேண்டும்.

உடல் பிரமசரியத்தை அனுஷ்டிப்பதிலும்கூட எனக்கு எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டன. தற்போது நான் அபாய எல்லையைத் தாண்டிவிட்டேன் என்று சொல்லலாம். ஆயினும் சிந்தை இன்னும் முற்றிலும் என் வசப்பட்டு விடவில்லை. இப்பெரிய வெற்றியை யடையும் விருப்பம் பெரிதும் கொண்டிருக்கிறேன். அதற்காகப் பெருமுயற்சி செய்து வருகிறேன். ஆனால் எவ்வளவு விழிப்புட னிருந்தாலும் தீய எண்ணங்கள் எங்கிருந்து வந்து எப்படித்தான் முளைக்கின்றன என்பது எனக்கு இன்னும் விளங்காத ஒரு பிரச்னையாக இருந்து வருகின்றது. தீய எண்ணங்கள் உள்ளே நுழையா வண்ணம் மனக்கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறதென்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் அதைத் தானே தேடிக் கண்டு பிடிக்கவேண்டும். மகான்களும், முனிவர்களும் தங்கள் அநுபவங்களை நமக்காகச் சொல்லி விட்டுச்

சென்றுள்ளார்களாயினும், எல்லாருக்கும் பொருந்தக் கூடியதும், தவறுது பயனளிப்பதுமான மருந்து எதையும் அவர்கள் குறிப்பிடவில்லை. பரிபூர்ணத்வம் அதாவது தவறே செய்யாதிருக்கும் சக்தி ஆண்டவன் அருளினுலேயே கைகூடும். ஆதலின் பக்தர்களும் ஞானிகளும், தங்களுடைய தவ வலிமையும், தூய்மையும் ஊட்டப்பெற்ற ஸ்ரீ ராம நாமம் முதலிய மந்திரங்களை நமக்கு அளித்துள்ளார்கள். அவன் அருள் நாடி அவனிடம் பரிபூரணமாய் அடைக்கலம் புகுந்தாலன்றி, மனதை முழுதும் கட்டுப் படுத்தல் இயலாத காரியம்.

சிறந்த சமய நூல் ஒவ்வொன்றும் இதையே போதிக்கிறது. பூரண பிரமசரியத்தை அடையும் பொருட்டு நான் செய்யும் முயற்சியில் ஒவ்வொரு நிமிஷமும் இவ்வுண்மையை உணர்ந்து வருகிறேன்.

இம் முயற்சியையும், போராட்டத்தையும் பற்றிய சில விவரங்களை அடுத்து வரும் அத்தியாயங்களில் கூறுவேன். முயற்சியை எப்படித் தொடங்கினேன் என்று மட்டும் கூறி இந்த அத்தியாயத்தை முடிக்கிறேன். ஆரம்ப உற்சாகத்தில் விரதத்தை அனுஷ்டிப்பது மிக எளிதாகவே இருந்தது. இதற்காக என் வாழ்வு முறையில் நான் செய்த முதல் மாறுதல் என்னவெனில், என் மனைவியுடன் ஒரே படுக்கையில் படுப்பதையோ, அவளுடன் தனிமையை நாடுவதையோ விட்டு விட்டதே யாகும்.

இவ்வாறு 1900-ம் வருஷத்திலிருந்து ஓரளவு நான் அனுஷ்டித்து வந்த பிரமசரியத்தை 1906-ம் ஆண்டில் ஆயுள் விரதமாகக் கைக்கொண்டேன்.

இருபத்தாறும் அத்தியாயம்

சத்தியாக்கிரஹ ஜனனம்

இக்காலத்தில் ஜோகானிஸ்பர்க்கில் சில முக்கிய சம்பவங்கள் ஏற்பட்டு வந்தன. எனவே, முன் அத்தியாயத்தில் கூறியபடி நான் பிரமசரிய விரதம் பூண்டது சத்தியாக்கிரஹத்துக்குப் பூர்வாங்கமான ஆத்ம சுத்தியேயாயிற்று. பிரமசரிய விரதத்தில் முடிவுற்ற என் வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள் எல்லாம் அந்தரங்கத்தில் என்னைச் சத்தியாக்கிரஹத்துக்கு ஆயத்தம் செய்து வந்ததாக இப்போது உணர்கின்றேன்.

"சத்தியாக் கிரஹம்" என்னும் பெயர் ஏற்படுவதற்கு முன்பே அந்தத் தத்துவம் ஜனனமாகிவிட்டது. உண்மையில், அந்தத் தத்துவம் தோன்றியபோது அதை இன்னதென்று சொல்ல எனக்கே தெரியவில்லை. "Passive Resistance" (சாத்வீக எதிர்ப்பு) என்னும் ஆங்கிலச் சொற்றொடரினாலேயே அதை நாங்கள் குறிப்பிட்டு வந்தோம். ஆனால் சில நாளைக்குப் பிறகு ஐரோப்பியர்களின் கூட்டமொன்றில் நான் ஆஜராகி யிருந்தபோது, மேற்படி சொற்றொடருக்கு மிகவும் குறுகிய பொருள் கொள்ளப்படுகிறதென்று அறிந்து கொண்டேன். அது பலவீனர்களின் ஆயுதம் என்றும், அதில் பகைமைக்கிட முண்டென்றும், அது பலாத்காரமாக உருக்கொள்ளக் கூடுமென்றும் அவர்கள் கருதுவதாகத் தெரிந்தது. அப்பொருள்களை யெல்லாம் நான் மறுத்து, இந்தியர்களுடைய இயக்கத்தின் உண்மை இயல்பை அவர்களுக்குத் தெளிவு படுத்திக் கூறவேண்டி வந்தது. இதிலிருந்து இந்தியர்கள் தங்கள் இயக்கத்தைக் குறிப்பிடுவதற்கு ஒரு புதிய வார்த்தையைச் சிருட்டிக்க வேண்டுமென்பதும் தெளிவாயிற்று.

ஆனால் ஆனமட்டும் முயன்றும் ஒரு புதிய பெயரைக் கண்டு பிடிக்க என்னால் கூடவில்லை. எனவே, இவ்விஷய மாகச் சிறந்த யோசனை கூறுவோருக்கு ஒரு சிறு பரிசு அளிப்பதாக "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகையில் விளம்பரம் செய்தேன். ஸ்ரீ மகன்லால் காந்தி 'சதாக் கிரஹம்' (சத்=உண்மை; ஆக்கிரஹம்=உறுதி) என்னும் வார்த்தையைச் சிருஷ்டித்து மேற்படி பரிசை அடைந்தார். ஆனால் இன்னும் பொருள் தெளிவாக விளங்குமாறு அதை 'சத்தியாக்கிரஹம்' என்று மாற்றினேன். இதிலிருந்து தென்னாப்பிரிக்கா போராட்டத்தைக் குறிப்பிடுவதற்கு இப் பெயரே வழங்குவதாயிற்று.

இப் போராட்டத்தின் வரலாறுதான் இனி தென்னாப் பிரிக்காவில் என்னுடைய ஜீவிய சரித்திரமாகும். முக்கிய மாக, அந்நாட்டில் நான் நடத்திய சத்திய சோதனைகளின் சரித்திரம் அதுதான். அச்சரித்திரத்தின் பெரும் பகுதியை எரவாடா சிறைச்சாலையில் எழுதினேன். விடுதலையான பின்னர் அதை முடித்தேன். அச்சரித்திரம் 'நவஜீவ'னில் பிரசுரிக்கப் பட்டுப் பின்னர் புத்தக வடிவில் வெளியிடப் பட்டது. ஸ்ரீ வால்ஜி கோவிந்தஜி அதை 'கரண்ட் தாட்' பத்திரிகைக்காக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இப் போது ஆங்கில மொழி பெயர்ப்பை விரைவில் புத்தகமாகப் பிரசுரிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன். * தென் னாப்பிரிக்காவில் என்னுடைய மிக முக்கியமான சோதனை களை அறிந்து கொள்ள விரும்புவோர் அதைப் படித்து அறிந்து கொள்ளலாம். மேற்படி புத்தகம் இதுவரை படியாதவர்களை இப்போது படிக்குமாறு கேட்டுக் கொள் வேன். அதில் எழுதியுள்ளவற்றை இங்கே திருப்பிக்

* இப்புத்தகம் பின்னர் வெளியாகி விட்டது.

கூறப்போவதில்லை. ஆனால் அச்சரிதத்தில் கூறப்படாத என் வாழ்க்கையின் சொந்த நிகழ்ச்சிகள் சிலவற்றை அடுத்த அத்தியாயங்களில் விவரிப்பேன். இவற்றை முடித்ததும் இந்தியாவில் நான் நடத்திய சோதனைகளுக்குச் செல்வேன். ஆதலின் இச் சோதனைகளை வரிசைக் கிரமப்படி படிக்க விரும்புவோர், இப்போது தென்னாப்பிரிக்கா சத்தியாக் கிரஹ வரலாற்றை எடுத்துக் கொள்வார்களாக.

இருபத்தேழாம் அத்தியாயம்

இன்னும் உணவுப் பரிசோதனைகள்

மனோவாக்குக் காயங்களினால் பிரமசரியம் அனுஷ்டிக்க நான் ஆவல் கொண்டிருந்தேன். கூடிய அளவு சத்தியாக்கிரஹப் போராட்டத்துக்கே என் காலத்தைச் செலவிடவும், என்னை இன்னும் தூய்மைப்படுத்திக்கொண்டு அப் போராட்டத்துக்குத் தகுதி செய்து கொள்ளவும் விரும்பினேன். ஆதலின் உணவு விஷயத்தில் இன்னும் மாறுதல்கள் செய்தலும், அதிக கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுதலும் அவசியமாயின. முன் செய்த மாறுதல்களுக்கெல்லாம் தேகாரோக்கியமே முக்கிய நோக்கமாயிருந்தது. இப்போது தொடங்கிய புதிய சோதனைகளோ சமய நோக்கங் கொண்டனவாகும்.

என் வாழ்க்கையில் உபவாசமும், உணவுக் கட்டுப்பாடும் முக்கிய ஸ்தானம் பெறலாயின. பெரும்பாலும், நாவின் சுவை யின்பத்தில் அவாவுடைய மனிதனிடமே காமக்ரோதாதிகளும் குடிகொள்ளுதல் இயல்பாகும். என் விஷயத்திலும் இப்படியே. காமக்ரோதங்களையும் சுவைப் புலனையும் அடக்கும் முயற்சியில் எனக்கு

எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டன. அவற்றை முழுதும் அடக்கி விட்டதாக இன்னமும் நான் சொல்லமுடியாது. என்னைப் பெருந் திண்டிக்காரனாகவே நான் கருதி யுள்ளேன். உணவு விஷயத்தில் நான் பெருங் கட்டுப்பாடு செய்திருப்பதாய் நண்பர்கள் கருதுகிறார்கள். நான் அப்படிக் கருதவில்லை. இவ்வளவேனும் கட்டுப்பாடு செய்து கொண்டிராவிடில் விலங்குகளைவிட இழிந்தவனாகி நீண்ட நாளைக்கு முன்பே நாசமடைந்திருப்பேன். ஆனால், என்னுடைய குறைகளை நான் போதிய அளவு அறிந்துகொண் டிருந்தபடியால், அவற்றைத் தொலைக்கப் பெரு முயற்சி செய்தேன். இம்முயற்சியின் பயனாகவே, இவ்வளவு நாளாய் இந்த உடம்போடு காலட்சேபம் நடத்தி வருவதுடன், அதைக் கொண்டு என்னாலியன்ற பணியையும் இயற்றி வருகிறேன்.

என்னுடைய குறைகளை உணர்ந்திருந்ததுடன், எதிர்பாராத விதமாய் மனதுக் கிசைந்த சங்கமும் எனக்குக் கிடைத்தது. ஆகவே ஏகாதசி தினங்களில் உபவாச விரதம் கைக்கொள்ள லானேன். ஜன்மாஷ்டமி முதலிய விரத தினங்களையும் அனுஷ்டிக்கத் தொடங்கினேன். முதலில் கனி உணவு மட்டும் அருந்தி விரதமிருப்பது என்று ஆரம்பித்தேன். ஆனால் சுவைப் புலனைப் பொறுத்தவரையில், தானிய உணவுக்கும் பழ உணவுக்கும் எவ்வகை வித்தியாசமுங் காணவில்லை. பழக்கமாகிவிட்டால் தானிய உணவைப் போலவே கனி உணவிலும் சுவைப்புலனின்பத்துக்கு இடமுண்டு என அறிந்தேன். ஆதலின் விரத தினங்களில் பூரண உபவாசம் இருப்பதே சரியென்றும், இது முடியாதபோது ஒரு வேளை உணவுடன் இருக்கலா மென்றும் தீர்மானித்து, அவ்வாறே செய்யலானேன். மற்றும்,

பிராயச்சித்தம் செய்து கொள்வதற்கு ஏதேனும் சந்தர்ப்பம் நேரிட்டால், அதையும் உபவாசத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கினேன்.

உபவாசத்தினால் உடம்பிலிருந்து கழிவுப் பொருள்கள் போய் விடுகிறபடியால், பின்னர் உணவு அதிக சுவையாயிருப்பதையும், பசி அதிகமாவதையும் கண்டேன். ஆகவே, உபவாசம் சுவைப்புலனடக்கத்துக்கு சாதனமாவது போல், அப்புலனின்பம் நுகர்வதற்கும் சாதன மாகலாம் என்று அறிந்து திடுக்கிட்டேன்.

இவ்வுண்மைக்கு என்னுடைய பிற்கால அநுபவங்களையும், மற்றும் அநேகருடைய அநுபவங்களையும் சான்றாகக் கூறலாம். என் உடம்புக்குப் பயிற்சி யளிக்கவும், அதை ஆரோக்கிய நிலைக்குக் கொண்டுவரவும் விரும்பினே னாயினும், என்னுடைய முக்கிய நோக்கம் சுவைப் புலனை வெற்றிகொள்வதேயாகும். ஆதலின் ஒவ்வொருவகை உணவாகத் தெரிந்தெடுத்துச் சோதனை செய்து வந்தேன். உணவின் அளவையும் வரையறைக்குட்படுத்தி வந்தேன். ஆனால் சுவை இன்பம் என்னை விடமாட்டேன் என்றது. ஒருணவை நீக்கி, மற்றோர் உணவைக் கைக் கொண்ட போது, புதிய உணவு பழைய உணவை விட அதிக சுவை தந்தது!

என்னுடன் சில தோழர்களும் இச்சோதனைகளைச் செய்து வந்தார்கள். அவர்களில் முக்கியமானவர் ஹெர் மான் காலன்பாக் என்பவர். தென்னாப்பிரிக்கா சத்தியாக் கிரஹ சரித்திரத்தில் இந்த நண்பரைப்பற்றி எழுதியிருக்கிறேன். அங்கே கூறியவற்றை மீண்டும் இங்கே சொல்லப் போவதில்லை. உபவாசத்திலும், வேறு உணவுப்

பரிசோதனைகளிலும் எப்போதும் மிஸ்டர் காலன்பாக் என்னுடனே இருந்தார். சத்தியாக்கிரஹ இயக்கம் அதி தீவிரமாயிருந்த காலத்தில் நான் அவர் வீட்டில் வசித்தேன். உணவு மாறுதல்களைப்பற்றி அடிக்கடி வாதம் செய்தோம். எப்போதும் பழைய உணவை விடப் புதிய உணவில் அதிக சுவை அநுபவித்தோம். இது குறித்த பேச்சுகள் அக்காலத்தில் சந்தோஷகரமா யிருந்தன. அவை அநுசிதம் என்று எனக்குத் தோன்றவே யில்லை. ஆனால் உணவுச் சுவைகளில் கவனம் செலுத்துதல் தவறு என்று அநுபவத்தில் தெரிந்திருக்கிறது. மனிதர் சுவைப் புலனுக்கு இன்பமளிப்பதற்காகச் சாப்பிடவே கூடாது. உடலைப் பாதுகாக்கமட்டுமே உணவருந்த வேண்டும். ஒவ்வொரு புலனும் உடம்புக்கும், உடம்பின் மூலமாய் ஆன்மாவுக்கும் ஊழியம் செய்யத் தொடங்கும்போது அவ்வவற்றின் தனிச் சுவைகள் மறைந்து விடுகின்றன. அதன் பிறகே இயற்கையாக அப்புலன்களுக் கேற்பட்ட கடமையை அவை செய்யத் தொடங்குகின்றன.

இயற்கையோடியைந்த இந்நிலையை அடைவதற்கு எவ்வளவு பரிசோதனைகள் நடத்தினாலும் போதுமானவை யாகா, எவ்வளவு அரிய தியாகங்களும் அதிக மாகா. ஆனால் துரதிஷ்ட வசமாக இக்காலத்தில் அதற்கு நேர்மாறான திசையை நோக்கி நாம் போய்க்கொண் டிருக்கிறோம். அழியக் கூடிய இந்த உடலை அலங்கரிப்பதற்காகவும், இன்னும் சில நிமிஷங்கள் அதை உயிருடன் வைத்திருப்பதற்காகவும் கணக்கற்ற பிறஜீவப் பிராணிகளைக் கொல்ல நாம் வெட்கப்படுகிறோ மில்லை. இதன் முடிவு, நம்மை நாமே கொன்று கொண்டு உடலும் ஆன்மாவும் சர்வ நாசம் அடைவதேயாகும். பழைய நோய் ஒன்றைக்

குணப்படுத்தும் முயற்சியில் நூறு புதிய நோய்களை உற்பத்தி செய்து கொள்கிறோம். புலனின்பம் நுகரும் முயற்சியில் ஈடுபட்டு முடிவில் அவ்வின்பம் நுகரும் சக்தியையே இழந்து விடுகிறோம். இவை யெல்லாம் நம் கண் முன்னே நடப்பவைகளாம். ஆனால் பார்க்கமாட்டோ மென்று கண்ணை மூடிக்கொள்பவனைப் போன்ற குருடன் வேறு யார்?

சோதனைகளின் நோக்கத்தையும், அவற்றிற்கு ஆதாரமா யிருந்த எண்ணப் போக்கையும் மேலே சொல்லி விட்டேன். இனி, அச்சோதனைகளைப் பற்றிச் சிறிது விவரமாகக் கூறுவேன்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

கஸ்தூரிபாயின் தைரியம்

கஸ்தூரிபாயின், தன் வாழ்நாளில் மூன்று முறை கடுமையான நோய் வாய்பட்டு யமன் கையிலிருந்து தப்பிப் பிழைத்தாள். குடும்ப வைத்திய முறைகளினாலேயே, மூன்று முறையும் அவள் குணமடைந்தாள். முதல்முறை கடும் நோய் வந்தபோது சத்தியாக்கிரஹப் போர் தொடங்கி விட்டதென்று ஞாபகம். அல்லது தொடங்கும் சமயமா யிருக்கலாம். கஸ்தூரிபாய்க்கு அடிக்கடி இரத்த நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு வைத்திய நண்பர், இரண சிகிச்சை செய்தல் நலமென்று சொன்னார். கஸ்தூரிபாய் சிறிது தயங்கி விட்டு பின்னர் சம்மதித்தாள். அவள் பெரிதும் மெலிந்து போயிருந்தபடியால், மயக்க மருந்து கொடாமலே இரண

சிகிச்சை செய்யவேண்டி யிருந்தது. சிகிச்சை சரிவர நடந்தது. ஆனால் அவள் பெரிதும் துன்புற நேர்ந்தது. எனினும் மிக ஆச்சரியமான தைரியத்துடன் அவள் சகித்துக் கொண்டிருந்தாள். வைத்தியரும், தாதியாகப் பணிவிடை செய்த அவர் மனைவியும் அவளை மிகுந்த கவனத்துடன் பார்த்துக் கொண்டார்கள். இது டர்பனில் நடந்தது. இனி நோயாளியைப் பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை யென்று சொல்லி வைத்தியர் ஜோகானிஸ்பர்க்குக்குப் போக எனக்கு விடை கொடுத்தார்.

ஆனால் சில தினங்களுக்கெல்லாம் கஸ்தூரிபாயின் உடல் நிலை கேவலமாகி விட்டதென்றும், படுக்கையில் எழுந்து உட்காரவும் முடியா வண்ணம் பலவீனமா யிருக்கிறாளென்றும், ஒரு முறை மூர்ச்சை யடைந்து விட்டாளென்றும் கடிதம் வந்தது. என்னுடைய சம்மதமில்லாமல் அவளுக்கு மதுவாவது, மாமிசமாவது கொடுக்கக் கூடாதென்று வைத்தியருக்குத் தெரியும். ஆதலின் அவர் ஜோகானிஸ்பர்க்கிலிருந்த என்னை டெலிபோனில் அழைத்து அவளுக்கு மாட்டிறைச்சி ரசம் கொடுக்க அநுமதி கேட்டார். அவ் வநுமதி நான் அளிக்க முடியாதென்றும், ஆனால் அவள் தன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக்கூடிய நிலையிலிருந்தால், அவளைக் கேட்டு அவள் விருப்பம்போல் செய்யலாமென்றும் பதில் சொன்னேன். வைத்தியர் அப்போது சொன்னதாவது:—"நான் நோயாளியின் விருப்பத்தைக் கேட்கப் போவதில்லை. தாங்கள் உடனே வரவேண்டும். எனக்கு இஷ்டமான உணவை யளிக்கத் தாங்கள் அநுமதி கொடுக்கவில்லை யென்றால், தங்கள் மனைவியின் உயிருக்கு நான் பொறுப்பாளி யல்லேன்."

அன்றைய தினமே ரயிலில் டர்பனுக்குப் புறப்பட்டேன். அங்கே போய்ச் சேர்ந்ததும், வைத்தியர், "தங்களுடன் டெலிபோனில் பேசுவதற்கு முன்பே மாட்டிறைச்சி ரசம்கொடுத்துவிட்டேன்." என்று அமைதியுடன் தெரிவித்தார்.

"நல்லது, டாக்டர்! இதுபெரும்மோசம்" என்றேன்.

"நோயாளிக்கு மருந்தும் உணவும் கொடுப்பதில் மோசமென்பது கிடையாது. நோயாளிகளேயும், அவர்கள் உறவினர்களேயும் ஏமாற்றி, நோயாளிகளைக் காப்பாற்றக் கூடுமானல் வைத்தியர்களுக்கு அதுதான் புண்ணியம்" என்று வைத்தியர் சொன்னர்.

இதைக் கேட்டதும் பெரிதும் துயருற்றேன். எனினும், பொறுமை யிழக்கவில்லை. அவருக்கும் அவர் மனைவிக்கும் பெரிதும் நன்றிக்கடன்பட் டிருந்தேன். ஆனல் அதற்காக அவருடைய வைத்திய தர்மத்தைச்சகித்துக் கொள்ள நான் தயாராயில்லை.

"டாக்டர் இப்போது என்ன செய்ய உத்தேசம் என்று சொல்லுங்கள். என் மனைவியே விரும்பினலல்லாமல் அவளுக்கு மாமிசம் கொடுக்க நான் ஒருநாளும் அநுமதியேன். அதனல் அவள் இறந்து போவதாயிருந்தாலும் சரியே" என்றேன்.

"உங்களுடைய தத்துவத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனைவி என்னுடைய சிகிச்சையில் இருக்கும் வரை நான் விரும்பும் எதையும் கொடுக்க எனக்கு உரிமை வேண்டும். இது உங்களுக்குப் பிடியாவிட்டால், அவரை இவ்விடமிருந்து கொண்டுபோய் விடும்படி சொல்ல வேண்டியதுதான். இது எனக்கு

வருத்த மளித்தாலும் வேறுவழியில்லை. அவர் என் வீட்டில் மரணமடையப் பார்த்துக்கொண்டிரேன்" என்றார்.

"உடனே அகற்றிவிட வேண்டுமென்று கூறுகிறீர்களா?"

"அகற்றிவிட வேண்டுமென்று நான் எப்போது சொன்னேன்? எனக்கு நீங்கள் பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்றே சொல்லுகிறேன். அப்படிக் கொடுத்தால், நானும் என் மனைவியும் அவருக்காகச் செய்யக்கூடியதெல்லாம் செய்யத் தயாரா யிருக்கிறோம். சிறிதும் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தச் சிறு சங்கதியை அறிந்துகொள்ளாமல், அவரைக் கொண்டுபோய்விடச் சொல்லும்படி செய்கிறீர்கள்."

அச் சமயத்தில் என்னுடைய புதல்வர்களில் ஒருவன் என்னுடன் இருந்ததாக ஞாபகம். என் கருத்தை அவன் முற்றும் ஆதரித்து அம்மாவுக்கு மாட்டிறைச்சி ரசம் கொடுக்கக் கூடாதென்று சொன்னான். பின்னர் என் மனைவியுடன் இது குறித்துப் பேசினேன். அவள் உண்மையில் மிகவும் பலவீனமுற்று, இவ்விஷயத்தைப் பற்றிக் கலந்து ஆலோசிக்கவே தகுதியற்ற நிலையிலிருந்தாள். ஆயினும் அவ்வாறே செய்தல் என் கடமை யென்றும், துயரமளிப்ப தாயினும் செய்தே தீரவேண்டு மென்றும் கருதினேன். எனக்கும் வைத்தியருக்கும் நடந்த சம்பாஷணையை அவளிடம் தெரிவித்தேன். அவள் தீர்மானமாகப் பதில் சொன்னாள். "மாட்டிறைச்சி ரசம் நான் அருந்த மாட்டேன். இவ்வுலகில் மனித ஜன்மம் எடுத்தல் மிக அரிது. இத்தகைய பாதகங்களால் உடம்பை அசுத்தமாக்குவதைக் காட்டிலும் தங்கள் மடியில் படுத்து நிம்மதியாய் உயிர் விடுவேன்," என்றாள்.

அவளுடன் வாக்குவாதம் செய்தேன். அவள் என் கருத்துப்படி நடத்தல் கட்டாயமில்லையென்று எடுத்துச் சொன்னேன். ஹிந்துக்களில் எங்களுக்குத் தெரிந்தவர்கள் மது, மாமிசம் மருந்தாக உபயோகித்ததை உதாரணமாக எடுத்துக் காட்டினேன். ஆனால் அவளை அசைக்க முடியவில்லை. "முடியாது, 'முடியாது. என்னை உடனே வேறிடத்துக்குக் கொண்டு போங்கள்" என்று சொன்னாள்.

அளவிலா மகிழ்ச்சி யடைந்தேன். அவளை அப்புறப்படுத்தி விடுவதென்று தீர்மானித்தேன். கொஞ்சம் மனக்கலக்க மில்லாம லில்லை. வைத்தியரிடம் அவளுடைய தீர்மானத்தைப்பற்றிக் கூறியபோது அவர் அசாத்திய கோபங் கொண்டு சொன்னதாவது:—" என்ன ஈவிரக்க மற்ற மனிதர் நீர்? தற்போதைய தேக நிலையில் அவரிடம் இதைப்பற்றிக் கேட்க உமக்கு வெட்க மில்லையா? உமது மனைவி அப்புறப் படுத்தக்கூடிய நிலையில் இல்லை. சற்றே உடம்பு அசங்கினாலும் அவரால் தாங்க முடியாது ஒரு வேளை வழியிலேயே மரண மடைந்தாலும் அடையலாம். இன்னமும் நீர் பிடிவாதம் பிடித்தால், இஷ்டம்போல் செய்து கொள்ளும். மாட்டிறைச்சி ரசம் கொடுக்கப்படாது என்றால், ஒரு நாள்கூட என் வீட்டில் வைத்திருக்க முடியாது."

வைத்தியர், இவ்வாறு சொல்லவே அவ்விடமிருந்து உடனே புறப்படுவதென்று தீர்மானித்தோம். சிறு தூற்றல் தூறிக்கொண்டிருந்தது. ரயில் நிலயமோ கொஞ்ச தூரத்தில் இருந்தது. டர்பனிலிருந்து ரயிலில் போனிக்ஸுக்குப் போக வேண்டும். அங்கிருந்து எங்கள் குடியேற்றத்துக்கு 2½மைல் சாலை வழியாகச் செல்லவேண்டும். பெரும் அபாயமான வேலையிலேயே துணிந் திறங்கினேன்.

என்பது சந்தேக மறத் தெரிந்திருந்தது. ஆனால் ஆண்டவனை நம்பி என் கடமையைச் செய்யலுற்றேன். முன்னடியே போனிக்ஸுக்கு ஆள், அனுப்பி, மிஸ்டர் வெஸ்டை, வலைப் பல்லக்கு, சூடான பால் வெந்நீர் இவற்றுடனும், பல்லக்குத் தூக்கிக்கொண்டு போக ஆறு ஆட்களுடனும் ரயில் நிலையத்துக்கு வந்திருக்கும்படி சொல்லி யனுப்பினேன். அடுத்த ரயிலில் புறப்படத் தீர்மானித்து, ஒரு ரிக்ஷா வண்டி பிடித்து, அதில் அந்த அபாய நிலையில் அவளைக் கிடத்தி அழைத்துச் சென்றேன்.

கஸ்தூரிபாய்க்கு நான் உற்சாகமளித்தல் அவசியமாயில்லை. அவளே எனக்கு ஆறுதல் கூறலுற்றாள். "எனக்கு ஒன்றும் நேராது. கவலைப்பட வேண்டாம்" என்று சொன்னாள்.

பலநாளாகப் போஷணையே யில்லாதபடியால், அவள் எலும்புந் தோலுமா யிருந்தாள். ஸ்டேஷன் பிளாட்பாரம் மிகப் பெரியது. ரிக்ஷாவையோ உள்ளே கொண்டுபோக முடியாது. ஆதலின் வண்டியில் போய் ஏறுவதற்குச் சிறிது தூரம் நடந்தாக வேண்டும். ஆதலின் என் கரங்களினால் அவளைத் தூக்கிக்கொண்டுபோய் வண்டியில் கிடத்தினேன். போனிக்ஸ் ஸ்டேஷனிலிருந்து எங்கள் இருப்பிடத்துக்கு வலைப் பல்லக்கில் தூக்கிக்கொண்டு போனோம். அங்கே ஜல சிகிச்சைச் செய்யப்பட்டுச் சிறிது சிறிதாக வலிவு பெற்று வந்தாள்.

போனிக்ஸுக்கு வந்த இரண்டு மூன்று நாளைக்கெல்லாம் ஒரு சாமியார் வந்து சேர்ந்தார். வைத்தியருடைய புத்தி மதியை நாங்கள் உறுதியாக மறுத்துவிட்டது குறித்து அவர் கேள்விப்பட்டு, அநுதாபங் கொண்டு, எங்களிடம் வாதிட்டுத் திருப்ப வந்தார். என்னுடைய இரண்

டாவது மூன்றாவது புதல்வர்களான மணிலாலும் ராம தாஸனும் அச் சாமியார் வந்தபோது அங்கு இருந்ததாக ஞாபகம். புலால் உண்பதில் தவறு இல்லையென்றும், அது மத விரோத மாகா தென்றும் அவர் வாதிக்கத் தொடங்கி, மனுதர்ம சாஸ்திரத்தி லிருந்து ஆதாரங்களும் காட்டினார். என் மனைவியின் முன்னிலையில் அவர் இத்தகைய விவாதம் நடத்தியது எனக்குப் பிடிக்கவே யில்லை. ஆயினும் மரியா தையை உத்தேசித்து அவரை நான் தடை செய்யவில்லை. மேற்படி மனுஸ்மிருதி சுலோகங்கள் நான் அறிந்தவை தான். அந்த சுலோகங்களை இடைச் செருகல் என்று கரு தும் ஒரு சாரார் உளர் என்றும் நான் அறிந்திருந்தேன். மேலும், சைவ உணவு சம்பந்தமான என் கொள்கைகள் சமய நூல்களை ஆதாரமாகக் கொண்டவை யல்ல. கஸ்தூரி பாயின் உறுதியும் அவ்வாறே அசைக்க முடியாததா யிருந் தது. சாஸ்திரங்களைப் பற்றி அவள் யாதும் அறியாள். அவ ளுடைய மூதாதைகளின் பரம்பரை தர்மத்தையே அவள் முக்கியமாகக் கருதினாள். குழந்தைகளும் தந்தையின் கொள் கையில் உறுதி கொண்டிருந்தன. ராமதாஸனும், மணிலாலும் சுவாமியின் வாதங்களை அலட்சியமாய் எதிர்த்துப் பேசினார் கள். ஆனால் கஸ்தூரிபாய் விவாதத்தை ஒரே பேச்சில் நிறுத்தி விட்டாள். அவள் சொன்னதாவது :— "சுவாமி, தாங்கள் என்னதான் சொன்னாலும், மாட்டிறைச்சி ரசம் அருந்தி நான் குணமடைய விரும்ப வில்லை. தயவுசெய்து என்னைத் தொந்திரவு செய்யாதேயுங்கள். என்னுடைய கண வருடனும், குழந்தைகளுடனும் வேண்டுமானால் விவாதிக்க லாம். ஆனால், நான் தீர்மானம் செய்துகொண்டு விட்டேன்."

இருபத்தோன்பதாம் அத்தியாயம்

குடும்ப சத்தியாக்கிரகம்

சிறை வாழ்க்கையில் முதல் அநுபவம் எனக்கு 1908-ல் ஏற்பட்டது. சிறைச்சாலைக் கைதிகளுக்கு ஏற்பட்ட சில விதி முறைகள், புலனடக்கம் பெற விரும்பும் பிரமசாரி தானுகவே வலியக் கைக்கொள்ள வேண்டியனவா யிருப்பதைக் கண்டேன். உதாரணமாக, கடைசி சாப்பாடு சூரியன் அஸ்தமிப்பதற்கு முன் ஆகிவிட வேண்டுமென்னும் விதியைக் குறிப்பிடலாம். இந்தியக் கைதிகளுக்கும் சரி, ஆப்பிரிக்கக் கைதிகளுக்கும் சரி. தேயிலை அல்லது காப்பி பானம் அநுமதிக்கப் படுவதில்லை. விருப்பமிருந்தால் சமைத்த உணவுடன் கொஞ்சம் உப்புச்சேர்த்துக் கொள்ளலாம். மற்றப்படி நாப்புலனைத் திருப்தி செய்வதற்காக அவர்கள் எதுவும் அருந்தக்கூடாது. கறி மசாலைப் பொடி தரும்படியும், உணவில் சமைக்கும்போதே உப்புக் கலக்கும்படியும் நான் சிறைக்கூட வைத்திய உத்தியோகஸ்தரைக் கேட்டுக் கொண்டபோது அவர் சொன்னதாவது:— "சுவை பார்த்துச் சாப்பிடுவதற்காக நீங்கள் இங்கில்லை. உடல் சுகத்தைப் பொறுத்த வரையில், கறி மசாலைப்பொடி அவசியமில்லை. உப்பைச் சமைக்கும்போது கலந்தாலும் பின்னர் கலந்தாலும் ஒன்றுதான்."

கடைசியாக, மிக்க பிரயாசையின் பேரில் இந்தநிர்ப்பந்தங்கள் ஓரளவு தளர்த்தி விடப்பட்டன. ஆனல் அவை இரண்டும் புலனடக்கத்துக்குறிய சிறந்த விதிகளாகும். வெளியிலிருந்து விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் வெற்றி பெறுதல் மிக அருமை. ஆனல் அவற்றை நமக்கு நாமே விதித்துக் கொள்ளும்போது நல்ல பயன் அளிக்கின்றன.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட உடனே எனக்கு நானே இவ்விரு கட்டுப்பாடுகளையும் விதித்துக் கொண்டேன். கூடுமானவரை தேயிலைப் பானம் அருந்துவதை நிறுத்திவிட்டேன். அவ்வாறே இயன்றவரை சூரியன் அஸ்தமிப்பதற்கு முன் கடைசி முறை உணவருந்துதலைக் கைக்கொண்டேன். தற்போது இவ்விரு விதிகளையும் அனுஷ்டித்தல் எனக்கு சர்வ சாதாரணமாயிருக்கிறது.

பின்னால், ஒரு சமயம் உப்பை அடியோடு நீக்க வேண்டியதான சந்தர்ப்பம் ஏற்பட்டது. பத்து வருஷ காலம் இடைவிடாமல் உப்பில்லா விரதம் அனுஷ்டித்து வந்தேன். சைவ உணவைப்பற்றிய ஒரு புத்தகத்தில் உப்பு மனிதனுக்கு அவசியமான பொருள் அன்றென்றும், உடல் சுகத்துக்கு உப்பில்லா உணவே சிறந்ததென்றும் படித்திருந்தேன். இதிலிருந்து பிரமசாரிக்கு உப்பில்லா உணவினால் பயன் உண்டென்று முடிவு செய்தேன். மற்றும், பலவீனமானவர்கள் பருப்பு வகைகளை அருந்தக்கூடாதென்று படித்திருந்ததோடு அதன் உண்மையை உணர்ந்துமிருந்தேன். ஆனால் பருப்பு வகைகளிடம் எனக்குப் பிரியம் அதிகமாயிருந்தது. முன் அத்தியாயத்தில் கூறிய இரண சிகிச்சைக்குப் பின்னர் கொஞ்ச நாள் நோய்ப்படாதிருந்த கஸ்தூரிபாய்க்கு இச் சமயத்தில், மீண்டும் இரத்தப் போக்கு ஏற்படலாயிற்று. நோய் இலேசில் போகாதென்றும் தோன்றிற்று. ஜல சிகிச்சையினால் மட்டும் போதிய பயன் விளையவில்லை. என்னுடைய சிகிச்சைகளில் கஸ்தூரிபாய்க்கு அதிக நம்பிக்கையில்லையாயினும், அவை வேண்டாமென்று அவள் மறுப்பது கிடையாது. வெளி உதவி வேண்டுமென்று அவள் சொல்வதுமில்லை. ஆக்வே, என்னுடைய சிகிச்சைக

ளெல்லாம் பயன்படாமற் போனபோது, உப்பையும், பருப்பு வகைகளையும் உட்கொள்வதை நிறுத்தி விடும்படி கேட்டுக்கொண்டேன். நான் எவ்வளவு வாதம் செய்தும் அவள் சம்மதிக்கவில்லை. எனக்காதாரமாகப் புலர் சொல்லியிருப்பதை எடுத்துக் காட்டியும் பயனில்லை. கடைசியில் அவள் "உப்பையும், பருப்பையும் விட்டுவிடும்படி உங்களைச் சொன்னால் விடுவீர்களா? ஒரு நாளும் மாட்டீர்கள்" என்று கூறினாள். எனக்கு இதனால் துயரமும் மகிழ்ச்சியும் ஒருங்கே உண்டாயின. அவளிடம் எனக்கிருந்த பேரன்பைக் காரியத்தில் காட்ட ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தது குறித்து மகிழ்ந்தேன். "நீ கூறுவது தவறு. நான் நோயாயிருந்து, வைத்தியர் இவைகளையோ வேறு எதையோ விட்டுவிடச் சொன்னால் தயக்கமின்றி உடனே விட்டு விடுவேன். அது போகட்டும். இனி ஒரு வருஷ காலத்திற்கு நான் உப்பும், பருப்பும் சேர்த்துக்கொள்ளப் போவதில்லை. அவற்றை நீ விட்டாலும் விடாவிடினும் நான் சாப்பிடமாட்டேன்" என்று கூறினேன்.

அவள் திடுக்கிட்டுப் போனாள். மிகுந்த துயரமடைந்து அவள் சொன்னதாவது:—"தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய இயல்பு நன்கு தெரிந்திருந்தும், இப்படிக் கோபமூட்டி விட்டேன். உப்பையும் பருப்பையும் தொடுவதில்லையென்று உறுதி கூறுகிறேன். ஆனால் உங்கள் பிரதிக்ஞையை ரத்து செய்து விடவேண்டும். பகவான் ஆணை. உங்களை வேண்டிக் கொள்கிறேன். என்னை இப்படி நீங்கள் தண்டிக்கக் கூடாது" என்றாள்.

"உப்பு, பருப்பை விட்டுவிட நீ சம்மதித்தது குறித்து எனக்கு மகிழ்ச்சியே. அதனால் உனக்கு நன்மை உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரு முறை எடுத்துக்

கொண்ட விரதத்தை நான் கைவிட முடியாது. அதனால் எனக்கும் நன்மையே விளையும். கட்டுப்பாடு எக்காரணத்தினால் ஏற்பட்டதாயினும் மனிதனுக்குப் பயனளியாமல் போகாது. ஆதலின் என்னைப்பற்றிக் கவலைப்படாதே. இவ் விரதம் எனக்கு ஒரு சோதனை. உன் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அது ஓர் ஆதரவாயும் இருக்கும்" என்றேன் நான்.

எனவே அவள் வாதம் செய்வதை விட்டாள். "நீங்கள் பிடிவாதக்காரர். யார் சொன்னாலும் கேட்க மாட்டீர்கள்" என்று சொல்லிக் கண்ணீரில் ஆறுதல் தேடலுற்றாள்.

இந்நிகழ்ச்சியைச் சத்தியாக்கிரஹத்துக்கு ஓர் உதாரணமாகவும் என் வாழ்நாளின் இனிய ஞாபகங்களில் ஒன்றாகவும் இங்கே குறிப்பிட் டிருக்கிறேன்.

இதற்குப் பின்னர் கஸ்தூரிபாய் விரைவாகக் குணமடையத் தொடங்கினாள். இதற்குக் காரணம் உப்பும் பருப்பும் இல்லாத உணவா, அதன் பயனாக ஏற்பட்ட பிற மாறுதல்களா, மற்ற வாழ்க்கை விதிகளில் நான் செலுத்திய கண்டிப்பான கவனமா, மேற்படி சம்பவத்தினால் உள்ளத்தில் உண்டான ஆனந்தமா. எது என்று என்னால் திட்டமாய்ச் சொல்ல முடியாது. எப்படியோ அவள் விரைவில் குணமடைந்தாள். இரத்த நஷ்டம் அடியோடு நின்று விட்டது. என்னுடைய அரை குறை வைத்தியத்துக்கு மதிப்பு அதிகமாயிற்று.

என்னைப் பொறுத்தவரை, உப்பையும் பருப்பையும் மறுத்ததினால் பெரு நன்மையே யடைந்தேன். அவை அருந்துவதற்கில்லையே யென்று நான் வருத்தப்பட்டது கிடையாது. ஒரு வருஷம் விரைவிலேயே சென்றது. முன் எப்போதையும் விட என் புலன்கள் கட்டுக்குள்

ளடங்கி யிருப்பதைக் கண்டேன். இந்தியாவுக்குத் திரும்பி வந்து சில காலம் ஆகும் வரையில் உப்பும், பருப்பும் அருந்தாமலே இருந்தேன். 1914-ல் லண்டனில் இருந்தபோது ஒரே ஒரு முறைதான் அவை சாப்பிட நேர்ந்தது. இதைப் பற்றியும், மீண்டும் அப் பொருள்களை நான் அருந்தத் தொடங்கியது குறித்தும் மற்றோர் அத்தியாயத்தில் கூறுவேன்.

தென்னாப்பிரிக்காவில் என் சகாக்கள் பலரையும் உப்பும் பருப்புமில்லாத உணவு உட்கொள்ளச்செய்து சோதனை நடத்தினேன். நல்ல பயன்களும் கிடைத்தன. இதைக் குறித்து வைத்தியத் துறையில் இருவகை அபிப் பிராயம் இருக்கலாம். ஆனால் ஒழுக்கத் துறையில்விளையும் நன்மையைக் குறித்து எள்ளளவும் ஐயமில்லை. எந்த விதமான தன் மறுப்பும் ஆத்ம நலம் தருவதாகும். புலனடக்க முள்ள மனிதனுக்கும், சுக போகியான மனிதனுக்கும் பிற வாழ்வு முறைகளில் வேற்றுமை யிருப்பது போலவே உணவிலும் வேற்றுமை இருத்தல் வேண்டும். பிரமசரியங் காக்க விரும்புவோர் சுகபோக வாழ்க்கைக்குரிய முறைகளைக் கைக்கொண்டால் தங்களுக்குத் தாங்களே தோல்வி தேடிக் கொள்வோ ராவார்கள்.

முப்பதாம் அத்தியாயம்

புலனடக்க முயற்சிகள்

சென்ற அத்தியாயத்தில் கஸ்தூரிபாய்க்கு வந்த நோய் காரணமாக என்னுடைய உணவில் ஏற்பட்ட மாறுதல்களை விவரித்தேன், பிற்காலத்தில் பிரமசரியத்

காக்கும் நோக்கத்துடன் இன்னும் சில மாறுதல்கள் செய்யலானேன்.

இவற்றுள் முதலாவது பாலை நீக்கியது. பால் காமக் கிளர்ச்சியை உண்டாக்குவதென்று முதன் முதலில் ராய்சந்தரிடமிருந்து தெரிந்து கொண்டேன். சைவ உணவைப் பற்றிய புத்தகங்கள் இக்கருத்தை வலுப் படுத்தின. ஆனாலும் பிரமசரிய விரதம் ஏற்காதிருந்த வரையில் பாலை நிறுத்த மனந் துணியவில்லை உடலைப் பேணுவதற்கு பால் அவசியமான பொருள் அன்று என முன்னமே அறிந்திருந்தேனாயினும் அதை விட்டுவிடல் எளிதாயில்லை. புலனடக்கத்தை முன்னிட்டுப் பாலை விலக்க வேண்டுவதின் அவசியத்தை நான் உணரத் தலைப்பட்டபோது, பசுக்களையும், எருமைகளையும் அவற்றின் சொந்தக்காரர் படுத்தும் கொடுமைகளைப் பற்றிக் கல்கத் தாவில் வெளியான சில பிரசுரங்களைப் பார்க்க நேர்ந்தது. என் விஷயத்தில் இப்பிரசுரங்கள் ஆச்சரியமான பலனைத் தந்தன. மிஸ்டர் காலன்பாக்குடன் இது குறித்து விவாதித்தேன்.

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹ சரித்திரத்தைப் படித்தவர்களுக்கு மிஸ்டர் காலன்பாக்கைப் பற்றி நன்கு தெரிந்திருக்கும். இப்புத்தகத்திலும் முன் அத்தியாய மொன்றில் அவரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். என்றாலும் அவரைப் பற்றி இங்கே சிறிது கூறுதல் அவசியமாகும். முதன் முதலில் தற்செயலாகவே நாங்கள் சந்தித்தோம். அவர் மிஸ்டர் கானின் நண்பர். அவருடைய அந்தரங்கத்தில் உலகப்பற்றின்மை குடிகொண்டிருந்த தென்று மிஸ்டர் கான் கண்டபடியால் அவரை எனக்கு அறிமுகம் செய்வித்தார். முதலில் அவரைத் தெரிந்து

கொண்டபோது அவருடைய சுக போக வாழ்க்கையையும் ஊதாரித்தனத்தையும் கண்டு திடுக்கிட்டேன். ஆனால் முதல் சந்திப்பிலேயே அவர் மத விஷயங்களைப் பற்றி மிக நுணுக்கமான கேள்விகள் கேட்டார். சம்பாஷணையி னிடையில் கௌதம புத்தரின் துறவைப்பற்றிப் பேசினோம். எங்கள் பழக்கம் விரைவிலேயே நெருங்கிய நட்பாகக் கனிந்தது. எங்கள் இருவருடைய எண்ணங்களும் ஒன்று போலாயின. என் வாழ்க்கையில் நான் செய்து கொள்ளும் மாறுதல்கள் எல்லாவற்றையும் தாமும் செய்துகொள்ள வேண்டுமென்னும் உறுதி கொண்டார்.

அக்காலத்தில் அவருக்கு இன்னும் கலியாணமாக வில்லை. வீட்டு வாடகையை யல்லாமல் மாதம் ரூ. 1200 தம் ஒருவருக்காக மட்டும் செலவு செய்து வந்தார். எங்கள் கூட்டுறவுக்குப் பிறகு அவர் மிக எளிய வாழ்வை மேற் கொண்டபடியால் மாதச் செலவு ரூ. 120-க்குள் வந்து விட்டது. நான் சிறையினின்று முதன் முதலில் விடுதலை பெற்ற நாளிலிருந்து சேர்ந்து வசிக்கத் தொடங்கினோம். அக்காலத்தில் கடுமையான வாழ்க்கை நடத்தினோ மென்றே சொல்லலாம்.

இக்காலத்திலேயே பாலைப்பற்றி நாங்கள் விவாதித்தது. "பாலின் தீமைகளைப்பற்றி அடிக்கடி பேசிக்கொண்டு வருகிறோம். அப்படியானால் அதை ஏன் விட்டொழித்து விடக் கூடாது? அது இன்றியமையாத பொருளல்லவே!" என்று மிஸ்டர் காலன்பாக் சொன்னார். அவர் இந்த யோசனை கூறியது எனக்கு வியப்பும் திருப்தியும் ஒருங்கே யளித்தது. உற்சாகத்துடன் அதை ஏற்றுக்கொண்டேன். அக்கணமே இருவரும் இனிப் பால் அருந்துவதில்லை.

யென்று பிரதிக்ஞை செய்தோம். இது 1912-ல் டால்ஸ்டாய் பண்ணையில் நடந்தது.

ஆனால் இந்த மறுப்புடன் நான் திருப்தி யடையவில்லை. சில நாளைக்குப் பிறகு பழ உணவே அருந்தி வாழ்வதென்றும், அதிலும் மலிவான பழங்களையே சாப்பிடுவதென்றும் தீர்மானித்தேன். ஏழையிலும் ஏழையான ஜனங்களைப்போல் வாழ்க்கை நடத்த வேண்டுமென்பது எங்கள் அவா.

பழ உணவு அருந்துதல் மிகவும் சௌகரியமானதென்றும் அநுபவத்தில் தெரிய வந்தது. சமையல் என்பதே வேண்டியதில்லை. பச்சை மணிலாக்கொட்டை, வாழைப்பழம், பேரீச்சம்பழம், எலுமிச்சம்பழம், ஆலிவ் எண்ணெய் இவையே எங்களின் சாதாரண உணவுப் பொருள்களாயின.

பிரமசரியங் காக்கும் அவாவுடையவர்களுக்கு இங்கே நான் ஒரு எச்சரிக்கை செய்யவேண்டும். உணவுக்கும், பிரமசரியத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு என நான் கண்டறிந்திருக்கிறே னாயினும், மன நிலையே எல்லாவற்றிலும் பிரதானமானது என்பதில் சந்தேகமில்லை. தெரிந்தே மனதை அசுத்தமாய் வைத்திருப்பவர்கள் உபவாசத்தினால் தூய்மை பெறமுடியாது. உணவுச் சீர் திருத்தத்தினால் மட்டும் அவர்கள் மனத்தூய்மை பெற மாட்டார்கள். தீவிர ஆத்ம சோதனையினாலும், ஆண்டவனிடம் அடைக்கலம் புகுவதினாலும், அவனுடைய அருளினாலுமே மனத்திலுள்ள தூர்த்த ஆசையை வேருடன் பறித்தெறியக்கூடும். ஆனால்மனத்திற்கும்உடலுக்கும் நெருங்கிய சம்பந்த மில்லாமலில்லை. சிற்றின்பப் பற்றுள்ள மனம் எப்போதும் இனிப்பான பொருள்களையும், சுகபோகங்

களையும் விழைகிறது. மனதின் இவ் வியல்பை அடக்க முயல்வோனுக்கு, உணவுக் கட்டுப்பாடுகளும் உபவாசமும் அவசியமாகின்றன. கீழான மனம் புலன்களை அடக்கி ஆள்வதற்குப் பதிலாக அவற்றின் அடிமையாகி விடுகிறது. ஆதலின், மனத்தூய்மை பெறும் விருப்பமுள்ளோனுக்கு, உடலைத் தூய்மையாய் வைத்திருப்பதும், கிளர்ச்சி தராத உணவுகளே அருந்துவதும், அடிக்கடி உபவாசம் இருப்பதும் உதவிகளாகின்றன.

எனவே, உணவுக் கட்டுப்பாடுகளையும், உபவாசத்தையும் அலட்சியம் செய்தல் தவறாகும். அவற்றையே பரம முக்கியமாகக் கருதி அவற்றினாலேயே இலட்சியம் கைகூடி விடுமெனக் கருதுவதும் தவறே யாகும். எவருடைய உள்ளம் புலனடக்கத்தை நோக்கித் திரும்பி யிருக்கிறதோ அவருக்கு உணவுக் கட்டுப்பாடுகளும், உபவாசமும் உதவியா யிருக்குமென்பதில் ஐயமில்லை. இது அநுபவத்தில் நான் கண்டறிந்ததாகும். உண்மையில் அவற்றின் உதவியின்றி மனத்தின் காம இச்சையை வேருடன் களைதல் இயலாத காரியம்.

முப்பத்தோராம் அத்தியாயம்

உபவாஸம்

பாலும், தானியங்களும் சாப்பிடுவதை விடுத்துப் பழ உணவு அருந்தும் சோதனையை மேற்கொண்ட அதே காலத்திலேயே, புலனடக்கத்துக்கு ஒரு சாதனமாக உபவாசமிருத்தலையும் கைக் கொண்டேன். இதில் மிஸ்டர் காலன்பாக்கும் என்னுடன் சேர்ந்து கொண்டார். இதற்கு முன்னும் நான் அடிக்கடி உபவாச மிருந்ததுண்டு. ஆனால்

அப்போதெல்லாம் தேக சுகத்தை முன்னிட்டே உபவாச மிருந்தேன். புலனடக்கத்துக்கு உபவாசம் அவசியமென்று ஒரு நண்பரிடமிருந்து அறிந்தேன்.

வைஷ்ணவ குடும்பத்திலே பலவகைக் கடும் விரதங்கள் அனுஷ்டித்து வந்த அன்னைக்குப் புதல்வனாய் பிறந்தவனாதலின், இந்தியாவி லிருந்தபோது ஏகாதசி முதலிய விரத தினங்களில் நான் உபவாச மிருப்பதுண்டு. ஆனால் அப்போது பெற்றோரை மகிழ்விக்கும் நோக்கத்துடன், தாயாரைப் பின் பற்றி நானும் விரதம் இருந்தேனே யல்லாமல் வேறில்லை. அக்காலத்தில் உபவாசத்தினால் விளையும் நன்மை என்னவென்று நான் அறிந்து கொள்ள வில்லை; அதில் எனக்கு நம்பிக்கையுமில்லை. ஆனால் இப்போது, நான் மேலே குறிப்பிட்ட நண்பர் பிரமசரிய விரதத்துக்குச் சாதனமாக உபவாச விரத மனுஷ்டித்து அதனால் பயன் பெறுகிறார் என்றறிந்ததும், நானும் அவர் உதாரணத்தைப் பின்பற்றி ஏகாதசி விரத மனுஷ்டிக்கத் தொடங்கினேன். ஹிந்துக்கள் உபவாச தினத்தன்று பாலும் பழமும் அருந்துவது சாதாரண வழக்கம். ஆனால் இத்தகைய உபவாசம் நான் பிரதிதினமு மிருந்து வந்தேன். ஆதலின் விரத தினங்களில் தண்ணீரையன்றி வேறெதுவும் அருந்தாமல் சுத்த உபவாசம் இருக்கலானேன்.

இச்சோதனை நான் தொடங்கியபோது ஹிந்துக்களின் சிராவண மாதமும், முஸ்லிம்களின் ரம்ஸான் மாதமும் ஒத்துக்கொண்டன. காந்தி குலத்தார் வைஷ்ணவ விரதங்களை மட்டு மன்றிச் வைச விரதங்களையும் அனுஷ்டிப்பது வழக்கம். அவர்கள் விஷ்ணு கோயில்களுக்குப் போவதுபோலவே சிவன் கோயில்களுக்கும் போவதுண்டு. சிலர் சிராவண மாதம் முழுவதும் பிரதோஷ விரதம்

(மாலை வரை உபவாசம்) அனுஷ்டிப்பார்கள். நானும் இவ்விரத மனுஷ்டிக்கத் தீர்மானித்தேன்.

டால்ஸ்டாய் பண்ணையில் நாங்கள் இருந்தபோது இந்த முக்கியமான சோதனைகள் ஆரம்பமாயின. அப்போது நானும் மிஸ்டர் காலன்பாக்கும் இன்னும் சில சத்தியாக்கிரஹ குடும்பங்களுடன் அங்கு வசித்து வந்தோம். சில குழந்தைகளும் இளைஞர்களும் கூட எங்களுடன் இருந்தனர். குழந்தைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் நடத்தினோம். அவர்களில் நாலைந்து முஸ்லிம் குழந்தைகளும் இருந்தனர். மதசம்பந்தமான நோன்புகள் எல்லாம் அவர்கள் அனுஷ்டிக்கும்படி ஊக்கமளித்து அதற்கு உதவியும் செய்தேன். தினசரி அவர்கள் நமாஸ் செய்யுமாறு கவனித்து வந்தேன். அவ்வாறே, அங்கிருந்த கிறிஸ்தவ, பார்ஸி குழந்தைகளை அவரவர்கள் மத விரதங்களைக் கடைப் பிடிக்குமாறு செய்தேன். ஆதலின் மேற் குறிப்பிட்டவாறு ரம்ஸான் மாதம் வந்தபோது முஸ்லிம் சிறுவர் சிறுமிகளை உபவாசமிருக்கச் சொன்னேன். நான் பிரதோஷ விரத மிருக்கத் தீர்மானித்ததாக முன்னமே சொல்லி யிருக்கிறேன். ஹிந்து, பார்ஸி, கிறிஸ்தவக் குழந்தைகளையும் என்னுடன் சேர்ந்து விரதமிருக்கும்படி சொன்னேன். விரதானுஷ்டானங்கள் எந்த மதத்துக்குரியனவாயினும், அவற்றில் கலந்து கொள்ளுதல் எப்பொழுதும் நல்லதென்று அவர்களுக்கு அறிவுறுத்தினேன். பண்ணையில் எங்களுடன் வசித்தவர்களில் பலர் என்னுடைய யோசனையை அங்கீகரித்தார்கள். ஹிந்து, பார்ஸி சிறுவர்கள், முஸ்லிம் சிறுவர்களை விரதத்தின் எல்லாச் சில்லரை அம்சங்களிலும் பின்பற்ற வில்லை. அது அவசியமுமன்று. முஸ்லிம் குழந்தைகள் சூரியாஸ்தமனத்துக்குப் பிறகே சாப்பிடவேண்டியிருந்தது.

மற்றவர்களுக்கு அந்த நிர்ப்பந்தம் இல்லை. அவர்கள் தங்கள் முஸ்லிம் தோழர்களுக்காக இனிப்புப்பட்சணங்கள் தயாரித்துப் பரிமாறுதல் கூடுமாயிருந்தது. மேலும், மறுநாள் காலை சூரியோதயத்துக்கு முன்னால் முஸ்லிம்கள் சாப்பிட்டதுபோல் ஹிந்து, பார்ஸி குழந்தைகள் சாப்பிட வில்லை. முஸ்லிம்களைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் தண்ணீர் அருந்தினர்.

இந்தச் சோதனைகளின் பயனாக, உபவாச விரதத்தைப் பூரணமாகவோ, ஓரளவிலோ அனுஷ்டிப்பது நல்ல தென்னும் நம்பிக்கை எல்லாருக்கும் உண்டாயிற்று, அவர்கள் எல்லாரிடையேயும் தோழமை உணர்ச்சி ஏற்பட்டது. டால்ஸ்டாய் பண்ணையில் நாங்கள் அனைவரும் சைவ உணவுக்காரர்களாகவே யிருந்தோம், எல்லாரும் இவ்விஷயத்தில் என்னுடைய உணர்ச்சிகளை மதித்து நடந்து கொண்டதை நன்றியுடன் நான் குறிப்பிட வேண்டும். ரம்ஸானின் போது புலால் உணவு இல்லாதது முஸ்லீம் குழந்தைகளுக்குக் கஷ்டமாகவே இருந்திருக்கும். ஆனால், அதைப்பற்றி அவர்களில் யாரும் என்னிடம் சொல்லவில்லை. சைவ உணவுப் பதார்த்தங்களை அவர்கள் சுவையுடன் அருந்தி இன்புற்றார்கள். ஹிந்து இளைஞர்கள் அவர்களுக்காக எங்களது எளிய வாழ்வுக்கியைந்த முறையில் அடிக்கடி பட்சணங்கள் தயார் செய்து கொடுத்தார்கள்.

இந்தச் சந்தோஷகரமான ஞாபகங்களை நான் வேறெங்கும் சொல்ல முடியாதாதலின் இவ்வத்தியாயத்தில் கூறினேன். இதில் எனக்கு இயல்பாயுள்ள குணமொன் றையும் மறைமுகமாய்க் குறிப்பிட்டிருக்கிறேன். அது எனக்கு நல்லதென்று தோன்றுகிற எதிலும் என்னுடன்

சகாக்களைச் சேர்த்துக் கொள்ளும் குணமே யாகும். பூரண உபவாசமும் சரி, அரை குறை உபவாசமும் சரி அவர்களுக்கு முற்றிலும் புதியவை. ஆயினும் பிரதோஷம், ரம்ஸான் என்னும் விரதங்களின் பெயரால், புலனடக்கத் துக்குச் சாதனமாக உபவாச விரதம் கைக்கொள்ளச் செய்வது சுலபமாயிற்று.

இவ்வாறு, டால்ஸ்டாய் பண்ணையில் புலனடக்க வாழ்வுக்குரிய நிலை இயல்பாகவே ஏற்பட்டது. பண்ணை வாசிகள் அனைவரும் எங்களுடன் சேர்ந்து உபவாச விரதங் கைக்கொள்ள லானார்கள். இவையெல்லாம் அவர்களுக்கு நன்மையே செய்தன என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இவ்விரதங்கள் எவ்வளவுவரை அவர்கள் ஹிருதய பூர்வமாயிருந்தன, புலனடக்க முயற்சியில் எவ்வளவு தூரம் அவர்களுக்கு துணை செய்தன என்று திட்டமாகச் சொல்ல முடியாது. என் வரையில், உடலளவி லும், ஒழுக்கத் துறையிலும் உபவாசத்தினால் பெரிதும் நன்மை யடைந்தேன் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் உபவாசமும் மற்ற கட்டுப்பாடுகளும் எல்லாருக்கும் ஒரே பயனை அளிக்குமென்பது நிச்சயமில்லை. உபவாசத் தைப் புலனடக்கத்துக்கு ஒரு சாதனமாகக் கருதிக் கைக் கொண்டால்தான் அது சிற்றின்ப இச்சையை அடக்கத் துணை செய்யும். என்னுடைய நண்பர்களில் சிலர், உபவாசங்களுக்குப் பிறகு நாப்புலன் ஆசையும், சிற்றின்ப ஆசையும் உண்மையில் அதிகமாவதைக் கண்டிக்கிறார்கள். இதிலிருந்து புலனடக்கம் பெற வேண்டுமென்னும் இடைவிடாத ஆசை யிருந்தாலொழிய உபவாசத்தினால் பயனில்லையென விளங்குகிறது. வெறும் உடல் உபவாசத்தி னால் மட்டுமே புலனடக்கம் கைகூடி விடுமென நினைத்தல்

தவறுகும். இது சம்பந்தமாக, பகவத்கீதை இரண்டாம் அத்தியாயத்திலுள்ள பெயர்பெற்ற ஸ்லோகத்தை இங்கே எடுத்துக் காட்டல் தகும்:—

"புலன்களைப் பட்டினி போடுபவனிடமிருந்து விஷயங்கள் தங்கள் சுவையில் ஆசையை மட்டும் விட்டு ஓடிப் போகின்றன. பரம்பொருளின் தரிசனம் கிட்டும் போது அந்த ஆசையும் மறைந்து விடும்."

ஆதலின் உபவாசமும், அதுபோன்ற கட்டுப்பாடுகளும் புலனடக்க மென்னும் இலட்சியத்துக்குக் கொண்டு சேர்க்கும் சாதனமே யல்லாமல், அவையே பிரதான மல்ல. உடல் உபவாசத்துடன், மானஸ உபவாசமும் கூடியிரா விட்டால் மனிதன் பொய் வாழ்க்கை நடத்தி, முடிவில் பெரும் விபத்துக் காளாவான்.

முப்பத்திரெண்டாம் அத்தியாயம்

உபாத்திமைத் தொழில் செய்தது

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹ சரித்திரத்தில் நான் சொல்லாத அல்லது குறிப்பிட்டு மட்டும் விட்டு விட்ட விஷயங்களையே இந்த அத்தியாயங்களில் விவரிக்கிறேன் என்பதை வாசகர்கள் நினைவு கூர்வார்களென்று நம்புகிறேன். அப்படி அவர்கள் நினைவு கூர்ந்தால் சென்ற சில அத்தியாயங்களுக் கிடையேயுள்ள சம்பந்தத்தை எளிதில் அறிவார்கள்.

பண்ணையானது அபிவிருத்தி யடைய யடைய அதில் வசித்த சிறுவர் சிறுமிகளின் கல்வி பயிற்சிக்கும் ஏதேனும் ஏற்பாடு செய்தல் அவசியமாயிற்று. இவர்களில் ஹிந்து,

முஸ்லிம், பார்ஸி, கிறிஸ்து சமயங்களைச் சேர்ந்த பையன்களும், சில ஹிந்து பெண்களும் இருந்தார்கள். அவர்களுக்குத் தனியாக உபாத்தியாயர்கள் நியமித்தல் சாத்தியமாயில்லை. அது அவசிய மென்றும் நான் கருதவில்லை. தகுதி பெற்ற இந்திய உபாத்தியாயர்கள் அருமையா யிருந்தபடியாலும் அப்படி யாரேனும் இருந்தால் அவர்கள் சொற்ப சம்பளத்திற்கு டர்பனிலிருந்து 21மைல் தூரத்திலுள்ள இடத்துக்கு வரத் தயாரா யில்லாதபடியாலும் அதுசாத்தியமில்லாமலிருந்தது. எங்களிடம் பணம் மிதமிஞ்சியும் கிடைக்கவில்லை. பண்ணைக்கு வெளியிலிருந்து உபாத்தியாயர்களைக் கொண்டு சேர்ப்பது அவசியமென்றும் நான் கருதவில்லை. அப்போது அமுலிலிருந்த கல்விமுறை எனக்குப் பிடிக்கவில்லை. அநுபவத்தின் மூலமாயும், சோதனை செய்தும் உண்மையான கல்வி முறையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஓர் எண்ணம் இருந்தது. அப்போது கல்வியைப்பற்றி என்னுடைய கொள்கை இவ்வளவுதான்:—"உன்னத வாழ்வு நிலையில் உண்மைக் கல்வியானது பெற்றோர்களால் மட்டுமே அளிக்கப்படல் கூடும்; வெளி உதவி மிகக் குறைந்த அளவிலேயே இருக்க வேண்டும்; டால்ஸ்டாய் பண்ணை ஒரு குடும்பம்போலிருந்தபடியாலும், அக் குடும்பத்தில் நான் தந்தையின் ஸ்தானத்தில் இருந்தபடியாலும், குழந்தைகளுக்குக் கல்விப் பயிற்சி அளிக்கும் பொறுப்பைக் கூடியவரையில் நானே ஏற்றுக்கொள்ள வேண்டும்."

மேற்படி சித்தாந்தத்தில் குறைகள் இல்லாமலில்லை. சிறுவர், சிறுமிகள் எல்லாரும் அவர்களுடைய குழந்தைப் பருவத்திலிருந்து என்னுடன் வசித்தவர்களல்லர். பற்பல நிலைகளில், வெவ்வேறு முறைகளில் வளர்க்கப் பட்ட

வர்கள். அவர்கள் எல்லாரும் ஒரே மதத்தைச் சேர்ந்த வர்களு மல்லர். இந்நிலையில், நான் குடும்பத்தில் தந்தையின் பதவியை வகித்தாலும், அவர்களுக்கு எப்படி உரிய பயிற்சி யளிக்க முடியும்?

ஆனால் சன்மார்க்கப் பயிற்சிக்கே நான் எப்போதும் முதன்மை ஸ்தானம் அளித்தபடியாலும், வயது, வளர்க்கப் பட்ட முறை முதலியவற்றில் எவ்வளவு வித்தியாச மிருப்பினும் சன்மார்க்கப் பயிற்சி எல்லாருக்கும் ஒரே விதமாக அளிக்கக்கூடும் என்று நம்பியபடியாலும், இருபத்துநான்கு மணி நேரமும் அவர்களிடையே அவர்க ளுடைய தந்தையைப்போல் வசிக்கத் தீர்மானித்தேன். கல்விக்குச் சரியான அடிப்படை ஒழுக்கப் பயிற்சியே என்று கருதினேன். அடிப்படை வலுவாகப் போடப் பட்டால் குழந்தைகள் மற்ற எல்லாவற்றையும் தாங் களேயோ, நண்பர்களின் உதவியைக் கொண்டோ கற்றுக் கொள்வார்களென்று நான் உறுதி கொண் டிருந்தேன்.

ஆனால் அத்துடன் இலக்கியக் கல்வியும் அவசியமே என்று நான் உணர்ந்திருந்தபடியால் மிஸ்டர் காலன்பாக், ஸ்ரீமான் பிராக்ஜி தேஸாய் இவர்களின் துணைகொண்டு சில வகுப்புகள் ஆரம்பித்தேன். உடற் பயிற்சியின் முக்கியத்தையும் நான் அலட்சியம் செய்து விடவில்லை. அவர்களுக்கு தினசரி தேகப் பயிற்சிக்கு வசதி ஏற்பட் டிருந்தது. பண்ணையில் வேலைக்காரர்கள் இல்லாதபடியால் சமையல் வேலையிலிருந்து தோட்டி வேலை வரையில் எல்லாம் பண்ணை வாசிகளே செய்யவேண்டி யிருந்தது. பழ விருட் சங்கள் நிரம்ப இருந்தபடியால் தோட்ட வேலையும் இருந்தது. மிஸ்டர் காலன்பாக்குக்குத் தோட்ட வேலையில்

பிரியம் அதிகம். அரசாங்க மாதிரித் தோட்ட மொன்றில் அவர் அவ்வேலையில் சிறிது அநுபவம் பெற்றிருந்தார். சிறியோராயினும், பெரியோராயினும், சமையல் வேலை செய்யாதவர்கள் அனைவரும் தோட்ட வேலை செய்ய வேண்டுமென்று கட்டாயமாக ஏற்படுத்தி யிருந்தோம். இவ் வேலையில் பெரும் பகுதி குழந்தைகளுக்கே ஏற்பட்டது. குழி தோண்டுதல், மரம் வெட்டுதல், மூட்டை தூக்குதல் முதலிய பல வேலைகள் அவர்கள் செய்து வந்தார்கள். இவற்றினின்றும் அவர்களுக்குப் போதிய தேகப் பயிற்சியும் கிடைத்தது. குழந்தைகள் இவ் வேலையைக் குதூகலத்துடன் செய்தன. எனவே, வேறு தனிப்பட்ட தேகாப்பியாசமோ, விளையாட்டுகளோ தேவை யில்லாம லிருந்தன.

சில குழந்தைகள் சில சமயம் எல்லாக் குழந்தை களுமே வேலைக்குச் சோம்பியதுண்டு. சில சமயம் பார்த்தும் பாராததுபோல் விட்டு விடுவேன். அடிக்கடி கண்டிப்பா யிருப்பேன். அவர்கள் கண்டிப்பை விரும்ப வில்லை யென்பது நிச்சயம். ஆனாலும் அவர்கள் என்னை எதிர்த்துப் பேசியது கிடையாது. கண்டிப்பு செய்ய நேரும்போதெல்லாம், வேலை விஷயத்தில் அசட்டை காட்டக்கூடாது என்று வாதங்களின் மூலம் அவர்களுக்கு அறிவுறுத்த முயல்வேன். ஆனால் அந்த அறிவு சிறிது நேரமே நிலைத்து நிற்கும். அடுத்த நிமிஷத்தில் அவர்கள் வேலையைப் போட்டுவிட்டு விளையாடப் போய் விடுவார்கள். எனினும், எப்படியோ நாங்கள் காரியம் நடத்தி வந்தோம். குழந்தைகள் நல்ல திடதேகம் பெற்றார்கள். பண்ணையில் யாருக்கும் நோய் கண்டதே யில்லை யென்று சொல்லி விடலாம். ஆனால் இதற்குத் தூயகாற்றும், நல்ல தண்ணீரும்,

வேளைக்கு ஒழுங்காக உணவருந்தும் வழக்கமும் பெரிதுங் காரணமானவை என்று சொல்ல வேண்டும்.

இளைஞர்களில் ஒவ்வொருவருக்கும் உபயோகமான கைத்தொழில் ஒன்றைக் கற்பிக்க வேண்டுமென்பது என் உத்தேசம். இதற்காக மிஸ்டர் காலன்பாக் ஒரு கிறிஸ்துவச் சந்நியாசி மடத்துக்குச் சென்று செருப்புத் தைக்கும் தொழில் கற்று வந்தார். அவரிடமிருந்து நான் அதைக் கற்றுக்கொண்டு அத்தொழிலைக் கற்றுக்கொள்ள விரும்பியவர்களுக்கெல்லாம் கற்பித்தேன். மிஸ்டர் காலன்பாக்குக்குத் தச்சுத்தொழிலிலும் கொஞ்சம் அனுபவமுண்டு. பண்ணை வாசிகளில் மற்றொருவருக்கும் அது தெரியும். எனவே, சிறிய தச்சுத்தொழில் வகுப்பு ஒன்றையும் நாங்கள் ஏற்படுத்தினோம். சமையல் அநேகமாக எல்லாச் சிறுவர்களுக்கும் தெரிந்திருந்தது.

இவையெல்லாம் அவர்களுக்கு முற்றும் புதியவை. இத்தகைய தொழில்களை ஒரு நாள் பயில வேண்டியிருக்குமென அவர்கள் கனவிலும் கருதியவர்களல்லர். சாதாரணமாய் தென்னாப்பிரிக்காவில் இந்தியக் குழந்தைகளுக்கு எழுதல், படித்தல், கணக்குப் போடுதல் என்னும் இப்பயிற்சிகளே அளிக்கப்பட்டு வந்தன.

உபாத்தியாயர்கள் செய்யாத எந்த வேலையையும் பிள்ளைகளைச் செய்யச் சொல்லக் கூடாதென்று நாங்கள் விதி செய்திருந்தோம். ஆதலின் அவர்களை ஏதேனும் வேலை செய்யச் சொல்லும்போது அவர்களுடன் உபாத்தியாயர் ஒருவரும் வேலை செய்வது வழக்கம். எனவே, சிறுவர்கள் எந்த வேலையையும் சந்தோஷமாய்க் கற்றுக் கொண்டார்கள். இலக்கியக் கல்வி, ஒழுக்கப் பயிற்சி

இவைகளைக் குறித்து அடுத்த அத்தியாயங்களில் எழுதுவேன்.

முப்பத்து மூன்றும் அத்தியாயம்

தமிழ் கற்பித்தது

தேகப் பயிற்சிக்கும், தொழிற் கல்விக்கும் ஏற்பாடு செய்தது குறித்துச் சென்ற அத்தியாயத்தில் கூறினேன். அவ்வேற்பாடு எனக்குப் பூரண திருப்தியளிக்காவிடினும் ஏறக்குறைய வெற்றி பெற்றதென்றே சொல்லலாம். ஆனால் இலக்கியக் கல்வி மேற் சொன்ன இரண்டையும் விடக் கஷ்டமான விஷயம். அதற்கு அவசியமான வசதிகளோ, இலக்கிய ஞானமோ எனக்கில்லை. மேலும் அந்தத் துறையில் நான் செலவிட விரும்பிய அளவு காலமும் எனக்குக் கிடைக்கவில்லை. நான் செய்து வந்த உடல் வேலையினால் ஒவ்வொரு நாள் மாலையிலும் முற்றும் களைப்படைந்து போய்விடுவேன். எனக்கு ஓய்வு மிகவும் அவசியமான காலத்திலே தான் வகுப்பு நடத்த வேண்டியதா யிருந்தது. ஆதலின் மனோ உற்சாகத்துடன் வகுப்பை நடத்துவதற்குப் பதிலாகத் தூங்கிப்போகாமல் விழித்துக்கொண்டிருப்பதே பெரிதுங் கஷ்டமா யிருந்தது. காலை நேரமெல்லாம் பண்ணை வேலைக்கும், வீட்டுக் காரியங்களைப் பார்ப்பதற்கும் செலவாயிற்று. ஆதலின் மத்தியான போஜனம் ஆனதும் பள்ளிக்கூடம் வைத்துக் கொள்ளவேண்டியதா யிருந்தது. பள்ளிக்கூடம் நடத்தத் தகுந்த நேரம் வேறெதுவுமில்லை. ஹிந்தி, தமிழ், குஜராத்தி, உருது ஆகிய எல்லாப் பாஷைகளும் கற்பித்தோம். பிள்ளைக

ளுக்கு அவரவர் தாய் மொழி மூலமாகவே கல்வி பயிற்றி னோம். ஆங்கிலமும் சொல்லிக் கொடுக்கப்பட்டது. குஜராத்தி ஹிந்து குழந்தைகளுக்குச் சிறிதளவேனும் சமஸ் கிருதம் கற்பிப்பது அவசியம். எல்லாக் குழந்தைகளுக்கும் தேச சரித்திரம், பூகோளம், கணக்கு இவற்றில் ஆரம்பப் பாடங்களேனும் போதிக்க வேண்டும் தமிழும், உருதுவும் நான் கற்பிப்பதாக ஒப்புக்கொண்டேன். எனக்குத் தெரிந் திருந்த சொற்பத் தமிழ், பிரயாணங்களின் போதும், சிறைச்சாலையிலும் நான் கற்றுக் கொண்டதாகும். போப் என்பவர் எழுதிய சிறந்த தமிழ் பால பாடம் ஒன்றுதான் நான் படித்த தமிழ்ப் புத்தகம். ஓர் பிரயாணத்தின்போது உருது எழுத்துக்கள் கற்றுக் கொண்டேன். உருது பாஷா ஞானமோ முஸ்லிம் நண்பர்களிடம் பழக்கத்தில் கற்றுக் கொண்ட பாரஸீக, அரபு வார்த்தைகளின் அளவாக நின் றிருந்தது. ஹைஸ்கூலில் படித்ததற்குமேல் ஸமஸ்கிருதம் எனக்குத் தெரியாது. குஜராத்தி மொழியிலும் கூட அதிக பயிற்சி கிடையாது.

இந்த சொற்ப மூலதனத்தைக் கொண்டே வியாபாரம் நடத்தியாக வேண்டும். என் சகாக்களோ என்னை விட மோசமாயிருந்தார்கள். ஆனால் தேச பாஷைகளில் எனக் கிருந்த அன்பும், உபாத்திமைத் தொழிலில் எனக்குத் திறமை யுண்டென்னும் நம்பிக்கையும், என்னுடைய மாணுக்கர்களின் அறியாமையும், அதனினும் மேலாக அவர்களுடைய தயாளமும் சேர்ந்து என் வேலையைச் சுலபமாக்கின.

தமிழ்ச் சிறுவர்கள் எல்லாரும் தென்னுப்பிரிக்காவில் பிறந்தவர்கள். ஆதலின் அவர்களுடைய தமிழறிவு மிகச் சொற்பம். தமிழ் எழுத்தோ அவர்களுக்குத் தெரியவே

தெரியாது. ஆதலின் தமிழ் எழுத்துக்களும், ஆரம்ப இலக்கண விதிகளும் அவர்களுக்கு நான் கற்பிக்கவேண்டி வந்தது. இது மிக எளிதாகவே யிருந்தது, சம்பாஷணையை பொறுத்தவரை என் தமிழ் மாணுக்கர்கள் என்னை எளிதில் தோற்கடித்து விடுவார்கள். அவர்களுக்குத் தமிழ் பேசத் தெரியும். ஆங்கிலம் தெரியாத தமிழர்கள் என்னைப் பார்க்க வரும்போதெல்லாம் என் மாணுக்கர்களே மொழி பெயர்ப் பார்கள். இப்படியெல்லா மிருந்தும் நாங்கள் சந்தோஷ மாய்க் காலங் கழித்தோம். என் அறியாமையை நான் மாணுக்கர்களிட மிருந்து மறைக்க முயலாததே இதற்குக் காரணமாகும். எல்லா விஷயங்களிலும் என்னை உண்மை நிலையிலேயே அவர்களுக்குக் காட்டிக் கொண்டேன். ஆகையினுல் தான் பாஷை அறிவு எனக்குப் பூஜ்யமா யிருந்தபோதிலும் அவர்களுடைய மரியாதையையும் அன்பையும் காப்பாற்றிக் கொள்ளுதல் சாத்தியமாயிற்று. முஸ்லிம் சிறுவர்களுக்கு உருது கற்பித்தல் அதைவிடச் சிறிது எளிதா யிருந்தது. அவர்களுக்கு உருது எழுத் துக்களை தெரியும்; வாசிப்பதிலும், கையெழுத்தை அபி விருத்தி செய்வதிலும் அவர்களுக்கு ஊக்க முண்டாக்குவதே என் வேலை.

இந்தச் சிறுவர்களில் பெரும்பாலோர் எற்கனவே எழுத்து வாசனை யறியாதவர்கள் ; பள்ளிக்கூடம் சென்று அறியாதவர்கள். ஆயினும் அவர்களைச் சோம்பேறித் தனத்தினின்று விடுவிப்பது, அவர்களுடைய படிப்பை மேற்பார்வை செய்வது மல்லாமல் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியது அதிகமில்லை யென்பதை அனுப வத்தில் கண்டேன். இவ்வளவுடன் நான் திருப்தியடைந்த படியால், பல பிராயத்தினரும் வெவ்வேறு பாடம் படிப்பு

வருமான பல சிறுவர்களை ஒரே வகுப்பு அறையில் வைத்து சமாளிப்பது சாத்தியமா யிருந்தது.

பாட புத்தகங்களைப் பற்றி நாம் அடிக்கடி கேள்விப் படுகிறோம். ஆனால் பாட புத்தகங்கள் அவசியமென்று நான் காணவே யில்லை. கிடைத்த புத்தகங்களைக் கூட நான் அதிகமாகப் பயன்படுத்தியதாய் ஞாபகமில்லை. பிள்ளைகளின்மீது புத்தகங்களை ஏராளமாய்ச் சுமத்துதல் அனாவசியமென்பது எனது கருத்து. பிள்ளைகளுக்கு உண்மையான பாட புத்தகம் உபாத்தியாயரே யாகும். நான் படித்த காலத்தில் என் உபாத்தியாயர்கள் புத்த கங்களிலிருந்து கற்பித்தது எதுவும் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் தனியாக அவர்கள் கற்பித்தவை யெல்லாம் தெளிவாக ஞாபகத்தி லிருக்கின்றன. குழந்தைகள் எப்போதும் கண்களினால் கற்றுக்கொள்வதை விடக் காதுகளின் வழியாய் அதிகம் கற்றுக் கொள்கின்றன; எளிதிலும் கற்றுக்கொள்கின்றன. பிள்ளைகளுடன் சேர்ந்து முதற் பக்கத்திலிருந்து கடைசிபக்கம் வரையில் எந்தப் புத்தகமும் படித்ததாக எனக்கு ஞாபகமில்லை. ஆனால் பற்பல புத்தகங்களிலிருந்து நான் படித்து ஜீரணித்த வற்றை என்னுடைய சொந்த நடையில் அவர்களுக்குச் சொன்னேன். இன்னமும் அவற்றை அவர்கள் நினைவு கூர்ந்திருக்கிறார்கள் என்று உறுதி கூறுவேன். புத்தகங் களிலிருந்து கற்றுக்கொண்டவற்றை நினைவில் வைத்தி ருப்பது அவர்களுக்கு நிரம்பப் பிரயாசையா யிருந்தது. ஆனால் வாய் மொழியாகக் கூறியவற்றை யெல்லாம் அவர்கள் வெகு சுலபமாகத் திருப்பிச் சொன்னார்கள். படித்தல் அவர்களுக்குக் கடின வேலையா யிருந்தது.

என்னுடைய பேச்சைக் கேட்டாலோ சந்தோஷமான காரியமா யிருந்தது.

ஆனால் கூறும் விஷயத்தை அவர்களுக்குச் சுவை தரும்படி மட்டும் சொல்ல வேண்டும். என்னுடைய பேச்சுகளின்மேல் அவர்கள் கேட்ட கேள்விகளிலிருந்து எவ்வளவு தூரம் என் பேச்சுகளை அறிந்து கொண்டுள்ளார்களென்று தெரிந்துகொள்ள முடிந்தது.

முப்பத்து நான்காம் அத்தியாயம்

ஆன்மப் பயிற்சி

பிள்ளைகளின் தேகப்பயிற்சி, அறிவுப் பயிற்சி, இவற்றைவிட அவர்களுடைய ஆன்மப் பயிற்சி அதிக கஷ்டமான காரியமாயிருந்தது. ஆன்மப் பயிற்சிக்குச் சமய நூல்களை நான் அதிகம் நம்பி யிருக்கவில்லை. ஒவ்வொரு மாணாக்கனும் தன் சொந்த சமயத்தின் மூலாதார தத்துவங்களை அறிந்திருப்பதுடன், தன் சமயத்தின் முக்கிய நூல்களைப் பற்றியும் பொதுவாகத் தெரிந்து கொள்வது அவசியமென்றே கருதினேன். அதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்தேன். ஆனால் சமய நூல் படிப்பை அறிவுப் பயிற்சியின் ஒரு பகுதியாகவே கொண்டிருந்தேன். டால்ஸ்டாய் பண்ணையில் சிறுவர்களுக்குக் கல்வி புகட்டும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு நீண்டகாலம் முன்பே ஆன்மப் பயிற்சி யென்பது ஒரு தனித்துறை என்பதை உணர்ந்திருந்தேன். ஆன்மப் பயிற்சியாவது, ஒருவனை சன்மார்க்கத் துறையில் நிறுத்தி அவனுக்கு பிரம்மஞானம், ஆத்மானுபூதி என்னும் இலைக்கினைத் தேடுவதற்குரிய சக்தி

யளித்தலேயாகும். இளைஞர்களின் கல்விப் பயிற்சியில் இது ஒரு முக்கிய அம்சமாக இருத்தல் வேண்டுமென்றும், ஆன்மப் பயிற்சியில்லாத வரையில் மற்றப் பயிற்சிகள் எல்லாம் பயனற்றவை யாவதோடு தீமை பயத்தலுங்கூடும் என்றும் நம்பினேன்.

வாழ்க்கையின் நான்காவது நிலையான சந்நியாச ஆசிரமத்திலே தான் ஆன்மஞானப் பேறு பெறல்சாத்தியம் என்பதாக ஒரு குருட்டுக் கொள்கை இருந்து வருகிறது. ஆனால் ஆன்மஞான அநுபவத்துக்குரிய முயற்சியை வாழ்க்கையின் கடைசி பகுதிக்கென்று தள்ளி வைத்திருப்போர் ஒருகாலும் ஆன்மஞானம் அடைவதில்லை. அவர்கள் இரண்டாவது குழந்தைப் பருவத்துக்குச் சமமான முதுமைப் பருவத்தையே அடைந்து, இரக்கத் தக்கவர்களாகி, பூமிக்குப் பாரமாய் வாழ்கிறார்கள். நான் குழந்தைகளுக்குப் பாடங் கற்பித்துக்கொண்டிருந்த போதே, அதாவது 1911-12-லேயே, இத்தகைய அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தேனென்பது நன்றாக நினைவிலிருக்கிறது. ஒருகால் இதே பாஷையில் அப்போது என் கருத்துக்களை வெளியிட்டிருக்க முடியாது. நிற்க,

குழந்தைகளுக்கு ஆன்மப் பயிற்சி யளித்தல் எவ்வாறு? அவர்களைத் தோத்திரப் பாக்கள் நெட்டுருப் பண்ணிப் பாடும்படி செய்தேன். சன்மார்க்கம் போதிக்கும் நூல்களிலிருந்து அவ்வப்போது சில பகுதிகளைப் படித்துக் காட்டினேன். ஆனால் இவற்றினாலெல்லாம் நான் திருப்தியடைந்து விடவில்லை. அவர்களுடன் நெருங்கிப் பழகப் பழக, புத்தகங்களின் மூலமாய் ஆன்மப்பயிற்சி யளிக்க முடியவே முடியாதென்று உணரலானேன். தேகாப்பியாசங்களின் மூலமாகவே தேகப் பயிற்சியும், அறிவு அப்பியா

சங்களின் மூலமாகவே அறிவுப் பயிற்சியும் அளிக்கப்படக் கூடும் என்பது எவ்வாறு உண்மையோ, அவ்வாறே ஆன்மப் பயிற்சியும் ஆன்மசாதன அப்பியாசங்களின் மூலமாகவே சாத்தியமாகும் என்று கண்டேன். ஆன்ம சாதன அப்பியாசமோ உபாத்தியாயரின் வாழ்க்கையையும், ஒழுக்கத்தையும் முற்றும் பொறுத்ததொன்றாகும். உபாத்தியாயர் பிள்ளைகளின் மத்தியில் இருக்கும்போதும் சரி, மற்ற வேளைகளிலும் சரி, தம்முடைய குணம், செயல் இவை குறித்து மிக எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். உபாத்தியாயர் பிள்ளைகளிடமிருந்து பல மைல் தூரத்துக் கப்பாலிருக்கும் போதும் தம்முடைய வாழ்வு முறையின் மூலம் அப் பிள்ளைகளின் ஆன்மப் பயிற்சிக்குத் துணை செய்யவோ, ஊறு செய்யவோ இயலும். நான் பொய்யனா யிருந்தால் என்னிடம் படிக்கும் பிள்ளைகளுக்கு உண்மைபேசக் கற்றுக் கொடுத்தல் வீண் முயற்சியேயாகும். கோழை உபாத்தியாயர் ஒருவர் தமது பையன்களை வீரர்களாக்குதல் ஒருகாலும் இயலாத காரியம். அவ்வாறே புலனடக்கத்தைக் கைக்கொள்ளாத உபாத்தியாயர் தமது பிள்ளைகளுக்குப் புலனடக்கம் போதிக்கவும் முடியாது. ஆகவே என்னுடன் வசிக்கும் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் நான் நித்திய உதாரண பாடமாய் இருக்க வேண்டுமென உணர்ந்தேன். இவ்வாறு மாணாக்கர்கள் எனது உபாத்தியாயர்களானார்கள். அவர்களுக்காகவேனும் நான் நல்லவனாயிருக்க வேண்டுமென்றும் நேர்மைவாழ்வு நடத்தவேண்டு மென்றும் கற்றுக்கொண்டேன். டால்ஸ்டாய் பண்ணையில் நான் அதிக கட்டுப்பாட்டையும், புலனடக்கத்தையும் மேற்கொண்டதற்குப் பெரும்பாலும் அக்குழந்தைகளே காரணம் என்று சொல்லலாம்.

பையன்களில் ஒருவன் நிரம்ப துஷ்டனுயும், அடங்காப் பிடாரியாயும், பொய் சொல்வோனுயும், சண்டையிடுவோனுயும் இருந்தான். ஒரு நாள் அவனுடைய துஷ்டத்தனம் அளவு மீறி விடவே என்னுல் பொறுக்க முடியாமல் போய் விட்டது. நான் அதுவரை பிள்ளைகளைத் தண்டித்ததே கிடையாது. ஆனல் இப்போது உண்மையிலேயே நிரம்பக் கோபம் வந்து விட்டது. அவனுக்கு புத்திசொல்ல முயன்றேன். ஆனல் அவன் சிறிதும் அசைய வில்லை. என்னையே எதிர்த்துத் தலை மீதேறப் பார்த்தான். கடைசியில் அருகில் கிடந்த 'ரூல்' கழியை எடுத்துக் கொண்டு அவனுடைய புஜத்தில் ஓர் அடி அடித்தேன். அப்படி அடிக்கும்போது என் உடம்பு நடுநடுங்கிற்று. அதை அவன் பார்த்திருக்க வேண்டும், அவர்கள் எல்லாருக்குமே இது ஒரு புதிய அநுபவமாகும். பையன் சத்தம் போட்டு அழுதான்; மன்னிக்கும்படி கெஞ்சினுன். அடிவலித்ததற்காக அவன் அழவில்லை. பதினேழு வயதான தேக வலிமையுள்ள வாலிபனுதலால் அவனுக்கு மனமிருந்தால் என்னைத் திருப்பி அடித்திருக்கவுங் கூடும். ஆனல் நான் எவ்வளவு மனத்துன்ப மடைந்தநின் மேல் அவனை அடிக்கத் தலைப்பட்டிருக்க வேண்டு மென்பதை அவன் உணர்ந்தான். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் அவன் எனக்குக் கீழப்படியாதிருந்ததேயில்லை. ஆனல் அவ்வாறு பலாத்காரத்தைக் கைக்கொண்டது குறித்து இன்னமும் நான் வருந்துகிறேன். அன்றைய தினம் அப்பையன் முன்பு நான் என்னுடைய ஆன்ம சத்தியைக் காட்டவில்லை யென்றும், என்னிடமுள்ள விலங்கு குணத்தையே காட்டினே னென்றும் எண்ணுகிறேன்.

உடல் தண்டனையே உதவாது என்பதே என்னுடைய உறுதியான அபிப்பிராயமாகும். என் புதல்வர்களில் ஒரு

வனுக்கு நான் தேக தண்டனை யளித்ததாக ஒரே ஒரு சந்தர்ப்பம் தான் என் நினைவிலிருக்கிறது. இன்று வரையில், நான் ரூல் கழியினல் அப்பையனை அடித்தது சரியா, தவரு என்று முடிவு செய்யக் கூடாதவனுகவே இருக்கிறேன். அது கோபத்தினுலும், தண்டிக்க வேண்டு மென்னும் ஆசையினுலும் தூண்டப் பட்ட தாதலின் தவருகவே யிருக்கலாம். எனது மனத்துன்பத்தை வெளிப்படுத்தும் சமிக்ஞையாக மட்டு மிருந்திருப்பின், நியாய மென்று சொல்லி விடுவேன். ஆனல் உண்மையில் இவ்விஷயத்தில் நோக்கம் பல வகைப் பட்டதா யிருந்தது.

இந் நிகழ்ச்சி என்னைச் சிந்தனைக்குள்ளாக்கி மாணுக்கர் களைத் திருத்துவதற்கு அடிப்பதைவிட நல்ல முறையையும் கற்பித்தது, இந்த நல்ல முறை மேற் கூறிய சந்தர்ப்பத்தில் எவ்வளவு தூரம் பயன்பட்டிருக்கு மென்று சொல்ல முடியாது. அவ்விளைஞன் விரைவில் மேற் கூறிய சம்பவத்தை மறந்து விட்டான். அவன் எப்பொழுதுமே அதிக அபி விருத்தி யடைய வில்லை. ஆனல் அந்நிகழ்ச்சி பிள்ளைகள் விஷ யத்தில் உபாத்தியாயரின் கடமை யென்ன வென்பதை எனக்கு நன்கு உணர்த்தியது.

இதற்குப் பிறகும் பிள்ளைகள் பலமுறை தவருகநடந்து கொண்டார்கள். ஆனல் நான் மட்டும் உடல் தண்டனையை எப்போதும் கைக் கொள்ளவில்லை. இவ்வாருக, என் கீழி ருந்த பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் ஆன்மப் பயிற்சி அளிக்கும் முயற்சியின் பயனுக, ஆன்ம சக்தியின் பெரு மையை நான் நன்குணர்ந்து வரலானேன்.

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

பயிரில் களைகள்

அதற்குமுன் எனக்கு என்றும் தோன்ருத ஒரு பிரச்னையை டால்ஸ்டாய் பண்ணையில் மிஸ்டர் காலன்பாக் என், கவனத்துக்குக் கொண்டுவந்தார். நான் முன்னமே சொன்னதுபோல் பண்ணையிலிருந்த பையன்களில் சிலர் துஷ்டர்களாயும், கட்டுக்கு அடங்காதவர்களாயும் இருந்தனர். அவர்களில் ஒன்றுக்கும் பயனற்றபதர்களும் இல்லாமற் போகவில்லை. என் புதல்வர்களில் மூவரும் அவர்களுடன் தினந்தோறும் நெருங்கிப் பழகினுர்கள். என் புதல்வர்களின் தரத்தையே சேர்ந்த மற்றச் சிறுவர்களும் அவ்வாறே செய்தார்கள். இது மிஸ்டர் காலன்பாக்கின் மனதை அல்லலுக்காளாக்கியது. ஆனல் அவருடைய கவனமெல்லாம், என்னுடைய புதல்வர்களை மேற்படி அடங்காப் பிடாரிகளுடன் சேர்த்து வைத்திருப்பது சரியா என்பதிலேயே முக்கியமாய்ச் சென்றிருந்தது.

ஒரு நாள் அவர் மனம் விட்டுப் பேசினுர். "உங்கள் புதல்வர்களைத் துஷ்டப் பிள்ளைகளுடன் கலக்கவிடும் முறை எனக்குப் பிடிக்கவேயில்லை. அது ஒரே ஒரு பயனைத்தான் அளிக்கக் கூடும். துர்ச்சகவாசத்தால் அவர்களும் கெட்டுப் போவார்கள்" என்ருர்.

இவ்விஷயம் எனக்குக் கலக்கத்தையளித்ததா என்பது இப்போது எனக்கு நினைவில்லை. ஆனல் நான் அவருக்குக் கூறிய பதில் நினைவிருக்கிறது. அது வருமாறு:—

"என் பிள்ளைகளுக்கும், துஷ்டப் பிள்ளைகளுக்கும் நான் எப்படி வேற்றுமை பாராட்ட முடியும்? அவ்விருவர்

விஷயத்திலும் எனக்குச் சமானமான பொறுப்பு உண்டு. நான் அழைத்ததினாலேயே அச்சிறுவர்கள் வந்தார்கள். கொஞ்சம் பணங் கொடுத்து அவர்களை விலக்கி விட்டேனானால் அவர்கள் உடனே ஜோகானிஸ்பர்க்குக்கு ஓடிப் போய்ப் பழைய வழிகளையே கைக்கொள்ளத் தொடங்குவார்கள். உங்களுக்குஓர்உண்மைசொல்லட்டுமா? அவர்கள் இங்கே வந்திருப்பதால் எனக்குப் பெரியதொரு நன்மை செய்திருப்பதாக அவர்களும், அவர்கள் பெற்றோர்களும் அநேகமாக எண்ணிக் கொண்டிருக்கலாம். அவர்கள் இங்கே பல அசௌகரியங்களுக் குள்ளாக வேண்டி யிருக்கிறதென்பது நீங்களும் நானும் அறிந்ததே. ஆனால் என்னுடைய கடமை எனக்குத் தெளிவா யிருக்கிறது. நான் அவர்களை இங்கே வைத்துக்கொண்டே யாக வேண்டும். ஆதலின் என் குழந்தைகளும் அவர்களுடன் கலந்து வசித்தே தீரவேண்டும். இன்று முதல் என் குழந்தைகளுக்கு மற்றவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று எண்ணும்படி கற்பித்தல் நியாயமாகுமா? அது நியாயமென்று ஒருநாளும் சொல்லமாட்டீர்கள். அந்த உயர்வு தாழ்வு எண்ணத்தை அவர்கள் மண்டையில் ஏற்றுதல் அவர்களை வழியில்லா வழியில் செலுத்துவதே யாகும். இப்படி மற்றப் பிள்ளைகளுடன் கலந்து பழகுதல் அவர்களுக்குக் கட்டுப்பாட்டில் நல்ல பயிற்சியாயிருக்கும். அவர்கள் தாங்களாகவே நன்மை, தீமைகளைப் பகுத்தறியத் தெரிந்துகொள்வார்கள். அவர்களிடம் ஏதேனும் நல்ல குணங்கள் இருந்தால் அவை அவர்களுடையதோழர்களைப் பற்றிக்கொள்ளுமென்று நாம் ஏன் நம்பக்கூடாது? எங்ஙனமாயினும் அவர்களை இங்கேதான் வைத்திருக்க வேண்டும். அது சிறிது அபாயகரமானதென்றால், அந்தஅபாயத்துக்கு நாம் துணிந்தே யாகவேண்டும்,

மிஸ்டர் காலன்பாக் தலையை யசைத்தார்.

இதன் விளைவு தீயதாயிற்று எனச் சொல்ல முடியாது. இச்சோதனையின் காரணமாக என் புதல்வர்கள் எவ்வகைக் கெடுதியையும் அடைந்ததாக எனக்குத் தோன்றவில்லை. உண்மையில், அவர்கள் அதனால் லாபமே யடைந்தார்க ளென்பதை நான் காண்கிறேன். அவர்களிடம் தாங்கள் உயர்ந்தவர்கள் என்னும் எண்ணம் அணுவளவேனும் அதற்கு முன் இருந்திருப்பின், அதுவும் இம்முறையினால் ஒழிந்தது. எல்லா வகைக் குழந்தைகளுடனும் அவர்கள் தாராளமாய்ப் பழகக் கற்றுக்கொண்டார்கள். அவர்கள் சோதனையில் தேறிக் கட்டுப்பாடு பெற்றார்கள்.

இதுவும், இதுபோன்ற பிற சோதனைகளும் எனக்குக் கற்பித்திருப்பதாவது:—"நல்ல குழந்தைகளை துஷ்டக் குழந்தைகளுடன் சேர்த்துக் கல்வி கற்பித்து. அவர்களுடனே பழகும்படி செய்துவந்தால் அதனால் அவை நஷ்டம் எதுவும் அடைவதில்லை, ஆனால் அந்தச் சோதனையானது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களின் எச்சரிக்கையான மேற்பார்வையின் கீழ் நடைபெற வேண்டும்."

இதனால், வெளிக் காற்றுப் படாமல் பத்திரப்படுத்தி வைக்கும் குழந்தைகளைத் தீமைகளே தொடுவதில்லை என்று ஏற்படாது. எனினும் பலவகையாக வளர்க்கப்பெற்ற சிறுவர் சிறுமிகள் ஓரிடத்தில் சேர்க்கப்பட்டு கல்வி கற்பிக்கப் படும்போது, அது பெற்றோர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் பெரியதொரு சோதனையாகிறது. அவர்கள் எப்போதும் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

முப்பத்தாறும் அத்தியாயம்

பிராயச்சித்த உபவாஸம்

பையன்களையும், பெண்களையும், சரியான வழியில் கல்வி பயிற்றி வளர்த்தல் எவ்வளவு கஷ்டம் என்பது நாளுக்கு நாள் எனக்கு நன்கு தெளிவாகி வந்தது. மெய்யாகவே அவர்களுடையஉபாயத்தியாயனுகவும், பாது காவலனுகவும் நான் ஆகவேண்டுமானுல், அவர்களுடைய ஹிருதயங்களைக் கவர்ந்து விடவேண்டும்; அவர்களுடைய சுகதுக்கங்களைப் பகிர்ந்தனுபவிக்க வேண்டும்; அவர்களுடைய இளமை காரணமாய்ப் பொங்கி எழும் அபிலாஷைகளை யெல்லாம் நேரிய வழியில் செலுத்த வேண்டும் என்பதாக உணரலானேன்,

இந்த சமயத்தில் நான் ஒரு கடுஞ்சோதனைக்கு ஆளாக வேண்டியதாயிற்று. அக்காலத்தில் ஜோகானிஸ்பர்க்குக்கும் போனிக்ஸுக்கும் நான் அடிக்கடி போய் வந்துகொண் டிருந்தேன். ஒருமுறை ஜோகானிஸ்பர்க்கில் இருந்தபோது ஆசிரம வாசிகள் இருவர் ஒழுக்கந் தவறி வீழ்ந்தனர் என்னும் செய்தி கேள்வியுற்றேன். சத்தியாக்கிரஹ இயக்கத்தில் அபஜயம்போல் காணப்படும் ஒரு நிகழ்ச்சி நேரிட்டால் நான் கலங்குவதில்லை; ஆனுல் இந்தச் செய்தி கேட்டதும் இடி விழுந்ததே போல் திகைத்துப் போனேன். அன்றைய தினமே ரயிலில் போனிக்ஸுக்குப் புறப் பட்டேன். மிஸ்டர் காலன்பாக் என்னுடன் வருவே னென்று பிடிவாதம் பிடித்தார். என்னுடைய மனே நிலையை அவர் அறிந்திருந்தார். என்னைப் பெரிதும் கலங்கச் செய்த அச் செய்தியைக் கொண்டு வந்தவர் அவரே யாதலால், நான் தனியாய்ப் போவதென்னும் எண்ணமே அவரால் சகிக்க முடியவில்லை.

போகும் வழியில் என்னுடைய கடமை இன்ன தென்று எனக்குத் தெளிவாயிற்று. ஒரு பையனோ, பெண்ணோ நெறி தவறி நடந்தால் அதற்கு உபாத்தியாயன் அல்லது பாதுகாவலன் ஓரளவேனும் பொறுப்புள்ளவ னென்று உணர்ந்தேன். ஆதலின் இவ் விஷயத்தில் என்னுடைய பொறுப்பு என்னவென்பது எனக்கு வெள்ளிடை மலையாய் விளங்கிற்று அவர்களைப் பற்றி என் மனைவி என்னை முன்னமே எச்சரித்திருந்தாள். ஆனால் பிறரை எளிதில் நம்பும் இயல்புடைய நான் அவளுடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. குற்றம் செய்த வர்களைத் தங்கள் குற்றத்தை உணரச் செய்வதற்கும், அதனால் எனக்கு நேர்ந்த மனத் துன்பத்தை அறியச் செய்வதற்கும் அக்குற்றத்துக்காக நான் பிராயச்சித்தம் செய்து கொள்ளல் அவசியம் என்று கண்டேன். ஆதலின் ஏழு நாளைக்கு உபவாச விரதமும் அதற்குப் பின்னர் நாலரை மாதத்துக்கு தினம் ஒரு வேளையே சாப்பிடுவ தென்னும் விரதமும் கைக் கொள்ளத் தீர்மானித்தேன். மிஸ்டர் காலன்பாக் நான் இப்படிச் செய்யாவண்ணம் என் மனதை மாற்ற முயன்றார்; பயனில்லை. கடைசியாக, அவர் நான் பிராயச்சித்தம் செய்துகொள்ளல் முறைதான் என்று ஒப்புக்கொண்டு, தாமும் அவ்விரதங் கைக்கொள்வ தாகப் பிடிவாதம் செய்தார். அவருடைய மாசற்ற அன்பை என்னால் எதிர்த்து நிற்க முடியவில்லை.

மேற்படி தீர்மானம் என் மனதிலிருந்து ஒரு பெரும் பாரத்தை நீக்கிற்று. மன ஆறுதல் பெற்றேன். குற்றம் செய்தவர்களிடம் உண்டான கோபமும் தணிந்தது. கோபம் இருந்த இடத்தில் தூய இரக்கம் உண்டாயிற்று. இவ்வாறு மன நிம்மதி பெரிதும் அடைந்தவனாய்

போனிக்ஸ் அடைந்தேன். இன்னும் ஆராய்ச்சி செய்து எனக்கு தெரியவேண்டியிருந்த மற்றுஞ் சில விவரங்களைத் தெரிந்து கொண்டேன். என்னுடைய பிராயச்சித்தம் எல்லாருக்கும் துன்பமளித்ததாயினும் அதனுல் நிலைமை தெளிவடைந்தது. பாவஞ் செய்தல் எவ்வளவு பயங்கர மானது என்று ஒவ்வொருவரும் உணர்ந்தார்கள். என்னைச் சிறுவர் சிறுமிகளுடன் பிணைக்க அன்புத் தளையானது இன்னும் பலம் பெற்று உண்மைத் தளையே யாயிற்று.

இச் சம்பவத்திலிருந்து ஏற்பட்ட மற்ருெரு விளைவின் காரணமாக, சில காலத்திற்குப் பின்னர் நான் பதினைன்கு நாள் பட்டினி விரதம் மேற்கொள்ள நேர்ந்தது. இதனுல் நான் எதிர்பார்த்ததைவிட நல்ல பயன்கள் விளைந்தன.

இதிலிருந்து, மாணுக்கர்களிடையே ஒழுக்கத் தவறு நேரிடும்போதெல்லாம் பட்டினி கிடைத்தல் உபாத்தியாயர் கடமையென நிரூபிப்பது என்னுடைய நோக்கமன்று. ஆனுல் சில சந்தர்ப்பங்களில் இந்தக் கடும் பரிகார முறை அவசியமென்பது என் அபிப்பிராயம். ஆனுல் இப் பிராயச்சித்த முறையைக் கைக்கொள்வதற்குத் தெளிந்த நோக்கமும், பாரமார்த்திகத் தகுதியும்ஏற்கெனவே இருத்தல் வேண்டும். உபாத்தியாயனுக்கும் மாணுக்கனுக்கு மிடையே எங்கு அன்பு இல்லையோ, மாணுக்கனுடைய ஒழுக்கத் தவறு குறித்து உபாத்தியாயருக்கு உள்ளம் நிறைந்த துயரம் எங்கு உண்டாகவில்லையோ, எவ்விடத்தில் உபாத்தியாயரிடம் மாணுக்கனுக்கு மரியாதை கிடையாதோ அங்கே உபவாசத்தினுல் எவ்வகைப் பயனு மில்லை; மற்றும், அதனுல் தீங்கும் ஏற்படக்கூடும். ஆதலின் அம்மாதிரி சந்தர்ப்பங்களில் உபாத்தியாயர் பட்டினி விரதம் மேற்கொள்வதன் உசிதத்தைப்பற்றி ஐயத்துக்கிட முண்டு.

ஆனால் மாணாக்கனுடைய தவறுகளுக்கு உபாத்தியாயருடைய பொறுப்பைப் பற்றிய வரையில் சந்தேகமே கிடையாது.

முதல் பிராயச் சித்தம் எங்களில் எவருக்கும் கஷ்டமாயிருக்கவில்லை. என்னுடைய வழக்கமான நடவடிக்கைகளில் எதையும் நான் நிறுத்தி வைக்க நேரவில்லை. இந்தப் பிராயச்சித்த காலம் முழுவதிலும் நான் சுத்த பழ உணவே அருந்தி வந்தேன் என்பதையும் குறிப்பிடல் வேண்டும். இரண்டாவது உபவாசத்தின் போது பிற்பகுதி எனக்குச் சற்று கஷ்டமாகவே இருந்தது. இராம நாமத்தின் அதி ஆச்சரியமான சக்தியை அப்போது நான் பூரணமாய் அறிந்து கொள்ளவில்லை. அந்த அளவுக்குத் துன்பம் பொறுக்கும் சக்தி எனக்குக் குறைவாகவே இருந்தது. உபவாச விதிகளையும் நான் அறிந்தவனல்லன். முக்கியமாக, உபவாசத்தின் போது, அவ்வளவு அருவருப்பாயும், சுவையில்லாமலும் இருப்பினும் தண்ணீர், நிறைய அருந்துதல் அவசியம் யென்பது எனக்குத் தெரியாது. மற்றும், முதல் உபவாசம் மிகவும் எளிதா யிருந்தமையால், இரண்டாவது உபவாசத்தின்போது சிறிது அஜாக்கிரதையா யிருந்தேன். முதல் உபவாசத்தின் போது தினந்தோறும் டாக்டர் கூனின் முறைப்படி ஸ்நானம் செய்து வந்தேன் இரண்டாவது தடவையிலோ, இரண்டு மூன்று நாளைக்குப் பின்னர் கூன் ஸ்நானம் செய்வதை நிறுத்தி விட்டேன். தண்ணீர் மிகவும் அருவருப்பா யிருந்தபடியால் தண்ணீர் அருந்துவதையும் விட்டு விட்டேன். அதனால் தொண்டை காய்ந்து பலவீனமுற்றது. கடைசி தினங்களில் மிகவும் ஈனக் குரலிலேயே பேசுதல் சாத்தியமாயிற்று. இந் நிலையிலும், என்னுடைய

வேலைகள் நடந்துகொண்டுதா னிருந்தன. எழுதுதல் அவசியமான போது, பிறரைக் கொண்டு எழுதச் செய்தேன். இராமாயாணம் முதலிய சமய நூல்களிலிருந்து சிற்சில பகுதிகள் படிக்கச்செய்து தவறுமல் கேட்டு வந்தேன். அவசரமான காரியங்களில், விவாதித்து ஆலோசனை சொல்லப் போதிய பலம் எனக்கு எப்போதும் இருந்து வந்தது.

முப்பத்தேழாம் அத்தியாயம்

லண்டன் பிரயாணம்

தென்னுப்பிரிக்கா ஞாபகங்களில் பலவற்றை விடுத்து நான் மேலே போகவேண்டும்.

1914-ம் ஆண்டில் சத்தியாக் கிரஹப் போராட்டம் முடிவுற்றபோது, லண்டன் வழியாக இந்தியாவுக்குத் திரும்பும்படி கோகலே செய்தி யனுப்பினுர். எனவே, ஜுலை மாதத்தில் கஸ்தூரிபாயும். காலன்பாக்கும், நானும் இங்கிலாந்துக்குப் பிரயாணமானேம்.

சத்தியாக்கிரஹ இயக்கம் நடந்து வருகையில் நான் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்யத் தொடங்கி விட்டேன். ஆதலின் இந்தப் பிரயாணத்துக்கு மூன்றும் வகுப்புச் சீட்டுகளே வாங்கினேன். ஆனல் தென்னுப் பிரிக்கா லண்டன் பாதையில் மூன்றும் வகுப்பு இட மென்றுல், இந்தியாவின் கரையோரம் செல்லும் கப்பல் களிலும், ரயில் வண்டிகளிலிலும் உள்ளது போன்றதன்று. இந்தக் கப்பல்களிலும், ரயில்களிலும் உட்காருவதற்கே போதிய இடங்கிடையாது. தூங்கும் இடத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. மேலும் தூய்மை என்பது

சிறிதளவும் இராது ஆனால் லண்டன் பிரயாணத்தில் கப்பலில் போதிய இடங் கிடைத்ததுடன் இடம் தூய்மை பொருந்தியு மிருந்தது. கப்பல் கம்பெனியார் எங்களுக்கு விசேஷ வசதிகள் செய்து கொடுத்திருந்தனர். எங்களுக்குத் தனிக் கக்கூசு ஏற்படுத்தப் பட்டது. நாங்கள் பழ உணவுக்காரர்க ளாதலால், எங்களுக்குப் பழங்களும், கொட்டைகளும் தரும்படியும் உத்திரவிடப்பட் டிருந்தது. வழக்கமாக, மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்குப் பழம், கொட்டை தரப்படுவதில்லை. இந்த வசதிகள் காரணமாக, கப்பலில் எங்கள் பதின்மூன்றுநாள் பிரயாணம் சுகமாகவே இருந்தது.

இப்பிரயாணத்தின் போது நிகழ்ந்த சில சம்பவங்கள் குறிப்பிடத் தக்கன வாகும். தூரத்திலுள்ள பொருள்களை அருகிலுள்ளது போல் காட்டும் 'பைனகுலர்' என்னும் இரட்டைக் கண்ணாடியில் மிஸ்டர் காலன்பாக்குக்கு விருப்பம் அதிகம். விலையுயர்ந்த கண்ணாடிகள் இரண்டோ, ஒன்றோ அவர் வைத்திருந்தார். இந்தக் கண்ணாடிகளைக் குறித்து எங்களுக்குள் தினந்தோறும் விவாதம் நடந்து வந்தது. நாம் அடைய விரும்பும் எளிய வாழ்க்கை இலட்சியத்துக்கு அது பொருந்தாத வஸ்து என்று அவருக்கு அறிவுறுத்த முயன்றேன். எங்கள் அறையின் காற்றுத் துவாரத்துக் கருகில் ஒரு நாள் நாங்கள் நின்று கொண்டிருக்கையில் இந்த விவாதம் பெரிதும் பலத்து விட்டது.

"இந்தக் கண்ணாடி நமக்குள் விவாதம் விளைவிக்க இடங் கொடுப்பானேன்? அதைக் கடலில் எறிந்து ஏன் விவாதத்தை முடித்துவிடக் கூடாது?" என்று நான் சொன்னேன்.

"சனியனை எறிந்தே விடுங்கள்" என்றார் காலன்பாக்.

"உண்மையாகவே சொல்கிறேன்" என்றேன்.

"நானும் அப்படித்தான்" என்று உடனே பதில் வந்தது.

உடனே அதைக் கடலில் வீசி எறிந்து விட்டேன். கண்ணாடி ஏழு பவுன் பெறுமான முள்ளது. ஆனால் அதன் மதிப்பு அதன் விலையைப் பொறுத்த தன்று. மிஸ்டர் காலன் பாக்குக்கு அதனிடமிருந்த மோகமே அதற்கு அதிகமதிப்பு அளித்தது. அதைத் தொலைத்துவிட்ட பின்னர் மிஸ்டர் காலன்பாக் அது குறித்து வருத்தப்படவே யில்லை.

மிஸ்டர் காலன்பாக்குக்கும் எனக்கு மிடையே நிகழ்ந்த பல சம்பவங்களில் இது ஒன்றே யாகும்.

இம்மாதிரியாக, தினந்தோறும் நாங்கள் ஏதேனும் புதிய உண்மையை அறிந்து வந்தோம். இருவரும் சத்திய மார்க்கத்தில் நடக்க முயன்றவர்களே யன்றோ? சத்தியத் தைத் தேடிச் செல்லும்போது கோபம், சுயநலம், பகைமை முதலியவை இயற்கையாகவே நழுவி விடுகின்றன. இல்லா விடில் சத்தியத்தை அடைவது இயலாத காரியமாகும். காமக் குரோதங்களுக்கு வயமான மனிதன் நல்ல எண்ணங் கள் உடையவனா யிருக்கலாம்; மெய்யே பேசலாம், ஆனால் அவன் ஒருகாலும் சத்தியத்தைக் காணமாட்டான். அன்பு-பகை, இன்பம் - துன்பம் எனும் இரட்டைக் குணத் தொகு தியிலிருந்து விடுதலை பெறுவதே சத்தியத்தைத் தேடும் முயற்சியில் வெற்றி பெறுவதாகும்.

பிரயாணந் தொடங்கியபோது, நான் உபவாச மிருந்து அதிக நாள் ஆகியிருக்கவில்லை. எனது இயற்கையான பலத்தை இன்னும் திரும்பிப் பெறவில்லை. பசி ஏற்படுவதற் காகவும், உண்பதை செரிப்பதற்காகவும் தேகாப்பியாச

மாகக் கப்பல் மேற்றளத்தில் சிறிது நேரம் உலாவி வந்தேன். ஆனால் இந்த தேகாப்பியாசம் கூட என் சக்திக்கு மேற் பட்டதா யிருந்தது. குதிக்கால்களில் வலி உண்டாயிற்று. ஆகவே லண்டன் சேர்ந்தபோது நான் முன்னைவிடச் சுக மடைந்திருப்பதற்குப் பதிலாக, சுகவீன முற்றிருப்பதைக் கண்டேன். அங்கேதான் டாக்டர் ஜீவராஜ் மேதாவை எனக்குத் தெரிய வந்தது. அவரிடம் என்னுடைய உபவாசம், அதன் பின்னர் ஏற்பட்ட வலி இவை குறித்துச் சொன்னேன், "சில தினங்களுக்கு நீங்கள் பூரண ஓய்வு எடுத்துக் கொள்ளாவிடில், உங்கள் கால்கள் முற்றும் பயனற்றவை யாகலாம்" என்று அவர் கூறினார்.

அப்போது தான், நீண்ட நாள் உபவாச மிருந்த ஒரு வன் இழந்த பலத்தைத் திரும்பப் பெறுவதற்கு அவசரப் படக் கூடாதென்றும், உணவு ஆசையையும் கட்டுப்படுத்தி வரவேண்டு மென்றும் அறிந்து கொண்டேன். உபவாசம் அனுஷ்டிக்கும்போது எவ்வளவு ஜாக்கிரதையும், கட்டுப் பாடும் அவசியமோ அதைவிட அதிகமாகவே மீண்டும் உணவருந்தத் தொடங்கும்போது அவசியமாகும்.

எந்த நிமிஷத்திலும் மகா யுத்தம் ஆரம்பமாகி விடலா மென்று மெடீராவில் நாங்கள் கேள்விப் பட்டோம். இங்கிலீஷ் சானல் என்னும் கடலை நாங்கள் அடைந்த போது மகா யுத்தம் ஆரம்பமாகிவிட்ட செய்தி கிடைத்தது. இதன் காரணமாகச் சிறிது காலம் எங்கள் பிரயாணம் தடைப்பட்டது. கடல் முழுதும் போடப் பட்டிருந்த நீர் மூழ்கிக் குண்டுகளில் மோதாது கப்பலை ஓட்டுதல் எளிதான காரிய மன்று. எனவே, ஸௌதாம்டன் சேர இரண்டு நாள் பிடித்தது.

ஆகஸ்டுமீ 4உ யுத்தம் ஆரம்பமாயிற்று. 5உ நாங்கள் லண்டனை அடைந்தோம்.

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

யுத்த ஊழியம்

இங்கிலாந்து சேர்ந்ததும், கோகலே பாரிஸுக்கு தேக சுகங் கருதிச் சென்றாரென்றும், அதற்குள் யுத்தம் தொடங்கி விட்டபடியால் திரும்பி வரக் கூடவில்லையென்றும் அறிந்தேன். பாரிஸுக்கும் லண்டனுக்கும் போக்கு வரவு தடைப்பட்டு விட்டபடியால் அவர் எப்போது திரும்புவாரென்று சொல்ல முடியாது. அவரைப் பாராமல் இந்தியா திரும்பவும் நான் விரும்பவில்லை.

எனவே, அவர் வரும் வரையில் நான் என்ன செய்து கொண்டிருப்பது? யுத்தத்தைப் பற்றிய வரை என்னுடைய கடமை யாது? சத்தியாக்கிரஹிகளில் ஒருவரும், எனது சிறை வாசத் தோழருமான ஸோராப்ஜி அதாஜானியா என்பார் அப்போது லண்டனில் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தார். அவர் சிறந்த சத்தியாக்கிரஹிகளில் ஒருவரான படியால், பாரிஸ்டர் பரீட்சையில் தேறி வந்து என்னுடைய ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளலாமென்பதற்காக அவரை இங்கிலாந்துக்கு அனுப்பியிருந்தோம். டாக்டர் பிரன்ஜீவன் தாஸ் மேதா அவருடைய செலவுகளுக்குப் பணம் உதவினார். அவர் மூலமாக, இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த டாக்டர் ஜீவராஜ் மேதா முதலியோரை நான் சந்தித்துப் பேசினேன். அவர்களுடன் கலந்தாலோசித்து கிரேட் பிரிட்டனிலும், அயர்லாந்திலுமுள்ள இந்தியர்களின் கூட்டம் ஒன்று கூட்டப்

பட்டது, என் அபிப்பிராயங்களை அவர்கள் முன்பு கூறினேன்.

இங்கிலாந்திலுள்ள இந்தியர், யுத்தத்தில் தங்களாலியன்ற சிறு ஊழியத்தைச் செய்ய வேண்டுமென்றுஎனக்குத் தோன்றிற்று. ஆங்கில மாணுக்கர்கள் சைன்யத்தில் சேர முன் வந்திருந்தார்கள். இந்தியர்கள் அவர்களுக்குப் பின் வாங்கலாகாதென்று சொன்னேன். இந்த வாதத்திற்குப் பல ஆட்சேபங்கள் கிளம்பின. இந்தியர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் எவ்வளவோ வேற்றுமை யுண்டென்று சொல்லப்பட்டது. நாம் அடிமைகள்; அவர்கள் எஜமானர்கள். எஜமானனுக்குத் தேவை நேர்ந்தபோது அடிமை அவனுடன் எப்படி ஒத்துழைக்க இயலும்? எஜமானனுக்கு நேரும் கஷ்டத்தையே தன்னுடைய சந்தர்ப்பமாகச் செய்து கொள்ளுதல் விடுதலைபெற விரும்பும் அடிமையின் கடமை யல்லவா? இந்த வாதம் என் மனதுக்குப்பொருத்தமாகத் தோன்றவில்லை. இந்தியனுக்கும் ஆங்கிலேயனுக்கும் அந்தஸ்தில் இருந்த வேற்றுமை எனக்குத் தெரிந்திருந்தது. ஆனல் நாம் முற்றும் அடிமைகளாக்கப் பட்டிருந்ததாக அப்போது நான் நம்பவில்லை. குற்றம் பிரிட்டிஷ் ஆட்சி முறையில் அவ்வளவாக இல்லை யென்றும், தனிப்பட்ட பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களிடமே இருப்பதாகவும், அவர்களை அன்பினுல் கவர்ந்துவிடலாம் என்றும் நான் எண்ணினேன். பிரிட்டிஷாரின் உதவியும், ஒத்துழைப்பும் பெற்று நாம் தமது அந்தஸ்தை விருத்தி செய்வதென்ருல், அவர்களுக்கு அவசியம் நேர்ந்த போது அவர்கள் பக்கலில் நின்று உதவி செய்தல் நம்து கடமையென்று கருதினேன். பிரிட்டிஷ் ஆட்சி முறை குறையுள்ளதென நான் உணர்ந்தேனுயினும், இப்போது

தெரிந்துள்ளது போல் அது சகிக்க முடியாத முறை யென்பதாக அப்போது தோன்றவில்லை. இன்று அம் முறையில் அடியோடு நம்பிக்கை யிழந்துள்ள நான் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுக்கிறேன், எனவே, பிரிட்டிஷ் ஆட்சி முறையில் மட்டுமன்றி பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களிடமும் அப்போதே நம்பிக்கை யிழந்து விட்ட அந்நண்பர்கள் அரசாங்கத்துடன் அச்சமயம் ஒத்துழைக்கக் கூடாதென்று கூறியதில் ஆச்சரிய மில்லை யன்றோ?

இந்தியாவில் கோரிக்கைகளைத் தைரியமாக வெளி யிட்டு இந்தியரின் அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள அதுவே தக்க தருணமென்று என்னை எதிர்த்த நண்பர்கள் நினைத் தார்கள்.

இங்கிலாந்தின் தேவையை நமது சந்தர்ப்பமாகச் செய்துகொள்ளக் கூடாதென்றும், யுத்தம் நடக்கும் வரை யில் நமது கோரிக்கைகளை வற்புறுத்தாமலிருப்பதே உசித மும், தீர்க்க புத்தியுமாகும் என்றும் நான் எண்ணினேன். ஆதலின் நான் என்னுடைய புத்திமதியையே வலியுறுத்தி, வாலண்டியர்களாகச் சேர முன் வருவோர் பெயரைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டேன். இதற்குக் கிடைத்த பதில் மிகவும் திருப்திகரமா யிருந்தது. பெயர் கொடுத்தவர்களில் அநேகமாக எல்லா மாகாணங்களையும் சேர்ந்தவர்களும், எல்லா மதத்தினரும் இருந்தார்கள்.

இவ்விஷயங்களை அறிவித்து லார்ட் குருவுக்கு ஒரு கடிதம் எழுதினேன். சைன்ய சேவைப் பயிற்சி அவசிய மென்றால், அப்பயிற்சி பெறுவதற்குத் தயாரா யிருக்கிறோ மென்று அறிவித்தேன்.

வார்ட் குரு கொஞ்சம் தயக்கத்திற்குப் பின்னர் எங்கள் ஊழியத்தை ஏற்றுக் கொள்ள இசைந்தார். நெருக்கடியான தருணத்தில் ஏகாதிபத்தியத்துக்கு ஊழியம் செய்ய முன் வந்தது குறித்து எங்களுக்கு வந்தனமளித்தார்.

பெயர் பெற்ற டாக்டர் காண்ட்லியின்கீழ், காயம் பட்டவர்களுக்குப் பிரதம சிகிச்சை செய்யும் முறையில் வாலண்டியர்கள் பூர்வாங்கப் பயிற்சி பெறத் தொடங்கினர். அது ஆறு வாரப் பயிற்சிதான் எனினும், பிரதம சிகிச்சை முறை முழுதும் கற்றுக் கொடுக்கப்பட்டது.

எங்கள் வகுப்பில் நாங்கள் 80 பேர் இருந்தோம். ஆறு வாரம் ஆனதும் பரீட்சிக்கப் பட்டோம். ஒருவரைத் தவிர மற்ற எல்லாரும் பரீட்சையில் தேறினோம். தேறியவர்களுக்கு இராணுவ டிரில்லும், மற்றப் பயிற்சியும் அளிக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்தனர். கர்னல் பேகரிடம் இந்த வேலை ஒப்படைக்கப் பட்டது.

இந்நாட்களில் லண்டன் நகர் அற்புதக் காட்சியளித்தது. பீதி என்பது எங்கும் காணப்படவில்லை. எல்லாரும் தங்களாலியன்றவரை உதவி செய்வதில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருந்தார்கள். திடதேகமுடைய ஆண் மக்கள் போய்ப் பயிற்சி பெறத் தொடங்கினார்கள். ஆனால் கிழவர்கள், பலவீனர்கள், ஸ்திரீகள் முதலியோர் என் செய்வது? விருப்பமிருந்தால் அவர்கள் செய்வதற்கும் தேவையான வேலை யிருந்தது. துணி கத்தரித்து உடைதைப்பதிலும், காயம் பட்டவர்களுக்குக் கட்டுகள் தயாரிப்பதிலும் அவர்கள் ஈடு பட்டார்கள். 'லைஸியம்' என்னும் பெண்மக்களின் சங்கம் போர் வீரர்களுக்குக் கூடுமான அளவு உடைகள் தயாரித்துக் கொடுக்க ஒப்புக் கொண்டது. ஸ்ரீமதி சரோஜினி நாயுடு இச் சங்கத்தின்

அங்கத்தினராயிருந்தார். அவர் இதய பூர்வமாக இவ் வேலையில் ஈடுபட்டார். அவருடன் எனக்கு முதன் முதல் பழக்கம் ஏற்பட்டது இப்போதுதான். உடை தைப்பதற்காக வெட்டப் பட்டிருந்த ஒரு குவியல் துணிகளை அவர் என்னிடம் கொடுத்து அவற்றைத் தைத்துக் கொண்டு வரும்படி சொன்னார். இதற்கு நான் மகிழ்ச்சியுடன் இசைந்தேன். பிரதம சிகிச்சைப் பயிற்சி பெற்று வந்த காலத்தில், நண்பர்களுடைய உதவி கொண்டு எவ்வளவு உடைகள் தைக்க முடியுமோ அவ்வளவும் தைத்துக் கொடுத்தேன்.

முப்பத்தோன்பதாம் அத்தியாயம்

பாரமார்த்திகத் துறையில் ஒரு மயக்கம்

மற்ற இந்தியர்களுடனே யுத்தத்தில் ஊழியம் செய்ய நான் முன்வந்திருக்கும் செய்தி தென்னாப்பிரிக்காவை எட்டியதும், எனக்கு இரண்டு தந்திகள் கிடைத்தன. ஒன்று மிஸ்டர் போலக்கினிடமிருந்து வந்தது. அஹிம்சைக் கொள்கையுடன் என்னுடைய இச்செயல் எவ்வாறு பொருந்துமென்று அவர் கேட்டிருந்தார்.

இந்த ஆட்சேபத்தை ஓரளவு நான் எதிர்பார்த்தே யிருந்தேன். ஏனெனில் 'இந்திய சுயராஜ்யம்' என்னும் எனது நூலில் இதைப்பற்றி விவாதித்திருந்தேன். மற்றும் தென்னாப்பிரிக்காவில் நண்பர்களுடன் ஓயாமல் இவ்விஷய மாக விவாதிப்பதுண்டு. யுத்தமே அதர்மமானது என்பதை நாங்கள் அனைவரும் உணர்ந்திருந்தோம். என்னைத் தாக்கி அடித்தவன்மீது வழக்குத்தொடர நான் தயாரில்லையெனில் யுத்தத்தில் கலந்து கொள்ள நான் எப்படி விரும்பக்கூடும்?

அதிலும், கட்சிகளின் நியாயா நியாயத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதிருக்கையில், அதில் ஈடுபடல் எவ்வாறு சரியாகும்? நான் ஏற்கனவே போயர் யுத்தத்தில் ஊழியம் செய்தேன் என்பது நண்பர்களுக்குத் தெரியாத தன்று. எனினும் அதன்பின்னர் என் கொள்கைகள் மாறுதலடைந் திருப்பதாக அவர்கள் எண்ணினார்கள்.

ஆனால் உண்மை வேறு. எத்தகைய வாத முறையை ஆதாரமாய்க்கொண்டு நான் போயர் யுத்தத்தில் ஈடுபட்டேனே அதே வாதமுறை தான் இப்போதும் யுத்தத்தில் கலந்து கொள்ளும்படி தூண்டிற்று. யுத்தத்தில் சம்பந்தப்படல் அஹிம்சையுடன் ஒரு நாளும் பொருந்தாது என்பது எனக்குத் தெளிவாக விளங்கியே இருந்தது. ஆனால் ஒருவனுடைய கடமை என்னவென்று தெளிவாக உணருதல் எப்போதுமே சாத்தியமா யிருப்பதில்லை. சத்திய உபாசகன் அடிக்கடி இருட்டில் தடவ வேண்டியவனாகிறான்.

அஹிம்சை என்பது விரிந்த பொருள் பொதிந்த கொள்கை, நாமெல்லாரும் ஹிம்சை என்னும் பெருந்தீயில் அகப்பட்டுத் திக்கற்ற நிலையிலுள்ள மாந்தர்களாவோம். உயிரைத்தின்று உயிர் வாழ்கிறது என்னும் கூற்றில் ஆழ்ந்த கருத்து உண்டு. அறிந்தோ, அறியாமலோ ஹிம்சைசெய்யாமல் மனிதன் ஒரு கணமேனும் உயிர் வாழ முடியாது. அவன் உயிர் வாழ்வது தானும்—உண்ணலும், குடித்தலும், அசைதலும்.—உயிர்க் கொலை யின்றி நடவாதவை. அந்த ஹிம்சை மிக நுட்பமானதா யிருக்கலா மெனினும்,ஹிம்சை செய்தே தீரவேண்டும். இந் நிலைமையில் அஹிம்சை விரதங் கொண்டோனின் கடமை யென்ன? தான் செய்யும் செயல் எல்லாவற்றிற்கும் கருணையையே அவன் பிறப்பிடமாகக்

கொண்டானாயின், தன்னால் இயன்றவளவு மிகச் சிறு உயிரையும் கொலை செய்தலை விலக்கி அதைக் காப்பாற்ற முயல்வானாயின்; இவ்வாறு இடைவிடாது ஹிம்சையின் மரண பாசத்தினின்றும் விடுதலை பெற முயன்று வருவானாயின் அவன் தன் விரதத்தைக் காப்பாற்றியவனாவான். அவனுடைய புலனடக்கமும், கருணையும் ஓயாமல் வளர்ச்சி பெற்றுக்கொண்டே வரும். ஆனால் புறஹிம்சையிலிருந்து அவன் முற்றும் விடுதலை பெறல் ஒரு நாளும் இயலாத காரியம்.

மற்றும், அஹிம்சையின் அடிப்படை சர்வ ஜீவ ஒருமைப் பாடே யாதலின், ஒரு ஜீவனின் தவறு மற்றவர்களைப் பாதியாமற் போகாது. இம் முறையிலும் மனிதன் ஹிம்சையினின்று அறவே நீங்க இயலாது. அவன் சமூகத்தில் ஓர் அங்கத் தவனாயிருக்கும் வரையில், சமூகம் நிலைத்திருப்பதற்கே ஆதாரமான ஹிம்சையில் கலந்து கொள்ளாதிருக்க முடியாது. இரு தேசங்கள் சண்டையிடுங்கால் அஹிம்சா தர்மியின் கடமை யுத்தத்தைநிறுத்துவதாகும். அக் கடமையைச் செய்யும் ஆற்றல்இல்லாதவன்—யுத்தத்தை எதிர்த்து நிற்கும் சக்தி யில்லாதவன்—அதற்கு வேண்டிய தகுதி பெறாதவன்—யுத்தத்தில் ஈடுபட்டாலும் அதே சமயத்தில் மனப் பூர்வமாகத் தன்னையும், தன் தேசத்தையும், உலகத்தையும் யுத்தத்தினின்று விடுவிக்க முயலலாம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மூலமாய் என் நிலையையும், என் ஜனங்களின் நிலையையும் அபிவிருத்தி செய்யலாமென நான் நம்பி யிருந்தேன். இங்கிலாந்திலிருந்தபோது பிரிட்டிஷ் கடற் படையின் பாதுகாப்பை நான் ஏற்று அதன் பயனை அநுபவித்தேன். அதனுடைய

ஆயுத பலத்தின் கீழ் அடைக்கலம் புகுந்திருந்த நான், அத ஞல் விளையக்கூடியதான ஹிம்சையில் நேராகக் கலந்து கொண்டவனுனேன். ஆகையால் ஏகாதிபத்தியத்துடன் சம் பந்தம் வைத்துக் கொண்டு அதன் கொடியின் கீழ் வசிக்க விரும்பினேனுயின் எனக்கு மூன்று வழிகள் இருந்தன. பகி ரங்கமாக யுத்தத்தை எதிர்ப்பதாகக் கூறி, ஏகாதிபத்தியம் அதனுடைய இராணுவ முறையை மாற்றிக் கொள்ளும் வரை சத்தியாக்கிரஹ சட்டத்தின்படி அதைப் பகிஷ் கரித்து விடலாம்; அல்லது மறுக்கத் தகுந்த அதனு டைய சட்டங்களை மறுத்துச் சிறை புகலாம்; அல்லது ஏகாதிபத்தியத்தின் சார்பில் யுத்தத்தில் கலந்து கொண்டு அதன் மூலம் யுத்த ஹிம்சையை எதிர்ப்பதற்கு வேண்டிய தகுதியும் ஆற்றலும் அடையலாம். எனக்கு இத் தகுதியும் ஆற்றலும் இல்லாமலிருந்தபடியால், யுத்தத்தில் கலந்து ஊழியம் செய்வதைத் தவிர வேறு வழி யில்லை யென்று கருதினேன்.

அஹிம்சை நோக்குடன் பார்க்குங்கால், யுத்த வீரர்கள்—யுத்த ஊழியம் செய்பவர்கள் என்னும் வேற்றுமை நான் பாராட்டவில்லை. கொள்ளைக்காரரின் மூட்டை தூக்கவும், அவர்கள் கொள்ளையிடும்போது காவல் இருக்கவும், அவர்கள் காயம் பட்டால் பணிவிடை செய்யவும் ஒப்புக் கொள்பவன் கொள்ளைக்காரர்களைப் போலவே கொள்ளைக் குற்றத்துக்காளாகிறுன். இதே மாதிரியாக, சண்டையில் காயம் பட்டவர்களுக்குப் பணிவிடை செய்வோரையும் யுத்தக் குற்றம் சாராமல் விடாது.

போலக்கின் தந்திச் செய்தி கிடைப்பதற்கு முன்ன மேயே இம்மாதிரியாக இந்தப் பிரச்னை முழுவதையும் எனக்குள் விவாதித்து முடிவுக்கு வந்திருந்தேன். அத் தந்தி

வந்ததும் பல நண்பர்களுடன் இதைப்பற்றி விவாதம் செய்து, யுத்தத்தில் ஊழியம் புரிதல் என் கடமையென்று தீர்மானித்தேன். இன்றுங்கூட, மேற்படி வாத முறையில் தவறு எதுவு மிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந் நாளில் பிரிட்டிஷ் சம்பந்தத்துக்குச் சாதகமான அபிப் பிராயம் கொண்டிருந்தேனுதலின் என்னுடைய செய்கை யின் பொருட்டு நான் இன்றும் வருத்தப்படவில்லை.

ஆனால் அக்காலத்திலும் என் நண்பர்கள் எல்லாருக்கும் என்னுடைய நிலை சரியானதென்று நான் திருப்தி செய்ய முடியவில்லை. இது மிகவும் நுட்பமான பிரச்னையாகும். இதில் கருத்து வேற்றுமைகளுக்கு இடமுண்டு. ஆதலின், அஹிம்சையில் நம்பிக்கை யுள்ளவர்களுக்கும் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் அதை அனுஷ்டிக்க முயன்று வருப வர்களுக்கும் என்னுடைய வாதங்களைக் கூடியவரை தெளி வாகக் கூறியுள்ளேன். சம்பிரதாயம் என்பதற்காக சத்திய உபாசகன் எதுவும் செய்தலாகாது. எப்போதும் அவன் திருத்தப் படுவதற்குச் சித்தமா யிருக்கவேண்டும். தான்செல் லும் வழி தவறுனது என்று அவன் கண்டால் உடனே என்ன நேர்வதாயினும் அதை ஒப்புக்கொண்டு அதற்குப் பரிகாரம் தேடவேண்டும்.

நாற்பதாம் அத்தியாயம்

யுத்தத்திலும் சத்தியாக்கிரஹம்

இவ்வாறு கடமையென்று கருதி நான் யுத்தத்தில் கலந்து கொண்டேனுயினும், அதிர்ஷ்டவசமாக அதில் நேராக ஈடுபட முடியாமற் போயிற்று. அன்றியும்

அந்த நெருக்கடியான தருணத்தில் சின்ன அளவில் சத்தியாக்கிரஹமும் செய்ய வேண்டியதா யிருந்தது.

எங்கள் பெயர்கள் அங்கீகரிக்கப்பட்டுப் பதிவானவுடன், எங்களைப் பயிற்சி செய்வதற் கென்று ஓர் உத்யோகஸ்தர் நியமிக்கப்பட்டார் என முன்னமே சொல்லி யிருக்கிறேன். இவ்வுத்தியோகஸ்தர் பயிற்சி சம்பந்தமான விஷயங்களில் மட்டுமே எங்கள் தலைவரென்றும், மற்ற எல்லா விஷயங்களிலும் எங்கள் படைக்குத் தலைவன் நானே யென்றும், அதன் உள் கட்டுப்பாட்டைப் பற்றிய வரையில் எனக்கே பொறுப் புண்டென்றும் நாங்கள் எல்லாரும் எண்ணியிருந்தோம். அதாவது அத்தலைமை அதிகாரி எங்கள் படை சம்பந்தமான எல்லா விவகாரங்களையும் என் மூலமாகவே நடத்த வேண்டுமென்று எதிர்பார்த்தோம். ஆனால் ஆரம்பத்திலேயே அவ்வுத்தியோகஸ்தர் இது சம்பந்தமாக எங்கள் பிரமையை நீக்கிவிட்டார்.

ஸ்ரீ ஸோராப்ஜி அதாஜானியா மதிநுட்பமுள்ளவர். அவர் எனக்கு எச்சரிக்கை செய்தார்:—"இந்த மனிதர் விஷயத்தில் ஜாக்கிரதையா யிருங்கள். நம்மீது தர்பார் செலுத்த அவர் விரும்புவதாகக் காண்கிறது. அவருடைய கட்டளைகளை ஏற்க நாங்கள் சித்தமாயில்லை. அவரை எங்கள் போதகராக ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருக்கிறோம். ஆனால் அவரால் நமக்குப் பயிற்சி யளிப்பதற்காக நியமிக்கப்பட்ட இளைஞர்கள்கூடத் தங்களை நமது எஜமானர்கள் என எண்ணிக் கொள்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

இந்த இளைஞர்கள் ஆக்ஸ்போர்டு மாணக்கர்கள். எங்களுக்குப் பயிற்சி யளிப்பதற்காக வந்தவர்கள். மேற்படி தலைமை அதிகாரி எங்களுடைய கார்ப்போரல்களாக,

அதாவது படைப்பிரிவுகளின் தலைவர்களாக அவர்களை நிய மித்திருந்தார்.

தலைமை அதிகாரியின் தர்பார்த் தன்மையை நானும் கவனித்திருந்தேன். ஆனால் அது குறித்துக் கவலைப்பட வேண்டாமென்று சொல்லி ஸோராப்ஜியைச் சமாதானப் படுத்த முயன்றேன். ஆனால் அவர் இலேசில் இணங்கு பவராயில்லை.

"நீங்கள் எளிதில் பிறரை நம்பி விடுகிறீர்கள். இந்த ஜனங்கள் தங்கள் மாயவார்த்தைகளால் உங்களை ஏமாற்றி விடுவார்கள். கடைசியில் நீங்கள் உண்மை யறியும்போது எங்களை சத்தியாக்கிரஹம் தொடங்கச் சொல்வீர்கள். இப் படியாக உங்களுக்கும் எங்களுக்கும் துன்பந் தேடித் தரு வீர்கள்" என்று அவர் புன்னகையுடன் கூறினார்.

"என்னுடன் சேர்ந்த நீங்கள் துன்பத்தைத் தவிர வேறென்ன எதிர் பார்கிறீர்கள்? சத்தியாக்கிரஹி ஏமாற் றப் படுவதற்கே பிறந்துள்ளான். தலைமை அதிகாரி நம்மை ஏமாற்றட்டும். பிறரை ஏமாற்ற முயல்வோன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான் என்று எத்தனையோ முறை நான் உங்களுக்குச் சொல்லி யிருக்க வில்லையா?"

ஸோராப்ஜீ உரக்கச் சிரித்தார். "அப்படியானால் ஏமாற்றப்பட்டுக் கொண்டே யிருங்கள். ஒருநாள் இல்லா விட்டால் ஒரு நாள் நீங்கள் சத்தியாக்கிரஹத்திலேயே இறந்து படுவீர்கள். அப்போது என் போன்றவர்களையும் சேர்த்து இழுத்துக்கொண்டு போவீர்கள்," என்றார்.

இம்மொழிகள், ஒத்துழையா இயக்கத்தைப்பற்றி மிஸ் எமிலி ஹாப்ஹௌஸ் எழுதியதை எனக்கு நினைவூட்டு கின்றன. அது வருமாறு:—"சத்தியத்தின் நிமித்தம்

நீங்கள் ஒருநாள் தூக்கு மேடைக்குச் சென்றால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆண்டவன் உங்களுக்கு நேர்வழியைக் காட்டிக் காத்தருள் புரிவானாக."

தலைமை அதிகாரி நியமிக்கப்பட்ட உடனே ஸோராப்ஜியுடன் மேற்கண்ட சம்பாஷணை நடந்தது. சில தினங்களுக்குள் தலைமை அதிகாரிக்கும் எங்களுக்கும் மனஸ்தாபம் முற்றிப் போகும் நிலை வந்து விட்டது. பதினாலு நாள் உபவாசத்திற்குப் பின்னர் நான் என்னுடைய பழைய பலத்தை மீண்டும் பூரணமாய் அடையவில்லை. இதற்குள்ளாகவே 'டிரில்' செய்ய ஆரம்பித்து விட்டேன். டிரில் நடந்த இடத்திற்கு வீட்டிலிருந்து இரண்டு மைல் நடந்து போகவேண்டியிருந்தது. இதனால் நோய்வாய்ப் பட்டேன். இந் நிலையில் வாரந்தோறும் வழக்கப்படி வெளியிடங்களுக்கு முகாம் போகவேண்டி வந்தது. எல்லாரும் விடுதியிலேயே தங்கினார்கள். நான் மட்டும் வீடு திரும்பினேன். இங்கேதான் சத்தியாக் கிரஹத்துக்கு ஒரு சந்தர்ப்பம் எழுந்தது.

தலைமை அதிகாரி தன்னுடைய அதிகாரத்தைத் தாராளமாகப் பிரயோகிக்கத் தொடங்கினார். இராணுவ விஷயங்களிலும் சரி, மற்ற விஷயங்களிலும் சரி, தாமே எங்களுக்குத் தலைவர் என்பதை அவர் உணர்த்தியதுடன் தமது அதிகாரம் எத்தகையதென்று நிரூபித்துக் காட்டவும் தொடங்கினார். ஸோராப்ஜி இத்தகைய யதேச்சாதிகாரத்துக்குப் பணியத் தயாராயில்லை. அவர் என்னிடம் வந்து கூறியதாவது:—"எங்களுக்குக் கட்டளைகள் எல்லாம் உங்கள் மூலமாகவே வரவேண்டும். நாம் இன்னும் பயிற்சிக் கூடத்தில் இருக்கும்போதே ஆபாசமான உத்திரவுகள் எல்லாம் இடப்படுகின்றன. எங்களுக்கும் எங்களுக்குப் பயிற்சி

யளிக்க நியமிக்கப்பட்ட இளைஞர்களுக்கும் பாரபட்சமான வேற்றுமைகள் காண்பிக்கப் படுகின்றன. இதைப் பற்றித் தலைமை அதிகாரியுடன் பேசியாகவேண்டும். இல்லாவிடில் எங்களால் மேலே எதுவும் செய்ய முடியாது. நமது படையைச் சேர்ந்த இந்திய மாணுக்கர்களும் மற்றவர்களும் ஆபாசமான கட்டளைகளுக் கெல்லாம் கீழ்ப்படியப் போவதில்லை. சுய மரியாதையை முன்னிட்டு ஏற்றுக் கொண்ட ஒரு கடமையில் சுய மரியாதையை இழக்க எப்படிச் சம்மதிப்பது?"

தலைமை அதிகாரியிடம் நான் சென்று மேற்படி புகார்களை அவரிடம் தெரிவித்தேன். அவர் புகார்களை எழுத்தில் தெரிவிக்கச் சொன்ஞர். அத்துடன் "இப்போது நியமிக்கப்பட் டிருக்கும் 'கார்ப்போரல்' கள் மூலம் எனக்குப் புகார்களை அறிவிக்கவேண்டும். இதுதான் சரியான முறை என்பதைப் புகார் கூறியவர்களுக்குச் சொல்லுங்கள்" என்றும் அவர் உரைத்தார்.

இதற்கு நான், "எனக்கு அதிகார மெதுவு முண்டென்று உரிமை பாராட்டவில்லை. இராணுவ முறையில் நானும் மற்றவர்களைப் போன்றவனே என்பது தெரியும். ஆனல் உத்தியோக முறையிலன்றி வாலண்டியர் படையின் அக்கிராசனன் என்ற முறையில் அவர்களுடைய பிரதிநிதியாயிருக்க எனக்கு அநுமதி யளிக்கப்படுமென நம்பினேன்" என்று பதில் சொன்னேன். மற்றும், என்னிடம் கூறப்பட்ட புகார்களையும், வேண்டுகோள்களையும் எடுத்துச் சொன்னேன். அதாவது, படையைச் சேர்ந்தவர்களின் அபிப்பிராயத்தைக் கலந்து கொள்ளாமல் கார்ப்போரல்கள் நியமிக்கப்பட்டது குறித்துப் பெரிதும் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகவும், ஆதலின் அவர்களை நீக்கிவிட்டுப் படை

அங்கத்தினரையே, தலைமை அதிகாரியின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு, தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டுமென்றும் தெரிவித்துக் கொண்டேன்,

இது தலைமை அதிகாரிக்குப் பிடிக்க வில்லை. அவர், படைகளை தேர்ந்தெடுக்கும்படி விடுதல் இரா ணுவக் கட்டுப்பாட்டு முறைகளுக்கு முற்றும் விரோதமென்றும், ஏற்கனவே நியமிக்கப்பட்டவர்களை நீக்குதல் கட்டுப்பாட்டை அடியோடு கவிழ்ப்பதாகுமென்றும் கூறினார்.

எனவே ஒரு கூட்டம் போட்டுப் படையிலிருந்து விலகிக் கொள்வதென்று தீர்மானித்தோம். சத்தியாக்கிரஹத்தினால் ஏற்படக்கூடிய பெரிய விளைவுகளைப்பற்றி அவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொன்னேன். ஆயினும் மிகப் பெரும்பான்மையோர் தீர்மானத்துக்குச் சாதகமாக வாக்களித்தார்கள். ஏற்கனவே செய்யப்பட்ட 'கார்ப்போரல்' நியமனங்கள் ரத்து செய்யப்பட்டு, படைகளுக்குத் தாங்களே தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டாலன்றி, இனி டிரில்லுக்கும், முகாமுக்கும் போவதை நிறுத்திவிட நேரும் என்பது தீர்மானம்,

பின்னர், தலைமை அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதினேன். என்னுடைய யோசனையை நிராகரித்து அவர் எழுதிய கடிதம் எவ்வளவு பெரிய ஏமாற்ற மளித்ததுஎன்பதைக் குறிப்பிட்டிருந்தேன். எனக்கு அதிகாரம் செலுத்தும் ஆசையில்லை யென்றும்; ஊழியம் செய்யவே பேராவல் கொண்டுள்ளேன் என்றும் உறுதி கூறியதுடன், என் யோசனைக்கு ஒரு திருஷ்டாந்தத்தையும் எடுத்துக்காட்டியிருந்தேன். தென்னாப்பிரிக்காவில் போயர் யுத்தத்தின்

போது இந்திய சைன்ய சேவைப் படையில் நான் உத்தி யோக பதவி எதுவும் வகிக்கவில்லையாயினும், கர்னல் கால் விக்கும் அப்படைக்கும் சிறு தகரார்கூட ஏற்படவில்லை யென்றும், படையின் விருப்பத்தை என் மூலம் அறியாமல் அவர் ஒரு காரியமும் செய்ததில்லை யென்றும் தெரிவித் தேன். முதல் நாள் மாலை நாங்கள் செய்த தீர்மானத்தின் நகல் ஒன்றையும் சேர்த்திருந்தேன்.

இதனால் நற்பயன் விளையவில்லை. மேற்படி கூட்டமும் தீர்மானமும் கட்டுப்பாட்டுக்கும் பெரிதும் விரோதமாகு மென்று அவ்வதிகாரி எண்ணினார்.

இதன் மேல், இந்திய மந்திரிக்கு. எல்லா விவரங்களை யும் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினேன். தீர்மானத்தின் நகல் ஒன்றையும் அத்துடன் சேர்த்திருந்தேன் அவர்விடுத்த பதிலில், தென்னாப்பிரிக்கா நிலைமைக்கும் இங்குள்ள நிலை மைக்கும் வித்தியாச முண்டென்றும், விதிகளின்படி படைப் பிரிவுத் தலைவர்கள், தலைமை அதிகாரியாலேயே நிய மிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டு, ஆனால் இனி மேல் புதிய நியமனங்கள் செய்யும்போது தலைமை அதிகாரி என்னுடைய சிபார்சைக் கேட்டுச் செய்வார் என்று உறுதி கூறியிருந்தார்.

இதன் பின்னர் எங்களுக்குள் கடிதப் போக்கு வரவு நிரம்ப நடந்தது. ஆனால் இந்தத் துயரமான கதையை நான் வளர்க்க விரும்பவில்லை. என்னுடைய அவ்வநுபவம் இந்தி யாவில் நாம் தினம் பெற்று வரும் அநுபவங்களை யொத்த தாக இருந்தது என்று கூறுதலே போதும். பயமுறுத்தல் களினாலும், சாதுர்யத்தினாலும் தலைமை அதிகாரி படை அங்கத்தினர்களுக்குள் பிளவை உண்டுபண்ணி விட்டார். ர்தீமானத்துக்கு வாக்களித்தவர்களில் பலர் தலைமை

அதிகாரியின் பயமுறுத்தல்களுக்கும் வற்புறுத்தல்களுக்கும் இணங்கித் தங்கள் வாக்குறுதியைக் கைவிட்டார்கள்.

இச்சமயத்தில் நெட்லி என்னுமிடத்திலிருந்த வைத்திய சாலைக்கு எதிர்ப்பாராத வண்ணம் ஏராளமானகாயம்பட்ட போர் வீரர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குப் பணி விடை செய்ய எங்கள் படையின் ஊழியம் வேண்டப்பட்டது. தலைமை அதிகாரிகளின் வற்புறுத்தலுக் கிணங்கியவர்கள் நெட்லிக்குப் போனார்கள். மற்றவர்கள் போக மறுத்தார்கள். நான் படுத்த படுக்கையா யிருந்தேனாயினும் படையைச் சேர்ந்தவர்களுடன் கடிதப் போக்கு வரவு செய்து கொண்டிருந்தேன். இந்நாட்களில் உதவி இந்தியா மந்திரி மிஸ்டர் ராபர்ட்ஸ் பல முறைகளில் என்னைப் பார்க்கவந்து கௌரவப் படுத்தினார். மற்றவர்களையும் நான் ஊழியம் செய்யப் போகச் சொல்ல வேண்டுமென்று அவர் வற்புறுத்தினர். அவர்கள் ஒரு தனிப்படையாக அமைத்துக் கொள்ளலாமென்றும், நெட்லி வைத்தியசாலையில் அங்குள்ள தலைமை அதிகாரியின் பொறுப்பிலேயே அவர்கள் வேலைசெய்ய வேண்டுமென்றும், ஆதலின் சுயமரியாதைக்குப் பாதகமானது ஒன்றுமில்லை யென்றும், அரசாங்கத்தையும் சமாதானப் படுத்தியதாகுமென்றும், அதே சமயத்தில் வைத்தியசாலையில் ஏராளமாக வந்திருக்கும் காயமடைந்தவர்களுக்கு நல்ல ஊழியம் செய்ததா யிருக்குமென்றும், அவர் சொன்னார். இந்த யோசனை எனக்கும் என் தோழர்களுக்கும் உசிதமாய்ப் படவே. பின் தங்கி யிருந்தவர்களும் நெட்லிக்குச் சென்றார்கள். நான் மட்டுமே படுத்த படுக்கையாய்ச் சும்மா இருக்க நேர்ந்தது.

நாற்பத்தோராம் அத்தியாயம்

கோகலேயின் தயாளம்

இங்கிலாந்தில் எனக்குப் பாரிசநோய் கண்டதுபற்றி முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறேன். நான்நோய் வாய்ப்பட்ட சில நாளைக்குள் கோகலே லண்டனுக்குத் திரும்பினார். காலன்பாக்கும் நானும் அவரைக்காணத் தவறாமல் சென்று வந்தோம். பெரும்பாலும் யுத்தத்தைப்பற்றியே பேசினோம். காலன்பாக்குக்கு ஜெர்மனியின் தேச அமைப்பு நன்கு தெரியுமாதலாலும், அவர் ஐரோப்பாவில் நிரம்பப் பிரயாணம் செய்தவரான படியாலும், யுத்தத்தில் சம்பந்தமுள்ள பற்பல இடங்களையும் கோகலேக்கு அவர் தேச படத்தில் காட்டுவது வழக்கம்.

என்னுடைய நோயைப்பற்றியும் தினம் பேச்சு நடப்பதுண்டு. அப்போதுகூட நான் உணவுப் பரிசோதனைகள் நடத்திக்கொண்டுதான் வந்தேன். நிலக்கடலை, வாழைப் பழம், எலுமிச்சம்பழம், ஆலிவ் எண்ணெய், தக்காளிப் பழம், திராட்சைப் பழம் இவையே என் முக்கிய உணவாயிருந்தன. பால், பருப்பு வகைகள், தானியங்கள் இவற்றை அடியோடு விட்டிருந்தேன்.

டாக்டர் ஜீவராஜ் மேதா எனக்குச் சிகிச்சை செய்துகொண்டிருந்தார். பாலும், தானியமும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். நான் அதற்கு இணங்காமல் பிடிவாதமாயிருந்தேன். இது கோகலேயின் காதுக்கெட்டிற்று. பழ உணவே சிறந்தது என்னும் எனது கொள்கையில் அவருக்கு அதிக மதிப்பில்லை. தேக சுகத்துக்கு வைத்தியர் என்ன உணவு குறிப்பிடுகிறாரோ அதை கொள்ள வேண்டுமென்று சொன்னார்.

கோகலேயின் வற்புறுத்தலுக்கு இணங்கா திருத்தல் எனக்கு எளிய விஷயமன்று. தாம் சொல்வதைக் கேட்டுத் தான் ஆகவேண்டுமென்று அவர் பிடிவாதமாகக் கூறிய போது இவ் விஷயமாகச் சிந்திப்பதற்கு 24 - மணிநேரம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன். காலன்பாக்கும் நானும் மாலையில் வீடு திரும்பினோம். என்னுடைய கடமை யாதென்று விவாதித்தோம். அவர் உணவுச் சோதனையில் என்னுடன் தாமும் ஈடுபட்டிருந்தவர். அதில் அவருக்குப் பிரியமும் இருந்தது. ஆனால் தேக சுகத்தை முன்னிட்டு அவசியமானால் அதை நான் கை விடுவதில் அவருக்குச் சம்மதமே என்று கண்டேன். எனவே எனது மனச் சாற்றின் அறிவுறுத்தலுக் கிணங்க நானே இவ் விஷயத்தில் முடிவு செய்ய வேண்டியவனானேன்.

இது குறித்துச் சிந்திப்பதில் இரவு முழுதுங் கழித் தேன். சோதனையைக் கை விடுவதென்றால் அத் துறையில் என் கொள்கைகள் எல்லாவற்றையும் அடியோடு துறப்ப தேயாகும். ஆனால் அக் கொள்கைகளிலே நான் குற்றம் எதையுங் காணவில்லை. கோகலேயின் அன்பான வற்புறுத்த லுக்கு எவ்வளவு தூரம் இணங்குவது, தேக சுகத்திற்கு அவசியம் என்று சொல்லப்படுதற்காக எவ்வளவு தூரம் என் சோதனையை விட்டுக் கொடுப்பது என்பதே இப் போது கேள்வி.

கடைசியில், ஆத்மசாதன நோக்கத்தை ஆதாரமாகக் கொண்ட அளவில் சோதனையை விடாமல் கடைப்பிடிப்பது என்றும், வேறு நோக்கங்களைப் பொறுத்த அளவில் அதைக் கைவிடுவதென்றும் தீர்மானித்தேன். பால் அருந்து வதை நிறுத்தியதில் ஆத்மார்த்த நோக்கமே முக்கியமா யிருந்தது. கல்கத்தா மாட்டுக்காரர்கள், தங்கள் மாடுகளின்

மடியிலிருந்து கடைசி சொட்டு வரையில் பாலைக் கறந்து விடுவதற்குக் கையாளும் கொடிய முறைகள் என் கண் முன்னே தோன்றி வந்தன. மாமிசம் மனிதனுடைய உண வாகாதது போலவே, மிருகத்தின் பாலும் மனிதனுடைய உணவன்று என எனக்கு எண்ணமிருந்தது. ஆதலால் பால் சாப்பிடுவதில்லை என்னும் உறுதியைக் கடைப் பிடிக்கும் தீர்மானத்துடன் காலையில் படுக்கையைவிட் டெழுந்தேன். இது எனக்குப் பெரும் மன ஆறுதல் அளித்தது. கோகலேயிடம் செல்ல எனக்குப் பயமா யிருந்தது. எனினும், அவர் என் தீர்மானத்துக்கு மரியாதை செய்வார் என நம்பினேன்.

மாலையில் நானும் காலன்பாக்கும், நேஷனல் லிபரல் கிளப்பில் தங்கியிருந்த கோகலேயிடம் சென்றோம். அவர் என்னைக் கேட்ட முதல் கேள்வி, "டாக்டரின் புத்திமதியை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தீர்களா?" என்பதே யாகும்.

நான் மரியாதையாகவும் ஆனால் உறுதியுடனும் கூறிய தாவது:—"ஒரு விஷயத்தில் தவிர மற்றவைகளில் இணங்கத் தயாரா யிருக்கிறேன். அவ் வொன்றில் மட்டும் நீங்கள் என்னை வற்புறுத்தக் கூடாது. பாலும், மாமிசமும் மட்டும் நான் உட்கொள்ள மாட்டேன். இவை யில்லாத காரணத்தினால் எனக்கு மரணம் நேருவதாயின், அம் மரணத்தை எதிர் கொள்வதே நலமெனக் கருதுகின்றேன்," என்றேன்.

"இது உங்கள் முடிவான தீர்மானமா?" என்று கோகலே வினவினார்.

"வேறு தீர்மானம் எதுவும் நான் செய்ய முடியாது. இத்தீர்மானம் உங்களுக்குத் துன்பமளிக்குமென நான்

அறிவேன், அதன் பொருட்டு மன்னிப்பை வேண்டுகிறேன்" என்றேன்.

சிறிது மனத்துன்பத்துடனும், ஆனால் மிகுந்த பிரியத்துடனும் கோகலே கூறியதாவது:— "உங்கள் தீர்மானம் எனக்குப் பிடிக்கவில்லை, ஆத்ம சாதனத்துக்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பதாகவே எனக்குத் தெரியவில்லை. ஆனால் இதற்குமேல் உங்களை நான் வற்புறுத்த மாட்டேன்," இவ்வாறு சொல்லிவிட்டு அவர் ஜீவராஜ் மேதாவினிடம் "தயவு செய்து இனிமேல் அவரைத் தொந்திரவு செய்யாதீர்கள். அவர் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் வரம்புக்குட்பட்டு உங்களுக்கு உசிதமாய்த் தோன்றும் உணவைக் குறிப்பிடுங்கள்" என்றார்.

டாக்டருக்கு இது பிடிக்கவில்லை யென்றாலும் வேறு வழி யில்லாமற் போயிற்று எனவே, பெருங்காயம் போட்ட காராமணிக் குழம்பு சாப்பிடும்படி எனக்குக் கூறினர். இதற்குச் சம்மதித்து இரண்டொருநாள் அக்குழம்பு சாப்பிட்டேன். இதனால் வலி அதிகமாயிற்று. அது ஒத்துக் கொள்ளாமல் போகவே, பழையபடி பழம், கொட்டை வகைகளுக்கே திரும்பினேன்.

டாக்டர் தமது வெளி சிகிச்சையைச் செய்து வந்தார். இதனால் வலி ஓரளவு சமனமா யிருந்தது. ஆனால் என்னுடைய கட்டுப்பாடுகள் அவருக்குப் பெரும் இடையூறா யிருந்தன.

இதற்கிடையில், கோகலே லண்டனில் அக்டோபர் பனியைப் பொறுக்க முடியாதென்று சொல்லித் தாய் நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

பாரிச நோய் சிகிச்சை

பாரிச நோய் நீடித்திருந்தது சிறிது கவலையை யளித்தது. ஆனால் உள்ளுக்கு மருந்து அருந்துவதினால் அது குணமடையா தென்றும், வெளிக்கு மருந்து தடவுதல் சிறிது அநுகூலம் செய்யலாமென்றும், உணவில் மாறுதல் செய்வதினாலேயே நோய் முற்றும் குணமாகு மென்றும் அறிந்தேன்.

டாக்டர் அல்லின்ஸன் என்பவர் சைவ உணவு வாதி என்று பெயர் பெற்றவர். அவர் உணவு மாறுதல்களின் மூலமாகவே, நோய்களுக்குச் சிகிச்சை செய்து வந்தார். அவரை 1890-ம் ஆண்டிலேயே எனக்குத் தெரியும். இப்போது அவரை அழைத்து வரச் செய்தேன். அவர் என்னை முற்றும் பரிசோதனை செய்தார். பால் அருந்துவதில்லை என்று நான் விரதங்கொண்டிருப்பதை அவரிடம் தெரிவித்தேன். அவர் என்னை உற்சாகப்படுத்தி "நீங்கள் பால் அருந்த வேண்டியதில்லை. உண்மையில், சில நாட்களுக்கு நீங்கள் கொழுப்புணவு எதுவுமே உட்கொள்ளக் கூடாதென்பது என் கருத்து" என்று கூறினார். பின்னர் அவர் என்னைச் சாதாரண பழுப்பு ரொட்டி, பச்சைக் கறிகாய்கள், கீரைகள், புதிய பழங்கள், முக்கியமாக கிச்சிலிப் பழங்கள் இவைகளை மட்டும் சாப்பிட்டு வரச் சொன்னார். கறிகாய்களை அப்படியே மென்று தின்ன முடியாவிடில் நுட்பமாகத் திருகிக் கொள்ளும்படியும், ஆனால் சமைக்கக் கூடாதென்றும் சொன்னார்.

மூன்று தினங்கள் அவ்வாறு செய்தேன். ஆனால் பச்சைக் கறிகாய்கள் எனக்கு ஒத்து வரவில்லை. அந்தச் சோதனையை முழுதும் நடத்திப் பார்ப்பதற்கு என் உடல் நிலை இடங்கொடுக்கவில்லை. பச்சைக் கறிகாய் உண்பதைப் பற்றிச் சந்தேகங்கள் உண்டாயின.

மற்றும், என் அறையின் பலகணிகளை 24 மணி நேரமும் திறந்து வைக்கும்படியும், வெது வெதுப்பான தண்ணீரில் குளிக்கும்படியும், நோயுள்ள பாகங்களில் எண்ணெய் தடவித் தேய்க்கும்படியும், திறந்த வெளியில் 15 நிமிஷம் முதல் 30 நிமிஷம் வரையில் நடக்கும்படியும் டாக்டர் அல்லின்ஸன் கூறியிருந்தார். இந்த யோசனைகள் எல்லாம்எனக்குப் பிடித்திருந்தன.

என்னுடைய அறையின் பலகணிகள் பிரஞ்சு முறையில் ஆனவை. நன்கு திறந்து வைத்தால் மழைபெய்யும்போது உள்ளே தண்ணீர் வந்து விடும். விசிறிபோல் அமைந்த மற்றொரு வகை ஜன்னலைத்திறக்கவே முடியாமலிருந்தது. ஆகவே நல்ல காற்று உள்ளே வரும் பொருட்டு அதன் கண்ணாடிகளை உடைத்து விட்டேன். மழை உள்ளே வரமுடியாத வகையில் மற்ற ஜன்னல் கதவுகளையும் பாதி திறந்து வைத்தேன்.

இந்த முறைகள் எல்லாம் ஓரளவு எனக்குச் சுகம் அளித்தன. ஆனால் நோய் முற்றும் குணமாகவில்லை.

இக் காலத்தில் லேடி ஸெஸிலியா ராபர்ட்ஸ் என்னும் சீமாட்டி என்னை அடிக்கடி பார்க்க வருவதுண்டு. அவர் என்னைப் பாலருந்தும்படி செய்யப் பெரிதும் முயன்றார். ஆனால் நான் இணங்கவில்லை யாதலின் பாலுக்குப் பதில் உபயோகிக்கக் கூடிய பொருளை அவர் தேடலானார்,

மால்டட் மில்க் என்னும் பொடி அத் தகையதென்றும், அதில் பால் கலப்பே கிடையாதென்றும், அது பாலின் குணங்கள் எல்லாம் பொருந்திய இரசாயனச் சேர்க்கைப் பொருள் என்றும் யாரோ ஒரு நண்பர் அவருக்குக் கூறினராம். லேடி ஸெஸிலியா என்னுடைய சமையக் கொள்கைகளைப் பெரிதும் மதிப்பவர் என்று எனக்குத் தெரியும். ஆதலின் அவரை நான் பூரணமாகநம்பினேன். பொடியைத் தண்ணீரில் கரைத்து ஒரு வாய் சாப்பிட்டதும் அது முற்றும் பால்போலவே சுவைத்ததைக் கண்டேன். பின்னர், புட்டியின் மீது ஒட்டியிருந்த சீட்டைக் கவனித்தேன். அதில், அப் பொடி பாலினால் ஆனதுதான் என்று எழுதியிருப்பதைப் படித்தேன். எனவே அதை அருந்துவதை விட்டொழித்தேன்.

நான் கண்டுபிடித்த உண்மையை லேடி ஸெஸிலியாவுக்குத் தெரிவித்ததுடன் அதைப்பற்றிக் கவலையுற வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் தமது வருத்தத்தை தெரிவிப்பதற்காக மிக அவசரமாய் விரைந்தோடி வந்தார். அவருக்கு அவ்விவரமறிவித்த நண்பர் மேற்படி சீட்டைப் படித்ததே கிடையாதாம். இது குறித்துக் கவலைப்பட வேண்டாமென்று அவரைப் பெரிதும் வேண்டிக் கொண்டதுடன், அவர் அவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடிக் கொண்டு வந்ததை நான் பயன் படுத்திக் கொள்ள இயலாமலிருப்பதற்காக என் வருத்தத்தையும் தெரிவித்தேன். அறியாமல் தவறுதலாகப் பால் அருந்திவிட்டதைக் குற்றமாகக் கருதி வருந்தவில்லை யென்றும் அவருக்கு உறுதி கூறினேன்.

லேடி ஸெஸிலியாவின் நட்பைப் பற்றிய இன்னும் பல இனிய ஞாபகங்களை விடுத்துச் செல்ல வேண்டியவனு

யிருக்கிறேன். எத்தனையோ சோதனைகளுக்கும், ஏமாற்றங்களுக்கு மிடையே எனக்குப் பேராறுதலா யிருந்து வந்த நண்பர்கள் பலரை நான் குறிப்பிடக்கூடும். துயரத்தையும் இனிமையாக்கும் கருணைக் கடலான பரமனின் அருள் மகிமையை அத்தகைய நண்பர்களிடம் தெய்வ நம்பிக்கையுள்ளவன் காண்கின்றான்.

டாக்டர் அல்லின்ஸன் அடுத்த முறை வந்தபோது அவருடைய நிர்ப்பந்தங்களைத் தளர்த்திவிட்டு, கொழுப்புக்காக நிலக்கடலை எண்ணெய், ஆலிவ் எண்ணெய் இவற்றைச் சேர்த்துக்கொள்ளவும், காய்கறிகளை வேண்டுமானால் சமைத்துச் சாதத்துடன் கலந்துண்ணவும் அநுமதி தந்தார். இந்த மாறுதல்கள் எனக்குப் பெரிதும் விருப்பமாயிருந்தன வாயினும், அவை எனக்குப் பூரண சுகம் அளித்தபாடில்லை. மிக ஜாக்கிரதையான பணிவிடை இன்னும் அவசியமாயிருந்தது. பெரும்பாலும் படுக்கையிலேயே இருக்க வேண்டியவனாயு மிருந்தேன்.

டாக்டர் மேதா அவ்வப்போது என்னைப் பரிசோதிப்பதற்காக வருவதுண்டு. தம்முடைய புத்திமதியைக் கேட்க நான் சம்மதித்தால் நோயைக் குணப்படுத்தி விடுவதாகச் சொல்லிக் கொண்டு வந்தார்.

நிலைமை இப்படி யிருக்கும்போது ஒரு நாள் மிஸ்டர் ராபர்ட்ஸ் என்னைப் பார்க்க வந்தார். அவர் என்னைத் தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்லும்படி வற்புறுத்தினார். அவர் கூறியதாவது:—"இந்த உடல் நிலையில் நீங்கள் நெட்லிக்குப் போகமுடியாது. இன்னும் கடுமையான குளிர் காலம் வரப் போகிறது. கட்டாயம் நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அங்கேதான் நீங்கள் பூரண சௌக்கியமடைய முடியும். குணமடைந்த பின்னர் யுத்தம் இன்னும்

நடந்து கொண்டிருக்கக் கண்டால், உதவி செய்வதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் உங்களுக்கு அங்கே கிடைக்கும். இப்போதுங்கூட நீங்கள் இதுவரை செய்திருக்கும் ஊழியம் அற்பமென்று நான் கருதவில்லை."

அவருடைய புத்திமதியை ஏற்று இந்தியாவுக்குத் திரும்ப ஆயத்தம் செய்யலானேன்.

நாற்பத்துமூன்றும் அத்தியாயம்

இந்தியா திரும்புதல்

மிஸ்டர் காலன்பாக் இந்தியாவுக்குப் போகும் உத்தேசத்துடனே என்னுடன் இங்கிலாந்துக்கு வந்திருந்தார். அங்கே நாங்கள் சேர்ந்து வசித்தோம். ஒரே கப்பலில் பிரயாணப்பட விரும்பினோமென்று சொல்லவும் வேண்டுமோ? ஆனால் அப்போது ஜெர்மானியருக்குக் கண்டிப்பான காவல் ஏற்பட்டிருந்தது. ஆதலின் காலன் பாக்குக்குப் பிரயாண அநுமதிச் சீட்டு கிடைக்குமா என்பது குறித்து ஐயம் உண்டாயிற்று. என்னாலியன்றவரை முயன்றேன். மிஸ்டர் ராபர்ட்ஸ் அநுமதிச் சீட்டு கொடுப்பதற்கு அநுகூலமாயிருந்தார். அவர் இராஜப்பிரதிநிதிக்கு இவ்விஷயமாகத் தந்தி யடித்தார். ஒன்றும் பயன்படவில்லை. லார்டு ஹார்டிஞ்சினிட மிருந்து "இந்திய அரசாங்கம் அத்தகைய அபாயத்துக் குட்படத் தயாராயில்லை" என்று உடனே பதில் வந்தது. அந்த பதிலின் நியாயத்தை நாங்கள் எல்லோரும் உணர்ந்தோம்.

மிஸ்டர் காலன்பாக்கைப் பிரிய வேண்டி வந்தது எனக்கு அளவற்ற துன்பம் அளித்தது. ஆனால் என்னைவிட அவருக்கு மனத்துயரம் அதிகம் என்று கண்டேன்.

அவர் இந்தியாவுக்கு வந்திருக்கக் கூடுமானால் இன்றைய தினம் விவசாயியாகவும், நெசவுத் தொழிலாளியாகவும் எளிய இன்ப வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பார். அது முடியாமையால் இப்போது அவர் தென்னாப்பிரிக்காவில் தமது பழைய வாழ்க்கையையே நடத்தி வருகிறார். கட்டிட வேலையில் அவருக்கு நல்ல தொழில் நடந்து வருகிறது.

மூன்றாம் வகுப்புச் சீட்டுப் பெறவே நாங்கள் விரும்பினோம். ஆனால் பி ஆண்டு ஓ கம்பெனி கப்பல்களில் மூன்றாம் வகுப்பு இல்லாதபடியால் இரண்டாம் வகுப்பிலேயே போக வேண்டியதாயிற்று.

தென்னாப்பிரிக்காவிலிருந்து கொண்டு வந்திருந்த வற்றல் பழங்களை உடன் எடுத்துச் சென்றோம். இந்தப் பழங்கள் பெரும்பாலும் கப்பலில் அகப்படா. ஆனால் புதிய பழங்கள் எளிதாகக் கிடைத்தன.

விலா எலும்புகளுக்குப் 'பிளாஸ்திரி' போட்டு டாக்டர் ஜீவராஜ் மேதா கட்டியிருந்தார். செங்கடல் போய்ச் சேரும் வரையில் அதை நீக்க வேண்டாமென்று அவர் சொல்லியிருந்தார். இரண்டு நாளைக்கு அந்தத் தொல்லையை நான் சகித்துக்கொண்டிருந்தேன். ஆனால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. மிகுந்த கஷ்டத்தின் மீது பிளாஸ்திரியை அகற்றி விட்டேன். இதன் பிறகு உடம்பை சுத்தம் செய்து ஸ்நானம் பண்ணுதல் சாத்தியமாயிற்று. அதுவே பெரிய விடுதலை போலிருந்தது.

பெரும்பாலும் பழங்களும் கொட்டைகளுமே என் உணவாயிருந்தன. நாளுக்கு நாள் என் தேகநிலை அபிவிருத்தி யடைந்து வந்தது. சூயஸ்கால்வாய் சேர்வ

தற்குள் நிரம்ப தூரம் சௌக்கியமடைந்து விட்டதாக உணர்ந்தேன். இன்னமும் பலவீனமிருந்த போதிலும் அபாய எல்லையைக் கடந்தாய் விட்டது. வரவா தேகாப்பியா சத்தையும் அதிகப்படுத்திக்கொண்டு வந்தேன். மத்தியதர வெப்பப் பிரதேசத்தின் தூய்மையான காற்றே அபிவிருத்திக்கு முக்கியமான காரணம் என்று கருதினேன்.

இந்தக் கப்பலில் ஆங்கிலப் பிரயாணிகளும், இந்தியப் பிரயாணிகளும் நெருங்கிப் பழகாமல் விலகி நின்றதுபோல் தென்னுப்பிரிக்காவி லிருந்து செய்த பிரயாணத்தின் போது கூட நான் பார்க்கவில்லை. இதற்குக் காரணம் பழைய அநுபவமோ, யாதோ அறியேன். சில ஆங்கிலேயருடன் நான் பேசினேனுயினும் அது சம்பிரதாயப் பேச்சே யல்லாது வேறில்லை. தென்னுப்பிரிக்கா கப்பலில் பரஸ்பர அபிமானத்துடன் நடந்த சம்பாஷணைகளைப்போல் எதுவும் இங்கே காண முடியவில்லை. ஆங்கிலேயனுடைய உள்ளத்தின் அடிவாரத்தில், தான் ஆளும் இனத்தைச் சேர்ந்தவன் என்ற எண்ணமும், இந்தியனுடைய மனத்தின் அடியில், தான் ஆளப்படும் சாதியைச் சேர்ந்தவன் என்ற எண்ணமும் குடிகொண்டிருந்ததே இதற்குக் காரணம் என்று நான் கருதுகிறேன்.

இத்தகைய நிலையிலிருந்து விடுதலை பெற்றுத் தாய்நாடு சேரப் பெரிதும் ஆவலுற்றேன்.

ஏடன் துறைமுகம் நண்ணியதும் ஓரளவு ஜன்ம தேசத்தி லிருப்பதாக உணரலானேம். ஏடன் வாசிகளை எங்களுக்கு நன்ருய்த் தெரியும். ஸ்ரீமான் கெகோபாத் கவாஸ்ஜி டின்ஷாவை டர்பனில் பார்த்திருந்ததுடன் அவருடனும் அவர் மனைவியுடனும் நெருங்கிப் பழகி யிருந்தோம்.

இன்னும் சில தினங்களில் கப்பல் பம்பாயை அடைந்தது. பத்து வருஷம் நாடு கடத்தப்பட்டிருந்து கடைசியாக சொந்த நாடு சேர்ந்தது எனக்கு அளவற்ற மகிழ்ச்சி யளித்தது என்று சொல்லவும் வேண்டுமோ?

கோகலேயின் யோசனையின்படி பம்பாயில் என்னை வரவேற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோகலே இன்னும் பூரண தேகசுகம் பெறவில்லை. எனினும் அவரும் என்னை எதிர்கொள்ள பம்பாய் வந்திருந்தார். அவருடன் முழுமையும் கலந்து, எல்லாக் கவலையும் தீர்ந்து வாழலாம் என்னும் அடங்கா ஆவலுடன் நான் இந்தியா நண்ணினேன். ஆனால் இறைவன் அருள் முற்றும் வேறு விதமாயிருந்தது.

நாற்பத்துநான்காம் அத்தியாயம்

வக்கீல் தொழில் ஞாபகங்கள்

இந்தியாவில் நான் வாழ்க்கை தொடங்கிய விதத்தைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால், முன்னம் வேண்டுமென்றே நான் சொல்லாமல் விடுத்த தென்னாப்பிரிக்கா அநுபவங்களில் இன்னும் சிலவற்றைக் கூறுதல் அவசியமென்று காண்கிறது.

வக்கீல் நண்பர்கள் சிலர், வக்கீல் தொழில் சம்பந்தமான எனது ஞாபகங்களை எழுதுமாறு கேட்டிருக்கிறார்கள். இந்த ஞாபகங்கள் எவ்வளவோ இருக்கின்றனவாதலால், அவை எல்லாவற்றையும் விவரிக்கப் புகுந்தால் அதுவே ஒரு தனிப் புத்தகமாகிவிடும். அவ்வாறு செய்தல் எனது நோக்கத்திற் கப்பாற் பட்டதாகும். ஆனால் அந்த ஞாபகங்களில் உண்மை கடைப்பிடிப்பது சம்பந்தமான

சிலவற்றை மட்டும் குறிப்பிடுதல் அந்நோக்கத்தைக் கடந்து செல்வதாகாதெனக் கருதுகிறேன்.

என்னுடைய வக்கீல் தொழிலில் பொய்யைத் துணை கொண்டது கிடையாதென்று முன்னமே சொல்லி யிருக்கிறேன். நான் நடத்திய வழக்குகள் பெரும்பாலும் பொது நன்மை பற்றியவையே யாகும். இத்தகைய வேலைகளுக்குக் கையை விட்டுச் செலவுசெய்த பணத்தை மட்டுமே பெற்றுக் கொண்டேன். சில சமயங்களில் இச்செலவையும் நானே பொறுத்துக் கொண்டதுமுண்டு. இவை யெல்லாம் முன்னமே சொல்லி யிருக்கிறேன். வக்கீல் தொழிலைப் பற்றிய வரையில் இவ்வளவுக்கு மேல் எதுவும் சொல்லுதல் அநாவசியம் என்று கருதி யிருந்தேன். ஆனால் நண்பர்கள் அது போதாதென்கிறார்கள். நான் உண்மையிலிருந்து வழுவ மறுத்து உறுதியாக நின்ற சந்தர்ப்பங்களைப் பற்றிச் சிறிதளவேனும் விவரித்தால், வக்கீல் தொழிலுள்ளவர்கள் அதன் மூலம் பயனடையக் கூடுமென்று அவர்கள் எண்ணுவதாகக் காண்கிறது.

நான் மாணாக்கனா யிருந்தபோது வக்கீல் தொழில் பொய்யனுடைய தொழில் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இதை நான் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் பொய் சொல்லிப் பணமோ, உதவியோ சம்பாதிக்கும் எண்ணம் எனக்கு அறவே கிடையாது.

தென்னாப்பிரிக்காவில் என்னுடைய உறுதி பலமுறையும் சோதனைக்குள்ளாயிற்று. பலமுறையும், எதிர்க் கட்சிக்காரர்கள் தங்கள் சாட்சிகளுக்குச் சொல்லிக் கொடுத்துத் தயாரித்திருக்கிறார்களென்று தெரிய வரும். அத்தகைய வழக்குகளில் என் கட்சிக்காரனையோ அவன் சாட்சிகளையோ பொய் சொல்லப் பண்ணினால் வழக்கில்

வெற்றியடைந்து விடலாமென்று நிச்சயமாய் அறிவேன். எனினும், இத்தகைய சோதனையில் நான் எப்போதும் வீழ்ந்துபடவே யில்லை. வழக்கில் வெற்றி பெற்ற பிறகு, என் கட்சிக்காரன் என்னிடமே பொய் சொல்லி ஏமாற்றி யிருக்கக் கூடுமோ என்று ஒரே ஒரு முறை நான் சந்தேகித்தது உண்டு. என்னுடைய இதய அந்தரங்கத்தில், என் கட்சிக்காரன் சார்பில் நியாயம் இருந்தால் மட்டுமே வெற்றிபெற வேண்டுமென்று நான் எப்போதும் விரும்பி வந்தேன். ஊழியம் பேசிக்கொள்ளும்போது வழக்கில் வெற்றி பெற்றால் இவ்வளவு என்பதாகப் பேசிக் கொண்டதேயில்லை. கட்சிக்காரன் ஜெயித்தாலும் தோற்றாலும் என்னுடைய ஊதியம் ஒன்றுதான். அதிகமோ, குறைவோ பெற்றுக் கொள்வதில்லை.

புதிய கட்சிக்காரன் ஒவ்வொருவரிடமும், நான் பொய் வழக்கு எடுத்துக்கொள்ள மாட்டேனென்றும், சாட்சிகளுக்குச் சொல்லிக் கொடுத்துத் தயாரிப்பேனென எதிர் பார்க்கக் கூடாதென்றும் முதலிலேயே எச்சரிக்கை செய்து விடுவேன். நாளடைவில் இவ்விஷயம் பிரஸித்தியாகி என்னிடம் பொய் வழக்குகள் வருவதே நின்று விட்டன. என் கட்சிக்காரர்கள் சிலர் உண்மை வழக்குகளுக்கு மட்டும் என்னை வைத்துக்கொண்டு, ஐயத்துக்கிடமான வழக்குகளைப் பிறரிடம் கொடுப்பதுண்டு.

ஒரு வழக்கில் மிகவும் கடுமையான சோதனை ஏற்பட்டது. அது என்னுடைய கட்சிக்காரரில் மிகச் சிறந்தவர் ஒருவரின் வழக்கு. அதில் சிக்கலான கணக்குகள் நிரம்ப அதிகம். பற்பல நீதிமன்றங்களில் நீண்ட காலமாய் அது நடந்து வந்தது. கடைசியாக, அவ் வழக்கில் கணக்குமுறை சம்பந்தமான அம்சம், தகுதிபெற்ற கணக்கர்களின் மத்தி

யஸ்தத்துக்கு நீதிமன்றத்தாரால் விடப்பட்டது. மத்தியஸ்தர்கள் என் கட்சிக்காரருக்கு முற்றும் அநுகூலமாகத் தீர்ப்பளித்தார்கள். ஆனால் அவர்கள் கணக்கில் ஒரு தவறுதல் செய்துவிட்டார்கள். இத் தவறுதல் சிறியதாயினும் மிகவும் முக்கியமானது. ஏனெனில் பற்று கலத்தில் விழவேண்டிய ஒரு தொகை வரவு கலத்தில் விழுந்திருந்தது. ஆனால் எதிரிகள் இத் தவறுதலைக் கண்டு பிடிக்கவில்லை. வேறு காரணங்களை ஆதாரமாகக் கொண்டு அவர்கள் தீர்ப்பை எதிர்த்தார்கள். இவ்வழக்கில் நான் உதவி (ஜூனியர்) வக்கீலாகவே இருந்தேன். பெரிய வக்கீல் இத் தவறினை அறிந்தபோது. அதை எங்கள் கட்சிக்காரர் ஒப்புக் கொள்ளக் கடமைப்பட்டிருக்க வில்லை யென்று அபிப்பிராயப் பட்டார். எந்த வக்கீலும் தமது கட்சிக்காரருக்கு விரோதமான அம்சத்தை தாமே ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை யென்று அவர் திட்டமாகச் சொன்னார். தவறை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமென்று நான் கூறினேன்.

"அப்படியானால் திர்ப்பு முழுவதையுமே நீதிமன்றத்தார் தள்ளிவிடக்கூடும். சித்த சுவாதீனமுள்ள வக்கீல் எவனும் அவ்வாறு தன் கட்சிக்காரனுக்கு ஆபத்து உண்டு பண்ண மாட்டான். நிச்சயமாக நான் அதற்கு இணங்க மாட்டேன். வழக்கு மறு விசாரணைக்கு அனுப்பப்பட்டால், நமது கட்சிக்காரனுக்கு எவ்வளவு பணச் செலவாகுமோ யார் கண்டார்? முடிவு என்னவாகுமோ, அதுதான் யாருக்குத் தெரியும்" என்று பெரிய வக்கீல் வாதித்தார்.

இந்த சம்பாஷணையின்போது எங்கள் கட்சிக்காரரும் உடன் இருந்தார். நான் கூறியதாவது :—"நமது கட்சிக்காரரும் நாமும் இந்த அபாயத்துக்குத் துணிந்தேயாக

வேண்டுமென்று நான் கருதுகிறேன், நாம் தவறை ஒப்புக் கொள்ளாததினுலேயே நீதிமன்றத்தார் தப்புத் தீர்ப்பை உறுதி செய்வார்களென்பது என்ன நிச்சயம்? அதை ஒப் புக் கொண்டதினுல் நமது கட்சிக்காருக்குத் தீங்குநேர்வதா யிருந்தாலும் பாதகமில்லை, "

" ஆனுல் அதை நாம் எதற்காக ஒப்புக்கொள்ள வேண்டும்; அவசியம் என்ன?" என்று பெரிய வக்கீல் வினவினுர்.

" நீதிமன்றத்தாரோ, எதிராளியோ அதைக் கண்டு பிடிக்க மாட்டார்களென்று என்ன நிச்சயம்?" என்று நான் கேட்டேன். "நல்லது, அப்படியானுல் நீங்களே வாதம் செய்யுங்கள். உங்களுடைய நிபந்தனையின்மேல் வழக்கு நடத்த நான் தயாராயில்லை" என்று பெரிய வக்கீல் தீர்மானமாகச் சொன்னுர்.

நான் பணிவுடன் சொன்னதாவது;—"நீங்கள் மறுத் தால் நான் வழக்காடச் சித்தமாயிருக்கிறேன். ஆனுல் அது நமது கட்சிக்காரரின் விருப்பத்தைப் பொறுத்தது. தவறை ஒப்புக்கொள்ளாத வரையில் இவ்வழக்கில் என்னுல் வேலை செய்ய முடியாது.

இப்படிச் சொல்லிஎங்கள் கட்சிக்காரரின் முகத்தைப் பார்த்தேன். அவருடைய நிலைமை சிறிது சங்கடமாயிற்று. முதலிலிருந்து வழக்கைக் கவனித்து வந்தவன் நான். அவர் என்னை நன்கறிவார். என்னைப் பூரணமாய் நம்பினுர். கடைசியில் அவர் கூறியதாவது:— "நல்லது" தவறை ஒப்புக்கொண்டு நீங்களே வாதம் செய்யுங்கள். அதிர்ஷ்டம் உள்ளபடி இருக்கிறது. பகவான் நியாயத்தைப் பாது காப்பார்."

மிகுந்த மகிழ்ச்சி கொண்டேன். கட்சிக்காரரிடம் இத்தகைய பெருந்தன்மையை நான் எதிர் பார்த்தேன். பெரிய வக்கீல் மீண்டும் எச்சரிக்கை செய்தார். என்னுடைய பிடிவாதத்துக்காக இரங்கினார் எனினும் எனக்கு வாழ்த்தும் கூறினார்.

நீதிமன்றத்தில் என்ன நிகழ்ந்த தென்று அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

மோசடி வேலையா ?

நான் கூறிய புத்திமதியின் உசிதத்தைப் பற்றி எனக்கு எள்ளளவும் சந்தேக மிருக்கவில்லை. ஆனால் அவ் வழக்கை என்னால் நன்கு நடத்த முடியுமா வென்பதுகுறித் துப் பெரிதும் ஐயுற்றேன். உயர்தர நீதி மன்றத்தில் அவ் வளவு கஷ்டமான வழக்கொன்றில் வாதமிட ஒப்புக் கொள் வது பெரிதும் ஆபத்தான காரியம் என்பதை உணர்ந்திருந் தேன். ஆதலின் நீதிமன்றத்தில் எழுந்து நின்றபோது பயத்தினால் நடுக்கமுற்றேன்.

நான் பேச ஆரம்பித்துக் கணக்கில் இருந்த தவறைப் பற்றிக் குறிப்பிட்டதும் நீதிபதிகளில் ஒருவர் "மிஸ்டர் காந்தி, இது மோசடிவேலை அல்லவா?" என்று வினவினார்.

இதைக் கேட்டதும் என் உள்ளம் கொதித்தது. எள்ளளவும் ஆதார மின்றி, மோசடி செய்ததாகக் குற்றஞ் சாட்டினால் எவ்வாறு பொறுக்க முடியும்;

ஆரம்பத்திலேயே இவ்வாறு கெட்ட எண்ணங் கொண்டு விட்ட நீதிபதியிடம், இக் கஷ்டமான வழக்கில்

வெற்றி பெறுவது துர்லபமே என்று எண்ணினேன். ஆயினும் மனதைச் சாந்தப் படுத்திக்கொண்டு "நான் சொல்வதை முற்றுங் கேளாமலே தாங்கள் மோசடி வேலை என்பதாகச் சந்தேகிப்பது குறித்து ஆச்சரியப்படுகிறேன்" என்றேன்.

"அவ்வாறு நான் குற்றஞ் சாட்டவில்லை. அது ஒரு யோசனைதான்" என்று நீதிபதி கூறினார்.

"இந்த விடத்தில் யோசனை குற்றஞ் சாட்டுதலே யாகும் என்று எனக்குக் காணப்படுகிறது. நான் சொல்லப் போவதை முழுதும் கேட்டுவிட்டுப் பின்னர், காரணமிருந் தால் என்மேல் குற்றஞ் சுமத்தும்படி வேண்டிக் கொள்கி றேன்," என்றேன்.

நீதிபதி பதிலளித்ததாவது:—"இடையில் குறுக்கிட்ட தற்காக வருந்துகிறேன். கணக்குத் தவறைப் பற்றி உங்கள் சமாதானத்தைச் சொல்லுங்கள்."

என்னுடைய சமாதானத்துக்குப் போதிய ஆதாரங்கள் வைத்திருந்தேன். நீதிபதி இந்தப் பிரச்னையை எழுப்பிய தின் பயனாக, தொடக்கத்திலிருந்தே நீதிபதிகளின் கவனத் தைக் கவர்ந்து என்னுடைய வாதங்களைக் கவனிக்கச் செய் தல் சாத்தியமாயிற்று. நான் பெரிதும் தைரியமடைந்து விவர மாக என்னுடைய சமாதானத்தை எடுத்துக் கூறினேன். நீதிபதிகளும் பொறுமையுடன் என் வாதங்களுக்குச் செவி கொடுத்தனர். கடைசியில், மேற்படி தவறு கவனக் குறை வினால் ஏற்பட்டதே யென்று அவர்கள் ஒப்புக்கொள்ளும் படி நிரூபிக்க முடிந்தது. ஆதலின், மிக்க உழைப்பின் மேல் ஏற்பட்ட மேற்படி மத்தியஸ்தத் தீர்ப்பை அடியோடு தள்ளிவிட அவர்கள் விரும்பவில்லை.

எதிர்தரப்பு வக்கீல், தவறு ஒப்புக்கொண்டு விடப்பட்ட படியால் தாம் அதிக வாதம் செய்தல் தேவையில்லை யென்று கருதி நம்பிக்கையுடனிருந்தார். ஆனால் நீதிபதிகள் அவரை அடிக்கடி இடை மறித்துக் கேள்விகள் கேட்டார்கள். ஏனெனில் அவர்கள் அக்கணக்குப் பிழை ஒரு கைத்தவறு தலே யென்றும், எளிதில் அதைச் சரிப்படுத்தி விடலாமென் றும் நிச்சயம் பெற்றிருந்தார்கள். மத்தியஸ்தர்களின் தீர்ப் பைத் தாக்குவதற்கு எதிர் தரப்பு வக்கீல் மிக முயன்றார். ஆனால் முதலில் சந்தேகத்துடன் தொடங்கிய நீதிபதி இப் போது திட்டமாய் என் கட்சிக்கு வந்துவிட்டார்.

"மிஸ்டர் காந்தி பிழையை ஒப்புக் கொண்டிரா விட்டால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் ?" என்று அவர் வினவினார்.

"நாங்கள் நியமித்த கணக்கரை விட கெட்டிக்காரரும் உண்மை யுள்ளவருமான கணக்கரைக் கண்டுபிடித்தல் அசாத்தியம்," என்றார் வக்கீல்.

"உங்கள் கட்சி உங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும். எந்தக் கணக்கு நிபுணரும் செய்திருக்கக் கூடிய கைத்தவறுதலையன்றி வேறெதுவும் நீங்கள் எடுத்துச் சொல்வதற்கில்லை யென்றால், அந்த வெளிப்படையான தவறுக்காக மீண்டும் பழையபடி வழக்காடச் சொல்லவும், புதிய செலவு வைக்கவும் எங்களுக்கு விருப்பமில்லை. இச் சிறு தவறை எளிதில் திருத்தி விடலா மாதலால், மறு விசார ணைக்கு அனுப்புதல் அனாவசிய மல்லவா?" என்று நீதிபதி தொடர்ந்து சொன்னார்.

கடைசியில் எதிர்தரப்பு வக்கீலின் ஆட்சேபம் நிராகரிக் கப்பட்டது. நீதிபதிகள் மத்தியஸ்தரின் தீர்ப்பை உறுதி

செய்தார்கள். கணக்குப் பிழையைத் தாங்களே திருத்தினர்களா, அல்லது அதைத் திருத்தும்படி மத்தியஸ்தருக்கு உத்திர விட்டார்களா, எனக்கு ஞாபகமில்லை.

அளவற்ற மகிழ்ச்சி யடைந்தேன். என் கட்சிக்காரரும் பெரிய வக்கீலுங்கூட சந்தோஷ மடைந்தார்கள். உண்மைக்கு விரோதமில்லாமல் வக்கீல் தொழில் நடத்துவது அசாத்தியமன்று என்னும் நம்பிக்கை எனக்கு உறுதிப்பட்டது.

ஆனல் வக்கீல் தொழிலில் உண்மை கடைப்பிடித்தாலுங் கூட, அந்தத் தொழிலே அடிப்படையில் தீமையானது என்பதை வாசகர்கள் நினைவில் வைக்கவேண்டும்.

நாற்பத்தாறும் அத்தியாயம்

கட்சிக்காரர்கள் சகாக்களானது

ஒருமுறை ஜோகானிஸ்பர்க் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் நான் ஒரு வழக்கு நடத்திக் கொண்டிருந்தபோது, என் கட்சிக்காரர் என்னை ஏமாற்றிவிட்டாரென்று கண்டு பிடித்தேன். சாட்சிக் கூண்டில் குறுக்கு விசாரணையின்போது அவர் விழித்துப் போய்விட்டார். எனவே, வாதம் எதுவுமில்லாமலே வழக்கைத் தள்ளி விடும்படி மாஜிஸ்ட்ரேட்டை நான் கேட்டுக் கொண்டேன். இதன் காரணமாக எதிர் தரப்பு வக்கீல் ஆச்சரிய முற்றார். மாஜிஸ்ட்ரேட்டும் மகிழ்ச்சி யடைந்தார். என்னிடம் பொய் வழக்குக் கொண்டு வந்ததின் பொருட்டு நான் என் கட்சிக் காரரைக் கண்டித்தேன். பொய் வழக்குகளை நான் ஏற்றுக்

கொள்வதில்லை யென்பது அவருக்கு முன்பே தெரியும். ஆகவே, நான் கண்டித்தபோது, அவர் தமது தவறை ஒப்புக் கொண்டார். அவருக்கு விரோதமாய்த் தீர்ப்பளிக்கும் படி நான் மாஜிஸ்ட்ரேட்டைக் கேட்டுக் கொண்டதற்காகக் கூட அவர் என்மேல் கோபங் கொள்ளவில்லை யென்று ஞாபகம். எங்ஙனமாயினும், இவ்வழக்கில் என் நடத்தை காரணமாக என் தொழிலுக்குப் பாதகம் எதுவும் ஏற்படவில்லை. உண்மையில் என் வேலையை அது சுலபமாக்கிற்று. மற்றும் என்னுடைய உண்மைப்பற்றுனது, சகோதர வக்கீல்களினிடையே எனக்கு அதிக மதிப்பை உண்டாக்கிற்று. நான் கறுப்பு நிறத்தவன் என்னும் குறைபாடு இருந்த போதிலும் சில சந்தர்ப்பங்களில் அவர்களுடைய அன்பைப் பெறுதலும் இயல்வதாயிற்று.

தொழில் முறையில் என்னுடைய அறியாமையை மறைக்கும் வழக்கமும் என்னிடம் இல்லை. கட்சிக்காரர்களிடமாகட்டும், சகாக்களிடமாகட்டும், எனக்குத் தெரியாததைத் தெரியாது என்று சொல்லி விடுவேன். அத் தகைய சந்தர்ப்பங்களில் என் கட்சிக்காரரை வேறு வக்கீலிடம் யோசனை கேட்கச் சொல்வேன். அல்லது அவர் என்னிடமே ஒப்படைப்பதாயிருந்தால், பெரிய வக்கீலின் உதவியைத் தேட அவர் அநுமதி பெறுவேன். இத் தகைய உண்மை நடக்கையால் கட்சிக்காரர்களின் அளவற்ற நம்பிக்கைக்கும் அன்புக்கும் நான் பாத்திரனானேன். பெரிய வக்கீலிடம் யோசனை கேட்க அவசியம் நேரும்போதெல்லாம் அவர்கள் அதற்குரிய பணங்கொடுக்கப் பின் வாங்கியது கிடையாது. இவ்வாறு நான் பெற்ற அன்பும் நம்பிக்கையும் பொது ஊழியத்தில் எனக்குப் பெரிதும் பயன்பட்டன.

தென்னாப்பிரிக்காவில் நான் வக்கீல் தொழில் நடத்தியதின் நோக்கமே இந்திய சமூகத்துக்குத் தொண்டு செய்வது தான் என்று முன் அத்தியாயங்களில் தெரிவித்திருக்கிறேன். இத்தொண்டுக்கு ஜனங்களின் நம்பிக்கைக் குரியவனாதல் இன்றியமையாத நிபந்தனையாகும். பண வருமானத்திற்காக நான் செய்த தொழில் முறை வேலைகளையும் விசால இதயம் படைத்த இந்தியர்கள் பொது ஊழியமென்பதாகப் பெரிது படுத்திப் பாராட்டினார்கள். பின்னால் அவர்களுடைய உரிமைகளைக் காத்துக் கொள்ளும் பொருட்டுச் சிறைவாசம் முதலிய துன்பங்களை நான் அநுபவிக்கச் சொன்னபோது அவர்களில் பலர் மகிழ்ச்சியுடன் அவ்வாறு செய்ய முன் வந்தார்கள். அவ்வழி சரியா, தவறா என்று சிந்தித்து முடிவு கண்டு அவர்கள் அப்படி முன் வந்தவர்களல்ல; என்னிடம் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையும் அன்புமே அவர்களை அத்தகைய தியாகங்களுக்கு உட்படச் செய்தன என்று கூறலாகும்.

நான் இதை எழுதும்போது இனிமை மிக்க ஞாபகங்கள் எவ்வளவோ என் உள்ளத்தில் பொங்கி எழுகின்றன. நூற்றுக் கணக்கான கட்சிக்காரர்கள் எனது நண்பர்களும், பொது ஊழியத்தில் சகாக்களுமாயினர். துன்பங்களும் அபாயங்களும் சூழப்பெற்ற என் வாழ்க்கைக்கு இனிமை யளித்துவந்தது இத்தகையோரின் கூட்டுறவே யாகும்.

நாற்பத்தேழாம் அத்தியாயம்

கட்சிக்காரரைக் காப்பாற்றிய விதம்

பார்ஸி ரஷ்டம்ஜியின் பெயர் இதற்குள் வாசகர்களுக்கு நன்கு பழக்கமாகியிருக்கவேண்டும். அவர் ஒரே சமயத்தில் என் கட்சிக்காரராகவும் சகாவாகவும் ஆனவர். முதலில் சகாவாகிப் பின்னர் கட்சிக்காரர் ஆனார் என்றும் சொல்லலாம். அவருடைய நம்பிக்கைக்கு நான் பெரிதும் பாத்திரனானபடியால், சொந்தக் குடும்ப விவகாரங்களில் கூட அவர் என்னுடைய புத்திமதியைக் கேட்டு அதன்படி நடக்கலானார். அவர் நோயாய்ப் படுக்குங் காலங்களிலும் என்னுடைய உதவியை நாடுவார். எங்கள் வாழ்க்கை முறைகள் நிரம்ப வித்தியாச முடையவை யாயினும் அரை குறை வைத்தியனான என்னுடைய சிகிச்சை முறைகளை ஏற்க அவர் தயங்குவதில்லை.

ஒருமுறை இந்த நண்பர் பெருஞ் சங்கடத்தில் அகப் பட்டுக்கொண்டார். அவர் தமது விஷயங்களைப் பெரும் பாலும் என்னிடம் கூறுவது வழக்கமாயினும், ஒன்றை மட்டும் ஜாக்கிரதையாக என்னிடமிருந்து மறைத்து வைத்திருந்தார், அவர் பம்பாயிலிருந்தும் கல்கத்தாவி லிருந்தும் ஏராளமாகச் சாமான் தருவிக்கும் வியாபாரி அடிக்கடி அவர் திருட்டுத் தனமாய் வரி கொடாமல் சாமான்களை இறக்குமதி செய்வது வழக்கமென்று தெரிய வந்தது. ஆனால் துறைமுக உத்தியோகஸ்தர்களுக்கும் அவருக்கும் நெருங்கிய பழக்கமுண்டாதலால் அவர்களில் யாரும் அவரைச் சந்தேகிப்ப தில்லை. நம்பிக்கையின்மேல் அவர் காட்டும் பட்டியலையே ஆதாரமாய்க் கொண்டு அவர்கள் வரி போடுவது வழக்கம், சிலர் அவருடைய

திருட்டுத் தனம் தெரிந்தே அதற்கு உடந்தையாகவுமிருந் திருக்கலாம்.

ஆனால் பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பது பழமொழியல்லவா? பார்ஸி ரஸ்டம்ஜியின் விஷயத்திலும் இப்பழமொழி உண்மையே யாயிற்று. அவ்வுத்தம நண்பர் உடனே என்னிடம் ஓட்டமாக ஓடிவந்தார். அவர் கண்களில் நீர் ஆறாய்ப் பெருகி வழிந்துகொண்டிருந்தது. "பாபி! உங்களை நான் ஏமாற்றிவிட்டேன். என் குற்றத்தை இன்று கண்டு பிடித்து விட்டார்கள். திருட்டுத்தனமாக நான் சாமான் இறக்குமதி செய்து அகப்பட்டுக் கொண்டேன். என் கதி அதோகதிதான். நான் சிறைக்குச் சென்று அழிந்து போக வேண்டியதுதான். இந்த ஆபத்திலிருந்து நீங்கள் தான் ஒரு வேளை என்னைக் காப்பாற்றக் கூடும். உங்களிடமிருந்து வேறெதையும் நான் மறைத்ததில்லை. ஆனால் இந்த வியாபார தந்திரங்களைப் பற்றிச் சொல்லி உங்களைத் தொல்லைப் படுத்த வேண்டாமென்று எண்ணினேன். ஆதலின் இதை மட்டும் சொல்லாதிருந்து விட்டேன். ஐயோ! அதற்காக இப்போது எவ்வளவு வருந்துகிறேன்!" என்று அவர் கதறினார்.

அவரைச் சமாதானப்படுத்தி நான் சொன்னதாவது:— "உங்களைக் காப்பாற்றுவதும், காப்பாற்றாததும், ஆண்டவன் சித்தம். என்னுடைய வழி எதுவென்று உங்களுக்குத் தெரியும். குற்றத்தை ஒப்புக்கொள்வதின் மூலமாகவே நான் உங்களைக் காப்பாற்ற முயற்சி செய்யக் கூடும்."

இதைக் கேட்டு அப் பார்ஸி நண்பர் மனங்குன்றிப் போனார். "உங்களிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டது போதாதா?" என்று கேட்டார்.

"நீங்கள் எனக்கு எவ்விதப் பிழையும் செய்யவில்லை; அரசாங்கத்துக்கே செய்திருக்கிறீர்கள். ஆதலின் என் முன்னால் குற்றத்தை ஒப்புக்கொண்டது எப்படி உங்களுக்கு உதவும்?" என்று சாந்தமாய்ச் சொன்னேன்.

"உங்கள் புத்திமதியின்படியே நடக்கிறேன். ஆனால் என்னுடைய பழைய வக்கீலான மிஸ்டர்....என்பவரிடம் நீங்கள் கலந்து கொள்ளக் கூடாதா? அவரும் நண்பர் தானே" என்று ரஸ்டம்ஜி கூறினார்.

திருட்டுத்தனமாய்ச் சாமான் இறக்குமதி செய்தல் வெகு காலமாக நடந்து வந்ததென்று விசாரணையில் தெரிய வந்தது. ஆனால் கண்டுபிடிக்கப்பட்ட குற்றம் சிறு தொகையைப் பொறுத்ததாகும். அவருடைய வக்கீலிடம் சென்றோம். அவர் தஸ்தாவேஜிகளைப் படித்துப் பார்த்து விட்டு, "இவ்வழக்கு ஜூரிகள் முன்னிலையில் விசாரிக்கப் படும் நேட்டால் ஜூரிமார் இந்தியர் ஒருவரை விடுதலை செய்வது மிகப் பிரயாசை. இருந்தாலும் நான் நம்பிக்கை யிழந்து விடவில்லை" என்றார்.

இந்த வக்கீலை எனக்கு நன்றாய்த் தெரியாது. பார்ஸி ரஸ்டம்ஜி அவரை இடைமறித்து "வந்தனம். இந்த வழக்கில் நான் ஸ்ரீ காந்தியின் புத்திமதிப்படி நடக்கத் தீர்மானித்திருக்கிறேன். அவர் என்னை நன்கறிவார். அவசியமான போதெல்லாம் தாங்கள் அவருக்கு யோசனை கூறலாம்" என்றார்.

வக்கீல் சங்கதியை இவ்விதமாக முடிவு செய்துவிட்டுப் பின்னர் பார்ஸி ரஸ்டம்ஜியின் கடைக்குச் சென்றோம்.

இப்போது என் கருத்தை அவரிடம் விளக்கிக் கூறினேன் :—"இந்த வழக்கு கோர்ட்டுக்கே போகக்

கூடாதென்று நான் கருதுகிறேன். உங்கள் மேல் வழக்கு நடத்துவதோ, விட்டு விடுவதோ கடற் சுங்க அதிகாரியைப் பொறுத்தது. அவர் அட்டர்னி ஜெனரலின் யோசனைப்படி நடக்க வேண்டியவராவார். அவ்விருவரையும் பார்த்துப் பேச நான் சித்தமாயிருக்கிறேன். அவர்கள் குறிப்பிடும் அபராதத்தை நீங்கள் செலுத்த ஒப்புக் கொள்ளவேண்டும். அநேகமாக அவர்கள் இதற்குச் சம்மதிக்கலாம். அப்படிச் சம்மதியாவிடில் நீங்கள் சிறைக்குப் போகச் சித்தமாயிருக்க வேண்டும். குற்றம் செய்வது அவமானமே அதற்காகச் சிறை செல்வது அவமானமன்று என்பது என் அபிப்பிராயம். அவமானத்துக்குரிய செயல் ஏற்கனவே செய்தாகிவிட்டது. சிறை வாசத்தை நீங்கள் ஒரு பிராயச் சித்தமாகக் கருத வேண்டும். ஆனால் இனிமேல் திருட்டுத் தனமாய்ச் சாமான் இறக்குவதில்லையென்று உறுதி கொள்வதே உண்மையான பிராயச்சித்தமாகும்.

இந்தப் புத்திமதி அனைத்தையும் பார்ஸி ரஸ்டம்ஜி விருப்பத்துடன் ஏற்றார் என்று சொல்ல முடியாது. அவர் தைரிய சாலிதான்; இருந்தாலும் அந்த சமயத்திற்கு அவருடைய தைரியம் போய்விட்டது. அவருடைய நற் பெயருக்கும், புகழுக்கும் ஆபத்து வருவதாய் இருந்தது. எவ்வளவோ கவலையுடன் உழைத்து நிர்மாணித்த கட்டிடம் அடியோடு நாசமாய் விடுமோ வென்று அவர் கலங்கினார்.

"நல்லது உங்களிடம் என்னை ஒப்படைத்து விட்டேன். உங்களிஷ்டப்படி செய்யுங்கள்" என்று அவர் சொன்னார்.

பிறரை வாதமிட்டுத் திருப்புவதற்கு என்னுடைய சக்தி எவ்வளவு உண்டோ அவ்வளவையும் இந்த வழக்கில்

நான் பிரயோகித்தேன். கடற்சுங்க அதிகாரியைக் கண்டு அவரிடம் அஞ்சாமல் விஷயம் முழுவதையும் கூறினேன். கணக்குப் புத்தகங்களை யெல்லாம் அவரிடம் ஒப்புவிப்பதாக வாக்களித்தேன். பார்ஸி ரஸ்டம்ஜி எவ்வளவு பச்சாதாபம் கொண்டிருக்கிறா ரென்பதையும் தெரிவித்தேன்.

சுங்க அதிகாரி சொன்னதாவது:—"அந்தப் பார்ஸியை எனக்குப் பிடித்திருக்கிறது. அவர் இம்மாதிரி முட்டாள் வேலை செய்தது குறித்து வருந்துகிறேன். என்னுடைய கடமை என்னவென்று உங்களுக்கே தெரியும். அட்டர்னி ஜெனரல் யோசனைப்படி நான் நடக்க வேண்டியவன். ஆதலின் அவரைத் திருப்புவதில் உங்களுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் காட்ட வேண்டும்."

"கோர்ட்டுக்கு இழுத்தே யாகவேண்டு மென்று நீங்கள் வற்புறுத்தாதிருந்தால் நான் திருப்தி யடைவேன்" என்றேன்.

இந்த வாக்குறுதி அவரிடம் பெற்றுக்கொண்டு அட்டர்னி ஜெனரலுடன் கடிதப் போக்கு வரவு தொடங்கினேன். அவரை நேரிலும் பார்த்தேன். நான் கரவின்றி நடந்து கொண்டதை அவர் பாராட்டினார் என்று மகிழ்ச்சியுடன் இங்கே குறிப்பிடுகிறேன். நான் எதையும் மறைக்க வில்லை யென்று அவருக்கு நிச்சயமாயிற்று. என்னுடைய கரவின்மையையும், பிடிவாதத்தையும் கண்டு அவர் ஒரு முறை "நீங்கள் 'இல்லை, என்ற பதிலை ஒப்புக்கொள்ளவே மாட்டீர்கள் போலிருக்கிறது" என்று கூறினார். அது இந்த வழக்கு சம்பந்தமாகத் தானா, அல்லது வேறு வழக்கைப் பற்றியா என்பது நன்கு நினைவில்லை.

கடைசியாகப் பார்ஸி ரஸ்டம்ஜியின் வழக்கு ராஜி செய்யப்பட்டது. அவர் திருட்டுத்தனமாய்க் கொண்டுவந்த

தாக ஒப்புக்கொண்ட சாமான்களின் பெருமானத்தைப் போல் இரண்டு மடங்கு தொகை அபராதம் செலுத்த வேண்டியிருந்தது. ரஸ்டம்ஜி இந்த வழக்கின் விவரங்கள் முழுவதையும் ஒரு காகிதத்தில் எழுதிக் கண்ணாடி போட்டுத் தமது காரியாலயத்தில் மாட்டச் செய்தார். தமது சந்ததிகளுக்கும், மற்ற வியாபாரிகளுக்கும் அது ஒரு நிரந்தர எச்சரிக்கையா யிருக்கவேண்டு மென்பது அவர் கருத்து.

அவருடைய பச்சாத்தாபம் நிலையான தன்றென்றும், அதைப் பார்த்து ஏமாற வேண்டா மென்றும் அவருடைய நண்பர்கள் எனக்கு எச்சரிக்கை செய்தார்கள், நான் இதை ரஸ்டம்ஜியிடம் தெரிவித்தபோது அவர் "உங்களை ஏமாற்றினல் என் கதி யென்னவது ?" என்ருர்.

சத்திய சோதனை

ஐந்தாம் பாகம்

முதல் அத்தியாயம்

இந்தியாவில் முதல் அநுபவம்

நான் தாய் நாடு சேர்வதற்கு முன்னால் போனிக்ஸிலிருந்து புறப்பட்டவர்கள் அங்கே போய்ச் சேர்ந்துவிட்டார்கள். முதலில் போட்ட திட்டத்தின்படி, அவர்களுக்கு முன்னால் நான் வந்திருக்க வேண்டியவன். ஆனால் இங்கிலாந்தில் யுத்தம் சம்பந்தமாக எனக்கேற்பட்ட வேலை எங்கள் திட்டங்களை யெல்லாம் தலை கீழாக்கி விட்டது. இங்கிலாந்திலிருந்து நான் எப்போது புறப்படுவேனென்பது நிச்சய மில்லாமற் போனபோது, போனிக்ஸ் குடும்பத்தினர் இந்தியாவில் எங்கே வசிப்பது என்னும் பிரச்னை ஏற்பட்டது. சாத்தியமானால் அவர்கள் எல்லாரும் இந்தியாவில் ஓரிடத்தில் சேர்ந்திருக்க வேண்டுமென்றும், போனிக்ஸில் நடத்திய வாழ்க்கையையே அங்கும் நடத்த வேண்டு மென்றும் நான் விரும்பினேன். இந்தியாவில் அவர்கள் வசிப்பதற்குத் தகுந்த ஆசிரமம் எதுவும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆதலின் ஸ்ரீ ஆண்ட்ரூஸைச் சந்தித்து, அவருடைய யோசனையின்படி நடக்குமாறு அவர்களுக்குத் தந்திச்செய்தி அனுப்பினேன்.

ஆண்ட்ரூஸ் அவர்களைமுதலில் காங்ரி குருகுலத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே காலஞ் சென்ற சுவாமி சிரத்தானந்தர் அவர்களைத் தமது சொந்தக் குழந்தைக

ளாகப் பாவித்து நடத்தினர். பின்னர் அவர்கள் சாந்தி நிகேதனத்துக்குச் சென்றார்கள். அங்கே கவி ரவீந்திரரும் அவரைச் சேர்ந்தவர்களும் அவர்களை அன்பு வெள்ளத்தில் முழுகச் செய்தார்கள். இவ்விரண்டிடங்களிலும் அவர்கள் பெற்ற அநுபவங்கள் தக்க சமயத்தில் அவர்களுக்கும் எனக்கும் பெரிதும் உதவியாயிருந்தன.

கவி ரவீந்திரர், சுவாமி சிரத்தானந்தர், ஆசிரியர் ருத்திரர் இம்மூவரும் ஸ்ரீ ஆண்ட்ரூஸின் திரிமூர்த்திகள் ஆவர். அவரிடம் அவ்வாறு நான் கூறுவது வழக்கம். தென்னாப்பிரிக்காவிலிருந்த போது மேற்கண்ட மூவர்களைப் பற்றிப் பேசுவதென்றால் ஸ்ரீ ஆண்ட்ரூஸ்சலிப்படையவே மாட்டார். தென்னாப்பிரிக்காவைப் பற்றிய எனது இனிய ஞாபகங்கள் பலவற்றில் இந்தத் திரிமூர்த்திகளைப் பற்றி ஸ்ரீ ஆண்ட்ரூஸ் இரவு பகல் இடைவிடாமல் பேசிய பேச்சுகள் மிக்க யினிமை யுடையனவாகும். அவை என்னுள்ளத்தில் தெளிவாகப் பதிந்திருக்கின்றன.

ஸ்ரீ ஆண்ட்ரூஸ் போனிக்ஸ் கூட்டத்தாரை ஆசிரியர் ருத்திரர்க்கும் பழக்கப்படுத்தி வைத்தார். ஆசிரியர் ருத்திரருக்கு ஆசிரமம் எதுவும் கிடையாதாயினும், வீடு ஒன்று இருந்தது. அவ்வீடு முழுவதையும் அவர் ஒழித்துக் கொடுத்தார். போனிக்ஸ் குடும்பத்தார் அவ்வீடு வந்து சேர்ந்து ஒரு நாளைக்குள் தங்கள் சொந்த வீட்டில் இருப்பதாகவே நினைக்கலானார்கள். தாங்கள் போனிக்ஸில் இல்லையென்பதையே மறந்து விட்டார்கள். ருத்திரரின் பந்துக்கள் அவர்களை அவ்வளவு அன்புடன் நடத்தினர்கள்.

நான் பம்பாயில் இறங்கியபோது போனிக்ஸ்குடும்பம் சாந்திநிகேதனத்தில் இருக்கிறதென அறிந்தேன். ஆதலின்

கோகலேயைப் பார்த்துவிட்டுக் கூடிய விரைவில் அவர்களிடம் சென்று சேரவேண்டுமென்று ஆவல் கொண்டேன்.

பம்பாயில் எனக்கு நடந்த வரவேற்புகளின்போது சிறு விஷயம் ஒன்றில் சத்தியாக்கிரஹம் செய்ய சந்தர்ப்பம் நேர்ந்தது.

என்னைச் சிறப்பிப்பதற்காக ஸ்ரீ ஜிஹாங்கீர் பெடிட் வீட்டில் நடந்த விருந்தின்போது நான் குஜராத்தியில் பேசத் துணியவில்லை. அரண்மனை போன்ற பெருமிதம் சூழ்ந்த அந்த மாளிகையில், ஒப்பந்தத் தொழிலாளிகளின் மத்தியில் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்ட நான், முழுப்பட்டிக் காட்டானாய்த் தோன்றினேன். அப்போது கத்தியவாரிகளைப் போல் சட்டையும், தலைப்பாகையும், வேஷ்டியும் அணிந்து, இப்போதுள்ளதைவிட அதிக நாகரிக மனிதனாய்க் காணப்பட்ட போதிலும், பெடிட் மாளிகையின் பெருமிதமும், பிரகாசமும் என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டன. எனினும், ஸர் பிரோஸிஷாவினிடம் அடைக்கலம் புகுந்து அவருடைய பாதுகாப்பின் கீழ் தைரியமடைந்து ஒரு மாதிரியாக சமாளித்துக் கொண்டேன்.

அப்புறம், குஜராத்தியரின் வரவேற்பு நடந்தது. குஜராத்திகள் எனக்கு வரவேற்பளித்தே யாகவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தார்கள். இதற்கு ஏற்பாடு செய்தவர் காலஞ்சென்ற உத்தமலால் திரிவேதி. அக்கூட்டத்தின் நடைமுறை இன்னதென்று முன்னடியே தெரிந்துகொண்டேன். ஜனப் ஜின்னு ஒரு குஜராத்தி யாதலால் அவர் இக்கூட்டத்திற்கு வந்திருந்தார். அவர் அக்கிராசனம் வகித்தாரா, முக்கிய உபந்யாசகரா என்பது ஞாபகம் இல்லை. அவர் ஆங்கிலத்தில் இனிய சிறு சொற்பொழிவு ஒன்று

நிகழ்த்தினர். மற்றப் பேச்சுகளில் பெரும்பான்மை ஆங்கிலத்திலேயே நிகழ்ந்தன என்று ஞாபகம். கடைசியாக நான் வந்தனம் செலுத்த வேண்டிய முறை வந்தபோது குஜராத்தியில் பேசினேன். ஹிந்துஸ்தானி, குஜ்ராத்தி மொழிகளிடத்தில் நான் அதிகப் பற்றுக் கொண்டிருப்பதன் காரணத்தை விளக்கிவிட்டு, குஜாரத்தியர் அடங்கிய கூட்டத்தில் ஆங்கில மொழியில் பேசுவதைத் தாழ்மையுடன் கண்டித்தேன். ஆனால் தயக்கத்துடனேதான் இவ்வாறு பேசினேன். நீண்ட காலம் வெளி நாட்டிலிருந்து விட்டுத் திரும்பிய அநுபவமில்லாத மனிதன் ஒருவன் நீண்ட நாளாய் நிலைத்துப்போன வழக்கங்களைக் கண்டித்தல் மரியாதைக் குறைவாகக் கருதப்படுமோ என்று பயந்தேன். ஆனால் குஜராத்தியிலேயே பதிலளிப்பே னென்று நான் வற்புறுத்தியதை யாரும் தவருகக் கொண்டதாகத் தெரியவில்லை. உண்மையில், ஒவ்வொருவரும் என் கண்டனத்தை ஏற்றுக் கொண்டார்க ளென்பதைக் கவனித்துப் பெரு மகிழ்ச்சியடைந்தேன்.

இந்தக் கூட்டத்திலிருந்து, என்னுடைய புது மாதிரியான கொள்கைகளை என் தேசத்தார் முன் கிளத்துதல் அதிக கஷ்டமா யிராதென்று தைரியம் கொண்டேன்.

பம்பாயில் சில காலம் தங்கி இத்தகைய பூர்வாங்க அநுபவங்கள் நிரம்பப் பெற்ற பின்னர், கோகலே என்னைப் பூனுவுக்கு அழைத்திருந்த படியால் அவ்விடத்துக்குப் புறப்பட்டேன்.

இரண்டாம் அத்தியாயம்

பூனாவில் கோகலேயுடன்

நான் பம்பாய் சேர்ந்த உடனேயே, கவர்னர் என்னைப் பார்க்க விரும்புகிறாரென்றும், பூனாவுக்குப் புறப் படுவதற்கு முன்னால் அவரைப் போய்ப் பார்ப்பது உசித மென்றும் கோகலே எனக்குச் செய்தியனுப்பி யிருந்தார். அவ்வாறே கவர்னரைக் காணச் சென்றேன். வழக்கமான விசாரணைகளுக்குப் பிறகு அவர் "உங்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் சம்பந்தப்பட்ட நடவடிக்கை எதுவும் தாங்கள் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கும்போது என்னை வந்து முதலில் பார்க்க வேண்டும்" என்றார்.

அதற்கு நான் பின்வருமாறு பதிலளித்தேன் :—" அத் தகைய வாக்குறுதி தங்களுக்கு நான் எளிதில் அளிக்க முடி யும். எதிரியின் மனோபாவத்தை அறிந்து கூடுமான வரையில் அவருடன் ஒத்துப்போக முயல்வதே சத்தியாக்கிரஹ விதி யாகும். தென்னாப்பிரிக்காவில் நான் இவ்விதியைக் கண்டிப் பாய் அனுசரித்தேன். இங்கும் அதை அனுசரிப்பதாகவே உத்தேசித்துள்ளேன்."

லார்ட் வில்லிங்டன் எனக்கு வந்தன மளித்து விட்டு "உங்களுக்கு விருப்பமான போதெல்லாம் என்னை வந்து பார்க்கலாம். என்னுடைய அரசாங்கம் வேண்டுமென்று அநீதி எதுவும் செய்யாதென்பதை நீங்கள் காண்பீர்கள்" என்றார்.

"அந்த நம்பிக்கை தான் என்னுடைய தைரியம்" என்று பதிலளித்தேன்.

அதன் பிறகு பூனாவுக்குச் சென்றேன். அந்த அருமையான நாட்களின் ஞாபகங்கள் எல்லாவற்றையும்

இங்கு நான் விவரித்தல் இயலாத காரியம். கோகலேயும், இந்திய ஊழியச் சங்கத்தின் மற்ற அங்கத்தினர்களும் என்னை அன்பு வெள்ளத்தில் முழுக் காட்டினார்கள். என்னைச் சந்திப்பதற் கென்று அச்சங்கத்தின் அங்கத்தினர் எல்லாரையும் கோகலே வரவழைத்திருந்தார் என்று ஞாபகம். அவர்களுடன் எல்லா விஷயங்களைப் பற்றியும் தாராளமாகச் சம்பாஷித்தேன்.

இந்திய ஊழியச் சங்கத்தில் நான் சேர்ந்துவிடவேண்டுமென்று கோகலே பெரிதும் விரும்பினார். எனக்கும் அத்தகைய விருப்பமிருந்தது. ஆனால் இலட்சியங்களிலும் வேலை முறைகளிலும் எனக்கும் அவர்களுக்கும் நிரம்ப வேற்றுமை யிருந்தபடியால் நான் சங்கத்தில் சேருதல் முறையாகாது என்று மற்ற அங்கத்தினர்கள் கருதினார்கள். கோகலே அப்படி நினைக்கவில்லை. என்னுடைய சொந்தக் கொள்கைகளில் நான் உறுதியுடையேனாயினும், பிறருடைய கொள்கைகள் விஷயத்தில் சகிப்புத் தன்மை காட்டும் ஆற்றலும் விருப்பமும் எனக்கு உண்டென்று அவர் நம்பினார்.

அவர் கூறியதாவது :—“உங்களுடைய ராஜிசெய்து கொள்ளும் குணத்தை இச் சங்க அங்கத்தினர் இன்னும் நன்றாய் அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் கொள்கைகளில் பிடிவாதமும், சுதந்திர புத்தியும் உள்ளவர்கள். உங்களை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களென்று நம்புகிறேன். அப்படி அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிடினும் உங்களிடம் மரியாதையாவது அன்பாவது அவர்களுக்கில்லை யென்று நீங்கள் ஒரு கணமும் எண்ண வேண்டாம். உங்களிடம் அவர்களுக்குள்ள பெரு மதிப்புக்குப் பங்கம் நேரிடப் போகிறதே என்ற அச்சத்தி

னல்தான் அவர்கள் தயங்குகிருர்கள். ஆனல் நீங்கள் சம்பிரதாயமாக அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டாலும், படாவிடினும் நான் உங்களை ஓர் அங்கத்தினராகவே பாவிக்கப் போகிறேன்."

பின்னர் என் உத்தேசத்தை கோகலேயிடம் தெரிவித்தேன். இந்திய ஊழியச் சங்கத்தில் என்னைச் சேர்த்துக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும், தனியாக ஓர் ஆசிரமம் ஏற்படுத்தி அதில் போனிக்ஸ் குடும்பத்தாரோடு நிலையாக வசிக்க விரும்புகிறேனென்றும், அந்த ஆசிரமம் குஜராத்தில் இருந்தால் விசேஷமென்று கருதுவதாகவும், ஏனெனில் குஜராத்தியாகிய நான் குஜராத்திக்குத் தொண்டு செய்வதின் மூலமாகவே தேசத் தொண்டு செய்தல் தகுதியாகு மென்றும் கூறினேன். கோகலேக்கு இந்த யோசனை பிடித்திருந்தது. "கட்டாயம் நீங்கள் அப்படியே செய்யலாம். சங்க அங்கத்தினர்களுடன் உங்களுடைய சம்பாஷணை முடிவு என்னவாயினும், ஆசிரமத்தின் செலவுகளுக்கு நீங்கள் வேறு யாரையும் எதிர்பார்க்கக்கூடாது. அவற்றை என் சொந்தச் செலவாகவே கருதுவேன்" என்ருர்.

என் இதயத்தில் ஆனந்த வெள்ளம் பொங்கித் ததும்பிற்று. நிதி சேர்க்கும் பொறுப்பிலிருந்து விடுதலை பெறுதலே பெரிதும் மகிழ்ச்சிக் குரியதாகும். அத்துடன் நான் தன்னந் தனியனய் வேலை தொடங்க வேண்டிய தில்லையென்றும், கஷ்டம். நேர்ந்த போதெல்லாம் வழிகாட்ட ஒரு துணைவர் இருக்கிருர் என்றும் நிச்சய மேற்பட்டபடியால் என் மனதிலிருந்து ஒரு சுமை நீங்கியது போலிருந்தது.

கோகலே காலஞ் சென்ற டாக்டர் தேவ் அவர்களை அழைத்து, சங்கக் கணக்குப் புத்தகத்தில் எனக்கு ஓர் பெயரேடு விடும்படியும், ஆசிரமத்துக்காகவும், மற்றும் பொதுச் செலவுகளுக்காகவும் நான் எவ்வளவு தொகை கேட்டாலும் கொடுக்கும்படியும் கூறினர்.

பின்னர், சாந்திநிகேதனத்துக்குப் புறப்பட ஆயத்த மானேன். நான் புறப்படுவதற்கு முன்தினம் கோகலே ஒரு விருந்து நடத்த ஏற்பாடு செய்தார். அதற்கு முக்கிய மான நண்பர்களை மட்டும் அழைத்திருந்ததுடன் எனக்குப் பிடித்த உணவுகளான பழங்கள், விதைகள் இவைகள் தரு விக்கவும் ஏற்பாடு செய்திருந்தார். அவர் இருந்த அறையி லிருந்து சில அடி தூரத்திலேயே விருந்து நடைபெற்றது. அந்த சில அடி தூரம் நடந்து வரவும் அவர் இயலாதவரா யிருந்தார். ஆயினும் என்னிடம் அவருக்கிருந்த அன்பினல் தூண்டப்பட்டுப் பிடிவாதமாக வருவேனென்றூர். அவ் வாறே வந்தாராயினும் உடனே மூர்ச்சை யடைந்தார். அவரை அங்கிருந்து தூக்கிச்செல்ல வேண்டியதாயிற்று. ஆனல் அவர் மூர்ச்சையடைந்தது இது முதல் தடவையன் றூதலால், திரும்ப உணர்வு வந்ததும் விருந்தை நடத்தும்படி சொல்லி யனுப்பினர்.

விருந்து என்றூல் பிரமாதமாக எண்ணிக் கொள்ள வேண்டாம். நண்பர்கள் கூடிப் பேசுவதற்கு அது ஒரு சந்தர்ப்பமே யல்லாது வேறில்லை. சங்கக் கட்டிடத்தில் விருந்தினர் தங்கும் வீட்டுக்கெதிரில் திறந்த வெளியில் விருந்து நடைபெற்றது. கடலைக் கொட்டையும், பேரீச்சை முதலிய பழங்களும் தின்றுகொண்டு நண்பர்களுடன் அளவளாவிப் பேசிப் பொழுது போக்கினேம்.

ஆனால் மேற்சொன்னவாறு கோகலே மூர்ச்சை யடைந்தது சாதாரண விஷயமாகப் போய்விடவில்லை. அது என் வாழ்க்கையில் முக்கியமானதோர் சம்பவமாயிற்று.

மூன்றும் அத்தியாயம்

பயமுறுத்தலா?

காலஞ்சென்ற என் தமையனாரின் மனைவியையும், மற்ற உறவினரையும் பார்க்கும் பொருட்டு பம்பாயி லிருந்து இராஜகோட்டைக்கும் போர் பந்தருக்கும் சென்றேன்.

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹத்தின் போது என்னுடைய உடையை ஒப்பந்தத் தொழிலாளரின் உடையுடன் பொருந்துமாறு மாற்றிக் கொண்டிருந்தேன். இங்கிலாந்திலும் வீட்டிலுள்ள காலங்களில் அதே உடை அணிந்து வந்தேன். பம்பாயி லிறங்கிய போது உட் சட்டை, மேலங்கி, வேஷ்டி, அங்கவஸ்திரம் இவை யடங்கிய கத்தியவார் உடை தரித்துக்கொண்டிருந்தேன். இவை எல்லாம் இந்திய ஆலைத் துணியாலானவை. ஆனால் பம்பாயிலிருந்து மூன்றும் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்யத் தீர்மானித் திருந்தபடியால், மேலங்கியும் உத்தரீயமும் அதிக சுமை யென்று கருதி அவற்றைப் போட்டு விட்டு எழெட்டு அணு விலையுள்ள காஷ்மீர் குல்லா ஒன்று வாங்கிக் கொண்டேன். இத்தகைய உடை தரித்தவர் ஏழையென்று கருதப்படுவது நிச்சயமன்றோ?

அக்காலத்தில் பிளேக் பாவி யிருந்தபடியால், வீரம்காமிலோ, வாத்வானிலோ—நன்கு ஞாபகமில்லை—மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் வைத்திய பரிசோதனை செய்யப்

பட்டார்கள். எனக்குக் கொஞ்சம் சுரம் இருந்தது. இதை யறிந்த வைத்திய பரிசோதகர் என்னுடைய பெயரைக் குறித்துக்கொண்டு, இராஜகோட்டையில் பெரிய வைத்திய அதிகாரியிடம் சென்று அறிக்கை செய்துகொள்ள வேண்டுமென்று கூறினர்.

வாத்வான் வழியாக நான் போகிறேன் என்னும் செய்தியை முன்னதாகவே யாரோ அனுப்பியிருக்க வேண்டும். ஏனெனில், அவ்விடத்துப் பிரபல பொது ஜன ஊழியரான மோதிலால் என்னும் தையற்காரர் ஸ்டேஷனில் என்னைச் சந்தித்தார். வீரம்காம் சுங்க வரியைப் பற்றியும், அது காரணமாக ரயில்வே பிரயாணிகள் உள்ளாக வேண்டியிருக்கும் கஷ்டங்களைப் பற்றியும் அவர் எனக்கு கூறினர். அப்போது சிறிது சுரம் இருந்தபடியால் அதிகம் பேசுவதற்கு எனக்குப் பிரிய மில்லாம லிருந்தது. எனவே ஒரே ஒரு கேள்வியின் மூலம் அவருக்குச் சுருக்கமாக விடை யளித்துவிட எண்ணினேன்.

"நீங்கள் சிறை செல்லச் சித்தமா யிருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

சிந்தனை செய்யாமல் பேசும் ஆவேசமுள்ள இளைஞர்களில் ஒருவர் என்று மோதிலாலை நான் எண்ணியிருந்தேன். ஆனல் உண்மையில் அவர் அத்தகையவரல்லவென்று தெரிய வந்தது. அவர் உறுதியுடனும் தீர்மானமாகவும் பதிலளித்ததாவது :—நீங்கள் தலைமை வகித்து நடத்தினல் நிச்சயமாகச் சிறை புகுவோம். கத்தியவாரைச் சேர்ந்த எங்களுக்குத் தங்கள்மீது முதன்மையான உரிமை யுண்டு. இப்போது தங்களை நிறுத்த நாங்கள் உத்தேசிக்க வில்லை. ஆனல் திரும்பும் காலையில் தாங்கள்

இங்கே தங்கிச் செல்வதாக உறுதி மொழி யளிக்க வேண்டும். எங்கள் இளைஞர்களின் ஊக்கத்தையும் உழைப்பையும் கண்டு நீங்கள் மகிழ்ச்சி யடைவீர்கள். நீங்கள் எப்போது கட்டளை யிட்டாலும் உடனே நாங்கள் முன் வருவோம். இதை நிச்சயமாய் நம்புங்கள்."

இம்மொழிகளால் மோதிலால் என்னைக் கவர்ந்து விட்டார். அவருடைய தோழர் கூறியதாவது:—"இந் நண்பர் தையற்காரர்தான். ஆனால் அவர் அத்தொழிலில் மிகவும் தேர்ச்சி பெற்றவராதலால் தினம் ஒரு மணிநேரம் மட்டும் வேலை செய்து மாதம் 15 ரூபாய் சம்பாதித்து விடுகிறார். அவருக்கு வேண்டிய தொகை அவ்வளவு தான். பாக்கிக் காலம் முழுவதையும் பொது ஊழியத்துக்கே தருகிறார். எங்களுக்கெல்லாம் தலைவர் அவர்தான். படித்தவர்களாகிய நாங்கள் அவரைக் கண்டு வெட்க மடைய வேண்டி யிருக்கிறது."

பிற்காலத்தில் நான் மோதிலாலுடன் நெருங்கிப் பழக நேர்ந்தது. அப்போது, மேற்கூறிய புகழுரை சிறிதும் மிகைப் படுத்தியதன்று எனக் கண்டேன். ஆசிரமம் ஆரம்பித்த புதிதில் அவர் ஒவ்வொரு மாதமும் சில தினங்கள் அங்கே வசித்து வந்தார். ஆசிரமத்துக்கு வேண்டிய தையல் வேலைகளைச் செய்து கொடுத்ததுடன், ஆசிரமத்து குழந்தைகளுக்கும் அவ்வேலை கற்றுக் கொடுத்தார். ஒவ்வொரு நாளும் அவர் வீரம்காமில் பிரயாணிகள் படும் கஷ்டங்களைப் பற்றிப் பேசுவார். அக் கஷ்டங்கள் அவரால் சற்றும் பொறுக்க முடியாமல் போயிருந்தன. திடீரென்று தோன்றிய நோயினால் நல்ல இளம்பிராயத்தில் அவர் மரணமுற்றார். அவருடைய பிரிவினால் வாத்வான் பொது வாழ்க்கை பெரும் நஷ்ட மடைந்தது.

இராஜகோட்டை போய்ச் சேர்ந்த மறுநாள் காலை பெரிய வைத்திய அதிகாரியையும் பார்க்கச் சென்றேன். அங்கு ஓரளவு என் பெயர் பிரபலமாகி யிருந்தது. ஆதலின் டாக்டர், நான் அவரிடம் வர நேர்ந்தது குறித்து வெட்கப் பட்டதுடன், மேற்படி வைத்திய பரிசோதகர்மீது கோபங் கொண்டார். இக்கோபம் அநாவசியமே யாகும். வைத்திய பரிசோதகர் தமது கடமையைச் செய்தாரேயன்றி வேறில்லை. அவர் என்னை அறியார். அறிந்திருந்தாலும் அவர் வேறு விதமாகச் செய்திருக்கக்கூடாது. இனிமேல் நான் அவரிடம் வரவேண்டியதில்லையென்றும், அதற்குப் பதிலாக ஓர் இன்ஸ்பெக்டரை நானிருக்குமிடத்துக்கு அனுப்புவதாக வும் டாக்டர் பிடிவாதமாகச் சொன்னார்.

சுகாதார காரணங்களுக்காக மூன்றும் வகுப்புப் பிரயாணிகளை பரிசோதிப்பது அத்தகைய சந்தர்ப்பங் களில் அத்தியாவசியமே யாகும். பெரிய மனிதர்கள் மூன்றும் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்யப் பிரியப் பட்டால் ஏழைகள் உள்ளாக வேண்டியிருக்கும் எல்லா விதிகளுக்கும் அவர்களும் உள்ளாதல் அவசியம். உத்தி யோகஸ்தர்கள் பாரபட்சமின்றி நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளைச் சகோதர மனிதர்களாகவே நினைப்பதில்லை யென்பதும், கேவலம் ஆடு மாடுகளாகப் பாவிக்கிறார்க ளென்பதும் என்னுடைய அநுபவம். அவர்களிடம் அலட்சியமாக, அவமதிப்புடன் பேசுகிறார்கள். பிரயாணிகள் பதில் சொன்னால், அல்லது வாதம் செய்தால் அவர்களால் பொறுக்க முடிவதில்லை. மூன்றும் வகுப்புப் பிரயாணி ரயில்வே உத்தியோகஸ்த ருடைய வேலைக்காரனைப் போல் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். உத்தியோகஸ்தர் பிரயாணியை அடிக்கலாம்;

பயமுறுத்திப் பணம் பிடுங்கலாம் ; இவற்றிற்குக் கேள்வி முறை கிடையாது. எவ்வளவு அசௌகரியங்களுக்கு ஆளாக்லாமோ அவ்வளவுக்கும் ஆளான பிறகே டிக்கட் கொடுக்கப்படுகிறது. டிக்கட் பெறுவதற்குள் வண்டி போய்விடுவதும் உண்டு. இவ்வளவும் நானே என் கண்ணால் பார்த்திருக்கிறேன். படித்த பணக்கார வகுப்பாரில் சிலர் தாங்களாகவே ஏழைகளின் அந்தஸ்தை ஏற்க முன்வந்தாலன்றி மேற்கூறிய நிலைமையில் சீர்திருத்தம் எதுவும் செய்ய முடியாது. அவர்கள் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்யவேண்டும். ஏழைகளுக்கு மறுக்கப்படும் எந்த வசதியையும் தாங்கள் அநுபவிக்கக்கூடாது. விலக்கக்கூடிய கஷ்டங்கள், அவமதிப்புகள், அநீதிகள் இவற்றிற்குத் தலை குனிந்து போகாமல் அவற்றைத் தொலைப்பதற்காகப் போராட வேண்டும்.

கத்தியவாரில் நான் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் வீரம்காம் சுங்கவரித் தொல்லையைப் பற்றிப் புகார்கள் கேள்விப்பட்டேன். எனவே லார்ட் வில்லிங்டனுடைய வாக்குறுதியை உடனே உபயோகப் படுத்திக்கொள்ளக் கருதினேன். அது சம்பந்தமாகக் கிடைக்கக்கூடிய பிரசுரங்கள் எல்லாவற்றையும் சேகரித்துப் பார்த்தேன். அப்புகார்கள் உண்மையானவையே என்று நான் உறுதியடைந்ததும், பம்பாய் அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரவு தொடங்கினேன். லார்ட் வில்லிங்டனுடைய அந்தரங்கக் காரிய தரிசியையும், பின்னர் லார்ட் வில்லிங்டனையும் கண்டு பேசினேன். கவர்னர் தனது அநுதாபத்தைத் தெரிவித்து விட்டு டில்லி அரசாங்கத்தின் மேல் பழியைச் சுமத்தினர். "எங்கள் கையில் இருந்திருந்தால் சுங்கத்தை முன்னமே

எடுத்திருப்போம். இந்திய அரசாங்கத்திற்கு நீங்கள் எழுதிக் கொள்ள வேண்டும்" என்றார். காரியதரிசி.

இந்திய அரசாங்கத்துக்கும் எழுதினேன். ஆனால் என்னுடைய கடிதம் வந்த விவரம் தெரிவித்ததற்கப்பால் அங்கிருந்து பதில் ஒன்றும் வரவில்லை. பின்னால் செம்ஸ்போர்டு பிரபுவைச் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்பட்டபோதுதான் பரிகாரம் கிடைத்தது. அவரிடம் விவரங்களை நான் எடுத்துக் கூறியபோது அவர் ஆச்சர்ய மடைந்தார். இதைப்பற்றி அவருக்கு எதுவுமே தெரியாமலிருந்தது நான் கூறியவைகளை அவர் பொறுமையுடன் கேட்டிருந்து, அந்த நிமிஷமே, வீரம்காம் சம்பந்தமான தஸ்தாவேஜிகளைக் கொண்டு வரும்படி டெலிபோன் மூலம் கட்டளையிட்டார். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த சமாதானம் எதுவும் சொல்லாவிடில் சுங்கத்தை நீக்கி விடுவதாக வாக்களித்தார். இது சேர்ந்த சில நாட்களுக்கெல்லாம், வீரம்காம் சுங்கம் நீக்கப்பட்டதாகப் பத்திரிகைகளில் படித்தேன்.

இச் சம்பவத்தை இந்தியாவில் சத்தியாக்கிரஹத்தின் ஆரம்பம் என்பதாக நான் கருதுகிறேன். பகஸ்ராவில் நான் செய்த ஒரு பிரசங்கத்தில் சத்தியாக்கிரஹத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இந்தப் பிரசங்கத்தின் விவரம் பம்பாய் அரசாங்கத்துக்குக் கிடைத்திருந்தது. பம்பாய் அரசாங்கத்தின் காரியதரிசியை நான் பார்த்துப் பேசியபோது அவர் நான் சத்தியாக்கிரஹத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்ததை ஆட்சேபித்தார்.

"இது பயமுறுத்தல் அல்லவா? வலிமை பொருந்திய ஓர் அரசாங்கம் பயமுறுத்தல்களுக்கு இணங்கி விடுமென்று நினைக்கிறீர்களா?" என்று அவர் கேட்டார்.

அதற்கு நான் பதிலளித்ததாவது:—"இது பய முறுத்த லன்று; ஜனங்களுக்குப் பயிற்சி யளிப்பதாகும். குறை நிவர்த்திக்கு நியாயமான உபாயங்களை யெல்லாம் ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவது என் கடமை. சுதந்திர மடைய விரும்பும் ஒரு தேசத்தார் அதற்குரிய எல்லா வழிகளையும் அறிந்திருத்தல் அவசியம். உலகில் சாதாரணமாய் இவ்வழிகளில் கடைசி வழி பலாத்காரமா யிருந்து வந்திருக்கிறது. ஆனால் சத்தியாக்கிரஹமோ பலாத்காரம் சிறிது மற்ற ஆயுதம். அதன் உபயோகத்தைப் பற்றியும், அதற்குரிய நிபந்தனைகளைப் பற்றியும் ஜனங்களுக்கு விளக்குதல் என் கடமை யென்று கருதுகிறேன். பிரிட்டிஷ் அரசாங்கம் வலிமை பொருந்திய அரசாங்கம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் சத்தியாக்கிரஹம் தோல்வி யறியாத ஆயுதம் என்றும் எனக்கு நிச்சயமுண்டு."

அந்த கெட்டிக்கார காரியதரிசி தலையை அசைத்துப் "பார்க்கலாம்" என்றார்.

நான்காம் அத்தியாயம்
சாந்தி நிகேதனம்

இராஜ கோட்டையிலிருந்து சாந்தி நிகேதனம் சென்றேன். அங்கு உபாத்தியாயர்களும், மாணாக்கர்களும் என்னை அன்புக் கடலில் முழுக்காட்டினார்கள். எளிமையுடனே அழகும், அன்பும் பொருத்தமாய்க் கலந்த வரவேற்பு அளித்தார்கள். "காகா சாகிப்" காலேல்கரை நான் முதன் முதலாக இங்கேதான் சந்தித்தேன்.

காலேல்கர் "காகா சாகிப்" என்றழைக்கப் பட்டதேன் என்பது அப்போது எனக்குத் தெரியாது. அவ் விவரம் பின்னால் அறிந்தேன். இங்கிலாந்தில் என்னுடன் வசித்த

வரும் எனது நெருங்கிய நண்பருமான ஸ்ரீ கேசவராவ் தேஷ்பாண்டே பரோடா சமஸ்தானத்தில் சில காலம் "கங்காநாத் வித்தியாலயம்' என்ற பெயருடன் ஒரு பள்ளிக்கூடம் நடத்தினர். வித்தியாலயம் ஒரு குடும்பம் போலவே நடைபெற வேண்டுமென்ற கருத்துடன் உபாத்தியாயர்களுக்கு அவர் குடும்பப் பெயர்கள் கொடுத்திருந்தார். அவ்வித்தியாலயத்தில் அப்போது உபாத்தியாயரா யிருந்த ஸ்ரீ காலேல்கர் "காகா" (சித்தப்பா) என்றழைக்கப்பட்டார். இவ்வாறே பாட்கே "மாமா" வென்றும், ஹரி ஹர சர்மா "அண்ணு" வென்றும், அழைக்கப்பட்டனர். மற்றவர்களுக்கும் இது போன்ற உறவு முறைப் பெயர்கள் அளிக்கப்பட்டன. காகாவின் நண்பரான சுவாமி ஆனந்தானந்தரும், மாமாவின் சிநேகிதரான பட்டவர்த்தனரும் பின்னல் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தார்கள். நாளடைவில் இவர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக என் சகாக்களாயினர். ஸ்ரீ தேஷ் பாண்டே "சாகிப்" என்றழைக்கப்பட்டார். வித்தியாலயத்தைக் கலைக்க வேண்டி நேர்ந்தபோது குடும்பமும் கலைந்து போயிற்று. ஆனல் அவர்கள் தங்கள் ஆன்மார்த்த உறவையோ, உறவு முறைப் பெயர்களையோ எப்போதும் விட்டுவிடவில்லை.

காகா சாகிப் அப்போது பற்பல ஸ்தாபனங்களையும் பார்த்து அநுபவம் பெறும்பொருட்டுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். நான் சாந்தி நிகேதனத்துக்குச் சென்ற போது அவர் அங்கிருக்க நேர்ந்தது. அதே கூட்டத்தைச் சேர்ந்த சிந்தாமணி சாஸ்திரியும் அப்போது அங்கிருந்தார். அவர்களிருவரும் ஸமஸ்கிருதம் கற்பிப்பதில் அங்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள்.

சாந்திநிகேதனத்தில் போனிக்ஸ் குடும்பத்திற்கென்று தனி இடம் கொடுக்கப்பட்டிருந்தது. குடும்பத்தின் தலைவர் மகன்லால் காந்தி. போனிக்ஸ் ஆசிரமத்தின் விதிகள் எல்லாம் இங்கும் கண்டிப்பாய் அனுஷ்டிக்கப்படும் வண்ணம் அவர் கவனித்து வந்தார். அவர் தமது அன்பி ஞலும், அறிவினுலும், விடாமுயற்சியினுலும் சாந்தி நிகேதனம் முழுவதிலும் தமது புகழ் விளங்கும்படி செய்திருப்பதைக் கண்டேன்.

ஆண்ட்ரூஸும், பியர்சனும் கூட அங்கிருந்தார்கள். ஜகதானந்த பாபு, நேபாள் பாபு, சந்தோஷ் பாபு, க்ஷிதி மோஹன் பாபு, நாகென் பாபு, சராத் பாபு, காளி பாபு முதலிய வங்காளி உபாத்தியாயர்களும் இருந்தனர்.

என்னுடைய வழக்கத்தை யனுசரித்து விரைவில் உபாத்தியாயர்களுடனும், மாணுக்கர்களுடனும் கலந்து பழகினேன். தத்தம் காரியங்களைத் தாமே செய்து கொள்ளும் தத்துவத்தைப் பற்றி அவர்களுடன் விவாதம் செய்தேன். உபாத்தியாயர்களும், பையன்களும் சம்பளம் பெறும் சமையற்காரர்களை நீக்கிவிட்டுத் தங்களுக்குத் தாங்களே சமையல் செய்துகொண்டால் நலமென்று யோசனை சொன்னேன். அதனுல் உபாத்தியாயர்கள் சமையலறையை மேற் பார்வை செய்து பிள்ளைகளின் தேக பலத்தையும், மனோ நலத்தையும் வளர்க்க இயலுமென்றும், பிள்ளைகளுக்குத் தம் காரியத்தைத் தாமே செய்துகொள்ளும் பயிற்சியில் அது ஓர் உதாரண பாடமாயிருக்கு மென்றும் எடுத்துக் காட்டினேன். உபாத்தியாயர்களில் இரண் டொருவர் அது முடியாத காரியமென்பதாகத் தலையை அசைத்தார்கள்; வேறு சிலர் அந்த யோசனையைப் பலமாக ஆதரித்தார்கள். பிள்ளைகள் எல்லாருக்கும் அது பிடித்

இருந்தது. வேறு காரணம் எப்படியிருந்தாலும், புதுமை யான காரியம் என்றால் பிள்ளைகளுக்குப் பிடித்தல் இயல் பன்றோ? எனவே அச்சோதனையைத் தொடங்கினோம். கவிநாதரை, தமது அபிப்பிராயந் தெரிவிக்கும்படி கேட்ட போது, அவர், உபாத்தியாயர்களுக்கு விருப்பமாயிருந்தால் தமக்கு ஆட்சேபமில்லை யென்று கூறினார். "சுயராஜ்யத் தின் திறவுகோல் இந்தச் சோதனையில் அடங்கியிருக்கிறது" என்று அவர் பிள்ளைகளைப் பார்த்துச் சொன்னார்.

இந்தச் சோதனையை வெற்றி பெறச் செய்யும் பொருட்டுப் பியர்ஸன் தம் உடல் நலத்தையும் பொருட் படுத்தாமல் உழைக்கலானார். அவர் மிக்க உற்சாகத்துடன் அவ்வேலையில் ஈடுபட்டார். கறி நறுக்குவதற்கு ஒரு கூட்டமும், தானியம் சுத்தம் செய்வதற்கு மற்றொரு கூட்டமும், இவ்வாறு ஒவ்வொரு வேலைக்கு ஒவ்வொரு கூட்டமாகப் பிள்ளைகள் பிரிக்கப்பட்டனர். சமையலறை யையும், சுற்றுப்புறங்களையும் சுகாதார முறைப்படி சுத்தம் செய்யும் வேலையை, நாதென் பாபுவும் மற்றும் சிலரும் ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் கையில் மண்வெட்டி யுடன் வேலை செய்வதைப் பார்க்க எனக்கு ஆனந்தமா யிருந்தது.

ஆனால் நூற்றிருபத்தைந்து பையன்களும், அவர்க ளுடைய ஆசிரியன்மார்களும், இவ்வுடல் உழைப்பு வேலையை முழு விருப்பத்துடன் ஏற்பர் என்று எதிர் பார்த்தல் அதிகமன்றோ? தினந்தோறும் விவாதங்கள் நடந்தன. சிலர் விரைவிலேயே களைப்படைந்து விட்டதாகத் தெரிந்தது. ஆனால் பியர்ஸன் அவ்வாறு களைப்படையும் மனிதரல்லர். எப்பொழுதும் புன்னகை தவழ்ந்த முகத் துடன் அவர் சமையலறையில் ஏதேனும் வேலை செய்து

கொண்டிருப்பார். பெரிய ஊ பாத்திரங்களைத் துலக்கும் வேலையை அவர் மேற்கொண்டிருந்தார். பாத்திரம் துலக்கு பவர்களுக்கு அந்த வேலையின் சலிப்புத் தோன்றாமலிருக் கும் பொருட்டு அவர்கள் முன்னால் சில மாணக்கர் ஸிதார் வாத்தியம் வாசிப்பது வழக்கம். எல்லாரும் ஊக்கத்துடன் இச் சோதனையில் ஈடுபடவே சாந்தி நிகேதனம் தேன் கூட்டை யொத்து சுறுசுறுப்பான உழைப்பாளிகள் அடங்கிய இடமாயிற்று.

இத்தகைய மாறுதல்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டால் பின்னர் வளர்ச்சியுறாமல் நிற்பதில்லை. போனிக்ஸ் குடும்பத் தின் சமையலறை குடும்பத்தாராலேயே நடத்தப்பட்டது மல்லாமல், அதில் சமைக்கப்பட்ட உணவு மிக எளியதா யிருந்தது. மசாலைப் பொருள்கள் விலக்கப்பட்டன. அரிசி, பருப்பு, கறிகாய், கோதுமை மாவு எல்லாம் ஒரே சமயத்தில் ஒரே பாத்திரத்தில் நீராவியினால் பாகம் செய்யப் பட்டன. வங்காளிச் சிறுவர்கள் சிலர், பொதுச் சமையலி லிருந்து பிரிந்து, தனியாக இத்தகைய சமையலறை ஒன்றைத் தொடங்கினார்கள். இரண்டொரு உபாத்தி யாயர்களும், சில மாணக்கர்களுமே அதை நடத்தினார்கள்.

சில காலத்திற்குப் பின் இச்சோதனை நிறுத்தப்பட்டது. பிரசித்தி பெற்ற அந்த ஸ்தாபனம் சில நாளைக்கேனும் இச் சோதனையை நடத்தியதால் நஷ்டம் யாதும் எய்தவில்லை யென்பது என் அபிப்பிராயம். அப்போது அடைந்த அநு பவங்கள் ஆசிரியர்களுக்கு உபயோகப்படாமற் போகா.

சாந்தி நிகேதனத்தில் சில காலம் வசிக்கவேண்டு மென்று எண்ணியிருந்தேன். ஆனால் ஈசன் விருப்பம் வேறு விதமா யிருந்தது. அங்கு நான் வாசம் செய்யத் தொடங்கி ஒரு வார காலம் ஆவதற்குள் கோகலே மரண மடைந்தார்

என்று பூனாவிலிருந்து தந்தி வந்தது. சாந்தி நிகேதனம் முழுவதும் துக்கக் கடலில் மூழ்கிற்று. அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் துக்கம் விசாரிக்கும் பொருட்டு என்னிடம் வந்தார்கள். இந்தத் தேசிய நஷ்டத்தைப்பற்றித் துக்கம் தெரிவிப்பதற்காக ஆசிரமத்துக் கோயிலில் ஒரு விசேஷக் கூட்டம் நடந்தது. அன்றைய தினமே என் மனைவியுடனும் மகன்லால் காந்தியுடனும் நான் பூனாவுக்குப் புறப்பட்டேன். மற்றவர்கள் அனைவரும் சாந்தி நிகேதனத்திலேயே தங்கி யிருந்தனர்.

ஆண்ட்ரூஸ், பர்ட்வான் வரைக்கும் என்னுடன் வந்தார். "இந்தியாவில் சத்தியாக்கிரஹம் செய்வதற்குரிய காலம் வருமென்று நினைக்கிறீர்களா? அப்படியானால் அக் காலம் எப்போது வருமென்று தங்களுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா?" என்று அவர் கேட்டார்.

"இதற்கு பதில் சொல்வது கஷ்டம். ஒரு வருஷத்திற்கு நான் எதுவும் செய்யப் போவதில்லை. அநுபவம் பெறும் பொருட்டு இந்தியாவில் நான் பிரயாணம் செய்யவேண்டுமென்றும், அப்பிரயாணம் முடியும் வரை பொது விஷயங்களைப்பற்றி அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்கக் கூடாதென்றும் கோகலே என்னிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டார். அந்த ஓராண்டு ஆன பின்னரும் கூட பேசுவதற்கோ, அபிப்பிராயம் கூறுவதற்கோ, நான் அவசரப் படப் போவதில்லை. எனவே, அடுத்த ஐந்தாறு வருஷங்களில் சத்தியாக்கிரஹத்துக்குரிய சந்தர்ப்பம் எதுவும் ஏற்படுமென்று நான் நினைக்க வில்லை" என்று கூறினேன்.

இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிடுதல் பொருந்தும். "இந்திய சுயராஜ்யம்" என்னும் நூலில் நான் வெளியிட்டிருக்கும் சில கருத்துக்களைப் பற்றிக் கோகலே நகைப்பது

வழக்கம். "இந்தியாவில் ஒரு வருஷம் இருந்தீர்களானால் உங்கள் அபிப்பிராயங்கள் தாமே சீராகிவிடும்" என்று அவர் கூறுவார்.

ஐந்தாம் அத்தியாயம்

மூன்றும் வகுப்புப் பிரயாணம்

மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் டிக்கட்டு வாங்குவதில் கூட எவ்வளவு கஷ்டங்களுக்குள்ளாக வேண்டியிருக்கிறதென்பதை பார்ட்வானில் அநுபவித்து அறிந்தோம். "மூன்றும் வகுப்பு டிக்கட்டுகள் இதற்குள் தர முடியாது" என்று முதலில் சொன்னார்கள். அதன்மீது நான் ஸ்டேஷன் மாஸ்டரைக் காணச் சென்றேன். அவரைக் கண்டு பிடிப்பதே கஷ்டமா யிருந்தது. யாரோ ஒருவர் தயவுவைத்து அவரிருக்குமிடந் தெரிவித்தார். அவரிடம் சென்று எங்களுடைய கஷ்டத்தை எடுத்துக் கூறினேம். அவரும் அதே பதிலையே தெரிவித்தார். ஆகவே காத்திருந்து டிக்கட் ஜன்னல் திறந்ததும் சென்றேன். ஆனல் டிக்கட்டு வாங்குதல் எளிய காரியமா யில்லை. அங்கு வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும் சட்டம் அமுலி லிருந்தது. மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் கெடட்டும் என்று எண்ணிய பலசாலிகளான பிரயாணிகள் ஒருவர்பின் ஒருவராய் வந்து என்னை இடித்துத் தள்ளிக்கொண்டே யிருந்தார்கள். ஆகவே முதலில் டிக்கட் வாங்குவதற்காகப் போன கூட்டத்தில் ஏறக்குறையக் கடைசியாக டிக்கட்டு பெற்றவன் நானே யானேன்.

வண்டி வந்து சேர்ந்தது. அதில் ஏறுதல் மற்றொரு பிரம்மப் பிரயத்தனமாயிற்று. வண்டியில் ஏற்கனவே

இருந்த பிரயாணிகளுக்கும், ஏற முயற்சித்த பிரயாணிகளுக்கும் இடையே வசைமொழிகள் பரிமாறிக் கொள்ளப் பட்டன. ஒருவரை யொருவர் பிடித்துத் தள்ளளும் நிகழ்ந்தது. பிளாட் பாரத்தில் மேலும் கீழும் ஓடி அலைந்தோம். "இங்கு இடமில்லை" என்னும் ஒரு பதிலே எங்கும் கிடைத்தது. கார்டினிடம் சென்று சொன்னேன். அவர் "அகப்பட்ட இடத்தில் உள்ளே ஏற முயற்சி செய்யும்; இல்லாவிடில் அடுத்த வண்டியில் வாரும்" என்றார்.

"எனக்கு அவசரமான வேலை இருக்கிறதே!" என்று மரியாதையாகச் சொன்னேன். ஆனால் என் பேச்சுக்குச் செவி கொடுப்பதற்கே அவருக்கு நேரமில்லை. என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தேன். பின்னர், மகனை லாலை எங்கேயாவது ஏறிக்கொள்ளச் சொல்லிவிட்டு நான் என் மனைவியுடன் மத்திய வகுப்பு (இண்டர் - கிளாஸ்) வண்டி யொன்றில் ஏறினேன். கார்டு நாங்கள் ஏறுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அஸன்ஸோல் ஸ்டேஷனில் அதிக கட்டணம் வாங்க அவர் வந்து சேர்ந்தார்.

"எங்களுக்கு இடந்தேடிக் கொடுத்திருக்க வேண்டியது உங்கள் கடமை. வேறிடங் கிடைக்காத படியால் இங்கு உட்கார்ந்திருக்கிறோம். மூன்றாம் வகுப்பு வண்டியில் இடம் கொடுத்தால் அங்கு வரச் சித்தமா யிருக்கிறோம்" என்று சொன்னேன்.

"உம்முடன் விவாதம் செய்ய நான் சித்தமாயில்லை. உமக்கிடந் தேடிக் கொடுக்கவும் என்னால் ஆகாது. அதிக கட்டணம் தருகிறீரா? வண்டியை விட்டு இறங்குகிறீரா?" என்றார் கார்டு,

பூனாவுக்கு எப்படியேனும் போய்ச் சேரவேண்டுமென நான் விரும்பினேன். ஆதலின் அவ்விடத்தில் கார்டுடன் சண்டை போட நான் ஆயத்தமாயில்லை. அவர் கேட்டபடி பூனா வரைக்கும் அதிக கட்டணம் கொடுத்துவிட்டேன். எனினும் அந்த அநீதியைக் குறித்துப் பெரிதும் கோதிப் படைந்தேன்.

காலையில் மொகல்ஸராய் ஸ்டேஷனை அடைந்தோம். மகன்லால் எப்படியோ கஷ்டப்பட்டு மூன்றும் வகுப்பில் இடம் பிடித்தார். நானும் அங்கே போய்ச் சேர்ந்தேன். டிக்கட்டு பரிசோதகரிடம் எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லி, மொகல்ஸராயில் மூன்றும் வகுப்புக்கு மாறியதாக ஓர் அத்தாட்சிப் பத்திரம் கேட்டேன். அவர் அது தர மறுத்து விட்டார். பின்னர் இது விஷயமாக ரயில்வே அதிகாரிகளுக்கு எழுதிப் பரிகாரம் கோரியபோது பின்வரும் கருத்துள்ள பதில் கிடைத்தது:—"கார்டின் அத்தாட்சிப்பத்திரம் இல்லாவிடில் அதிக கட்டணத்தைத் திருப்பிக் கொடுப்பது எங்கள் வழக்கமன்று. ஆயினும் உங்கள் விஷயத்தில் விதிவிலக்குச் செய்திருக்கிறோம். ஆனால் பர்ட்வானிலிருந்து மொகல்ஸராய் வரையில் அதிக கட்டணத்தை வாபீஸ் செய்தல் இயலாத காரியம்."

இது முதற்கொண்டு மூன்றும் வகுப்புப் பிரயாணத்தில் எனக்கேற்பட்ட அனுபவங்களையெல்லாம் எழுதத் தொடங்கினேனுயின் அவை மட்டும் ஒரு பெரிய புத்தகம் ஆகிவிடும். ஆதலின் அவைகளைப்பற்றி ஆங்காங்குக் குறித்துச் சொல்லுதலே சாத்தியம். தேக அசக்தி காரணமாய் மூன்றும் வகுப்புப் பிரயாணத்தை நான் கைவிட வேண்டி வந்ததானது எனக்குப் பெரிதும்

துயரமளித்தது. அது இனியும் எப்போதும் எனக்குத் துயரமளித்தே வரும்.

மூன்ரும் வகுப்பு ரயில்வே பிரயாணிகளின் துயரங்களுக்கு ரயில்வே அதிகாரிகளின் யதேச்சாதிகாரமே காரணம் என்பதில் ஐயமில்லை. ஆனல் பிரயாணிகளின் முரட்டு சுபாவம், ஆபாசவழக்கங்கள், சுயநலம், அறியாமை முதலியவைகள் அத்துயரங்களை அதிகப் படுத்துகின்றன. இதில் பரிதாபமான விஷயம் யாதெனில், தாங்கள் தவறுதலாகவும், ஆபாசமாகவும், சுயநலத்துடனும் நடந்துகொள்கிருேமென்பதே அவர்களுக்குத் தெரிவதில்லை. தாங்கள் செய்வதெல்லாம் இயற்கையே என்று அவர்கள் கருதுகிருர்கள். இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் அவர்கள் விஷயத்தில் படித்தவர்களாகிய நாம் காட்டும் அலட்சியமே என்று கூறலாம்.

கல்யாண் ஸ்டேஷனை அடைந்தபோது பெரிதும் களைப்புற்றிருந்தோம். நானும் மகன்லாலும் ஸ்டேஷன் தண்ணீர்க் குழாயில் நீர் எடுத்து ஸ்நானம் செய்தோம். என் மனைவி ஸ்நானம் செய்வதற்கு நான் ஏற்பாடு செய்யப் போகையில் இந்திய ஊழியச் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ கால் எங்களைப் பார்த்துத் தெரிந்துகொண்டு அருகே வந்தார். அவரும் பூனுவுக்கே செல்கிருரென அறிந்தோம். என் மனைவியை இரண்டாம் வகுப்பு ஸ்நான அறைக்கு அழைத்துச் செல்வதாக அவர் கூறினர். அவர் மரியாதையுடன் அளித்த இவ்வுதவியை நான் ஏற்றுக்கொள்ளத் தயங்கினேன். இரண்டாம் வகுப்பு ஸ்நான அறையில் குளிக்க என் மனைவிக்கு உரிமை கிடையாதென்று எனக்குத் தெரியும். ஆயினும் முடிவில் அம்முறையற்ற செயலுக்கு நான் உடந்தையானேன். இது சத்திய உபாசகனுக்கு அழகன்றெனவும்

நான் அறிவேன். என் மனைவி அங்கே செல்ல அதிக ஆவலுடையவளாகவுமில்லை. ஆனால் கணவனுக்கு மனைவியிடமுள்ள பற்று சத்தியப் பற்றைவிட மேலோங்கிற்று. சத்தியத்தின் திவ்ய திருமுகம், மாயையாம் தங்கத் திரையினால் மறைக்கப்பட்டிருக்கிறதென்று உபநிஷதங்கள் கூறுகின்றன வன்றோ?

ஆறும் அத்தியாயம்

இந்திய ஊழியர் சங்கம்

நாங்கள் பூனா வந்து சேர்ந்து, சிரார்த்தாதிகள் நிறைவேறியதும், இந்திய ஊழியர் சங்கத்தின் வருங் காலத்தைக் குறித்தும், நான் அதில் சேர்வதா வேண்டாமா என்பது குறித்தும் பேச்சு எழுந்தது. சங்கத்தில் அங்கத்தினனாகும் விஷயம் எனக்குப் பெரிதும் சிந்தனைக் கிடமாயிற்று. கோகலே இருந்தபோது நான் அதற்கு முயற்சி செய்தலே அவசியமில்லை. அவர் விருப்பத்துக்குக் கீழ்ப்படிவதுடன் என் கடமை நிறைவேறியதாகும். அந்நிலைமை எனக்குப் பெரிதும் பிரியமாக இருந்தது. இந்தியப் பொது வாழ்க்கை என்னும் கொந்தளிப்பான கடலில் பிரயாணம் செய்யத் தொடங்கிய எனக்கு, நம்புதற்குரிய ஒரு மாலுமியின் துணை அவசியமென்று கருதினேன். கோகலேயை இத்தகைய மாலுமியாகக் கொண்டிருந்தேன். அவரை நம்பிக் கடலில் இறங்கலாம் என்னும் துணிவு எனக்கு இருந்தது. இப்போது அவர் போய்விட்டபடியால் என் படகை நானே செலுத்த வேண்டியவனானேன். எனவே, இந்திய ஊழியர் சங்கத்தில் சேர முயலுதல் என் கடமை

யென்றும், அதுவே கோகலேயின் ஆன்மாவுக்குத் திருப்தி யளிக்கு மென்றும் கருதினேன். ஆகவே தயக்க மெதுவு மின்றி உறுதியுடன் அம் முயற்சியில் இறங்கினேன்.

சங்கத்தின் அங்கத்தினரில் பெரும்பாலோர் இத் தருணத்தில் பூனாவில் இருந்தனர். அவர்களிடம் என்னைச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்கலானேன். என்னைப்பற்றி அவர்களுடைய பயங்களைப் போக்கவும் முயன்றேன். ஆனால் அவர்களிடையே இருவகை அபிப்பிராயங்கள் இருந்தன வென்று அறிந்தேன். ஒரு சாரார் என்னைச் சேர்த்துக் கொள்வதற்குச் சாதகமா யிருந்தனர். மற்றொரு சாரார் அதற்கு முற்றும் விரோதமா யிருந்தனர். அவ்விரு சாராரில் எவரும் என்னிடம் அன்பில் குறைந்தவர்களல்லர் என்று எனக்குத் தெரிந்தே யிருந்தது. ஆனால் என்னிடமிருந்த அன்பைக் காட்டிலும் சங்கத்தினிடம் அவர்களுடைய பற்று அதிகமா யிருந்திருக்கலாம்; அல்லது அதற்குக் குறையாமலாவது இருந்திருக்க வேண்டும்.

எனவே, எங்கள் விவாத நிலைகளில் மனக் கசப்பு என்பது அணுவளவும் தலைகாட்டவில்லை. அவை முழுதும் கொள்கைகளைப் பற்றியனவே யாகும். ஜீவாதாரமான விஷயங்கள் பலவற்றில் நானும் அவர்களும் வட துருவத்தையும் தென் துருவத்தையும்போல் அகன்றிருப்பதாகவும், ஆதலின் என்னைச் சேர்த்துக்கொண்டால் சங்கம் எந்த நோக்கங்களுடன் காணப்பட்டதோ அந்நோக்கங்களுக்கே ஆபத்து விளையலாமென்றும் எனக்கு எதிரா யிருந்தோர் கருதினார்கள். இத்தகைய ஆபத்துக்கு அவர்கள் இணங்க முடியாதிருத்தல் இயற்கைதானே?

நீடித்த விவாதங்களுக்குப் பின்னர், முடிவான தீர்மானத்தைப் பின்னால் தள்ளிப் போட்டுவிட்டுக் கலைந்தோம்.

வீடு திரும்பியபோது நான் பெரிதும் கலக்கமுற்றிருந்தேன். பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு சங்கத்தில் சேர்தல் முறையாகுமா? கோகலேயுடன் நான் வைத்திருந்த பக்திக்கு அது அழகா? என்னைச் சேர்த்துக் கொள்வது பற்றி சங்கத்தின் அங்கத்தினர்களுக்குள் அவ்வளவு திடமான வேற்றுமை யிருக்குங்கால், என்னுடைய விண்ணப்பத்தை வாபீஸ் பெற்றுக்கொள்வதே சிறந்த வழியாகு மென்று தெளிவாய் உணர்ந்தேன். அதனால் எனக்கு எதிரியா யிருந்தவர்களை ஒரு சங்கடமான நிலைமையிலிருந்து தப்புவிக்கலாம். அது தான் சங்கத்தினிடமும், கோகலேயினிடமும் நான் கொண்ட பக்திக்கு அழகாகுமென் றெண்ணினேன். இத்தீர்மானம் பளிச் சென்று எனக்குத் தோன்றவே, உடனே, தள்ளி வைத்த கூட்டத்தைக் கூட்டவேண்டா மென்று ஸ்ரீமான் சாஸ்திரிக்கு எழுதிக் கேட்டுக்கொண்டேன். என் விண்ணப்பத்தை எதிர்த்தவர்கள் இத் தீர்மானத்தைப் பெரிதும் பாராட்டினார்கள். தர்மசங்கடமான நிலைமையிலிருந்து அவர்களை இது தப்புவித்ததோடு. எங்களை முன்னைவிட அதிகமாய் நட்புரிமை என்னும் தளைகொண்டு பிணைத்தது. விண்ணப்பத்தை நான் வாபீஸ் பெற்றுக் கொண்டதுதான் உண்மையில் என்னைச் சங்கத்தின் அங்கத்தின னாக்கிற்று.

நான் வெளிப்படையான அங்கத்தினனாகாததுநல்லதேயென்றும், என் விண்ணப்பத்தை எதிர்த்தவர்கள் சரியான காரியமே செய்தார்களென்றும் அநுபவத்திலிருந்து இப்போது தெரிந்து கொண்டிருக்கிறேன். கொள்கையைப் பொறுத்த பல விஷயங்களில் எங்களுக்குள் நிரம்பக் கருத்து வேற்றுமை யுண்டென்றும் அநுபவத்தில் தெரிய

வந்திருக்கிறது. ஆனால் இந்த வேற்றுமைகள் தெரிய வந்ததினால் எங்களுக்குள் அன்புக் குறைவோ, மனக் கசப்போ சிறிதும் ஏற்படவில்லை. சகோதர பாவத்துடனேயே நாங்கள் இருந்து வருகிறோம். பூனாவிலுள்ள சங்கத்தின் கட்டிடம் எப்போதும் எனக்கு யாத்திரைக்குரிய தொரு புண்ணிய ஸ்தலமாயிருந்து வருகிறது.

வெளிப்படையாக நான் இந்திய ஊழியர் சங்கத்தில் அங்கம் பெறாவிடினும் ஆத்மார்த்தமான முறையில் எப்போதும் அச் சங்கத்தின் அங்கத்தினனாகவே இருந்து வந்திருக்கிறேன். உடலின் உறவைக் காட்டிலும் ஆன்ம உறவு மிக மேன்மை பொருந்தியது என்று சொல்ல வேண்டியதில்லை யன்றோ? ஆத்ம பந்துத்துவம் இல்லாத தேக பந்துத்துவம் உயிரற்ற உடலுக்கே நிகராகும்.

ஏழாம் அத்தியாயம்

கும்ப மேளம்

டாக்டர் மேதாவைப் பார்ப்பதற்காக இரங்கூனுக்குப் போகும் வழியில் கல்கத்தாவில் தங்கினேன். அங்கே காலஞ்சென்ற பாபு பூபேந்திர நாத் வசுவின் விருந்தாளியா யிருந்தேன் வங்காளிகளின் விருந்தோம்பும் இயல்பை அவர் வீட்டில் முழுதும் அனுபவித்தறிந்தேன். அக்காலத்தில் நான் பழ உணவு விரதங் கொண்டவன் எனவே, கல்கத்தாவில் கிடைக்கக்கூடிய பழங்கள், கொட்டைகள் எல்லாம் எனக்காகச் சேகரிக்கப்பட்டன. வீட்டுப் பெண்மணிகள் இராமுழுதும் கண் விழித்துக் கொட்டைகளை உரித்தார்கள். புதிய பழங்களை இந்திய முறையில் பக்குவம் செய்து வைக்க எவ்வளவோ சிரமம்

எடுத்துக் கொண்டார்கள். என் புதல்வன் இராமதாஸும் இன்னும் சிலரும் என்னுடன் வந்திருந்தனர். அவர்களுக்காக விதவிதமான பட்சணங்கள் செய்யப்பட்டன. இவ்வளவு அன்புடன் விருந்தோம்புதலைப் பெரிதும் பாராட்டினேனாயினும், இரண்டு மூன்று விருந்தினரை உபசரிப்பதற்காக ஒரு குடும்பம் முழுவதும் வேலை செய்வதென்பதை என்னால் பொறுக்க முடியவில்லை. ஆனால் அத்தகைய மிதமிஞ்சிய உபசரிப்புகளி லிருந்து தப்புவதற்கு அப்போது எனக்கு வழி தெரியாம லிருந்தது.

இரங்கூனுக்குச் சென்ற கப்பலில் மேற்றளத்தில் பிரயாணம் செய்தேன். ஸ்ரீ வசுவின் வீட்டில் அதிக உபசாரம் எங்களுக்கு சங்கடம் அளித்ததென்றால், கப்பலில் எங்களைத் திரும்பிப் பார்ப்பவர் யாரும் இல்லாமல் கஷ்டத்துக்காளானோம். பிரயாணிகளின் அத்தியாவசியமான வசதிகளையும் அங்கே கவனிப்பாரில்லை. குளிக்கும் அறை என்று சொல்லப்பட்ட இடம் பொறுக்க முடியாத ஆபாசம் நிறைந்ததா யிருந்தது. கக்கூசுகளோ நாற்றமெடுத்த நரகக் குழிகள். கக்கூஸை உபயோகப்படுத்த வேண்டுமானால் மல மூத்திரங்களை மிதித்துக்கொண்டோ அல்லது தாண்டிக்கொண்டோ தான் செல்லவேண்டும்.

இந்த கோரங்களை என்னால் சகிக்கவே முடியவில்லை. கப்பலின் தலைமை உத்தியோகஸ்தரிடம் விண்ணப்பம் செய்து கொண்டும் பயனில்லை. இந்த நாற்றமும் அசங்கியமும் போதாவென்று பிரயாணிகள் தங்கள் புத்தியற்ற வழக்க பழக்கங்களினால் ஆபாசத்தை அதிகப்படுத்தினார்கள். உட்கார்ந்த இடத்திலேயே எச்சில் துப்பிக் கொண்டனர். சாப்பாடு, புகையிலை, வெற்றிலை இவற்றின் கழிவுகளை எங்கே பார்த்தாலும் எறிந்தனர். அவர்கள்

பேர்ட்ட கூச்சலுக்கு அளவே யில்லை. ஒவ்வொருவரும் தங்களாலியன்ற வளவு இடத்தைப் பிடித்துக்கொள்ள முயன்றார்கள். அவர்களைவிட அவர்களுடைய சாமான்கள் அதிக இடம் அடைத்துக் கொண்டன. இவ்வாறு இரண்டு நாள் பெரிதும் கஷ்டப்பட்டுப் போனோம்.

இரங்கூன் சென்றதும் கப்பல் கம்பெனி ஏஜண்டுக்கு இந்த விவரமெல்லாம் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினேன். இதன் பயனாகவும், டாக்டர் மேதா செய்த முயற்சிகளின் பயனாகவும் திரும்பி வரும்போது கப்பலின் மேற்றளத்தில் பிரயாணம் இவ்வளவு மோசமாயில்லை.

இரங்கூனிலும் என்னுடைய பழ உணவு விரதம் டாக்டர் மேதாவின் வீட்டாருக்கு அதிக கஷ்டம் தந்தது. ஆனால் டாக்டர் மேதாவின் வீட்டை என் சொந்த வீடாகவே கருதினபடியால் உணவுப் பண்டங்கள் மித மிஞ்சிப் போகாமல் ஓரளவு கட்டுக்குட் படுத்துதல் சாத்தியமா யிருந்தது. எனினும் இவ்வளவு பொருள்கள்தான் சாப்பிடுவது என்று இன்னும் நான் ஒரு வரம்பு ஏற்படுத்திக் கொள்ளவில்லை. எனவே, உணவு வகைகளை அளவாக நிறுத்திக்கொள்வதற்கு எனது நாவும் கண்ணும் இடங் கொடுப்பதில்லை. சாப்பாட்டுக்குக் குறிப்பிட்ட நேரமுங் கிடையாது. இருட்டுவதற்கு முன்னால் கடைசி முறை சாப்பிட்டுவிட நான் விரும்பினேன். ஆனால் இரவு எட்டு, ஒன்பது மணிக்கு முன்னால் அநேகமாகச் சாப்பாடு கிடைப்பதில்லை.

1915-ம் வருஷம் கும்பமேள உற்சவம் நடத்தற்குரிய வருஷமாகும். இந்த உற்சவம் 12 வருஷத்திற் கொருமுறை ஹரித்துவாரத்தில் நடக்கிறது. எனக்கு உற்சவம் பார்ப்பதில் அதிக ஆவல் இல்லையாயினும் மகாத்மா முன்ஷி

ராமை அவருடைய குருகுலத்தில் பார்க்கவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தேன். கோகலேயின் சங்கத்தார் கும்பமேளத்தில் ஊழியஞ் செய்வதற்காக ஒரு பெரிய தொண்டர் படையை அனுப்பி யிருந்தனர். பண்டித ஹிருதய நாத் குன்ஸ்ரூ அத்தொண்டர் படையின் தலைவரா யிருந்தார். டாக்டர் தேவ் வைத்திய உத்தியோகஸ்தர். இவர்களுக்கு உதவி செய்ய போனிக்ஸ் கூட்டத்தாரை அனுப்பும்படி என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். எனவே, மகன்லால் காந்தி எனக்கு முன்னமே போயிருந் தார். இரங்கூனிலிருந்து திரும்பியதும் நானும் இக்கூட்டத் தைச் சேர்ந்தேன்.

கல்கத்தாவிலிருந்து ஹரித் துவாரத்துக்கு ரயில் பிரயாணம் மகா கஷ்டமாயிருந்தது. சில சமயம் வண்டி களில் வெளிச்ச மிராது. ஸஹரன்பூரில் சாமான்களும் ஆடுமாடுகளும் ஏற்றும் வண்டியில் நாங்கள் அடைக்கப் பட்டோம். இவ் வண்டிகளுக்குக் கூரை கிடையாது. மேலே எரிக்கும் கொடும் வெயிலும், கீழே கொதிக்கும் இரும்புத் தளமும் சேர்ந்து எங்களை ஏறக்குறைய வறுத்து எடுத்துவிட்டன. இத்தகைய பிரயாணத்தில் தாகத்தினால் நா வறண்டு போனாலும் வைதிக ஹிந்துக்கள் முஸல்மான்க ளிடமிருந்து தண்ணீர் வாங்கி அருந்த மறுத்ததைக் கவனித்தேன். 'ஹிந்து தண்ணீர்' கிடைக்கும்வரை அவர்கள் தாகத்தைப் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இதே ஹிந்துக்கள் நோய் வாய்ப்படும்போது டாக்டர் கொடுக்கும் சாராயத்தையோ, மாட்டிறைச்சி ரசத்தையோ அருந்தவும், முஸ்லீம் அல்லது கிறிஸ்துவக் கம்பவுண்டர் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கவும் மறுப்பு தில்லை என்பது கருதற்பாலதாகும்.

சாந்தி நிகேதனத்தில் நாங்கள் தங்கியதிலிருந்து தோட்டி வேலையே இந்தியாவில் எங்களுடைய விசேஷ முயற்சியா யிருக்கவேண்டுமென அறிந்திருந்தோம். ஹரித்துவாரத்தில் தொண்டர்கள் தங்குவதற்கு ஒரு தர்மசாலையில் கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. இங்கே கக்கூசுகளாக உபயோகிப்பதற்கென்று டாக்டர் தேவ் ஆழமான குழிகள் சில வெட்டி யிருந்தார். இவைகளைச் சுத்தம் செய்வதற்கு அவர் சம்பளம் பெறும் தோட்டிகளை எதிர் பார்க்க வேண்டி யிருந்தது. போனிக்ஸ் கூட்டத்தார் வேலை செய்ய இங்கே சந்தர்ப்பம் இருந்ததன்றோ? மலத்தை மண் போட்டு மூடிப் பின்னர் அதை நீக்கி சுத்தம் செய்யும் வேலையை நாங்கள் செய்வதாக ஒப்புக்கொண்டோம். டாக்டர் தேவ் மகிழ்ச்சியுடன் இதை ஏற்றுக்கொண்டார். இந்த வேலை செய்வதாகச் சொன்னவன் நானுயினும் மகன்லால் காந்தியே அதை நிறைவேற்ற வேண்டியவரானுர். கூடாரத்தில் உட்கார்ந்துகொண்டு 'தரிசனம்' கொடுப்பதும், என்னைப் பார்க்க வந்த யாத்திரீகர்களுடன் மதவிஷயமாகவும் பிற விஷயங்களைப் பற்றியும் விவாதிப்பதுமே பெரிதும் என் வேலையா யிருந்தது. என் விருப்பம் போல் நடந்து கொள்ளக்கூடிய ஒரு நிமிஷ நேரங்கூட எனக்குக் கிடைக்கவில்லை. ஸ்நானம் செய்யப் போகும் போது கூட ஜனங்கள் என்னைத் தரிசனம் செய்யப் பின் தொடர்ந்தார்கள். சாப்பிடும்போதும் அவர்கள் என்னைச் சும்மா விடவில்லை. இவ்வாறு தென்னுப்பிரிக்காவில் நான் செய்த சிறு ஊழியம் இந்தியா முழுவதையும் பெரிதும் கவர்ந்திருக்கிறதென்பதை ஹரித்துவாரத்திலேயே முதன் முதலாகக் கண்டறிந்தேன்.

ஆனல் இது ஒருவன் விரும்பக்கூடிய நிலையன்று. உண்மையில் இருதலைக் கொள்ளி எறும்புபோலானேன்

என்னை எவருக்கும் தெரியாத இடங்களில், ரயில்வே பிரயாணம் முதலியவற்றில் கோடிக் கணக்கான பாமர ஜனங்கள் அனுபவிக்க வேண்டி யிருக்கும் கஷ்டங்க ளெல்லாம் எனக்கும் ஏற்பட்டன. என்னைப்பற்றி அறிந்த ஜனங்கள் மத்தியிலோ, இந்த தரிசனப் பைத்தியத்துக்கு இரையாகவேண்டி யிருந்தது. இவ்விரு நிலைகளில் எது அதிகம் இரங்கத்தக்கதென்று நான் அடிக்கடி சிந்திப்ப துண்டு. ஒன்று மட்டும் கூறலாம். தரிசனக்காரர்களின் குருட்டு அன்பு எனக்குப் பல முறைகளில் கோபத்தையும், அதைவிட அதிகமாய் மனத்துயரையும் அளித்திருக்கிறது. ஆனால் மூன்றாம் வகுப்புப் பிரயாணம் எவ்வளவுதான் கஷ்டமா யிருந்தபோதும் ஆத்மத் தூய்மை யளித்திருக் கிறதே யல்லாமல் கோபமூட்டியதே யில்லை.

அந்நாளில் ஊர் சுற்றுவதற்குப் போதிய வலிமை பெற்றவனா யிருந்தேன். அதிர்ஷ்ட வசமாக, வீதியில் போனால் கூட்டம் சேரும்படி அவ்வளவு ஊர் அறிந்தவனாய் இன்னும் ஆகிவிடவில்லை. இப்படிச் சுற்றி யலைகையில் யாத்ரீகர்களுடைய பக்தி சிரத்தையைக் காட்டிலும் அவர்களுடைய கவனக்குறைவு, வெளிவேஷம், தாமத குணம் இவற்றையே நான் அதிகம் காண நேர்ந்தது. கூட்டங் கூட்டமாய்க் காணப்பட்ட சாதுக்கள் உலக வாழ்க்கையின் சுகங்களை எல்லாம் அநுபவிப்பதற்கே பிறந்தவர்கள் எனத் தோன்றியது.

அங்கே ஐந்து கால் பசு ஒன்றைக் கண்டேன்! எனக்கு அது பேராச்சரியத்தை யளித்தது. ஆனால் தெரிந்தவர்கள் விரைவில் என்னுடைய பிரமையை நீக்கி னார்கள். பாவம்! அந்த ஐந்து கால் பசு, கொடியர்களின் பேராசைக்குப் பலியே யல்லாது வேறில்லை. உயிர்க்

கன்றுக் குட்டியின் காலை வெட்டி அப்பசுவின் தோளில் ஒட்டியிருக்கிறார்களென அறிந்தேன். இத்தகைய இரு வகைக் கொடுமையின் மூலமாய், அறியாதவர்களின் பணத்தைப் பறித்து வந்தார்கள். ஐந்து கால் பசுவினால் கவரப்படாத ஹிந்து அருமை யல்லவா? அத் தகைய அற்புதப் பசுவின் தர்மத்துக்காக எந்த ஹிந்து பணத்தைச் சொரிய மாட்டான்?

கடைசியாக உற்சவ தினம் வந்தது. அது என் வாணாளில் மிக விசேஷ தினமாயிற்று. ஹரித்துவாரத்துக்கு நான் தீர்த்த யாத்திரையாகப் போகவில்லை. புண்ணியந் தேடும் நோக்கத்துடன் க்ஷேத்திர தரிசனத்துக்குப் போகும் எண்ணம் எனக்கு எப்போதுமே கிடையாது. ஆனால் அங்கே கூடியிருந்த 17 லட்சம் ஜனங்களில் எல்லாருமே வேஷதாரிகள் அல்லது வேடிக்கை பார்ப்பவர்களா யிருத்தல் கூடுமா? எண்ணற்ற ஜனங்கள் புண்யம் சம்பாதிக்கவும், ஆத்மத் தூய்மை பெறவுமே அங்கே வந்தார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இத்தகைய பக்தியானது ஆன்ம சாதனத்திற்கு எவ்வளவுவரை துணை செய்யுமென்று கூறுதல் மிகவும் கஷ்டமாகும்.

ஆதலின் அன்றிரவு முழுதும் நான் ஆழ்ந்த சிந்தனையில் கழித்தேன். வேஷதாரிகளின் மத்தியிலே அந்தப் பரிசுத்த ஆத்மாக்களும் இருந்தார்கள். ஆண்டவன் முன்னிலையில் அவர்கள் குற்றமற்றவர்களே யாவர். ஹரித்துவாரத்துக்கு வருவதே பாவமென்று நான் கருதினால், பகிரங்கமாக ஹரித்துவார யாத்திரையைக் கண்டித்துக் கும்ப மேளத்தன்று அதை விட்டுப் போய்விடவேண்டும். ஹரித்துவாரத்திற்கும், கும்பமேளத்திற்கும் வருதல் பாவமற்ற செயலாயின், அங்கு நடக்கும் அக்கிரமங்களுக்குப் பிராயச்

சித்தமாக நான் ஏதேனும் தன்மறுப்பு விரதம் பூண்டு என்னைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய முடிவு என் இயல்புக்கு முற்றும் ஒத்ததாகும். என் வாழ்க்கை தன் மறுப்பு விரதங்களையே அடிப் படையாகக் கொண்டது. கல்கத்தாவிலும் இரங்கூனிலும் நான் தங்கிய வீட்டினர்க்கு அளித்த அநாவசியமான தொந்திரவுகளையும், என் ஒருவனுக்கு விருந்தளிப்பதற்காக அவர்கள் செய்த ஏராளமான செலவுகளையும் நினைத்தேன். ஆகையால், நான் உண்ணும் பொருள்களை ஒரு வரையறைக் குட்படுத்திக் கொள்ளவும், சூரியன் அஸ்தமித்த பின் உணவு அருந்துவதில்லை யென்னும் விரதங் கொள்ளவும் தீர்மானித்தேன்.

இந்தக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளா விடின், இனி என்னை அதிதியாக ஏற்பவர்களுக்குப் பெரிதும் தொந்திரவு கொடுப்பேனென்றும், நான் தொண்டு புரிவதற்கு பதிலாக அவர்களை எனக்குத் தொண்டு புரிவதில் ஈடுபடுத்துவேனென்றும் ஐயமற உணர்ந்தேன். ஆகவே இந்தியாவிலிருக்கும் வரையில் ஒரு தினத்தில் ஐந்து பொருள்களுக்குமேல் உண்பதில்லையென்றும், இருட்டிய பின்னர் சாப்பிடுவதில்லை யென்றும் பிரதிக்ஞை செய்தேன். பின்னால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைப் பற்றிப் பூரணமாக ஆராய்ச்சி செய்தேன். பின்னால் எவ்வகைச் சந்தேகத்துக் கும் இடங்கொடுக்க நான் விரும்பவில்லை. ஏதேனும் நோய் வந்தால் என்ன நேரிடுமென்றும் யோசித்தேன். மருந்தை ஐந்து பொருள்களில் ஒன்றாய்ச் சேர்த்தாலும், விசேஷ உணவுகள் விஷயத்தில் விலக்குச் செய்யா விட்டாலும் மேற்படி விரதானுஷ்டானம் பெரிதும் கஷ்டமாகி விடு மென்று எனக்குத் தெரிந்தேயிருந்தது. ஆயினும் முடிவாக,

எத்தகைய நிலைமையிலும் அவ்விரதத்துக்கு விலக்குச் செய்வதில்லை என்று உறுதி செய்தேன்.

மேற்கூறிய விரதங்களை நான் கைக்கொண்டு இப்போது பதின்மூன்று ஆண்டுகள் ஆகின்றன. சில சமயம் அவற்றை நிறைவேற்றுதல் எவ்வளவோ கஷ்டமானதுண்டு. ஆனால் அவ்விரதங்களே என் பாதுகாப்பாயிருந்திருக்கின்றன வென்று நான் உறுதி கூறக் கூடும். நோய்கள் பலவற்றிலிருந்தும் அவை என்னைக் காப்பாற்றியிருப்பதுடன் என் வாணாளைச் சில ஆண்டுகள் நீடிக்கச் செய்திருக்கின்றன வென்பதும் என் அபிப்பிராயமாகும்.

எட்டாம் அத்தியாயம்

லக்ஷ்மணன் பாலம்

உற்சவம் முடிந்து மகாத்மா முன்ஷிராமின் குருகுலத்துக்குச் சென்று ஆஜானுபாகுவான அப்பெரியாரைக் கண்டபோது என் மனம் பெரிதும் ஆறுதல் அடைந்தது. ஹரித்துவாரத்தின் இரைச்சலுக்கும் குருகுலத்தின் சாந்தத்திற்கும் இருந்த பெரிய வேற்றுமையை உடனே உணர்ந்தேன்.

மகாத்மா என்னைத் தம் அன்பு வெள்ளத்தில் திளைக்கச் செய்தார். பிரமசாரிகள் மிகுந்த சிரத்தையுடன் எனக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்தார்கள். இங்கேதான் ஆச்சாரியர் இராமதேவரையும் முதன் முதலாகச் சந்தித்தேன். அவர் எவ்வளவு அபார சக்தியுடையவர் என்பதை உடனே கண்டறிந்தேன். பல விஷயங்களில் நாங்கள் கருத்து வேற்றுமை யுள்ளவர்களாயிருந்தோம். எனினும்

எங்களுடைய அறிமுகம் விரைவிலேயே நட்புரிமையாகக் கனிந்தது.

குருகுலத்தில் தொழிற் கல்வி அளிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி ஆச்சாரியர் இராமதேவருடனும், மற்ற ஆசிரியர்களுடனும் நான் நெடுநேரம் விவாதித்தேன். கடைசியில் விடை பெற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்தபோது அவ்விடத்திலிருந்து பிரிவது அளவில்லாத மனத்துயர மளித்தது.

லக்ஷ்மணன் பாலத்தைப் (லக்ஷ்மண ஜூலா) பற்றிப் பலர் புகழ்ந்து பேசக் கேட்டிருந்தேன். இது ஹிருஷிகேசத்துக்குக் கொஞ்ச தூரத்தில் கங்கைமீது போடப்பட்டிருந்த தொங்கும் பாலமாகும். ஹரித்துவாரத்திற்கு வந்துவிட்டு அப்பாலத்தைப் பாராமல் போகக்கூடாதென்று பல நண்பர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். எனவே அவ்விடத்துக்குக் கால் நடையாகச் செல்லத் தீர்மானித்தேன். அவ்வாறே முழுமையும் நடந்து போய்ச் சேர்ந்தோம். வழியில் ஓரிடத்தில் சிறிது தங்கி இளைப்பாறினோம்.

ஹிருஷிகேசத்தில் சந்நியாசிகள் பலர் என்னைப்பார்க்க வந்தார்கள். அவர்களில் ஒருவர் என்னிடம் விசேஷ அபிமானம் கொண்டார். போனிக்ஸ் கூட்டத்தாரும் என்னுடன் வந்திருந்தபடியால் அவர்களைப்பற்றி சுவாமியார் என்னைப் பல கேள்விகள் கேட்டார்.

சமயம் சம்பந்தமாகவும் நாங்கள் சம்பாஷித்தோம். சமய விஷயங்களில் நான் அதிக சிரத்தையுள்ளவன் என்பதை அவர் உணர்ந்துகொண்டார். கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுத் தலையணியும் மேற் சட்டையும் இன்றி நான் திரும்பியபோது என்னை அவர் பார்க்க நேர்ந்தது. என்

தலையில் சிகையும், உடம்பில் பூணூலும் இல்லாமலிருந்தது அவருக்குப் பெரிதும் வருத்தமளித்தது.

"ஹிந்து தர்மத்தில் நம்பிக்கையுள்ள நீங்கள் பூணூலும், சிகையும் இல்லாமலிருப்பது கண்டு பெரிதும் வருந்துகிறேன். ஹிந்து சமயத்தில் இரண்டு வெளிப்படையான சின்னங்கள் அவைதான். ஒவ்வொரு ஹிந்துவும் அவைகளை அணிய வேண்டும்" என்று சுவாமியார் சொன்னார்.

அவ்விரண்டையும் நான் நீக்கியதெப்படி என்பது ஒரு தனிச் சரித்திரமாகும். நான் பத்து வயதுச் சிறுவனாயிருந்த போது, பிராமணப் பையன்கள் பூணூல்களில் சாவிக் கொத்துகளைப் போட்டுக்கொண்டு விளையாடுவது கண்டு பொறாமைப் பட்டதுண்டு. நமக்கும் பூணூல் இருந்தால் அப்படிச் செய்யலாமே யென்று ஆசைப்பட்டது முண்டு. அக்காலத்தில் கத்தியவார் வைசிய குடும்பங்களில் பூணூல் போட்டுக் கொள்ளும் வழக்கம் கிடையாது. ஆனால் முதல் மூன்று வர்ணத்தாரும் கட்டாயம் பூணூல் தரிக்கவேண்டுமென்று அப்போது தான் ஓர் இயக்கம் தோன்றியிருந்தது. இவ்வியக்கத்தின் பயனாக காந்தி வம்சத்தார் பலர் பூணூல் போட்டுக்கொள்ளத் தொடங்கியிருந்தார்கள். எனக்கும் இன்னும் இரண்டு மூன்று சிறுவர்களுக்கும் இராமரட்சை கற்றுக் கொடுத்து வந்த பிராமணர் எங்களுக்குப் பூணூல் போட்டு வைத்தார். எனக்குச் சாவிக் கொத்து வேண்டிய அவசிய மில்லாதிருந்தும், சாவிக் கொத்து ஒன்று வாங்கி அதைப் பூணூலில் போட்டு வேடிக்கை செய்துகொண் டிருந்தேன். பிறகு அது நைந்து அறுந்து போனபோது, அதிக வருத்தப்பட்டேனா என்பது ஞாபகமில்லை. புதிய பூணூல் தேடவில்லை என்பது மட்டும் நினைவிருக்கிறது.

எனக்கு வயது வந்து, நான் பெரியவனானபோது, இந்தியாவிலும் தென்னாப்பிரிக்காவிலும் பலர் பல முறைகளில் எனக்கு மீண்டும் பூணூல் போட்டு வைக்க முயன்றார்கள். நல்ல நோக்கத்துடனேயே அவர்கள் முயன்ற போதிலும் முயற்சி வெற்றி பெறவில்லை. சூத்திரர்கள் பூணூல் தரிக்கக் கூடாதென்றால், மற்ற வர்ணத்தார்களுக்கு மட்டும் அந்த உரிமை எவ்வாறு வந்தது என்று கேட்டேன். அனாவசியமான வழக்கமென்று நான் கருதிய ஒன்றைக் கைக்கொள்வதற்குப் போதிய காரணம் காணவில்லை. பூணூலே கூடாதென்னும் ஆட்சேபம் எனக்கில்லாவிடினும், அதை அணிவதற்கு அவசியமும் தெரியவில்லை.

வைஷ்ணவனாகிய நான் கழுத்தில் துளசி மாலை அணிந்திருத்தல் இயல்பல்லவா? வீட்டுப் பெரியோர்களோ சிகை கட்டாயம் வைத்திருக்க வேண்டுமென்று கருதினார்கள். ஆனால் இங்கிலாந்துக்குப் புறப்படுந் தறுவாயில் சிகையை நீக்கி விட்டேன். தலையணியில்லாதிருக்கும்போது யாராவது என்னைப் பார்த்தால் பரிகசிக்கக் கூடுமென்றும், ஆங்கிலேயனுடைய கண்களுக்கு நான் அநாகரிகனாகத் தோன்றக் கூடுமென்றும் எண்ணினேன். இந்தக் கோழைத்தனமான பயம் என்னைப் பெரிதும் வசப்படுத்தியிருந்தபடியால், தென்னாப்பிரிக்காவில் எனது தாயாதி சகோதரரான சகன்லால் காந்தியைக்கூட, அவர் மத பக்தியுடன் வைத்திருந்த சிகையை எடுத்துவிடும்படி செய்தேன். அவருடைய பொது ஊழியத்திற்கு அது தடையாயிருக்கக் கூடுமென்று நான் கருதினபடியால் அவருக்கு மனத் துன்பமேற்பட்டாலும் ஏற்படட்டுமென்று சிகையை எடுக்கச் செய்தேன்.

ஆகவே மேற்படி விஷயங்கள் எல்லாவற்றையும் சுவாமியாருக்கு எடுத்துக் கூறி நான் மேலும் சொன்னதாவது:—"பூணூல் அணிவதற்கு நான் அவசியம் எதுவும் காணுமையால் நான் அதை அணியப்போவதில்லை. ஹிந்துக்கள் கணக்கற்ற பேர் பூணூல் தரியாமலே ஹிந்துக்களாயிருக்கிறுர்கள். மேலும் பூணூல் என்பது பாரமார்த்திக சாதனத்தின் அறிகுறியா யிருக்கவேண்டும். அதாவது மனப் பூர்வமாக உயரிய தூய வாழ்வு பெறுவதற்கு முயல்பவனே அதை அணிந்து கொள்வதா யிருத்தல் வேண்டும். ஹிந்து சமயமும் இந்தியாவும் தற்போதுள்ள நிலைமையில் அத்தகைய பொருள் பொதிந்த சின்னத்தை அணிந்து கொள்ள ஹிந்துக்களுக்குஉரிமை யுண்டா? தீண்டாமையையும், எல்லாவகை உயர்வு தாழ்வு வேற்றுமைகளையும், மற்றும் பல தீமைகளையும், வெளி வேஷங்களையும் ஹிந்து மதம் தன்னிலிருந்து ஒழித்த பின்னரே அது அத்தகைய உரிமை பெறுதல் கூடும். ஆகையால் பூணூல்தரிக்கும் யோசனையை என் உள்ளம் ஏற்றுக் கொள்ள வில்லை. ஆனுல் சிகையைப் பற்றித் தாங்கள்கூறுவது யோசிக்கத்தக்கதே யாகும். நான் முன்னர், சிகைவைத்துக் கொண்டிருந்து, பிறைப்பட்ட அவமான உணர்ச்சி காரணமாக அதை நீக்கிவிட்டேன். ஆதலின் மறுபடியும் சிகை வைத்துக் கொள்ளுதல் அவசியமென்றே நினைக்கிறேன். என் தோழர்களுடன் இது குறித்து விவாதிப்பேன்."

பூணூலைப் பற்றி என் கொள்கையை சுவாமியார் ஒப்புக் கொள்ளவில்லை. அதை அணியாததற்கு என்ன காரணங்கள் நான்கூறினேனே அதே காரணங்கள் பூணூல் அணிவதற்குச் சாதகமானவை என்று அவருக்குத் தோன்றிற்று. ஆனுல் அவ்விஷயத்தில் இன்றைய தினமும்

ஹ்ருஷிகேசத்தில் நான் கொண்டிருந்த கொள்கையே கொண்டிருக்கிறேன். சமயங்கள் பற்பல இருக்கும் வரையில் ஒவ்வொரு சமயத்துக்கும் தனிப்பட்ட சின்னம் ஒன்று அவசியமா யிருக்கலாம். ஆனால் அந்தச் சின்னமே உண்மைப் பொருளென்று கருதப்பட்டு, மற்ற மதங்களை விடத் தன் மதமே உயர்ந்ததென்று நிரூபிக்க அது உபயோகப்படுமானால், அதைப் புறக்கணித்து விடவே வேண்டும். பூணூல் இன்றையதினம் ஹிந்து சமய முன்னேற்றத்திற்கு ஒரு சாதனமா யிருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை. எனவே, அதை அணிவதில் எனக்குச் சிரத்தை கிடையாது.

சிகையைப் பொறுத்த வரையில், அதை நீக்குவதற்குக் கோழைத்தனமே காரணமா யிருந்தபடியால், நண்பர்களுடன் யோசனை செய்த பின்னர் மீண்டும் சிகை வளர்க்கத் தீர்மானித்தேன். இது நிற்க,

ஹ்ருஷிகேசம், லக்ஷ்மணன் பாலம் இவ்விடங்களின் இயற்கைக் காட்சிகள் எனக்கு ஆனந்த மளித்தன. நமது மூதாதைகள் இவ்வளவு இயற்கை அழகுணர்ச்சி யுள்ளவர்களாயிருந்ததைக் குறித்து வியந்தேன். அழகிய இயற்கைத் தோற்றங்களுடன் சமய வழிபாட்டைக் கலந்து வைத்திருப்பதை யெண்ணி அவர்களுக்கு என் உள்ளத்தில் பக்தியுடன் நமஸ்கரித்தேன்.

ஆனால் இயற்கைச் சௌந்தரியத்தின் உறையுளா யிருந்த இவ்விடங்களை மனிதர்கள் உபயோகித்த முறையைப் பார்த்தபோது என் மனம் சாந்தி யிழந்தது. ஹரித்துவாரத்தில் போலவே ஹ்ருஷிகேசத்திலும் ஜனங்கள் சாலைகளையும், கங்கையின் கரைகளையும் அசுத்தப்படுத்தினார்கள். கங்கா நதியின் பரிசுத்த ஜலத்தை அசுசிப்படுத்த

வும் அவர்கள் தயங்கவில்லை. கொஞ்ச தூரம் நடந்தால் ஜன நடமாட்டம் இல்லாத விடத்துக்கு எளிதில் போகக் கூடுமாயினும், அப்படிச்செய்யாமல் பொது வீதிகளிலும், நதிக்கரைகளிலுமே மக்கள் மல ஜலங் கழித்தலைப் பார்த்த போது என் மனம் பெரிதும் வேதனை யடைந்தது.

லக்ஷ்மண ஜூலா என்பது கங்கைநதியின்மேல் அமைத்திருந்த தொங்கும் இரும்புப் பாலந்தான் என்று கண்டேன். முன்னர் இவ்விடத்தில் அழகிய கயிற்றுப்பாலம் ஒன்று இருந்ததாம். ஆனால் அக்கயிற்றுப் பாலத்தை அகற்றி விட்டு அவ்விடத்தில் இரும்புப் பாலம் கட்டும் யோசனை தர்ம சீலரான மார்வாரி யொருவரின் மூளையில் எப்படியோ உதயமாயிற்று. அவர் அவ்வாறே ஏராளமான பணச் செலவில் இரும்புப் பாலம் கட்டியதுடன் பாலத்தின் சாவி களை அரசாங்கத்தின் வசம் ஒப்புவித்தாராம்! கயிற்றுப் பாலத்தை நான் பார்த்ததில்லை யாதலால் அது குறித்து எதுவும் சொல்வதற்கில்லை. ஆனால் அந்த இயற்கைப் பிரதேசத்திற்கு இரும்புப் பாலம் சற்றும் தகுதியற்றதா யிருந்தது. அப்பிரதேசத்தின் இயற்கை அழகை அது கெடுத்தது என்பதில் சந்தேகமில்லை. மேலும், அக் காலத்தில் தீவிர இராஜபக்தனா யிருந்த எனக்குக்கூட, பாலத்தின் சாவிகளை அரசாங்கத்தினிடம் ஒப்புவித்தது பொறுக்க வில்லை.

பாலத்தைக் கடந்து சுவர்க்காசிரமத்துக்குப் போக வேண்டும். சுவர்க்காசிரமம் என்பது மிகவும் கோரமான இடம். இரும்புத் தகடுகளால் கூரை போட்ட சில அசங் கியமான கொட்டகைகளைத் தவிர அங்கு வேறொன்று மில்லை. இவை சாதகர்களுக்காகக் கட்டிவிடப்பட்டனவாம் அந்த சமயத்தில் அங்கே சாதகர்கள் யாரையுங் காணோம்.

முக்கியமான கட்டிடத்தில் சிலர் வசித்தனர். அவர்களுடைய தோற்றம் பார்ப்பவர்களுக்கு நல்ல எண்ணம் உண்டு பண்ணுவதா யில்லை.

ஆனால் மொத்தத்தில் ஹரித்துவார அநுபவங்களினால் நான் அளவிலாத பயன் அடைந்தேன் என்பதில் சந்தேகமில்லை. நான் எங்கே வசிப்பது, என்ன செய்வது என்று முடிவு செய்வதற்கு அவை பெரிதும் துணையா யிருந்தன.

ஒன்பதாம் அத்தியாயம்

ஆசிரம ஸ்தாபனம்

கும்ப மேளத்திற்காக நான் ஹரித்துவாரம் சென்றது அந்த ஸ்தலத்திற்கு எனது இரண்டாவது யாத்திரையாகும்.

சத்தியாக்கிரஹ ஆசிரமம் 1915-ம் வருஷம் மேமீ 25வ ஸ்தாபிக்கப்பட்டது. சிரத்தானந்தர் நான் ஹரித்துவாரத்திலேயே தங்கவேண்டுமென விரும்பினர். கல்கத்தா நண்பர்கள் சிலர் வைத்தியநாத க்ஷேத்திரத்தைக் குறிப்பிட்டார்கள். இன்னும் சிலர் இராஜகோட்டையில் தங்கவேண்டுமெனப் பலமாக வலியுறுத்தினர்கள். ஆனால் நான் ஆமதாபாத் வழியாகச் செல்ல நேர்ந்தபோது அங்கிருந்த பல நண்பர்கள் என்னை அவ்விடத்தில் நிலைபெறுமாறு வற்புறுத்தியதுடன், வசிப்பதற்கு வீடும், ஆசிரமச் செலவுகளுக்குப் பணமும் தேடித் தருவதாகவும் வாக்களித்தார்கள்.

மேற்கூறிய இடங்களுக்குள்ளே ஆமதாபாத் எனக்குப் பிடித்திருந்தது. நான் குஜராத்தி யாதலால் குஜராத்தி

மொழியின் மூலமாகவே தேசத்திற்குச் சிறந்த தொண்டு செய்யக் கூடுமென எண்ணினேன். மற்றும் ஆமதாபாத் பழைய காலத்தில் கைத்தறி நெசவுக்குப் பெயர் பெற்ற இடமாதலால், இராட்டையில் நூற்கும் குடிசைத்தொழிலைப் புனருத்தாரணம் செய்வதற்கு அது மிகவும் அநுகூலமான இடமென்று தோன்றிற்று. ஆமதாபாத் குஜராத்தின் தலைமை நகரமாதலால் வேறெவ்விடத்தைக் காட்டிலும் இவ்விடத்தில் குஜராத்தி செல்வர்களிடமிருந்து பண உதவி கிடைக்கலா மென்னும் நம்பிக்கையும் இருந்தது.

ஆமதாபாத் நண்பர்களுடன் பல விஷயங்களைப்பற்றிப் பேசினேன். அவற்றினிடையே இயல்பாகத் தீண்டாமைப் பிரச்னையும் வந்தது. மற்ற அம்சங்களில் தகுதியுடைய தீண்டா வகுப்பினர் ஒருவர் முன் வருவாரானால் அவரை உடனே ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்வேனென்று அவர்களிடம் தெளிவாகச் சொன்னேன்.

"உங்களுடைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தீண்டாதவர் எங்கே இருக்கிறார்?" என்று வைஷ்ணவ நண்பர் ஒருவர் கேட்டார். அத்தகையவர் அகப்படமாட்டார் என்பது அவர் நம்பிக்கை.

கடைசியாக, ஆமதாபாத்திலேயே ஆசிரமம் ஸ்தாபிக்கத் தீர்மானித்தேன்.

இடத்தைப் பற்றிய வரையில் எங்களுக்கு முதன் முதலில் உதவி செய்தவர் ஆமதாபாத்தில் பாரிஸ்டராயிருந்த ஸ்ரீ ஜீவன்லால் தேசாய் என்பவராவர். அவர் கோச்ராப்பில் இருந்த தமது பங்களாவை வாடகைக்குக் கொடுக்க இசைந்தார். அதை எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தோம்.

முதலில், ஆசிரமத்தின் பெயர் என்னவென்று தீர்மானிக்க வேண்டியிருந்தது. நண்பர்களுடன் இதைப் பற்றிக் கலந்தாலோசித்தேன். "சேவாசிரமம்" "தபோவனம்" முதலிய பெயர்கள் குறிப்பிடப்பட்டன. "சேவாசிரமம்" என்னும் பெயர் எனக்குப் பிடித்திருந்தாலும் சேவைமுறை என்னவென அதில் விளங்காதது ஒரு குறைபாடெனக் கருதினேன். "தபோவனம்" என்பது அதிக டாம்பீகப் பெயர் எனத் தோன்றிற்று. ஏனெனில், தவம் எங்களுக்குப் பிரியமான தொன்றாயினும் நாங்கள் தபஸ்விகள் என்று சொல்லிக்கொள்ளத் தகுதியுடையவர்க ளல்லர். சத்தியப் பற்றே எங்கள் கோட்பாடாகவும், சத்திய ஆராய்ச்சியும், சத்தியத்தில் உறுதியுமே எங்கள் வேலையாகவும் இருந்தன. தென்னாப்பிரிக்காவில் நான் கையாண்ட முறையைஇந்தியாவுக்கு அறிவிக்கவும், இந்தியாவில் அம்முறையை எந்த அளவில் கையாளலாம் என்று சோதித்துத் தெரிந்து கொள்ளவும் விரும்பினேன். எனவே, என் தோழர்களும் நானும் எங்கள் இலட்சியத்தையும், தொண்டு முறையையும் ஒருங்கே குறிப்பிடுவதான "சத்தியாக்கிரஹ ஆசிரமம்" என்னும் பெயரைத் தெரிந்தெடுத்தோம்.

ஆசிரமம் நடப்பதற்கு விதிகளும், ஒழுக்க முறைகளும் அவசியமல்லவா? எனவே, நகல் விதிகள் தயாரித்து அவற்றைப் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும்படி நண்பர்களைக் கேட்டுக் கொண்டோம், பல அபிப்பிராயங்கள் வந்தன. அவற்றில் ஸர் குருதாஸ் பானர்ஜியின் அபிப்பிராயம் இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. அவர் ஆசிரம விதிகள் தமக்குப் பிடித்திருப்பதாகவும், தாழ்மைக் குணத்தை ஒழுக்க முறைகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளுதல் நலமென்றும் நமது இளைஞர்களிடம் அக்குணம் குறைவா

யிருப்பது வருந்தத் தக்கதென்றும் கூறி யிருந்தார். இந்தக் குறைபாட்டை நானும்கவனித்திருந்தேனுயினும், தாழ்மைக் குணத்தை விரதங்களில் ஒன்ருக்கி விட்டால், அது தாழ்மைக் குணமே அல்லாமற் போய்விடும் என்றஞ்சினேன் தாழ்மைக் குணத்தின் உண்மைப் பொருள் "நான்"என்னும் பாவம் அறவே மறைதலாகும். "நான்" என்னும் உணர்வு அழிதலே மோக்ஷம். ஆகவே, தாழ்மைக் குணத்தை ஒழுக்க முறைகளில் ஒன்ருய்க் கொள்ள முடியாது. உண்மையில், அத் தாழ்மைக் குணம் பெறுவதற்கே வேறு ஒழுக்க முறைகளைக் கொள்ளுதல் அவசியமாயிருக்கலாம். மோக்ஷ சாதகன் அல்லதுதொண்டன் ஒருவனுடைய செயல்களில் தாழ்மைக் குணம் அதாவது 'நான் மறத்தல்' இல்லாவிடின் மோக்ஷத்திலோ, தொண்டிலோ அவனுக்கு உண்மைப் பற்றில்லையென்றே ஏற்படும் தாழ்மையில்லாத தொண்டு சுய நலமும், அகம்பாவமுமே யல்லாது வேறில்லை.

இக்காலத்தில் பதின்மூன்று தமிழர்கள் எங்களில் இருந்தார்கள். தமிழ் இளைஞர்கள் ஐவர் தென்னுப்பிரிக்காவிலிருந்து என்னைப் பின் தொடர்ந்து வந்தவர்கள். மற்றவர்கள் நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்கள். எல்லாரும் சேர்ந்து நாங்கள் இருபத்தைந்து ஸ்திரீ புருஷர்கள் இருந்தோம்.

இவ்வாறு ஆசிரமம் தொடங்கப் பட்டது. எல்லாரும் பொதுவான சமையலறையில் சாப்பிட்டு ஒரே குடும்பம் போல் வாழ்க்கை நடத்த முயன்ருேம்.

பத்தாம் அத்தியாயம்

ஆரம்ப சோதனை

ஆசிரமம் ஏற்பட்டுச் சில மாதங்களுக்குள் நான் சற்றும் எதிர்பாராத ஒரு சோதனை எங்களுக்கு நேர்ந்தது. "ஓர் தீண்டா வகுப்புக் குடும்பத்தினர் தங்கள் ஆசிரமத்தைச் சேர விரும்புகிறார்கள். அவர்கள் தாழ்மையும் கண்யமும் உள்ளவர்கள். அவர்களை ஏற்றுக் கொள்வீர்களா?" என்னும் பொருள் கொண்ட கடிதம் ஒன்று ஸ்ரீ அமிருதலால் தாக்கர் எழுதியிருந்தார்.

நான் கலக்கமுற்றேன். தீண்டா வகுப்பினர், அதிலும் தாக்கர் பாபுவினிடம் கடிதம் பெற்றுக்கொண்டு, இவ்வளவு விரைவில் ஆசிரமத்தில் சேர மனுச்செய்து கொள்வீர்களென்று நான் எதிர்பார்க்கவே யில்லை. கடிதத்தை என் தோழர்களுக்கும் படித்துக் காட்டினேன். அவர்கள் அதை வரவேற்றார்கள்.

மேற்படி குடும்பத்தினர் அனைவரும் ஆசிரம விதிகளை அனுசரிக்கச் சித்தமாயிருந்தால் அவர்களை ஏற்றுக் கொள்ளச் சம்மதமென்று அமிருதலால் தாக்கருக்கு எழுதினேன்.

குடும்பத் தலைவர் துதாபாய், அவர் மனைவி தனிபென், அவர்களுடைய புதல்வி லக்ஷ்மி இவர்களடங்கியதே குடும்பம் அப்போது லக்ஷ்மி தவழும் குழந்தை. துதாபாய் பம்பாயில் உபாத்தியாயரா யிருந்தவர். அவர்கள் எல்லாரும் ஆசிரமத்தின் விதிகளுக்கிணங்கி நடக்க ஒப்புக் கொண்டதின் மேல் ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

ஆனால் ஆசிரமத்துக்கு உதவி புரிந்து கொண்டிருந்த நண்பர்களிடையே இது பெருங்கிளர்ச்சி உண்டு பண்

ணிற்று. முதலில் கிணறு விஷயமாகக் கஷ்டம் ஏற்பட்டது. கிணற்றைப் பங்களாவின் சொந்தக்காரரும் உபயோகித்து வந்தார். ஏற்றம் இறைத்து வந்த மனிதன் எங்களுடைய தொட்டியிலிருந்து தண்ணீர்த் துளிகள் சிந்துவதால் தனக்குத் தீட்டு ஏற்பட்டுவிடுமென்று கூறி ஆட்சேபித்தான். ஆதலின் எங்களைத் திட்டவும், துதாபாயைத் தொந்திரவு செய்யவும் தொடங்கினான். வசவுகளைப் பொறுத்துக் கொண்டு தண்ணீர் இழுத்துவரும்படி நான் அனைவருக்கும் சொன்னேன். நாங்கள் திரும்ப வையாததை அவன் கண்டபோது வெட்கமடைந்து எங்களைத் தொந்திரவு செய்வதை நிறுத்தி விட்டான்.

பண உதவியெல்லாம் நிறுத்தப்பட்டது. ஆசிரம விதிகளை அனுசரிக்கக் கூடிய தீண்டாதார் எங்கே கிடைப்பர் என்று கேள்வி கேட்ட நண்பர், அத்தகைய ஒருவர் வருவார் என எதிர் பார்க்கவேயில்லை.

சமூக பகிஷ்காரத்தைப் பற்றிய வதந்திகளும் ஏற்பட்டன. இவற்றிற்கெல்லாம் நாங்கள் ஆயத்தமாயிருந்தோம். எங்களைப் பகிஷ்காரஞ் செய்து சாதாரண வசதிகள் அளிக்கவும் மறுத்தபோதிலும் ஆமதாபாத்தை விட்டுப் போகக் கூடாதென்றும், அதைக் காட்டிலும் தீண்டா வகுப்பினர் வசிக்குமிடஞ் சென்று அங்கே உடலுழைப்பினால் கிடைப்பதைக் கொண்டு காலட்சேபம் செய்தல் நலமென்று என் நண்பர்களிடம் சொல்லியிருந்தேன்.

நிலைமை கடைசியில் நெருக்கடியாயிற்று. ஒரு நாள் மகன்லால் காந்தி "பணமெல்லாம் ஆகிவிட்டது. அடுத்த மாதத்திற்கு ஒன்றுமில்லை," என்னும் செய்தியைத் தெரிவித்தார்.

"அப்படியானல் நாம் தீண்டா வகுப்பாரின் இருப் பிடஞ் செல்வோம்" என்று அமைதியாகப் பதிலளித்தேன்.

இத்தகைய சோதனை எனக்கு நேர்ந்தது இது முதல் முறையன்று. சோதனை நேர்ந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆண்டவன் கடைசி நிமிஷத்தில் எனக்கு உதவி அனுப்பியே வந்தார். மகன்லால் ஆசிரமத்தின் பொருளாதார நிலைமையைப் பற்றி எச்சரிக்கை செய்து அதிக காலம் ஆவதற்குள் ஒரு நாள் காலை ஆசிரமக் குழந்தைதளில் ஒன்று ஓடிவந்து. ஸேத் ஒருவர் வாசலில் மோட்டார் வண்டியில் காத்திருப்ப தாகவும் என்னைப் பார்க்க விரும்புவதாகவும் கூறிற்று. அவரைப் பார்க்கச் சென்றேன். "ஆசிரமத்துக்குக் கொஞ்சம் பொருளுதவி செய்ய விரும்புகிறேன்; ஏற்றுக் கொள்வீர்களா?" என்று அவர் கேட்டார்

"நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன். தற்போது எங்கள் பணமெல்லாம் செலவழிந்து வெறுங் கையுடன் இருக்கிறோம்" என்றேன்.

"நாளை இந்நேரத்திற்கு இங்கு வருகிறேன். தாங்கள் இருப்பீர்களா?" என்று அவர் கேட்டார்.

"ஓ! இருக்கிறேன்" என்றேன். அத்துடன் அவர் புறப்பட்டுச் சென்றார்.

மறுநாள் குறிப்பிட்ட நேரத்திற்குச் சரியாக வண்டி வாசலில் வந்து நின்றது. கொம்பு ஊதிற்று. குழந்தைகள் செய்தி கொண்டு வந்தார்கள். ஸேத் உள்ளே வரவில்லை. அவரைப் பார்க்க நான் வெளியே வந்தேன். அவர் என் கையில் 13,000 ரூபாய் நோட்டுகளைக் கொடுத்துவிட்டு வண்டியை விட்டுக்கொண்டு சென்றார்.

இந்த உதவியை நான் எதிர்பார்க்கவேயில்லை. அதிலும் எவ்வளவு புதிய முறையில் உதவி! அந்தக் கனவான் அதற்கு முன் ஆசிரமத்துக்கு வந்ததேயில்லை. அவரை அதற்கு முன் ஒரே ஒரு முறைதான் பார்த்திருப்பதாக எனக்கு ஞாபகம். அவர் ஒருவித விசாரணையும் புரியவில்லை. ஆசிரமத்தைப் பார்வையிடவும் இல்லை. வந்து பணங் கொடுத்துவிட்டு உடனே போய் விட்டார்! இது எனக்கு முற்றும் புதிய அநுபவமாகும். இவ்வுதவியின் காரணமாக, தீண்டாதார் இருப்பிடத்துக்குக் குடி போதல் நின்று போயிற்று. இன்னும் ஓராண்டுக்குக் கவலையில்லை யென்று தைரியமடைந்தோம்.

வெளியில் அடித்த புயலைப்போலவே உள்ளேயும் புயல் குமுறிற்று. தென்னாப்பிரிக்காவில் தீண்டா வகுப்பு நண்பர்கள் என் வீட்டுக்கு வந்து என்னுடன் வசித்தலும், சாப்பிடுதலும் உண்டாயினும், தீண்டாதவர்களை இங்கு ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டது என் மனைவிக்கும் மற்றப் பெண்களுக்கும் பிடிக்கவில்லை. தனிபென்னிடம் அவர்கள் காட்டிய அசட்டையை என் கண்களும் செவிகளும் எளிதில் கண்டுபிடித்தன. அவளை அவர்கள் வெறுத்தார்கள் என்றும் சொல்லலாம். பணக் கஷ்டம் எனக்குக் கவலையை யுண்டுபண்ணவே இல்லை. ஆனால் இந்த உட்புயல் என்னால் பொறுக்க முடியாததாயிற்று. தனிபென் சாதாரண ஸ்திரீயே யாவள். துதாபாய் கொஞ்சம் படிப்பும், நல்ல அறிவும் உள்ளவர். அவர் பொறுமை எனக்குப் பிடித்திருந்தது. சில சமயம் அவர் கோபப்படைந்தா ரெனினும், மொத்தத்தில் அவரது சகிப்புத் தன்மை என் மனதைக் கவர்ந்தது. சிறு அவமதிப்புகளை யெல்லாம் காற்றில் விட்டுவிட்டுச் சும்மா

இருக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டேன். அவர் இதற்கு இணங்கியது மல்லாமல் தம் மனைவியையும் அவ்வாறே பொறுமையுட னிருக்கச் செய்தார்.

இந்தக் குடும்பத்தைச் சேர்த்துக் கொண்டது ஆசிரமத்துக்கே ஒரு நல்ல படிப்பினையாயிற்று. ஆரம்பத்திலேயே ஆசிரமத்தில் தீண்டாமை பாராட்ட மாட்டேனென்று உலகுக்குப் பகிரங்கமாய் அறிவித்து விட்டோம். ஆசிரமத்துக்கு உதவி செய்ய விரும்பியவர்களை எச்சரித்தவர்களானோம். இத்துறையில் ஆசிரமத்தின் வேலையும் பெரிதும் எளிதாயிற்று. இவையெல்லாம் தெரிந்தும், நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டிருந்த ஆசிரமச் செலவுகளை உண்மை வைதிக ஹிந்துக்களே பெரும்பாலும் கொடுத்து வந்தார்கள். தீண்டாமையின் அடிப்படை ஆட்டங்கொடுத்து விட்டதென்பதற்கு இது அறிகுறியல்லவா? இதற்கு இன்னும் எவ்வளவோ ருசுக்கள் உண்டாயினும், தீண்டாதவர்களுடன் மற்றவர்கள் சம பந்தியாகச் சாப்பிடக்கூடிய ஓர் ஆசிரமத்துக்கு ஹிந்துக்கள் உதவுகிறார்களென்பது சாமான்யமான ருசுவன்று.

இது சம்பந்தமாக இன்னும் பல விஷயங்களை விடுத்துப் போகவேண்டியிருப்பது குறித்து வருந்துகிறேன். இந்தப் பெரிய விஷயம் சம்பந்தமாக ஏற்பட்ட நுட்பமான சிறு பிரச்னைகளை எப்படித் தீர்த்து வைத்தோமென்பதும், எதிர் பாராத சில கஷ்டங்களை எப்படி நிவர்த்தி செய்தோமென்பதும் போன்ற சத்திய சோதனைக்குமுற்றும் சம்பந்தமுள்ள விஷயங்களை விடுத்துச் செல்லவேண்டி யிருக்கிறது. இனி வரப்போகும் அத்தியாயங்களும் இக்குறையுள்ளனவாகவே இருக்கும். இந்தச் சரித்திரத்தில் சம்பந்தமுடைய முக்கியமான மனிதர்கள் இன்னும் உயிரோ

டிருப்பதாலும், அவர்கள் சம்பந்தப்படும் நிகழ்ச்சிகளில் அவர்களுடைய அநுமதியின்றிப் பெயர்களைக் குறிப்பிடுதல் முறையன்றாதலாலும் பல முக்கியமான விவரங்களை விட்டு விட வேண்டி யிருக்கும். அவர்களுடைய அநுமதி பெறுவதோ, அவ்வப்போது அவர்கள் சம்பந்தப்படும் அத்தியாயங்களை அவர்களிடம் காட்டிப் பரிசோதிக்கச் செய்த பின்னர் வெளியிடுதலோ இயலாத காரியங்கள். மற்றும், அத்தகைய முறை சுய சரித்திரத்தின் எல்லைக்குட்பட்ட தன்று. ஆதலின் இனி வரும் பகுதி சத்திய தரிசன முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு மிக முக்கியமான தென்று நான் கருதுகிறேனாயினும், பல விஷயங்களை விட்டு விட்டே செல்ல வேண்டியதா யிருக்கும். இச் சரித்திரத்தை ஒத்துழையாமைக் காலம் வரையில் கொண்டு வந்துவிட வேண்டுமென்பது என் ஆசையாகும். இறைவன் அருள் இருந்தால் அது கைகூடுமென்றே நம்புகிறேன்,

---

பதினோராம் அத்தியாயம்

ஒப்பந்தக் கூலி முறை ஒழிந்தது

ஆரம்பத்திலேயே உட்புயல்களையும், வெளிப் புயல்களையும் சமாளிக்க வேண்டியிருந்த ஆசிரமத்தின் கதையைக் கொஞ்சம் நிறுத்தி. அதே காலத்தில் என் கவனத்தைக் கவர்ந்திருந்த மற்றொரு விஷயத்தைச் சிறிது கவனிப்போம்.

ஒப்பந்தத் தொழிலாளர் என்போர் ஐந்துவருஷ காலமோ, அதற்குக் குறைந்த காலமோ வேலை செய்வதாக ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து இந்தியாவிலிருந்து வெளி

நாடுகளில் குடியேறியவர்கள். 1914-ம் வருஷத்து ஸ்மட்ஸ்-காந்தி உடன்படக்கையின்படி ஒப்பந்தத் தொழிலாளர்மீது விதிக்கப்பட்ட மூன்று பவுன் தலைவரி எடுக்கப்பட்டு விட்டதாயினும், பொதுவாக இந்தியாவி லிருந்து தொழிலாளர் வெளிநாடு செல்வதைக் குறித்து இன்னும் கவனிக்க வேண்டியதா யிருந்தது.

1916-ம் ஆண்டில் ஒப்பந்தக்கூலி முறையை ஒழித்துவிடவேண்டு மென்று இந்திய சட்டசபையில் பண்டித மதன் மோகன மாளவியா ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். லார்டு ஹார்டிஞ்சு அத்தீர்மானத்தை ஒப்புக்கொண்டு, "உரிய காலத்தில் அம்முறையை ஒழித்துவிடுவதாக மன்னர் பெருமானின் (பிரிட்டிஷ்) அரசாங்கத்தினிட மிருந்து வாக்குறுதி பெற்றிருப்பதாய்" த் தெரிவித்தார். இத்தகைய வாக்குறுதியினால் இந்தியா திருப்தி யடைந் திருக்கக்கூடாதென்றும், உடனே அம்முறையை ஒழித்துவிட வேண்டுமெனக் கிளர்ச்சி செய்யவேண்டு மென்றும் நான் கருதினேன். இம்முறையை இந்தியா இதுவரை சகித்துக்கொண்டிருந்ததற்கு அலட்சிய புத்தியே காரணமாகும். ஜனங்கள் இதை ஒழிக்கவேண்டு மென்று கிளர்ச்சி செய்து வெற்றி பெறக்கூடிய காலம் வந்துவிட்டதென்று நம்பினேன். இவ்விஷயமாகத் தலைவர்கள் சிலரைச் சந்தித்துப் பேசியதிலிருந்தும், பத்திரிகைகளுக்கு எழுதியதிலிருந்தும் அம்முறையை உடனே ஒழிப்பதற்குப் பொதுஜன அபிப்பிராயம் சாதகமாயிருப்பதைக் கண்டேன். இது சத்தியாக்கிரஹத்தை மேற்கொள்வதற்குத் தகுந்ததொரு விஷய மாகுமாவென யோசித்தேன். சந்தேகமின்றி அது அத்தகையதே எனத் தெளிந்தேன். ஆனால் சத்தியாக்கிரஹத்தை எம்முறையில் கைக்கொள்வது என்று தெரியவில்லை.

இதற்கிடையில் "உரிய காலத்தில் ஒழித்தல்" என்பதின் பொருள் என்ன என்பது குறித்து இராஜப் பிரதிநிதி மூடுமந்திரம் எதுவும் செய்யாமல், "அம்முறைக்குப் பதில் வேறு ஏற்பாடுகள் செய்வதற்கு வேண்டிய நியாயமான காலம்" என்று விளக்கிக் கூறினர்.

எனவே, 1917-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் அம்முறையை உடனே ஒழிப்பதற்கென்று ஒரு மசோதா கொண்டுவர பண்டித மாளவியா அநுமதி கேட்டார். லார்ட் செம்ஸ்போர்டு இதற்கு அநுமதி கொடுக்க மறுத்துவிட்டார். எனவே, அது சம்பந்தமாக அகில இந்தியக் கிளர்ச்சி ஆரம்பித்தல் அவசியமென்றும், இதற்காக நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டு மென்றும் தீர்மானித்தேன்.

கிளர்ச்சியை ஆரம்பிப்பதற்கு முன்னால் இராஜப்பிரதிநிதியைப் பேட்டி காணுதல் முறையாகுமென்று நினைத்து அதற்காக விண்ணப்பித்துக் கொண்டேன். இராஜப் பிரதிநிதி உடனே அநுமதி தந்தார். மிஸ்டர் மாபி (இப்போது ஸர்ஜான் மாபி) அவரது அந்தரங்கக் காரியதரிசியா யிருந்தார். அவருடன் நெருங்கிய பழக்கம் பெற்றேன். லார்ட் செம்ஸ் போர்டுடன் நடந்த சம்பாஷணை திருப்திகரமாகவே யிருந்தது. அவர் திட்டமாக எதுவும் சொல்லாவிடினும் கூடியவரை உதவி செய்வதாகச் சொன்னார்.

சுற்றுப் பிரயாணம் பம்பாயில் தொடங்கினேன். ஏகாதிபத்திய பிரஜா உரிமைச் சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டம் நடத்த ஸ்ரீஜெஹாங்கீர் பெடிட் ஒப்புக்கொண்டார். கூட்டத்தில் நிறைவேற்றப் படவேண்டிய தீர்மானங்களைத் தயாரிப்பதற்காக மேற்படி சங்கத்தினர் நிர்வாகக் கமிட்டி

முதலில் கூடிற்று. கமிட்டி கூட்டத்தில் டாக்டர் ஸ்டான்லி ரீட், ஸ்ரீமான்கள் லலுபாய் ஸமல்தாஸ், நடராஜன், பெடிட் இவர்கள் பிரசன்னமா யிருந்தனர். அம்முறையை ஒழித்துவிட வேண்டுமென அரசாங்கத்தைக் கேட்பதன் சம்பந்தமாக, கால வரையறை குறிப்பதுபற்றி விவாதம் நடந்தது. "கூடிய சீக்கிரத்தில்" என்றும், "உடனே" என்றும், "ஜூலை 31உக்குள்" என்றும் மூன்றுவித யோசனைகள் இருந்தன. திட்டமான ஒரு தேதி குறிப்பிட வேண்டு மென்றும், அப்போது தான், அத்தேதிக்குள் அரசாங்கம் நமது கோரிக்கைக் கிணங்காவிட்டால் என்ன செய்வதென்று தீர்மானிக்க முடியும் என்றும் நான் சொன்னேன். ஸர் லலுபாய் "உடனே" என்று குறிப்பிடு வதற்குச் சாதகமா யிருந்தார். "உடனே" என்றால் "ஜூலை 31உ" யை விடக் குறுகிய காலமல்லவா என்று அவர் கேட்டார். "உடனே" என்பதின் பொருள் ஜனங்களுக்கு விளங்காதென்றும், அவர்களை ஏதேனும் காரியம் செய்யப் பண்ணவேண்டுமானால் திட்டமான வார்த்தையை உபயோகிக்க வேண்டுமென்றும் நான் எடுத்துக் காட்டினேன். உடனே என்றால் ஒவ்வொரு வரும் தத்தமக்கு இசைந்தபடி பொருள் கொள்வார்கள். அரசாங்கத்தார் ஒருவிதமாகவும், ஜனங்கள் மற்றொரு விதமாகவும் அர்த்தம் செய்து கொள்வார்கள். "ஜூலை 31உ" என்று குறிப்பிட்டுவிட்டால் யாரும் தப்பர்த்தம் செய்துகொள்ள இடமில்லை. அதற்குள் எதுவும் நடவா விட்டால் நாம் மேலே காரியம் செய்யலாம். என்னுடைய வாதத்தின் நியாயத்தை டாக்டர் ரீட் உணர்ந்தார். கடைசியில் ஸர் லலுபாயும் சம்மதித்தார். ஆகவே ஜூலை 31உக்குள் ஒப்பந்தக் கூலிமுறை ஒழிக்கப்பட வேண்டு

மென்று நாங்கள் முடிவு செய்தோம். பொதுக்கூட்டத்தில் அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தியா முழுவதிலும் நடந்த பொதுக்கூட்டங்களும் அவ்வாறே தீர்மானித்தன.

ஸ்ரீமதி ஜயஜீ பெடிட் இராஜப் பிரதிநிதியைப் பேட்டி காண மாதர் பிரதிநிதிக் கூட்டமொன்றை அமைப்பதற்குப் பெரு முயற்சி செய்தார். அப்பிரதிநிதிக் கூட்டத்தில் சேர்ந்திருந்த பம்பாய் பெண்மணிகளில் லேடி டாடா, தில்ஷத் பீகம் இவர்களின் பெயர்கள் எனக்கு நினைவிருக்கின்றன இப் பிரதிநிதிக் கூட்டத்தினால் பெரும் பயன் விளைந்தது. இராஜப் பிரதிநிதியும் அவர்களுக்கு நம்பிக்கை யூட்டும்படியான பதில் அளித்தார்.

கராச்சி, கல்கத்தா முதலிய பல இடங்களுக்குச் சென்றேன். எல்லா விடங்களிலும் பெரிய கூட்டங்கள் நடைபெற்றன. எங்கும் உற்சாகம் ததும்பிற்று. கிளர்ச்சியை ஆரம்பித்தபோது இவ்வளவு பலமாகுமென்று நான் எதிர்பார்க்கவே யில்லை.

அந்நாளில் நான் தனிமையாகப் பிரயாணம் செய்தபடியால் மிகச் சிறந்த அநுபவங்கள் பல ஏற்பட்டன. இரகசியப் போலீஸார் எப்போதும் என்னைப் பின் தொடர்ந்தனர். ஆனால் மறைப்பதற்கு என்னிடம் எதுவுமில்லாதிருந்த படியால் அவர்கள் என்னைத் தொந்திரவு செய்யவில்லை. அவர்களுக்கும் நான் கஷ்டம் எதுவும் விளைவிக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக நான் இன்னும் "மகாத்மா" பதவி பெற்றுவிடவில்லை யென்றாலும், ஜனங்கள் என்னை அறிந்திருந்த இடங்களில் அப்பெயர் சொல்லிக் கூச்சலிடுதல் அப்போதே வழக்கமாகி விட்டது.

ஒரு சமயம் இரகசியப் போலீஸார் பல ஸ்டேஷன் களில் எனக்குத் தொந்திரவு கொடுத்தார்கள். என்னுடைய ரயில் சீட்டைக் காட்டச் சொல்லி அதன் இலக்கத்தைக் குறித்துக் கொண்டார்கள். அவர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் நான் உடனுக்குடனே பதில் கூறினேன். என்னுடன் பிரயாணம் செய்தவர்கள் என்னை யாரோ "சாது" என எண்ணிக் கொண்டார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் நான் தொந்திரவு செய்யப்படுவதைப் பார்த்தபோது அவர்கள் கோபங்கொண்டு துப்பறிபவர்க ளைத் திட்டினார்கள். "அந்தச் சாதுவை ஏன் காரண மின்றித் தொந்திரவு செய்கிறீர்கள்?" என்று அவர்கள் கண்டித்தார்கள். "இந்தப் போக்கிரிப் பயல்களிடம் சீட் டைக் காட்டாதீர்கள்" என்று எனக்குச் சொன்னார்கள்.

"அவர்களுக்கு என் சீட்டைக் காட்டுவதில் கஷ்டம் ஒன்றுமில்லை, அவர்கள் தங்கள் கடமையையே செய்கிறார் கள்" என்று நான் சாந்தமாகப் பதிலளித்தேன். பிரயாணி கள் இதனால் திருப்தி யடைய வில்லை. வர வர அவர்கள் அதிக அநுதாபம் காட்டியதுடன், குற்றமற்றவர்களை இவ்வாறு தொந்திரவு செய்வது பற்றிப் பலமாக ஆட் சேபித்தார்கள்.

ஆனால் துப்பறிபவர்களின் தொல்லையைத் தொல்லை யென்றே சொல்வதற்கில்லை. உண்மையில் தொல்லையா யிருந்தது மூன்றாம் வகுப்புப் பிரயாணமே யாகும். அதிலும் லாகூரிலிருந்து டில்லிக்குப் போகும்போது நான் அடைந்த கஷ்டத்தைச் சொல்ல முடியாது. கராச்சியிலிருந்து லாகூர் வழியாகக் கல்கத்தா சென்றேன். லாகூரில் வண்டி மாற்ற வேண்டும். வண்டியில் இடம் கண்டுபிடித்தல் அசாத்தியமா யிருந்தது. வண்டி நிறைய ஜனங்கள் இருந்தார்கள். பலாத்

காரமாக இடித்துத் தள்ளிக்கொண்டு ஏறுபவர்களே வண்டியில் ஏற முடியும். கதவு பூட்டியிருந்த வண்டிகளில் சிலர் ஜன்னல் வழியாகப் புகுந்து உள்ளே குதித்தார்கள் பொதுக் கூட்டத்திற் சென்று குறிப்பிடப்பட்ட தேதியில் நான் கல்கத்தா போய்ச் சேரவேண்டும். இந்த வண்டி தவறினால் அன்றைய தினம் போய்ச் சேர முடியாது. வண்டியில் ஏறலாம் என்னும் நம்பிக்கையை அநேகமாக இழந்து விட்டேன். என்னை உள்ளே ஏற்றிக்கொள்ள யாரும் விரும்பியதாகத் தெரியவில்லை. இச் சந்தர்ப்பத்தில் என்னுடைய அவஸ்தையைக் கவனித்த ஒரு போர்ட்டர் என்னிடம் வந்து "பன்னிரண்டு அணா கொடுங்கள். உங்களுக்கு இடந்தேடித் தருகிறேன்" என்றான். "சரி, இடம் பிடித்துத் தந்தால் கட்டாயம் 12 அணா கொடுக்கிறேன்" என்று. நான் கூறினேன். அவன் ஒவ்வொரு வண்டியாகச் சென்று பிரயாணிகளை மன்றாடிக் கேட்டுக் கொண்டான். யாரும் அவனுக்குச் செவி கொடுக்கவில்லை. கடைசியாக வண்டி புறப்படும் சமயத்தில் சிலர் "உட்காருவதற்கு இங்கே இடமில்லை. வேண்டுமானால் உள்ளே தள்ளு; நின்றுகொண்டே வரட்டும்" என்றார்கள். போர்ட்டர் என்னைப் பார்த்து "என்ன சொல்கிறீர்கள்" என்றான். நான் உடனே சம்மதித்தேன் அவன் என்னைத் தூக்கி ஜன்னல் வழியாக உள்ளே பிடித்துத் தள்ளினான். இவ்வாறு வண்டியி லேறினேன். போர்ட்டர் 12 அணா பெற்றுச் சென்றான்.

அன்றிரவு பெருஞ் சோதனையா யிருந்தது. மற்றப் பிரயாணிகள் எப்படியோ நெருக்கியடித்து உட்கார்ந்திருந்தார்கள். நான் மேல் தட்டின் சங்கிலியைப் பிடித்துக்

கொண்டு இரண்டு மணி நேரம் நின்றுகொண்டே வந்தேன். பிரயாணிகளில் சிலர் என்னை ஓயாது தொந்திரவு செய்து கொண்டிருந்தார்கள். "ஏனையா, நிற்கிறீர்? உட்காரக் கூடாதா?" என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். உட்கார இடமில்லை யென்பதை அவர்களுக்குச் சாந்தமாக எடுத்துக் காட்ட முயன்றேன். ஆனால் மேல் தட்டில் காலை நீட்டிப் படுத்துக்கொண்டிருந்த அவர்களுக்கு நான் நிற்பதுகூடச் சகிக்கவில்லை. ஓயாமல் தொந்திரவு செய்து கொண்டே இருந்தார்கள். நானும் அவர்களுக்குச் சாந்த மாகப் பதில் சொல்லிக்கொண்டே வந்தேன். இதனால் கடைசியில் அவர்களுக்குக் கோபம் தணிந்தது. சிலர் என் பெயரைக் கேட்டார்கள். நான் சொன்னபோது அவர்கள் பெரிதும் வெட்க முற்றார்கள். என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இடம் ஒழித்தும் கொடுத் தார்கள். இவ்வாறு பொறுமை பயனளித்தது. நான் பெரிதும் களைப்புற்றிருந்தேன். என் தலை சுழன்றது. உதவி மிகவும் அவசியமான தருணத்தில் பகவான் உதவி யனுப்பினார்.

இவ்வாறு எப்படியோ டில்லியை யடைந்து அங்கிருந்து கல்கத்தா போய்ச் சேர்ந்தேன். அங்கே காஸிம்பஜார் மகாராஜா வீட்டில் தங்கினேன். பொதுக் கூட்டத்துக்கும் அவர் தான் தலைமை வகித்தார். கராச்சி யைப் போலவே இங்கும் ஜனங்கள் அளவில்லா உற்சாகம் காட்டினார்கள். கூட்டத்தில் பல ஆங்கிலேயரும் பிரசன் னமா யிருந்தனர்.

இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலி யனுப்பும் முறை நிறுத்தப்பட்டு விட்டதாக ஜூலை 31உக்கு முன்னால் இந்திய அரசாங்கத்தார் அறிக்கை வெளியிட்டனர்.

முதன் முதலாக 1894-ம் ஆண்டில் இம்முறையைக் கண்டித்து நான் விண்ணப்பம் தயாரித்தேன். "பாதி அடிமைத்தனம்" என்று ஸர் வில்லியம் ஹண்டரால் கூறப் பட்ட அம்முறை என்றேனும் ஒரு நாள் முடிவு பெறும் என்று அக்காலத்திலேயே நான் நம்பியதுண்டு.

1894-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட இக்கிளர்ச்சிக்கு உதவி செய்தவர்கள் பலர் ஆவர். ஆனால் அதன் பொருட்டு சத்தியாக்கிரஹம் மேற்கொள்ளச் சித்தமா யிருந்தபடியால் தான் அது அவ்வளவு விரைவில் முடிவுற்றது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

அக்கிளர்ச்சியையும் அதில் ஈடுபட்டவர்களையும் பற்றிய மற்ற விவரங்களை நேயர்கள் நான் எழுதிய "தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹ சரித்திர"த்தில் காணலாம்,

---

பன்னிரண்டாம் அத்தியாயம்

அவுரித் தோட்ட அநீதி

சம்பரான், ஜனக மகாராஜன் ஆட்சி புரிந்த நாடாகும். அங்கு மாந்தோப்புகள் ஏராளம். அவ்வாறே 1917-ம் ஆண்டு வரை அவுரித் தோட்டங்களும் அதிகமா யிருந்தன. சம்பரான் குடியானவன் ஒவ்வொருவனும் தன் நிலத்தில் 20-ல் 3 பங்கில் நிலச்சுவான்தாரனுக்காக அவுரி பயிரிடவேண்டுமென்று சட்டம் இருந்தது. இதற்குத் 'தீன் கதியா' முறை என்று பெயர். ஓர் ஏக்கராவிலுள்ள 20 கதாக்களில் 3 கதா கட்டாயம் அவுரி பயிரிட வேண்டு மாதலால் இம்முறைக்கு அப்பெயர் வந்தது.

அப்போது சம்பரான் என்னும் பெயரையே நான் கேள்விப்பட்டதில்லை. அது இருக்குமிடம் தெரியாது என்று சொல்ல வேண்டியதில்லை யன்றோ? அவுரித் தோட்டங்களைப் பற்றியும் நான் யாது மறியேன். அவுரிப் பொட்டணங்களைப் பார்த்ததுண்டு. ஆனால் அந்த அவுரி, சம்பரானில் ஆயிரக்கணக்கான குடியானவர்களை எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளாக்கி விளைந்தது என்னும் விவரம் தெரியவே தெரியாது.

இராஜ குமார சுக்லா என்பார் இத்துன்பங்களை அநுபவித்த குடியானவர்களில் ஒருவர் தாம் பட்டதுபோல் இன்னும் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஆயிரக் கணக்கான குடியானவர்களுக்குக் கதி மோக்ஷம் பிறக்க வேண்டுமென்று அவர் அடங்காத் தாபம் கொண்டிருந்தார்.

இந்த மனிதர் லக்னௌவில் என்னைத் தேடிப் பிடித்தார். அங்கே 1916-ம் வருஷத்துக் காங்கிரஸுக்காகப் போயிருந்தேன். "எங்களுடைய துயரங்களைப்பற்றி வக்கீல் பாபு உங்களுக்குச் சொல்வார்" என்று அவர் கூறி என்னைச் சம்பரானுக்கு வரவேண்டுமென்று வற்புறுத்தினார். "வக்கீல் பாபு" என்று அவர் குறிப்பிட்டது பாபு விரஜகிஷோர் பிரஸாத் அவர்களைத் தான். சம்பரானில் என்னுடைய சக ஊழியரானவரும், பீஹாரில் எல்லாப் பொது வேலைகளுக்கும் உயிர் நிலையாயிருப்பவரும் அவர் தான். இராஜ குமார சுக்லா அவரை என் கூடாரத்திற்கு அழைத்து வந்தார். அவர் கறுப்பு அல்பாகா மேற்சட்டையும், நிஜாரும் தரித்திருந்தார். அப்போது விரஜகிஷோர் பிரஸாதிடம் எனக்கு அவ்வளவு நல்லெண்ணம் உண்டாகவில்லை. ஒன்றுமறியாத குடியானவர்களின் பணத்தைப் பறித்துப் பிழைக்கும் வக்கீல்களில் அவர்

ஒருவராயிருக்க வேண்டும் என எண்ணினேன். அவரிடத்தில் சம்பாரானைப் பற்றிச் சிறிது கேள்விப்பட்டதும் என் வழக்கத்தை யனுசரித்து, "நிலைமையை நேரில் பார்ப்பதற்கு முன்னால் நான் அபிப்பிராயம் எதுவும் கூற முடியாது. தயவு செய்து இவ்விஷயமாகக் காங்கிரஸில் தீர்மானங் கொண்டு வாருங்கள். ஆனால் இப்போதைக்கு என்னைச் சும்மா விட்டு விடுங்கள்" என்றேன். இராஜகுமார சுக்லா காங்கிரஸினிடமிருந்தும் உதவி வேண்டாமலில்லை. சம்பரான் ஜனங்களிடம் அநுதாபந் தெரிவிக்கும் தீர்மானமொன்றை பாபு விரஜகிஷோர் பிரஸாத் கொணர்ந்தார். அது ஏகமனதாக நிறைவேறியது.

இராஜகுமார சுக்லா மகிழ்ச்சி யடைந்தாராயினும் திருப்தி பெற்று விடவில்லை. நான் சம்பாரானுக்கு நேரில் வந்து அங்குள்ள குடியானவர்களின் துயரங்களைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்று அவர் விரும்பினார். நான் உத்தேசித்திருக்கும் சுற்றுப் பிரயாணத்தில் சம்பாரானையும் சேர்த்துக்கொண்டு அதற்கு இரண்டொரு நாள் தருவதாக வாக்களித்தேன். "ஒரு நாளே போதும். அதற்குள் உங்கள் கண்ணாலேயே எல்லாம் பார்த்து விடுவீர்கள்" என்றார் சுக்லா.

லக்னௌவிலிருந்து கான்பூருக்குச் சென்றேன். இராஜ குமாரர் அங்கும் என்னைப் பின் தொடர்ந்து வந்தார். "சம்பாரான் இங்கிருந்து சமீபத்தில் தான் இருக்கிறது. ஒரே ஒரு நாள் கொடுங்கள்" என்று அவர் வற்புறுத்தினார். "இந்த முறை மன்னித்து விடுங்கள். மற்றொரு சமயம் கட்டாயம் வருகிறேன்" என்று என் வாக்குறுதியை மீண்டும் உறுதிப் படுத்தினேன்,

ஆங்கிருந்து ஆசிரமம் சென்றேன். விடாக் கண்டராகிய இராஜகுமார் அங்கும் வந்து சேர்ந்தார். "இப்பொழுதே நீங்கள் வரும் நாளைக் குறிப்பிட்டு விடுங்கள்" என்றார். "நல்லது, இன்ன தேதியில் நான் கல்கத்தாவில் இருப்பேன். அங்கு வந்து என்னைச் சந்தித்து அழைத்துப் போங்கள்" என்று பதிலளித்தேன். எங்கே போவது, என்ன செய்வது, எதைப் பார்ப்பது என்று எனக்கு ஒன்றும் தெரியாதல்லவா?

நான் கல்கத்தா சேர்வதற்கு முன்னாலேயே இராஜகுமார சுக்லா ஆங்கடைந்து, பூபேந்திரநாத் வஸுவின் வீட்டில் தயாராய்க் காத்திருந்தார். இவ்வாறு, கல்வியறிவு இல்லாதவரும், கபடமற்ற சாதுவும், ஆனால் உறுதியுள்ளவருமான இக் குடியானவர் என்னைக் கைப்பற்றிக் கொண்டார்.

1917-ம் ஆண்டின் ஆரம்பத்தில் நாங்கள் கல்கத்தாவிலிருந்து சம்பாரானுக்குப் பிரயாணமானோம். இருவரும் பட்டிக்காட்டுக் குடியானவர்கள் போலவே காணப்பட்டோம். இந்த வண்டியில் ஏறுவதென்பதுகூட எனக்குத் தெரியாது. அவர்தான் என்னை வண்டிக்கு அழைத்துப்போனார். இருவரும் சேர்ந்தாற்போல் பிரயாணம்செய்து காலையில் பாட்னா சேர்ந்தோம்.

பாட்னாவுக்கு இப்போதுதான் முதல் முறையாக நான் சென்றேன். அங்கே யாராவது நண்பர் அல்லது தெரிந்தவர் வீட்டில் தங்கலாமென்பதற்கு அத் தகையவர் யாரும் இல்லை. இராஜகுமார் சுக்லா சாதாரண குடியானவரேயாயினும் அவருக்குப் பாட்னாவில் கொஞ்சம் செல்வாக்கு இருக்க வேண்டுமென எண்ணியிருந்தேன். பிரயாணத்தின்போது அவரைப்பற்றி இன்னும்

கொஞ்சம் நன்ருய்த் தெரிந்தது. ஆனால் பாட்ன சேர்ந்ததும் சிறிதும் சந்தேக மில்லாமற் போயிற்று. பாவம்! அவருக்கு உலக விஷயம் ஒன்றுமே தெரியாது. அவர் தமது நண்பர்களென்று எண்ணிக் கொண்டிருந்த வக்கீல்கள் அவரைத் தங்கள் குற்றேவல்காரனுக நினைத்தார்கள். பட்டிக்காட்டுக் கட்சிக்காரர்களையும் அவர்களுடைய வக்கீல்களையும் கங்கா நதியின் வெள்ளத்தை யொத்த அகழ் பிரித்து நிற்கிறது என்று சொல்லுதல் மிகையாகாது.

இராஜகுமார் சுக்லா இராஜேந்திர பாபுவின் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார். இராஜேந்திர பாபு பூரிக்கோ, வேறிடத்துக்கோ (நன்கு ஞாபகமில்லை) போயிருந்தபடியால் அவரைக் காண்பதற் கில்லை. பங்களாவில் இரண்டொரு வேலைக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் எங்களைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. கையில் கொஞ்சம் ஆகாரம் இருந்தது. பேரீச்சம்பழம் வேண்டுமென்று சொன்னேன். அந்நண்பர் போய் வாங்கி வந்தார்.

பீஹாரில் தீண்டாமை மிகக் கடுமையாய் அனுஷ்டிக்கப்பட்டது. வேலைக்காரர்கள் கிணற்றில் தாங்கள் ஜலம் இழுத்துக் கொண்டிருந்தபோது நான் இழுக்கக் கூடாதென்று சொன்னார்கள். என்னுடைய வாளியிலிருந்து தண்ணீர்த் துளிகள் தெரித்துவிட்டால் அவர்கள் தீட்டாய்ப் போய் விடுவார்களாம். நான் என்ன சாதியானே, வேலைக்காரர்களுக்குத் தெரியாதல்லவா? இராஜகுமார் உள்ளிருந்த கக்கூசை எனக்குக் காட்டினர். வேலைக்காரர்கள் உடனே வெளிக் கக்கூசுக்குப் போகச் சொன்னர்கள். ஆனால் இவை யெல்லாம் எனக்கு வியப்பளிக்கவும் இல்லை; கோபமூட்டவுமில்லை. அநுபவித்து

அநுபவித்து அவை உறைத்துப் போயிருந்தன. வேலைக்காரர்கள், பாவம், என் செய்வார்கள்? தங்கள் கடமையென்று கருதியதையே அவர்கள் செய்தார்கள். இராஜேந்திர பாபு அப்படிச் செய்தலையே விரும்புவாரென அவர்கள் எண்ணினார்கள்.

இத்தகைய ருசிகரமான அநுபவங்களினால் இராஜகுமார் சுக்லாவின் சக்தி இவ்வளவுதான் என்று நான் நன்கறிந்து கொண்டேனாயினும், அவரிடம் எனக்கு மதிப்பு அதிகமேயாயிற்று. ஆனால் இராஜகுமாரினால் எனக்கு வழி காட்ட முடியாதென்றும், லகானை நானே கையிலெடுத்துக் கொள்ள வேண்டியதுதா னென்றும் கண்டேன்.

பதின்மூன்றும் அத்தியாயம்

சாது பீஹாரிகள்

மௌலானா மஷ்ருல்ஹக் லண்டனில் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த போது அவருடன் அறிமுகம் பெற்றிருந்தேன். மீண்டும் 1925-ம் ஆண்டில் பம்பாய் காங்கிரஸில் அவரை நான் சந்தித்தேன். அவ்வருஷம் முஸ்லிம் லீக் அவர் அக்கிராசனத்தின் கீழ் நடந்தது. எப்போதாவது பாட்னாவுக்கு நான் போகும்படி நேர்ந்தால் தம் வீட்டில் வந்து தங்கும்படி அவர் என்னை அழைத்திருந்தார். இப்போது அந்த ஞாபகம் வரவே நான் வந்த காரியத்தைக் குறிப்பிட்டு அவருக்கு ஒரு சீட்டு எழுதி அனுப்பினேன். அவர் உடனே தமது மோட்டார் வண்டியில் ஏறிவந்து நான் அவரது விருந்தினனாக வேண்டுமென்று வற்புறுத்தினார்

அவருக்கு வந்தன மளித்துவிட்டு, நான் போகவேண்டிய இடத்துக்கு முதல் வண்டி எதுவோ அதில் ஏற்றி அனுப்பும் படி கேட்டுக்கொண்டேன். என்னைப்போன்ற முற்றும் புதிய மனிதனுக்கு ரயில்வே 'கைட்' உபயோகப்படவில்லை. எனவே அவர் இராஜகுமார சுக்லாவுடன் கலந்துகொண்டு முதலில் நான் முஸபர்பூருக்குச் செல்லுதல் நலமென்று சொன்னார். அன்று மாலையே அவ்விடத்துக்குப் புறப்பட்ட ரயிலில் என்னை ஏற்றி அனுப்பினார்.

அப்போது ஆசிரியர் கிருபாலனி முஸபர்பூரில் இருந் தார். (சிந்து) ஹைதராபாத்துக்கு நான் போன நாளி லிருந்து அவரை அறிவேன். அவரது அரிய தியாகங்களைப் பற்றியும், எளிய வாழ்க்கையைப் பற்றியும், டாக்டர் சோயித்ராம் எனக்குச் சொல்லி யிருந்தார். டாக்டர் சோயித்ராம் நடத்திக்கொண்டிருந்த ஆசிரமம், ஆசிரியர் கிருபாலனி கொடுத்த நிதியைக் கொண்டு தான் நடந்து வந்தது. நிற்க, முஸபர்பூர் அரசாங்கக் கல்லூரியில் ஆசிரியரா யிருந்த ஸ்ரீ கிருபாலனி நான் அவ்விடம் சென்ற தற்குச் சற்று முன்பு தான் அவ்வேலையை ராஜீனமா செய் திருந்தார். என் வரவைப்பற்றி அவருக்கு முன்னதாகத் தந்தி கொடுத்தேன். வண்டி நள்ளிரவில் முஸபர்பூர் போய்ச் சேர்ந்ததாயினும் அவர் ஏராளமான மாணக்கர்க ளுடன் என்னை ஸ்டேஷனில் வந்து சந்தித்தார். அவ ருக்குச் சொந்த ஜாகை கிடையாது. ஆசிரியர் மால் கானியுடன் அவர் வாசம் செய்து வந்தார். ஆதலின் நானும் ஆசிரியர் மால்கானியின் விருந்தினனானேன். அரசாங்கக் கல்லூரியின் ஆசிரியர் ஒருவர் என்னைப்போன்ற மனித னுக்கு இடங் கொடுப்பது அக்காலத்தில் மிக அபூர்வமான சம்பவமாகும்.

பீஹாரில் முக்கியமாக திர்ஹுத் பகுதியில் குடிகொண்டிருந்த சகிக்க முடியாத நிலைமையைப் பற்றி ஆசிரியர் கிருபாலனி எனக்கு விவரமாகக் கூறினர். அத்துடன் என் வேலை எத்துணைப் பிரயாசையானது என்பது பற்றியும் தெரிவித்தார். அவர் பீஹார் வாசிகளுடன் நெருங்கிப் பழகி நட்புரிமை கொண்டிருந்தவர். நான் பீஹாருக்கு வந்த காரியத்தைப்பற்றி அவர்களுக்குச் சொல்லியிருந்தார்.

காலையில் சில வக்கீல்கள் கூட்டமாக என்னைப்பார்க்க வந்தார்கள். அவர்களில் இராமநவமி பிரஸாத் என்பவரைப் பற்றி இன்னும் எனக்கு நினைவு இருக்கிறது. அவர் மற்றவர்களைவிட மிகவும் சிரத்தை யுள்ளவராகத் தோன்றினர். "நீங்கள் இங்கே (அதாவது ஆசிரியர் மால்கானியின் ஜாகையில்) தங்கினல் என்ன காரியத்துக்காக வந்தீர்களோ அதைச் செய்தல் இயலாத காரியம். எங்களில் ஒருவருடைய வீட்டுக்கு நீங்கள் வந்து தங்க வேண்டும். கயா பாபு இங்கே பிரபல வக்கீல்களில் ஒருவர். அவரின் சார்பாக உங்களை அழைப்பதற்கு வந்திருக்கிறேன். நாங்களெல்லாரும் அரசாங்கத்தினிடம் அச்ச முடையவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆயினும் எங்களாலியன்ற உதவி உங்களுக்குச் செய்கிறோம். இராஜகுமார் உங்களிடம் தெரிவித்துள்ள விஷயங்கள் பெரும்பாலும் உண்மையே. இன்று எங்கள் தலைவர்கள் இங்கு இல்லாதிருப்பது வருந்தத்தக்கது. எனினும் பாபு விரஜ கிஷோர் பிரஸாதுக்கும், பாபு இராஜேந்திர பிரஸாதுக்கும் தந்தியடித்திருக்கிறேன். அவர்கள் சீக்கிரத்தில் வந்து சேரலாம். உங்களுக்கு வேண்டிய எல்லாத் தகவல்களும் அவர்கள் அளிப்பதுடன் பெரிதும் உங்களுக்கு உதவியும்

செய்யக்கூடும். தயவுசெய்து கயாபாபுவின் வீட்டுக்கு வாருங்கள்" என்று இராமநவமி பிரஸாத் சொன்னார்.

இந்த வேண்டுகோளை நான் மறுக்க முடியவில்லை. கயாபாபுவுக்கு என்னால் தொந்திரவா யிருக்குமோவென்று கொஞ்சம் தயங்கினேன். ஆனால் அவர் அப்படி யொன்று மில்லை யென்று உறுதி கூறியதின்மீது அவர் வீடு சென்று தங்கினேன். அவரும் அவரது வீட்டாரும் என்னிடம் அளவற்ற பிரியங் காட்டி உபசரித்தார்கள்.

தர்பங்காவிலிருந்து விரஜகிஷோர் பிரஸாதும், பூரியி லிருந்து இராஜேந்திர பிரஸாதும் இதற்குள் வந்து சேர்ந்தனர். விரஜகிஷோர் பாபு நான் லக்னௌவில் பார்த்த மனிதராக இங்கில்லை. இம்முறை அவர், பீஹார் வாசிகளுக்குச் சிறப்பாக உரிய தாழ்மைக் குணம், எளிய வாழ்வு, பெருந்தன்மை, அளவிலா நம்பிக்கை ஆகிய இக் குணங்களினால் என் மனதைக் கவர்ந்தார். நான் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினேன். பீஹார் வக்கீல்கள் அவரிடம் எவ்வளவு மதிப்புக் கொண்டிருந்தார்கள் என்பதைக் கண்டு ஓரளவு வியப்பும் சந்தோஷமும் அடைந்தேன்.

விரைவிலேயே நான் இந்தக் கூட்டத்தாருடன் அத்தி யந்த நட்பென்னும் தளையினால் பிணைக்கப்பட்டேன். விரஜகிஷோர் பாபு அங்கிருந்த நிலைமை குறித்து எனக்கு எல்லா விவரங்களும் தெரிவித்தார். ஏழைக் குடியான வர்களின் வழக்குகளை அவர் ஏற்றுக்கொண்டு நடத்துதல் வழக்கமென அறிந்தேன். நான் சென்றபோது அத்தகைய வழக்குகள் இரண்டு நடந்து கொண்டிருந்தன. அவ் வழக்குகளில் வெற்றி பெற்றால் அந்த ஏழை ஜனங்களுக்கு ஏதோ கொஞ்சம் உதவி செய்ததாக எண்ணி அவர் ஆறுதல் அடைவாராம். கபடற்ற அக் குடியானவர்களிடம்

அவர் இவ் வழக்குகளுக்காக சன்மானம் பெறுமவில்லை. வக்கீல்கள் பொதுவாக, வழக்குகளுக்குப் பணம் வாங்கா விட்டால் தங்கள் குடும்பத்தை நிர்வகிக்க முடியாதென்றும், எனவே ஏழைகளுக்குப் பயனுள்ள உதவி செய்ய முடியாமற் போய்விடு மென்றும் நம்பிக்கை யுள்ளவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் வாங்கும் பணத்தைப் பற்றியும், வங்காளத்திலும் பீஹாரிலும் சாதாரணமாக பாரிஸ்டர்களின் சன்மான விகிதத்தைப் பற்றியும் கேள்விப்பட்டு நான் திகைத்துப் போய்விட்டேன்.

"பாரிஸ்டர்........இன்னாரிடம் அபிப்பிராயம் கேட்டதற்கு ரூ. 10,000 கொடுத்தோம்" என்று சொன்னார்கள். ஆயிரத்துக்குக் குறைந்த தொகை யாருக்குமே கொடுக்கப்படுவதில்லை யென்று தெரிந்தது.

இது சம்பந்தமாக நான் கண்டித்துப் பேசியதை அந் நண்பர்கள் பொறுமையாகக் கேட்டார்கள். யாரும் பிழை படக் கொள்ளவில்லை.

நான் அவர்களிடம் கூறியதாவது:—"நிலைமையை நான் ஆராய்ந்ததிலிருந்து, கோர்ட்டுகளுக்குப் போவதையே நிறுத்திவிட வேண்டுமென்று முடிவுக்கு வந்துள்ளேன். இத்தகைய வழக்குகளைக் கோர்ட்டுக்கும் கொண்டு போவதால் நலன் விளையாது. குடியானவர்கள் இவ்வாறு நசுக்கப்பட்டுப் பயத்தில் மூழ்கிக் கிடக்கும்போது நீதி மன்றங்கள் பயனற்றவையாகின்றன. பயத்திலிருந்து விடுவிப்பதே அவர்களுக்குச் செய்யவேண்டிய முக்கியமான உதவி. பீஹாரிலிருந்து 'தீன்கதியா' முறையே அடியோடு தொலையும் வரையில் நாம் சும்மா உட்கார முடியாது. இரண்டு தினங்களில் நான் இங்கிருந்து போய்விடலாமென்று எண்ணி யிருந்தேன் இவ்வேலை யிரண்டு

வருஷங்கூடப் பிடிக்கலாம் என்று இப்போது தோன்று கிறது. அவசியமானால் அவ்வளவு காலம் இதற்காகச் செல விடவும் தயாரா யிருக்கிறேன். செய்ய வேண்டிய வேலை யைப்பற்றி ஓரளவு எனக்குப் பிடிபட்டிருக்கிறது ஆனால் உங்களுடைய உதவி வேண்டும்"

விரஜகிஷோர் பாபு மிக அபூர்வமான நிதான புத்தி யுள்ளவரெனக் கண்டேன். "எங்களால் கூடிய உதவி செய்யத் தயாராயிருக்கிறோம். ஆனால் என்ன விதமான உதவி வேண்டுகிறீர்கள் என்று தெரிவியுங்கள்." என்று அவர் சாந்தமாகக் கூறினர்.

இவ்வாறு நடுஜாமம் வரையில் பேசிக்கொண் டிருந்தோம்.

நான் கூறியதாவது:—"உங்களுடைய சட்டஞானமும் எனக்குப் பயன்படாது. எழுத்து வேலைக்கும், மொழி பெயர்ப்பதற்குமே எனக்கு உதவி தேவை. சிறை புகுவதும் அவசியமாகலாம். ஆனால் அதற்கும் நீங்கள் துணியவேண்டுமென்று நான் விரும்புகிறே ஞயினும் எவ்வளவு தூரம் போகலாமென உங்களுக்குப் பூரண தைரியம் இருக்கிறதோ அவ்வளவு தூரம் போனால் போதும். நீங்கள் உங்கள் வேலைகளை விடுத்து சாதாரண குமாஸ்தாக்கள் ஆவதே சாமான்ய மன்று. அதுவும் எத்தனை காலம் அவ்வாறிருக்க வேண்டுமோ தெரியாது. இப்பக்கத்தில் பேசப்படும் ஹிந்தித் திரிபு பாஷை எனக்கு விளங்குவது கஷ்டமாயிருக்கிறது. ஆதலின் நீங்கள் எனக்கு மொழி பெயர்த்துச் சொல்லவேண்டும். இந்த வேலைக்கு நம்மால் பணங்கொடுக்க முடியாது எல்லாம் அன்புள்ளத்துடனும், தொண்டுப் பற்றுடனே செய்யப்பட வேண்டும்."

விரஜகிஷோர் பாபு நான் கூறியவற்றை நன்கறிந்து கொண்டார். இப்போது அவர் என்னையும் தமது தோழர்களையும் முறையாகக் குறுக்கு விசாரணை செய்தார். தங்கள் ஊழியம் எவ்வளவு காலம் தேவையாயிருக்கும், எவ்வளவு பேர் வேலைக்கு வேண்டும், முறை போட்டுக்கொண்டு வேலை செய்யலாமா என்பது போன்ற கேள்விகளை அவர் கேட்டு நான் கோரிய உதவியின் இயல்பைத் தெளிவாக்கினார். பின்னர், தமது சகோதர வக்கீல்களை அவர்களால் எவ்வளவு தியாகம் செய்ய முடியுமெனக் கேட்டார்.

கடைசியாக அவர்கள் "நீங்கள் என்ன சொன்னாலும் செய்வதற்கு நாங்கள் இவ்வளவு பேரும் சித்தமாயிருக்கிறோம். எங்களில் சிலர் நீங்கள் விரும்புங்காலம் வரை உங்களுடனேயே இருப்போம். ஆனால் சிறை செல்வதென்பது எங்களுக்கு முற்றிலும் புதிய விஷயம். அதற்கும் எங்களைச் சித்தமாக்கிக் கொள்ள முயல்கிறோம்" என்று வாக்குறுதி தந்தார்கள்.

பதினான்காம் அத்தியாயம்

அஹிம்ஸா தரிசனம்

சம்பரான் விவசாயிகளின் நிலைமையை ஆராய்ச்சி செய்து, அவுரித் தோட்டக்காரர்கள்மீது அவர்களுக்கிருந்த குறைகளை அறிந்துகொள்வதே என் நோக்கமாகும். இந்நோக்கம் நிறைவேறுதற்கு ஆயிரக் கணக்கான குடியானவர்களைச் சந்தித்தல் அவசியம். ஆனால் அவ்விசாரணை தொடங்குவதற்கு முன்பு, தோட்டக்காரர்களின் கட்சி என்னவென்பதைத் தெரிந்துகொள்ளுதலும், அந்த டிவிஷன் கமிஷனரைப் பார்த்தலும் அவசியமென்று எண்ணி

னேன் எனவே, தோட்டக்காரர்கள் சங்கக் காரியதரி சிக்கும், கமிஷனருக்கும் எழுதி அவர்களை வந்து பார்க்க அநுமதி பெற்றேன்.

தோட்டக்காரர் சங்கத்தின் காரியதரிசி, ஒளிவு மறைவின்றித் தமது கருத்தைத் தெரிவித்தார். நான் வெளியான் என்றும், தோட்டக்காரர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கும் இடையில் வருவதற்கு எனக்கு உரிமையில்லையென்றும், ஏதாவது சொல்லிக்கொள்ள வேண்டுமானால் எழுத்தில் எழுதித் தெரிவித்துக் கொள்ளும்படியும் அவர் கூறினார். அவருக்கு நான் மரியாதையாகப் பதில் உரைத்தேன். என்னை நான் வெளியான் எனக் கருதவில்லையென்றும், குடியானவர்கள் விரும்பினால் அவர்களுடைய நிலைமையைப்பற்றி விசாரணை செய்ய எனக்குப் பூரண உரிமையுண்டென்றும் கூறினேன்.

பின்னர், கமிஷனரைப் பார்க்கச் சென்றேன். அவர் என்னை அதட்டி உருட்டத் தொடங்கினார். திர்ஹுத் டிவிஷனை விட்டு உடனே போய்விடும்படி புத்தி சொன்னார்.

என்னுடைய சகாக்களிடம் இவையெல்லாவற்றையும் தெரிவித்தேன். நான் மேற்செல்ல முடியாதபடி அரசாங்கத்தார் தடுத்துவிடக் கூடுமென்றும், நான் எதிர்பார்த்ததை விட அதிக விரைவிலேயே சிறை செல்ல நேரிடலாமென்றும், அவ்வாறு நேர்ந்தால், மோதிஹாரியிலாவது, கூடுமானால் பெட்டியிலாவது நான் கைது செய்யப்படுதலே நல்லதென்றும் கூறினேன். ஆதலின் கூடிய சீக்கிரத்தில் அவ்விடங்களுக்குப் போக விரும்புவதாகத் தெரிவித்தேன்.

சம்பரான், திர்ஹுத் டிவிஷனைச் சேர்ந்தது. மோதிஹாரி அதன் தலை நகர். இராஜகுமார் சுக்லாவின் கிராமம்

பெட்டியாவுக்கு அருகில் இருந்தது. அந்தப் பக்கத்திலிருந்த குடியானவர்களே அந்த ஜில்லாவுக்குள் மிகவும் ஏழ்மை யானவர்கள். அவர்களை நான் பார்க்க வேண்டுமென்று இராஜ குமார் விரும்பினர். நானும் அவரைப் போலவே ஆவல் கொண்டிருந்தேன்.

எனவே, அன்றைய தினமே என் தோழர்களுடன் புறப்பட்டு மோதிஹாரியை அடைந்தேன். அங்கு பாபு கோரக் பிரஸாத் தமது வீட்டில் எங்களுக்கு இடமளித்தார். அவர் வீடு யாத்ரீகர்கள் தங்கும் பெரிய சத்திரம் போலாயிற்று. எல்லாருக்கும் அங்கு இடங்கூடப் போத வில்லை. அன்றைய தினமே, மோதிஹாரிக்கு ஐந்து மைல் தூரத்தில் ஒரு குடியானவன் துன்புறுத்தப் பட்டதாகக் கேள்விப்பட்டோம். மறுநாள் காலையில் நான் பாபு தாரணிதர் பிரஸாதுடன் சென்று அவனைப் பார்த்து வர வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே யானை மீதேறி நாங்கள் புறப்பட்டோம். (குஜராத்தில் மாட்டு வண்டி எவ்வளவு சாதாரணமோ அவ்வளவு சம்பரானில் யானை சாதாரணம் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.) நாங்கள் பாதி வழி போவதற்கு முன்னுல் போலீஸ் சூபரண்டெண்டினிட மிருந்து ஓர் ஆள் தொடர்ந்து வந்து எங்களைப் பிடித்தான். போலீஸ் தலைவர் எனக்குத் தமது வந்தனங்களை அனுப்பியதாக அவன் கூறினன். அதன் கருத்தை நான் அறிந்து கொண்டேன். எனவே தாரணிதர் பாபுவை மட்டும் மேலே போகும்படி சொல்லிவிட்டு போலீஸ் தூதன் கொண்டுவந்திருந்த வாடகை வண்டியில் ஏறிக்கொண்டேன். வண்டியில் ஏறியதும் அவன் எனக்கு ஓர் உத்திரவை சாதன செய்தான். அதில் என்னை உடனே சம்பாரனை விட்டுப்

போகும்படி எழுதியிருந்தது. நான் தங்கியிருந்த வீட்டுக்கு வண்டிபோய்ச் சேர்ந்ததும் உத்திரவு பெற்றுக்கொண்டதற்குக் கையொப்பம் கேட்டான். உத்திரவைப் பெற்றுக் கொண்டதாகவும், ஆனால் நான் தொடங்கியுள்ள ஆராய்ச்சி முடியும் வரையில் சம்பாரானை விட்டுப் போகும் உத்தேசமில்லை யென்றும் எழுதிக் கையொப்பம் செய்து கொடுத்தேன். அதன்மேல், சம்பாரானிலிருந்து போக வேண்டுமென்னும் உத்திரவுக்குக் கீழ்ப்படியாத குற்றத்திற்காக மறுநாள் விசாரணைக்கு வந்து சேரும்படி ஒரு கட்டளை கிடைத்தது.

அன்றிரவு முழுவதும் நான் தூங்கவில்லை. கடிதங்கள் எழுதுவதிலும், பாபு விரஜ கிஷோர் பிரஸாதுக்கு அவசியமான யோசனைகளைக் கூறுவதிலும் இரவு கழிந்தது.

எனக்கு அளிக்கப்பட்ட உத்திரவையும், விசாரணைக் கட்டளையையும் பற்றிய செய்திகள் காட்டுத் தீ போல் பரவி விட்டன. அன்றைய தினம் மோதிஹாரி நகரம் கண்ட காட்சியைப்போல் அதற்குமுன் எப்போதும் கண்டதில்லை யென்று எல்லாரும் சொன்னார்கள். கோரக் பாபுவின் வீட்டிலும், கோர்ட்டிலும் ஜனங்களின் கூட்டம் சொல்ல முடியாது. அதிர்ஷ்ட வசமாக இரவுக்கிரவே நான் எல்லா வேலையும் முடித்திருந்தபடியால் ஜனக் கூட்டத்தைச் சமாளித்தல் சாத்தியமா யிருந்தது. என் தோழர்கள் சிறந்த உதவி செய்தார்கள். நான் போகு மிடங்களிளெல்லாம் தொடர்ந்து வந்த ஜனக்கூட்டத்தை அவர்கள் ஒழுங்கு படுத்தி வந்தனர்.

எனக்கும், கலெக்டர், மாஜிஸ்ட்டிரேட், போலீஸ் சூபரின்டெண்டு இவர்களுக்கும் ஒருவகையான நேய

பரவம் ஏற்பட்டது. எனக்கு அனுப்பப்பட்ட உத்திரவுகளை நான் சட்ட ரீதியாக ஆட்சேபித்திருக்கலாம். அதற்கு மாறாக நான் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டேன். உத்தியோகஸ்தர்களிடம் நான் நடந்து கொண்ட முறையில் எவ்விதத் தவறும் கிடையாது. இதிலிருந்து அவர்கள், தங்களை அவமதிக்கும் எண்ணம் எனக்கில்லை யென்றும், உத்திரவுகளை சாத்வீகமாக எதிர்க்கவே நான் விரும்புவதாகவும் அறிந்து கொண்டனர். எனவே, எனக்கும் அவர்கள் தொந்திரவு கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக, கூட்டங்களை ஒழுங்கு படுத்துவதில், என்னுடையவும் என் தோழர்களுடையவும் ஒத்துழைப்பை மகிழ்ச்சியுடன்ஏற்றுக் கொண்டார்கள். எனினும், அவர்கள் தங்கள் அதிகாரம் ஆடிப் போய் விட்ட தென்பதைப் பிரத்யட்சமாகக் கண்டார்கள். ஜனங்கள் அந்த நேரத்தில் தண்டனைப் பயம் அனைத்தையும் அறவே துறந்து, அவர்களுடைய புதிய நண்பனுடைய அன்பின் சக்திக்கே கீழ்ப்படிந்தனர்.

சம்பாரானில் என்னை யாருக்கும் தெரியாது என்பதை வாசகர்கள் நினைவில் வைக்கவேண்டும். குடியானவர்கள் அனைவரும் கல்வி யறிவில்லாதவர்கள். சம்பாரான், கங்கை நதிக்கு நெடுந்தூரம் வடக்கே நேபாளத்துக் கருகில். ஹிமாலயத்தின் அடிவாரத்தில் இருக்கிறது. இந்தியாவின் மற்றப் பகுதிக்கும் அதற்கும் தொடர்பே இல்லாமலிருந்தது, அந்தப் பிரதேசத்தில் காங்கிரஸைப்பற்றி யாருக்கும் தெரியாது காங்கிரஸின் பெயரைக் கேள்விப்பட்டிருந்த சிலரும், அதில் சேர்வதற்கும், அதன் பெயரைச் சொல்வதற்கும் கூடப் பயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அத்தகைய நாட்டில் இப்போது காங்கிரஸூம் காங்கிரஸ் அங்கத்தினரும் பிரவேசித்தனர். அவர்கள் காங்கிரஸின்

பெயரைச் சொல்லிக் கொள்ளாவிடினும், உண்மையில் காங்கிரஸின் வேலையையே தொடங்கி யிருந்தனர்.

என் சகாக்களுடன் கலந்துகொண்டு, காங்கிரஸின் பெயரால் எதுவும் செய்யவேண்டாமென்று நான் முடிவு செய்திருந்தேன், நாங்கள் விரும்பியது வேலை; பெயரன்று பொருளை விட்டு நிழலைப் பிடித்துக்கொள்ள நாங்கள் விரும்பவில்லை. அரசாங்கத்துக்கும் அதை அடக்கி ஆண்ட தோட்டக்காரர்களுக்கும் காங்கிரஸின் பெயர், வேப்பங்காயினும் கசப்பாயிருந்தது. காங்கிரஸ் என்பதற்கு அவர்கள் வக்கீல் வாதங்கள், சட்ட தந்திரங்கள், வெடிகுண்டு, அராஜகம், நயவஞ்சகம் என்னும் இத்தனை பொருள்களும் கொண்டிருந்தார்கள். அவ்விரு சாராரிட மிருந்தும் இந்தத் தப்பபிப்ராயங்களைப் போக்குதல் அவசியமாயிருந்தது. ஆதலின் காங்கிரஸின் பெயரையே சொல்ல வேண்டா மென்றும், குடியானவர்களுக்கும் அதைப் பற்றித் தெரிவிக்க வேண்டாமென்றும் தீர்மானித் திருந்தோம். காங்கிரஸை வெளிப்படையாகப் பின்பற்றுவதற்குப் பதிலாக அவர்கள் அதன் கருத்தை அறிந்து நடந்தால் போதுமென எண்ணினோம்.

ஆதலின் இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ காங்கிரஸின் சார்பாக வேலை செய்து, எங்கள் வருகைக்கு முன் ஏற்பாடுகள் செய்துவைக்கத் தூதர்கள் யாரும் அனுப்பப்படவில்லை. ஆயிரக் கணக்கான குடியானவர்களிடம் சென்று பிரசாரம் செய்ய இராஜகுமார் சுக்லாவுக்கு ஆற்றல் கிடையாது. அவர்களிடையே அரசியல் வேலை எதுவுமே இதுகாறும் செய்யப்பட்டதில்லை. சம்பாரானுக்கு வெளியேயுள்ள உலகம் எத்தகைய தென்பதை அவர்கள் அறியார்கள். எனினும், நானும் அவர்களும் நெடுங்கால

நண்பர்களா யிருந்தால் எவ்வாறு என்னை வரவேற்பார்களோ அவ்வாறு வரவேற்றார்கள். இந்தக் குடியானவர்களின் சந்திப்பில் நான் ஆண்டவனையும், அஹிம்சையையும், சத்தியத்தையும் நேருக்கு நேர் தரிசித்தேன் என்றால், அது முழு உண்மையாகுமே யன்றிச் சிறிதும் மிகையாகாது.

இந்த சத்திய தரிசனம் நான் பெறுவதற்கு என்னை உரியவனாக்கியது எது? ஜனங்களிடம் நான் கொண்டிருந்த அன்பை யன்றி வேறெதுவும் புலப்படவில்லை. இந்த அன்பு என்பதுதான் என்ன? அஃது, அஹிம்சையில் எனது அசையாத நம்பிக்கையின் வெளித் தோற்றமே யல்லாது வேறில்லை.

சம்பாரானில் அந்த தினம் எனது வாழ்நாளில் என்றும் மறக்க வொண்ணாத தினமாகும். குடியானவர்களுக்கும் சரி, எனக்கும் சரி, அது பரம முக்கியமான நாளாகும்.

சட்டப்படி விசாரணைக்குள்ளானவன் நான் என்றாலும், உண்மையில் அரசாங்கமே அப்போது குற்றவாளியின் கூண்டில் ஏறி நின்றது என்று சொல்லவேண்டும். கமிஷனர் எனக்கு விரித்த வலையில் என்னை அவரால் பிடிக்க முடியவில்லை. அதில் அரசாங்கத்தை விழப் பண்ணுவதிலேயே அவர் வெற்றி பெற்றார்.

பதினைந்தாம் அத்தியாயம்

அஹிம்சையின் வெற்றி

வழக்கு விசாரணை ஆரம்பமாயிற்று. அரசாங்க வக்கீலும், மாஜிஸ்ட்ரேட்டும், மற்ற உத்தியோகஸ்தர்களும் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார்கள்.

வழக்கைத் தள்ளி வைக்கும்படி அரசாங்க வக்கீல் மாஜிஸ்ட்ரேட்டை வற்புறுத்திக்கொண்டிருந்தார். ஆனால் நான் இடையில் தலையிட்டு, உத்திரவை மீறிய குற்றத்தை நான் ஒப்புக்கொள்ளப் போகிறேனாதலின் வழக்கைத் தள்ளிவைக்க வேண்டாமென்று மாஜிஸ்ட்டிரேட்டைக் கேட்டுக்கொண்டேன். பின்னர், கீழ்க்கண்டவாறு சுருக்கமாக ஒரு வாக்குமூலத்தைப் படித்தேன்:—

"கோர்ட்டாரின் அநுமதியுடன், சுருக்கமான வாக்குமூலம் ஒன்று கொடுக்க விரும்புகிறேன். 144 வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட உத்திரவை நான் மீறி நடப்பதுபோல் வெளிக்குத் தோன்றுதல் இயல்பே இத்தகைய நடவடிக்கையில் நான் தலையிட்டதின் காரணத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவ்விஷயம் ஸ்தலத்து அதிகாரிகளுக்கும் எனக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தையன்றி வேறில்லையென்பது என் தாழ்மையான கருத்தாகும். ஜீவகாருண்யத் தொண்டும், தேச ஊழியமும் செய்யும் நோக்கங்கொண்டு நான் இந்தப் பிரதேசத்தில் பிரவேசித்தேன். இங்குள்ள குடியானவர்கள் தங்களை அவுரித் தோட்டக்கார்ரர்கள் நியாயமாக நடத்துவதில்லையென்றும், நான் வந்து தங்களுக்கு உதவி புரிய வேண்டுமென்றும் வலியுறுத்தி அழைத்ததின் பேரிலேயே நான் வந்தேன். நிலைமையை ஆராய்ச்சி செய்யாமல் நான் உதவி எதுவும் செய்ய இயலாது.' ஆதலில் கூடுமானால் அதிகாரிகள், தோட்டக்காரர்கள் இவர்களின் ஒத்துழைப்பையும் பெற்று நிலைமையை ஆராய்ந்தறியும் நோக்கங் கொண்டு நான் வந்திருக்கிறேன். வேறு நோக்கம் எதுவும் எனக்கு இல்லை. என்னுடைய வருகையினால் பொது அமைதிக்குப் பங்கமும், உயிர்ச் சேதமும்

நேரிடுமென்று நான் நம்பவே முடியாது. இத்தகைய விஷயங்களில் அதிக எனக்கு அநுபவமுண்டு.

ஆனால் அதிகாரிகள் வேறு விதமாக எண்ணியுள்ளார்கள். அவர்களுடைய கஷ்டத்தை நான் பூரணமாக உணர்கிறேன். அவர்களுக்குக் கிடைத்திருக்கும் தகவல்களை ஆதாரமாகக் கொண்டே அவர்கள் நடவடிக்கை நடத்த வேண்டு மென்பதையும் ஒப்புக்கொள்கிறேன். நான் சட்டத்திற்கு அடங்கிய பிரஜையாவேன். எனவே உத்திரவைப் பெற்றதும் என் முதல் எண்ணம் அதற்குக் கீழ்ப்படிய வேண்டு மென்பதே யாகும். ஆனால் அப்படிச் செய்தால் நான் யாருக்காக வந்தேனோ அவர்கள் விஷயத்தில் என் கடமையைச் செலுத்தியவனாக மாட்டேனென்று என் மனச்சான்று அறிவுறுத்துகிறது. தற்போது அவர்கள் மத்தியில் இருப்பதால் மட்டுமே அவர்களுக்கு ஊழியம் செய்ய முடியுமென என் மனச்சாட்சி கூறுகிறது. ஆதலின், நானாக வலிய இங்கிருந்து செல்ல முடியாது. இவ்வாறு முரணான கடமைகள் ஏற்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில், என்னை இங்கிருந்து அப்புறப் படுத்தும் பொறுப்பை அதிகாரிகளின் மீது போட்டுவிடுதல் ஒன்றே நான் செய்யக் கூடியதாகும். இந்தியாவின் பொது வாழ்வில் என்னைப் போன்ற நிலைமையில் உள்ளவன் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென நன்கு அறிவேன். ஏனெனில், என்னுடைய செயலை மற்றவர்கள் உதாரணமாகக் கொள்வார்கள். ஆனாலும் தற்போதுள்ள சிக்கலான அரசியல் அமைப்பின்கீழ், சுயமரியாதையுள்ள மனிதன் ஒருவன் இதுபோன்ற சந்தர்ப்பத்தில் கைக்கொள்ள வேண்டிய வழிய ஒன்றுதான். உத்திரவுக்குக் கீழ்ப்படியா திருந்து அதற்குரிய தண்டனைக்கு மனப்பூர்வமாக உட்படுவதே

அவ்வழி. இவ்வாறு செய்யவே நான் தீர்மானித்திருக்கிறேன். இதுவே அபாயமற்ற கௌரவமான வழியென்பது என் உறுதியான நம்பிக்கை.

"எனக்கு அளிப்பதற்கிருக்கும் தண்டனையை எவ்வகையிலும் குறைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் இவ் வாக்குமூலம் நான் கொடுக்கவில்லை. சட்டப்படி ஏற்பட்ட அதிகாரத்தினிடம் மதிப்புக் குறைவினால் நான் இவ் வுத்திரவை மீறவில்லை யென்றும், சட்டங்களுக்கெல்லாம் உயரிய சட்டமாகிய மனச்சான்றின் சொல்லுக்குக் கீழ்ப் படியும் பொருட்டே அவ்வாறு செய்கிறே னென்றும் காட்டுவதே இவ்வாக்கு மூலம் நான் கொடுப்பதின் நோக்கமாகும்."

அத்தகைய வாக்குமூலம் நான் கொடுத்த பின்னர், விசாரணையைத் தள்ளிப் போட எவ்வகை முகாந்தரமும் கிடையாது. ஆனால் மாஜிஸ்ட்ரேட்டும் சரி, அரசாங்க வக்கீலும் சரி, நான் இப்படிச் சொல்வேனென்று சற்றும் எதிர் பார்த்தவர்க ளில்லையாதலின் திடுக்கிட்டுப் போனார் கள். ஆகவே மாஜிஸ்ட்ரேட் பின்னர் தீர்ப்புச் சொல்வ தாகக் கூறினார். இதற்கிடையில் இராஜப் பிரதிநிதிக்கும், பாட்னாவிலிருந்த நண்பர்களுக்கும், பண்டித மாளவியா வுக்கும் எல்லா விவரங்களையும் தந்தி மூலம் அறிவித் திருந்தேன்.

தண்டனை பெறும் பொருட்டு நீதி மன்றத்துக்குப் போக வேண்டிய நாளுக்கு முன்பாகவே மாஜிஸ்ட்ரேட் எழுத்து மூலமாக ஒரு செய்தி அனுப்பினார். லெப்டினண்ட் கவர்னர் வழக்கை வாபீஸ் பெற்றுக் கொள்ளும்படி உத்திரவிட்டிருக்கிறாரென்று அவர் அதில் கூறி யிருந்தார். கலெக்டரும் ஒரு கடிதம் எழுதினார். நான் உத்தேசித்

திருந்த விசாரணையை எவ்விதத் தடையுமின்றி நடத்தலா மென்றும், அதற்கு உத்தியோகஸ்தர்களிட மிருந்து எவ்வித உதவி வேண்டுமானாலும் அளிக்கப்படு மென்றும் அவர் தெரிவித்திருந்தார். இவ்வளவு விரைவில் இவ்விஷயம் இவ்வளவு சந்தோஷமாக முடிவடையுமென்று நாங்கள் எவரும் எதிர் பார்க்கவே யில்லை.

கலெக்டர் மிஸ்டர் ஹேகாக்கைப் பார்க்கச் சென்றேன். அவர் நல்ல மனிதராகவும், நீதி செலுத்து வதில் கவலையுள்ளவராகவும் காணப்பட்டார். தஸ்த வேஜிகள் எது வேண்டுமானாலும் தாராளமாய்க் கேட்கலா மென்றும், எப்போது விரும்பினாலும் தம்மை வந்து பார்க்கலாமென்றும் கூறினார்.

இவ்வாறு, தேசம் சாத்வீகச் சட்ட மறுப்பில் முதலா வது உதாரண பாடத்தைப் பெற்றது. சம்பாரானில் எங்கும் இதே பேச்சா யிருந்தது, பத்திரிகைகளும் இவ்விஷயத்தைப் பற்றி நிரம்ப எழுதின. நான் மேற்கொண்ட விசாரணைக்கு எதிர் பாராத விளம்பரம் கிடைத்தது.

அரசாங்கத்தார் நடுநிலைமை வகிப்பது என்னுடைய விசாரணைக்கு மிகவும் அவசியம். ஆனால் பத்திரிகை நிருபர் களின் உதவியும், பத்திரிகைத் தலையங்கங்களின் ஆதரவும் விசாரணைக்குத் தேவையில்லாமல் இருந்தன. சம்பாரானில் அப்போது குடிகொண்டிருந்த நிலைமை, மிகவும் ஜாக் கிரதையாகக் கையாள வேண்டிய கஷ்டமான நிலைமை யாகும். அளவுக்கதிகமான கண்டனமும், பத்திரிகை நிருபர்கள் கைச்சரக்கு சேர்த்து அனுப்பும் செய்திகளும், நான் ஏற்றுக்கொண்டிருந்த முயற்சிக்குத் தீமையே விளைத்தலும் சாத்தியம். ஆகவே, முக்கியமான பத்திரிகை

களின் ஆசிரியர்களுக்குக் கடிதம் எழுதினேன். நிருபர்களை அனுப்பும் கஷ்டம் அவர்களுக்கு வேண்டாமென்றும், பிரசுரத்துக் கவசியமான விஷயங்களை நானே அனுப்புவதுடன், அவர்களுக்கு அப்போதைக் கப்போது நிலைமையைத் தெரிவித்து வருவதாகவும் அறிவித்தேன்.

இவ்வாறு அரசாங்கம் எனக்கு இடங்கொடுத்தது சம்பரான் தோட்டக்காரர்களுக்குப் பெரிதும் அதிருப்தியையளித்தது என்பதை அறிந்திருந்தேன். உத்தியோகஸ்தர்களுங்கூட வெளிப்படையாகச் சொல்லாவிடினும் உள்ளுக்குள் அதை விரும்பி யிருக்கமாட்டார்களென்பது எனக்குத் தெரியும். ஆதலின் தவறான, தப்பபிப்பிராயம் கொடுக்கக் கூடிய செய்திகள் பிரசுரமானல் அவர்களுடைய குரோதம் அதிகமாகுமே யன்றி வேறில்லை. அவர்களுடைய குரோதத்தை என்மீது செலுத்த வழியில்லையாதலால், பாவம்! ஏற்கனவே பயந்து சாகும் குடியானவர்கள் மீதே செலுத்துவார்கள். ஆதலின் உண்மை நிலையை ஆராய்ந்தறிய நான் செய்யும் முயற்சிக்குப் பெரிதும் இடையூறு ஏற்படும்.

இவ்வளவெல்லாம் நான் எச்சரிக்கை எடுத்துக் கொண்டும், தோட்டக்காரர்கள் எனக்கு விரோதமாக ஒரு தீய கிளர்ச்சியைக் கிளப்பினர்கள். என்னைப்பற்றியும், என் சகாக்களைப் பற்றியும் என்னவெல்லாமோ பொய்கள் பத்திரிகைகளில் வெளியாயின. ஆனல் என்னுடைய தீவிரமான ஜாக்கிரதையும், மிகச்சிறு விஷயத்திலும் உண்மையை நான் வற்புறுத்தியதும், அவர்களுடைய கிளர்ச்சியின் வேகத்தை மழுங்கும்படி செய்தன.

விரஜகிஷோர் பாபுவின் பெயரைக் கெடுப்பதற்குத் தோட்டக்காரர்கள் எந்த முயற்சியும் பாக்கி வைக்கவில்லை.

ஆனால் எவ்வளவுக் கெவ்வளவு அவரை அவர்கள் அவதூறு செய்தார்களோ, அவ்வளவுக்கு அவரிடம் பொது ஜனங்களுக்கு மதிப்பு அதிகமாயிற்று.

மிகவும் ஜாக்கிரதையாகக் காரியம் செய்ய வேண்டியதா யிருந்த இந்நிலைமையில், வெளி மாகாணத் தலைவர்கள் யாரையும் அழைப்பது தகுதியென்று நான் கருதவில்லை. பண்டித மாளவியா, தம்மை எப்போது நான் அழைத்தாலும் உடனே விரைந்து வருவதாக எனக்கு வாக்குறுதி யளித்திருந்தார். ஆனால் அவருக்கு நான் கஷ்டம் எதுவும் கொடுக்கவில்லை. இவ்வாறு. இப் போராட்டம் அரசியல் போராட்ட மாகாதபடி பார்த்துக் கொண்டேன். ஆனால் தலைவர்களுக்கும், முக்கியமான பத்திரிகைகளுக்கும் (பிரசுரத்திற்கல்லவென்றுகுறிப்பிட்டு) அவ்வப்போது சமாசாரம் தெரிவித்துக்கொண்டு வந்தேன். அரசியல் கலப்பற்ற ஒரு போராட்டத்தின் முடிவு அரசியல் துறையில் பயன் தருவதா யிருக்கலாம். எனினும் அப் போராட்டத்திற்கு அரசியல் தோற்றத்தை யளிப்பதால் அதற்குத் தீங்கே விளையுமென அறிந்தேன். அரசியலுடன் கலவாமல் வைத்திருப்பதாலேயே அதற்கு உதவி செய்ய முடியும் எந்தத் துறையிலாயினும் ஜனங்களுக்குச் சுயநல மற்ற தொண்டு செய்தால் அது முடிவில் தேசத்திற்கு அரசியல் துறையிலும் பயனளித்தே தீரு மென்பதில் சந்தேகமில்லை. இதற்குச் சம்பரான் போராட்டம் ஒரு ருசுவாகும்.

பதினாறும் அத்தியாயம்

வேலை முறைகள்

சம்பாரான் விசாரணையைப் பற்றி முழு விவரமும் கூறுவ தென்றால் சம்பாரான் குடியானவர்களின் அக்காலத்திய சரித்திரத்தையே எழுதுவதாக முடியும். அதற்கு இந்த நூல் இடமன்று எனச் சொல்ல வேண்டியதில்லை. சம்பாரான் விசாரணையானது சத்தியம், அஹிம்சை என்பவற்றில் ஒரு தைரியமான சோதனையாகும். அந்த நோக்கத்துடன் பார்க்குங்கால் இங்கு எழுதத் தகுந்தவை யென நான் கருதுவனவற்றையே எழுதி வருகிறேன். இவ் விசாரணையைப் பற்றி இன்னும் விவரமாக அறிய விரும்புவோர் ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத் ஹிந்தியில் எழுதி யிருக்கும் சம்பாரான் சத்தியாக்கிரஹ சரித்திரத்தைப் படிப்பார்களாக. அதனுடைய ஆங்கிலப் பதிப்பு ஒன்றும் அச்சில் இருப்பதாகக் கேள்வி யுறுகிறேன்.*

இனி இந்த அத்தியாயத்துக் குரிய விஷயத்துக்கு வருவோம். கோரக் பாபுவின் வீட்டில் விசாரணை நடத்துவது இயலாத காரியமா யிருந்தது. அவர் வீட்டில் விசாரணை நடத்துவதென்றால் கோரக் பாபு அவ் வீட்டை எங்களுக்கே ஒழித்துவிட்டுத் தாம் வேறிடம் போக வேண்டி யிருக்கும். மோதிஹாரி ஜனங்களுக்கு இன்னும் முழுதும் பயம் நீங்கியபாடில்லை யாதலால், அவர்கள் எங்களுக்கு ஒரு தனி வீடு வாடகைக்குப் பிடித்துத் தரக் கூடவில்லை. எனினும், விரஜகிஷோர் பாபு எப்படியோ சாமர்த்தியம் செய்து ஒரு வீட்டை அமர்த்தினார். அதைச்

* இவ்வாங்கில நூல் பின்னால் வெளியாகி யிருக்கிறது.

சுற்றிலும் திறந்த இடம் நிரம்ப இருந்தது. அவ்வீட்டுக்கு நாங்கள் சென்றோம்.

பணமின்றி வேலை நடத்தலும் சாத்தியமாயில்லை. இம்மாதிரி வேலைக்குப் பொது ஜனங்களிடம் பணம் கேட்பது பீஹாரில் இதுவரை வழக்கமில்லா விஷயம். விரஜகிஷோர் பாபுவும், பெரும்பாலும் வக்கீல்களான அவரது நண்பர்களும், இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒன்று தாங்களே பணங் கொடுப்பார்கள்; அல்லது தங்கள் சிநேகிதர்களிடமிருந்து வசூலிப்பார்கள். தாங்கள் கொடுக்கக்கூடிய நிலைமையிலிருக்கும்போது பொது ஜனங்களிடமிருந்து எப்படிப் பணங் கேட்கலாம் என்று அவர்கள் கருதியதாகத் தோன்றியது. சம்பரான் குடியானவர்களிடமிருந்து பணம் எதுவும் பெறுவதில்லை யென்று தீர்மானித்திருந்தேன். ஏனெனில் அது தப்பபிப்பிராயத்துக்கு இடங்கொடுத்தல் நிச்சயம். பொதுவாக தேசத்தாருக்கு வேண்டுகோள் விடுக்கவும் கூடாதென்று உறுதி செய்திருந்தேன். அப்படிச் செய்தல் இவ்விஷயத்தை அகில இந்திய அரசியல் பிரச்னையாக்கிவிடக் கூடும். பம்பாயிலுள்ள நண்பர்கள் ரூ. 15,000 தர முன் வந்தார்கள். அதை வந்தனத்துடன் மறுத்து விட்டேன். விரஜகிஷோர் பிரஸாதின் உதவியைக்கொண்டு சம்பாரானுக்கு வெளியிலுள்ள பணக்கார பீஹாரிகளிடமிருந்து கூடியவரை வசூலிக்கவும், இன்னும் அதிக பணம் தேவையாயிருந்தால் இரங்கூனிலுள்ள எனது நண்பர் டாக்டர் பி. ஜே. மேதாவைக் கேட்கவும் தீர்மானித்தேன். எவ்வளவு பணம் தேவையானாலும் அனுப்பி வைப்பதாக டாக்டர் மேதா உடனே பதில் தெரிவித்தார். எனவே பணத்தைப் பற்றிய கவலை நீங்கிற்று. சம்பரானுடைய வறுமைக்குத் தகுந்த

வண்ணம் கூடியவரை சிக்கனமாயிருக்கத் தீர்மானித் திருந்தபடியால் பெருந் தொகை தேவையாயிருக்க நியாய மில்லை. உண்மையில் அதிக செலவில்லாமலேதான் காரி யம் முடிவடைந்தது. மொத்தம் ரூ. 3000-த்துக்கு மேல் செலவாகவில்லை யென்று ஞாபகம். நாங்கள் வசூலித்த பணத்திலேயே சில நூறு ரூபாய் மீத்திவிட்டோ மென்றும் ஞாபக மிருக்கிறது.

மேற்படி விசாரணையின் ஆரம்ப நாட்களில், என் தோழர்களின் வாழ்க்கை முறைகளைக் குறித்து ஓயாது அவர்களைக் கேலி செய்துகொண்டிருந்தேன். ஒவ்வொரு வக்கீலுக்கும் ஒரு சமையற்காரனும், ஒரு வேலைக்காரனும் இருந்தனர். எனவே, தனிச் சமையலும் நடந்தது. பெரும் பாலும் நடு நிசியில் அவர்கள் இரவு போஜனம் அருந்து வார்கள். அவர்கள் தங்கள் செலவைத் தாங்களே செய்து கொண்டாலும், அவர்களுடைய ஒழுங்கின்மை எனக்குப் பெரிதும் மனத்தொல்லையை யளித்தது. நாங்கள் நெருங்கிய நண்பர்களாகி விட்டபடியால் எங்களிடையே தப்பபிப்பிரா யம் உண்டாவதற்கு இடமில்லை. எனவே எனது பரிகாசத் தைக் குறித்து அவர்கள் மனஸ்தாபங் கொள்ள வில்லை. கடைசியாக வேலைக்காரர்களை யெல்லாம் அனுப்பி விடுவ தென்றும், எல்லாருக்கும் ஒரே சமையல் சாப்பாடு வைத் துக் கொள்வதென்றும், வேளைக்கு ஒழுங்காக உணவு அருந் துவதென்றும் தீர்மானித்தோம். அவர்களில் எல்லாரும் சைவ உணவுக்காரர்கள் அல்லாதபோதிலும் இரண்டு சமை யல்கள் ஏற்படுத்துவதில் செலவு அதிக மென்பதை உத்தே சித்து, சைவ உணவுச் சமையல் ஒன்றே ஏற்படுத்தப்பட் டது. எளிய உணவை வலியுறுத்துவதும் அவசிய மென்று அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

இந்த ஏற்பாடுகளால் செலவு மிகுதியும் குறைந்த துடன், எவ்வளவோ காலமும், உழைப்பும் மீதியாயின. இவை நாங்கள் ஏற்றுக்கொண்டிருந்த வேலைக்குப் பெரிதும் தேவையா யிருந்தன. குடியானவர்கள் கூட்டங் கூட்ட மாக வாக்கு மூலங் கொடுப்பதற்கு வந்தார்கள். அவர்கள் ஏராளமான தோழர்களையும் கூட அழைத்து வந்தபடியால், வீட்டைச் சுற்றியிருந்த தோட்டத்தில் எப்போதும் ஜனங் கள் மொய்த்தவண்ண மிருந்தார்கள். தரிசனத்துக் கென்று வருவோரிடமிருந்து என்னைக் காப்பதற்கு என் தோழர்கள் செய்த முயற்சி எப்போதும் பலிப்பதில்லை. எனவே, குறிப் பிட்ட நேரத்தில் என்னைக் காட்சிப் பொருளைப்போல் காட்ட வேண்டியதா யிருந்தது. வாக்குமூலங்களைப் பதிவு செய்துகொள்ள ஏழு தொண்டர்கள் வரையில் தேவையா யிருந்தனர். அப்படியும் மாலையில் ஜனங்கள் பலர் வாக்கு மூலம் கொடாமலே திரும்பிப் போகவேண்டி வந்தது. இவ் வாக்கு மூலங்கள் எல்லாம் அவசியமானவை யல்ல. அவற் றில் பல, சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வதா யிருந்தன. ஆனாலும் அவற்றை எடுத்துக் கொள்ளாவிடில் ஜனங்கள் திருப்தி யடைவதில்லை. அவர்களுடைய உணர்ச் சியை மதித்தாலும் அவசியம் என்று நினைத்தேன்.

வாக்குமூலம் எடுப்பது சம்பந்தமாகச் சில விதிகள் ஏற்படுத்தி யிருந்தோம். ஒவ்வொரு குடியானவனையும் நன்று கக் குறுக்கு விசாரணை செய்து, அதில் திருப்தி யளியாதவர் களின் வாக்குமூலத்தை நிராகரித்து விட வேண்டுமென்பது முக்கியமான விதியாகும். இதனால் காலம் மிகவும் அதிகமாகச் செலவழிந்த தென்றாலும், வாக்குமூலங்களில் பெரும்பாலானவை ஆட்சேபத்துக்குச் சிறிதும் இடமில்லா தவை யாயின.

இவ் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும் காலத்தில் சி. ஐ. டி. உத்தியோகஸ்தர் ஒருவர் எப்போதும் கூட இருந்தார். அவர் இருக்கக் கூடாதென்று நாங்கள் தடுத்திருக்கலாம். ஆனால் ஆரம்பத்திலிருந்தே, சி. ஐ. டி. உத்தியோகஸ்தர்கள் இருப்பதைப் பொருட்படுத்த வேண்டாமென்று நாங்கள் தீர்மானித்திருந்ததுடன், அவர்களை மரியாதையாக நடத்தி, கூடுமான எல்லா விவரங்களையும் அவர்களுக்குத் தெரிவிப்பது என்றும் முடிவு செய்திருந்தோம். இதனால் எங்களுக்குத் தீங்கு எதுவும் நேரிடவில்லை. அதற்கு மாறாக, சி. ஐ. டி. உத்தியோகஸ்தர்கள் முன்னிலையிலேயே வாக்கு மூலங்கள் பதிவு செய்துகொள்ளப் பட்டதானது குடியானவர்களை அச்சம் நீங்கியவர்களாகச் செய்தது. ஒரு புறத்தில் சி. ஐ. டி. காரர்களிடம் அவர்களுக்கு இருந்த பெரும் பயம் நீங்கியதோடு, மற்றொரு புறத்தில் அவ்வுத்தியோகஸ்தர்கள் இருந்ததினால் மிகைப் படுத்திச் சொல்வதில் இயற்கையாகவே ஒரு தடவை ஏற்பட்டது. ஜனங்களை வலையில் மாட்டுவதே சி. ஐ. டி. நண்பர்களின் வேலையாதலால், குடியானவர்கள் மிகவும் எச்சரிக்கையுட னிருத்தல் அவசிய மல்லவா?

தோட்டக்காரருக்கு அனாவசியமாகக் கோப மூட்ட நான் விரும்பவில்லை. அவர்களைச் சாந்தத்தினால் வசப் படுத்தவே எண்ணினேன். ஆதலின் அவர்களில் யார் யார் மீது மிகக் கடுமையான குற்றங்கள் சாட்டப்பட்டனவோ அவர்களுக் கெல்லாம் தவறாமல் கடிதம் எழுதியதுடன் அவர்களைப் பார்த்துப் பேசியும் வந்தேன். தோட்டக் காரர்களின் சங்கத்துக்கும் சென்றேன். குடியானவர்களின் குறைகளை அவர்களுக்குத் தெரிவித்ததுடன் அவர்களுடைய கட்சி இன்னதென்றும் தெரிந்து கொண்டேன்,

தோட்டக்காரர்களில் சிலர் என்னைப் பகைத்தார்கள்; சிலர் அலட்சியமா யிருந்தார்கள்; ஒரு சிலர் மட்டும் மரியாதை யாக நடந்து கொண்டனர்.

பதினேழாம் அத்தியாயம்

என் தோழர்கள்

விரஜகிஷோர் பாபுவும் இராஜேந்திர பாபுவும் இணை யில்லாத ஜோடியாவர். அவர்களுடைய அபார பக்தியின் காரணமாக அவர்களுடைய உதவி யில்லா மல் ஓர் அடியேனும் நான் எடுத்து வைக்க முடியாமல் இருந்தது. அவர்களுடைய சீடர்களும் தோழர்களுமான சம்பு பாபு, அநுக்கிரக பாபு, தாரணி பாபு, ராமநவமி பாபு முதலிய வக்கீல்களும் எப்போதும் எங்களுட னிருந்தனர். வித்தியா பாபுவும், ஜனகதாரி பாபுவும் சிற்சில சமயம் வந்து எங்களுக்கு உதவி செய்தனர். இவர்களெல்லாரும் பீஹாரி களே ஆவர். குடியானவர்களுடைய வாக்கு மூலங்களைப் பதிவு செய்வதே அவர்களுடைய முக்கியமான வேலையா யிருந்தது.

ஆசிரியர் கிருபாலனி எங்களுடன் சேராமல் எப்படி யிருக்க முடியும்? அவர் சிந்து மாகாணத்தைச் சேர்ந்தவ ராயினும் பீஹாரில் பிறந்தவரைவிட உண்மையான பீஹாரியாய் இருந்தார். தாங்கள் தத்துச் சென்ற மாகாணத்திற்கே தங்களைப் பூரணமாய் அர்ப்பணம் செய்த ஊழியர்கள் சிலரை நான் பார்த்திருக்கிறேன். அவர் களில் கிருபாலனி ஒருவர். தாம் வேறு மாகாணத்தைச்

சேர்ந்தவர் என்று எவரும் எண்ணமுடியாவண்ணம் அவர் செய்துகொண்டார். சம்பாரான் விசாரணையின்போது அவர் எனது வாயில் காவலர்களின் தலைவரா யிருந்தார். தரிசனம் நாடி வருவோரி னின்றும் என்னைப் பாதுகாப்பதையே அச்சமயத்திற்குத் தம் வாழ்க்கையின் தனிப்பெரு நோக்க மாக அவர் செய்து கொண்டார். சில சமயம் அவரது வற் ருத நகைச் சுவையாலும், மற்றும் சில முறை அஹிம்சை யோடு இயைந்த பயமுறுத்தல்களினாலும் அவர் ஜனங்களைத் தடுத்தார். இரவானதும் அவர் தமது உபாத்திமைத் தொழிலை எடுத்துக் கொள்வார். சரித்திரசம்பந்தமான தமது ஆராய்ச்சி களை நண்பர்களுக்குச் சொல்லி பொழுது போகச் செய் வார். வெளியூரிலிருந்து வரும் பயந்த சுபாவமுடையவர் களுக்குத் தைரிய மூட்டுவார்.

அவசியமானபோது உதவி செய்வதாக வாக்களித் திருந்தவர்களில் மௌலானு மஷ்ருல் ஹக்கும் ஒருவர். மாதத்திற்கு ஓரிரண்டு முறை அவர் எங்களை வந்துபார்க்கத் தவறுவதில்லை. அப்போது அவர் நடத்திய ஆடம்பரமான பகட்டு வாழ்க்கை அவரது இப்போதைய எளிய வாழ்க் கைக்கு முற்றும் மாருக இருந்தது. அவர் எங்களுடன் கலந்து பழகிய முறையானது எங்களில் ஒருவராகவே அவரை நாங்கள் கருதும்படி செய்ததென்றாலும், அவரது நவநாகரிக நடையுடைகள் காரணமாக, புதிதாய் வரும் மனி தர் ஒருவருக்கு வேறு தோற்றமே உண்டாகும்.

பீஹாரைப்பற்றி எனக்கு அநுபவம் அதிகமாக ஆக, முறையான கிராமக் கல்வியின்றி நிரந்தரமான தொண்டு எதுவும் செய்ய முடியாதென்னும் எண்ணம் உறுதி யடைந்து வந்தது. குடியானவர்களின் அறியாமை மிகவும் பரிதாபகரமாய் இருந்தது. அவர்கள் தங்கள் குழந்தைகளை

ஒன்று இஷ்டப்படி திரிய விட்டிருந்தார்கள். அல்லது அவுரித் தோட்டங்களில் இரண்டு காசு சம்பளத்திற்காகப் பொழுது விடிந்ததிலிருந்து பொழுது போகும் வரையில் உழைக்கும்படி செய்தார்கள். அந் நாட்களில் ஆண் தொழிலாளியின் சம்பளம் ஒரு நாளைக்கு 2½ அணுவுக்கு மேல் போவதில்லை. பெண் தொழிலாளியின் சம்பளம் 1½ அணுவுக்கும் சிறுவரின் சம்பளம் ¾ அணுவுக்கும் அதிகம் போகாது. ஒரு நாளைக்கு நாலணு சம்பாதித்தவன் மிகவும் அதிர்ஷ்டசாலியாகக் கருதப்பட்டான்.

என்னுடைய தோழர்களுடன் கலந்தாலோசித்து ஆறு கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் திறக்கத் தீர்மானித்தேன். கிராமவாசிகள் உபாத்தியாயர்களுக்குத் தங்க இடமும் உணவும் அளிக்க வேண்டுமென்றும், மற்றச் செலவுகளை நாங்கள் பார்த்துக் கொள்வதாகவும் ஒப்பந்தம் செய்து கொண்டோம். கிராமவாசிகள். கையில் பணமென்பது கிடையாது. ஆனுல் அவர்கள் எளிதில் உணவுப் பொருள்கள் தரமுடியும். தானியங்களும் மற்றப் பொருள்களும் கொடுப்பதாக அவர்கள் தயாராய் ஒப்புக் கொண்டனர். உபாத்தியாயர்களுக்கு எங்கே போவதென்பது இப்போது பெரிய பிரச்னையாயிற்று. சம்பளமே இல்லாமலோ அல்லது உயிர் வாழ்வதற்கு மட்டும் சொற்ப தொகை பெற்றுக்கொண்டோ வேலை செய்யும் உபாத்தியாயர்கள் கிடைப்பது கஷ்டமாயிருந்தது. சாதாரண உபாத்தியாயர்களிடம் குழந்தைகளை ஒருபோதும் ஒப்புவிக்கக் கூடாதென்பது என் எண்ணம். உபாத்தியாயர்களின் இலக்கிய பாண்டித்யம் அவ்வளவு முக்கியமானதன்று. ஒழுக்க வன்மையே முக்கியமாகும்.

என்வே, சம்பளத்திற்காகவன்றித் தொண்டுக்கென முன் வரக்கூடிய உபாத்தியாயர்கள் வேண்டுமென்று பொது விண்ணப்பஞ் செய்து கொண்டேன். இதற்கு உடனே தக்க பலன் கிடைத்தது. பாபா சாகிப் ஸோமன், புண்டரீக் என்பவர்களை ஸ்ரீகங்கர்தா ராவ் தேஷ்பாண்டே அனுப்பினர். பம்பாயிலிருந்து ஸ்ரீமதி அவந்திகாபாய் கோகலேயும், பூனாவிலிருந்து ஸ்ரீமதி ஆனந்திபாயும் வந்தனர். ஆசிரமத்திலிருந்து சோடாவால், சுரேந்திரநாத் இவர்களையும், என் புதல்வன் தேவதாஸையும் வரும்படி செய்தி யனுப்பினேன். இதே காலத்தில் மகாதேவ தேசாயும், நரஹரி பாரிக்கும் தத்தம் மனைவியருடன் என்னிடம் வந்து சேர்ந்தனர். கஸ்தூரிபாயும் இவ்வேலைக்காக அழைக்கப்பட்டாள். இவ்வாறு ஒரு நல்லதொண்டர் கூட்டம் சேர்ந்துவிட்டது. ஸ்ரீமதிகள் அவந்திகாபாயும், ஆனந்திபாயும், நன்றாய்ப் படித்தவர்கள். ஆனால் ஸ்ரீமதி துர்க்கா தேசாய், ஸ்ரீமதி லணி பென் பாரிக் இவர்களுக்குக் குஜராத்தி பாஷை எழுதப் படிக்கத்தான் தெரியும். கஸ்தூரி பாய்க்கோ அதுகூட நன்றாய்த்தெரியாது. இப் பெண்மணிகள் குழந்தைகளுக்கு ஹிந்தி பாஷையில் பாடம் கற்பிப்பது எப்படி?

குழந்தைகளுக்கு இலக்கணமும், எழுதல் படித்தலும், கணக்குப் போடுதலும் கற்பிப்பது அவ்வளவு முக்கியமல்லவென்றும், தூய்மையும் நல்ல வழக்க பழக்கங்களும் கற்பித்தலே முக்கியமென்றும் அவர்களுக்கு விளக்கிக் கூறினேன். எழுத்துகள் கற்பிப்பதில்கூட, அவர்கள் எண்ணுவதுபோல் குஜராத்தி, ஹிந்தி, மராத்தி இவைகளுக்குள் அதிக வேற்றுமை கிடையாதென்றும், அதிலும் கீழ்வகுப்புகளில் எழுத்துக்களும், இலக்கங்களும்

கற்பித்தல் அவ்வளவு கஷ்டமில்லை யென்றும் எடுத்துக் காட்டினேன். இதன் பயனாக இப் பெண்மணிகள் நடத்திய வகுப்புகள் மிகவும் திருப்திகரமாக நடைபெற்றன. இந்த அநுபவமானது அவர்களுக்குத் தன்னம்பிக்கையையும் வேலையில் சுவையும் ஊட்டிற்று. ஸ்ரீமதி அவந்திகாபாயின் பள்ளிக்கூடம் மாதிரிப் பள்ளிக்கூடமாயிற்று. அவர் இதய பூர்வமாகத் தன் வேலையில் ஈடுபட்டார். தமது அரிய ஆற்றல்களை யெல்லாம் இவ் வேலையில் பயன் படுத்திச் சிறக்கச் செய்தார். இப்பெண்மணிகளின் மூலம் கிராமத்துப் பெண் மக்களிடம் தொடர்பு பெறுதல் எங்களுக்கு ஓரளவு சாத்திய மாயிற்று. ஆனால் ஆரம்பக் கல்விக்கு ஏற்பாடு செய்ததுடன் நான் நின்றுவிட விரும்பவில்லை, கிராமங்களில் சுகாதாரம் மிகக் கேடா யிருந்தது. சந்துகள் குப்பை மயமாக இருந்தன. கிணறுகளைச் சுற்றி ஏகச் சேறும், கும்பியு மாய்க் கிடந்தன. வாயிற் புறங்களின் அசுத்தத்தைச் சொல்ல முடியாது. பெரியவர்களுக்குத் தூய்மையில் பாடங் கற்பித்தல் அவசியமா யிருந்தது. எல்லாரும் பல வகை சரும நோய்களினால் பீடிக்கப்பட்டிருந்தனர். எனவே, கூடியவரையில் சுகாதாரவேலை செய்யவும், அவர்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் சீர்திருத்தம் உண்டாக்கவும் வேண்டுமென்று தீர்மானித்தோம்.

இவ்வேலைக்கு வைத்தியர்கள் தேவையா யிருந்தனர். காலஞ்சென்ற டாக்டர் தேவ் என்பாரைக் கொடுத்து உதவும்படி இந்திய ஊழியச் சங்கத்தைக் கேட்டுக் கொண்டேன். நாங்கள் இருவரும் முன்னரே சிறந்த நண்பர்கள். ஆறுமாத காலம் தொண்டு செய்வதற்கு அவர் உடனே முன்வந்தார், உபாத்தியாயர்கள், உபாத்தி

யாயினிகள் எல்லாரும் அவரின் கீழ் வேலை செய்ய வேண்டு மென்று ஏற்பாடு செய்தோம்.

தோட்டக்காரர்களைப் பற்றிக் குடியானவர்களுக் கிருந்த குறைபாடுகள் விஷயத்திலோ அல்லது அரசியலிலோ தலையிட வேண்டாமென்று அவர்கள் எல்லாருக்கும் நன்கு தெரிவித்திருந்தோம். குறைகள் சொல்லிக்கொள்ளும் ஜனங் களை என்னிடம் அனுப்பவேண்டுமென்றும், எவரும் தத்தம் எல்லையைத் தாண்டி அப்பால் போகக்கூடா தென்றும் விதித்திருந்தோம். நண்பர்கள் இந்தக் கட்டளைகளை யெல் லாம் பரிபூரணமாக நிறைவேற்றினார்கள். கட்டுப் பாட் டுக்கு விரோதமான ஒரு காரியமாவது நிகழ்ந்ததாக எனக்கு ஞாபகமில்லை.

பதினெட்டாம் அத்தியாயம்

கிராமத் தொண்டு

கூடுமான வரையில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு பெண்மணியையும் ஒரு புருஷரையும் நியமித் தோம். இவர்கள் வைத்திய உதவி, சுகாதாரம் இவற்றையும் கவனித்துக்கொள்ள வேண்டுமென்றும், பெண்களிடையே பெண்கள் மூலமாகவே தொண்டுசெய்ய வேண்டுமென்றும் ஏற்பாடு செய்தோம்.

வைத்திய உதவி மிக எளிய காரியமா யிருந்தது. விளக்கெண்ணெய், கொயினா, கந்தக மெழுகு ஆகிய இம் மூன்று மருந்துகள்தான் தொண்டர்களிடம் கொடுத் திருந்தோம். நோயாளியின் நாவில் அழுக்குப் படிந்திருந் தாலும், மலபந்தம் இருப்பதாகத் தெரிவித்தாலும் விளக்

கெண்ணெய் கொடுக்கப்பட்டது. ஜுரத்திற்கு ஒருமுறை விளக்கெண்ணெய் கொடுத்துவிட்டுப் பின்னர் கொயினு கொடுக்கப்பட்டது. கொப்புளங்கள், சிரங்குகள் முதலிய வற்றிற்கு நன்ருய் அலம்பிவிட்டுக் கந்தகமெழுகு தடவப் பட்டது எந்த நோயாளிக்கும் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போக மருந்து கொடுப்பதில்லை. சிக்கலான நோய் யாருக்காவது இருப்பதாகத் தெரிந்தால் டாக்டர் தேவின் யோசனையைக் கேட்க வேண்டுமெனச் சொல்லி யிருந்தோம். பிரதி வாரமும் குறிப்பிட்ட தினங்களில் டாக்டர் தேவ் ஒவ்வொரு முக்கியமான கிராமத்திற்கும் சென்று வந்தார்.

இந்தச் சொற்ப உதவியை ஏற்றுக்கொள்ள ஏராளமான ஜனங்கள் முன் வந்தனர். கிராமவாசிக ளிடையே பரவி யிருந்த நோய்கள் சிலவே யாகும். அவற்றிற்குச் சாதாரண சிகிச்சையே போதுமானதா யிருந்தது. நிபுணர்களின் உதவி தேவையா யில்லை. எனவே, இத்தகைய வேலைத் திட்டம் நல்ல பலனளித்தது அதிசயமில்லை யன்றே ?

ஆனல், சுகாதாரத் தொண்டு மிகவும் கஷ்டமான காரியமா யிருந்தது. ஜனங்கள் தாங்களாகவே எதுவும் செய்யச் சித்தமாயில்லை. வயல் வேலை செய்யும் தொழிலாளி கள் கூடத் தங்கள் குப்பைகளைத் தாங்களே சுத்தம் செய்யப் பிரியப்படவில்லை. ஆனல் டாக்டர் தேவ் விரைவில் உற்சாக மிழந்துவிடும் மனிதர் அல்லர். அவரும் தொண்டர்களும் மற்ற கிராமங்களுக்கு ஓர் இலக்கியமா யிருக்கும்படி ஒரு கிராமத்தைப் பூரணமாய்ச் சுத்தம் செய்வதில் தங்கள் சக்திகளை யெல்லாம் ஒரு முகப்படுத்தி வேலை செய்தார்கள். அவர்கள் சாலைகளையும் வாயிற்புறங்களையும் கூட்டினர்கள்; கிணறுகளைச் சுத்தம் செய்தார்கள்; குட்டைகளை மண்

போட்டுத் தூர்த்தார்கள். கிராமவாசிகளை அவர்களுக்குள்ளேயே தொண்டர்களைத் தயாரிக்கும்படி அன்பாகப் பேசி வற்புறுத்தினுர்கள். சில கிராமங்களில் ஜனங்களே வெட்க மடைந்து அவ்வேலையை ஏற்றுக்கொண்டனர். இன்னுஞ் சில கிராமங்களில் ஜனங்கள் மிக்க உற்சாகங் கொண்டு என்னுடைய மோட்டார் வண்டி செல்லுவதற்காகச் சாலைகளும் செப்பனிட்டார்கள். இவ்வினிய அநுபவங்களுடன் ஜனங்களின் அசட்டையைப் பற்றிய துயரகரமான அநுபவங்களும் கலந்தே ஏற்பட்டு வந்தன. கிராமவாசிகள் சிலர் ஒளிவு மறைவின்றி இவ்வேலையில் தங்கள் அருவருப்பைத் தெரிவித்ததாகவும் ஞாபகமிருக்கிறது.

இதற்கு முன்பு பல கூட்டங்களில் நான் கூறியிருக்கும் ஓர் அநுபவத்தை இவ்விடத்திலும் குறிப்பிடுதல் மிகையாகாது. பிதிஹர்வா என்னும் சிறு கிராமத்தில் எங்கள் பள்ளிக்கூடம் ஒன்றிருந்தது. அதற்கருகிலிருந்த மற்ருெரு சிறு கிராமத்தைப் பார்க்க நான் சென்றிருந்தேன். அங்கே நான் கண்ட ஸ்திரீகளில் சிலர் மிகவும் அழுக்கான ஆடை தரித்திருந்தார்கள். அவர்கள் தாங்கள் ஆடைகளை ஏன் துவைப்பதில்லை யென்று கேட்கும்படி கஸ்தூரி பாயிடம் சொன்னேன். அவள் அவ்வாறே அவர்களைப் பார்த்துக் கேட்டாள். அப்போது அந்த ஸ்திரீகளில் ஒருத்தி கஸ்தூரி பாயைத் தன் குடிசைக்குள் அழைத்துச் சென்று கூறியதாவது :—

"இங்கே பாருங்கள், வேறு ஆடைகள் வைத்திருக்கும் பெட்டி அல்லது அலமாரி இருக்கிறதா? நான் அணிந்திருக்கும் புடவை ஒன்றுதான் எனக்கிருக்கிறது. அதை நான் எப்படித் துவைப்பேன்? மகாத்மாஜியிடம் சொல்லி

இன்னொரு சேலை வாங்கித் தாருங்கள். அப்போது நான் தினந்தோறும் ஸ்நானம் செய்து சுத்தமான ஆடை அணிந்து கொள்வதாக வாக்குறுதி தருகிறேன்."

இந் நிலைமை ஏதோ அபூர்வமானதென்று எண்ண வேண்டாம். இந்தியக் கிராமங்கள் பலவற்றிலும் உள்ள நிலைமைக்கு இது ஓர் உதாரணமே யல்லாது வேறில்லை. இந்தியாவில் கணக்கற்ற குடிசைகளில் ஜனங்கள் எவ்விதத் தட்டுமுட்டு சாமான்களுமின்றி, மாற்றிக் கட்டிக் கொள்ள இரண்டாவது துணியுமின்றி, மானத்தை மூட ஒரே கந்தையுடன் வாழ்கிறார்கள்.

மற்றும் ஓர் அநுபவத்தைக் கூறிவிட்டு மேலே செல்கிறேன். சம்பாரனில் மூங்கிலுக்கும் புல்லுக்கும் குறைவே இல்லை. பிதிஹர்வா என்னுமிடத்தில் பள்ளிக்கூடத்திற்கு, மூங்கிலினாலும், புல்லினாலும் ஒரு குடிசை அமைக்கப்பட்டிருந்தது. யாரோ சிலர்—அநேகமாகப் பக்கத்துத் தோட்டக்காரர்களின் ஆட்களா யிருக்கலாம்—ஒரு நாளிரவு அதற்குத் தீ வைத்து விட்டனர். மறுபடியும் மூங்கிலையும் புல்லையுங் கொண்டே மற்றொரு குடிசை கட்டுவது உசிதமன்று எனக் கருதினோம். இப்பள்ளிக்கூடத்தை ஸ்ரீமான் ஸோமனும், ஸ்ரீமதி கஸ்தூரிபாயும் நடத்தினார்கள். நல்ல செங்கல் வீடாகவே கட்டிவிட ஸ்ரீ ஸோமன் தீர்மானித்தார். உழைப்பில் அவர் காட்டிய உற்சாகம் மற்றவர்களையும் தொற்றிக் கொள்ளவே பலர் அவருடன் ஒத்துழைக்க முன் வந்தனர். இவ்வாறு வெகு சீக்கிரத்தில் செங்கல் வீடு ஒன்று தயாராகி விட்டது. கட்டிடம் கொளுத்தப்படலாம் என்னும் அச்சம் ஒழிந்தது.

இவ்வாறு பள்ளிக்கூடங்கள், சுகாதார வேலை, வைத்திய உதவி இவற்றின் மூலமாகத் தொண்டர்கள்

கிராமவாசிகளின் பூரண நம்பிக்கைக்கும், மரியாதைக்கும் உரியவர்களாயினர். எனவே, அவர்களிடையே நல்ல செல்வாக்கும் வாய்க்கப் பெற்றனர்.

ஆனால் இந்த நிர்மாண வேலையை நிரந்தரமான அடிப்படையின் மேல் அமைக்கலாமென நான் கொண்டிருந்த ஆசை நிறைவேறவில்லை யென்று மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தொண்டர்கள் எல்லாரும் சொற்பகால ஊழியத்திற்கே வந்தவர்கள். வெளியிலிருந்து வேறு தொண்டர்கள் தருவிப்பதற்கு சாத்தியப் படவில்லை. பீஹாரிலேயே நிரந்தரமாகச் சம்பளமின்றி உழைக்கக் கூடிய தொண்டர்கள் அகப்படவில்லை. சம்பாரானில் என் வேலை முடிந்ததும், அதற்கிடையில் வெளியே எனக்காகச் சித்தமாகியிருந்த வேலை என்னை இழுத்துக் கொண்டு விட்டது. ஆயினும் சம்பாரானில் செய்த அந்தச் சில மாதவேலையும் வீண் போகவில்லை. அத்தொண்டு ஆழ்ந்த வேர் கொண்டிருந்தமையால் இன்றளவும் அதன் பயன் ஏதேனுமொரு முறையில் காணக் கிடப்பதா யிருக்கிறது.

பத்தோன்பதாம் அத்தியாயம்

நல்ல கவர்னர்

சென்ற அத்தியாயங்களில் நான் விவரித் திருப்பது போன்ற சமூக ஊழிய வேலை ஒரு பால் நடந்து கொண்டிருக்கையில், மற்றொரு புறத்தில் குடியானவர்களின் குறை பாடுகளைக் குறித்த வாக்குமூலங்களைப் பதிவு செய்யும் வேலையும் நடந்து கொண்டு வந்தது. இத்தகைய வாக்குமூலங்கள் ஆயிரக்கணக்கானவை பதிவு செய்யப் பட்டன. இவை பயனளியாமல் போகுமா? குடியான

வர்கள் மேலும் மேலும் வாக்குமூலம் கொடுக்க வந்து கொண்டிருந்தது தோட்டக்காரர்களின் கோபத்தை மிகுதி யாக்கிற்று. அவர்கள் என்னுடைய விசாரணையைத் தடைப் படுத்துவதற்குத் தங்களால் இயன்றன வெல்லாம் செய்தார்கள்.

ஒரு நாள் பீஹார் அரசாங்கத்தினிடமிருந்து ஒரு கடிதம் எனக்குக் கிடைத்தது. கடிதம் மரியாதையான முறையில் எழுதப்பட்டிருப்பினும் அதனுடைய கருத் தென்னவோ தெளிவாக இருந்தது. "உங்கள் விசாரணை நெடுங்காலம் வளர்ந்து விட்டது. அதை நீங்கள் முடித்து விட்டு பீஹாரை விட்டுச் சென்றால் உசிதமாயிருக்கும்" என்னும் பொருள் கொண்டது அக்கடிதம்.

விசாரணை நீடிக்கத்தான் செய்யுமென்றும், அதன் மூலம் ஜனங்களுக்கு உதவி ஏற்படும் வரையில் பீஹாரை விட்டுச் செல்லும் உத்தேசம் எனக்கில்லையென்றும் பதில் எழுதினேன். ஆனால் அரசாங்கத்தார் விரும்பினால் இரண்டி லொரு முறையைக் கைக்கொண்டு என்னுடைய விசார ணையை முடித்து விடலா மெனக் குறிப்பிட்டிருந்தேன். ஒன்று,குடியானவர்களின் குறைகள் உண்மையானவையே என ஒப்புக்கொண்டு அவற்றை நிவர்த்தி செய்யலாம்; அல்லது உத்தியோக முறையில் விசாரணை ஏற்படுத்துவது அவசியம் என்றேனும் குடியானவர்கள் நிரூபித்து விட்ட தாக அங்கீகரித்து உடனே அத்தகைய விசாரணையை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்தேன்.

அப்போது லெப்டினன்ட் கவர்னரா யிருந்த சர். எட்வர்ட் கேட் தம்மை வந்து பார்க்கும்படியாக எனக்கு எழுதினார். அவ்வாறே சென்று பார்த்தபோது விசாரணை

ஏற்படுத்தத் தமது விருப்பத்தைத் தெரிவித்து என்னையும் கமிட்டியில் அங்கத்தினனா யிருக்கும்படி சொன்னார். மற்ற அங்கத்தினர் பெயர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். பின்னர் என்னுடைய சகாக்களுடன் கலந்தாலோசித்து ஒரு நிபந்தனையின் பேரில் கமிட்டியில் அங்கத்தினனாகச் சம்மதித்தேன். அந்நிபந்தனை வருமாறு :—

விசாரணையின்போது என் சகாக்களுடன் கலந்தாலோசிக்க உரிமை வேண்டும். கமிட்டியில் அங்கத்தின னாவதால் குடியானவர்களுடைய கட்சி பேசும் சுதந்திரம் எனக்கு இல்லாமல் போய்விடவில்லை யென்பதை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். விசாரணையின் முடிவு எனக்குத் திருப்தி தராவிட்டால் குடியானவர்கள் என்ன செய்ய வேண்டு மென்பது பற்றி அவர்களுக்கு ஆலோசனை சொல்லவும் வழிகாட்டவும் எனக்கு உரிமை வேண்டும்.

மேற்படி நிபந்தனை முற்றும் நியாயமானதே என்று சர் எட்வர்ட் கேட் கருதி அதை ஒப்புக் கொண்டார். பின்னர் விசாரணை ஏற்படுத்தும் விஷயமாக அறிக்கை வெளியிட்டார். கமிட்டியின் தலைவராகக் காலஞ் சென்ற சர் பிராங்ஸ்லை நியமிக்கப்பட்டார்.

கமிட்டியார் குடியானவர்களின் கட்சியே நியாயமானதென்று கண்டார்கள். தோட்டக்காரர்கள் பணம் பறித்து வந்த முறை சட்ட விரோதமானதென்று தீர்மானித்து அப்படிப் பறித்த பணத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் "தீன் கதியா" முறையைச் சட்டத்தினால் ஒழித்துவிட வேண்டுமென்றும் சிபார்சு செய்தார்கள்.

கமிட்டி ஒருமனமான அறிக்கை வெளியிட்டதற்கும் கமிட்டியின் சிபார்சுகளை யொட்டிச் சட்ட சபையில்

மசோதா கொண்டுவந்து சட்ட மாக்கியதற்கும் சர். எட்வர்ட் கேட்டின் முயற்சியே காரணமாகும். அவர் உறுதியோ டிருந்திரா விட்டால், தமது சாமர்த்தியத்தை யெல்லாம் இதில் பிரயோகித்திராவிட்டால், அறிக்கை ஏகமனதாயிருந்திராது; சட்டமும் நிறைவேறி யிராது. தோட்டக்காரர்கள் அளவற்ற சக்தி வாய்ந்தவர்களா யிருந்தார்கள். அவர்கள் மசோதாவை எதிர்த்துப் பலமான கிளர்ச்சி செய்தனர் சர் எட்வர்ட் இறுதிவரை உறுதியாகஇருந்ததுடன் கமிட்டியின் சிபார்சுகளை முழுதும் நிறைவேற்றி வைத்தார்.

இவ்வாறாக, ஒரு நூற்றுண்டு காலமாய் நிலவி வந்த "தீன் கதியா" முறை ஒழிக்கப்பட்டது. அத்துடன் தோட்டக்கார இராஜ்பமும் முடிவுற்றது. இதுகாறும் நசுக்கப்பட்டுக்கிடந்த குடியானவர்கள் இப்பொழுது சிறிது தலை தூக்கினர்கள். அவுரிக் கறையைத் துடைக்கவே முடியாதென்னும் குருட்டு நம்பிக்கையும் ஒழிந்தது.

நிர்மாண வேலையை இன்னும் சில வருஷ காலம் தொடர்ந்து நடத்தவேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். இன்னும் அதிக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும், இன்னும் கிராமவாசிகளுடன் அதிகமாய் பழக வேண்டு மென்றும் விரும்பினேன். ஆனல் பகவான் இதற்கு முன் பல முறைகளில் செய்ததுபோலவே இப்போதும் என்னுடைய திட்டம் நிறைவேறுமல் செய்துவிட்டார். அவருடைய சித்தம் என் விருப்பத்துக்கு முற்றும் மாறு யிருந்தது. வேறிடத்தில் எனக்கு ஏற்பட்டவேலையை ஏற்றுக்கொள்ள விரைந்து செல்ல வேண்டிய தாயிற்று.

இருபதாம் அத்தியாயம்

தொழிலாளர் தொடர்பு

கமிட்டியில் வேலை முடிந்ததும் முடியாமலும் இருக்கையிலேயே ஸ்ரீமான்கள் மோஹன்லால் பாண்டியா, சங்கர்லால் பாரிக் இவர்களிட மிருந்து ஒரு கடிதம் பெற்றேன். கேதா (கெயிரா) ஜில்லாவில் விளைவு சூனியமாகிவிட்ட தென்றும், வரி கொடுக்க முடியாத நிலையிலிருக்கும் குடியானவர்களுக்கு நான் வந்து வழி காட்ட வேண்டுமென்றும் அவர்கள் எழுதி யிருந்தார்கள். ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை செய்யாமல் புத்திமதி சொல்வதற்கு எனக்கு ஆற்றலும், தைரியமும் இல்லை. அப்படிச்செய்ய நான் விரும்பவுமில்லை.

இதே சமயத்தில் ஸ்ரீமதி அனுசூயா பாயிட மிருந்து ஆமதாபாத் தொழிலாளரின் நிலைமையைப்பற்றி ஒரு கடிதம் வந்தது. அவர்கள் பெற்றுவந்த சம்பளம் மிகவும் குறைவு. சம்பள உயர்வுக்காக அவர்கள் நீண்ட நாளாய்க் கிளர்ச்சி செய்து வந்தனர். கூடுமானால் அவர்களுக்கு வழி காட்டி நடத்த வேண்டுமென விரும்பினேன். ஆனால் இந்தச் சிறு காரியத்தையும் அவ்வளவு தூரத்திலிருந்து நடத்த எனக்குத் தைரியமில்லை. எனவே சந்தர்ப்பம் கிடைத்ததும் ஆமதாபாத் சென்றேன். இவ்விரண்டு காரியங்களையும் விரைவில் முடித்துக்கொண்டு சம்பாரானுக்குத் திரும்பிவந்து அங்கே தொடங்கப்பட்டிருந்த நிர்மாண வேலையைக் கவனிக்கலா மென்று நம்பினேன்.

ஆனால் நான் விரும்பியவண்ணம் காரியங்கள் விரைவாக நடைபெறவில்லை. சம்பாரானுக்கு நான் திரும்ப

முடியாமற் போகவே, பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றாக மூடப்படலாயின. என்னுடைய தோழர்களும் நானும் எவ்வளவோ ஆகாயக் கோட்டைகள் கட்டியிருந்தோம். அவையெல்லாம் தற்சமயத்துக்கு மறைந்து மாயமாய்ப் போயின.

இவற்றில் ஒன்றில் சம்பாரானில் கோ சம்ரக்ஷண வேலை செய்ய வேண்டுமென்பது. கிராம சுகாதாரம், கிராமக் கல்வி இவற்றுடன் கூட இவ்வேலை செய்யவும் தீர்மானித்திருந்தோம். என்னுடைய பிரயாணங்களின் போது பசுப் பாதுகாப்பும் ஹிந்தி பிரசாரமும் மார்வாரிகளுக்கே தனி உரிமையாகி யிருப்பதைக் கண்டேன். நான் பெட்டியாவுக்குச் சென்றிருந்தபோது ஒரு மார்வாரி நண்பர் தமது தர்மசாலையில் எனக்குத் தங்க இடங் கொடுத்தார். அங்கிருந்த மற்ற மார்வாரிகள் தங்களுடைய கோ சாலையை எனக்குக் காட்டி அதில் சிரத்தை உண்டாகும்படி செய்தார்கள். பசுப் பாதுகாப்பைக் குறித்து என் எண்ணங்கள் அப்போதே திட்டமாக உருக்கொண்டு விட்டன. அவ்வேலையைப் பற்றி அப்போ தேற்பட்ட அபிப்பிராயமே எனக் கின்னும் இருந்து வருகிறது. கோ சம்ரக்ஷணம் என்பதில் மாட்டின் இனத்தை உயர்தர மாக்குதல், காளைகளைக் கருணையுடன் நடத்துதல், மாதிரி - மாட்டுப் பண்ணைகள் வைத்தல் முதலியவையும் அடங்கும் என்பது என் அபிப்பிராயம். இவ்வேலையில் பூரணமாக ஒத்துழைப்பதாய் மார்வாரி நண்பர்கள் வாக்குறுதி தந்தார்கள். ஆனால் சம்பாரானில் நான் நிலையாகத் தங்க முடியாதபடியால் அத் திட்டத்தை நிறைவேற்றக் கூடவில்லை.

பெட்டியாவில் நான் பார்த்த கோ சாலை இன்னும் இருந்துதான் வருகிறது. ஆனால் அது "மாதிரி - மாட்டுப் பண்ணை" ஆகவில்லை. சம்பரான் காளைகள் இன்னும் அவற்றின் ஆற்றலுக்கு மிஞ்சி வேலை வாங்கப்பட்டுத் தான் வருகின்றன. "ஹிந்துக்கள்" என்று சொல்லிக் கொள்வோர் இன்னமும் வாயில்லாப் பிராணிகளைக் கொடுமையாக அடித்துத் தங்கள் மதத்துக்கு இழிவு தேடியே வருகின்றனர்.

எனக்குப் பிரியமான இவ்வேலையைச் செய்ய முடியாமலிருப்பது எனக்கு எப்போதும் வருத்தமளித்து வந்திருக்கிறது. நான் சம்பரானுக்குப் போக நேரும்போதெல்லாம் இதன் பொருட்டு மார்வாரி நண்பர்களும், பீஹாரி நண்பர்களும் அன்புரிமையுடன் என்னைக் கண்டியாமலிருப்பதில்லை. அக்காலத்தில் திடீரென்று கை நழுவவிட்டுச் சென்ற வேலைத் திட்டங்களையெல்லாம் நினைத்து நானும் பெருமூச்சு விடுகிறேன்.

கல்வித் திட்டம் மட்டும் ஏதேனும் ஒரு வழியில் பல இடங்களில் நடந்து வருகிறது. ஆனால் கோ சம்ரக்ஷணை வேலை நன்கு வேர் கொள்ளவில்லையாதலின் உத்தேசித்த வண்ணம் அபிவிருத்தியடையவில்லை.

கேதா குடியானவர்களின் விஷயம் இன்னும் விவாதிக்கப்பட்டு வந்தபோதே நான் ஆமதாபாத்தில் தொழிலாளர் பிரச்னையை ஏற்றுக்கொண்டு விட்டேன்.

என்னுடைய நிலைமை தர்மசங்கடமாயிருந்தது என்று சொல்லலாம். ஆலைத் தொழிலாளர் கட்சியில் நியாயம் இருந்தது. ஸ்ரீமதி அனுசூயா பாய் தமது சொந்த சகோதரரும், ஆலை முதலாளிகளின் கட்சிக்குத் தலைமை வகித்தவருமான ஸ்ரீமான் அம்பலால் ஸாராபாயுடனேயே

போராட வேண்டியவரானர். ஆலை முதலாளிகளுடன் நான் நேயபாவத்துடன் பழகி வந்தபடியால் அவர்களுடன் போராடுவது எனக்கும் கஷ்டமாயிருந்தது. அவர்களுடன் கலந்து பேசி விவாதத்தை மத்தியஸ்தத்துக்கு விடும்படி கேட்டுக் கொண்டேன். ஆனால் 'தங்களுக்கும் தொழிலாளருக்கு மிடையே அன்னியர் மத்தியஸ்தம் செய்வது' என்னும் கொள்கையை அங்கீகரிக்கவே அவர்கள் மறுத்து விட்டார்கள்.

எனவே, தொழிலாளருக்கு வேலை நிறுத்தம் செய்யும்படி நான் யோசனை சொல்ல வேண்டியதாயிற்று. அப்படிச் சொல்லுமுன், அவர்களுடனும் அவர்களுடைய தலைவர்களுடனும் நெருங்கிப் பழகினேன். வேலை நிறுத்தம் வெற்றி பெற வேண்டுமானல் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டுமென்று எடுத்துச் சொன்னேன்:—

(1) எந்நிலைமையிலும் பலாத்காரத்தைக் கைக் கொள்ளக் கூடாது.

(2) கட்டுப்பாட்டை மீறி வேலைக்குச் செல்பவர்களைத் தொந்திரவு செய்யக்கூடாது.

(3) வேலை நிறுத்தத்தின் போது வயிறு வளர்ப்பதற்குப் பிச்சை எடுக்கக் கூடாது.

(4) வேலை நிறுத்தம் எவ்வளவு காலம் நீடித்தாலும் உறுதியாக நின்று, வேறு கண்யமான தொழில் செய்து வாழ்க்கை நடத்தவேண்டும்.

வேலை நிறுத்தத் தலைவர்கள் இந் நிபந்தனைகளை நன்கறிந்து அவற்றை ஏற்றுக் கொண்டார்கள். தொழிலாளர் பொதுக்கூட்டம் கூடி, தங்கள் கோரிக்கைகளுக்கு முதலாளிகள் இணங்கும் வரையில் அல்லது

விவாதத்தை மத்தியஸ்தத்துக்கு விடச் சம்மதிக்கும்வரையில் வேலை தொடங்குவதில்லை யென்று தீர்மானித்தார்கள்.

இந்த வேலை நிறுத்தத்தின்போதே ஸ்ரீமான்கள் வி. ஜே. படேல், சங்கர்லால் பாங்கர் இவ்விருவருடைய நெருங்கிய பழக்கம் எனக்கேற்பட்டது. ஸ்ரீமதி அனுசூயா பாயை இதற்கு முன்பே நன்கறிவேன்.

சபர்மதி நதிக்கரையில் ஒரு மரத்தின் நிழலில் தினந்தோறும் தொழிலாளர் கூட்டங்கள் நடத்தினோம். அவர்கள் ஆயிரக்கணக்கில் கூட்டங்களுக்கு வந்தார்கள். என்னுடைய பிரசங்கங்களில், அவர்களுடைய பிரதிக்ஞையைப் பற்றியும், அமைதியையும் சுயமரியாதையையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பைப் பற்றியும் நினைவூட்டி வந்தேன். அவர்கள் தினந்தோறும் நகரின் வீதிகளில் "பிரதிக்ஞையைக் காப்பாற்றுங்கள்" என்று எழுதிய கொடிகளுடன் அமைதியாக ஊர்வலம் சென்றார்கள்.

வேலை நிறுத்தம் இருபத்தொரு நாள் நடந்தது. இத்தினங்களில் நான் அடிக்கடி ஆலை முதலாளிகளிடம் சென்று தொழிலாளருக்கு நீதி செய்யுமாறு வேண்டிக் கொண்டேன். அவர்கள் பின்வருமாறு விடை யளித்தார்கள்:—"நாங்களும் பிரதிக்ஞை செய்திருக்கிறோம். அதை மீற முடியாது. நாங்கள் தொழிலாளர்களை எங்கள் சொந்தக் குழந்தைகள்போல் பாவிக்கிறோம். மூன்றாவது மனிதர்கள் எங்களுக் கிடையில் தலையிடுவதை நாங்கள் எப்படிப் பொறுக்க முடியும்? மத்தியஸ்தத்துக்கு இடம் எங்கே இருக்கிறது?"

இருபத்தோராம் அத்தியாயம்

ஆசிரம நிலைமை

தொழிலாளர் விஷயத்தைப்பற்றி மேலே கூறப் புகுவதற்கு முன்னால், ஆசிரம நிலைமையைச் சற்றே கவனித்து விட்டுப் போதல் அவசியமாகும். சம்பாரனில் நான் இருந்த காலம் முழுவதிலும் ஆசிரமத்தை ஒரு கணமும் மறக்கவேயில்லை. இடையிடையே சில சமயம் அவசரமாக ஓடிச்சென்று பார்த்துவிட்டு வருவேன்.

அச்சமயம் ஆசிரமம் ஆமதாபாத்துக்கு அருகில் உள்ள கோச்ராப் என்னும் கிராமத்தில் இருந்தது. இந்தக் கிராமத்தில் கொள்ளை நோய் (பிளேக்) தோன்றவே, ஆசிரமத்துக் குழந்தைகள் அபாயத்துக் குள்ளாகி யிருப்பதைக் கண்டேன். ஆசிரமத்துக்குள்ளே நாங்கள் தூய்மை விதிகளை எவ்வளவு கண்டிப்பாக அனுசரித்தாலும், எங்களைச் சுற்றிலும் இருந்த சுகாதாரக் கேடுகளின் பயன்கள் எங்களைச் சிறிதும் பாதியாம லிருத்தல் எவ்வாறு சாத்தியம்? கோச்ராப் ஜனங்களையும் இச் சுகாதார விதிகளை அனுஷ்டிக்கும்படி செய்யவோ, அல்லது வேறு முறையில் அந்த கிராமத்துக்குத் தொண்டு செய்யவோ அப்போது எங்களுக்கு ஆற்றல் போதாமலிருந்தது. ஆசிரம மானது எந்த நகரம் அல்லது கிராமத்திற்கு மிக அருகிலும் இருக்கக் கூடாது. எளிதில் போக முடியாதபடி அவ்வளவு அதிக தூரத்திலும் இருக்கக்கூடாது. சுமாரான தூரத்தில் இருக்க வேண்டும் என்பது எங்கள் இலட்சியம். எங்கள் சொந்த நிலத்திலேயே ஆசிரமம் கட்டிக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்திருந்தோம்.

கோச்ராப்பை விட்டுச் செல்வதற்குப் பிளேக்கே போதுமான முன்னெச்சரிக்கை யாகுமென்று எனக்குத் தோன்றிற்று. ஆமதாபாத் வியாபாரியான ஸ்ரீமான் புஞ்சா பாய் ஹீராசந்து என்பவர் ஆசிரமத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தூய்மையான உள்ளத்துடனும், சுய நலமில்லாமலும் பல விஷயங்களில் எங்களுக்கு ஊழியம் புரிந்துவந்தார். ஆமதாபாத்தில் அவருக்கு நிரம்ப அநுபவ முண்டு. எங்களுக்குத் தகுந்த நிலம் சம்பாதித்துத் தருவதாக அவர் முன் வந்தார். நான் அவருடன் சேர்ந்து கோச்ராப் புக்கு வடக்கேயும் தெற்கேயும் நிலந்தேடிச் சென்றேன். கடைசியில் வடக்கே மூன்று அல்லது நான்குமைல் தூரத் தில் நிலங் கண்டு பிடித்து வாங்குமாறு அவரிடம் கூறி னேன் அவர் தற்போது ஆசிரமம் அமைந்துள்ள இடத் தைத் தெரிந்தெடுத்தார். அவ்விடம் சபர்மதி சிறைக்கூடத் துக் கருகிலிருந்ததானது அதற்கு ஒரு தனிச் சிறப்பை யளித்ததாக எனக்குத் தோன்றிற்று. சிறைக்கூடமே சத்தி யாக்கிரஹிகளின் சாதாரண வாசஸ்தலமாக இருக்க வேண் டிய தாதலின், அவ்விடத்தை நான் பெரிதும் விரும்பினேன். சாதாரணமாக, சுற்றுப் புறங்கள் தூய்மையாக உள்ள இடங்களையே சிறைக் கூடங்களுக்குத் தேர்ந் தெடுக்கிறார் கள் என்பது எனக்குத் தெரியும்.

எட்டு நாளில் நிலம் வாங்கியாகி விட்டது. நிலத்தில் கட்டிடமோ, மரமோ ஒன்றும் இல்லை. ஆனால் அவ்விடத் தின் முக்கிய அநுகூலங்கள் அது நதிக்கரையில் இருந்ததும், ஏகாந்தமான பிரதேசமா யிருந்தது மாகும்.

வீடு கட்டும் வரையில் கித்தான் கூடாரம் போட்டுக் கொண்டு வசிக்கத் தீர்மானித்தோம். சமையலறைக்கு மட்டும் தகரக் கொட்டகை போட்டுக் கொண்டோம்.

ஆசிரமம் மெதுவாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தது. அப்போது ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாய் நாங்கள் நாற்பது பேர் இருந்தோம். எல்லாருக்கும் பொதுச் சமையலறையிலேயே சாப்பாடு நடந்தது. ஆசிரமத்தைப் புது இடத்திற்குக் கொண்டு போவதைப் பற்றிய யோசனை எல்லாம் என்னுடையனவே யாகும். வழக்கம் போல் மகன்லால் காந்தி அந்த யோசனைகளை நிறைவேற்றி வைத்தார்.

குடியிருக்க வீடுகள் கட்டப்படும் வரையில் நாங்கள் எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளாக வேண்டி யிருந்தது. அப்போது மழை காலம் தொடங்கும் சமயம். நாலு மைல் தூரத்திலுள்ள பட்டணத்திலிருந்து உணவுப் பொருள்கள் வாங்கிக்கொண்டு வரவேண்டும். வெகு காலமாகத் தரிசாகக்கிடந்த அந்தப் பிரதேசத்தில் பாம்புகள் மலிந்து கிடந்தன. இத்தகைய நிலைமையில் அவ்விடத்தில் குழந்தைகளுடன் வசிப்பது பெரிதும் அபாயம் என்று சொல்ல வேண்டுவதில்லை. எங்களில் எவரும் பாம்புகளிடம் பயம் நீங்கப் பெற்றவ ரல்லராயினும், பொது விதியாகப் பாம்புகளைக் கொல்வதில்லை யென்று தீர்மானித்திருந்தோம்.

போனிக்ஸிலும், டால்ஸ்டாய் பண்ணையிலும், சபர்மதியிலும் விஷ ஜந்துக்களைக் கொல்வதில்லை யென்னும் விதி பெரும்பாலும் அனுசரிக்கப்பட்டு வந்திருக்கிறது. நாங்கள் தரிசு நிலத்திலேயே குடியேற வேண்டி யிருந்தது. எனினும் பாம்பு கடியினால் எங்களிடையே உயிர்ச்சேதம் நேர்ந்தது கிடையாது. கருணைக்கடலான ஆண்டவனின் அருள் மகிமையையே இதில் நான் காண்கிறேன். கடவுள் பாரபட்சமுடையவரா யிருக்க முடியாதென்றும், மனிதர்களுடைய

அற்ப காரியங்களில் தலையிடுவதற்கு அவருக்குச் சாவகாசமிருக்குமா வென்றும் யாரேனும் குதர்க்கம் செய்யக்கூடும் ஆனால் இந்த என் அநுபவத்தை நான் வேறு பாஷையில் வெளியிட முடியாது. மனிதனுடைய வாய் மொழியினால் இறைவன் வழிகளைக் குறைவின்றிவிவரித்தல் இயலாத காரியம். கடவுளின் செயல்கள் விவரிக்கவும், அறியவும் ஒண்ணாதவை என்று நான் அறிந்துள்ளேன். ஆனால் மனிதன் துணிந்து அவற்றை விவரிக்கத் தலைப்பட்டானாயின், அதற்கு அவனுடைய அரைகுறையான பேச்சை யல்லாமல் வேறு சாதனம் என்ன உண்டு? கொல்லாமை விரதத்தை நாங்கள் ஏறக்குறைய ஒழுங்காய் அநுசரித்து வந்திருந்தும் இருபத்தைந்து ஆண்டு காலத்தில் விஷ ஜந்துக்களால் எவ்விதத் தீங்கும் எங்களுக்கு நேராதது தற்செயலான சம்பவம் அல்லவென்றும், இறைவன் அருள் திறமே என்றும் நான் நம்புகிறேன். இது நம்பிக்கையானாலும் நான் இம்மூட நம்பிக்கையை என் இதயத்தில் வைத்துப் போற்றியே தீருவேன்.

ஆமதாபாத்தில் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்தபோது, ஆசிரமத்தின் நெசவுக் கொட்டகைக்கு அடிப்படை போடப்பட்டது. அப்போது ஆசிரமத்தில் முக்கியமாக நடந்த வேலை நெசவு வேலையேயாகும். அதுவரைக்கும் இராட்டினத்தில் நூற்கும் தொழிலை ஆரம்பித்தல் சாத்தியமாகவில்லை.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

உண்ணா விரதம்

முதல் இரண்டு வாரம் ஆலைத் தொழிலாளர் சிறந்த தைரியத்துடனும், தன்னடக்கத்துடனும் நடந்து கொண்டார்கள். தினந்தோறும் பெரும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் நான் அவர்கள் செய்திருந்த பிரதிக்ஞையை நினைவூட்டுவேன். வாக்குத் தவறுவதைக் காட்டிலும் உயிரையே விட்டு விடுவோ மென்பதாகக் கூறி அவர்கள் எனக்கு உறுதி யளிப்பார்கள்.

• ஆனால் கடைசியில் அவர்கள் சோர்வுக்கு அறிகுறிகள் காட்டத் தொடங்கினர். மனிதனுக்கு உடல் பலவீனம் ஏற் படும்போது அவன் விரைவில் கோபங் கொள்ளும் இயல்பை யடைவது வழக்கமன்றோ ? இவ்வாறே வேலை நிறுத்தம் பல வீனமடைய அடைய, தொழிலாளர்களும் தங்களில் பிர திக்ஞை மீறி வேலைக்குச் செல்வோரிடம் ஆத்திரங் கொள்ள லாயினர். எங்கு அவர்கள் முரட்டுச் செயல்களில் இறங்கி விடுவார்களோ என்று நான் பயப்படலானேன். தினசரிக் கூட்டங்களுக்கு வருவோர் தொகையும் நாளுக்கு நாள் குறையத் தொடங்கிற்று. கூட்டத்துக்கு வந்தவர்களும் சோர்வும் கிலேசமும் கொண்டுள்ளார்கள் என்பதை அவர்க ளுடைய முகக்குறி நன்கு காட்டிற்று. கடைசியாக, தொழி லாளர் உறுதி குலைந்து வருகின்றனர் என்று எனக்குச் செய்தி கிடைத்தது. இதனால் பெரிதும் கவலைக் குள்ளா னேன். இத்தகைய நிலைமையில் என்னுடைய கடமை என்ன வென்பதாகத் தீவிரமாய்ச் சிந்தித்தேன். தென்னாப்

பிரிக்காவில் மகத்தான ஒரு வேலை நிறுத்தம் நடத்தி எனக்கு அநுபவமிருந்தது. ஆனால் இங்கிருந்த நிலைமை முற்றும் வேறானது. இங்கே என்னுடைய யோசனையின் மீது தொழிலாளர் பிரதிக்ஞை செய்தார்கள்; பின்னர் பிரதி தினமும் என் முன்னிலையில் மீண்டும் மீண்டும் அதை உறுதிப்படுத்தி வந்தார்கள். அங்ஙனமிருக்க இப்போது அவர்கள் பிரதிக்ஞாபங்கம் செய்யக்கூடுமென்பது என்னால் நினைப்பதற்கும் சகிக்க முடியாத விஷயமாயிருந்தது. இவ்வுணர்ச்சிக்கு அடிப்படையா யிருந்தது என் தற் பெருமையா, தொழிலாளர்களிடத்து நான் கொண்டிருந்த அன்பா, அல்லது சத்தியத்தினிடம் எனக்கிருந்த அழியாப் பற்றா, எது என்று எவரால் சொல்ல முடியும்?

இவ்வாறு நான் வழி காணாமல் திகைத்துக் கொண்டே இருக்கையில், ஒரு நாள் காலை தொழிலாளர் கூட்ட மொன்றில் பேசிக்கொண்டு வரும்போது சட்டென்று ஒளி தோன்றிற்று. முன்னதாக எண்ணிப் பாராமலே பின்வரும் மொழிகள் என் நாவில் தாமாகப் பிறந்தன:—"தொழிலாளர் கள் தங்கள் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, ஏதேனும் ஒரு முடிவு ஏற்படும் வரையில் வேலைக்குத் திரும்பாமல் உறுதியுடன் நிற்கவேண்டும்; அல்லது ஆலைகளை அடியுடன் விட்டொழித்துவிடவேண்டும். இவ்விரண்டிலொன்று நிச்சய மாகாத வரையில் நான் உணவு அருந்தப் போவதில்லை."

தொழிலாளர்கள் இம்மொழிகளைக் கேட்டதும் இடி விழுந்ததுபோல் திகைத்துப் போனார்கள். அநுசூயாபாயின் கண்களில் நீர் ததும்பி வழிந்தது. தொழிலாளர்கள் ஒரு முகமாகக் கூறியதாவது:—"ஒருநாளும் நீங்கள் உபவாச மிருக்கக் கூடாது. நாங்கள் உபவாசம் இருக்கிறோம்,

நீங்கள் பட்டினி கிடந்தால் அதைப்போல் பெருங்கொடுமை வேறில்லை. உறுதி தளர்ந்ததற்காக எங்களை மன்னித்து விடுங்கள். இனி கடைசி வரையில் எங்கள் பிரதிக்ஞையை நிச்சயமாகக் காப்பாற்றுகிறோம்.

அப்போது நான் கூறியதாவது:—நீங்கள் உபவாசமிருத்தல் அவசியமில்லை. உங்கள் பிரதிக்ஞையை நிறைவேற்றினாலே போதும். நம்மிடம் நிதி கிடையாதென்பது உங்களுக்குத் தெரியும். பொது ஜனங்களின் பிச்சையினால் பிழைத்துக்கொண்டு வேலை நிறுத்தம் நடத்தவும் நமக்கு விருப்பமில்லை. ஆதலின், ஏதாவது வேலை தேடிக்கொண்டு, உயிர் வாழ்வதற்குப் போதிய வருவாயாவது பெற நீங்கள் முயலவேண்டும். அப்போதுதான் வேலை நிறுத்தம் எவ்வளவு நாள் நீடித்தாலும் கவலையின்றி நீங்கள் உறுதியாக நிற்கலாம். என்னுடைய உபவாசத்தைப் பற்றிய வரையில் நீங்கள் கவலைப்பட வேண்டாம். வேலை நிறுத்தம் முடிந்த பிறகுதான் நான் உணவு கொள்ளப் போகிறேன்."

இதற்கிடையில், வல்லபாய் வேலைநிறுத்தக்காரர்களுக்கு நகர சபையின் கீழ் ஏதாவது வேலை தேடித்தர முயன்று கொண்டிருந்தார். ஆனால் இம் முயற்சி பயனளிக்கும் என்று நம்புவதற்கு அதிக இடமில்லாமலிருந்தது. மகன்லால் காந்தி ஒரு யோசனை சொன்னார். ஆசிரமத்தில் எங்கள் நெசவுப் பள்ளிக்கூடத்தின் அடித்தளத்தை நிரப்ப மணல் ஏராளமாக வேண்டியிருந்தது. மணல் கொண்டு வருவதற்குத் தொழிலாளர்களை உபயோகிக்கலாம் என்று அவர் கூறினார். தொழிலாளரும் இந்த யோசனையை வரவேற்றார்கள். அநுசூயாபாய் தமது தலையில் கூடையைச் சுமந்து

முதலில் வழிகாட்டினார். அவரைத் தொடர்ந்து தொழிலாளர்கள் வரிசை வரிசையாக ஆற்றிலிருந்து மணல் வாரிக் கொண்டு வந்தார்கள். அது காண்பதற்கரிய ஓர் காட்சியாயிருந்தது. தொழிலாளர்கள் ஏதோ புதிய வலிமை பெற்றவர்கள்போல் காணப்பட்டனர். அவர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்து சமாளிப்பது மிகவும் கஷ்டமாகி விட்டது.

என்னுடைய உபவாசத்தில் ஒரு பெரிய குறைபாடு இல்லாமற் போகவில்லை. நான் முன்னமே சொல்லியிருப்பதுபோல் ஆலைச் சொந்தக்காரர்களிடம் நான் நெருங்கிப் பழகி அவர்களுடைய அன்புக் குரியவனாகி யிருந்தேன். எனவே, என்னுடைய உண்ணா விரதம் அவர்களுடைய முடிவைப் பாதியாமலிருத்தல் எவ்வாறு சாத்தியம்? சத்தியாக்கிரஹியாகிய நான் அவர்களுடைய மனதை மாற்றுவதற்காக உபவாசம் செய்தல் கூடாது. தொழிலாளரின் வேலை நிறுத்தம் ஒன்றை மட்டுமே உத்தேசித்து அவர்கள் முடிவு செய்யும்படி விடுதல் வேண்டும். இவையெல்லாம் நான் அறிந்தவையே. முதலாளிகள் வாக்குப் பிறழ்ந்ததை உத்தேசித்து நான் உண்ணா விரதங் கொள்ளவில்லை. தொழிலாளர் உறுதி பிறழ்ந்ததற்காகவே அவ்விரதம் மேற்கொண்டேன். தொழிலாளரின் பிரதிநிதி என்ற முறையில் அவர்களுடைய தவறில் எனக்கும் பங்குண்டென்று கருதினேன். முதலாளிகளை நான் வேண்டிக்கொள்ளுதல் மட்டுமே நியாயம். அவர்களை இணங்கச் செய்வதற்காகப் பட்டினி கிடத்தல் பலாத்காரமேயாகும். எனினும், என்னுடைய உபவாசம் அவர்களைப் பாதியாமலிராது என்று நான் அறிந்திருந்தும், அதைக் கைக்கொள்வதையன்றி வேறு வழி யில்லையென்று தீர்மானித்தேன்.

உபவாசத்தை மேற்கொள்ளுதலே என்னுடைய கடமையாகுமென்று தெளிவாக உணர்ந்தேன்.

முதலாளிகளுக்குச் சமாதானம் கூற முயன்றேன். "என் பொருட்டு நீங்கள் உங்கள் உறுதியை மாற்றிக் கொள்ளுதல் சிறிதும் அவசியமில்லை" என்று சொன்னேன். இதனுல் அவர்கள் சிறிதும் ஆறுதல் பெறவில்லை. சிலர் மறைபொருளான கூர் மொழிகளாலும், சொல்லாமற் சொல்லியும் என்னைக் கண்டித்தார்கள். இவ்வாறு செய்ய அவர்களுக்குப் பூரண உரிமை உண்டல்லவா?

முதலாளிகள் தங்கள் பிடிவாதத்தை விடாமலிருந்ததற்கு முக்கிய காரணமாயிருந்தவர் சேத் அம்பாலால் ஆவர். அவருடைய தளராத உறுதியும். உள்ளத்தில் உள்ளதை அப்படியே சொல்லும் உண்மை இயல்பும் என் இதயத்தைக் கவர்ந்தன. அவருடன் போராடுவதே மிகவும் மகிழ்ச்சி தருவதாயிருந்தது. ஆதலின், என்னுடைய உபவாசத்தின் காரணமாக, அவரைத் தலைவராகக் கொண்ட எதிர்க்கட்சியினர்க்கு ஏற்பட்ட தர்மசங்கடமான நிலைமை எனக்குப் பெரும் துயரையளித்தது. மற்றும் அவருடைய மனைவி ஸாராளாதேவி உடன்பிறந்த சகோதரியைப்போல் என்னிடம் அன்பு வைத்திருந்தார். என்னுடைய செயலினுல் அவர் துயரமுறுவது எனக்குப் பொறுக்கவில்லை.

அனுசூயாபாயும், மற்றும் சில நண்பர்களும், தொழிலாளிகளும் முதல்நாள் என்னுடன் தாங்களும் உபவாசம் இருந்தார்கள். ஆனுல் அவர்களுடன் வாதிட்டுச் சிறிது கஷ்டத்தின் பேரில் உபவாசத்தைத் தொடர்ந்து நடத்தாமல் நிறுத்தச் செய்தேன்.

இவற்றினுலெல்லாம் மொத்தத்தில் நல்ல பயனே ஏற்பட்டது. எங்கும் நேய மனப்பான்மை உண்டாயிற்று.

ஆலைச் சொந்தக்காரர்கள் மனமிளகினர். ஏதேனும் முடிவுக்கு வழி கண்டுபிடிக்க அவர்கள் தீவிரமாக முயலத் தொடங்கினார்கள். அனுசூயா பாயின் வீடு அவர்களுடைய சம்பாஷணைகளுக்குரிய இடமாயிற்று. ஸ்ரீ ஆனந்த சங்கர துருவர் இப்போது இதில் தலையிட்டார். முடிவில் அவர் மத்தியஸ்தராக நியமிக்கப் பட்டார். நான் உண்ணாவிரதம் தொடங்கி மூன்றே நாளைக்குப் பின்னர் வேலை நிறுத்தம் முடிவுற்றது. முதலாளிகள் இந்த நன் முடிவைக் கொண் டாடும் பொருட்டுத் தொழிலாளருக்குத் தின்பண்டங்கள் வழங்கினார்கள். இவ்வாறு இருபத்தோரு நாள் வேலைநிறுத் தத்திற்குப் பிறகு ஒரு முடிவு ஏற்பட்டது.

ராஜியின் பொருட்டு மகிழ்ச்சி தெரிவிப்பதற்காக நடந்த தொழிலாளர் கூட்டத்தில் ஆலைச் சொந்தக்காரர் களும், கமிஷனரும் பிரசன்னமா யிருந்தார்கள். இச்சமயத் தில் கமிஷனர் தொழிலாளருக்குக் கூறிய புத்திமதி குறிப் பிடத் தக்கதாகும், "ஸ்ரீ காந்தி கூறும் புத்திமதியின்படியே நீங்கள் எப்போதும் நடந்துகொள்ள வேண்டும்" என்று அவர் சொன்னார். இச் சம்பவங்கள் நிகழ்ந்து முடிவுற்ற உடனேயே இதே கனவானிடம் நான் மறுபடியும் போர் துவக்கவேண்டி யிருந்தது. அதற்குள் சந்தர்ப்பங்கள் மாறி விட்டன. சந்தர்ப்பங்களுடன் அவரும் மாறிவிட்டார். இப் போது அவர் என்னுடைய புத்திமதிக்குச் செவிகொடுக்க வேண்டாமென்று கேதா (கெயிரா) பட்டாதாரர்களுக்கு எச்சரிக்கை செய்யலுற்றார்!

ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடாமல் நான் இந்த அத்தியாயத்தை முடித்தல் கூடாது. அதில் வேடிக்கை எவ்வளவு உண்டோ அவ்வளவும் பரிதாபமும் உண்டு.

தின்பண்டங்களின் விநியோகம் சம்பந்தமாக அது நிகழ்ந்தது. முதலாளிகள் ஏராளமான பக்ஷணங்கள் தருவித்திருந்தார்கள். ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு அவற்றை எப்படி வழங்குவதென்பது ஒரு பெரிய பிரச்னையாயிற்று. எந்த மரத்தினடியில் அவர்கள் பிரதிக்ஞை செய்தார்களோ, அந்த மரத்தினடியில் பக்ஷணம் வழங்குவதே சகுதியென்று தீர்மானிக்கப்பட்டது. வேறெங்கும் அவர்களை ஒன்று சேர்த்தல் மிகவும் அசௌகரியத்துக் கிடமாயிருக்கும்.

இருபத்தோரு நாள் அதிசயிக்கத்தக்க கட்டுப் பாட்டுடன் இருந்தவர்கள் பக்ஷண விநியோகத்தின்போது போட்டி யிட்டுக்கொண்டு மேல் விழாமல் அமைதியாகவும் ஒழுங்காகவும் நின்று பெற்றுக் கொள்வார்களென்று நான் எண்ணினேன். இது குறித்து எனக்குச் சந்தேகமே தோன்றவில்லை. ஆனால், காரியத்தில் வந்தபோது, எவ்வளவோ முறைகளைக் கையாண்டு பார்த்தும், விநியோகம் செய்ய முடியவில்லை, மீண்டும் மீண்டும் அவர்கள் வரிசை கலைந்து ஒருவர்மேல் ஒருவர் விழுந்து குழப்பம் விளைவித்தார்கள். இரண்டு நிமிஷத்துக்குமேல் அமைதி நிலைத்திருப்பதில்லை. தொழிலாளர் தலைவர்கள் ஒழுங்கு நிலைநாட்ட எவ்வளவோ முயன்றார்கள். அவை எல்லாம் வீணாயின. கடைசியில் குழப்பமும், போட்டியும், ஒருவர் மேல் ஒருவர் விழுதலும் நிரம்ப அதிகமாய்ப் போனபடியால் ஏராளமான தின்பண்டங்கள் காலால் மிதிக்கப்பட்டு வீணாயின. மிகவும் கஷ்டத்தின் பேரில் பாக்கியிருந்த பக்ஷணங்களை மிர்ஸாபூரிலிருந்த அம்பாலால் தேசத்தின் தோட்ட வீட்டுக்குக்கொண்டு சேர்த்தோம். மறுநாள் அங்கே தோட்டச் சுவருக் குட்புறத்தில் எவ்விதத்

தொல்லையு மின்றித் தின்பண்டங்கள் விநியோகிக்கப் பட்டன.

இந் நிகழ்ச்சியிலுள்ள நகைச் சுவை அம்சம் எளிதில் விளங்குவதாகும். ஆனால் அதன் பரிதாபப் பகுதியைப் பற்றிச் சிறிது கூறவேண்டும். பின்னால் விசாரித்ததிலிருந்து இவ் விவரம் தெரியவந்தது. ஆமதாபாத்தின் பிச்சைக்கார ஜனங் கள், குறிப்பிட்ட மரத்தின்கீழ் பக்ஷணம் விநியோகிக்கப் படுமென்னும் செய்தியறிந்து அங்கே பெருங் கூட்டமாக வந்து சேர்ந்திருந்தார்கள். பசிப்பிணி காரணமாக அவர்கள் பக்ஷணங்களுக்குப் பறந்து விழுந்ததே எல்லாக் குழப்பங் களுக்கும் காரணம் என்று தெரிந்தது.

நமது தாய் நாட்டில் குடிகொண்டுள்ள வறுமையும் பட்டினியும் அவ்வளவு கொடுமையானவையாகும். இவை காரணமாக, வருஷந்தோறும் பிச்சைக்காரர் கூட்டம் பெருகி வருகிறது. இவர்கள் வயிற்றுச் சோற்றுக்காகப் போட்டியிட்டும், சண்டை போட்டும் பழகிவிடுவதால் சுய மரியாதை உணர்ச்சி சிறிதும் அற்றவர்களாகி விடுகிறார்கள். நமது தருமப் பிரபுக்களோ அவர்களுக்கு வேலை தந்து, உண வுக்கு வேலை செய்யுமாறு வற்புறுத்துவதற்குப் பதிலாகப் பிச்சை போடுகிறார்கள்!

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

கேதா சத்தியாக்கிரஹம்

ஆமதாபாத் ஆலைத் தொழிலாளரின் வேலை நிறுத்தம் இவ்வாறு முடிவுற்றதாயினும், எனக்கு மூச்சு விடும் அவகாசம் கூடக் கிடைக்கவில்லை. அது முடிந்த

வுடனே கேதா (கெயிரா) சத்தியாக்கிரஹப் போராட்டத்தில் ஈடுபட வேண்டி யிருந்தது.

கேதா ஜில்லாவில் அவ்வருஷம் விளைச்சல் மிகவும் குறைவாய்ப் போய்விடவே, ஏறக்குறைய பஞ்சம் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த வருஷத்திற்கு நிலவரி வசூலை எவ்வாறு நிறுத்திவைக்கச் செய்வதென்று பட்டாதார்கள் யோசனை செய்துகொண் டிருந்தார்கள்.

ஸ்ரீமான் அமிர்தலால் தாக்கர் ஏற்கனவே ஜில்லாவின் நிலைமையை ஆராய்ந்து அறிக்கை வெளியிட்டிருந்ததுடன், கமிஷனருடனும் இவ்விஷயமாய்க் கலந்து பேசியிருந்தார். ஸ்ரீமான்கள் மோகன்லால் பாண்டியாவும், சங்கர்லால் பாரிக் என்பவரும் இப்போரில் தலைப்பட்டிருந்தார்கள். அவர்கள் ஸ்ரீமான் வித்தல்பாய் பட்டேல், காலஞ்சென்ற ஸர் கோகுல தாஸ் பாரெக் இவர்கள் மூலம் பம்பாய்ச் சட்ட சபையில் கிளர்ச்சி யுண்டுபண்ணி யிருந்தார்கள். இது சம்பந்தமாகக் கவர்னரைப் பிரதிநிதிக் கூட்டங்கள் பல பேட்டி கண்டு மாயிற்று. குடியானவர்களுக்கு நான் எவ்வித யோசனையும் சொல்வதற்கு முன்னால், இவ்வளவும் நிகழ்ந்தன.

அச்சமயம் நான் குஜராத் சபையில் அக்கிராசனனாக இருந்தேன். இச்சபை அரசாங்கத்துக்கு விண்ணப்பங்களும் தந்திச் செய்திகளும் அனுப்பிற்று, கமிஷனருடைய அவமதிப்புகளையும் அச்சுறுத்தல்களையும் பொறுமையாகச் சகித்துக்கொண்டது. இந்த சந்தர்ப்பத்தில் அதிகாரிகளின் நடத்தை எவ்வளவு கேவலமாயும் நகைப்புக் குரியதாயும் இருந்ததென்று எண்ணிப் பார்த்தால் இப்போது நம்பவும்

முடியாமலிருக்கின்றது. விவசாயிகளின் கோரிக்கை மிகத் தெளிவாயிருந்தது. அது மிதமான கோரிக்கையுமாகும். எனவே, எவரும் அதை எளிதில் ஏற்றுக்கொள்ளக் கூடுமெனக் காணப்பட்டது. நிலத்தீர்வை விதிகளின்படி மகசூல் நாலணா அல்லது அதற்குக் குறைந்த மதிப்புடையதானால் அந்த வருஷத்துக்கு வரியை முழுதும் நிறுத்தி வைக்கும்படி கேட்க விவசாயிகளுக் குரிமையுண்டு. உத்தியோகஸ்தர்களின் புள்ளி விவரங்களின்படி மகசூல்நாலணாவுக்கு மேல் மதிப்புடையதென்று கூறப்பட்டது. அதற்கு மாறாக விவசாயிகள் நாலணாவுக்குக் குறைந்த மகசூல் தான் கண்டது என்று வாதமிட்டார்கள். ஆனால் அரசாங்கத்தார் அவர்களுடைய முறையீட்டைக் கேட்பதற்குச் சித்தமாயில்லை. மத்தியஸ்தத்துக்கு விட்டு விடலாமென்று ஜனங்கள் கூறிய யோசனையை அவர்கள் தங்கள் கௌரவத்திற்குக் குறைவாக நினைத்தார்கள். பிரார்த்தனைகளெல்லாம் பயன்படாது போகவே என்னுடைய சகாக்களுடன் கலந்து கொண்டு,சத்தியாக்கிரகத்தைக் கைக்கொள்ளும்படி பட்டாதார்களுக்கு யோசனை சொன்னேன்.

இப் போராட்டத்தில் கேதா தொண்டர்களை யன்றி என்னுடைய முக்கிய துணைவர்களாயிருந்தவர்கள் ஸ்ரீமான்கள் வல்லபாய் படேல், சங்கர்லால் பாங்கர், இந்துலால் யாக்னிக், மகாதேவ தேசாய், ஸ்ரீமதி அனுசூயா பாய் முதலியோர் ஆவர். ஸ்ரீமான் வல்லபாய் இப் போராட்டத்தில் சேர்ந்தபோது ஏராளமான வருவாய் அளித்ததும், நாளுக்கு நாள் பெருகி வந்ததுமான தமது வக்கீல் தொழிலை நிறுத்தவேண்டி யிருந்தது. அதற்குப் பின்னர் அவர் அத் தொழிலைத் திரும்ப மேற்கொள்ளவே முடியவில்லை யென்று சொல்லலாம்.

நதியாத் நகரிலிருந்த அனுதாசிரமத்தை எங்களுடைய தலைமை ஸ்தலமாகக் கொண்டோம். நாங்கள் எல்லாரும் தங்கக்கூடிய பெரிய இடம் வேறு கிடைக்கவில்லை. பின் வரும் உறுதி மொழிப் பத்திரத்தில் சத்தியாக்கிரகிகள் கையொப்பமிட்டார்கள் :—

"எங்கள் கிராமங்களில் மகசூல் இவ்வருடம் நாலணு மதிப்புக்குக் குறைவானதென்று நன்கறிந்த நாங்கள் அடுத்த வருஷம் வரையில் நிலவரி வசூலை நிறுத்தி வைக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டோம். ஆனல் அரசாங்கம் எங்கள் பிரார்த்தனைக்கு இணங்கவில்லை. ஆகையால் இவ்வருஷத்து நிலவரி முழுதையுமோ அல்லது பாக்கியுள்ள பகுதியையோ நாங்களாக செலுத்துவதில்லை யென்று சத்தியம் செய்கிறோம். அரசாங்கம் சட்ட பூர்வமான நடவடிக்கைகள் என்ன நடத்தினலும் பொறுத்திருந்து வரி கொடாமையின் பயன்களை மகிழ்ச்சியுடன் அனுபவிப்போம். எங்களுடைய நிலங்களே பறிமுதல் செய்யப்பட்டாலும் சகித்துக் கொண்டிருப்போமேயல்லாமல் நாங்களாக வலியத் தீர்வை செலுத்தி எங்களுடைய கட்சி பொய்யானதென்று கருதப்படுவதற்கோ, எங்கள் சுய மரியாதைக்கு ஊறு நேரிடுவதற்கோ இடங் கொடுக்க மாட்டோம். ஆனல் ஜில்லா முழுவதும் இரண்டாவது தவணை வரி வசூலிப்பதை நிறுத்திவிட அரசாங்கத்தார் இணங்கினல் எங்களில் பணங் கொடுக்கக் கூடியவர்கள் வரி முழுமையுமோ பாக்கியுள்ள பகுதியையோ கொடுத்து விடுவோம். வரி கொடுக்கக்கூடிய நிலையிலுள்ளவர்களும் கொடாமலிருப்பதற்குக் காரணமென்னவென்றால், அவர்கள் கொடுத்துவிடின் ஏழை மிராசுதார்களும் பீதியடைந்து தங்களுடைய உடைமைகளை

விற்கவும் கடன் வாங்கவும் ஆரம்பித்து அதனால் தங்களுக்குச் சொல்ல முடியாத துன்பங்களை வருவித்துக் கொள்வார்கள். இந் நிலைமையில் ஏழைகளின் நன்மையை உத்தேசித்துப் பணம் செலுத்த சக்தியுடையவர்களும் செலுத்தாமலிருத்தல் கடமையாகு மென்று கருதுகிறோம்."

இந்தப் போராட்டத்தைக் குறித்துப் பல அத்தியாயங்களில் விரிவாக எழுதுவதற்கில்லை. எனவே, இது சம்பந்தமான இனிய ஞாபகங்கள் பலவற்றை விடுத்துச் செல்ல வேண்டி யிருக்கிறது. இம் முக்கியமான போராட்டத்தைப்பற்றி முழுமையும் விவரமாகத் தெரிந்து கொள்ள விரும்புவோர் ஸ்ரீ சங்கர்லால் பாரிக் எழுதிய "கேதா சத்தியாக்கிரக சரித்திர" த்தைப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இருபத்துநான்காம் அத்தியாயம்

"வெங்காயத் திருடன்"

சம்பாரான் இந்தியாவில் ஒரு மூலையில் இருந்தபடியாலும், அப்போராட்டத்தைக் குறித்துப் பத்திரிகைகளில் விளம்பரம் ஆகாதிருந்தபடியாலும் வெளியிலிருந்து அதிகம் பேர் அங்கு வரவில்லை. கேதா போராட்டம் இவ்வாறன்று. இங்கு நிகழ்ந்தவை யெல்லாம் அன்றாடம் பத்திரிகைகளில் வெளியாகி வந்தன. குஜராத்திகளுக்கு இது முற்றும் புதிய தொரு சோதனையா யிருந்தபடியால் அவர்கள் இப்போரில் மிகுந்த சிரத்தை காட்டினார்கள். இவ்வியக்கம் வெற்றியடையும் பொருட்டுத் தங்கள் பணத்தைக் கொட்டிக் கொடுக்க அவர்கள் சித்தமா யிருந்தனர். சத்தியாக்கிரகம் பணத்தினால் மட்டும் நடத்தி

விட முடியாது என்பது அவர்களுக்கு எளிதில் விளங்க வில்லை. சத்தியாக்கிரகத்துக்கு வேண்டிய சாதனங்களுள் பணம் கடைசியான தொன்றாகும். நான் வேண்டாமென்று சொல்லியும் கேளாமல் பம்பாய் வியாபாரிகள் அவசியத்தை விட அதிகமாகப் பணம் அனுப்பினார்கள். எனவே, போராட்டத்தின் இறுதியில் எங்களிடம் கொஞ்சம் பணம் மீதியாயிற்று.

இது ஒரு புறமிருக்க சத்தியாக்கிரஹத் தொண்டர்கள் எளிமை வாழ்வென்னும் புதிய பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் அப்பாடத்தை முழுதுங் கற்றுக் கொண்டார்களென்று சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் தங்கள் வாழ்க்கை முறைகளைப் பெரிதும் மாற்றிக் கொண்டார்க ளென்பதில் சந்தேகமில்லை. குடியானவர்களுக்கும் இப்போராட்டம் முற்றும் புதிய தொன்றாகவே யிருந்தது. ஆதலின், நாங்கள் கிராமங் கிராமமாகச் சென்று சத்தியாக்கிரஹ தத்துவங்களை விளக்கிக் கூறல் அவசிய மாயிற்று.

விவசாயிகளுடைய அச்சத்தைப் போக்குவதையே முதன்மையான காரியமாகக் கொண்டோம். உத்தியோகஸ்தர்கள் ஜனங்களுடைய எஜமானர்களல்ல ரென்றும், தாங்கள் கொடுக்கும் வரிப் பணத்திலிருந்து சம்பளம் வாங்குபவர்க ளாதலால் தங்களுடைய ஊழியர்களே யென்றும் அவர்கள் உணரும்படி செய்யவேண்டி யிருந்தது. அடுத்த படியாக அஞ்சாமையுடன்கூட மரியாதையான நடக்கையையும் கைக்கொள்ளுதல் கடமை யென்பதை அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டியதாயிற்று. இது அநேகமாக அசாத்தியமாகி விட்டது. உத்தியோகஸ்தர்களிடம் பயம் அவர்களுக்கு நீங்கி விட்டால் அவமதிப்புக்குப் பதில்

அவமதிப்புச் செய்யாமல் அவர்களைத் தடுப்ப தெப்படி? எனினும், மரியாதைக் குறைவாக நடந்து கொண்டால், நல்ல பாலில் ஒரு சொட்டு விஷங் கலந்ததுபோல் அவர்களுடைய சத்தியாக்கிரஹம் கெட்டேபோய்விடும். மரியாதையாக நடக்கும் பாடத்தை மட்டும் நான் எதிர்பார்த்ததை விடக் குறைவாகவே அவர்கள் கற்றுக்கொண்டார்களென்று பின்னால் உணர்ந்தேன். சத்தியாக் கிரஹத்தின் மிகக் கஷ்டமான பகுதி மரியாதையான நடக்கையே யென்று அநுபவம் எனக்குக் கற்பித்திருக்கிறது. மரியாதையென்பது, அந்தந்த சமயத்துக்குக் கைக்கொள்ளும் வெளிப்படையான பேச்சு நயம் மட்டுமன்று. எதிரிக்கும் நன்மை செய்ய வேண்டுமென்னும் அந்தரங்க விருப்பமும், மனப் பூர்வமான பெருந்தன்மையுமே உண்மை மரியாதையாகும். சத்தியாக்கிரஹியின் ஒவ்வொரு செயலிலும் இக்குணங்கள் வெளியாக வேண்டும்.

ஆரம்பத்தில் ஜனங்கள் மிகுந்த தைரியங் காட்டினார்களாயினும், அரசாங்கத்தார் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள விரும்புவதாய்த் தோன்றவில்லை. ஆனால், ஜனங்கள் உறுதி தளரமாட்டார்களென்று நிச்சயமான போது, அரசாங்கத்தார் அடக்குமுறை கைக்கொள்ளலாயினர். ஜப்தி உத்தியோகஸ்தர்கள் ஆடுமாடுகளை ஏலம் போட்டதுடன், அவர்கள் கையில் அகப்பட்ட ஜங்கம சொத்துகளை எல்லாம் ஜப்தி செய்யத் தொடங்கினார்கள். அபராத அறிக்கைகள் பிறப்பிக்கப்பட்டதுடன் சிலருடைய மகசூல்களும் ஜப்தி செய்யப்பட்டன. இது குடியானவர்களை உறுதி தளரும்படி செய்துவிட்டது. அவர்களில் சிலர் தங்கள் வரி பாக்கியைக் கொடுத்துவிட்டார்கள். இன்னும் சிலர் பத்திரமாகக் கையாளக் கூடிய ஜங்கம

சொத்துக்களை உத்தியோகஸ்தர்கள் கைபி லகப்படுமாறு முன்னால் கொண்டுவந்து வைத்தார்கள். வரி பாக்கிக்காக அவைகளை ஜப்தி செய்துகொண்டு போகட்டும் என்பது அவர்கள் கருத்து. இதற்கு மாறாக இறுதி வரையில் போராடச் சித்தமா யிருந்தனர் சிலர்.

இவ்வாறிருக்கையில் ஸ்ரீமான் சங்கர்லால் பாரிக்கின் குடியானவர்களில் ஒருவர் அவர் வசமிருந்த ஸ்ரீ பாரிக்கின் நிலங்களுக்காக வரி கொடுத்து விட்டார். இது பெருங் கிளர்ச்சியை யுண்டு பண்ணிற்று. ஆனால் ஸ்ரீ சங்கர்லால் பாரிக் தமது குடியானவரின் தவறுக்கு உடனே பரிகாரம் செய்தார். எந்த நிலத்துக்கு வரி கட்டப்பட்டதோ, அதைத் தருமத்துக்காக அவர் எழுதி வைத்தார். இவ்வாறு தமது கௌரவத்தைக் காத்துக் கொண்டதுடன் மற்றவர்களுக் கும் ஒரு நல்ல உதாரணத்தை ஏற்படுத்தித் தந்தார்.

பயப்பட்டு கொண்டிருந்தவர்களுக்கு தைரியம் அளிக்கும் பொருட்டு நான் ஜனங்களுக்கு ஒரு யோசனை சொன்னேன். ஒரு வயல் என்னுடைய அபிப்பிராயத்தில் தவறாக ஜப்தி செய்யப்பட்டிருந்தது. இந்த வயலிலிருந்த வெங்காய மகசூலை ஸ்ரீ மோகன்லால் பாண்டியாவின் தலைமையில் அப்புறப்படுத்தும்படி கூறினேன். இதை நான் சட்டமறுப்பென்று கருதவில்லை. சட்ட மறுப்பா யிருந்தாலும் பாதகமில்லை யென்றெண்ணினேன். மகசூலை ஜப்தி செய்வது சட்டத்திற் கொத்ததா யிருந்தாலும் அது சன்மார்க்கத்துக்கு விரோத மென்றும், அது கொள்ளைக்கே சமானமாகு மென்றும். ஆதலின் ஜப்தி உத்திரவைப் புறக்கணித்து வெங்காயத்தை அப்புறப் படுத்தும்படி நான் கூறினேன், அபராதமோ சிறைவாசமோ வலிய ஏற்றுக் கொள்வதில் ஜனங்கள் ஒருபாடங் கற்றுக்கொள்ள

இது நல்ல சந்தர்ப்பமென்று தோன்றிற்று. ஸ்ரீ மோகன்லால் பாண்டியாவும் இத்தகைய சந்தர்ப்பம் வரவில்லையே யென்றுதான் தாபங் கொண்டிருந்தார். சத்தியாக்கிரஹக் கொள்கைகளுக் கிணங்க, யாராவது சிறை புகுந்து துன்பம் அனுபவியாமல் இந்தப் போராட்டம் முடிந்து விடுவது அவருக்குச் சம்மதமில்லை. ஆதலின், வெங்காய மகசூலைத் தாமே அப்புறப் படுத்துவதாக அவர் முன் வந்தார். இந்த வேலையில் ஏழு எட்டு நண்பர்கள் அவருக்கு உதவி செய்தார்கள்.

இவர்களைச் சும்மா விட்டுவிடுதல் அரசாங்கத்துக்கு முடியாத காரிய மல்லவா? ஸ்ரீ மோகன்லாலும் அவருடைய தோழர்களும் கைதி செய்யப்பட்டது ஜனங்களுடைய உற்சாகத்தை அதிகப்படுத்திற்று. சிறைவாச பயம் போய்விட்டால் அடக்குமுறையானது ஜனங்களுடைய உற்சாகத்தை வளர்க்கவே செய்யும். விசாரணை தினத்தன்று நீதிமன்றத்தில் கூட்டங் கூட்டமாக ஜனங்கள் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீமான் பாண்டியாவுக்கும் அவர்களுடைய தோழர்களுக்கும் சொற்பகால சிறைவாச தண்டனை கிடைத்தது. அவர்கள் வெங்காயத்தை அப்புறப்படுத்திய செயல் குற்றச் சட்டத்தில் காணப்படும் "திருட்டு" ஆகாதாதலின் அவர்களைத் தண்டித்தது தவறென்று நான் அபிப்பிராயப் பட்டேன். ஆனால், நீதி மன்றங்களில் வாதாடுவதில்லை என்னும் கொள்கையை முன்னிட்டு அப்பீல் செய்யப்படவில்லை.

கைதிகள் சிறைக்குக் கொண்டு போகப்பட்டபோது அவர்களுடன் ஜனங்களின் ஊர்வலமொன்றும் சென்றது. அன்றைய தினம் ஜனங்கள் ஸ்ரீ மோகன்லால் பாண்டியாவுக்கு "வெங்காயத் திருடன்" என்னும் சிறப்புப் பட்டத்

தைச் சூட்டினார்கள். அந்தப் பட்டப் பெயர் இன்றளவும் அவருக்கு நிலைத்து நின்று வருகிறது. கேதா சத்தியாக்கிர ஹத்தின் முடிவை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

கேதா சத்தியாக்கிரஹத்தின் முடிவு

போராட்டம் எதிர்பாராத வகையில் முடிவுற்றது. ஜனங்கள் களைத்து விட்டார்களென்று தெளி வாகத் தெரிந்துவிடவே, உறுதியாயிருந்தவர்களை சர்வ நாச மடையுமாறு விட்டுவிடுவதா என்று தயங்கினேன். சத்தி யாக்கிரஹி ஒப்புக்கொள்ளக்கூடிய கௌரவமான முறை யில் போராட்டத்தை முடிப்பதற்கு வழி தேடலானேன். இத்தகைய வழி முற்றும் எதிர்பாராத வகையில் ஏற்பட்டது. நதியாத் தாலூகாவின் தாசில்தார், பணக்காரப் பட்டாதார் கள் பணஞ் செலுத்திவிட்டால், ஏழைகளிடம் வரி வசூலிப் பது நிறுத்திவைக்கப்படுமென்று எனக்குச் செய்தி யனுப்பி னார். ஆனால் தாசில்தார் தமது தாலூகாவுக்கு மட்டுமே பொறுப்புள்ளவர். ஜில்லா முழுவதின் சார்பாகவும் கலெக் டர்தான் வாக்குறுதி யளிக்க முடியும். எனவே, தாசில் தாரின் யோசனை ஜில்லா முழுவதிற்கும் பொருந்துமா வென்று கலெக்டரை நான் விசாரித்தேன். தாசில்தாரின் கடிதத்தில் கண்ட நிபந்தனைகளை யனுசரித்து வரிவசூலை நிறுத்திவைக்க ஏற்கனவே உத்திரவு பிறப்பித்தாகி விட்ட தென்று அவர் பதிலளித்தார். எனவே, ஜனங்களின் பிர திக்ஞை நிறைவேறிவிட்டது. இதே நோக்கத்துடன் தான் பிரதிக்ஞை செய்யப்பட்டதென்பது நேயர்களுக்கு

நினைவிருக்கலாம். ஆகவே, மேற்படி உத்திரவு எங்களுக்குத் திருப்தி யளித்துவிட்டதாகத் தெரிவித்தோம்.

எனினும், இம்முடிவு எனக்கு மகிழ்ச்சி தரவில்லை. சத்தியாக்கிரஹப் போராட்டமானது பெருந்தன்மையான சமரசத்துடன் முடிவுறுதலே அழகாகும். ஆனால் இம் முடிவில் அந்த சமரசப் பான்மை காணப்படவில்லை. கலெக்டர் தாம் ராஜி முடிவு எதற்கும் இணங்காதவர் போலவே காரியம் செய்து வந்தார். ஏழைகளிடம் பணவசூல் நிறுத்தி வைக்கப் படுமென்று சொல்லப்பட்ட தாயினும், அதன் பயனை யடைந்தவர் அபூர்வமாகவே இருந்தனர். ஏழைகள் யார் என்று நிர்ணயிப்பது ஜனங்களின் உரிமையே யன்றோ? எனினும், அவ்வுரிமையைப் பயன்படுத்த அவர்களால் கூட வில்லை. அவ்வளவு வலிமை அவர்களுக்கில்லாததை எண்ணி நான் துயரமடைந்தேன். ஆதலின், முடிவு சத்தியாக்கிரஹத்தின் வெற்றி என்பதாகக் கொண்டாடப்பட்ட தாயினும், பூரண வெற்றிக்குரிய அம்சங்கள் அதில் இல்லாமையால் நான் அது குறித்து உற்சாகங் கொள்ளவில்லை.

சத்தியாக்கிரஹப் போராட்டத்தின் ஆரம்பத்தில் இருந்ததை விட, அதன் முடிவில், சத்தியாக்கிரஹிகள் அதிக பலமும் உற்சாகமும் உள்ளவர்களா யிருந்தால்தான், போராட்டம் வெற்றி யடைந்தது என்று சொல்லலாம்.

ஆனால் போராட்டத்தின் நோக்கம் நேர்முகமாக நிறைவேறா விட்டாலும், அதனால் சிறந்த பயன்கள் விளையாமற் போகவில்லை. அப்பயன்களை நாம் இன்று தெளிவாகக் காண்கிறோம்; அநுபவித்து வருகிறோம். கேதா சத்தியாக்கிரஹமே முதன் முதலாக குஜராத்

குடியானவர்களை கண்விழிக்கச் செய்தது; அவர்களுடைய உண்மையான அரசியல் கல்விக்கு அதுவே ஆரம்பமாகும்.

டாக்டர் பெசண்டு அம்மையின் சுயாட்சிக் கிளர்ச்சியானது குடியானவர்களிடையே ஓரளவு எழுச்சியை உண்டாக்கியிருந்தது உண்மையே. ஆனல் படித்த வகுப்பைச் சேர்ந்த பொது ஊழியர்களைக் குடியானவர்களின் உண்மை வாழ்க்கையுடன் தொடர்பு கொள்ளும்படி செய்தது கேதா போராட்டமே யாகும். அவர்கள் தாங்கள் வேறு, குடியானவர்கள் வேறு என்னும் பேதபாவத்தை மறந்துவிட இங்கே தான் கற்றுக்கொண்டார்கள். தாங்கள் செய்ய வேண்டிய வேலை இன்னதென அறிந்தார்கள். அவர்களுடைய தியாகம் செய்யும் ஆற்றல் அதிகரித்தது. வல்லபாய் இப் போராட்டத்தின் போதே தம்மைத்தாம் உணர்ந்தார் எனில், அது ஒன்றினலேயே அவ்வியக்கம் பயனுளதாகு மன்றோ? இந்தப் பயன் எவ்வளவு மகத்தானதென்பதைச் சென்ற ஆண்டில் வெள்ளக் கஷ்ட நிவாரணத்தின் போதும், இவ்வாண்டில் பர்தோலி சத்தியாக்கிரஹத்தின் போதும் கண்டோம். குஜராத்தில் பொது வாழ்வானது புதிய ஊக்கமும், புதிய பலமும் பெற்று ஓங்கிற்று. பட்டா-குடியானவர்கள் என்றும் மறவா வண்ணம் தங்கள் வலிமை இத்தகையதென்பதை உணர்ந்தார்கள். ஜனங்களுடைய கதிமோக்ஷம் ஜனங்களையே பொறுத்திருக்கிறது; அதாவது 'துன்ப மநுபவிப்பதற்கும் தியாகம் செய்வதற்கும் அவர்கள் காட்டும் ஆற்றலுக்கேற்ப வெற்றி கிடைக்கும்' என்னும் பாடம் பொது ஜனங்களின் உள்ளத்தில் என்றுமழியாதபடி பதிந்துவிட்டது. குஜராத்தில் சத்தியாக்

கிரஹம் வேர்கொண்டது கேதா போராட்டத்தின் மூல மாகவே தான்.

ஆதலின் சத்தியாக்கிரஹத்தின் முடிவைக் குறித்து உற்சாகங் கொள்வதற்குக் காரணம் எதுவும் நான் காண வில்லையாயினும், கேதா குடியானவர்கள் ஆனந்த உற்சவம் கொண்டாடினார்கள். ஏனெனில் தங்கள் முயற்சிக்கு ஏற்பவே பயன் அடைந்திருப்பதாக அவர்கள் அறிந்திருந்த துடன், தங்கள் குறைகளை யெல்லாம் தீர்த்துக் கொள்வ தற்கு உண்மையான, தோல்வி யில்லாத முறையொன்றைக் கண்டு பிடித்து விட்டதாகவும் உணர்ந்தார்கள். இது ஒன்றே அவர்களுடைய ஆனந்தக் களிப்புக்குப் போதிய காரணமாகு மல்லவா!

எனினும், கேதா குடியானவர்கள் சத்தியாக்கிரஹத் தின் உட்பொருளைப் பூரணமாக அறிந்து கொண்டவர்க ளல்லர். இவ்வறியாமையின் கேட்டை அவர்கள் அநுபவத் தில் கண்டார்கள். அவ்வநுபவத்தைக் குறித்து அடுத்த அத்தியாயங்களில் பார்ப்போம்.

இருபத்தாறும் அத்தியாயம்

ஒற்றுமை அவா

ஐரோப்பாவில் நாசகரமான பயங்கர யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது கேதா இயக்கம் ஆரம்பிக் கப்பட்டது. அவ்வியக்கம் முடிந்தபோது யுத்தத்தில் மிகவும் நெருக்கடியான நிலைமை நேர்ந்திருந்தது. இராஜப் பிரதிநிதி டில்லியில் நடந்த யுத்த மகாநாட்டுக்குப் பற்பல தலைவர்களையும் அழைத்திருந்தார். நானும் அம் மகா நாட்டுக்குச் செல்லுமாறு வற்புறுத்தி அழைக்கப்பட்டேன்.

இராஜப் பிரதிநிதி லார்டு செம்ஸ்போர்டுக்கும் எனக்கும் ஏற்பட்டிருந்த நேயபாவத்தைப்பற்றி முன்னமே குறிப்பிட்டிருக்கிறேனல்லவா?

அழைப்புக் கிணங்கி நான் டில்லி சென்றேன். ஆனால் மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு எனக்குச் சில ஆக்ஷேபங்கள் இருந்தன. அவற்றுள் முக்கியமானது அலி சகோதரர்களைப் போன்ற தலைவர்கள் அதினின்றும் விலக்கப்பட்டிருந்ததே யாகும். அவர்கள் அப்போது சிறையில் வசித்தனர். அவர்களைப் பற்றி அதிகம் கேள்விப் பட்டிருந்தே னாயினும் இரண்டொரு முறைதான் நேரில் பார்த்திருந்தேன். அவர்களுடைய தைரியத்தைப்பற்றியும், அவர்கள் செய்துள்ள ஊழியங்களைப் பற்றியும் என்னிடம் எல்லாரும் பெரிதும் புகழ்ந்து சொல்லியிருந்தார்கள். அப்போது ஹக்கீம் சாகிபுவுடனும் எனக்கு நெருங்கிய பழக்கம் கிடையாது. ஆனால் ஆசிரியர் ருத்திரரும், தீனபந்து ஆண்ட்ரூஸூம் அவரைப் பற்றி வெகுவாகச் சொல்லி யிருந்தார்கள். கல்கத்தா முஸ்லிம் லீக் கூட்டத்தில் ஜனாப்கள் ஷூவாயிப் குவரேஷியையும், குவாஜாவையும் சந்தித்திருந்தேன். டாக்டர் அன்சாரி, டாக்டர் அப்துல் ரஹிமான் இவர்களுடனும் பழக்கம் ஏற்பட்டிருந்தது. அப்போது உத்தம முஸ்லிம்களின் சிநேகத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். முஸ்லிம்களுக்குள் தூய்மையிலும், தேச பக்தியிலும் தலை சிறந்த பிரதிநிதிகளுடன் பழகுவதன் மூலம், முஸ்லிம் மனோபாவத்தை அறிந்து கொள்ள ஆவலாயிருந்தேன். ஆதலின் அத்தகையோரிடம் நெருங்கிப் பழகும் பொருட்டு அவர்கள் எங்கே என்னை அழைத்துச் சென்றாலும் அதிக வற்புறுத்தல் இல்லாமலே போய் வந்தேன்.

ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே உண்மையான நட்புக் கிடையா தென்பது தென்னுப் பிரிக்காவில் விரைவிலேயே எனக்குத் தெரிந்து போய் விட்டது. ஒற்றுமைக்குத் தடையான காரணங்களை நீக்குவ தற்கு ஏற்படும் சந்தர்ப்பம் எதையும் நான் கை நழுவ விடுவதில்லை. முகஸ்துதி செய்வதின் மூலமாகவோ, சுய மரியாதைக்குப் பங்கம் விளைக்கும் முறையிலோ மனிதர் களைச் சமாதானப் படுத்துவது என் இயற்கைக்கே விரோத மாகும். ஆனல் தென்னுப்பிரிக்கா அநுபவங்களிலிருந்து, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைத் துறையிலேதான் என்னுடைய அஹிம்சா தர்மம் கடுமையான சோதனைக் காளாக்கப் படுமென்று உறுதி பெற்றிருந்தேன். எனவே, என்னு டைய பரிசோதனைகளுக்கும், அந்தத் துறையிலுள் ளது போல் வேறு எந்தத் துறையிலும் அவ்வளவு விஸ்தாரமான இடங்கிடையாது என்று உணர்ந்திருந்தேன். அவ்வுறுதி இன்றளவும் நிலை பெற்றே இருக்கிறது. என்னுடைய வாணளில் ஒவ்வொரு கணமும் இறைவன் என்னைச் சோதித்து வருகிருர் என்பதை உணர்ந் திருக்கிறேன்.

தென்னுப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்தபோது இவ் விஷயமாக மிக்க உறுதியான கொள்கைகள் உடையவனு யிருந்தபடியால்தான் அலி சகோதரர்களின் பழக்கத்தை அவ்வளவு அதிகமாய் மதித்தேன். ஆனல் நெருங்கிய பழக்கம் ஏற்படுவதற்கு முன்பாகவே அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டார்கள். மௌலானு முகமது அலி, சிறைக் கூட்டத்திலிருந்து, சிறைச்சாலை அதிகாரிகள் அநுமதி கொடுத்த போதெல்லாம் எனக்கு நீண்ட கடிதங்கள் எழுதுவதுண்டு. அச் சகோதரர்களைச் சென்று பார்க்க

அநுமதி கோரி விண்ணப்பம் செய்துகொண்டேன். ஆனால் அது பயன் தரவில்லை.

அலி சகோதரர்கள் சிறைப் படுத்தப்பட்ட பின்னரே, கல்கத்தா முஸ்லிம் லீக் கூட்டத்துக்கு வரும்படி முஸ்லிம் நண்பர்கள் என்னை யழைத்தார்கள். அங்கே என்னைப் பேசும்படி கேட்டுக் கொண்டபோது, அலி சகோதரர்களை விடுவிப்பது முஸ்லிம்களின் கடமை யென்று வற்புறுத்திப் பேசினேன். இதற்குச் சில நாளைக்குப் பிறகு அந் நண்பர்கள் என்னை அலிகார் முஸ்லிம் கலாசாலைக்கு அழைத்துச் சென்றார்கள். இளைஞர்கள் தாய் நாட்டுக்குத் தொண்டு செய்யும் பொருட்டுப் பக்கிரிகள் ஆகவேண்டு மென்பது அங்கே நான் பேசியதன் சாரமாகும்.

பின்னர். அலி சகோதரர்களின் விடுதலை சம்பந்தமாக அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரவு தொடங்கினேன். இது சம்பந்தமாக, கிலாபத்தைக் குறித்து அச் சகோதரர்களின் கொள்கைகளையும் முயற்சிகளையும் ஆராய்ந்தேன். முஸ்லிம் நண்பர்களுடனும் அது குறித்து விவாதித்தேன். இவற்றின் பயனாக, நான் முஸ்லிம்களின் உண்மை நண்பனாக வேண்டுமானால், அலி சகோதரர்களின் விடுதலைக்கும், கிலாபத் விஷயமாக ஒரு நியாயமான முடிவு ஏற்படுவதற்கும் என்னாலியன்ற உதவி செய்யவேண்டுமென உணர்ந்தேன். அவர்களுடைய கோரிக்கைகளில் சன்மார்க்கத்துக்கு மாறானது எதுவும் இல்லாதிருக்கும் வரையில், அவற்றின் நியாயா நியாயங்களைக் குறித்து நான் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்தல் அவசியமில்லை. சமய சம்பந்தமான விஷயங்களில் கொள்கைகள் மாறுபடுகின்றன. ஒவ்வொருவருக்கும் தத்தம் கொள்கையே தலை சிறந்த தாகும். சமய சம்பந்தமான விஷயங்களில் எல்லாரும்ஒரேவித நம்பிக்கையுடையவர்களா

யிருந்தால் உலகிலே ஒரே சமயம் நிலவு மன்றோ? கிலாபத்தைக் குறித்த முஸ்லிம் கோரிக்கையானது எவ்வகையினும் தர்மத்துக்கு விரோதமான தன்று என்பதோடு, பிரிட்டிஷ் முதன் மந்திரி கூட முஸ்லிம் கோரிக்கையின் நியாயத்தை ஒப்புக்கொண் டிருந்தாரெனப் பின்னால் அறிந்தேன். ஆதலின் முதல் மந்திரியின் வாக்குறுதி நிறை வேற்றப்படும் வண்ணம் என்னாலியன்ற உதவி செய்தல் என் கடமையெனக் கருதினேன். வாக்குறுதி மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருந்த படியால், முஸ்லிம் கோரிக்கையின் நியாயா நியாயங்களைப் பற்றி ஆராய்தல் என்னுடைய மனச் சான்றைத் திருப்தி செய்யும் பொருட்டே தேவையா யிருந்தது.

கிலாபத் பிரச்னை சம்பந்தமாக நான் கைக் கொண்ட முறையை நண்பர்களும், மற்றையோரும் கண்டனம் செய்திருக்கிறார்கள். ஆயினும், முஸ்லிம்களுடன் என்னுடைய ஒத்துழைப்பைக் குறித்து வருந்துவதற்கு எனக்குக் காரணம் யாதும் புலனாகவில்லை. அதுபோன்ற மற்றொரு சந்தர்ப்பம் மீண்டும் ஏற்பட்டால் அதே முறையைத்தான் கைக் கொள்வேன்.

எனவே, நான் டில்லிக்குப் போனபோது இராஜப் பிரதிநிதியிடம் முஸ்லிம்களின் கட்சியை எடுத்துச் சொல்ல வேண்டுமென்னும் முழு எண்ணத்துடன் சென்றேன். கிலாபத் பிரச்னை அப்போது ஒரு விதமாக இருந்தது. பிற்காலத்தில் அது வேறு உருக் கொண்டது.

ஆனால் நான் டில்லி சேர்ந்தபோது மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு மற்றொரு தடை ஏற்பட்டது. யுத்த மகாநாடு ஒன்றில் நான் கலந்து கொள்வது எவ்வாறு தர்மமாகும் என்று தீனபந்து ஆண்ட்ரூஸ் கேட்டார். இங்கி

லாந்துக்கும் இதாலிக்கும் ஏற்பட்டிருக்கும் இரகசிய உடன்படிக்கையைக் குறித்து பிரிட்டிஷ் பத்திரிகைகளில் நிகழ்ந்து வரும் விவாதத்தைப்பற்றி அவர் எனக்குச் சொன்னார். இங்கிலாந்து மற்றேர் ஐரோப்பிய வல்லரசுடன் இரகசிய உடன்படிக்கைகள் செய்து கொண்டிருக்கையில் நான் எப்படி யுத்த மகாநாட்டில் கலந்துகொள்ளலாமென்று அவர் கேட்டார். எனக்கு உடன்படிக்கைகளைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனல் தீனபந்து ஆண்ட்ரூஸின் வார்த்தையே இவ்விஷயத்தில் எனக்குப் போதுமானதாயிருந்தது. ஆதலின் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு என்னுடைய தயக்கத்தைத் தெரிவித்து லார்டு செம்ஸ்போர்டுக்கு ஒரு கடிதம் எழுதினேன். தம்மிடம் அது குறித்து நேரில் விவாதிக்க வருமாறு அவர் என்னை அழைத்தார். அவருடனும் அவருடைய அந்தரங்க காரியதரிசி மிஸ்டர் மாப்பியுடனும் நீண்ட நேரம் சம்பாஷித்தேன். அதன் பயனாக மகா நாட்டில் கலந்து கொள்ளச் சம்மதித்தேன்.

இராஜப் பிரதி நிதியினுடைய வாதத்தின் சாராம்சமாவது:—"பிரிட்டிஷ் மந்திரிசபை செய்யும் ஒவ்வொரு காரியமும் இராஜப் பிரதிநிதிக்குத் தெரியுமென்று நீங்கள் நம்பவில்லை யல்லவா? பிரிட்டிஷ் அரசாங்கம் தவறே செய்யாதென்று நான் சொல்லவில்லை; வேறு யாரும் சொல்லவுமில்லை. மொத்தத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நன்மை செய்வதற்குரிய ஒரு ஸ்தாபனம் என்பதாக நீங்கள் ஒப்புக்கொண்டால், பொதுவாக பிரிட்டிஷ் தொடர்பினல் இந்தியா நன்மையே யடைந்திருக்கிறதென்று நீங்கள் நம்பினல், அந்த ஏகாதிபத்தியத்திற்கு ஆபத்து நேர்ந்த போது உதவி செய்தல் ஒவ்வோர் இந்தியனுக்கும் ஏற்பட்ட

கடமையென அங்கீகரிக்க வேண்டாமா? இரகசிய உடன் படிக்கைகளைப் பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுவதை நானும் படித்தேன். ஆனால் பத்திரிகைகள் சொல்வதைத் தவிர அதைப்பற்றி எனக்கு வேறொன்றும் தெரியாதென்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இந்தப் பத்திரிகைகள் சில சமயம் கதைகள் கட்டிவிடும் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. வெறும் பத்திரிகைச் செய்தியை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் ஏகாதிபத்தியத்துக்கு நெருக்கடி நேர்ந்த சமயத்தில் அதற்கு உதவி செய்ய மறுக்கலாமா? யுத்தம் முடிந்த பிறகு தார்மிகப் பிரச்னைகளை உங்களுடைய விருப் பம்போல் நீங்கள் கிளப்பலாம்; ஆனால் இன்றையதினம் எதுவும் செய்த லாகாது."

இந்த வாதம் புதியதன்று. ஆனால் அந்த நேரத்தில், அது கிளத்தப்பட்ட முறையில் எனக்குப் புதியதாகக் காணப் பட்டது. எனவே மகாநாட்டுக்கு வருவதாக ஒப்புக் கொண் டேன். முஸ்லிம்களுடைய கோரிக்கையைப் பொறுத்த வரையில் இராஜப்பிரதிநிதிக்கு நான் ஒரு கடிதம் எழுதுவ தென்று தீர்மானமாயிற்று.

இருபத்தேழாம் அத்தியாயம்

சைன்யத்துக்கு ஆள் திரட்டியது

எனவே, யுத்த மகாநாட்டுக்குச் சென்றேன். சைன்யத் துக்கு ஆள் திரட்டுவதைக் குறித்த தீர்மானத்தை நான் ஆதரிக்கவேண்டு மென்பதில் இராஜப் பிரதிநிதி சிரத்தை கொண்டிருந்தார். ஹிந்துஸ்தானியில் பேச அநுமதி யளிக்கும்படி நான் கேட்டேன். அவர் என் வேண்டுகோளுக்கு இணங்கினா ரெனினும், ஆங்கிலத்திலும்

நான் பேசவேண்டுமென யோசனை சொன்னார். ஆனால் நீள மாகப் பேசும் எண்ணமே எனக்கில்லை. என்னுடைய பேச்சு ஒரே ஒரு வாக்கிய மடங்கியதாகும். "என்னுடைய பொறுப்பைப் பூரணமாய் உணர்ந்து நான் இத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்" என்று சொல்லி யமர்ந்தேன்.

ஹிந்துஸ்தானியில் பேசியது குறித்துப் பலர் எனக்கு வாழ்த்துக் கூறினார்கள். இத்தகைய கூட்டமொன்றில் இது காறும் ஹிந்துஸ்தானியில் பேசப்பட்டதே கிடையாதென்று அவர்கள் கூறினார்கள். இராஜப் பிரதிநிதி பிரசன்னமா யிருந்த ஒரு கூட்டத்தில் முதன்முதலில் ஹிந்துஸ்தானியில் பேசினவன் நான்தான் என்பதும், இது குறித்த பாராட்டு தல்களும் எனக்கு உண்மையில் துன்ப மளித்தன. அவமா னத்தினால் என் மனங் குன்றிப் போயிற்று. இந்நாட்டைக் குறித்த காரியங்களுக்காக இந்த நாட்டில் கூடும் கூட்டங் களில் நாட்டு மொழி புறக்கணிக்கப் படுதலும், என்னைப் போன்ற ஒரு தனிப்பட்ட மனிதன் ஹிந்துஸ்தானியில் பேசிய தற்காக வாழ்த்துக் கூறப்படுதலும் எத்தகைய வெட்கக்கேடு! இதுபோன்ற நிகழ்ச்சிகள் நாம் அடைந் துள்ள இழி நிலையை நன்கு நினை வூட்டுகின்றன வன்றோ?

மகாநாட்டில் நான் பேசியது ஒரே வாக்கியமாயினும் என்னைப் பொறுத்தவரை அது பெரிதும் பொருள் பொதிந்த தாகும். மகாநாட்டையோ, நான் அங்கு ஆதரித்த தீர்மானத்தையோ மறத்தல் என்னால் இயலாத காரியம். அதன் மூலம் நான் ஏற்றுக்கொண்டிருந்த ஒரு வேலையை டில்லியிலிருந்தபோதே செய்ய வேண்டியவனா யிருந்தேன். இராஜ பிரதிநிதிக்குக் கடிதம் எழுதுவதே அந்த வேலை. இது எளியகாரியமன்று. அரசாங்கம், ஜனங்கள், இருசாரா

ருடைய நன்மையையும் முன்னிட்டு— அக்கடிதத்தில், நான் மேற்படி மகாநாட்டுக்குச் சென்றது ஏன் என்றும், ஜனங்கள் அரசாங்கத்தினிடமிருந்து எதிர்பார்ப்பது என்னவென்றும் விளங்குவது என் கடமையென்று கருதினேன்.

லோகமான்ய திலகர், அலி சகோதரர்கள் போன்ற தலைவர்கள் மகாநாட்டிலிருந்து விலக்கப்பட்டது குறித்து எனது வருத்தத்தை அக்கடிதத்தில் தெரிவித்துவிட்டு, யுத்தத்தினால் ஏற்பட்ட நிலைமை காரணமாக ஜனங்களின் குறைந்த பட்சமான அரசியல் கோரிக்கையும், முஸ்லிம்களின் கோரிக்கைகளையும் கூறினேன். இக்கடிதத்தை வெளியிடுவதற்கு இராஜப் பிரதிநிதியை அநுமதி கேட்டேன். அவர் அதற்கு மகிழ்ச்சியுடன் அநுமதியளித்தார்.

மகாநாடு முடிந்த உடனே இராஜப் பிரதிநிதி சிம்லா சென்று விட்டபடியால் கடிதத்தையும் சிம்லாவுக்கு அனுப்பவேண்டி யிருந்தது. நானோ அக்கடிதத்தை மிக முக்கியமான தொன்றாக மதித்தேன். தபால் மூலம் அதை அனுப்பினால் தாமத மாகிவிடும். விரைவில் அது போய்ச் சேரவேண்டுமென்று விரும்பினேன். ஆனால் கண்டவர்களிடம் அதைக் கொடுத்தனுப்பவும் மனமில்லை. கடிதத்தை எடுத்துச்சென்று இராஜப் பிரதிநிதியின் மாளிகையில் நேரில் கொண்டு கொடுக்கத்தக்க தூய மனிதர் ஒருவர் வேண்டுமென நினைத்தேன். தீனபந்து ஆண்ட்ரூஸும், பேராசிரியர் ருத்திரரும், கேம்பிரிட்ஜ் மிஷனைச் சேர்ந்த ரெவரண்டு அயர்லாண்டு என்பாரின் பெயரைக் குறிப்பிட்டார்கள். அக்கடிதத்தைத் தாம் முதலில் படித்து, அது நல்லதென்று தோன்றினால் எடுத்துக்கொண்டு போவதாக அவர் சம்மதித்தார். அது அந்தரங்கக் கடிதம் அல்ல

வாதலின் அவர் படிப்பதில் எனக்கு ஆட்சேபம் எதுவும் இல்லை. எனவே, அவர் அக் கடிதத்தைப் படித்தார். அவருக்கு அது பிடித்திருந்த படியால் எடுத்துக்கொண்டு போவதாய்ச் சொன்னார். அவருக்கு இரண்டாம் வகுப்பு ரயில் விகிதம் தருவதாக நான் கூறினபோதிலும் அவர் அதைமறுத்து இடை வகுப்புப் (இண்டர் - மீடியட்) பிரயாணம் தமக்குப் பழக்க முண்டென்று சொன்னார். இரவுப் பிரயாணமாயினும் அவர் இடை வகுப்பிலேயே சென்றார். அவரது எளிமையும், ஒளிவு மறைவில்லாத நேரிய நடத்தையும் என்னைக் கவர்ந்தன. இவ்வாறு தூய மனமுள்ள ஒருவர் மூலம் அனுப்பப் பெற்ற கடிதம், நான் எதிர் பார்த்த வண்ணமே விரும்பிய பலன் தந்தது. அது என் மனதிற்கு ஆறுதல் அளித்ததுமன்றி நான் நடக்கவேண்டிய வழியையும் தெளிவாகக் காட்டிற்று.

நான் ஏற்றுக்கொண்ட கடமையின் மற்றப் பகுதி சைன்யத்துக்கு ஆள் திரட்டுவதாகும். முதன் முதலில் சைன்யத்தில் சேர்ந்து வழி காட்டுமாறு என்னுடைய சொந்த சகாக்களை யல்லாமல் வேறு யாரை நான்கேட்பது? எனவே, நதியாத் சென்றதும் வல்லபாயுடனும் மற்ற நண்பர்களுடனும் கலந்தாலோசித்தேன். அவர்களில் சிலர் என் யோசனையை எளிதில் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த யோசனையை விரும்பியவர்களும், அது வெற்றியடையுமா என்பது குறித்துச் சந்தேகப் பட்டார்கள். நான் எந்த வகுப்பாருக்கு வேண்டுகோள் விடுக்க எண்ணினேனோ அவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் அவ்வளவு நேயபாவம் கிடையாது. அரசாங்க உத்தியோகஸ்தர்களிடம் அவர்கள் அடைந்த கசப்பான அநுபவங்களை மறப்பதற்குக் கூட இன்னும் நாளாகவில்லை.

ஆயினும் வேலை தொடங்கலாமென்று அவர்கள் கூறி னார்கள். வேலை ஆரம்பித்ததுந்தான் என் கண்கள் திறந்தன. எளிதில் வெற்றி யடையலாமென்று நான் நம்பியதற்கு நேர் மாறாக, அது மிகவும் கஷ்டமான வேலையென்று உணர்ந் தேன். வரிகொடா இயக்கத்தின்போது ஜனங்கள் எங்க ளுக்கு வாடகை யின்றியே தாராளமாக வண்டி கொடுத்து உதவினார்கள்; ஒரு தொண்டர் தேவை யென்றால் இரண்டு தொண்டர் முன்வந்தார்கள். இப்போது வாடகைக்கு வண்டி கிடைப்பதே கஷ்டமா யிருந்தது. பின்னர், தொண் டர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா, என்ன? ஆயினும் நாங்கள் அதைரியமடைந்து விடவில்லை. வண்டிகளைத் தேடாமல் கால் நடையாகவே பிரயாணம் செய்யத் தீர்மா னித்தோம். இவ்வாறு தினந்தோறும் 20 மைல் நடக்க வேண்டியவர்களானோம். வண்டிகளே கிடைக்கவில்லை யென்றால் ஜனங்கள் எங்களுக்கு உணவு அளிக்கவா போகி றார்கள்? சாப்பாடு போடும்படி கேட்பதும் உசிதமாகாது. ஆதலின் தொண்டர் ஒவ்வொருவரும் கையில் உணவு எடுத் துச் செல்ல வேண்டுமென்று தீர்மானமாயிற்று. கோடை காலமாதலின் படுக்கையும், போர்வையும் தேவை யில்லாம லிருந்தன.

சென்ற விடங்களிலெல்லாம் கூட்டங்கள் நடத்தினோம் ஜனங்கள் கூட்டங்களுக்கு வந்தார்களாயினும், ஒருவர் இரு வர் கூடச் சைன்யத்தில் சேர முன் வந்தார்களில்லை. "நீங் கள் அஹிம்சை உபாசக ராயிற்றே? எங்களை ஆயுத மெடுக் கும்படி எப்படி சொல்லலாம்? அரசாங்கத்தார் இந்தியா வுக்கு என்ன நன்மை செய்திருக்கிறார்கள்? நாங்கள் எதற் காக இப்போது ஒத்துழைக்க வேண்டும்?" என்பன போன்ற கேள்விகள் என்னைக் கேட்டார்கள்.

ஆயினும் எங்கள் நிதானமான வேலை முடிவில் பயன்தர ஆரம்பித்தது. பலர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர். முதல் கூட்டத்தை அனுப்பி விட்டால், பின்னர் இடைவிடாது மனிதர்கள் சேர்த்து அனுப்பக்கூடும் என்று நாங்கள் நம்பலானோம். திரட்டப்பட்ட ஆட்களை எங்கே இருக்கச் செய்வது என்பதைக் குறித்துக் கமிஷனருடன் ஆலோசிக்கத் தொடங்கினேன்.

டில்லியில் நடந்த மகாநாட்டைப் பின்பற்றி ஒவ்வொரு டிவிஷனிலும் கமிஷனர்கள் மகாநாடு நடத்தினார்கள். இத்தகைய மகாநாடு ஒன்று குஜராத்திலும் நடந்தது. என் சகாக்களும் நானும் இதற்கு அழைப்புப் பெற்றிருந்தோம். அதற்கிணங்கி நாங்கள் சென்றோம். ஆனால் டில்லி மகாநாட்டில் எனக்கிருந்த இடங்கூட இங்கே இல்லை யென்று கண்டேன். அடிமை உணர்ச்சியே மிகுந்திருந்த அவ்விடத்தில் நான் மிகவும் சங்கடப்பட்டேன். சிறிது விரிவாகவே பேசினேன். உத்தியோகஸ்தர்களை மகிழ்விக்கக் கூடிய தெதுவும் நான் சொல்லக்கூடவில்லை. உண்மையில் நான் கூறிய இரண்டொன்று அவர்களுக்குக் கசப்பாகவும் இருந்திருக்கக் கூடும்.

சைன்யத்தில் சேரும்படி ஜனங்களை வேண்டிக் கொண்டு நான் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டதுண்டு. அவற்றில் நான் கூறியிருந்த வாதங்களில் ஒன்று கமிஷனருக்குப் பிடிக்கவில்லை. "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நிகழ்த்தியிருக்கும் பல தவறுகளில், தேசத்தா ரனைவருக்கும் ஆயுதப் பயிற்சியில்லாமல் செய்ததே மிகக் கொடுமையான தென்று சரித்திரம் கூறும். ஆயுதச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டுமானால், ஆயுதங்களின் உபயோகத்தில் பயிற்சி பெற நாம் விரும்பினால், இப்போது ஓர் அரிய சந்தர்ப்பம்

நேர்ந்திருக்கிறது. அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள இக்காலத்தில், மத்திய வகுப்பார் தாங்களாகவே வலிந்து வந்து உதவி செய்வார்களாயின், அரசாங்கத்தின் அவநம்பிக்கை தொலைந்து ஆயுதத் தடைச் சட்டமும் ரத்து செய்யப்படும்," என்று நான் கூறியிருந்தேன். கமிஷனர் இதைக் குறிப்பிட்டு எங்களுக்குள் அபிப்பிராய பேதமிருப்பினும் நான் மகாநாட்டுக்கு வந்ததைப் பாராட்டுவதாகக் கூறினர். கூடியவரை மரியாதையுடன் என்னுடைய கட்சியின் நியாயத்தை நான் எடுத்துச் சொல்ல வேண்டியதாயிற்று.

இராஜப் பிரதிநிதிக்கு நான் எழுதியதாக மேலே குறிப்பிட்டிருக்கும் கடிதம் பின்வருமாறு:—

"தங்களுக்கு ஏப்ரல்மீ 26உ ஒரு கடிதம் எழுதினேன். அதில் யுத்த மகாநாட்டில் நான் கலந்து கொள்ள முடியாமலிருப்பதற்குக் காரணங்களைத் தெரிவித்திருந்தேன். அதன் பின்னர் தாங்கள் அன்பு கூர்ந்து தங்களை நேரில் கண்டு பேச அநுமதி யளித்தீர்கள். அவ்வாறு பேசிய பின்னர், வேறு காரணம் இல்லாவிடினும், தங்களிடம் எனக்கிருந்த பெருமதிப்பை முன்னிட்டேனும் மகாநாட்டில் கலந்து கொள்வதென்று தீர்மானித்தேன். மகாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாதென்று நான் முதலில் கருதியதற்கு முக்கியமான காரணம், லோகமான்ய திலகர், ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார், அலி சகோதரர்கள் ஆகியவர்கள் மகாநாட்டிற்கு அழைக்கப் படாததே யாகும். பொதுஜன அபிப்பிராயத்தை உருப்படுத்தக் கூடிய மிக சக்தி வாய்ந்த தலைவர்களென்று இவர்களை நான் மதித்திருக்கிறேன். இவர்களை அழையாது விட்டது பெருந்தவறு என்றே இன்னமும்

நான் கருதுகிறேன். இத்தவறை நிவர்த்திப்பதற்கு வழியையும் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இனி மாகாணந்தோறும் யுத்த மகாநாடுகள் நடைபெறுமெனத் தெரிகிறது. இந்த மகா நாடுகளுக்காவது வந்து அரசாங்கத்துக்கு யோசனை சொல்லி உதவுமாறு அத்தலைவர்கள் அழைக்கப்பட வேண்டும். இவர்களைப்போல் பெருந் திரளான ஜனங்களின் பிரதி நிதிகளாயுள்ள தலைவர்கள் அரசாங்கத்துடன் நேர் மாறான அபிப்பிராயங் கொண்டவர்களா யிருந்தபோதிலும் அவர்களை எந்த அரசாங்கமும் அலட்சியம் செய்ய முடியாதென்று தெரிவித்துக் கொள்வேன்.

ஆனால் மகாநாட்டின் கமிட்டிகளில் எல்லாக் கட்சியாருக்கும் தங்கள் அபிப்பிராயங்களைத் தாராளமாக எடுத்துச் சொல்லப் பூரண உரிமை கொடுக்கப்பட்ட தென்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன். என்னைப் பொறுத்த வரை, மகாநாட்டிலும் சரி, கமிட்டியிலும் சரி, வேண்டுமென்றே என் அபிப்பிராயங்களை நான் சொல்லாது விடுத்தேன். தீர்மானங்களுக்கு என்னுடைய ஆதரவைத் தெரிவிப்பதுடன் நிறுத்துவதால் மட்டுமே மகாநாட்டின் நோக்கங்களுக்கு நான் சிறந்த உதவி செய்வதாகுமென்று கருதினேன். அவ்வாறே அந்தரங்க பூர்வமாகத் தீர்மானங்களை ஆதரித்தேன். வாய் வார்த்தையைக் காரியத்தில் நிறைவேற்றுவதற்கும் சித்தமா யிருக்கிறேன். இத்துடன் என்னுடைய உதவித் திட்டத்தைத் தனியே அனுப்பியுள்ளேன். அதை அரசாங்கத்தார் ஒப்புக் கொண்டதாகத் தெரிவித்தவுடன் வேலை தொடங்கி விடுவேன்.

சமீப காலத்தில் நாங்களும் மற்ற குடியேற்ற நாடுகளைப் போலவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில்

சம பங்காளிக ளாகலா மென்னும் ஆசை கொண்டிருக்கி ரோம். எனவே, அத்தகைய ஏகாதிபத்தியத்துக்கு அபாயம் வந்த காலத்தில் எவ்விதத் தயக்கமுமின்றி பூரண ஆதரவு அளித்தல் அவசிய மென்பதை நன்குணர்ந் திருக்கிறேன். அவ்வாறே தீர்மானமும் செய்திருக்கிரோம். ஆனால் இவ் வாறு உதவி செய்ய ஆவலுடன் முன் வந்ததற்கு, அதன் மூலம் நமது இலட்சியத்தை விரைவில் அடையலாமென்னும் நம்பிக்கையே காரணம் என்பது உண்மை. கடமையைச் செய்வோன் அந்த அளவில் உரிமையும் பெறுகின்றான். ஆதலின் தங்களுடைய பிரசங்கத்தில் விரைவில் வரப்போவ தாகக் குறிப்பிட்டிருக்கும் அரசியல் திருத்தங்கள், காங்கிரஸ் லீக் திட்டத்தை முக்கிய அம்சங்களில் அனுசரித்திருக்கும் என்று எதிர் பார்ப்பதற்கு ஜனங்களுக்கு உரிமை யுண்டு. இந்த நம்பிக்கையின் மேல்தான் மகா நாட்டிற்கு வந்திருந்த அங்கத்தினரில் அநேகர் தங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பை அரசாங்கத்துக்கு அளிக்க முன் வந்தார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

எனக்கு ஆற்றல் இருந்தால், காங்கிரஸ் தீர்மானங் களை யெல்லாம் வாபீஸ் பெற்றுக்கொள்ளும்படியும், யுத்தம் முடியும் வரையில் "சுயாட்சி" அல்லது "பொறுப்பாட்சி" என்னும் பேச்சே எடுக்கா திருக்கும்படியும் என் தேசத்தா ருக்குச் சொல்லி அவ்விதம் செய்விப்பேன். ஏகாதிபத்தி யத்திற்கு நேர்ந்திருக்கும் இந் நெருக்கடியில் இந்தியா, உடல் வலிமையுள்ள தன் புதல்வர்க ளெல்லாரையும் பலி கொடுக்கும்படி சொல்வேன். இந்தச் செயலினாலேயே இந்தியா ஏகாதிபத்தியத்தில் மிகச் சிறந்த பதவியை அடையு மென்றும், ஜாதி வேற்றுமைகளெல்லாம் மறைந்து

பழங்கதை யாகுமென்றும் எனக்குத் தெரியும். ஆனால் ஏறக் குறைய படித்த இந்தியர்கள் அனைவரும் இதை விடக் கீழ்த் தர முறையையே கடைப்பிடிக்கத் தீர்மானித்திருக்கிறார் கள். படித்த இந்தியர்களுக்குப் பாமர மக்களின்மீது செல்வாக்குக் கிடையாது என்று இனிச் சொல்ல இய லாது. தென்னாப்பிரிக்காவிலிருந்து நான் இந்தியாவுக்குத் திரும்பியது முதல் குடியானவர்களிடம் நெருங்கிப் பழகி வந்திருக்கிறேன். அவர்களுக்கு சுயராஜ்ய தாகம் பிறம்ப ஏற்பட்டிருக்கிறதென்று தங்களுக்கு உறுதி கூறுவேன். சென்ற காங்கிரஸ் மகா சபையின் கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். குறிப்பிட்ட காலத்திற்குள் பூரண சுயாட்சி பிரிட்டிஷ் இந்தியாவுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்னும் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் நானும் கலந்து கொண்டேன். திட்டமான ஒரு காலத் திற்குள் சுயாட்சி கிடைக்கு மென்னும் நம்பிக்கை ஏற்பட்டால் தான் இந்திய மக்கள் திருப்தி அடைவார்க ளென்பது நிச்சயம். இந்த லக்ஷியத்தை அடைவதற்கு எவ்வளவு தியாகம் செய்தாலும் அதிகமாகாது என்று கரு தும் அனேகர் இந்தியாவி லிருப்பதை நான் அறிவேன். எந்த ஏகாதிபத்தியத்தில் சம அந்தஸ்தை அடைய ஆசைப் படுகிறோமோ அந்த ஏகாதிபத்தியத்திற்காகத் தங்களையே தியாகம் செய்யவும் தயாராயிருக்க வேண்டுமென்று அவர் கள் உணர்ந்திருக்கிறார்கள். எனவே ஏகாதிபத்தியத்திற்கு நேர்ந்திருக்கும் அபாயத்திலிருந்து அதை மீட்பதற்காக நாம் மனப்பூர்வமாய் வேலை செய்வதின் மூலமாகவே நம் முடைய லக்ஷியத்தை விரைவில் அடையலாம் என்று ஏற் படுகிறது, இந்த மூலாதார உண்மையை உணரா திருத்தல் தேசியத் தற்கொலை யாகும். ஏகாதிபத்தியத்தைக் காப்ப

தற்காக நாம் உழைத்தால் அதனாலேயே சுயாட்சி அடைந்தவர்களாவோம்.

ஆகையால் ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்புக்காக நாம் அளிக்கக்கூடிய ஒவ்வொரு மனிதனையும் தயங்காமல் கொடுக்கவேண்டுமென்பது எனக்குத் தெளிவாயிருக்கிறது. ஆனால் பொருளுதவியைப்பற்றி நான் இவ்வாறு சொல்வதற்கில்லை. குடியானவர்களுடன் நெருங்கிப் பழகியதின் பயனாக, இந்தியா ஏற்கனவே தன் சக்திக்கு மீறி ஏகாதிபத்திய பொக்கிஷத்திற்குப் பணம் கொடுத்து விட்டதாய் உறுதி பெற்றிருக்கிறேன். இதுவே என்னுடைய தேசத்தாரில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயமாகு மென்பதை நான் அறிவேன்.

டில்லியில் கூடிய யுத்த மகாநாடு பொதுவான லக்ஷியத்திற்காக எங்களுடையவாழ்க்கையை அர்ப்பணம் செய்வதில் ஒரு முக்கியமான படி யென்று கருதுகிறேன். இன்னும் அனேகரும் இப்படியே கருதுவார்களென்று நம்புகிறேன். ஆனால் எங்களுடைய நிலைமை விநோதமானது. இன்று நாங்கள் சாம்ராஜ்யத்தில் சம பங்காளிகளாயில்லை. வருங் காலத்தில் அப்பதவியை யடையும் நோக்கத்துடன் இவ்வாறு எங்களை அர்ப்பணம் செய்திருக்கிறோம். அந் நம்பிக்கையைத் தெளிவாகத் தங்களுக்கு எடுத்துக் காட்டுவதால் தங்களுக்கும் என் தேசத்திற்கும் உண்மையாக நடந்து கொண்டவனாவேன்.

இன்னும் ஒரு விஷயம் நான் சொல்லாம லிருத்தல் சரியன்று. குடும்ப வித்தியாசங்களை மறந்துவிடும்படி தாங்கள் கேட்டுக்கொண் டிருக்கிறீர்கள். அதிகாரிகளுடைய கொடுமைகளையும் அநீதிகளையும் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்பது இதன் பொருளானால் நான்

அதற்கிணங்க அசக்தனுயிருக்கிறேன். அதிகாரக் கொடுமையை கடைசி வரை நான் எதிர்த்தே தீரவேண்டும். யாதொரு மனிதனையும் துன்பப்படுத்தக் கூடாதென்றும், முன் எப்போதையும்விட அதிகமாகப் பொதுஜன அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்றும் தாங்கள் அதிகாரிகளை வேண்டிக் கொள்ளுவது நியாயமாகும். சம்பாரானில் நெடுநாட்பட்ட கொடுமையை எதிர்த்தபடியினுல் பிரிட்டிஷ் நீதியின் பெருமையே நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன். கேதா ஜில்லாவில் இதற்கு முன் அரசாங்கத்தைச் சபித்துக்கொண்டிருந்த ஜனங்கள் தற்போது, தாங்கள் துன்பம் சகிக்கத் தயாராயிருந்தால் அதிகாரம் அரசாங்கத்தினிடம் இல்லையென்றும் தங்களிடமே உள்ளதென்றும் உணர்ந்திருக்கிருர்கள். ஆதலின் அவர்கள் தங்கள் மனக்கசப்பை மறந்து, அநீதி ஏற்படும் போது ஒழுங்காகவும் மரியாதையாகவும் சட்ட மறுப்புச் செய்வதை அரசாங்கம் சகிப்பதால் அது ஜனங்களின் அரசாங்கமாக இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிருர்கள். இவ்வாறு சம்பரான், கேதா இயக்கங்கள் யுத்தத்திற்காக நான் செய்த விசேஷ, நேர்முகமான, திட்டமான ஊழியங்களாகும். இத்துறையில் என்னுடைய காரியங்களை நிறுத்தச் சொன்னுல் என் உயிர் வாழ்க்கையையே நிறுத்தச் சொல்வதாகும். மிருக சக்திக்குப் பதிலாக ஆத்ம சக்தியை அதாவது அன்பின் பலத்தை ஜனங்கள் கைக்கொள்ளும்படி செய்துவிட்டேனுனல் உலகம் முழுவதையும் எதிர்த்து நிற்கக்கூடிய ஓர் இந்தியாவை உங்களுக்கு நான் அளித்தல் கூடும். ஆதலின் எக்காலத்திலும் துன்பம் சகித்தலாகிய இந்த அநாதியான தர்மம் என் வாழ்க்கையில் விளங்கச் செய்வதையே

விரதமாகக் கொண்டுள்ளேன். எனக்குச் செவி சாய்ப்போருக் கெல்லாம் அந்த தர்மத்தை போதிப்பேன். வேறு முயற்சி எதிலேனும் நான் தலைப்பட்டேனாயின் மேற்கண்ட தருமத்தின் ஒப்பற்ற மேன்மையை எடுத்துக் காட்டுவதற்கே யாகும்.

கடைசியாக நான் தங்களைக் கேட்டுக் கொள்ளுவது என்னவென்றால், முஸ்லிம் ராஜ்யங்களைப்பற்றி பிரிட்டிஷ் மந்திரிகள் திட்டமான வாக்குறுதி யளிக்குமாறு தாங்கள் செய்யவேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் இவ்விஷயத்தில் பெரிதும் சிரத்தை கொண்டிருப்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆதலின் ஹிந்துவாகிய நான் இவ்விஷயத்தில் அசட்டை காட்டக்கூடாது. அவர்களுடைய துக்கங்களை எங்களுடைய துக்கங்களாகவே கருதவேண்டும். முஸ்லிம் ராஜ்யங்களின் உரிமைகளைக் காப்பது; முஸ்லிம் புண்ணிய க்ஷேத்திரங்களின் விஷயத்தில் அவர்கள் உணர்ச்சியை மதிப்பது; இந்தியாவின் சுயாட்சிக் கோரிக்கையை காலத்தில் நியாயமான முறையில் நிறைவேற்றி வைப்பது; இவைகள் தான் சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பிற்கு முக்கிய சாதனங்களாகும். ஆங்கில மக்களை நான் நேசிக்கிறபடியாலும், ஆங்கிலேயர்களுடைய ராஜ பக்தியை ஒவ்வொரு இந்தியரிடத்தும் உண்டுபண்ண நான் விரும்புவதாலுமே இக்கடிதம் உங்களுக்கு எழுதலானேன்.—"

இருபத்தெட்டாம் அத்தியாயம்

மரணத்தின் வாயிலில்

சைன்யத்துக்கு ஆள் திரட்டும் முயற்சியின்போது ஏறக்குறைய என் உடலுக்கு அழிவு தேடிக் கொண்டேன். அந்நாளில் கடலைக் கொட்டையும் வெண்ணெயும் எலுமிச்சம் பழமுமே என் பிரதான உணவுகளாயிருந்தன. வெண்ணெயை அளவுக்கு மீறி உட்கொள்வது மிகவும் எளிதென்றும், அதனால் உடல் சுகத்துக்குக் கேடு நேரிடுமென்றும் எனக்குத்தெரியும். ஆயினும். அதை நான் அளவுமீறியே அருந்திவிட்டேன். இதனால் எனக்கு வயிற்றுப்போக்கு இலேசாய் ஏற்பட்டது. இதை நான் அதிகம் பொருட்படுத்தாமலே அன்று மாலை ஆசிரமத்துக்குப் போனேன். இடையில் அடிக்கடி ஆசிரமத்துக்குச் செல்வது என் வழக்கம். அந்நாளில் நான் மருந்தெதுவும் சாப்பிடுவதில்லை. ஒருவேளை பட்டினி போட்டால் உடம்பு குணமாய் விடுமென்று எண்ணினேன். அவ்வாறே மறுநாள் காலையில் பட்டினிபோட்டு ஏறக்குறைய நோயினின்று நிவர்த்தி பெற்றேன். ஆனால் முழுதும் குணமடைவதற்கு இன்னும் நீடித்து உபவாச மிருக்கவேண்டுமென்றும், சாப்பிடுவது அவசியமானால் பழரசத்தை யன்றி வேறெதுவும் அருந்தக் கூடாதென்றும் எனக்குத் தெரிந்தே யிருந்தன.

அன்று ஏதோ பண்டிகை நாள். மத்தியான போஜனம் எதுவும் நான் அருந்தக்கூடாதென்று கஸ்தூரி பாயிடம் சொன்னேன். ஆனால், அவள் ஆசை காட்டிப் பேசவே நான் வீழ்ச்சி யுற்றேன். பால் அல்லது பாலினலாகும் பொருள்கள் அருந்துவதில்லை யென்று நான் விரதங்கொண்

டிருந்தபடியால், எனக்காக அவள் நெய்க்குப் பதிலாக எண்ணெய் கலந்து கோதுமை ஹல்வா செய்திருந்தாள். காராமணிச் சுண்டலும் எனக்காக நிறைய வைத்திருந்தாள். இவற்றினிடம் எனக்கு அதிக பிரியம். ஆதலின், உடனே அவள் பேச்சுக்கு இணங்கினேன். என்னுடைய நாவையும் திருப்தி செய்து கஸ்தூரிபாயையும் மகிழ்விக்கும் அளவுக்குக் கொஞ்சமாகச் சாப்பிட்டுத் துன்பத்துக் காளாகாமல் தப்பலாம் என்று நம்பினேன். ஆனால் சுவைப் பிசாசு ஒரு சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தது போலும்! சிறிதளவு சாப்பிடுவதற்குப் பதிலாக வயிறு நிரம்ப உண்டேன். யமவேதனை வருந்தி அழைப்பதற்கு இதுவே போதுமன்றோ? ஒரு மணி நேரத்துக்குள் வயிற்றுப்போக்கு மிகக் கடுமையாகி விட்டது.

அன்று மாலையே நான் நதியாத்துக்குப் போகவேண்டியிருந்தது. ஆசிரமத்திலிருந்து 10 பர்லாங்கு தூரமேயிருந்த சபர்மதி ஸ்டேஷனுக்கு மிகப்பிரயாசையுடன் நடந்து சென்றேன். ஆமதாபாத்தில் என்னுடன் சேர்ந்துகொண்ட ஸ்ரீ வல்லபாய் எனக்கு உடம்பு சுகமில்லையென்பதைக் கண்டார். ஆனால் நான் சகிக்கமுடியாத துன்பப்படுகிறேன் என்பதை அவர் ஊகித்துணர, நான் இடங்கொடுக்கவில்லை.

இரவு பத்து மணிக்கு நதியாத்துக்குச் சென்றோம். அங்கே நாங்கள் தங்கிய ஹிந்து அனாதாஸ்ரமம் ஸ்டேஷனிலிருந்து அரை மைல் தூரந்தான். ஆனால் எனக்கோ அது பத்து மைல் தூரமாகத் தோன்றிற்று. எப்படியோ ஜாகை போய்ச் சேர்ந்தேன். ஆனால் வயிற்று வலியின் கொடுமை அதிகமாகிக் கொண்டே வந்தது. வழக்கமாக

உபயோகிக்கும் கக்கூஸ் தூரத்தி லிருந்தபடியால் அடுத்த அறையில் ஒரு மலச்சட்டி கொண்டுவந்து வைக்கும்படி சொன்னேன். இதைக் கேட்க எனக்கு மிகவும் வெட்கமா யிருந்தது; ஆனால் வேறு வழியில்லை. ஸ்ரீ பூல்சந்தர் உடனே மலச்சட்டி கொண்டுவந்தார். நண்பர்களெல்லாம் மிக்க கவலையுடன் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் காட்டிய அன்புக்கும் கவலைக்கும் அளவேயில்லை. ஆயினும் என்னுடைய வேதனையை அவர்களால் போக்க முடியவில்லை. என்னுடைய பிடிவாதமும் இதற்குத் துணை செய்தது. வைத்திய உதவி எதுவும் பெற நான் மறுத்து விட்டேன். நான் செய்த தவறின் தண்டனையை மருந்தெது வும் சாப்பிடாமல் அநுபவிக்க விரும்பினேன். ஆதலின் அவர்கள் எதுவும் செய்ய இயலாதவர்களாய்ப் பிரமித்து நின்றார்கள். 24-மணி நேரத்தில் நான் முப்பது நாற்பது தடவை மலங் கழித்திருக்க வேண்டும்.

ஆரம்பத்தில் பழரசங்கூட அருந்தாமல் பட்டினி கிடந்தேன். பசியென்பது அடியோடு போய்விட்டது. என்னுடைய உடம்பு இரும்பை யொத்துத் திடமானது என்று வெகுநாளாக நான் எண்ணி வந்தேன். ஆனால் இப்போது அவ்வுடல் ஒரு பிடி களி மண்ணைப்போல் ஆகிவிட்டதைக் கண்டேன். நோயை எதிர்க்கும் சக்தியை என் உடல் அடியோடு இழந்து விட்டது. டாக்டர் கனூகா வந்து மருந்து சாப்பிடும்படி வேண்டினார். நான் மறுத்தேன். ஊசியினால் குத்தி மருந்தேற்றுவதாகச் சொன்னார். அதற்கும் நான் இணங்கவில்லை. ஊசியினால் மருந்தேற்றும் முறையைப்பற்றி அக்காலத்தில் எனக்கிருந்த அறியாமை நகைக்கத் தக்கதாகும். ஊசியினால் ஏற்றப்படும் மருந்து

ஏதோ பிராணியின் நிணநீரா யிருக்கவேண்டுமென நம்பினேன். டாக்டர் குறிப்பிட்ட மருந்து ஒரு மூலிகையின் சத்து என்று பின்னால் எனக்குத் தெரியவந்தது. அதனால் என்ன பயன்? வயிற்றுப்போக்கு இன்னும் போய்க் கொண்டே யிருந்தது. நான் முற்றும் களைத்துப் போனேன். இந்தக் களைப்பின் பயனாக ஜுரமும் பிதற்றலும் ஏற்பட்டன. நண்பர்கள் இன்னும் பயமடைந்து வேறு சில வைத்தியர் களையும் அழைத்து வந்தார்கள். ஆனால் நோயாளி வைத்தியர்களுடைய யோசனையைக் கேட்கமாட்டே னென்றால் அவர்களால் என்ன செய்ய முடியும்?

சேத் அம்பாலால் தமது உத்தம பத்தினியுடன் நதியாத்திற்கு வந்து என் சகாக்களுடன் கலந்தாலோசித்து, ஆமதாபாத்திலுள்ள மிர்ஸாப்பூர் பங்களாவுக்கு என்னை மிக ஜாக்கிரதையுடன் கொண்டுபோனார், இந்த நோயின்போது நான் பெற்ற சுயநலமற்ற அன்புத் தொண்டைப்போல் வேறு யாரும் பெறல் அரிது. எனினும் உள்ளூற அடித்த ஜுரம் நாளுக்கு நாள் என் உடலை மெலியச் செய்து வந்தது நோய் வெகு காலம் நீடித்தே தீருமென்றும், ஒருகால் மரணத்திலும் முடியலாமென்றும் எனக்குத் தோன்றிற்று. அம்பாலால் சேத்தின் வீட்டில் என் மீது சொரியப்பட்ட அன்பிற்கு அளவில்லை யாயினும், நான் மன அமைதி யிழந்து, என்னை ஆசிரமத்துக்குக் கொண்டுபோய் விடும்படி அவரை வற்புறுத்தினேன். அவ் வற்புறுத்தலுக்கு அவர் இணங்க வேண்டியதாயிற்று.

இவ்வாறு . ஆசிரமத்தில் நான் துன்பப்படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தபோது ஜெர்மனி முறியடிக்கப் பட்டதென்றும், இனிமேல் ஆள் திரட்டுதல் அவசியமில்லை யென்று கமிஷனர் தெரிவித்திருப்பதாயும்

ஸ்ரீ வல்லபாய் செய்தி கொண்டுவந்தார். ஆள் திரட்டலைப் பற்றிய கவலை இனி வேண்டியதில்லை யென்னும் செய்தி எனக்குப் பெரிதும் ஆறுதல் அளித்தது.

இப்போது நான் ஜல வைத்தியம் செய்துகொண்டிருந்தேன். இது கொஞ்சம் குணமளித்தது. ஆனால் மெலிந்த உடம்புக்குப் பலம் தருவது மிகக் கஷ்டமான வேலையாயிருந்தது. வைத்தியர்கள் பலரும் எவ்வளவோ புத்திமதிகள் சொன்னார்கள். ஆனால் அவற்றில் எதையும் கடைப்பிடிக்க எனக்கு விருப்பமில்லை. பால் அருந்துவதில்லை யென்னும் விரதத்தைக் கைவிடாமல், மாமிசச் சாறு அருந்தும்படி சிலர் கூறினார்கள். ஆயுர்வேத சாஸ்திரங்களிலிருந்து இதற்கு ஆதாரவும் எடுத்துக் காட்டினார்கள். ஒருவர் முட்டைகளைப் பலமாகச் சிபார்சு செய்தார். ஆனால் அவர்களெல்லாருக்கும் "முடியாது" என்னும் ஒரு பதிலையே நான் அளித்து வந்தேன்.

உணவு விஷயத்தை சாஸ்திரங்களின் ஆதாரத்தைக் கொண்டு தீர்மானிக்க வேண்டியதென்று நான் எண்ணவில்லை. என் வாழ்க்கை முறையில் அது கலந்துவிட்டது. என் வாழ்க்கைக்கு அடிப்படையான கொள்கைகளோ இப்போது புற ஆதாரங்களைப் பொறுத்தனவா யில்லை. அக்கொள்கைகளைக் கைவிட்டு நான் வாழ விரும்பவில்லை. என் மனைவி, குழந்தைகள், நண்பர்கள் விஷயத்தில் தாட்சண்யமின்றி நான் வற்புறுத்திய ஒரு கொள்கையை என் விஷயத்தில் மட்டும் எப்படிக் கைவிடக்கூடும்?

இவ்வாறு, நீண்ட காலம் நான் நோயாய்ப்படுத்த இம் முதல் முறையிலேயே என் கொள்கைகளைச் சோதிக்க நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. ஒருநாள் இரவு நான் நம்பிக்கையை

அறவே இழந்தேன். மரணத்தின் வாயிலில் நிற்பதாக எனக்குத் தோன்றிற்று. அநுசூயாபாய்க்குச் செய்தி யனுப்பினேன். அவர் ஓட்டோட்டமாக ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீவல்லபாய், டாக்டர் கனுகாவை அழைத்துக் கொண்டு வந்தார். டாக்டர் என் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு "நாடி முற்றும் சரியா யிருக்கிறது. அபாயம் எதுவும் கிடையவே கிடையாது. மிகுந்த பலவீனத்தினல் உண்டான நரம்புத் தளர்ச்சியே உங்கள் சோர்வுக்குக் காரணம்" என்று சொன்னர். எனக்கு மட்டும் நம்பிக்கையுண்டாகவில்லை. அன்றிரவு முழுவதும் தூக்கமில்லாமலே கழித்தேன்.

பொழுது விடிந்தது. ஆனல் எமன் வந்தபாடில்லை மரணஞ் சமீபித்திருக்கிறது என்னும் உணர்ச்சிமட்டும் எனக்குப் போகவில்லை. நான் விழித்துக்கொண்டிருந்த நேரமெல்லாம் ஆசிரம வாசிகளில் ஒருவரைப் பகவத்கீதை படிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்தேன். என்னல் படிக்கக் கூடவில்லை. பேசும் விருப்பமும் இல்லை. ஒருவார்த்தை பேசினலும் மூளைக்கு மிகவும் களைப்பு ஏற்பட்டது. வாழ்க்கைக்காகவே வாழ்வதில் எனக்கு எப்போதுமே விருப்பமில்லையாதலின், வாழ்வில் எல்லாச் சுவையையும் இழந்தேன். இவ்வாறு ஒரு வேலையும் செய்யாமல் நண்பர்களால் இடைவிடாமல் ஊழியஞ் செய்யப்பட்டு நாளுக்குநாள் மெலிவதைப் பார்த்துக்கொண்டு வாழ்தல் எனக்கு அளவற்ற துன்ப வாழ்க்கையா யிருந்தது.

இவ்வாறு நான் மரணத்தை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கிடந்தபோது டாக்டர் தால்வால்கர் ஓர் அதிசயமான ஜந்துவை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். இந்த ஜந்து ஒரு மகாராஷ்டிரரே யாவார். அவர்

பெயர் பிரசித்தியானதன்று. ஆனல் அவரைப் பார்த்த வுடனே என்னைப்போல் அவரும் ஒரு பித்தரெனக் கண்டு கொண்டேன். அவர் தமது சிகிச்சையை என்னிடம் பிரயோகித்துப் பார்ப்பதற்காக வந்தார். அவர் வைத்திய கலா சாலையில் ஏறக்குறைய முழுப்பயிற்சியும் பெற்றவர். ஆனல் பட்டம் மட்டும் பெறவில்லை. அவர் பிரம சமாஜத்தைச் சேர்ந்தவரென்று பின்னல் தெரிந்துகொண்டேன். ஸ்ரீமான் கெல்கார்—இதுதான் அவர் பெயர்—சுதந்திர இயல்பும் பிடிவாத குணமும் உள்ளவர். அவருக்குப் பனிக்கட்டி சிகிச்சையில் அதிக பிரமை. எனக்கு அந்த சிகிச்சை செய்ய வேண்டுமென விரும்பினர். அவருக்குப் "பனிக்கட்டி டாக்டர்" என்று நாங்கள் பெயர் கொடுத்தோம். பெரிய டாக்டர்களுக்குத் தெரியவராத சில விஷயங்களைத் தாம் கண்டு பிடித்துவிட்டதாய் அவர் நம்புகிருர். அவருடைய சிகிச்சை முறையில் அவருக்குள்ள நம்பிக்கையை எனக்கும் அவர் உண்டுபண்ண முடியாமற் போனது பெரிதும் இரங்கத் தக்கதாகும். அவருடைய முறையில் ஓரளவு வரைக்கும் நான் நம்புகிறேன். ஆனல் அவசரப்பட்டு அவர் சிற்சில முடிவுகள் செய்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

அவர் கண்டு பிடித்த விஷயங்களின் குணுகுணங்கள் எத்தகைய வாயினும் என் உடம்பில் பரிசோதனை செய்வதற்கு அவருக்கு அநுமதி கொடுத்தேன். புறச் சிகிச்சையில் எனக்கு ஆட்சேபம் கிடையாது. உடம்பு முழுவதும் பனிக்கட்டி வைத்துக் கட்டுவதே அவருடைய சிகிச்சையாகும். அச் சிகிச்சையினல் என் உடம்பில் ஏற்பட்ட குணத்தைப்பற்றி அவர் கூறுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை யாயினும், எனக்கு ஒரு புதிய நம்பிக்கையையும்

புதிய உற்சாகத்தையும் அது அளித்தது என்பதில் சந்தேக மில்லை. மனத்தின் நிலை உடம்பில் பிரதி பலிப்பது இயல்பே அல்லவா? பசியெடுக்க ஆரம்பித்தது. ஐந்து முதல் பத்து நிமிஷம் வரையில் மெதுவாக நடக்கவும் தொடங்கினேன். இப்போது அவர் என் உணவில் ஒரு சீர்திருத்தம் செய்யு மாறு யோசனை சொன்னார். அவர் கூறியதாவது:—"நீங் கள் பச்சை முட்டை தின்ன ஆரம்பித்தால் விரைவில் உங் கள் பலத்தைத் திரும்பப் பெறுவீர்கள். இதை உறுதியாய் நம்புங்கள். முட்டைகள் பாலைப்போலவே தீங்கற்றனவா கும். அவை புலாலாகாது என்பது நிச்சயம். எல்லா முட்டை களிலும் கரு இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? கரு இல்லாத முட்டைகள் மார்க்கெட்டில் கிடைக்கும்" என் றார். ஆனால் இத்தகைய முட்டைகளையும் உட்கொள்ள நான் சித்தமாயில்லை. எனினும், இதுவரை என் உடல் நிலையில் ஏற் பட்டிருந்த அபிவிருத்தியே பொது விஷயங்களில் நான் சிரத்தை கொள்வதற்கு போதுமா யிருந்தது.

இருபத்தோன்பதாம் அத்தியாயம்

ரௌலட் சட்டமும் எனது தியக்கமும்

இவ்வாறு நான் குணமடைந்து வந்த சமயத்தில், பத்திரிகைகளில் ரௌலட் கமிட்டியின் அறிக்கை யைத் தற்செயலாகப் பார்த்தேன். அதன் சிபார்சுகள் என்னைத் திடுக்குறச்செய்தன. வல்லபாய் என்னை அநேக மாகத் தினந்தோறும் வந்து பார்ப்பது வழக்கம். அவரிடம் என் சந்தேகங்களைத் தெரிவித்தேன். "ஏதாவது செய்தாக வேண்டும்" என்று நான் சொன்னேன். "இங்கிலைமையில்

நாம் என்ன செய்யக்கூடும்?" என்று அவர் பதிலுக்குக் கேட்டார். அதற்கு நான் கூறியதாவது:—" உத்தேச சட்டத்தை எதிர்த்து நிற்பதாகப் பிரதிக்ஞையில் கையொப்ப மிட ஒரு சிலர்* முன் வந்தாலும் போதும். அப்படியும் சட்டம் செய்யப்படுமாயின் நாம் உடனே சத்தியாக்கிரஹம் தொடங்க வேண்டும். நான் இப்படி நோய்ப்பட்டுக் கிடக்காவிடில், மற்றவர் என்னைப் பின் பற்றுவார்களென எதிர் பார்த்துத் தன்னந் தனியனாகவே போர் தொடங்கு வேன். ஆனால் தற்போது என்னுடைய தீனமான நிலைமையில், நான் அப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் திறமையற்றவனென எண்ணுகிறேன்."

இந்தப் பேச்சின் பயனாக, என்னுடன் தொடர்புடைய சிலரை அழைத்து ஒரு கூட்டங் கூட்டுவதென்று முடிவு செய்தோம். ரௌலட் கமிட்டியாரின் சிபார்சுகள், அக் கமிட்டி அறிக்கையில் வெளியான சாட்சியங்களையே கொண்டு பார்த்தாலும் போதிய ஆதாரமற்றவையாக எனக்குக் காணப்பட்டன. சுயமரியாதை யுள்ளவர் எவரும் அச் சிபார்சுகளுக்குத் தலை குனியக்கூடாதென்று எண்ணினேன்.

கடைசியாக, மேற்படி கூட்டம் ஆசிரமத்தில் நடை பெற்றது. இருபது பேருக்குமேல் அக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை வல்லபாயைத் தவிர, ஸ்ரீமதி சரோஜனி, மிஸ்டர் ஹார்னிமான், காலஞ்சென்ற ஜனாப் உமார் சோபானி, ஸ்ரீ சங்கர்லால் பாங்கர். ஸ்ரீமதி அநுசூயாபாய் இவர்கள் வந்திருந்ததாக எனக்கு நினைவிருக்கிறது. சத்தியாக்கிரஹப் பிரதிக்ஞை இக் கூட்டத்திலேயே தயாரிக்கப்பட்டது. கூட்டத்துக்கு

வந்திருந்தவர்கள் எல்லாரும் அதில் கையொப்பமிட்டதாக எனக்கு ஞாபகம். அக்காலத்தில் நான் பத்திரிகை எதுவும் நடத்தவில்லை. ஆனால் அவ்வப்போது என் கருத்துகளை தினசரிப் பத்திரிகைகளின் மூலம் வெளியிடுவது வழக்கம். அவ் வழக்கத்தின்படி இப்போதும் எழுதினேன். சங்கர் லால் பாங்கர் மிகுந்த ஊக்கத்துடன் இக்கிளர்ச்சியில் ஈடுபட்டார். சலிப்புறாமல் நிர்மாண வேலை செய்வதற்கு அவருக்குள்ள ஆச்சரியமான திறமையைப்பற்றி இப்போது தான் முதன் முதலாகத் தெரிந்து கொண்டேன்.

அப்போதிருந்த ஸ்தாபனம் எதுவும் சத்தியாக்கிரஹ மென்னும் புதிய ஆயுதத்தை ஏற்றுக்கொள்ளுமென நம்புவது வீண் என்று தோன்றியபடியால், என்னுடைய யோசனை யின்மேல்சத்தியாக்கிரஹ சபை என்று ஒரு புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதன் முக்கிய அங்கத்தினர்கள் பம்பாய் வாசிகளாதலால் அதன் தலைமை ஸ்தலமும் அங்கேயே ஏற்பட்டது. ஏராளமானவர்கள் அச்சபையில் சேர விரும்பிப் பிரதிக்ஞையில் கையொப்பமிட லானார்கள், அறிக்கைகள் வெளியிடப்பட்டன, பொதுக்கூட்டங்கள் எங்கும் நடத்தப்பட்டன. இவையெல்லாம் கேதா போராட்டத்தை நினைவூட்டுவனவாயிருந்தன.

நானே சத்தியாக்கிரஹ சபையின் அக்கிராசன னானேன். ஆனால் விரைவிலேயே, அச் சபையிலிருந்த அறிவாளிகளுக்கும் எனக்கும் அதிக ஒற்றுமை ஏற்பட முடியாதெனக் கண்டேன். சபையில் குஜராத்தி மொழி யையே உபயோகிக்கவேண்டுமென நான்வற்புறுத்தியதும், மற்றும் என் வேலை முறைகள் சிலவும் அவர்களுக்குப் பெரிதும் மனத் தொல்லையும், சங்கடமும் அளித்தன.

ஆயினும் அவர்களில் பலர் என்னுடைய விநோதக் கொள்கைகளையும், நடிவடிக்கைகளையும் பெரிய மனது செய்து பொறுத்து வந்தார்க ளென்பதைக் குறிப்பிட வேண்டும்.

எனினும், சபை நீண்டகாலம் நீடித்திராதென்பது எனக்குத் தொடக்கத்திலேயே தெளிவாக விளங்கிவிட்டது சத்தியத்தையும் அஹிம்சையையும் நான் வலியுறுத்தியதை அங்கத்தினர் சிலர் இதற்குள்ளாகவே வெறுக்கத்தொடங்கி விட்டார்களென்பதைக் கண்டேன். ஆயினும், ஆரம்ப காலத்தில் எங்கள் புதுமுயற்சி வெகு தீவிரமாக நடந்து இயக்கம் வலுப்பெற்று வந்தது.

மாதிரான் என்னுமிடம் சென்றால் விரைவில் சுகமடை யலாமென்று வைத்தியர்களும் நண்பர்களும் சொன்னதன் மேல் அங்கே போனேன். ஆனால் மாதிரானில் தண்ணீர் கனமுள்ள தாகையால் நான் அங்கு வசிப்பது கஷ்டமாகி விட்டது. சீதபேதியினல் துன்புற்றதின் காரணமாக என் ஆசனத்துவாரம் மிகவும் மெலிவுற்றிருந்தது. அதில் சிறு பிளவுகள் உண்டாயிருந்தபடியால் மலங்கழிக்குங்கால் மிகக் கொடிய வலி ஏற்பட்டது. எனவே உணவருந்தும் எண்ணமே எனக்குப் பீதி விளைந்தது. ஆதலின் ஒரு வாரம் ஆவதற்குள் நான் மாதிரானிலிருந்து ஓடவேண்டியவ னனேன். இப்போது சங்கர்லால் பாங்கர் என் தேகசுகத் தின் பாதுகாவலராகத் தம்மைத்தாமே ஏற்படுத்திக்கொண்டு டாக்டர் தலாலிடம் ஆலோசனை கேட்கும்படி வற்புறுத்தி னர். அவ்வாறே டாக்டர் தலால் அழைக்கப்பட்டார். அவர் உடனுக்குடனே முடிவு செய்யும் திறமையுடையவரா யிருந்தது, என் சிந்தையைக் கவர்ந்தது.

“ நீங்கள் பால் அருந்தினாலன்றி உங்கள் உடம்புக்குப் புதிய பலம் தருவிக்க என்னால் முடியாது. பால் அருந்துவதுடன். இரும்புச்சத்தை இஞ்சக்ஷன் செய்து கொள்ளவும் சம்மதித்தால், உங்கள் தேகத்தை முழுதும் முன்போலாக்கி விடுவதற்கு நான் உத்தரவாதம்” என்றார்.

“ இஞ்சக்ஷன் செய்துகொள்ள ஆட்சேபமில்லை. ஆனால் பால் விஷயம் வேறானது. பால் அருந்துவதில்லையென்று நான் விரதங் கொண்டுள்ளேன்” என்றேன்.

“ உங்கள் விரதம் எத்தகையது? விவரமாகச் சொல்லுங்கள்” என்றார் வைத்தியர்.

அவ் விரதத்தின் வரலாறு முழுவதும் கூறினேன். பசுவும், எருமையும் இடையர்களால் நடத்தப்படும் விதத்தைத் தெரிந்துகொண்ட பின்னர், பாலென்றாலே எனக்கு வெறுப்பு வந்து விட்டதென்றும், மேலும், பால் மனிதனுடைய இயற்கை உணவன்று என நான் கருதுவதாகவும், ஆதலின் அதை அடியோடு விட்டொழிக்க விரதங் கொண்டதாகவும் அறிவித்தேன். இந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு என் படுக்கைக் கருகில் கஸ்தூரிபாய் நின்று கொண்டிருந்தாள்.

“ அப்படியானால் வெள்ளாட்டுப்பால் அருந்துவதற்கு என்ன? அதற்கு ஆட்சேபம் எதுவு மிருக்க முடியாதே?” என்று அவள் இடையில் கூறினாள்.

உடனே டாக்டரும் அதைப் பிடித்துக் கொண்டார். “நீங்கள் வெள்ளாட்டுப் பால் அருந்தினாலும் எனக்குப் போதும்” என்றார்.

என் உறுதி குலைந்தது. சத்தியாக்கிரஹப் போர் நடத்த வேண்டுமென்னும் தீவிரமான அவாவினால் உயிர் வாழும் ஆசையும் எனக்கு உண்டாகி விட்டது. எனவே, விரதத்தின் கருத்தைக் கைவிட்டு அதன் எழுத்தைக் கடைப் பிடிப்பதுடன் திருப்தி யடைந்தேன். நான் விரத மெடுத்துக் கொண்டபோது பசுவின் பாலும், எருமைப்பாலுமே என் மனதில் இருந்தனவாயினும், இயல்பாக அதனுள் எல்லா மிருகங்களின் பாலுமே அடங்கியதாகும். மற்றும், பால் மனிதனுடைய இயற்கை உணவன்று என நான் கொண் டிருக்கும் வரையில் எந்தப் பாலையும் அருந்துவது முறையா காது. இவையெல்லாம் தெரிந்திருந்தும் வெள்ளாட்டுப் பால் அருந்தச் சம்மதித்தேன். உயிர் வாழும் ஆசை சத்தியப்பற்றி னும் வலிமை மிக்கதாகி விட்டது. எனவே சத்திய உபாசக னான நான், இந்த ஒரு முறையில், சத்தியாக்கிரஹப் போர் துவங்கும் ஆவல் காரணமாக எனது புனித இலட்சியத்தைச் சிறிது விட்டுக் கொடுக்கலானேன். இதன் ஞாபகம் இன் றளவும் என் இதயத்தை ஓயாது வருத்திக் கொண்டிருக்கி றது. வெள்ளாட்டுப் பாலை விடுவதெப்படி என்று இடை விடாமல் சிந்தித்து வருகிறேன். ஆனால், ஆசைகளுக்குள் மிக நுண்ணியதாகிய தொண்டு புரியும் ஆசை இன்னும் என்னைப்பற்றி நிற்கிறது. அதனின்றும் இன்னும் நான் விடு தலை பெறக் கூடவில்லை.

எனக்கு உணவுச் சோதனைகளும் அஹிம்ஸைச் சோதனைகளின் ஒரு பகுதியே யாதலின் அவை மிக அரு மையானவை யாகும். அவையே எனக்குச் சந்தோஷானு பவ சாதனங்களாக இருந்து வருகின்றன. ஆனால் வெள் ளாட்டுப் பால் அருந்துவது அஹிம்ஸா உணவு நெறிக்கு விரோதமென்ற காரணத்தினால் எனக்கு அத்துணைத் துன்

பந் தந்து வரவில்லை. விரத பங்கம் செய்துவிட்டேனே, சத்தியத்தைக் கைவிட்டேனே என்னும் துயரமே அதிகமாயிருக்கிறது. அஹிம்ஸா தர்மத்தைவிட சத்திய இலட்சியத்தை நான் நன்குணர்ந் திருப்பதாய் எண்ணுகிறேன். சத்தியத்தைக் கைவிட்டேனுயின் அஹிம்ஸை யென்னும் சிக்கலை என்னால் அவிழ்க்கவே முடியாதென அநுபவத்திலிருந்து உணர்ந்திருக்கிறேன். பிரதிக்ஞைகளின் எழுத்தை மட்டுமல்லாது கருத்தையும் அநுசரித்து நடப்பதே சத்திய இலட்சியத்தைக் கடைப்பிடிப்பதாகும். இவ் விஷயத்தில் என் பிரதிக்ஞையின் வெளி உருவத்தைக் காப்பாற்றினேனே யல்லாமல், அதன் கருத்தை—ஆத்மாவை—கொன்று விட்டேன். இதுதான் எனக்குப் பெரிதும் மனவேதனை தந்து வருகிறது. இத்தகைய தெளிவான அறிவு இருந்தும் என் முன் நேரிய வழியைக் காண்கிறேனில்லை; அல்லது நேர் வழியில் செல்ல, எனக்குத் தைரியமில்லை யென்றும் சொல்லலாம். இரண்டும் அடிப்படையில் ஒன்றுதான். ஏனெனில் சந்தேகம் என்பது, நம்பிக்கையின்மை அல்லது நம்பிக்கைக் குறைவின் விளைவே யாகும். எனவே, "ஆண்டவனே! எனக்கு நம்பிக்கை அருள்வாய்" என்று இரவும் பகலும் பிரார்த்தித்து வருகிறேன்.

நான் வெள்ளாட்டுப் பால் அருந்தத் தொடங்கியதற்கு சற்றுப் பின்னர் டாக்டர் தலால் ஆசனத்திலிருந்த பிளவுகளைப் போக்க சத்திர சிகிச்சை செய்தார். சிகிச்சை வெற்றியளித்தது. குணமடையத் தொடங்கியதும் உயிர்வாழும் ஆசை மீண்டும் எழுந்தது. ஆண்டவன் எனக்கு வேலை தயாராய் வைத்திருந்தபடியால் அவ்வாசை அதிகமாயிற்று.

முப்பதாம் அத்தியாயம்

அற்புதமான காட்சி

இவ்வாறு ஒரு புறத்தில் ரௌலட் கமிட்டி அறிக்கைக்கு விரோதமான கிளர்ச்சி பலம் பெற்று வருகையில், மற்ருெரு புறத்தில் அக்கமிட்டியின் சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கத்தாரின் உறுதியும் வலுவடைந்து வந்தது. ரௌலட் மசோதா பிரசுரிக்கப்பட்டது. என் வாணுளில் ஒரே ஒரு முறைதான் நான் இந்திய சட்டசபை மண்டபம் சென்று அச்சபை நடவடிக்கைகளைக் கவனித்திருக்கிறேன். அது இம்மசோதாவின் மீது நடந்த விவாதத்தின் போதே யாகும். ஸ்ரீமான் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் ஆவேசமான பிரசங்கம் ஒன்று செய்தார். அதில், அரசாங்கத்துக்குப் பலமான எச்சரிக்கை விடுத்தார். சாஸ்திரியார் வாக்கு வன்மையுடன் கண்டனங்களைச் சரமாரியாகப் பொழிந்து கொண்டிருக்கையில் இராஜப் பிரதிநிதி அவரையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு பிரமிப்படைந்தவர் போல் கேட்டு வந்தார். அப்பேச்சு அவ்வளவு உண்மையாகவும், உணர்ச்சி நிறைந்ததாகவும் இருந்தபடியால் இராஜப் பிரதிநிதியின் மனதைக்கூட அது மாற்றியிருக்கலாமென எனக்குத் தோன்றிற்று.

ஆனல் ஒரு மனிதன் உண்மையில் தூங்கிக்கொண்டிருந்தால் அவனை எழுப்பலாம்; தூங்குவதாகப் பாசாங்கு மட்டும் செய்து கொண்டிருந்தால் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அவனை எழுப்ப முடியாதல்லவா! அரசாங்கமும் அதே நிலையில்தான் இருந்துவந்தது. அதன் தீர்மானம் முன்னரே செய்யப்பட்டு விட்டது. சட்ட

பூர்வமான சடங்குகளை நடத்திவிட வேண்டுமென்பது ஒன்றுதான் இப்போது அதன் கவலை. ஆதலின் சாஸ்திரியாரின் எச்சரிக்கை அரசாங்கத்தின் செவியில் சிறிதும் ஏறவில்லை.

இத் தகைய சந்தர்ப்பத்தில் என்னுடைய பேச்சுக்கு எவ்வாறு மதிப்பு ஏற்படக்கூடும்? இராஜப்பிரதிநிதியை நான் மன்றாடி வேண்டிக்கொண்டேன். அவருக்கு அந்தரங்கக் கடிதங்களும், பகிரங்கக் கடிதங்களும் விடுத்தேன், அவற்றில், அரசாங்கம் கைக்கொள்ளும் முறையினால் சத்தியாக்கிரஹம் மேற்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழி யில்லாமல் போய்விடுமென்று தெளிவாகக் கூறினேன். ஒன்றும் பயன்படவில்லை.

மசோதா இன்னும் சட்டமாகி கெஜட்டில் பிரசுரிக்கப்படவில்லை. இந் நிலைமையில் சென்னையிலிருந்தும் எனக்கு அழைப்பு வந்தது. அப்போது என் உடல் பலவீனமுற்றிருந்ததாயினும், அவ்வழைப்பை ஏற்று, நீண்ட தூரப் பிரயாணம் செய்யத் துணிந்தேன். அக்காலத்தில் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கு வேண்டிய அளவு உரத்துப் பேச எனக்குச் சக்தியில்லை. பொதுக்கூட்டங்களில் நின்றுகொண்டு பேசவும் இயலவில்லை. இந்த சக்திக் குறைவு இப்போது மிருந்து வருகிறது. நின்றுகொண்டு பேச முயன்றேனானால் என் உடம்பு முழுதும் நடுங்கவும் குலுங்கவும் ஆரம்பித்து விடும்.

தென்னாட்டுக்கு எப்போது சென்றாலும் என் சொந்த இடத்தில் இருப்பதாகவே எனக்குத் தோன்றும். தென்னாப்பிரிக்காவில் நான் செய்த வேலையின் காரணமாக, தமிழர்கள் மீதும் தெலுங்கர்கள் மீதும் எனக்கு ஏதோ தனி உரிமை உண்டென்று நான் எண்ணுவதுண்டு.

தென்னுட்டார் என் நம்பிக்கையை ஒரு போதும் பொய்ப் படுத்திய தில்லே. ஸ்ரீமான் கஸ்தூரி ரங்க ஐயங்காரின் கையொப்பத்துடன் அழைப்பு வந்தது. ஆனல் அவ்வழைப் புக்குப் பின்னல் நின்றவர் இராஜகோபாலாச்சாரி என்ப தாகச் சென்னைக்குப் போகும் வழியில் அறிந்து கொண் டேன். அவருடன் முதன் முதலாக இப்போது தான் எனக் குப் பழக்கம் ஏற்பட்ட தென்று சொல்லலாம். நேருக்கு நேர் நாங்கள் சந்தித்து ஒருவரையொருவர் அறிந்துகொண் டது இம்முறையில்தான் என்பதில் சந்தேகமில்லே.

இராஜகோபாலாச்சாரி சமீபத்தில்தான் சேலத்தி லிருந்து சென்னைக்கு வக்கீல் தொழில் நடத்த வந்திருந்தார். காலஞ்சென்ற ஸ்ரீ கஸ்தூரிரங்க அய்யங்கார் முதலியோர் அவரை வற்புறுத்தி அழைத்திருந்தார்கள். பொது வாழ்வில் இன்னும் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்பது அவரது நோக்கம். சென்னையில் அவருடைய விருந்தினராகவே நாங் கள் தங்கினேம். ஆனல், இரண்டு மூன்று நாள் ஆனபிறகே இதை நான் கண்டுபிடித்தேன். ஏனெனில், நாங்கள் தங்கி யிருந்த வீடு ஸ்ரீ கஸ்தூரிரங்க அய்யங்காருக்குச் சொந்த மாகையால் நாங்கள் அவருடைய விருந்தினர் என்று எண்ணியிருந்தோம். மகாதேவ தேசாய் எனக்கு உண்மை தெரிவித்தார். அவர் விரைவில் இராஜகோபாலாச்சாரிய ருடன் நெருங்கிய பழக்கங் கொண்டார். இராஜகோபாலாச் சாரி தமக்கு இயற்கையான சங்கோச குணத்தினல் எப் போதும் பின்னலேயே இருந்தார். ஆனல் மகாதேவ் எனக்கு எச்சரிக்கை செய்தார். "இந்த மனிதரிடம் நீங்கள் பழக்கம் செய்துகொள்ள வேண்டும்" என்று அவர் ஒரு நாள் கூறினர்.

அவ்வாறே செய்தேன். போராட்டத்துக்குரிய திட்டங்களைப்பற்றி நாங்கள் தினந்தோறும் விவாதித்தோம். ஆனால் பொதுக்கூட்டங்கள் நடத்துவதை யல்லாமல் வேறெந்த வேலைத் திட்டமும் எனக்குத் தோன்றவில்லை. ரௌலட் மசோதா முடிவில் சட்டமாகி விட்டாலும் அதை எதிர்த்து எப்படி சாத்வீகமறுப்புச் செய்வதென்பது எனக்கு விளங்கவில்லை. அரசாங்கம் அதற்குரிய சந்தர்ப்பம் அளித்தால் தானே சட்டத்துக்குக் கீழ்ப்படிய மறுக்கலாம்? அதில்லாவிடில், மற்றச் சட்டங்களையும் சாத்வீக முறையில் மறுத்தல் கூடுமா? அங்ஙனமாயின், அதற்கு வரம்பு எங்கேயென்று நிர்ணயிப்பது? இதுபோன்ற பல விஷயங்களையும் குறித்து நாங்கள் விவாதித்தோம்.

இது சம்பந்தமாக நன்கு ஆராய்ச்சி செய்யும் பொருட்டு ஸ்ரீ கஸ்தூரிரங்க அய்யங்கார், தலைவர்களின் சிறு மகாநாடு ஒன்றைக் கூட்டினார். அதில் சிறப்பாகக் கலந்து கொண்டவர்களில் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரும் ஒருவர். சத்தியாக்கிரஹ சாஸ்திரத்தின் நுட்பமான அம்ஸங்களையும் கூட விளக்குமாறு ஒரு விரிவான நூல் நான் எழுதவேண்டுமென்று அவர் யோசனை சொன்னார். அது என் ஆற்றலுக்கு அப்பாற் பட்டது என்று கருதி அவ்வாறே அவரிடமும் தெரிவித்தேன்.

இந்த யோசனைகளெல்லாம் நடந்துகொண்டிருக்கையில் ரௌலட் மசோதா சட்டமாகிப் பிரசுரிக்கப்பட்டு விட்டது என்னும் செய்தி கிடைத்தது. அன்றிரவு அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே நித்திரையில் ஆழ்ந்தேன். மறு நாள் அதிகாலையில், சிறிது வழக்கத்தை விட முன்னதாகவே விழித்துக் கொண்டேன். தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையிலுள்ள நிலையில் இருக்கும்போது

சட்டென்று எனக்கு வழி புலனாயிற்று. கனவு கண்டது போலவே இருந்தது, காலையில் இராஜகோபாலாச்சாரியிடம் விவரம் முழுவதும் கூறினேன்.

"ஒரு நாள் பூரண ஹர்த்தால் (வேலை நிறுத்தம்) நடத்தும்படி தேச மக்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நேற்றிரவில் கனவில் யோசனை உதயமாயிற்று. சத்தியாக்கிரஹம் என்பது ஆத்மத் தூய்மை செய்து கொள்ளும் ஒரு முறையே யாகும். நமது போராட்டம் புனிதமான போராட்டமாதலின் ஆத்மத் தூய்மைக்குரிய ஒரு காரியத்துடன் அதைத் தொடங்குவதே தகுதியென்று நினைக்கிறேன். அன்றைய தினம் இந்திய மக்களனைவரும் தங்கள் வேலைகளை நிறுத்தி உபவாச மிருந்து பிரார்த்தனை நடத்த வேண்டும். முஸ்லிம்கள் ஒரு நாளைக்குமேல் பட்டினிகிடக்க மாட்டார்கள். ஆதலின் உபவாஸம் 24-மணி நேரம் என்று ஏற்படுத்த வேண்டும். எல்லா மாகாணங்களும் நமது வேண்டுகோளுக்கு இணங்குமா வென்று சொல்லுதல் கஷ்டம். ஆனால் பம்பாய், சென்னை, பீஹார், சிந்து இம்மாகாணங்களைப்பற்றி எனக்கு நிச்சயமுண்டு. இவ் விடங்களிலெல்லாம் ஹர்த்தால் சரிவர நடந்தாலும் நாம் திருப்தியடையக் காரணமுண்டு" என்றேன்.

இராஜகோபாலாச்சாரி உடனே இந்த யோசனையை அங்கீகரித்தார். பின்னால் மற்ற நண்பர்களுக்கு அது தெரிவிக்கப்பட்டபோது அவர்களும் அதை வரவேற்றார்கள். சுருக்கமான விண்ணப்பமொன்றை நான் தயாரித்தேன். முதலில் 1919ஹு மார்ச்சு மாதம் 30-ந் தேதி ஹர்த்தால் தினமாகக் குறிக்கப்பட்டது. பின்னர் ஏப்ரல்மீ 6-ந் தேதிக்கு மாற்றப்பட்டது. இவ்வாறு ஜனங்களுக்குச் சொற்ப கால அறிக்கையே தந்தோம். வேலை உடனே

தொடங்கவேண்டி யிருந்தபடியால் நீண்டகால அறிக்கை தருவதற்கு நேரமில்லை.

ஆனால் அவ்வற்புதம் எப்படி நடந்ததென்று யாரால் சொல்ல முடியும்? பாரத நாடு முழுவதிலும் ஒரு மூலையி லிருந்து மற்றொரு மூலை வரை நகரங்களும், கிராமங்களும் அன்றையதினம் பரிபூரணமான ஹர்த்தால் அனுஷ்டித்தன. அது அதி அற்புதமான காட்சியா யிருந்தது.

முப்பத்தோறும் அத்தியாயம்

மறக்கொணாச் சம்பவங்கள்—I

தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தைச் சுருக்கமாக முடித்துக்கொண்டு பம்பாய்க்குத் திரும்பினேன். ஏப்ரல் மாதம் 6-ந் தேதி கொண்டாட்டத்திற்காக நான் அங்கே வந்து சேர்ந்துவிட வேண்டுமென்று ஸ்ரீ சங்கர்லால் பாங்கர் தந்தி அனுப்பி யிருந்தார். ஏப்ரல் மாதம் 4-ந் தேதி அங்கே போய்ச் சேர்ந்ததாக நினைவிருக்கிறது.

ஆனால் இதற்கு முன்பே மார்ச்சு மாதம் 30-ந் தேதி யன்று டில்லியில் ஹர்த்தால் நடந்து விட்டது. டில்லியில் சுவாமி சிரத்தானந்தரும்; காலஞ்சென்ற ஹக்கீம் அஜ்மல் கான் சாகிபுவும் வைத்ததுதான் சட்டம் ஹர்த்தால் ஏப்ரல் மாதம் 6-ந் தேதிக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிற தென்னும் செய்தி அங்கே தாமதமாகச் சேர்ந்தது. இதற்கு முன்பு இத்தகைய ஹர்த்தால் டில்லியில் நடந்ததே கிடையாது. இந்துக்களும், முஸ்லீம்களும் ஒரே மனிதனைப்

போல் ஒற்றுமைப்பட் டிருந்ததாகக் காணப்பட்டது. ஜும்மா மசூதியில் உபந்நியாசம் செய்யும்படி சுவாமி சிரத்தானந்தரை அழைத்திருந்தார்கள். அவரும் அவ்வாறே சென்று உபந்நியாசஞ் செய்தார். இவற்றை யெல்லாம் அதிகாரிகளால் பொறுக்க முடியாமல் போயிற்று. அன்று நடந்த ஊர்வலம் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் சென்ற போது போலீஸார் அதைத் தடுத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதன் பயனுகச் சில உயிர்ச்சேதங்கள் நிகழ்ந்தன. டில்லியில் அடக்குமுறை ஆட்சி துவங்கப்பட்டது. சிரத்தானந்தர் என்னை அவசரமாக டில்லிக்கு வரும்படி அழைத்திருந்தார். பம்பாயில் ஏப்ரல் மாதம் 6-ந் தேதி கொண்டாட்டம் முடிவுற்றதும் டில்லிக்கு உடனே புறப்படுவதாகப் பதில் தந்தி யடித்தேன். டில்லியில் நடந்த அதே சம்பவங்கள் லாகூரிலும் அமிர்த சரஸிலும் நடைபெற்றன. அமிர்தசரஸிலிருந்து டாக்டர் சத்தியபாலும், டாக்டர் கிச்லுவும் உடனே அங்கு வந்து சேரும்படி வற்புறுத்தி அழைத்திருந்தார்கள். அச்சமயம் அவர்கள் இன்னுரென்றே எனக்குத் தெரியாது. ஆயினும் டில்லியிலிருந்து அமிர்தசரஸுக்கு வருவதாக அவர்களுக்குச் செய்தி யனுப்பினேன்.

6-ந் தேதி காலை பம்பாய் நகர வாசிகள் ஆயிரக் கணக்காக வந்து 'சௌபாத்தி' கடற்கரையில் நீராடினுர்கள். பின்னர் அவர்கள் ஊர்வலமாகக் கிளம்பி தாகூர் துவாரத்துக்குச் சென்றுர்கள். ஊர்வலத்தில் ஆங்காங்கு ஸ்திரீகளும் குழந்தைகளும் காணப்பட்டனர். முஸ்லீம்கள் பெருந் தொகையினராக அதில் கலந்து கொண்டனர். தாகூர் துவாரத்தை யடைந்த பின்னர் எங்களில் சிலரை முஸ்லீம் நண்பர்கள் அருகிலிருந்த மசூதிக்கு அழைத்துச் சென்றனர். நானும் ஸ்ரீமதி சரோஜினி தேவியும் அங்கே உபந்நியாசம்

செய்தோம். அவ்விடத்திலேயே ஜனங்களைச் சுதேசிய விரதமும், இந்து முஸ்லீம் ஒற்றுமைப் பிரதிக்ஞையும் எடுத்துக் கொள்ளச் செய்ய வேண்டுமென்று ஸ்ரீ வித்தல்தாஸ் ஜீராஜானி சொன்னார். ஆனால் அதற்கு நான் இணங்கவில்லை. பிரதிக்ஞைகளை அவ்வளவு அவசரமாக எடுத்துக்கொள்ளச் செய்தல் தவறென்றும், ஜனங்கள் ஏற்கனவே செய்துள்ள காரியங்களை முதலில் கவனித்து அவை திருப்தி யளித்தால் தான் அவர்களைப் பிரதிக்ஞை ஏற்கச் செய்யலா மென்றும் நான் கருதினேன். ஒரு முறை செய்துவிட்ட பிரதிக்ஞையைப் பின்னர் எக்காலத்தும் மீறலாகாதென்றும் எனவே சுதேசி விரதத்தின் உட்கருத்துக்களையும் இந்து முஸ்லீம் பிரதிக்ஞையின் பெரும் பொறுப்பையும் அனைவரும் நன்குணர வேண்டுமென்றும் நான் எடுத்துக் காட்டினேன். முடிவில் பிரதிக்ஞை செய்ய விரும்புவோர் அனைவரும் மறுநாள் காலையில் அதற்காக ஓர் இடத்தில் கூட வேண்டுமென்று தெரிவித்தேன்.

பம்பாயில் ஹர்த்தால் பூர்ண வெற்றியுடன் நடந்ததென்று சொல்ல வேண்டுவதில்லை. சட்டமறுப்புத் தொடங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தோம். இது சம்பந்தமாக இரண்டொரு விஷயங்கள் விவாதிக்கப்பட்டிருந்தன. ஜனத்திரளினால் எளிதில் மீறக்கூடிய சட்டங்களை மறுக்கவேண்டு மென்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. உப்பு வரி ஜனங்களால் மிகவும் வெறுக்கப்பட்டதொன்று. கொஞ்ச காலமாக அவ்வரியை ரத்து செய்யப் பெரு முயற்சி நடந்துவந்தது. ஆதலின், ஜனங்கள் உப்பு வரிச் சட்டத்தை மீறிக் கடலிலிருந்து தண்ணீர் கொண்டுபோய் வீட்டில் உப்பு உற்பத்தி செய்யலாமென

நான் சொன்னேன். அரசாங்கத்தினுல் தடைக்குள்ளான பிரசுரங்களை விற்கலாமென்பது என்னுடைய மற்ருெரு யோசனை. என்னுடைய புஸ்தகங்களில் 'இந்திய சுயராஜ்யம்' 'சர்வோதயம்' என்னும் இரண்டு நூல்கள் ஏற்கனவே தடையுத்திரவுக்குள்ளாயிருந்தன. அவற்றை அச்சிட்டுப் பகிரங்கமாக விற்பனை செய்தல் சட்ட மறுப்புச் செய்வதற்கு மிகச் சுலபமான வழியென்று தோன்றிற்று. ஆதலின் அப்புத்தகங்களின் பிரதிகள் போதிய அளவு அச்சிடப்பட்டன. அன்று மாலை விரதம் முடித்து உணவருந்திய பின்னர் நடைபெறவிருந்த பெருங் கூட்டத்தில் அவற்றை விற்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

•

அவ்வாறே 6-ந் தேதி மாலை ஏராளமான தொண்டர்கள் தடுக்கப்பட்ட பிரசுரங்களுடன் வெளிக் கிளம்பினுர்கள். நானும், ஸ்ரீமதி சரோஜினியும் மோட்டார் வண்டிகளில் சென்ருேம். எல்லாப் பிரதிகளும் விரைவிலேயே செலவழிந்து விட்டன. விற்பனைப் பணத்தைச் சட்ட மறுப்பு இயக்கத்துக்காகவே செலவழிக்கத் தீர்மானித்திருந்தோம். இரண்டு புத்தகங்களுக்கும் பிரதி ஒன்றுக்கு நான்கணு விலை வைக்கப்பட்டிருந்தது. ஆனுல் என்னிடமிருந்து ஒருவரேனும் அந்த விலைக்குப் புத்தகம் வாங்கியதாக எனக்கு ஞாபகமில்லை. எவ்வளவோ பேர் தங்களுடைய சட்டைப் பைகளிலிருந்த பணம் முழுவதையுங் கொடுத்துப் புத்தகம் வாங்கிக் கொண்டார்கள். ஒரு பிரதிக்காக ஐந்து ரூபா பத்து ரூபா நோட்டுகள் சர்வசாதாரணமாய் வந்து விழுந்தன. ஒருவர் ஐம்பது ரூபா கொடுத்து ஒரு பிரதி வாங்கிக் கொண்டதாகவும் ஞாபகமிருக்கிறது. தடையுத்திரவுக் குள்ளான இப் புத்தகங்களை வாங்குவதால் ஜனங்கள் சிறைக்கனுப்பப்

படலாமென்று அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கப் பட்டது. ஆனால் அந்த நிமிஷத்தில் சிறைச்சாலை பயத்தையே அவர்கள் அடியோடு ஒழித்து விட்டிருந்தார்கள்.

இது சம்பந்தமாக அரசாங்கத்தார் ஒரு செளகரிய மான கொள்கையை மேற்கொண்டதாகப் பின்னால் தெரிய வந்தது. உண்மையில், தடைக்குள்ளான புத்தகங்கள் விற் கப்படவில்லை யென்றும், நாங்கள் விற்ற புத்தகங்கள் “தடுக்கப்பட்ட பிரசுரங்கள்” ஆகாவென்றும் அவர்கள் கருதினார்களாம். தடைக்குள்ளான புத்தகங்களின் மறு பதிப்பை விற்பது சட்டப்படி குற்றமாகாது என்று அரசாங்கத்தார் கொண்டனர். இந்தச் செய்தி பெரிதும் ஏமாற்றமளித்தது.

மறுநாள் காலையில் சுதேசி விரதமும், இந்து - முஸ்லீம் ஒற்றுமைப் பிரதிக்ஞையும் மேற்கொள்வதற்காக வேறொரு கூட்டம் நடந்தது. மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பதை வித்தல்தாஸ் ஜீராஜானி முதன்முதலில் இப் போதே உணர்ந்தார். இக் கூட்டத்திற்கு சொற்ப ஜனங் களே வந்திருந்தார்கள். அவர்களில் பெண்மணிகள் சிலர் இருந்தனர். அச்சிலரை எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கி றது. கூட்டத்துக்கு வந்த ஆண் மக்களும் சிலரே யாவர். பிரதிக்ஞையை ஏற்கனவே நான் தயாரித்துக்கொண்டு வந்திருந்தேன். வந்திருந்தவர்களுக்கு அதன் பொருளை நன்கு விளக்கிக் கூறினேன். இக் கூட்டத்திற்கு ஜனங்கள் குறைவாக வந்திருந்தது எனக்குத் துயரமாவது வியப் பாவது அளிக்கவில்லை. ஏனெனில் ஜனங்களின் மனப் பான்மையில் இந்தக் குறிப்பான வேற்றுமையை நான்

முன்னமே கவனித்திருந்தேன். கிளர்ச்சி தரும் வேலை யென்றால் அவர்களுக்கெப்போதும் பிரியம், அமைதியான நிர்மாண வேலை யென்றால் வெறுப்புத்தான். இவ் வேற்றுமை இன்றளவும் இருந்து வருகிறது.

ஆனால் இவ் விஷயத்தைப் பற்றி ஒரு தனி அத்தியாயம் எழுத வேண்டும். எனவே கதைத் தொடர்ச்சிக்குத் திரும்புவோம். 7-ந் தேதி இரவு டில்லி வழியாக அமிர்த சரஸ் போகும் எண்ணத்துடன் புறப்பட்டேன். 8-ந் தேதி வடமதுரையை யடைந்ததும் நான் கைதி செய்யப்படலா மென்னும் வதந்தி முதன் முதலாக என் காதுக்கெட்டியது. ரயில் நின்ற அடுத்த இடத்தில் ஆசிரியர் கித்வானி என்னைக் காண வந்தார். என்னைக் கைதி செய்வது நிச்சயமென்று அவர் திட்டமாகத் தெரிவித்ததுடன் நான் இட்ட வேலை செய்யத் தாம் சித்தமா யிருப்பதாகவும் கூறினார். அவருக்கு வந்தனமளித்து, அவசியமானபோது அவருக்கு வேலை யிடத் தயங்கமாட்டேனென்று கூறினேன்.

வண்டி பால்வால் ஸ்டேஷனை அடைவதற்கு முன்னால் எழுத்து மூலமான உத்திரவு ஒன்று எனக்களிக்கப்பட்டது: நான் பஞ்சாபுக்குச் செல்வதால் அமைதிக்குப் பங்கம் நேரிடக்கூடு மாதலின், அம் மாகாணத்தின் எல்லைக்குள் நான் புகுதல் கூடாதென்று அதில் கண்டிருந்தது, போலீசார் என்னை வண்டியிலிருந்து கீழிறங்கும்படி சொன்னார்கள். நான் அப்படிச் செய்ய மறுத்தேன். "அவசரமான அழைப்பு வந்துள்ளபடியால், நான் பஞ்சாபுக்குச் செல்கிறேன். அங்கே அமைதிக்குக் கேடு சூழ்வதற்காக வன்று; அமைதி காப்பதற்கே போகிறேன். ஆதலின், இவ் வுத்திரவுக்கு இணங்க இயலாமைபற்றி வருந்துகிறேன்" என்று சொன்னேன்.

கடைசியில், வண்டி பால்வால்ஸ்டேஷனை அடைந்தது மகாதேவ் தேசாய் என்னுடன் வந்துகொண்டிருந்தார். டில்லிக்குச் சென்று சுவாமி சிரத்தானந்தரிடம் இங்கு நிகழ்ந்ததைச் சொல்லும்படியும், ஜனங்களை அமைதியாய் இருக்குமாறு கேட்டுக் கொள்ளும்படியும் அவரிடம் சொன்னேன். எனக்களிக்கப்பட்ட உத்திரவிற்கு நான் கீழ்ப்படிய மறுத்தது ஏன் என்பதையும், எனக்கு எத்தகைய தண்டனை அளிக்கப்பட்டாலும் ஜனங்கள் மட்டும் பூரண அமைதியுட னிருந்தால் நாம் நிச்சயம் வெற்றி யடைவோ மென்பதையும் விளக்கிக் கூறும்படி அவரைக் கேட்டுக் கொண்டேன்.

பால்வால் ஸ்டேஷனில் என்னை வண்டியிலிருந்து இறக்கிப் போலீஸ் காவலில் வைத்தார்கள். விரைவில் டில்லியி லிருந்து ஒரு வண்டி வந்தது. அதில் மூன்றும் வகுப்பு வண்டி ஒன்றில் நான் ஏற்றப்பட்டேன். போலீசாரும் உடன் வந்தனர். மதுரை சேர்ந்ததும் என்னைப் போலீஸ் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் அடுத்தாற்போல் என்னை எங்கே கொண்டுபோகப் போகிறார்கள், என்ன செய்யப்போகிறார்கள் என்பதாகப் போலீஸ் உத்தியோகஸ்தர் எவரும் எனக்குத் தெரிவிக்கக்கூடவில்லை. மறுநாள் அதிகாலையில் என்னை எழுப்பி பம்பாய்க்குப்போய்க்கொண்டிருந்த ஒரு சாமான் வண்டியில் ஏற்றினார்கள். உச்சிப் பொழுதில் மாதோப்பூர் ஸ்டேஷனில் மீண்டும் வண்டியி லிருந்து இறக்கப்பட்டேன். லாகூரிலிருந்து மெயில் வண்டியில் வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பௌரிங் இப்போது என்னைத் தம் வசம் ஏற்றுக்கொண்டார். அவருடன் முதல் வகுப்பு வண்டியில் ஏற்றப்பட்டேன். இவ்வாறு சாதாரணக் கைதியிலிருந்து பெரிய மனிதக் கைதி

யானேன். அவ் வுத்தியோகஸ்தர் ஸர் மைக்கேல் ஓட்விய ரின் புகழைப் பாடத் தொடங்கினர். ஸர் மைக்கேலுக்கு என் மீது எவ்வித விரோத பாவமும் கிடையாதென்றும், நான் பஞ்சாபுக்கு வந்தால் அமைதிக்குப் பங்கம் விளையு மென அஞ்சுவதே தடை யுத்திரவுக்குக் காரணமென்றும், இன்னும் பலவாருகவும் அவர் பேசினர். முடிவில் என்னைத் தானுகவே பம்பாய்க்குத் திரும்பி விடும்படியும் பஞ்சாப் எல்லைக்குள் வராமலிருக்க ஒப்புக்கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார். நான் அவ்வுத்திரவுக்கு இணங்க இயலா திருப்பதாகவும், நானுகத் திரும்பிப் போகச் சித்தமாயில்லை யென்றும் பதில் அளித்தேன். அதன்மேல் அவ்வுத்தி யோகஸ்தருக்கு வேறு வழி இல்லாமற் போகவே என் மீது சட்டத்தைப் பிரயோகித்தே ஆகவேண்டுமென்று தெரிவித் தார். என்னை என்னதான் செய்யப்போகிறீர்கள் என்று கேட்டேன். அது தமக்கும் தெரியாதென்றும், மேல் உத்திரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும் அவர் பதிலளித்தார். "தற்போதைக்கு உங்களைப் பம்பாய்க்கு அழைத்துச் செல்லுகிறேன்" என்ருர்.

இவ்வாறு நாங்கள் சூரத்துக்குப் போய்ச்சேர்ந்தோம். இங்கே வேருெரு போலீஸ் உத்தியோகஸ்தரிடம் நான் ஒப்புவிக்கப் பட்டேன். பம்பாய் போய்ச் சேர்ந்ததும் "நீங்கள் இப்போது சுயேச்சை அடைந்து விட்டீர்கள்" என்று அவர் தெரிவித்து, "ஆனல் மேரின் லையன் ஸ்டேஷ னுக் கருகில் நீங்கள் இறங்கிவிட்டால் நலம். உங்களுக்காக வண்டியை நிறுத்தச் சொல்கிறேன். கொலாபாவில் பெருங் கூட்டம் கூடியிருக்கக்கூடும்" என்ருர். அவர் விருப்பத் தின்படி செய்ய எனக்கு மிகவும் சந்தோஷந்தான் என்று

சொன்னேன். இதனால் அவர் மகிழ்ச்சியடைந்து எனக்கு வந்தனங் கூறினார். அவ்வாறே மேரின் லயன் ஸ்டேஷனில் நான் இறங்கினேன். நண்பர் ஒருவரின் வண்டி அந்தப் பக்கம் போய்க்கொண்டிருந்தது. அவ்வண்டியிலேறி ரேவா சங்கர ஜாவேரியின் வீட்டில் என்னை விடும்படி சொன்னேன். நான் கைதி செய்யப்பட்ட செய்தி ஜனங்களுக்குப் பெருங்கோப மூட்டி அவர்களை வெறி கொண்டவர்களாகச் செய்திருக்கிறதென்று அந்நண்பர் தெரிவித்தார். "பைதோனிக்கருகில் ஒவ்வொரு நிமிஷமும் கலக முண்டாகலாமென்று எதிர் பார்க்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாஜிஸ்டிரேட்டும், போலீஸாரும் அங்கு இதற்குள்ளாகவே போய்விட்டார்" என்று அவர் சொன்னார்.

நான் ரேவா சங்கரின் வீட்டை யடைந்த தட்சணமே, உமார் சோபானியும், அநுசூயாபாயும் அங்குவந்து என்னை உடனே பைதோனிக்கு வருமாறு கேட்டுக்கொண்டார்கள். "ஜனங்கள் பொறுமை யிழந்து பெரிதும் பரபரப் படைந்திருக்கிறார்கள். எங்களால் அவர்களைச் சமாதானப்படுத்த முடியவில்லை. நீங்கள் நேரில் வந்தால் மட்டுமே அது முடியும்" என்று அவர்கள் கூறினார்கள்.

உடனே மறுபடியும் வண்டியில் ஏறினேன். பைதோனிக் கருகில் பெருங்கூட்டம் சேர்ந்திருப்பதைக்கண்டேன். என்னைக் கண்டதும் ஜனங்கள் மகிழ்ச்சிப் பெருக்கினால் பைத்தியங் கொண்டவர்களானார்கள். உடனே அவர்கள் ஓர் ஊர்வலமாகி என்னைப் பின்தொடர்ந்தார்கள். "வந்தே மாதரம்" "அல்லாஹோ அக்பர்" என்ற கோஷங்கள் ஆகாயத்தை அளாவின. பைதோனியில் குதிரைப் போலீஸ் படை யொன்றைக் கண்டோம். மேலிருந்து

கற்கள் சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்தன. அமைதியாயிருக்கும்படி கூட்டத்தை வேண்டிக்கொண்டேன். ஆனுல் அந்தக் கல்மாரியிலிருந்து தப்பமுடியாதென்றே தோன்றிற்று. ஊர்வலம் அப்துல் ரஹமான் வீதியைத்தாண்டி, கிராபோர்டு மார்க்கெட் பக்கம் போகத் திரும்பியபோது, திடீரென்று குதிரைப் போலீஸ் படையொன்று எதிர்ப்பட்டது. ஊர்வலம் மேலே கோட்டைப் பக்கம் போகாமல் தடுப்பதற்காகக் குதிரைப் போலீஸார் வந்திருந்தனர். ஜனக்கூட்டமோ மிக நெருக்கமாயிருந்தது. ஆகவே போலீஸ் படையைப் பிளந்துகொண்டு கூட்டம் மேலே செல்லத் தொடங்கி விட்டது. அப் பிரமாண்டமான கூட்டத்தில் என்னுடைய குரல் கேட்பதே இயலாத காரியம். இத்தகைய நிலைமையில், குதிரைப்படைக்குத் தலைமை வகித்த உத்தியோகஸ்தர், கூட்டத்தைக் கலைக்கும்படி தம்முடைய வீரர்களுக்கு உத்திரவிட்டார். அவ்வளவுதான்! குதிரைவீரர்கள் தங்களுடைய ஈட்டிகளை வீசிக்கொண்டு கூட்டத்தில் புகுந்தார்கள். ஒரு நிமிஷம் நானும் காய மடைவேன் என்று தோன்றியது. ஆனுல் அப்படி நடக்கவில்லை. ஈட்டிகள் எங்கள் மோட்டார் வண்டியை உராய்ந்ததுடன் நாங்கள் தப்பினேம். அவ் வீரர்கள் அதிவேகமாய் எங்களைத் தாண்டிச் சென்ருர்கள். பொதுக் கூட்டம் சின்னுபின்னமாயிற்று. ஜனங்கள் ஓரே குழப்பத்திற்குள்ளாயினர். பின்னர் ஓடத் தொடங்கினுர்கள். சிலர் காலடியினுல் மிதிபட்டார்கள். வேறு சிலர் உடம்பெல்லாம் காய மடைந்தனர். சிலர் நசுக்கப்பட்டனர். எள் விழுவதற்கும் இடமில்லாமல் நெருங்கிய அப்பெருங் கூட்டத்தில், குதிரைகள் போவதற்கு இடமே கிடையாது. ஜனங்கள் கலைந்து போவதற்கு வழியும் இல்லை. ஆதலின் குதிரை வீரர்கள் குருட்டுத்தனமாகக் கூட்டத்திற்குள் புகுந்து

இடித்து மிதித்துக்கொண்டு சென்றார்கள். அவர்கள் செய்த தென்னவென்று அவர்களுக்கே தெரியுமென என்னால் கருத முடியவில்லை. மொத்தத்தில், அது ஒரு பயங்கரக் காட்சியா யிருந்தது.

இவ்வாறு கூட்டம் கலைக்கப்பட்டது அது முன்னேறு வது தடுக்கப்பட்டது. எங்கள் மோட்டாரை மட்டும் போக விட்டார்கள். நான் வண்டியைப் போலீஸ் கமிஷனர் ஆபீஸுக்கு முன்னால் நிற்கச் செய்தேன். போலீஸ் செய் கையைப்பற்றி அவரிடம் புகார் செய்யவிரும்பினேன்.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

மறக்கொணுச் சம்பவங்கள்—II

கமிஷனர் மிஸ்டர் கிரிப்பித்தின் காரியாலயத்துக்குச் சென்றேன். காரியாலயம் மாடி மீதிருந்தது. மாடிக் குச் செல்லும் படிகளில், போர் வீரர்கள் ஆயுதபாணிக ளாய் நிற்பதைக் கண்டேன். தாழ்வாரத்திலும் கூட்ட மதிகமா யிருந்தது. காரியாலயத்தின் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டு உட்சென்றேன். மிஸ்டர் கிரிப்பித்துக் குப் பக்கத்தில் மிஸ்டர் பௌரிங் அமர்ந்திருந்தார்.

நான் கண்ட காட்சிகளைக் கமிஷனருக்கு எடுத்துக் கூறினேன். அவர் சுருக்கமாகப் பதிலளித்ததாவது:— "ஊர்வலம் கோட்டைக்குச் செல்வதை நான் விரும்ப வில்லை. அங்கே போனால் நிச்சயமாய்க் கலவரம் நிகழ்ந் திருக்கும். வெறுமனே சொன்னால் ஜனங்கள் கேட்க

மாட்டார்கள் என்று கண்டேன். ஆதலின் கூட்டத்தைத் தாக்கும்படி குதிரைப் போலீஸுக்கு உத்திரவிடுதல் அவசிய மாயிற்று."

"ஆனால் அதன் பலன் என்னவாகுமென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! குதிரைகள் ஜனங்களை மிதியாமல் கூட்டத்தில் புகுந்து எப்படிச் செல்ல முடியும்? குதிரைப் போலீஸாரை அனுப்பியது முற்றும் அநாவசியம்" என்று நான் சொன்னேன்.

"அதை நிர்ணயிக்க வேண்டியவர் நீங்களல்ல. ஜனங்களுக்கு நீங்கள் செய்யும் போதனையினால் என்ன நேரிடுமென்பதை உங்களைவிட, போலீஸ் உத்தியோகஸ்தர்களாகிய நாங்கள் நன்றாக அறிவோம். ஆரம்பத்திலேயே கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக் கொள்ளாவிட்டால், நிலைமை மீறிப்போய்விடும். ஜனங்கள் உங்களுடைய கட்டுக்கு அடங்காமல் போய்விடுவார்களென்று உங்களுக்கு நிச்சயமாய்ச் சொல்வேன். சட்டத்துக்குக் கீழ்ப்படியாமை என்பது அவர்களுக்கு எளிதில் புலனாகிவிடும். ஆனால் அமைதிகாக்கும் கடமையை அவர்களால் உணர முடியாது. உங்களுடைய நோக்கங்கள் நல்லவை யென்பதைப்பற்றி எனக்குச் சந்தேகமேயில்லை. ஆனால் ஜனங்கள் அவற்றை அறிந்துகொள்ள மாட்டார்கள். அவர்கள் தங்கள் மனம் போன வழியேதான் நடப்பார்கள்" என்று மிஸ்டர் கிரிப்பித் கூறினார்.

"இங்கேதான் நீங்கள் சொல்வதை நான் மறுக்கிறேன். ஜனங்கள் இயற்கையில் பலாத்காரத்தை விரும்புவோரல்லர். அமைதியே அவர்கள் இயல்பாகும்" என்று நான் பதிலளித்தேன்.

இவ்வாறு நீண்ட நேரம் விவாதித்தோம். கடைசியாக மிஸ்டர் கிரிப்பித் கேட்டதாவது :— "ஜனங்கள் உங்களுடைய போதனையை ஏற்றுக் கொள்ளவில்லை யென்று நீங்கள் உறுதி பெற்றால், அப்போது என்ன செய்வீர்கள்?"

"அவ்வுறுதி பெற்றால் உடனே சட்ட மறுப்பை நிறுத்தி விடுவேன்."

"உண்மையாகவா? விடுதலை செய்த தக்ஷணமே, பஞ்சாபுக்குப் போவேனென்று மிஸ்டர் பௌரிங்கிடம் சொன்னீர்களே?"

"ஆம்; அடுத்த வண்டியில் புறப்படத்தான் எண்ணி யிருந்தேன். ஆனால் இன்று அது இயலாத காரியம்."

"கொஞ்சம் பொறுமையுட னிருந்தால் ஜனங்களுக்கு உங்கள் போதனை ஏறவில்லை யென்று நீங்களே நிச்சயம் பெறுவீர்கள். ஆமதாபாத்தில் இப்பொழுது என்ன நடக்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா? அமிர்தசரஸில் என்ன நடந்திருக்கிறது என்று தெரியுமா? எங்கே பார்த் தாலும் ஜனங்கள் வெறிகொண்டு விட்டார்கள். உண்மை யில் எல்லா விவரங்களும் இன்னும் எனக்கே வந்து சேர வில்லை. தந்திக் கம்பிகள் சிலவிடங்களில் அறுக்கப்பட்டிருக் கின்றன. இந்தக் கலவரங்களுக் கெல்லாம் பொறுப்பு உங் களையே சாருமென்று நான் ஏன் சொல்லக் கூடாது?"

"அவ்வாறு நான் கண்டால் அப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் சிறிதும் தயங்கமாட்டேன். இது நிச்சயம். ஆமதாபாத்தில் கலவரங்கள் நிகழ்ந்திருப்பது உண்மை

யென்று தெரிந்தால் எனக்கு மிக்க மனத்துயரமும் வியப்பும் உண்டாகும். அமிர்தசரஸில் என்ன நிகழுமென்று நான் எதுவும் சொல்வதற்கில்லை. நான் அவ்விடத்துக்குப் போனதே கிடையாது. அங்கே எவருக்கும் என்னைத் தெரியவும் தெரியாது. ஆனால் பஞ்சாபைப் பொறுத்த வரையிலுங்கூட நான் ஒன்று நிச்சயமாய்ச் சொல்லமுடியும். பஞ்சாப் அரசாங்கம் நான் அங்கே செல்வதைத் தடுத்திராவிட்டால், அமைதி காப்பதற்கு நான் பெரிதும் உதவி செய்திருப்பேன். என்னைத் தடுத்ததனால், அவர்கள் ஜனங்களுக்கு அநாவசியமாகக் கோபமூட்டினார்கள்."

இவ்வாறு நாங்கள் நெடுநேரம் வாதமிட்டோம். நாங்கள் இருவரும் ஒத்துப்போவது இயலாத காரியமாயிருந்தது. சௌபாத்தி கடற்கரையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேச உத்தேசித்திருப்பதாகவும், ஜனங்களுக்கு அமைதி காக்கும்படி சொல்லப் போவதாகவும் அவரிடம் கூறி விடைபெற்றுக் கொண்டேன். அவ்வாறே சௌபாத்தி கடற்கரையில் கூட்டம் நடந்தது. சத்தியாக் கிரஹத்தின் நிபந்தனைகளைப் பற்றியும் அஹிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டிய கடமையைப் பற்றியும் விரிவாகப் பேசினேன். "சத்தியாக்கிரஹம் உண்மையாளருக்கே உரிய ஆயுதமாகும். சத்தியாக்கிரஹி அஹிம்சையைக் கடைப் பிடிப்பதாகப் பிரதிக்ஞை செய்திருக்கிறான். ஜனங்கள் மனோவாக்குக் காயங்களினால் அஹிம்ஸா தர்மத்தை அநுஷ்டியாத வரையில் நான் பொதுஜன சத்தியாக்கிரஹம் நடத்த முடியாது" என்று அவர்களுக்குச் சொன்னேன்.

ஆமதாபாத்தில் கலவரங்கள் நிகழ்ந்ததாக அநுசூயா பாய்க்கும் செய்தி கிடைத்திருந்தது. அவரும் பம்பாயில்

கைது செய்யப்பட்டதாக ஆமதாபாத்தில் யாரோ வதந்தி கிளப்பி விட்டிருந்தார்கள். இச் செய்தியினால் ஆலைத் தொழிலாளர்கள் வெறிகொண்டு வேலை நிறுத்தம் செய்து பலாத்காரச் செயல்கள் நிகழ்த்தினார்கள். ஒரு சார்ஜண்டு அடித்துக் கொல்லப்பட்டார்.

நான் ஆமதாபாத்துச் சென்றேன். நதியாத் ரயில்வே ஸ்டேஷனுக்கருகில் ரயில் தண்டவாளங்களைப் பெயர்க்க முயற்சி செய்யப்பட்டதாகவும், வீரம்காமில் ஓர் அரசாங்க உத்தியோகஸ்தர் கொலை செய்யப்பட்ட தாகவும், ஆமதாபாத்தில் இராணுவச் சட்டம் அமுலுக்கு வந்திருப்பதாகவும் அறிந்தேன். ஜனங்கள் பயப்பிராந்தி கொண்டிருந்தார்கள் அவர்கள் பலாத்காரச் செயல் புரிந்ததற்கு வட்டியுடன் சேர்த்துப் பழிக்குப் பழி வாங்கப்பட்டு வந்தது.

ஸ்டேஷனில் காத்துக்கொண்டிருந்த ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர், கமிஷனர் மிஷ்டர் பிராட்டிடம் என்னை அழைத்துப் போனார். அவர் கோபத்தினால் துடிதுடித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவரிடம் சாந்தமாகப் பேசிக் கலவரங்கள் நிகழ்ந்து விட்டதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்தேன். இராணுவச் சட்ட அமுல் அநாவசியமென்னும் என் கருத்தைத் தெரிவித்தேன். அமைதி நிலைநாட்டுவதற்காகச் செய்யப்படும் எல்லா முயற்சிகளிலும் ஒத்துழைக்கத் தயாரா யிருப்பதாய்ச் சொன்னேன். சபர்மதி ஆசிரம மைதானத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடத்த அநுமதியும் கேட்டேன். இந்த யோசனை அவருக்குப் பிடித்திருந்தது. ஏப்ரல் மாதம் 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று கூட்டம் நடந்ததாக எனக்கு ஞாபகம். அன்றைய தினமோ, மறுநாளோ

இராணுவச் சட்ட அமுல் நீக்கப்பட்டது. கூட்டத்தில் ஜனங்களுக்கு அவர்களுடைய தவறை உணர்த்த முயன்றேன். அவர்களுடைய பலாத்காரச் செயல்களுக்குப் பிராயச் சித்தமாக மூன்று நாள் நான் உண்ணுவிரதம் கொள்ளப் போவதாய்த் தெரிவித்தேன். ஜனங்களேயும் ஒருநாள் விரதம் அநுஷ்டிக்கும்படி வேண்டிக்கொண்டேன். பலாத்காரக் குற்றம் செய்தவர்கள் முன் வந்து தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கூறினேன்.

என்னுடைய கடமை எனக்கு மிகத் தெளிவாயிருந்தது. ஆமதாபாத் தொழிலாளர்களிடையே நான் அதிக காலம் செலவிட்டிருக்கிறேன். அவர்களுக்கு ஊழியம் செய்திருக்கிறேன். அவர்களிடம் உயர் நடக்கையை நான் எதிர் பார்த்தேன். அத்தகையவர்கள் கலவரங்களில் கலந்து கொண்டது என்னுல் பொறுக்க முடியாததாயிற்று. அவர்களுடைய குற்றத்தில் எனக்கும் பங்கு உண்டென்று கருதினேன்.

குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி ஜனங்களுக்குப் புத்திமதி கூறியது போலவே அக்குற்றங்களே மன்னித்து விடும்படி அரசாங்கத்துக்கும் யோசனே சொன்னேன். இருவரும் என் பேச்சுக்குச் செவி சாய்க்கவில்லே.

காலஞ் சென்ற ஸர் ரமா பாயும், ஆமதாபாத் நகரவாசிகள் மற்றுஞ் சிலரும் என்னிடம் வந்து சத்தியாக்கிரஹத்தை நிறுத்தி வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். இவ்வேண்டுகோளுக்கு அவசியமே கிடையாது. ஏனெனில் ஜனங்கள் அஹிம்சா தர்மத்தை நன்குணரும் வரையில் சத்தியாக்கிரஹத்தை நிறுத்திவைப்பதென்று நான் முன்னமே

முடிவு செய்துவிட்டேன். அந்நண்பர்கள் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றார்கள்.

ஆனால் இம் முடிவினால் மனவருத்தமுற்ற வேறு சிலரு மிருந்தார்கள். எங்கெங்கும் அமைதி குடி கொண்டிருக்க வேண்டுமென நான் எதிர் பார்த்தால், சத்தியாக்கிரஹம் தொடங்குவதற்கு அதை ஒரு நிபந்தனையாக ஏற்படுத்தினால் பொதுஜன சத்தியாக்கிரஹம் என்றுமே சாத்தியமில்லை யென அவர்கள் கருதினார்கள். அவர்களுடன் கருத்து வேற்றுமை கொள்ள எனக்கு வருத்தமாகவே யிருந்தது. நான் எவரிடையே வேலை செய்து வந்தேனோ, எவர் அஹிம்ஸை யைக் காப்பதற்கும் துன்பஞ் சகிப்பதற்கும் சித்தமா யிருப் பார்களென்று எதிர் பார்த்தேனோ, அவர்களே பலாத்காரத் தைக் கைக்கொண்டார்க ளென்றால், சத்தியாக்கிரஹம் நிச் சயமாய் அசாத்தியமேயாகும். ஜனங்களை சத்தியாக்கிரஹ இயக்கத்தில் நடத்த விரும்புவோர், அதற்கு இன்றியமை யாத அளவிலேனும், அவர்களை அஹிம்ஸை எல்லைக்குள் வைக்க ஆற்றலுள்ளவர்களா யிருக்கவேண்டுமென்று நான் உறுதியான அபிப்பிராயங் கொண்டிருந்தேன். இன்றளவும் நான் அக்கருத்தே கொண்டுள்ளேன்.

முப்பத்து மூன்றும் அத்தியாயம்

"இமாலயத் தவறு"

ஆமதாபாத் கூட்டம் முடிந்தவுடனே நதியாத் துக்குச் சென்றேன். இங்கே தான் முதன் முதலில் 'இமாலயத் தவறு' என்னும் சொற்றொடரை உப யோகித்தேன். பின்னால் இச் சொற்றொடர் தேசத்திலே

மிகப் பிரபலமாயிற்று. ஆமதாபாத்திலிருந்த போதே என் தவறினை ஒருவாறு உணரத் தொடங்கி யிருந்தேன். ஆனால் நதியாத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமையைப் பார்த்த துடன் கேதா ஜில்லாவில் ஏராளமான ஜனங்கள் கைது செய்யப்பட் டிருப்பதாகவும் கேள்விப்பட்டபோது நான் செய்த பெருந் தவறு எனக்குச் சட்டென்று தெளிவாயிற்று கேதா ஜில்லாவிலும் மற்றவிடங்களிலு முள்ள ஜனங்களை உரியகாலத்துக்கு முன்பே சட்ட மறுப்பு இயக்கத்தை மேற் கொள்ளும்படி சொல்லி விட்டதாய்இப்போது அறிய லானேன். அங்கு நடந்த பொதுக் கூட்டத்தில் என் கருத்தை வெளியிட்டேன். இவ்வாறு என் தவறை ஒப்புக் கொண்டதால் பலராலும் எள்ளி நகையாடப்பட்டேன். எனினும் அவ்வாறு என் தவறை ஒப்புக்கொண்டதற்காக, நான் எப்போதும் வருந்தியது கிடையாது. ஒருவன் தன்னு டைய தவறுகளை மிகைப்படுத்தியும் பிறருடைய தவறுகளைச் சிறிதாக்கியும் பார்க்கப் பயின்றால் மட்டுமே இரண்டையும் நியாயமாக மதிப்பிடக் கூடுமென்பது என் கொள்கை யாகும். சத்தியாக்கிரஹியாய் ஆக விரும்பும் ஒருவன் இவ் விதியை மனப்பூர்வமாகவும் சிறிதும் பிறழாமலும் அநு சரித்து வருதல் அவசியமென்று நான் கருதுகிறேன்.

அந்த இமாலயத் தவறு யாதென்று இப்போது பார்ப் போம். ஒருவன் சாத்வீகச் சட்டமறுப்புக்குத் தகுதி பெறு வதற்கு முன்னால், இராஜாங்கச் சட்டங்களுக்கு விருப்பத் துடனும், மரியாதையுடனும் பணிந்து நடந்திருக்க வேண் டும். பெரும்பாலும் நாம் தண்டனை பயத்தை முன்னிட்டே சட்டங்களுக்குப் பணிந்து நடக்கிறோம். அதிலும் ஒழுக்க நெறியின்பாற் பட்டன வல்லாத சட்டங்களின் விஷயத்தில் இது பெரிதும் உண்மையாகும். உதாரணமாக கண்ணிய

மும் மரியாதையுமுள்ள ஒரு மனிதன் திருடுதல் கூடாது என்னும் சட்டமில்லாமற் போயினும் உடனே திருட்டுத் தொழிலை மேற்கொள்ள மாட்டான். ஆனால் இவனே இருட்டிய பின்னர் பைசைகிள் வண்டிகளில் விளக்குப் போட வேண்டு மென்னும் விதியைப் புறக்கணிப்பதில் சிறிதும் தயங்குவதில்லை. இவ்விஷயத்தில் இனிமேல் ஜாக்கிரதையாயிருக்கும்படி புத்திமதி சொன்னால் அது குறித்துக் கோபங் கொள்ளாமல் இருப்பானாவென்பதை சந்தேகத்துக் கிடம். ஆனால் இந்த விதி கட்டாயமாகச் செய்யப்பட்டால் அதை மீறுவதால் விளையக்கூடிய அசௌகரியங்களை முன்னிட்டேனும் அதற்குப் பணிந்து நடப்பான். இதை மனப்பூர்வமான கீழ்ப்படிதல் என்று சொல்ல முடியாது. சத்தியாக்கிரஹியோ வெனில், சட்டங்களுக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிதல் வேண்டும். கட்டாயத்திற்காக வன்றித் தன்னுடைய சொந்த மனோ விருப்பத்தினால். பரிசுத்தமான கடமையென்று கருதி அவன் சமூகத்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறான்.

இவ்வாறு ஒருவன் சமூகச் சட்டங்களுக்குச் சிறிதும் பிறழாமல் பணிந்து நடக்கப் பயின்ற பின்னரே, எந்தச் சட்டங்கள் நல்லவை, நியாயமானவை, எவை அதர்மமான, அநியாயச் சட்டங்கள் என்பதை நிர்ணயிக்கத் தகுதி பெறுகிறான். அப்போது தான் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் சிற்சில சட்டங்களை மறுக்கவும் அவனுக்கு உரிமை ஏற்படுகிறது. இந்த இன்றியமையாத நிபந்தனையைக் கவனியாது விட்டதுதான் என்னுடைய தவறாகும். ஜனங்கள் இம்முறையில் தங்களைத் தகுதி செய்துகொள்வதற்கு முன்னால் அவர்களைச் சட்டமறுப்புத்

தொடங்கும்படி நான் கேட்டுக்கொண்டு விட்டேன். என்னுடைய இத்தவறு இமயமலைபோல் பெரியதாய் எனக்குக் காணப்பட்டது. நான் கேதா ஜில்லாவில் பிரவேசித்தவுடன் கேதா சத்தியாக்கிரஹப் போராட்டத்தின் பழைய ஞாபகங்களெல்லாம் திரும்பிவரவே, இவ்வளவு தெளிவான விஷயத்தை நான் உணராமல் போனது எங்ஙனமென்று வியப்புற்றேன். ஜனங்கள் சாத்விகச் சட்டமறுப்புச் செய்யத் தகுதி பெறுவதற்கு முன்னால் அதன் ஆழ்ந்த உட்பொருள்களைப் பூரணமாய் உணர்ந்து கொள்ளவேண்டிய அவசியமென இப்போது நன்கறிந்தேன்.

ஆனால் ஒரு கேள்வி நியாயமாகக் கேட்கலாம். அடிக்கடி சட்டங்களை மீறி நடப்பதையே வழக்கமாகக் கொண்ட ஜனங்கள் சட்டமறுப்பின் தத்துவம் முழுவதையும் திடீரென்று அறிந்துகொள்வதோ, அதன் எல்லைக்குள் கண்டிப்பாக நிற்பதோ எப்படிச் சாத்தியமாகும் என்று வினவலாம். ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான ஜனங்கள் மேற்கூறிய நிபந்தனைக ளெல்லாவற்றையும் ஒப்புக் கொள்ளுதல் அருமைதான். ஆதலின் ஜனத்திரள் சட்டமறுப்பை மீண்டும் தொடங்குவதற்கு முன்னால் நன்கு பயிற்சி பெற்றவர்களும் தூயஇதயமுள்ளவர்களும் சத்தியாக்கிரஹ நிபந்தனைகளைப் பூரணமா யறிந்தவர்களுமான தொண்டர் கூட்டமொன்றை அமைத்தல் அவசியமாகும். அவர்கள் ஜனங்களுக்கு இந்நிபந்தனைகளை விளக்கிக் கூறி இடைவிடாத எச்சரிக்கையுடனிருந்து அவர்களை நேர் வழியில் நடத்தக்கூடும்.

இத்தகைய எண்ணங்கள் நிரம்பிய உள்ளத்துடன் நான் பம்பாய் சேர்ந்தேன். அங்கே யிருந்த சத்தியாக்கிரஹ

சபையின் மூலமாய் சத்தியாக்கிரஹத் தொண்டர் படை ஒன்றை அமைத்தேன். அவர்களுடைய உதவி கொண்டு ஜனங்களுக்கு சத்தியாக்கிரஹத்தின் உட்பொருளை உணர்த்தும் வேலை தொடங்கினேன். இவ்விஷயமாகத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவதன் மூலமாகவே, இவ்வேலை பெரிதும் நடந்து வந்தது. ஒரு புறத்தில் இம்முயற்சி நடந்துகொண்டிருக்கையில் ஜனங்களுக்கு சத்தியாக்கிரஹத்தின் சமாதான வேலைத் திட்டத்தில் சிரத்தை யுண்டாக்குவது கஷ்டமென்பதை நான் தெளிவாக அறியக் கூடியதா யிருந்தது. தொண்டர்கள் பெருந்தொகையாகப் பதிவு செய்துகொள்ள முன் வரவில்லை. பதிவு செய்து கொண்டவர்களிலும் எல்லாரும் ஒழுங்காகப் பயிற்சி பெறுவதற்கு வரவில்லை, நாளாக ஆக, புதிய தொண்டர்கள் அதிகமாய் வருவதற்குப் பதிலாக உள்ளவர்களும் கலைந்து போகத் தொடங்கினர். சாத்வீக சட்டமறுப்புப் பயிற்சி நான் முதலில் எதிர்பார்த்ததுபோல அவ்வளவு விரைவாக அபிவிருத்தி யடையாதென்பதை நன்கறிந்தேன்.

முப்பத்து நான்காம் அத்தியாயம்

'நவ ஜீவன்' 'யங் இந்தியா'

இவ்வாறு அஹிம்ஸா தர்மத்தைப் பாது காப்பதற்கான முயற்சி நிதானமாக அபிவிருத்தி யடைந்துகொண்டிருக்கையில், அரசாங்கத்தார் சட்டங்களைக் காற்றில்பறக்க விட்டு அடக்கு முறையைப் பலமாகக் கையாண்டுவந்தனர். இவ்வடக்குமுறை பஞ்சாபில் தன் பூரண தோற்றத்துடன் தாண்டவ மாடிற்று தலைவர்கள் கைது செய்யப்

பட்டார்கள் இராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தது. அதாவது சட்டமென்பதே இல்லாமல் போயிற்று, விசேஷ நீதி மன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவை உண்மையில் நீதி வழங்கும் மன்றங்கள் அல்ல. ஓர் யதேச்சாதிகாரியின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் கருவிகளாகவே இருந்தன. நீதி முறைமைக்கும் முற்றும் மாறாக, சாட்சியத்துடன் சற்றும் பொருந்தாத கொடுந் தண்டனைகள் விதிக்கப்பட்டன. அமிர்தசர்ஸில் குற்றமற்ற ஆடவரும் பெண்டிரும் புழுக்களைப் போல் வயிற்றினால் ஊர்ந்து செல்லும்படி செய்யப்பட்டார்கள். இந்தக் கொடுமைக்கு முன்னால், ஜாலியன் வாலாபாக் படுகொலையும் பிரமாதமில்லையென்று எனக்குத் தோன்றிற்று. எனினும் இந்திய ஜனங்களின் கவனத்தையும் உலகின் கவனத்தையும் பெரிதும் கவர்ந்தது இந்தப் படுகொலையே யாகும்.

பலாபலன்களைக் கவனியாமல் பஞ்சாபுக்கு உடனே புறப்பட்டுச் செல்லும்படி நான் வற்புறுத்தப் பட்டேன். அங்கே போக அநுமதிவேண்டி இராஜப் பிரதிநிதிக்குக் கடிதம் எழுதினேன்; தந்தியு மடித்தேன்; ஒன்றும் பயனில்லை. அவ்வநுமதியின்றி நான் புறப்பட்டுச் சென்றால் பஞ்சாபின் எல்லையைத் தாண்டுவதற்கு என்னை விடப் போவதில்லை. சட்டமறுப்புச் செய்வதுடன் நான் திருப்தியடைய வேண்டியதுதான். ஆதலின் இந் நிலைமையில் என்ன செய்வதென்பது ஒரு பெரிய பிரச்னையாயிற்று. இது என்னைத் திகைப்படையச் செய்து விட்டது. அத்தருணத்தில் நான் பஞ்சாபில் பிரவேசிக்கக் கூடாதென்னும் தடை உத்திரவை மறுத்தால், அதை 'சாத்வீக மறுப்பென்றே சொல்வதற்கில்லையென்று எனக்குத் தோன்றிற்று ஏனெனில் சாத்வீக சட்டமறுப்புக்கு வேண்டிய அமைதி

அப்போது நாட்டில் குடிகொண்டிருக்கவில்லை. பஞ்சாபில் தலை விரித்தாடிய அடக்கு முறையினால் ஜனங்களின் கோபம் இன்னும் அதிகமாகிக் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்தது. இத்தகைய சமயத்தில் சட்டமறுப்புச் செய்தல் தீயில் எண்ணெய் ஊற்றுவதாகுமென்று எண்ணினேன். ஆதலின் நண்பர்கள் எனக்குக் கூறிய யோசனைக்கு மாறாக, பஞ்சாபுக்குப் போகவேண்டாமென்றே தீர்மானித்தேன். இத்தகைய தீர்மானம் செய்யவேண்டி யிருந்தது எனக்கு அளவில்லாத துன்ப மளித்தது. பஞ்சாபில் நிகழ்ந்த கொடுமைகளையும், அநீதிகளையும்பற்றிய செய்திகள் தினந்தோறும் வந்து கொண்டே யிருந்தன. ஆனால் நானோ கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து பல்லைக் கடிப்பதைத் தவிர, வேறெதுவும் செய்ய இயலாதவனா யிருந்தேன்.

அப்போது "பம்பாய் கிராணிக"லை மகாபலம் பொருந்திய பத்திரிகையாக்கி யிருந்த ஸ்ரீ ஹார்னிமனைத் திடீரென்று அதிகாரிகள் பிடித்து வெளியேற்றினார்கள். அரசாங்கத்தின் இச்செயல் இழிவிலும் இழிவானதாக எனக்குத் தோன்றிற்று. அதை நினைத்தால் இன்றைக்கும் எனக்கு அருவருப்பா யிருக்கிறது. ஸ்ரீ ஹார்னிமன் சட்ட விரோதமான கலவரத்தை விரும்பவில்லை யென்பது எனக்குத் தெரியும். சத்தியாக்கிரஹக் கமிட்டியின் அநுமதியின்றி நான் பஞ்சாப் அரசாங்கத்தின் தடை யுத்திரவை மீறியது அவருக்குப் பிடிக்கவில்லை. சட்ட மறுப்பை நிறுத்திவைக்கும் யோசனையை அவர் முழுதும் ஆதரித்திருந்தார். சட்ட மறுப்பை நிறுத்தி வைப்பதென்னும் என் தீர்மானத்தை வெளியிடுவதற்கு முன்பே அவர் அப்படிச் செய்ய வேண்டுமென்பதாக ஒரு கடிதம் எழுதி யிருந்தார்.

ஆனால் அவர் பம்பாயிலும் நான் ஆமதாபாத்திலும் இருந்த படியால் நான் என் முடிவை வெளியிட்ட பின்னரே அக் கடிதம் கிடைத்தது. எனவே அவர் திடீரென்று நாடு கடத் தப்பட்டது எனக்கு மிக்க துன்பமும் வியப்பும் அளித்தது.

இந் நிகழ்ச்சிகளின் பயனாக, "பம்பாய் கிரானிகல்" பத்திரிகையின் நிர்வாகிகள் என்னை அப்பத்திரிகை நடத்தும் பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ஜனப் பிரெல்வி ஏற்கனவே உதவி ஆசிரியராயிருந்தார். ஆதலின் நான் செய்யவேண்டியது அதிகம் இருக்கவில்லை. எனினும் ஒரு வேலையை ஏற்றுக்கொண்டால் அதில் முழுதும் ஈடுபடுவது என் வழக்கமாதலால் இந்தப் பொறுப்பு என்னுடைய சிரமத்தை அதிகமாக்கிற்று.

அரசாங்கத்தார் விரைவிலேயே என்னுடைய சிர மத்தைப் போக்க முன் வந்தனர். அவர்களுடைய நடவடிக்கையினால் "பம்பாய் கிரானிகல்" பத்திரிகையை நிறுத்த வேண்டியதாயிற்று.

"கிரானிகல்" நிர்வாகத்தை நடத்திவந்த நண்பர்களான ஜனப் உமார் சோபானியும், ஸ்ரீமான் சங்கர்லால் பாங்கரும் இத் தருணத்தில் "யங் இந்தியா" வையும் நிர்வகித்து வந்தார்கள். "கிரானிகல்" அடக்கப்பட்டு விட்டபடியால் நான் "யங் இந்தியா" ஆசிரியர் பதவியை ஏற்க வேண்டு மென்றும், அதை வாரம் இருமுறைப் பத்திரிகை யாக்கி நடத்த வேண்டுமென்றும் யோசனை சொன்னார்கள். நானும் இத்தகைய உணர்ச்சி கொண்டிருந்தேன். சத்தியாக்கிரஹத் தின் உட்கருத்தைப் பொது ஜனங்களுக்கு விளக்கிக் கூறவேண்டுமென்று எனக்கு ஆவல் இருந்தது. இம்முயற்சி

யின் மூலமாகப் பஞ்சாப் நிலைமையைக் குறித்தும் ஓரளவு என்னுடைய கடமையைச் செய்யலாமென்று எண்ணினேன். நான் என்ன எழுதினாலும் அதன் முடிவான பயன் சத்தியாக்கிரஹமேயாகும். அரசாங்கத்துக்கும் இது தெரிந்தே யிருந்தது. எனவே, இந் நண்பர்கள் கூறிய யோசனையை உடனே ஏற்றுக்கொண்டேன்.

ஆனால் ஆங்கில பாஷையின் மூலமாகப் பொது ஜனங்களுக்கு சத்தியாக்கிரஹப் பயிற்சி எவ்வா றளிக்க முடியும்? நான் முக்கியமாக வேலை செய்தற்குரிய இடம் குஜராத்தேயாகும். ஜனப் சோபானி, ஸ்ரீமான் பாங்கர் இவர்களுடன் ஸ்ரீ இந்துலால் யாக்னிக் என்பாரும் அப்போது தொடர்புள்ளவரா யிருந்தார். இவர் "நவஜீவன்" என்னும் குஜராத்தி மாதப் பத்திரிகையை அப்போது நடத்திவந்தார். மேற்கூறிய நண்பர்களே இதற்கும் பொருளுதவி செய்து வந்தார்கள். இம்மாதப் பத்திரிகையையும் அவர்கள் என் வசங் கொடுத்தார்கள். ஸ்ரீ இந்துலால் யாக்னிக் என்பாரும் அதில் வேலை செய்ய இசைந்தார். மாதப்பத்திரிகை வார இதழாக மாற்றப்பட்டது.

இதற்கிடையில் "கிரானிகல்" புத்துயிர் பெற்றது எனவே "யங் இந்தியா" பழையபடி வாரப் பத்திரிகையாக்கப்பட்டது. இரண்டு வாரப் பத்திரிகைகளை இரண்டிடங்களில் நடத்தல் எனக்கு மிகவும் அசௌகரியமாயிருக்குமென் றெண்ணினேன். மேலும் அதிகபணச்செலவுக்கும் இடமாகும். "நவ ஜீவன்" ஏற்கனவே ஆமதாபாத்தில் தான் நடந்து வந்தது. எனவே, என் யோசனையின்படி "யங் இந்தியா" வும் அவ் விடத்துக்கு மாற்றப்பட்டது.

இம் மாறுதலுக்கு வேறு காரணங்களும் இருந்தன. "இண்டியன் ஒபீனியன்" என்ற பத்திரிகை நடத்தியதில் நான் பெற்ற அநுபவத்திலிருந்து இத்தகைய பத்திரிகைகளுக்குச் சொந்த அச்சுக்கூடம் வேண்டுமென்று அறிந்திருந்தேன். மேலும் அப்போது இந்தியாவில் அமுலிலிருந்த அச்சுக்கூடங்கள் மிகக் கடுமையானவை எனவே, என் உள்ளக் கருத்துக்களை உள்ளபடி வெளியிடவேண்டுமானல், லாபத்தைக் கருதி நடக்கும் அச்சுக்கூடங்கள் அவற்றை அச்சடிக்கத் தயங்குதல் இயல்பேயாகும். எனவே, சொந்த அச்சுக்கூடம் ஒன்று ஏற்படுத்துவது அத்தியாவசியமாயிற்று. சொந்த அச்சுக்கூடம் நடத்த ஆமதாபாத்திலேயே அதிக சௌகரியம் உண்டாதலால் "யங் இந்தியா"வையும் அங்கே கொண்டுபோக வேண்டியிருந்தது.

இந்தப் பத்திரிகைகளின் மூலமாய்ப் பொது ஜனங்களுக்கு சத்தியாக்கிரஹ தத்துவங்களை என்னுலியன்றவளவு போதிக்கும் வேலையைத் தொடங்கினேன். இவ்விரு பத்திரிகைகளும் மிகவும் ஏராளமான சந்தா நேயர்களை யடைந்தன. ஒரு சமயம் ஏறக்குறைய 40,000 சந்தாதாரர் வரையில் ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஏற்பட்டார்கள். ஆனல் "நவ ஜீவன்" நேயர்கள் ஒரே யடியாகப் பெருக, "யங் இந்தியா" வர்சகர்கள் நிதானமாகவே பெருகி வந்தார்கள். நான் சிறைப்பட்ட பின்னர் இவ்விரு பத்திரிகைகளுக்கும் சந்தாதாரர் மிகவும் குறைந்துவிட்டனர். தற்போது எட்டாயிரம் சந்தாதாரர்களுக்கும் குறைவாகவேயிருக்கிறார்கள்.

முதலிலிருந்தே இப் பத்திரிகைகளில் விளம்பரம் ஏற்றுக்கொள்ள நான் மறுத்து விட்டேன். அதனல்

அவை நஷ்டம் எதுவும் அடைந்ததாக நான் கருதவில்லை. அதற்கு மாறாக, அவற்றின் சுதந்திரம் பாதுகாக்கப் படுவதற்கு மேற்படி தீர்மானம் பெரிதும் துணை செய்தது என்பது என் நம்பிக்கை.

நான் மன அமைதி பெறுவதற்கும் இப்பத்திரிகைகள் ஓரளவு எனக்கு உதவி செய்தன. எவ்வாறெனில், உடனே சட்டமறுப்புத் தொடங்குதல் இயலாதிருந்த நிலையில், என்னுடைய கருத்துக்களைத் தாராளமாக வெளியிடவும் ஜனங்களுக்கு உற்சாகமூண்டு பண்ணவும் அவை சாதனங்களாயிருந்தன. இவ்வாறு இந்தச் சோதனை காலத்தில் இவ்விரு பத்திரிகைகளும் ஜனங்களுக்குச் சிறந்த ஊழியம் செய்தன என்பது என் அபிப்பிராயமாகும். இராணுவச் சட்டத்தின் கொடுமையைத் தணிப்பதற்கு அவை தங்களாலியன்ற அளவில் உதவி செய்தன வென்றும் நான் கருதுகிறேன்.

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

பஞ்சாபில்

பஞ்சாபில் நிகழ்ந்தவைகளுக் கெல்லாம் நானே பொறுப்பாளி யென்று ஸர் மைக்கேல் ஓட்வியர் கருதினர். ஆத்திரமுள்ள சில பஞ்சாப் இளைஞர்களோ இராணுவச் சட்டத்துக்கு என்னைப் பொறுப்பாளியாகக் கொண்டார்கள். நான் சட்டமறுப்பை நிறுத்தி விராவிட்டால் ஜாலியன்வாலாபாக் படுகொலை நிகழ்ந்திரா தென்று அவர்கள் சொன்னார்கள். நான் பஞ்சாப்புக்கு வந்தால் என்னைக் கொலை செய்து போடுவதாகக் கூட அவர்கள் அச்சுறுத்தினர்கள்.

ஆனால் நான் கடைப்பிடித்த வழி மிக நேரியதென்றும் ஆட்சேபத்துக் கிடமற்ற தென்றும் நான் கருதினேன். அறிவுடையவர் எவரும் என் செயலைப் பிழைபடக்கொள்ள முடியாதென்றும் நம்பினேன்.

பஞ்சாப்புக்கு செல்ல வேண்டுமென்று பரபரப்புக் கொண்டேன். இதற்கு முன் நான் அம்மாகாணத்துக்குப் போனதே கிடையாது. அதனால் நேரில் சென்று நிலைமை யைக் கவனிக்கவேண்டு மென்னும் ஆவல் மிகுதியாயிற்று. என்னைப் பஞ்சாப்புக் கழைத்திருந்த டாக்டர் சத்தியபால், டாக்டர் கிச்லு, பண்டித ராம்போஜ் தத்தர் ஆகியவர்கள் இப்போது சிறைக்கூடத்தில் வதிந்தார்கள். ஆனால் அரசாங் கத்தார் அவர்களையும் மற்றவர்களையும் அதிக காலம் சிறை யில் வைத்திருக்கத் துணிய மாட்டார்கள் என்று நான் எண்ணினேன். நான் பம்பாயிலிருந்த போதெல்லாம் பஞ்சாபியர் ஏராளமாக வந்து என்னைப்பார்ப்பது வழக்கமா யிருந்து வந்தது. இச்சந்தர்ப்பங்களில் நான் கூறிய தேறு தல் மொழிகள் அவர்களுக்கு ஆறுதல் தந்து வந்தன. அக் காலத்தில் என்னிடமிருந்த தன்னம்பிக்கை, அருகில் வருவோரை யெல்லாம் தொற்றிக் கொள்வதா யிருந்தது.

ஆனால் நான் பஞ்சாப்புக்குச் செல்லும் பிரயாணத்தை அடிக்கடி தள்ளிப்போட வேண்டியதாயிற்று நான் அங்கே போவதற்கு அநுமதி கேட்ட ஒவ்வொரு முறையும் இராஜப் பிரதிநிதி "பொறுங்கள்" என்றே சொல்லி வந்தார். இவ்வாறே நாட்கள் கழிந்து வந்தன.

இதற்கிடையில், இராணுவச் சட்டத்தின் கீழ் பஞ்சாப் அரசாங்கம் புரிந்த செயல்களைக் குறித்து விசாரணை செய்ய

ஹண்டர் கமிட்டி நியமிக்கப்பட்டது. ஸ்ரீ சி. எப். ஆண்ட்ரூஸ் அங்கே சென்றிருந்தார். அங்குள்ள நிலைமையைக் குறித்து அவர் எழுதிய கடிதங்கள் நெஞ்சத்தைப் பிளப்பனவா யிருந்தன. அக் கடிதங்களிலிருந்து, இராணுவச் சட்டக் கொடுமைகள் பத்திரிகைகளில் வெளியான விவரங்களைக் காட்டிலும் மிகுதியானவை யென்று எனக்குத் தோன்றிற்று. அவர் என்னை உடனே புறப்பட்டு வரும்படி வலியுறுத்தி எழுதினார். அதே சமயத்தில் உடனே பஞ்சாப்புக்குச் செல்லும்படியாக மாளவியாஜி எனக்குத் தந்திமேல் தந்தியனுப்பினார். மீண்டு மொருமுறை நான் இராஜப்பிரதிநிதிக்குத் தந்திச் செய்தி யனுப்பி, இப்போதேனும் நான் பஞ்சாப்புக்குப் போகலாமாவென்று கேட்டேன். குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் நான் அங்கே போகலாமென்று பதில் தந்தி கிடைத்தது. அக்டோபர் 17வ-யை அவர் குறிப்பிட்டதாக நினைக்கிறேன். ஆனால் திட்டமாக ஞாபகமில்லை.

நான் லாகூருக்கு வந்ததும் கண்ட காட்சியை என்றும் மறவேன். ரயில்வே நிலையத்தில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரையில் எள் விழவும் இடமின்றி ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். நீண்ட நாள் பிரிந்திருந்த அருமை உறவினர் ஒருவரைக் காண்பதற்குப் புறப்படுவது போல அத்தியந்த ஆவலுடன் நகரவாசிகள் அனைவரும் வீட்டை விட்டுக் கிளம்பியிருந்தார்கள். அளவு கடந்த மகிழ்ச்சியினால் அவர்கள் தலைகால் தெரியாதவர்க ளானார்கள். காலஞ் சென்ற பண்டித ராம்போஜ தத்தரின் பங்களாவில் நான் தங்கினேன். என்னை விருந்தினனாக ஏற்று உபசரிக்கும் பொறுப்பு ஸ்ரீமதி சாரளாதேவிக்கு ஏற்பட்டது. உண்மையிலேயே அது பெரியதொரு பாரமே

யாகும். ஏனெனில் அக்காலத்திலிருந்தே நான் தங்கும் இடம் பெரிய சத்திரமாகி வரலாயிற்று.

பஞ்சாப்பின் பிரபல தலைவர்கள் அப்போது சிறையி லிருந்தபடியால் அவர்களுடைய ஸ்தானத்தைப் பண்டித மாளவியா, பண்டித மோதிலால், சுவாமி சிரத்தானந்தர் முதலியோர் வகித்திருந்தார்கள். இது மிகவும் பொருத்தமே யாகுமென்று நான் கருதினேன். மாளவியாவையும், சிரத் தானந்தரையும் முன்னமே நான் நன்கறிவேன். ஆனால் முதன் முதலாக இப்போதுதான் மோதிலால்ஜியுடன் நெருங்கிப் பழகினேன். இவர்களும், சிறை செல்லும் பாக்கி யம் பெறாத மற்றப் பஞ்சாப் தலைவர்களும் என்னிடம் மிக்க விசுவாசம் காட்டியபடியால் அவர்கள் மத்தியில் 'அன்னி யன்" என்னும் உணர்ச்சியே எனக்கு உண்டாகவில்லை.

ஹண்டர் கமிட்டியின் முன்பு சாட்சியம் விடுவதில்லை யென்று நாங்கள் ஒருமுகமாக முடிவு செய்தது இப்போது சரித்திரப் பிரசித்தியான விஷயமாகி விட்டது. அம் முடிவுக் குரிய காரணங்கள் அக்காலத்தில் வெளியிடப் பட்டன வாதலின் இங்கே திருப்பிக் கூறவேண்டுவதில்லை. இத்தனை காலத்திற்குப் பின்னர் அந்நிகழ்ச்சிகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்போதும், மேற்படி கமிட்டியை நாங்கள் பகிஷ் கரிக்கத் தீர்மானித்ததும், அதற்குரிய காரணங்களும் முற் றும் சரியானவை யென்றே எனக்குத் தோன்றுகிறது.

ஹண்டர் கமிட்டியைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்து விடவே, உத்தியோகப் பற்றில்லாத விசாரணை நடத்துதல் இன்றியமையாததாயிற்று. எனவே, காங்கிரஸின் சார்பாக ஒரு விசாரணைக் கமிட்டி நியமிக்கத் தீர்மானிக்கப் பட்டது. பண்டித மோதிலால் நேரு, தேசபந்து தாஸ், அப்பாஸ்

தயாப்ஜி, எம். ஆர். ஜயக்கர் ஆகியவர்களும் நானும் கமிட்டி அங்கத்தினர்களானோம். எங்களை நியமனம் செய்தவர் பண்டித மாளவியாஜியே என்று சொல்லிவிடலாம். விசாரணை செய்வதற்காக நாங்கள் பற்பல இடங்களுக்குப் பிரிந்து சென்றோம். கமிட்டியின் வேலைத் திட்டத்தை அமைக்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. மிகப் பெரும்பாலான இடங்களில் விசாரணை நடத்தும் உரிமையும் எனக்கே கிடைத்தபடியால், பஞ்சாப் ஜனங்களையும், பஞ்சாப் கிராமங்களையும் நெருங்கிப் பழகி அறிந்துகொள்வதற்கு அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இவ் விசாரணையின் போது, பஞ்சாப் பெண்களுடனும் நான் பழக்கம் செய்துகொள்ள நேர்ந்தது. எத்தனையோ காலமாக ஒருவரை யொருவர் நன்கறிந்தவர்களைப் போல், நாங்கள் பழகினோம். நான் எங்கே சென்றாலும் அவர்கள் கூட்டங் கூட்டமாக வந்து என் முன் இராட்டின நூலைக் குவித்தார்கள். இவ்விசாரணையின்போது நான் செய்த வேலையின் காரணமாக, பஞ்சாப்பில் கதர் வேலைக்கு ஏராளமாக இடமுண்டென்று அறிந்து கொண்டேன்.

ஜனங்களுக் கிழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி விசாரணை செய்யச் செய்ய, நான் சற்றும் எதிர்பாராத அளவில் அரசாங்கத்தின் கொடுங்கோன்மையைப் பற்றியும், அதிகாரிகளின் யதேச்சாதிகாரச் செயல்களைப் பற்றியும் விவரங்கள் வெளியாகின, அவை எனக்கு அளித்த துயரத்துக்கு அளவில்லை. யுத்தத்தின்போது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு மிகுதியான போர்வீரர்களை யளித்த ஒரு மாகாணம் இவ்வளவு மிருகத்தனமான கொடுமைகளையும் எப்படித் தலை குனிந்து பொறுத்திருந்தது என்பது

எனக்குப் பேராச்சரியம் அளித்தது. இப்போதும் அதை யெண்ணும்போது எனக்கு வியப்புண்டாகியே வருகிறது.

இந்தக் கமிட்டியின் அறிக்கையை எழுதும் வேலை என்னிடமே ஒப்படைக்கப்பட்டது. பஞ்சாப் ஜனங்களுக்கு அக்காலத்தில் இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புவோர் அவ்வறிக்கையைப் படித்துப் பார்ப்பார்களாக. அந்த அறிக்கையில் வேண்டுமென்று ஓரிடத்தில் கூட மிகைப்படுத்திக் கூறவில்லை யென்றும், அதில் சொல்லப்பட்ட ஒவ்வொன்றுக்கும் ஆதாரமான சாட்சியம் உண்டென்றும் மட்டுமே இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கமிட்டியின் வசத்தில் கிடைத்த சாட்சியங்களில் ஒரு சிறு பகுதியே பிரசுரிக்கப் பட்டது. ஆதாரத்தைப்பற்றிச் சிறிதேனும் சந்தேகமுள்ள ஒரு வாக்கியமேனும் அவ்வறிக்கையில் சேர்வதற்கு நாங்கள் இடங் கொடுக்கவில்லை. உண்மையை - கலப்பற்ற உண்மையை - வெளிப்படுத்த வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் அது தயாரிக்கப் பட்டதாகும். அவ்வறிக்கையை படித்தால் பிரிட்டிஷ் அரசாங்கம் தன் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக எவ்வளவு தூரம் வரையில் போகுமென்பது தெரிய வரும். எவ்வளவு ஜீவகாருண்யமற்ற, அநாகரிகக் கொடுமைகளையும் கையாள அவர்கள் பின்வாங்க மாட்டார்க ளென்பதை நன்கு அறிந்துகொள்ளலாம். எனக்குத் தெரிந்த வரையில் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள ஒரு விஷயமாவது இதுகாறும் தவறென்பதாக நிரூபிக்கப்படவில்லை.

முப்பத்தாறும் அத்தியாயம்

கிலாபத்தும் பசுப் பாதுகாப்பும்

பஞ்சாப்பில் நிகழ்ந்த கொடுமைகளைச் சற்றே இத்துடன் நிறுத்தி வேறு விஷயமொன்றை நாம் கவனிக்க வேண்டும்.

பஞ்சாப்பில் டையர் ஆட்சி முறையைக் குறித்த காங்கிரஸ் விசாரணை தொடங்கிச் சில நாளைக்கெல்லாம், டில்லியில் கிலாபத் சம்பந்தமாக ஆலோசிப்பதற்குக் கூடவிருந்த ஹிந்து முஸ்லிம்களின் கலப்பு மகாநாட்டுக்கு வருமாறு பொது அழைப்புக் கடிதம் ஒன்று எனக்குக் கிடைத்தது. அதில் கையொப்ப மிட்டிருந்தோரில் காலஞ் சென்ற ஹக்கீம் அஜ்மல்கானும், ஜனப் ஆஸப் அலியும் இருந்தனர். சுவாமி சிரத்தானந்தர் இம்மகாநாட்டுக்கு வருவார் என்று கூறப்பட்டிருந்தது. அவர் மகாநாட்டின் உப அக்கிராசனரா யிருப்பாரென்று சொல்லப்பட்ட தாகவும் எனக்கு ஞாபக மிருக்கிறது. மகாநாடு அவ்வருஷம் நவம்பர் மாதத்தில் கூட விருந்தது. மகாநாட்டில் கிலாபத் விஷயம் மட்டுமன்றி பசுப்பாதுகாப்பு விஷயம் ஆலோசிக்கப் படுமென்றும், எனவே பசு வதை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வர இது மிகச் சிறந்த சந்தர்ப்ப மாகுமென்றும் அவ்வழைப்புக் கடிதம் கூறிற்று. இதில் பசு விஷயத்தைக் குறிப்பிட்டிருந்தது எனக்குப் பிடிக்கவில்லை. ஆகவின், அழைப்புக் கடிதத்துக்கு நான் எழுதிய பதிலில், மகாநாட்டுக்கு வர என்னா லியன்ற வரை முயல்வேனென்று கூறிவிட்டு, இவ்விரண்டு விஷயத்தையும் பிணைக்கக் கூடாதென்றும், ஒன்றுக் கொன்று பதிலாகப் பேரம் பேசக்கூடாதென்றும், அவற்றைத் தனித்

தனியே கவனித்து முடிவு செய்ய வேண்டுமென்றும் கூறி யிருந்தேன்.

இவ் வெண்ணங்களுடனேயே மகாநாட்டுக்குச் சென்றேன். பிற்காலத்தில் நடந்த பதினாயிரக் கணக்கான ஜனங்கள் அடங்கிய மகாநாடுகள்போல் இல்லாவிடினும் அக்கூட்டம் பெரியதாகவே யிருந்தது. மகா நாட்டில் பிரசன்னமாகி யிருந்த சுவாமி சிரத்தானந்தரிடம் மேற்கண்ட விஷயத்தைக் குறித்துப் பேசினேன். அவர் என்னுடைய வாதத்தின் நியாயத்தை ஒப்புக்கொண்டு மகாநாட்டின் முன்பு அதை எடுத்துக் கூறும் வேலையை எனக்கே யளித்தார். ஹக்கீம் சாகிபுவினிடம் இவ்விஷயமாகப் பேசினேன். பின்னர் மகாநாட்டில் நான் பேசியதின் சாரமாவது:—"கிலாபத் கிளர்ச்சி நியாயமான கிளர்ச்சி யென்பதாக நான் நம்புகிறேன். அது வுண்மையானல்-அரசாங்கத்தார் உண்மையிலேயே ஒரு பெரும் அநீதி செய்திருந்தால்-அவ்வநீதியை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று முஸ்லீம்கள் கோருவதைத் தாங்கி நிற்க ஹிந்துக்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக பசுப் பிரச்னையைக் கிளப்புவதோ, முஸ்லீம்களுடன் பேரம் பேசுவதோ ஹிந்துக்களுக்கு அழகல்ல. அது போலவே கிலாபத் கோரிக்கையை ஹிந்துக்கள் ஆதரிப்பதற்குப் பதிலாக முஸ்லீம்கள் பசு வதையை நிறுத்துவதாகச் சொல்வதும் தகுதியாகாது. ஆனல் முஸ்லீம்கள் ஹிந்துக்களின் சமய வுணர்ச்சிக்கு மதிப்பளித்து, ஒரே தாய் நாட்டில் பிறந்த சகோதரர்களுக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய கடமையாகக் கருதி, தங்கள் சொந்த மன விருப்பத்தினல் பசு வதையை நிறுத்தும் பட்சத்தில் அது போற்றற் குரியதாகும். அதுவே அவர்களுக்குப் பெருமை தருவதாகும்.

"கிலாபத் விஷயத்தைத் தனிப்படக் கவனித்து உரியன செய்தல் நமது கடமை. அதுவே நமக்குக் கௌரவம். முஸ்லீம்கள் பசு வதையை நிறுத்துதல் தங்கள் சகோதரர்களுக்குத் தாங்கள் செலுத்தவேண்டிய கடமையென்று கருதினால், ஹிந்துக்கள் கிலாபத் விஷயத்தில் உதவி செய்தாலும், செய்யாவிடினும் அக்கடமையை அவர்கள் நிறைவேற்ற வேண்டும். என்வே இவ்விரண்டு விஷயங்களையும் தனித் தனியே ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டுமாதலின் இந்த மகாநாட்டில் கிலாபத் பிரச்னை மட்டுமே ஆலோசிக்கப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

மகாநாட்டில் கூடியிருந்தவர்களுக்கு என்னுடைய வாதம் சரியென்று பட்டபடியால், பசுப் பாதுகாப்பு விஷயம் ஆலோசிக்கப்படவில்லை. ஆனால் இந்திய மகா நாடுகளில் முஸ்லீம்கள் அடிக்கடி இதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கிலாபத் விஷயத்தில் ஹிந்துக்களின் உதவிக்கு நன்றியறிதலாகப் பசு வதையை நிறுத்த வேண்டியகடமையைப் பற்றி அவர்கள் பேசினார்கள். அவர்கள் உண்மையிலேயே பசு வதையை நிறுத்தி விடுவார்களென்று கூட ஒரு சமயம் தோன்றிற்று.

மௌலானா ஹஸ்ரத் மோகினி இக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தார். அவரை முன்னமே எனக்குத் தெரியுமாயினும் இம் மகாநாட்டில்தான் அவருடைய போர்த்திறமையை நான் அறிந்து கொண்டேன். ஆரம்பத்திலேயே நாங்கள் இருவரும் கருத்து வேற்றுமை கொண்டோம். சில விஷயங்களில் அக்கருத்து வேற்றுமை இன்னமும் இருந்து வருகிறது.

இம் மகாநாட்டில் நிறைவேறிய பல தீர்மானங்களில் ஒன்று, ஹிந்து முஸ்லீம்களைச் சுதேசி விரதம் ஏற்று அன்னியசாமான் பகிஷ்காரம் செய்யும்படி கேட்டுக் கொண்டது. (அப்போது கதர் இன்னும் தேசியத் திட்டம் ஆகியிருக்கவில்லை.) ஹஸரத் மோகினிக்கு இத்தீர்மானம் பிடிக்கவில்லை. கிலாபத் விஷயத்தில் நியாயம் பிறக்கா விட்டால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை பழி வாங்கவேண்டு மென்பது அவருடைய நோக்கம். எனவே, அனுஷ்டான சாத்தியமாயுள்ளவரையில் பிரிட்டிஷ் சாமான்களை மட்டும் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று அவர் மாற்றுத் தீர்மானம் கொண்டு வந்தார். இதை நான் எதிர்த்தேன். அதன் கொள்கையே தவறானதென்றும், காரிய சாத்தியமும் அன்றென்றும் நான் சொன்னேன். இது சம்பந்தமான என்னுடைய வாதங்கள் இப்போது எல்லாரும் நன்கறிந்தவையாகி விட்டன. அஹிம்ஸா தர்மத்தைப்பற்றி என்னுடைய கருத்தையும் விளக்கிக் கூறினேன். என்னுடைய வாதங்கள் கூட்டத்தினரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தனவென்பதை கண்டேன். எனக்கு முன்னால் ஹஸரத் மோகினி பேசியபோது கூட்டத்தினர் பலமான கரகோஷம் செய்து ஆரவாரித்ததைப் பார்த்திருந்தேன். ஆதலின் என்னுடைய பேச்சு ஏறப்போவதில்லை யென்று பயந்தேன். என்னுடைய கருத்தைத் தெரிவியாதிருத்தல் கடமையினின்று பிறழ்வதாகும். என்று எண்ணியதனால் மட்டுமே பேசத்துணிந்தேன். ஆனால் நான் எண்ணியதற்கு மாறாக, கூட்டத்தினர் என் பேச்சுக்குக் கவனமாகச் செவி கொடுத்ததுடன், மேடைமீதிருந்த தலைவர்கள் பலரின் ஆதரவும் எனக்குக் கிடைத்தது. இவை எனக்கு வியப்பும் திருப்தியும் அளித்தன. ஒருவர் பின் ஒருவராய்ப் பலர் எழுந்து என் கொள்கையை ஆதரித்துப் பேசினார்கள். பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரம் நிறை

வேறு தென்பதோடு, அத்தீர்மானம் செய்வதால் உலகின ரால் எள்ளி நகையாடப்படுவதற்கும் உரியவர்களாவோம் என்பதைத் தலைவர்கள் கண்டார்கள். அந்தக் கூட்டத்தில் பிரிட்டிஷ் சாமான் ஏதேனும் ஒன்று தம் உடம்பின்மீது இல்லாதவர் ஒருவர்கூட இல்லை. எனவே கூட்டத்தில் பெரும்பான்மையோர் தங்களாலேயே நிறைவேற்ற முடியாததான ஒரு தீர்மானத்தைச் செய்வதால் கெடுதலே விளையுமென்பதை நன்கு கண்டார்கள்.

“வெறும் அன்னியத் துணி பகிஷ்காரத்தினால் மட்டும் நாம் திருப்தி யடைய முடியாது. நமது தேவைக்கு வேண்டிய சுதேசித் துணி முழுதும் நாமே உற்பத்தி செய்து கொண்டு அன்னியத்துணியை அடியோடு பகிஷ்கரிக்க எத்தனை காலம் ஆகுமோ; யாருக்குத் தெரியும்? பிரிட்டிஷாரை உடனே பாதிக்கக்கூடிய ஏதேனுமொன்று வேண்டும். அன்னியத் துணி பகிஷ்காரமும் இருக்கட்டும். அதைப் பற்றி எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் அதைவிட துரிதமான திட்டமொன்றும் தாருங்கள்” என்றார் ஹஸரத் மோகினி.

அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தபோதே அன்னியத் துணி பகிஷ்காரத்துக்கு மேலாகப் புதியதொரு வேலைத் திட்டம் அவசியமென்று உணரலானேன். அன்னியத் துணி பகிஷ்காரத்தை உடனே பூரணமாய் நிறைவேற்றி வைப்பது அசாத்தியமென்றும் எனக்குத் தோன்றிற்று. நாம் விரும்பினால் இராட்டையின் மூலம் நமக்குத் தேவையான அளவு துணி உற்பத்தி செய்து விடலா மென்பதை அப்போது நான் அறியேன். இதைப் பின்னால் தான் கண்டு பிடித்தேன். மற்றும், அன்னியத் துணி பகிஷ்காரத்துக்கு

நாம் ஆலைகளை மட்டும் நம்பியிருந்தால் மோசம் போவோ மென்றும் அப்போதே எனக்குத்தெரிந்திருந்தது. இத்தகைய இயக்கத்தில் நான் ஆழ்ந்திருக்கையிலேயே மௌலானா தமது பேச்சை முடித்து உட்கார்ந்தார்.

நான் பேசுவதற்கு ஹிந்தி அல்லது உருது மொழியில் தக்க வார்த்தைகள் அகப்படாமலிருந்தது ஒரு பெரும் இடையூறாயிருந்தது. வடநாட்டு முஸ்லீம்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் விவாதத்துக்குரிய ஒரு விஷயத்தைப் பற்றி நான் பேச நேர்ந்தது இதுவே முதல் தடவையாகும். ஏற்கனவே கல்கத்தா முஸ்லீம் லீக் சபையில் நான் உருதுவில் பேசியதுண்டு. ஆனால் அது சில நிமிஷ நேரந்தான். மேலும் சபையினருக்கு உருக்கமான வேண்டுகோள் ஒன்று விடுப்பதே அந்தப் பேச்சின் நோக்கம். அதற்கு மாறாக இங்கே என் கட்சியை எடுத்துச் சொல்லி ஆதரவு தேடவேண்டியிருந்தது. கூட்டத்திலிருந்தவர்களோ முற்றும் விரோதப் பான்மை யுள்ளவர்க ளல்லவாயினும், குற்றங் கண்டு பிடிக்கக் கூடியவர்கள். ஆனால் நான் சங்கோசம் என்பதை முன்னமே விட்டொழித்திருந்தேன். தில்லி முஸ்லீம்களுக்குக் குற்றமற்ற, நாகரிக உருது மொழியில் பிரசங்கம் செய்ய நான் வந்தவனல்லன். எனவே, எனக்குத் தெரிந்த அரை குறைவான ஹிந்தியில் என் கருத்தைக் கூட்டத்துக்குத் தெரிவிப்பதே சரியெனக் கருதினேன். இதில் வெற்றியும் அடைந்தேன். ஹிந்தி அல்லது உருது பாஷையே இந்தியாவின் பொது மொழியாகக்கூடுமென்பதை இக் கூட்டம் எனக்கு நன்கு நிரூபித்தது. நான் ஆங்கிலத்தில் பேசியிருந்தால் சபையினருடைய மனதை அவ்வளவு தூரம் கவர்ந்திருக்க முடியாது. மௌலானாவும் மேற் குறிப்பிட்டவாறு தீவிர வேலைத் திட்டம் வேண்டுமென்று கூறியிருக்க

மாட்டார். அப்படிச் சொல்லி யிருந்தாலும் அதை நான் பெரிதாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டேன்.

என்னுடைய புதிய கருத்தைத் தெரிவிப்பதற்குத் தகுந்ததொரு ஹிந்தி அல்லது உருது வார்த்தை எனக்கு அகப்படவில்லை. முதலில் இது எனக்குப் பெரிதும் தொல்லை தந்தது. கடைசியாக, "நான்-கோ ஆபரேஷன்" (ஒத்துழை யாமை) என்னும் வார்த்தையினால் அதை வெளியிட்டேன். இந்தக் கூட்டத்திலேயே முதன் முதலாக இப்பதத்தை உப யோகித்தேன். மௌலானா பேசிக்கொண் டிருக்கும்போதே எனக்கு ஓர் எண்ணம் உதயமாயிற்று. பலவிதத்திலும் அவர் அரசாங்கத்துடன் ஒத்துழைத்துக் கொண்டிருக்கையில் அதைப் பலமாக எதிர்த்து நிற்பது குறித்து அவர் பேசுவ தில் என்ன பயன்? ஆயுதப்போர் அசாத்திய மென்றால், அல்லது விரும்பத்தக்க தல்லவென்றால், ஒத்துழைப்பதை நிறுத்துவ தொன்றே உண்மையான எதிர்ப்பாகுமென்று எனக்குத் தோன்றிற்று. "ஒத்துழையாமை" என்னும் வார்த்தை இவ்வாறு தான் எழுந்தது. "ஒத்துழையாமை" என்பதில் அடங்கிய கருத்துக்கள் எல்லாவற்றையும் பற்றி அப்போது நான் தெளிவாகச் சிந்தித்தவனல்லன். எனவே அதன் விவரங்களில் நான் பிரவேசிக்கவில்லை. இக் கூட்டத் தில் ஒத்துழையாமையைக் குறித்து ஒரு தீர்மானம் நிறை வேறியதாக எனக்கு ஞாபக மிருக்கிறது, ஆனால் அவ்வெண் ணம் முதிர்ச்சி பெறுவதற்கு இன்னும் சில மாதங்கள் சென்றன. சில மாதகாலம் இம் மகாநாட்டின் நடவடிக் கைக் குறிப்புப் புத்தகத்தில் அது புதைந்து கிடந்தது.

முப்பத்தேழாம் அத்தியாயம்

அமிருதஸரஸ் காங்கிரஸ்

நூற்றுக்கணக்கான பஞ்சாப்பியரை, பஞ்சாப் அரசாங்கம் நீண்ட காலம் சிறையில் வைத்திருக்க முடியவில்லை. இவர்களெல்லாம் இராணுவச் சட்ட அமுல் நடந்தபோது மிக அற்பமான சாட்சியங்களை ஆதாரமாகக் கொண்டு, பெயரளவில் நீதிமன்றங்களாயிருந்த விசேஷ சபைகளால் தண்டிக்கப்பட்டவர்கள். இந்த மகத்தான அநீதியைக் குறித்து எங்கே பார்த்தாலும் பலமான கண்டனங்கள் எழுந்தபடியால் அவர்களை இனிமேலும் சிறையில் வைத்திருப்பது இயலாத காரியமாயிற்று. காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கு முன்பே கைதிகளில் பலர் விடுதலை செய்யப்பட்டனர். காங்கிரஸ் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது லாலா ஹரிகிருஷ்ணலாலும் பாக்கியுள்ள எல்லாத் தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். அலி சகோதரர்களும் சிறையிலிருந்து நேரே அங்கு வந்து சேர்ந்தார்கள். ஜனங்களின் மகிழ்ச்சி எல்லையற்றதாயிற்று. ஏராளமான வருவாயுள்ள தமது தொழிலைவிட்டுப் பஞ்சாப்புக்கு வந்து அங்கேயே தங்கி அரிய தொண்டியற்றிய பண்டித மோதிலால் நேரு காங்கிரஸிற்கு அக்கிராசனம் வகித்தார். காலஞ்சென்ற சுவாமி சிரத்தானந்தர் உபசரணைக்கூட்டத் தலைவராயிருந்தார்.

இதுவரையில் காங்கிரஸ் நடவடிக்கைகளில் நான் மிகவும் சொற்பமாகவும் ஈடுபட்டிருந்தேன். ஹிந்தி மொழியில் பேசுவதின் மூலம் அப்பாஷையை ஆதரிப்ப

தற்கும், வெளி நாட்டிலுள்ள இந்தியர்களின் குறைகளை எடுத்துச் சொல்வதற்கும் மேலாகக் காங்கிரஸ் நடவடிக்கைகளில் நான் கலந்து கொண்டதில்லை. இவ்வருஷமும் அவ்வளவிற்கு மேல் கலந்துகொள்ள நேரிடுமென்று எதிர் பார்த்தேனில்லை, ஆனால் இதற்கு முன் பல சந்தர்ப்பங்களில் நேரிட்டிருப்பது போல, இப்போதும் பொறுப்புள்ள வேலை திடீரென்று என்னைத் தேடி வந்தது.

புதிய சீர்திருத்தங்களைக் குறித்து அரசரின் அறிக்கை அப்போதுதான் வெளியிடப்பட்டிருந்தது. அது எனக்கு முற்றும் திருப்தி யளிக்கவில்லை. மற்றவர்களுக்கும் அவ்வாறே. ஆனால் சீர்திருத்தம் குறைவுள்ளதாயினும் அதை ஒப்புக்கொள்ளலாமென்று அச்சமயம் நான் எண்ணினேன். அரசரின் திருமுகத்தில் லார்டு ஸின்ஹாவின் கைவேலை காணப்பட்டதாக எனக்குத் தோன்றியது. அவ்வறிக்கையின் உள்ளுறை சிறிதளவு நம்பிக்கைக்கு இடந் தந்தது. ஆனால் காலஞ்சென்ற லோகமான்யர், தேசபந்து தாஸ் முதலிய தீரர்கள் இதற்கு மாறான கருத்துக் கொண்டிருந்தார்கள். பண்டித மாளவியா நடு நிலைமை வகித்தார்.

மாளவியாஜி தமது சொந்த அறையிலேயே எனக்கு இடந் தந்திருந்தார். ஹிந்து சர்வகலாசாலையின் அஸ்திவார விழாவின்போது அவருடைய எளிய வாழ்வைப்பற்றிச் சிறிதளவு தெரிந்துகொண்டிருந்தேன். ஆனால் இப்போது அவருடன் ஒரே அறையிலிருந்தபடியால் அவருடைய தினசரி வாழ்க்கைமுறையை மிக நுட்பமாகக் கவனிக்க முடிந்தது. நான் பார்த்தவை எனக்கு மகிழ்ச்சியும் வியப்பு மளித்தன. ஏழைகளெல்லாரும் வரக்கூடிய தர்ம சத்திரத்தைப்போல் அவர் அறை காணப்பட்டது. கூட்டம்

நிறைந்திருந்தபடியால் அவ்வறையில் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குப் போவதும் கஷ்டமாயிருந்தது. எந்த நேரத்திலும் எவரும் அவ்வறைக்குள் வரலாம். தாங்கள் விரும்பும் வரையில் அவருடன் பேசிக்கொண்டிருக்கலாம். இந்த அறையின் ஒரு மூலையில் என்னுடைய கட்டில் மிகவும் கம்பீரமாகக் கிடந்தது.

ஆனால் மாளவியாஜியின் வாழ்க்கை முறையைக் குறித்துச் சொல்லி இந்த அத்தியாயத்தை நான் நிரப்பிவிடக் கூடாது. விஷயத்திற்குச் செல்லவேண்டும்.

இவ்வாறு மாளவியாஜியுடன் தினந்தோறும் சம்பாஷிப்பதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் என்னைத் தமது தம்பியாகவே பாவித்துப் பற்பல கட்சிகளின் கொள்கைகளையும் எனக்கு விளக்கிக் கூறினர். சீர்திருத்தத்தைப் பற்றிய தீர்மானத்தின்மீது நடக்கவிருந்த விவாதத்தில் நான் கலந்துகொண்டே தீரவேண்டுமெனக் கண்டேன். பஞ்சாப் அநீதிகளைப் பற்றிக் காங்கிரஸ் அறிக்கை எழுதிய பொறுப்பில் எனக்கும் பங்கு உண்டாதலின், அது சம்பந்தமாக இன்னும் செய்யவேண்டி யிருந்தவற்றில் கவனம் செலுத்தியாகவேண்டு மென்று தோன்றிற்று. அவ் விஷயமாக அரசாங்கத்துடன் விவகாரம் நடத்தியாகவேண்டும். இது போலவே கிலாபத் விஷயம் வேறிருந்தது. மேலும் மிஸ்டர் மாண்டேகு இந்தியாவுக்குத் துரோகம் செய்யமாட்டாரென்றும், துரோகம் செய்யப்படுமாறு பார்த்திருக்கவும் மாட்டாரென்றும், அக்காலத்தில் நான் நம்பினேன். அலி சகோதரர்களையும் மற்றக் கைதிகளையும் விடுதலை செய்தது ஒரு சுபசகுனமாக எனக்குத் தோன்றிற்று. இந்த நிலைமையில் சீர்திருத்தங்களை நிராகரியாமல் அவற்றை ஒப்புக்கொண்டு தீர்மானஞ் செய்வதுதான் சரி என்று எண்ணி

னேன். இதற்கு மாருக, தேசபந்து தாஸ் சீர்திருத்தங்கள் முற்றும் அதிருப்திகரமானவை, சிறிதும் போதாதவை யென்பதாக அவற்றை நிராகரித்துவிட வேண்டுமென்று கருதினுர். காலஞ்சென்ற லோகமான்யர் ஏறக்குறைய நடு நிலைமையில் இருந்தாராயினும், தேசபந்துவினுல் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் தீர்மானத்தையும் தாங்கி நிற்பதென்று முடிவு செய்திருந்தார்.

நெடுங்காலம் தேசத்தொண்டு செய்து அநேகருடைய நன்மதிப்புக்கு உரியவர்களான இத்தகைய தலைவர்களுடன் மாறுபட்டு நிற்றல் என்ஞல் பொறுக்க முடியாததாயிருந்தது. ஆனுல் மனச்சான்றே மிகத் தெளிவான வழி காட்டிற்று. காங்கிரஸிலிருந்து ஓடிப்போக முயன்றேன். காங்கிரஸ் கூட்டத்துக்கு நான் வாாமலிருந்தால் எல்லாருக்கும் நன்மையாயிருக்குமென்று பண்டிதமாளவியாவிடமும் மோதிலாலிடமும் கூறினேன். இதனுல், மதிப்பிற்குரிய தலைவர்களுடன் நான் மாறுபடுவதாகக் காட்டிக்கொள்ளாமலும் தப்பித்துக் கொள்ளலாம்.

ஆனுல் அவ்விரு பெரியோர்களுக்கும் என் யோசனை பிடிக்கவில்லை. இது எப்படியோ லாலா ஹரிகிருஷ்ணலாலின் காதுக் கெட்டிவிட்டது. "கூடவே கூடாது. நீங்கள் அப்படிச் செய்தால் பஞ்சாபியருக்குப் பெரிதும் மனவருத்த முண்டாகும்" என்று அவர் கூறினுர். லோகமான்யர், தேசபந்து ஜனுப் ஜின்ஞ இவர்களுடன் இவ்விஷயத்தைக் குறித்து விவாதித்தேன். ஆனுல், வழியொன்றும் காணவில்லை. கடைசியாக மாளவியாஜியிடம் என் துன்பத்தைத் தெரிவித்தேன். "ராஜி ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை. என் தீர்மானத்தை நான் கொண்டுவந்தால் வாக்கெடுக்கும்படி நேரிடலாம். ஆனுல்

அதற்கெவ்வித ஏற்பாடுகளும் இங்கே காணேம். இது காறும் காங்கிரஸ் கூட்டத்தில் கையைத் தூக்கச் சொல்லி வாக்கெடுக்கும் முறையே அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்போது பிரதிநிதிகள், வேடிக்கை பார்ப்பவர்கள் என்ற வித்தியாச மில்லாமல் போய்விடுவது வழக்கம். இவ்வளவு பெரிய கூட்டங்களில் வாக்கு எண்ணிக் கணக்கிடுவதற்கு நமக்கு எவ்வித சாதனமும் இல்லை. எனவே வாக்கு எண்ணவேண்டு மென்று நான் விரும்பினுலும் அதற்கு வசதி கிடையாது. அதில் பொருளும் இராது." என்று சொன்னேன். ஆனல் லாலா ஹரிகிருஷ்ண லால் என் துணைக்கு வந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னார். "வாக்கெடுக்கும் தினத்தில் வேடிக்கை பார்ப்பவர்களை நாங்கள் உள்ளே விடவில்லை. வாக்கெண்ணுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். ஆனல் நீங்கள் காங்கிரஸுக்கு வராமலிருக்கக் கூடாது" என்ருர்.

எனவே நான் சரணமடைந்தேன். என்னுடைய தீர்மானத்தைத் தயாரித்து, உள்ளுக்குள் நடுங்கிக்கொண்டே அதைப் பிரரேபிக்க முற்பட்டேன். பண்டித மாளவியாவும், ஜனப் ஜின்னவும் அதை ஆதரிக்க ஒப்புக்கொண்டிருந்தார்கள். எங்களுடைய அபிப்பிராய பேதத்தில் மனக்கசப்பு என்பது சிறிதும் இல்லை. எங்களுடைய பேச்சுகளிலும் அறிவுக்குப் பொருத்தமான வாதத்தை யன்றி ஆத்திரம் சிறிதும் இல்லை. என்ருலும் இவ்வபிப்பிராய பேதம் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை யென்பதைக் கண்டேன். தலைவர்களுக்குள் வித்தியாசமிருந்ததே அவர்களுக்கு வருத்தமளித்தது. அவர்கள் பூரண ஒற்றுமையை விரும்பினர்கள்.

உபந்யாசங்கள் ஒரு பால் நடந்து கொண்டிருக்கையிலேயே, மற்ருெரு பால் சமரசம் உண்டுபண்ண முயற்சி

செய்யப்பட்டு வந்தது. மேடையின் மீதிருந்த தலைவர்களுக் கிடையே இது சம்பந்தமாகச் சீட்டுகள் போவதும் வருவதுமா யிருந்தன. ஒற்றுமை யுண்டு பண்ணுவதற்கு மாளவியாஜி பெரு முயற்சி செய்தார். அப்போது ஜெயராம் தாஸ் ஒரு திருத்தப் பிரரேபணை என்னிடம் கொடுத்தார். அதை ஒப்புக்கொண்டு பிரதிநிதிகளை இப்பெரிய தொல்லையி னின்று காப்பாற்றுமாறு தமக்கு இயல்பான இனிய முறை யில் கேட்டுக் கொண்டார். அத்திருத்தம் எனக்குப் பிடித் திருந்தது. இதற்கிடையில் ஒற்றுமைக்கு எங்கே சந்தர்ப்பம் கிடைக்குமென்று மாளவியாஜி தேடிய வண்ணம் இருந்தார் ஜெயராம் தாஸின் திருத்தம் இருகட்சியாரும் ஏற்றுக்கொள் ளக் கூடியதென்று எனக்குத் தோன்றுவதாக அவரிடம் கூறினேன். அடுத்தாற்போல அது லோகமான்யரிடம் காட்டப்பட்டது. "ஸி. ஆர். தாஸ் ஒப்புக்கொண்டால் எனக்கு ஆட்சேபமில்லை" யென்று அவர் சொன்னார். கடைசியாக, தேசபந்துவும் சிறிது மனமிளகி விபின சந்திர பாலரை நோக்கினார். மாளவியா உடனே நம்பிக்கை பெற் றார். அவர் மேற்படி திருத்த மடங்கிய சீட்டைப் பிடுங்கிக் கொண்டு, தேசபந்து திட்டமாக சம்மதம் தெரிவிப்பதற்கு முன்பே எழுந்து "சகோதரப் பிரதிநிதிகளே! ராஜி முடிவு ஏற்பட்டு விட்டதென்று உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்" என்று கூறினார். பின்னர் நிகழ்ந்த காட்சி வருணிக்கற்பாலதன்று. கரகோஷத்தினால் பந்தலே விழுந்து விடும் போலிருந்தது. சற்று முன் சோர்வாகக் காணப்பட்ட சபையினரின் முகங்களில் இப்போது மகிழ்ச்சி தாண்டவ மாடிற்று.

திருத்தப் பிரரேபணை எத்தகைய தென்பதைப் பற்றி இங்கே கூறுதல் அவசியமில்லை. என்னுடைய சத்திய

சோதனைகளில் மேற்படி தீர்மானம் கொண்டுவர நேர்ந்ததும் ஒன்று என்பதை விளக்குவதே என்னுடைய நோக்கமாகும். இந்த ராஜி முடிவினால் என்னுடைய பொறுப்பு இன்னு மதிகமாயிற்று.

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

காங்கிரஸ் பணி

அமிருதஸரஸ் காங்கிரஸ் நடவடிக்கைகளில் நான் கலந்து கொண்டபோது காங்கிரஸ் பணியில் உண்மையில் ஈடுபட்டு விட்டதாகச் சொல்ல முடியாது. இதற்கு முந்தைய காங்கிரஸுகளுக்கு நான் சென்றிருந்தது அம்மகா சபையினிடம் வருஷந்தோறும் என் பக்தியைத் தெரிவித்துக் கொள்வதற்கே யாகும். விசேஷமாக எனக்கு எவ்வித வேலையும் ஏற்பட்டிருந்ததாக அக் காலங்களில் நான் எண்ணவில்லை. அப்போதெல்லாம் காங்கிரஸ் சைன்யத்தில் ஒரு சாதாரண போர் வீரனுகவே இருந்தேன். அதற்கு மேற்பட்ட பதவியை நான் விரும்பவில்லை.

அமிருத ஸரஸில் என்னுடைய அநுபவத்திலிருந்து இரண்டொரு விஷயங்களில் என்னால் சிறிது வேலைசெய்யக் கூடுமென்று தெரிய வந்தது. அவை காங்கிரஸுக்கு உபயோகமா யிருக்குமென்றும் அறிந்தேன். பஞ்சாப் விசாரணை சம்பந்தமாக என்னுடைய வேலை, காலஞ்சென்ற

லோகமான்யர், தேசபந்து, பண்டித மோதிலால்ஜி முதலிய தலைவர்களுக்குத் திருப்தி யளித்திருப்பதாகக் கண்டேன். விஷயாலோசனைக் கமிட்டிக்குத் தீர்மானங்கள் தயாரிப்பதற்காகக் கூடிய பிரத்யேகக் கூட்டங்களுக்கு அவர்கள் என்னையும் அழைத்தார்கள். இக்கூட்டங்களுக்குத் தலைவர்களின் விசேஷ நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்தான் அழைக்கப்பட்டார்கள். அதிலும் அவர்களுடைய உதவி தேவையென்று கருதப்பட்டால் மட்டும் தான் சில சமயம் அழைக்கப்படாதவர்களும் இக் கூட்டங்களுக்கு வந்து விடுவதுண்டு.

அடுத்த வருஷத்தில் நான் செய்யக்கூடிய வேலைகள் இரண்டிருந்தன. அவற்றில் எனக்குச் சிரத்தை இருந்தது. அவற்றைச்செய்ய ஓரளவு தகுதியும் பெற்றிருந்தேன். இவற்றில் ஒன்று ஜாலியன் வாலாபாக் படுகொலையின் ஞாபகச் சின்னமாகும். காங்கிரஸ் மிகுந்த உற்சாகத்துக்கிடையே இது குறித்த ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருந்தது. அதற்காக ஐந்து லட்சம் ரூபா வசூலிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. நான் மேற்படி நிதியின் தர்மகர்த்தர்களில் ஒருவனாக நியமிக்கப்பட்டேன். பொது வேலைகளுக்காகப் பிச்சை யெடுப்போரில் தலைசிறந்தவர் என்று பண்டித மாளவியா பெயர் பெற்றிருந்தார். இவ் விஷயத்தில் நான் அவருக்கு அதிகம் பின் வாங்கியவனல்லன் என்று அறிந்திருந்தேன். தென்னாப்பிரிக்காவி லிருந்த போது இத்துறையில் என் ஆற்றலைக் கண்டு பிடித்தேன். மாளவியாஜியைப் போல் ஒப்பற்ற ஜாலவித்தைத் திறமையினால் இந்திய சமஸ்தானாதிபதிகளிட மிருந்து பெருந் தொகையான நன்கொடைகள் வசூலிக்க என்னால் ஆகாது

என்பது உண்மையே. ஆனல் ஜாலியன்வாலாபாக் ஞாபகச் சின்னத்துக்கு இராஜாக்கள், மகாராஜாக்களிடம்செல்வதில் பயனில்லை யென்றும் அறிந்திருந்தேன்.

பணம் வசூலிக்கும் பொறுப்பு, நான் எதிர்பார்த்தது போல், என் மீதே பெரிதும் சார்ந்தது. ஈகைக்குணம் படைத்த பம்பாய் வாசிகள் தாராளமாகப் பணங் கொடுத்தார்கள். எனவே, மேற்படி ஞாபகச் சின்னத்திற்காகத் தற்போது பாங்கியில் ஒரு பெரிய தொகை இருந்து வருகிறது. ஆனல் ஹிந்து, முஸ்லீம், சீக்கியரின் இரத்தம் கலந்தோடியதனல் தூய்மை பெற்ற அம்பூமியில் எத்தகைய ஞாபகச் சின்னம் எழுப்புவது என்பது முடிவாகவில்லை. மேற்படி மூன்று சமூகங்களும் தற்போது அன்பினல் பிணைக்கப்பட்டிருப்பதற்கு மாருக, ஒன்ருேடொன்று போர் புரிந்து வருவதாகக் காண்கிறது. ஆகவே ஞாபகச் சின்ன நிதியை எப்படிப் பயன்படுத்துவது என்பதுதான் இப்போது பெரிய பிரச்னையா யிருக்கிறது.

தீர்மானங்கள் தயாரிப்பதில் எனக்கிருந்த ஆற்றலும் காங்கிரஸுக்குப் பயன்படக் கூடியதாயிருந்தது. நீண்ட கால அப்பியாசத்தினல் எந்த விஷயத்தையும் சுருக்கமாகக் கூறும் திறமை நான் பெற்றிருந்தேன். இதைக் காங்கிரஸ் தலைவர்கள் கண்டு கொண்டார்கள். அப்போதிருந்த காங்கிரஸ் அமைப்பு கோகலே விட்டுச் சென்ற ஆஸ்தியாகும். அவர் தயாரித்திருந்த சிற்சில விதிகள் காங்கிரஸ் இயந்திரம் இயங்குவதற்கு ஆதாரமாயிருந்தன. இவ்விதிகள் செய்யப்பட்ட வரலாற்றை கோகலேயின் வாய்மொழி மூலமாகவே நான் தெரிந்து கொண்டிருந்தேன். ஆனல் இப்போது காங்கிரஸின் வேலை மிகவும் அதிகமாகி விட்டபடியால் அவ்வமைப்பு இனிமேல் போதாது என்று எல்லாரும் கருத

லானார்கள். இவ்விஷயம் ஒவ்வொரு வருஷமும் காங்கிரஸில் ஆலோசனைக்கு வந்து கொண்டிருந்தது. காங்கிரஸ் ஒரு முறை கூடிக் கலைந்த பின்னர் மீண்டும் அடுத்த வருஷம் கூடும் வரையில் இடைக்காலத்தில் வேலை செய்வதற்கோ, அவ்வப்போது புதிதாக ஏற்படும் நிலைமைகளைப்பற்றி யோசித்துக் காரியம் செய்வதற்கோ எவ்வித அமைப்பும் இல்லாமலிருந்தது. விதிகளின்படி மூன்று காரியதரிசிகள் உண்டு. ஆனால் உண்மையில் ஒருவர்தான் காங்கிரஸ் வேலைகளைக் கவனிப்பார். அவரும் முழு நேரம் வேலை செய்பவரல்லர். இத்தகைய ஒருவர் தனித்து நின்று காங்கிரஸ் காரியாலயத்தை நடத்தலும், வருங்காலத்தைப்பற்றி யோசித்தலும், காங்கிரஸ் ஏற்றுக் கொண்டிருக்கும் பழைய பொருப்புக்களை நிறைவேற்றலும் எவ்வாறு சாத்தியம்? இந்த வருஷத்தில் இந்தப் பிரச்னை மிகவும் முக்கியமாகும் என்று எல்லாரும் கருதினார்கள் காங்கிரஸ் பொது விஷயங்களைப்பற்றி விவாதிக்கத் தகுதியில்லாத மிகப் பெரிய கூட்டமாயிருந்தது. மொத்தம் காங்கிரஸுக்கு வரக்கூடிய பிரதிநிதிகளுக்கு ஒரு வரம்பு கிடையாது. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் இவ்வளவு பிரதிநிதிகள் தான் அனுப்பலாம் என்னும்வரையறையும் இல்லை. இத்தகைய குழப்ப நிலைமையில் சிறிது அபிவிருத்தி யேனும் அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தார்கள்.

காங்கிரஸுக்கு அமைப்புத் தயாரிக்கும் வேலையை ஒரு நிபந்தனையின் மீது நான் ஏற்றுக்கொண்டேன். பொது ஜனங்களிடம் மிகுந்த செல்வாக்கு வாய்ந்த இரு தலைவர்கள் லோகமான்யரும், தேசபந்துவும் என்பதைக் கண்டிருந்தேன். எனவே, ஜனங்களின் பிரதிநிதிகளாகிய அவர்கள் காங்கிரஸ் அமைப்புத் தயார் செய்வதில் என்னுடன்

கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால் நேரில் தாங்களே இவ்வேலையில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு அவகாசம் கிடைக்காதென்பது வெள்ளிடைமலை யாதலின், அவர்களுடைய நம்பிக்கைக்குரிய இருவர், காங்கிரஸ் அமைப்புத் தயாரிக்கும் கமிட்டியில் என்னுடன் நியமிக்கப்படவேண்டு மென்றும், அங்கத்தினர் தொகை மொத்தம் மூன்று பேருக்கு மேல் போகக்கூடாதென்றும் யோசனை சொன்னேன். லோகமான்யர், தேசபந்து இருவரும் என் யோசனையை அங்கீகரித்து, முறையே ஸ்ரீமான்கள் கெல்கரையும், ஐ. பி. ஸென்னையும் தங்களுக்குப் பதிலாக நியமித்தார்கள். ஒரு முறையேனும் இக் கமிட்டியார் சேர்ந்து உட்கார்ந்து ஆலோசிக்க முடியவில்லை. எனினும் கடிதப் போக்குவரவு மூலம் நாங்கள் ஒருவரோடொருவர் கலந்து கொண்டோம். முடிவில் ஒரு முகமான அறிக்கையை சமர்ப்பித்தோம். இந்தக் காங்கிரஸ் அமைப்பைக் குறித்து நான் ஓரளவு பெருமை கொள்கிறேன். இவ்வமைப்பை மட்டும் நாம் முழுதும் நிறைவேற்றி வைத்தோமானால், அதனாலேயே சுயராஜ்யம் பெற்று விடுவோ மென்பது என் நம்பிக்கை. மேற்கண்டவாறு காங்கிரஸ் அமைப்புத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது தான் உண்மையில் நான் காங்கிரஸ் பணியில்ஈடுபட்டேனென்று கூறலாம்.

முப்பத்தோன்பதாம் அத்தியாயம்

கைராட்டினம்

நான் 1908-ம் ஆண்டில் எழுதிய "இந்திய சுயராஜ்யம்" என்னும் நூலில், இந்தியாவில் நாளுக்கு நாள் கொடுமையாகி வந்த வறுமைப் பிணிக்கு இராட்டினம் ஒன்றே மருந்து என்பதாக எழுதினேன். எனினும், அவ் வருஷம் வரையில் கைராட்டினத்தையோ, கைத்தறியையோ பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை. பாரதநாட்டிலுள்ள பாமர ஜனங்களின் கொடிய ஏழ்மையைப் போக்குவதற்கு உதவி செய்யும் எந்தச் சாதனமும் அதே சமயத்தில் சுய ராஜ்யப் பேற்றுக்கு உரிய சாதனமுமாகும் என்பதை ஒரு மூலாதார உண்மையாக வைத்துக் கொண்டு நான் அப்புத் தகம் எழுதினேன். 1915-ம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவி லிருந்து இந்தியா திரும்பியபோதும் இராட்டினத்தைப் பாராதவனாகவே யிருந்தேன். சபர்மதியில் சத்தியாக்கிரஹ ஆசிரமம் ஸ்தாபிக்கப் பட்டபோது சில கைத்தறிகளை அமைத்தோம். ஆனால் அவற்றை அமைத்த வுடனே ஒரு பெரிய கஷ்டம் ஏற்பட்டது. ஆசிரமவாசிகளனை வரும் உத்தியோகங் களிலோ. வியாபாரத்திலோ ஈடு பட்டிருந்தவர்களே யல்லாமல் கைத் தொழில் செய்தவர்க ளல்ல. எனவே எங்களுக்குக் கைத்தறி நெசவு கற்றுக் கொடுப்பதற்குத் தேர்ச்சி பெற்ற நெசவுத் தொழிலாளி ஒரு வர் தேவையாயிருந்தார். கடைசியில், பளன்புரியிலிருந்து ஒருவரைக் கொண்டு வந்து அமர்த்தினோம், அவர் தொழில் இரகசியம் முழுதும் சொல்லிக் கொடுக்கவில்லை. ஆனால் மகன்லால் காந்தி எடுத்த காரியத்தை எளிதில் விட்டு

விடுகிறவ ரல்லர். கைத்தொழில் தேர்ச்சிக்கு வேண்டிய இயற்கை ஆற்றல் அவருக்கிருந்தபடியால் விரைவிலேயே அக்கலையை அவர் பூரணமாகக் கற்றுத் தேர்ச்சி யடைந்தார். அதன் பின்னர் ஒருவர் பின் ஒருவராய் ஆசிரமத்தில் பலர் நெசவுத் தொழிலில் பயிற்சி பெற்றனர்.

எங்கள் கையால் துணி நெய்து அதையே அணிய வேண்டுமென்பது எங்கள் இலட்சியமாகும். ஆதலின் உடனே ஆலை நெசவுத் துணியை விட்டொழித்தோம். ஆசிரம அங்கத்தினர்கள் எல்லாரும் இந்தியாவில் உற்பத்தியான நூலைக்கொண்டு கைத்தறியில் நெய்த துணிகளையே உடுத்துவதென்பது விரதங் கொண்டார்கள்; இவ்விதங் காரணமாகப் பற்பல அநுபவங்கள் ஏற்பட்டன. நெசவுத் தொழிலாளரின் வாழ்க்கைநிலைமை, அவர்கள் எவ்வளவு துணி உற்பத்தி செய்யக் கூடுமென்பது, நூல் கிடைப்பதில் அவர்களுக் கேற்படும் இடையூறுகள், அவர்கள் மோசத்துக்காளாகும் விவரங்கள், கடைசியாக அவர்களுடைய கடன்சுமை முதலியவைகளைக் குறித்து நேரில் அறிந்து கொள்ளக்கூடியதாயிற்று. எங்களுக்குத் தேவையான துணி முழுதும் எங்களால் உடனே தயாரித்துக்கொள்ள முடியவில்லை. எனவே, அடுத்தபடியாக செய்யக்கூடியது கைத்தறி நெசவுக்காரர்களிட மிருந்து துணி வாங்குவதேயாகும். ஆனால் இந்திய ஆலை நூலினலான துணிகள் ஜவுளிக் கடைக் காரர்களிடமோ, நெசவுக்காரர்களிடமோ வேண்டும்போது எளிதில் கிடைப்பதாயில்லை. அவர்கள் செய்த நயமான துணியெல்லாம் அன்னிய நூலினல் ஆனவை. ஏனெனில் இந்திய ஆலைகள் நயமான உயர்ந்த நம்பர் நூல் உற்பத்திசெய்வது கிடையாது.

இன்றைய தினங்கூட இந்திய ஆலைகளில் உயர்ந்த நம்பர் நூல் மிகக் குறைவாகவே உற்பத்தியாகின்றது. மிகவும் உயர்ந்த நம்பர் நூல் இந்திய ஆலைகளினால் நூற்கவே முடியாது. பெரு முயற்சி செய்த பின்னர் சில நெசவுத் தொழிலாளிகளை எங்களுக்காகச் சுதேசி நூலைக்கொண்டு துணி நெய்யும்படி செய்தோம். அவர்கள் நெய்யும் துணி முழுவதையும் நாங்களே எடுத்துக் கொள்வதாக வாக்களித்தோம். இவ்வாறு ஆலை நூலினாலான துணி அணிதலை நாங்கள் மேற்கொண்டதனாலும், அதுகுறித்து நண்பர்களிடையே பிரசாரம் செய்ததினாலும், இந்திய நூல் ஆலைகளுக்கு அவைகளுடைய முயற்சியின்றியே ஒருவாறு ஏஜண்டுகளாக ஆனோம். இதன் காரணமாக, ஆலைகளுடனும் எங்களுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவற்றின் நிர்வாகத்தைப்பற்றியும், அவற்றிற் கேற்படும் இடையூறுகளைப் பற்றியும் ஓரளவு தெரிந்துகொண்டோம். நாளடைவில் ஆலைகளில் உற்பத்தியாகும் நூல் முழுவதையும் ஆலைகளிலேயே நெய்துவிடுதல் அவற்றின் நோக்கம் என்பதைக் கண்டோம். கைத்தறி நெசவுக்காரர்களுடன் ஆலைகள் மனப்பூர்வமாக ஒத்துழைக்கவில்லை. தற்போதைக்கு அவை நெய்தது போக மீந்துள்ள நூலைக் கைத்தறிகளுக்குக் கொடுத்து வந்தன. இந்நிலைமையில் எங்களுக்கு வேண்டிய நூலை நாங்களே நூற்றுக் கொள்ள வேண்டுமென்னும் ஆவல் மிகுதியாயிற்று. அப்படிச் செய்யாத வரையில் ஆலைகளையே நம்பியிருக்க நேரிடும். இந்திய நூல் ஆலைகளின் ஏஜண்டுகளாயிருப்பதனால் தேசத்திற்குத் தொண்டு எதுவும் நாங்கள் செய்வதற்கில்லை என்று உணரலானோம்.

நெசவைப் போலவே நூற்றலிலும் பல கஷ்டங்கள் எதிர்ப்பட்டன. முதலில் இராட்டினமே கிடைக்கவில்லை.

நூற்கக் கற்றுக் கொடுக்கக்கூடியவரும் அகப்படவில்லை. ஆசிரமத்தில் நெசவுவேலை சம்பந்தமாக நூலைக்கழியிலிருந்து பிரித்துச்சுற்றுவதற்குச் சில இராட்டினங்கள் உபயோகித்து வந்தோம். ஆனால் இவற்றை நூல் நூற்க உபயோகிக்கலாமென்று எங்களுக்குத் தெரியாது. ஒருமுறை காளிதாஸ் ஜாவேரி ஒரு ஸ்திரீயைக் கண்டுபிடித்தார். அந்த ஸ்திரீ நூற்கும் விதத்தை எங்களுக்குக் காட்டிக் கொடுக்க முடியுமென்று அவர் சொன்னார். உடனே ஆசிரம வாசி ஒருவரை அவரிடம் அனுப்பினோம் இவர் புதிய விஷயங்களை எளிதில் கற்றுக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவரெனப் பெயர் பெற்றவர். ஆயினும் இவர்கூட அந்த வித்தையின் இரகசியத்தை அறிந்துகொள்ளாமலே திரும்பிவந்து சேர்ந்தார்.

இவ்வாறு காலம் போய்க்கொண்டிருந்தது. என் பொறுமை நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வந்தது. ஆசிரமத்துக்கு வருவோர் போவோரில், சிறிதேனும் இராட்டினத்தைப்பற்றி அறிந்திருக்கக் கூடியவர் என்று தோன்றிய எல்லாரையும் அதைப்பற்றி விசாரித்து வந்தேன். ஆனால் அது முழுதும் பெண்களாலேயே செய்யப்பட்டு வந்த தொழில்; இப்போதோ ஏறக்குறைய அழிந்து போயிருந்தது. எனவே எந்த மூலை முடுக்கிலாவது நூற்கத் தெரிந்த ஸ்திரீ ஒருத்தி இருக்கும் பட்சத்தில் அவளைக் கண்டு பிடிக்கவும் பெண் ஒருத்தியினாலேயே முடியும்.

1917-ம் வருஷத்தில் புரோச் கல்வி மகாநாட்டில் தலைமை வகிப்பதற்காக என்னுடைய குஜராத்தி நண்பர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள். இங்கேதான் கங்காபென் மஜூம்தார் என்னும் பெண்மணியை நான் கண்டு பிடித்தேன். அவர் விதந்து; அவருடைய ஊக்கமும் முயற்சியும் அபாரமானவை. அவர் பள்ளிக் கல்வி அதிகம்

பயின்றவரல்லர். ஆனால் இயற்கையறிவிலும் தைரியத்திலும் சாதாரணமாக இந்நாட்டிலுள்ள படித்த ஸ்திரீகளை அவர் எளிதில் வென்று விடக்கூடியவர். அவர் தீண்டாமைச் சாபத்தை முன்னமே தொலைத்திருந்தார். ஒடுக்கப்பட்டவர்களிடையே அவர் தாராளமாகக் கலந்து பழகி அவர்களுக்கு ஊழியம் புரிந்தார். அவருக்குச் சொந்தமாகக் கொஞ்சம் சொத்து இருந்தது; அவருடைய தேவைகளோ மிகச் சொற்பம். கஷ்டங்களைத் தாங்கிப் பழகிய திடசரீரமுடையவராதலால் எங்கும் துணையின்றி அவர் தைரியமாகச் செல்வதுண்டு. அநாயாஸமாகக் குதிரை சவாரிசெய்வார். கோத்ரா மகாநாட்டில் அவரிடம் இன்னும் நெருங்கிய பழக்கம் எனக்கு ஏற்பட்டது. இராட்டினம் கிடைக்காததைப் பற்றி என் துயரத்தை அவரிடம் முறையிட்டேன். ஊக்கத்துடன் இடைவிடாமல் தேடிக் கைராட்டினத்தைக் கண்டுபிடிப்பதாக அவர் வாக்களித்தபடியால் என் கவலை ஒருவாறு நீங்கிற்று.

நாற்பதாம் அத்தியாயம்

கைராட்டின வளர்ச்சி

கங்காபென் அம்மையார் குஜராத் மாகாணம் முழுவதிலும் தேடி அலைந்த பின்னர் கடைசியாக பரோடா இராஜ்யத்திலுள்ள வீஜபூரில் இராட்டினத்தைக் கண்டுபிடித்தார். அங்கே பலர் வீட்டில் இராட்டினங்கள் இருந்தன. ஆனால் அவையெல்லாம் பயனற்ற மரக்கட்டைகளுடன் பரணின்மீது போடப்பட்டு வெகுநாளாயிற்று. யாராவது ஒழுங்காகப் பஞ்சுத் திரி கொடுத்து நூலையும்

வாங்கிக்கொள்ள முன் வந்தால் தாங்கள் நூல் நூற்கச் சித்தமா யிருப்பதாக அந்த ஊர் ஜனங்கள் தெரிவித்தார்கள். இந்தச் சந்தோஷச் செய்தியை கங்காபென் எனக்குத் தெரிவித்தார். பஞ்சுத் திரி சம்பாதித்தல் மிகவும் கஷ்டமான காரியமென்று தெரிய வந்தது. காலஞ்சென்ற உமார் சோபானிடம் இதைச் சொன்னபோது அவர் உடனே இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய ஒப்புக்கொண்டார். தமது ஆலேயிலிருந்து தேவையான பஞ்சுத் திரிகள் அனுப்பி வைப்பதாக அவர் கூறினர். அவரிட மிருந்து கிடைத்த பஞ்சுத் திரிகளை கங்கா பென்னுக்கு அனுப்பினேன். விரைவில் ஏராளமாக நூல் வந்து குவியத் தொடங்கியது. நூலை என்ன செய்வதென்பது இப்பொழுது பெரிய பிரச்னையாயிற்று.

ஜனுப் உமார் சோபானி மிக்க தாராள குணமுடையவர்தான். ஆனல் எத்தனை காலந்தான் அவருடைய தாராளத்தையே நம்பிக்கொண்டிருக்க முடியும்? இடைவிடாமல் அவரிடமிருந்து பஞ்சுத்திரிகள் வந்துகொண்டிருக்க இருக்க, என் மனமும் அமைதி யிழந்து கொண்டிருந்தது. மேலும், ஆலைத் திரிகளை உபயோகிப்பதே தவறென்று எனக்குத் தோன்றியது. ஆலைத் திரிகளை உபயோகிக்கலா மென்றல் ஆலை நூலையும் ஏன் உபயோகிக்கக்கூடாது? முற்காலத்தில் நூல் நூற்றவர்களுக்கு ஆலைகளிலிருந்து பஞ்சுத்திரி கிடைத்திருக்க முடியாது. பின்னர், அவர்கள் எப்படி பஞ்சு கொட்டித் திரிகளாகக் கொண்டனர்? இவ்வாறெண்ணிய நான், பஞ்சு கொட்டிகளையும் கண்டு பிடித்துத் தருமாறு கங்கா பென்னை வேண்டினேன். அவர் இவ்வேலையையும் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டார். அவ்வாறே பஞ்சு கொட்டத் தயாராயிருந்த ஒருவனைத் தேடிப் பிடித்தார். அவன்

அவ்வேலைக்குக் குறைந்த பட்சம் மாதம் 35 ரூபா சம்பளம் வேண்டுமென்று கேட்டான். ஆனால் அக்காலத்தில் இதற்கு எவ்வளவு பணங் கொடுத்தாலும் அதிகமாகாது என்று நான் கருதினேன். பம்பாயில் பருத்திப்பிச்சை எடுத்தேன். ஸ்ரீ எச்வந்த பிரஸாத் தேஸாய் உடனே கொடுத்து உதவினார். இவ்வாறு கங்காபென்னின் முயற்சி சற்றும் எதிர்பாராத அளவுக்குப் பலன் தந்தது. வீஜபூரில் நூற்கப்பட்ட நூலை நெய்ய நெசவுக்காரர்களையும் அப்பெண்மணி கண்டு பிடித்தார். விரைவில் 'வீஜபூர் கதர்' பெரும் புகழ்பெற்றது.

வீஜபூரில் இத்தகைய அபிவிருத்தி ஏற்பட்டுக்கொண்டு வருகையில், ஆசிரமத்தில் இராட்டினம் விரைவாக நிலை பெற்றுவந்தது. மகன்லால் காந்தி தமது தொழில் திறமையை யெல்லாம் பயன்படுத்தி இராட்டையில் பல அபிவிருத்திகள் செய்தார். இராட்டினங்களும் மற்றும் அதற்கு வேண்டிய சாதனங்களும் ஆசிரமத்தில் உற்பத்தி செய்யப்படலாயின. ஆசிரமத்தில் முதன் முதலாக உற்பத்தியான கதர் கஜம் ஒன்றுக்கு 17 அணா விலை ஆயிற்று. அந்த முரட்டுக் கதரை அவ்வளவு விலைக்கு வாங்கிக்கொள்ளும்படி நண்பர்களுக்குச் சிபார்சுசெய்ய நான் தயங்கவில்லை. அவர்களும் விருப்பத்துடன் அவ்விலை கொடுத்து வாங்கிக்கொண்டார்கள்.

பம்பாயில் நான் நோயினால் பீடிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாய்க் கிடந்தேன். ஆயினும், அங்கேயும் இராட்டினந் தேடுவதற்குப் போதிய ஆற்றல் எனக்கிருந்தது. கடைசியாக நூல் நூற்பவர்கள் இருவரைக் கண்டு பிடித்தேன், அவர்கள் ஒரு சேர் அதாவது ஏறக்குறைய முக்கால் ராத்தல் நூலுக்கு ஒரு ரூபா கேட்டார்கள். அப்போது கதரின் பொருளாதார தத்துவத்தைப்

பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. கையால் நூற்ற நூலுக்கு என்ன விலை கொடுத்தாலும் அதிகமாகாது என்று எண்ணினேன். ஆனால் பிறகு, இங்கு நான் கொடுத்த விகிதத்தையும், விஜபூரில் கொடுக்கப்படும் விகிதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது நான் ஏமாற்றப்படுவதாக அறிந்தேன். நூற்பவர்கள் தங்கள் கூலி விகிதத்தில் குறையவே மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். ஆதலின், அவர்களுடைய ஊழியத்தை நிறுத்திவிட வேண்டியதாயிற்று. ஆயினும் அவர்களை அமர்த்தியதினால் பயன் விளையாமற் போகவில்லை. ஸ்ரீமதிகள் அவந்திகா பாய், ராமி பாய் காம்தார், ஸ்ரீசங்கர்லால் பாங்கரின் அன்னையார், ஸ்ரீமதி வஸுமதி பென் முதலியோருக்கு அவர்கள் நூல் நூற்கக் கற்றுக் கொடுத்தார்கள்.

•

எனது அறையில் இராட்டினத்தில் இனிய கீதம் எழுந்தது. அந்தக் கீதம் நான் நோய் நீங்கிக் குணம் பெறுவதற்குப் பெரிதுந் துணை செய்தது. இவ்வாறு நான் கூறுவது சிறிதும் மிகைப்படுத்தப்பட்டதன்று. அது உடலுக்கு நேரே செய்த நன்மையைவிட மனதின் மூலமாகவே அதிகநன்மை செய்தது என்பதை ஒப்புக்கொள்கிறேன். மனிதனுடைய மனதிற்கு அவன் உடலின் மீது எவ்வளவு செல்வாக்கு உண்டு என்பதையே இது காட்டுவதாகு மன்றோ? நானும் இராட்டினம் சுற்றக் கற்றுக் கொண்டேன். ஆனால் அப்போது அதிக வெற்றி பெறவில்லை.

பம்பாயிலும் கையினால் செய்த பஞ்சுத் திரிகள் எப்படிப் பெறுவது என்னும் பிரச்னை எழுந்தது. ஸ்ரீரேவாசங்கரின் வீட்டுவழியாக தினந்தோறும் பஞ்சு கொட்டி ஒருவன்

தன் வில்லின் நாணிலிருந்து ஒலி எழுப்பிக்கொண்டு போவது வழக்கம். அவனை அழைத்து வரச்செய்து விசாரித்ததில் அவன் மெத்தைகளுக்கு அடைக்கும் பஞ்சு கொட்டுபவனென்று தெரியவந்தது. நூல் நூற்பதற்குப் பஞ்சு கொட்டித் தரவும் அவன் ஒப்புக்கொண்டான். ஆனால் கூலி மிகவும் அதிகமாய்க் கேட்டான். அவன் கேட்டதைக் கொடுத்துப் பஞ்சுத்திரிகள் சம்பாதித்தேன். இவ்வாறு நூற்கப்பட்ட நூலை, பவித்திர ஏகாதசி தினத்தன்று சுவாமிக்கு மாலை போடுவதற்காகச் சில வைஷ்ணவ நண்பர்கள் வாங்கிக்கொண்டார்கள். ஸ்ரீமான் சிவஜி பம்பாயில் இராட்டை வகுப்பு ஒன்று தொடங்கினார். இந்தப் பரிசோதனைகளுக்கெல்லாம் பணச்செலவு ஏராளமாக ஆயிற்று. ஆனால், தேசபக்தர்களும் கதரில் நம்பிக்கை யுடையவர்களுமான நண்பர்கள் இப்பணச் செலவை யெல்லாம் விருப்பத்துடன் பொறுத்துக் கொண்டார்கள். அவ்வாறு செலவான பணம் வீணில் செலவழிந்ததில்லை யென்பது என்னுடைய தாழ்மையான அபிப்ராயமாகும். அதனால் விசேஷ அநுபவம் ஏற்பட்டதுடன் இராட்டினத்தின் மூலம் எவ்வளவோ அபிவிருத்தி யேற்படக்கூடுமென்று தெரியவந்தது.

இக்காலத்தில் கதர் மட்டுமே அணியவேண்டுமென்னும் பேரவா எனக்கு உண்டாயிற்று. இதுவரை, சுதேசி ஆலைத் துணியையே நான் அரை வேஷ்டியாக உடுத்திக்கொண்டிருந்தேன். ஆசிரமத்திலும் வீஜபூரிலும் உற்பத்தியான முரட்டுக் கதர்த் துணி 30 அங்குல அகலத்துக்கு மேல் இல்லை. எனவே, கங்காபென்னுக்கு முன்னறிக்கை விடுத்தேன். அதாவது இன்னும் ஒரு மாத காலத்திற்குள் 45 அங்குலம் அகலமுள்ள கதர் வேஷ்டி அவர் எனக்குத் தாவிட்டால், குட்டையான, முரட்டுக் கதர்த் துணியையே

வேஷ்டியாக அணியப் போகிறேனென்று அவருக்குத் தெரிவித்தேன். இந்த இறுதி அறிக்கை அவரைத் திடுக்குறச் செய்துவிட்டது. எனினும், அவர் சோர்ந்து பின்வாங்கி விடவில்லை. அந்த ஒரு மாதத்திற்குள் அவர் 45 அங்குல அகலமுள்ள ஒரு ஜோடி கதர் வேஷ்டி எனக் கனுப்பி விட்டார். இதனால், ஒரு நெருக்கடியான நிலைமை எனக்கேற்படாமல் அவர் காப்பாற்றினார்.

இதே சமயத்தில் ஸ்ரீ லக்ஷ்மிதாஸ், லாதி என்னுமிடத்திலிருந்து ராம்ஜி என்னும் நெசவுக்காரரையும், அவர் மனைவியையும் ஆசிரமத்துக்கு அழைத்துவந்து, ஆசிரமத்திலேயே கதர் வேஷ்டிகள் நெய்யத் தொடங்கினர். இந்தப் பெண் மணியின் பெயரும் கங்காபென்தான். இந்தத் தம்பதிகள் கதர் இயக்கத்திற்குச் செய்திருக்கும் தொண்டு அற்பமானதன்று, அவர்கள் குஜராத்திலும், அதற்கு வெளியிலுங் கூட எவ்வளவோ பேருக்குக் கைநூலைக்கொண்டு துணி நெய்யக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். கங்காபென் கைத்தறியில் அமர்ந்து நெசவு செய்வது மிக உற்சாகமூட்டும் ஒருகாட்சியாகும். எழுதப் படிக்கத் தெரியாத இந்த சகோதரி கைத்தறியில் அமர்ந்து விட்டால் அதிலேயே மூழ்கி விடுகிறார் பின்னர், அவர் கண்களையும், கவனத்தையும் அதிலிருந்து திருப்புவது அரிய காரியமாகும்.

நாற்பத்தோராம் அத்தியாயம்

சுவையுள்ள சம்பாஷணை

கதர் இயக்கம் அக்காலத்தில் சுதேசி இயக்கம் என்று சொல்லப்பட்டு வந்தது. ஆரம்பத்திலிருந்தே அதை ஆலைச் சொந்தக்காரர்கள் பெரிதும் கண்டித்தார்கள். காலஞ் சென்ற உமார் சோபானி ஓர் ஆலை முதலாளி; திறமை பெரிதும் வாய்ந்தவர். தமது அறிவையும் அநுபவத்தையும் கொண்டு அவர் எனக்கு யோசனை சொல்லி உதவி செய்த துடன், மற்ற ஆலைச் சொந்தக்காரர்களின் அபிப்பிராயத்தை யும் அவ்வப்போது அறிவித்து வந்தார். அவர்களில் ஒருவர் சொல்லிய வாதம் பெரிதும் உண்மையுள்ளதாக அவருக்குத் தோன்றிற்று. எனவே, அவரை நான் சந்திக்க வேண்டும் என்று உமார் சோபானி கூறினார். நானும் அதற்குச் சம்மதித்தேன். அதன்மேல் நாங்கள் சந்திப்பதற்கு ஜனப் சோபானி ஏற்பாடு செய்தார். ஆலைச் சொந்தக்காரர் சம்பாஷணையைப் பின்வருமாறு தொடங்கினார்:—

" இதற்கு முன்பே சுதேசிக் கிளர்ச்சி நடந்ததுண்டு என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?"

"ஆம் ; தெரியும்" என்று பதிலளித்தேன்.

"வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சியின் போது நாங்கள் (ஆலைச் சொந்தக்காரர்கள்) சுதேசி இயக்கத்தை எங்கள் சொந்த லாபத்துக்கு நன்றாகப் பயன்படுத்திக் கொண்டோ மென்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவ்வியக்கம் அதிதீவிர நிலையை யடைந்திருந்தபோது நாங்கள் துணி களின் விலையை உயர்த்தினோம், இன்னும் கேவலமான காரியங்களும் செய்தோம்."

"ஆம், இது குறித்துக் கொஞ்சம் கேள்விப்பட்டிருக்கிறேன், அது குறித்து வருந்தியதும் உண்டு."

"உங்கள் வருத்தத்தை நான் அறிந்து கொள்ளக்கூடும், ஆனால் வருத்தப் படுவதற்குக் காரணம் எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. நாங்கள் பரோபகாரக் கருத்துடன் தொழில் நடத்துகிறோ மில்லை. லாபத்துக்காகவே தொழில் நடத்துகிறோம். பங்குக் காரர்களுக்கு நாங்கள் திருப்தி யளித்தாக வேண்டும். ஒரு பொருளின் விலை அதற்கிருக்கும் கிராக்கியையே பொறுத்தது. இந்தச் சட்டத்தை யாராலும் மாற்ற முடியாது. வங்காளிகள் தங்கள் கிளர்ச்சியின் காரணமாகச் சுதேசித் துணிகளுக்குக் கிராக்கி அதிகமாகுமென்றும் அதன் பயனைக் அவற்றின் விலை உயருமென்றும் அறிந்தே யிருக்கவேண்டும்."

அப்போது நான் குறுக்கிட்டுக் கூறியதாவது:— "வங்காளிகள் என்னைப் போல் பிறரை எளிதில் நம்பும் இயல்பினரா யிருந்தார்கள். ஆலைச் சொந்தக்காரர்கள் அவ்வளவு சுயநல முள்ளவர்களாயும், தேசபக்தி யற்றவர்களாயும் இருக்க மாட்டார்களென்று அவர்கள் நம்பினார்கள். தாய் நாட்டிற்கு நெருக்கடி நேர்ந்துள்ள ஒரு சமயத்தில் அவர்கள் தேசத் துரோகம் செய்வார்களென்றும், அன்னியத் துணியைக் கூடச் சுதேசித் துணி என்று ஏமாற்றி விற்பார்களென்றும் அவர்கள் எதிர் பார்க்கவில்லை."

"நீங்கள் பிறரை எளிதில் நம்பும் இயல்புடையவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகையினால்தான் என்னை வந்து பார்க்கும்படி உங்களுக்கு இந்தக் கஷ்டம் கொடுத்தேன். சாதுக்களான வங்காளிகள் செய்த தவறையே

நீங்களும் செய்ய வேண்டாமென்று எச்சரிக்கை செய்ய விரும்பினேன்" என்று அவர் விடையளித்தார்.

இப்படிச் சொல்லி, அவர் தம் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த குமாஸ்தாவை, தமது ஆலையில் உற்பத்தியான துணிகளுக்கு மாதிரிகள் கொண்டுவரும்படி கூறினார். அந்த மாதிரிகளில் ஒன்றைச் சுட்டிக் காட்டி அவர் சொன்னதாவது:—"இதைப் பாருங்கள். இது எங்கள் ஆலையில் கடைசியாக இப்போது உற்பத்தியாகும் துணிகளுக்கு மாதிரி. இதற்கு ஏராளமான கிராக்கியிருக்கிறது. வீணாகப் போகும் சாமான்களைக் கொண்டு இதைச் செய்கிறோம். எனவே அது மிகவும் மலிவாயிருக்கிறது. வடக்கே இமய மலைப் பள்ளத்தாக்கு வரைக்கும் இதை அனுப்பி வைக்கிறோம். தேசம் முழுவதும் எங்களுக்குப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். நீங்களோ, உங்கள் ஆட்களோ போகவே முடியாத இடங்களிலெல்லாம் எங்களுக்கு ஏஜண்டுகள் இருக்கிறார்கள். ஆகையால் எங்களுக்குப் புதிய ஏஜண்டுகள் தேவையில்லை, மேலும், இந்தியாவில் உற்பத்தியாகும் துணி இந்தியாவின் தேவைகளுக்குக் கொஞ்சமும் போதாது என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். ஆதலின், சுதேசி இயக்கமானது துணி உற்பத்தி அதிகம் ஆவதையே பெரிதும் பொறுத்திருக்கிறது. நமது உற்பத்தியைப் போதிய அளவு அதிகமாக்கி, துணியின் தரத்தையும் விருத்தி செய்து விட்டோமானால் அன்னியத்துணி இறக்குமதி தானே நின்றுவிடும். ஆதலின் உங்கள் கிளர்ச்சியை இப்போது நடத்தும் முறையில் நடத்துவதில் பயனில்லை. புதிய ஆலைகளை ஏற்படுத்துவதில் நீங்கள் கவனம் செலுத்தவேண்டும். எங்கள் துணிகளுக்குக் கிராக்கி உண்டுபண்ண இப்போது

பிரசாரம் தேவையில்லை. உற்பத்தியை அதிகமாக்க வேண்டுவதே இப்போது முக்கியம்."

"தாங்கள் குறிப்பிடும் காரியத்தில் நான் ஏற்கனவேயே ஈடுபட்டிருந்தேனென்றால் என் முயற்சிக்கு ஆசி கூறுவீர்களல்லவா?" என்று நான் கேட்டேன்.

அவருக்கு விளங்கவில்லை. "அதெப்படி சாத்தியம்? புதிய ஆலைகள் ஏற்படுத்துவது குறித்து நீங்கள் கவனம் செலுத்தி வருகிறீர்களா, என்ன? அப்படியானால், உங்களை நான் பெரிதும் பாராட்டுதல் வேண்டும்."

"வித்தியாசம் கொஞ்சம் இருக்கிறது. கை இராட்டினத்துக்குப் புத்துயிர் கொடுக்கும் முயற்சியில் நான் ஈடுபட்டிருக்கிறேன்" என்றேன்.

அவருக்குத் திகைப்பு அதிகமாகிவிட்டது. "அதென்ன விஷயம்?" என்று கேட்டார்.

அவருக்கு இராட்டினத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும், அதை நான் வெகு காலம் தேடி அலைந்து கடைசியில் கண்டு பிடித்ததைப் பற்றியும் கூறிப் பின்னர் சொன்னதாவது:—"நான் முழுதும் உங்களைப் போன்ற அபிப்பிராயமே கொண்டுள்ளேன். ஆலைகளுக்குச் சம்பள மில்லாத ஏஜண்டாக நான் ஆவதில் எவ்வகைப் பயனுமில்லை. அதனால் தேசத்திற்கு நன்மையைவிடத் தீமையே அதிகம் உண்டாகும். இன்னும் வெகு காலத்துக்கு நமது ஆலைகளுக்கு வாடிக்கைக்காரர்கள் குறையமாட்டார்கள். ஆதலின் கைநூல் துணி உற்பத்தி செய்வதும், அதை விற்க வழி தேடுவதுமே என்னுடைய வேலையாகும். எனவே கதர் உற்

பத்தியில் நான் கவனம் செலுத்தி வருகிறேன். இவ்வகைச் சுதேசியத்திலேயே எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது ஏனெனில், அதன் மூலம், போதிய வேலை யில்லாமல் அரைப்பட்டினி கிடந்து கஷ்டப்படும் ஏழை இந்தியப் பெண்களுக்கு நான் வேலையும் உணவும் அளிக்க முடியும், இத்தகைய ஸ்திரீகளைக் கொண்டு நூல் நூற்று அந்த நூலினால் செய்த துணியை இந்திய ஜனங்கள் அணியச் செய்ய வேண்டு மென்பதே என் நோக்கமாகும். இவ்வியக்கம் எத்துணை தூரம் வெற்றி யடையப் போகிறதென்று நான் அறியேன். தற்போது அது ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. ஆனால் அதில் நான் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன். அதனால் தீமை எதுவும் விளையாதென்பது உறுதி. அத்துடன், தேசத்தின் துணி உற்பத்தி அதன் மூலம் எவ்வளவுக்கு அதிகமாகிறதோ அவ்வளவுக்கு நிச்சயமான நன்மையும் உண்டு. தாங்கள் குறிப்பிட்ட தீமைகளுக்கு என் இயக்கத்தில் இடமில்லை என்பதைத் தாங்கள் கவனிப்பீர்கள்." என்றேன்.

"தேசத்தின் துணி உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன்உங்கள் இயக்கத்தைத்தொடங்கினால் அதற்கு விரோதமாக நான் எதுவும் சொல்லுவதற்கில்லை. ஆனால், இந்த இயந்திர யுகத்தில் கைராட்டின் இயக்கம் வெற்றி யளிக்குமா வென்பது வேறு விஷயம். என் வரையில், நீங்கள் வெற்றிபெற வேண்டுமென்று மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன்" என்று அவர் கூறினார்.

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

அலை யெழுச்சி

கதர் இயக்கத்தின் அபிவிருத்தியைக் குறித்து இன்னமும் இச்சரிதத்தில் விவரித்துக் கொண்டிருத்தல் கூடாது. நான் என் வாழ்நாளில் பற்பல முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன். அவை யெல்லாவற்றையும் பற்றி விவரமாக எழுதினால் ஒவ்வொன்றும் ஒரு தனிப் புத்தகம் ஆகும். ஆதலின் அவைகளைக் குறித்து இவ்வத்தியாயங்களில் நான் விவரமாக எழுதப் புகுதல் சரியன்று. சத்திய சோதனையினிடையே இவையெல்லாம் எப்படித் தாமே எழுந்தன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வதே இங்கு என் நோக்கமாகும்.

எனவே, இனி ஒத்துழையாமை இயக்கத்தின் சரித்திரத்தைக் கவனிப்போம். அலி சகோதரர்கள் ஆரம்பித்து நடத்திய கிலாபத்கிளர்ச்சி வேகமாக அபிவிருத்தி யடைந்து வருகையில், மௌலானா அப்துல்பாரி முதலிய உலமாக்களுடன் நான் அவ்விஷயமாகக் கலந்து விவரமாகப் பேசினேன். முக்கியமாக, முஸ்லீம் ஒருவர் அஹிம்ஸை விதியை எவ்வளவு தூரம் கடைப்பிடித்து நடக்கலாம் என்பது குறித்து நாங்கள் பேசினோம். முடிவில், அஹிம்ஸையை ஒரு முறையாகக் கொண்டு கடைப்பிடிப்பதை இஸ்லாம் தடுக்கவில்லை யென்றும், முஸ்லீம்கள் அம்முறையை அனுசரிப்பதாக உறுதி கூறி யுள்ள வரையில் அதினின்றும் பிறழாதிருத்தல் அவர்கள் கடமையாகு மென்றும் அவர்கள் எல்லாரும் ஒப்புக்கொண்டார்கள். கடைசியாக, கிலாபத் மகாநாட்டில் ஒத்துழையாமைத் தீர்மானம் பிரரேபிக்கப்பட்டு நீண்ட விவாதத்துக்குப் பின்னர் நிறைவேறியது. அலகா

பாத்தில் ஒரு கூட்டத்தில் இவ்விஷயமாக இரவு முழுவதும் ஆலோசிக்கப்பட்டது. எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. ஆரம்பத்தில் ஹக்கீம் அஜ்மல்கான் பலாத்காரமற்ற ஒத்துழையாமை காரியத்தில் நடைபெறுமா என்பது குறித்துச் சந்தேகப்பட்டார். ஆனால் அவருடைய சந்தேகம் நீங்கிய பின்னர் அவர் மனப்பூர்வமான அவ் வியக்கத்தில் ஈடுபட்டார். அவருடைய உதவி இயக்கத்தின் ஆக்கத்திற்கு அளவற்ற நன்மை யளித்தது.

அடுத்தாற்போல், ஒத்துழையாத் தீர்மானம், குஜராத் மாகாண அரசியல் மகாநாட்டில் என்னால் பிரரேபிக்கப்பட்டது. அதை எதிர்த்தவர்கள் பூர்வாங்கமான ஓர் ஆட்சேபத்தைக் கிளப்பினார்கள். அதாவது, காங்கிரஸ் இது குறித்து முடிவு செய்வதற்கு முன்னால் ஒரு மாகாண மகாநாட்டுக்கு இத்தகைய தீர்மானம் நிறைவேற்றத் தகுதி கிடையாது என்று கூறினார்கள். பின்னோக்கிச் செல்வதாயிருந்தால் தான் இந்த ஆட்சேபம் பொருந்துமென்றும், முன்னோக்கிச் செல்லக் கீழ்ப்பட்ட ஸ்தாபனங்களுக்குப் பூரண உரிமை யுண்டென்றும், அவற்றிற்குப் போதிய நம்பிக்கையும் உறுதியும் இருப்பின் அப்படி முன்னேறிச் செல்லுதல் அவற்றின் கடமை யென்றும் நான் கூறினேன். தாய்ச் சபையின் மதிப்பை அதிகரிக்கக் கூடிய காரியஞ் செய்வதற்கு அநுமதி எதற்காக என்று நான் கேட்டேன். பின்னர் விஷயத்தின் மீது விவாதம் நடந்தது. விவாதம் பலமாகவே யிருந்ததாயினும் எல்லாரும் ஆத்திரமின்றி அமைதியாகப் பேசினார்கள். கடைசியில், தீர்மானம் மிகப் பெரும்பான்மையோரின் வாக்குகளைப் பெற்று நிறைவேறியது. இதற்கு ஸ்ரீமான்கள் வல்லபாய், அப்பாஸ் தயாப்ஜி இவர்களுடைய செல்வாக்கு பெரிதும் காரண

மாகும். ஸ்ரீ தயாப்ஜியே மகாநாட்டின் அக்கிராசனரா யிருந்தார். அவருடைய கருத்து ஒத்துழையாத் தீர்மானத்தின் சார்பாகவே இருந்தது.

இவ்விஷயமாக யோசிப்பதற்கு 1920ஞு செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் ஒரு விசேஷ காங்கிரஸைக் கூட்ட வேண்டுமென்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்தது. அதற்காக பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. லாலா லஜபதிராய் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கு காங்கிரஸ் கிலாபத் தனி ரயில் வண்டிகள் விடப்பட்டன. கல்கத்தாவில் பிரதி நிதிகளும், காட்சியாளரும் பெருந்திரளாகக் கூடியிருந்தார்கள்.

மௌலானா ஷௌகத் அலியின் வேண்டுகோளின் மீது வண்டியிலேயே ஒத்துழையாத் தீர்மானத்துக்கு நகல் ஒன்று தயாரித்தேன். இதுவரை என்னுடைய நகல் தீர்மானங்களில் "பலாத்கார மற்ற" என்ற சொற்றொடரை உபயோகியாமலே இருந்தேன் ஆனால் என்னுடைய பிரசங்கங்களில் மட்டும் அதைக் குறிப்பிடத் தவறுவதில்லை. இவ்விஷயம் சம்பந்தமாக உபயோகிக்கவேண்டிய வார்த்தைகளையே நான் அப்போது தான் சேகரித்து வந்தேன். 'அஹிம்ஸை' என்னும் சமஸ்கிருத பதத்தை உபயோகித்தால் முஸ்லீம்களின் கூட்டங்களில் என் கருத்தை நன்கு விளக்க முடியாதென்று கண்டேன். எனவே, மௌலானா அபுல்கலாம் ஆஸாத்தை அதற்கு ஏதேனும் புதிய வார்த்தை கண்டு பிடித்துத் தரும்படி கேட்டுக் கொண்டேன். அவர் அஹிம்ஸைக்கு "பா ஆமன்" என்னும் சொற்றொடரும், ஒத்துழையாமைக்கு "தர்க்கி மவாலத்" என்னும் சொற்றொடரும் உபயோகிக்கலா மென்று கூறினார்.

இவ்வாறு, ஒத்துழையா இயக்க சம்பந்தமாக என் கருத்தை விளக்குவதற்கு ஹிந்தி, குஜராத்தி, உருது வார்த்தைகளை நான் கண்டு பிடித்துக் கொண்டிருக்கையிலேயே, கல்கத்தா விசேஷ காங்கிரஸுக்கு ஒத்துழையாத் தீர்மானத்தைத் தயாரிக்க வேண்டி வந்தது. முதலில் தயாரித்த நகலில் "பலாத்காரமற்ற" என்ற சொற்றொடர் விடப்பட்டுப் போயிற்று. இதை நான் கவனியாமலே என்னுடன் ஒரே வண்டியில் வந்து கொண்டிருந்த மௌலானா ஷௌகத் அலியிடம் நகல் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டேன். இரவில் தான் அத்தவறைக் கண்டு பிடித்தேன். காலையில், நகர் தீர்மானத்தை அச்சுக்கு அனுப்புவதற்கு முன் மேற்படி திருத்தம் செய்துவிட வேண்டுமென்று ஸ்ரீ மகா தேவிடம்சொல்லி யனுப்பினேன். ஆனால் அதைச் சேர்ப்பதற்கு முன்னமே நகல் அச்சிடப்பட்டு விட்டதாக எனக்கு ஞாபகம். விஷயாலோசனைக் கூட்டம் அன்று மாலையே நடைபெற இருந்தது. ஆதலின் அச்சிட்ட நகல் பிரதிகளில் பின்னால் திருத்தம் செய்யவேண்டி நேர்ந்தது. இந்நகல் தீர்மானம் நான் தயாரித்திராவிட்டால் பெரிதுங் கஷ்டம் நேர்ந்திருக்குமென்று பின்னால் அறிந்தேன்.

எனினும், என் நிலை இரங்கத்தக்கதாகவே யிருந்தது. தீர்மானத்தை யார் எதிர்க்கப் போகிறார்கள்; யார் ஆதரிக்கப் போகிறார்கள் என்பது பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லை. லாலாஜியின் அபிப்பிராயம் என்னவென்றும் விளங்கவில்லை. எத்தனையோ சண்டைகளில் ஈடு கொடுத்த யுத்த வீரர்கள் பலர் கல்கத்தாவில் கூடி யிருந்ததைக் கண்டேன். டாக்டர் பெசண்ட், பண்டித மாளவியா, ஸ்ரீ விஜயராகவாச்சாரியார், தேசபந்து முதலியோர் அவர்களில் சிலராவர்.

என்னுடைய தீர்மானத்தில் பஞ்சாப் கிலாபத் அநீதிகளுக்குப் பரிகாரம் தேடுவதற்கு மட்டுமே ஒத்துழையாமை மேற்கொள்வதாகக் கண்டிருந்தது. ஆனால் இது ஸ்ரீ விஜயராகவாச்சாரியருக்குத் திருப்தி யளிக்கவில்லை. "ஒத்துழையாமை ஆரம்பிப்பதென்றால் குறிப்பிட்ட அநீதிகளுக்காக மட்டும் அதை ஏன் ஆரம்பிக்க வேண்டும்? நாட்டுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளுக்குள்ளே மிகப் பெரியது சுயராஜ்ய மின்மையேயாகும். ஆதலின் சுயராஜ்ஜியந்தான் ஒத்துழையாமையின் நோக்கமா யிருக்க வேண்டும்" என்று அவர் வாதித்தார். அவருடைய யோசனையை நான் உடனே ஏற்றுக்கொண்டேன். என்னுடைய தீர்மானத்தில் சுயராஜ்யக் கோரிக்கையையும் சேர்த்தேன். தீர்மானம் பலமான நீண்ட விவாதத்திற்குப் பின்னர் நிறைவேறியது.

முதன் முதலில் ஒத்துழையா இயக்கத்தைச் சேர்ந்தவர் பண்டித மோதிலால். தீர்மானத்தைக் குறித்து அவருடன் நான் சுமுகமாக நடத்திய விவாதம் இன்னும் எனக்கு ஞாபக மிருக்கிறது. தீர்மானத்தின் வாசகத்தில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று அவர் சொன்னார். அதை நான் ஒப்புக்கொண்டேன். தேசபந்துவையும், இவ்வியக்கத்தில் சேர்த்து விடுவதாக அவர் கூறினார். தேசபந்துவின் இதயம் தீர்மானத்தின் சார்பாகவே யிருந்தது. ஆனால் ஜனங்களுக்குத் திட்டத்தை நிறைவேற்றிவைக்க ஆற்றல் உண்டா என்பது குறித்து அவர் சந்தேகப்பட்டார். நாகபுரி காங்கிரஸில்தான் அவரும் லாலாஜியும் தீர்மானத்தை ஏகமனமாக ஒப்புக்கொண்டார்கள்.

விசேஷக் காங்கிரஸில் லோகமான்யர் இல்லாமை குறித்து நான் பெரிதும் வருந்தினேன். அவர் உயிருடன் இருந்திருந்தால் அக் காங்கிரஸில் அவர் என் முயற்சிக்கு ஆசி கூறி யிருப்பாரென்று நான் இன்றளவும் நம்பி வருகிறேன். இதற்கு மாறாக, அவர் இயக்கத்தை எதிர்த்தே யிருந்தபோதிலும், அவ்வெதிர்ப்பையே ஒரு பாக்யமாகவும், ஒரு பயிற்சியாகவும் நான் கருதிப் போற்றி யிருப்பேன். எங்களுக்குள் எப்போதும் அபிப்பிராயபேதங்கள் இருந்து வந்த போதிலும், அவை காரணமாக, மனக்கசப்பு ஏற்பட்டது கிடையாது. என்னைத் தமது நெருங்கிய நண்பனாகவே அவர் நடத்தி வந்தார். இவ்வரிகளை நான் எழுதும் போதே அவர் மரணமுற்றது குறித்த சந்தர்ப்பங்கள் என் மனக் கண்முன் நிற்கின்றன. ஏறக்குறைய நடுநிசியில் யாதவர்க்கர் டெலிபோன் மூலம் அவருடைய மரணச் செய்தியை எனக்கறிவித்தார். அப்போது நான் தோழர்களால் சூழப்பட்டிருந்தேன். அச் செய்தி கேட்டதும், என்னை யறியாமலே "என்னுடைய சிறந்த துணை போய்விட்டது" என்னும் சொற்கள் என் வாயினின்றும் பிறந்தன. அப்போது ஒத்துழையா இயக்கம், பூரண வேகத்துடன் மேலெழுந்து கொண்டிருந்தது. அவரிடமிருந்து ஆதரவும், யோசனைகளும் நான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருந்தேன். ஒத்துழையாமையின் முடிவான நிலையைப்பற்றி அவர் எத்தகைய மனோபாவம் கொண்டிருப்பார் என்று சொல்ல முடியாது. அதைப் பற்றிச் சிந்திப்பதும் வீண் வேலையே யாகும். ஆனால் அவருடைய மரணத்தினால் நேர்ந்த பெரு நஷ்டத்தைக் கல்கத்தாவில் கூடியிருந்த ஒவ்வொருவரும் பெரிது முணர்ந்தார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தேச சரித்திரத்தில் மிக நெருக்கடியான அந்த நேரத்தில் யோசனை

சொல்வதற்கு லோகமான்யர் இல்லையே யென்று வருத்தப் படாதவர் கிடையாது.

நாற்பத்து மூன்றும் அத்தியாயம்

நாகபுரி காங்கிரஸ்

கல்கத்தா விசேஷ காங்கிரஸில் நிறைவேறிய தீர்மானங்களை நாகபுரி காங்கிரஸில் உறுதிப்படுத்த வேண்டியதாயிற்று. கல்கத்தாவில் போலவே இங்கும் பிரதிநிதிகளும், காட்சியாளரும் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். காங்கிரஸ் பிரதிநிதிகளின் தொகை இன்னும் வரையறுக்கப்படவில்லை. இதன் பயனாக, நாகபுரி காங்கிரஸில் பிரதிநிதிகள் ஏறக்குறைய 14,000 வரை வந்துவிட்டதாக எனக்கு ஞாபக மிருக்கிறது. பள்ளிக்கூட பகிஷ்காரம் சம்பந்தமாக ஒரு சிறு திருத்தம் செய்யவேண்டுமென்று லாலாஜி வற்புறுத்தினர். அதை நான் ஏற்றுக்கொண்டேன். இவ்வாறே, தேசபந்துவின் யோசனையின்படி சில திருத்தங்களும் செய்யப்பட்டன. அதன் பிறகு ஒத்துழையாமைத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

காங்கிரஸ் அமைப்பைத் திருத்தி ஒழுங்கு செய்வது குறித்த தீர்மானம் இந்தக் காங்கிரஸிலேயே யோசிக்கப்பட வேண்டியதாயிருந்தது. இதற்கென்று நியமித்த ஸப் கமிட்டியாரின் நகல் அமைப்புத் திட்டம் கல்கத்தா விசேஷ காங்கிரஸிலேயே ஆஜர் செய்யப்பட்டது. எனவே, அவ்விஷயம் நன்கு விவாதிக்கப்பட்டிருந்தது. அது, முடிவான நிறைவேற்றத்துக்காக நாகபுரி காங்கிரஸில் வந்தபோது ஸ்ரீமான் விஜயராகவாச்சாரியார் அக்கிராசனரா

யிருந்தார் ஒரே ஒரு முக்கியமான மாறுதலுடனே நகல் திட்டத்தை விஷயாலோசனைக் கமிட்டி ஒப்புக்கொண்டது. என்னுடைய நகல் திட்டத்தில் பிரதிநிதிகளின் தொகையை 1,500 என்று மட்டுப் படுத்தி யிருந்ததாக ஞாபகமிருக்கிறது. விஷயாலோசனைக் கமிட்டி அதற்குப் பதிலாக பிரதிநிதிகளின் தொகையை 6,000 என்று குறிப்பிட்டது இவ்வாறு உயர்த்தியது தீர ஆலோசியாமல் அவசரமாகச் செய்த காரியமே என்பது என் அபிப்பிராயமாகும். பிந்திய வருஷங்களின் அநுபவமெல்லாம் அந்த அபிப்பிராயத்தையே எனக்கு உறுதிப்படுத்தி யிருக்கின்றன. பிரதிநிதிகளின் தொகை அதிகமாயிருத்தல் வேலை நன்ருக நடப்பதற்கு எவ்விதத்திலேனும் உதவிசெய்யு மென்ருவது, அல்லது அதனுல் ஜனநாயக தத்துவம் பாதுகாக்கப்படுகிற தென்ருவது நான் கருதவில்லை. ஆயிரத்தைந்நூறு பிரதிநிதிகள் ஜனங்களுடைய நலத்தில் கவலைகொண்டவர்களாயும், விசால புத்தி படைத்தவர்களாயும், உண்மையுள்ளவர்களாயுமிருப்பின், கண்டபடி பொறுக்கி எடுக்கப்படும் 6,000 பொறுப்பற்ற பிரதிநிதிகளைப் பார்க்கிலும் அவர்களே ஜனநாயக தத்துவத்தின் சிறந்த பாதுகாவலர்களாவார்கள். ஜனநாயகக்கொள்கையை உண்மையில் பாதுகாக்கவேண்டுமானுல் ஜனங்கள் தீவிர சுதந்திர உணர்ச்சியும்,சுயமரியாதை உணர்ச்சியும், ஒருமை உணர்ச்சியும் கொண்டவர்களாயிருக்கவேண்டும். நல்லவர்களும், உண்மையாளர்களுமான மனிதர்களையே தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனுல் விஷயாலோசனைக் கமிட்டியார் எண்ணிக்கையில் ஏதோ மகிமை இருப்பதாகக் கருதி மயக்கமுற்றிருந்தபடியால் ஆருயிரத்துக்குமேலே போகவும் விரும்பினர்கள். ஆதலின் ராஜி ஏற்பாடாகப் பிரதிநிதிகளின் தொகை 6,000 என்று திட்டம் செய்யப்பட்டது.

காங்கிரஸின் இலட்சியம் சம்பந்தமாகவும் தீவிர விவாதம் நடந்தது. நான் தயாரித்திருந்த நகல் அமைப்பில், கூடுமானல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளும் அவசிய மானல் அதற்கு வெளியிலும் சுயராஜ்யம் பெறுதல் காங்கிரஸின் இலட்சியம் என்று கண்டிருந்தது. காங்கிரஸிற்குள் ஒரு கட்சியார், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற் குட்பட்ட சுயராஜ்யத்தையே காங்கிரஸின் இலட்சியமாக வரையறுத்துவிட விரும்பினர்கள். இக்கட்சியின் சார்பாகப் பண்டித மாளவியாவும், ஜனப் ஜின்னவும் பேசினர்கள். ஆனல் அவர்களுக்கு வாக்குகள் அதிகம் கிடைக்கவில்லை. மற்றும், நகல் அமைப்பில், அமைதியான, நியாயமான சாதனங்களையே சுயராஜ்யமடைவதற்குக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கண்டிருந்தது. இதையும் சிலர் எதிர்த்தனர். சுயராஜ்ய சாதனங்களைக் குறித்து எவ்வித நிர்ப்பந்தமும் விதிக்கக் கூடாதென்று அவர்கள் கூறினர்கள். ஆனல் காங்கிரஸ் முடிவில் நகல் அமைப்பில் கண்ட இலட்சியத்தை அப்படியே ஒப்புக்கொண்டது. இந்தக் காங்கிரஸ் அமைப்பை நாம் உண்மையுடனும், அறிவுடனும், ஊக்கத்துடனும் நடத்திவைத்திருந்தால் அது பொது ஜனங்களுக்கு அறிவூட்டுவதற்கான சிறந்த சாதனமாகி யிருக்குமென்று நான் கருதுகிறேன். அதை நடத்தி வைப்பதற்குரிய முயற்சியே நமக்கு சுயராஜ்யம் கொண்டுவந்து தந்திருக்கும். ஆனல் அது குறித்து இங்கே விவாதிப்பது பொருத்தமற்றதாகும்.

ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, கதர் இவை குறித்த தீர்மானங்களும் இந்தக் காங்கிரஸில் நிறைவேறின. அதுமுதல் காங்கிரஸைச் சேர்ந்த ஹிந்துக்கள், ஹிந்து மதத்திலிருந்து தீண்டாமை என்னும் சாபக்கேட்டைத் தொலைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண் டிருக்கிறர்

கள். கதர் இயக்கத்தின் மூலம் காங்கிரஸானது எலும்புக் கூடுகளாயிருக்கும் இந்திய ஏழை மக்களுடன் உயிர்த் தொடர்பு கொண்டிருக்கிறது. கிலாபத்துக்காக ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொண்டது ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காகக் காங்கிரஸ் நிகழ்த்திய சிறந்த முயற்சியாகும்.

முடிவுரை

இச் சரிதத்தை முடிப்பதற்குரிய காலம் இப்போது வந்துவிட்டது. இக்காலத்திலிருந்து என்னுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லாம் பகிரங்கமானவையாகும். இதற்குப் பிறகு பொதுஜனங்களுக்குத் தெரியாத சம்பவம் என் வாழ்க்கையில் ஒன்றுமே நடக்கவில்லையென்று சொல்லலாம். மற்றும், 1921-ம் வருஷத்திலிருந்து நான் காங்கிரஸ் தலைவர்களுடன் மிக நெருங்கி வேலை செய்து வந்திருக்கிற படியால், அவர்களுடன் என்னுடைய சம்பந்தத்தைப் பற்றிக் கூறாமல் என் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றிச் சிறிதளவும் விவரிக்க முடியாது. சிரத்தானந்தர், தேசபந்து, ஹக்கீம் சாகிப், லாலாஜி ஆகியவர்கள் காலஞ் சென்று விட்டார்களாயினும், காங்கிரஸ் தலைவர்கள் பலர் நம்மிடையே இன்னும் உயிர் வாழ்ந்து தொண்டு புரியும் பாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். நான் மேலே விவரித்துள்ள பெருமாறுதல்கள் ஏற்பட்டபின்னர், காங்கிரஸின் சரித்திரம் இன்னும் உருவாகி வருகிறது. சென்ற ஏழு வருஷங்களில் சத்திய மார்க்கத்தில் நான் செய்த சோதனைகள் எல்லாம் பெரும்பாலும் காங்கிரஸின் மூலமாகவே செய்யப்பட்டவையாகும். ஆதலின் அவற்றைக் குறித்து நான் எழுதப் புகுந்தால் காங்கிரஸ் தலைவர்களுடன் என்னுடைய சம்பந்

த்தைப் பற்றிக் குறிப்பிட்டே தீரவேண்டி யிருக்கும். தற்போதைக்கேனும் நான் அவ்வாறு செய்யப் புகுதல் தகுதியாகாது என்பது நிச்சயம். மேலும் என்னுடைய தற்காலச் சோதனைகளுக்குத் திட்டமான முடிவுகள் இன்னும் ஏற்பட்டு விட்டதாகச் சொல்ல முடியாது. ஆதலின் இவ்வரலாற்றை இவ்விடத்தில் முடித்துவிடு தல் என்னுடைய கடமை என்பதைத் தெளிவாகக் காண்கி றேன். உண்மையில், என்னுடைய பேனாவுங்கூட இதற்கு மேல் எழுதிக்கொண்டு போக மறுக்கின்றது.

இப்பொழுது வாசகர்களிடம் விடைபெற்றுக் கொள்வ தில் எனக்குத் துயரம் உண்டாகாமலில்லை. என்னுடைய சத் திய சோதனைகளிடம் நான் பெருமதிப்பு வைத்துள்ளேன். அவற்றின் பெருமை நன்கு வெளியாகும்படி செய்தேனா வென்று நான் அறியேன். உள்ளது உள்ளபடி அவற்றை விவரிக்க நான் பெரு முயற்சி செய்தேன் என்று மட்டுமே சொல்லக்கூடும். சத்தியத்தை, நான் கண்டது கண்டபடியே நான் கண்ட முறையிலேயே, அணுவளவும் மாறுதலின்றி விவரிக்க இடைவிடாது முயன்றிருக்கிறேன். இதன் பய னாக, சந்தேக முள்ளவர்களுக்கு சத்தியத்தினிடத்தும் அஹிம்ஸையி னிடத்தும் உறுதியான நம்பிக்கை யுண்டாகக் கூடுமென்று நான் நம்புகின்றபடியால் இம்முயற்சிதானும் எனக்கு இயம்ப வொண்ணாத மனச் சாந்தியை நல்கி யிருக்கிறது.

சத்தியத்தை யன்றி வேறு கடவுள் இல்லையென்னும் கொள்கைக்கு என் அநுபவங்களெல்லாம் ஒரு முகமாக உறுதி யளித்திருக்கின்றன. இந்தச் சரிதத்தின் ஒவ்வொரு பக்கமும், சத்திய தரிசனத்துக்குரிய மார்க்கம் அஹிம்ஸை ஒன்றே என்பதை அறிவுறுத்தாவிட்டால் என்னுடைய

முயற்சி யெல்லாம் வீணாயினவென்றே கருதுவேன். ஆனால் என் முயற்சிகள் வீணாயினும், அது என்னுடைய குற்ற மாகுமே யன்றி அப்பெருங் கொள்கையின் தவறன்று என் பதை வாசகர்கள் உணர்வார்களாக. அஹிம்ஸைத் துறை யில் நான் எவ்வளவு உண்மை உள்ளத்துடன் முயன்றிருப் பினும், அம்முயற்சிகள் அறைகுறையானவையே என்பதில் சந்தேகமில்லை. அவ்வப்போது ஒரு கணநேரம் சத்தியத்தின் தோற்றத்தைக் கண்டது கொண்டு, அதன் அளவில்லாத ஒளியின் இயல்பை நாம் அறிந்துகொள்ள முடியாது. நாம் தினந்தோறும் பார்க்கும் சூரியனுடைய பிரகாசத்தைவிடக் கோடி மடங்கு ஜோதியுடையது சத்தியம். அந்தப் பரஞ் சோதியில் நான் கண்டது அணுவிலும் அணுவான ஒளிக்கிர ணமே யாகும். ஆனால் என்னுடைய சோதனைகள் அனைத்தி னுடையவும் பயனாக ஒன்று நான் உறுதியாகச் சொல்லி முடியும். அதாவது, கோடிசூரியப் பிரகாசமுடைய சத்திய மென்னும் ஜோதியைப் பூரணமாகத் தரிசனம் செய்ய வேண்டுமானல் அஹிம்ஸா தர்மத்தை யன்றி அதற்கு வேறு சாதனம் இல்லையென்பதே யாகும்.

புவனமனைத்திலும் ஊடுருவி நிற்கும் சத்தியப்பொருளை நேருக்கு நேர் காண விழையும் ஒருவன், படைப்பில் மிகத் தாழ்ந்த படியிலுள்ள உயிரையும் தன்னைப் போலவே நேசிக்கும் ஆற்றல் பெறவேண்டும். அவன் வாழ்க்கையின் எந்தத் துறையிலிருந்தும் விலகி நிற்க முடியாது. ஆகையினு லேயே, சத்தியத்தில் எனக்குள்ள பற்று என்னை அரசியல் துறைக்குக் கொண்டுவந்து சேர்த்தது. சமயத்துக்கும் அர சியலுக்கும் சம்பந்தமில்லை யென்று கூறுவோர் சமயத்தைப் பற்றி ஒன்று மறியார் என்று நான் தாழ்மையுடன்—ஆனால் சிறிதும் தயக்கமின்றிக் கூறுவேன்.

ஆத்மத் தூய்மை செய்துகொள்ளாத வரையில் உலகிலுள்ள ஒவ்வோர் உயிரினிடத்தும் தன்னை ஒன்று படுத்திக் கொள்ளுதல் இயலாத காரியம். ஆத்மத் தூய்மையின்றி அஹிம்ஸா தர்மத்தைக் கடைப்பிடிக்கலா மென்று எண்ணுவதும் வெறும் பகற்கனவாகவே முடியும். இதய பரிசுத்தம் இல்லாதவன் ஒருநாளும் இறையொளி காண இயலாது. ஆத்மத் தூய்மை பெறுவதென்றால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தூய்மை பெற்றே யாகவேண்டும். சுத்தமும் அசுத்தமும் எளிதில் பரவும் இயல்புடையன வாதலின், ஒருவன் தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்ள முயலும் போது தன்னைச் சுற்றிலும் தூய்மை உண்டுபண்ணுகிறவனாகிறான்.

ஆனால் ஆத்மத் தூய்மை நெறி எளிதான தன்று. அது பெரிதும் கஷ்டமான, செங்குத்தான பாதையாகும். (ஒருவன் பூரண பரிசுத்தனாக வேண்டுமானால், மனோ வாக்குக் காயங்களினால் காமக்குரோதங்களை முற்றும் விலக்கியவனாகவேண்டும். நேயம்-பகைமை, விருப்பு-வெறுப்பு என்னும் சுழல்களிலிருந்து வெளிப்பட வேண்டும்.) எவ்வளவோ இடைவிடா முயற்சிகள் செய்தும், நான் இன்னும் அத்தகைய மூவகைத் தூய்மை பெற்றவனில்லை யென்பதை அறிந்துள்ளேன். ஆகையினால்தான் இவ்வுலகத்தவரின் புகழ் எனக்கு மகிழ்ச்சி தருவதில்லை. உண்மையில், அது எனக்கு அடிக்கடி துயரமே உண்டாக்குகின்றது. ஆயுத பலத்தினால் வெளி உலகை வெற்றி கொள்வதைவிட நுட்பமான காமக்குரோத உணர்ச்சிகளை ஜெயித்தல் கஷ்டமானதாக எனக்குக் காணப்படுகிறது. நான் இந்தியாவுக்குத் திரும்பிய நாளிலிருந்து எனக்குள் உறங்கிக் கிடக்கும் ஆசாபாசங்களின் அநுபவம் பெற்று வருகிறேன். அவை இன்னும் என்

னிடம் இருக்கின்றனவென்னும் எண்ணம் என்னைத் தாழ்மையுறச் செய்கிறதாயினும், அதுகாரணமாக நான் தோல்வியடைந்துவிட்டதாகக் கருதிச் சோர்வடைந்து விடவில்லை. சத்திய தரிசன முயற்சியில் என்னுடைய அநுபவங்களும் சோதனைகளும் எனக்கு ஜீவசக்தியும், ஆனந்தமும் அளித்து என்னைக் காப்பாற்றி வருகின்றன. ஆனால் இன்னமும் நான் கடக்கவேண்டிய கஷ்டமான பாதை உண்டென்பதை நன்கறிவேன். என்னை நான் திரணத்திலும் தாழ்மையுள்ளவனாக்கிக் கொள்ளவேண்டும். ஒருவன் தன்னுடைய சொந்த விருப்பத்தினால் தன்னைத் தன் சகோதர உயிர்ப் பிராணிகளுக்கெல்லாம் கடையானவனாகக் கருதாதவரையில் அவனுக்கு மோட்சம் கிடையாது. தாழ்மைக் குணத்தின் இறுதி எல்லை அஹிம்ஸையாகும்.

தற்போதைக்கேனும், வாசகர்களிடம் நான் விடை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மனோ வாக்குக் காயங்களினால் அஹிம்ஸா தர்மத்தை அனுஷ்டிக்கும் வரம் எனக்கு அருளுமாறு சத்திய சொரூபியாகிய பரம்பொருளைப் பிரார்த்திக்கிறேன். அப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு வாசகர்களை வேண்டிக்கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

சத்திய சோதனை முற்றுப்பெற்றன.

வாகீஸ்வரி அச்சு நிலயம், சென்னை :—12—3—48.